ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்



ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

( இதற்கு ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யான மூலம், எளிய தமிழ்நடை)

## முழுவதும்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)
www.namperumal.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்



ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

( இதற்கு ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யான மூலம், எளிய தமிழ்நடை)

## முதல் ப்ரகரணம்
## (புருஷகார உபாய வைபவம்)
## (சூர்ணைகள் 1 – 22)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## பொதுத்தனியன்கள்

1. ஸ்ரீசைலேச தயா பாத்ரம் தீபக்தியாதி குணார்ணவம்
   யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாத்ரம் முநிம்

**பொருள் –** (ஸ்ரீரங்கநாதன் அருளிச்செய்தது) திருமலையாழ்வாரின் கடாக்ஷத்திற்கு இலக்கானவரும், ஞானம் முதலான எண்ணற்ற குணங்களின் கடலாக விளங்குபவரும், உடையவரிடம் மிகுந்த அன்பு கொண்டவரும், அழகியமணவாளன் என்ற திருநாமம் கொண்டவரும் ஆகிய ஸ்வாமி மணவாளமாமுனிகளை நான் வணங்குகிறேன்.

2. லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுந மத்யமாம்
   அஸ்மத் ஆசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்

**பொருள் –** (ஸ்வாமி கூரத்தாழ்வான் அருளிச்செய்தது) மஹாலக்ஷ்மியின் நாயகனான ஸர்வேச்வரன் முதலாகவும்; நாதமுனிகள், ஆளவந்தார் ஆகியோர் நடுவாகவும்; என்னுடைய ஆசார்யன் இறுதியாகவும் உள்ள ஆசார்ய பரம்பரையை நான் வணங்குகிறேன்.

3. யோ நித்யம் அச்யுத பதாம்புஜயுக்ம ருக்ம
   வ்யாமோஹத: தத் இதராணி த்ருணாய மேநே
   அஸ்மத் குரோ: பகவத: தயைக சிந்தோ:
   ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே

**பொருள் –** (ஸ்வாமி கூரத்தாழ்வான் அருளிச்செய்தது) எந்த எம்பெருமானார், எப்போதும் அழிவற்றவனாகிய எம்பெருமானின் இரண்டு திருவடித் தாமரைகள் என்னும் செல்வத்தின் மீது கொண்ட ஆசை காரணமாக, அவன் அல்லாத மற்ற விஷயங்கள் அனைத்தையும் புல் போன்று எண்ணினாரோ, அப்படிப்பட்ட எனது ஆசார்யரும், பல உயர்ந்த குணங்கள் உள்ளவரும், கருணைக் கடலாக உள்ளவரும் ஆகிய அந்த உடையவரின் திருவடிகளை நான் உய்யும் உபாயமாகப் பற்றுகிறேன்.

4. மாதா பிதா யுவதய: தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்
ஆத்யஸ்ய ந: குலபதே: வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா

**பொருள் –** (ஸ்வாமி ஆளவந்தார் அருளிச்செய்தது) தாய், தந்தை, இளவயதுப் பெண்கள், புத்திரர்கள், செல்வம் ஆகிய இவை அனைத்தும், முறையாக எந்தத் திருவடிகளாகவே உள்ளனவோ - எங்களது குலத்தின் தலைவராக உள்ளவரும், முதன்மையானவரும், வகுள மலர்களால் அலங்கரிக்கப்பட்டவரும், பக்தி என்ற செல்வம் நிறைந்தவரும் ஆகிய நம்மாழ்வாரின் அந்தத் திருவடிகளை எனது தலையால் நான் வணங்குகிறேன்.

5. பூதம் ஸரச்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ர மிச்ராந்
ஸ்ரீமத் பராங்குச முநிம் ப்ரணதோஸ்மி நித்யம்

**பொருள் -** (ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்தது) பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார், பெரியாழ்வார், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், திருப்பாணாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், யதிகளின் தலைவரான இராமாநுசர், பக்தி என்ற செல்வம் கொண்ட நம்மாழ்வார் ஆகியோரை நான் எப்போதும் வணங்குபவன் ஆவேனாக.

**விளக்கம்** – இங்கு ஆழ்வார்களின் வரிசையில் உடையவரைக் கூறிய பின்னர், நம்மாழ்வாரைக் கூறியது காண்க. இது ஏன்? ஆழ்வார்களுக்கு சரீரமாக நம்மாழ்வாரையும், அவரது ஒவ்வொரு உறுப்பாக மற்ற ஆழ்வார்களையும் கூறுவது மரபு. இந்த வரிசையில் பூதத்தாழ்வார் = நம்மாழ்வாரின் திருமுடி, பொய்கையாழ்வார் = ஒரு கண், பேயாழ்வார் = மற்றொரு கண், பெரியாழ்வார் = திருமுகம், திருமழிசையாழ்வார் = திருக்கழுத்து, குலசேகராழ்வார் = ஒரு திருக்கரம், திருப்பாணாழ்வார் = மற்றொரு திருக்கரம், தொண்டரடிப்பொடியாழ்வார் = திருமார்பு, திருமங்கையாழ்வார் = திருஉந்தி, உடையவர் = திருவடிகள் என்று கொள்வர்.

## ரஹஸ்யார்த்த ஸம்ப்ரதாய பரம்பரைத் தனியன்கள்

1. லோக குரும் குருபிஸ்ஸஹபூர்வை: கூர குலோத்தம தாஸம் உதாரம்
ஸ்ரீநகபதி அபிராமவரேசௌ தீப்ரசயம் வரயோகிநமீடே

**பொருள் -** (ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்தது) பூர்வர்களுடன் பிள்ளை லோகாசார்யர், வள்ளல் தன்மை உடைய கூரகுலோத்தமதாஸர், திருமலையாழ்வார், அழகியமணவாளப்பெருமாள், திகழக்கிடந்தான் ஆகியவர்களை நான் வணங்குகிறேன்.

2. லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே
ஸம்ஸார போகி ஸந்தஷ்ட ஜீவ ஜீவாதவே நம:

**பொருள் -** (ஸ்வாமி ஈயுண்ணி பத்மநாபர் அருளிச்செய்தது) வடக்குத்திருவீதிப் பிள்ளையின் புத்திரரும், ஸம்ஸாரம் என்னும் நாகத்தினால் தீண்டப்பட்டவர்களுக்கு மருந்தாக உள்ளவரும் ஆகிய பிள்ளை லோகாசார்யருக்கு என் வணக்கங்கள்.

3. லோகாசார்ய க்ருபாபாத்ரம் கௌண்டிந்ய குலபூஷணம்
ஸமஸ்தாத்ம குணாவாஸம் வந்தே கூரகுலோத்தமம்

**பொருள் -** (ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச்செய்தது) பிள்ளை லோகாசார்யாரின் கடாக்ஷத்திற்கு இலக்கானவரும், கௌண்டின்ய கோத்ரத்திற்கு ஆபரணம் போன்றவரும், ஆத்மகுணங்கள் பலவற்றுக்கும் இருப்பிடமானவரும் ஆகிய கூரகுலோத்தமதாஸரை நான் வணங்குகிறேன்.

4. நம: ஸ்ரீசைலநாதாய குந்தீநகர ஜந்மநே
ப்ரஸாதலப்த பரம ப்ராப்ய கைங்கர்யசாலிநே

**பொருள் -** (ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்தது) ஆழ்வாரின் கடாக்ஷம் காரணமாக அடையப்பட்ட உயர்ந்த, அடையப்படவேண்டிய கைங்கர்யத்தின் மூலம் விளங்குபவர்; குந்தீ என்ற நகரத்தில் அவதரித்தவர்; இப்படிப்பட்ட திருமலையாழ்வாரை நான் வணங்குகிறேன்.

5. லோகாசார்ய பதாம்போஜ ராஜஹம்ஸாயித அந்தரம்
ஜ்ஞாந வைராக்ய ஜலதிம் வந்தே ஸௌம்யவரம் குரும்

**பொருள் -** (ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்தது) பிள்ளை லோகாசார்யரின் திருவடித் தாமரைகளில், எப்போதும் அரச அன்னம் போன்று நீங்காத மனம் கொண்டவரும், ஞானம் மற்றும் வைராக்யம் ஆகியவற்றின் கடலாக உள்ளவரும் ஆகிய அழகிய மணவாளப்பெருமாள் பிள்ளையை வணங்குகிறேன்.

6. ஸ்ரீஜிஹ்வா வததீச தாஸம் அமலம் அசேஷ சாஸ்த்ரவிதம்
சுந்தரவரகுரு கருணா கந்தளித ஞானமந்திரம் கலயே

**பொருள் -** (ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்தது) அழகிய மணவாளப்பெருமாள் பிள்ளையின் கடாக்ஷம் காரணமாக உண்டான ஞானத்திற்கு இருப்பிடமாக உள்ளவரும், தோஷங்கள் இல்லாதவரும், அனைத்து சாஸ்திரங்கள் அறிந்தவரும் ஆகிய திருநாவீறு உடைய பிரான்தாசரை வணங்குகிறேன்.

## ஸ்ரீவசனபூஷணத்திற்கான ப்ரத்யேக தனியன்கள்

1. புருஷகாரவைபவஞ்ச ஸாதனஸ்ய கௌரவம்
தத் அதிகாரிக்ருத்யம் அஸ்ய சத்குரு உபசேவநம்
ஹரிதயாம் அஹேதுகீம் குரோர் உபாயதாஞ்ச யோ
வசநபூஷணே அவதத் ஜகத்குரும் தம் ஆச்ரயே

**பொருள் -** புருஷகாரத்தைச் செய்கின்ற (நமக்காக சிபாரிசு செய்கின்ற) பெரியபிராட்டியாரின் பெருமை, ஸித்தோபாயத்தின் (எம்பெருமான்) மேன்மை, ஸித்தோபாயத்தில் நிலைநிற்கும் ஒருவனின் ஒழுக்கம், அவனது சதாசார்ய அநுவர்த்தன முறை, எந்தப் பிரதிபலனையும் நம்மிடம் எதிர்பாராமல் தானாகவே சுரக்கும் எம்பெருமானுடைய கடாக்ஷத்தின் பெருமை, ஆசார்யனின் உபாயச் செயல் ஆகிய அனைத்தையும் ஸ்ரீவசனபூஷணத்தில் உரைத்த அந்த பிள்ளை லோகாசார்யரைப் பற்றுகிறேன்.

2. ஸாங்க அகில த்ரவிட ஸம்ஸ்க்ருத ரூப வேத
ஸாரார்த்த ஸங்க்ரஹ மஹாரஸ வாக்ய ஜாதம்
ஸர்வஜ்ஞ லோககுரு நிர்மிதம் ஆர்யபோக்யம்
வந்தே ஸதா வசநபூஷண திவ்ய சாஸ்த்ரம்

**பொருள் -** அங்கங்களுடன் கூடியதான தென்மொழி மற்றும் வடமொழி ஆகியவற்றின் வடிவானதும், அனைத்து வேதங்களின் சுருக்கமானதும், மிகவும் இனிமையான சொற்கள் அமைந்ததும்; அனைத்தும் அறிந்தவரான பிள்ளை லோகாசார்யரால் செய்யப்பட்டதும், அறிந்தவர்களுக்கு இனிமையானதும் ஆகிய ஸ்ரீவசனபூஷணம் என்ற உயர்ந்த சாஸ்த்ரத்தை நான் வணங்குகிறேன்.

3. அகுண்ட உத்கண்ட வைகுண்ட ப்ரியாணாம் கண்ட பூஷணம்
குருணா ஜகதாம் உக்தம் வ்யாப்தம் வசநபூஷணம்

**பொருள் –** அழியாததும், நிறைந்ததும் ஆகிய ஸ்ரீவைகுண்டத்தின் மீது ஆசை கொண்டவர்களின் கழுத்தில் சூட்டப்படத் தகுந்த ஆபரணம் போன்றதும், எங்கும் பரவி நிற்பதும் ஆகிய ஸ்ரீவசனபூஷணம் என்ற இது, அனைத்து உலகங்களின் ஆசார்யனாக உள்ள பிள்ளை லோகாசார்யரால் உரைக்கப்பட்டது.

4. பேறு தருவிக்குமவள் தன் பெருமை ஆறு பெறுவான் முறை அவன்
கூறு குருவைப் பனுவல் கொள்வது இலையாகிய குளிர்ந்த அருள்தான்
மாறில் புகழ் நற்குருவின் வண்மையோடு எலாம் வசனபூடணம் அதில்
தேறிட நமக்கு அருள் முடும்பை இறைவன் கழல்கள் சேர் என் மனனே

**பொருள் -** புருஷகாரமாக நின்று, பெரும் பேறாகிய மோக்ஷத்தைக் கொடுக்க வைக்கின்ற பெரியபிராட்டியின் பெருமை, உபாயமான எம்பெருமானின் மேன்மை, பேற்றை அடைகின்ற அதிகாரியின் நிலை, சாஸ்திரமுறைப்படி அவன் ஆசார்யனிடம் நடந்து கொள்ளும் முறை, பயன் எதிர்பாராமல் எம்பெருமான் பொழிகின்ற கடாக்ஷத்தின் சிறப்பு, ஒப்பற்ற புகழ் கொண்ட ஆசார்யனே உபாயமாக உள்ள தன்மை, வேறு பல உயர்ந்த கருத்துக்கள் ஆகிய பலவற்றையும் ஸ்ரீவசனபூஷணம் என்ற இந்த நூலில் நாம் புரிந்து கொள்ளும் வகையில் அருளிச் செய்த பிள்ளை லோகாசார்யரின் திருவடிகளை, எனது மனமே! நீ அடைவாயாக.

5. திருமாமகள் தன் சீர் அருள் ஏற்றமும் திருமால் திருவடி சேர்வழி நன்மையும்
அவ்வழி ஒழிந்தன அனைத்தின் புன்மையும் மெய்வழி ஊன்றிய மிக்கோர் பெருமையும்
ஆரணம் வல்லவர் அமரும் நன்னெறியையும் நாரணன் தாள் தரு நற்குரு நீதியும்
சோதி வானருள் தூயமா குருவின் பாதமாமலர் பணிபவர் தன்மையும்
தீதில் வானவர் தேவன் உயிர்களை ஏதுமின்றி எடுக்கும் படியையும்
மன்னிய இன்பமும் மாகதியும் குரு என்னும் நிலைபெறும் இன்பொருள் தன்னையும்
அசைவிலா வேதம் அதனுள் அனைத்தையும் வசனபூடண வழியால் அருளிய
மறையவர் சிகாமணி வண்புகழ் முடும்பை இறையவன் எங்கோன் ஏர் உலகாரியன்
தேன் மலர்ச்சேவடி சிந்தை செய்பவர் மாநிலத்து இன்பமது எய்தி வாழ்பவர்.

**பொருள் -** புருஷகார உபாயத்தின் உயர்வு; ஸித்தோபாயமான எம்பெருமானின் திருவடி அடைதல் மூலம் கிட்டும் நன்மை; அந்த ஸித்தோபாயமான எம்பெருமான் அல்லாது உள்ள மற்ற உபாயங்களின் தாழ்ச்சி; உண்மையான ஸித்தோபாயத்தில் நிற்கும் உயர்ந்தவர்களின் பெருமை; வேதங்களில் சிறந்த ப்ரபன்னர்களின் ஒழுக்கம்; எம்பெருமானின் திருவடி மூலமாகக் கிட்டிய ஆசார்யனின் திருவடிகளைப் பணிபவர்கள்

பெறுகின்ற நன்மை; தோஷம் அற்ற நித்யஸூரிகளுக்கும் தலைவனாக உள்ள எம்பெருமான், எந்தவிதமான காரணமும் இன்றி உலகிற்குச் செய்யும் கடாக்ஷத்தின் மேன்மை; நிலையான மோக்ஷம் மற்றும் அதனைப் பெறுவதற்கான உபாயம் ஆசார்யன் மட்டுமே என்னும் நிலையை அடைவதன் மேன்மை; மாறாத வேதங்களின் கூறப்பட்ட அனைத்து கருத்துக்கள் – இவை அனைத்தையும் ஸ்ரீவசனபூஷணம் என்ற இதன் மூலமாக உரைத்து உதவி செய்தவர், அந்தணர்கள் அனைவருக்கும் சிகாமணி போன்றவர், சிறந்த மேன்மையை உடைய ஸர்வேச்வரனின் திருவடிகளை அண்டி நிற்கும் பிள்ளை லோகாசார்யரின் தேன் சிந்தும் தாமரை மலர் போன்ற திருவடிகளை த்யானம் செய்பவர்கள், இந்த உலகத்தில் இன்பத்துடன் வாழ்வார்கள்.

6. லோகாசார்ய க்ருதே லோகஹிதே வசநபூஷணே
தத்வார்த்த தர்சிநோ லோகே தந்நிஷ்டாச்ச ஸுதுர்லபா:

**பொருள்** - இந்த உலகில் உள்ளவர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு பிள்ளை லோகாசார்யரால் அருளிச் செய்யப்பட்ட ஸ்ரீவசனபூஷணத்தின் உண்மையான கருத்துக்களை அறிந்தவர்களும், அதில் கூறியபடி நிற்பவர்களும் மிகவும் அரியவர்கள் ஆவர்.

7. ஜகதாசார்ய ரசிதே ஸ்ரீமத் வசந பூஷணே
தத்வ ஜ்ஞாநஞ்ச தந்நிஷ்ட்டாஞ்ச தேஹிநாத யதீந்த்ர மே

**பொருள்** - எம்பெருமானாரே! இராமாநுசா! எங்கள் ஸ்வாமியே! பிள்ளை லோகாசார்யரால் அருளிச் செய்யப்பட்ட ஸ்ரீவசனபூஷணம் என்னும் இந்த நூலின் உண்மையான ஞானம் மற்றும் இதில் கூறப்பட்ட ஒழுக்கம் ஆகியவற்றில் எனது மனம் எப்போதும் நிலை நிற்கும்படி நீயே செய்யவேண்டும்.

## ஸ்ரீவசனபூஷணம் தனியன்கள் ஸம்பூர்ணம்

## ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச்செய்த ஸ்ரீவசநபூஷண வ்யாக்யாந அவதாரிகை

**மூலம்** - ஸகலவேத ஸங்க்ரஹமான திருமந்த்ரத்தில், பதத்ரயத்தாலும் ப்ரதிபாதிக்கப்படுகிற ஆகாரத்ரயமும் ஸர்வாத்ம ஸாதாரணமாகையாலே, யத்ரர்ஷய: ப்ரதம ஜாயே புராணா: என்கிற நித்யஸூரிகளோபாதி, சுத்த ஸத்வமான பரமபதத்திலே நித்யாஸங்குசித ஜ்ஞாநராய்க் கொண்டு, நிரந்தர பகவதநுபவஜநித நிரதிசயாநந்த த்ருப்தராயிருக்கைக்கு யோக்யதையுண்டாயிருக்க செய்தேயும், அநாதிமாயயா ஸுப்த: என்கிறபடியே திலதைலவத் தாருவஹ்நிவத் துர்விவேச த்ரிகுணதுரத்யயாநாதி பகவந் மாயாதிரோஹித ஸ்வப்ரகாசராய், அநாத்யவித்யாஸஞ்சிதாநந்த புண்யாபுண்ய கர்மாநுகுணமாக ஸுர நர திர்யக் ஸ்தாவர யோநிகள்தோறும் மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து, பிறந்த பிறந்த ஜன்மங்கள் தோறும் தேஹாத்மாபிமாநமும், ஸ்வாதந்த்ர்யமும் அந்ய சேஷத்வமுமாகிற படுகுழிகளிலே விழுந்து, தத்ததநுகுண ஸாத்ய ஸாதநங்களிலே மண்டி, யாதானும்பற்றி நீங்கும் விரதத்தையேறிட்டுக்கொண்டு, ப்ராப்தசேஷியாய் பரமப்ராப்ய ப்ராபகபூதனானவன்பக்கல் அத்யந்தவிமுகராய், கர்ப்ப ஜந்ம பால்ய யௌவந வார்த்தக மரண நரகங்களாகிற அவஸ்தாஸப்தகத்திலே நிரந்தரவிதத விவித நிரவதிக துக்கங்களையநுபவித்துத் திரிகிறவிஸ்ஸம்ஸாரி சேதநரிலே, ஆரேனும் சிலர்க்கு, ஜாயமாநகால பகவத் கடாக்ஷ விசேஷத்தாலே ரஜஸ்தமஸ்ஸுக்கள் தலைமடிந்து ஸத்வம் தலையெடுத்து, மோக்ஷருசியுண்டானாலும்,

**விளக்கம்** - அனைத்து வேதங்களுக்கும் சுருக்கமாக உள்ளது திருமந்த்ரம் ஆகும். அதில் உள்ள மூன்று பதங்கள் மூலம் (மூன்று பதங்கள் = ஓம், நமோ, நாராயணாய) கூறப்படும் தன்மைகள் மூன்றாகும் (இவை அநந்யார்த்த சேஷத்வம் = எம்பெருமானுக்கு மட்டுமே அடிமை, அநந்ய சரணத்வம் = எம்பெருமானை மட்டுமே உபாயம் என்று கொள்ளுதல், அநந்ய போக்யத்வம் = அவனை மட்டுமே அனுபவிக்கத் தகுந்த பொருளாக எண்ணுதல்). இந்தத் தன்மைகள் அனைத்தும் உயிர்களுக்கு இருத்தல் வேண்டும் என்று பொதுவாகவே கூறப்பட்டுள்ளது. யஜுர் வேதம் – யத்ரர்ஷய: ப்ரதமஜாயே புராணா: - எங்கு புதியவர்களாகவும், பார்க்கிறவர்களாகவும், எப்போதும் உள்ளவர்களாகவும் – என்று கூறுவதுபோல் உள்ள நித்யஸூரிகள் போன்று, சுத்தமான ஸத்வமயமாகிய பரமபதத்தில், எப்போதும் குறையாத ஞானம் நிரம்பியவர்களாக; எப்போதும் ஸர்வேச்வரனை, எந்தக் குறையும் தடையும் இன்றி அனுபவிக்கும் காரணத்தினால் ஏற்படுகின்ற பேரானந்தம் காரணமாக மனநிறைவுடன் இருப்பதற்கான தகுதி கொண்டவர்களாக இந்த உலகில் உள்ள உயிர்கள் இருக்கின்றன (இப்படி இருந்தாலும், உயிர்கள் இவ்விதம் இருப்பதில்லை என்று அருளிச்செய்கிறார்). ஆயினும், உயிர்கள் இவ்விதம் இல்லாமல், பின்வருமாறு உள்ளன: அநாதிமாயாயாஸுப்த: - எல்லையற்ற காலமாக உள்ள மாயையால் பீடிக்கப்பட்டு உறங்குபவன் என்னும்படியாக, திலதைலவத் தாருவஹ்நிவத் துர்விசேஷ த்ரிகுண துரத்யயாநாதி பகவந் மாயாதிரோஹித ஸ்வப்ரகாச: - எள்ளில் உள்ள

எண்ணெய் போன்றும் கட்டையில் உள்ள நெருப்பு போன்றும் பிரித்து அறிய இயலாத தன்மை கொண்டும், மூன்று குணங்களுடன் கூடியவர்களாகவும், ஈஸ்வரனைத் தவிர மற்ற யாராலும் நீக்க இயலாதபடி எல்லையற்ற காலமாக உள்ள ஸர்வேச்வரனின் மாயை மூலமாக மறைக்கப்பட்ட தர்மங்களை உடையவர்களாகவும் உள்ளனர்; எல்லையற்ற காலமாகத் தொடர்ந்து வரும் அறியாமை காரணமாக ஈட்டப்பட்ட புண்ணிய பாவ கர்மங்களின் பலனாக தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் எனப் பல பிறவிகளில் மாறிமாறி பிறக்கின்றனர்; திருவாய்மொழி (2-6-9) – மாறி மாறிப் பல பிறப்பு பிறந்து – என்றது காண்க; இதனால், சரீரத்தையே ஆத்மா என்றும் (இது தேஹாத்மாபி மானம்), தான் தனக்கு மட்டுமே உரியவன் என்றும் (ஸ்வாதந்த்ர்யம்), எம்பெருமானைத் தவிர மற்றவர்களுக்கு அடிமைப்பட்டிருத்தல் (அந்யசேஷத்வம்) என்றும் உள்ள படுகுழிகளில் விழுகின்றனர்; அந்தந்த குணங்களுக்கு ஏற்ற சாதனங்களில் ஈடுபட்டு, அவற்றின் மூலம் பெறும் நன்மைகளில் மயங்கி நிற்கின்றனர்; திருவிருத்தம் (95) - யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை – என்று உள்ளனர்; நமக்கு இயல்பான எஜமானனாகவும், தன்னை விட உயர்ந்த நன்மை இல்லாதவனும் (ப்ராப்யன்), தன்னை விட உயர்ந்த சாதனம் இல்லாதவனும் (ப்ராபகன்) ஆகிய ஸர்வேச்வரனிடம் சிறிதும் ஆசை இல்லாமல் உள்ளனர்; கர்ப்பம், ஜன்மம், பால்யம், யௌவநம், முதுமை, இறப்பு, நரகம் என்று உள்ள ஏழு விதமான நிலைகளில் சற்றும் இடைவெளி இல்லாமல் பரந்து காணப்படும் பலவிதமான எல்லையற்ற துன்பங்களையே இன்பம் என்று எண்ணி அனுபவித்துத் திரிகின்றனர். இவர்களில் ஒரு சிலருக்கு, அவர்கள் பிறக்கும்போதே (ஜாயமாநகால பகவத் கடாக்ஷம்) ஸர்வேச்வரனின் திருவருள் கிட்டி விடுகிறது. இதனால் இவர்களின் ராஜஸ, தாமஸ குணங்கள் மடிந்து, ஸத்வ குணமானது ஓங்கி நிற்கும் காலத்தில், மோக்ஷத்தின் மீது ஆசை ஏற்படுகிறது.

**மூலம்** - தத்வஹித புருஷார்த்தங்களை உள்ளபடி அறிந்தே உஜ்ஜீவிக்க வேண்டுகையாலும், அவை தன்னை சாஸ்த்ர முகத்தாலே அறியப் பார்க்குமளவில், சாஸ்த்ரங்களில் தலையான வேதமானது அநந்தா வை வேதா என்கிறபடியே அநந்தமாய், ஸ்வார்த்தநிர்ணயத்தில் ஸர்வசாகா ப்ரத்யய ந்யாயாதி ஸாபேக்ஷமாயிருக்கையாலே அல்பமதிகளுக்கு அவகாஹித்து அர்த்தநிச்சயம் பண்ணவரிதாகையாலும்,

**விளக்கம்** - இப்படியாக மோக்ஷ ஆசை ஏற்பட்டபோதிலும் தத்துவம் (எம்பெருமானின் அடிமையான ஆத்மாவின் ஸ்வரூபம்), ஹிதம் (உபாயம்), புருஷார்த்தம் ஆகியவற்றை உள்ளது உள்ளபடி அறிந்த பின்னரே அடைய இயலும். இவற்றை சாஸ்திரங்கள் மூலமாகவே அறிய இயலும் என்பதால், அப்படியே முயற்சிக்கின்றனர். அப்படி அறிய முயலும்போது, சாஸ்திரங்களில் முக்கியமான வேதங்கள் - அநந்தா வை வேதா - வேதங்கள் எல்லை இல்லாதவை – என்பதற்கு ஏற்ப, எல்லை இல்லாமல் உள்ளன. இப்படிப்பட்ட வேதங்களின் பொருளை அறிந்து கொள்ளவேண்டும் என்றால், ஸர்வ சாகா ப்ரத்யய ந்யாயம் போன்ற பல அரிய கருத்துக்களை உணர்ந்த பின்னரே அறிய

இயலாம்படி உள்ளன. ஆகவே குறைவான அறிவு உள்ளவர்கள் இதில் புகுந்து, இவற்றில் கூறப்பட்டதன் பொருளை உணர்ந்து கொள்ள அரிதாகவே வேதங்கள் உள்ளன.

**மூலம்** - அநந்த வேதபாரகராய் ஸ்வயோகமஹிம ஸாக்ஷாத்க்ருத பராவர தத்வ விபாகரான வ்யாஸாதி பரமர்ஷிகளாலே, ப்ரணீதங்களாய் வேதோபப்ர்ம்ஹணங்களான ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்களிலும் ஸாராஸாரவிவேக சதுரர்க்கொழிய தாத்பர்யாம்சம் தெரியாமையாலும், அவை போலன்றிக்கே ஸம்ஸாரி சேதநோக்ஜீவநகாமனான ஸர்வேச்வரன், தானே ஆசார்யனாய் வெளிப்படுத்தின ஸகலவேத ஸாரமான ரஹஸ்யத்ரயமும் அதிஸங்க்ரஹதயா அதிகூடார்த்தங்களாகையாலும், பகவதாகஸ்மிக கடாக்ஷ விசேஷத்தாலே, மயர்வறமதிநலமருளப் பெற்று ஸகலவேத சாஸ்த்ர தாத்பர்யங்களையும் கரதலாமலகமாக ஸாக்ஷாத்கரித்த பராங்குச பரகாலதிகளான ஆழ்வார்களருளிச் செய்த த்ராவிடவேத ததங்கோபாங்களான திவ்யப்ரபந்தங்களும் அளவிலிகளால் அர்த்ததர்சநம் பண்ணப் போகாமையாலும்,

**விளக்கம்** - அந்த வேதங்களில் உள்ளவற்றை அறிந்து உணர்ந்தவர்களும், தங்களது யோக வலிமை மூலமாகத் தாங்கள் கண்ட பரம்பொருள் மற்றும் தாழ்ந்த மற்ற பொருள்கள் ஆகியவற்றுக்கு இடையில் உள்ள வேறுபாட்டை உணர்ந்தவர்களும் ஆகிய வ்யாசர் முதலான மஹரிஷிகளால், வேதங்களின் ஆழ்பொருளை விரிவாக உரைக்கும் பொருட்டு, ஸ்ம்ருதி, இதிஹாஸம் மற்றும் புராணங்கள் ஆகியவை செய்யப்பட்டன. ஆனால், சாரம் எது, சாரம் அல்லாதது எது என்று பிரித்து அறிகின்ற ஆற்றல் இல்லாதவர்களுக்கு, இந்த இதிஹாஸம் போன்றவற்றின் ஆழ்பொருள்கள் கூட, அறிய இயலாதவையாகவே இருந்தன. இதனைக் கண்ட ஸர்வேச்வரன், இந்த உலக மக்களைக் கரை ஏற்றுவதையே தனது குறிக்கோளாகக் கொண்டு, தானே ஆசார்யனாக நின்றான். இவ்விதம் நின்று, மூன்று ரகசியங்களை (திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம் : திருமந்த்ரம் = நரனுக்கு, த்வயம் = பிராட்டிக்கு, சரமச்லோகம் = அர்ஜுனனுக்கு) வேதங்களின் சாரமாக வெளியிட்டான். இவை மிகவும் சுருக்கமாக இருந்ததால், இவற்றின் ஆழ்பொருளை அறிதல் என்பதும் அரிதாகவே இருந்தது. ஸர்வேச்வரனின், காரணம் இல்லாத கடாக்ஷத்தைப் பெற்று, மயக்கம் இல்லாத அறிவு பெற்று, வேதங்கள் அனைத்தின் ஆழ்பொருளையும் மிகவும் தெளிவாக உணர்ந்த நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் முதலானவர்கள், செந்தமிழ் வேதங்கள் எனப்படும் நான்கு பிரபந்தங்களையும் (நம்மாழ்வார் அருளியது), இவற்றின் அங்கமான ஆறு பிரபந்தங்களையும் (திருமங்கையாழ்வார் அருளியது) வேதங்களின் ஆழ்பொருளை, உள்ளங்கை நெல்லிக்கனி போன்று அருளிச்செய்தனர். ஆனால் இவையும், அறிவு குறைந்தவர்களால் பொருள் உணர்வதற்குக் கடினமாகவே நின்றன.

**மூலம்** – ருசி பிறந்த சேதநரிழந்து போம்படியிருக்கையாலே ஆழ்வாருடைய நிர்ஹேதுக கடாக்ஷலப்த திவ்ய ஜ்ஞாநரான நாதமுனிகள் தொடக்கமாக ஸத்ஸம்ப்ரதாய ஸித்தராய் ஸகல சாஸ்த்ர நிபுணராய் பரமதயாளுக்களான பூர்வாசார்யர்கள் அந்த

வேதாதிகளிலர்த்தங்களை ஸங்க்ரஹித்து மந்தமதிகளுக்கும் ஸுக்ரஹமாம்படி ப்ரபந்தீகரித்துமுபதேசித்தும் போந்தார்கள். அப்படியே ஸம்ஸாரி சேதனரிழவு ஸஹிக்க மாட்டாத பரம க்ருபையாலே ததுஜ்ஜீவநார்த்தமாகத் தாமும் பலப்ரபந்தங்களருளிச் செய்த பிள்ளைலோகாசார்யர், ஆசார்யபரம்பரா ப்ராப்தங்களானவர்த்தங்களில் அவர்கள் தாங்கள் கௌரவாதிசயத்தாலே ரஹஸ்யமாகவுபதேசித்துப் போந்தவையாய் அருமை பெருமைகளைப்பற்ற இதுக்கு முன்பு தாமும் ப்ரகாசிப்பியாமலடக்கிக்கொண்டு போந்தவையுமான அர்த்தவிசேஷங்களெல்லாத்தையும், பின்புள்ளாருமிழக்கவொண்ணாதென்கிற தம்முடைய க்ருபாதிசயத்துக்கு மேலே, பெருமாளும் ஸ்வப்நத்திலே திருவுள்ளமாயருளுகையாலே, ஸ்ரீவசநபூஷணமாகிற இப்ப்ரபந்தமுகேந வெளியிட்டருளுகிறார்.

**விளக்கம்** - இப்படியாக இருந்த காரணத்தினால், ஸர்வேச்வரன் மீது ஆசை கொண்ட மக்களின் ஆசையானது, இழந்து போகும்படி இருந்தது. அதனை இழக்க வேண்டாதபடி பூர்வாசார்யர்கள் நமக்கு உபகாரம் செய்தனர். எப்படி? நம் மீது ஆழ்வார்கள் பொழிகின்ற காரணம் இல்லாத கடாக்ஷத்தை, நாதமுனிகள் தொடக்கமான ஆசார்யர்கள் அடைந்தனர். ஸத்ஸம்ப்ரதாய ஞானம், அன்பு, ஒழுக்கம் போன்றவற்றில் வல்லவர்களாகவும், கருணையே வடிவாக உள்ளவர்களாகவும் பூர்வர்கள் இருந்தனர். அவர்கள் செய்தது என்ன? வேதங்கள் போன்ற சாஸ்த்ரங்களின் ஆழ்பொருளைச் சுருக்கமாகச் செய்து, தாழ்ந்த அறிவு கொண்டவர்களும் ஆழ்வார்களின் பிரபந்தங்களை அறியலாம்படிச் செய்து, அவற்றின் மூலமும் தங்கள் உபதேசம் மூலமும் இதனை வெளியிட்டார்கள். இப்படியாகப் பல உபாயங்கள் இருந்தபோதிலும் அதில் ஈடுபடாமல் தவிக்கின்ற மக்களின் துன்பம் கண்டு பொறுத்துக்கொள்ள இயலாமல், தனது கருணை காரணமாக, அவர்கள் உயர்ந்த நன்மை பெறும் விதமாக, ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் பல பிரபந்தங்களை அருளிச்செய்தார். ஆசார்ய பரம்பரையில் இதுவரை கூறப்பட்டு வந்த ஆழ்பொருள்களில், அந்த ஆழ்பொருளின் மேன்மை காரணமாக, பலவற்றை அவர்கள் மறைமுகமாகவே உபதேசித்தனர்; அவற்றினை முழுவதுமாக வெளியிடாமலேயே இவரும் இருந்தார். ஆனால் தனக்குப் பின்பு பிறப்பவர்கள், இந்த அரிய தத்துவங்களை இழந்து விடுவார்களே என்று தனது கருணை காரணமாகச் சிந்தித்தார். இவற்றை வெளியிடும்படி ஸ்ரீரங்கநாதனும் கனவில் தோன்றிப் பணித்தான். ஆகவே அந்த ஆழ்பொருள்கள் பலவற்றையும், அவற்றின் மேன்மைகளையும் ஸ்ரீவசநபூஷணம் என்ற இந்தப் பிரபந்தம் மூலமாகவே வெளியிட்டார்.

**மூலம்** - முன்பே பேரருளாளப் பெருமாள் தம்முடைய நிர்ஹேதுக க்ருபையாலே மணற்பாக்கத்திலே இருப்பாரொரு நம்பியாரை விசேஷ கடாக்ஷம் பண்ணியருளி தஞ்சமாயிருப்பன சில வர்த்த விசேஷங்களைத் தாமேயவர்க்கு ஸ்வப்நமுகேநவருளிச் செய்து, நீர் போய் இரண்டாற்றுக்கு நடுவே வர்த்தியும், இன்னமுமக்கிவ்வர்த்தங்களெல்லாம் விசதமாக நாமங்கே செல்லுகிறோமென்று திருவுள்ளமாயருளுகையாலே, அவரிங்கே வந்து பெரியபெருமாளை சேவித்துக்கொண்டு, நமக்கு முன்பு

அங்கருளிச்செய்தவர்த்தங்களையும் அசலறியாதபடி அநுஸந்தித்துக் கொண்டு, ஏகாந்தமானதொருகோயிலிலே வர்த்தியா நிற்கச்செய்தே, தம்முடைய ஸ்ரீபாதத்துக் கந்தரங்கரான முதலிகளும் தாமுமாக பிள்ளை ஒருநாள் அந்தக் கோயிலிலே யாத்ருச்சிகமாகவெழுந்தருளி அவ்விடமேகந்தமாயிருக்கையாலே ரஹஸ்யார்த்தங்களை அவர்களுக்கருளிச் செய்து கொண்டெழுந்தருளியிராநிற்க, அவை, தமக்குப் பேரருளாளப்பெருமாளருளிச் செய்த வர்த்தவிசேஷங்களாயிருக்கையாலே அவர் போரவித்தராய் உள்ளின்றும் புறப்பட்டு வந்து பிள்ளை ஸ்ரீபாதத்திலே விழுந்து, அவரோ நீரென்ன, ஆவதேதென்று பிள்ளை கேட்டருள, பேரருளாளப் பெருமாள் தமக்கிவ்வர்த்தங்களை ப்ரஸாதித்தருளினபடியையும், இத்தேசத்திலே போரவிட்டருளின படியையும் விண்ணப்பஞ்செய்யக்கேட்டு மிகவும் ஹ்ருஷ்டராய் அவரையுமபிமாநித்தருள, அவருமங்குத்தைக்கு அந்தரங்கராய் வர்த்திக்கிரநாளிலே, பெருமாள் அவர்க்கு ஸ்வப்நத்திலே இவ்வர்த்தங்கள் மறந்து போகாதபடி இவற்றையொரு ப்ரபந்தஸ்தமாக்கச் சொன்னோமென்று நீர் பிள்ளைக்குச் சொல்லுமென்று திருவுள்ளமாக, அவரிப்படி பெருமாள் திருவுள்ளமாயருளினாரென்று விண்ணப்பஞ்செய்ய, ஆனால் அப்படி செய்வோமென்று திருவுள்ளம் பற்றி அநந்தரமிப்ரபந்தமிட்டருளினாரென்று ப்ரஸித்தமிறே. ரத்னப்ரசுரமான பூஷணத்துக்கு ரத்நபூஷணமென்று பேராமாப்போலே, பூர்வாசார்யர்களுடைய வசநப்ரசுரமாய் அநுஸந்தாதாக்களுக்கு ஔஜ்ஜ்வல்யகரமாயி ருக்கையாலே இதுக்கு வசநபூஷணமென்று திருநாமமாயிற்று.

**விளக்கம் -** முன்பு ஒரு காலகட்டத்தில் மணற்பாக்கத்தில் இருந்து வந்த நம்பியார் ஒருவரை காஞ்சி பேரருளான், தனது கருணை காரணமாகக் கடாக்ஷித்தான். உபாயங்களாக இருக்கக்கூடிய அர்த்த விசேஷங்கள் சிலவற்றைத் தானாகவே அவரது கனவில் நின்று உபதேசம் செய்தான். அதன் பின்னர் அவரிடம், "நீவிர் சென்று இரண்டு ஆற்றுக்கு நடுவில் உள்ள திருவரங்கத்தில் வசிப்பீராக. இந்த ஆழ்பொருளின் மேலும் பல தத்துவங்களை நான் உமக்கு அங்கு வந்து சொல்கிறேன்", என்று அருளிச்செய்தான். அவரும் அங்கிருந்து புறப்பட்டு, திருவரங்கம் வந்து, ஸ்ரீரங்கநாதனை வணங்கினார். தனக்குப் பேரருளாளன் அருளிச்செய்த மறைபொருள்கள் பலவற்றையும், மற்றவர்கள் அறியாதவண்ணம் சிந்தித்தபடி, திருவரங்கத்தின் வெளியே உள்ள காட்டழகிய சிங்கர் கோயில் என்ற நரஸிம்ஹன் ஸன்னிதியில் வசித்து வந்தார். இப்படி இருக்கையில் ஒரு நாள் ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் தனது முதன்மையான சீடர்களுடன் காட்டழகிய சிங்கர் ஸன்னிதிக்கு தற்செயலாக எழுந்தருளி, அங்கு இருந்த தனிமையான சூழ்நிலை கண்டு மகிழ்ந்தவராக, தனது சீடர்களுக்கு மறைபொருளின் கருத்துக்களை உபதேசித்தபடி எழுந்தருளியிருந்தார். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த நம்பி, “இவை நமக்கு பேரருளாளன் அருளிச்செய்தவை ஆயிற்றே,” என்று வியந்து, அங்கிருந்து வெளியே வந்து, ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளில் விழுந்தார். அவரிடம், “நீர் பேரருளாளனோ?”, என்று வினவ, ஸ்வாமியும், "என்னவேண்டும்?", என்றார். உடனே நம்பி அவரிடம், தன்னிடம் பேரருளாளன் இந்த அர்த்தங்களை அருளிச்செய்தது, தன்னைத் திருவரங்கம் வரச்சொன்னது, திருவரங்கத்தில் மேலும் விளக்குவதாகக் கூறியது

முதலியவற்றை உரைத்தார். இதனைக் கேட்ட ஸ்வாமி மிகவும் மகிழ்ந்து, அவரை ஏற்றுக்கொண்டார். அவரும் அங்கு ஸ்வாமிக்கு மிகவும் வேண்டியவராக வசித்து வந்தார். அப்போது ஒருநாள் நம்பியின் கனவில் தோன்றிய ஸ்ரீரங்கநாதன், "இந்த அர்த்தங்கள் மறந்து விடாதபடி இவற்றை ஒரு ப்ரபந்தத்தில் நாம் ஆக்கும்படிச் சொன்னோம் என்று பிள்ளை லோகாசார்யரிடம் நீவிர் கூறுவீர்", என்று கட்டளை இட்டான். அவரும் ஸ்வாமியின் திருவடியில் பணிந்து, அழகியமணவாளன் கூறியதை உரைத்தார். உடனே ஸ்வாமியும், "அப்படியே செய்வோம்", என்று முடிவு செய்து, இந்தப் பிரபந்தத்தை அருளிச்செய்தார் என்பது ப்ரஸித்தம். இரத்தினக்கற்கள் நிறைந்த ஆபரணம் இரத்தின ஆபரணம் என்று அழைக்கப்படுவது போன்று, பூர்வாச்சார்யர்களின் வசனங்கள் பல உள்ளதாலும், இதனைக் கற்பவர்களுக்கு உயர்ந்த ஒளியை (தேஜஸ்) இது அளிப்பதாலும், இந்தப் பிரபந்தம் "ஸ்ரீ வசன பூஷணம்" என்று பெயர் கொண்டது.

**மூலம் -** இப்ப்ரபந்தத்தில் வேதார்த்தமறுதியிருவது என்று தொடங்கி அத்தாலேயது முற்பட்டது என்னுமளவாக, வக்ஷ்யமாணார்த்த நிர்ணாயக ப்ரமாண நிர்தேசம் பண்ணுகிறதாகையாலே ப்ரபந்தோபோத்காதம். இதிஹாஸச்ரேஷ்ட்டம் என்று தொடங்கி ப்ரபத்த்யுபதேசம் பண்ணிற்றுமிவளுக்காக என்னுமளவு ஸாபராத சேதநருடைய ஸர்வாபராதங்களையும் ஸர்வேச்வரனை ஸஹிப்பித்து ரக்ஷிப்பிக்கையே ஸ்வரூபமான புருஷாகாரவைபவரும், அந்த புருஷகாரமும் மிகையாம்படியான உபாயவைபவமும் சொல்லுகிறது.

**விளக்கம் -** இந்த நூலில் "வேதார்த்தம் அறுதியிடுவது" என்னும் முதல் சூர்ணை தொடங்கி, "அத்தாலே அது முற்பட்டது" என்ற நான்காம் சூர்ணை வரை, இந்த நூலில் கூறப்படும் விஷயங்களுக்கான ப்ரமாணங்கள் பலவும் காட்டப்படுவதால், இவை (இந்த நான்கு சூர்ணைகள்) உபோத்காதம் (முன்னுரை) எனப்படுவதாக உள்ளன. அடுத்து "இதிஹாஸச்ரேஷ்டம்" என்று தொடங்கி, "ப்ரபத்தி உபதேசம் பண்ணிற்றும் இவளுக்காக" என்பது வரை உள்ள சூர்ணைகள், தோஷங்களுடன் கூடிய மக்களின் குற்றங்கள் அனைத்தையும் ஸர்வேச்வரன் பொறுத்துக் கொள்ளும்படியாகச் செய்து, அவனை ரக்ஷிக்கும்படி மாற்றுவதையே தனது தன்மையாகக் கொண்டுள்ள பிராட்டியின் புருஷகார வைபவமும், அந்தப் புருஷகார வைபவத்தையும் வெல்லும்படி உள்ள உபாயமான ஸர்வேச்வரனின் வைபவத்தையும் கூறுகின்றன.

**மூலம் -** ப்ரபத்திக்கு என்று தொடங்கி, ஏகாந்தீவ்யபதேஷ்டவ்ய: என்னுமளவு மிவ்வுபாயவரணரூப ப்ரபத்தியினுடைய தேசகாலாதி நியமாபாவம், விஷயநியமம், ஆச்ரய விசேஷம், இத்தை ஸாதநமாக்கில் வருமவத்யம், இதின் ஸ்வரூபாங்கங்கள் முதலானவற்றைச் சேரச் சொல்லி ப்ரபத்தவ்யனே உபாயமென்று ஸாதிக்கையாலே பூர்வோக்தோபாயசேஷமாகையால் உபாய ப்ரகரணம். இதில் ப்ராப்திக் குகப்பானுமவனே என்னுமளவும் ப்ரதாந ப்ரமேயம்; மேல் என்னுமளவு, இவ்வுபாயத்தைக் கொண்டு உபேயத்தைப் பெறுவானொரு சேதநனுக்கு உபாயோபேயாதிகார ப்ரதாநா

பேக்ஷிதங்களையும், உபாயாந்தர த்யாக ஹேதுக்களையும், மற்றும் த்யாஜ்யோபாதேயங்களாயுள்ளவற்றையும் விஸ்தரேண சொல்லுகையாலே அதிகாரி நிஷ்டாக்ரமஞ் சொல்லுகிறது.

**விளக்கம்** – "ப்ரபத்திக்கு" என்று தொடங்கி, "ஏகாந்தீவ்யபதேஷ்டவ்ய:" என்பது வரை உள்ள சூர்ணைகள் - இப்படிப்பட்ட உபாயமான ஸர்வேச்வரனைப் பற்றுவதற்கு ஏதுவாக உள்ள ப்ரபத்திக்கு இன்ன இடத்தில் இருக்கவேண்டும், இன்ன காலம், இன்ன முறை, இன்ன அதிகாரி, இன்ன பலம் போன்ற கட்டுப்பாடுகள் இல்லை என்பதும்; விஷய நியமம், அதிகாரிகளில் உள்ள வேறுபாடு, ப்ரபத்தியை ஒரு சாதனமாகக் கொண்டால் உண்டாகும் தோஷம், ப்ரபத்தியின் ஸ்வரூபம் மற்றும் அங்கங்கள் ஆகியவை கூறப்படுகின்றன. இதன் பின்னர் இப்படிப்பட்ட ப்ரபத்திக்கு எம்பெருமானே உபாயம் என்கிறார். இதனால் இவை அனைத்தும் மேலே கூறிய உபாயத்தைச் சார்ந்தவை என்றாகிறது. ஆக இவை அனைத்தும் உபாயத்தைப் பற்றிக் கூறும் பகுதிகள் ஆகும். இவற்றில் – ப்ராப்திக்கு என்னும் சூர்ணை வரை உள்ள அனைத்தும் கூற வந்த முக்கியமான கருத்துக்கள் ஆகும். அடுத்து உள்ள சூர்ணைகள் ப்ராஸங்கிகம் ஆகும் (ப்ராஸங்கிகம் = அங்கு கூறவேண்டியவற்றைப் பின்னர் தொடர்ந்து கூறுதல்). "உபாயத்திற்கு" என்று தொடங்கி, "உபேய விரோதி " என்பது வரை உள்ள சூர்ணைகள் – உபாயம் மூலமாக உபேயம் (பலன்) அடைவதற்கு உரிய ஒருவனுக்கு, உபாய உபேய அதிகாரத்தின் பொருட்டு வேண்டப்படுவன பற்றியும், மற்ற உபாயங்களைக் கைவிட வேண்டியதற்கான காரணங்கள் பற்றியும், செய்யத்தக்கன மற்றும் செய்யத்தகாதன ஆகியவை பற்றியும் விரிவாகக் கூறுகின்றன.

**மூலம்** - தான் ஹிதோபதேசம் பண்ணும்போது என்று தொடங்கி, உகப்பு முபகார ஸ்ம்ருதியும் நடக்க வேணும் என்னுமளவாக, ஹிதோபதேச ஸமயத்தில் ஸ்வாசார்ய பாரதந்த்ர்யாதிகளான ஸதாசார்ய லக்ஷணம், ஸச்சிஷ்ய லக்ஷணம், ததுபயர் பரிமாற்றம், தீமனங்கெடுத்த ஸ்வாசார்ய விஷயத்தில் சிஷ்யனுபகார ஸ்ம்ருதி க்ரமம் இவற்றைச் சொல்லுகையாலே, ஸித்தோபாய நிஷ்டனான வதிகாரியினுடைய ஸ்வாசார்யானுவர்த்தந க்ரமஞ்சொல்லுகிறது.

**விளக்கம்** - "தான் ஹிதோபதேசம் பண்ணும் போது" என்று தொடங்கி, "உகப்பும் உபகார ஸ்ம்ருதியும் நடக்கவேணும்" என்பது வரை உள்ள சூர்ணைகள் – ஆசார்யன் தனக்கு நன்மையை உபதேசிக்கின்ற நேரத்தில், தான் அவரை மட்டுமே சார்ந்து இருப்பது தொடங்கி ஆசார்யனின் இலக்கணம், சிஷ்யனின் இலக்கணம், இருவரது நெறிமுறைகள், தனது தீய மனதை அழித்த ஆசார்யனின் விஷயத்தில் நன்றி, ஸித்தோபாயமான

(எப்போதும் தயாராக உள்ள உபாயம் = ஸர்வேச்வரன்) எம்பெருமானிடத்தில் நிலைநின்ற அதிகாரி ஒருவன் தனது ஆசார்யனிடம் நடந்து கொள்ளவேண்டிய முறை இங்கு கூறப்படுகிறது.

**மூலம்** - ஸ்வதோஷாநுஸந்தாநம் பயஹேது என்று தொடங்கி நிவர்த்தகஜ்ஞாநமபய ஹேது என்னுமளவாக, இவ்வதிகாரிக்கு அத்வேஷம் தொடங்கி ப்ராப்தி பலமான கைங்கர்யபர்யந்தமாகவுண்டான பேறுகளுக்கெல்லாம் ஹேதுவாய், ஸ்வகர்மபய நிவர்த்தகமான பகவந் நிர்ஹேதுக க்ருபாப்ரபாவஞ் சொல்லுகிறது. ஸ்வதந்த்ரனை உபாயமாகத் தான் பற்றின போதிறே என்று தொடங்கி, மேலெல்லாம் மிக்கவேதியர் வேதத்தினுட்பொருளான சரம பர்வநிஷ்டையை வெள்ளிதாகச் சொல்லுகிறது. வேதார்த்தமறுதியிருவது என்று தொடங்கி இவ்வர்த்தத்திலே தலைக்கட்டுகையாலே, இப்ப்ரபந்தத்தில் சரமப்ரகரண ப்ரதிபாத்பாத்யமானவர்த்தம் வேததாத்பர்யமென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம். ஸ்ரீகீதைக்கு சரமச்சோகம் போலேயிறே இப்ரபந்தத்துக்கு சரமப்ரகரணம். அங்கு ஸாத்யோபாயங்களை யுபதேசித்துக் கொண்டு போந்து, ஸ்வாதந்த்ர்ய பீதனானவனுக்கு அவற்றைத் தள்ளி ஸித்தோபாயம் காட்டப்பட்டது. இங்கு, ஸித்தோபாயத்தைச் சொல்லிக் கொண்டு போந்து, ஈஸ்வர ஸ்வாதந்த்ர்யத்துக் கஞ்சினவனுக்கு ப்ரதம பர்வத்தைத் தள்ளி சரம பர்வம் காட்டப்பட்டது. ஆக, இப்படி ஆறு ப்ரகரணமாய், ஆறர்த்த ப்ரதிபாதகமாயிருக்கும்.

**விளக்கம்** – "ஸ்வதோஷ அநுஸந்தானம் பய ஹேது" என்று தொடங்கி, "நிவர்த்தக ஞானம் அபயஹேது" என்று முடியும் சூர்ணைகள் - இப்படிப்பட்ட அதிகாரிக்கு வெறுப்பு இல்லாத தன்மை தோன்றுவது முதலான எம்பெருமானை அடைவதில் பலனாகிய கைங்கர்யம் கிட்டுதல் முடிவாக ஏற்பட்ட பலவிதமான பேறுகளுக்குக் காரணமாகவும், தனது வினை காரணமாக ஏற்படுகின்ற அச்சங்கள் பலவற்றையும் நீக்கும் எம்பெருமானின் எந்த விதமான காரணமும் இன்றிச் சுரக்கும் கருணை (நிர்ஹேதுக க்ருபை) பற்றிக் கூறுகின்றன. "ஸ்வதந்த்ரனை உபாயமாகப் பற்றின போதிறே" என்று தொடங்கி, அதற்கு மேலே உள்ள சூர்ணைகள் – வேதத்தின் உட்பொருளான "ஆசார்யனையே உபாயமாகப் பற்றியிருப்பது" குறித்துக் கூறுகின்றன. எனவே "வேதார்த்தம் அறுதியிடுவது" என்று தொடங்கி, சரமபருவ நிலை பற்றிக் கூறி முடிக்கையால், இந்த நூலில் இறுதியான ப்ரகரணத்தில் கூறப்பட்டவை அனைத்தும் வேதங்களின் உட்கருத்துக்கள் என்பது எந்தவிதமான வாதமும் இன்றி ஏற்கப்படும் ஒன்றாகும். ஸ்ரீமத் பகவத் கீதைக்குச் சரம ச்லோகம் உள்ளது போன்று இந்த நூலுக்கு, இறுதியாக உள்ள ப்ரகரணமே இதன் சரம ப்ரகரணம் ஆனது. ஸ்ரீமத் கீதையில் ஒருவன் செய்யக்கூடிய உபாயங்கள் பற்றிக் கூறப்பட்டு, தனது ஸ்வாதந்த்ர்யம் (தன்னால் முடியும் என்ற எண்ணம்) குறித்து அச்சம் கொண்ட ஒருவனுக்கு, இந்த அச்சம் நீக்கப்பட்டு ஸித்தோபாயமான எம்பெருமான் காட்டப்பட்டான். இங்கு ஸித்தோபாயம் பற்றிக் கூறி, எம்பெருமானின் ஸ்வாதந்த்ர்யம் குறித்து அச்சம் கொண்டவனுக்கு, அவன் உபாயமாகப் பற்றி நிற்கும் நிலை (ப்ரதம

பர்வம்) தள்ளப்பட்டு, ஆசார்யனே உபாயம் (சரமபர்வம்) என்ற நிலை காட்டப்பட்டது. இப்படியாக ஆறு ப்ரகரணங்கள் ஆறு பொருள்கள் பற்றி கூறுகின்றன.

**மூலம்** - ஒன்பது ப்ரகரணமாய், ஒன்பதர்த்த ப்ரதிபாதகமாயிருக்குமென்னவுமாம்; அந்த பக்ஷத்திலும் ப்ரதமப்ரகரணம் பூர்வவத்.

**விளக்கம்** – அடுத்து, ஒன்பது ப்ரகரணங்களாய்ப் பிரிந்து, ஒன்பது பொருள்களைக் கூறுகின்றன என்றும் கூறுவர். இவ்விதம் பிரித்தால், முதல் ப்ரகரணம் மேலே உள்ளது போன்று ஆகும்.

**மூலம்** - மேல் "ப்ரபத்திக்கு" என்று தொடங்கி "பகவத் விஷய ப்ரவ்ருத்தி சேரும்" என்னுமளவும், பூர்வப்ரகரணோக்தோபாய சேஷமாகையால் உபாயப்ரகரணம், "ப்ராபகாந்தரபரித்யாகத்துக்கு" என்று தொடங்கி "ஆகையாலே ஸ்வரூபமாயிருக்கும்" என்னுமளவும் உபாயாந்தர தோஷப்ரகரணம். இப்ரகரணத்தில் ப்ரபத்த்யுபாய வைலக்ஷண்யகதநம் ப்ராஸங்கிகம். "இவனவனைப்பெற நினைக்கும்போது" என்று தொடங்கி "இடைச்சியாய்ப் பெற்றுவிடுதல் செய்யும்படியாயிருக்கும்" என்னுமளவும் ஸித்தோபாய நிஷ்டருடைய வைபவ ப்ரகரணம். "இப்படி ஸர்வப்ரகாரத்தாலும்" என்று தொடங்கி "உபேய விரோதிகளுமாயிருக்கும்" என்னுமளவும் ப்ரபந்ந திநசர்யா ப்ரகரணம். "தான் ஹிதோபதேசம் பண்ணும்போது" என்று தொடங்கி, "சேதநனுடைய ருசியாலே வருகையாலே" என்னுமளவும், ஸதாசார்ய லக்ஷண ப்ரகரணம். "சிஷ்யனென்பது" என்று தொடங்கி "உபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்" என்னுமளவும் ஸச்சிஷ்ய லக்ஷண ப்ரகரணம். "ஸ்வதோஷாநுஸந்தானம்" என்று தொடங்கி "நிவர்த்தகஜ்ஞாநம் அபயஹேது" என்னுமளவும் பகவந் நிர்ஹேதுக விஷயீகார ப்ரகரணம். "ஸ்வதந்த்ரனை" என்று தொடங்கி, மேலடங்க சரமப்ராப்ய ப்ராபக ப்ரகரணம். இவ்விரண்டு கர்மத்தையும் பற்றவிறே "பேறுதருவிக்குமாள் தன் பெருமை", "திருமகள் தன்" என்கிற தனியன்களிரண்டுமவதரித்தது. ஆகையாலே இரண்டு ப்ரகாரமுமநுஸந்திக்கக் குறையில்லை.

**விளக்கம்** - "ப்ரபத்திக்கு" என்று தொடங்கி, "பகவத் விஷய ப்ரவ்ருத்தி சேரும்" என்னும் சூர்ணை முடிய உள்ளவை – கடந்த ப்ரகரணத்தில் கூறப்பட்ட உபாய ப்ரகரணம் ஆகும். "ப்ராபகாந்தரபரித்யாகத்துக்கு" என்று தொடங்கி, "ஆகையாலே ஸ்வரூபமாயிருக்கும்" என்பது வரை உள்ள சூர்ணைகள் – பக்தி போன்ற மற்ற உபாயங்கள் பற்றிக் கூறுவதால் இவை உபாயாந்தர தோஷ ப்ரகரணம் ஆகும். இங்கு ப்ரபத்தி என்னும் உபாயத்தைக் கூறுதல் காண்க. "இவன் அவனைப் பெற நினைக்கும்போது" என்று தொடங்கி, " இடைச்சியாய்ப் பெற்றுவிடுதல் செய்யும்படியாயிருக்கும்" என்ற சூர்ணை முடிய உள்ளவை - எம்பெருமானைப் பற்றி நிற்கின்ற நிஷ்டனைக் கூறுவதால் இவை ஸித்தோபாய நிஷ்டருடைய வைபவ ப்ரகரணம் ஆகும். "இப்படி ஸர்வப்ரகாரத்தாலும்"

என்று தொடங்கி, " உபேய விரோதிகளுமாயிருக்கும்" என்பது முடிய உள்ள சூர்ணைகள் – ப்ரபத்தி மார்க்கத்தில் நிலை நிற்கும் அதிகாரி ஒவ்வொரு நாளும் தவறாமல் நடந்து கொள்ள வேண்டிய நெறிகளைக் கூறுகின்ற ப்ரபந்ந தினசர்யா ப்ரகரணம் ஆகும். "தான் ஹிதோபதேசம் பண்ணும்போது" என்பது தொடங்கி, "சேதநனுடைய ருசியாலே வருகையாலே" என்பது முடிய உள்ள சூர்ணைகள் – ஆசார்யனின் இலக்கணம் பற்றிக் கூறுகின்ற ஸதாசார்ய லக்ஷண ப்ரகரணம் ஆகும். "சிஷ்யனென்பது" என்று தொடங்கி, "உபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்" என்பது முடிய உள்ள சூர்ணைகள் – சிஷ்யனின் இலக்கணம் பற்றிக் கூறுகின்ற ஸத்சிஷ்ய லக்ஷண ப்ரகரணம் ஆகும். "ஸ்வதோஷாநுஸந்தானம்" என்று தொடங்கி, " நிவர்த்தகஜ்ஞாநம் அபயஹேது" என்பது முடிய உள்ள சூர்ணைகள் – ஸர்வேச்வரன் எந்தவிதமான காரணமும் இன்றி கருணை கொள்வதை விளக்கும் பகவத் நிர்ஹேதுக விஷயீகார ப்ரகரணம் ஆகும். "ஸ்வதந்த்ரனை" என்று தொடங்கி அதன் பிறகு உள்ள அனைத்தும், ஆசார்யனே பேறு என்பதையும், அவரே பேற்றை அடையும் வழி என்பதையும் விளக்கும் சரம ப்ராப்ய ப்ராபக ப்ரகரணம் ஆகும். இப்படியாக ஆறு மற்றும் ஒன்பது வகையாகப் பிரிகின்ற காரணத்தினாலேயே "பேறுதருவிக்குமாள் தன் பெருமை" மற்றும் "திருமகள் தன்" என்ற இரண்டு தனியன்களும் ஏற்பட்டன. எனவே இரண்டு வகையில் பிரித்தாலும் எந்தத் தோஷமும் இல்லை.

**மூலம்** - இப்ப்ரபந்தந்தான் தீர்க்கசரணாகதியான திருவாய்மொழி போலே த்வய விவரணமாயிருக்கும். எங்ஙனேயென்னில், திருவாய்மொழியில் முதல் மூன்று பத்தாலே உத்தரகண்டார்த்தத்தையும், மேல் மூன்று பத்தாலே பூர்வகண்டார்த்தத்தையுஞ் சொல்லி, மேல் நாலு பத்தாலும் அவ்வுபாயோபயோகியான குணங்களையும், ஆத்மாத்மீயங்களில் தமக்கு நசையற்றபடியையும், அவனோடு தமக்குண்டான நிருபாதிகபந்தத்தையும், தாம் ப்ரார்த்தித்தபடியே பெற்றபடியையும் ப்ரதிபாதிக்கையாலே, ததநுரூபார்த்தங்களைச் சொல்லித் தலைக்கட்டினாப்போலே, இதிலும் ப்ரதமத்திலே புருஷகாரத்தையும், அநந்தரமுபாயத்தையும், அநந்தரம் ஏததுபாயாதிகாரி நிஷ்டையையும் சொல்லுகையாலே பூர்வகண்டார்த்தத்தையும்; அவ்வதிகாரி நிஷ்டை சொல்லுகிறவளவில், உபேயாதிகாரா பேக்ஷிதங்களைச் சொல்லுகிற இதுக்குள்ளே உத்தரகண்டார்த்தத்தையுஞ் சொல்லி, மேல் ப்ரபந்த சேஷத்தாலும் ததுபதேஷ்டாவான ஆசார்யனளவில் இவனுக்குண்டாக வேண்டும் ப்ரதிபத்த்யநுவர்த்தநப்ரகாரங்களையும், இவனுக்கு மஹாவிச்வாஸ ஹேதுவான பகவந் நிர்ஹேதுக க்ருபா ப்ரபாவத்தையும், வாக்ய த்வயோக்தோபயோபேய சரமாவதியையுஞ் சொல்லித் தலைக்கட்டுகையாலே ஒன்பதர்த்த ப்ரதிபாதகமான பக்ஷத்திலும் பூர்வ வாக்யத்தில் க்ரியாபதோக்தமான ஸ்வீகார உபாயாந்தர பரித்யாக பூர்வகமாயல்ல திராமையாலும், திநசர்யையும் அப்பதத்தில் சொல்லப்படுகிறவதிகாரிக்கே யுள்ளதாகையாலும், ஸதாசார்ய லக்ஷணம் த்வயோபதேஷ்டாவானவாசார்யன்படி சொல்லுகிறதாகையாலும் த்வய விவரணமாக நிர்வஹிக்கக் குறையில்லை.

**விளக்கம்** - தீர்க்க சரணாகதியான திருவாய்மொழி போன்று இந்த நூலும் த்வய மந்த்ரத்தின் விளக்கமாகவே உள்ளது. எப்படி? திருவாய்மொழியின் முதல் மூன்று பத்துக்களால் த்வய மந்திரத்தின் இரண்டாம் வாக்கிய பொருள்; அடுத்து மூன்று பத்துக்களால் த்வய மந்த்ரத்தின் முதல் வரியின் பொருள்; அடுத்து உள்ள நான்கு பத்துக்களால் அப்படிப்பட்ட உபாயத்திற்கு வேண்டிய குணங்கள், ஆத்மா மற்றும் ஆத்மாவுடன் தொடர்புடைய பெண்கள் ஆகியவற்றில் தனக்கு நசையற்ற நிலை, ஸர்வேச்வரனுடன் தனக்கு இயற்கையாகவே அமைந்துள்ள உறவுமுறை, இவற்றைத் தான் வேண்டியபடியே அவனிடம் பெற்ற நிலை ஆகிய பலவற்றையும் கூறி, இப்படியாக த்வயத்தின் ஆழ்பொருளை அருளிச்செய்கிறார். இதே போன்று இங்கும், முதலில் புருஷகாரம், தொடர்ந்து உபாயம், தொடர்ந்து உபாய அதிகாரியின் நிலை ஆகியவை கூறப்பட்டதால் த்வயத்தின் முதல் வாக்கியத்தின் பொருள் கூறப்பட்டது; அதிகாரியின் நிலையைக் கூறும்போது, உபேயத்தைப் பெற என்ன தகுதி இருக்கவேண்டும் என்பதைக் கூறும்போது, இரண்டாவது வரியின் பொருள் உரைக்கப்படுகிறது. அடுத்து உள்ள மூன்று ப்ரகரணங்கள் மூலம் த்வயத்தை உபதேசம் செய்த ஆசார்யன் குறித்து இந்த அதிகாரிக்கு உண்டாக வேண்டிய எண்ணங்கள், ஒழுகுமுறைகள், மஹாவிச்வாசம் உண்டாவதற்கு எம்பெருமான் இவனிடம் காண்பித்த காரணம் இல்லாத கடாக்ஷம் என்பதன் பெருமை, இரண்டு வரிகள் மூலம் கூறப்பட்ட உபாய உபேயங்களின் எல்லை நிலம் பற்றிய கருத்து ஆகியவற்றைக் கூறி முடிக்கிறார். இதனால் இவை த்வய மந்த்ரத்தின் விளக்கம் என்று கூறுவதில் எந்தவிதமான குறையும் இல்லை.

**வ்யாக்யானம்** - இப்படி த்வயவிவரணமானவிதிலே த்வயந்தன்னிற்போலே மற்றை ரஹஸ்ய த்வயார்த்தங்களும் ஸங்க்ரஹேணோத்தங்களாயிருக்கும் ; எங்ஙனேயென்னில்: அஹமர்த்தத்துக்கு என்று தொடங்கி அடியானென்றிறே என்னுமளவாகவும், ஸ்வரூப ப்ரயுக்தமான தாஸ்யமிறே ப்ரதாநம் என்றும், ப்ரணவார்த்தஞ் சொல்லப்பட்டது. ஸ்வயத்ந நிவ்ருத்தி இத்யாதியாலும், தன்னைத்தானே முடிக்கையாவது என்று தொடங்கி, இப்படி ஸர்வ ப்ரகாரத்தாலும் என்கிறதற்குக் கீழிலுள்ளத்தாலும் நமச்சப்தார்த்தஞ் சொல்லப்பட்டது. பரப்ரயோஜநப்ரவ்ருத்தி இத்யாதியாலும், உபேயத்துக்கிளைய பெருமாளையும் இத்யாதியாலும், கைங்கர்யந்தான் பக்தி மூலமல்லாதபோது, இத்யாதியாலும் த்ருதீயபதார்த்தஞ் சொல்லப்பட்டது. அஜ்ஞாநத்தாலே இத்யாதியாலும், ப்ராபகந்தர பரித்யாத்யாகத்துக்கு இத்யாதியாலும் உபாயாந்தர த்யாகத்தை ஸஹேதுகமாகச் சொல்லுகையாலே தத்த்யாஜ்யதையையும் த்யாகப்ரகாரத்தையும் சொல்லுகிற பதத்வயார்த்தமுஞ் சொல்லப்பட்டது. இதுதனக்குஸ்வரூபம் இத்யாதியாலும், ப்ராப்திக்குபாயமவன் நினைவு இத்யாதியாலும் மாமேகம் சரணம் என்கிற பதங்களி லர்த்தஞ் சொல்லப்பட்டது. ப்ரபத்யுபாயத்துக்கு இத்யாதியாலே வ்ரஜ என்கிற ஸ்வீகார வைலக்ஷண்யஞ் சொல்லப்பட்டது. அவனிவனை என்று தொடங்கி, ஸ்வாதந்த்ர்யத்தாலே வரும் பாராதந்தர்யம் ப்ரபலம் என்னுமளவும், ஸர்வ பாபங்களையுந் தள்ளி அங்கீகரிக்கும் மீச்வர ஸ்வாதந்த்ர்யத்தையும், க்ருபாபலமுமநுபவித்தேயறவேணும் என்று, பலஸித்தியில் கண்ணழிவில்லாமையுஞ் சொல்லுகையாலே உத்தரார்த்தத்திலர்த்தஞ் சொல்லப்பட்டது.

**விளக்கம்** – இவ்விதம் த்வயத்தின் விளக்கமாகவே உள்ள இந்த நூல், திருமந்த்ரம் மற்றும் சரமச்லோகம் ஆகிய இரண்டின் ஆழ்பொருள்களையும் தன்னில் கொண்டதாகவே உள்ளது. எப்படி? “அஹமர்த்தத்துக்கு” என்று தொடங்கி, “அடியானென்றிறே” என்பது முடிய உள்ள சூர்ணைகள், ”ஸ்வரூப ப்ரயுக்தமான தாஸ்யமிறே ப்ரதாநம்” என்னும் சூர்ணை ஆகியவற்றின் மூலம் ப்ரணவத்தின் பொருள் கூறப்பட்டது. “ஸ்வயத்ந நிவ்ருத்தி” என்பதாலும், ”தன்னைத்தானே முடிக்கையாவது” என்று தொடங்கி, “இப்படி ஸர்வ ப்ரகாரத்தாலும்” என்று முடியும் சூர்ணைகளாலும் நம: என்பது விளக்கப்பட்டது. ”பரப்ரயோஜநப்ரவ்ருத்தி” என்பதாலும், ”உபேயத்துக்கிளைய பெருமாளையும்” என்று உள்ள சூர்ணையாலும், ”கைங்கர்யந்தான் பக்தி மூலமல்லாதபோது” என்பதாலும் நாராயணாய என்பது விளக்கப்பட்டது. “அஞ்ஞானத்தாலே” என்னும் சூர்ணை, “ப்ராபகந்தர பரித்யாத்யாகத்துக்கு” என்னும் சூர்ணை ஆகியவை மூலம் மற்ற உபாயங்களைக் கைவிடுதல் என்பதைக் காரணங்களுடன் கூறுவதால், அந்த உபாயங்களை எப்படிக் கைவிடவேண்டும் என்று கூறுவதால் – இவை மூலம் ஸர்வதர்மாந் பரித்யஜ்ய என்பது விளக்கப்பட்டது. ” இது தனக்கு ஸ்வரூபம்” என்பதன் மூலமும், ” ப்ராப்திக்குபாயமவன் நினைவு” என்பதன் மூலமும், மாமேகம் சரணம் என்பது விளக்கப்பட்டது. “ப்ரபத்தயுபாயத்துக்கு” என்பதன் மூலம் வ்ரஜ என்ற பதம் விளக்கப்பட்டது. அதாவது பற்றுவதன் மேன்மை உரைக்கப்பட்டு, “அவன் இவனை” என்று தொடங்கி, ”ஸ்வாதந்த்ர்யத்தாலே வரும் பாராதந்தர்யம் ப்ரபலம்” என்பது முடிய உள்ள சூர்ணைகளில், அனைத்துப் பாவங்களையும் நீக்கி ஸர்வேச்வரன் ஏற்றுக் கொள்கின்ற அவனது ஸ்வதந்த்ரத்தைக் கூறுகிறார். ”க்ருபாபலமுமநுபவித் தேயறவேணும்” என்பதன் மூலம், பலத்தைப் பெறுகின்ற குறிக்கோளில் மாற்றம் இல்லாமையும் கூறுவதால் இவை – அஹம் த்வா என்று தொடங்கும் இரண்டாவது வரியின் விளக்கம் ஆகின்றன.

**ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்த அவதாரிகை ஸம்பூர்ணம்**

## ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த ஸ்ரீவசனபூஷணமும் ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்த வ்யாக்யானமும்

### 1. வேதார்த்தமறுதியிடுவது ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்களாலே.

**அவதாரிகை** - ப்ரமாதாவானவன் ப்ரமாணத்தைக் கொண்டிறே ப்ரமேயத்தை நிச்சயிப்பது. அந்த ப்ரமாணந்தான், ப்ரத்யக்ஷாதி ரூபேண அஷ்ட விதமாகச் சொல்லுவர்கள். அதில் “ப்ரத்யக்ஷமேகஞ்சார்வாகா:” இத்யாதியில் சொல்லுகிற பாஹ்யகுத்ருஷ்டிகளைப் போலன்றியே, ப்ரத்யக்ஷாநுமாநாகமங்கள் மூன்றையும் ப்ரமாணதயா அங்கீகரித்து, உபமாநாதி பஞ்சகத்தையும் அவற்றிலே யதாயோகமந்தர்பவிப்பித்து, அவற்றில் ப்ரத்யக்ஷம் இந்த்ரியக்ரஹ்ணயோக்யங்களிலும், அநுமாநம் ப்ரத்யக்ஷ ஸித்த வ்யாப்தி க்ரஹ்ணாநுரூபமான கதிபயபரோக்ஷார்த்தங்களிலும் ப்ரமாணமாகவும், அதீந்த்ரியார்தத்தில் சாஸ்த்ரமே ப்ரமாணமாகவும் நிஷ்கர்ஷித்து, அது தன்னிலும் “வேதே கர்த்ராத்யபாவாத் பலவதி ஹி நயைஸ் த்வந்முகே நீயமாநே தந்மூலத்வேந மாநம் ததிதரதகிலம் ஜாயதே” என்கிறபடியே ஸ்வப்ராமாண்யத்துக்கு மூலஸாபேக்ஷமான பௌருஷேய சாஸ்த்ரத்தைப் பற்ற, ஸ்வத: ப்ராமாண்யமுடைய வேதமே ப்ரபல ப்ரமாணமாகவும் அறுதியிட்டிருக்கும் பரமவைதிகராகையாலே, இப்ப்ரபந்தத்தில் தாமருளிச் செய்கிற அர்த்தங்களெல்லாம் வேதப்ரதிபாத்யமென்னுமிடம் தோற்றமுதலிலே வேதத்தை ப்ரமாணமாகவங்கீகரித்துக் கொண்டு ததர்த்தநிர்ணயம் பண்ணும் க்ரமத்தை இவ்வாக்யத்தாலேயருளிச் செய்கிறார்.

**விளக்கம்** - உண்மையான ஞானத்தைத் தேடும் ஒருவன், தகுந்த ப்ரமாணம் கொண்டு அல்லவோ ப்ரமேயத்தை அறிவான் (ப்ரமாணம் = உண்மையை அறிந்து கொள்வதற்கான சாதனங்கள், ப்ரமேயம் = ப்ரமாணத்தால் அறியப்படும் பொருள்)? இத்தகைய ப்ரமாணம் என்பதை ப்ரத்யக்ஷம் தொடக்கமாக எட்டுவிதமாகப் பிரித்துக் கூறுவார்கள் (இவை ப்ரத்யக்ஷம், அனுமானம், ஆகமம், உபமாநம், அருத்தாபத்தி, அபாவம், சம்பவம் மற்றும் ஐதிஹ்யம்). இதில் வேதங்களின் கொள்கைகளுக்குப் புறம்பாக உள்ளவர்களும் (பாஹ்யர்), வேதவரிகளுக்குத் தவறான பொருள் உரைப்பவர்களும் (குத்ருஷ்டி), ப்ரத்யக்ஷமேகஞ்சார்வாகா: – ப்ரத்யக்ஷத்தை மட்டுமே உலோகாயதர்கள் ஏற்கின்றனர் என்பதற்கு ஏற்ப உள்ளனர். ஆனால் இந்த நூல் ஆசிரியரான ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் அப்படி அல்ல (ஸ்வாமி எப்படி ஆராய்கிறார் என்பதை அடுத்துள்ள பல வரிகளில் கூறுகிறார்). ப்ரத்யக்ஷம், அநுமானம் மற்றும் ஆகமம் ஆகிய மூன்றையும் ப்ரமாணங்களாக ஏற்றார். மற்ற ஐந்து ப்ரமாணங்களையும் இந்த முன்றிலேயே அடக்கினார் (அநுமானத்தில் உபமானம், அருத்தாபத்தி, சம்பவம்; ப்ரத்யக்ஷத்தில் அபாவம்; ஆகமத்தில் ஐதிஹ்யம் என அடக்கினார்). இவற்றில் ப்ரத்யக்ஷம் என்பதை இந்த்ரியங்களால் அறிந்து உணரக்கூடிய பொருள்களுடன் தொடர்புபடுத்தியும்; அனுமானம் என்பதை இந்த்ரியங்களால் பெறப்படும் ஞானம் மூலமாக, ஆனால் அந்த

இந்த்ரியங்களால் நேரடியாக அறிய இயலாத பொருள்களுடன் தொடர்புபடுத்தியும்; இந்த்ரியங்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்களுக்கு சாஸ்த்ரமே ப்ரமாணம் என்றும் உறுதிபட உரைத்தார். இப்படிப்பட்ட சாஸ்த்ரங்கள் கூட, தாங்கள் ப்ரமாணமாக நிலை நிற்பதற்கு வேறு ஒரு மூலப்ரமாணத்தை நாடுகின்றன என்பதை ஸ்ரீரங்கராஜஸ்தவம் உத்தரசதகம் (14) - வேதே கர்த்ராத்யபாவாத் பலவதி ஹி நயைஸ் த்வந்முகே நீயமாநே தந்மூலத்வேந மாநம் ததிதரதகிலம் ஜாயதே - திருவரங்கத்தில் கண்வளர்பவனே! யாராலும் இயற்றப்படாதது என்பதால் எந்தவிதமான தோஷங்களும் அற்றதான வேதங்கள், பலவிதமான ந்யாயங்களால் உன்னையே பரமாகக் கொண்டுள்ளன - என்பதன் மூலம் அறியலாம். மனிதர்களால் இயற்றப்பட்ட மற்ற சாஸ்த்ரங்களான இதிஹாஸம் போன்றவை போல் அல்லாமல், வேதங்கள் தங்களுக்கு வேறு எதுவும் ப்ரமாணமாக இருக்கவேண்டிய அவசியம் அல்லாமல், தாங்களே தங்களுக்கு ப்ரமாணமாக உள்ள தன்மை கொண்டுள்ளதால், அத்தகைய வேதங்களே அனைத்து விதமான ப்ரமாணம் என்று உறுதிபடக் கூறினார். இப்படிப்பட்ட வைதிகர் என்பதால், இந்த நூலில் தாம் கூறுபவை அனைத்தும் வேதங்களால் முழங்கப்பட்டவையே என்று கூற எண்ணினார். ஆக முதலில் வேதங்களை ப்ரமாணமாக உரைத்து, அப்படிப்பட்ட வேதங்களின் ஆழ்பொருளை உறுதிபட உரைக்கும் முறையை இந்தச் சூர்ணையில் அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அகிலஹேய ப்ரத்யநீகத்வ கல்யாணைகதாநத்வங்களாலே ஈச்வரன் அகில ப்ரமேய விலக்ஷணனாயிருக்குமாபோலேயிறே அபௌருஷேயத்வ நித்யத்வங்களாலே வேதம் அகில ப்ரமாணவிலக்ஷணமாயிருக்கும்படி; வேதத்தினுடைய அபௌருஷேயத்வம் “வாசா விரூப நித்யயா” இத்யாதி ச்ருதியாலும், “அநாதி நிதநாஹ்யேஷா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா, ஆதௌ வேதமயீ திவ்யா யதஸ் ஸர்வா ப்ரஸூதய:” இத்யாதி ஸ்ம்ருதியாலும் ப்ரதிபாதிக்கப்படா நின்றதிறே. இந்த ச்ருதிஸ்ம்ருதிகள் வேதநித்யத்வத்தைச் சொல்லுகையாலே, தத்பௌருஷேயத்வமும் ஸித்தமிறே. அதஏவ ப்ரமவிப்ரலம்ப ப்ரமாதாசக்திரூபதோஷ சதுஷ்டய ஸம்பாவநாகந்த ரஹிதமாயிருக்கும் பௌருஷேயத்வமிறே அவை வருகைக்கு மூலம். இப்படியிருக்கையாலே இதுக்கு மேற்பட்டதொரு சாஸ்த்ரமில்லை. ஆகையாலேயிறே ”ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யமுத்த்ருத்ய புஜமுச்யதே, வேதாத்சாஸ்த்ரம் பரம் நாஸ்தி ந தைவம் கேசவாத் பரம்” என்று ஐதிஹாஸிகராலும் பௌராணிகராலும் ஏககண்டமாகச் சொல்லப்பட்டது. இதினேற்ற மெல்லாம் திருவுள்ளம் பற்றியிறே “சுடர்மிகு சுருதி” யென்று நம்மாழ்வாரருளிச் செய்தது. அவரைப் பின் செல்லுமவராய் அபியுக்தாக்ரேஸரரான பட்டரும் “ஆதௌ வேதா: ப்ரமாணம்” என்றாரிறே.

**விளக்கம் -** அகில ஹேய ப்ரத்யநீகத்வம் (தான் குற்றம் இல்லாமல் இருப்பதுடன் அல்லாமல், தன்னை அண்டியவர்களின் குற்றங்களையும் நீக்கும் தன்மை), கல்யாணைகதாநத்வம் (தானும் ஆனந்தமாக இருந்து, மற்றவர்களையும் ஆனந்தமாக வைத்தல்) என்னும் இரண்டு தன்மைகள் மூலம் ஸர்வேச்வரன் அனைத்துவிதமான

பொருள்களைக் காட்டிலும் வேறுபட்டவனாக உள்ளான். இதே போன்று, மனிதர்களால் இயற்றப்படாத தன்மை, என்றும் நிலையாக உள்ள தன்மை ஆகிய இரண்டாலும் மற்ற ப்ரமாணங்களைக் காட்டிலும் வேதங்கள் வேறுபட்டதாகவே உள்ளன. வேதத்தின் இந்தத் தன்மைகள் கீழே உள்ள வரிகள் மூலம்உணர்த்தப்படுகின்றன:

- வாசா விரூப நித்யயா - என்றும் உள்ள வேதங்களால் போற்றப்படும் அழகுள்ளவனே!

- அநாதி நிதநாஹ்யேஷா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா, ஆதௌ வேதமயீ திவ்யா யதஸ் ஸர்வா ப்ரஸூதய: - எந்த வேதத்தை அடிப்படையாகக் கொண்டு அனைத்தும் படைக்கப்படுகிறதோ, தோற்றமும் முடிவும் அற்றதாக உள்ளதோ, அந்த வேதங்கள் திவ்யமான வாக்குகளாக உள்ளன. இவை ஸர்வேச்வரனால் வெளிப்பட்டன.

மேலே உள்ள வரிகள், வேதங்களின் நித்யமாக உள்ள தன்மையை உணர்த்துவதால், அவை மனிதர்களால் செய்யப்படாத தன்மையையும் உணர்த்துவதாகவே உள்ளன. மனிதர்களால் செய்யப்படாத காரணத்தினால் வேதங்கள் மயக்கம் ஏற்படுத்தும் தன்மை (பிரமம்), வஞ்சனையான கருத்து (விப்ரலம்பம்), குறிக்கோள் இல்லாமல் ஏதோ கூறுதல் (பிரமாதம்) மற்றும் காரணங்களின் வலிமை இல்லாத நிலை (அசக்தி) ஆகிய தோஷங்கள் சிறிதும் இல்லாதபடி உள்ளன. இவை அனைத்தும் மனிதர்களால் செய்யப்படும் பொருள்களுக்கு அல்லவோ உண்டாகும் தோஷங்கள்? இந்தக் குற்றங்கள் இல்லாத காரணத்தினால் இவற்றுக்கு மேலான சாஸ்த்ரம் ஏதும் இல்லை. இதனால்தான் இதிஹாஸம் மற்றும் புராணங்களை நன்றாக அறிந்தவர்களால் ஒரே குரலில் - ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யமுத் த்ருத்ய புஜமுச்யதே, வேதாத்சாஸ்த்ரம் பரம் நாஸ்தி ந தைவம் கேசவாத் பரம் – உண்மை, உண்மை, கைகளை உயர்த்திக் கூறுகிறேன், வேதங்களைக் காட்டிலும் மேலான சாஸ்த்ரம் இல்லை, கேசவனை விட உயர்ந்த தெய்வம் இல்லை - என்று கூறப்பட்டது. வேதங்களின் மேன்மையை உணர்ந்த காரணத்தால் அல்லவோ நம்மாழ்வார் – சுடர்மிகு சுருதி – என்று அருளிச்செய்தார்? வேதங்களே சிறந்த ப்ரமாணங்கள் என்று ஆராய்பவர்கள் வரிசையில் தலைவராக உள்ள ஸ்வாமி பராசரபட்டரால் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (2-19) - ஆதௌ வேதா: ப்ரமாணம் – முதலில் வேதங்கள் ப்ரமாணம் – என்று கூறப்பட்டது காண்க.

**வ்யாக்யானம் -** இத்தை வேதமென்கிறது, "வேதயதீதி வேத:" என்கிற வ்யுத்பக்தியாலே புபுத்ஸுக்களாய் ஆஸ்திகராயிருப்பார்க்கு ஸ்வார்த்த ப்ரகாசமாயிருக்கையாலே. இப்படியிருந்துள்ள வேதந்தான், ப்ரதிபாத்யார்த்த விசேஷத்தாலே பாகத்வயாத் மகமாயிருக்கும். அத்தை இவ்விடத்தில் உபயபாக ஸாமாந்யவாசியான வேதசப்தத்தாலே ஸாகல்யேந சொல்லுகிறது. அர்த்தமென்று பூர்வபாக ப்ரதிபாத்யமான கர்மத்தையும்

உத்தரபாக ப்ரதிபாத்யமான ப்ரஹ்மத்தையுஞ் சொல்லுகிறது. பூர்வோத்தர மீமாம்ஸைகளில் "அதாதோ தர்மஜிஜ்ஞாஸா" என்றும், "அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" என்றுமிறே உபக்ரமித்தது; அகையாலே, பாகத்வயத்துக்கும் ப்ரதிபாத்யம் ஆராதநரூபமான கர்மமும் ஆராத்யவஸ்துவான ப்ரஹ்மமுமிறே. கர்மத்தினுடைய பகவதாராதநத்வம் "ஸ ஆத்மா அங்காந்யந்யா தேவதா:" என்று அக்நீந்த்ராதி ஸகல தேவதைகளும் பகவத் சரீரபூதராக சாஸ்த்ரஞ் சொல்லுகையாலே ஸித்தமிறே. இவ்வாகார மறியாதார் அவ்வோ தேவதா மாத்ரங்களையுத்தேசித்துப் பண்ணும் கர்மமும் வஸ்துகத்யா பாகவதாராதநமாய்த் தலைக்கட்டும். "யே யஜந்தி பித்ரூந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹுதாச்நாந் ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்தி தே" என்னக்கடவதிறே. ""யேப்யந்ய தேவதா பக்தா யஜந்தே ச்ரத்தயாந்விதா:, தேபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதி பூர்வகம்" என்று தானேயருளிச் செய்தானிறே. ஆகவே எல்லாப்படியாலும் கர்மத்துக்கு பகவதாராதநத்வம் ஸித்தமிறே. இப்படி ஆராதநரூபமான கர்மமும் ஆராத்ய வஸ்துவான ப்ரஹ்மமுமாகிற அர்த்த த்வயத்தையுமறியவே, த்யாஜ்யோபாதேயரூப ஸகலார்த்தங்களையுமறியலாயிருக்கையலே, பாகத்வய ப்ரதிபாத்யம் கர்மப்ரஹ்மங்க ளென்கிறது. எங்ஙனேயென்னில், கர்மந்தான் புபுக்ஷுக்களுக்கு ஐச்வர்ய ஸாதநமாய் முமுக்ஷுக்களில் பக்தி நிஷ்ட்டர்க்கு உபாஸநாங்கமாய், ப்ரபந்நர்க்கு கைங்கர்யரூப மாயிறேயிருப்பது.

**விளக்கம்** – வேதங்களை வேதம் என்று பெயரிட்டது ஏன் என்றால், வேதயதீதி வேத: என்பதற்கு ஏற்ப, தங்களை அறிந்து கொள்ள எண்ணுபவர்களுக்குத் தங்களைத் தாங்களே அவை காண்பித்துக் கொடுப்பதால் ஆகும். இப்படிப்பட்ட வேதங்கள், தங்களிடம் கூறப்பட்டுள்ள பொருள் மேன்மை காரணமாக, இரண்டு பாகங்கள் கொண்டவையாக உள்ளன. இப்படிப்பட்ட இரண்டு பாகங்களையும், இங்கு பொதுவாக வேதம் என்ற பதம் குறிப்பிடுகிறது. "அர்த்தம்" என்பது - முதல் பாகத்தில் கூறப்பட்டுள்ள கர்மங்கள், பின் பாகத்தில் கூறப்பட்டுள்ள பரப்ரஹ்மம் - என்பதைக் கூறுகிறது. பூர்வ மீமாம்ஸையானது - அதாதோ தர்ம ஜிஜ்ஞாஸா - வேதங்களை ஓதிய பின்னர், அந்தக் காரணத்தால் தர்மத்தை அறிய ஆவல் கொள்ளவேண்டும் – என்று தொடங்கியது. உத்தரமீமாம்ஸையானது – அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா – தர்மங்களை அறிந்த பின்னர், அந்தக் காரணத்தால் ப்ரஹ்மத்தை அறிய ஆவல் கொள்ளவேண்டும் – என்றது. ஆக இந்த இரண்டு பாகங்கள் மூலமாக - ஆராதனை செய்யும் வழி முறைகளான கர்மமும், அந்தக் கர்மங்களால் ஆராதிக்கப்படும் பரம்பொருளும் – கூறப்பட்டன. ஸ ஆத்மா அங்காந்யந்யா தேவதா - பரம்பொருளே உயிராக உள்ளது; மற்ற தேவதைகள் சரீரங்களாக உள்ளன - என்று கூறுவதன் மூலம் அக்னி, இந்த்ரன் உள்ளிட்ட அனைத்து தேவதைகளும் பகவானின் சரீரம் என்பதை உணரலாம். இதன் மூலம் கர்மங்கள் பகவானின் ஆராதனை வடிவமாக உள்ளதையும் அறியலாம். இதனை உணர்ந்தவர்களிடம் – அக்னி, இந்த்ரன் உள்ளிட்ட தேவர்களுக்குச் செய்யும் ஆராதனம் அவர்களது அந்தர்யாமியாக உள்ள பகவானுக்குச் செய்வதாகவே அமைகிறது - என்ற ஞானம் உண்டாகிறது. இதனால், கர்மங்கள்

அனைத்தும் பகவத் ஆராதனம் என்ற சிந்தனை தெளிவாகவே அமைந்துவிடும். இப்படிப்பட்ட ஞானம் இல்லாதவர்கள், அந்தத் தேவதைகளைக் கருத்தில் கொண்டு செய்யும் ஆராதனைகள் அனைத்தும், அவற்றின் இயல்பு காரணமாக எம்பெருமானின் ஆராதனைகளாகவே சென்று முடிந்து விடும். தக்ஷஸ்ம்ருதி - யே யஜந்தி பித்ரூந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹுதாச்நாந் ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்தி தே - யார் ஒருவன் பித்ருக்கள், தேவர்கள், அக்னியுடன் கூடிய அந்தணர்கள் ஆகியவர்களை வணங்குகின்றானோ, அவன் அனைத்து உயிர்களின் அந்தர்யாமியாக உள்ள விஷ்ணுவையே ஆராதிப்பதாக ஆகிறது - என்றது. இதனைக் கீதையில் (9-23) - யேப்யந்ய தேவதா பக்தா யஜந்தே ச்ரத்தயாந்விதா:, தேபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதி பூர்வகம் – அர்ஜுனா! யார் ஒருவன் மற்ற தேவதைகளிடம் பக்தி கொண்டவனாக, அந்தத் தேவதைகளை ஆராதிக்கிறானோ, அவன் அதனை என்னுடைய ஆராதனம் என்று உணராதவனாக, என்னையே ஆராதிக்கிறான் - என்று தானே அருளிச்செய்தான் அல்லவோ? ஆக அனைத்துக் கர்மங்களும் பகவானின் ஆராதனை என்பது தெளிவு அல்லவோ? இப்படியாக ஆராதனை உபாயமாக உள்ள கர்மம், ஆராதிக்கப்படும் பரம்பொருள் ஆகியவை குறித்து அறிவதற்காகவும், கைவிடத்தக்கதும் ஏற்கத்தக்கதும் எவை என்று அறிவதற்காகவும், வேதங்களில் பூர்வபாகம் மற்றும் உத்தரபாகத்தால் கூறப்படுவது கர்மம் மற்றும் பரம்பொருள் என்பதை அறியவேண்டும். எப்படி? கர்மம் என்பது இன்பத்தை விரும்புவர்களுக்கு ஐச்வர்யத்தை அளிப்பதாகவும், முமுக்ஷுக்களில் பக்தியில் நின்றவர்களுக்கு பக்தியின் அங்கமாகவும், முமுக்ஷுக்களில் ப்ரபந்நர்களுக்கு பகவத் கைங்கர்யத்தை அளிப்பதாகவும் உள்ளது.

**வ்யாக்யானம்** - இப்படியிருந்துள்ள கர்மத்தின் வேஷத்தை உள்ளபடியறியவே, அநந்த ஸ்திரபல ப்ரஹ்மப்ராப்திகாமரான ஸாதகர்க்கு இது உபாஸநாங்கத்வேந உபாதேயம், ஐச்வர்யார்த்திகளுக்குபாதேயமானவாகாரத்தால் த்யாஜ்யம் என்றறியலாம். அநந்ய ஸாதநர்க்கு இது கொண்டு ஸாதிக்கவேண்டுவதொன்றில்லாமையாலே கைங்கர்ய ரூபேணோபாதேயம், உபாஸகர்க்கு உபாதேயமான ஆகாரத்தாலே த்யாஜ்யம் என்றறியலாம். ப்ரஹ்மத்தையறியும்போது, தத்ஸ்வரூபரூப குண விபூதிகளை யெல்லாமறிய வேண்டுகையாலே விபூதிபூத சேதநாசேதநங்களின் ஸ்வரூபமறியலாம். அதில் ஜ்ஞாநாநந்த லக்ஷணமான சேதநஸ்வரூப வைலக்ஷண்யமடியாக வருகிறதா கையாலே கைவல்யத்தின் வேஷமுமறியலாம். ப்ரஹ்மத்தினுடைய சேஷித்வ ப்ராப்யத்வங்களையறியவே ததநுபாவாதிகள் புருஷார்த்தமென்றறியலாம். ததுபாஸ்யத்வ சரண்யத்வங்களையறியவே தத்ப்ராப்தி ஸாதநவிசேஷங்களையறியலாம். ப்ரஹ்மத்தினுடைய நிரதிசய போக்யத்தையையும் அநந்ய ஸாத்யத்வத்தையும் தத்ப்ரகாரதயா பரதந்த்ரமான ஸ்வஸ்வரூபத்தையும் தர்சிக்கவே ஸாத்யாந்தர ஸாதநாந்தரங்களினுடைய த்யாஜ்யத்வத்தையும் ஸுஸ்பஷ்டமாகவறியலாம். ஆக இப்படியிருக்கையாலே பாகத்வயத்துக்கும் ப்ரதிபாத்யம் ஆராதந ஸ்வரூபமான கர்மமும் ஆராத்ய வஸ்துவான ப்ரஹ்மமுனென்னக் குறையில்லை.

**விளக்கம்** - இப்படியாக உள்ள கர்மத்தின் தனித்தன்மையை அறிவதற்கு - அளவற்றதாகவும், அழிவற்றதாகவும், பலமாக உள்ளதாகவும் இருக்கும் பரம்பொருளை அடைய விரும்பும் பக்தி நிஷ்டர்களுக்குக் கர்மம் என்பது பக்திக்கு அங்கமாக இயற்ற வேண்டியதாக இருப்பதாகும்; செல்வத்தை விரும்புகிறவர்கள் செல்வத்தை நோக்கினால் என்ன செய்கிறார்கள் என்பதைக் காண நேர்ந்தால், அந்தக் கர்மங்கள் கைவிடத்தக்கவை எவை என்று உணர்த்துவதாக இருக்கும் (அதாவது எப்படிப்பட்ட கர்மம் ஏற்கத்தக்கது, எது விடத்தக்கது என்றார்). ஸித்தோபாயமான எம்பெருமானிடம் மட்டுமே நிலை நிற்பவர்களுக்கு, இப்படிபட்ட கர்மங்கள் மூலம் அடையவேண்டியது ஏதும் இல்லாமையால் கர்மங்கள் என்பது அவர்களைப் பொறுத்தவரையில் கைங்கர்ய வடிவமாக இருக்கும்; ஆனால் பக்தியில் நிற்பவர்கள் செய்கின்ற கர்மங்கள், இவர்களுக்குக் (ப்ரபந்தர்களுக்கு) கைவிடத்தக்கதாக இருக்கும். பரம்பொருளைப் பற்றி அறிந்து கொள்ளும்போது, அவனது ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதிகள் (அவனால் நியமிக்கப்படும் அனைத்தும்) ஆகியவற்றை அறியவேண்டும். ஆகவே அப்போது அவனது விபூதிகளாக உள்ள சேதனம் மற்றும் அசேதனம் ஆகியவற்றை அறியலாம். ஞானம் மற்றும் ஆனந்தம் ஆகியவற்றின் வடிவமாகவே உள்ள சேதனங்களின் ஸ்வரூப ஞானம் அப்போது உண்டாவதால், ஆத்ம அனுபவம் உள்ளிட்ட கைங்கர்யங்களின் தன்மைகளை அப்போது அறியலாம். பரம்பொருளின் சேஷித்வத்தை (எஜமானத்தன்மை) அறிவது என்பதே அவனுக்குச் செய்யும் கைங்கர்யம் மூலம் கிட்டும் புருஷார்த்தம் என்றும், அவனது ப்ராப்யத்தை அறிவது என்பதே அவனை அனுபவிக்கின்ற அனுபவம் மூலம் கிட்டும் புருஷார்த்தம் என்றும் அறியவேண்டும் (ப்ராப்யம் என்றால் அனுபவிக்கத் தக்கவனாக இருத்தல்). பரம்பொருளின் பக்திக்கு விஷயமாக உள்ள தன்மையை அறியவே (உபாஸ்யத்வம்) அவனை அடைவதற்கான சாதனமான பக்தியின் விசேஷம் என்பதை அறியவேண்டும் என்றும், பக்தி மார்க்கத்தில் இல்லாதவர்களுக்கு அவன் வேறு விதத்தில் உபாயமாக இருத்தல் என்பதை அறியவே, அவனை அடைய உதவும் ப்ரபத்தி விசேஷம் என்பதை அறியவேண்டும் என்றும் அறியலாம். பரம்பொருளின் எல்லையற்ற இனிமையை அறியும் பொருட்டு, வேறு பலன்களைக் கைவிடுவது என்பதை அறியலாம். மற்ற எதனது உதவியும் இன்றி, தான் மட்டுமே உதவும் பரம்பொருளின் தன்மை மற்றும் அவனுக்குச் சரீரமாக இருந்தபடி அவனுக்கு வசப்பட்டுள்ள ஆத்மாவின் தன்மை ஆகியற்றை அறிந்து கொள்வதற்காக, மற்ற சாதனங்களைக் கைவிடுதல் என்பதை அறிய வேண்டும்.

**வ்யாக்யானம்** - "த்வதர்ச்சாவிதிமுபரி பரிக்ஷீயதே பூர்வபாக: ஊர்த்வோ பாகஸ் த்வதீஹா குணவிபவ பரிஜ்ஞாபனைஸ் த்வத் பதாப்தௌ" என்றிறே பட்டருளிச் செய்தது. இப்படி பாகத்வய ப்ரதிபாத்யங்களான இவ்வர்த்தங்களை அறுதியிடுகையாவது, கர்மத்தினுடைய ஸ்வரூபாங்க பலாதிகளையும் ப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூபரூபகுண விபூதியாதிகளையும் ஸம்சய விபர்யயமற நிர்ணயிக்கை. அதுதான் செய்யும்போது ஸகலசாகாப்ரத்யய ந்யாயத் தாலும், ஸகல வேதாந்த ப்ரத்யய ந்யாயத்தாலும் செய்யவேண்டும். அதில் ஸகல சாகாப்ரத்ய்ய ந்யாயமாவது :- ஒரு வாக்யத்திலே ஓரர்த்தத்தைச் சொன்னால், அதினுடைய

அங்கோபாங்காதிகள் நேராகவறிகைக்காக, சாகாந்தரங்களெல்லாத்திலும் ஸஞ்சரித்து அவற்றில் சொல்லுகிறவர்த்தங்களிலும் ஜ்ஞாநம் பிறந்து, அவ்வர்த்தங்களுக்கு அந்யோந்ய விரோதங்களையும் சமிப்பித்து, தனக்கபிமதமான அங்கியோடே சேருமவற்றைச் சேர்க்கை. ஸகல வேதாந்த ப்ரத்ய்ய ந்யாயமாவது – ஒரு வேதாந்தத்திலே ஒரு வாக்யம் ஓரர்த்தத்தைச் சொன்னால், அல்லாத வேதாந்தங்களிலும் ஸஞ்சரித்து, அவற்றில் சொல்லுகிறவர்த்தங்களுக்கு அந்யோந்ய விரோதம் பிறவாதபடி விஷயவிபாகம் பண்ணி, தனக்கபிமதமானவர்த்தங்களோடே சேறுமவற்றைச் சேர்க்கை. இதுதான் மஹாமதிகளான மஹர்ஹிகளுக்கொழிய, அல்லாதார்க்குச் செய்யப்போகாமையாலே உபப்ரும்ஹணங்கள் கொண்டே நிர்ணயிக்கவேணும். ஆகையாலே தந்நிர்ணாயகங்க ளையருளிச் செய்கிறார் "ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களாலே" என்று. ஸ்ம்ருதிகளாவன – ஆப்தரான மந்வத்ரி விஷ்ணு ஹாரீத யாஜ்ஞவல்க்யாதிகளாலே அபிஹிதங்களான தர்ம சாஸ்த்ரங்கள். இதிஹாஸங்களாவன – புராவ்ருத்த ப்ரதிபாதகங்களாக ஸ்ரீராமாயண மஹாபாரதாதிகள். புராணங்களாவன – ஸர்காதிபஞ்சலக்ஷணோபேதங்களான ப்ராஹ்ம பாத்ம வைஷ்ணவாதிகள். வேதார்த்தமறுதியிருடுவது இவற்றாலேயென்று இப்படி நியமேநவருளிச்செய்தது, இவற்றையொழிய ஸ்வபுத்த்யா நிர்ணயிருக்குமளவில், அல்ப ச்ருதனானவனுக்கு விப்ரதிபத்தி வருமாகையாலே வேதகாலுஷ்ய ஹேதுவாமென்று நினைத்து. இந்நியமந்தான் "இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத், பிபேத்யல்பச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி" என்று பார்ஹஸ்பத்ய ஸ்ம்ருதியிலும் மஹாபாரதத்திலும் சொல்லப்பட்டதிறே. இவ்வுபக்ரமவாக்ய ப்ரக்ரியையாலே, புருஷகார வைபவம் தொடங்கி ஆசார்யாபிமாந பர்யந்தமாக இப்ப்ரபந்தத்திலிவரருளிச் செய்கிற வேதார்த்தங்களெல்லாம் உபப்ர்ம்ஹணங்கள் கொண்டே நிச்சயித்தருளிச் செய்கிறாரென்னுமிடம் தோற்றுகிறது. அதுதான் தத்ததர்த்தங்களருளிச் செய்கிற ஸ்தலங்களிலே ஸம்ப்ரதிபந்தம். ஆக இவ்வாக்யத்தால், ஸகல ப்ரமாணங்களிலும் வேதமே ப்ரபலப்ரமாணமென்னுமிடமும், ததர்த்த நிர்ணயம் பண்ணும் க்ரமமுஞ் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** - ஆக மேலே உள்ள பலவற்றாலும் நாம் அறிவது - வேதங்களின் பூர்வபாகத்தில் ஆராதனை வடிவமான கர்மம், உத்தர பாகத்தில் ஆராதிக்கப்படும் பரம்பொருள் – என்பதாகும். ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் ஸ்வாமி பராசரபட்டர் (2-19) - த்வதர்ச்சாவிதிமுபரி பரிக்ஷீயதே பூர்வபாக: ஊர்த்வோ பாகஸ் த்வதீஹா குணவிபவ பரிஜ்ஞாபநைஸ் த்வத் பதாப்தெள – ஸ்ரீரங்கநாதா! வேதங்களின் பூர்வபாகம் என்பது உன்னுடைய ஆராதனையில் முடிகிறது - என்றது காண்க. இப்படியாக இந்த இரண்டு பாகங்களிலும் கூறப்படுவது இவை இரண்டு மட்டுமே என்பதை நிச்சயம் செய்வது என்பது - கர்மத்தின் தன்மை, அங்கங்கள், பலன் போன்றவைகளையும், பரம்பொருளின் ஸ்வரூப ரூப விபூதி குணங்களையும் மிகவும் தெளிவாக சந்தேகம் இன்றி அறிதல் என்பதே ஆகும். இவ்விதம் செய்யும்போது சகலசாகா ப்ரத்யய ந்யாயம் மூலமும், சகல வேதாந்த ப்ரத்யய நியாயம் மூலமும் செய்தல் வேண்டும் (ஸகல சாகா ப்ரத்யய ந்யாயம் என்பது பூர்வபாகத்தை அறிய

உதவும், ஸகல வேதாந்த ப்ரத்யய ந்யாயம் என்பது உத்தர பாகத்தை அறிய உதவும்). ஸகல சாகாப்ரத்யய ந்யாயம் என்றால் – ஒரு வேத வரியில் கூறப்பட்டுள்ள பொருளை, அதன் அங்கம் உள்ளிட்ட தன்மைகளுடன் சரியாக அறிந்து கொள்வதற்காக, அந்த வரி உள்ள சாகையை விட்டு, மற்ற சாகைகளுக்குச் சென்று, அவற்றில் அந்தப் பொருளைப் பற்றி என்ன கூறப்பட்டதோ அவற்றை அறிந்து, அவைகளுக்குள் முரண்பட்ட பொருளை விலக்கி, தனக்கு வேண்டிய பொருள் அறிதல் ஆகும். ஸகல வேதாந்த ப்ரத்யய ந்யாயம் என்றால் – ஓர் உபநிஷத்தில் கூறப்பட்டதை அறிவதற்காக மற்ற உபநிஷத்துக்களுக்குச் சென்று, அங்கு கூறப்பட்டவற்றை அறிந்து, அவற்றுக்குள் முரண்பாடு உண்டாகாமல், தனக்கு விருப்பமானவற்றை அறிதல் ஆகும். மேலே கூறிய ந்யாயங்கள் மூலமாக ஒரு பொருளைப் பற்றி நிச்சயம் செய்தல் என்பது, மிகவும் அறிந்தவர்களான மஹரிஷிகளுக்கு மட்டுமே கைகூடும். இவை மற்றவர்களால் இயலாது. அகவே மற்றவர்கள் இது போன்று செய்ய முடியாமல், வேதங்களின் பொருளை விவரிக்கும் மற்ற நூல்கள் எவை என்று – ஸ்ம்ருதி - என்பதில் அருளிச்செய்கிறார். ஸ்ம்ருதிகள் என்பவை உண்மையான பொருளை உள்ளது உள்ளபடி அறிந்தவர்களான மனு, அத்திரி, விஷ்ணு, ஹாரீதர், யாஜ்ஞவல்க்யர் போன்றவர்களால் கூறப்பட்ட தர்மசாஸ்த்ரங்கள் ஆகும் (18 ஸ்ம்ருதிகள் = மனுஸ்ம்ருதி, ப்ரகஸ்பதிஸ்ம்ருதி, தக்ஷஸ்ம்ருதி, இயமஸ்ம்ருதி, கௌதமஸ்ம்ருதி, அங்கிரஸ்ம்ருதி, யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதி, ப்ரதேசஸ்ம்ருதி, சாதாதபஸ்ம்ருதி, பராசரஸ்ம்ருதி, ஸம்வர்த்தஸ்ம்ருதி, உசனஸ்ம்ருதி, சங்கஸ்ம்ருதி, லிகிசஸ்ம்ருதி, அத்திரிஸ்ம்ருதி, விஷ்ணுஸ்ம்ருதி, ஆபஸ்தம்பஸ்ம்ருதி, ஹாரீதஸ்ம்ருதி). இதிஹாஸம் என்பவை முன்னர் நடந்த நிகழ்வுகளைக் கூறும் ஸ்ரீஇராமாயணம், மஹாபாரதம் போன்றவை ஆகும். புராணங்கள் என்பவை ஸ்ருஷ்டி, ஸம்ஹாரம், வம்சம், வம்ச சரிதம் மற்றும் மந்வந்த்ரம் ஆகியவற்றைக் கூறுவதாகும். இவை ப்ராஹ்மபுராணம், பாத்ம புராணம், விஷ்ணு புராணம் போன்றவை ஆகும் (18 புராணங்கள் – ப்ரஹ்ம, பத்ம, விஷ்ணு, பாகவத, சைவ, பவிஷ்ய, நாரதீய, மார்க்கண்டேய, ஆக்நேய, ப்ரமகைவர்த்த, லைங்க, வராக, சாந்த, வாமன, கூர்ம, மச்ச, காருட, ப்ரம்மாண்ட புராணங்கள்). இவற்றைக் கொண்டே வேதங்களின் ஆழ்பொருளை நிச்சயம் செய்யவேண்டும் என்று ஏன் அருளிச்செய்தார்? இவை இல்லை என்றால் அறிவு குறைந்தவர்கள், தங்களது குறைந்த அறிவு கொண்டு, தாங்களாகவே பொருளை நிச்சயம் செய்ய முனைந்தால், முரணான அர்த்தத்தை ஏறிட்டுகொண்டு, தவறான ஞானம் உண்டாகிவிடும். இத்தகைய விபரீதஞானம் என்பது வேதங்களின் உண்மையான பொருளை அறிந்து கொள்ளத் தடையாக மாறிவிடும் என்று கலங்கியதன் காரணமாகவே, இவற்றின் (இதிஹாசம் போன்றவை) மூலம் அறிய வேண்டும் என்று அருளிச்செய்கிறார். இந்தக் காரணத்தினால்தான் பாருஹஸ்பத்ய ஸ்ம்ருதியில் – இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத், பிபேத்யல்பச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி - குறைந்த அறிவு கொண்டவனைப் பார்த்து வேதங்கள், ”இவன் என்னை வஞ்சித்து விடுவான்”, என்று அச்சம் கொள்கின்றன; ஆகவே இதிஹாஸம் மற்றும் புராணம் மூலமே வேதங்களை அறியவேண்டும் – எனப்பட்டது. இப்படியாக இவர் தொடங்கியுள்ள காரணத்தினால், புருஷகாரவைபவம் தொடக்கமாக

ஆசார்ய அபிமானம் இறுதியாக, இந்த ப்ரபந்தத்தில் ஸ்வாமி அருளிச்செய்யும் வேதக் கருத்துக்கள் அனைத்தும், உப ப்ரமாணங்கள் மூலமாகவே அருளிச் செய்யப்பட்டவை என்பது தெளிவாகிறது. இவற்றை அந்தந்த இடங்களில் தெளிவாக உணரலாம். ஆகவே இந்தச் சூர்ணை மூலம் – அனைத்து ப்ரமாணங்களிலும் வேதங்களே மிகவும் வலிமையான ப்ரமாணம் என்பதும், அப்படிப்பட்ட வேதங்களின் பொருளை நிச்சயம் செய்யும் முறையும் (புராணம் மூலம்) கூறப்பட்டது.

2. ஸ்ம்ருதியாலே பூர்வபாகத்திலர்த்தமறுதியிடக்கடவது; மற்றையிரண்டாலும் உத்தர பாகத்திலர்த்தமறுதியிடக்கடவது.

**அவதாரிகை** – இவற்றிலெத்தாலே எந்தபாகத்திலர்த்தம் அறுதியிடக்கடவதென்னவருளிச் செய்கிறார் ஸ்ம்ருதியாலேயென்று தொடங்கி.

**விளக்கம்** – இவற்றுள் (ஸ்ம்ருதி, இதிகாசம், புராணம் போன்றவை) எதன் மூலம் எந்தப் பாகத்தில் (உத்தர பாகம், பூர்வ பாகம்) பொருளை நிச்சயம் செய்யவேண்டும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - உபப்ரும்ஹ்யமான வேதத்துக்கு, ப்ரதிபாத்யார்த்த விசேஷத்தாலேயிறே பாகபேதமுண்டாய்த்து; அப்படியே உபப்ர்ம்ஹணங்களுக்கும் ப்ரதிபாத்யவிசேஷத்தாலே பேதமுண்டிறே, அதில் ஸ்ம்ருதிகள் பூர்வபாகோபப்ர்ம்ஹணங்களாகவும் இதிஹாஸாதிகள் உத்தரபாகோபப்ர்ம்ஹணங்களாகவும் நிர்மிதங்களாகையாலே, தத்ததுபப்ர்ம்ஹணங் களைக் கொண்டே தத்தத்பாகார்த்த நிச்சயம் பண்ணவேண்டியிறேயிருப்பது. அத்தைப் பற்ற ஆசார வ்யவஹார ப்ராயச்சித்தாதிகளுக்கு ப்ரதிபாதகங்களான இதிஹாஸ புராணங்களாகிற மற்றையிரண்டாலும், ப்ரஹ்ம ப்ரதிபாதகமான உத்தரபாகத்திலர்த்த நிச்சயம் பண்ணக் கடவதென்கிறார். இப்படி உபயவிதமான உபப்ர்ம்ஹணங்களாலே உபயபாகார்த்தத்தையும் அறுதியிடுகையாவது - அநதீதசாகாந்தரார்த்தங்களுக்கும் ப்ரதிபாதகங்களானவிவற்றாலே, அதீதசாகார்த்தங்களை அபேக்ஷித விசேஷங்களோடே கூட நிச்சயிக்கை. ஸ்ம்ருதிகள் தன்னிலே ப்ரஹ்மப்ரதிபாதநமும், இதிஹாஸாதிகளிலே கர்மப்ரதிபாதநமுமுண்டாயிருந்ததேயாகிலும், ஸ்ம்ருதிகளில் ப்ரஹ்மப்ரதிபாதநம் கர்மங்களினுடைய ததாராதந ரூபத்வ ஜ்ஞாபநார்த்தமாகவும், இதிஹாஸ புராணங்களில் கர்மப்ரதிபாதநம் கர்மங்களினுடைய உபாஸநாங்கத்வ ஜ்ஞாபநார்த்தமாகவுமாகையாலே இப்படி வகையிட்டுச் சொல்லக் குறையில்லை. ப்ராயேண பூர்வபாகார்த்த பூரணம் தர்மசாஸ்த்ரத: இதிஹாஸ புராணாப்யாம் வேதாந்தார்த்த: ப்ரகாச்யதே என்னக் கடவதிறே.

**விளக்கம்** - பலவற்றாலும் கூறப்படும் வேதங்களுக்கு, அந்த வேதங்களில் கூறப்பட்ட ஆழ்பொருளின் விசேஷத்தால் அல்லவோ இரண்டு பாகமாகப் பிரியும் வேறுபாடு

உண்டானது? ஆகவே, இது போன்று உபப்ரமாணங்களாகிற இதிகாசம் போன்றவற்றுக்கும் பொருள் விசேஷம் காரணமாக வேறுபாடு ஏற்படலாம் அல்லவோ? இவற்றில் ஸ்ம்ருதிகள் அனைத்தும் வேதங்களின் பூர்வபாகத்திற்கான உபப்ரமாணம் என்னும்படியும், இதிகாசம் மற்றும் புராணங்கள் அனைத்தும் வேதங்களின் உத்தரபாகத்திற்கு உபப்ரமாணங்கள் என்னும்படியும் செய்யப்பட்டன. ஆகவே வேதங்களின் அந்தந்த பாகங்களில் கூறப்பட்ட பொருளை, அந்தந்த பாகங்களுக்காக இருக்கின்ற உபப்ரமாணம் மூலமே நிச்சயம் செய்யவேண்டும். இவற்றில் – ஒழுக்கம் (ஆசாரம்), பிராயச்சித்தம் போன்றவற்றைக் கூறுகின்ற தர்மசாஸ்த்ரங்கள் மூலமாக, வேதங்களில் கர்மங்களைப் பற்றிக் கூறுகின்ற பூர்வபாகத்தின் அர்த்தத்தை நிச்சயம் செய்யவேண்டும். மேலும் பகவானின் ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதி, செயல்கள் ஆகியவற்றை உரைக்கின்ற இதிகாசம் மற்றும் புராணம் ஆகிய இரண்டின் மூலம், இவற்றைப் பற்றிக் கூறுகின்ற உத்தரபாகத்தின் ஆழ்பொருளை அறிய வேண்டும். இப்படியாக இரண்டுவிதமான உபப்ரமாணங்கள் மூலமாக வேதங்களின் இரண்டு பாகங்களின் கூறப்படுகின்ற ஆழ்பொருளை உறுதி செய்தல் என்பது - அத்யயனம் செய்யப்படாத மற்ற சாகைகளில் உள்ள கருத்துகளுக்கு விளக்கம் அளிக்கவல்ல இவற்றின் மூலமாக, அத்யயனம் செய்யப்படும் சாகைகளின் ஆழ்பொருளை அவற்றின் விசேஷங்களுடன் நிச்சயம் செய்தல் என்பதாகும். என்றாலும் ஸ்ம்ருதிகளில் பரம்பொருளைப் பற்றியும், இதிகாசம் மற்றும் புராணங்களில் கர்மங்களைப் பற்றியும் கூறும் பகுதிகள் உள்ளதைக் காணலாம் (அதாவது மேலே உள்ள கருத்தான ஸ்ம்ருதிகள் கர்மங்களைப் பற்றியும், இதிகாசபுராணங்கள் பரம்பொருளைப் பற்றியும் கூறுகின்ற என்பதற்கு மாறாக). இது ஏன் என்பதைக் காண்போம். கர்மங்கள் என்பவை அவனது ஆராதனை வடிவமாகவே உள்ளன என்பதை உணர்த்துவதற்காகவே, ஸ்ம்ருதிகளில் பரம்பொருளைப் பற்றிக் கூறப்பட்டன. எனவே இப்படியாகப் பிரித்துக் கூறுவதில் எந்தவிதமான குற்றமும் இல்லை. பார்ஹஸ்த்ய ஸ்ம்ருதி - ப்ராயேண பூர்வபாகார்த்த பூரணம் தர்மசாஸ்த்ரத: இதிஹாஸ புராணாப்யாம் வேதாந்தார்த்த: ப்ரகாச்யதே - வேதங்களின் பூர்வபாகம் என்ன கூறுகிறது என்பதை ஸ்ம்ருதிகள் கொண்டு நிச்சயம் செய்தல் வேண்டும்; அவற்றின் உத்தரபாகத்தின் ஆழ்பொருளை இதிகாச புராணங்கள் கொண்டு அறிதல் வேண்டும் - என்றது காண்க.

3. இவையிரண்டிலும் வைத்துக்கொண்டு இதிஹாஸம் ப்ரபலம்.

**அவதாரிகை** - உத்தரபாகோபப்ர்ம்ஹண த்வயத்துக்கும் தாரதம்யமுண்டோ, தன்னி லொக்குமோவென்கிற சங்கையிலேயருளிச் செய்கிறார் மேல். அன்றிக்கே, ஏகபாக விஷயமானவிரண்டு உபப்ர்ம்ஹணங்களிலும் இன்னதுக்கு ப்ராபல்யமென்னுமத்தையும் தர்சிப்பிக்கவேணுமென்று தாமே திருவுள்ளம் பற்றியருளிச் செய்கிறாராகவுமாம்.

**விளக்கம்** – "வேதங்களின் உத்தரபாகத்தை விளக்குகின்ற இதிகாசம் மற்றும் புராணம் ஆகிய இரண்டிற்குள் ஏற்றத்தாழ்வுகள் உண்டா? அல்லது அவை இரண்டும் சமமாக ஒத்துப் போகுமோ?", என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். அல்லது இந்தச் சூர்ணையில் – உத்தரபாகத்தின் ஆழ்பொருளை விவரிக்கவல்ல இதிகாசம் மற்றும் புராணம் ஆகிய இரண்டிற்குள் "இதுவே சிறந்தது" என்று ஏதோ ஒன்றைக் கூறவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார் – என்றும் கூறலாம்.

**வ்யாக்யானம்** - இவை இரண்டிலுமென்று தொடங்கி அதாவது ச்ரேஷ்ட பாகோபப்ர்ம்ஹணதயா வந்த சேர்த்தியை உடைத்தானவிவையிரண்டிலும் வைத்துக் கொண்டு, ப்ராமாண்யத்தில் வந்தால் புராணத்திலும் இதிஹாஸத்துக்கு ப்ராபல்ய முண்டென்கை. புராணத்திற்காட்டில் இதிஹாஸத்துக்கு ப்ராபல்யம் பரிக்ரஹாதிசயம், மத்யஸ்த்தை, கர்த்துராப்ததமத்வம் ஆகியவிவற்றாலே.

**விளக்கம்** - சிறந்த பாகம் என்று கூறப்பட்ட வேதங்களின் உத்தரபாகத்தைக் கூறுவதால் வந்த சேர்த்தியைக் கொண்ட இதிகாசம் மற்றும் புராணங்களில் – ப்ரமாணம் என்னும் தன்மையில் இதிகாசம் வந்தால், அதற்குப் புராணத்தைக் காட்டிலும் மேன்மை உண்டு. புராணத்தைக் காட்டிலும் இதிகாசத்திற்கு உள்ள மேன்மை என்னவென்றால் – மற்ற நூல்களில் எடுத்து கூறப்படுதல், நடுநிலைமை தவறாமல் உரைத்தல், நூலை இயற்றியவர்களின் நம்பகத்தன்மை போன்றவை ஆகும் (இவை பரிக்ரஹம், மத்யஸ்த்தை, கர்த்துராப்ததமத்வம் எனப்பட்டன).

**வ்யாக்யானம்** - இவற்றில் பரிக்ரஹமாவது, சாஸ்த்ரபரிக்ரஹம். வேதவேத்யே பரேபும்ஸி ஜாதே தசரதாத்மஜே, வேத: ப்ராசேதஸா தாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா; மதிமந்தாநமாவித்ய யேநாஸௌ ச்ருதிஸாகராத் ஜகத்திதாய ஜநிதோ மஹாபாரத சந்த்ரமா:; வ்யாஸ வாக்ய ஜலௌகேந குதர்மதருஹாரிணா வேதசைலாவதீர்ணேந நீரஜஸ்கா மஹீ க்ருதா; பிபேதி கஹநாச்சாஸ்த்ராந் நரஸ் தீவ்ராதிவௌஷதாத் பாரதச் சாஸ்த்ர ஸாரோயம் அத: காவ்யாத்மநா க்ருத:; விஷ்ணௌ வேதேஷு வித்வத்ஸு குருஷு ப்ராஹ்மணேஷு ச பக்திர்பவதி கல்யாணி பாரதாதேவ தீமதாம் இத்யாதிகளலே புராண விசேஷங்களிலே இதிஹாஸம் ச்லாகிக்கப்படா நின்றதிறே.

**விளக்கம்** - முதலில் மற்ற நூல்களில் காட்டப்படுவது என்பதைக் காண்போம். கீழே உள்ள பல வரிகளின் மூலம், புராண விசேஷங்களிலே இதிகாசம் சிறப்பித்துக் கூறப்பட்டதைக் காணலாம்:

- காந்தபுராணம் - வேதவேத்யே பரேபும்ஸி ஜாதே தசரதாத்மஜே, வேத: ப்ராசேதஸா தாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா – வேதங்களால் அறியப்படும் ஸ்ரீமந்நாராயணன் தசரதனுக்குப் புத்திரனாக அவதரித்தபோது, அந்த வேதங்கள் செய்தது என்னவென்றால், ப்ரசேதஸ் என்பவரின் புத்திரரான வால்மீகி முனிவர் மூலம் இராமாயணமாக உதித்தன.

- சைவபுராணம் – மதிமந்தாநமாவித்ய யேநாஸௌ ச்ருதிஸாகராத் ஜகத்திதாய ஜநிதோ மஹாபாரத சந்த்ரமா: – வேதவ்யாஸர் தனது அறிவு என்னும் மத்து கொண்டு, வேதங்கள் என்னும் ஸமுத்திரத்தைக் கடைந்தார். அப்போது இந்த உலகில் உள்ளவர்களின் நன்மைக்காக, அந்தக் கடலில் இருந்து மஹாபாரதம் என்ற சந்திரன் வெளிப்பட்டது.

- மார்க்கண்டேய புராணம் – வ்யாஸ வாக்ய ஜலௌகேந குதர்மதருஹாரிணா வேதசைலாவதீர்ணே ந நீரஜஸ்கா மஹீ க்ருதா - மஹாபாரதம் என்னும் நதியானது, வேதங்கள் என்னும் மலையில் பிறந்து, அதர்மம் என்னும் மரங்களைச் சாய்த்தபடி வந்தது; வ்யாஸரின் சொற்கள் என்னும் வெள்ளம் நிறைந்தது; மக்களின் இதயங்களில் உள்ள இருள் என்னும் அழுக்கை நீக்கவல்லது.

- பவிஷ்ய புராணம் - பிபேதி கஹநாச்சாஸ்த்ராந் நரஸ் தீவ்ராதிவௌஷதாத் பாரதச் சாஸ்த்ர ஸாரோயம் அத: காவ்யாத்மநா க்ருத: - மிகவும் கசப்பான மருந்தைப் பருகுவதற்குத் தயக்கம் கொள்ளும் மனிதன் போன்று, மனிதர்கள் வேதங்களில் உட்புகுந்து ஆழ்பொருளை அறியத் தயங்குகின்றனர்; இதனால் அவற்றின் சாரமாகவே காப்பிய வடிவில் மஹாபாரதம் செய்யப்பட்டது.

- பவிஷ்ய புராணம் - விஷ்ணௌ வேதேஷு வித்வத்ஸு குருஷு ப்ராஹ்மணேஷு ச பக்திர்பவதி கல்யாணி பாரதாதேவ தீமதாம் – மஹாபாரதம் செய்வது என்னவென்றால் ஸ்ரீமந்நாராயணன், அவனைப் பற்றிக் கூறுகின்ற வேதங்கள், அவற்றின் பொருளை அறிந்தவர்கள், அவற்றை உபதேசிக்கும் ஆசார்யர்கள், ப்ரஹ்மநிஷ்டர்கள் ஆகியோரிடம் நன்மையை ஏற்படுத்தும் பக்தியை நமக்கு உண்டாக்குகிறது.

**வ்யாக்யானம்** – மத்யஸ்த்த்தையாவது யஸ்மிந் கல்பேது யத்ப்ரோக்தம் புராணம் ப்ரஹ்மணாபுரா தஸ்யதஸ்யது மாஹாத்ம்யம் தத்ஸ்வரூபேண வர்ண்யதே என்று ஸர்வபுராணத்துக்கும் ப்ரவர்த்தகன் ப்ரஹ்மாவாய், அவனுக்கு யாதொரு கல்பத்திலே குணத்ரயத்தில் யாதொரு குணம் விஞ்சியிருந்தது, அந்த குணாநுகுண தேவதையினுடைய மாஹாத்ம்யத்தைப் புராணத்திலே சொல்லுகையாலே, பக்ஷபாதிகளாயிருக்கும்

புராணங்கள் போலன்றிக்கே, லௌகிக வைதிக ஸகலார்த்த நிர்ணயத்திலே அதிக்ருதங்களாகையாலே ஒரு விஷயத்திலும் பக்ஷபாதமின்றின்கேயிருக்கை.

**விளக்கம்** – அடுத்து நடுநிலைமை என்பதைக் காண்போம். மச்ச புராணம் – யஸ்மிந் கல்பேது யத்ப்ரோக்தம் புராணம் ப்ரஹ்மணாபுரா தஸ்யதஸ்யது மாஹாத்ம்யம் தத்ஸ்வரூபேண வர்ண்யதே – எந்த ஒரு சுபநாளில், எந்த நான்முகனால், எந்த குணம் தலை தூக்கியபோது, எந்தப் புராணம் கூறப்பட்டதோ, அந்தந்த தேவதைகளின் பெருமை என்பது, அந்தந்த குணங்களுக்கு ஏற்றபடியே கூறப்பட்டது - என்றது. அதாவது அனைத்துப் புராணங்களையும் கூறியவன் நான்முகன்; அவனுக்கு எந்த ஒரு நாளில், மூன்று குணங்களில் எந்தக் குணம் அதிகமாக இருந்ததோ, அந்த நாளில், அந்தக் குணத்தின் அதிபதி தேவதையின் பெருமையை, அந்த நாளில் கூறப்பட்ட புராணம் உரைக்கிறது. ஆகவே இப்படியாக உள்ள புராணங்கள், ஏற்றத்தாழ்வுகளுடன் கூடியவையே ஆகும். இது போன்று அல்லாமல் – லௌகிக விஷயம், வைதீக விஷயம் ஆகியவற்றை நிச்சயம் செய்வதில் குறிக்கோள் கொண்டவையாக, பாரபட்சம் இல்லாமல் இதிகாசம் உள்ளதால், அவை நடுநிலைமை தவறாதவை ஆகும்.

**வ்யாக்யானம்** – கர்த்துராப்ததமத்வமாவது ப்ரபந்தகர்த்தாவானவன் யாதா தர்சந ஸாமர்த்யத்தையும், யதாத்ருஷ்டார்த்தவாதித்வத்தையும் மிகவுமுடையவனாயிருக்கை. அதேதிஹாஸ புராணயோரிதிஹாஸா பலீயாம்ஸ: குத: தேஷாம் பரிக்ரஹாதிரேகாத், ஸர்வத்ர மாத்யஸ்த்யேந பூதார்த்த ப்ரதீதே: வசநஸௌஷ்டவேந கர்த்துராப்த தமத்வாவகதேச்ச என்று தொடங்கி பரிக்ரஹாதிசயாதிகளாலே புராணாதிதிஹாஸ ப்ராபல்யம் ஸாமாந்யேந தத்வநிர்ணயத்திலே உய்யக்கொண்டாராலும்; மஹாபாரதம் ஹி பரிக்ரஹ விசேஷாவஸிதம் என்று தொடங்கி, தர்மேசார்த்தேச காமேச மோக்ஷேச பரதர்ஷப யதிஹாஸ்தி ததந்யத்ர யந் நேஹாஸ்தி ந தத் க்வசித்; இதி லௌகிக வைதிக ஸகலார்த்த நிர்ணயாதி க்ருதத்வேந க்வசிதபி அபக்ஷபாதித்வாச்ச புராணேப்யோ பலவத்தரம் என்னுமதளவாக, பரிக்ரஹாதிசயத்தாலும் மத்யஸ்த்தையாலும் புராணங்களிற் காட்டிலிதிஹாஸ விசேஷமான மஹாபாரதத்துக்குண்டான ப்ராபல்யம் ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்யத்திலே பட்டராலும் ப்ரதிபாதிக்கப்பட்டதிறே.

**விளக்கம்** - கர்த்துராப்ததமத்வம் என்பது நூலை இயற்றியவரின் ஆப்ததமத்வம் ஆகும். அதாவது, அந்த நூலை இயற்றியவர் உண்மையான பொருளை உள்ளது உள்ளபடி அறியவல்ல வலிமையையும், அப்படியாகத் தான் உணர்ந்தவற்றை உள்ளது உள்ளபடி மற்றவர்களுக்குப் புரியவைக்கும் ஆற்றலையும் கொண்டவராக உள்ள தன்மையே கர்த்துராப்ததமத்வம் எனப்படுகிறது. இந்த விஷயம் உய்யகொண்டாராலும், பராசரபட்டராலும் கூறப்பட்டதைக் காண்போம்:

- தத்வநிர்ணயம் என்பதில் உய்யக்கொண்டார் - அதேதிஹாஸ புராணயோரிதிஹாஸா பலீயாம்ஸ: குத: தேஷாம் பரிக்ரஹாதிரேகாத், ஸர்வத்ர மாத்யஸ்த்யேந பூதார்த்த ப்ரதீதே: வசநஸௌஷ்டவேந கர்த்துராப்த தமத்வாவகதேச்ச - அதன் பின்னர் இதிகாசம் மற்றும் புராணம் ஆகிய இரண்டினுள் இதிகாசமே சிறந்து விளங்குகிறது, ஏன்? அவை மற்ற நூல்களில் ப்ரமாணங்களாக எடுத்தாளப்படுவதாலும், லௌகிகம் மற்றும் வைதிக விஷயங்களில் முன்னர் நடந்த சம்பவங்களை நடுநிலைமையுடன் கூறுவதாலும், முன்னுக்குப் பின் முரணான வரிகள் இல்லாமல் உள்ளதாலும், அவற்றை இயற்றியவர்கள் நம்பத்தகுந்தவர்கள் என்பதாலும் – என்று தொடங்கியுள்ளார். இதனால் மற்ற நூல்களில் எடுத்துக் கூறப்படுதல் போன்ற தன்மைகளால் இதிகாசங்களுக்கு புராணங்களைக் காட்டிலும் உள்ள சிறப்பை விளக்கினார்.

- ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் பட்டர் - மஹாபாரதம் ஹி பரிக்ரஹ விசேஷாவஸிதம் – புராணங்களைக் காட்டிலும் மஹாபாரதம் அதிகமாகப் பேசப்படுகிறது - என்று தொடங்கினார். பின்னர் - தர்மேசார்த்தேச காமேச மோக்ஷேச பரதர்ஷப யதிஹாஸ்தி ததந்யத்ர யந் நேஹாஸ்தி ந தத் க்வசித்; இதி லௌகிக வைதிக ஸகலார்த்த நிர்ணயாதி க்ருதத்வேந க்வசிதபி அபக்ஷபாதித்வாச்ச புராணேப்யோ பலவத்தரம் - பரதவம்சத்தில் சிறந்தவனே! இந்த மஹாபாரதத்தில் காணப்படும் அறம், பொருள், வீடு, இன்பம் (தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம்) என்பதான பலவும் மற்ற எதிலும் காணப்படவில்லை; இதில் இல்லாதவை என்பது ஏதும் இல்லை; இதில் இல்லாத ஒன்று உள்ளது என்றால் அது மற்ற நூல்களிலும் இருப்பதில்லை எனலாம்; வேதங்களின் ஆழ்பொருள், மற்ற நூல்களின் ஆழ்பொருள் என்று பலவற்றையும் உணர்வதற்காகவே மஹாபாரதம் செய்யப்பட்டது; ஆகவே இது எந்த ஓர் இடத்திலும் பாரபட்சமாகக் கூறுவதில்லை; எனவே இது புராணங்களைக் காட்டிலும் உயர்ந்த ப்ரமாணம் ஆகும் - என்றார். ஆக நூல்களில் பரவலாக எடுத்துக் கூறப்படுவதாலும், நடுநிலைமை தவறாத காரணத்தாலும் இதிஹாசங்களைக் காட்டிலும் புராணங்களுக்கு உள்ள மேன்மையைக் கூறினார்.

4. அத்தாலேயது முற்பட்டது.

**அவதாரிகை** - அதின் ப்ராபல்யத்தை இசைவிக்கிறார் அத்தாலே என்று தொடங்கி.

**விளக்கம்** - இந்தக் சூர்ணை மூலம் இதிகாசத்தின் மேன்மையை இவரும் இசைவிக்கிறார்.

**வ்யாக்யானம் -** அந்த ப்ராபல்யத்தாலே, இதிஹாஸ புராணம் பஞ்சமம் என்றும், இதிஹாஸ புராணாப்யாம் என்றும் ச்ருதிஸ்ம்ருதிகளிலே இரண்டையும் சேரச் சொல்லுகிற வளவில், இதிஹாசமானது புராணத்துக்கு முன்னே சொல்லப்பட்டதென்கை. த்வந்த்வ ஸமாஸத்தில் அல்பாச்தரமாதல் அப்யர்ஹிதமாதலிறே முற்படுவது. அதில் அல்பாச்தரமன்றியிலேயிருக்க, அது முற்பட்டது அப்யர்ஹிதத்வத்தாலேயிறே; இந்த அப்யர்ஹிதத்வத்துக்கு மூலம் அதி ப்ராபல்யமென்று கருத்து.

**விளக்கம் -** இப்படியாக இதிகாசத்திற்கு உள்ள மேன்மை காரணமாகவே கீழே உள்ள வரிகள் கூறப்பட்டன.

- இதிஹாஸ புராணம் பஞ்சமம் - இதிகாசங்களும் புராணங்களும் ஐந்தாவது (வேதங்கள்) .
- பார்ஹஸ்பத்ய ஸ்ம்ருதி – இதிஹாஸ புராணாப்யாம் – இதிகாசம் மற்றும் புராணம் மூலம்.

இப்படியாக ச்ருதி மற்றும் ஸ்ம்ருதியில் இரண்டுமே சேர்த்துக் கூறப்பட்டபோதிலும், புராணத்திற்கு முன்பாக இதிகாசமே முதலில் கூறப்பட்டதைக் காண்க. வடமொழி இலக்கணத்தில் உம்மைத் தொகையில் (இதிகாசமும், புராணமும் என்பதில் உள்ள “உம்”) சொற்களைக் கூறும்போது, குறைந்த உயிர் எழுத்துக்கள் உடைய சொற்கள் அல்லது மேன்மை கொண்ட சொற்கள் முதலில் கூறப்பட வேண்டும் என்னும் விதி உள்ளது. இங்கு இதிகாசம் என்ற சொல்லானது, புராணம் எனபதைக் காட்டிலும் அதிகமான உயிர் எழுத்துக்கள் கொண்டதாக உள்ளபோதிலும், அந்தச் சொல்லின் மேன்மை காரணமாக முதலில் வந்தது. இத்தகைய சிறப்பிற்குக் காரணம் அதன் ஏற்றமே ஆகும்.

**வ்யாக்யானம் -** அதவா (ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களாலே) என்று பாகத்வயோபப்ர்ம் ஹணங்களையும் ஸமஸ்தமாகச் சொல்லுகிறவிடத்தில், இதிஹாஸாச்ச புராணாநிச இதிஹாஸ புராணாநி, ஸ்ம்ர்தயச்ச இதிஹாஸ புராணாநிச ஸ்ம்ர்தீதிஹாஸ புராணாநி என்றிப்படி இவர்க்கு ஸமாஸவிவகைஷயாகையாலே, அல்பாச்தரமான புராணத்துக்கு முன்னே இதிஹாஸத்தையருளிச் செய்ததின் கருத்தை (இவை இரண்டிலும்) இத்யாதியாலேயருளிச் செய்கிறாராகவுமாம். இந்த யோஜனையில் (அத்தாலேயது முற்பட்டது) என்கிறவிதுக்கு அந்த ப்ராபல்யத்தாலே (இதிஹாஸ புராணங்களாலே) யென்கிறவிடத்தில் புராணத்துக்கு முன்னே இதிஹாஸஞ் சொல்லப்பட்டதென்று பொருளாகக் கடவது.

**விளக்கம் -** அல்லது வேறு கருத்தும் கூறலாம். “ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களாலே” என்பதில் வேதத்தின் பூர்வபாகம் மற்றும் உத்தர பாகம் ஆகியவற்றின் பொருளை விரிவாக எடுத்துக் கூறும் நூல்கலைப் பற்றிக் கூறுவது காண்போம். அங்கு இதிஹாஸ –

என்பதற்கு ஏற்ப இவருக்கு (ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர்) சமரசம் என்பதில் நோக்கம் அதிகம் என்பதால், குறைவான உயிரெழுத்துக்கள் கொண்டதாயினும் புராணம் என்ற பதத்திற்கு முன்பே இதிகாசம் என்பதை அருளிச்செய்தார். இதனை “இவை இரண்டிலும்” என்ற சூர்ணையிலும் அருளிச்செய்தார். இந்தச் சூர்ணையில் “அத்தாலே இது” என்பதற்குப் பொருள் என்னவென்றால், இந்தக் சிறப்பு காரணமாக, புராணத்திற்கு முன்பாக இதிகாசம் கூறப்பட்டது என்பதாகும்.

**வ்யாக்யானம் -** ஆக வேதார்த்த நிர்ணயம் பண்ணுமளவில், ததுபப்ரும்ஹணங்களாலே பண்ணவேணுமென்றும், அதில் பூர்வோத்தரபாகோபப்ர்ம்ஹணங்கள் இன்னதென்றும், உத்தரபாகோபப்ர்ம்ஹணங்களான இதிஹாஸ புராணங்களில் இதிஹாஸம் ப்ரபலமென்றும் அருளிச் செய்கையாலே, மேல் தாமருளிச் செய்யப் புகுகிற வர்த்தங்களுக்கு ப்ரமாணமொருங்க விட்டருளினாராய்த்து.

**விளக்கம் -** எனவே வேதங்களின் ஆழ்பொருளை இன்னது என்று உறுதியாக அறிவதற்கு – அதனுடைய உபப்ரமாணங்கள் கொண்டு அறிதல் வேண்டும். இவற்றில் பூர்வபாகத்தின் உபப்ரமாணம் இன்னது, உத்தரபாகத்தின் உபப்ரமாணம் இன்னது என்பதைக் கூறினார். உத்தரபாக உபப்ரமாணங்களான இதிகாசம் மற்றும் புராணங்களில், இதிகாசமே உயர்ந்தது என்றார். இப்படியாகத் தான் அருளிச்செய்யப் போகும் விஷயங்களுக்குப் ப்ரமாணம் என்பவற்றை முறைப்படுத்தினார் என்பது தெளிவாகிறது.

## அறிமுகம் ஸம்பூர்ணம்

## முதல் ப்ரகரணம் - புருஷகார வைபவம்

5. இதிஹாஸ ச்ரேஷ்ட்டமான ஸ்ரீராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றஞ் சொல்லுகிறது. மஹாபாரதத்தால் தூது போனவனேற்றஞ் சொல்லுகிறது.

**அவதாரிகை -** முதலிலே வேதார்த்தம் இத்யாதியாலே வேததத்ர்த்த ததுபப்ர்ம்ஹணங்களை ஸாகல்யேந உபாதாநம் பண்ணி, அந்த வேதத்தினுடைய பாக விபாக ததுபப்ர்ம்ஹண விபாகங்களையும் பண்ணினாரேயாகிலும், தேதநருடைய உஜ்ஜீவநத்துக்கபே க்ஷிதார்த்தங்களையருளிச் செய்ய இழிந்தவராகையாலும், அதுதான் பூர்வபாக வேத்யமன்றிக்கே உத்தரபாக வேத்யமாகையாலும், பூர்வபாகத்தில் முமுக்ஷுவுக்கு ஜ்ஞாதவ்யாம்சமுள்ளதும், உத்தரபாகார்த்தங்களான ஸ்வரூபோபாய புருஷார்த்த ப்ரதிபாதந ஸ்தலங்களிலே தத் ததநுகுண த்யாஜ்யோபாதேய கதந முகேந ஜ்ஞாபிக்கலா யிருக்கையாலும், உத்தரபாகார்த்த நிர்ணயத்திலே ப்ரவர்த்தராய், அது தன்னிலும் பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளையும் பகவதுபாஸநாதிகளையும், பரக்க நின்று

ப்ரதிபாதிக்கிறவிடங்களில், ஸாராஸார விவேகபூர்வமாக தாத்பர்யார்த்தங்களை ஸங்க்ரஹித்து, ஸம்சய விபர்யயமற சேதநர்க்கு ப்ரதிபத்தி விஷயமாம்படியருளிச் செய்து செல்லுகிறார் மேல். அதில் ப்ரதமத்திலே, உத்தரபாகோபப்ர்ம்ஹண த்வயத்தில் ப்ரபலமாகச் சொன்ன இதிஹாஸங்களில் வைத்துக் கொண்டு ஸ்ரீராமாயணத்தினுடைய ப்ராபல்யத்தை ப்ரகசிப்பியா நின்று கொண்டு, தத் ப்ரதிபாத்ய விசேஷத்தையருளிச் செய்கிறார்.

**விளக்கம்** – முதல் சூர்ணை தொடங்கி வேதங்களையும் அவற்றின் ஆழ்பொருளை விவரிக்கும் நூல்களையும் பொதுவாக விளக்கினார். அப்படிப்பட்ட வேதங்களின் பாகங்கள், அந்தப் பாகங்களை விவரித்துக் கூறும் நூல்களின் பாகங்கள் ஆகியவற்றைப் பிரித்து அருளிச் செய்தார். மேலும் இந்த உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் பிழைப்பதற்குத் தேவையான பொருள்களை அருளிச்செய்ய திருவுள்ளம் பற்றினார். இப்படிப்பட்ட பொருளானது, வேதங்களின் முதல் பாகமாக உள்ள கர்மகாண்டம் மூலம் அறியக்கூடியதல்ல; உத்தரபாகமாக உள்ள ஞானகாண்டம் மூலமே அறியக்கூடியதாகும். மேலும் பூர்வபாகத்தில் மோக்ஷத்தை விரும்புகிறவர்களால் அறியத்தக்கவையாக உள்ளவைகள்; பின்பாகமாகிற ஞானகாண்டத்தில் கூறப்படும் பொருள்களான ஸ்வரூப உபாய புருஷார்த்தங்கள் மற்றும் இவற்றைப் பற்றிக் கூறும் இடங்களில், இவற்றைப் பெறுவதற்குச் செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை ஆகியவை கூறப்பட்டன. இதனால் ஞானகாண்டத்தின் ஆழ்பொருளை நிர்ணயம் செய்வதற்கு முதலில் தொடங்கினார். இந்த ஞானகாண்டத்தில் எம்பெருமானின் ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதிகள் ஆகியவை பற்றியும், அவனை உபாஸனை செய்யும் வழிமுறைகளையும் கூறும் இடங்களில் சாரப்பொருள்கள் மற்றும் சாரம் அல்லாத பொருள்கள் ஆகியவற்றையும் பிரித்து அறிவது குறித்து சுருக்கமாகக் கூறுகிறார். இதில் சேதனர்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் இன்றி இவை விளங்கவேண்டும் என்று திருவுள்ளம் பற்றித் தொடர்கிறார். முதலில் வேதங்களின் பின்பாகம் எனப்படும் ஞானகாண்டத்தில் பொருளை விரிவாகக் கூறுகின்ற இதிகாசங்கள் இரண்டு உள்ளபோதிலும், அவற்றில் முதலில் ஸ்ரீஇராமாயணத்தின் வலிமை காரணமாக, அதில் கூறப்படும் மேன்மையான பொருள்களை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஸ்ரீராமாயணத்துக்கு இதிஹாஸ ச்ரேஷ்ட்டத்வமாவது, வால்மீகயே மஹர்ஷயே ஸந்தி தேச ஆஸநம்தத, ப்ரஹ்மணா ஸமநுஜ்ஞாதஸ் ஸோப்யுபாவிசதாஸநே என்று ஸகலலோக பிதாமஹனான ப்ரஹ்மாவாலே ஸம்பாவிதனான ஸ்ரீவால்மீகி பகவானாலே ப்ரணீதமாகையாலும், ந தே வாகந்ருதா காவ்யே காசிதத்ர பவிஷ்யதி என்று ப்ரஹ்மாவநுக்ரஹிக்கையாலே இதில் சொன்னவர்த்தங்களெல்லாம் மெய்யாகக்

கடவதாகையாலும், தாவத் ராமாயணகதா லோகேஷு ப்ரசரிஷ்யதி என்று ஸகலலோக பரிக்ரஹமுண்டகையாலும், இதிஹாஸாந்தரங்களைப் பற்ற ப்ரபலப்ரமாணாமாயிருக்கை. இது தன்னை நடுவிற்றிருவீதிப்பிள்ளை பட்டர் தத்தவத்ரய ப்ரபந்தத்தில் ப்ரமாணாதி காரத்திலேயருளிச் செய்தாரிறே. இன்னமும் வேதவேத்யேபரே பும்ஸி இத்யாதிப்படியே ஸர்வஸ்மாத்பரனான ஸர்வேச்வரன் ஸம்ஸாரி சேதந ரக்ஷணார்த்தமாக இதர ஸஜாதீயனாய் வந்து அவதரித்தாப்போலே, ஸர்வப்ராமணோத்கர்ஷ்டமான வேதமும், ததவதார குணசேஷ்டித ப்ரதிபாதநமுகேந ததாச்ரயண ருசியை ஸம்ஸாரிகளுக்குண்டாக்கி ரக்ஷிக்கைக்காக ஸ்ரீராமாயண ரூபேண அவதரித்ததென்று சொல்லப்படுகையாலும் இதினுடையவேற்றம் ஸம்ப்ரதிபந்நம்.

**விளக்கம்** - இதிகாசங்களில் இராமாயணத்திற்கு உள்ள மேன்மை ஏன் என்றால், கீழே உள்ள பலவற்றால் ஆகும்:

- இராமாயணம் பாலகாண்டம் (2-26) – வால்மீகயே மஹர்ஷயே ஸந்தி தேச ஆஸநம்தத, ப்ரஹ்மணா ஸமநுஜ்ஞாதஸ் ஸோப்யுபாவிசதாஸநே – அதன் பின்னர், வால்மீகி முனிவருக்கு ஒரு தவிசு அளிக்கப்பட்டது. நான்முகனின் கட்டளைக்கு இணங்க அந்த மஹரிஷியும் அதில் ஏறி அமர்ந்தார் – என்பதற்கு ஏற்ப அனைத்து உலகிற்கும் பாட்டனாகிய நான்முகனால் மேன்மை செய்யப்பட்டவரான வால்மீகி பகவானால் செய்யப்பட்டது.

- இராமாயணம் பாலகாண்டம் (2-35) – ந தே வாகந்ருதா காவ்யே காசிதத்ர பவிஷ்யதி – இதில் உள்ள உன் வாக்கியம் ஒன்று கூட பொய்யாகாது; புண்ணியங்கள் நிறைந்ததும், மனதிற்கு இன்பம் அளிப்பதும், ச்லோகமாக உள்ளதும் ஆகிய இராமாயணத்தை இயற்றுவாயாக - என்று நான்முகன் கூறியது போன்று இந்தக் காவியத்தில் உள்ள அனைத்தும் உண்மையாகவே உள்ளது.

- இராமாயணம் பாலகாண்டம் (2-37) - தாவத் ராமாயணகதா லோகேஷு ப்ரசரிஷ்யதி - இந்தப் பூமியில் உள்ள மலைகள், ஆறுகள் போன்றவை எத்தனை காலம் இருக்கப் போகின்றனவோ, அத்தனை காலம் இராமனின் இந்தச் சரிதம் இருக்கப் போகிறது - என்றது.

மேலே உள்ள பல காரணங்களால், மற்ற இதிகாசங்களைக் காட்டிலும் இராமாயணம் மிகவும் வலிமையான ப்ரமாணமாகவே உள்ளது. இப்படியாக இராமாயணம் மற்ற ப்ரமாணங்களைக் காட்டிலும் வலிமையான தன்மை கொண்டது என்பதை, நடுவில்

திருவீதிப்பிள்ளை பட்டர் தன்னுடைய தத்வத்ரயம் என்பதில், ப்ரமாண அதிகாரத்தில் அருளிச்செய்தார்.

மேலும் காந்த புராணம் – வேதவேத்யேபரே பும்ஸி – வேதங்களால் போற்றப்படும் பரமபுருஷன் இராமனாக அவதரித்தபோது, அனைத்து வேதங்களும் வால்மீகி முனிவன் மூலமாக இராமாயணமாக அவதரித்தன - என்றது காண்க. இந்த உலகில் வினைகள் காரணமாகப் பிறந்து, இங்குள்ள துன்பங்களில் உழன்றபடி உள்ள மக்களைக் கரையேற்றும் பொருட்டு, மற்றவர்களை ஒத்த மனித வடிவில், அனைவரிலும் மேம்பட்ட ஸர்வேச்வரன் அவதரித்தான். இதே போன்று, அனைத்து ப்ரமாணங்களிலும் மேம்பட்ட ப்ரமாணமான வேதங்களும் – அவனுடைய அவதார குணங்கள் மற்றும் செயல்களைக் கூறுவதற்காகவும், இந்த உலகில் உள்ளவர்கள் அவனைப் பற்றி அறிவதற்கான சுவையை ஏற்படுத்தி, அவன் மீது பற்றுதல் ஏற்படுத்தும் விதமாக இராமயணமாக உண்டாயின. இப்படியாக உள்ளதால் இதன் மேன்மை என்பது எந்த ஆக்ஷேபமும் இன்றி அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

**வ்யாக்யானம்** - பிராட்டியென்னாதே (சிறையிருந்தவள்) என்றருளிச் செய்தது, அவளுடைய தயாதிசயத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக; தேவதேவ திவ்யமஹிஷியான தன் பெருமையையும் சிறையிருப்பின் தண்மையையும் பாராதே, தேவஸ்த்ரீகள் சிறையை விடுவிக்கைக்காகத் தான் சிறையிருந்தருந்தது தயாபரவசையாயிறே. பிரஜை கிணற்றிலே விழுந்தால் ஒக்கக்குதித்தெடுக்கும் மாதாவைப்போலே, இச்சேதநர் விழுந்த ஸம்ஸாரத்திலே தானுமொக்க வந்து பிறந்து, இவர்கள் பட்டதைத் தானும் பட்டு ரக்ஷிக்கையாலே, நிருபாதிக மாத்ருத்வ ஸம்பந்தத்தால் வந்த நிரதிசய வாத்ஸல்யத்துக்கு ப்ரகாசகமிறேயிது. இந்த குணாதிக்யத்தை வெளியிடுகைக்காகவிறே பரமாசார்யரான நம்மாழ்வார் தனிச்சிறையில் விளப்புற்ற கிளிமொழியாள் என்றருளிச் செய்தது. அவருடைய திவ்யஸூக்தியிறே இவரிப்படியருளிச்செய்கைக்கு மூலம். சிறையிருப்பு தண்மையாவது கர்ம நிபந்தநமாகிலிறே. ஆச்ரிதரான தேவர்களுடைய ஸ்த்ரீகள் சிறையை விடுவிக்கைக்காக, தன்னநுக்ரஹத்தாலே தானே வலியச் செய்ததாகையாலே, ஏற்றத்துக் குடலாமித்தனையிறேயிது; ஸம்ஸாரிகளோடொக்க கர்ப்பவாஸம் பண்ணி பிறக்கிறவிது. பலபிறப்பாயொளிவரும் என்னும்படி ஸர்வேச்வரனுக்கு தேஜஸ்கரமாகிறது, கர்ம நிபந்தநமன்றிக்கே அநுக்ரஹ நிபந்தநமாகையிறே. ஆனபின்பு, இதுவும் அநுக்ரஹ நிபந்தநமாகையாலே இவளுக்கு தேஜஸ்கரமாமித்தனை. இத்தை ராவண பலாத்காரத்தாலே வந்ததாக நினைப்பார் இவள் சக்தி விசேஷமறியாத க்ஷுத்ரரிறே. சீதோ பவ என்றவள், நஷ்டோபவ என்னமாட்டாளன்றே. ஆகையால் இது தன்னநுக்ரஹத்தாலே பர ரக்ஷணார்த்தமாகச் செய்த செயலாகையாலே, இதுவே இவள் தயாதி குணங்களுக்கு ப்ரகாசகமென்று திருவுள்ளம் பற்றியாய்த்து இவர்

(சிறையிருந்தவள்) என்று அருளிச் செய்தது. ஸ்ரீராமாயணமெல்லாமிவளுடையவேற்றஞ் சொல்லுகிறதென்னுமிடம் காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாச் சரிதம் மஹத் என்று ஸ்ரீவால்மீகிபகவாந் தானே வாயோலையிட்டு வைத்தானிறே. ஸ்ரீமத் ராமாயணமபி பரம் ப்ராணிதி த்வச் சரித்ரே என்றருளிச்செய்தாரிறே பட்டர்.

**விளக்கம்** - சீதையைப் "பிராட்டி" என்று கூறாமல், "சிறை இருந்தவள்" என்று ஏன் கூறவேண்டும்? இதன் காரணம், அவளுடைய தயை குணத்தை வெளிப்படுத்தவே ஆகும். அனைத்து தேவர்களுக்கும் தலைவனாக உள்ள இராமனின் பட்டமஹிஷியாக உள்ள போதிலும், தனது பெருமைகள் மற்றும் தான் இப்போது சிறையில் உள்ள தாழ்ச்சி ஆகியவற்றைச் சீதை ஆராயவில்லை. மாறாக, தேவலோகப் பெண்களின் சிறை வாசத்தை நீக்கி, அவர்களைச் சிறையில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்ற காரணத்தால் சிறையில் இருந்தாள். இதன் மூலம் இவளது தயை வெளிப்படுகிறது. இப்படியாக இவள் உள்ளதற்குக் காரணம் என்ன? கிணற்றில் குழந்தை ஒன்று விழுந்துவிட்டது என்றால், அதனைக் காப்பாற்ற அதன் தாயும் அது போன்றே கிணற்றில் குதிப்பாள் அன்றோ? இது போல, இந்த உயிர்கள் வந்து விழுந்த பிறவிக் கடலில் தானும் வந்து பிறந்து, இவர்கள் படும்பாட்டில் தானும் நின்று காப்பாற்றுகிறாள். இத்தகைய இவளது தாய்மை என்பது எந்தவிதமான காரணமும் இன்றி தானாகவே வெளிவருவதாகும். இந்த உயிர்களின் தாய் என்பதால் அல்லவோ இந்தத் தயை உண்டாகிறது? இத்தகைய உயர்ந்த தயை குணத்தை வெளியிடும் பொருட்டே நம்மாழ்வார் திருவாய்மொழியில் (4-8-5) – தனிச்சிறையில் விளப்புற்ற கிளிமொழியாள் – என்று அருளிச்செய்தார். ஆகவே, ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் "சிறையிருந்தவள்" என்று பிராட்டியைக் கூறுவதற்கு திருவாய்மொழி அல்லவோ மூலமாக உள்ளது?

"சிறையிருந்தவள் ஏற்றம்" என்று கூறினாலும், "சிறை இருப்பது" தாழ்வு அல்லவோ என்ற கேள்வி உண்டாகலாம். இதற்கான விடையை அருளிச்செய்கிறார். "சிறை இருப்பது தாழ்ச்சி" என்று நிலை, அந்தச் சிறைவாசம் என்பது கர்மம் காரணமாக வந்தால் மட்டுமே பொருந்தும். தன்னுடைய அடியார்களாகிய தேவலோகப் பெண்களுக்காகவும், அவர்களைச் சிறை விடுவிக்கவும், தன்னுடைய தயை காரணமாகத் தானாகவே வலியச் சென்று அல்லவோ இவள் அகப்பட்டாள்? ஆகவே இது ஏற்றமே ஆகும்.

மேலும் இந்த உலக மக்களைப் போன்று கருவிலே சிறிது காலம் தங்கிப் பிறக்கின்ற இது, திருவாய்மொழி (1-3-2) – பலபிறப்பாயொளிவரும் – என்று கூறுவதற்கு ஏற்ப

ஸர்வேச்வரனுக்கும் பேரொளியை அளிப்பதாகவே உள்ளது. இந்த நிலை கர்மம் காரணமாக அல்லாமல் அனுக்ரஹம் செய்வதற்காக அல்லவோ இவளுக்கு பேரொளியைத் தருவதாக உள்ளது?

இவள் சிறைப்பட்டது என்பது இராவணனின் வலிமையால் என்றே ஏதும் அறியாதவர்கள் எண்ணுவர். இவர்கள், இவளது சக்தியின் மேன்மையை அறியாதவர்கள் ஆவர். சுந்தரகாண்டத்தில் (53-29) – சீதோ பவ – அக்னியே! நீ அனுமனுக்கு குளிர்வாக இருப்பாய் - என்று கூறியவள், நஷ்டோ பவ – இராவணனே! நீ அழிவாய் - என்று கூறும்போது, ஆற்றல் இல்லாதவள் அல்ல என்பதை அறியலாம் அல்லவோ? எனவே இவள் சிறையில் இருந்தது என்பது, மற்றவர்களைக் காப்பாற்றும் விதமாகச் செய்த செயல் என்பதால், அந்தச் செயலே இவளது தயை முதலான குணங்களுக்கு விளக்கிட்டுக் காட்டுவது என்பதை உணர்த்தவே ”சிறையிருந்தவள்” என்று அருளிச்செய்தார்.

இராமாயணம் முழுமையும் இவளது சரிதமே என்றும், இவளது மேன்மையை மட்டுமே கூறுகிறது என்றும் சொல்வது, பாலகாண்டம் (4-7) – காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாச் சரிதம் மஹத் – இராமயணம் முழுவதும் சீதையின் பெருமை உள்ளடக்கிய காவியம் – என்று வால்மீகி முனிவர் தன் வாக்கு மூலமே உணர்த்துவதால் தெளிவாகிறது. இதனையே ஸ்வாமி பராசரபட்டர் ஸ்ரீகுணரத்நகோசத்தில் (14) - ஸ்ரீமத் ராமாயணமபி பரம் ப்ராணிதி த்வச் சரித்ரே - தாயே! ஸ்ரீரங்கநாயகி! இராமாயணமும் உனது சரிதத்தைக் கூறியபடியே வாழ்கிறது – என்று அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - அநந்தரம் மஹாபாரத ப்ரதிபாத்யத்தையருளிச் செய்கிறார் (மஹாபாரதத்தால் என்று தொடங்கி). க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் கோஹ்யந்யோ புவி மைத்ரேய மஹாபாரத க்ருத் பவேத், ஏவம் விதம் பாரதந்து ப்ரோக்தம் யேந மஹாத்மநா ஸோயம் நாராயணஸ் ஸாக்ஷாத் வ்யாஸரூபீ மஹாமுநி: என்று பகவதாவேசாவதரமாய், ஸஹோவாச வ்யாஸ: பாராசர்ய: என்று ஆப்ததமனாக ப்ரஸித்தனாயிருந்துள்ள ஸ்ரீவேதவ்யாஸ பகவானாலே வேதாந் அத்யாபயாமாஸ மஹாபாரத பஞ்சமாத் என்கிறபடியே பஞ்சமவேதமாகப் ப்ரணீதமாய், அநேக புராண ப்ரசஸ்தமாயிருந்துள்ள மஹாபாரதமும் ஸ்ரீராமாயணத்தோபாதி ப்ரபல ப்ரமாணம். இதுவும் நடுவிற்றிருவீதிப்பிள்ளைபட்டர் தாமேயருளிச்செய்தார். பெரியபட்டரும் ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்யோபோத்காதத்திலே, ஸ்ரீராமாயணவந் மஹாபாரதம் சரணம் என்றருளிச் செய்தாரிறே. ஸர்வேச்வரனென்னாதே (தூதுபோனவன்) என்றது அவனுடைய ஆச்ரித பாரதந்த்ர்யத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக; தேவதேவனான தன் பெருமையையும் செய்கிற தொழிலின் தண்மையையும் பாராதே, பாண்டவர்களுக்காகக்

கழுத்திலே ஓலை கட்டித் தூது போய்த்தது, ப்ரணத பாரதந்த்ர்ய ருசி பரவசனாயிறே. இதுதான் இவனுடைய ஆச்ரயண ஸௌகர்யாபாதகமான நீர்மைக்குடலாயிருந்துள்ள வாத்ஸல்யாதிகளுக்கெல்லாம் ப்ரகாசகமாயிருப்பதொன்றிறே. இந்த குணாதிக்யத்திலே ஈடுபட்டிறே "இன்னார் தூதனென நின்றான்" என்றும், "குடை மன்னரிடை நடந்த தூதா" என்றும் திருமங்கையாழ்வாரருளிச்செய்தது. அந்த திவ்ய ஸூக்தியிறே இவரிப்படியருளிச் செய்கைக்கு மூலம். பேசிற்றே பேசுகையிறே இவர்களுக்கேற்றம். தூது போனது – தண்மையாவது, கர்மவச்யதையடியாகவரிலிறே. ஐச்சமாக ஆச்ரித விஷயத்திற் செய்கிற தாழ்ச்சியெல்லாம் ஏற்றத்துக்குடலாயிறே இருப்பது. "ஸ உச்ரேயாந் பவதி ஜாயாமாந:" என்று பரார்த்தமாகப் பிறக்கையாலே நிறம்பெறுமென்று ச்ருதி சொன்னவிது பரார்த்தமாகத் தன்னிச்சையாலே செய்யுமவையெல்லாம் இவனுக்கு தேஜஸ்கரமென்னு மதுக்குபலக்ஷணமிறே. இவன் செய்த தூத்யத்தை மாந்த்யஹேதுவாக நினைப்பார், அறிவுகேடரில் தலையானவர்களித்தனை. அறிவில் தலைநின்றவர்கள் "எத்திறம்" என்று மோஹிக்கும்படியாயிறேயிருப்பது. இப்படியிருந்துள்ள இந்நீர்மையிலேற்றத்தை வெளியி டுகைக்காகவாய்த்து இவர் (தூது போனவன்) என்றருளிச்செய்தது. மஹாபாரதமெல்லாம் இவனுடையவேற்றஞ் சொல்லுகையிலே தத்பரமாகையாலேயிறே, மஹாபாரத கதை சொல்லத் தொடங்குகின்றவன் நாராயணகதாமிமாம் என்றது. ஆக ப்ரபந்தத்வயத்துக்கும் ப்ரதாநப்ரதிபாத்யங்களின்னதென்னுமிடம் ப்ரகாசிப்பிக்கப்பட்டது.

**விளக்கம்** - அடுத்து மகாபாரதத்தில் உணர்த்தப்பட்ட பொருளை அருளிச் செய்கிறார் (முதலில் வ்யாஸரைப் பற்றிக் கூறுகிறார்). ஸ்ரீவிஷ்ணுபுராணம் (3-4-5) – க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் கோஹ்யந்யோ புவி மைத்ரேய மஹாபாரத க்ருத் பவேத் – மைத்ரேயரே! க்ருஷ்ண த்வைபாயனர் என்னும் பெயர் கொண்ட வ்யாஸ மஹரிஷியை அனைத்திற்கும் நாதனான ஸ்ரீமந்நாராயணன் என்றே அறிய வேண்டும். இந்த உலகில் மகாபாரதத்தை அருளிச்செய்தார் அவரன்றி வேறு யார் ஆவார் - என்றது. மேலும் - ஏவம் விதம் பாரதந்து ப்ரோக்தம் யேந மஹாத்மநா ஸோயம் நாராயணஸ் ஸாக்ஷாத் வ்யாஸரூபீ மஹாமுநி: - இப்படிப்பட்ட உயர்ந்த மகாபாரதம் எந்த ஒருவரால் அருளிச்செய்யப்பட்டதோ, அந்த மஹாத்மாவான வ்யாஸ மஹரிஷி நாராயணனே ஆவார் - என்றும் கூறப்பட்டது. ஆக எம்பெருமான் அவதாரமாகவே வ்யாஸர் உள்ளார். மேலும் - ஸஹோவாச வ்யாஸ: பாராசர்ய: – பராசர மஹரிஷியின் புத்திரரான வ்யாஸர் உரைத்தார் - என்று கூறும்படி அனைவரிலும் உயர்ந்தவராகவும், அனைவராலும் அறியப்பட்டவராகவும் திகழும் வ்யாஸ பகவானால், வேதாந் அத்யாபயாமாஸ மஹாபாரத பஞ்சமாத் - மஹாபாரதத்துடன் கூடிய ஐந்தாகிய வேதங்கள் ஏற்படுத்தினார் - என்னும்படி ஐந்தாம் வேதமாகச் செய்யப்பட்டது மகாபாரதம் ஆகும். இதனையும் நடுவில்திருவீதிப்பிள்ளை அருளிச்செய்தார். பெரியபட்டரான ஸ்வாமி பராசரபட்டரும் தனது ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம அறிமுக உரையில் – ஸ்ரீராமாயணவந் மஹாபாரதம் சரணம் - ஸ்ரீராமாயணம் போன்று மகாபாரதமும் உயர்ந்த ப்ராமாணம் – என்றது காண்க.

எம்பெருமானை ஸர்வேச்வரன் என்று கூறாமல், “தூது போனவன்“ என்று ஏன் கூறினார்? அடியார்களுக்கு அடிமையாக நிற்கின்ற அவனது குணத்தை வெளிப்படுத்தவே ஆகும் தேவர்களுக்கும் தலைவனாகிய அவன் தனது மேன்மையை ஆராயாமல், தான் செய்கின்ற செயலின் தாழ்வையும் பாராமல், பாண்டவர்களுக்காகத் தாழ்ந்த பொருள் போன்று ஓலையைக் கட்டிக் கொண்டு தூதுவனாகச் சென்றான். இது ஏன்? அடியார்களுக்கு அடிமையாக நின்று தொண்டு புரிவதில் உள்ள ருசியை அவன் அறிந்திருந்தாலேயே ஆகும்.

அவனை யாரும் எளிதாக அடையலாம் என்பதை உணர்த்தும் அவனது குணங்களான வாத்ஸல்யம் (பசு கன்றிடம் காட்டும் பாசம், குற்றங்களையும் குணமாகக் கொள்ளும் தன்மை) முதலானவற்றை விளக்கும் குணமாக இந்த “அடியார்களின் அடிமை” என்பது உள்ளது. இந்தக் குணத்தில் மயங்கிய காரணத்தால் அல்லவா திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (2-2-3) - இன்னார் தூதன் என நின்றான் – என்றும், (6-2-9) - குடை மன்னரிடை நடந்த தூதா - என்றும் அருளிச்செய்தார்? அத்தகைய பெரியதிருமொழியே இங்கு ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் இவ்விதம் அருளிச்செய்ததற்கு மூலமாக உள்ளது? பூர்வர்கள் கூறுவதை மீண்டும் உணர்த்துவது அல்லவோ இவர் போன்றவர்களுக்குப் பெருமை?

தூது போதல் என்பது தாழ்வான செயல் அல்லவோ என்ற கேள்வி எழலாம். ஆனால் அத்தகைய செயலானது கர்மத்தின் அடிப்படையில் உண்டானால் மட்டுமே தாழ்வானது ஆகும். ஆனால் அடியார்களுக்காகத் தனது ஆசைப்படிச் செய்யும் அனைத்தும் தாழ்வான செயல்களாக இருந்தாலும், அவை ஏற்றமாகவே கொள்ளப்படுகின்றன. யஜுர் அஷ்டகம் - ஸ உச்ரேயாந் பவதி ஜாயாமாந: – பரமாத்மா இந்த உலகில் பிறக்கும்போது மிகுந்த ஒளியை அடைகிறான் - என்றது காண்க. ஆக மற்றவர்களுக்காகப் பிறந்து, அவர்களுக்காகச் செயல்கள் புரியும்போது இவன் தனது ஒளியை அடைகிறான் என்று வேதத்தால் முழங்கப்பட்ட இந்தக் கருத்தானது, மற்றவர்களுக்காகத் தனது விருப்பத்தின் அடிப்படையில் செய்கின்ற செயல்கள் அனைத்தும் இவனுக்கு ஒளியை அளிப்பவை என்பது உணர்த்தவே ஆகிறது.

இவன் தூது போன செயலானது தாழ்வான ஒன்று என எண்ணுபவர்கள், அறிவிழந்த மனிதர்களில் தலை சிறந்து விளங்குபவர்கள் ஆவர். மிகுந்த அறிவுள்ளவர்கள் இந்தச் செயலைக் கண்டு, திருவாய்மொழி (1-3-1) – எத்திறம் - என்று மயங்கும்படியாக அல்லவோ இந்தச் செயல் உள்ளது? இப்படியாக உள்ள இந்தச் செயல் மூலம் இவனது எளிமையை வெளிப்படுத்தவே, அந்த எளிமையின் மேன்மையை வெளிப்படுத்தவே இவர் ”தூது போனவன் ஏற்றம்” என்று அருளிச்செய்தார்.

மகாபாரதம் முழுமையும் எம்பெருமானின் மேன்மையைக் கூறுவதால், இதனைத் தொடங்கும்போது வ்யாஸரின் சிஷ்யரான வைசம்பாயனர், மகாபாரதம் ஆதிபர்வத்தில் – நாராயணகதாமிமாம் - நாராயணனின் இந்தக் கதையை நான் கூறப் போகிறேன் - என்று கூறினார். எனவே இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் கூறப்பட்ட முக்கியமான பொருள் “இன்னது” என்று தெளிவாக விளக்கப்பட்டது.

6. இவையிரண்டாலும் புருஷகார வைபவமும் உபாய வைபவமும் சொல்லிற்றாய்த்து.

**அவதாரிகை** – உபப்ர்ம்ஹணமுகேந வேதாந்த தாத்பர்யத்தை நிஷ்கர்ஷித்து உஜ்ஜீவநத் துக்குடலானவற்றைச் சொல்லுவதாகவிறே உபக்ரமித்தது. அதிலிப்போது சொன்னவி வற்றால் வேதாந்தத்திலெவ்வர்த்தங்கள் சொல்லிற்றாய்த்தென்னுமா காங்க்ஷையிலே யருளிச் செய்கிறார் - மேல் இவை - என்று தொடங்கி.

**விளக்கம்** - வேதங்களின் ஆழ்பொருளை விரிவாக உரைக்கின்ற நூல்கள் மூலம், வேதாந்தங்களின் ஆழ்பொருளை நிச்சயம் செய்து கொண்டு, அதன் மூலம் உயிர்கள் கரையேறும் வழியை உரைப்பது என்பதை முடிவு செய்து இவர் தொடங்கினார். ஆகவே, இப்போது கூறப்பட்டதன் மூலம் வேதாந்தங்களின் எந்த ஆழ்பொருள்கள் உரைக்கப்பட்டன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது (சிறையிருந்தவளேற்றம், தூதுபோனவனேற்றம்) என்றவிவை யிரண்டாலும், அபராத பூயிஷ்டரான சேதநர்க்கு ஆச்ரயணீயையாமளவில் அகில ஜகந்மாதாவான ஸம்பந்தத்தாலும் க்ருபாதிகளாலும் நடுவொரு புருஷகாரம் வேண்டாதபடி வந்து ஆச்ரயிக்கலாம்படியாய், அபராதங்களைப் பார்த்துச் சீறி “க்ஷிபாமி”, ”நக்ஷமாமி” என்னுமீச்வர ஹ்ருதயத்தைத் திருத்தி அவர்களையங்கீகரிப்பிக்கும் புருஷகாரபூதையானவள் வைபவமும், அங்கீகரித்தால் பின்னையவள்தானே சிதகுரைக்கிலும் ”என்னடியாரது செய்யார்” என்று மருதலித்துத் தான் திண்ணியனாய் நின்று ரக்ஷிக்கும் உபாயபூதனானவன் வைபவமும் சொல்லிற்றாய்த்தென்கை. (புருஷகாரம்) என்றும், (உபாயம்) என்றும் இவற்றை நிரூபகமாகவருளிச்செய்தது, பிராட்டிக்கு புருஷகாரத்வமும் ஈச்வரனுக்கு உபாயத்வமும் அஸாதாரணமென்று தோற்றுகைக்காக. இது தன்னை ”மத் ப்ராப்திம் ப்ரதி ஜந்தூநாம் ஸம்ஸாரே பததாமத: லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்க்ஷிபி; மமாபிச மதம்ஹ்யேதத் நாந்யதா லக்ஷணம் பவேத்” என்றும், “அஹம் மத்ப்ராப்த்யுபாயோவை ஸாக்ஷாத் லக்ஷ்மீபதிஸ் ஸ்வயம், லக்ஷ்மீ: புருஷகாரேண வல்லபா ப்ராப்தி யோகிநீ, ஏஹஸ்யாச்ச விசேஷோயம் நிகமாந்தேஷு சப்த்யதே” என்றும், “அகிஞ்சந்யைக சரணா: கேசித் பாக்யாதிகா: புந:, மத்பதாம்போருஹத்வந்த்வம் ப்ரபத்ய ப்ரீத மானஸா:, லக்ஷ்மீம் புருஷகாரேண வ்ருதவந்தோ வராநந, மத்க்ஷமாம் ப்ராப்ய ஸேநேச ப்ராப்யம் ப்ராபகமேவ மாம், லப்த்வா

க்ருதர்த்தா: ப்ராப்ஸ்யந்தே மாமே வாநந்ய மாநஸா:” என்று பகவச்சாஸ்த்ரத்திலே தானே யருளிச் செய்தானிறே. மற்றைப் பிராட்டிமார்க்கும் ஸூரிகள் முதலான ததீயர்க்கும் இவள் ஸம்பந்தமடியாக வருகிற புருஷகாரத்வமிறேயுள்ளது; இவளைப் போலே ஸ்வதஸ்ஸித்தமன்றே. ஆகையிறே, “ஏதத் ஸாபேக்ஷஸம்பந்தா தந்யேஷா மமலாத்மநாம், தேவீஸூரி குரூணாஞ்ச கடகத்வம் நது ஸ்வத:” என்று தீபஸங்க்ரத்திலே ஜீயரருளிச்செய்தது. உபாயத்வமும் “க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்” என்று ஸநாதந தர்மமாகச் சொல்லப்படுகிற அவனுக்கே ஸ்வதஸ்ஸித்தமாய் ததீயர்க்கு ததாஸத்தியடியாக வருகிறதிறேயுள்ளது. ஆகையாலே பிராட்டிக்கு புருஷகாரத்வமும், ஈச்வரனுக்கு உபாயத்வமும் நிரூபகமாகத் தட்டில்லை. இவ்வர்த்தத்தை வெளியிடுகைக்காகவாய்த்து இவரிப்படியருளிச்செய்தது. இப்படி உபப்ரும்ஹணமான ப்ரபந்த த்வயத்தாலும் ப்ரதிபாதிக்கப்படுகிற புருஷாகாரத்வமுமுபாயத்வமும் உபப்ரும்ஹ்யமான வேதாந்தத்தி லுக்தமான ஸ்தலமேதென்னில், கடவல்ல்யுபநிஷத் ஸித்தமான த்வயத்தில் பூர்வவாக்யத்திலே உபயமும் சேர உக்தமிறே. இச்சேதநனுக்கு இருவரோடும் ஸம்பந்தமுண்டாயிருக்க ஈச்வர ஸமாச்ரயணத்துக்கிவள் புருஷகாரமாக வேண்டுகிற தென்னென்னில், மாத்ருத்வ ப்ரயுக்தமான வாத்ஸல்யாதிரேகத்தாலும், அவனைப்போலே காடிந்யமார்தவங்கள் கலந்திருக்கையன்றிக்கே, கேவல மார்தவமேயாய், பிறர் கண்குழிவு காணமாட்டாத ப்ரக்ருதியாகையாலும், விமுகரையுமபிகுகராக்குகைக்கு க்ருஷி பண்ணு மவளாகையாலும், குற்றவாளர்க்குங் கூசாமல் வந்து காலிலே விழலாம்படியிருப்பாளாய், பும்ஸ்த்வ ப்ரயுக்தமான காடிந்யத்தோடே பித்ருத்வ ப்ரயுக்தமான ஹிதபரதையையு முடையனாய், குற்றங்களைப் பத்தும் பத்தாகக் கணக்கிட்டு க்ரூரதண்டங்களைப் பண்ணுகையாலே, குற்றவாளர்க்கு முன்செல்லக் குடல்கரிக்கும்படியிருக்குமீச்வரனை உசிதோபாயங்களாலே குற்றங்களையடைய மறப்பித்துக் கூட்டிவிடுமவளுமா யிருக்கையாலே அபராதமே வடிவான இச்சேதநன் அவனையாச்ரயிருகுமளவில் இவள் புருஷகாரமாக வேணும். ஆகையிறே அவனை உபாயாமாகவரிக்க இழிகிறவளவில் இவளைப் புருஷகாரமாக முன்னிடுகிறது.

**விளக்கம் -** “இவை இரண்டும்” என்பதன் மூலம் சிறை இருந்தவள் ஏற்றம், தூது போனவன் ஏற்றம் ஆகிய இரண்டையும் குறிக்கிறார். பாவங்கள் பலவும் செய்த சேதனர்கள் வந்து அடையத்தக்கவளாக பிராட்டி உள்ளாள். இப்படியாக அவளிடம் சென்றடைய ஏதேனும் புருஷகாரம் (சிபாரிசு) வேண்டுமோ என்றால் – அனைத்திற்கும் தாய் என்பதாலும், தயை முதலான குணங்களாலும் அது போன்ற புருஷகாரம் ஏதும் அவசியம் இல்லாமல், ஏற்றுக் கொள்பவளாகப் பிராட்டி உள்ளாள். சேதனர்கள் செய்யும் பாவமான செயல்களைக் கண்டு கோபம் கொள்ளும் எம்பெருமான், கீதை (16-19) – க்ஷிபாமி – அசுர பிறவிகளில் அவர்களைத் தள்ளுகிறேன் - என்றும், வராஹபுராணம் - ந க்ஷமாமி - என் அடியார்களை நிந்திப்பவர்களை நான் பொறுப்பதில்லை - என்றும் கூறுகிறான். அவனது இந்தக் கோபம் கொள்ளும் மனதை மாற்றி, அவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்யும் பிராட்டியின் பெருமைகள் புருஷகாரவைபவம் என்பதன் மூலம் கூறப்பட்டது. இவ்விதம் எம்பெருமான்

ஏற்றுக் கொண்ட பின்னர், அந்தப் பிராட்டி தானே அவர்கள் மீது ஏதேனும் குற்றம் சுமத்தினாலும் அதற்கு எம்பெருமான் பெரியாழ்வார் திருமொழி (4-9-2) - என் அடியார் அது செய்யார் - என்பதற்கு ஏற்ப, அவள் கூறுவதை மறுத்து, அவர்களைக் காப்பாற்றுவதில் உறுதியாக நிற்கிறான். இப்படியாக உள்ள அவன் பெருமைகளை உபாய வைபவம் என்பதன் மூலம் அருளிச்செய்தார்.

புருஷகாரம் என்றும், உபாயம் என்றும் இவர்களை மற்றவற்றில் இருந்து வேறுபடுத்தி அருளிச்செய்தது ஏன் என்றால் – புருஷகாரம் என்பது பிராட்டிக்கும், உபாயம் என்பது எம்பெருமானுக்கும் இயல்பாகவே உள்ளது என்பதை உணர்த்தவே ஆகும். இந்த விஷயத்தைக் கீழே உள்ள வரிகளில் அறியலாம்:

- மத் ப்ராப்திம் ப்ரதி ஜந்நூநாம் ஸம்ஸாரே பததாமத: லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்க்ஷிபி; மமாபிச மதம்ஹ்யேதத் நாந்யதா லக்ஷணம் பவேத் – ஸம்ஸாரம் என்ற படுகுழியில் விழுந்து கிடக்கும் இந்த மக்களுக்கு, என்னை அடையும் புருஷகாரமாக பிராட்டி உள்ளாள் என்பது மஹரிஷிகளால் கூறப்பட்டது. இப்படி இவள் புருஷகாரமாக உள்ளாள் என்பது என்னாலும் ஏற்கப்படும் பிராட்டி இலக்கணம் ஆகும். இதற்கு மறுகருத்து இல்லை.

- அஹம் மத்ப்ராப்த்யுபாயோவை ஸாக்ஷாத் லக்ஷ்மீபதிஸ் ஸ்வயம், லக்ஷ்மீ: புருஷகாரேண வல்லபா ப்ராப்தி யோகிநீ, ஏஹஸ்யாச்ச விசேஷோயம் நிகமாந்தேஷு சப்த்யதே – மஹாலக்ஷ்மியின் நாயகனான நான் நேர் உபாயமாக உள்ளேன். என்னை எப்போதும் வசீகரிக்கும் மஹாலக்ஷ்மி, புருஷகாரத் தன்மை மூலம் உயிர்களை என்னிடம் அடையச்செய்தல் என்னும் தொடர்பைக் கொண்டுள்ளாள். எங்கள் இருவருக்கும் உள்ள இந்தத் தன்மைகள் வேதாந்தங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

- அகிஞ்சந்யைக சரணா: கேசித் பாக்யாதிகா: புந:, மத்பதாம்போருஹத்வந்த்வம் ப்ரபத்ய ப்ரீத மானஸா:, லக்ஷ்மீம் புருஷகாரேண வ்ருதவந்தோ வராநந, மத்க்ஷமாம் ப்ராப்ய ஸேநேச ப்ராப்யம் ப்ராபகமேவ மாம், லப்த்வா க்ருதர்த்தா: ப்ராப்ஸ்யந்தே மாமே வாநந்ய மாநஸா: - சிறந்த விஷ்வக்ஸேனரே! மற்ற எந்த ஓர் உபாயத்தையும் பற்றாமல், என்னை மட்டுமே உபாயம் என்று ஒரு சில புண்ணிய ஆத்மாக்கள் பற்றியுள்ளனர். எனது தாமரை மலர் போன்ற திருவடிகளைப் பற்றிய அவர்கள் – பெறப்போகும் மோக்ஷம் என்ற பேற்றில் ஆர்வம் கொண்டு, பெரியபிராட்டியைத் தங்கள் உபாயமாகக் கைக்கொண்டு, என்னை அவர்களது தவறுகளைப் பொறுத்துக் கொள்ளும்படியாகச் செய்து விடுகின்றனர். அடையப்படும் பொருளாக (உபேயம்) உள்ள என்னைப் பற்றியபடி, என்னையே

உபாயமாகவும் பற்றுகின்றனர். இப்படியாகத் தாங்கள் செய்யவேண்டிய செயல்களைச் செய்து முடித்தவர்களாக, வேறு எதிலும் தங்கள் மனதைத் திருப்பாதவர்களாக இருந்து, என்னையே அடைகின்றனர்.

மற்ற பிராட்டிகளுக்கும் நித்யசூரிகளுக்கும் இந்தப் புருஷகாரத்தன்மை உள்ளபோதிலும், அந்தத் தன்மை அவர்களுக்கு இவளுடன் அவர்கள் கொண்டுள்ள தொடர்பு காரணமாக மட்டுமே உண்டாகிறது. புருஷகாரத்வம் என்பது அவர்களுக்கு இவளைப் போன்று இயல்பாகவே அமைந்தது அல்ல. இதனைக் கருத்தில் கொண்டு வாதிகேஸரி அழகிய மணவாள ஜீயர் தனது தத்வதீப ஸங்கரஹத்தில் – ஏதத் ஸாபேக்ஷஸம்பந்தா தந்யேஷா மமலாத்மநாம், தேவீஸூரி குரூணாஞ்ச கடகத்வம் நது ஸ்வத: - பெரியபிராட்டியின் தொடர்பு காரணமாக மட்டுமே மற்ற பிராட்டிகளுக்கும், நித்யஸூரிகளுக்கும், ஆசார்யர்களுக்கும் புருஷகாரத்தன்மை உள்ளது; அது அவர்களுக்கு இயல்பாக உள்ளது அன்று – என அருளிச்செய்தார்.

உபாயத்தன்மை என்பது, மகாபாரதம் ஆரண்ய பர்வம் (88-253) – க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் – க்ருஷ்ணனையே என்றும் உள்ள தர்மம் என்று கூறுகின்றனர் – என்பதற்கு ஏற்ப ஸர்வேஸ்வரனுக்கு மட்டுமே இயல்பாக அமைந்துள்ளது. மற்றவர்களுக்கு அவனது தொடர்பால் மட்டுமே உண்டாகிறது. ஆகவே, பிராட்டிக்குப் புருஷார்த்த தன்மையும், எம்பெருமானுக்கு உபாயத்தன்மையும் தனித்தன்மையாக உள்ளது என்பதைக் கூறுவதில் எந்த ஆக்ஷேபமும் இல்லை. இதனை வெளிப்படுத்தவே இவர் இவ்விதம் அருளிச் செய்தார்.

வேதங்களின் ஆழ்பொருளை விவரித்துக் கூறும் இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் கூறப்பட்ட உபாயவைபவமும், புருஷகாரவைபவமும் இந்த இரண்டு நூல்கள் மூலம் விவரிக்கப்படும் வேதங்களில் எங்கு கூறப்பட்டுள்ளன? கடவல்லீ உபநிஷத்தில் கூறப்படுகின்ற த்வயம் என்ற மந்திரத்தின் முன் வரியில் இந்த இரண்டும் ஒன்றாகவே கூறப்படுகின்றன.

உலகில் உள்ள மக்களுக்கு இந்த இருவருடன் (எம்பெருமான், பிராட்டி) உள்ள தொடர்பு இயற்கையாகவே உள்ளபோது, எம்பெருமானை அடைவதற்குப் பிராட்டியின் புருஷகாரம் ஏன் அவசியமாகிறது என்று கேள்விக்கு அடுத்து விடை அருளிச் செய்கிறார். தாய் என்னும் தன்மையால் அவளுக்கு வாத்ஸல்யம் இயல்பாகவே உள்ளது. எம்பெருமானைப் போன்று இவளிடம் மென்மையும் கடுமையும் கலந்து இருப்பதில்லை. இவளிடம் மென்மை மட்டுமே உள்ளது. ஆகவே இவள் மற்றவர்களிடம் உள்ள தாழ்வுகளைக் காண்பதில்லை. தீய மனம் கொண்டவர்களையும் திருத்தி, நல்ல மனம் கொண்டவர்களாக ஆக்கிவிடும் தன்மை உடையவளாக பிராட்டி உள்ளாள்.

எம்பெருமான் ஆண்மை காரணமாகக் கடுமையாக உள்ளபோதிலும், தந்தைக்கு ஏற்ற தன்மையுடன் நன்மையையே செய்பவனாக உள்ளான். அடியார்கள் செய்கின்ற குற்றங்களைப் பத்து பத்தாகக் கூறு போட்டுக் கணக்கில் வைத்துக் கொள்ளும் தன்மை கொண்டவனாக எம்பெருமான் உள்ளான். இதனால் தவறு செய்தவர்கள், அவனிடம் செல்வதற்கு தங்கள் குடல் கலக்கும்படி நடுங்குகின்றனர். அப்படிப்பட்ட ஸர்வேச்வரன் இவர்களது தவறுகளை மறக்கும்படியாக பிராட்டி செய்துவிடுகிறாள். மேலும், அவன் திருவடிகளில் கொண்டு சேர்த்து விடுபவளாகப் பிராட்டி உள்ளாள். ஆகவே இந்தக் காரணங்களால் பாவம் பல செய்தபடி உள்ளவர்கள் ஸர்வேச்வரனைப் பற்றுவதற்கு இவள் புருஷகாரமாக இருந்தே ஆகவேண்டும். இந்தக் காரணங்களால் அல்லவோ, அவனை உபாயமாகப் பற்றுவதற்கு, இவளைப் புருஷகாரமாகப் பற்ற வேண்டும் என்று இவளை முன் நிறுத்துகிறோம்.

7. புருஷகாரமாம்போது க்ருபையும் பாரதந்த்ர்யமும் அநந்யார்ஹத்வமும் வேணும்.

**அவதாரிகை -** அநந்தரம், புருஷகாரத்தின்படிகளை விஸ்தரேண உபபாதிக்கக்கோலி, ப்ரதமத்திலே புருஷகாரத்வத்துக்கு அவச்யாபேக்ஷித குணங்களையருளிச்செய்கிறார் புருஷாகாரமாம்போது என்று தொடங்கி.

**விளக்கம் -** அதன் பின்னர் புருஷகாரத்தின் தன்மைகள் என்ன என்பதை விரிவாக அருளிச்செய்யத் திருவுள்ளம் கொண்டார். முதலில் புருஷகாரத்திற்கு இன்றியமையாத குணங்கள் எவை என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** புருஷகாரமாம்போது என்றது புருஷகாரமாமிடத்திலென்றபடி. க்ருபையாவது ப்ரதுக்காஸஹிஷ்ணுத்வம். பாரதந்த்ர்யமாவது பாராதீநத்வம். அநந்யார் ஹத்வமாவது தத்வ்யதிரிக்த விஷயாநர்ஹத்வம். இவை புருஷாகாரத்துக் கவச்யாபேக்ஷித மானபடியென்னென்னில், சேதநர் ஸம்ஸாரத்தில் படுகிற துக்கங்கண்டு பொறுக்க மாட்டாமல், ஈச்வரனோடே இவர்களை சேர்க்கைக்குடலான யத்நம் பண்ணுகைக்கு க்ருபை வேணும்; ஸ்வதந்த்ரனை வசீகரிக்கும்போது அநுவர்த்தநத்தாலே வசீகரிக்க வேண்டுகையாலே பாரதந்த்ர்யம் வேணும்; நம்மையொழிந்ததொரு விஷயத்துக்கு அர்ஹமன்றியே நமக்கே அதிசயகரமாயிருக்கும் வஸ்துவாகையாலே நங்கார்யமன்றோ சொல்லுகிறது என்று, சொன்னபடியவன் செய்கைக்குறுப்பாகையாலே அநந்யார்ஹத்வம் வேணும். ஆகையாலிவை மூன்றும் புருஷகாரத்துக்கு அவச்யாபேக்ஷிதமிறே. ஈச்வர க்ருபையிற் காட்டில் இவள் க்ருபைக்கு விசேஷமென்னென்னில், ஈச்வரனாவன் நிரங்குசஸ்வதந்த்ரனாய், நிக்ரஹாநுக்ரஹங்களிரண்டுக்கும் கடவனாய், சேதந கர்மங்களை நிறுத்தறுத்துத் தீத்துமவனாகையாலே அவனுடைய க்ருபை ஸ்வாதந்த்ர்யத்தாலே அமுக்குண்டு கிடந்து, ஓரோதசைகளிலே தலையெடுக்கக் கடவதாயிருக்கும். இவள் அநுக்ரஹைக சீலையாகையாலேயிவளுடைய க்ருபைக்கு

வேறொன்றால் ஓர் அபிபவமில்லாமையாலே எப்போதுமொருபடிப்பட்டிருக்கும். ஆகையாலிவளுடைய க்ருபை கரையழித்திருக்கும். ஸம்பந்தத்தில் வ்யாக்ருத்திபோலே யாய்த்து க்ருபையில் வ்யாவ்ருத்தியும். இப்படியிருக்கையாலேயிறே இவளை ஆச்ரயிப்பார்க்கு வேறோரு புருஷகாரம் தேட வேண்டாதொழிகிறது. ஈச்வர விஷயத்தி லிவளுடைய பாரதந்த்ர்யாநந்யார்ஹத்வங்களும் ஸ்வரூப ப்ரயுக்தமான மாத்ரமன்றிக்கே ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ என்றும், விஷ்ணுபத்நீ என்றும் சொல்லுகிற பத்நீத்வ ப்ரயுக்தமாயும், அஹந்தா ப்ரஹ்மணஸ் தஸ்ய ஸாஹமஸ்மி ஸநாதநீ என்றும், ஸ்ரீவத்ஸ வக்ஷா நித்யஸ்ரீ என்றும் சொல்லுகிறபடியே ஸ்வரூப நிருபகத்வாதி ஸித்தமான அநந்யத்வ ப்ரயுக்தமாயுமிருக்கும் இப்படியிருக்கையாலேயிறே அல்லாதார்க்கடைய மிதுநசேஷத்வமும், இவளொருத்திக்கும் ததேகசேஷத்வமுமாய்த்து. இந்த அவ்யவதாநேந வுண்டான ஸம்பந்தத்தாலேயிறே இவளுக்கு ஈச்வரனை வசீகரிக்குமளவில் புருஷகாரம் வேண்டாதொழிகிறது. இம்மூன்று குணத்திலும் வைத்துக்கொண்டு, க்ருபையானது, ச்ரிங் ஸேவாயாம் என்கின்ற தாதுவிலே நிஷ்பந்தமான ஸ்ரீ சப்தத்தில் ஸ்ரீயதே என்கிற கர்மணி வ்யுத்தபத்தியிலும் பாரதந்த்ர்யாநந்யார்ஹத்வங்களிரண்டும், ஸ்ரீயதே என்கிற கர்த்தரி வ்யுத்பத்தியிலும், நித்யயோகவாசியான மதுப்பிலும் ஸித்தமிறே.

**விளக்கம்** – புருஷகாரமாம்போது என்றால் புருஷகாரமாக உள்ளபோது என்று பொருள். க்ருபை என்றால் மற்றவர்கள் படுகின்ற துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாத தன்மையாகும். பாரதந்த்ர்யம் என்றால் எம்பெருமானுக்கு வசப்பட்டிருத்தல் ஆகும். அநந்யார்ஹம் என்றால் எம்பெருமானை அல்லாது மற்றவர்களுக்கு உரியவளாக இல்லாத தன்மை ஆகும். புருஷகாரத்திற்கு இந்த மூன்றும் (க்ருபை, பாரதந்த்ர்யம், அநந்யார்ஹம்) இன்றியமையாமல் இருக்கவேண்டியவை என்று எவ்விதம் கூறப்பட்டது? சேதனர்கள் ஸம்ஸாரத்தில் படுகின்ற துன்பத்தைக் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாமல், அவர்களை ஸர்வேச்வரன் பக்கம் சேர்த்துவிட எடுக்கும் முயற்சிகளுக்கு க்ருபை அவசியம் வேண்டும். ஸ்வதந்த்ரமான எம்பெருமானைத் தன்வசப்படுத்த அவன் பின் சென்று நடப்பதன் காரணமாக, அவனை வசப்படுத்த பாரதந்த்ர்யம் அவசியமாகிறது. "நம்மைத் தவிர மற்றவர்களுக்கு இவள் (பிராட்டி) உரியவள் அல்லள், நமக்கு எப்போதும் பெருமையை உண்டாக்கும்விதமாக, நம் செயல்கள் குறித்தே அல்லவா முயல்கிறாள்?", என்று எம்பெருமான் எண்ணியபடி இருத்தலுக்காக அநந்யார்ஹத்வம் அவசியமாகிறது. எனவே இந்த மூன்றும் புருஷகாரத்திற்கு அவசியமான தன்மைகள் ஆகின்றன.

எம்பெருமானின் கடாக்ஷத்தைக் காட்டிலும் இவளது கடாக்ஷத்திற்கு உள்ள சிறப்பு என்ன? எம்பெருமான் ஸ்வதந்த்ரமானவன் என்பதால் யாருடைய ஆணைக்கும் கட்டுப்படாதவனாக உள்ளான். அனுக்ரஹம் செய்தல், தண்டனை அளித்தல் ஆகிய இரண்டையும் செய்பவனாக உள்ளான். மக்கள் செய்த நல்ல செயல்கள், தீய செயல்கள் ஆகிய இரண்டையும் தராசு போன்று சரியாகக் கணக்கிட்டு, அவற்றை அழிப்பதன் பொருட்டு, அவற்றின் பலன்களை அனுபவிக்கும்படிச் செய்துவிடுகிறான். ஆகவே அவனது கடாக்ஷம் என்பது அவனது சுதந்திரமான தன்மை என்பதன் மூலம்

அழுத்தப்பட்டே உள்ளது. அவ்வப்போது மட்டுமே அது வெளிப்படுவதாக உள்ளது. ஆனால் பெரியபிராட்டியோ கடாக்ஷம் ஒன்றையே தனது தன்மையாகக் கொண்டவள் ஆவாள். ஆகவே இவளது கடாக்ஷம் என்பது வேறு எதனாலும் மறைக்கப்படாமல் உள்ளதால், எப்போதும் வெளிப்பட்டபடியே உள்ளது. ஆகவே இவளது க்ருபை என்பது எப்போதும் கரையை அழிக்கும் வெள்ளம் போன்றே உள்ளது. இவர்கள் இவருக்கும் மனிதர்களுடன் உள்ள உறவுமுறை போன்றே (தாய், தந்தை என்னும் உறவுமுறை) இவர்களது கடாக்ஷத்தின் வெளிப்பாடும் உள்ளது. இப்படியாக உள்ளதால், இவளைப் பற்றுவதற்கு வேறு யாருடைய புருஷகாரமும் அவசியம் இல்லாதபடி உள்ளது.

ஸர்வேச்வரன் விஷயத்தில் இவளுக்கு உள்ள பாரதந்த்ர்யம் மற்றும் அநந்யார்ஹத்வம் ஆகிய இரண்டும் இவளது சேஷத்வ ஸ்வரூபம் (எம்பெருமானுக்குத் தொண்டு புரிவதை இயல்பாகக் கொண்ட தன்மை) காரணமாக மட்டுமே வந்தவை அல்ல. வேறு சில காரணங்களும் உண்டு. அவை என்ன? புருஷஸூக்தம் – ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ – உனக்கு பூமிப்பிராட்டியும் பெரிய பிராட்டியும் தேவிமார்கள் – என்றும், ஸ்ரீஸூக்தம்- விஷ்ணுபத்நீ – என்றும் கூறுவதற்கு ஏற்ப எம்பெருமானின் பத்னியாக இவள் உள்ளதால் அந்தத் தன்மைகள் இவளுக்கு உண்டு. அஹந்தா ப்ரஹ்மணஸ் தஸ்ய ஸாஹமஸ்மி ஸநாதநீ - எப்போது உள்ள நான் எம்பெருமானுக்கு நிரூபகமாக உள்ளேன் - என்றும், இராமாயணம் – ஸ்ரீவத்ஸ வக்ஷா நித்யஸ்ரீ - ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவை உடையவனும், பிராட்டியின் தொடர்பை உடையவனும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப எம்பெருமானின் ஸ்வரூபம் என்பது இவளால் நிரூபிக்கப்படுவதால், அவனை விட்டு எப்போதும் இவள் பிரிவதில்லை. இதனாலும் அந்த இரண்டு தன்மைகளும் எப்போதும் இவளுக்கு உள்ளது. இப்படி உள்ளதால் அல்லவோ, ஸர்வேச்வரன் மற்றும் பிராட்டி ஆகிய இருவருக்கும் கைங்கர்யம் செய்யும் தன்மை இவளைத் தவிர்த்து உள்ள மற்ற அனைவருக்கும் ஏற்பட்டது? மேலும் இதனால் அல்லவோ இவளுக்கு, ஸர்வேச்வரனுக்கு மட்டுமே கைங்கர்யம் செய்யும் தன்மையும் உள்ளது? இப்படியாக எந்தவிதமான குறுக்கீடும் இல்லாத இவளது ஸம்பந்தம் காரணமாகவே ஸர்வேச்வரனைத் தன்வசப்படுத்த இவளுக்கு வேறு புருஷகாரம் அவசியம் இல்லாமல் உள்ளது.

இந்த மூன்று குணங்களில் க்ருபை என்பது – ச்ரிங் ஸேவாயாம் – என்னும் தாதுவில் உண்டான ஸ்ரீயதே என்ற செயப்பாட்டு வினையில் காணலாம் (அதாவது ச்ரியதேஸ்ரீ – வணங்கப்படுகிறாள் – என்று கொள்ளவேண்டும்). மேலும் பாரதந்த்ர்யம் மற்றும் அநந்யார்ஹத்வம் ஆகிய இரண்டும் ச்ரயதே - வணங்குகிறாள் – என்ற பதம் மூலம் வெளிப்படும். அவனுடன் என்றும் இவள் உள்ளாள் என்பதை ஸ்ரீமதே என்பதில் உள்ள மத் என்பதிலும் காணலாம் (ஸ்ரீமத் = ஸ்ரீயுடன் எப்போது உள்ளான்).

8. பிராட்டி முற்படப் பிரிந்தது தன்னுடைய க்ருபையை வெளியிடுகைக்காக; நடுவிற் பிரிந்தது பாரதந்த்ர்யத்தை வெளியிடுகைக்காக; அநந்தரம் பிரிந்தது அநந்யார்ஹத்வத்தை வெளியிடுகைக்காக.

**அவதாரிகை** - இந்த க்ருபாதித்ரயத்தையும் எல்லாருமறியும்படி தானே வெளியிட்டருளின வைபவத்தை ஸ்ரீராமாயணத்திலிவளுக்குச் சொல்லப்பட்ட விச்லேஷ த்ரயத்தாலும் தர்சிப்பிக்கிறார் மேல் (பிராட்டி) என்று தொடங்கி வாக்யத்ரயத்தாலே.

**விளக்கம்** - க்ருபை உள்ளிட்ட இந்த மூன்று தன்மைகளையும் அனைவரும் அறிந்து கொள்ளும்படியாகத் தானே வெளியிட்டாள். இந்தப் பெருமையை இவளுக்காக ஸ்ரீஇராமாயணத்தில் உள்ள மூன்று பிரிவுகள் மூலம் உணர்த்துகிறார்.

**வ்யாக்யானம்** – (பிராட்டி முற்படப் பிரிந்தது தன்னுடைய க்ருபையை வெளியிடுகைக்காக) - தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வேச மாநுஷீ, விஷ்ணோர் தேஹாநு ரூபாம் வை கரோத்யேஷாத்மநஸ் தநும் என்கிறபடியே, நாயகனான ஸர்வேச்வரனுடைய தத்ததவதார ஸஜாதீயமான விக்ரஹ பரிக்ரஹம் பண்ணி வந்தவதரிக்குமவளாகையாலே, ராகவத்வேபவத் ஸீதா என்கிறபடியே, அவன் சக்ரவர்த்தி திருமகனானவாரே ததநுரூபமாகத் தானும் ஜநகராஜன் திருமகளான பிராட்டி, தண்டகாரண்யத்திலேயெழுந்தருளியிருக்கச்செய்தே, ராவணன் பிரித்தானென்றொரு வ்யாஜத்தாலே ப்ரதமம் பெருமாளைப் பிரிந்து லங்கைக்கெழுந்தருளிற்று, தேவ்யா காருண்ய ரூபாயா என்று தத்குண ஸாரத்வத்தாலே காருண்யந்தானாகச் சொல்லும் படியான தன்னுடைய பரமக்ருபையை ப்ரகாசிப்பிக்கைக்காகவென்கை. எங்ஙனேயென்னில், தேவஸ்த்ரீகள் சிறையை விடுவிக்கைக்காகத் தான் சிறை யிருக்கையாலும்; அவ்விருப்பிலே தன்னை அல்லும் பகலும் தர்ஜநபர்த்ஸநம் பண்ணி யருவித்தின்ற க்ரூரராக்ஷஸிகள், ராவணன் பராஜிதனாகவும் பெருமாள் விஜயிகளாகவும் த்ரிஜடை ஸ்வப்நங்கண்டத்தாலே பீதபீதைகளாய் நடுங்குகிற தசையிலே பவேயம் சரணம் ஹி வ: என்று நீங்கள் நோவுபடுகிற ஸமயத்துக்கு நானிருந்தேன். நீங்களஞ்ச வேண்டாவென்று அபயப்ரதாநம் பண்ணுகையாலும்; அது உக்திமாத்ரமாய்ப் போகாமே ராணவதாநந்தரம் தனக்கு சோபநஞ் சொல்லவந்த திருவடி அவர்களை சித்ரவதம் பண்ணும்படி காட்டித்தரவேணுமென்ன, அவனோடே மன்றாடி ராஜ ஸம்ச்ரய வச்யாநாம் இத்யாதியாலே அவர்கள் குற்றத்தை குணமாக உபபாதித்தும், மர்ஷயாமீஹ துர்பலா என்று பிறர் நோவுகண்டு பொறுத்திருக்கத்தக்க நெஞ்சுரம் தனக்கில்லாமையை முன்னிட்டும், கார்யம் கருண மார்யேண ந கச்சிந்நாபராத்யதி என்று அவனுக்கு இரங்கியல்லது நிற்கவொண்ணாதபடியுபதேசித்தும், இப்படியொரு நிலைநின்று தான டியிற் பண்ணின ப்ரதிஜ்ஞாநு குணமாக ஆர்த்ராபராதைகளானவர்களை ரக்ஷிக்கையாலும் தன்னுடைய க்ருபையை வெளியிட்டாளிறே.

**விளக்கம்** - (பிராட்டி முற்படப் பிரிந்தது தன்னுடைய க்ருபையை வெளியிடுகைக்காக) – ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-9-145) - தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வேச மாநுஷீ, விஷ்ணோர் தேஹாநு ரூபாம் வை கரோத்யேஷாத்மநஸ் தநும் – அவன் தேவனாக அவதரிக்கும்போது இவளும் தேவசரீரம் எடுக்கிறாள்; அவன் மனிதனாகப் பிறக்கும்போது இவளும் மனித சரீரம் எடுக்கிறாள்; இப்படியாக இவளுக்கு ஏற்ற சரீரத்தினை அவன் எடுக்கும்போது, அதற்குத் தகுதியாக இவளும் தனக்குச் சரீரம் எடுத்துக்கொள்கிறாள் – என்றது. ஆக நாயகனான ஸர்வேச்வரனுடைய அந்தந்த அவதாரத்திற்கு ஏற்றபடியான திருமேனியுடன் இவளும் அவதரிக்கிறாள். இந்தக் காரணத்தினால் தான் இராமாயணம் (1-9-144) – ராகவத்வேபவத் ஸீதா - எம்பெருமான் இராமனாக வந்தபோது பிராட்டி சீதையாக அவதரித்தாள் – என்று கூறியதற்கு ஏற்ப அவன் சக்ரவர்த்தித் திருமகனாக அவதரித்தபோது இவள் ஜனகனின் புத்ரியான சீதையாக அவதரித்தாள். இத்தகைய காரணத்தினால்தான் தண்டக வனத்தில் பிராட்டி இருந்த நேரத்தில் “இராவணன் அபகரித்தான்” என்ற செயலை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, முதலில் எம்பெருமானை விட்டு, தான் பிரிந்து இலங்கை சென்றாள். ஏன் என்றால் லக்ஷ்மீதந்த்ரம் – தேவ்யா காருண்ய ரூபாயா - கருணையே வடிவான சீதையுடன் – என்று கூறும்படியாக க்ருபை என்ற குணம் முதன்மையாக உள்ளதன் காரணமாக, அந்தக் கருணை என்பது தானாகவே இலங்கை சென்றதோ என்று கூறும்படியாக, தனது கருணையை வெளிப்படுத்தும் பொருட்டே ஆகும்.

இதனை எப்படி இலங்கைக்கு தான் சென்றதன் மூலம் வெளிப்படுத்தினாள் என்ற கேள்வி எழலாம். இதற்கு பலவிதமாக விடை அளிக்கலாம்:

- தேவலோகப்பெண்கள் பலரும் இராவணனால் சிறைபிடிக்கப்பட, அவர்களை அங்கிருந்து காப்பாற்ற, தான் சிறைப்பட்டாள்
- அங்குள்ள த்ரிசடை என்பவள் தனது கனவில் இராவணன் தோற்பது போன்றும், இராமன் வெல்வது போன்றும் கனவு கண்டாள். இதனை அவள் அங்குள்ள அரக்கிகளிடம் கூறினாள். அந்த நாள் வரை சீதையைத் தங்கள் சொற்கள் மூலமும் கைகள் மூலமும் பகல் இரவு என்று பாராமல் எப்போதும் அச்சத்தில் ஆழ்த்தியபடியே இருந்த அந்த அரக்கிகள், த்ரிசடையின் சொற்கள் கேட்டு நடுங்கி நின்றனர். அவர்களுடம் இராமாயணம் ஸுந்தரகாண்டம் (58-93) – பவேயம் சரணம் ஹி வ: - உங்களைக் காப்பாற்றுபவளாக நான் உள்ளேன் – என்று

கூறினாள். இதன் மூலம் நீங்கள் வருந்தும் நேரங்களில் நான் உங்களிடம் உள்ளேன், ஆகவே அச்சம் கொள்ள வேண்டாம் என்று அச்சத்தை விலக்குபவளாக உள்ளாள்.

- மேலே அரக்கியர்களிடம் தான் கூறியது வெறும் சொற்கள் மட்டும் அல்ல, அது செயலிலும் நடத்திக் காட்ட இயலும் என்பதை உணர்த்தினாள். எப்படி? இராவணன் அழிந்த பின்னர், இராமன் வென்றுவிட்டான் என்ற தனக்குப் பிரியமான செய்தியைக் கூற வந்த அனுமன், அத்துடன் நிற்காமல் அரக்கியர்களை இராமனிடன் காண்பித்துக் கொடுத்து, அவர்களைச் சித்ரவதை செய்யும்படித் தன்னிடம் கூறியதைக் கேட்டாள். உடனே சீதை அனுமனிடம் இராமாயணம் யுத்தகாண்டம் (116-38) - ராஜ ஸம்ச்ரய வச்யாநாம் – தங்களது அரசனின் கட்டளையை ஏற்று நடந்த இந்த வேலையாட்களிடம் யார் கோபம் கொள்வார்கள் – என்று கூறி, அவர்களின் குற்றத்தையும் குணமாக மாற்றிக் கூறினாள். மேலும் யுத்தகாண்டம் (116-40) – மர்ஷயாமீஹ துர்பலா - இவர்களை அழிப்பாய் என்று கூறுவதற்கு எனது உள்ளத்தில் வலிமை இல்லாத காரணத்தினால் நான் இவர்களது குற்றங்களைப் பொறுத்துக் கொள்கிறேன் – என்பதன் மூலம் மற்றவர்களின் துன்பத்தைக் கண்டு பொறுத்தக் கொள்ளும் மனவலிமை தனக்கு இல்லாததை வெளியிட்டாள். மேலும் தொடர்ந்து யுத்தகாண்டம் (116-44) – கார்யம் கருண மார்யேண ந கச்சிந்நாபராத்யதி - பெரியவனான உன்னால் இவர்கள் கருணை கொள்ளத்தக்கவர்கள், இந்த உலகில் குற்றம் செய்யாதவர்கள் என்று யாரும் இல்லை - என்று கூறினாள். இப்படியாக அனுமன் இரக்கம் கொள்ளாத நிலை அல்லாமல் வேறு நிலை எடுக்க இயலாதபடி செய்தாள். ஆக இதன் மூலம், இதுநாள்வரை தன்னைத் துன்புறுத்தியபடி இருந்த அரக்கியர்களைத் தான் கூறியபடியே காப்பாற்றினாள். இதனால் தனது க்ருபையை வெளியிட்டாள்.

**வ்யாக்யானம்** – (நடுவிலித்யாதி) - நடுவிற்பிரிவாவது மீண்டு பெருமாளுடனே கூடித் திருவயோத்யையிலேயெழுந்தருளித் திருவயிறு வாய்த்திருக்கிற காலத்திலே அபத்யலாபோ வைதேஹி! மமாயம் ஸமுபஸ்தித: கிமிச்சஸி ஸகாமா த்வம் ப்ரூஹி ஸர்வம் வராநநே என்று உனக்கபேக்ஷையேதென்று கேட்டருள, தபோவநாநி புண்யாநி த்ரஷ்டுமிச்சாமி ராகவ, கங்காதீர நிவிஷ்டாநி ருஷீணாம் புண்யகர்மணாம், பல மூலாசிநாம் வீர பாதமூலேஷு வர்த்திதும், ஏஷமே பரம காமோயந்மூலபலபோஹிஷு அப்யேகராத்ரம் காகுத்ஸ்த வஸேயம் புண்ய கீர்த்திஷு என்று தனக்குண்டான வநவாஸ வாஞ்சையை விண்ணப்பஞ்செய்ய, அத்தைப்பற்றப் போக விடுவாரைப்போலே லோகபவாத பரிஹாரார்த்தமாகப் பெருமாள் காட்டிலே போகவிடப் போனது.

இப்பிரிவுக்கு ப்ரயோஜநம் பெருமாள் கட்டிலே வைத்துபோதோடு காட்டிலே விட்ட போதோடு வாசியற, அவருடைய நினைவையே பின் செல்லவேண்டும்படியான தன்னுடைய பத்நீத்வ ப்ரயுக்தமான பாரதந்த்ர்யத்தை ப்ரகாசிப்பிக்கை. கங்கைக் கரையேறினவநந்தரம் இளையபெருமாள் கனக்க க்லேசப்பட்டுக் கொண்டு, பெருமாள் திருவுள்ளமாய் விட்ட கார்யத்தை விண்ணப்பஞ்செய்ய, அத்தைக்கேட்டு மிகவும் ப்ரலாபித்து ந கல்வத்யைவ ஸௌமித்ரே! ஜீவிதம் ஜாஹ்நவீஜலே த்யஜேயம் ராகவம் வம்சே பர்த்துர் மா பரிஹாஸ்யதி என்றாளிறே. இத்தால் ஆற்றாமையின் கனத்தாலே முடிந்து பிழைக்கை தேட்டமாகா நிற்கச் செய்தேயும் அது செய்யமாட்டாதே பெருமாள் நினைவைப் பின் சென்று தன் ப்ராணனை நோக்கிக்கோண்டிருக்க வேண்டும்படியான பாரதந்த்ர்யத்தையிறே ப்ரகாசிப்பித்தது. பிறர்க்காக ஜீவிக்கவேண்டும் பரதந்த்ரர்க்கு முடிவு தேட்டமானாலும் முடியப்போகாதே! மாயும் வகையறியேன் வல்வினையே பெண் பிறந்தே என்றாரிறேயாழ்வார். ப்ரதமவிசேஷத்தில் பத்து மாஸத்துக்குள்ளே படுவதெல்லாம் பட்டவள், பதிர்ஹி தைவதம் நார்யா: பதிர்பந்து: பதிர்கதி: ப்ராணைரபி ப்ரியம் தஸ்மாத் பர்த்து: கார்யம் விசேஷத: என்று தானருளிச் செய்தபடியே, பதிசித்தாநுவிதாநமே நமக்கு ஸ்வரூபமென்னும் பாரதந்த்ர்ய புத்தியாலேயிறே அநேக ஸம்வத்வஸரம் பாடாற்றிருந்தது. ஆக இப்படி இப்பிரிவிலே தன்னுடைய பாரதந்த்ர்யத்தை வெளியிட்டாளிறே.

**விளக்கம்** – (நடுவில் பிரிந்தது) இந்தச் செயல் தனது பாரதந்த்ர்யத்தை வெளியிடுவதற்காகவே ஆகும். இலங்கையில் இருந்து புறப்பட்டு மீண்டும் அயோத்தி வந்த பின்னர் சீதை கர்ப்பம் அடைந்தாள். அப்படியான ஒரு நாளில் இராமன் அவளிடம் உத்தரகாண்டம் (42-32) – அபத்யலாபோ வைதேஹி! மமாயம் ஸமுபஸ்தித: கிமிச்சஸி ஸகாமா த்வம் ப்ரூஹி ஸர்வம் வராநநே – அழகான முகம் உடையவளே! வைதேஹீ! எனக்குப் புத்திரன் பிறக்கின்ற புண்ணியம் கிட்டியது. நீ ஆசையாக எதனை எண்ணியுள்ளாய்? உனக்கு எவை விருப்பமோ அவை அனைத்தையும் என்னிடம் கூறுவயாக - என்றான். உடனே சீதை உத்தரகாண்டம் (42 – 33, 35) – தபோவநாநி புண்யாநி த்ரஷ்டுமிச்சாமி ராகவ, கங்காதீர நிவிஷ்டாநி ருஷீணாம் புண்யகர்மணாம், பல மூலாசிநாம் வீர பாதமூலேஷு வர்த்திதும், ஏஷமே பரம காமோயந்மூலபலபோஹிஷு அப்யேகராத்ரம் காகுத்ஸ்த வஸேயம் புண்ய கீர்த்திஷு - இராகவரே! மிகுந்த புண்ணியம் பல உள்ளவர்களும், பழம் மற்றும் கிழங்கு முதலானவற்றை உண்பவர்களும் ஆகிய முனிவர்களின் திருவடிகளின் கீழே வசிப்பதற்கு நான் விரும்புகிறேன்; கங்கையின் கரையில் உள்ளவைகளும், தூய்மை நிறைந்தவைகளும் ஆகிய அவர்களின் பர்ணசாலை களைக் காண நான் விரும்புகிறேன்; கிழங்கு முதலானவற்றைப் புசிப்பவர்களும், தூய்மையான ஒழுக்கம் கொண்டவர்களும் ஆகிய முனிவர்கள் உள்ள இடத்தில் ஒரு நாளாவது வசிக்க விரும்புகிறேன். இப்படியாக எனது ஆசைகள் உள்ளன - என்றாள். ஆக கானகத்தில் தான் வசிக்க விரும்புவதை இராமனிடம் விண்ணப்பம் செய்தாள். இத்தகைய ஆசையை நிறைவேற்றும் விதமாக, உலகினர் சீதை மீது கற்பித்த பொய்யான பழியை

ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, அவளை இராமன் காட்டிற்கு அனுப்பினான். இந்தப் பிரிவிற்கு என்ன பயன் கிட்டியது என்றால் - இராமன் தன்னை அன்புடன் அரண்மனையில் வைத்திருந்தாலும், கானகம் அனுப்பினாலும் எந்தவிதமான வேறுபாடும் காணாமல், அவனுடைய நினைவிலேயே ஒன்றியபடி சீதை இருந்தாள். இப்படியாகத் தன்னுடைய பத்னித்தன்மை மூலம் பாரதந்த்ர்யத்தை வெளிப்படுத்தியதே இராமனைப் பிரிந்த பயனாகும். இதனால் மேலும் விளக்குகிறார். அயோத்தியில் இருந்து சீதையை அழைத்து வந்த இலக்ஷ்மணன் அவளைக் கங்கைக் கரையில் இறக்கி விட்டான். இந்த நேரத்தில்தான், இராமன் அவளைக் கானகத்தில் விட்ட காரணத்தையும் கூறினான். இதனைக் கேட்டுப் புலம்பிய சீதை உத்தரகாண்டம் (48-8) – ந கல்வத்யைவ ஸௌமித்ரே! ஜீவிதம் ஜாஹ்நவீஜலே த்யஜேயம் ராகவம் வம்சே பர்த்துர் மா பரிஹாஸ்யதி – சுமித்திரையின் புத்திரனே! இராமன் மூலம் உண்டான இந்தக் கர்ப்பம் எனது பதியான இராமனின் குலத்திற்கு இல்லாமல் போய்விடக்கூடாது என்ற காரணத்தினால் அல்லவோ நான் கங்கையில் விழாமல் உள்ளேன் - என்றாள். இதன் மூலம் பிரிவாற்றாமை காரணமாகப் பிழைப்பது என்பது அரிதாக உள்ளபோதிலும், உயிரை விடாமல் இராமனின் நினைவைக் கொண்டபடி, தனது உயிரைப் பிடித்திருந்தாள் என்னும் பாரதந்த்ர்யத்தை வெளிப்படுத்தினாள். மற்றவர்களுக்காகப் பிழைத்திருக்க வேண்டிய பாரதந்த்ர்யர்களுக்கு முடிவு என்பதில் விருப்பம் உள்ளபோதிலும் அப்படிச் செய்ய மாட்டனர். இதனை நம்மாழ்வார் (5-4-3) - மாயும் வகை – என்றார் அல்லவோ? முதன் முதலில் சீதை இராமனைப் பிரிந்த பத்து மாதங்களில் பல இன்னல்களை அனுபவித்தாள். இதனை ஏன் அவள் தாங்கிக் கொண்டாள்? இராமாயணம் உத்தரகாண்டம் (48-17) பதிர்ஹி தைவதம் நார்யா: பதிர்பந்து: பதிர்கதி: ப்ராணைரபி ப்ரியம் தஸ்மாத் பர்த்து: கார்யம் விசேஷத: – எந்தக் காரணத்தினால் ஒரு பெண்ணிற்கு அவளது கணவன் தெய்வமாகவும், பந்துவாகவும், மோக்ஷமாகவும் உள்ளானோ அந்தக் காரணத்தை முன்னிட்டு மனைவியானவள் தனது உயிர் மற்றும் அதனினும் மேலாக வேறு ஏதாவது இருந்தால் அதன் மூலமும் தொண்டு செய்ய வேண்டும் – என்று தானே அருளிச்செய்தாள். இதற்கு ஏற்றபடி இராமனின் எண்ணத்தை அறிந்து அவன் பின் செல்வதே தன்னுடைய ஸ்வரூபத்திற்கு ஏற்றது என்னும் பாரதந்த்ர்யம் காரணமாகப் பொறுத்துக்கொண்டாள். இப்படியாக இந்தப் பிரிவில் தனது பாரதந்த்ர்யத்தை வெளியிட்டாள்.

**வ்யாக்யானம்** - (அநந்தரமித்யாதி) - அநந்தரத்தில் பிரிவாவது, மீண்டு பெருமாள் ஸன்னதியிலே வந்திருக்கச்செய்தே, பிரிந்து பிறந்தகத்திலே புக்குவிட்டது. இப்பிரிவுக்கு ப்ரயோஜநம், அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா, அந்யாஹி மயாஸீதா என்று உபயஸம்மதமான தன்னுடைய அநந்யத்வ ப்ரயுக்தமான அநந்யார்ஹத்வத்தை ஸர்வ ஸம்மதமாம்படி ப்ரகாசிப்பிக்கை. எங்ஙனேயென்னில், பெருமாள் அச்வமேதம் பண்ணியருளா நிற்கச்செய்தே, ஸ்ரீவால்மீகி பகவானுடைய நியோகத்தாலே குசலவர்கள் வந்து ஸ்ரீராமாயணத்தைப் பாடிக்கொண்டு திரியா நிற்க, அத்தைப் பெருமாள் திருச்செவி சாத்தி ஸந்நிதியிலேயவர்களையழைத்து விசேஷஜ்ஞரெல்லாரையுங் கூட்டியவர்கள்

பாட்டுக் கேளாநிற்கிற நாளிலே, அவர்களைப் பிராட்டியினுடைய பிள்ளைகளென்றறிந்த வநந்தரம், பிராட்டியளவிலே திருவுள்ளஞ்சென்று தனக்கேற சுத்தையாகில் கடுக இத்திரளிலே நாளை வந்து ப்ரத்யயமுகத்தாலே தன் சுத்தியை ப்ரகாசிப்பிப்பாளாக வென்று தூத முகேந பெருமாள் மஹர்ஷிக்கும் பிராட்டிக்கும் அறிவித்துவிட, அப்படியே ஸ்ரீவால்மீகி பகவானை முன்னிட்டுக்கொண்டு அந்த மஹாபரிஷத்திலே பெருமாள் ஸந்நிதியிலே வந்து ஒடுங்கி நிற்கச் செய்தே, ஸ்ரீவால்மீகி பகவான் இவள் சுத்தையென்னுமிடத்தை பலமுகத்தாலுஞ் சொல்ல, பெருமாளுமிவள் சுத்தையெ ன்னுமிடம் நானுமறிவன், மஹர்ஷி சொன்னதுவே போரும், ஆனாலும் லோகாபவாத பரிஹாரார்த்தமாக ஒரு ப்ரத்யயமித்திரளிலே பண்ணவேணுமென்று திருவுள்ளமான படியாலே, ஸர்வாந் ஸமாகதாந் த்ருஷ்ட்வா ஸீதா காஷாய வாஸிநீ அப்ரவீத் ப்ராஞ்ஜலிர் வாக்யம் அதோ த்ருஷ்டி ராவாங்முகீ என்கிறபடியே கையுமஞ்ஜலியுமாய்க் கவிழ்தலையிட்டுக் கொண்டு நின்று, யதாஹம் ராகவாதந்யம் மநஸாபி ந சிந்தயே, ததா மே மாதவீ தேவீ விவரம் தாது மர்ஹதி; மநஸா கர்மணாவாஸா யதா ராமம் ஸமர்த்தயே, ததா மே மாதவீ தேவீ விவரம் தாதுமர்ஹதி; யதைதத் ஸத்ய முக்தம் மே வேத்மி ராமாத் பரம் நச ததாமே மாதவீ தேவீ விவரம் தாதுமர்ஹதி என்று சபதம் பண்ண, ததா சபந்த்யாம் வைதேஹ்யாம் ப்ராதுராஸீந் மஹாத்புதம் பூதலா துத்திதம் திவ்யம் ஸிம்ஹாஸந மநுத்தமம், த்ரியமாணம் சிரோபிஸ்து நாகை ரமிதவிக்ரமை:, திவ்யம் திவ்யேந வபுஷா ஸர்வரத்ந விபூஷிதம்; தஸ்மிம்ஸ்து தரணீதேவீ பாஹுப்யாம் க்ருஹ்ய மைதிலீம்; ஸ்வாகதே நாபிநந்த்யைநா மாஸநே ஸோபவேசயத்; தாமாஸநகதாம் த்ருஷ்ட்வா ப்ரவிசந்தீம் ரஸாதலம் புஷ்ப வ்ருஷ்டிரவிச்சிந்நா திவ்யா ஸீதாமவாகிரத் என்று அவ்வளவிலே பூமியில் நின்றும் ஒரு திவ்யஸிம்ஹாஸநம் வந்து தோன்ற, அதிலே ஸ்ரீபூமிப்பிராட்டி இவளை ஸ்வாகதப்ரச்ந பூர்வகமாக இரண்டு கையாலுமெடுத்துக் கொண்டுபோய் வைக்க, ஆஸநகதையாய்க்கொண்டு ரஸாதலத்தை ப்ரவேசியா நிற்கிற விவளைக் கண்டு திவ்ய புஷ்ப வ்ருஷ்டி இடைவிடாமல் இவள்மேலே விழுந்ததென்கையாலே இப்பிரிவிலே தன்னுடைய அநந்யார்ஹத்வத்தை ப்ரகாசிப்பித்தாளிறே.

**விளக்கம்** – அதன் பின்னர் இராமனைப் பிரிந்த பிரிவு என்பது, மீண்டும் இராமனின் வந்து சேர்ந்த பின்னர் பிரிந்து, தான் பிறந்த இடமான பூமிக்குள்ளே சென்றதாகும். இந்தப் பிரிவிற்கு என்ன பயன் என்றால்:

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் (21-15) – அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா - சூரியனை விட்டு ஒளி எவ்விதம் பிரியாமல் இருக்குமோ அது போன்று நான் இராமனை விட்டுப் பிரியமாட்டேன்.

- இராமாயணம் யுத்தகாண்டம் (121-19) - அந்யாஹி மயாஸீதா - சூரியனை விட்டு அதன் ஒளி எப்படிப் பிரியாமல் இருக்குமோ அது போன்று சீதை என்னை விட்டுப் பிரிய மாட்டாள்.

இப்படியாக இராமன் மற்றும் சீதை ஆகியவர்களின் வாக்கியங்கள் மூலமாக அறியப்படுகின்ற தனது அநந்யார்ஹத்வத்தை (தான் இராமனுக்கு மட்டுமே உரியவள் என்ற நிலை) அனைவரும் அறிந்த கொள்ளும்படியாகத் தெளிவுபடுத்துவதற்காகவே ஆகும். எப்படி? இராமன் அச்வமேத யாகம் இயற்றினான். அப்போது வால்மீகி முனிவரின் கட்டளைக்கு இணங்க லவகுசர்கள் ஸ்ரீஇராமாயணத்தைப் பாடியபடி அங்கு வந்தனர். அதனை இராமன் கேட்டான். அவர்கள் இருவரையும் தன்னிடம் அழைத்தான். அங்குள்ள பெரியவர்கள் அனைவரையும் வரவழைத்தான். அவர்கள் பாடிய பாட்டைக் கேட்டபோது அவர்கள் யாருடைய பிள்ளைகள் என்று அறிந்தான். உடனே இராமனுக்குச் சீதையின் நினைவு அதிகமாகி நின்றது. ஒரு தூதனை அழைத்து, "தனது மனதிற்கு ஏற்ப சீதை தூய்மையானவள் என்றால் உடனே இந்தச் சபைக்கு வந்து, சத்தியம் செய்து, தனது தூய்மையை அவள் வெளிப்படுத்துவாளாக", என்ற செய்தியை வால்மீகி முனிவரிடமும், சீதையிடமும் தெரிவிக்கும்படி அனுப்பினான். இதற்கு ஏற்ப வால்மிகீ முனிவருடன் சீதை அந்தச் சபைக்கு வந்து மிகவும் பணிவாக நின்றாள். அந்தச் சபையில் வால்மீகி முனிவர், "இவள் தூய்மையானவள்", என்று பலவிதத்திலும் எடுத்துக் கூறினார். இதனைக் கேட்ட இராமன், "இவள் தூய்மையானவள் என்பதை நானும் அறிவேன். வால்மீகி முனிவர் உரைத்தது போதுமானது ஆகும். ஆனால் உலகினர் இதனை உணர்ந்து கொள்ளும்படியான ஒரு சத்தியச் செயலை இவள் இப்போது செய்யவேண்டும். இந்த உலகத்தால் உண்டான பழிச்சொல் நீங்குவதற்கு இதனை இவள் செய்யவேண்டும்", என்றான்.

இதனைக் கேட்ட சீதை செய்தது என்ன? இராமாயணம் உத்தரகாண்டம் (97-14) - ஸர்வாந் ஸமாகதாந் த்ருஷ்ட்வா ஸீதா காஷாய வாஸிநீ அப்ரவீத் ப்ராஞ்ஜலிர் வாக்யம் அதோ த்ருஷ்டி ராவாங்முகீ – காவி உடுத்திருந்த சீதை அங்கிருந்த அனைவரையும் பார்த்தாள்; பூமிதேவியை உற்று நோக்கிய கண்களுடனும், அஞ்ஜலி முத்திரையில் வைத்த கைகளுடனும் இந்தச் சொற்களைக் கூறினாள் – என்று கூறியதற்கு ஏற்ப, அஞ்ஜலி முத்திரையுடன் கூடிய கைகளைக் கொண்டவளாகக் குனிந்த தலையுடன் பின்வருமாறு கூறினாள். இராமாயணம் உத்தரகாண்டம் (97-15) - யதாஹம் ராகவாதந்யம் மநஸாபி ந சிந்தயே, ததா மே மாதவீ தேவீ விவரம் தாது மர்ஹதி; மநஸா கர்மணாவாஸா யதா ராமம் ஸமர்த்தயே, ததா மே மாதவீ தேவீ விவரம் தாதுமர்ஹதி; யதைதத் ஸத்ய முக்தம் மே வேத்மி ராமாத் பரம் நச ததாமே மாதவீ தேவீ விவரம் தாதுமர்ஹதி - நான் இராமனை மட்டுமே எண்ணியுள்ளேன்; அவனைத் தவிர வேறு யாரையும் மனதால் கூட

எண்ணவில்லை; இது உண்மை என்றால் எனக்கு பூமிதேவி இடம் அளிப்பாளாக; என்னுடைய மனம், வாக்கு, உடல் ஆகிய மூன்றாலும் நான் இராமனை மட்டுமே எண்ணியுள்ளது உண்மை என்றால் எனக்குப் பூமிதேவி இடம் அளிப்பாளாக; இராமனைத் தவிர்த்து வேறு யாரையும் நான் அறியவில்லை என்பது உண்மை என்றால் எனக்குப் பூமிதேவி இடம் அளிப்பாளாக - என்று சபதம் செய்தாள். உடனே நடந்தது என்ன? இராமாயணம் உத்தரகாண்டம் (97-18) - ததா சபந்த்யாம் வைதேஹ்யாம் ப்ராதுராஸீந் மஹாத்புதம் பூதலா துத்திதம் திவ்யம் ஸிம்ஹாஸந மநுத்தமம், த்ரியமாணம் சிரோபிஸ்து நாகை ரமிதவிக்ரமை:, திவ்யம் திவ்யேந வபுஷா ஸர்வரத்ந விபூஷிதம்; தஸ்மிம்ஸ்து தரணீதேவீ பாஹுப்யாம் க்ருஹ்ய மைதிலீம்; ஸ்வாகதே நாபிநந்த்யைநா மாஸநே ஸோபவேசயத்; தாமாஸநகதாம் த்ருஷ்ட்வா ப்ரவிசந்தீம் ரஸாதலம் புஷ்ப வ்ருஷ்டிரவிச்சிந்நா திவ்யா ஸீதாமவாகிரத் - இப்படியாகச் சீதை சபதம் செய்து நின்ற நேரத்தில் வியப்பை அளிக்கவல்லதும், தெய்வீகமானதும், ஒப்பில்லாததும், பூமியில் இருந்து வெளிப்பட்டதும், எல்லையற்ற ஒளி மற்றும் சக்தி உள்ளதும், பாம்புகளின் தலைகளால் தாங்கப்பட்டதும், இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டதும் ஆகிய அழகான ஸிம்ஹாஸனம் ஒன்று பூமியில் இருந்து மேலே வந்தது; பூமி தேவியானவள் சீதையைத் தனது இரண்டு கைகளால் எடுத்துக்கொண்டு, இனிய சொற்களால் சீதையை மகிழவைத்து, அந்த ஸிம்ஹாஸனத்தில் அமரச்செய்தாள்; அந்த ஆசனத்தில் அமர்ந்தபடி சீதை பாதாளலோகம் சென்றாள்; இதனைக் கண்ட தேவலோகத்தில் இருந்து மலர் மழையானது இடைவிடாமல் அவள் மீது பொழிந்தது – என்பதற்கு ஏற்ப பூமியில் இருந்து ஒரு தெய்வீகமான ஸிம்ஹாஸனம் வெளிப்பட்டது. அதில் சீதையைப் பூமாதேவி நற்சொற்களைக் கூறியபடி இரண்டு கைகளாலும் எடுத்துக்கொண்டு சென்று அமர்த்தினாள். இப்படியாக ஆசனத்தில் அமர்ந்தவளாக பாதாளலோகத்தை அடைந்த சீதையைக் கண்டு தேவலோகத்தில் இருந்து புஷ்பமழையானது இடைவிடாமல் பொழிந்தது. இதன் மூலம் பிரட்டி தன்னுடைய அந்ந்யார்ஹத்வத்தை அனைவரும் அறியும் படியாகச் செய்தாள்.

**வ்யாக்யானம் -** ஆக இவ்வவதாரத்திலிவளுக்குச் சொல்லப்பட்ட விச்லேஷத்ரயத்துக்கும் ஹேது, இக்குணங்களை இப்படி வெளியிடுகையாய்த்து. இங்ஙனன்றாகில் அநபாயிநியாய் அகர்மவச்யையாயிருக்கிறவிவளுக்கு, கர்மவச்யர்க்குப்போலே, இப்படி பிரிவு வருகைக்கு யோக்யதையில்லையிறே. தன்னுடைய புருஷகாரத்வோபயோகியான குணங்களையும் புருஷகாரத்வத்தையும் ப்ரகாசிப்பிக்கைக்காக வந்த அவதாரமிறேயிது; ஆகையிறே யதுதாந்யதுதாஹரந்தி ஸீதாவதார முகமேத தமுஷ்ய யோக்யா என்று பட்டரருளிச்செய்தது. இப்படி சேதநர் பக்கலநுக்ரஹத்துக்குடலான க்ருபையையும் ஈச்வரன் பக்கலனுகி வசீகரிக்கைக்குடலான பாரதந்த்ர்யாதிகளையும் தானே வெளியிட்டது, சாஸ்த்ரங்களில் கேட்கிற மாத்ரமன்றிக்கே அநுஷ்டாந பர்யந்தமாகக்

காண்கையாலே தன்னைப் புருஷகாரமாகப் பற்றுவார்க்கு ருசி விச்வாஸங்களுறைக்கைக்குறுப்பாக.

**விளக்கம்** – இப்படியாகச் சீதை என்ற அவதாரத்தின் மூலம் இவளுக்காகக் கூறப்பட்ட மூன்று குணங்களையும் இவள் வெளிப்படுத்தினாள் என்றும், இந்த அவதாரத்தில் இவளுக்குக் கூறப்பட்ட இந்த மூன்று பிரிவுகளின் காரணம் இந்தக் குணங்களை வெளிப்படுத்தவே என்றும் அறியவேண்டும். இப்படிக் கொள்ளவில்லை என்றால் – எப்போதும் எம்பெருமானை விட்டுப் பிரியாமல் உள்ளவளுக்கு, கர்மங்களால் கட்டுப்படாமல் இருப்பவளுக்கு, கர்மத்தினால் கட்டுப்பட்டவர்கள் போன்று, இராமனைப் பிரிந்து சென்றதற்கு வேறு எந்தவிதமான காரணமும் கூற இயலாது அல்லவோ? சீதை என்ற அவதாரத்தின் காரணம் என்ன? தன்னுடைய புருஷகாரத்தன்மை எத்தகையது, இந்தப் புருஷகாரத்வம் வெளிப்பட உதவியாக இருப்பதற்கு ஏற்ற குணங்கள் எவை என்பவற்றை அனைவரும் அறிந்து கொள்ளும்படிச் செய்வதற்காகவே இந்த அவதாரம் எடுக்கப்பட்டது. இதனால்தான் ஸ்வாமி பராசரபட்டர் ஸ்ரீகுணரத்ன கோஸத்தில் (57) - யதுதாந்யதுதாஹரந்தி ஸீதாவதார முகமேத தமுஷ்ய யோக்யா - சீதை என்ற அவதாரமானது ஸ்ரீரங்கநாச்சியாராக அமர்ந்து அனைவருக்கும் புருஷகாரமாக நீ இருப்பதற்கு எடுத்துக் கொண்ட பயிற்சியே – என்றார். இப்படியாக சேதநர்களுக்கு அருள்வதற்குக் காரணமான க்ருபை, ஸர்வேச்வரனிடம் சென்று அவனைத் தன் வசப்பட வைப்பதற்குக் காரணமான பாரதந்த்ர்யம், அநந்யார்ஹத்வம் போன்றவற்றைத் தன் மூலமாகத் தானே ஏன் வெளியிட்டாள் என்ற கேள்வி எழலாம். இதன் காரணம், சாஸ்த்ரங்களில் தனது இந்தத் தன்மைகளைப் பற்றி மக்கள் படிக்கக்கூடும்; அத்துடன் நில்லாமல் அவர்கள் அந்தக் குணங்களை நேரிலே காணவும் வேண்டும்; இவ்விதம் செய்தால் மட்டுமே தன்னை ஒரு புருஷகாரமாகப் பற்றினவர்களுக்கு ருசியும் நம்பிக்கையும் ஏற்படும் என்று பிராட்டி எண்ணியதால் ஆகும்.

9. ஸம்ச்லேஷ விச்லேஷங்களிரண்டிலும் புருஷகாரத்வம் தோற்றும்.

**அவதாரிகை** - ஏவம் பூதகுண விசிஷ்டையானவிவளுடைய புருஷகாரத்வம் தோற்றுவதெங்கேயென்னவருளி செய்கிறார் மேல். ஸம்ச்லேஷ விச்லேஷங்களென்று தொடங்கி.

**விளக்கம்** – இத்தகைய குணங்களுடன் இவள் உள்ளாள். ஆனாலும் இவளுடைய புருஷகாரத்தன்மை வெளிப்படுவது எவ்விதம் என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – புருஷகாரத்வமாவது கடகத்வம்; அது இவளுக்கு அவனோடு கூடியிருக்குந் தசையிலும் நீங்கியிருக்குந் தசையிலும் ப்ரகாசிக்குமென்கை. ஸம்ச்லேஷ தசையிலே, இளையபெருமாள் காட்டுக்கெழுந்தருளுகிறபோது பெருமாள் நிறுத்திப் போவதாகத் தேடினவளவிலே என்னைக் கூடக் கொண்டு போக வேணுமென்று ஸ ப்ராதுச் சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந: ஸீதாமுவாசாதியசா: ராகவஞ்ச மஹாவ்ரதம் என்கிறபடியே சரணம் புகுகிறவளவிலும்;

**விளக்கம்** – (ஸம்ச்லேஷம் என்றால் சேர்தல், விச்லேக்ஷம் என்றால் பிரிதல்) புருஷகாரத்வம் என்பது சேர்த்து வைக்கும் தன்மை ஆகும். இத்தகைய தன்மை என்பது இவள் எம்பெருமானுடன் சேர்ந்துள்ளபோதும் பிரிந்துள்ளபோதும் வெளிப்படும். முதலில் இந்தத் தன்மை எம்பெருமானுடன் இவள் சேர்ந்துள்ளபோது எவ்விதம் வெளிப்படுகிறது என்று காணலாம். இராமன் கானகம் செல்கின்றபோது லக்ஷ்மணனை அயோத்தியிலேயே இருக்கும்படிக் கூறினான். அப்போது தன்னையும் கானகத்திற்கு அழைத்துச் செல்லவேண்டும் என்று லக்ஷ்மணன் விண்ணப்பித்தான். இதனை இராமாயணம் அயோத்யாகாண்டம் (31-2) – ஸ ப்ராதுச் சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந: ஸீதாமுவாசாதியசா: ராகவஞ்ச மஹாவ்ரதம் – மிகுந்த மேன்மை உடைய லக்ஷ்மணன் தனது தமையனாகிய இராமனின் திருவடிகளைக் இறுக்கப்பற்றிக் கொண்டு இராமனையும் சீதையையும் பார்த்துக் கூறினான் - என்றது. இதன் மூலம் லக்ஷ்மணன் இராமனை அண்டி நிற்கச் சீதையை பற்றினான் என்பது தெளிவு.

**வ்யாக்யானம்** - பஞ்சவடியிலேயெழுந்தருளினபோது நீரும் நிழலும் வாய்த்திருப்பதொரு ப்ரதேசத்தைப் பார்த்துப் பர்ணசாலையைச் சமையுமென்று பெருமாளருளிச்செய்ய, நந்தலையிலே ஸ்வாதந்த்ர்யத்தை வைத்த போதே பெருமாள் நம்மைக் கைவிட்டாரென்று விக்ருதராய் ஏவமுக்தஸ்து ராமேண லக்ஷ்மணஸ் ஸம்யதாஞ்ஜலி:, ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்தமிதம் வசந மப்ரவீத், பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷதம் ஸ்திதே, ஸ்வயந்து ருசிரே தேசே க்ரியதா மிதிமாம் வத என்கிறபடியே தம்முடைய பாரதந்த்ர்யத்தைப் பெறுகைக்காகக் கையுமஞ்ஜலியுமாய் நின்றபேஷிக்கிறவளுவிலும் பிராட்டியைப் புருஷகாரமாக முன்னிட்டுத் தம்மபேக்ஷிதம் பெறுகையாலும்;

**விளக்கம்** – அதன் பின்னர் அவர்கள் பஞ்சவடியில் எழுந்தருளியுள்ள காலத்தில் இராமன் லக்ஷ்மணனிடம், “நீர் மற்றும் நிழல் நிறைந்த ஓர் இடமாகப் பார்த்து நீ பர்ணசாலை அமைப்பாயாக” என்றான். இதனை கேட்ட லக்ஷ்மணன், ”இராமன் ஓர் இடம் கூறி, அந்த இடத்தில் பர்ணசாலை அமைப்பாய் என்று கட்டளை இடாமல், தனக்குச் சுதந்திரம் அளித்தானே” என்று அதிர்ந்தான். இதனால் தன்னை இராமன் கைவிட்டு விடுவான்

என்று எண்ணினான். உடனே அவன் இராமாயணம் ஆரண்யகாண்டம் (15-6) – ஏவமுக்தஸ்து ராமேண லக்ஷ்மணஸ் ஸம்யதாஞ்ஜலி:, ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்தமிதம் வசந மப்ரவீத், பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷதம் ஸ்திதே, ஸ்வயந்து ருசிரே தேசே க்ரியதா மிதிமாம் வத - இராமனால் இப்படியாகப் பணிக்கப்பட்ட லக்ஷ்மணன் தனது கைகளைக் குவித்தவனாய், சீதையின் முன்பாக நின்றபடி இராமனை நோக்கிப் பின்வருமாறு கூறினான், "இராமா! நீ எத்தனை ஆண்டுகள் இருந்தாலும் நான் உனக்கு மட்டுமே தொண்டு செய்தபடி இருப்பேன்; நீயே ஓர் அழகான இடமாகப் பார்த்து இந்த இடத்தில் பர்ணசாலை அமைக்கவேண்டும் என்று என்னிடம் கட்டளை இட வேண்டும்", என்று கூறினான். இப்படியாக அவன் தன்னுடைய பாரதந்த்ர்யத்தைப் பெறுவதற்காக குவித்த கைகளுடன் நின்றான். இதனை அவன் சீதையின் முன்னிலையில் அவளுடைய புருஷகாரத்வம் வேண்டியபடியே செய்தான்.

**வ்யாக்யானம்** - ஆஸுர ப்ரக்ருதியான ஜயந்தன் காகரூபத்தைக் கொண்டு வந்து ஜநநி பக்கலிலே அக்ருத்ய ப்ரவ்ருத்தனாக க: க்ரீடதி ஸரோஷேண பஞ்சவக்த்ரேண போகிநா என்று பெருமாள் அவன் மேலே சீறித் தலையை அறுப்பதாக ப்ரஹ்மாஸ்த்ரத்தை ப்ரயோகிக்க, ஸ பித்ராச பரித்யக்தஸ் ஸுரைச்ச ஸமஹர்ஷிபி, த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் கத: என்கிறபடியே எங்குஞ் சுற்றித் திரிந்தவிடத்திலும் ஒரு புகலிடம் இல்லாமையாலே போக்கற்றுச் சரணம் புக, ஸ தம் நிபதிதம் பூமௌ சரண்யச் சரணாகதம், வாதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத் என்றும், புரத: பதிதம் தேவீ தரண்யாம் வாயஸம் ததா தச்சிர: பாதயோஸ் தஸ்ய யோஜயாமஸ ஜாநகீ; தமுத்தாப்ய கரேணோத க்ருபாபீயுஷ ஸாகர: ரரக்ஷ ராமோ குணவாந் வாயஸம் தயயைக்ஷத என்றும் ஸ்ரீராமாயண பாத்ம புராணங்களில் சொல்லுகிறபடியே இவள் புருஷகாரமாகப் பெருமாள் ரக்ஷிக்கையாலும்;

**விளக்கம்** – அசுரத்தன்மை மிகுதியான ஜயந்தன் என்பவன் காகம் போன்று உருவம் கொண்டு தாயான சீதையிடம் வந்து தகாத செயல்களைச் செய்தான். இதனைக் கண்ட இராமன் இராமாயணம் ஸுந்தரகாண்டம் (38-26) – க: க்ரீடதி ஸரோஷேண பஞ்சவக்த்ரேண போகிநா - விரிந்த படங்களைக் கொண்டதும், சீற்றத்துடன் உள்ளதும் ஆகிய பாம்புடன் யாராவது விளையாடுவார்களா - என்பதற்கு ஏற்ப, அவன் மீது கோபம் கொண்டு, அவன் தலையை அறுப்பதற்காக ப்ரஹ்மாஸ்த்ரத்தைப் ப்ரயோகம் செய்தான். இராமாயணம் ஸுந்தரகாண்டம் (38-33) - ஸ பித்ராச பரித்யக்தஸ் ஸுரைச்ச ஸமஹர்ஷிபி, த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் கத: – தனது தாய் தந்தையர்கள், முனிவர்கள், தேவர்கள் உலகங்களிலும் திரிந்தான்; பின்னர் இறுதியாக இராமனிடமே சரணம் அடைந்தான் – என்றது. இப்படியாகத் தான் சுற்றுத் திரிந்த எந்த

இடத்திலும் எந்தவிதமான அடைக்கலமும் கிட்டப்பெறாமையால், வேறு போக்கிடம் இல்லாமல் இராமன் திருவடிகளில் சரணம் புகுந்தான். கீழே உள்ள வரிகளை காண்க:

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் (38-34) – ஸ தம் நிபதிதம் பூமௌ சரண்யச் சரணாகதம், வாதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத் – தரையில் விழுந்து கிடப்பவனும், அடைக்கலம் புகுந்தவனும் ஆகிய அந்தக் காகாசுரனை, அவன் அடைக்கலம் புகத் தகுதி பெற்றுவிட்டான் என்பதால், அனைத்தையும் காக்கும் இராமன், தனது க்ருபை காரணமாக அவனையும் காப்பாற்றினான்.

- பாத்மபுராணம் – புரத: பதிதம் தேவீ தரண்யாம் வாயஸம் ததா தச்சிர: பாதயோஸ் தஸ்ய யோஜயாமஸ ஜாநகீ; தமுத்தாப்ய கரேணோத க்ருபாபீயுஷ ஸாகர: ரரக்ஷ ராமோ குணவாந் வாயஸம் தயயைக்ஷத - தரையில் விழுந்த அந்த காகத்தின் தலையை எடுத்து இராமனின் திருவடிகளில் சேரும்படியாக சீதை வைத்தாள். அதன் பின்னர் கருணைக்கடலும், அமிர்தக்கடலும், உயர்ந்த குணங்கள் நிறையப் பெற்ற கடலும் போன்ற இராமன் அந்தக் காகத்தைத் தனது கைகளால் எடுத்துக் காபாற்றினான். அந்தக் காகத்தைத் தனது கண்களால் குளிரப் பார்த்தான்.

**வ்யாக்யானம்** - விச்லேஷ தசையிலே இஹ ஸந்தோ நவா ஸந்தி ஸதோவா நாநுவர்த்த ஸே ததாஹி விபரீதா தே புத்தி ராசார வர்ஜிதா இத்யாதியாலே விபரீத புத்தியான ராவணனைப் பெருமாள் திருவடிகளிலே சேர்க்கைக்கு விரகு பார்க்கையாலும்;

**விளக்கம்** – அடுத்து பிராட்டி எம்பெருமானைப் பிரிந்துள்ள நிலையில் அவளது புருஷகாரத்தன்மை எவ்விதம் வெளிப்படுகிறது என்று கண்போம். இராமாயணம் ஸுந்தரகாண்டம் (21-9) - இஹ ஸந்தோ நவா ஸந்தி ஸதோவா நாநுவர்த்த ஸே ததாஹி விபரீதா தே புத்தி ராசார வர்ஜிதா - இந்த இடத்தில் சான்றோர்கள் என்று கூறும்படியாக யாரும் உள்ளார்களா? இல்லையா? அப்படி உள்ளார்கள் என்றால் நீ அவர்கள் கூறும் சொற்களைக் கேட்கவில்லை; இதனால் அல்லவோ உனது அறிவு தவறான பாதையில் செல்கிறது? சான்றோர்கள் மார்க்கத்தில் உனது அறிவு செல்லாமல் உள்ளது - என்று இராவணனிடம் கூறினாள். இப்படியாக விபரீதமான அறிவு கொண்ட இராவணனை இராமனின் திருவடிகளில் சேர்ப்பதற்கான வழியை ஆராய்ந்தாள்.

**வ்யாக்யானம்** - ராவணவதாநந்தரம் ராக்ஷஸிகளை சித்ரவதம் பண்ணுவதாக உத்புக்தனாய் நிற்கிற திருவடியைக் குறித்து, பாபாநாம்வா சுபாநாம்வா வதார்ஹாணாம் ப்லவங்கம கார்யம் கருண மார்யேண ந கச்சித் நாபராத்யதி என்று அவனிரங்கத்தக்க

வார்த்தைகளைச் சொல்லி அவர்களபராதங்களைப் பொறுப்பிக்கையாலும் உபய தசையிலும் இவள் புருஷகாரத்வம் தோற்றா நின்றதிறே.

**விளக்கம்** – இராவணன் அழிந்த பின்னர் அங்கிருந்த அரக்கியர்களைச் சித்ரவதை செய்வதில் ஆர்வம் கொண்டிருந்த அனுமனிடம், பாபாநாம்வா சுபாநாம்வா வதார்ஹாணாம் ப்லவங்கம கார்யம் கருண மார்யேண ந கச்சித் நாபராத்யதி - வானரமே! உனது எண்ணத்தின்படி இவர்கள் தகாத செயல்கள் செய்தவர்கள்; எனது எண்ணத்தின் படி இவர்கள் நல்லதே செய்தவர்கள்; இவர்கள் உன்னால் கொல்லத் தகுந்தவர்கள் என்று எண்ணுகிறாய்; இப்படிப்பட்ட இவர்கள் விஷயத்தில் பெரியவனான உன்னால் கருணை செய்யப்பட வேண்டும்; குற்றம் செய்யாதவன் என்று யாரும் இல்லை - என்று கூறினாள். இதன் மூலம் அரக்கியர்கள் மீது அனுமன் இரக்கம் கொள்ளும்படியும், அவர்கள் அபராதங்களைப் பொறுத்துக் கொள்ளும்படியும் செய்ததால் இவளது புருஷகாரம் வெளிப்படுகிறது.

**வ்யாக்யானம்** - திருவடி, ராக்ஷஸிகளை அபராதாநுகுணம் தண்டிக்கும்படி காட்டித்தர வேணுமென்றவளவில் பிராட்டியவனுடனே மன்றாடி ரக்ஷித்தவித்தனையன்றோ. மாதர் மைதிலி ராக்ஷஸீஸ் த்வயி ததைவார்த்ராபராதாஸ் த்வயா ரக்ஷந்த்யா பவநாத்மஜாத் லகுதரா ராமஸ்ய கோஷ்டீ க்ருதா காகம் தஞ்ச விபீஷணம் சரணமித்யுக்தி க்ஷமௌ ரக்ஷதஸ் ஸா நஸ் ஸந்த்ரமஹாகஸஸ் ஸுகயது க்ஷாந்தீ ஸ்தவாகஸ்மிகீ என்று பவநாத்மஜன் நிமித்தமாக ரக்ஷித்தாளென்றன்றோ பட்டருமருளிச்செய்தது; அவ்விடத்தில் புருஷீகரித்தமை எங்கனேயென்னில், பலாத்காரத்தாலன்றிக்கே அநுஸாரத்தாலே அபராதங்களைப் பொறுப்பிக்கையாலே புருஷகாரத்வமென்கிறது; திருவடியைப் பொறுப்பிக்குமவள் தன் சொல்வழி வருமவனைப் பொறுப்பிக்கச் சொல்லவேண்டாவிறே என்று திருவடி விஷயமாகவும் புருஷீகரித்தமையையருளிச் செய்தாரிறே இவர்தானே; ஆகையாலிரண்டு தசையிலும் இவள் புருஷகாரத்வம் தோற்று மென்கிற மாத்ரத்தைச் சொல்லுகிறவிவ்வாக்யத்திலிதுவும் கூட்டக் குறையில்லை.

**விளக்கம்** - அந்த அரக்கியர்களைத் தண்டிக்கவேண்டும் என்று அனுமன் கூறியவுடன் சீதை அவனுடன் மன்றாடி அல்லவோ அவர்களைக் காப்பாற்றினாள்? இதனால் இங்கு புருஷகாரத்வம் வெளிப்படவில்லையே என்ற சந்தேகம் எழலாம். இதற்கான விடையை அருளிச்செய்கிறார். ஸ்ரீகுணரத்நகோசம் (50) - மாதர் மைதிலி ராக்ஷஸீஸ் த்வயி ததைவார்த்ராபராதாஸ் த்வயா ரக்ஷந்த்யா பவநாத்மஜாத் லகுதரா ராமஸ்ய கோஷ்டீ க்ருதா காகம் தஞ்ச விபீஷணம் சரணமித்யுக்தி க்ஷமௌ ரக்ஷதஸ் ஸா நஸ் ஸந்த்ரமஹாகஸஸ் ஸுகயது க்ஷாந்தீ ஸ்தவாகஸ்மிகீ - தாயே! இராமனின் நாயகியே! ஸ்ரீரங்கநாயகீ! உனது நாயகனான இராமன் தன்னைச் சரணம் என்று புகுந்த

விபீஷணனையும், காகம் ஒன்றையும் மட்டுமே காப்பாற்றினான்; ஆனால் நீயோ குற்றங்கள் பல புரிந்த அரக்கிகளை, அவர்கள் உன்னிடம் சரணம் புகாமல் இருந்தபோதிலும் காப்பாற்றினாய்; இதனால் இராமனின் புகழ் சற்றே தாழ்ந்தது; ஆக இப்படியாகத் தனக்குத் துன்பம் விளைவிப்பவர்களையும் காக்கும் உனது பொறுமை என்ற குணமானது பலவிதமான குற்றங்கள் கொண்ட என் மீது சற்றே படவேண்டும் – இப்படியாக வாயுவின் புத்திரனாகிய அனுமன் பொருட்டு பிராட்டி காப்பாற்றினாள் என்று அல்லவோ பட்டர் அருளிச்செய்தார்? இங்கு இவளது புருஷகாரத்தன்மை எப்படி வெளிப்பட்டது? பலாத்காரத்தால் அல்லாமல், அவன் வழியே சென்று குற்றங்களை இவள் பொறுக்கும்படியாகச் செய்தாள் என்பதன் மூலம் வெளிப்பட்டது. முமுக்ஷுப்படி (129) – திருவடியைப் பொறுப்பிக்குமவள் தன் சொல்வழி வருமவனைப் பொறுப்பிக்கச் சொல்லவேண்டாவிறே – என்றது காண்க. இப்படியாக அனுமன் விஷயமாகவும் புருஷகாரத்தைச் செய்த தன்மையை இவர் தானே அருளிச்செய்தார். எனவே எம்பெருமனைப் பிரிந்த நிலை, சேர்ந்த நிலை ஆகிய இரண்டிலும் புருஷகாரத்தன்மை தோன்றுவதைக் கூறும் இந்தச் சூர்ணை மூலம் அனுமன் விஷயத்திலும் புருஷகாரம் செய்ததைக் கூறுவதைக் குறையில்லை.

10. ஸம்ச்லேஷ தசையிலீச்வரனைத் திருத்தும்; விச்லேஷ தசையில் சேதநனைத் திருத்தும்.

**அவதாரிகை** - இவ்வுபயதசையிலும் இவள் புருஷீகரிக்கும் ப்ரகாரமென்னென்ன அருளிச் செய்கிறார் (ஸம்ச்லேஷ தசையிலென்று தொடங்கி).

**விளக்கம்** - இந்த இரண்டு நிலைகளிலும் (எம்பெருமானுடன் பெரியபிராட்டி கூடியுள்ள நிலை, பிரிந்துள்ள நிலை) இவள் புருஷகாரத்தை எவ்விதம் வெளிப்படுத்துகிறாள் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஈச்வரனைத் திருத்துகையாவது, அபராதத்தையே பார்த்து “க்ஷிபாமி”, “ந க்ஷமாமி” என்றிருக்குமிருப்பைக் குலைத்து, அங்கீகார உந்முகனாக்குகை; சேதனனைத் திருத்துகையாவது - அக்ருத்ய கரணாதிசீலனாய் பகவத் விமுகனாய்த் திரிகிற ஆகாரத்தைக் குலைத்து, ஆச்ரயணோந்முகனாக்குகை. ஸம்லேஷ தசையில் இளைய பெருமாளுக்காக ஈச்வர விஷயத்திலும், விச்லேஷ தசையில் ராக்ஷஸிகளுக்காகத் திருவடி விஷயத்திலும் புருஷீகரித்தமை உபயதசையிலும் புருஷகாரத்வம் தோற்றுமென்கிற மாத்ரத்துக்குக் கூட்டிக்கொள்ளலாயிருந்ததாகிலும், ப்ராகரணிகமானவர்த்தம் ஸம்ஸாரி சேதநனையுமீச்வரனையும் சேரவிடுகையாகையாலே, இவ்வாக்யத்துக்கிப்படியே அர்த்தமாகக் கடவது. ஆகையால் ஈச்வரனோடு தான் கூடியிருக்கும் தசையில், சேதநன் ஆச்ரயணோந்முகனாய் வந்திருக்கச்செய்தே, பூர்வாபராதத்தைப் பார்த்து ஈச்வர னங்கீகரியாதிருக்குமளவில், அவன் ஸ்வாதந்த்ர்யத்தைத் தவிர்த்து க்ருபாதி குணங்களைக்

கிளப்பி இவனையங்கீகரிக்கும்படியாக்குகையும்; பிரிந்திருக்கும் தசையில், ஈச்வர னங்கீகாரோந்முகனாய் வந்திருக்கச்செய்தே, இச்சேதநன் கர்மாநுகுணமாக விமுகனாயிருக்குமளவில் இவன் வைமுக்க்யத்தை மாற்றி ருசியை விளைப்பித்து ஆச்ரயணோன்முகனாக்குகையும் இவளிரண்டு தலையையும் திருத்துகையாவது. ஆகவிப்படி, அங்கீகார விரோதியான ஸ்வாதந்த்ர்யத்தை மாற்றி, அங்கீகாரத்துக்குடலான க்ருபாதிகளை உத்பவிப்பிக்கையாலும், ஆச்ரயண விரோதியான வைமுக்க்யத்தை மாற்றி, ஆச்ரயண ருச்யாதிகளை ஜநிப்பிக்கையாலும், ச்ரு ஹிம்ஸாயாம் என்கிற தாதுவிலும், ச்ரு விஸ்தாரே என்கிற தாதுவிலும் நிஷ்பந்நமான ஸ்ரீசப்தத்திலும் ச்ருணாதி, ச்ரூணாதி என்கிற வ்யத்பத்தி த்வயார்த்தமும் இவ்விடத்திலே தோற்றுகிறது; ச்ருணாதி நிகிலாந் தோஷாந் ச்ருணாதி ச குணைர் ஜகத் என்று இவ்யுத்பத்தி த்வயமும் சேதநபரமாய்த் தோற்றிற்றேயாகிலும் (ஈச்வரனைத் திருத்தும்) என்கிறவிடத்திலும் இந்த ந்யாயம் தோற்றுகையாலே இப்படி சொல்லக் குறையில்லை.

**விளக்கம்** – ஈச்வரனைத் திருத்துதல் என்பது ஜீவன்கள் செய்கின்ற அபராதங்களை (குற்றங்கள்) பார்த்த ஸர்வேச்வரன் க்ஷீபாமி - அசுரப் பிறவிகளில் தள்ளிவிடுகிறேன் – என்றும், ந க்ஷமாமி - என்னால் பொறுக்க இயலாது – என்றும் கோபம் கொள்கிறான். அவனது இந்த நிலையை மாற்றி, ஜீவன்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் நோக்கமுடையவனாக மாற்றுவதாகும். சேதனனைத் திருத்துவது என்பது – செய்ய வேண்டியதைச் செய்யாமல் இருப்பது, செய்யக்கூடாதவற்றைச் செய்தபடி இருப்பது, எம்பெருமானிடம் ஈடுபாடு இல்லாமல் இருப்பது என்று திரியும் ஜீவனைத் திருத்தி எம்பெருமானை அண்டுவதன் மீது பற்று கொண்டவனாக மாற்றுதல் ஆகும்.

அடுத்து எம்பெருமானுடன் கூடியுள்ள நிலையில் இலட்சுமணனுக்காக ஈச்வர விஷயத்திலும், பிரிந்துள்ள நிலையில் அரக்கிகளுக்காக அனுமன் விஷயத்திலும் இவள் புருஷகாரம் செய்ததை “இரண்டு நிலையிலும் புருஷகாரத்வம் தோன்றும்” என்பதுடன் சேர்த்துக் கொள்ளலாம். ஆயினும் இந்த இடத்தில் கூற வேண்டிய பொருள் – இந்த உலக மனிதர்களையும் ஸர்வேச்வரனையும் சேர்த்துவிடுதல் – என்பதே ஆகும். ஆகவே இந்தச் சூத்திரத்திற்கு மேலே உள்ள பொருளைக் காட்டிலும் இப்போது கூறப்பட்ட பொருளே பொருத்தம் ஆகும்.

ஆகவே, தான் ஈச்வரனுடன் சேர்ந்துள்ளபோது இவள் செய்வது என்ன? எம்பெருமானைப் பற்றுவதற்கு மக்கள் மிகுந்த ஆர்வம் கொண்டு அவனை வந்தடைகின்றனர். அப்போது அவர்களது குற்றங்களைக் கண்ட எம்பெருமான் அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கக்கூடும். அப்போது அவனுடைய இந்த ஸ்வதந்திரத் தன்மையை மாற்றி, அந்த மனிதர்கள் மீது கருணை முதலானவற்றை அவன் வெளிப்படுத்தும்படிச் செய்து, அவர்களை அவன் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்கிறான்.

அவனைப் பிரிந்துள்ள நிலையில் இவள் செய்வது என்ன? மக்களை ஏற்றுக் கொள்வதில் எம்பெருமான் மிகுந்த ஆசையுடன் இருக்கக்கூடும். ஆனால் தங்களது முன்வினைப் பயன்களின் காரணமாக அவர்கள் எம்பெருமானிடம் வெறுப்புடன் இருக்கக்கூடும். அந்த நேரத்தில் அந்த வெறுப்பை மாற்றி, அவன் மீது ருசியை உண்டாக்கி, அவனைப் பற்றுவதில் விருப்பம் உள்ளவர்களாக மாற்றிவிடுகிறாள். இப்படியாக ஸர்வேச்வரன் ஜீவங்களை ஏற்றுக் கொள்வதில் தடையாக இருக்கக்கூடிய எம்பெருமானின் ஸ்வதந்த்ரத்தை மாற்றுவதும், அவன் அவர்களை ஏற்றுக்கொள்ள உதவியாக உள்ள கருணை முதலானவற்றை அவனுக்கு ஏற்படும்படிச் செய்வதும், எம்பெருமானை அடைவதற்கு ஜீவனுக்குத் தடையாக உள்ள வெறுப்பை மாற்றுவதும், அவர்களுக்கு அவன் மீது பற்றுதல் ஏற்படும்படிச் செய்வதும் நிகழ்வதால் – ச்ருஹிம்சாயாம் என்னும் தாது மற்றும் ச்ருவிஸ்தாரே என்னும் தாது ஆகிய இரண்டிலும் உண்டான “ஸ்ரீ” என்ற சொல்லில் ச்ருணாதி (நாசம் செய்கிறாள்) மற்றும் ச்ரூணாதி (விரிவுபடுத்துகிறான்) என்னும் இரண்டு பொருள்களும் தோன்றுகின்றன.

அதாவது ச்ருணாதி – அனைத்துவிதமான குற்றங்களையும் நீக்குகிறாள்; இந்த உலகத்தைத் தனது குணங்கள் கொண்டு திருத்தி விரிவுபடுத்துகிறாள் (இங்கு குற்றம் என்பது: ஸர்வேச்வரனைப் பொறுத்தவரை ஸ்வதந்த்ரமாக இருத்தல் - இதனை இவள் மாற்றுகிறாள்; ஜீவனைப் பொறுத்தவரையில் எம்பெருமானை அண்டாமல் வெறுப்புடன் இருத்தல் ஆகும். மேலும் விரிவுபடுத்துகிறாள் என்பது எம்பெருமானின் கருணையை விரிவுபடுத்தல் மற்றும் ஜீவன்களுக்கு எம்பெருமான் மீது உள்ள ருசியை விரிவுபடுத்துதல் என்பதாகும்). இந்த இரண்டும் ஜீவன் விஷயத்தில் தோன்றினாலும் இவை எம்பெருமான் விஷயத்திலும் இவளால் நடத்தப்படுகின்றன என்பதைக் காணலாம்.

11. இருவரையும் திருத்துவதும் உபதேசத்தாலே.

**அவதாரிகை** – இருவரையும் திருத்துவதெவ்வழியாலேயென்னுமாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (இருவரையுமென்று தொடங்கி).

**விளக்கம்** - இருவரையும் (ஈச்வரன், ஜீவன்) எவ்விதம் திருத்துகிறாள் என்பதை இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஈச்வரனைத் திருத்துவது இச்சேதநனுடைய அபராதங்களைக் கணக்கிட்டு நீரிப்படி தள்ளிக் கதவடைத்தால் இவனுக்கு வேறொரு புகலுண்டோ, உமக்குமிவனுக்கு முண்டான பந்தவிசேஷத்தைப் பார்த்தால் உறவேல் நமக்கிங்கொழிக்கவொழியாது என்கிறபடியே குடநீர் வழித்தாலும் போகாததொன்றன்றோ, ஸ்வம்மானவிவனை

லபிக்கை ஸ்வாமியானவும்முடைய பேறாயன்றோவிருப்பது, எதிர் சூழல்புக்குத் திரிகிற வுமக்கு நான் சொல்லவேணுமோ, ரக்ஷணாஸாபேக்ஷனாய் வந்துவிவனை ரக்ஷியாதபோது உம்முடைய ஸர்வரக்ஷகத்வம் விகலமாகாதோ? அநாதிகாலம் நம்முடைய ஆஜ்ஞாதிலங்கநம்பண்ணி நம்முடைய சீற்றத்துக்கிலக்காய்ப் போந்தவிவனை அபராதோசித தண்டம் பண்ணாதே அத்தைப்பொறுத்து அங்கீகரித்தால் சாஸ்த்ர மர்யாதை குலையாதோவென்றன்றோ திருவுள்ளத்திலோடுகிறது, இவனை ரக்ஷியாதே அபராதாநுகுணமாக நியமித்தால் உம்முடைய க்ருபாதி குணங்கள் ஜீவிக்கும்படியென்? அவை ஜீவித்ததாவது இவனை ரக்ஷித்தாலன்றோ, நியமியாதபோது சாஸ்த்ரம் ஜீவியாது, ரஷியாதபோது க்ருபாதிகள் ஜீவியாது, என் செய்வோமென்ன வேண்டா, சாஸ்த்ரத்தை விமுகர் விஷயமாக்கி க்ருபாதிகளை அபிமுகர் விஷயமாக்கினால் இரண்டும் ஜீவிக்கும், ஆனபின்பிவனை ரக்ஷித்தருளீரென்னுமுபதேசத்தாலே. இவ்வுபதேச க்ரமம் இவர் தாமருளிச்செய்த பரந்தபடியிலும், ஆச்சான் பிள்ளையருளிச்செய்த பரந்த ரஹஸ்யத்திலும் விஸ்தரேண காணலாம். பிதேவ த்வத் ப்ரேயத் ஜநநி பரிபூர்ணாகஸி ஜநே ஹித ஸ்ரோதோ வ்ருத்த்யா பவதிச சுதாசித் கலுஷதீ: கிமேதந் நிர்தோஷ: க இஹ ஜகதீதி த்வமுசிதைருபாயைர் விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா ததஸி ந: என்று, அபராத பரிபூர்ண சேதந விஷயமாக ஹிதபரனான ஸர்வேச்வரன் திருவுள்ளம் சீறும்படியையும், அத்தசையில் இச்சீற்றத்துக்கடியென்னென்பது - இவன் தீரக்கழியச்செய்தவபராத மென்றவன் சொன்னால் மணற்சோற்றிலே கல்லாராய்வாருண்டோ? இந்த ஜகத்தில் அபராதமற்றிருப்பாரார்? என்பதாய், உசிதோபாயங்களாலே, அபராதங்களை மறப்பித்து, பிராட்டி சேர்த்தருளும்படியையும் அருளிச்செய்கையாலே, உபதேசத்தாலே ஈச்வரனைத் திருத்தும்படி ஸங்கரஹேண பட்டரும் அருளிச்செய்தாரிறே. அவதார தசையிலேயும் ப்ராணஸம்சயமாபந்நம் த்ருஷ்ட்வா ஸீதாத வாயஸம், த்ராஹி த்ராஹீதி பர்த்தாரமுவாச தயயா விபும் என்று வாசாமகோசரமான மஹாபாரதத்தைப் பண்ணின காகத்தைத் தலையறுப்பதாக விட்ட ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கொரு கண்ணழிவு கற்பித்துப் பெருமாள் ரக்ஷித்தருளிற்றும் இவளுபதேசத்தாலேயென்னுமிடம், பாத்ம புராணத்திலே சொல்லப்பட்டதிறே. இனி சேதநனைத் திருத்துவது, உன்னபராதத்தின் கனத்தைப் பார்த்தால் உனக்கோரிடத்தில் காலூன்றவிடமில்லை, ஈச்வரனாவான் நிரங்குச ஸ்வதந்த்ரனாகையாலே அபராதங்களைப் பத்தும் பத்தாகக் கணக்கிட்டு அறுத்தறுத்துத் தீத்தாநிற்கும். இவ்வநர்த்தத்தைத் தப்பவேண்டில் அவன் திருவடிகளிலே தலை சாய்க்கையொழிய வேறொரு வழியில்லை. அபராத பரிபூர்ணனானவென்னை யவனங்கீகரிக்குமோ தண்டியானோவென்று அஞ்சவேண்டா. ஆபிமுக்ய்யமாத்தரத்திலே அகிலாபராதங்களையும் பொறுக்கைக்கும் போக்யமாகக் கொள்ளுகைக்கும் ஈடான குணங்களாலே புஷ்கலனென்று லோகப்ரஸித்தனாயிருப்பானெருவன். ஆனபின்பு நீ ஸுகமேயிருக்க வேணுமாகிலவனை ஆச்ரயிக்கப் பார் - என்றும் பரம ஹிதோபதேசத்தாலே; அப்படி எங்கே கண்டோமென்னில், பாபிஷ்டனாய் வழிகெட நடந்து திரிகிற ராவணனைக் குறித்து மித்ர மௌபயிகம் கர்த்தும் ராம: ஸ்தாநம் பரீப்ஸதா வதஞ்சா நிச்சதா கோரம் த்வயாஸௌ புருஷர்ஷப: விதிதஸ் ஸஹி தர்மஜ்ஞச் சரணாகத

வத்ஸல: தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிது மிச்சஸி என்று பெருமாளோடே உறவு பண்ணுகைகாணுனக்கு ப்ராப்தம், அது செய்யப் பார்த்திலையாகில் வழியடிப்பார்க்கும் தரையில் கால் பாவி நின்று வழியடிக்கவேணுமே, உனக்கோரிருப்பிடம் வேண்டிருந்தாயாகிலும் அவரைப் பற்றவேணும். அவரதல்லாததோரு ஸ்தலமில்லை காண், எளிமையாக எதிரிகாலிலே குனிந்து இவ்விருப்பிருப்பதிற்காட்டில் பட்டுப்போக வமையுமென்றிருந்தாயோ, உன்னை சித்ரவதம் பண்ணாமல் நற்கொலையாகக் கொல்லும் போதுமவரைப் பற்ற வேணுங்காண், நான் பண்ணின அபராதத்துக்கு என்னையவர் கைக்கொள்வரோவென்றிருக்கவேண்டா, ஆபிமுக்ய்யம் பண்ணினால் முன்பு செய்த வபராதத்தைப் பார்த்துச்சீறுமந்த புன்மையவர்பக்கலில்லை காண், அவர் புருஷோத்தமர் காண், சரணாகதி பரமதர்மமென்றறியுமவராய் சரணாகததோஷம் பாராத வத்ஸலராக வெல்லாரும் அறியும்படிகாண் பெருமாளிருப்பது. நீ ஜீவிக்கவேணுமென்று இச்சித்தாயாகில் அவரோடுனக்குறவு உண்டாகவேணுமென்று இப்படியச்சமுறுத்தி யுபதேசித்தாளிறே; அவன் திருந்தாதொழிந்தது இவளுடைய உபதேசக்குறையன்றே, அவனுடைய பாபப்ராசுர்யமிறே. இப்படி உபயரையுமுபதேசத்தாலேமென்கையாலே ச்ரு ச்ரவணே என்கிற தாதுவிலே நிஷ்பந்நமான ஸ்ரீ சப்தத்தில் ச்ருணோதி, ச்ராவயதி என்கிற வ்யுத்பத்திகளில் வைத்துக்கொண்டு ச்ராவயதி என்கிற வ்யுத்பத்த்யர்த்தம் சொல்லப்பட்டது; ச்ராவயதி என்கிறது ஈச்வர விஷயமாகவே பூர்வர்கள் க்ரந்தங்களில் பலவற்றிலும் காணப்பட்டதாகிலும் அதவா விமுகாநாமபி பகவதாச்ரயணோபதேச: ச்ராவயித்ர்த்வம்; விதித்தஸ் ஸஹி தர்மஜ்ஞச் சரணாகத வத்ஸல: தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிது மிச்சஸி, இதி ராவணம் ப்ரத்யுபதேசாத் என்று தத்த்வதீபத்திலே சேதந விஷயமாகவும் ஜீயரருளிச் செய்கையாலே, இவ்விடத்திலும் சேதந விஷயமாக்வும் சொல்லக் குறைவில்லை.

**விளக்கம் -** முதலில் ஈச்வரனை எவ்விதம் திருத்துகிறாள் என்று காண்போம். இவள் எம்பெருமானிடம் பின்வருமாறு கூறுகிறாள். இவனுடைய குற்றங்களை இப்படி ஆராய்ந்து பார்த்து, அவனைத் தள்ளி கதவை அடைத்தால், அவனுக்கு வேறு புகல் இடம் ஏது? உமக்கும் இவனுக்கும் உள்ள உறவுமுறை மிகவும் உன்னதமானது. திருப்பாவை (28) - உறவேல் நமக்கிங்கொழிக்கவொழியாது – என்பதற்கு ஏற்ப நீவீர் தள்ளினாலும் அது மறையாது அல்லவோ? உமது உடைமையாக உள்ள இவனை நீவிர் அடைதல் என்பது உமது எஜமானத்தன்மை மேலும் வெளிப்பட ஒரு வாய்ப்பாக உள்ளது அல்லவோ? திருவாய்மொழி (2-7-6) – எதிர்சூழல்புக்கு – என்னும்படியாக உள்ள உமக்கு நான் இவற்றை எடுத்துக் கூறுவும் வேண்டுமா? காப்பாற்ற வேண்டும் என்று உம்மிடம் வந்த இவனைக் காப்பாற்றாமல் விட்டால், “நீவிர் அனைத்தையும் காப்பவன்” என்ற பெயர் கெட்டுவிடாதோ? நீவிர் உமது எண்ணத்தில், ”எல்லையற்ற காலமாக எனது ஆணைகளை மீறி இவன் நடந்துள்ளான். எனது கோபத்திற்கு இவன் இலக்காகி உள்ளான். இவனை இவனது குற்றங்களுக்கு ஏற்பத் தண்டித்தே ஆக வேண்டும். இவனுடைய குற்றங்களை மன்னித்து இவனை ஏற்றுக்கொண்டால், சாஸ்த்ரங்களுக்கு மக்கள் வைத்துள்ள மரியாதை நீங்கிவிடும்”, என்று எண்ணுகிறீர் அல்லவா? நீவிர்

இப்படியாக எண்ணி இவனைக் காப்பாற்றாமல் தண்டித்தால் உம்முடைய க்ருபை முதலான குணங்கள் அதன் பின்னர் உம்மிடம் எவ்விதம் காணப்படும்? இவனைக் காப்பாற்றினால் அல்லவோ அந்தக் குணங்கள் ஓங்கி நிற்கும்? "இந்த ஜீவனைக் (தவறு செய்தவன்) காப்பாற்றினால் எனது கருணை முதலான குணங்கள் பிழைக்கும், இவனைக் காப்பற்றாமல் தண்டித்தால் மட்டுமே சாஸ்த்ரங்கள் பிழைக்கும். ஆக என்ன செய்வது?", என்று நீவிர் சிந்திக்கவேண்டாம். உம்மிடமே ஈடுபாடு இல்லாதவர்கள் விஷயத்தில் சாஸ்த்ரங்களின்படி நடந்துகொண்டு, ஈடுபாடு உள்ளவர்களிடம் கருணை முதலான குணங்களைக் காண்பித்து நடக்கலாமே! இதனால் இரண்டுமே பிழைத்துவிடும் அல்லவோ? ஆகவே இவனை நீவிர் காப்பீராக - என்று எம்பெருமானை உபதேசம் மூலமாகத் திருத்துகிறாள்.

இத்தகைய உபதேசத்தை இவர் (ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர்) அருளிச்செய்த பரந்தபடியிலும், ஸ்வாமி ஆச்சான்பிள்ளை அருளிச்செய்த பரந்த ரஹஸ்யத்திலும் மிகவும் விரிவாகக் காணலாம். இதே கருத்தை ஸ்வாமி பராசரபட்டர் எவ்விதம் அருளிச்செய்தார் எனக் காண்போம். கீழே உள்ள ஸ்ரீகுணரத்னகோஸத்தின் வரிகளைக் காண்க (52):

> பிதா இவ த்வத் ப்ரேயாந் ஜநநி பரிபூர்ணாகஸி ஜநே
> ஹித ஸ்ரோதோ வ்ருத்யா பவதி ச கதாசித் கலுஷ தீ:
> கிம் ஏதத் நிர்தோஷ: க இஹ ஜகதி இதி த்வம் உசிதை:
> உபாயை: விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா தத் அஸி ந:

இதன் பொருள் - அனைவருக்கும் தாயாக இருப்பவளே! ஸ்ரீரங்கநாயகி! உனது அன்புக் கணவனான ஸ்ரீரங்கநாதன், குற்றங்கள் புரிகின்ற இந்த உலகில் உள்ள மக்களிடம், அவர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு, ஒரு தகப்பன் போல், அவர்கள் மீது கோபம் கொள்வான். அது போன்ற நேரங்களில் நீ அவனிடம், "என்ன செயல் நீங்கள் புரிகிறீர்கள்? இந்த உலகத்தில் குற்றம் செய்யாதவர் யார்?", என்று இதமாகப் பேசுகிறாய். இதன் மூலம் அவன் எங்கள் குற்றங்களை மறக்கும்படிச் செய்கிறாய். இதன் காரணமாக எங்கள் தாய் ஸ்தானத்தில் நீயே உள்ளாய் – என்பதாகும்.

இதன் மூலம் நன்மையை மட்டுமே எண்ணுகின்ற ஸர்வேச்வரன் குற்றங்கள் செய்யும் ஜீவன் விஷயத்தில் எவ்விதம் கோபம் கொள்கிறான் என்றும், அந்தச் சீற்றத்தின் காரணம் எம்பெருமான், "இந்த ஜீவன் இத்தகைய அபராதம் செய்தான்", என்று கூறக்கூடும் என்றும் உணர்த்தினார். ஈச்வரனின் சொற்களைக் கேட்ட பிராட்டி, "மணற்சோற்றில் கல் உள்ளதா என்று யாரேனும் ஆராய்ச்சி செய்வார்களா? இந்த உலகத்தில் தவறு செய்யாத மனிதர்கள் யாரேனும் உள்ளனரா?", என்று தனது சாமர்த்தியமான உபாயங்கள் மூலம்

ஜீவன் செய்யும் குற்றங்களை மறக்கும்படிச் செய்கிறாள். இப்படியாக ஜீவனை எம்பெருமானுடன் சேர்த்து வைக்க பிராட்டி செய்யும் செயல்களை பட்டர் அருளிச்செய்கிறார். இதன் மூலம் உபதேசங்கள் வாயிலாக ஈச்வரனை எவ்விதம் பிராட்டி திருத்துகிறாள் என்பதைச் சுருக்கமாக பட்டர் அருளிச்செய்தார்.

அவன் இராமனாக அவதரித்தபோது - ப்ராணஸம்சயமாபந்நம் த்ருஷ்ட்வா ஸீதாத வாயஸம், த்ராஹி த்ராஹீதி பர்த்தாரமுவாச தயயா விபும் - என்று பெரிய அபராதம் செய்த காகாசுரனைத் தலையறுத்து அழித்துவிட ப்ரஹ்மாஸ்த்ரம் தொடுத்தான். அந்த அஸ்திரத்தை தடுத்து, காகத்தை இராமன் காப்பாற்றியதும் இவளது உபதேசம் மூலமே என்பதைப் பாத்ம புராணத்தில் காணலாம்.

அடுத்து ஜீவனைத் தனது உபதேசத்தின் மூலம் இவள் திருத்தும் முறையைக் காண்போம். ஜீவனிடம் இவள் கூறுவது பின்வருமாறு உள்ளது – நீ (ஜீவன்) செய்த தவறுகளைக் காணும்போது நீ பிழைக்க வேறு வழியில்லை. அனைத்திற்கும் சரியான முறையில் தண்டனை அளிப்பதில் ஸ்வதந்த்ரம் பெற்றுள்ள எம்பெருமான், உனது அபராதங்களைச் சரியாகக் கணக்கிட்டு, அந்தப் பாவங்களை நீக்கும்விதமாக தண்டனை வழங்கவே செய்வான். இந்தத் தண்டனையில் இருந்து நீ தப்பிக்கவேண்டும் என்றால், அவனது திருவடிகளில் உன் தலை சாய்த்து சரணம் அடைவதே வழியாகும். இது தவிர வேறு வழியில்லை. குற்றங்களின் மொத்த உருவமாக உள்ள என்னை அவன் காப்பாற்றுவானோ என்ற அச்சமோ, ஐயமோ உனக்கு வேண்டாம். சரணம் என்று புகுந்த மாத்திரத்தில் அனைத்து அபராதங்களையும் பொறுத்துக் கொள்பவனாகவும், இன்பமாக உள்ள அனைத்திற்கும் ஈடாக உள்ள குணங்களுக்கு இருப்பிடமாக உள்ளவனாகவும் இந்த உலகினாரால் ஸர்வேச்வரன் அறியப்படுகிறான். ஆகவே நீ சுகமாக இருப்பதற்கு அவனை அண்டி நிற்பாயாக – என்று மிகுந்த நன்மை பயக்கும்படியான உபதேசம் செய்கிறாள்.

இதனை நாம் எங்கே காணலாம் என்றால், பாவங்களை மிகுதியாகச் செய்து தவறான மார்க்கத்தில் நின்ற இராவணனிடம் சீதை கூறியதிலிருந்து அறியலாம். இராமாணம் - மித்ர மௌபயிகம் கர்த்தும் ராம: ஸ்தாநம் பரீப்ஸதா வதஞ்சா நிச்சதா கோரம் த்வயாஸௌ புருஷர்ஷப: விதிதஸ் ஸஹி தர்மஜ்ஞச் சரணாகத வத்ஸல: தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிது மிச்சஸி – என்று இராவணிடம் கூறுகிறாள். அதாவது, “இராமனுடன் நட்பு உறவு கொள்ளுவதே உனக்கு உயிர் பிழைக்க வழியாகும். இப்படிச் செய்யவில்லை என்றால் இந்த உலகில் உனக்குக் கால் பாவக் கூட இடம் இல்லாது போகும். உனக்கு ஓர் இடம் வேண்டும் என்று எண்ணினால் இராமனைப் பற்றுவாயாக. அவனைத் தவிர வேறு புகலிடம் உனக்கு இல்லை. மிகவும் எளிமையான உபாயமாக உன் எதிரியாக நீ நினைக்கின்ற இராமனின் திருவடிகளில் விழுவதைக் காட்டிலும், மடிந்து போக உனக்கு விருப்பமோ? நீ செய்த தவறுகளுக்கு உன்னைச் சித்ரவதை செய்து

சொல்லாமல், சட்டெனக் கொல்ல முயன்றாலும் நீ இராமனையே பற்ற வேண்டும். நான் (இராவணன்) செய்த தவறுகளுக்கு இராமன் என்னை மன்னிப்பானா என்று நீ எண்ண வேண்டாம். சரணம் என்று புகுந்தவன் விஷயத்தில் முன்பு செய்த தவறுகளை எண்ணிப் பார்த்து சீறுகின்ற தாழ்ந்த தன்மை இராமனுக்கு இல்லை. அவன் புருஷர்களில் உத்தமன் (உயர்ந்தவன்) ஆவான். சரணாகதி என்பதே மிகவும் உயர்ந்த தர்மம் என்பதையும், சரணம் என்று புகுந்தவனின் குற்றங்களைத் தாய் போன்று வாத்ஸல்யத்துடன் மன்னிக்கும் தன்மை கொண்டவன் என்பதையும் இராமன் அறிவான் என்று அல்லவோ உலகம் இராமனைக் கொண்டாடுகிறது? இப்படியாக அல்லவோ இராமன் உள்ளான்? உயிர் வாழவேண்டும் என்று நீ ஆசை கொண்டால், அவனுடன் நட்பு முறையில் உனக்கு உறவு இருத்தல் வேண்டும் - என்று இராவணனைச் சற்றே அச்சுறுத்தி இவள் உபதேசித்தாள் அல்லவா? இத்தனை உபதேசத்திற்குப் பின்னரும் இராவணன் திருந்தாமல் நின்றதன் காரணம் சீதையின் உபதேசங்களில் உள்ள குறைகளால் அல்ல, அவனது பாபங்களின் மிகுதியால் ஆகும்.

இப்படியாக இவள் இருவரையும் திருத்துகிறாள் என்பதால் ச்ரு ச்ரவணே என்பதில் தோன்றிய "ஸ்ரீ" என்ற சொல்லில் ச்ருணோதி (கேட்கிறாள்), ச்ராவயதி (கேட்கும்படிச் செய்கிறாள்) என்ற இரண்டும் உள்ளது. இதில் ச்ராவயதி என்பது இதுவரை கூறப்பட்டது. ச்ராவயதி என்ற இது "ஈச்வரனைக் கேட்க வைக்கிறாள்" என்னும்படி ஈச்வர விஷயமாகவே உள்ளது எனப் பூர்வார்சார்யர்கள் நூல்களில் உள்ளது. ஆனால் வாதிகேஸரி அழகியமணவாளஜீயர் தனது தத்வதீபத்தில் இதனைச் சேதந விஷயத்தில் பின்வருமாறு காண்பிக்கிறார் – அதவா விமுகாநாமபி பகவதாச்ரயணோபதேச: ச்ராவயித்ர்த்வம்; விதித்தஸ் ஸஹி தர்மஜ்ஞச் சரணாகத வத்ஸல: தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிது மிச்சஸி, இதி ராவணம் ப்ரத்யுபதேசாத் - எம்பெருமானிடம் பற்றுதல் இல்லை என்றாலும் எம்பெருமானைப் பற்றிய உபதேசத்தை அவர்களும் கேட்கும்படி செய்வித்தல்; விதித இச்சஸி - என்று இராவணனைக் குறித்து உபதேசித்தாள் – என்றது காண்க. ஆகவே ச்ராவயதி என்பது ஜீவனையும் கேட்கும்படிச் செய்வதையும் குறிக்கும் எனலாம்.

12. உபதேசத்தாலேயிருவருடையவும் கர்ம பாரதந்த்ர்யம் குலையும்.

**அவதாரிகை** - இவ்வுபதேசத்தாலிரண்டு தலையிலும் பலிக்குமதேதென்னவருளிச் செய்கிறார் உபதேசத்தாலே என்று தொடங்கி.

**விளக்கம்** - இவளது இந்தச் செய்கை மூலமாக இரண்டு இடங்களிலும் (எம்பெருமான், சேதனன்) என்ன நிகழ்கிறது என்பதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - அதாவது எப்படி இரண்டு தலைக்கும் தத்ததநுகுணமாகவிவள் பண்ணுமுபதேசத்தாலே புண்யபாபங்களின் வசத்திலே இழுப்புண்டு பகவத் விமுகனாய்த் திரிகையாகிற சேதநனுடைய கர்ம பாரதந்த்ர்யமும், இவன் பண்ணின கர்மத்தை ப்ரதாநமாக்கி அதுக்கீடாகவே செய்வனித்தனையென்று இவனுடைய ரக்ஷணத்தில் விமுகனாயிருக்கையாகிற ஈச்வரனுடைய கர்மபாரதந்த்ர்யமும் நிவ்ருத்தமாமென்கை. சேதநனுடய கர்ம பாரத்தந்த்ர்யம் அநாத் யசித் ஸம்பந்த கார்யமான அவித்யா நிபந்தநம், ஈச்வரனுடைய கர்மபாரதந்த்ர்யம் நிரங்குச ஸ்வாதந்த்ர்ய கார்யமான ஸ்வஸங்கல்ப நிபந்தநம்; இவை இரண்டும் அநாதி ஸித்தமாய்ப் போந்ததேயாகிலும், மாத்ருத்வ ஸம்பந்தத்தாலே சேதநனுக்காப்தையாய், மஹிஷீத்வ ஸம்பந்தத்தாலே ஈச்வரனுக்கபி மதையுமானவிவள், இரண்டு தலையும் நெஞ்சிளகி ஆச்ரயணாங்கீகாராபிமுகமாம் படியாகப் பண்ணுமுபதேசத்தாலே நிவ்ருத்தமாகத் தட்டில்லை.

**விளக்கம்** - இவள் இரண்டு இடங்களிலும் அவரவர்களுக்கு ஏற்றபடி உபதேசம் செய்கிறாள். இதனால் இரண்டு வினைகளின் காரணமாக, அந்த வினைப்பயன்கள் இழுக்கும் திசைகளில் திரிந்தபடியும், எம்பெருமானிடம் எந்தவிதமான ஈடுபாடும் இல்லாமல் உள்ளபடியும் காணப்படும் சேதனைனின் கர்ம பாரதந்த்ர்யம் அழிந்துவிடும் (கர்ம வசப்பட்டிருந்தல் என்று நிலை மாறும்). சேதனர்கள் செய்கின்ற பாவங்களை அவன் முன்பாக நிறுத்த, இவர்கள் செய்த பாவத்திற்குத் தக்கபடியே நான் இருப்பேன் என்றும், அவர்களைக் காப்பாற்றுவதில் எந்தவிதமான ஈடுபாடும் எடுக்கமாட்டேன் என்றும் இருக்கின்ற ஈச்வரனின் கர்ம பாரதந்த்ர்யம் அழிந்துவிடும். சேதனனின் கர்ம பாரதந்த்ர்யம் என்பது ஏன் உண்டானது என்றால் – எல்லையற்ற காலமாக ப்ரக்ருதியின் தொடர்பினால் உண்டான அவித்யையின் விளைவால் ஆகும். ஈச்வரனுக்குக் கர்ம பாரதந்தர்யம் என்பது ஏன் உண்டானது என்றால் – வேறு எதனாலும் தடைபடாத ஸ்வதந்த்ரமான தனது ஸங்கல்பத்தினால் ஆகும்.

இவை இரண்டும் எல்லையற்ற காலமாக உள்ளபோதிலும் இவளுடைய உபதேசம் மூலம் எவ்விதம் மாறும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். இவள் சேதனர்களுக்குத் தாய் என்ற ஸம்பந்தம் காரணமாக அவர்களது நம்பிக்கையைப் பெறுகிறாள். பத்தினி என்பதால் எம்பெருமானால் மிகவும் விரும்பப்படுகிறாள். இதன் மூலம் சேதனர்கள் தங்கள் மனம் உருகி எம்பெருமானைப் பற்றுவதில் ருசி கொண்டவர்களாகவும், எம்பெருமான் மனது உருகிச் சேதனர்களைக் காப்பாற்றுவதில் ருசி கொண்டவனாகவும் மாற்றுகிறாள். இப்படியாக இருவரது கர்ம பாரதந்த்ர்யம் அழிந்துவிடுகிறது.

13. உபதேசத்தாலே மீளாதபோது சேதநனையருளாலே திருத்தும்; ஈச்வரனையழகாலே திருத்தும்.

**அவதாரிகை** - இவ்வுபதேசத்தால் இவர்கள் மீளாதபோது இவள் செய்வதென்னென்ன வருளிச் செய்கிறார் (உபதேசத்தாலே மீளாதபோது) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவளுடைய உபதேசம் மூலம் இந்த இருவரும் மாறவில்லை என்றால் இவள் செய்வது என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - சேதநன் மீளாமைக்கடி, அநாதிகாலம் யாதானும் பற்றி நீங்கும் என்கிறபடியே பகவத் விமுகனாய் விஷயாந்தர ப்ரவணனாய்ப் போருகையால் வந்த துர்வாஸநாதிகள்; ஈச்வரன் மீளாமைக்கடி, அபரதாநுகுணமிவனை சிக்ஷிக்க வேணுமென்னும் அபிஸந்தியாலே நின்ற நிலை இளகாமல் நிற்கைக்குடலான நிரங்குச ஸ்வாதந்த்ர்யம். இவ்வோ ஹேதுக்களாலே இரண்டு தலையும் தன்னுடைய உபதேசத்தால் ஸ்வஸ்வ கர்மபாரதந்த்ர்யத்தில் நின்றும் மீளாதவளவில்.

**விளக்கம்** - சேதனன் இவளது உபதேசத்தைக் கேட்டும் திருந்தாமல் உள்ளதற்கான காரணங்கள் திருவிருத்தம் (95) - யாதானும் பற்றி நீங்கும் - என்று கூறுவது போன்று ஸர்வேச்வரனிடம் ஈடுபாடு இல்லாதவனாக, உலக விஷயங்களில் ஈடுபட்டபடி உள்ளதால் வந்த தீயவாசனைகள் ஆகும். ஸர்வேச்வரன் இவளது உபதேசத்தைக் கேட்டு மாறாமல் உள்ளதற்கான காரணம் - மனிதர்கள் செய்யும் தண்டனைக்கான குற்றங்களுக்கு ஏற்ப தண்டிக்கவேண்டும் என்ற எண்ணம் காரணமாக, தான் நிற்கின்ற கடுமையான நிலையில் இருந்து சற்றும் இளகாமல் இருப்பதற்குக் காரணமான தடையற்ற சுதந்திரம் ஆகும். இந்தக் காரணங்களால் இருவரும் தன்னுடைய உபதேசத்தைக் கேட்ட பின்னரும் தங்களது கர்மபாரதந்த்ர்யத்தைக் கைவிடாமல் உள்ளதைக் கண்டு பிராட்டி செய்வது என்ன?

**வ்யாக்யானம்** - (சேதநனையருளாலே திருத்துகையாவது) – ஐயோ! இவனுடைய துர்ப்புத்தி நீங்கி அநுகூல புத்தியுண்டாகவேணுமென்று அவன் திறத்தில் தான் பண்ணுகிற பங்கயத்தாள் திருவருள் என்கிற பரமக்ருபையாலே அவன் பாபபுத்தி குலைந்து பகவதபிமுகனாம்படி பண்ணுகை.

**விளக்கம்** – தனது உபதேசத்தைக் கேட்டும் திருந்தாத ஜீவனை எண்ணி, "ஐயோ! இவனுடைய தீய புத்தி இவனை விட்டு விலகி, ஸர்வேச்வரனிடம் இவனுக்கு ஈடுபாடு உண்டாகும்படியான புத்தி இவனுக்கு உண்டாகவேண்டும்", என்று எண்ணுகிறாள். இதன்படி பெரியதிருமொழி(9-2-1) - பங்கயத்தாள் திருவருள் – என்று கூறுவதற்கு ஏற்ப

தனது அளவற்ற கருணை மூலமாக மனிதர்களின் பாவ புத்தி நீங்கும்படியாகவும், எம்பெருமானிடம் ஈடுபாடு உண்டாகும்படியும் செய்கிறாள்.

**வ்யாக்யானம் -** (ஈச்வரனையழகாலே திருத்துகையாவது) "ஓங்காண்போ, உனக்குப் பணி யன்றோவிது" என்று உபதேசத்தையுதறினவாறே, கண்ணைப் புரட்டுதல் கச்சை நெகிழ்த்துதல் செய்து தன்னழகாலேயவனைப் பிச்சேற்றி தான் சொன்னபடி செய்தல்லது நிற்கமாட்டாதபடி பண்ணி அங்கீகாரோந்முகனாக்குகை.

**விளக்கம் –** ஸர்வேச்வரனிடம், "ஏங்காணும்! இவர்களைக் காப்பது அல்லவா உனது பணி", என்று தான் உபதேசம் செய்வதைக் கைவிட்டு, தனது கண்களை மயக்கும் விதமாக மாற்றி, அவனைக் காண்கிறாள். தனது கச்சையை நெகிழ்த்தியபடி உள்ளாள். இப்படியாகத் தனது அழகில் அவனை மயங்கவைத்து, தான் கூறியபடி அவன் செய்தல் அல்லாது அவன் ஓய்வதில்லை என்னும்படி மாற்றுகிறாள். இப்படியாக இவனை உதவும்படிச் செய்கிறாள்.

**வ்யாக்யானம் -** ஆக (புருஷகாரமாம் போது) என்று தொடங்கி இவ்வளவாக புருஷகாரத்வோபயோகிகளான குணவிசேஷங்களையும், அவை தன்னைத் தானே வெளியிட்டபடியையும், ஸம்ச்லேஷ விச்லேஷங்களிரண்டிலும் புருஷீகரிக்கையையும் தத்ப்ரகார விசேஷங்களையும் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம் -** இப்படியாக "புருஷகாரமாம் போது" என்ற சூர்ணை தொடங்கி இந்தச் சூர்ணை முடிய புருஷகாரத்திற்கான தன்மைகளாக உள்ள குணவிசேஷங்கள், அந்தக் குணங்களைத் தானே எவ்விதம் வெளிப்படுத்தினாள், எம்பெருமானுடன் சேர்ந்துள்ள போதும் பிரிந்துள்ளபோதும் எவ்விதம் புருஷகாரம் செய்கிறாள், அவற்றின் பிரிவுகள் போன்றவற்றை அருளிச்செய்தார்.

14. அறியாதவர்த்தங்களையடையவறிவித்து ஆசார்யக்ருத்யத்தையும் புருஷகார க்ருத்யத்தையும் உபாய க்ருத்யத்தையும் தானேயேறிட்டுக் கொள்ளுகையாலே மஹாபாரதத்திலுபாய வைபவமும் சொல்லிற்றாய்த்து.

**அவதாரிகை -** க்ருபாதிகளை வெளியிட்டமை சொன்னபோதே ஸ்ரீராமாயணத்தில் புருஷகார வைபவம் முக்தமானபடியையுபபாதித்தாராய், மஹாபாரதத்தில் உபாய வைபவ முக்தமானமையையுபபாதிக்கிறார் மேல் (அறியாத என்று தொடங்கி).

**விளக்கம்** - கருணை முதலான திருக்கல்யாண குணங்களை வெளியிட்டது பற்றிக் கூறும்போது ஸ்ரீஇராமாயணத்தில் புருஷகார வைபவம் எவ்விதம் உணர்த்தப்பட்டது என்பதை அருளிச்செய்தார். இனி மஹாபாரதத்தில் உபாயவைபவம் கூறப்பட்டதை இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அஜ்ஞாத ஜ்ஞாபனம் ஆசார்ய க்ருத்யமிறே, சரண்ய க்ருத்யமன்றே, ஆகையிறே என்னைப் பெற்றவத் தாயாய்த் தந்தையாய் என்று ப்ரியகரத்வ ஹிதகரத்வங்களாகிற மாதா பித்ரு க்ருத்யங்களை ஸ்வயமேவ தமக்குச் செய்த உபகாரத்தையருளிச் செய்தவநந்தரம் ஆசார்யன் செய்யும் விசேஷோபகாரத்தையும் தானே தமக்குச் செய்தமையையருளிச் செய்கிறவாழ்வார் அறியாதனவறிவித்த என்றருளிச் செய்தது. இவ்விடத்தில் இவரருளிச்செய்கிற வாக்யந்தான் அந்த திவ்ய ஸூக்திக்கு ஸூசகமாயிறேயிருக்கிறது.

**விளக்கம்** - அறியாதவைகளை அறிய வைத்தல் என்பது ஆசார்யனின் செயல் அல்லாமல் ஸர்வேச்வரனின் செயல் அல்ல. இதனைக் கருத்தில் கொண்டு அல்லவோ நம்மாழ்வார் திருவாய்மொழியில் (2-3-2) - என்னைப் பெற்றவத் தாயாய்த் தந்தையாய் - என்று அருளிச்செய்தார்? அதாவது விரும்பிய செயலைச் செய்தல் தாயின் செயல், நன்மைகளைச் செய்தல் தந்தையின் செயல் என்பது நீதியாகும். இப்படிப்பட்ட செயல்களை ஸர்வேஸ்வரன் தானாகவே முன்வந்து ஆழ்வாருக்குச் செய்தான் என்று அவன் செய்த உபகாரத்தினை அருளிச்செய்தார். இதன் பின்னர் ஆசார்யன் செய்யவேண்டிய விசேஷமான உபகாரத்தையும் ஸர்வேச்வரன் தானாகவே செய்தருளினான் என்பதை திருவாய்மொழி (2-3-2) - அறியாதனவறிவித்த – என்று அருளிச்செய்தார். இங்கு ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த இந்தச் சூர்ணை, அந்தத் திருவாய்மொழியை உணர்த்துவதாகவே உள்ளது.

**வ்யாக்யானம்** – (அறியாதவர்த்தங்களையடைய அறிவிக்கையாவது) - தத்வ விவேகந் தொடங்கி ப்ரபத்திபர்யந்தமாக அர்ஜுநனுக்கு முன்பு அஜ்ஞாதமாயிருந்த வர்த்தங்களை யெல்லா மறிவிக்கை; தேஹாத்மாபிமாநியாய் தேஹாநுபந்திகளான பந்துக்கள் பக்கலிலே அஸ்தாநே ஸ்நேஹத்தைப் பண்ணி நிற்கிறவிவனை ப்ரக்ருத்யாத்ம விவேகாதிகளாலே தெளிவிக்க வேண்டுகையாலே, நத்வே வாஹம் ஜாது நாஸம் நத்வம் நேமே ஜநாதிபா: நசைவ நபவிஷ்யாமஸ் ஸர்வே வயமத: பரம்; தேஹிநோஸ்மிந் யதா தேஹே கௌமாரம் யௌவநம் ஜரா ததா தேஹாந்தர ப்ராப்திர் தீரஸ் தத்ர ந முஹ்யதி இத்யாதிகளாலே ப்ரக்ருத்யாத்மவிவேகம், ஆத்மபரமாத்மவிவேகமாகிற தத்த்வ விவேகத்தையும், அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தா ச்சரீரிண: அநாசிநோ ப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ

பாரத; ந ஜாயதே ம்ரியதேவா கதாசிந் நாயம் பூத்வா பவிதாவா நபூய:, அஜோ நித்யச் சாச்வதோயம் புராணோ நஹந்யதே ஹந்யமாநே சரீரே, வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய நவாநி க்ருஹ்ணாதி நரோபராணி, ததா சரீராணி விஹாய ஜீர்ணாந் யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ இத்யாதிகளாலே ஆத்ம நித்யத்வ தேஹாத்ய நித்யங்களையும் ப்ரதமமுபதேசித்து, இவனுடைய ஸ்வாதந்த்ர்ய ப்ரமத்தைத் தவிர்க்கைக்காக பூமிராபோ நலோ வாயு: கம் மநோ புத்திரேவச அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா; அபரேயமிதஸ் த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம், ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத் என்கிறபடியே சேதநாசேதந சரீரியாய் ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்தஸ் ஸ்ம்ருதிர் ஜ்ஞாந மபோஹநஞ்ச என்றும், ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத் தேசேர்ஜுந திஷ்டதி ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா என்றும் சொல்லுகிறபடியே ஸர்வஜந ஹ்ருதயஸ்தனாய் நின்று, ஸகல ப்ரவிருத்தி நிவ்ருத்திகளையும் பண்ணுவிக்கையாகிற தன்னுடைய நியந்த்ருத்வத்தையும்; அப்படி ஸர்வ நியந்தாவாய்க் கொண்டு ஸர்வஸ்மாத் பரனாயிருக்குமளவன்றிக்கே பரித்ராணாய ஸாதுநாம் விநாசாயச துஷ்க்ருதாம், தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே என்று அவதார ப்ரயுக்தமான தன்னுடைய ஸௌலப்யத்தையும்; ஸமோஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய: என்று தன்னுடைய ஆச்ரயணீயத்வே ஸாம்யத்தையும்; ப்ரக்ருதே: க்ரியமாணாதி குணை: கர்மாணி ஸர்வச:, அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதீ மந்யதே என்றஹங்கார தோஷத்தையும்; யததோஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபச்சித: இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந: என்றிந்த்ரிய ப்ராபல்யத்தையும்

**விளக்கம்** - அறியாத அர்த்தங்களை முழுமையாக அறிவித்தல் என்றால் தத்வவிவேகம் தொடக்கமாக ப்ரபத்தி முடிய அர்ஜுனன் இதுவரை அறியாமல் இருந்த அர்த்தங்கள் அனைத்தையும் அறியும்படிச் செய்தல் ஆகும். உடலே ஆத்மா என்று எண்ணியவனாக, உடல் தொடர்பு காரணமாக உறவினர்கள் மீது தகாத இடத்தில் அன்பு பூண்டவனாக அர்ஜுனன் நின்றான். அவனை, "ஆத்மா வேறு உடல் வேறு", என்பது உள்ளிட்ட பல உபதேசங்கள் மூலம் தெளிவாக்கவேண்டும் என்று ஸர்வேச்வரனாகிய க்ருஷ்ணன் முடிவு செய்தான். ஆகையால் கீழே உள்ள பல வரிகள் மூலம், "சரீரம் வேறு ஆத்மா வேறு" என்பது பற்றியும், ஆத்மா மற்றும் பரமாத்மா என்பதற்கு இடையில் உள்ள வேறுபாடு பற்றியும் உள்ள தத்துவ விவேகத்தை உணர்த்தினான்:

- கீதை (2-12) - நத்வே வாஹம் ஜாது நாஸம் நத்வம் நேமே ஜநாதிபா: நசைவ நபவிஷ்யாமஸ் ஸர்வே வயமத: பரம் – ஒரு காலத்தில் நான் இல்லை என்பது இல்லை, நீ இல்லை என்பது இல்லை, இந்த அரசர்கள் இல்லை என்பது இல்லை; நான், நீ, இவர்கள் எதிர்காலத்தில் இல்லாமல் இருப்போம் என்பதும் இல்லை.

- கீதை (2-13) - தேஹிநோஸ்மிந் யதா தேஹே கௌமாரம் யௌவநம் ஜரா ததா தேஹாந்தர ப்ராப்திர் தீரஸ் தத்ர ந முஹ்யதி - சரீரத்தில் உள்ள ஆத்மாவிற்கு எவ்விதம் சரீரத்தில் ஏற்படும் இளமை, வாலிபம், வயோதிகம் பற்றி வருத்தம் இல்லையோ அது போன்று வேறு சரீரம் அடைவது பற்றியும் ஆத்மாவிற்கு வருத்தம் இல்லை; இதில் உறுதியாக உள்ள ஒருவன் வருந்தமாட்டான்.

அடுத்து கீழே உள்ள வரிகள் மூலம் ஆத்மா எப்போதும் உள்ளது என்பதையும், சரீரம் போன்றவை அழிந்துவிடும் என்பதையும் முதலில் உபதேசித்தான்:

- கீதை(2-18) - அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தா ச்சரீரிண: அநாசிநோ ப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத – பரத குலத்தில் உயர்ந்தவனே! நாம் காணும் இந்த சரீரம் அனைத்தும் நம்மால் காண இயலாததும், அழிவில்லாததும், அறிய இயலாததும் ஆகிய ஆத்மாவிற்கு உரியது ஆகும். இவை கர்மபலன் கழிந்தவுடன் அழிந்துவிடும். இவற்றைப் பற்றிக் கவலை கொள்ளாமல் யுத்தம் செய்வாயாக.

- கீதை (2-20) - ந ஜாயதே ம்ரியதேவா கதாசிந் நாயம் பூத்வா பவிதாவா நபூய:, அஜோ நித்யச் சாச்வதோயம் புராணோ நஹந்யதே ஹந்யமாநே சரீரே – ஆத்மா என்றும் தோன்றுவதும் இல்லை, அழிவதும் இல்லை. ஸ்ருஷ்டிகாலத்தில் தோன்றுவதும் இல்லை, ப்ரளய காலத்தில் அழிவதும் இல்லை; இவன் பிறப்பற்றவன், அழிவற்றவன், மாற்றம் அடையாதவன், பழமையானவன் ஆவான். ஆகவே இந்த சரீரம் அழிந்தாலும் இதற்குள் இருக்கும் ஆத்மா அழிவதில்லை.

- கீதை (2-22) - வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய நவாநி க்ருஹ்ணாதி நரோபராணி, ததா சரீராணி விஹாய ஜீர்ணாந் யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ - தனது உடை கிழிந்துவிட்டால் நாம் வேறு உடை உடுத்துவது போன்று ஆத்மாவானது ஓர் உடலைக் கைவிட்டு மற்றொன்றை எடுத்துக்கொள்கிறது.

மேலும் அர்ஜுனன் தானே அனைத்தையும் செய்வதாக எண்ணியுள்ள ஸ்வதந்த்ர மயக்கத்தை நீக்குவதற்காகக் கீழே உள்ளபடி உபதேசிக்கிறான். இவை மூலம் அறிவுள்ள பொருள்கள், அறிவில்லாப் பொருள்கள் ஆகிய அனைத்திற்கும் தானே ஆத்மாவாக உள்ளதைக் உணர்த்துகிறான்:

- கீதை (7-4) – பூமிராபோ நலோ வாயு: கம் மநோ புத்திரேவச அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா - பூமி, நீர், அக்னி, வாயு, ஆகாயம், மனம், புத்தி, அஹங்காரம் ஆகிய அனைத்தும் எனது சரீரமாக உள்ளன.
- கீதை (7-5) - அபரேயமிதஸ் த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம், ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத் – கடந்த ச்லோகத்தில் கூறப்பட்ட ப்ரக்ருதி என்பது தாழ்வானது. இதனைக் காட்டிலும் உயர்ந்த எனது ப்ரக்ருதியை நீ அறிந்து கொள்வாயாக.

தொடர்ந்து அனைத்து உயிர்களின் இதயங்களில் நின்று செயல்களைச் செய்தல், செயல்களைச் செய்யாமல் இருத்தல் போன்றவற்றை நியமிக்கின்ற தனது தன்மையைக் கீழே உள்ள வரிகளில் கூறுகிறான்:

- கீதை (15-15) – ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்தஸ் ஸ்ம்ருதிர் ஜ்ஞாந மபோஹநஞ்ச - அனைத்து உயிர்களின் இதயத்தில் நான் உள்ளேன். அவைகளுக்கு உண்டாகும் நினைவு, ஞானம் மற்றும் மறதி ஆகியவை என்னால் உண்டாகின்றன.

- கீதை (18-61) - ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத் தேசேர்ஜுந திஷ்டதி ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா - அனைத்து உயிர்களுக்கும் ஸர்வேச்வரனாகிய வாஸுதேவன் அனைத்து உயிர்களின் இதயங்களிலும் உள்ளான். சரீரம் என்ற இயந்திரத்தில் உள்ள உயிர்களை அவற்றின் குணங்களுக்கு ஏற்றபடி அவனே இயக்குகிறான்.

இப்படியாக அனைத்தையும் தான் நியமிப்பவனாக உள்ள போதிலும், அனைத்துப் பொருள்களுக்கும் பெரியவனாக உள்ளபோதிலும், கீதை (4-8) – பரித்ராணாய ஸாதுநாம் விநாசாயச துஷ்க்ருதாம், தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே – ஸாதுக்களைக் காப்பதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும், தர்மத்தை நிலை நாட்டவும் ஒவ்வொரு யுகத்திலும் பிறக்கிறேன் - என்பதன் மூலம் தனது எளிமையை உணர்த்துகிறான். கீதை (9-29) - ஸமோஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய: – அனைத்து உயிரினங்களுக்கும் நான் சமமாகவே உள்ளேன், நான் யாரையும் வெறுப்பதும் இல்லை, யாரையும் உயர்ந்தவன் என்று எண்ணி அவனை மட்டுமே ப்ரியத்துடன் காண்பதும் இல்லை - என்பதன் மூலம் தன்னை அடைந்தவர்களுக்கு தான் சமமாக உள்ள தன்மையை உணர்த்துகிறான். கீதை (3-27) - ப்ரக்ருதே: க்ரியமாணாதி குணை: கர்மாணி ஸர்வச:, அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதீ மந்யதே – இந்த

உலகில் அனைத்து செயல்களும் மூன்று குணங்களால் நடைபெறுகின்றன, இதனை உணராமல் அஹங்காரம் கொண்ட ஒருவன் அனைத்தையும் தானே செய்வதாக எண்ணுகிறான் – என்பதன் மூலம் அஹங்காரத்தால் ஏற்படும் குற்றத்தை உணர்த்துகிறான். கீதை (2-60) – யததோஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபச்சித: இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந: - சிறந்த அறிவுள்ளவனாக இருந்தபோதிலும் அவனுடைய புலன்கள் மிகவும் பலம் உள்ளவையாக, அவனது மனதைத் தங்கள் பக்கம் இழுக்கின்றன - என்பதன் மூலம் இந்த்ரியங்களின் வலிமையை உணர்த்துகிறான்.

**வ்யாக்யானம்** - அஸம்சயம் மஹாபாஹோ மநோ துர்நிக்ரஹஞ் சலம் என்று அந்த ப்ராபல்யத்தில் மற்றை இந்த்ரியங்களைப் பற்றவும் மநஸ்ஸினுடைய ப்ராதாந்யத்தையும் தர்சிப்பிக்கையாலே ஆச்ரயண விரோதிகளையும், தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத் மத்பர:, வசேஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா என்றும், யதோயதோ நிச்சலதி மநச்சஞ்சலமஸ்திரம் ததஸ்ததோ நியம்யைததாத்மந்யேவ வசம் நயேத் என்று ஆச்ரயணோ பகரணங்களான பாஹ்யாப்யந்தர கரணங்களை ஸ்வாதீநமாக நியமிக்கும் ப்ரகாரத்தையும், சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீச பரதர்ஷப என்று ஆச்ரயிக்குமதிகாரிகளுடை சாதுர்வித்யத்தையும்; த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவச, தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா என்று தன்னுடைய ஆஜ்ஞாநுவர்த்தந பரரானவர்கள் தேவர்கள், தததிவர்த்தநபரரானவர்கள் அஸுரர்கள் என்று தேவாஸுர விபாகத்தையும்; ஹந்த தே கதயிஷ்யாமி விபூதிராத்மநச் சுபா: ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே என்று தொடங்கி இவ்விபூதியில் ஸமஸ்த பதார்த்தங்களுக்கும் வாசகமான சப்தங்கள் தன்னளவிலே பர்யவஸிக்கும்படி இவற்றையடைய ஸ்வப்ரகாரமாகக் கொண்டு வ்யாபித்து நிற்கும்படியையும்

**விளக்கம்** - கீதை (6-35) - அஸம்சயம் மஹாபாஹோ மநோ துர்நிக்ரஹஞ் சலம் – தோள்களில் வலிமை கொண்ட அர்ஜுனா! மனம் என்பது திரிந்து கொண்டே இருக்கும், இதனை அடக்குவது கடினம் என்பதில் சந்தேகம் இல்லை - என்பதன் மூலம் மற்ற இந்த்ரியங்களைக் காட்டிலும் மனமானது வலிமையில் முதலிடம் பெற்றுள்ளது என்பதை உணர்த்தி, இதனால் எம்பெருமானை அடைவதற்குத் தடையாக உள்ளதைக் காட்டினான். ஸர்வேச்வரனான தன்னை வந்தடைவதற்கு உதவுகின்ற உறுப்புக்களான புறக்கரணங்கள் மற்றும் அகக்கரணம் ஆகியவற்றைத் தனக்கு மட்டுமே வசப்படும்படியாக நியமனம் செய்வதைக் கீழே உள்ள வரிகளில் உணர்த்துகிறான்:

- கீதை (2-61) - தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத் மத்பர: வசேஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா – அனைத்து இந்த்ரியங்களையும் அவற்றின் உணவாக உள்ள உலக விஷயங்களில் இருந்து விலக்கிக் கொண்டு இருப்பானாக. இப்படி உள்ள ஒருவனுக்கு மனம் உட்பட்ட அனைத்து இந்த்ரியங்களும் கட்டுப்பாட்டில் உள்ளதால் அறிவும் ஸ்திரமாக உள்ளது.

- கீதை (6-26) - யதோயதோ நிச்சலதி மநச்சஞ்சலமஸ்திரம் ததஸ்ததோ நியம்யைததாத்மந்யேவ வசம் நயேத் - யோகி ஒருவன் என்ன செய்யவேண்டும் என்றால், நிலையாக இல்லாமல் உள்ளதையும், அலைமோதுவதையும் இயல்பாக உடைய மனதை ஆத்மாவின் கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும். இப்படிப்பட்ட மனதைத் திடீரென திசை திருப்பும் காரணங்களில் இருந்து விலக்கி விட வேண்டும்.

அடுத்து தன்னை வந்தடைகின்ற நான்குவிதமான மனிதர்கள் பற்றி கீதை (7-16) – சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீச பரதர்ஷப - அர்ஜுனா! புண்ணியம் நிறைந்தவர்கள் நான்கு பிரிவினர் ஆவர். அவர்கள் என்னைச் சரணம் புகுந்து உபாஸிக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் – துயரத்தில் உள்ளவர்கள், ஞானம் பெற விரும்புகிறவர்கள், செல்வம் பெற விரும்புவர்கள், என்னைப் பற்றிய ஞானம் உள்ளவர்கள் ஆவர் - என்று உரைத்தான். தனது ஆணைகளைப் பின்பற்றி நடப்பவர்கள் தேவர்கள் என்றும், ஆணைகளை மதிக்காமல் உள்ளவர்கள் அசுரர்கள் என்றும், இப்படியாத் தேவர்கள் மற்றும் அசுரர்கள் ஆகிய பிரிவினர் பற்றிக் கீழே உள்ளபடி உரைத்தான்:

- கீதை (16-6) - த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவச - இந்த உலகில் உள்ள படைப்புகள் அனைத்தும் தேவர்களுக்கு உரிய தன்மை, அசுரர்களுக்கு உரிய தன்மை என்று இரண்டு பிரிவுகள் கொண்டதாக இருக்கும்.

- கீதை (16-5) - தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா – தேவர்களின் தன்மை என்பது ஸம்ஸாரத்தில் இருந்து விடுதலை அளிப்பதாகும், அசுரர்களின் தன்மை என்பது தாழ்வான பந்தத்தை ஏற்படுத்துகிறது.

இந்த உலகில் உள்ள அனைத்துப் பொருள்களையும் குறிக்கும் அனைத்துச் சொற்களும் தன்னில் வந்து முடியும்படியாக, அவை அனைத்தையும் தனக்குச் சரீரமாகக் கொண்டுள்ள தன்மையை கீதை (10-19) – ஹந்த தே கதயிஷ்யாமி விபூதிராத்மநச் சுபா: ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே - குருகுலத்தில் உயர்ந்தவனே! எனது ஐச்வர்யம் மற்றும் நன்மைகள் அளிக்கவல்ல விபூதிகள் குறித்து உனக்கு நான்

கூறுகிறேன். என்னுடைய இத்தகைய ஐச்வர்யங்களுக்கு எல்லையே இல்லை – என்பதன் மூலம் உணர்த்தினான்.

**வ்யாக்யானம்** - திவ்யம் ததாமி தே சக்ஷுஃ பச்ய மே யோகமைச்வரம் என்று திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்து, பச்யாமி தேவாந் தவ தேவ தேஹே ஸர்வாந் ததா பூதவிசேஷ ஸங்காத், ப்ரஹ்மாண மீசம் கமலாஸநஸ்த்தம் ருஷீம்ச்ச ஸர்வாந் உரகாம்ச்ச தீப்தாந் இத்யாதியாலே தன்னுடைய விச்வரூபத்தைக் கண்டு பேசும்படி பண்ணுகையாலே, தானுகந்தார்க்கு திவ்ய ஜ்ஞாநத்தைக் கொடுத்து தன்படிகளை தர்சிப்பிக்குமென்னு மத்தையும், மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு, மாமேவைஷ்யஸி யுக்த்வைவம் ஆத்மாநம் மத்பராயண: என்று இப்படியிருந்துள்ள பரத்வ ஸௌலப்ய யுக்தனான தன் திருவடிகளை ப்ராபிக்கையாகிற பரமபுருஷார்த்தத்துக்கு உபாயமா யிருந்துள்ள கர்ம ஜ்ஞாந ரூபாங்க ஸஹிதையான பக்தியையும்; மாமேவ யே ப்ரத்யந்தே மாயா மேதாம் தரந்தி தே, தமேவசாத்யம் புருஷம் ப்ரபத்யேத், தமேவ சரணங் கச்ச ஸர்வபாவேந பாரத என்று அந்த பக்த்யங்கமான ப்ரபத்தியையும்; சரம ச்லோகத்தாலே அந்த பக்த்யுபாயத்தின் துஷ்கரத்வாதிகளையுணர்ந்து சோகிப்பார்க்கு ஸுகரமுமாய் ஸ்வரூபாநுரூபமுமான உபாயம் ப்ரபத்தியென்னுமத்தையும் தானே அறிவித்தருளி னானிறே. ஆக இப்படி அறியாதவர்த்தங்களையெல்லாமறிவிக்கையாலே ஆசார்ய க்ருத்யத்தைத் தான் ஏறிட்டுக் கொண்டானென்கிறது.

**விளக்கம்** - அடுத்து கீதை (11-8) - திவ்யம் ததாமி தே சக்ஷுஃ பச்ய மே யோகமைச்வரம் – உனக்குத் தெய்வீகமான கண்களை நான் அளிக்கிறேன், அவற்றைக் கொண்டு எனது கல்யாண குணங்களையும் ஐச்வர்யங்களையும் நீ காண்பாயாக - என்பதன் மூலம் அர்ஜுனனுக்குத் தெய்வீகமான பார்வையை அளித்தான்; விச்வரூபம் எடுத்து நின்ற க்ருஷ்ணனிடம் அர்ஜுனன் கீதை (11-15) - பச்யாமி தேவாந் தவ தேவ தேஹே ஸர்வாந் ததா பூதவிசேஷ ஸங்காத் ப்ரஹ்மாண மீசம் கமலாஸநஸ்த்தம் ருஷீம்ச்ச ஸர்வாந் உரகாம்ச்ச தீப்தாந் - க்ருஷ்ணா! உனது சரீரத்தில் அனைத்து தேவர்களையும் நான் காண்கிறேன். நான்முகன், சிவன் ஆகியோரைக் காண்கிறேன். அனைத்து முனிவர்களையும், ஒளிவீசும் தேவலோகப் பாம்புகளையும் காண்கிறேன் – என்று தனது விச்வரூபத்தைக் கண்டு அர்ஜுனன் பேசும்படிச் செய்தான். ஆக இதன் மூலம் தான் யாரை விரும்புகிறானோ (தன்னை யார் விரும்புகிறானோ) அவர்களுக்குத் தெய்வீகமான ஞானத்தை அளித்து, தனது தன்மைகளை அவர்கள் காணும்படிச் செய்வதை உணர்த்துகிறான். அடுத்து தான் இருக்கின்ற பரத்வத்துடன் தனக்கு உள்ள ஸௌலப்யத்தை கீதை (9-34) – மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு மாமேவைஷ்யஸி யுக்த்வைவம் ஆத்மாநம் மத்பராயண: – என்னிடம் உனது மனதைத் திருப்புவாயாக, எனது பக்தனாக அன்புடன் இருப்பாயாக, என்னிடம் உன்னை அர்ப்பணிப்பாயாக, என்னையே வணங்குவாயாக. என்னையே முழுவதுமாகச் சார்ந்து, என்னிடம் உனது ஆத்மாவை இணைத்து, என்னையே அடைவாயாக - என்று

உணர்த்தினான். இதன் மூலம் தனது திருவடிகளை அடைதல் என்ற உயர்ந்த பேற்றுக்கு ஏற்ற உபாயமாக உள்ளதும், கர்மம் மற்றும் ஞானம் ஆகிய இரண்டையும் அங்கமாகக் கொண்டதும் ஆகிய பக்தியை உணர்த்தினான். இதனைத் தொடர்ந்து கீதை (7-14) - மாமேவ யே ப்ரத்யந்தே மாயா மேதாம் தரந்தி தே – எனது இத்தகைய மூன்று குணங்கள் என்ற மயக்கம் என்பதைக் கடக்க மிகவும் அரிது; யார் ஒருவன் என்னிடம் மட்டுமே சரணம் என்று அடைகிறார்களோ அவர்களே இதனைக் கடக்கின்றனர் – என்றும்; கீதை (15-64) - தமேவசாத்யம் புருஷம் ப்ரபத்யேத் – அந்த ஆதிபுருஷனைச் சரணம் அடைவாயாக – என்றும்; கீதை (18-62) - தமேவ சரணங் கச்ச ஸர்வபாவேந பாரத பரம்பொருளான என்னிடம் நீ அனைத்து வகையிலும் சரணம் அடைவாயாக – என்றும் கூறுவதன் மூலம் பக்திக்கு அங்கமாக உள்ள ப்ரபத்தியை உணர்த்தினான். அடுத்து பக்தி உபாயமானது செய்வதற்கு மிகவும் கடினமானது என்பதை உணர்ந்து செய்வதறியாமல் திகைத்து நிற்பவர்களுக்கு - செய்வதற்கு மிகவும் எளியதும், ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றதும் ஆகிய உபாயம் மற்றும் ப்ரபத்தி என்பதை சரம ச்லோகம் மூலம் தானே வெளியிட்டான். இப்படியாக நாம் அறியாத பல விஷயங்களை இவன் தெரிவிப்பதன் மூலம் ஓர் ஆசார்யனின் செயலைத் தானே மேற்கொண்டான் என்பதை அறியலாம்.

**வ்யாக்யானம் -** இனி புருஷகார க்ருத்யமும் சரண்யனான தன்னதன்றே, பிராட்டிக்ருத்ய மிறே, மத்ப்ராப்திம் ப்ரதி ஜந்தூநாம் ஸம்ஸாரே பததாமத: லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி: மமாபி ச மதம் ஹ்யேதத் நாந்யதா லக்ஷணம் பவேத் இத்யாதிகளாலே பகவத் சாஸ்த்ரத்திலே தானேயருளிச் செய்தானிறே. இவனுக்கு தத்வஜ்ஞாநாதிகளையுண்டாக்கிக் கொள்ள வேண்டுகையாலே ஆசார்ய க்ருத்யத்தை யேறிட்டுக் கொண்டானாகிறான். புருஷகார க்ருத்யமேறிட்டுக் கொள்ள வேண்டுவானென்? அங்கீகரித்துவிடவமையாதோவென்னில், அங்கீகாரத்துக்கு இதுவும் அவச்யாபேக்ஷிதமாகையாலே; எங்ஙனேயென்னில், இவ்வுபாயத்துக்கு புருஷ ஸாபேக்ஷதையோபாதி புருஷகார ஸாபேக்ஷதையுமுண்டிறே, இவ்வுபய ஸாபேக்ஷதையும் உபாயவரண ரூபமான பூர்வவாக்யத்தில் ப்ரதமசரம் பதங்களிலே காணலாம்; ஸ்ரீ சப்தத்தாலே புருஷகாரத்தையும் உத்தமனாலே அதிகாரியையுமிறே சொல்லுகிறது; ஆகையாலே சேதநர் தன்னை உபாயமாகப் பற்றுமிடத்தில் ஸ்வாபராத பயத்தாலே பிராட்டியைப் புருஷகாரமாக முன்னிட, அவள் இவனபராத நிபந்தநமான தன் திருவுள்ளத்தில் சீற்றத்தையாற்றிச் சேரவிட, கைக்கொள்ளுகை முறையாயிருக்க, அங்ஙனன்றிக்கே இவன் அபராத நிபந்தநமான தன் திருவுள்ளத்தின் கலக்கத்தையும் தானே தணித்துக்கொண்டு இவனைச் சேர்த்துக் கொள்ளுகையாலும், அதுதான் செய்கிறவளவில் அர்த்தித்வ நிரபேக்ஷமாகச் செய்கையாலும் புருஷகார க்ருத்யத்தையும் தானேயேறிட்டுக் கொண்டானென்கிறது.

**விளக்கம் –** இனி புருஷகாரத்தைச் செய்கின்ற செயலானது அனைவருக்கும் புகலிடமாகத் திகழ்கின்ற தன்னுடைய செயல் அல்ல, அது பிராட்டியின் செயல் என்பதை பகவத் சாஸ்த்ரத்தில் – மத்ப்ராப்திம் ப்ரதி ஜந்தூநாம் ஸம்ஸாரே பததாமத: லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி: மமாபி ச மதம் ஹ்யேதத் நாந்யதா லக்ஷணம் பவேத் - இந்த உலகில் உள்ள அனைத்து உயிர்களும் என்னை அடைவதற்கான புருஷகாரமாக மஹாலக்ஷ்மியே உள்ளாள் என்று முனிவர்களால் கூறப்பட்டாள்; அவள் இவ்விதம் புருஷகாரமாக உள்ள நிலை என்பது என்னால் ஏற்கப்பட்டதே ஆகும்; இதற்கு அவளைக் காட்டிலும் வேறான ஏதும் இல்லை – என்று உணர்த்தினான்.

தத்துவ ஞானம் முதலானவற்றை ஏற்படுத்த வேண்டும் என்பதால் ஆசார்யனின் செயலைத் தானே செய்தருளினான் என்பது சரியானதே ஆகும். ஆனால் புருஷகாரம் மூலமாக ஏன் தன்னை வந்தடையும்படிச் செய்யவேண்டும்? தானே நேரடியாக அங்கீகாரம் செய்து ஏற்றுக் கொள்ளவேண்டியதுதானே என்ற சந்தேகம் எழலாம். அங்கீகாரம் செய்வதற்கு இது அவசியம் என்பதால், இது இன்றி அங்கீகாரம் இல்லை. எப்படி? இந்த உபாயத்திற்கு ப்ரபத்தி செய்கின்ற ஒருவன் வேண்டுவது போன்று, புருஷகாரமும் வேண்டப்படுவது ஆகும். இப்படியாக இந்த இரண்டும் வேண்டப்படுவதை த்வய மந்த்ரத்தில் உள்ள முதல் பதத்திலும் (ஸ்ரீமந்), முதல் வரியின் இறுதியில் உள்ள பதத்திலும் (ப்ரபத்யே) காணலாம். “ஸ்ரீ” என்பதன் மூலம் புருஷகாரத்தையும், ”ப்ரபத்யே” என்பதன் மூலம் அதிகாரியும் அல்லவோ கூறப்பட்டனர்?

ஆக சேதனர்கள் ஸர்வேச்வரனை உபாயமாகப் பற்றும்போது, தங்களது குற்றங்களின் காரணமாக அச்சம் கொண்டு, பிராட்டியைப் புருஷகாரமாகக் கொள்கின்றனர். அவள் செய்வது என்னவென்றால், மனிதர்களின் குற்றம் காரணமாக எம்பெருமான் உள்ளத்தில் உள்ள கோபத்தைத் தணித்து, மனிதர்களை அவனிடம் சேர்க்கிறாள். இதுவே எம்பெருமான் சேதனர்களைத் தன்பக்கம் சேர்த்துக் கொள்ளும் முறையாகும். ஆனால் அர்ஜுனன் போன்றோர் விஷயத்தில் எம்பெருமான் செய்வது என்ன? இவனைப் போன்றவர்கள் செய்யும் குற்றங்கள் காரணமாகத் தனது உள்ளத்தில் உண்டாகின்ற கோபத்தைத் தானே தணித்துக் கொள்கிறான்; இவ்விதம் செய்யும்போது அந்த அடியார்கள் தன்னிடம் எதனையும் வேண்டாதபோதிலும், அவர்களது வேண்டுகோள்களை அவர்கள் எதிர்பாராமலேயே செய்கிறான். இப்படியாகப் புருஷகாரத்தையும் இவர்கள் விஷயத்தில் தானே செய்கிறான் என்று உணரவேண்டும்.

**வ்யாக்யானம் -** இனி உபாய க்ருத்யம் தன்னதாயிருக்க அத்தையும் தானேயறிட்டுக் கொண்டானென்கிறது, த்வமேவோபாய பூதா மே பவ என்றிவனர்த்தித்தால் கார்யஞ் செய்ய அமைந்திருக்க, நாமே இவனுக்கு உபாயமாய் அநிஷ்டநிவ்ருத்த்யாதிகளைப் பண்ணக்கடவோமென்று தானேயென்று கொண்டு மாமேகம் சரணம் வ்ரஜ, ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்கையாலே; அல்லது உபாயோபேயத்வே ததிஹ தவ

தத்த்வம் நது குணௌ என்கிற வஸ்துவுக்கு உபாயக்ருத்யம் வந்தேறியன்றிறே; உபயலிங்க விசிஷ்டத்வத்தாலே உபாயோபேயத்வங்களிரண்டும் ஸ்வதஸ் ஸித்தமாயிறே யிருப்பது. அன்றிக்கே உபேயமான தன்னை உபாயமாக்குகையாலே உபாய க்ருத்யதையேறிட்டுக் கொண்டானென்கிறதென்பாருமுண்டு; அது பால் மருந்தாமாப் போலே இவனுபாயமாமிடமெங்குமுள்ளதொன்றாகையாலே, அர்ஜுனனுக்கிப்போது அஸாதாரணமாகச்செய்ததொன்றல்லாமையாலும், "உபாயம்" என்றே வஸ்துவை நிர்தேசித்து தத்வைபவஞ் சொல்லுகிற ப்ரகரணமாகையாலும் இவ்விடத்துக்கு உசிதமன்று; ஆன பின்பு கீழ்ச்சொன்னபடியே பொருளாக வேணும்.

**விளக்கம்** – அடுத்து உபாயம் என்னும் செயலைச் செய்வது தன்னுடையதாகவே உள்ளபோது, அதனை ஏற்றுக்கொண்டான் என்று மேலும் அழுத்தமாகக் கூறுவது ஏன்? அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை - த்வமேவோபாய பூதா மே பவ - நீயே எனக்கு உபாயமாக வேண்டும் – என்று சேதனன் வேண்டி நின்றால் மட்டுமே எம்பெருமான் உபாயமாகச் செயல் புரிவான் என்ற நெறி உள்ளது. ஆயினும் அர்ஜுனன் போன்றவர்கள் விஷயத்தில் அதனை எதிர்பார்க்காமல், "நாமே இவனுக்கு உபாயமாக நின்று, இவனுக்கு ஏற்பில்லாதவற்றை விலக்கி, நன்மைகள் அளித்தபடி இருப்போம்", என்று முடிவு செய்கிறான். இதனைக் கருத்தில் கொண்டு கீதை (18-66) - மாமேகம் சரணம் வ்ரஜ, ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – என்னையே சரணம் என்று பற்றுவாயாக, அனைத்துப் பாவங்களில் இருந்தும் நான் உன்னை விடுவிப்பேன் – என்றான்.

கடந்த பத்தியில் கேட்கப்பட்ட கேள்விக்கு வேறுவிதமாகவும் விளக்கம் அளிக்கிறார். ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-87) - உபாயோபேயத்வே ததிஹ தவ தத்த்வம் நது குணௌ - உபாயம், உபேயம் என உள்ள தன்மை உன்னுடைய ஸ்வரூபம் அன்றி குணங்கள் அல்ல – என்று கூறுவதற்கு ஏற்ப, உபாயமாக உள்ள தன்மை எம்பெருமானின் இயல்பு அன்றி வரவரழைத்துக் கொண்ட தன்மை அல்லவே. தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாக இருத்தல், தனக்கும் பிறர்க்கும் அநுகூலமாக இருத்தல் ஆகிய இரண்டும் எப்போதும் பொருந்தியுள்ளதால் உபாயமாக உள்ள தன்மை என்பது இயல்பானது ஆகிறது. அடுத்து ஸ்வாமி ஆய் கூறும் கருத்தான "உபாயமாக உள்ள தானே தன்னை உபாயமாகவும் ஆக்கிக் கொண்டதால், உபாயம் என்பதைத் தானே ஏறிட்டுக்கொண்டான்", என்பதை விளக்குகிறார். இந்தக் கருத்து இங்கு பொருந்தாது. காரணம் – பால் மருந்தாகப் பயன்படும்; இது போன்று இவன் உபாயமாக அனைவருக்கும் உள்ளான் என்பதால், அர்ஜுனனுக்குச் சிறப்பாகச் செய்தான் என்று கூற இயலாது. ஆகவே மேலே உள்ள பத்திகளில் உள்ளபடியே பொருள் கொள்ளவேண்டும்.

**வ்யாக்யானம்** – ஆசார்யக்ருத்யமேறிட்டுக் கொள்ளுகிறவளவில் கார்ப்பண்ய தோஷோபஹதஸ்வபாவ: ப்ருச்சாமி த்வா தர்ம ஸம்மூடசேதா: யச்ச்ரேயஸ் ஸ்யாந் நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் என்று இவனர்த்தித்தவமுண்டாகையாலே அந்யக்ருத்யத்தைத் தான் ஏறிட்டுக் கொண்ட மாத்ரமே விவக்ஷிதமாகையாலும், புருஷகார க்ருத்யமேறிட்டுக் கொள்ளுகிறவளவில் அந்ய க்ருத்யத்தையேறிட்டுக் கொண்டமையும், அது தன்னை அர்த்தித்வ நிரபேக்ஷமாக ஏறிட்டுக் கொண்டமையும் விலக்ஷிதமாகையாலும், ஸ்வ க்ருத்யமேறிட்டுக் கொள்ளுகிறவளவில் அர்த்தித்வ நிரபேக்ஷமாகச் செய்தவளவே விவக்ஷிதமாகையாலும், (தானேயேறிட்டுக் கொள்ளுகையாலே) என்கிறவிது க்ருத்யத்ரயத்திலும் யதாயோகம் அந்வயிக்கக் கடவது; ஆசார்ய அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ண, பிராட்டி புருஷீகரிக்க, வந்த தன்னை உபாயமாகப் பற்றினவனுக்கு அநிஷ்ட நிவ்ருத்யாதிகளைப் பண்ணிக் கொடுக்க வமைந்திருக்க, இவையெல்லாவற்றையும் தானேயேறிட்டுக் கொண்டது வைபவமிறே (ஏறிட்டுக் கொள்ளுகையாலே மஹாபாரதத்திலுபாய வைபவஞ் சொல்லிற்றாய்த்து) என்றது, ஏறிட்டுக் கொண்டமையை ப்ரதிபாதிக்கையாலே சொல்லிற்றாய்த்தென்றபடி.

**விளக்கம்** - அடுத்து, சூர்ணையில் உள்ள “தானே ஏறிட்டுக் கொள்ளுகையாலே” என்பதைக் கீழே உள்ள மூன்று விதங்களுக்கும் கொள்ளவேண்டும்.

- ஆசார்யனின் செயலை ஏறிட்டுக் கொள்ளுதல் என்பது கீதை (2-7) – கார்ப்பண்ய தோஷோபஹதஸ்வபாவ: ப்ருச்சாமி த்வா தர்ம ஸம்மூடசேதா: யச்ச்ரேயஸ் ஸ்யாந் நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் - இயல்பான மனநிலை காரணமாக நான் மனவலிமை இழந்து நிற்கிறேன்; எனது தர்மம் எது என்று புரியாமல் நிற்கிறேன்; எனக்கு நன்மை அளிக்கும் செயல் எது என்று உரைப்பாயாக. உன்னையே சரணம் என்று புகுந்த எனக்கு நீ உபதேசிப்பாயாக – என்று அர்ஜுன்ன் வேண்டினான். இதனால் ஆசார்யன் செய்ய வேண்டிய செயலைத் தானே ஏறிட்டுக் கொண்டு செய்தான் என்பது தெளிவு.

- புருஷகாரச் செயலை ஏறிட்டுக் கொண்டு செய்தல்: மற்றவர்களின் செயலை (ஆசார்யனின் செயலை) தான் செய்ததையும், இதனை சேதனனின் வேண்டுகோளை எதிர்பாராமலேயே செய்ததையும் வைத்து உறுதியாக்கலா

- உபாயமாக உள்ள தனது செயலைத் தானே செய்தல் – சேதனனின் வேண்டுகோளை எதிர்பாராமல் உபாயமாக நின்றான்.

ஓர் ஆசார்யன் அறியாதவற்றை உபதேசம் செய்யவேண்டும்; பிராட்டி புருஷகாரம் செய்யவேண்டும்; தன்னை உபாயமாகப் பற்றுபவர்கள் விரும்பியதைச் செய்து கொடுக்க

வேண்டும் – இவ்விதமாக நெறிகள் உள்ளபோது, இவை அனைத்தையும் தானே செய்து கொடுத்தல் வைபவம் அல்லவோ? "ஏறிட்டுக் கொள்ளுகையாலே மஹாபாரதத்திலுபாய வைபவஞ் சொல்லிற்றாய்த்து" - இவன் இவ்விதம் இச்செயல்களைத் தானாகவே ஏறிட்டுக் கொண்டதைச் சொன்னதால், அவை இங்கு சொல்லப்பட்டது என உணர்த்துகிறார்.

15. புருஷகாரத்துக்குமுபாயத்துக்கும் வைபவமாவது தோஷத்தையும் குணாஹாநியையும் பார்த்து உபேக்ஷியாதவளவன்றிக்கே அங்கீகாரத்துக்கு அவை தன்னையே பச்சையாக்குகை.

**அவதாரிகை** – ஆக, புருஷகாரோபாயங்களிரண்டுக்கும் அஸாதாரண வைபவத்தையருளிச் செய்தார் கீழ், உபய ஸாதாரண வைபவத்தையருளிச் செய்கிறார் மேல் (புருஷகாரத்துக்குமென் று தொடங்கி).

**விளக்கம்** - இதுவரையில் புருஷகாரம் மற்றும் உபாயம் ஆகிய இரண்டிற்கும் உள்ள மேன்மைகளை தனித்தனியே அருளிச்செய்தார். இனி இவை இரண்டிற்கும் பொதுவாக உள்ள மேன்மைகளை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - தத்ததஸாதாரண வைபவஞ் சொல்லுகையாலே புருஷகாரத்தையுமுபாயத்தையும் தனித்தனியே உபாதாநம் பண்ணியருளிச் செய்தார் கீழ், இது உபயத்துக்கும் ஸாதாரண வைபவகதனமாகையாலே (புருஷகாரத்துக்குமுபாயத்துக்கும்) என்று தந்த்ரேணோபாதாநம் பண்ணியருளிச் செய்கிறார்; உபயத்துக்கும் அஸாதாரண வைபவம் சொல்லுகிறவிடங்களில் (இருவரையுந் திருத்துவது) இத்யாதியாலே சாப்தமாக புருஷகார ஸ்வரூபமும், (உபாய க்ருத்யத்தையும் தானே ஏறிட்டுக்கொள்ளுகையாலே) என்கையாலே ஆர்த்தமாக உபாய ஸ்வரூபமுஞ் சொல்லப்பட்டது. இங்கு உபய ஸ்வரூப கதநபூர்வகமாக வைபவத்தையருளிச் செய்கிறார்.

**விளக்கம்** - புருஷகாரம் மற்றும் உபாயம் ஆகிய இரண்டிற்கும் அவற்றுக்கு உள்ள மேன்மைகளைக் கூற எண்ணி, புருஷகாரம் மற்றும் உபாயங்களைத் தனித்தனியே இதுவரை அருளிச்செய்தார். அடுத்து இரண்டையும் சேர்த்துக் கூறும் பகுதியாக உள்ளதால், இரண்டிற்கும் பொதுவாக உள்ள மேன்மைகளை விளக்குகிறார். புருஷகாரம் மற்றும் உபாயம் ஆகிய இரண்டையும் தனித்தனியே கூறிய பகுதிகளில், "இருவரையும் திருத்துவது" போன்ற சூர்ணைகள் மூலம் சொற்களின் வலிமை கொண்டு புருஷகாரத்தின் தன்மை வெளிப்பட்டதை உணர்த்தினார்; "உபாய க்ருத்யத்தையும் தானே ஏற்பட்டுக் கொள்ளுகையாலே" முதலிய சூர்ணைகள் மூலமாக அர்த்தங்களின் வலிமையால் உபாயத்தின் மேன்மை வெளிப்பட்டதை உணர்த்தினார். இங்கு அவற்றின் தன்மைகளை உணர்த்துவதற்கு முன்பாக அவற்றின் மேன்மைகளை வெளிப்படுத்துகிறார்.

**வ்யாக்யானம்** - (தோஷத்தையும் குணஹாநியையும் பார்த்து உபேக்ஷியாதவள வன்றிக்கே, அங்கீகாரத்துக்கு அவை தன்னையே பச்சையாக்குகை) என்று. தோஷமாவது - அக்ருத்யகரணாதி நிஷித்தாநுஷ்டாநம்; குணஹாநியாவது - விஹிதாகரணம்; இவை இரண்டையும், மநோவாக்காயை: இத்யாதி சூர்ணையாலே எம்பெருமானார் அருளிச் செய்தாரிறே. இதம் குரு, இதம் மாகார்ஷீ: என்று விதி நிஷேதாத்மகமான சாஸ்த்ரந்தான் பகவதாஜ்ஞா ரூபமாயிறேயிருப்பது. ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா என்று தானே யருளிச் செய்தானிறே. ஏவம்பூத சாஸ்த்ரத்தில் நிஷித்தத்தைச் செய்கையும், விஹிதத்தைச் செய்யாமையுமிறே அநாதிகாலம் க்ஷிபாமி, நக்ஷமாமி என்னும் பகவந் நிக்ரஹத்துக் கிலக்காய்ப் போருகைக்குக் காரணம். (இவை இரண்டையும் பார்த்து உபேக்ஷியாத வளவன்றிக்கே) என்றது - ஆச்ரயணோந்முக சேதநகதங்களான இவற்றை தர்சித்து இவனை வேண்டோமென்று கைவிடாதே அங்கீகரிக்கும் மாத்ரமன்றிக்கே என்றபடி.

**விளக்கம்** – தோஷம் என்றால் செய்யக்கூடாததைச் செய்தல் போன்றவை ஆகும். குண ஹாநி என்றால் செய்யவேண்டும் என்பதைக் செய்யாமல் விடுதல் ஆகும். இவை இரண்டையும் எம்பெருமானார் சரணாகதி கத்யத்தில் – மநோவாக்காயை: - என்று அருளிச் செய்தார் (இதன் விரிவை அடியேனின் கத்யத்ரய நூலில் காண்க). இதம் குரு - இதனைச் செய்வாயாக, இதம் மாகார்ஷீ: - இதனைச் செய்தல் கூடாது - என்று விதிப்பதும், நீக்குவதும் என உள்ள சாஸ்த்ரங்கள் எம்பெருமானின் கட்டளைகளாகவே அல்லவோ உள்ளன? பாஞ்சராத்ரத்தில் - ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா – வேதங்கள் மற்றும் ஸ்ம்ருதிகள் எனது கட்டளைகள் – என்று எம்பெருமான் தானே அருளிச்செய்தான் அல்லவோ? இப்படிப்பட்ட சாஸ்த்ரங்களில் விலக்கப்பட்டதை செய்வது, அவற்றில் விதிக்கப்பட்டதைச் செய்யாமல் விடுவது போன்றவற்றை நாம் எல்லையற்ற காலங்களாகச் செய்தபடி உள்ளோம். இப்படியாக உள்ள நமது நிலையே எம்பெருமான் – க்ஷிபாமி, நக்ஷமாமி – என்று நம்மைத் தனது தண்டனைகளுக்கு இலக்காக வைப்பதன் காரணமாக உள்ளது (க்ஷிபாமி, நக்ஷமாமி போன்றவற்றைச் சூர்ணை 7-ல் காண்க). (இவை இரண்டையும்) - தன்னைப் பற்றுவதில் சிலருக்கு எல்லையற்ற ஆசை இருக்கும். அவர்களிடம் உள்ள இது போன்ற தோஷங்களையும், தாழ்வையும் அவன் எண்ணாமல், "இவனை நாம் வேண்டாம் என்று தள்ளக்கூடாது" என்று ஏற்றுக்கொள்கிறான். அத்துடன் மட்டும் எம்பெருமான் நிற்பதில்லை.

வ்யாக்யானம் - (அங்கீகாரத்துக்கவை தன்னையே பச்சையாக்குகை) யாவது அப்படிப்பட்ட தோஷகுணஹாநிகள் தன்னையே முகமலர்ந்து அங்கீகரிக்கைக்குறுப்பான உபஹாரமாகக் கொள்ளுகை. உபேக்ஷியாமைக்கு ஹேது - தயா க்ஷாந்திகள், பச்சை யாகக் கொள்ளுகைக்கு ஹேது - வாத்ஸல்யம். சுவடுபட்ட தரையில் புற்கவ்வாத பசு தன் கடையில் நின்றும் விழுந்த கன்றினுடம்பில் வழும்பை போக்யமாக விரும்புமாப்போலே யிருப்பதொன்றிறேயிது. இக்குணத்துக்கொப்பதொரு குணமில்லையிறே. ஆகையா

லேயிறே நிகரில் புகழாய் என்று ஆழ்வாரருளிச்செய்தது; உடையவரும் அபார காருண்ய ஸௌசீல்ய வாத்ஸல்ய என்று குணாந்தரங்களோடொக்கவருளிச்செய்தே, இதன் வ்யாவ்ருத்தி தோற்ற மீளவும் ஆச்ரித வாத்ஸல்யைக ஜலதே என்றாரிறே. இவ்வாத்ஸல்யந்தான் மாத்ருத்வ ஸம்பந்தத்தாலே, ஈச்வரனிலும் பிராட்டிக்கு அதிசயித்திறேயிருப்பது. ஆகையாலே இருவரும் தாந்தாமங்கீகரிக்கும் தசையில், இச்சேதனனுடைய தோஷகுணஹாநிகளைப் பச்சையாகக் கொண்டு அங்கீகரிப்பர்க ளென்கை.

**விளக்கம்** - (அங்கீகாரத்துக்கவை தன்னையே பச்சையாக்குகை) - அவர்களது அந்தத் தோஷங்களை அவன் மிகவும் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டு, தான் அவர்களை ஏற்றுக் கொள்வதற்கான உபகாரமாக அவற்றைக் கொள்கிறான். அவர்களைத் தள்ளாமல் ஏற்றுக் கொள்வதற்குக் காரணம் அவனுடைய தயை குணமும், பொறுமையும் ஆகும். அவர்களது தோஷங்களையும் ஏற்பது என்பது வாத்ஸல்யம் காரணமாக ஆகும். இதற்குப் பசுவை உதாரணம் காட்டுகிறார் - மனிதனின் கால் தடம் பதிந்த இடத்தில் உள்ள புல்லைப் பசு தின்னாது; ஆனால் தான் ஈன்ற கன்றானது தரையில் விழுந்தவுடன், அதன் மீது உள்ள அழுக்கைத் தனது நாக்கால் துடைத்து விடுகிறது. இது போன்று எம்பெருமான் குணம் உள்ளது. இத்தகைய குணத்துக்கு ஒப்பான குணம் வேறு ஏதும் இல்லை. இதானால் அல்லவோ நம்மாழ்வார் திருவாய்மொழியில் (6-10-10) - நிகரில் புகழாய் - என்றார்? உடையவர் சரணாகதி கத்யத்தில் – அபார காருண்ய சௌசீல்ய வாத்ஸல்ய - என்று மற்ற குணங்களுடன் சேர்த்து வாத்ஸல்யத்தையும் அருளிய போதிலும், இந்த வாத்ஸல்யத்தின் மேன்மையை வெளிப்படுத்த எண்ணியவராக – ஆச்ரித வாத்ஸல்யைக ஜலதே - என்று தனியாக அருளிச்செய்தார். இத்தகைய வாத்ஸல்யம் என்பது ஈச்வரனிடம் உள்ளதைக் காட்டிலும் தாயாக உள்ளதால் பிராட்டியிடம் அதிகமாகவே காணப்படும். ஆகவேதான் இவர்கள் இருவரும் சேதனர்களை ஏற்றுக் கொள்ளும்போது, சேதனர்களின் தோஷங்களை உபகாரமாகக் கொள்வார்கள் என்று கருத்து (உபகாரம் என்றால் உதவுதல்; நம்மிடம் உள்ள தோஷங்கள், அவர்கள் இருவரும் நமக்கு உதவ உபகாரமாக உள்ளன என்று கருத்து).

16. இரண்டுமிடண்டுங் குலையவேணுமென்றிருக்கில் இரண்டுக்கு மிரண்டும் உண்டாயிற்றதாம்.

**அவதாரிகை** – இப்படி புருஷகாரமும் உபாயமும் தோஷ குணஹாநிகள் குலைவதற்கு முன்னேயங்கீகரிக்கிறதென்? அவைகுலைந்தேயங்கீகரிக்கக் கடவோமென்றிருந்தால் வருவதென்னென்னவருளிச் செய்கிறார் (இரண்டுமென்று தொடங்கி).

**விளக்கம்** - தோஷங்கள் மற்றும் தாழ்ந்த குணங்கள் ஆகியவை அனைத்தும் நீங்குவதற்கு முன்னரே புருஷகாரம் மற்றும் உபாயம் ஆகியவை கிட்டும்படி ஏன் செய்ய வேண்டும்?

இவை தீர்ந்த பின்னர் அங்கீகரிப்போம் என்று எம்பெருமானும் பிராட்டியும் இருந்தால் என்ன ஆகும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – இரண்டுமென்கிறது புருஷகாரோபாயங்களை (இரண்டுங் குலைய வேணுமென்றிருக்கையாவது) - இவனையங்கீகரிக்கும் போதைக்கு, இவனுடைய தோஷ குணஹாநிகளிரண்டும் போய்க் கொள்ளவேணுமென்று நினைத்து, ஆச்ரயணோந் முகனாக இவனையங்கீகரியாதிருக்கை. இப்படியிருக்கில் (இரண்டுக்கு மிரண்டு முண்டாகையாவது புருஷகாரத்துக்குமுபாயத்துக்கும் தோஷ குணஹாநிகளிரண்டும் வருகை; எங்ஙனேயென்னில்; தோஷம் வருகையாவது த்வம்மாதா ஸர்வலோகாநாம் தேவதேவோ ஹரி: பிதா, அகிலஜகந் மாதரம், பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய என்கிறபடியே ஸகல சேதநர்க்கும் நிரூபாதிகமான தாயுந் தமப்பனுமாகையாலே இச்சேதநனுடைய நன்மை தீமைகளிரண்டும் தங்கள் தாம்படியான உறவுண்டாயிருக்க, இச்சேதநனுடைய தோஷாதிகளைப் பார்த்து அங்கீகரியாமையாலே, தாத்ருச ஸம்பந்தத்துக்குக் கொத்தை விளைகை. குணஹாநி வருகையாவது – இவனுடைய துக்கங் கண்டிரங்காமையாலும், இவனுடைய தோஷத்தை போக்யமாக்க் கொள்ளாமையாலும் க்ருபா வாத்ஸல்யங்களுக்கு ஹாநி வருகை. அதவா (இரண்டுமுண்டாய்த்ததாம்) என்கிற விடத்திலும், தோஷ குணஹாநிகளாவன – அக்ருத்யகரண க்ருத்யாகரணங்களாகவுமாம்; புருஷகாரத்துக்கு அக்ருத்யகரணமாவது - ஈச்வரனையுமுட்பட தோஷங்காணவொட்டாத தான், தோஷாதிகள் குலைந்தன்றியங்கீகரியேன் என்றிருக்கை; க்ருத்யாகரணமாவது - இவனுடைய தோஷாதிகள் பாராதே கைக்கொண்டு ஈச்வரனோடே சேர்ப்பிக்கையாகிற ஸ்வக்ருத்யத்தைச் செய்யாமை. ஈச்வரனுக்கு அக்ருத்ய கரணமாவது - ஸம்ஸாரி சேதனநருடைய தண்மையைப் பார்த்துக் கைவிடாதே, ஸ்வாபாவிக ஸம்பந்தமே ஹேதுவாக அத்தோஷமே தொடங்கியுண்டாக்குகைக்கு எதிர்சூழல் புக்குத் திரிகிற ஸர்வபூத ஸுஹ்ருத்தான தான், இச்சேதநனை யங்கீகரிக்குமளவில் இவன் தோஷாதிகள் குலைந்தாலொழிய அங்கீகரியேன் என்றிருக்கை; க்ருத்யாகரணமாவது - இவனுடைய தோஷாதிகளைப் பாராதே கைக்கொண்டு ஸ்வக்ருத்யமான அநிஷ்ட நிவ்ருத்த்யாதி களைப் பண்ணாமை இதுதான் சேதநனுக்குச் சொன்ன அக்ருத்யகரணாதிகளைப் போலே சாஸ்த்ரத்தைப்பற்றச் சொல்லுகிறதன்றே! இவர்கள் ஸ்வபாவத்தைப் பற்றிச் சொல்லுகிறவையித்தனையிறே விமுகரையுமுட்பட தோஷ குணஹாநிகள் பச்சையாக மேல் விழுந்தங்கீகரிக்கும் ஸ்வபாவரான இவர்களுக்கு அபிமுக சேதநர்களை யங்கீகரிக்குமளவில் தோஷாதிகள் குலையவேணுமென்றிருக்கைதான் முதலிலே கூடாமையாலே இவர்களுக்கிவை வருகைக்கு அவகாசமில்லையிறே! ஆயிருக்கச்செய்தே இப்படியருளிச்செய்தது - இவ்வர்த்த தத்வமறியாதவர்களுக்கு ஆச்ரயணோந்முக சேதநகதங்களான தோஷகுணஹாநிகள் குலையவேணுமென்றிராமல் அவற்றுடனே யங்கீகரிக்கை இவர்களுக்கு அவச்யகரணீயமென்று அறிவிக்கைக்காக.

**விளக்கம்** – ”இரண்டும்” என்று இங்கு உள்ள பதமானது புருஷகாரம் மற்றும் உபாயம் ஆகும். “இரண்டும் குலைய” – என்பதன் பொருள் என்னவென்றால், ”இவனை ஏற்றுக் கொள்ளும்போது, இவனது தோஷங்கள் மற்றும் தாழ்ந்த குணங்கள் ஆகியவை அழிந்த பின்னரே ஏற்றுக் கொள்ளவேண்டும்”, என்று எண்ணியபடி, தன்னைப் பற்றுவதில் ருசியுள்ள சேதனனை அதுவரையில் ஏற்காமல் இருத்தல் ஆகும். இப்படி எம்பெருமான் இருந்தான் என்றால் இரண்டிற்கும் - புருஷகாரம் மற்றும் உபாயம் ஆகிய இரண்டிற்கும் தோஷம் மற்றும் குணக்கேடு உண்டாகியது - என்று பொருளாகும். எப்படி?
தோஷம் உண்டாவது எப்படி என்றால்: ஸ்ரீவிஷ்ணுபுராணம் (7-9) – த்வம்மாதா ஸர்வலோகாநாம் தேவதேவோ ஹரி: பிதா - நீயே அனைத்து உலகிற்கும் தாயாக உள்ளாய், தேவர்களுக்கும் தேவனாக உள்ள ஸ்ரீஹரி தந்தையாக உள்ளான் - என்றும், சரணாகதி கத்யம் – அகிலஜகந் மாதரம் – அனைத்து உலகின் தாயாக – என்றும், சரணாகதி கத்யம் - பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய - நீ சராசரங்களுடன் உள்ள இந்த உலகின் தந்தை – என்றும் கூறியது காண்க. இந்த வரிகளின்படி எம்பெருமானும் பிராட்டியும் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இன்றி தந்தை மற்றும் தாயாக உள்ளனர். இவர்கள் மனிதர்களின் நன்மைகள் மற்றும் தீமைகள் ஆகிய இரண்டும் தங்களுடையதே என்று கொள்ளும்படியான உறவுமுறையுடன் உள்ளனர். இப்படி உள்ளபோது, மனிதர்களின் குற்றங்களைக் கண்டு அவர்களை ஏற்காமல் விட்டால், அந்த உறவுமுறைக்குத் தோஷம் வந்துவிடும் அல்லவோ?

புருஷகாரம் மற்றும் உபாயம் ஆகிய இரண்டிற்கும் குணக்கேடு எப்படி உண்டாகும் என்றால் – மனிதர்களின் தோஷங்களைக் கண்டு இரக்கம் கொள்ளவில்லை என்றாலும், அந்தத் தோஷங்களை இன்பமாக ஏற்றுக்கொள்ளாமல் விட்டாலும் இவர்களின் க்ருபை மற்றும் வாத்ஸல்யத்திற்குக் கேடு உண்டாகிறது. மேலே உள்ளபடி பொருள் கொள்ளாமல் “இரண்டுமுண்டாய்த்தாம்” என்பதற்கு வேறுவிதமாகவும் பொருள் கொள்ளலாம். அதாவது புருஷகாரம் மற்றும் உபாயம் ஆகிய இரண்டிற்கும் தோஷம் மற்றும் குணக்கேடு என்பது செய்யக்கூடாததைச் செய்தல் மற்றும் செய்யவேண்டியதைச் செய்யாமை என்று உண்டாகின்றன என்று கொள்ளலாம். இதனை விளக்குவோம்.

புருஷகாரத்திற்குச் செய்யத்தகாதவற்றைச் செய்தல் என்ற குற்றம் என்னவென்றால் - மக்களின் குற்றங்களுக்கு ஏற்ப அவர்களைத் தண்டிக்கும் இயல்பு கொண்டவனாகவே எம்பெருமான் உள்ளான். இப்படி அவன் நம்மைத் தண்டிக்காதபடி பார்த்துக்கொள்ளும் இயல்பை உடையவளாகப் பிராட்டி உள்ளாள். ஆயினும் பிராட்டி அந்த இயல்பை மாற்றிக் கொண்டு, “இவர்களின் தோஷங்கள் தீர்த்தால் மட்டுமே ஏற்பது”, என்று இருத்தல் தோஷமே ஆகும். புருஷகாரத்திற்குச் செய்யவேண்டியதைச் செய்யாமை என்ற குற்றம் என்னவென்றால் - மனிதர்களின் குற்றங்களை ஆராயாமல், அவர்களை ஏற்றுக்கொண்டு எம்பெருமானிடம் சேர்க்கின்ற தனது செயலைப் பிராட்டி செய்யாமை

ஆகும். எம்பெருமானுக்குச் செய்யத்தகாதவற்றைச் செய்தல் என்ற குற்றம் என்னவென்றால் – மக்களின் தாழ்வைக் கண்டு அவர்களைக் கைவிடாமல், அவர்களுடன் இயல்பாகவே தனக்கு உள்ள உறவுமுறையை எண்ணியபடி இருப்பவன் எம்பெருமான் ஆவான்; அந்த உறவுமுறை காரணமாகவே தன்னிடம் த்வேஷம் பாராட்டினாலும், தங்களது ஸ்வபாவத்திற்கு மாறாகத் திரிந்தாலும் அவர்களுக்கு நன்மையை மட்டுமே எண்ணுகிறான்; ஆயினும் அவன் மக்களை ஏற்றுக் கொள்ளும்போது, “இவர்களின் தோஷங்கள் நீங்கினால் மட்டுமே ஏற்பேன், இல்லையேல் ஏற்கமாட்டேன்”, என்று இருத்தல் என்பது “செய்யத்தகாதவற்றைச் செய்தல்” என்ற தோஷத்தை உண்டாக்கிவிடும். அடுத்து எம்பெருமானுக்குச் செய்யவேண்டியதைச் செய்யாமை என்னும் குற்றம் எப்படி உண்டாகும் என்றால் – மனிதர்களின் தோஷங்களைக் கண்டு கொள்ளாமல், அவர்களை ஏற்றுக் கொண்டு, தனது செயலான மக்களுக்கு விருப்பமாக இல்லாதவற்றை விலக்குதல் முதலானவற்றைச் செய்யாமல் இருத்தல் ஆகும்.

ஆனால் இந்த இரண்டு தோஷங்களும் (செய்யத்தகாதவற்றைச் செய்தல், செய்ய வேண்டியதைச் செய்யாமை) மனிதர்களுக்கு எவ்விதம் சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டதைச் செய்யவேண்டும், விலக்கப்பட்டதைத் தவிர்க்கவேண்டும் என்று பணிப்பது போன்று எம்பெருமானுக்கோ பிராட்டிக்கோ அல்ல; இவர்களில் தன்மைகளைக் கருத்தில் கொண்டு கூறப்பட்டதே ஆகும்.

தங்கள் மீது வெறுப்புடன் உள்ளவர்கள் விஷயத்தில் கூட, அவர்களது தோஷங்கள் மற்றும் குணக்கேட்டினை ஆராயாமல், அவர்களை அங்கீகரிக்கும் தன்மை கொண்டவர்களாகவே இருவரும் உள்ளனர். இப்படித் தங்களிடம் த்வேஷம் பாராட்டுபவர்களிடம் கூட தன்மையுடன் உள்ள இவர்கள், தங்களைப் பற்றுவதில் ருசி உள்ளவர்கள் விஷயத்தில், அவர்களை ஏற்பதற்குத் தோஷம் போன்றவை நீங்கவேண்டும் என்று காத்திருப்பது என்பது ஏற்படாது.

ஆகவே இந்தத் தோஷங்கள் இவர்களுக்கு வருவதற்கு வாய்ப்பு இல்லை. அப்படி உள்ளபோதிலும் ஏன் இந்தச் சிந்தனை இவருக்குத் (ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர்) தோன்றியது என்றால்: பிராட்டி மற்றும் எம்பெருமான் ஆகிய இருவரின் உண்மையான தன்மைகளை அறியாதவர்களுக்கு - தங்களை (பிராட்டி, எம்பெருமான்) அண்டுவதில் ருசி உள்ளவர்களின் தோஷங்களும் குணக்கேடுகளும் அழியவேண்டும் என்று இவர்கள் காத்திருப்பதில்லை - என்று உணர்த்துவதற்காகவும், அவற்றுடனேயே ஏற்கின்றனர் என்று உணர்த்துவதற்காகவும் ஆகும்.

17. இரண்டுங் குலைந்ததென்றிருக்கில் இத்தலைக்கிரண்டும் உண்டாயிற்றதாம்.

**அவதாரிகை** – இப்படி தோஷாதிகள் குலைந்தாலொழிய அங்கீகரியோமென்றிருக்கில் அத்தலைக்கு அவையிரண்டும் வருமென்னுமிடம் சொல்லி, தோஷாதிகள் குலையப்பட்டன்றோ நம்மை அங்கீகரித்ததென்றிருக்கில் இத்தலைக்கவையிரண்டும் வருமென்கிறார் மேல் (இரண்டுங் குலைந்ததென்று தொடங்கி).

**விளக்கம்** – இப்படியாக நமது தோஷங்கள் மற்றும் குணங்கள் ஆகிய இரண்டும் கழிந்தால் மட்டுமே நம்மை ஏற்பது என்று எம்பெருமானும் பிராட்டியும் இருந்தார்கள் என்றால், அதனால் அவர்களுக்குச் செய்யத்தகாதவற்றைச் செய்தல் மற்றும் செய்யத்தக்கதைச் செய்யாமை என்ற இரண்டு குற்றங்களும் உண்டாகும் என்றார். இனி நமது மனதில், "நமது தோஷம் மற்றும் குணக்கேடுகள் ஆகிய இரண்டும் கழிந்துவிட்டன, அதனால் அல்லவோ நம்மை இவர்கள் ஏற்றார்கள்", என்று எண்ணினோம் என்றால், அந்தக் குற்றங்களும் தோஷங்களும் நம்மிடம் வந்து விடும் என்கிறார்.

**வ்யாக்யானம்** - (இரண்டுங் குலைந்ததென்றிருக்கையாவது) - இத்தனை நாளும் நம்மை யங்கீகரியாதிருந்தவர்கள் இன்றங்கீகரித்தது நம் தோஷாதிகள் குலையப்பட்டன்றோ! ஆகையால் நமக்கவை குலைந்ததென்றநுஸந்தித்திருக்கை. இப்படியிருக்கில் (இத்தலைக்கு இரண்டுமுண்டாகையாவது) - அக்ருத்யகரணமும் க்ருத்யாகரணமும் வருகை. எங்ஙனேயென்னில்: இவ்வதிகாரிக்கு, அநாதிகாலமங்கீகரியாதவர்கள் இன்று நம்மையங்கீகரித்தது நம்முடைய தோஷகுணஹாநிகளிரண்டுங்குலைந்தவாறேயன்றோ! என்றநுஸந்திக்கை அக்ருத்யமாயிருக்க அத்தைச் செய்கையாலும்; நீசனேன் நிறைவொன்றுமிலேன், அமர்யாத:, புத்தவாச நோச, அதிக்ராமந்நாஜ்ஞாம் இத்யாதிப்படியே – நம்முடைய தோஷ குணஹாநிகளிப்போதளவாகவொன்றுங் குலைந்ததில்லையென்றும், இப்படியிருக்கச்செய்தே தோஷாதிகளே பச்சையாக நம்மை யவனங்கீகரித்தருளுவதே! என்றுமநுஸந்திக்கை க்ருத்யமாயிருக்க அத்தைச் செய்யாமையாலும் இரண்டும் வருமிறே.

**விளக்கம்** – (இரண்டுங் குலைந்ததென்றிருக்கையாவது) என்பதன் பொருள் - இத்தனை காலம் நம்மை ஏற்காமல் இருந்த எம்பெருமானும் பிராட்டியும் இப்போது நம்மை

ஏற்றுக்கொண்டார்கள் என்றால் நமது தோஷங்கள் கழிந்து விட்டதால் அல்லவோ? எனவே நம்மிடம் இருந்து அந்தத் தோஷங்கள் விலகிவிட்டன என்று எண்ணியபடி இருந்தல் – ஆகும். இவ்விதம் எண்ணினால் (இத்தலைக்கு இரண்டுமுண்டாகையாவது) – செய்யத்தகாதவற்றைச் செய்தல், செய்யத்தக்கதைச் செய்யாமை ஆகிய இரண்டு குற்றங்களும் நமக்கு உண்டாகிவிடும். எப்படி? "எல்லையற்ற காலமாக நம்மை ஏற்காமல் இருந்தவர்கள் இன்று நம்மை ஏற்றுக்கொண்டது ஏனென்றால் நமது தோஷங்கள் மற்றும் குணக்கேடுகள் கழிந்ததால் ஆகும்", என்று எண்ணுவது செய்யத்தகாத செயலாகும். இதனைச் செய்தல் மூலம் "செய்யத்தகாதவற்றைச் செய்தல்" என்ற குற்றம் ஏற்படும். அடுத்து கீழே உள்ள வரிகள் காண்க:

- திருவாய்மொழி (3-3-4) - நீசனேன் நிறைவொன்றுமிலேன்.
- ஆளவந்தாரின் ஸ்தோத்ர ரத்னம் (62) – அமர்யாத: - (பலவிதமான குற்றங்கள் தன்னிடம் இருப்பதாகக் கூறி) - நான் எவ்விதம் கரை ஏறி உனது திருவடிகளுக்குக் கைங்கர்யம் செய்யப்போறேன்.
- ஸ்ரீவரதராஜஸ்தவம் (70) - புத்தவாச நோச - வரதா! பலவிதமான பாவங்களில் வசப்பட்டவனாக நான் உள்ளேன்.
- ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-91) - அதிக்ராமந்நாஜ்ஞாம் – ஸ்ரீரங்கராஜனே! உன்னுடைய பொறுமை என்னும் குணம் காரணமாக, எல்லையற்ற குற்றங்கள் செய்த நான், உனக்கு வேண்டாதவனாக ஆக மாட்டேன்.

மேலே உள்ள பல வரிகளின்படி நமது குற்றங்கள் இன்றுவரை குறையவில்லை என்றும்; இப்படியாக நாம் உள்ளபோதிலும் நமது தோஷங்கள் மற்றும் குணக்கேடுகளையே உபகாரமாகக் கொண்டு நம்மை எம்பெருமானும் பிராட்டியும் ஏற்கிறார்கள் என்றும் நினைக்கவேண்டும். இந்த எண்ணம் இல்லாத காரணத்தால் செய்யத்தக்கதைச் செய்யாமை என்ற குற்றம் உண்டாகும்.

## 18. ராக்ஷஸிகள் தோஷம் ப்ரஸித்தம்.

**அவதாரிகை** - இப்படி புருஷகாரமுமுபாயமும் தோஷாதிகள் பச்சையாக அங்கீகரித்த விடமுண்டோவென்னுமபேக்ஷையிலே, தத்ததங்கீகாரம் பெற்ற ராக்ஷஸிகளுடையவும்

அர்ஜுனனுடையவும் தோஷங்களை தர்சிப்பிக்கவே அது ஸித்திக்குமென்று நினைத்து, ப்ரதமம் ராக்ஷஸிகள் தோஷங்களை தர்சிப்பிக்கிறார் (ராக்ஷஸிகள்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாகத் தோஷங்கள் மற்றும் குணக்கேடுகள் ஆகியவற்றை உபகாரமாகக் கொண்டு எம்பெருமானோ அல்லது பிராட்டியோ அங்கீகரித்த நிகழ்ச்சி ஏதும் உண்டா என்ற கேள்வி எழலாம். புருஷகாரத்தின் ஏற்பு என்பது அரக்கிகளுக்கும், உபாயத்தின் ஏற்பு என்பது அர்ஜுனனுக்கும் பொருந்தும். இவை அவர்களுடைய தோஷங்களை உணர்த்துகின்றதால், அவையே இக்கேள்விக்கு விடையளிக்கும் என்று முடிவு செய்தார். முதலில் அரக்கியர்களின் தோஷங்களைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** - ஏகாக்ஷீ ஏககர்ணீ முதலான எழுநூறு ராக்ஷஸிகளும் பரஹிம்ஸை பண்ணப் பெறில் உண்ணாதே தடிக்கும்படி ப்ரக்ருத்யா பாபசீலைகளாய், பத்துமாஸமொருபடிப்பட தர்ஜநபர்த்ஸநம் பண்ணி நலிந்து போந்தவர்களிறே; (இவர்கள் தோஷம் ப்ரஸித்தம்) என்றது - ஸ்ரீராமாயணம் நடையாடும் தேசத்திலறியாதாரில்லை யென்றபடி ஏவம்பூதைகளானவர்களைக் குறித்து, ராஜ ஸம்ச்ரய வச்யாநாம், பாபாநாம் வா சுபாநாம்வா என்று குற்றத்தைக் குணமாக உபபாதித்து, திருவடியோடே மன்றாடி ரக்ஷிக்கையாலே, தோஷமே பச்சையாகவங்கீகரித்தன்மை ப்ரஸித்தமென்று கருத்து.

**விளக்கம்** - ஒரு கண் உடையவள், ஒரு காது உடையவள் என்று எழுநூறு விதமான அரக்கிகள் அசோக வனத்தில் இருந்தனர். இவர்கள், மற்ற உயிர்களை வதை செய்யவில்லை என்றால் உண்ணமாட்டோம் என்ற சபதம் பூண்ட நிலையில் உள்ளவர்கள் ஆவர். இப்படியாக மிகப் பெரும் பாவங்கள் செய்வதையே இவர்கள் இயல்பாகக் கொண்டவர்கள் ஆவர். மேலும், பத்து மாதங்கள் சீதையைத் தங்கள் கையாலும், வாயாலும் பயமுறுத்தியபடி இருந்தவர்கள் ஆவர். இராமாயணம் சுற்றி வரும் பூமியான இங்கு, இவர்களது தோஷம் மிகவும் பிரபலம் ஆகும். ஆக இதனை அறியாதவர்கள் இங்கு இல்லை. இவர்களின் தோஷங்கள் குறித்து சீதை அனுமனிடம் பின்வருமாறு கூறுகிறாள்:

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் – ராஜ ஸம்ச்ரய வச்யாநாம் - அரச ஆணையால் செயல் புரிபவர்களும், அப்படிச் செய்யாமல் இருந்தால் அவனால் தண்டிக்கப்படுபவர்களும் ஆகிய இப்பணிப்பெண்கள் மீது யார் கோபம் கொள்வர்?

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் - பாபாநாம் வா சுபாநாம்வா - உனது எண்ணப்படி இவர்கள் தீ வினை செய்தவர்கள், என் எண்ணப்படி இவர்கள் நல்லதே செய்பவர்கள்.

இப்படியாக இந்த அரக்கிகளுக்காகச் சீதை அனுமனிடம் மன்றாடி நின்று, அவர்களைக் காத்தல் என்ற செயலானது, அரக்கியர்களின் தோஷங்களைப் பிராட்டி எப்படி உபகாரமாகக் கொண்டாள் என்பதை உணர்த்துகின்றது.

**வ்யாக்யானம்** - குணஹாநி சொல்லாதொழிந்தது, தோஷம் பச்சையாமிடத்தில் குணஹாநி பச்சையாமென்னுமிடம் சொல்லவேண்டாவிறே என்று. இவர்கள் தங்களுக்கு குண ஹாநியாவது - இடைவிடாமல் நலிந்து போருகிறவிடத்தில் இவளும் நம்மோபாதியொரு பெண்பிறந்தவளன்றே என்றாகிலும் மறந்தும் அல்பம் நெஞ்சிரக்கமுண்டாதல்; பவேயம் சரணம் ஹி வ: என்றதற்குப் பின்பு நலிகிறவிடத்தில், ஐயோ! இப்படி சொன்னவளன்றோ! என்று சற்றும் நெஞ்சுளுக்குதல் செய்யாமை முதலானவை.

**விளக்கம்** - இங்கு அரக்கியர்களின் குணக்கேடு பற்றிக் கூறாமல் தோஷங்கள் மட்டும் கூறப்பட்டது ஏன்? தோஷங்கள் என்பது மட்டுமே உபகாரமாக ஆகும்போது, குணக்கேடுகளும் உபகாரம் ஆகும் என்பது சொல்லாமலேயே விளங்கும் என்று கருத்து. அரக்கியர்களின் குணக்கேடு என்பது என்ன? இடைவிடாமல் சீதையைத் துன்புறுத்தும் போது, ”இவளும் நம் போன்று ஒரு பெண் அல்லவோ?”, என்ற எண்ணம் சற்றே உண்டானாலும், அவர்கள் மனதில் அவள் மீது இரக்கம் என்பது மறந்தும் உண்டாகவில்லை. சீதை அவர்களிடம் - பவேயம் சரணம் ஹி வ: – நான் உங்களைப் பாதுகாப்பவள் – என்று கூறினாள். இதற்குப் பின்னரும் அவளைத் துன்புறுத்தும்போது மனதில், “ஐயோ! இப்படி நமக்கும் கூறியவள் அல்லவோ?”, என்று சற்று கூட நெஞ்சத்தில் எண்ணாமல் இருந்தல்.

19. ஜிதேந்த்ரியரில் தலைவனாய், ஆஸ்திகாக்ரேஸரனாய், கேசவஸ்யாத்மா என்று க்ருஷ்ணனுக்கு தாரகனாயிருக்கிற அர்ஜுனனுக்கு தோஷமேதென்னில், பந்துக்கள் பக்கல் ஸ்நேஹமும் காருண்யமும் வதபீதியும்.

**அவதாரிகை** - இப்படி தோஷப்ரஸித்தி அர்ஜுனன் பக்கலில்லாமையாலும், குணப்ரதையுண்டாகையாலும் இவனுக்கு தோஷமேதென்கிற சங்கையையநுவதித்துக் கொண்டு தத்தோஷங்களை தர்சிப்பிக்கிறார் (ஜிதேந்த்ரியரிலென்று தொடங்கி).

**விளக்கம்** – அரக்கிகள் போன்று தோஷங்கள் அல்லது குணங்க்கேடுகள் ஏதும் அர்ஜுனனிடம் இல்லை. மேலும் பிரபலமான பல உயர்ந்த குணங்கள் கொண்டவன் ஆவான். ஆயினும் அர்ஜுனனின் குற்றம் என்பது என்ன ? இப்படி ஒரு கேள்வி எழலாம் என்பதைத் திருவுள்ளத்தில் பற்றியவராக, அவனது குற்றங்களை இங்கு விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** - (ஜிதேந்த்ரியரில் தலைவன்) என்றது - ஆபரணஸ்யாபரணம் ப்ரஸாதந விதே ப்ரஸாதந விசேஷ: உபமாநஸ்யாபி ஸகே ப்ரத்யுபமாநம் வபுஸ் தஸ்யா: என்னும் வைலக்ஷண்யமுடைய ஊர்வசி வந்து மேல் விழ, முறை கூறி நமஸ்கரித்துக் கடக்க நின்றவனாகையாலே, இந்த்ரிய ஜயம் பண்ணினாரில் தனக்கு மேற்பட்டாரில்லாதவ னென்கை.

**விளக்கம்** – "ஜிதேந்த்ரியரில் தலைவன்" என்பதன் மூலம் உணர்த்தபட்டது என்ன வென்றால்: ஆபரணஸ்யாபரணம் ப்ரஸாதந விதே ப்ரஸாதந விசேஷ: உபமாநஸ்யாபி ஸகே ப்ரத்யுபமாநம் வபுஸ் தஸ்யா: - ஆபரணங்கள் அனைத்திற்கும் ஆபரணமாகவும், அலங்காரங்கள் அனைத்திற்கும் அலங்காரமாகவும், உபமானங்கள் அனைத்திற்கும் உபமானமாகவும் ஊர்வசியின் சரீரம் உள்ளது - என்று கூறும்படியாக உள்ளவளும், அழகு நிறைந்தவளும் ஆகிய ஊர்வசி அர்ஜுனனை நாடி வந்தபோதிலும், இவன் முறையாக வணங்கி நின்றான். ஆக புலன்களைத் தன் வசப்படுத்தியவர்களில் இவனுக்கு மேம்பட்டவர்கள் இல்லை என்னும்படியாக உள்ள அர்ஜுனன் – இதுவே உணர்த்தப்பட்டது.

**வ்யாக்யானம்** - (ஆஸ்திகாக்ரேஸரன்) என்றது - தர்மாதர்ம பரலோக சேதநேச்வராதிகளுக்கு ப்ரதிபாதகமான சாஸ்த்ரத்தில் ப்ராமாண்ய புத்தியுடையவர்களுக்கு முன் நடக்குமவனென்கை.

**விளக்கம் -** "ஆஸ்திக அக்ரேஸரன்" என்றால் - தர்மம், அதர்மம், பரமபதம், சேதனம், ஈச்வரன் போன்ற பல பிரிவுகளைத் தெளிவாக கூறுவது சாஸ்திரங்களாகும். இந்தச் சாஸ்த்ரங்களை ப்ரமாணமாகக் கொண்டு பலர் வாழ்கின்றனர். இப்படிப்பட்ட அறிவை உடையவர்களில் முதன்மையானவன் என்று கருத்து.

**வ்யாக்யானம்** – (கேசவஸ்யாத்மா என்று க்ருஷ்ணனுக்கு தாரகனாயிருக்கிற) என்றது – அர்ஜுந: கேசவஸ்யாத்மா க்ருஷ்ணச் சாத்மா கிரீடிந: என்று அந்யோந்யம் ப்ராணபூதராயிருப்பர்களென்கையாலே, இவனைப் பிரியில் க்ருஷ்ணன் தரிக்கமாட்டானென்னும்படி அபிமத விஷயமாயிருக்குமவனென்கை. இப்படியிருக்க (அர்ஜுநனுக்கு தோஷமேது) என்று சங்கை (என்னில்) என்றது – அநுவாதம். தோஷங்கள் தன்னைச் சொல்லுகிறது (பந்துக்கள் பக்கல் ஸ்நேஹமும் காருண்யமும் வதபீதியும்) என்று. இவற்றில் ஸ்நேஹ காருண்யங்கள் தோஷங்களாகிறது - அஸ்தாநே க்ருதங்களாகையாலே; வதபீதி தோஷமாகிறது - ஸ்வதர்மத்தில் அதர்மபுத்த்யா வந்ததாகையாலே; அஸ்தாந ஸ்நேஹ காருண்ய தர்மாதர்ம தியாகுலம் என்றிறே ஆளவந்தாரருளிச்செய்தது. தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ: என்கிறபடியே - யுத்தேச்சையாலே இரண்டு தலையும் வந்தணைந்து நின்ற பின்பு யுத்தமே கர்த்தவ்யமாயிருக்க, அத்தசையிலே, ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண ந ச ராஜ்யம் ஸுகாநிச, கிம் நோ ராஜ்யேந கோவிந்த கிம் போகைர் ஜீவதேநவா, யேஷாமர்த்தே காங்க்ஷிதம் நோ ராஜ்யம் போகாஸ் ஸுகாநிச - த இமே வஸ்திதாயுத்தே ப்ராணாந் த்யக்த்வா தநாநிச இத்யாதிப்படியே இவர்களைக் கொன்று நாம் ஜீவிப்பதொரு ஜீவநமுண்டோவென்று பந்துக்கள் பக்கல் பண்ணின ஸ்நேஹம் ஸ்வவர்ண விருத்தமாகையாலே நிஷித்தமிறே; தாந் ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேயஸ் ஸர்வாந் பந்தூநவஸ்திதாந், க்ருபயா பரயாவிஷ்டோ விஷீதந்நிதமப்ரவீத் என்னும்படி - அத்தசையில் பண்ணின காருண்யமும் பச்வாலம்பநத்தில் காருண்யம்போலே நிஷித்தமிறே. கதம் நஜ்ஞேயமஸ்மாபி: பாபாதஸ்மாந்நிவர்த்திதும், குலக்ஷய க்ருதம் தோஷம் ப்ரபச்யத்பிர் ஜநார்த்தந என்று தொடங்கி, அஹோ பத மஹத் பாபம் கர்த்தும் வ்யவஸிதா வயம் - யத் ராஜ்ய ஸுகலோபேந ஹந்தும் ஸ்வஜந முத்யதா: என்னுமளவும் ஸ்வவர்ண தர்மமான வதத்திலே அதர்ம புத்த்யா பண்ணின பீதியுமப்படியேயிறே.

**விளக்கம்** – "கேசவஸ்யாத்மா என்று க்ருஷ்ணனுக்கு தாரகனாயிருக்கிற" என்றால்: அர்ஜுந: கேசவஸ்யாத்மா க்ருஷ்ணச் சாத்மா கிரீடிந: - அர்ஜுனன் கேசவனுக்கு ஆத்மாவாக உள்ளான்; க்ருஷ்ணன் அர்ஜுனனுக்கு ஆத்மாவாக உள்ளான் – என்று கூறுவதற்கு ஏற்ப இந்த இருவரும் ஒருவரின் உயிராக மற்றவர் உள்ளனர். ஆக அர்ஜுனனை விட்டுப் பிரிந்தால் க்ருஷ்ணன் தாங்கமாட்டான் என்பதற்கு ஏற்ப க்ருஷ்ணனின் ப்ரியமான விஷயமாக உள்ளவன். இப்படியாக அர்ஜுனன் உள்ளபோது, அவனுக்கு என்ன தோஷம் உள்ளது என்ற சந்தேகம் எழ, அதற்குச் சமாதானம் அருளிச் செய்கிறார். அந்தத் தோஷங்கள் பற்றி இங்கு அருளிச் செய்கிறார். இதனை - பந்துக்கள் பக்கல் ஸ்நேஹமும் காருண்யமும் வதபீதியும் - என்றார். இவற்றில் சிநேகம், கருணை முதலியவை எப்படித் தோஷங்கள் ஆயின? அவை அவசியம் இல்லாத இடங்களில் வெளிப்படுவதால், தோஷங்கள் ஆனது. வதபீதி தோஷம் உண்டானது (கொல்வது என்ற செயல் காரணமாக உண்டான பயம்; அந்தப் பயமே தோஷம்) எப்படி? க்ஷத்ரியனான தனது குல தர்மத்தை ஏற்று நடந்தாலும், பாவம் உண்டாகும் என்ற தவறான எண்ணம் காரணமாக இந்தத் தோஷம் உண்டானது. இதனை ஸ்வாமி ஆளவந்தார் - அஸ்தாந ஸ்நேஹ காருண்ய தர்மாதர்ம தியாகுலம் - தவறான இடத்தில் தோன்றிய அன்பு காரணமாக அல்லவோ தர்மத்தை அதர்மம் என்று எண்ணிக் கலங்கினான் – என்றார். தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ: – தர்மக்ஷேத்ரமான குருக்ஷேத்ரத்தில் இருவரும் வந்து நின்றனர் - என்று கூறுவதற்கு ஏற்ப, யுத்தம் செய்யவேண்டும் என்ற எண்ணம் மேலிட இரண்டு பிரிவினரும் யுத்தபூமியில் வந்து நின்றனர். அதன் பின்னர், அங்கு யுத்தம் புரிதல் என்பதே கைக்கொள்ளவேண்டிய செயலாகும். அப்போது அதனை விடுத்து, கீழே உள்ளது போன்று (கீதை: 1-32, 33) அர்ஜுனன் கூறினான்:

- கீதை (1-32) - ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண ந ச ராஜ்யம் ஸுகாநிச, கிம் நோ ராஜ்யேந கோவிந்த கிம் போகைர் ஜீவதேநவா – க்ருஷ்ணா! இப்படிப்பட்ட வெற்றியை நான் விரும்பவில்லை. எனக்கு இவ்விதம் கிட்டும் அரசபதவியோ சுகங்களோ வேண்டாம். கோவிந்தா! அரச பதவி, நாடு, மோகங்கள், இந்த வாழ்க்கை ஆகியவை மூலம் நமக்கு என்ன பயன்?

- கீதை (1-33) - யேஷாமர்த்தே காங்க்ஷிதம் நோ ராஜ்யம் போகாஸ் ஸுகாநிச - த இமே வஸ்திதாயுத்தே ப்ராணாந் த்யக்த்வா தநாநிச – நாம் அரச பதவி, செல்வம்

போன்றவற்றை யாருக்காக விரும்புகிறோம்? இந்த உறவினர்களுக்காக அல்லவோ? அப்படிப்பட்ட இவர்கள் இன்று தங்கள் உயிர் மற்றும் செல்வங்கள் ஆகியவற்றையும் இழக்கத் தயாராக நிற்கின்றனர்.

“இப்படியாக இந்த உறவினர்கள் பலரையும் அழித்து, அதன் மூலம் எனக்கு ஒரு வாழ்வு உள்ளதோ?”, என்றான். ஆக, தனது உறவினர்கள் மீது கொண்ட அன்பானது இவனைத் தனது குலதர்மத்தை விட்டு விலகச் செய்ததால், அந்த அன்பு தவிர்க்கப்பட வேண்டியது அல்லவோ?

மேலும் கீதை (1-27) – தாந் ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேயஸ் ஸர்வாந் பந்தூநவஸ்திதாந், க்ருபயா பரயாவிஷ்டோ விஷீதந்நிதமப்ரவீத் - குந்தியின் புத்திரனான அர்ஜுனன் தன் முன்பாகத் தனது உறவினர்கள் அனைவரும் நிற்பதைக் கண்டான்; இதனால் கருணை கொண்டவனாகவும், துன்பம் அடைந்தவனாகவும் பின்வருமாறு உரைத்தான் – என்றது காண்க. யாகத்தில் செய்யும் உயிர் வதைக்கு அஞ்சுவது போன்று இங்கு ஏற்பட்ட கருணை என்பதும் விலக்கப்பட வேண்டியதாகும்.

அடுத்து கீதை (1-39) - கதம் நஜ்ஞேயமஸ்மாபி: பாபாதஸ்மாந்நிவர்த்திதும், குலக்ஷய க்ருதம் தோஷம் ப்ரபச்யத்பிர் ஜநார்த்தந - க்ருஷ்ணா! நாம் நமது குலத்தின் அழிவு பற்றியும், உண்டாகும் பாவங்கள் பற்றியும் அறிவோம்; எனவே இந்தப் பாவங்களில் இருந்து விலகுவது பற்றி நாம் எவ்விதம் அறியாமல் இருப்போம் - என்று தொடங்கி, (1-45) - அஹோ பத மஹத் பாபம் கர்த்தும் வ்யவஸிதா வயம் - யத் ராஜ்ய ஸுகலோபேந ஹந்தும் ஸ்வஜந முத்யதா: - அரசபதவி என்பதன் மீது ஆசை கொண்டு நமது உறவினர்களையும் அழிப்பதற்குத் தயாராக உள்ளோம், இது மிகவும் பெரிய பாவத்தை ஏற்படுத்தும் என்று தெரிந்தும் அதனைச் செய்யத் தயாராக உள்ளோமே – என்று முடித்தான். இதன் மூலம் தனது குலதர்மமான “எதிரியை அழித்தல்” என்பதையும் அதர்மமாகக் கொள்ள வைக்கும் அச்சம் தள்ளப்பட வேண்டியதாகிறது.

20. த்ரௌபதீ பரிபவங் கண்டிருந்தது க்ருஷ்ணாபிப்ராயத்தாலே ப்ராதாந தோஷம்.

**அவதாரிகை** - இவையெல்லாம் அப்ரதாநம், இன்னமும் ப்ரதான தோஷம் வேறே யென்கிறார் (த்ரௌபதீயென்று தொடங்கி).

**விளக்கம்** - மேலே கூறப்பட்ட பலவிதமான தோஷங்கள் அர்ஜுனனுக்கு முக்கியமானவை அல்ல; அவன் செய்த முதன்மையான குற்றத்தை இங்கு கூறுகிறார்.

**வ்யாக்யானம்** - முன்பு த்ரௌபதியை துர்யோதநாதிகள் பரிபவிக்கிறபடியைக் கண்டிருக்கச் செய்தே, சூதிலே தோற்றமையை நினைத்து தர்மபீதியாலே பொறுத்திருந்தாலும், கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம் என்று க்ருஷ்ணனை சரணம் புகுந்த பின்பு பரிபவிக்கிறவளவில், பகவதாச்ரிதரைப் பிறர் பரிபவிக்கக் கண்டால் சக்தனாகில் விலக்கவேண்டும், அசக்தனாகில் இழவோடே அவ்வருகே போகவேணும் என்னும் விசேஷ சாஸ்த்ர மர்யாதையைப் பார்த்தாதல், தன்னளவில் க்ருஷ்ணனுக்குண்டான ஸ்நேஹ பக்ஷபாதங்களை நினைத்து அவனை சரணம் புகுந்தவள் பரிபவப்படப் பார்த்திருந்தால் அவன் முகத்திலே நாளை விழிக்கும்படி என்! என்றாதல், சரக்கெனவெழுந்திருந்து விலக்கவிறேயடுப்பது; அத்தைச் செய்யாதே முன்புத்தையிற் காட்டில் ஒரு விசேஷமறவிருந்தானிறே. இதுவேயாய்த்து இவன் தோஷங்களெல்லாவற்றிலும் ப்ரதாநமாக க்ருஷ்ணன் திருவுள்ளத்திலே பட்டுக்கிடப்பது. அத்தைப் பற்ற (க்ருஷ்ணாபிப்ராயத்தாலே ப்ரதாநதோஷம்) என்கிறது. தோஷத்துக்கு ப்ராதாந்யம் க்ரௌர்யத்தாலேயிறே, அல்லாதவை போலன்றிக்கே நக்ஷமாமி என்னும்படியான தோஷமிறேயிது.

**விளக்கம்** - துரியோதனன் உள்ளிட்ட பலரும் திரௌபதியை சபையில் துடிக்க வைத்த போதிலும், தான் சூதில் தோற்ற காரணத்தினால் தர்மம் கருதி, தர்மத்திற்கு அச்சம் கொண்டவனாகப் பேசாமல் நின்றான். ஆனால் திரௌபதி - கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம் - கோவிந்தனே! தாமரை போன்ற கண்கள் கொண்டவனே! உன்னைச் சரணம் புகுந்தேன் – என்று க்ருஷ்ணனிடம் சரணம் புகுந்தாள். இவ்விதம் எம்பெருமானிடம் சரணம் புகுந்த ஓர் உயிர், மற்றவர்களால் துன்புறுத்தப்படும்போது ஆற்றல் உள்ள ஒருவன் அவர்களை விலக்கவேண்டும்; ஆற்றல் இல்லாதவனாக

இருந்தால் கனத்த மனத்துடன் அங்கிருந்து விலகிச் சென்றுவிடவேண்டும் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இந்த சாஸ்த்ரங்களுக்காக அல்லாவிட்டாலும், தன் மீது க்ருஷ்ணனுக்கு உள்ள தோழமை மற்றும் பக்ஷபாதம் ஆகியவற்றையாவது அர்ஜுனன் அப்போது உணர்ந்து கொண்டு, “எனது க்ருஷ்ணனைச் சரணம் புகுந்தவள் இவ்விதம் துயரம் கொள்ளும்போது நான் ஏதும் செய்யாமல் பார்த்துக்கொண்டிருந்தால், நாளை க்ருஷ்ணனின் முகத்தில் எப்படி விழிப்பது”, என்று எண்ணி இருக்கவேண்டும். இதனால் சட்டென்று எழுந்து அவர்களை விலக்கி இருக்கவேண்டும். ஆனால் அதனைச் செய்யாமல், முன்பு இருந்ததைக் காட்டிலும் மெத்தனமாக எந்தவிதமான வேறுபாடும் இன்றி அமர்ந்திருந்தான். இதுவே க்ருஷ்ணனின் திருவுள்ளத்தில் இவன் செய்த பல குற்றங்களில் முதன்மையான குற்றமாகத் தைத்தது. இதனை உணர்த்தவே ”க்ருஷ்ணாபிப்ராயத்தாலே ப்ரதாநதோஷம்” என்று அருளிச்செய்தார். ஒரு குற்றத்திற்கு முக்கியமான ஒன்று அந்தக் குற்றம் மூலம் உண்டாகும் கொடுமையே ஆகும். அர்ஜுனன் செய்த இந்தக் குற்றம் மற்றவை போல் அல்லாமல் – ந க்ஷமாமி – பொறுக்கமாட்டேன் – என்று சீறும் அளவிற்கு அல்லவோ?

21. பாண்டவர்களையும் நிரஸிக்க ப்ராப்தமாயிருக்க, வைத்தது த்ரௌபதியுடைய மங்கள ஸூத்ரத்துக்காக.

**அவதாரிகை** – இத்தோஷத்தின் கொடுமையையுப்பாதிக்கிறார் மேல் (பாண்டவர்களை யுமென்று தொடங்கி).

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் அர்ஜுனனின் தோஷத்தைக் கூறுனார். அதன் கொடுமையை இங்கு விளக்குகிறார். (அல்லது மேலே கூறப்பட்ட தோஷம் என்பது பாண்டவர்கள் ஐந்து பேருக்கும் பொதுவானது அல்லவோ? அப்படி உள்ளபோது அவர்களை அழிக்காமல்விட்டது ஏன் என்ற சந்தேகத்திற்கு விடை அருளிச்செய்கிறார்).

**வ்யாக்யானம்** - அன்றிக்கே, இத்தோஷம் ஐவர்க்குமொவ்வாதோ, ஆனபின்பு இத்தலையையும் நிரஸித்துப் பொகடாமல் வைத்ததென்னென்கிற சங்கையிலேயருளிச் செய்கிறாராகவுமாம். முற்பட்ட ஸங்கதிக்கு அர்ஜுநனையென்னாதே (பாண்டவர்களையும்) என்றது – இத்தோஷம் ஐவர்க்குமொக்குமென்று தோற்றுகைக்காகவென்று யோஜிக்கக்கடவது; அநந்தர ஸங்கதிக்குத் தானே தன்னைடையே சேருமிறே. பரிபவித்த துர்யோதநாதி

களோபாதி பரிபவங்கண்டிருந்தவிவர்களும் நிரஸநீயரென்கிறது – சசப்தத்தாலே. (நிரஸிக்க ப்ராப்தமாயிருக்க வைத்தது) என்றது - இவர்கள் செய்த கொடுமைக்குத் தலையையறுத்துப் பொகட வேண்டியிருக்க ப்ராணனோடேயிருக்கும்படி வைத்ததென்றபடி. (த்ரௌபதியுடைய மங்களஸூத்ரத்துக்காக) என்றது - அவளுக்கபிமதமான மங்களஸூத்ரம் போகாமைக்காகவென்றபடி. விரித்ததலை காணமாட்டாதவன் வெறுங்கழுத்துக் காணமாட்டானிறே. இத்தால் – ஆச்ரிதரைப் பரிபவித்தாரோபாதி அது கண்டிருந்தாரும் நிரஸநீயராவரென்னுமிடமும், அவர்கள் தாங்களே ஆச்ரிதர்க்கு விடவொண்ணாததோரு பந்தமுடையராகில் அவர்களுக்காக அவனாலே ரக்ஷிக்கப்படுவரென்னுமிடமும் ப்ரகடிதமாய்த்து.

**விளக்கம்** – "பாண்டவர்களையும்" என்று கூறியதன் மூலமாக இந்தத் தோஷம் ஐந்து பேருக்கும் உள்ளது என்பதை உணர்த்துகிறார். அவர்களை ஏன் அழிக்கவில்லை என்ற கேள்விக்கு விடை சூர்ணையின் மூலம் தானாகவே புலப்படுகிறது. “பாண்டவர்களையும்” என்பதில் காணப்படும் “யும்” என்பது துரியோதன் உள்ளிட்டவர்கள் போன்று, திரௌபதி துடிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த பாண்டவர்களும் அழிக்கப்பட வேண்டியவர்களே என்பதை உணர்த்துகிறது. “நிரஸிக்க ப்ராப்தமாயிருக்க வைத்தது” என்பதன் பொருள் என்னவென்றால், இவர்கள் இழைத்த கொடுமைக்கு இவர்களின் தலைகளை அறுத்திருக்க வேண்டும், ஆனால் உயிருடன் இருக்கும்படி விட்டுவைத்தது – என்பதாகும். ஏன் விட்டு வைத்தான் என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். "த்ரௌபதியுடைய மங்களஸூத்ரத்துக்காக" என்பதன் பொருள், அவளுக்கு விருப்பமாக உள்ள அவளுடைய தாலி பறி போகாமல் இருப்பதற்காக – என்பதாகும். அவள் தனது கூந்தலை விரித்து விட்டபடி நிற்பதையே காணச் சகிக்காத க்ருஷ்ணன், அவள் தாலி இன்றி வெறுங்கழுத்துடன் நிற்பதைக் காண முயல்வானோ? இதன் மூலம் உணர்த்தப்படுவது என்னவென்றால் :

- தன்னைச் சரணம் புகுந்தவர்களைத் துன்புறுத்தி அவர்கள் தவிக்கும்படிச் செய்பவர்கள் போன்றே, அவர்கள் துடிப்பதை வேடிக்கை பார்த்து நிற்பவர்களும் கொல்லத் தகுந்தவர்கள்.

- ஆனால் ஏதும் செய்யாமல் வேடிக்கை பார்த்தபடி நிற்பவர்கள், துடிப்பவர்களான தன்னைச் சேர்ந்தவர்களின் உறவினர்களாக இருந்தால் தன்னைப் பற்றியவர்களின் பொருட்டு அவர்களும் காப்பாற்றப்படுவார்கள்.

22. அர்ஜுநனுக்கு தூத்யஸாரத்த்யங்கள் பண்ணிற்றும் ப்ரபத்தயுபதேசம் பண்ணிற்றும் இவளுக்காக.

**அவதாரிகை** – ஆனால், இப்படி நிரஸநீயனானவனுக்கு இழிதொழில் செய்ததும் பரம ரஹஸ்யத்தையுபதேசித்ததும் என்செய்யவென்னவருளிச்செய்கிறார் (அர்ஜுநனுக்கித் யாதியால்).

**விளக்கம் -** ஆனாலும் இவ்விதம் கொல்லத் தகுந்தவனான அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டுதல் முதலான தாழ்வான செயல்கள் செய்தல், மிகவும் உயர்ந்த ரஹஸ்யத்தைக் கீதை மூலமாக அறிவித்தல் போன்றவற்றை ஏன் செய்தான் என்பதற்கான காரணத்தை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – தூதுபோய்த்தது "பொய்ச்சுற்றம் பேசிச்சென்று பேதம் செய்து பூசல் விளைக்கைக்காக"; (ஸாரத்த்யம் பண்ணிற்று) – ஆயுதமெடுக்கவொண்ணா தென்கையாலே "கொல்லாமாக்கோல் கொலை செய்து பாரதப்போரெல்லாச் சேனையுமிருநிலத்தவிக்கைக்காக"; (ப்ரபத்த்யுபதேசம் பண்ணிற்று) ந யோத்ஸ்யாமி என்றிருந்தவனை கரிஷ்யே வசநம் தவ என்னப்பண்ணி யுத்தே ப்ரவ்ருத்தனாக்குகைக்காக. இவையெல்லாஞ் செய்தது - சரணாகதையானவிவள் ஸங்கல்பத்தின்படியே துர்யோதநாதிகளையழியச் செய்து இவள் குழலை முடிப்பிக்கைக்காகவிறே. ஆக அர்ஜுநன் திறத்தில் செய்த தூத்யாதித்ரயமும் இவளுக்காகச் செய்தானென்கிறது.

**விளக்கம்** – அர்ஜுனனுக்குத் தூது போனது ஏன் என்றால், திருவாய்மொழி - பொய்ச்சுற்றம் பேசிச்சென்று பேதம் செய்து பூசல் விளைக்கை - என்று கூறுவது போன்று துர்யோதனனின் இருப்பிடத்தில் சூழ்ச்சியாகப் பேசி, யுத்தத்தை உண்டாக்கவே ஆகும். (ஸாரத்த்யம் பண்ணிற்று) - ஆயுதம் எடுக்கக்கூடாது என்ற வேண்டுகோள் காரணமாகத் திருவாய்மொழி (3-2-3) – கொல்லாமாக்கோல் கொலை செய்து பாரதப்போரெல்லாச் சேனையுமிருநிலத்தவிக்கை - என்று கூறுவதற்கு ஏற்ப ஆகும். (ப்ரபத்தயுபதேசம் பண்ணிற்று) – கீதை (2-9) - ந யோத்ஸ்யாமி – நான் யுத்தம் செய்யமாட்டேன் – என்று அமர்ந்த அர்ஜுனனை, (18-73) – கரிஷ்யே வசநம் தவ – உன் சொற்படியே நான் நடந்து கொள்வேன் – என்று கூறும்படியாக மாற்றுதல், அவனை யுத்தத்தில் ஈடுபட வைத்தல் என்பதற்காகவே ஆகும். இவை அனைத்தையும் இவன் செய்தது ஏன் என்றால், தன்னைச்

சரணம் புகுந்த திரௌபதியின் சபதத்திற்கு ஏற்ப துரியோதனன் உள்ளிட்ட கௌரவர்களை அழித்து, அவள் தனது கூந்தலை மீண்டும் முடிந்து கொள்வதற்காகவே ஆகும். எனவே அர்ஜுனனுக்குச் செய்த தூது போன செயல் முதலான மூன்றையும் (தூது சென்றான், தேர் ஓட்டினான், கீதை உபதேசித்தான்) திரௌபதிக்காகவே செய்தான் என்றாகிறது.

**வ்யாக்யானம்** - (பாண்டவர்களையும்) என்று தொடங்கி இவ்வளவும், கீழ்ச்சொன்ன ப்ரதாந தோஷ க்ரௌர்யமுபபாதிதமாய்த்து. ஆகவிப்படி அஸ்தாந ஸ்நேஹாதிகளும் சரணாகதை பரிபவங் கண்டிருந்த மஹாதோஷமுமிவனுக்குண்டாயிருக்க "ஸர்வ குஹ்யதமம் பூய: ச்ருணுமே பரமம் வச:, இஷ்டோஸி மே த்ருட இதி ததோ வஷ்யாமி தே ஹிதம்", "மந்மநாபவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு, மமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரியோஸி மே" என்று இவனளவிலுகப்புத்தோற்றவருளிச் செய்கையாலே, இவன் தோஷங்களைப் பச்சையாகக் கொண்டு அங்கீகரித்தமை ப்ரஸித்தமென்று கருத்து. குணஹாநி சொல்லாதொழிந்தது, தோஷம் பச்சையாமிடத்தில் குணஹாநி பச்சையாமென்னுமிடம் கிம்புநர் ந்யாய ஸித்தமாகையாலே. இவன்றனக்கு குணஹாநிகளாவன - தஸ்மாத் யுத்யஸ்வ பாரத என்றருளிச் செய்தபோதே, கரிஷ்யே வசநம் தவ என்றெழுந்திருந்து ஸ்வ க்ருத்யமான யுத்தத்தைப் பண்ணாமையும், க்ருஷ்ணனை சரணம் புகுந்தவளைப் பரிபவிக்கவிட்டுப் பார்த்துக்கொண்டிருந்தோமே என்னுமநுதாபலேசமும் நெஞ்சிலில்லாமையும் தொடக்கமானவை. தூத்ய ஸாரத்த்யங்கள் பண்ணிற்றும் ப்ரபத்த்யுபதேசம் பண்ணிற்றுமிவளுக்காகவாகில் இவன் தோஷத்தைப் பச்சையாகக் கொண்டு அங்கீகரித்தானென்னுமது கூடாதீயென்னில், அதுக்குக் குறையில்லை; இவள் கார்யார்த்தமாகவிவனைக் குறித்து இவையெல்லாஞ் செய்கிற விடத்தில் இவன் தோஷங்களைப் பார்த்து முகம் சுளியாமல் உகப்போடே செய்கையாலே, அர்ஜுநனைக் குறித்து ஆசார்யக்ருத்யாதிகளையேறிட்டுக் கொள்ளுகிறவளவில் அவன் தோஷத்தைப் பச்சையாகக் கொண்டும் ஸாரதியாப் புரையறக் கலந்து நின்றும் செய்கை முதலானவையுண்டாகையால். (அறியாதவர்த்தங்களை) இத்யாதியாலே – ஆச்ரயண சௌகர்யாபாதகங்களான வாத்ஸல்யாதி குணங்கள் ஸூசிதம். இங்கே, (தூத்ய ஸாரத்த்யங்கள் பண்ணிற்றும்) என்கிறவித்தாலே - அஸ்மாத் வேத்த பராந் வேத்த வேத்தார்த்தம் வேத்த பாஷிதும் யத் யதஸ்மத்திதம் க்ருஷ்ண தத்தத் வாச்யஸ் ஸூயோதந: என்கிறபடியே – கார்யாகார் யஜ்ஞனான தான் போனாலல்லது கார்யஸித்தியுண்டாகாதென்று இத்தலையை ரக்ஷிக்கைக்காகத் தான் தூது போனமையும், ஆயுதமெடுக்கவொண்ணாதென்கையாலே ஸாரத்தயத்திலே ப்ரவ்ருத்தனாய்க் கொண்டு தேர்க்காலாலே ப்ரதிபக்ஷத்தையழியச்

செய்தமையும் தோற்றுகையாலே ஆச்ரித கார்யாபாதகங்களான ஜ்ஞாநசக்த்யாதிகள் ஸூசிதம். இன்னமும் (ப்ரபத்த்யுபதேசம் பண்ணிற்றும்) என்கையாலும் - சரம ச்லோகத்தில் மாம், அஹம் என்கிற பதங்களால் சொல்லப்படுகிற உபயவித குணமும் ஸூசிதமிறே. ஆகையால், புருஷகார வைபவஞ் சொல்லுகிறவிடத்திலே ஸ்ரீமத் பதார்த்தம் ப்ரகடிதமானவோபாதி, உபாய வைபவஞ் சொல்லுகிறவிடத்திலே நாராயண பதார்த்தம் ப்ரகடிதம். உபாயத்வம் சொல்லுகையாலே "சரணௌ சரணம்" என்றதுவும் ஸூசிதம். ஆக "இதிஹாஸச்ரேஷ்டம்" என்று தொடங்கி இவ்வளவும் ஸ்ரீராமாயண மஹாபாரதோக்தங்களான புருஷகாரோபாய வைபவங்கள் தத்தத் ஸ்வரூபங்களோடே விசதமாக ப்ரதிபாதிக்கப்பட்டது

**விளக்கம்** – "பாண்டவர்களையும்" என்று தொடங்கிய சூர்ணை முதலாக இதுவரை கூறப்பட்ட அனைத்தும் மேலே கூறப்பட்ட முதன்மையான குற்றத்தினை விளக்கியது. இப்படியாக அர்ஜுனனிடம் - தகாதவர்களிடம் தகாத இடத்தில் இரக்கம் கொள்ளுதல் என்பதும், க்ருஷ்ணனைச் சரணம் புகுந்தவளான திரௌபதி துடிப்பதை ஏதும் செய்யாமல் இரக்கம் கொள்ளாமல் பார்த்துக் கொண்டிருத்தல் என்னும் இரண்டு பெரிய தோஷங்கள் இருந்தன. இப்படிப்பட்ட தோஷங்களுடன் கூடியவனாக அர்ஜுனன் உள்ளபோதிலும் கீழே உள்ளது போன்று அவனுக்கு உபதேசித்து, அவனுக்கு நம்பிக்கை மற்றும் உகப்பை க்ருஷ்ணன் ஊட்டினான்:

- கீதை (16-64) - ஸர்வ குஹ்யதமம் பூய: ச்ருணுமே பரமம் வச: இஷ்டோஸி மே த்ருட இதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம் - இப்படியாக இரகசியங்கள் அனைத்திலும் மிகவும் இரகசியமாக உள்ள பக்தியோகம் பற்றிய எனது உயர்ந்த சொற்களை நீ மீண்டும் கேட்பாயாக. எனக்கு நீ மிகவும் இனிமையான நண்பனாக உள்ளதால் உனக்கு எது நன்மை அளிக்குமோ அதனைக் கூறுகிறேன்.

- கீதை (9-34) - மந்மநாபவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு மமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரியோஸி மே - என்னிடம் உனது மனதை முழுவதுமாகத் திருப்புவாயாக. எனது பக்தனாக என்னிடம் அன்புடன் இருப்பாயாக. என்னிடம் உன்னை அர்ப்பணிப்பாயாக. என்னையே வணங்குவாயாக. என்னையே முழுவதுமாகச் சார்ந்து நின்று, என்னிடம் உனது ஆத்மாவை இணைத்து, என்னையே அடைவாயாக.

மேலே உள்ளபடிக் கூறுவதன் மூலம் அர்ஜுனனின் குற்றங்களை உபகாரமாகக் கொண்டு அவனை ஏற்றுக் கொண்டான் என்பது தெளிவாகிறது. இங்கு அர்ஜுனனுடைய குணக்கேட்டினைக் கூறாமல் விட்டது ஏன் என்றால், தோஷங்களே உபகாரமாகக் கொள்ளப்படும்போது குணக்கேடுகள் உபகாரமாக இருக்கும் என்பது நேரடியாகவே விளங்கும். அர்ஜுனனின் குணக்கேடுகள் எவை?

- கீதை – தஸ்மாத் யுயுத்யஸ்வ பாரத – ஆகவே பரதகுலத்தில் பிறந்தவனே! உடனே எழுந்து யுத்தம் செய்வாயாக - என்று க்ருஷ்ணன் கூறியவுடனேயே அர்ஜுனன் கீதை (18-73) - கரிஷ்யே வசநம் தவ - உனது சொற்களின்படியே நடக்கிறேன் - என்று எழுந்து நின்று யுத்தம் செய்வதை விடுத்து செய்யாமால் நின்றான்.

- க்ருஷ்ணனைச் சரணம் என்று புகுந்து திரௌபதியைத் துடிக்க விட்டு ஏதும் செய்யாமல் பார்த்துக் கொண்டு நின்றான். அத்துடன், "இப்படி நான் ஏதும் செய்யவில்லையே" என்று அனுதாபத் துயரமும், நெஞ்சில் இரக்கமும் கொள்ளவில்லை மேலே உள்ளது தொடக்கமாக அர்ஜுனனுக்குக் குணக்கேடுகள் கூறப்பட்டன.

தூது செல்வது, தேர் ஓட்டுவது, கீதை உபதேசித்தது போன்ற அனைத்தும் திரௌபதிக்காக என்று மேலும் கூறப்பட்டது. அப்படி உள்ளபோது அர்ஜுனனின் தோஷங்களை உபகாரமாகக் கொண்டு, அவனை ஏற்று இவற்றைச் செய்தருளினான் என்று எவ்விதம் கூற இயலும்? இவ்விதம் கூறுவது பொருத்தமே ஆகும். எப்படி? திரௌபதியின் பொருட்டே அர்ஜுனனுக்கு இந்தச் செயல்களைச் செய்த போதிலும், அர்ஜுனனின் குற்றங்களைக் கண்டு சற்றும் திருமுகம் கோணாமல், மிகுந்த மகிழ்வுடனே செய்கிறான் (ஆகவே மேலே கேட்கப்பட்ட கேள்வி அவசியம் அற்றது என்கிறார்). அர்ஜுனனுக்கு ஓர் ஆசார்யனின் செயலைத் தான் கைக்கொள்ளுகிறபோது, அவனது தோஷங்களையே உபகாரமாகக் கொண்டும், அவனுடைய தேர்ப்பாகனாக நின்றும் செய்யக்கூடிய செயல்கள் உண்டு. "அறியாத அர்த்தங்களை" என்று தொடங்கும் 14-வது சூர்ணை மூலம் ஓர் ஆசார்யன் தன்னை அடைந்தவர்களின் செயல்களை முடிப்பது போன்றவற்றுக்கு அடிப்படையான வாத்ஸல்யம் போன்றவை கூறப்பட்டது. இங்கு தூது செல்லுதல், தேர் ஓட்டுதல் போன்றவை மூலம் மஹாபாரதம் உத்யோகபர்வம் (71-92) – அஸ்மாத் வேத்த பராந் வேத்த வேத்தார்த்தம் வேத்த பாஷிதும் யத் யதஸ்மத்திதம் க்ருஷ்ண தத்தத் வாச்யஸ் ஸுயோதந: - க்ருஷ்ணா! எங்களை நீ நன்கு அறிவாய், எங்கள்

விரோதிகளையும் அறிவாய், நீ அவர்கள் இருப்பிடம் சென்றால் என்ன செய்யவேண்டும் என்பதையும் அறிவாய், அவர்களிடம் என்ன கூறவேண்டும் என்பதையும் அறிவாய், ஆகவே எந்தெந்த சொற்கள் எங்களுக்கு நன்மையை உண்டாக்குமோ அவற்றைத் துரியோதனனிடம் கூறவேண்டும் - என்று கூறுவதற்கு ஏற்ப எதனைச் செய்யவேண்டும், எதனைச் செய்யக்கூடாது என்று நன்கு அறிந்தவனான தான் (க்ருஷ்ணன்) தூதாகச் செல்லாமல் பாண்டவர்களுக்கான செயலும், தனது பூமிபாரம் குறைப்பதான செயலும் நடைபெறாது என்பதையே உணர்த்தினான். மேலும் இவர்களைக் காப்பாற்றுவது என்பதற்காகவே தூது சென்றான்; ஆயுதம் எடுக்கமாட்டேன் என்ற சபதம் செய்ததால் தேரை ஓட்டும் செயலில் நின்றான், அதன் மூலமே விரோதிகளை அழித்தான். இந்த அனைத்தும் இவன் தூது சென்றது, தேர் ஓட்டியது என்பவற்றில் வெளிப்பட்ட காரணத்தினால், தன்னை அடைந்தவர்களின் செயல்களை முடிக்கின்ற ஞானம், சக்தி போன்றவை வெளிப்படையானது. அடுத்து "ப்ரபத்தி" என்பதன் மூலம் சரமச்லோகத்தில் கூறப்பட்ட பதங்களான மாம் (வாத்ஸல்யம், சௌசீல்யம், எளிமை, எஜமானத்தன்மை ஆகியவற்றை இந்தப் பதம் உணர்த்துகிறது) மற்றும் அஹம் (ஞானம், சக்தி ஆகியவற்றை இந்தப் பதம் உணர்த்துகிறது) ஆகியவற்றில் இரண்டுவிதமான குணங்கள் கூறப்பட்டதை உணர்த்துகிறான்.

எனவே புருஷகார வைபவம் பற்றி மேலே கூறப்பட்ட பகுதியில் "ஸ்ரீமத்" என்ற பதம் எவ்விதம் விளக்கப்பட்டதோ அது போன்று உபாயவைபவம் பற்றிக் கூறப்பட்ட இந்தப் பகுதியில் "நாராயண" என்ற பதம் விளக்கப்பட்டது. இங்கு உபாயமாக உள்ள தன்மையும் கூறப்பட்டதால் த்வயத்தின் – சரணௌ சரணம் – என்பதன் விளக்கமும் கூறப்பட்டதாகக் கொள்ளலாம். ஆக "இதிஹாஸச்ரேஷ்டம்" என்னும் 5-வது சூர்ணை தொடக்கமாக இந்தச் சூர்ணை முடிய இராமாயணம் மற்றும் மஹாபாரதத்தில் கூறப்பட்ட புருஷகார வைபவம் மற்றும் உபாய வைபவம் ஆகியவை அவற்றின் தன்மைகளுடன் விவரிக்கப்பட்டன.

## ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த
## ஸ்ரீவசனபூஷணத்தில்
## முதலாம் ப்ரகரணமான
## புருஷகார உபாய வைபவ ப்ரகரணம் ஸம்பூர்ணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகள் தஞ்சம் அடைந்த நம்
உடையவர் திருவடிகளே சரணம்

உடையவர் திருவடிகள் சரணம் புகுந்த
ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

பிள்ளைலோகாசார்யர் திருவடிகள் சரணம் புகுந்த
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்



ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

( இதற்கு ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யான மூலம், எளிய தமிழ்நடை)

# இரண்டாம் ப்ரகரணம்
# (உபாயம்)
# (சூர்ணைகள் 23 – 79)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

23. ப்ரபத்திக்கு தேசநியமமும் காலநியமமும் ப்ரகாரநியமும் அதிகாரிநியமமும் பலநியமமுமில்லை.

**அவதாரிகை** – கீழுக்தமான உபாயத்தினுடைய ஸ்வீகாரரூபையாய் (ப்ரபத்த்யுபதேசம் பண்ணிற்றும்) என்று ப்ராஸங்கிகமாக ப்ரஸ்துதையான ப்ரபத்தியினுடையபடியை விஸ்தரேணவருளிச்செய்கிறது மேல். அதில் ப்ரதமத்தில், அர்ஜுநனுக்கு ப்ரபத்த்யுபதேசம் பண்ணுகிறவளவில் யுத்தபூமியிலே ஒருகால் விசேஷம் பாராமல் ஸ்நாநாதிகளுமின்றிக்கே யிருக்க உபதேசிப்பானென்? இதுக்கு தேசாதி நியமங்களில்லையோ என்கிற சங்கையிலேயருளிச் செய்கிறார் (ப்ரபத்திக்கென்று தொடங்கி).

**விளக்கம்** - உபாயமாக உள்ள ஸர்வேச்வரனை உபாயமாகப் பற்றிக் கொள்ளுதல் என்னும் பொருளை உணர்த்தும்விதமாக "ப்ரபத்தி உபதேசம்" என்று சுருக்கமாக அருளிச் செய்தார். இனி ப்ரபத்தியைப் பற்றியும், அதன் நிலைகள் பற்றியும் விரிவாக அருளிச் செய்கிறார். முதலில் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யும்போது, அந்தப் போர்க்களத்தில் நேரம் காலம் பார்க்கவிலை, நீராடுதல் முதலான செயல்களைப் பார்க்கவில்லை, ஆயினும் உபதேசம் செய்தது ஏன்? அப்படியெனில், இந்த ப்ரபத்தி என்பதற்கு இன்ன தேசம், இன்ன காலம் போன்ற கட்டுப்பாடுகள் ஏதும் இல்லையா என்ற சந்தேகம் எழலாம். இதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ப்ரபத்தியாவது பகவச்சரண வரணம். தேசநியமமாவது புண்ய தேசங்களிலே செய்யவேணும், அந்யதேசங்களிலாகாதென்னுமது. காலநியமமாவது வஸந்தாதி காலங்களிலே செய்யவேணும், அந்யகாலங்களிலாகாதென்னுமது. ப்ரகாரநியமமாவது ஸ்நாந பாதப்ரக்ஷாளநாதி பூர்வகமாகச் செய்யவேணும், ப்ரகாராந்தரத்தாலே செய்யவொண்ணாதென்னுமது. அதிகாரி நியமமாவது த்ரை வர்ணிகராக வேணும், அத்ரைவர்ணிகராக வொண்ணாதென்னுமது. பலநியமமாவது த்ருஷ்டாத்ருஷ்ட பலங்களிலின்ன பலத்துக்கிது ஸாதநம், அந்யபலத்துக்கு ஸாதநமன் றென்னுமது. தேசகால ஸாத்குண்ய வைகுண்யங்களடியாக வரும் அதிசயாநதிசயங்களை யுடைத்தாவ தொன்றல்லாமையாலும், தீர்த்தத்திலே யவகா ஹிக்குமளவில் சுத்தாசுத்த விபாகமற அவகாஹிக்கலா யிருக்குமாப்போலே ஸ்வயமேவ பவித்ரமாய சுத்தா சுத்த

விபாகமற தன்னோடந்வயிக்கலாம்படி யிருக்கையாலும் வர்ணாத்யநுரூபமாயிருப்ப தொன்றன்றிக்கே ஸ்வரூபாநுரூபமாயிருப்பதொன்றா கையாலும், சேதநருடைய ருச்யநு குணமான பல விசேஷங்களுக்கு ஸாதநமாவதொன்றாலும், இந்நியமங்களொன்று மிதுக்கில்லையென்கிறது. ந ஜாதி பேதம் நகுலம் நலிங்கம் நகுணக்ரியா:, ந தேச காலௌ நாவஸ்தாம் யோகோ ஹ்யயமபேக்ஷதே; ப்ரஹ்ம க்ஷத்ர விசச் சூத்ரா: ஸ்த்ரியச்சாந்தர ஜாதய: ஸர்வ ஏவ ப்ரபத்யேரந் ஸர்வ தாதாரமச்யுதம் என்று ப்ராபத்திக்கு தேசகால ப்ரகாராதிகாரி நியமாபாவம் பாரத்வாஜ ஸம்ஹிதையிலும் ப்ரபத்தே: க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதே, ஸாஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாம பலப்ரதா என்று பல நியமாபாவம் ஸநத்குமார ஸம்ஹிதையிலும் சொல்லப்பட்டதிறே.

**விளக்கம்** - ப்ரபத்தி என்பது எம்பெருமானையே உபாயம் என்று பற்றுதல் ஆகும். தேச நியமம் என்றால் இந்த ப்ரபத்தியைப் புண்ணியதேசங்களில் மட்டுமே செய்யவேண்டும், மற்ற இடங்களில் செய்யக்கூடாது என்பதாகும். காலநியமம் என்றால் இந்த ப்ரபத்தியை வஸந்த காலத்தில் மட்டுமே செய்யவேண்டும், மற்ற காலங்களில் செய்யக்கூடாது என்பதாகும். ப்ரகார நியமம் என்றால் ப்ரபத்தியை நீராடுதல், கால் கழுவுதல் போன்றவற்றைச் செய்த பின்னரே செய்யவேண்டும், அதற்கு முன்பாக செய்தல் கூடாது என்பதாகும். அதிகாரி நியமம் என்றால் முதல் மூன்று வர்ணத்தினராக மட்டுமே இருக்கவேண்டும், மற்ற வர்ணத்தினராக இருத்தல் கூடாது என்பதாகும். பல நியமம் என்றால் இவ்வுலகப் பலன் மற்றும் அவ்வுலகப் பலன்களில், இன்ன பலத்திற்கு இது சாதனமாக உள்ளது, மற்ற தாழ்ந்த பலன்களுக்கு இது சாதனம் அல்ல என்பதாகும். தேசங்களின் உயர்வு மற்றும் தாழ்வுகளின் அடிப்படையிலும், காலம் என்பதன் உயர்வு மற்றும் தாழ்வுகளின் அடிப்படையில் உண்டாகின்ற ஏற்றத்தாழ்வுகள் என்பவை ப்ரபத்திக்கு இல்லாத காரணத்தினால் தேசநியமம் மற்றும் காலநியமம் ஆகிய இரண்டும் ப்ரபத்திக்கு இல்லை. நீரில் நீராடுபவர்கள் தூய்மையானவர்கள், தூய்மை அற்றவர்கள் என்ற வேறுபாடு இன்றி நீராடுவது போன்று, ப்ரபத்தி என்பது இயல்பாகவே தூய்மையானது என்பதால், தூய்மையானவர் மற்றும் தூய்மை அற்றவர் என வேறுபாடு இன்றி அனைவரும் ஏற்கலாம்படியாக உள்ளதால், ப்ரகார நியமமும் ப்ரபத்திக்கு இல்லை. வர்ணம் போன்ற பிரிவுகளுக்கு உட்பட்டு இல்லாத காரணத்தினால், ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றதாக உள்ளதால், இன்னவர்கள் மட்டுமே ஏற்கலாம் என்ற அதிகாரி நியமம் ப்ரபத்திக்கு இல்லை. இந்தக் கருத்தைக் கீழே உள்ள பரத்வாஜ ஸம்ஹிதையில் காணலாம் - ந ஜாதி பேதம் நகுலம் நலிங்கம் நகுணக்ரியா:, ந தேச காலௌ நாவஸ்தாம் யோகோ ஹ்யயமபேக்ஷதே; ப்ரஹ்ம க்ஷத்ர விசச் சூத்ரா: ஸ்த்ரியச்சாந்தர ஜாதய: ஸர்வ

ஏவ ப்ரபத்யேரந் ஸர்வ தாதாரமச்யுதம் – ப்ரபத்தி என்னும் இந்த உபாயம் எப்படிப்பட்டது என்றால் இந்த உபாயம் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற ஜாதி வேறுபாடுகளை ஏற்பதில்லை, குலங்களின் அடிப்படையில் உள்ள வேறுபாடுகளை ஏற்பதில்லை, ஆண் பெண் என்னும் வேறுபாடுகளை ஏற்பதில்லை, குணங்களுக்கு ஏற்ப செயல்படும் வேறுபாடுகளை ஏற்பதில்லை, தேசம் மற்றும் காலம் என்னும் வேறுபாடுகளை ஏற்பதில்லை, வயது போன்ற வேறுபாடுகளை ஏற்பதில்லை, அந்தணர் க்ஷத்ரியர் வைசியர் மற்றும் பெண்கள் போன்ற அனைவருமே அனைத்தையும் படைத்த அச்சுதனை அடைவார்கள் – என்றது. இப்படியாக ப்ரபத்திக்கு தேசம், காலம், முறைகள், அதிகாரி போன்ற எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லை என்பதை பரத்வாஜ ஸம்ஹிதை உரைத்தது. மேலும் இதற்கு பல நியமம் இல்லை என்பதை ஸநத்குமார ஸம்ஹிதை - ப்ரபத்தே: க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதே, ஸாஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாம பலப்ரதா – கர்மங்கள் போன்றவை மற்றவற்றின் உதவியை நாடுவது போன்ற நிலை ப்ரபத்திக்கு இல்லை; மாறாக அனைவராலும் எங்கும் விரும்பப்பட்ட அனைத்து பலன்களையும் அது அளிக்கும் – என்றது.

24. விஷய நியமமேயுள்ளது.

**அவதாரிகை** - இவை இல்லையாகில் மற்றும் சில நியமங்கள்தான் இதுக்குண்டோ வென்ன, அருளிச் செய்கிறார் (விஷய நியமமேயுள்ளதென்று).

**விளக்கம்** - இப்படியாக ப்ரபத்திக்குக் காலம், தேசம் போன்ற விதிமுறைகள்ஏதும் இல்லை என்றால், வேறு ஏதாவது விதிமுறைகள் ப்ரபத்திக்கு உண்டோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இன்ன விஷயத்திலே செய்யவேணும் என்கிற நியமமே யிதுக்குள்ளதென்றபடி. இவையெல்லாம் தாமே மேலே உபபாதித்தருளுகிறாரிறே.

**விளக்கம்** - இன்ன விஷயத்தில் மட்டுமே செய்யவேண்டும் என்னும் விதிமுறை மட்டுமே ப்ரபத்திக்கு உள்ளது என்கிறார். இவற்றைத் தானே பின்னர் (சூர்ணை 26 தொடங்கி) அருளிச்செய்ய உள்ளார்.

25. கர்மத்துக்கு புண்யக்ஷேத்ரம் வஸந்தாதிகாலம் சாஸ்த்ரோக்தங்களான தத்தத் ப்ரகாரங்கள் த்ரைவர்ணிகர் என்றிவையெல்லாம் வ்யவஸ்திதங்களாயிருக்கும்.

**அவதாரிகை** - இதுக்கிவையொன்றுமில்லையாகில் பின்னையெதுக்குத்தான் இவையெல்லாமுள்ளதென்ன, அருளிச்செய்கிறார் (கர்மத்துக்கென்று தொடங்கி).

**விளக்கம்** – இவை எதுவும் ப்ரபத்திக்கு இல்லை என்றால், வேறு எதற்குத்தான் இவை உண்டு என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - கர்மமாவது ஜ்யோதிஷ்டோமாதிகள். புண்ய க்ஷேத்ரங்களாவன சாஸ்த்ரங்களில் பாவநதயா அபிஹிதங்களான தேசங்கள். "வஸந்தாதி" என்கிறவிடத்தில் ஆதிசப்தத்தாலே க்ரீஷ்ம சரச்சுக்ல க்ருஷ்ணபக்ஷ பூர்வாஹ்நாபராஹ்நாதி காலங்களைச் சொல்லுகிறது; வஸந்தே வஸந்தே ஜ்யோதிஷா யஜேத இத்யாதிகளாலே கால நியமம் சொல்லப்படா நின்றதிறே. சாஸ்த்ரோத்தங்களான தத்வத் ப்ரகாரங்களாவன சௌசாமசமந ஸ்நாந வ்ரத ஜபாதிரூபேண அவ்வவ கர்மங்களுக்கு அநுகுணமாக சாஸ்த்ர விஹிதங்களான அவ்வவ ப்ரகாரங்கள். (த்ரைவர்ணிகர்) என்றது உபநயந ஸம்ஸ்கார பூர்வகமாக வேதாதிகாரிகளானவர்களுக்கே வைதிக கர்மாதிகரமுள்ளதாகையாலே; இதுதான் க்ருஹமேதித்வ க்ருஷ்ண கேசித்வ வேத வேதாங்கயுக்த த்வாதிகளுக்கு முபலக்ஷணம். (வ்யவஸ்திதங்களாயிருக்கும்) என்றது நியதங்களாயிருக் கும்மென்றபடி.

**விளக்கம்** - கர்மம் என்பது ஜ்யோதிஷ்டோமம் போன்றவை ஆகும். புண்ய க்ஷேத்ரங்கள் எனறால் சாஸ்த்ரங்களில் தூய்மையான இடங்கள் என்று கூறப்பட்ட க்ஷேத்ரங்கள் ஆகும். சூர்ணையில் உள்ள "வஸந்தாதி" என்பதில் காணப்படும் "ஆதி" என்னும் பதமானது முதுவேனிற்காலம், கார்காலம், க்ருஷ்ணபக்ஷம், சுக்லபக்ஷம், காலை நேரம், மாலை நேரம் என்பதான காலங்களைக் கூறுகிறது. வஸந்தே வஸந்தே ஜ்யோதிஷா யஜேத – ஒவ்வொரு வஸந்த காலத்திலும் ஜ்யோதிஷ்டோமம் செய்யவேண்டும் - என்பதன் மூலம் காலத்திற்கான விதிமுறை கூறப்பட்டதைக் காண்க. "சாஸ்த்ரோத்தங்களான தத்வத் ப்ரகாரங்கள்" என்பதன் மூலம் ஆசமனம் போன்றவற்றைச் செய்தல், நீராடுதல், விரதம் மேற்கொள்ளுதல், ஜபம் இயற்றுதல் உள்ளிட்ட பலவற்றுடன் கூடியதான அந்தந்த கர்மங்களுக்குத் தேவையான அநுஷ்டானங்கள் என்று சாஸ்த்ரங்களில் கூறப்பட்டவை உணர்த்தப்பட்டது. "த்ரைவர்ணிகர்" என்பதன் மூலம் உபநயனம் முதலானவை உடைய வேத அதிகாரிகளுக்கு மட்டுமே வைதிக கர்மங்கள் இயற்றுவதற்கு அதிகாரம் உள்ளது என உணர்த்தப்பட்டது. இந்த அதிகாரியின் லக்ஷணங்கள் எவை என்றால் இல்லறத்தில் உள்ளவர்களாக இருத்தல், கருமையான முடியுடன் கூடியவர்களாக இருத்தல், வேத வேதாந்தங்கள் அறிந்தவர்களாக இருத்தல் போன்ற பலவாகும். "வ்யவஸ்தி" என்பதன் மூலம் நியதங்களாக இருக்கும் என்பது கூறப்பட்டது.

26. ”ஸ ஏஷ தேச: கால:” என்கையாலே இதுக்கு தேசகால நியமமில்லை.

**அவதாரிகை** - ப்ரபக்திக்கிவையொன்றுமில்லை என்று கீழ்ப்பண்ணின ப்ரதிஜ்ஞையை உபபாதிக்கையிலே ப்ரவ்ருத்தராய், ப்ரதமம் தேசகால நியம ராஹித்யத்தை யுபபாதிக்கிறார் ஸ ஏஷ: என்று தொடங்கி.

**விளக்கம்** - ப்ரபத்திக்கு இவை ஏதும் இல்லை என்று மேலே அருளிச்செய்தார். அதனை மேலும் விளக்க எண்ணியவராக முதலில் தேசம், காலம் போன்ற விதிமுறைகள் இல்லை என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - பத்த வைராச்ச பாபாச்ச ராக்ஷஸேந்த்ராத் விபீஷண:, அதேசகாலே ஸம்ப்ராப்தஸ் ஸர்வதா சங்க்யதா மயம் என்று முன்பு ஸ்ரீஜாம்பவான் மஹாராஜர் பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய்த பக்ஷத்தை தூஷிக்கிற திருவடி, அதேச காலே ஸம்ப்ராப்த இத்யயம் ஸவிபீஷண:, விவக்ஷாசாத்ர மேஸ்தீயம் தாந்நிபோத யதாமதி; ஸ ஏஷ கால தேச: காலச்ச பவதீஹ யதா ததா, புருஷாத் புருஷம் ப்ராப்ய ததா தோஷ குணாவபி; தௌராத்ம்யம் ராவணே த்ருஷ்ட்வா விக்ரமஞ்ச ததா த்வயி யுக்தமாகமநம் தஸ்ய ஸத்ருசம் தஸ்ய புத்தித: என்று ராவணனாலே அவமாநிதனாய் ஸ்வநிகர்ஷத்தை முன்னிட்டுக் கொண்டு சரணம் என்று வந்த ஸ்ரீவிபீஷணாழ்வான், அதேசத்திலே அகாலத்திலே வந்தானென்று தேவரீருடைய மந்த்ரிகளாலே யாதொன்று சொல்லப்பட்டது. இந்த பக்ஷத்தில் விசேஷித்து எனக்கிந்த விவக்ஷையுண்டாகா நின்றது. அவன் வருகிறவளவில் யாதொரு தேசத்திலே யாதொரு காலத்திலே வந்தான், அவன் வரவுக்கு அந்த இதுவே தேசமும் அந்த இதுவே காலமுமாம் யாதொருபடி, அப்படிப்பட்ட விவக்ஷையை நானறிந்தவளவு விண்ணப்பஞ் செய்யக் கேட்டருள வேணும். எங்ஙனே யென்னில், தம: ப்ரக்ருதியாகையாலே பரஹிம்ஸையே யாத்ரையான ராவணனிற் காட்டில் ஸத்வோத்தரராகையாலே பரரக்ஷணம் யாத்ரையாயிருக்கிற தேவரீரை ப்ராப்யராக புத்திப் பண்ணி, அப்படியேயவனை விட்டுப் போராதொழிந்தால் அவனுடைய அக்ருத்யத்துக்கு ஸஹகாரியாய் அந்த ப்ராதிகூல்யத்தோடே முடிந்து போகையாகிற தோஷத்தையும், தார்மிகரான தேவரீருடனே கூடப்பெற்றால் தத் பலமாக தேவரீர் திருவடிகளில் கைங்கர்யத்தை லபித்து வாழுகையாகிற நன்மையையும் புத்தி பண்ணி, அப்படியே தேவரீர் திருவுள்ளத்திலே புண்படும்படி குற்றத்தைத் தீரக் கழியச் செய்து நிற்கிற ராவணன் தௌராத்ம்யத்தையும், துராத்மாக்களை அநாயாஸேந அழிக்கவல்ல தேவராண்பிள்ளைத்தனத்தையுங் கண்டால், விசேஷஜ்ஞனானவனுக்கு இவ்வரவு ப்ராப்தம், ந்யாயத்திலே ஸஞ்சரிக்குமவனுடைய புத்திக்குமிது ஸத்ருசம்

என்றானிறே. ஆக இப்படி பாவசுத்தியையுடையனான ஸ்ரீவிபீஷணாழ்வான் சரணம் என்று வந்து தேசகாலங்களில் குறைப்பார்க்கக் கடவதல்ல, அவன் வந்ததுவே தேசமும் காலமும் என்று சரணாகதி தர்மஜ்ஞனான திருவடி நிர்ணயிக்கையாலே ப்ரபத்திக்கு தேசகால நியமமில்லையென்கை.

**விளக்கம்** - இராமாயணம் யுத்தகாண்டம் (17-57) – பத்த வைராச்ச பாபாச்ச ராக்ஷஸேந்த்ராத் விபீஷண:, அதேசகாலே ஸம்ப்ராப்தஸ் ஸர்வதா சங்க்யதா மயம் – மிகுந்த பாவங்கள் செய்தவனும், நம்மிடம் பகைகொண்டவனும் ஆகிய இராவணனிடமிருந்து தகாத இடத்திலும், தகாத நேரத்திலும் விபீஷணன் வந்துள்ளான்; ஆகவே இவன் சந்தேகப்படக் கூடியவனாகவே உள்ளான் – என்று ஜாம்பவானும், சுக்ரீவனும் இராமனிடம் கூறினர். இதனை ஏற்க மறுத்த அனுமன் இராமாயணத்தில் (யுத்தகாண்டம் : 17-46) - அதேச காலே ஸம்ப்ராப்த இத்யயம் ஸவிபீஷண:, விவக்ஷாசாத்ர மேஸ்தீயம் தாந்நிபோத யதாமதி; ஸ ஏஷ கால தேச: காலச்ச பவதீஹ யதா ததா, புருஷாத் புருஷம் ப்ராப்ய ததா தோஷ குணாவபி; தௌராத்ம்யம் ராவணே த்ருஷ்ட்வா விக்ரமஞ்ச ததா த்வயி யுக்தமாகமநம் தஸ்ய ஸத்ருசம் தஸ்ய புத்தித: – இந்த விபீஷணன் தகாத இடத்தில், தகாத காலத்தில் இங்கு வந்துள்ளான் என்பதைக் குறித்து நான் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்; எனது விருப்பத்தை நீ (இராமன்) அறிய வேண்டுகிறேன்; புருஷர்களில் தாழ்ந்தவனாகிய இராவணனைக் காட்டிலும் புருஷர்களில் உயர்ந்தவனாக உள்ள நீயே அடையத்தக்கவன் என்று விபீஷணன் அறிந்தான்; இராவணனிடம் இருந்தால் உண்டாகும் தோஷத்தையும், உன்னிடம் அடைக்கலம் அடைந்தால் ஏற்படும் மேன்மையையும் உணர்ந்தான்; இராவணனிடம் இருந்த தீமைகளையும், உன்னிடம் உள்ள ஆண்மையையும் பார்த்து வந்தான்; ஆகவே அவன் இங்கு வந்தது பொருத்தமானது, அவனுக்கு ஏற்றது - என்று கூறினான். அதாவது இராவணனால் துச்சமாக நடத்தப்பட்டவனாக, தனது தாழ்வு என்பதை முன்னிறுத்தியபடி அடைக்கலம் என்று விபீஷணன் வந்தான். இப்படி வந்தபோது இவன் தகாத இடத்தில், தகாத காலத்தில் வந்தான் என்று உன்னுடைய மந்த்ரிகளால் உரைக்கப்பட்டது. இந்தக் கருத்தில் எனக்கு விசேஷமான கருத்து சொல்வதற்கு விருப்பம் உண்டு. அவன் எந்த இடத்தில் வந்தான்; எந்த நேரத்தில் வந்தான் என்பதைக் குறித்து அவன் வருவதற்கு இதுவே சரியான இடம் என்றும், அவன் வருவதற்கு இதுவே சரியான காலம் என்றும் நான் உணர்ந்ததைக் கூற எனக்கு விருப்பம் உள்ளது (அதாவது விபீஷணன் வந்த

இடமும், காலமும் எதுவாக இருந்தாலும் அதுவே சரியான இடமும், காலமும் ஆகும் என்று கருத்து). இதனை நான் அறிந்த அளவிற்குக் கூற, நீ (இராமன்) கேட்கவேண்டும்.

தமோ குணம் மிகுதியாக உள்ளதால் மற்றவர்களைத் துன்பத்தில் ஆழ்த்துவது என்பதையே தனது செயலாக உடைய இராவணனைக் காட்டிலும், ஸத்வ குணம் மிக்கவனாக நீ உள்ளதால் அனைவரையும் காப்பாற்றும் தன்மை கொண்ட உன்னை அடைவதே தகும் என்று விபீஷணன் உணர்ந்தான். இவ்விதம் செய்யாமல் அவன் இராவணனுடனேயே இருந்திருந்தால், அவனுடைய தீமைகளுக்குத் துணை போனவனாக, உன்னுடன் பகைமையுடன் மடிந்து போகக் கூடியவனாக இருக்கின்ற குற்றம் விபீஷணனுக்கு வந்திருக்கும். இந்தக் குற்றத்தையும், தர்மத்தை மட்டுமே செய்கின்ற உன்னுடன் இருந்தால் அதன் பலனாகிய உனது திருவடிகளின் கீழ் கைங்கர்யம் செய்தல் என்ற நன்மையையும் அவன் ஆராய்ந்தான். மேலும் உன்னுடைய மென்மையான திருவுள்ளத்தைப் புண்படுத்தும்படியாக பெருங்குற்றம் முழுவதுமாகச் செய்தபடி உள்ள இராவணனின் தீமை என்பதையும், தீயோர்களை அழிப்பதில் சற்றும் தயக்கம் காட்டாத உனது ஆண்மைத் தன்மை என்பதையும் நோக்கும்போது விபீஷணன் இங்கு வந்தது சரியானது ஆகும். இத்தகைய செயலானது நியாயத்தின் வழிநிற்பவர்களின் அறிவிற்கும் ஏற்றதாகவே இருக்கும் – இப்படியாகவே அனுமனின் கருத்து உள்ளது.

ஆகவே தூய்மையான மனத்துடன் உள்ள விபீஷணன் சரணம் என வந்து நின்ற இடம் மற்றும் காலம் ஆகிய இரண்டிலும் குறை ஏதும் காண்பதற்கு இல்லை. அவன் வந்து சேர்ந்த இடமே சரணாகதிக்குச் சரியான இடம் என்றும், வந்த நேரமே சரியான நேரம் என்றும் சரணாகதியைப் பற்றி நன்கு அறிந்தவனாகிய அனுமன் முடிவு செய்ததால், ப்ரபத்திக்குக் காலம் மற்றும் இடம் என்பது போன்ற கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை என்றாகிறது.

## 27. இவ்வர்த்தம் மந்த்ரரத்நத்தில் ப்ரதமபதத்திலே ஸுஸ்பஷ்டம்.

**அவதாரிகை** - இதுதான் ப்ரபத்த்யநுஷ்டாந ரூபமான த்வயத்தில் ப்ரதமபதத்திலே காணலாமென்கிறார் (இவ்வர்த்தமென்று தொடங்கி).

**விளக்கம்** - மேலே கூறியதன் பொருளை ப்ரபத்தியின் அனுஷ்டானமாக உள்ள த்வய மந்த்ரத்தின் முதல் பதத்தில் காணமுடியும் என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஸகலோபநிஷத்ஸாரமாய் ஸர்வாதிகாரமாய் அவிளம்ப்ய பலப்ரதமாய் ஸர்வேச்வரனுக்கு அத்யந்தாபிமதமாயிருக்கையாலே ஸர்வமந்த்ராந்தர உத்க்ருஷ்ட தயா த்வயேந மந்த்ர ரத்நேந என்கிறபடியே, மந்த்ர ரத்நாக்க்யமாயிறே த்வயமிருப்பது; அந்த வைபவந் தோற்றுகைக்காக, த்வயமென்னாதே மந்த்ரரத்நம் என்கிறார்; அதில் ப்ரதம பதத்தில் மதுபர்த்தமான புருஷகாரோபாய நித்யயோகத்துக்கு ப்ரயோஜநம் – ஏதேனுமொரு தேசத்திலே ஏதேனுமொரு காலத்திலேயொரு ஸம்ஸாரி சேதநனுக்கு பகவத் ஸமாச்ரயண ருசி விளைந்தால், சஞ்சலம் ஹி மந:, நின்றவா நில்லா நெஞ்சு என்கிறபடியே சூறாவளிக் காற்றுப்போலே சுழன்று வருகிற நெஞ்சு தளமாக அங்குரித்து க்ஷணபங்குரையான ருசி தீருவதுக்கு முன்னே, ததுத்பத்திக்ஷணத்திலே யாச்ரயிக்கலா யிருக்கையிறே; ஆகையாலே ப்ரபத்தியினுடைய தேசகால நியமராஹித்யம் அந்த பதத்திலே நன்றாகத் தோற்றுமென்கிறார்.

**விளக்கம்** – த்வயம் என்பது, அனைத்து உபநிஷத்துக்களின் சாரமாக உள்ளது, அனைவருக்கும் ஏற்கலாம்படி உள்ளது, மிகவும் விரைவாய் பலன் அளிக்கவல்லது, ஸர்வேச்வரனுக்கு மகிழ்ச்சி அளிக்கவல்லதாக உள்ளதால் அனைத்து மந்த்ரங்களிலும் மிகவும் உயர்ந்தது, த்வயேந மந்த்ர ரத்தேந – மந்த்ர ரத்னம் த்வயமே – என்று கூறுவதற்கு ஏற்ப இரத்தினம் போன்றது ஆகும். இத்தகைய சிறப்புகள் வெளிப்படும்படியாகவே இந்தச் சூர்ணையில் த்வயம் என்று கூறாமல் "மந்த்ரரத்னம்" என்றார். இந்த மந்த்ரத்தின் முதல் பதமாக உள்ள ஸ்ரீமந் என்பதில் காணப்படும் "மதுப்" என்பதன் பொருள் என்னவென்றால், புருஷகாரமாக உள்ள பிராட்டியும் உபாயமாக உள்ள ஸர்வேச்வரனும் எப்போதும் நித்யயோகம் என்னும்படி என்றும் சேர்ந்து இருத்தல் என்பதாகும். இவ்விதம் உள்ளதன் பயன் என்ன? ஏதேனும் ஓர் இடத்தில், ஏதேனும் ஒரு காலத்தில், ஏதேனும் ஒரு ஸம்ஸாரிக்கு எம்பெருமானை அடையவேண்டும் என்ற ருசி ஏற்படலாம். கீதை - சஞ்சலம் ஹி மந: - மனம் சலனம் நிறைந்தது, பெரியதிருமொழி (1-1-4) – நின்றவா நில்லா நெஞ்சு – என்று கூறுவதற்கு ஏற்ப, நெஞ்சத்தில் தோன்றியவுடன் அழிவதாக அந்த ருசி உள்ளது. இந்த ருசியானது உடனேயே மறைவதற்கு முன்பாக, அந்த ருசி தோன்றியவுடனேயே எம்பெருமானைப் பற்றுவதற்கு, இந்த நித்யயோகச்சேர்த்தி பயன்படுவதாக உள்ளது. ஆகவே ப்ரபத்திக்கு இடம், காலம் போன்ற வரையறை இல்லை என்பதை த்வயத்தில் உள்ள அந்தப் பதம் உணர்த்துகிறது என்கிறார்.

28. ப்ரகார நியதியில்லையென்னுமிடம் எங்கும் காணலாம்.

**அவதாரிகை** – ப்ராகார நியமராஹித்யத்தை தர்சிப்பிக்கிறார்மேல் (ப்ரகாரநியதி) என்று தொடங்கி.

**விளக்கம்** – இன்ன முறையைப் பின்பற்றிய பின்னரே ப்ரபத்தி செய்யவேண்டும் என்ற ப்ரகார நியமம் இல்லை என்பதை உணர்த்துகிறார்.

**வ்யாக்யானம்** – "எங்கும் காணலாம்" என்றது, இத்தையநுஷ்டிப்பார் ச்ரவிப்பார் எல்லார் பக்கலிலுங் காணலாமென்றபடி.

**விளக்கம்** – "எங்கும் காணலாம்" என்பதன் மூலம் ப்ரபத்தியைக் கைக்கொள்கிறவர்கள், கேட்கின்றவர்கள் போன்ற அனைவரிடத்திலும் காணலாம் என்றார்.

29. த்ரௌபதி ஸ்நாதையாயன்றே ப்ரபத்தி பண்ணிற்று; அர்ஜுனன் நீசர் நடுவேயிறே இவ்வர்த்தங்கேட்டது.

**அவதாரிகை** – அதெங்கே கண்டதென்ன; பூர்வ ப்ரக்ருத விஷயங்களிலே தர்சிப்பிக்கிறார்.

**விளக்கம்** - மேலே உள்ள சூர்ணையில் "காணலாம்" என்பதை மேலும் விவரிக்கும் விதமாக, எங்கு காணலாம் என்பதை முன்னே கூறிய நிகழ்வுகள் மூலம் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – "த்ரௌபதி" இத்யாதி வாக்ய த்வயத்தாலே. "ஸ்நாதையாயன்றே ப்ரபத்தி பண்ணிற்று" என்றது துச்சாஸநாக்ருஷ்டையாய் ஸபையில் வருகிறபோது, ரஜஸ் வலைக வஸ்த்ராஹம் நது மாம் நேது மர்ஹஸி குரூணாஞ்ச புரஸ்ஸ்தாதும் ஸபாயாம் நாஹ முத்ஸஹே என்னும்படி அசுத்தையாயிருக்கிறவள் ஸ்நாநம் பண்ணியன்றே ப்ரபத்தி பண்ணிற்றென்றபடி; இத்தால், ப்ரபத்தி பண்ணுவார் ப்ரயதராய்ப் பண்ண வேணுமென்னும் நியதியில்லாமை காட்டப்பட்டது. "நீசர் நடுவேயிறேயிவ் வர்த்தங் கேட்டது" என்றவிடத்தில், நீசரென்கிறது நெடுந்தகையை நினையாதார் நீசர் என்றாழ்வாரருளிச் செய்த சௌரிநிந்தா விமுகரான ஹேயரை. விஷ்ணு பக்தி விஹிநஸ்து யதிச்ச ச்வபசாதம:, விப்ராத் த்விஷட்குணயுதா தரவிந்தநாப பாதாரவிந்த விமுகாச் ச்வபசம் வரிஷ்டம் என்று பகவத் விமுகரை ச்வபசாதமராகச் சொல்லிற்றிறே; அதுக்கு மேல், சரணாகதையைப் பரிபவித்தும் சரணாகதரான பாண்டவர்கள் திறத்திலே

தீங்குகளைச் செய்தும் போருகையாலே, ஸத்யச் சண்டாளதாம் வ்ரஜேத் என்கிற கர்மசண்டாளரிறே கை கலந்து நிற்கிறது. ”நீசர்நடுவே” என்கையாலே நீசஸ்ப்ருஷ்டியா லிவனுக்குண்டான அசுத்தியும் நீசஸகாசத்திலே என்னுமிடமும் தோற்றுகிறது. இத்தால் – ப்ரபத்தி ச்ரவணம் பண்ணும்போது நீசமத்யத்திலாகாதென்னும் நியதியில்லாமை காட்டப்பட்டது.

**விளக்கம்** – இந்த இரண்டு வாக்கியங்கள் மூலம் கூறப்பட்டது என்ன? “ஸ்நாதையாயன்றே ப்ரபத்தி பண்ணிற்று” என்பதன் மூலம் எதனை உணர்த்துகிறார்? துச்சாதனனால் இழுத்துக் கொண்டு சபைக்கு வரவழைக்கப்பட்டபோது மஹாபாரதம் – ரஜஸ் வலைக வஸ்த்ராஹம் நது மாம் நேது மர்ஹஸி குரூணாஞ்ச புரஸ்ஸ்தாதும் ஸபாயாம் நாஹ முத்ஸஹே – நான் இப்போது மாதவிலக்கு ஏற்பட்டவளாகவும், ஓர் ஆடையை மட்டுமே உடுத்தியவளாகவும் இருக்கிறேன்; ஆகவே என்னைச் சபைக்கு அழைத்துச் செல்வது சரியல்ல; ஆசார்யர்கள் முன்பாகவும், சபையினர் முன்பாகவும் இந்தச் சூழ்நிலையில் நான் நிற்பதற்கு உடன்படவில்லை - என்றாள். ஆகவே அப்போது அவள் அசுத்தத்துடன் கூடியவளாகவே இருந்தாள். ஆக அவள் க்ருஷ்ணனிடம் ப்ரபத்தியைச் செய்தபோது நீராடிய பின்னர் செய்யவில்லை அல்லவோ? இதன் மூலம் ப்ரபத்தியைக் கைக்கொள்பவர்கள் தூயவர்களாக நின்று செய்யவேண்டும் என்ற நியமம் இல்லை என்பது உணர்த்தப்பட்டது.

”நீசர் நடுவேயிறேயிவ் வர்த்தங் கேட்டது” என்பதன் மூலம் எதனை உணர்த்தினார்? இங்கு நீசர் என்ற பதம் பெரியதிருமொழியில் (11-6-8) – நெடுந்தகையை நினையாதார் நீசர் – என்று திருமங்கையாழ்வார் அருளிச் செய்தபடி, எம்பெருமானிடம் பக்தி இல்லாத தாழ்ந்தவர்களைக் குறிக்கும். விஷ்ணு பக்தி விஹிநஸ்து யதிச்ச ச்வபசாதம: – விஷ்ணுவிடம் பக்தி இல்லாத ஸந்யாஸி, அவனிடம் பக்தி உள்ள நீசனை விடத் தாழ்ந்தவன் – என்றும், ஸ்ரீமத்பாகவதம் – விப்ராத் த்விஷட்குணயுதா தரவிந்தநாப பாதாரவிந்த விமுகாச் ச்வபசம் வரிஷ்டம் – பன்னிரண்டு குணங்களுடன் கூடியவனும் திருநாபியில் தாமரை மலரை உடையவனும் ஆகிய எம்பெருமானின் திருவடிகளில் பக்தி இல்லாத அந்தணனை விட விஷ்ணுவின் அடியவனாக உள்ள சண்டாளன் உயர்ந்தவன் – என்றும் கூறப்பட்டது காண்க. இதன் மூலம் எம்பெருமானிடம் பக்தி அற்றவர்களைத் தாழ்ந்தவர்களைவிடத் தாழ்ந்தவர்கள் என்று கூறியது காண்க. இதற்கு மேலாக சரணாகதி அடைந்தவளான திரௌபதியைத் துடிக்க வைத்தும், பாண்டவர்களுக்குப் பல

தீமைகளைச் செய்தும் நின்றதால், ப்ரம்மாண்ட புராணம் – ஸத்யச் சண்டாளதாம் வ்ரஜேத் - எனது அடியார்களைத் தூற்றும் அந்தணன் சண்டாளன் ஆவான் – என்றபடி, சண்டாளர்களாக நின்ற கௌரவர்களுடன் சரிசமமாக அல்லவோ அர்ஜுனன் நின்றான்? "நீசர் நடுவே" என்பதன் மூலம் இவர்களுக்கு நடுவில் நின்றதால் இவனுக்கு உண்டான தூய்மை இன்மை என்பது வெளிப்படுகிறது. ஆக இதன் மூலம், ப்ரபத்தியைக் கேட்கும்போது நீசர்கள் நடுவில் நின்றால் ப்ரபத்தி கைகூடாது போன்ற நியமம் இல்லை என்பது உணர்த்தப்பட்டது.

30. ஆகையால் சுத்தயசுத்திகளிரண்டும் தேடவேண்டா; இருந்தபடியே அதிகாரியா மித்தனை.

**அவதாரிகை** - இத்தால் பலித்ததைச் சொல்லா நின்று கொண்டு இவ்வர்த்தத்தை நிகமிக்கிறார் "ஆகையால்" என்று தொடங்கி.

**விளக்கம்** - மேலே கூறப்பட்டவற்றால் வெளிப்படும் பொருளை உணர்த்தும்படியாக இங்கு முடிக்கிறார்.

**வ்யாக்யானம்** – "ஆகையால்" என்றது, அநுஷ்டாந தசையிலும் ச்ரவண தசையிலும் இவர் களிருவருமிப்படி செய்கையாலென்றபடி. "சுத்த்யசுத்திகளிரண்டுந் தேடவேண்டா" வென்றது - ப்ரபத்தியிலந்வயிக்குமளவில் அசுத்தனாயிருக்குமவனுக்கு சுத்தி ஸம்பாதிக்க வேண்டா, சுத்தனாயிருக்கு மவனுக்கு அசுத்தி ஸம்பாதிக்க வேண்டாவென்றபடி. அசுத்தி தேட வேண்டாவென்றது – கீழ்ச்சொன்னவர்களிருவரும் அசுத்தரான தசையில் ப்ரபத்தியிலந்வயித்தமை சொல்லுகையாலே அசுத்திதானிதுக்கு வேணுமோவென்று சங்கியாமைக்காக. "இருந்தபடியே யதிகாரி யாமித்தனை" என்றது, ப்ரபதந காலத்தில் அசுத்தனாயாதல் சுத்தனாயாதல் யாதொருபடியிருந்தான், இருந்ததொரு ப்ரகாரத்திலே யிதுக்கதிகாரி யாமித்தனை யென்றபடி. த்ரௌபதியும் அர்ஜுநனும் ப்ரபத்த்யநுஷ்ட்டாந தச்ச்ரவண தசைகளில் ததங்கமாக சுத்தி ஸம்பாதியாதவோபாதி அசுத்தியும் ஸம்பாதித்துக் கொண்டமையில்லையிறே, இருந்தபடியே யதிகாரிகளான வித்தனையிறே.

**விளக்கம்** - "ஆகையால்" என்பதன் மூலம் சரணாகதியைக் கைக்கொள்ளும் நிலை (திரௌபதி), சரணாகதியைக் கேட்டும் நிலை (அர்ஜுனன்) ஆகிய இரண்டிலும் இவர்கள் இவ்விதம் இருந்த நிலை என்பதை உணர்த்துகிறார். "சுத்த்யசுத்திகளிரண்டுந்

தேடவேண்டா” என்பதன் மூலம் ப்ரபத்தியைச் செய்யத் தொடங்குவதற்கு முன்பாக ஒருவன் தூய்மையுடன் இல்லை என்றாலும், அந்தத் தூய்மையை அவன் தேட முயற்சிக்க அவசியம் இல்லை என்பதும், தூய்மையாக உள்ள ஒருவன் தூய்மையற்ற நிலையைத் தேடுதல் கூடாது என்பதும் உணர்த்தப்பட்டது. “அசுத்தி தேட வேண்டா” என்பதன் முலம் உணர்த்தப்படுவது என்னவென்றால் – மேலே கூறப்பட்ட இருவரும் ப்ரபத்தியைக் கைக்கொண்டபோது தூய்மை இல்லாதவர்களாகவே இருந்த நிலை கூறப்பட்டது. ஆக ப்ரபத்தியைக் கைக்கொள்பவர்கள் இவர்கள் போன்று தூய்மையற்ற நிலையில்தான் இருத்தல் வேண்டுமோ என்ற சந்தேகம் ஏற்படலாம். இந்தச் சந்தேகம், இதன் மூலம் விலக்கப்படுகிறது. ”இருந்தபடியே யதிகாரி யாமித்தனை” என்பதன் மூலம் – ப்ரபத்தி செய்யும்போது தூய்மையின்றி இருத்தல், தூய்மையுடன் இருத்தல் என்பதன் ஏதேனும் ஒரு நிலையில் ஒருவன் இருக்கக்கூடும்; அந்த நிலையில் அவன் ப்ரபத்திக்குத் தகுதியானவனே என்பதை உணர்த்துகிறார். திரௌபதியுடன் அர்ஜுனனும் ப்ரபத்தியைச் செய்தபோதும், கேட்டபோதும் அந்த ப்ரபத்திக்கு அங்கமாக தூய்மையைத் தேடவில்லை. ஆயினும் அந்த நேரத்தில் அவர்கள் அசுத்தத்தையும் தேடவில்லை அல்லவோ? ஆக உள்ளது உள்ளபடியே இருந்த நிலையில் அவர்கள் தகுதி படைத்தவர்கள் ஆயினர்.

31. இவ்விடத்திலே வேல்வெட்டிப்பிள்ளைக்குப் பிள்ளை அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.

**அவதாரிகை** - இவ்வர்த்த விஷயமாக ஆப்தவசநத்தை ஸ்மரிப்பிக்கிறார் மேல் ”இவ்விடத்திலே” என்று தொடங்கி.

**விளக்கம்** – இங்கு உரைக்கப்பட்ட விஷயத்தினை நன்மையை விரும்பும் நம் முன்னோர்கள் கூறியதன் மூலமாக மேலும் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, வேல்வெட்டிப்பிள்ளை, ”பெருமாள் கடலை சரணம் புகுகிறவிடத்தில் ப்ராங்முகத்வாதி நியமோபேதராய் சரணம் புகுருகையாலே, இதரோ பாயங்களோபாதி ப்ரபத்திக்கும் சில நியமங்கள் வேண்டியிருக்கிறதோ?” என்று நம்பிள்ளையைக் கேட்க; “பெருமாள் பக்கல் கண்ட நியமம் இவ்வுபாயத்துக்குடன் வந்தியா யிருப்பதொன்றன்று, பெருமாள் தமக்கு ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி என்றுபதேசித்தான் ஸ்ரீவிபீஷணாழ்வானிறே, அவன்றான் பெருமாளை சரணம் புகுகிறவிடத்தில் கடலிலேயொரு முழுக்கிட்டு வந்தானென்றில்லையே; இத்தால்

சொல்லிற்றாய்த்து - பெருமாள் இக்ஷ்வாகு வம்ச்யராய் ஆசார ப்ரதாநராயிருக்கையாலே தம்முடைய நியமங்களோடே சரணம் புக்கார், இவன் ராக்ஷஸஜாதீயனாகையாலே நின்ற நிலையிலே சரணம் புக்கான், ஆகையாலே யோக்யனுக்கு அயோக்யதை ஸம்பாதிக்க வேண்டா, அயோக்யனுக்கு யோக்யதை ஸம்பாதிக்க வேண்டா, நின்ற நின்ற நிலைகளிலே யதிகாரிகளா மித்தனை யென்னுமது" என்றருளிச் செய்த வார்த்தை.

**விளக்கம்** - நம்பிள்ளையின் சீடரான வேல்வேட்டிப்பிள்ளை நம்பிள்ளையிடம், "இராமன் ஸமுத்திர அரசனைச் சரணம் புகுந்தபோது கிழக்கு நோக்கி அமர்தல் உள்ளிட்ட முறைகளுடன் சரணம் புகுந்தார். ஆகவே பக்தி போன்ற உபாயங்களுக்கு உள்ளதைப் போன்று ப்ரபத்திக்கும் சில விதிமுறைகள் உள்ளனவோ?", என்று கேட்டார். இதற்கு நம்பிள்ளை பின்வருமாறு பதில் உரைத்தார். இராமனிடம் கண்ட இந்தச் செயலானது இந்த உபாயத்திற்கு அங்கமாக உள்ளதால் அல்ல , ப்ரபத்தியைச் செய்தவரின் இயல்பால் ஆகும். இராமாயணத்தில் (யுத்தகாண்டம்: 19-31) – ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி – அரசனாகிய இராகவன் கடலைச் சரணம் அடைய ஏற்றவரே – என்று விபீஷணன் உபதேசித்தான் அல்லவோ? ஆனால் அவன் இராமனைச் சரணம் அடைந்தபோது அந்தக் கடலில் ஒரு முழுக்கு போட்டு நீராடி வந்தான் என்று கூறப்படவில்லை அல்லவோ? இராமன் இக்ஷ்வாகு வம்சம் என்பதால், தனது குல மரபுகளின்படி அவற்றை முக்கியமாகக் கொள்பவர் என்பதால், தன்னுடைய முறைகளுக்கு ஏற்பச் சரணம் அடைந்தார். ஆனால் விபீஷணன் அரக்க வழியில் வந்தவன் என்பதால், தான் உள்ள நிலையில் அப்படியே சரணம் அடைந்தான். ஆகவே தகுதி உள்ளவனுக்குத் தகுதி இன்மையைத் தேடுதலும், தகுதி இல்லாதவனுக்குத் தகுதியைத் தேடுதலும் அவசியம் இல்லை. அவரவர்கள் உள்ள நிலையிலேயே ப்ரபத்திக்குத் தகுதியானவர்கள் ஆவர்.

32. அதிகார நியமமின்றிக்கே யொழிந்தபடி யென்னென்னில், தர்மபுத்ராதிகளும் த்ரௌபதியும் காகமும் காளியனும் ஸ்ரீகஜேந்த்ராழ்வானும் ஸ்ரீவிபீஷணாழ்வானும் பெருமாளும் இளையபெருமாளும் தொடக்கமானவர்கள் சரணம் புகுருகையாலே அதிகாரி நியமமில்லை.

**அவதாரிகை -** அநந்தரம் அதிகாரி நியமா பாவத்தையுப பாதிப்பதாக தஜ்ஜிஜ்ஞாஸு ப்ரச்நத்தை யநுவதிக்கிறார் "அதிகாரி நியமமின்றிக்கே யொழிந்தபடி யென்னென்னில்" என்று. அதுக்குத் தரமருளிச் செய்கிறார் "தர்மபுத்ராதிகளும்" என்று தொடங்கி.

**விளக்கம் –** அடுத்து அதிகாரி நியமம் இல்லை என்பதை விளக்க எண்ணினார். ஆகவே அந்த நியமம் குறித்து அறிவதில் ஆர்வம் உள்ளவர்கள் கேட்கும் கேள்வியை முதலில் அருளிச் செய்கிறார். அதாவது – ப்ரபத்திக்கு அதிகாரி நியமம் என்பது ஏன் இல்லை – என்பது கேள்வியாகும். இதற்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது த்ரௌபத்யா ஸஹிதாஸ் ஸர்வே நமச் சக்ரூர் ஜநார்தநம் என்று க்ஷத்ரியரான தர்மபுத்ராதிகளும்; சங்க சக்ர கதாபாணே த்வாரகா நிலயாச்யுத, கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம் என்று ஸ்த்ரீயான த்ரௌபதியும்; ஸ பித்ராச பரித்யக்தஸ் ஸுரைச்ச ஸமஹர்ஷிபி:, த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணங்கத: என்று தேவரூபத்தை மறைத்து வந்து மஹாபராதத்தைப் பண்ணின காகமும்; ஸோஹந்தே தேவ தேவேச நார்ச்சநாதௌ ஸ்துதௌ நச, ஸாமர்த்த்யவாந் க்ருபாமாத்ர மநோவ்ருத்தி: ப்ரஸீத மே என்று திர்யக்யோநிஜனாய் ப்ரதிகூலனுமான காளியனும்; பரமாபதமாபந்தோ மநஸாசிந்தயத்ஹரிம், ஸது நாகவரச் ஸ்ரீமாந் நாராயணபராயண: என்று திர்யக் ஜந்மாவாய் அநுகூலனுமாயிருக்கிற ஸ்ரீகஜேந்த்ராழ்வானும்; ஸோஹம் பருஷிதஸ் தேந தாஸவச்சாவமாநித:, த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம் கத: என்று ராக்ஷஸ ஜாதீயனான ஸ்ரீவிபீஷணாழ்வானும்; பாஹுும் புஜக போகாப முபதாயாரி ஸூதந:, அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததே: என்று ஸர்வ சரண்யரான பெருமாளும்; ஸப்ராதுச் சரணௌகாடம் நிபீட்ய ரகுநந்தந:, ஸீதாமுவாசாதியசா ராகவஞ்ச மஹாவ்ரதம் என்று அக்கரையராய் தொடர்ந்தடிமை செய்ய வந்த இளையபெருமாளும், "தொடக்கமானவர்கள்" என்கையாலே – ஸோஹம் த்வாம் சரணமபார மப்ரமேயம் ஸம்ப்ராப்த: பரமபதம் யதோ ந கிஞ்சித் ஸம்ஸார ச்ரமபரிதாப தப்த சேதா நிர்வாணே பரிணததாம்நி ஸாபிலாஷ: என்று முசுகுந்தனும், மூடோய மல்பமதி ரல்ப விசேஷ்டிதோயம் க்லிஷ்டம் மநோஸ்ய விஷயைர் நமயிப்ரஸங்கி, இத்தம் க்ருபாங் குரு மயி ப்ரணதேகிலேச தவாம் ஸ்தோது மம்புஜ பவோபிஹி தேவ நேச: என்று க்ஷத்ரபந்துவும், பகவந்தம் ப்ரபந்நாஸா பகவந்தமவாப ஹ என்று மாதவியும், தம் ப்ரபிந்நசிரோக்ரீவம் ஆஸ்யேப்ய: ஸ்ருத சோணிதம் விலோக்ய சரணம் ஜக்முஸ் தத்பத்ந்யோ மதுஸூதநம் என்று காளியபத்நிகளும், ப்ரணாம ப்ரவணா நாத தைத்ய

ஸைந்ய பராஜிதா: சரணம் த்வா மநுப்ராப்தாஸ் ஸமஸ்தா தேவதா தேவதா கணா: என்று இந்த்ராதி தேவர்களும், ராக்ஷஸைர் வத்யமாநாநாம் வாநராணாம் மஹாசமூ: சரண்யம் சரணம் யாதா ராமம் தசரதாத்மஜம் என்று ஸ்ரீவாநர ஸேனையும், முதலாயுள்ளவர்களெல்லாரும் சரணம் புகுருகையாலே, ப்ரபத்திக்கு இன்னாரதிகாரிகளென்றொரு நியதியில்லை; ருசியுடையாரெல்லாரும் அதிகாரிகளென்கை.

**விளக்கம்** – கீழே உள்ள பல வரிகள் காண்க.

- மஹாபாரதம் – த்ரௌபத்யா ஸஹிதாஸ் ஸர்வே நமச் சக்ருர் ஜநார்தநம் - த்ரௌபதியுடன் கூடியவர்களாக இருந்த ஐந்து பேரும் வந்து ஜநார்த்தனனை வணங்கினர் - என்று க்ஷத்ரியர்களான தர்மபுத்திரன் உள்ளிட்ட பாண்டவர்கள்.

- மஹாபாரதம் – சங்க சக்ர கதாபாணே த்வாரகா நிலயாச்யுத, கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம் – சங்கு சக்ரத்துடன் கூடியவனே! துவாரகையில் உள்ளவனே! கோவிந்தா! அடியார்களை நழுவவிடாதவனே! தாமரை போன்ற கண்கள் கொண்டவனே! உன்னிடம் சரணம் அடைந்த என்னைக் காப்பாயாக - என்ற பெண்ணாகிய த்ரௌபதி.

- இராமாயணம் ஸுந்தர காண்டம் – ஸ பித்ராச பரித்யக்தஸ் ஸுரைச்ச ஸமஹர்ஷிபி:, த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணங்கத: – தாய் தந்தையர்கள், முனிவர்கள் , தேவர்கள் என்ற பலராலும் கைவிடப்பட்ட காகம், மூன்று உலகங்களிலும் அலைந்து திரிந்து இறுதியாக இராமனிடம் சரணம் என்று புகுந்தான் – என்று தனது தேவஸ்வரூபத்தை மறைத்து வந்து மிகவும் பெரிய பாவங்கள் செய்த காகம்.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-7-10) - ஸோஹந்தே தேவ தேவேச நார்ச்சநாதௌ ஸ்துதௌ நச, ஸாமர்த்த்யவாந் க்ருபாமாத்ர மநோவ்ருத்தி: ப்ரஸீத மே – தேவர்களுக்குத் தலைவனே! உன்னை அர்ச்சனை செய்வது போன்ற செயலகளுக்குத் தகுதி படைத்தவன் அல்லன்; உன்னைத் துதிப்பதற்கும் சாமர்த்தியம் இல்லாதவன்; நீ உனது கருணை மூலமாக மனம் குளிர்ந்து, எனக்கு அருள் புரியவேண்டும் - என்று தாழ்ந்த விலங்கு இனத்தில் பிறந்த காளியன்.

- ஸ்ரீவிஷ்ணுதர்மம் (69-80) - பரமாபதமாபந்தோ மநஸாசிந்தயத்ஹரிம், ஸது நாகவரச் ஸ்ரீமாந் நாராயணபராயண: – கைங்கர்யம் என்ற செல்வம் நிறைந்தவனும், ஸ்ரீமந்நாராயணனை மட்டுமே எப்போதும் த்யானித்தபடி உள்ளவனும் ஆகிய கஜேந்த்ரன் மிகவும் பெரிய துன்பத்தை அடைந்தான். அப்போது தனது மனதாலேயே விரோதியை அழிக்கவல்ல எம்பெருமானை நினைத்தான் - என்று விலங்கு இனமாக உள்ளபோதிலும் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்யும் கஜேந்த்ரன்.

- இராமாயணம் யுத்தகாண்டம் (17-16) – ஸோஹம் பருஷிதஸ் தேந தாஸவச்சாவமாநித:, த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம் கத: – நான் இராவணனுக்கு நன்மை அளிக்கும் சொற்களைக் கூறினேன். அப்படிப்பட்ட நான் இராவணனால் தீய சொற்கள் மூலம் தாக்கப்பட்டேன். அவனது வேலையாள் போன்று இழிவுபடுத்தப்பட்டேன். எனது புத்திரர்கள் மற்றும் மனைவியை விட்டு இராகவனைச் சரணம் அடைந்தேன் – என்று அரக்க குலத்தில் பிறந்த விபீஷணன்.

- இராமாயணம் யுத்தகாண்டம் (21-1) - பாஹும் புஜக போகாப முபதாயாரி ஸூதந:, அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததே: - பாம்பின் உடல் போன்ற நீண்ட திருக்கரத்தைத் தனது தலைக்கு அணையாக வைத்தபடி கிழக்கு முகமாகக் கைகளைக் குவித்த இராமன் கடலை நோக்கிச் சயனித்தான் – என்று அனைவருக்கும் புகலிடமாக உள்ள இராமன்.

- இராமாயணம் – ஸப்ராதுச் சரணௌகாடம் நிபீட்ய ரகுநந்தந:, ஸீதாமுவாசாதியசா ராகவஞ்ச மஹாவ்ரதம் - மிகுந்த புகழுடைய இலக்குவன் தனது தமையனான இராமனின் திருவடிகளை இறுக்கமாகப் பற்றினான். அதன் பின்னர் இராமனையும் சீதையையும் பார்த்து உரைத்தான் – என்று பரமபதத்திலிருந்து தொடர்ந்து கைங்கர்யம் செய்யும் இலக்குவன்.

மேலே உள்ளவர்கள் பின்னே, "தொடக்கமானவர்கள்" என்பதால் கீழே உள்ளவர்களும் உணர்த்தப்படுகின்றனர்:

- ஸ்ரீமத்பாகவதம் – ஸோஹம் த்வாம் சரணமபார மப்ரமேயம் ஸம்ப்ராப்த: பரமபதம் யதோ ந கிஞ்சித் ஸம்ஸார ச்ரமபரிதாப தப்த சேதா நிர்வாணே பரிணததாம்நி ஸாபிலாஷ: - யார் ஒருவனை அடைந்த பின்னர் அதற்கு மேல் வேறு எந்தவிதமான புருஷார்த்தமும் தேவை இல்லையோ, அப்படிப்பட்ட எல்லையற்ற பெருமைகள் கொண்ட உன்னை, எனது பிறவியின் காரணமாகத் தீய மனம் கொண்ட நான் சரணம் அடந்தேன். தூய்மையான ஒளி கொண்ட பரமபதத்தில் நான் ஆசை கொண்டேன் – என்று உரைத்த முசுகுந்தன்.

- மூடோய மல்பமதி ரல்ப விசேஷ்டிதோயம் க்லிஷ்டம் மநோஸ்ய விஷயைர் நமயிப்ரஸங்கி, இத்தம் க்ருபாங் குரு மயி ப்ரணதேகிலேச தவாம் ஸ்தோது மம்புஜ பவோபிஹி தேவ நேச: - அனைவருக்கும் தலைவனே! தேவர்களின் தேவனே! உன்னை வணங்கிக் கொண்டு நின்றுள்ள என்னைப் பற்றி உனது மனதில், ”இவன் ஏதும் அறியாதவன்; அற்பமான அறிவுள்ளவன்; தாழ்ந்த செயல்கள் செய்பவன்; இவன் மனம் எப்போதும் அற்பமான செயல்களில் ஈடுபட்டுள்ளது; என்னிடம் சிறிதும் ப்ரேமை இல்லாதவன்”, என்று எண்ணுவாயாக. இப்படியாக எண்ணி எனக்கு க்ருபை செய்யவேண்டும். உன்னைத் துதிக்க நான்கனும் திறன் அற்றவனே ஆவான் – என்ற க்ஷத்ரபந்து.

- பகவந்தம் ப்ரபந்நாஸா பகவந்தமவாப ஹ – எம்பெருமானைச் சரணம் அடைந்த அந்த மாதவி அவனை அடைந்தாள் - என்ற மாதவி.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-7-7) - தம் ப்ரபிந்நசிரோக்ரீவம் ஆஸ்யேப்ய: ஸ்ருத சோணிதம் விலோக்ய சரணம் ஜக்முஸ் தத்பத்ந்யோ மதுஸூதநம் – உடைக்கப்பட்ட தலைகள் மற்றும் திருகப்பட்ட கழுத்து ஆகியவற்றில் இருந்து இரத்தம் சொரிந்தபடி நின்ற காளியனை அவனது மனைவிமார்கள் கண்டனர். உடனே அவர்கள் க்ருஷ்ணனைச் சரணம் அடைந்தனர் - என்று காளியனின் மனைவிமார்கள்.

- ப்ரணாம ப்ரவணா நாத தைத்ய ஸைந்ய பராஜிதா: சரணம் த்வா மநுப்ராப்தாஸ் ஸமஸ்தா தேவதா தேவதா கணா: – ஸ்வாமீ! தைத்ரியர்களின் சேனைகளால்

வீழ்த்தப்பட்ட தேவர்கள் உன்னை வணங்குவதில் ஆர்வம் கொண்டவர்களாக நின்று, உன்னைச் சரணம் அடைந்தனர் - என்று இந்த்ரன் உள்ளிட்ட தேவர்கள்.

- இராமாயணம் யுத்தகாண்டம் (94-17) - ராக்ஷஸைர் வத்யமாநாநாம் வாநராணாம் மஹாசமூ: சரண்யம் சரணம் யாதா ராமம் தசரதாத்மஜம் - அரக்கரகளால் தாக்கப்பட்ட குரங்குகளின் கூட்டம், தங்களைக் காப்பாற்றுபவன் என இராமனைத் தஞ்சம் அடைந்தன - என்று வானரசேனை.

ஆக பலரும் சரணம் புகுவதால், ப்ரபத்திக்கு இவர் இவர் மட்டுமே அதிகாரிகள் என்ற நியமம் ஏதும் இல்லை என்பது தெளிவாகிறது. சரணம் என்பதில் ஆர்வம் உடைய அனைவரும் தகுதியானவர்கள் ஆவர்.

33. பலநியமமின்றிக்கேயொழிந்தபடியென்னென்னில்; தர்மபுத்ராதிகளுக்குப் பலம் ராஜ்யம்; த்ரௌபதிக்குப் பலம் வஸ்த்ரம்; காகத்துக்கும் காளியனுக்கும் பலம் ப்ராணம்; ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்குப் பலம் கைங்கர்யம்; ஸ்ரீவிபீஷணாழ்வானுக்குப் பலம் ராமப்ராப்தி; பெருமாளுக்குப் பலம் ஸமுத்ரதரணம்; இளையபெருமாளுக்குப் பலம் ராமாநுவ்ருத்தி.

**அவதாரிகை** – அநந்தரம், பல நியமாபாவ ப்ரச்நத்தையநுவதிக்கிறார் "பல நியமமின்றிக்கேயொழிந்தபடி யென்னென்னில்" என்று. அதுக்குத்தரமருளிச் செய்கிறார் "தர்மபுத்ராதிகளுக்கு பலம்" என்று தொடங்கி.

**விளக்கம்** - அடுத்து "பல நியமம் இல்லை" என்னும் கேள்வியை எழுப்பி (பலநியம மின்றிக்கேயொழிந்தபடியென்னென்னில்), அதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – இத்தால், கீழ் அதிகாரி நியமாபாவத்துக் குடலாகக் காட்டப்பட்ட தர்ம புத்ராதிகள் தொடக்கமான ப்ரபத்தாக்களானவர்கள், ராஜ்யார்த்தமாகவும் வஸ்த்ரார்த்தமாகவும், ப்ராணார்த்தமாகவும், கைங்கர்யார்த்தமாகவும், ராமப்ராப்த் யர்த்தமாகவும்; ஸமுத்ரதரணார்த்தமாகவும், ராமாநுவ்ருத்த்யர்த்தமாகவும் ப்ரபத்தி பண்ணுகையாலே ப்ரபத்திக்குப் பலநியமமில்லையென்றதாய்த்து.

**விளக்கம் -** இந்தச் சூர்ணை மூலம் உணர்த்தப்படுவது – கடந்த சூர்ணையில் "ப்ரபத்திக்கு அதிகாரி நியமம் இல்லை" என்பதற்கு உதாரணமாகக் கூறப்பட்ட பாண்டவர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் செய்தது பற்றிக் கூறப்படுகிறது. மேலே கூறப்பட்டவர்கள் இராஜ்யம் அடைதல், வஸ்த்ரம் பெறுதல், உயிரை நிலை நிறுத்துதல், கைங்கர்யம் வேண்டுதல், இராமனை அடைதல், கடலில் அணை கட்டுதல், இராமன் பின்னே செல்லுதல் போன்ற பல செயல்களுக்காக ப்ரபத்தி செய்தனர். ஆகவே ப்ரபத்தி என்பதற்கு "இன்ன பலன் அடைவதற்காக" என்ற பல நியமம் இல்லை என்றாகிறது.

34. விஷயநியமமாவது குணபூர்த்தியுள்ளவிடமே விஷயமாகை; பூர்த்தியுள்ளதும் அர்ச்சாவதாரத்திலே.

**அவதாரிகை** - ஆக ப்ரபத்திக்கு தேசகாலாதி நியமாபேக்ஷையில்லையென்ற ப்ரதிஜ்ஞையை யுபபாதித்தார் கீழ்; (விஷயநியமமேயுள்ளது) என்ற ப்ரதிஜ்ஞையை உபபாதிக்கிறார் மேல் (விஷய நியமமாவது) என்று தொடங்கி.

**விளக்கம் –** இதுவரை ப்ரபத்திக்கு தேசம், காலம் போன்ற நியமங்கள் இல்லை என்று தான் எடுத்த விஷயத்தை உறுதிபட விளக்கினார். இனி "விஷய நியமம் மட்டுமே உள்ளது" என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (குணபூர்த்தியுள்ளவிடமே விஷயமாகை) என்றது - பரத்வாதிகளைந்திலும் வைத்துக்கொண்டு ஸௌலப்யாதி குணபூர்த்தியுள்ளவிடமே விஷயமாகையென்றபடி. அந்த குணபூர்த்திதானுள்ளதெங்கேயென்ன. (பூர்த்தியுள்ளதுமர்ச்சாவதாரத்திலே) என்கிறார். அர்ச்சாவதார விஷயே மயாப் யுத்தேசதஸ் ததா உக்தா குணா நசக்யந்தே வக்தும் வர்ஷ சதைரபி என்று ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனானதானே சொல்லப்புக்காலும் சொல்லித் தலைக்கட்ட வரிதாம்படியிறே அர்ச்சாவதார குணபூர்த்தியிருப்பது.

**விளக்கம் –** "குணபூர்த்தியுள்ளவிடமே விஷயமாகை" என்றால் பரத்வம் உள்ளிட்ட ஐந்து நிலைகளிலும் (பரத்வம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி மற்றும் அர்ச்சை) ஸௌலப்யம் முதலான குணங்கள் பூர்ணமாக உள்ளது என்று பொருள். இப்படிப்பட்ட குணங்கள் பூர்ணமாக உள்ளது அர்ச்சாவதாரத்தில் என்கிறார். பாத்மஸம்ஹிதை – அர்ச்சாவதார விஷயே மயாப் யுத்தேசதஸ் ததா உக்தா குணா நசக்யந்தே வக்தும் வர்ஷ சதைரபி –

இப்படியாக அர்ச்சாவதாரத்தின் குணங்கள் என்னால் சுருக்கமாகக் கூறப்பட்டன; நூறு ஆண்டுகள் இவ்விதம் அர்ச்சையின் குணங்களை உரைத்தாலும் என்னால் கூறி முடிக்க இயலாது – என்று ஸர்வேச்வரனே கூறியது காண்க. ஆகவே அனைத்தும் அறிந்த எம்பெருமான் முயற்சித்தாலும் அவனால் கூட அர்ச்சையின் குணங்களை முழுமையாக உரைக்க இயலாது.

35. ஆழ்வார்கள் பலவிடங்களிலும் ப்ரபத்தி பண்ணிற்றும் அர்ச்சாவதாரத்திலே.

**அவதாரிகை** - இக்குண பூர்த்தியுள்ள அர்ச்சாவதாரமே ப்ரபத்திக்கடைத்த விஷயமென்னுமத்தை, ப்ரபந்நஜந கூடஸ்தருடைய அநுஷ்டாநத்தாலும் ப்ரகாசிப்பிக்கிறார் மேல் (ஆழ்வார்கள்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாகக் குணங்கள் பூர்ணமாக நிறைந்துள்ள அர்ச்சை என்பதே ப்ரபத்திக்கு ஏற்ற விஷயம் என்பதை ஸ்வாமி நம்மாழ்வாரின் அநுஷ்டானம் மூலம் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - மயர்வறமதிநலமருளிப் பெறுகையாலே பரத்வாதிகளையெல்லாம் கரதலாமலகமாகக் கண்டிருக்கிறவர்களிறே ஆழ்வார்கள். இப்படியிருக்கிறவர்கள் ப்ராப்யத்வராதிசயத்தாலே பலகாலும் ப்ரபத்தி பண்ணுகிறவளவில் பலவிடங்களிலும் அர்ச்சாவதாரத்திலேயிறே ப்ரபத்தி பண்ணிற்று. ஸ்தலாந்தரத்தில் க்வாசித்கமித்தனையிறே. எங்ஙனேயென்னில்? ஆழ்வார்களுக்கெல்லாம் தலைவரான நம்மாழ்வார் "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்", "கழல்களவையே சரணாகக் கொண்ட", "நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்", "உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேன்" என்று இப்படி பலவிடங்களிலும் ப்ரபத்தி பண்ணிற்று அர்ச்சாவதாரத்திலேயிறே; பிறந்தவாறு ஒன்றிலுமிறே அவதாரத்திலே சரணம்புக்கது. திருமங்கையாழ்வாரும், "வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய்", "விரையார் திருவேங்கடவா நாயேன் வந்தடைந்தேன்", "காவளம்பாடி மேய கண்ணனே களைகணீயே", "ஆழிவண்ணா! நின்னடியிணையடைந்தேனணி பொழில் திருவரங்கத் தம்மானே" என்று இப்படி அர்ச்சாவதாரத்திலேயிறே பலவிடங்களிலும் ப்ரபத்தி பண்ணிற்று. மற்றையாழ்வார்களுக்குமிப்படி தத்தத் ப்ரபந்தங்களிலே கண்டு கொள்வது (ப்ரபத்தி பண்ணிற்றும்) என்கிற விந்த ச சப்தத்தாலே (பூர்த்தியுள்ளதும்) என்று கீழ்ச் சொன்னத்தை ஸமுச்சயிக்கிறது.

**விளக்கம்** – மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள் என்பதால் ஆழ்வார்கள் அர்ச்சை உள்ளிட்ட ஐந்து நிலைகள் பற்றிய அனைத்தையும் பூர்ணமாக உள்ளங்கை நெல்லிக்கனி போன்று அறிந்தவர்கள் ஆவர். இப்படியாக உள்ள ஆழ்வார்கள் தங்களின் பாசுரங்கள் மூலம் பல இடங்களிலும் ப்ரபத்தி குறித்து முழங்குகின்றபோது, பல இடங்களிலும் அர்ச்சையிடமே ப்ரபத்தி செய்தனர். அர்ச்சை நீங்கலாக உள்ள மற்ற நான்கு நிலைகளிலும் ப்ரபத்தி செய்தது ஒரு சில இடங்களில் மட்டுமே ஆகும். எப்படி இதனைக் கூற முடிந்தது? ஆழ்வார்களின் தலைவராக உள்ள ஸ்வாமி நம்மாழ்வார் கீழே உள்ள பல பாசுரங்கள் மூலம் அர்ச்சையைச் சரணம் அடைந்தார்:

- திருவாய்மொழி (5-7-10) – ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்
- திருவாய்மொழி (5-8-11) – கழல்களவையே சரணாகக் கொண்ட
- திருவாய்மொழி (5-9-11) – நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்
- திருவாய்மொழி (6-10-10) – உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேன்

ஆயினும் திருவாய்மொழி (5-10-1) - பிறந்தவாறும் – என்ற ஒரு பாசுரம் மூலம் மட்டுமே அர்ச்சை அல்லாத நிலையில் சரணம் புகுந்தார். இது போன்று திருமங்கையாழ்வாரும் கீழே உள்ள பல இடங்களில் அர்ச்சையைச் சரணம் புகுகிறார்:

- பெரிய திருமொழி (1-6-4) – வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய்
- பெரிய திருமொழி (1-9-1)- விரையார் திருவேங்கடவா நாயேன் வந்தடைந்தேன்
- பெரிய திருமொழி (4-6-1) - காவளம்பாடி மேய கண்ணனே களைகணீயே
- பெரிய திருமொழி (5-8-1) - ஆழிவண்ணா! நின்னடியிணையடைந்தேனணி பொழில் திருவரங்கத்தம்மானே

இது போன்று மற்ற ஆழ்வார்கள் ப்ரபத்தி செய்ததை அவரவர்களின் ப்ரபந்தத்தில் காணலாம். "ப்ரபத்தி பண்ணிற்றும்" என்பதன் முடிவில் உள்ள உம்மைத் தொகை, மேலே கூறப்பட்ட "பூர்த்தி உள்ளதும்" என்பதுடன் இணைகிறது.

36. “பூர்ணம்” என்கையாலே யெல்லா குணங்களும் புஷ்கலங்கள்.

**அவதாரிகை** - இப்படியிவ்வாழ்வார்கள் ப்ரபத்தி பண்ணுமிடங்களில் பரத்வாதிகளெல்லாமிருக்க அர்ச்சாவதாரத்திலே பண்ணுகைக்கடி – இதின் குணபூர்த்தியிறே; அந்த குணபூர்த்தி தன்னை ஸப்ரமாணமாக வருளிச் செய்கிறார் மேல் (பூர்ணம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - பல நிலைகளிலும் எம்பெருமான் உள்ளபோது ஆழ்வார்கள் ஏன் அர்ச்சை நிலையில் மட்டுமே ப்ரபத்தி செய்தனர் என்ற கேள்வி எழலாம். இதன் காரணம் அர்ச்சையில் குணங்கள் பூர்ணமாக உள்ளதால் ஆகும். இப்படியாக அர்ச்சையில் குணங்கள் பூர்ணமாக உள்ளதைத் தகுந்த ப்ரமாணங்கள் மூலம் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (பூர்ணமென்கையாலே) என்றது பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வசிஷ்யதே ஸர்வம் பூர்ணம் ஸஹோம் என்று ச்ருதி சொல்லுகையாலேயென்றபடி. (எல்லா குணங்களும் புஷ்கலங்கள்) என்றது ஆச்ரயண ஸௌகர்யாபாதகங்களான குணங்களோடு கார்யாபாதகங்களான குணங்களோடு வாசியற ஸகல கல்யாண குணங்களுமிவ் விஷயத்திலே ஸம்பூர்ணமென்றபடி.

**விளக்கம்** – “பூர்ணம் என்கையாலே” என்பதன் மூலம் உணர்த்தப்பட்டது என்ன? கட உபநிஷத் – பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வசிஷ்யதே ஸர்வம் பூர்ணம் ஸஹோம் - காப்பதை இயல்பாக உடையதும், அடையத்தக்கதாக உள்ளதும் ஆகிய அர்ச்சாவதாரத்தில் அனைத்தும் பூர்ணமாக உள்ளன – என்று ச்ருதி உணர்த்துவதை இவரும் அருளிச்செய்கிறார். “எல்லா குணங்களும் புஷ்கலங்கள்” என்பதன் மூலம் உபாயமாகப் பற்றும்போது எளிமையை உணர்த்தவல்ல குணங்களுடன் (வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், சௌசீல்யம், ஸௌலப்யம்), அடியார்களின் செயல்களை நிறைவேற்றத்தக்க குணங்களும் (ஞானம், சக்தி, பூர்த்தி) வேற்றுமை இன்றி அனைத்து திருக்கல்யாண குணங்களாக இந்த அர்ச்சையில் கலந்து, குறைவற்று உள்ளது - என்பதை உணர்த்தினார்.

37. ப்ரபத்திக்கபேக்ஷிதங்களான ஸௌலப்யாதிகள் இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாசிப்பதிங்கே.

**அவதாரிகை** - ஆனால், “வாஸுதேவோஸி பூர்ண:” என்கிற பரத்வத்திற் காட்டில் இங்குத்தைக் கேற்ற மென்னென்ன வருளிச்செய்கிறார் (ப்ரபத்திக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - வாஸுதேவோஸி பூர்ண: - வாசுதேவனான நீ எங்கும் வ்யாபித்துள்ளாய் - என்று கூறும் பரத்வத்தைக் காட்டிலும் இங்கு உணர்த்தப்பட்ட மேன்மை என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – (ப்ரபத்திக் கபேக்ஷிதங்களான) என்றது - உபாயமாகப் பற்றுமிடத்தில் வேண்டுமவையான வென்றபடி. (ஸௌலப்யாதிகளாவன) – கண்டு பற்றுகைக்குறுப்பான ஸௌலப்யமும், மேன்மை கண்டகலாமைக் குறுப்பான ஸௌசீல்யமும், கார்யஞ் செய்யுமென்று விச்வஸிக்கைக்குறுப்பான ஸ்வாமித்வமும், குற்றங்கண்டு வெருவாமைக் குறுப்பான வாத்ஸல்யமும். ”நிகரில் புகழாய்” இத்யாதியாலே இந்நாலு குணத்தையுமிறே ஆழ்வாரருளிச்செய்தது.

(இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாசிப்பதிங்கே) என்றது - பரத்வத்தில் இக்குணங்களெல்லாமுண்டாயிருக்கச்செய்தே, பரமஸாம்யாபந்நர்க்கு முகங் கொடுத்திருக்கிற விடமாகையாலே பகல்விளக்குப்போல் ப்ரகாசமற்றிருக்கும்; அர்ச்சாவ தாரமான விடத்தில் தண்மைக் கெல்லைநிலமான ஸம்ஸாரிகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கையாலே, அந்தகாரத்தில் தீபம்போலே அத்யுஜ்வலமாய்த் தோற்றுமென்றபடி. விஷயமுள்ள விடத்தேயிறே குணங்கள் ப்ரகாசிப்பது; அங்குள்ளாரும் சீலாதி குணாநுபவம் பண்ணுகைக்கு வருவதிங்கேயிறே. ஸௌலப்யம் முன்னாக வருளிச்செய்தது - கண்டுபற்றுகைக்குறுப்பான ஸௌலப்யமே ப்ரபத்திக்கு ப்ரதாநா பேக்ஷிதமென்று தோற்றுகைக்காக.

**விளக்கம்** – ”ப்ரபத்திக் கபேக்ஷிதங்களான” என்பதன் மூலம் – உபாயமாகப் பற்றும் ஒரு விஷயத்தில் இன்றியமையாமல் இருக்க வேண்டியவை – என்பதைக் கூறினார். “ஸௌலப்யாதிகளாவன” என்பதன் மூலம் – கண்ணால் கண்டும் மற்ற உறுப்புக்களால் உணர்ந்தும் பற்றுவதற்குச் சான்றாக உள்ள ஸௌலப்யம், அவனது மேன்மையைக் கண்டு நாம் விலகிச் செல்வதைத் தடுக்கவல்ல சௌசீல்யம், நமது செயல்களை இவன் பார்த்துக் கொள்வான் என்று நமக்கு நம்பிக்கை ஏற்படுத்தவல்ல ஸ்வாமித்வம், நமது

குற்றங்களைக் கண்டு இவன் நன்மை வெறுக்காமல் இருப்பதற்கு அவனிடம் உள்ள வாத்ஸல்யம் – ஆகிய பலவும் உணர்த்தப்பட்டது. இந்த நான்கையும் நம்மாழ்வார் திருவாய்மொழியில் (6-10-10) – நிகரில் புகழாய் – என்று அருளிச்செய்தார்.

“இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாசிப்பதிங்கே” என்பதன் மூலம் – பரத்வத்தில் இந்த அனைத்து குணங்களும் இருக்கவே செய்கிறது. ஆயினும் அனைத்து விதங்களிலும் தன்னைப் போன்றே உள்ள நித்யசூரிகளால் மட்டுமே காண்பதற்கு ஏற்றபடி உள்ள பரவாஸுதேவ நிலை என்பது, பகலில் ஏற்றப்பட்ட விளக்கு போன்று ப்ரகாசம் இல்லாமலேயே இருக்கும். ஆனால் அர்ச்சாவதாரத்தில், தாழ்வுக்கு இடமாக உள்ள ஸம்ஸாரத்தில் இருக்கின்ற மனிதர்களுக்குத் தன்னை காண்பித்தபடி உள்ளதால், ஆழ்ந்த இருளில் ஏற்றப்பட்ட விளக்கு போன்று, மிகுந்த ஒளியாக அர்ச்சை ப்ரகாசிக்கிறது – என்று உணர்த்தினார். பரம்பதத்தில் உள்ளவர்கள் கூட இவனது சீலம் முதலான குணங்களை அனுபவிப்பதற்காக இங்கு இவன் அர்ச்சையாக உள்ள இடம் தேடி வருவதாக அல்லவோ அர்ச்சையின் தன்மை உள்ளது? ஸௌலப்யம் என்பதை ஏன் முதலில் அருளிச்செய்தார்? இவனை நன்கு உணர்ந்து, பற்றிக் கொள்வதற்கு ஏற்றபடி உள்ள ஸௌலப்யம் என்பதே ப்ரபத்திக்கு முதலில் தேவையானது என்பதை உணர்த்தவே ஆகும்.

38. பூர்த்தியையும் ஸ்வாதந்த்ர்யத்தையும் குலைத்துக் கொண்டு தன்னை அநாதரிக்கிறவர்களைத் தான் ஆதரித்து நிற்கிறவிடம்

**அவதாரிகை** - “இக்குணங்கள் ப்ரகாசிப்பதிங்கே” என்றத்தை யுபபாதிக்கிறார் (பூர்த்தியையும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – “இக்குணங்கள் ப்ரகாசிப்பது இங்கே” என்று கடந்த சூர்ணையில் அருளிச்செய்ததை மேலும் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** - (பூர்த்தியாவது) - அவாப்த ஸமஸ்த காமத்வம்; அத்தைக் குலைத்துக் கொள்ளுகையாவது இவனிட்டது கொண்டு த்ருப்தனாக வேண்டும்படி ஸாபேக்ஷனாயிருக்கை. (ஸ்வாதந்த்ர்யமாவது) ஸ்வாதீந ஸ்வரூபாதிமத்த்வம்; அத்தைக் குலைத்துக் கொள்ளுகையாவது - ஆச்ரிதாதீந ஸ்வரூப ஸ்தித்யாதிகளையுடையனாகை. ததிச்சயா மஹாதேஜா புங்க்தேவை பக்தவத்ஸல: ஸ்நாநம் பாநம் ததா யாத்ராம்

குருதேவை ஜகத்பதி: ஸ்வதந்த்ரஸ் ஸஜகந்நாதோப்யஸ்வதந்த்ரோ யதாததா ஸர்வசக்திர் ஜகத்தாதாப்யசக்த இவ சேஷ்டதே என்னக்கடவதிறே. அர்ச்சக பராதீநாகிலாத்ம ஸ்திதி: என்றருளிச் செய்தாரிறே பட்டர். தன்னிச்சையொழிய இவற்றைக் குலைக்கைக்கு ஹேதுவில்லாமையாலே (குலைத்துக்கொண்டு) என்கிறார். (தன்னையநாதரிக் கிறவர்களைத் தானாதரித்து நிற்கிறவிடம்) என்றது - தானிப்படி ஸுலபனாய் வந்து நின்றால் அரியவனெளியவனாய் நிற்கப் பெற்றோமே! என்று விரும்பி மேல் விழுகை யன்றிக்கே, அவ்வெளிமை தானே ஹேதுவாக உபக்ஷிக்கிற ஸம்ஸாரிகளைத் தான் விட மாட்டாதவளவன்றிக்கே அவர்களையொழியச் செல்லாமை தோற்றும்படி நிற்கிற ஸ்தலம் அர்ச்சாவதாரமென்கை. பூர்த்தியையும் ஸ்வாதந்த்ர்யத்தையும் குலைத்துக்கொண்டு நிற்கையாலே – ஸௌலப்ய ஸௌசீல்யங்களும் தன்னையநாதரிக்கிறவர்களைத் தானாதரித்து நிற்கையாலே - ஸ்வாமித்வ வாத்ஸல்யங்களுமிங்கே தோற்ற நின்றதிறே.

**விளக்கம் -** பூர்த்தி என்றால் தான் விரும்பியது அனைத்தும் அடைந்தவனாக இருப்பதாகும் (அவாப்த ஸமஸ்த காமத்வம்). அந்தத் தன்மையை விடுதல் என்பது, தனது அடியார் ஒருவன் தனக்குச் சிறிய ஒன்றை அளித்தாலும் அதனைக் கொண்டு, தான் மனம் நிறைய வேண்டும் என்று விரும்புதல் ஆகும். ஸ்வாதந்த்ர்யம் என்றால் ஸ்வரூபம் போன்ற பலவற்றையும் தன் வசப்படுத்தி வைத்திருப்பது ஆகும். அந்தத் தன்மையைப் போக்கிக் கொள்ளுதல் என்பது - தனது அடியார்களுக்கு ஏற்றபடி தனது ஸ்வரூபம், இருப்பு ஆகியவற்றை மாற்றிக் கொள்ளுவது ஆகும். விஷ்வக்சேந ஸம்ஹிதை – ததிச்சயா மஹாதேஜா புங்க்தேவை பக்தவத்ஸல: ஸ்நாநம் பாநம் ததா யாத்ராம் குருதேவை ஜகத்பதி: ஸ்வதந்த்ரஸ் ஸஜகந்நாதோப்யஸ்வதந்த்ரோ யதாததா ஸர்வசக்திர் ஜகத்தாதாப்யசக்த இவ சேஷ்டதே - அடியார்களின் தோஷங்களைப் பாராமல் உள்ளவனாக, மிகுந்த மேன்மை கொண்டவனாக உள்ள ஸர்வேச்வரன், தன்னை அண்டியவர்களின் விருப்பத்திற்கு ஏற்றபடி நீராடுவது, நீர்பருகுவது, யாத்திரை செல்வது போன்ற பலவற்றையும் செய்கிறான்; ஜகந்நாதனான அவன் அடியார்களின் முன்பாக ஸ்வதந்த்ரனாக உள்ளபோதிலும், ஸ்வதந்த்ரம் அற்றவன் போன்றே உள்ளான்; அனைத்து வல்லமை படைத்தவனாக உள்ளபோதிலும், சற்றும் திறன் அற்றவன் போன்று அடியார்கள் முன்பு லீலைகள் செய்கிறான் - என்றது காண்க. ஸ்வாமி பராசரபட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (74) – அர்ச்சக பராதீநாகிலாத்ம ஸ்திதி: – அர்ச்சகர் எவ்விதமாக அலங்கரிக்கிறாரோ அதனை ஏற்று உள்ளான் - என்றார். இது போன்று தனது உயர்ந்த தன்மைகளைத் தாழ்த்திக் கொள்ளுதல் என்பதற்கு அவனுடைய விருப்பம் இல்லாமல்,

வேறு எந்தக் காரணத்தினாலும் அல்ல என்பதை உணர்த்தவே "குலைத்துக்கொண்டு" என்றார். " தன்னையநாதரிக்கிறவர்களைத் தானாதரித்து நிற்கிறவிடம்" என்பதன் பொருள் – இவ்விதம் எளிமையால் வந்து நிற்பது, "காண்பதற்கும் அடைவதற்கும் மிகவும் அரியவனாக உள்ள ஸர்வேச்வரன் இத்தனை சுலபமாக இங்கு வந்து நிற்கும்படியான பேறு பெற்றோமே" என்று இவனது அடியார்கள் ஓடிவந்து அணைப்பதற்காக மட்டுமே அல்ல; இந்த எளிமை காரணமாக இவன் தன்னை அண்டாத மனிதர்களையும் விடுவதில்லை; அத்துடன் அல்லாமல் தனது அழகில் மயக்கி தன்னை விரும்பாத மனிதர்கள் தன்னை விட்டு அகலாமல் செய்து, அவர்களைத் தோற்கடிப்பது இந்த அர்ச்சாவதாரத்தில் என்று உணர்த்தவே ஆகும். ஆக இவன் தனது பூர்த்தி மற்றும் ஸ்வாதந்த்ர்யம் ஆகிய இரண்டையும் தள்ளி வைத்து நிற்கிறான். மேலும் தனது ஸௌலப்யம் மற்றும் ஸௌசீல்யம் ஆகியவை மூலமாகத் தன்னை அண்டாதவர்களையும் தான் அணைத்துக் கொண்டு நிற்கிறான். இதனால் இங்கு இவனது ஸ்வாமித்வமும் வாத்ஸல்யமும் தோன்றா நின்றன.

**வ்யாக்யானம்** - அன்றிக்கே, (பூர்த்தியையும்) என்று தொடங்கி இவ்வாக்யமெல்லாவற்றாலும் குணசதுஷ்டயத்திலும் ப்ரதாநமான ஸௌலப்யத்தையே யோட வைத்தாராகவுமாம்; அப்போது, இவ்விஷயத்தினுடைய ஸௌலப்யாதிசயத்தை தர்சிப்பிக்கிறாரென்று வாக்ய ஸங்கதியாக்கடவது. கண்ணுக்கு விஷயமாம்படி நித்ய ஸந்நிதி பண்ணுகிறவளவன்றிக்கே, ஸர்வப்ரகார பரிபூர்ணனாய் நிரங்குச ஸ்வதந்த்ரனாயிருக்கிற தன்னை ஸாபேக்ஷனும் பரதந்தரனுமாக்கிக் கொண்டு, தன்னை யநாதரிக்கிற ஸம்ஸாரிகளைத் தானாதரித்து நிற்கைக்கு மேற்பட்ட ஸௌலப்யமில் லையிறே; ஏவம் பஞ்சப்ரகாரோஹ மாத்மநாம் பததாமத: பூர்வஸ்மாதபி பூர்வஸ்மாஜ் ஜ்யாயாம்ச்சைவோத்தரோத்தர:; ஸௌலப்யதோ ஜகத்ஸ்வாமீ ஸுலபோஹ்யுத்தரோதர: என்று பரத்வாதிகளைந்திலும் ஸௌலப்யமுண்டாயிருக்கச்செய்தே, பூர்வபூர்வத்திற் காட்டிலுத்தரோத்தரத்துக்கு ஸௌலப்யமதிசயித்திருக்குமென்று தானேயருளிச் செய்கையாலே, ஸௌலப்யத்துக்கெல்லை நிலம் அர்ச்சாவதாரமிறே.

**விளக்கம்** - இதற்கு வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். இந்தச் சூர்ணை மூலம் நான்கு குணங்களுக்குள் முதன்மையான ஸௌலப்யத்தையே உரைக்கிறார் எனக் கூறலாம். இவ்விதம் பொருள் கொள்ளும்போது, இவனது ஸௌலப்யமானது அர்ச்சையில் அதிகமாக உள்ளதை உணர்த்துகிறார் என்றாகிறது. எப்போதும் நமது

கண்களுக்கு புலப்படும்படியாக நிற்கிறான்; அனைத்து விதங்களிலும் அனைத்தும் பெற்றுள்ளவனும், எந்த ஒன்றாலும் தடை ஏற்படாத சுதந்திரம் உள்ளவனும் ஆகிய இவன் ஏதோ ஒரு பொருளை விரும்பி நிற்பவன் போன்றும், சுதந்திரம் இல்லாதவன் போன்றும், அடியார்கள் இழுத்த இழுப்புக்கு வருபவன் போன்றும் தன்னை மாற்றிக் கொண்டு அர்ச்சையாக நிற்கிறான்; தன்னை விரும்பாத மனிதர்களையும் தான் விரும்பியவனாக நிற்கிறான். இதனைக் காட்டிலும் உயர்ந்த ஸௌலப்யம் வேறு என்ன உள்ளது? விஷ்வக்ஸேந ஸம்ஹிதை – ஏவம் பஞ்சப்ரகாரோஹ மாத்மநாம் பததாமத: பூர்வஸ்மாதபி பூர்வஸ்மாஜ் ஜ்யாயாம்ச்சைவோத்தரோத்தர:; ஸௌலப்யதோ ஜகத்ஸ்வாமீ ஸுலபோஹ்யுத்தரோதர: – அந்தர்யாமி போன்ற ஐந்து நிலைகளுடன் உள்ள நான் ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ள ஜீவாத்மாக்களைக் குறித்து முன்பு இருந்ததைவிட இன்னமும் எளிமை, அதனைவிட எளிமை என்று உள்ளேன். இந்த உலகின் ஸ்வாமியான நான் எனது ஸௌலப்யம் காரணமாக மிகவும் சுலபன் அல்லவா - என்றது காண்க. ஆக பரவாஸுதேவன் உள்ளிட்ட அனைத்து நிலைகளிலும் ஸௌலப்யம் என்பது இருக்கவே செய்கிறது. ஆயினும் முந்தைய நிலையைக் காட்டிலும் பிந்தைய நிலைக்கு மேலும் எளிமை (பர நிலையை விட வ்யூஹ நிலைக்கு எளிமை அதிகம், வ்யூஹம் என்பதில் உள்ள எளிமையை விட விபவ நிலையில் எளிமை அதிகம் என்றபடி) அதிகம் என்று தானே அருளிச்செய்தார். இதனால் இறுதியாக உள்ள அர்ச்சை என்பதே ஸௌலப்யம் மிகவும் அதிகமாக வெளிப்படும் நிலை என்பதாகிறது.

39. பூகதஜலம் போலே அந்தர்யாமித்வம்; ஆவரணஜலம் போலே பரத்வம்; பாற்கடல்போலே வ்யூஹம்; பொருக்காறுபோலே விபவங்கள்; அதிலே தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்.

**அவதாரிகை** - பரத்வாதிகளுடைய தௌர்லப்யத்தையும் அர்ச்சாவதார ஸௌலப்யத்தையும் த்ருஷ்டாந்த முகேந தர்சிப்பிக்கிரார் மேல் (பூகதஜலம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - ப்ரத்வம் உள்ளிட்ட நான்கு நிலைகளின் அருமை மற்றும் அர்ச்சாவதாரத்தின் எளிமை ஆகியவற்றைத் தகுந்த உதாரணம் மூலம் இந்தச் சூர்ணையில் விளக்குகிறார்.

**வ்யாக்யானம் -** த்ருஷ்ணார்த்தனுக்கு தேசாந்தரத்திற் போகவேண்டாதபடி நிற்கிறவிடந் தன்னிலேயுண்டாயிருக்கச்செய்தேயும், கொட்டும் குந்தாலியுங்கொண்டு கல்லினாலல்லது குடிக்கக் கிடையாத பூகதஜலம் போலேயாய்த்து - கண்டு பற்ற வேணுமென்றாசைப்பட்டவனுக்கு ஹ்ருதயத்திலேயிருக்கச்செய்தேயும் கட்கிலீ என்கிறபடியே கண்ணுக்கு விஷயமன்றிக்கே, அஷ்டாங்க யோகரூப யத்நத்தாலே காண வேண்டும்படியான அந்தர்யாமித்வம். அவனுக்கு, அண்டத்துக்குப் புறம்பே பெருகிக் கிடக்கிற ஆவரணஜலம் போலேயாய்த்து இவனுக்கும் அப்பால் முதலாய் நின்ற வளப்பரியவாரமுது என்கிறபடியே லீலாவிபூதிக்கப்பால்பட்டிருக்கிற பரத்வம். அப்படி அதிவிப்ரக்ருஷ்டமன்றியே அண்டாந்தர்ப்பூதமாயிருக்கச்செய்தேயும், அவனுக்கு துஷ்ப்ராபமான பாற்கடல் போலேயாய்த்து இவனுக்கும் பாலாழி நீ கிடக்கும் பண்பை யாங்கேட்டேயும் என்கிறபடியே, கேட்டிருக்குமத்தனையல்லது, சென்று காணவரிதாம்படியிருக்கிற வ்யூஹம். ப்ரத்யாஸந்நமாயும் தாத்காலிகர்க்கு உபஜீவ்யமாய் பாச்சாத்யனானவனுக்கு துர்லபமான பெருக்காறு போலேயாய்த்து மண் மீதுழல்வாய் என்கிறபடியே பூமியிலேயவதரித்து ஸஞ்சரித்தும், தத்காலவர்த்திகளுக்கு ஆச்ரயணீயமாய்ப் பிற்காலத்திலுளனானவிவனுக்குக் கிட்டாதபடியான விபவம். முன்பு சொன்னவை போலன்றிக்கே, அவனுக்கு விடாய் கெடப் பருகலாம்படி பெருக்காற்றிலே தேங்கின மடுக்கள் போலேயாய்த்து இவனுக்கும் தேச கால காரண விப்ரக்ருஷ்டமின்றிக்கே கோயில்களிலும் க்ருஹங்களிலும் என்றுமொக்க எல்லார்க்கும் கண்ணுக்கிலக்காம்படி நிற்கிற பின்னானார் வணங்குஞ் சோதியான அர்ச்சாவதாரம். பௌமதிகேதநேஷ்வபி குடீகுஞ்ஜேஷு என்கிறபடியே – பலவிடங்களிலும் ஸந்நிதி பண்ணி நிற்கும்படியை நினைத்திறே (மடுக்கள் போலே) என்ற பஹுவசநத்தாலேயருளிச் செய்தது. அவதார குணங்களெல்லாம் அர்ச்சா ஸ்தலங்களிலே பரிபூர்ணமாயிருக்கையாலும், அவதார விக்ரஹங்களை அர்ச்சாரூபேண பலவிடங்களிலும் பரிக்ரஹித்துக் கொண்டிருக்கையாலும் (அதிலே தேங்கின மடுக்கள் போலே) என்கிறது.

**விளக்கம்** – "பூகதஜலம் போலே அந்தர்யாமித்வம்" – மிகுந்த தண்ணீர் தாகம் கொண்ட ஒருவனுக்குப் பருகுவதற்கான நீர் என்பது வேறு எங்கும் அலைய வேண்டியது இல்லாதபடி, அவன் உள்ள இடத்திலேயே இருக்கக்கூடும். ஆயினும் அந்த நீரானது தகுந்த ஆயுதங்கள் இன்றி எடுக்க இயலாதபடி, பூமிக்குள் மிகவும் ஆழத்தில் உள்ளதாக இருப்பது போன்று அந்தர்யாமி நிலையின் எளிமை உள்ளது. "எம்பெருமானைக் கண்டு

அவனைப் பற்றிக் கொள்ளவேண்டும்", என்ற ஆசையுடன் கூடிய ஒருவனுக்கு, திருவாய்மொழி (7-2-3) – கட்கிலீ - என்று கூறுவது போன்று கண்களால் காண இயலாமல், அஷ்டாங்கயோகம் மூலம் மட்டுமே காணலாம்படியாக அந்தர்யாமி நிலை உள்ளது.

"ஆவரணஜலம் போலே பரத்வம்" – எம்பெருமானைக் கண்டு அவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை கொண்ட ஒருவனுக்குத் திருநெடுந்தாண்டகம் (14) - அப்பால் முதலாய் நின்ற வளப்பரியவாரமுது – என்று கூறுவதற்கு ஏற்ப லீலாவிபூதிக்கு அப்பால் பரத்தவம் உள்ளது. ஆக தாகம் கொண்ட ஒருவனுக்கு இந்த அண்டத்தின் வெளியில் பரவி உள்ள ஆவரண நீர் போன்று பரத்த்வ நிலை உள்ளது.

"பாற்கடல் போலே வ்யூஹம்" – ஆவரண நீர் போன்று மிகவும் தூரத்தில் இல்லாமல் இந்த உலகில் உள்ளதாக இருந்தபோதிலும், தண்ணீர்த்தாகம் எடுத்தவன் சென்று பருக இயலாததாக உள்ள திருப்பாற்கடல் போன்று வ்யூஹம் உள்ளது. அவனைக் கண்களால் கண்டு பற்றவேண்டும் என்ற ஆசை கொண்ட ஒருவனுக்குப் பெரியதிருவந்தாதி (34) - பாலாழி நீ கிடக்கும் பண்பை யாங்கேட்டேயும் – என்று கூறுவது போன்று, கேட்டு ரசிக்கும்படி மட்டுமே வ்யூஹம் இருக்குமே அன்றிக் காண இயலாது.

"பெருக்காறு போலே விபவம்" – காணலாம்படி உள்ளபோதிலும், அந்தந்த காலங்களில் உள்ளவர்கள் மட்டுமே காணலாம்படியும் பருகலாம்படியும், மற்ற காலங்களில் உள்ளவர்களால் காண இயலாதபடியும், வெள்ளத்துடன் கூடிய ஆறு போன்று விபவம் உள்ளது. திருநெருந்தாண்டகம் (19) - மண் மீது உழல்வாய் - என்று கூறியபடி இந்தப் பூமியில் அவன் அவதரித்து, எங்கும் ஸஞ்சாரம் செய்தபோதிலும், அந்தக் காலத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே அண்டத்தக்கதாக, மற்ற காலங்களில் உள்ளவர்களால் காண இயலாததாக விபவம் உள்ளது.

"தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்" - மேலே கூறியதைப் போன்று அல்லாமல், தாகம் தீரப் பருகவல்லபடி, பெரும்வெள்ளத்தில் இருந்து உண்டான சிறிய நீர் நிலைகள் போன்று அர்ச்சை உள்ளது. எம்பெருமானைக் கண்டு அவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஆசையுடன் கூடியவனுக்கு இடம், காலம், காரணம் ஆகிய மூன்றாலும்

மிகவும் எளிமையாகக் காட்சி கொடுத்து, கோவில்களில் மட்டும் அல்லாமல் வீடுகளிலும் அனைவரின் கண்களில் புலம்படும்படியாக இந்த நிலை உள்ளது. திருவாய்மொழி (6-9-5) – பின்னானார் வணங்கும் சோதி - என்றபடி உள்ளது அர்ச்சை ஆகும். ஸ்ரீரங்கராஜஸ்தவம் (74) – பௌமதிகேதநேஷ்வபி குடீகுஞ்ஜேஷு - இந்த உலகில் உள்ள கோயில்கள், அடியார்களின் வீடுகள் – என்பது போன்று, பல இடங்களிலும் இவன் அர்ச்சையில் எழுந்தருளியுள்ள நிலையை ஆராய்ந்தே இங்கு “மடுக்கள்” என்று பன்மையில் அருளிச்செய்தார். இவனது மற்ற அவதாரங்களின் திருக்கல்யாண குணங்கள் அனைத்தும் அர்ச்சையில் பரிபூர்ணமாக நிறைந்துள்ளது. மேலும் அவதாரங்களில் தான் எடுத்த திவ்யமான உருவங்களைப் பல இடங்களிலும் காண்பித்தபடி உள்ளான். எனவே இங்கு “அதிலே தேங்கின மடுக்கள் போலே” என்று அருளிச்செய்தார்.

40. இதுதான் சாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணாதே விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப் போரும் சேதநர்க்கு வைமுக்க்யத்தை மாற்றி ருசியை விளைக்கக்கடவதாய், ருசி பிறந்தாலுபாயமாய், உபாய பரிக்ரஹம் பண்ணினால் போக்யமுமாயிருக்கும்.

**அவதாரிகை** - இப்படி ஆச்ரணய ருசி பிறந்தார்க்கு ஆச்ரயணீயத்வே ஸுலபமாயிருக்குமளவேயன்று, ருசி ஜநகத்வாதிகளும் இவ்வர்ச்சாவதாரத்துக் குண்டென்று இதன் வைபவத்தையருளிச் செய்கிறார் மேல் (இதுதான்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக அர்ச்சாவதாரம் என்பது இவனை உபாயமாகப் பற்றிக் கொள்ளவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டவர்களுக்குப் பற்ற எளிதாக இருக்கவேண்டும் என்பதற்காக மட்டும் அல்ல, இவனைப் பற்ற வேண்டும் என்ற ருசியை உண்டாக்குவதும் அர்ச்சாவதாரமே என்னும் இதன் மேன்மையை இந்த சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ப்ரக்ருதமான ஸௌலப்யாதி குணயோகத்தையுட்கொண்டு (இதுதான்) என்று பராமர்சிக்கிறார் (சாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணாமையாவது) ஹிதாநுசாஸநம் பண்ணுகிற ச்ருதி ஸ்ம்ருத்யாதி சாஸ்த்ரங்களானவை அருசி பிறக்கும்படி இதர விஷயங்களினுடைய தோஷாதிக்யத்தையும், ருசி பிறக்கும்படி பகவத் விஷயத்தினுடைய குணாதிக்யத்தையும் உபதேசித்தாலும், அவற்றால் இதர விஷயங்களை விட்டு இவ்விஷயத்தைப் பற்றும்படி பண்ணப் போகாமை

துர்வாஸநாபலம் உபதேசத்தை நிரர்த்தகமாக்கிவிடுமிறே; ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு யா புத்திர் பாவிதா நிருணாம், தாமேவ பஜதே ஜந்துருபதேசோ நிரர்த்தக: என்னக்கடவதிறே.

**விளக்கம்** - “இதுதான்” என்று கூறுவதன் மூலம் ஸௌலப்யம் உள்ளிட்ட பல திருக்கல்யாண குணங்களுடன் கூடிய அர்ச்சை உணர்த்தப்பட்டது. ”சாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணாதே” என்பதன் பொருள் – நமக்கு எது நன்மையோ அதனை மட்டுமே உபதேசிக்கும் வேதங்களும் ஸ்ம்ருதிகளும் நமக்கு உபதேசிப்பவை என்ன? இந்த உலக வாழ்வில் உள்ள குற்றங்களை நமக்கு விளக்கி உலக விஷயங்களின் மீது நமக்கு வெறுப்பு உண்டாக்கும்படிச் செய்வதும், ஸர்வேச்வரனின் திருக்கல்யாண குணங்களை நமக்கு உபதேசித்து அவன் மீது ஈடுபாடு உண்டாகும்படிச் செய்வதும் ஆகும். இவ்விதம் அவை செய்தாலும், நம்முடைய தீய வாஸனையின் பலன் காரணமாக நாம் இந்த உலக விஷயங்களைக் கைவிட்டு அவனை முழுவதுமாகப் பற்றும்படிச் செய்ய அவற்றால் இயலவில்லை என்னும்படியாக உள்ளது அல்லவோ? ஆக அவை செய்யும் உபதேசங்கள் வீணாகிவிடும் என்றாகிறது. ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு யா புத்திர் பாவிதா நிருணாம், தாமேவ பஜதே ஜந்துருபதேசோ நிரர்த்தக: - அவரவர்களின் பிறவி என்பதன் மூலம் மனிதர்களுக்கு எந்தவிதமான அறிவு தோன்றுகிறதோ அந்த அறிவையே அவர்கள் பெறுகின்றனர்; ஆகவே சாஸ்திரங்களின் உபதேசங்கள் பயனற்றதாகி விடுகிறது - என்றது காண்க.

**வ்யாக்யானம்** - (விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப்போருகையாவது) - சிலம்படியுருவிற் கருநெடுங்கண்ணார் திறந்தனாயறத்தையே மறந்து புலம்படிந்துண்ணும் போகமே பெருக்கி என்றும், சுரிகுழல் மடந்தையர் திறத்துக் காதலே மிகுத்துக் கண்டவா திரிந்து என்றும், மாதரார் கயற்கணென்னும் வலையுட்பட்டழுந்துவேனை என்றும் சொல்லுகிறபடியே இதர விஷயங்களிலே அத்யபிநிவிஷ்டராய், யாதானும் பற்றி நீங்கும் விரதத்தையேறிட்டுக் கொண்டு, பகவத் விஷயத்திலே முகம் வைக்கவிசையாதே வர்த்திக்கை; இப்படி போரும் சேதநர்க்கு, (வைமுக்க்யத்தை மாற்றி ருசியை விளைக்கையாவது) - போதரேயென்று சொல்லிப் புந்தியில் புகுந்து தன்பாலாதரம் பெருகவைத்தவழகன் என்கிறபடியே - ஸ்வஸௌந்தர்யாதிகளாலே சித்தாபஹாரம் பண்ணி, தன்னைக் காணவேண்டோமென்றிக்குமிருப்பைக் குலைத்து, கண்ட கண் மாறவைக்க மாட்டாதபடி பண்ணுகை. (ருசிபிறந்தாலுபாயமாகையாவது) இப்படி தன்

வைலக்ஷண்ய தர்சநத்தாலே தன்னை நித்யாநுபவம் பண்ணப் பெறவேணுமென்னும் ருசி பிறந்தவநந்தரம், ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் என்கிறபடியே ஸம்ஸார நிவ்ருத்தி பூர்விகையான ஸ்வப்ராப்திக்குத் தானே ஸாதநமாகை. (உபாய பரிக்ரஹம் பண்ணினால் போக்யமுமாயிருக்கையாவது) - தன்னையுபாயமாகப் பரிக்ரஹித்தால், உபேயஸித்திக்கொரு தேச விசேஷத்திலே போமளவும் பார்த்திருக்க வேண்டாதே அணியரங்கனென்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே என்றும், எனக்குத் தேனே பாலே கன்னலேயமுதே திருமாலிருஞ்சோலைக் கோனே என்றுஞ் சொல்லுகிறபடியே நிரதிசய போக்யமாயிருக்கையாலே தானே உபேயமுமாயிருக்கை.

**விளக்கம்** - "விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப்போரும்" என்பதன் பொருள்: பெரியதிருமொழி (1-6-2) – சிலம்படி யுருவிற் கருநெடுங்கண்ணார் திறந்தனாயறத்தையே மறந்து புலம்படிந்துண்ணும் போகமே பெருக்கி – என்றும், பெரியதிருமொழி (1-6-3) – சுரிகுழல் மடந்தையர் திறத்துக் காதலே மிகுத்துக் கண்டவா திரிந்து – என்றும், திருமாலை (16) - மாதரார் கயற்கணென்னும் வலையுட்பட்டழுந்துவேனை – என்றும் கூறுவது போன்று, மற்ற விஷயங்களில் பற்றுதல் அதிகமாகவே உள்ளது. திருவிருத்தம் (95) – யாதானும் பற்றி நீங்கும் விரதம் – என்பதற்கு ஏற்ப இல்லாமல், எம்பெருமானிடம் விருப்பம் வைக்க எண்ணாமல் இருத்தல் – என்பதாகும்.

இப்படியாக உள்ள சேதநர்கள் குறித்து "வைமுக்க்யத்தை மாற்றி ருசியை விளைக்கக் கடவதாய்" என்பதன் பொருள் என்ன? திருமாலை (16) – போதரேயென்று சொல்லிப் புந்தியில் புகுந்து தன்பாலாதரம் பெருகவைத்தவழகன் – என்று கூறுவது போன்று தனது அழகு போன்ற பலவற்றையும் காண்பித்து, இவர்கள் மனத்தினைத் தன்பால் கவர்கிறான். பின்னர் அவர்களிடம் உள்ள "தன்னைக் காணவேண்டாம்" என்று சிந்தனையை மாற்றுகிறான். அத்துடன் நில்லாமல் தன்னைக் கண்ட கண்கள் தன்னை விட்டு அகலாமல் செய்துவிடுகிறான்.

"ருசிபிறந்தாலுபாயமாய்" என்பதன் பொருள்: இப்படியாகத் தன்னைக் கண்டதால், தனது அழகு காரணமாகத் தன்னையே எப்போதும் அனுபவித்துக்கொண்டு இருக்கவேண்டும் என்ற ருசியை ஏற்படுத்துகிறான். அதன் பின்னர் திருவாய்மொழி (5-7-10) – ஆறெனக்கு

நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் – என்பதற்கு ஏற்ப இந்த உலக வாழ்வைக் கைவிடுவது தொடக்கமாகத் தன்னை அடைவதற்குத் தானே சாதனமாக உள்ள நிலையை உணர்த்துகிறான்.

“உபாய பரிக்ரஹம் பண்ணினால் போக்யமுமாயிருக்கையாவது” என்பதன் பொருள்: தன்னையே உபாயமாகப் பற்றிக் கொண்டால் போதுமானது, மோக்ஷம் என்ற பலன் கிட்ட வேறு எந்த இடத்திற்கும் செல்லவேண்டாம் என்பதை உணர்த்துகிறான். அமலனாதிப்பிரான் (10) – அணியரங்கனென்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே – என்றும், திருவாய்மொழி (10-7-2) - எனக்குத் தேனே பாலே கன்னலேயமுதே திருமாலிருஞ்சோலைக் கோனே – என்றும் கூறுவது போன்று எல்லையற்ற இனிமையான பொருளாகத் தான் உள்ளதால், தானே அடைய வேண்டிய பொருளாகவும் உள்ளதை உணர்த்துகிறான்.

**வ்யாக்யானம்** – ஆக, ப்ரபத்திக்கு குணபூர்த்தியுள்ளவிடமே விஷயமாக வேணுமென்றும், அதுதானுள்ளது அர்ச்சாவதாரத்திலேயென்றும் அத்தைப் பற்ற ஆழ்வார்களெல்லாரும் ப்ரபத்தி பண்ணிற்று இவ்விஷயத்திலேயென்றும், இவ்விஷயத்திலேயெல்லா குணங்களும் புஷ்கலங்களென்றும், விசேஷித்து ப்ரபத்திக்கபேக்ஷித குணங்கள் விசதமாக ப்ரகாசிப்பதிங்கேயென்றும், இதுதான் தன்னுடைய நைரபேக்ஷ்யாதிகளையழிய மாறி தன்னையநாதரிப்பாரையாதரித்துக்கொண்டு நிற்கிற ஸ்தலமென்றும், பரத்வாதிகள் ஓரொரு ப்ரகாரத்திலே துர்லபம், இது ஸர்வப்ரகார ஸுலபமென்றும், இவ்வளவேயன்று, இவ்விஷயம் ருசிஜநகமுமாய் உபாயோபேயமாயிருக்குமென்றும் சொல்லப்பட்டது.

**விளக்கம்** – ஆகவே இங்கு உணர்த்தப்படுவது என்னவென்றால்

- ப்ரபத்திக்குச் சிறந்த திருக்கல்யாண குணங்கள் நிறைந்த ஒரு பொருளே இலக்காக இருத்தல் வேண்டும்
- இப்படிப்பட்ட குணங்கள் உள்ள இடம் அர்ச்சாவதாரம்

- இதன் காரணமாகவே ஆழ்வார்கள் அனைவரும் அர்ச்சாவதாரத்திலேயே ப்ரபத்தி செய்தனர்
- எம்பெருமானின் அனைத்து குணங்களும் பரிபூர்ணமாக உள்ளது இத்தகைய அர்ச்சாவதாரத்தில் மட்டுமே ஆகும்
- ப்ரபத்திக்கு இன்றியமையாத குணங்கள் அனைத்தும் விசேஷமாகவும் தெளிவாகவும் வெளிப்படுவது இத்தகைய அர்ச்சாவதாரத்தில் மட்டுமே ஆகும்
- இத்தகைய அர்ச்சாவதாரம் என்பது எம்பெருமானின் குணத்தையே மாற்றுவதாக உள்ளது. எப்படி? "தான் எந்த ஒரு பொருளையும் விரும்பாதவன்" என்றபடி உள்ள எம்பெருமானின் நிலையை அழித்து, தன்னை விரும்பாதவர்களையும் தான் விரும்பி நிற்கும் விதமாக அர்ச்சாவதாரம் உள்ளது
- பரத்வம் போன்ற மற்ற நான்கு நிலைகளும் ஒவ்வொரு முறையால் பற்றுவதற்கு மிகவும் கடிமையானவை ஆகும். ஆனால், அனைத்து விதங்களிலும் பற்றுவதற்கு அர்ச்சையே எளிதாக உள்ளது.
- இது மட்டுமே அல்ல. எம்பெருமான் மீது ருசியை உண்டாக்கவல்லதாகவும், உபாயம் மற்றும் உபேயமாக உள்ளதாகவும் அர்ச்சை இருக்கிறது.

**வ்யாக்யானம்** – இத்தால், உபாயோபேயங்களிரண்டும் தானேயாய், ஸ்வேதர விஷய விரக்தி பூர்வகமாக ஸ்வவிஷயருசியை ஜநிப்பிக்குமதாய், ஸர்வ ஸுலபமாய், தன் படிகளையழிய மாறிக்கொண்டு தன்னையநாதரிப்பாரை யுமாதரிக்குமதாய், ப்ரபத்த்யபேக்ஷித குணோஜ்ஜ்வலமாய், ஸமஸ்தகுண ஸம்பூர்ணமாய், ப்ரபந்நஜந கூடஸ்த்தர்க்கு உபாயவரண விஷயமாயிருந்துள்ள அர்ச்சாவதாரமே ப்ரபத்திக்கு நியத விஷயமென்றதாய்த்து.

**விளக்கம்** – ஆகவே அர்ச்சாவதாரம் என்பதே ப்ரபத்திக்கு ஏற்ற விஷயமாக உள்ளது என்பதைப் பின்வரும் காரணங்களால் அறியலாம்

- உபாய உபேயங்களாக அர்ச்சையே உள்ளது
- மற்ற விஷயங்களில் வெறுப்பு தோன்றும்படியும், தன் விஷயத்தில் ருசி உண்டாகும் படியும் செய்கிறது.
- அனைத்து விதங்களிலும் பற்றுவதற்குச் சுலபமாக உள்ளது
- தனது விருப்புவெறுப்புகளை மாற்றி அமைத்துக் கொண்டு, தன்னை விரும்பாதவர்களையும் தான் விரும்பியபடி உள்ளது
- ப்ரபத்திக்கு ஏற்ற குணங்கள் அனைத்தும் ஒன்றாக வெளிப்படும்படியாக உள்ளது
- அனைத்து குணங்களையும் பரிபூர்ணமாகக் கொண்டது
- ப்ரபந்நஜந கூடஸ்த்தர்கள் எனப்படும் ப்ரபத்தியில் ருசியுள்ளவர்கள், உபாயமாகப் பற்றுவதற்கு ஏற்றதாக உள்ளது.

41. இதில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகள் மூவர்.

**அவதாரிகை** – "ப்ரபத்திக்கு தேச நியமம்" என்று தொடங்கி இவ்வளவும் – உபாய வரணாத்மிகையான ப்ரபத்தியினுடைய தேச காலாதி நியமாபாவமும் விஷய நியமமும் தர்சிப்பிக்கப்பட்டது; இப்படி விஷய விசேஷத்தை தர்சிப்பித்தவநந்தரம் பகவச்சாஸ்த்ராதி ஸித்தமான அதிகாரி விசேஷங்களையும் ப்ரகாசிப்பிக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றி அதிகாரி விசேஷத்தையருளிச்செய்கிறார் "இதில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகள் மூவர்" என்று.

**விளக்கம்** – "ப்ரபத்திக்கு தேச நியமம்" என்று தொடங்கும் 23-வது சூர்ணை தொடங்கி இதுவரை உள்ள சூர்ணைகளில் ஸர்வேச்வரனை உபாயமாகப் பற்றுதல் என்னும் ப்ரபத்திக்கு தேசம், காலம் போன்ற நியமங்கள் இல்லை என்றும், உபாயமாகப்

பற்றப்படும் பொருளின் நியமமும் கூறப்பட்டன. இப்படியாக ப்ரபத்திக்கு விஷயமாக உள்ள வஸ்துவின் மேன்மைகளைக் கூரிய பின்னர், பாஞ்சராத்ரம் உள்ளிட்ட பல சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள அதிகாரிகளின் விசேஷங்கள் யாவை என்று விளக்க வேண்டும் எனத் திருவுள்ளம் கொண்டார். இந்தச் சூர்ணையில் அதிகாரிகளின் விசேஷத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, ஸௌலப்யாதி குணபூர்த்தியாலே ப்ரபத்திக்கு நியத விஷயமான இவ்வர்ச்சாவதாரத்தில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகள் ப்ரபதந ஹேது பேதத்தாலே மூன்று வகைப்பட்டிருப்பர்களென்கை.

**விளக்கம் –** "இதில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகள் மூவர்" என்பதன் மூலம் ஸௌலப்யம் உள்ளிட்ட பல திருக்கல்யாண குணங்கள் பரிபூர்ணமாக உள்ளதால் ப்ரபத்திக்கு விஷயமாக உள்ள அர்ச்சாவதாரம் கூறப்பட்டது. இந்த அர்ச்சையில் ப்ரபத்தி செய்யும் அதிகாரிகள், தாங்கள் ப்ரபத்தி செய்வதற்கான காரணங்கள் வேறுபடுவதால், மூன்று வகைப்பட்டிருப்பார்கள் .

42. அஜ்ஞரும், ஜ்ஞாநாதிகரும், பக்திபரவசரும்.

**அவதாரிகை -** அவர்களாரென்றுமபேக்ஷையிலேயருளிச் செய்கிறார்.

**விளக்கம் –** அந்த அதிகாரிகள் யாவர் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** "அஜ்ஞராகிறார்" பகவல்லாபத்துக்கு உறுப்பாக ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகைக்கீடான ஜ்ஞாநமிலாதவர்கள். அஜ்ஞாநம் அசக்திக்குமுபலக்ஷணம். "ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கு மஜ்ஞாநாசக்திகளன்று" என்று மேலேயிவர் தானே அருளிச்செய்கிறாரிறே. "ஜ்ஞாநதிகராகிறார்" ஜ்ஞாந சக்திகள் உண்டாயிருக்கச் செய்தேயும், பகவதத்யந்த பரதந்த்ரமான ஸ்வரூப யாதாத்ம்ய தர்சநத்தாலே, உபாயாந்தரங்கள் ஸ்வரூப விருத்தமென்று பரித்யஜிக்கைக்கீடான ஜ்ஞாந பூர்த்தி யுடையவர்கள். "பக்தி பரவசராகிறார்" ஒன்றையுமடைவுபட வநுஷ்டக்க க்ஷமரல்லாதபடி பகவத் ப்ரேமாதிசயத்தாலே சிதிலகரணரா யிருக்குமவர்கள்.

**விளக்கம்** – “அஜ்ஞராகிறார்” – எம்பெருமானை அடைவதற்கான உறுப்பாக உள்ள சாதனங்கள் எதனையும் கைக்கொள்ளத் தகுதியான ஞானம் இல்லாதவர்கள் ஆவர். அறிவில்லாமல் உள்ளனர் என்பதன் மூலம், ஆற்றல் இல்லாமலும் உள்ளனர் என்பது மறைமுகமாக உணர்த்தப்பட்டது. ”ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கு மஜ்ஞாநாசக்திகளன்று” என்று இவரே சூர்ணை 115-ல் அருளிச் செய்ய உள்ளார். “ஜ்ஞாநாதிகர்” – ஞானம் மற்றும் சக்தி ஆகியவற்றைக் கொண்டவர்கள்; ஆயினும் தங்களது ஆத்மா தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எந்தவிதமான திறனும் அற்றது என்றும், பகவானால் மட்டுமே காப்பாற்ற இயலும் என்றும் அறிந்தவர்கள்; இப்படியாக ஆத்மாவின் ஸ்வரூபத்தை அறிந்தவர்கள்; ஆகவே மற்ற உபாயங்கள் அனைத்தும் ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு விரோதமாக உள்ளவை என்று அறிந்ததால், அவற்றைக் கைவிடுவதற்கு ஏற்ற ஞானத்தைப் பூர்ணமாகக் கொண்டவர்கள் ஆவர். ”பக்தி பரவசராகிறார்” – எதனையும் தாங்களாகவே செய்யும் ஆற்றலைக் கொள்ளாமல், ஸர்வேச்வரனிடம் உண்டான ப்ரேமை காரணமாக, தங்களது செயல் மற்றும் சித்தம் போன்ற அனைத்தையும் அவனிடம் இழந்து நிற்பார்கள்.

43. அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர் அஸ்மதாதிகள்; ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர் பூர்வாசார்யர்கள்; பக்திபாரவச்யத்தாலே ப்ரபந்நர் ஆழ்வார்கள்.

**அவதாரிகை** - இப்படியிவ்வஜ்ஞாநாதிகளடியாக ப்ரபத்தி பண்ணினவர்களின்னாரென்னுமிடம் காணலாமிடமுண்டோவென்னுமாகாங்க்ஷையிலே யருளிச் செய்கிறார் ”அஜ்ஞாநத்தாலே” என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக அஜ்ஞானம் தொடக்கமாக உள்ள மூன்று விதத்தினர் (ப்ரபத்தி செய்தவர்கள்) இவர்கள், இவர்கள் என்று எங்கு காணலாம் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர் என்றது, இதரோபாயாநுஷ்டாநத்தி விழிகைக் கீடான ஜ்ஞாநாதிகள் முதலிலே யில்லாமையாலே அநந்யகதிகளாய்க் கொண்டு பகவத் விஷயத்திலே பரந்யாஸம் பண்ணினவர்களென்றபடி. (அஸ்மதாதிகள்) என்று – ஸ்வநைச்யாநுஸந்தாநத்தாலே மந்தாதிகாரிகளோடே தம்மையும் கூட்டி யருளிச் செய்கிறார். (ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்) என்றது - உபாயாந்தரங்கள் ஸ்வரூபநாசக

மென்று நடுங்கும்படியான ஸ்வரூபயாதாத்ம்ய தர்சநத்தாலே வந்த ஜ்ஞாந பூர்த்தியாலே அநந்ய கதிகளாய்க் கொண்டு, ஸ்வரூபாநுரூபமாக பகவதி ந்யஸ்தபரரானவர்க ளென்றபடி. (பூர்வாசார்யர்களாகிறார்) நாத யாமுந யதிவராதிகள். (பக்தி பாரவச்யத்தாலே ப்ரபந்நர்) என்றது – பகவத்ப்ரேம பௌஷ்கல்யத்தாலே "காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்" என்றும், "இட்டகாலிட்டகை" என்றுஞ் சொல்லுகிறபடியே சிதிலகரணரா யிருக்கையாலே, ஸாதநாநுஷ்டாநத்துக்கு ஆளன்றிக்கே அநந்யகதிகளாய்க் கொண்டு அவன் பக்கலிலே பரஸமர்ப்பணம் பண்ணினவர்களென்றபடி. பக்தி பரவசர்க்கு ஸாதநாநுஷ்டாநம் பண்ணப் போகாதென்னுமிடம் "உன்னைக் காணுமவாவில் வீழ்ந்து நானெங்குற்றேனு மல்லேன்" என்றும், "என் கொள்வன்" என்கிற பாட்டிலும் ஆழ்வார் ஸுஸ்பஷ்டமாக வருளிச்செய்தாரிறே.

**விளக்கம்** - "அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர்" என்பதன் மூலம், மற்ற உபாயங்களைக் கைக்கொள்வதில் ஞானம் இல்லாத காரணத்தினால், மற்ற புகலிடம் ஏதும் இல்லாமல், பகவானிடம் பரந்யாஸம் செய்தவர்கள் கூறப்பட்டனர். "அஸ்மதாதிகள்" என்பதன் மூலம், தன்னைத் தாழ்வாகவே எண்ணியபடி உள்ளதால் மற்ற அதிகாரிகளுடன் தன்னையும் சேர்த்துக் கொள்கிறார். "ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்" என்பதன் மூலம் மற்ற உபாயங்கள் அனைத்தும் ஆத்மாவின் ஸ்வரூபத்தை அழித்துவிடும் என்பதான நடுங்க வைக்கும் உண்மையை அறிந்தவர்கள்; இந்த உண்மையை உணர்ந்த காரணத்தினால் ஞானம் நிறையப் பெற்றவர்கள்; இதனால் வேறு புகலிடம் தங்களுக்கு இல்லை என்று உணர்ந்து, தங்களது ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி எம்பெருமானிடமே தங்களது பாரத்தை வைத்தவர்கள். "பூர்வாசார்யார்கள்" என்பது ஸ்வாமி நாதமுனிகள், ஸ்வாமி ஆளவந்தார், ஸ்வாமி எம்பெருமானார் போன்றவர்கள் ஆவர். "பக்தி பாரவச்யத்தாலே ப்ரபந்நர்" என்பதன் மூலம் எம்பெருமானிடம் கொண்ட ப்ரேமையின் பூர்ணம் காரணமாக பெரியதிருவந்தாதி (34) – காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும் – என்றும், திருவாய்மொழி (7-2-4) - இட்டகாலிட்டகை – என்றும் கூறுவது போன்று தங்களது உறுப்புக்கள் என்ன செய்கின்றன என்பதே தெரியாமல் உள்ளவர்கள்; இதனால் ஒரு குறிப்பிட்ட உபாயத்தைக் கைக்கொள்ளாமல், வேறு புகலிடம் இல்லாமல், அவனிடம் மட்டுமே சென்று பரஸமர்ப்பணம் செய்தவர்கள் ஆவர். பக்தி மற்றும் ப்ரேமை ஆகியவற்றின் காரணமாக எந்த ஒரு சாதனத்தையும் கைக்கொள்ளாமல் உள்ள நிலை ஏற்படும் என்பதைத் திருவாய்மொழி (5-7-2) – உன்னைக் காணுமவாவில் வீழ்ந்து நானெங்குற்றேனு மல்லேன்

– என்றும், திருவாய்மொழி (5-1-4) – என் கொள்வன் - என்றும் கூறியதன் மூலம் ஆழ்வார் தெளிவாக உணர்த்தினார் அல்லவோ?

44. இப்படி சொல்லுகிறதும் ஊற்றத்தைப் பற்ற.

**அவதாரிகை** - இப்படி அஜ்ஞாநாதிகளோரொன்றே யிவர்களுக்கு ப்ரபதந ஹேதுவாகச் சொல்லுகைக்கு மூலமின்ன தென்கிறார் (இப்படி என்று தொடங்கி).

**விளக்கம்** - இப்படியாக அஜ்ஞாநம் போன்ற மூன்றுக்குள் ஏதேனும் ஒன்று மட்டுமே ஒருவரின் ப்ரபத்திக்குக் காரணம் என்று கூறுவதன் மூலகாரணம் எது என்பதை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது அஜ்ஞாநாசக்திகளும் ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநமும் பகவத் பக்தியுமாகிறவிவை மூன்றிலும், மூவர்க்கு மந்வய முண்டாயிருக்கச்செய்தே, ஓரொன்றே யிவர்களுக்கு ப்ரபதந ஹேதுவாகச் சொல்லுகிறதும் இவற்றில் ஒரொன்றே இவ்வதிகாரிகள் பக்க லுறைத்திருக்கையாலே யென்கை.

**விளக்கம்** - அஜ்ஞானம், ஆற்றல் இல்லாமல் இருத்தல்; ஆத்மாவின் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிகின்ற ஞானம்; பகவத் ப்ரேமை ஆகிய மூன்றிலும் மூன்று விதமான அதிகாரிகளுக்குத் தொடர்பு இருக்கலாம். ஆயினும் இவற்றில் ஏதோ ஒன்று மட்டுமே இவர்களது ப்ரபத்திக்குக் காரணமாக இருக்கும். இந்த மூன்றில் ஏதேனும் ஒன்று மட்டுமே ஒவ்வொருவரிடமும் உறைந்திருக்கும்.

**வ்யாக்யானம்** – இத்தால், முற்பட்டவர்கள் பக்கல் ஜ்ஞாந பக்திகளிரண்டும் குறைந்து அஜ்ஞாநமே விஞ்சியிருக்கும்; நடுவிலவர்கள் பக்கல், அஜ்ஞாந மல்பமாய் பக்தியுமளவு பட்டு ஜ்ஞாநமே விஞ்சியிருக்கும்; பிற்பட்டவர்கள் பக்கல், அஜ்ஞாநம் அத்யல்பமாய் ஸ்வரூப ஜ்ஞாநமுங் குறைவற்றிருக்கச்செய்தே, ப்ரேமமே கரைபுரண்டிருக்கும்; ஆகையால், எல்லா மெல்லார் பக்கலிலுமுண்டேயாகிலும் அல்பங்களானவை கிடக்கச்செய்தே அதிகமானதுவே அவ்வவர்க்கு ப்ரபதந ஹேதுவாமென்றதாய்த்து. இந்த யோஜனைக்கொரு குறையுண்டு. மயர்வற மதிநலம் பெற்ற ஆழ்வார்களுக்கும் அஜ்ஞானம்

சிறிது கிடக்கிறதுண்டென்று கொள்ள வேண்டி வருகையாலே, ஆனால் செய்வதென்னென்னில், (ஊற்றத்தைப் பற்ற) என்கிறவித்தை அநுஸந்தாந பரமாக்கி யோஜிக்குமளவி லிவ்விரோதமில்லை; அப்போது (இப்படி) இத்யாதிக்கு - அஜ்ஞாநாசக்திகளும் ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநமும் பகவத் பக்தியுமாகிற இம் மூன்றினுடையவு மநுஸந்தாநம் மூவர்க்கு மேதேனுமொருபடி யுண்டாயிருக்கச் செய்தே ஓரொன்றே யிவ்வதிகாரிகளுக்கு ப்ரபதந ஹேதுவாகச் சொல்லுகிறதும் இவற்றி லோரொன்றிலே யிவ்வதிகாரிகளுக் கூற்றமாகையாலே யென்று பொருளாகக்கடவது. அதாவது, அநந்யகதிகளாய் ப்ரபந்நராகைக்குடலான அஜ்ஞாநாதி த்ரயாநுஸந்தாநமும் மூவர்க்கு முண்டானாலும், மூன்றிலும் வைத்துக்கொண்டு ப்ரசுரமானதே தந்தாமுக் கநந்யகதிகளாய் ப்ரபத்தியிலிழிகைக்கு ஹேதுவாக வநுஸந்தித் திருக்கையாலே யென்றபடி. இதில் ப்ரதமாதிகாரிகளுக்கு அஜ்ஞாநாநுஸந்தாநம் ஸ்வரஸம்; நடுவு சொன்னவர்களுக்கு, ப்ராமணிகராகையாலே அஜ்ஞாநத்தினுடைய ஸவாஸந நிவ்ருத்தி கூடாமையால், அஜ்ஞாநாநு ஸந்தாநம் கூடும்; பிற்பட்டவர்கள் மயர்வற மதிநலம் பெற்றவர்களாகையாலே அஜ்ஞாநாநுஸந்தாநம் நைச்ய நிபந்தநமா மித்தனை.

**விளக்கம்** - இதன் காரணாமாக முதல் வகையைச் சார்ந்தவர்களிடம் (அஜ்ஞானம் உள்ளவர்கள், சக்தி அற்றவர்கள்) ஞானம் மற்றும் பக்தி என்பது குறைவாக இருந்து அறியாமை மட்டுமே அதிகமாகக் காணப்படும். இரண்டாவது வகையைச் சார்ந்தவர்களிடம் (ஞானம் உள்ளவர்கள்) அறியாமை குறைவாகவும், பக்தி என்பது அளவுடன் காணப்பட்டு, ஞானமே அதிகமாக இருக்கும். மூன்றாவது வகையைச் சார்ந்தவர்களிடம் (பக்தி உள்ளவர்கள்) அறியாமை என்பது முகவும் குறைவாகவும், ஞானம் சற்றே குறைவாகவும், பக்தி என்பது கரைபுரண்டு ஓடும்படியும் காணப்படும். ஆகவே மூவரிடத்திலும் மூன்றும் உள்ளது என்றாலும், அவர்களிடம் எது குறைவாக உள்ளனவோ அவற்றைத் தள்ளி, அதிகமாக உள்ளதை மட்டுமே ப்ரபத்தியின் காரணமாக அருளிச்செய்தார்.

இப்படி நாம் பொருள் கொண்டால் சிறு தோஷம் இதில் உண்டு. மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுக்கும் சற்று அறியாமை உள்ளது என்றாகிவிடும். ஆகவே இப்படிச் சமாதனம் அருளப்பட்டது. அதாவது, அவர்களிடம் மிகுதியாக என்ன உள்ளது என்பதைப் பற்றி மட்டுமே எண்ணும்போது, மேலே கூறப்பட்ட தோஷம் உண்டாகாது.

ஆகவே இந்தச் சூர்ணைக்கு எவ்விதம் பொருள் கொள்ளவேண்டும் என்றால் - அறியாமை, ஆத்மஞானம், பகவத் பக்தி ஆகிய மூன்றின் நினைவும் முன்று விதமான அதிகாரிகளுக்கு ஏதேனும் ஒன்று அதிகமாகவும் மற்றவை குறைவாகவும் இருக்கும்; அந்த ஒன்று மட்டுமே இவர்களின் ப்ரபத்திக்குக் காரணமாக ஏன் கூறப்படுகிறது என்றால், அந்த ஒன்றில் மட்டுமே அந்தந்த அதிகாரிகளுக்கு மிகுந்த ஈடுபாடும் சிந்தனையும் உள்ளதால் ஆகும். அதாவது மற்ற புகலிடம் இல்லாமல் உள்ள ப்ரபந்நர்கள் என்பதற்கு இன்றியமையாத தன்மைகளான அறியாமை, ஆத்மஞானம், பகவத் பக்தி ஆகிய மூன்றுமே மூன்று விதமான அதிகாரிகளுக்கு உண்டு; ஆனால் இந்த மூன்றில் ஏதோ ஒன்று மட்டுமே அவர்கள் வேறு புகலிடம் இல்லாமல் பகவானிடம் ப்ரபத்தி செய்வதற்குக் காரணமாக அதிக நினைவுடன் எண்ணும்படி உள்ளது. இங்கு முதல் வகையைச் சார்ந்தவர்களுக்கு அறியாமையை எண்ணுதல் பொருந்தும்; இரண்டாம் வகையைச் சார்ந்தவர்களுக்கு ப்ரமாணங்கள் மூலமாக பொருள் உணர்பவர்கள் என்பதால் அறியாமையின் வாசனை அடியுடன் நீங்குதல் என்பது இல்லாமையால் அறியாமையை எண்ணக்கூடும்; மூன்றாம் வகையைச் சார்ந்தவர்கள் மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர்கள் என்பதால் அறியாமை உள்ளதாக எண்ணுதல், தாங்கள் வேறு புகல் இல்லாதவர்கள் என்று எண்ணுதல், இதனால் தங்களைத் தாழ்வாக எண்ணுவதற்குக் காரணமாகி விடுகின்றன.

45. இம்மூன்றும் மூன்று தத்வத்தையும் பற்றி வரும்.

**அவதாரிகை** - இவ்வஜ்ஞாநாதி த்ரயத்துக்கு காரணமின்னதென்கிறார் (இம்மூன்றும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாக உள்ள மூன்றுக்கும் (அறியாமை, ஆத்மஞானம், பக்தி) என்ன காரணங்கள் என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "மூன்று தத்வத்தையும் பற்றி வரும்" என்றது – ஸாதநாநுஷ்டாநத்தில் அஜ்ஞாநாசக்திகளுக்கு மூலம் கர்ம நிபந்தநமான அசித் ஸம்பந்தமாகையாலே, அஜ்ஞாநம் அசித்தத்வத்தைப் பற்றிவரும்; இதர ஸாதநங்கள் ஸ்வரூப விருத்தமென்று பரித்யஜிக்கைக் குடலான ஜ்ஞாந பூர்த்திக்கடி மத்யம பதத்தில் சொல்லுகிற ஆத்ம ஸ்வரூப யாதாத்ம்ய தர்சநமாகையாலே, ஜ்ஞாநாதிக்யம் ஆத்மதத்வத்தைப் பற்றி வரும்; ஒன்றையுமடைவுபட

அநுஷ்டிக்கமாட்டாதபடி கரணசைதில்யத்தைப் பண்ணும் பக்திவிவ்ருத்திக்குக் காரணம் "காதல் கடல் புரைய விளைவித்த காரமர்மேனி" என்னும் பகவத் விக்ரஹ வைலக்ஷண்யமாகையாலே பக்தி பாரவச்யம் பகவத் தத்வத்தைப் பற்றி வருமென்றபடி.

**விளக்கம்** – மற்ற சாதனங்களில் ஈடுபடுவதில் உள்ள அறியாமை மற்றும் ஆற்றல் அற்ற தன்மை ஆகியவற்றுக்கு மூலகாரணம் என்னவென்றால் – கர்மத்தின் தொடர்பினால் உண்டான சரீர ஸம்பந்தம் ஆகும். ஆகவே அறியாமை என்பது சரீர தத்வதைப் பற்றியே உண்டாகும். மற்ற சாதனங்கள் அனைத்தும் ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு முரண்பட்டே உள்ளன என்று உணர்ந்து, அவற்றை விலக்குதல் என்பது ஞானத்தின் அடிப்படையாகும்.

இத்தகைய ஞானம் பூர்ணமாக விளைவதற்கு அடிப்படை என்னவென்றால், நம: என்ற பதம் மூலம் உணர்த்தப்படும் ஆத்மாவின் தன்மையை உள்ளது உள்ளபடி அறிதலே ஆகும். ஆகவே ஞானத்தின் மேன்மை என்பது ஆத்மாவைப் பற்றியே உண்டாகும். மற்ற எதனையும் முழுமையாகச் செய்ய இயலாதபடி, உடல் உறுப்புக்கள் அனைத்தையும் குலைந்து போகும்படிச் செய்வது பக்தியாகும். இதற்குக் காரணம் திருவாய்மொழி (5-3-4) – காதல் கடல் புரைய விளைவித்த காரமர்மேனி - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள எம்பெருமானின் திருமேனி அழகு ஆகும். ஆகவே பக்தி மூலம் பரவசம் கொண்ட நிலை என்பது எம்பெருமான் என்ற தத்துவதைப் பற்றியே நிற்கும்.

46. "என்னான் செய்கேன்" என்கிறவிடத்தில் இம்மூன்றுமுண்டு.

**அவதாரிகை** - அதிகாரி த்ரயத்துக்கும் அஜ்ஞாநாதி த்ரயத்திலுமந்வய முண்டாயிருக்க, ஓரொன்றே ப்ரபதந ஹேதுவாகச் சொல்லுகிறது "ஊற்றத்தப் பற்ற" என்றிறே சொல்லிற்று; இப்படி ஏகாதிகாரி பக்கலிலே இம்முன்று முண்டென்னு மிடங்காணாலாமிட முண்டோவென்ன வருளிச்செய்கிறார் "என்னான்" என்று தொடங்கி.

**விளக்கம்** – மூன்று வகையான அதிகாரிகளுக்கும் இந்த மூன்று விஷயங்களிலும் தொடர்பு உள்ளபோது, இவற்றில் ஏதேனும் ஒன்று மட்டுமே அந்தந்த அதிகாரிகள் ப்ரபத்தியில் ஈடுபடக் காரணம் என்பதாக அல்லவோ சூர்ணை 44-ல் கூறப்பட்டது? ஒரு

அதிகாரியிடமே இப்படியாக மூன்றையும் காண இயலுமோ என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, எம்பெருமான் தம்முடைய ஆர்த்தி கண்டிரங்கக் காணாமையாலே தன்னைப் பெறுமிடத்தில் சில ஸாதநாநுஷ்டாநம் பண்ணவேணுமென்றிருந்தானாகக் கொண்டு, உபாயாந்தராநுஷ்டாநத்துக்கு யோக்யதை யில்லாதபடி அஜ்ஞனான நான் என் செய்கேன்; ஜ்ஞாநம் தந்தோமே என்னில், நீ தந்த ஜ்ஞாநத்தாலே ஸ்வருப பாரதந்த்ர்யத்தை யுணர்ந்து ஸாதநாநுஷ்டாநம் அப்ராப்த மென்றிருக்கிற நானென் செய்கேன்; ஸ்வரூபத்துக்கு சேராதாகிலும் உன்னை பெறலாமாகில் இது தன்னை அநுஷ்டிக்கலாய்த்திறே ஜ்ஞாந மாத்ரத்தைத் தந்தாயாகில், பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தைத் தருகையாலே ஒன்றையுமடைவுபட அநுஷ்டிக்க க்ஷமனல்லாதபடி பக்தி பரவசனான நானென் செய்கேன் என்று இம்மூன்று மாழ்வார்க்கு விவக்ஷிதமாகையாலே அவ்விடத்திலே இம்மூன்று முண்டென்கை. ஆகையால் இவ்விடத்திலே காணலாமென்று கருத்து.

**விளக்கம்** - ஸர்வேச்வரன் தனது துன்பமான நிலையைக் கண்டு சற்றும் இரங்காமல் உள்ளதால், “இவன் நம்மை அடைவதற்கு வேறு சில உபாயங்களையும் கைக்கொள்ள வேண்டும்”, என்று எம்பெருமான் எண்ணுவதாக ஒருவன் நினைக்கக்கூடும். அப்படி உள்ள மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளும் தகுதி தன்னிடம் இல்லை என்பதால், “நான் என்ன செய்வேன்” , என்று கூறக்கூடும். அப்போது அந்த அதிகாரி எம்பெருமானிடம், ”நீ எனக்கு அளித்த ஞானம் மூலமாக ஆத்மாவின் ஸ்வரூபத்தை அறிந்தேன். இதனால் ஆத்மவானது மற்ற யாருக்கும் வசப்பட்டது அல்ல, உனக்கு மட்டுமே வசப்பட்டது என்று ஆத்மாவின் பாரதந்த்ர்யத்தை உணர்ந்தேன். ஆகவே மற்ற உபாயங்களைக் கைக் கொள்வது எனது ஆத்மாவின் தகுதிக்கு ஏற்றது அல்ல என அறிந்த நான் என்ன செய்வது?”, என்று இருக்கலாம் (இது ஆத்மஞானம் பெற்ற நிலையாகும்). “அப்படியே மற்ற உபாயங்கள் ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்புடையது அல்ல என்றாலும், உன்னை அடைவதற்கு அந்த உபாயங்கள் உதவும் என்றால், அவற்றைச் செய்வதற்கான தகுதியை நீயே எனக்கு அளிக்கக்கூடும். இப்படியாக பக்தியின் ரூபமாக உள்ள ஞானத்தை நீ அளிக்கலாம். இதன் காரணமாக வேறு ஒன்றிலும் முழுமையாக ஈடுபட இயலாதபடி பதியினால் கட்டுண்ட நான் என்ன செய்வேன்?”, என்று கூறலாம். இப்படியாக உள்ள

மூன்று சிந்தனைகளும் ஆழ்வாருக்கு உண்டு என்பதால், ஒருவரிடமே இந்த மூன்றையும் காணலாம் என்றாகிறது.

47. அங்கு ஒன்றைப் பற்றியிருக்கும்.

**அவதாரிகை** - ஆனாலிம்மூன்றும் அவ்விடத்தில் ப்ரபத்தி காரணமாகிறதோ வென்ன? "அங்கொன்றைப் பற்றியிருக்கும்" என்கிறார்.

**விளக்கம்** – "ஆயினும் இந்த மூன்றும் அந்தந்த அதிகாரியின் ப்ரபத்திக்குக் காரணமாக உள்ளவையா?", என்ற கேள்வி எழலாம். இதற்கான் விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது அவ்விடத்தில் ப்ரபத்தியானது மூன்றிலும் வைத்துக்கொண்டு ஊன்றியிருக்கிற பக்தி பாரவச்யத்தையே தனக்கு ஹேதுவாகப் பற்றியிருக்குமென்றபடி.

**விளக்கம்** - அங்கு ஏதேனும் ஒன்றைப் பற்றியே ப்ரபத்தி காணப்படும். அங்கு உள்ள ப்ரபத்தி என்பது பக்தியினால் பரவசமாக உள்ள தன்மையை மட்டுமே காரணமாகக் கொண்டு நிற்கும் என்றார்.

48. முக்க்யம் அதுவே.

**அவதாரிகை** - இந்த ஹேதுத்ரயமடியாக வரும் ப்ரபத்திகளில் முக்க்யமேதென்ன? "முக்க்ய மதுவே" என்கிறார்.

**விளக்கம்** - இப்படியாக மூன்று காரணங்களின் அடிப்படையில் தோன்றும் ப்ரபத்திகளில் எந்த ஒன்று முக்கியமானது என்று கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பக்தி பாரவச்யமடியாக ப்ரபத்தி பண்ணுமிடத்தில் ப்ராப்ய ருசி கண்ணழிவறவுண்டாகையாலே அதுவே முக்க்யமென்றபடி.

**விளக்கம் -** பக்தியின் பரவசம் காரணமாக உண்டாகின்ற ப்ரபத்தி என்பதில், அடையப்பட வேண்டிய இலக்கைக் குறித்த ருசி அதிகமாகவே உள்ளது. ஆகவே பக்தியின் பரவசம் காரணமாக விளைந்த ப்ரபத்தியே முக்கியமானது என்றார்.

49. “அவித்யாத:” என்கிற ச்லோகத்திலே இம்மூன்றும் சொல்லிற்று.

**அவதாரிகை** - இவ்வதிகாரித்ரயத்துக்கு ப்ரமாணமுண்டோவென்ன? ப்ரதமம் பட்டரருளிச்செய்ததொரு ச்லோகத்தை யுதாஹிரிக்கிறார் ”அவித்யாத:” என்று தொடங்கி.

**விளக்கம் –** இப்படியாக மூன்றுவிதமான காரணங்களால் மூன்றுவிதமான ப்ரபத்தி உண்டு என்றும், அதற்கு ஏற்ப மூன்றிவிதமான அதிகாரிகள் உண்டு என்றும் கூறுவதற்கான ப்ரமாணம் ஏதேனும் உண்டா என்ற கேள்வி எழலாம். இதற்கு முதலில் ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்த ஒரு ச்லோகத்தைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம் –** ”அவித்யாதோ தேவே பரிப்ருடதயாவா விதிதயா ஸ்வபக்தேர் பூம்நாவா ஜகதி கதி மந்யா மவிதுஷாம், கதிர் கம்யச்சாஸௌ ஹரிரித ஜிநந்தாஹ்வய மநோ: ரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸகலு பகவாந் ஸௌநகமுநி:” - இச்லோகார்த்தம், ஜிதந்தா வ்யாக்யாநோபோத்காதத்திலே, ”ப்ரபத்திக்கதிகாரிகள் அஜ்ஞரும் ஸர்வஜ்ஞரும் பக்திபரவசருமென்று த்ரிவிதமாக பட்டரருளிச்செய்தாரிறே?” என்று தொடங்கி, ”அஜ்ஞனாகிறான் - பகவல்லாபத்துக்குத் தன்பக்கலில் ஜ்ஞாந சக்திகளில்லாதவன்; ஸர்வஜ்ஞனாகிறான் தேசகாலவஸ்துக்களால் பரிச்சேதிக்கவொண்ணாத வைபவத்தையுடையவனீச்வரனென்றிருக்கையாலே அநந்யஸாத்யமென்றிருக்குமவன்; பக்திபரவசனாகிறான் ஜ்ஞாந சக்திகளுண்டாயிருக்கசெய்தே அடைவுபட அநுஷ்டிக்க மாட்டாதவன்; இவர்கள் மூவரும், பகவத்விஷயமொழிய வேறு உபாயமுண்டென்றறியாதவர்கள்; இவர்களுக்கு ப்ராபகனுமாய் ப்ராப்யனுமாயிருக்கும் ஸர்வேச்வரன்” என்று, ஜிதந்தையென்று பேரையுடைத்தான மந்த்ர ரஹஸ்யத்தை, ஸர்வஜ்ஞனான ஸ்ரீசௌநகபகவான் வ்யாக்க்யாநம் பண்ணப் பெறுவதே! என்கிறார்” என்று ஆச்சான்பிள்ளையருளிச் செய்தார். ”ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்” என்றவிடத்தில், ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநம் ப்ரபதந ஹேதுவாகச் சொல்லிற்று; இந்த ச்லோகத்தில், பகவதநந்ய ஸாத்யத்வ ஜ்ஞாநம் ப்ரபதந ஹேதுவாகச் சொல்லிற்று; ஆகையால்,

இரண்டும் ஜ்ஞாநாதிகர்க்கு அநந்யகதித்வ பூர்வகமான ப்ரபதநத்துக்கு ஹேதுவாமென்று கொள்ளவேண்டும். கீழுமிதுதானே அர்த்தமானாலோவென்னில், ஒண்ணாது; "இம்மூன்றும் மூன்று தத்வத்தையும் பற்றிவரும்" என்றத்தோடு சேராமையாலே.

**விளக்கம்** - ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்த ச்லோகம் - அவித்யாதோ தேவே பரிப்ருடதயாவா விதிதயா ஸ்வபக்தேர் பூம்நாவா ஜகதி கதி மந்யா மவிதுஷாம், கதிர் கம்யச்சாஸௌ ஹரிரித ஜிநந்தாஹ்வய மநோ: ரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸகலு பகவாந் ஸௌநகமுநி: - என்பதாகும். இந்தச் ச்லோகத்தை ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை தனது ஜிதந்தே ஸ்தோத்ர வ்யாக்யானத்தின் அவதாரிகையில் – ப்ரபத்திக்கதிகாரிகள் அஜ்ஞரும் ஸர்வஜ்ஞரும் பக்திபரவசருமென்று த்ரிவிதமாக பட்டரருளிச்செய்தாரிறே? – ப்ரபத்திக்குத் தகுதி உடையவர்கள் - அறியாமை உள்ளவர்கள், அனைத்தும் அறிந்தவர்கள், பக்தி வசப்பட்டவர்கள் என்று அருளிச்செய்தார். இதற்கான பொருள் - பகவத் விஷயத்தில் அறியாமை, நன்றாக அறிந்த தன்மை, பக்திப் பரவசம் ஆகியவற்றைத் தவிர இந்த உலகில் வேறு உபாயம் அறியாமல் உள்ளவர்களுக்கு உபாயமும், உபேயமும் ஸ்ரீஹரியே ஆவான் என்ற ஆழ்பொருளை உடையதான ஜிதந்தே என்னும் பெயர் கொண்ட இந்த மந்த்ரத்தின் ரஹஸ்யத்தை சௌனகமுனி அருளிச்செய்தார் - என்பதாகும். இதற்கு வ்யாக்யானம் இட்ட ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை, "அறியாமல் உள்ளவன் யார் என்றால் பகவானை அடைவதற்குத் தன்னிடம் வேறு எந்தவிதமான ஞானமும் இல்லாதவன்; அனைத்தும் அறிந்தவன் யார் என்றால் தேசம், காலம் போன்ற எவற்றாலும் அறிய இயலாதபடி உள்ள வைபவம் கொண்டவன் ஸர்வேச்வரன் என்பதால், அவன் வேறு எந்த உபாயத்தாலும் அடைய இயலாதவன் என்று அறிந்தவன்; பக்திபரவசன் யார் என்றால் ஞானம் போன்ற பலவும் உள்ளபோதிலும் அவனது திருமேனி அழகு முதலானவற்றில் தனது மனம் போன்ற அனைத்தும் ஈடுப்பட்டதால் எதனையும் செய்ய இயலாமல் தவிக்கும் ஒருவன் ஆவான். இப்படியாக உள்ள மூவருமே பகவத் விஷயம் தவிர வேறு உபாயம் உள்ளது என்று அறியாதவர்கள் ஆவர். இவர்களுக்கு உபாயமும் பேறாகவும் உள்ளவன் ஸர்வேச்வரன் ஆவான். இப்படியாக உள்ள ஜிதந்தை என்னும் பெயர் கொண்ட இந்த ரஹஸ்யத்தை அனைத்தும் அறிந்த ஸ்வாமி சௌனகபகவான் அருளிச்செய்தார்", என்றார். சூத்திரம் 43-ல் "ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்" என்பதன் மூலம் ஆத்மாவின் தன்மையை உள்ளது உள்ளபடி அறிந்த ஞானம் என்பதே ப்ரபத்திக்குக் காரணம் என்று உரைக்கப்பட்டது; இந்த ச்லோகம் மூலம், எம்பெருமான் வேறு

உபாயங்களால் அடைய இயலாதவன் என்ற ஞானமே ப்ரபத்திக்குக் காரணம் என்று உரைக்கப்பட்டது. ஆகவே இந்த இரண்டையும் (ஆத்மாவின் தன்மை பற்றிய ஞானம், எம்பெருமான் வேறு எதனாலும் அடைய இயலாதவன் என்ற ஞானம்) ஞானம் உள்ளவர்களுக்கு, வேறு கதியில்லாத தன்மை என்பதற்கு முன்பாக உள்ள காரணங்கள் என்று கொள்ளவேண்டும். சூத்திரம் 43ல் ஞானம் உள்ளவர்கள் என்பதற்கு, "எம்பெருமான் வேறு எந்த சாதனம் மூலமும் அடைய இயலாதவன் என்ற ஞானம்", என்று ஏன் கொள்ளக்கூடாது என்ற கேள்வி எழலாம். அப்படிக் கொள்ள இயலாது. ஏன்? இவ்விதம் கொண்டால் சூத்திரம் 45-ல் கூறப்பட்ட பொருளுக்கு முரண்பாடு உண்டாகும் (ஆகவே ஞானம் என்பது மேலே கூறப்பட்ட இரண்டு ஞானமும் என்றே கொள்ளவேண்டும்).

## 50. "இதம் சரணமஜ்ஞாநாம்"

**அவதாரிகை** - அநந்தரம், இவ்வர்த்த விஷயமாக, அகிலஜகந்மாதாவாய் ஆப்ததமையான பிராட்டி லக்ஷ்மீ தந்த்ரத்திலருளிச் செய்த வசநத்தை யுபாதாநம் பண்ணுகிறார் "இதம் சரணமஜ்ஞாநாம்" என்று.

**விளக்கம்** - அடுத்து ப்ரபத்தி அதிகாரிகளை மூன்று விதமாகப் பிரித்தமை குறித்து, அனைத்து உயிர்களின் தாயாக உள்ளவளும், உறுதியாக நம்பவல்லவளும் ஆகிய பெரிய பிராட்டி, லக்ஷ்மீ தந்த்ரத்தில் தனது திருவாய் மலர்ந்தருளிய சொற்களை ப்ரமாணமாக அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - இதம் சரணமஜ்ஞாநா மிதமேவ விஜாநதாம், இதம் திதீர்ஷதாம் பாரமிதமாநந்த்யமிச்சதாம். இந்த ச்லோகத்தில், "இதம்" என்று பராமர்சிக்கிறது கீழ்ச்சொன்ன சரணாகதியை. "அபாயோபாயநிர்முக்தா மத்யமாம் ஸ்திதிமாஸ்திதா, சரணாகதி ரக்ர்யைஷா ஸம்ஸாரார்ணவ தாரிணீ" என்றிறே கீழ்ச்சொல்லி நின்றது "இயம்" என்று ஸ்த்ரீலிங்க நிர்தேசமன்றிக்கே, "இதம்" என்று நபும்ஸக லிங்க வ்யத்யயம் சரண சப்த விவக்ஷையாலே. இதில் அஜ்ஞஸர்வஜ்ஞர்களை ஸ்புடமாகச் சொல்லுகையாலே, மேல் பக்திபரவசரைச் சொல்லுகிறதென்று கொள்ளவேணும். "இதம் திதீர்ஷதாம் பாரம்" என்றது - சடக்கென அநிஷ்ட நிவ்ருத்தி பிறக்க வேணுமென்னும் த்வரையை யுடையார்க்கென்றபடி. "ஆநந்த்ய மிச்சதாம்" என்றது ஸ்வரூப ப்ராப்த பரிபூர்ண

பகவதநுபவத்தைப் பெற்றாலல்லது தரிக்கமாட்டாதார்க்கென்றபடி. இவையிரண்டும் பக்தியினுடைய பூமாவாலே வருமவையிறே. பக்திபாரவச்யம் உபாயாந்தராநுஷ்டாநத்தில் அசக்திக்குமுறுப்பாய், அநிஷ்ட நிவ்ருத்தியிலு மிஷ்டப்ராப்தியிலுமுண்டான விளம்பாக்ஷமதைக்கு முடலாயிறே யிருப்பது; அதில், விளம்பாக்ஷமதைக்குடலான ஆகாரத்தை இந்த ச்லோகத்தில் சொல்லுகிறது. ஆனால், கீழ் அசக்திக்குடலாகவன்றோ சொல்லிப்போந்தது, அதுக்கிது ப்ரமாணமாமோவென்னில்; அதிகாரி த்ரைவித்யாம் தர்சிப்பிக்கிற இவ்வளவே இவ்விடத்திலபேக்ஷிதமாகையாலே இது ப்ரமாணமாகச் சொல்லத் தட்டில்லை. ”அவித்யாத:” என்கிற ச்லோகத்தில், ஜ்ஞாநாதிக்யத்துக்குடலாகச் சொன்னதும் கீழ்ச் சொல்லிவந்ததும் பிந்நமாயிருக்கச் செய்தே, அதிகாரி த்ரைவித்யத்துக்கு ப்ரமாணமாகவத்தைச் சொன்னாப்போலே.

**விளக்கம்** - கீழே உள்ள லக்ஷ்மீ தந்த்ர வரிகள் காண்க.

- (17-101) இதம் சரணமஜ்ஞாநா மிதமேவ விஜாநதாம் - இந்த ப்ரபத்தி என்பதே அறிவற்றவர்களுக்கும், நன்கு அறிந்தவர்களுக்கும் உபாயம்
- (17-102) இதம் திதீர்ஷதாம் பாரமிதமாநந்த்யமிச்சதாம் – ஸம்ஸாரம் என்ற பிறவிக்கடலை கடக்க எண்ணும் அனைவருக்கும் இதுவே உபாயம்

இங்குள்ள ”இதம்” என்ற பதம் கடந்த ச்லோகத்தில் (17-100) கூறப்பட்ட சரணாகதியைக் குறிக்கிறது. அந்த வரிகள் - (17-100) - அபாயோபாயநிர்முக்தா மத்யமாம் ஸ்திதிமாஸ்திதா, சரணாகதி ரக்ர்யைஷா ஸம்ஸாரார்ணவ தாரிணீ - பாவங்கள் மற்றும் மற்ற உபாயங்கள் ஆகிய இரண்டிலிருந்தும் விடுபட்டு, நடுநிலையானதும் உறுதியானதும் ஆகிய முதன்மையான இந்தச் சரணாகதி என்பது ஸம்ஸாரம் என்ற கடலில் உழன்று துன்பம் கொண்டவர்களை அதிலிருந்து கரை சேர்க்கிறது. “இதம்” என்ற பதம் சரணம் என்ற சப்தத்தைக் குறிப்பதாக உள்ளது. இங்கு ச்லோகம் 17-101ல் அறியாமல் உள்ளவர்கள், அனைத்தும் அறிந்தவர்கள் ஆகிய இருவரும் கூறப்படுவதால் ச்லோகம் 17-102ல் பக்திப்பரவசம் அடைந்தவர்கள் கூறப்படுவதாகவே கொள்ள வேண்டும். ”இதம் திதீர்ஷிதாம் பாரம்” என்பதன் மூலம் தங்களது உபாய விரோதிகள் உடனே நீங்கவேண்டும் என்ற வேகம் கொண்டவர்களுக்கு இந்த வரி உள்ளது என்பது உணர்த்தப்பட்டது. ச்லோகம் 17-102ல் ”ஆநந்த்யம் இச்சதாம்” என்பதன் மூலம் – தங்களது

ஆத்மாவிற்கு ஏற்றதான பகவத் அனுபவத்தைப் பரிபூர்ணமாகப் பெற்றால் மட்டுமே தரிப்பர், இல்லையேல் தரிக்கமாட்டனர் என்பதான நிலையில் உள்ளவர்களுக்கு இந்த வரியானது கூறப்பட்டது என்று உணர்த்தப்பட்டது. இந்த இரண்டுமே (தங்கள் உபாய விரோதி உடனே நீங்கவேண்டும், பகவத் அனுபவம் அடைந்தால் மட்டுமே உயிர் தரிப்பது) பக்தியின் மிகுதி காரணமாக மட்டுமே அல்லவோ உண்டாகும்? பக்தியினால் கட்டுண்டு நிற்கும் நிலை என்பது கீழே உள்ள இரண்டு நிலைகளுக்கும் அடிப்படையாக உள்ளது:

- மற்ற உபாயங்களைக் கைக்கொள்வதில் சக்தி இல்லாமை
- வேண்டுவதை அடைதல், அவசியம் அற்றவை கழிதல் ஆகிய இரண்டில் ஏற்படும் காலதாமதத்தைப் பொறுக்க இயலாமல் தவித்தல்

இந்த இரண்டில், காலதாமதம் ஏற்படுவதைப் பொறுத்துக் கொள்ள இயலாமல் உள்ள நிலையைப் பக்தி ஏற்படுத்துகிறது என்பதே இங்கு கூறப்பட்டது.

ஆனால் சூத்திரம் 46ல் பக்தியின் மூலம் பரவசம் அடைந்து நிற்கும் நிலை என்பதே மற்ற உபாயங்களைக் கைக்கொள்ள திறனற்ற நிலைக்குக் காரணம் என்று அல்லவோ கூறப்பட்டது? அதற்கு இந்த ச்லோகம் ப்ரமாணமாகுமோ? இந்தக் கட்டத்தில் ப்ரபத்தியின் அதிகாரிகள் மூன்று விதமாக உள்ளனர் என்பதற்கு அடிப்படையாக மூன்று பிரிவுகளை உணர்த்துவது மட்டுமே போதுமானது என்பதால், இந்த ச்லோகம் அதற்கும் ப்ரமாணம் என்று கூறுவதில் எந்தவிதமான தோஷமும் இல்லை. சூர்ணை 49ல் எடுக்கப்பட்ட அவித்யாத என்ற ப்ரமாணம் மூலம் ஞானாதிக்யத்திற்குக் காரணம் இன்னது என்று கூறப்பட்டதும், சூர்ணை 42ல் கூறப்பட்டதும் வெவ்வேறாக உள்ளபோதிலும், மூன்று வகையான அதிகாரிகளுக்கு அவித்யாத என்று ச்லோகமே ப்ரமாணமாகக் காட்டப்பட்டது. இது போன்றே இங்கும் கொள்ளக் குறையில்லை.

51. பக்திதன்னிலே அவஸ்தாபேதம் பிறந்தவாறே இதுதான் குலையக்கடவ தாயிருக்கும்.

**அவதாரிகை** – ஆக, ப்ரபத்த்யதிகாரி த்ரைவித்யத்துக்கு ப்ரமாணம் காட்டினாராய் நின்றார்கீழ்; இந்த த்ரிவித ப்ரத்தியிலும் பக்திபாரவச்ய ப்ரபத்தியே முக்கியமென்றிறே

கீழ்ச்சொல்லிற்று. ஏவம்பூத ப்ரபத்தி நிஷ்டரானவர்கள் தந்நிஷ்டை குலைந்து பகவல்லாபார்த்தமாக ஸ்வயத்நத்திலே மூளுவது, அவன் வரக் கொள்ள அவனையு பேக்ஷிப்பதாகிறவிவற்றுக்கு நிதாநமேதென்ன, அருளிச்செய்கிறார் “பக்தி தன்னிலே” என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாக மூன்று வகையான ப்ரபத்தி அதிகாரிகளின் பிரிவைத் தகுந்த ப்ரமாணங்கள் மூலம் உணர்த்தினார். இப்படியாக உள்ள மூன்று வகைகளில் பக்தியின் மூலம் கட்டுண்டு, அதன் காரணமாகப் பரவசம் அடைந்து செய்யும் ப்ரபத்தியே மிகவும் முக்கியம் என்று சூர்ணை 48ல் உரைத்தார். இப்படிப்பட்ட ப்ரபத்தியில் நிலைநிற்பவர்கள் தங்களது உறுதி குறைந்து எம்பெருமானைப் பெறுவதில் தங்களது சொந்த முயற்சியில் ஈடுபடுவது, எம்பெருமான் வந்தால் அவனை வெறுப்பது முதலானவற்றுக்கான காரணம் என்ன என்பதை இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ”பக்திதன்னிலே அவஸ்தாபேதம் பிறக்கையாவது” கரணசைதில்யத்தாலே ஸ்வயத்ந க்ஷமரன்றிக்கே அவனேயுபாயமாக அத்யவஸித்து, அவன் வரவு பார்த்திருக்கு மவஸ்தையளவன்றிக்கே கண்ணாஞ்சுழலையிட்டு, ஏதேனுமொருபடியாலேயாகிலும் அவனையிப்போதே பெறவேண்டும் என்னுமதிமாத்ர த்வராவஸ்தை விளைகை. ”இது” என்று ப்ரபத்தியைச் சொல்லுகிறது. தாத்ருசாவஸ்தை பிறந்தால் ப்ரபத்தி குலைகையாவது ”என்னான் செய்கேன்” என்று ஸ்வப்ரவ்ருத்தியிலந்வயமற்று பகவதி ந்யஸ்தபரராயிருக்கு மிருப்புக்குலைகை.

**விளக்கம்** - ” பக்திதன்னிலே அவஸ்தாபேதம் பிறக்கை” என்றால் என்ன? பொதுவாக எப்படி இருக்கவேண்டும் என்றால் அவன் மீது கொண்ட பக்தி காரணமாகத் தங்கள் உடல் உறுப்புகள் அனைத்தும் திறன் இழந்து, அவனை அடைவதற்குத் தாங்களாகவே முயற்சி செய்வதற்கு எந்தவிதமான சக்தியும் இன்றி இருத்தல் வேண்டும்; அவனை மட்டுமே தங்கள் உபாயமாக எதிர்பார்த்து நிற்கவேண்டும். ஆனால் இப்படிப்பட்ட நிலையில் இல்லாமல், காலதாமதத்தைப் பொறுக்க இயலாமல் தாங்களாகவே ஏதேனும் முயற்சியில் ஈடுபட்டு, அவனை எப்படியும் இப்போதே அடையவேண்டும் என்னும் அளவு கடந்த வேகத்தின் காரணமாக ஒரு நிலையை அடைதல் – என்பதாகும். “இது” என்பதன் மூலம் ப்ரபத்தி கூறப்பட்டது. மேலே கூறப்பட்ட நிலை உண்டானால், ப்ரபத்தி குலைகிறது.

ப்ரபத்தி குலைதல் என்றால் – “என்னான் செய்கேன்” என்று தனது முயற்சியில் மேலும் தொடராமல், எம்பெருமானிடம் தனது பாரம் முழுவதையும் வைத்தல் என்ற உறுதி மாறிவிடுவதாகும்.

52. தன்னைப் பேணவும் பண்ணும், தரிக்கவும் பண்ணும்.

**அவதாரிகை** - இப்படி ப்ரபத்தி நிஷ்டை குலையும்படி பிறந்த பக்தியும் அவஸ்தா பேதம் விளைக்குமத்தையருளிச் செய்கிறார் “தன்னை” என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படி ப்ரபத்தியின் மீது கொண்ட உறுதியானது தவறும்படியாக ஏற்பட்ட பக்தி என்பது பலவிதமான நிலைகளை உண்டாக்கும் என்கிறார்.

**வ்யாக்யானம்** – ”தன்னைப் பேணப்பண்ணுகையாவது” காறைபூணும் இத்யாதியிற்படியே அவன் வரவுக் குடலாகத் தன்னையலங்கரிக்கும்படி பண்ணுகை. அதாவது பகவல்லாபார்த்தமாக ஸ்வயத்னத்திலே மூட்டுமென்றபடி. இது, மடலெடுக்கை முதலானவற்றிலே மூட்டுமதுக்குமுபலக்ஷணம். ”தரிக்கப் பண்ணுகையாவது” – அரைக்ஷணமவனையொழிய தரிக்கமாட்டாமையாலே, அவன் வரவுக்குடலாக ஸ்வயத்னத்திலே மூளும்படி பண்ணினவதுதானே, அவன் வரக்கொள்ள விளம்ப ரோக்ஷத்தாலே ”போகு நம்பி”, ”கழக மேறேல் நம்பி” என்று அவனையுபேக்ஷித்துத் தள்ளி தரித்திருக்கும்படி பண்ணுகை. ஆக இவையிரண்டாலும் – ”என்னான் செய்கேன்” என்றும், “தரியேனினி” என்றுமிருக்குமிருப்புக்கு ப்ரதிகோடியை விளைக்குமென்றபடி. ஆகையாலே, ப்ரபத்தி நிஷ்டை குலைந்து ஸ்வப்ரவ்ருத்த்யாதிகளிலிழிகைக்கடி பக்தியினுடைய அவஸ்தா பேதமென்று கருத்து.

**விளக்கம்** – ”தன்னைப் பேணப்பண்ணுகையாவது” என்றால் பெரியாழ்வார் திருமொழி (3-7-8) – காறைபூணும் - என்ற பாசுரத்திற்கு ஏற்றபடி, அவன் தன்னை நாடிவரும் பொருட்டுத் தன்னை அலங்கரித்துக் கொள்ளும்படிச் செய்வது – என்பதாகும். அதாவது அவனை அடைவதற்காகத் தனது முயற்சியில் ஈடுபடுதல் என்பதாகிறது. இதுவே மடல் எடுத்தல் போன்ற முயற்சியில் ஈடுபடும் செயல்கலையும் குறிக்கிறது. “தரிக்கப் பண்ணுகையாவது” என்றால் – அவன் இல்லாமல் அரைநொடி கூடத் தாங்க

இயலவில்லை என்ற நிலை உண்டாகிறது; இதன் விளைவாகவே அவன் வரும்வரை காத்திருக்க இயலாமல், அவனை அடைவதற்குத் தானே முயல்வதற்கான செயல்களில் ஈடுபடும்படியாக பக்தி மாறுகிறது; இத்தகைய பக்தியானது அவன் சற்று காலம் தாழ்த்தி வந்தவுடன், "இத்தனை காலம் கழித்து வந்தானே" என்று ஆதங்கத்தை உண்டாக்குகிறது. இதனால் அவன் மீது கோபம் கொள்ளும்படிச் செய்து, கீழே உள்ள பாசுரங்களில் கூறப்பட்டது போன்று அவனை வெறுத்துத் தள்ளும்படிச் செய்துவிடுகிறது:

- திருவாய்மொழி – போகு நம்பீ
- திருவாய்மொழி – கழகம் ஏறேல் நம்பீ

ஆக, இந்த இரண்டாலும் "என்னான் செய்கேன்", "தரியேன் இனி" என்ற இரு நிலைகளையும் மாற்றி, இத்தகைய நிலையில் இருக்கவிடாமல் உள்ள நிலையைக் கொண்டு சேர்க்கும் என்றார். ஆகவே, ப்ரபத்தியில் உள்ள உறுதி குலைந்து, தனது முயற்சியில் ஈடுபடுவதற்கான காரணம் பக்தியின் நிலையில் ஏற்படும் மாறுபாடே காரணம் என்கிறார்.

53. இந்த ஸ்வபாவவிசேஷங்கள் கல்யாண குணங்களிலும் திருச்சரங்களிலும் திருநாமங்களிலும் திருக்குழலோசையிலுங் காணலாம்.

**அவதாரிகை** - "தன்னைப் பேணுவும் பண்ணும் தரிக்கவும் பண்ணும்" என்று எம்பெருமான் வருகைக்குடலாக க்ருஷி பண்ணுகையும் அவன் வரக்கொள்ள அவனை யுபேக்ஷிக்கையுமாகிற பரஸ்பர விருத்த ஸ்வபாவங்களை விளைக்குப்படியையிறே சொல்லிற்று; இப்படி பக்தியானது ஸ்வாவஸ்தா விசேஷங்களாலே சேதநர்க்கு விளைக்கும் பரஸ்பர விருத்த ஸ்வபாவங்கள் தத்விஷய மாத்ரத்திலன்றிக்கே தத்ஸம்பந்தி வஸ்துக்கள் விஷயமாகவும் காணலாமென்கிறார் மேல் (இந்த என்று தொடங்கி).

**விளக்கம்** - கடந்த சூர்ணையில், "தன்னைப் பேணுவும் பண்ணும் தரிக்கவும் பண்ணும்" என்று கூறுவதன் மூலம் ஸர்வேச்வரன் வருவதற்காகச் செய்யவேண்டிய முயற்சிகள் அனைத்தையும் செய்தபடி இருத்தலும், அப்படி அவன் வந்தபோது அவன் தாமதமாக வந்தான் என்று அவனை வெறுப்பதுமான முரண்பட்ட செயல்களைப் பக்தியானது

உண்டாக்கும் தன்மையை அருளிச்செய்தார். இப்படிப்பட்ட பக்தியானது தனது நிலை மாறுபாடு காரணமாக நமக்கு உண்டாகும் முரண்பட்ட நிலைகள் எம்பெருமான் விஷயத்தில் மட்டுமே அல்ல, அவன் தொடர்புடைய பொருள்கள் விஷயத்திலும் ஆக்கிவிடுவதை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (இந்த ஸ்வபாவ விஷயங்கள்) என்று – கீழ்ச் சொன்னவை தன்னையே சொல்லுகிறதன்று, இப்படிப்பட்ட ஸ்வபாவ விசேஷங்களென்றபடி. அவையாவன – அநுபாவ்ய விஷய மொருபடிப்பட்டிரா நிற்கச்செய்தே, அத்தை யநுபவிக்கிறவர்களுக்கு தாரகமாய்த் தோற்றுகையும், பாதகமாய்த் தோற்றுகையும். (கல்யாண குணங்கள்) இத்யாதி. "கோவிந்தன் குணம் பாடி யாவி காத்திருப்பேனே" என்று தாரகமாகவும், "வல்வினையேனையீர்க்கின்ற குணங்களையுடையாய்" என்று பாதகமாகவும் சொல்லுகையாலே – கல்யாண குணவிஷயமாகவும்; "சரங்களாண்ட தண்டாமரைக் கண்ணனுக்கனறியென் மனந்தாழ்ந்து நில்லாதே" என்று தாரகமாகவும், "சரங்களே கொடிதாயடுகின்ற" என்று பாதகமாகவும் சொல்லுகையாலே – திருச்சர விஷயமகவும்; "திருமாலைப் பாடக் கேட்டு மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே" என்று தாரகமாகவும், "கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்" என்று பாதகமாகவுஞ் சொல்லுகையாலே – திருநாம விஷயமாகவும்; "எங்களுக்கேயொருநாள் வந்தூதவுன் குழலின்னிசை போதராதே" என்று தாரகமாகவும், "அவனுடைத் தீங்குழலீருமாலோ" என்று பாதகமாகவும் சொல்லுகையாலே திருக்குழலோசை விஷயமாகவும் காணலாமென்றபடி.

**விளக்கம்** – "இந்த ஸ்வபாவ விசேஷங்கள்" என்பதன் மூலம் கடந்த சூர்ணையில் கூறப்பட்டவையே மீண்டும் இங்கு விசேஷங்கள் – என்பதைக் கூறுகிறார். இத்தகைய விசேஷங்கள் என்னவென்றால் – அனுபவிக்கப்படுகின்ற பொருளானது ஒரே தன்மையுடன் இல்லாமல் இருத்தலும், அந்த ஒரு பொருளே நன்மை அளிப்பதாகவும் தீமை என்ற தோற்றத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளது - என்பதாகும். "கல்யாண குணங்களிலும்" என்பதன் மூலம்: நாச்சியார் திருமொழி (8-3) – கோவிந்தன் குணம் பாடி யாவி காத்திருப்பேனே – என்று அவன் திருக்குணங்கள் தனக்கு உயிர் வாழ்வதற்குத் தேவையான ஒன்றாக உள்ளதையும்; திருவாய்மொழி (8-1-8) – வல்வினையேனை யீர்க்கின்ற குணங்களையுடையாய் – என்று அந்தக் குணங்களே தன்னை பித்துப்பிடித்து

நாசம் செய்வதாக உள்ளதையும் கூறுவதால் – கல்யாண குண விசேஷமாகவும்; “திருச்சரங்களிலும்” என்பதன் மூலம்: பெரியதிருமொழி (7-3-4) - சரங்களாண்ட தண்டாமரைக் கண்ணனுக்கனறியென் மனந்தாழ்ந்து நில்லாதே – என்று அவனது அம்புகளே தான் உயிர்வாழக் காரணமாக உள்ளதையும், பெரியதிருமொழி (10-2-9) - சரங்களே கொடிதாயடுகின்ற – என்று அந்த அம்புகளே தனக்குத் தீமை ஏற்படுத்துவதாக உள்ளதையும் கூறுவதால் – திருச்சரங்கள் விஷயமாகவும்; “திருநாமங்கள்” என்பதன் மூலம்: திருநெடுந்தாண்டகம் (14) – திருமாலைப் பாடக் கேட்டு மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே – என்று அவனது திருநாமங்களே தான் தரிப்பதற்குக் காரணமாக உள்ளதையும், திருவாய்மொழி (9-5-8) – கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர் - என்று அந்தத் திருநாமங்களே தனக்குப் பாதமாக உள்ளதையும் கூறுவதால் – திருநாமங்கள் விஷயமாகவும்; “திருக்குழல் ஓசையிலும்” என்பதன் மூலம்: பெருமாள் திருமொழி (6-9) – எங்களுக்கேயொருநாள் வந்தூதவுன் குழலின்னிசை போதராதே – என்று அவனது குழல் ஓசை மட்டுமே தாங்கள் உயிர் வாழக் காரணமாக உள்ளதையும், திருவாய்மொழி (9-8-5) - அவனுடைத் தீங்குழலீருமாலோ – என்று அந்தக் குழல் ஓசையே தன்னை அழிப்பதாகவும் கூறுவதால் – திருக்குழல் ஓசை விஷயமாகவும் காணலாம் (அதாவது நமது பக்தி காரணமாக அவன் மட்டுமே முரண்பட்ட தன்மை உடையவனாக நமக்குத் தோன்றுகிறான் என்பது மட்டும் அல்ல, அவனுடன் தொடர்புடைய பலவும் அவ்விதமே உள்ளதைக் காணலாம் என்றார்).

**வ்யாக்யானம்** - என்றுமொக்க போக்யங்களாயிருந்துள்ள கல்யாண குணாதிகள் தாரகமாய்த் தோற்றுவது, பாதகமாய்த் தோற்றுவதாகிறது - அது போக்தாக்களான விவர்களுடைய ப்ரேம ஸ்வபாவ விசேஷங்களாலேயிறே; அல்லது குணாதிகளின் ஸ்வரூப பேதத்தாலன்றே. ஆகையால், பக்த்யவஸ்தாபேத ஜநிதங்களான ஸ்வபாவ விசேஷங்கள் இவ்வோ வஸ்துக்கள் விஷயமாகவுங் காணலாமென்கிறது. குணாதிகள் தாரகங்களாகவும் பாதகங்களாகவும் பேசுகிறவிடத்தில் இரண்டுமொருவர் பேச்சன்றிக்கே யிருந்ததேயாகிலும், ஆழ்வார்களெல்லாரும் ஏக ப்ரக்ருதிகளாகையாலும், எல்லாருடைய பக்தியும் பகவத் ப்ரஸாத லப்தையான பரபக்தியாகையாலும், அந்த பக்தி ஸ்வபாவ விசேஷங்கள் காட்டுகிற மாத்ரமே யிவ்விடத்தி லபேக்ஷிதமாகையாலே விரோதமில்லை. “சரங்களே கொடிதாயடுகின்ற” என்கிறவிது பராஜித ராக்ஷஸர் பாசுரமன்றோ, அத்தை, “சரங்களாண்ட” என்கைக்கு ப்ரதிகோடியாகச் சொல்லலாமோ வென்னில்; ராமவிஜயம்

தமக்கிஷ்டமாகையாலே, அந்த விஜயத்துக்கிலக்காய், தோற்ற ராக்ஷஸர் தசைபிறந்து, பிராட்டிமார் தசை பிறந்து போசுமாப் போலே தாமான தன்மை தோற்றாதே தோற்ற ராக்ஷஸர் பாசுரத்தாலே விஜயத்தைப் பேசியநுபவிக்கிறா ரென்றிறே இத்திருமொழிக்கு வ்யாக்யாநம் பண்ணியருளுகிற வாசார்யர்களருளிச்செய்வது. ஆகையால் தம்முடைய ப்ரேம ஸ்வபாவத்தாலே ததஸ்தாபந்நமான பின்பு திருச்சரங்கள் பாதகமாய்த்ததும் தமக்கேயாய்த் தோற்றிப் பேசுகையாலே அப்படி சொல்லக் குறையில்லை.

**விளக்கம்** - எப்போதுமே இன்பம் அளிக்கவல்லதாக உள்ள அவனது திருக்கல்யாண குணங்கள் உள்ளிட்ட பலவும் நன்மை அளிப்பதாகவும் உயிர் வாழ இன்றியமையாதவை எனவும் தோன்றுவதும், அதே பொருள்கள் தீமை அளிப்பதாகத் தோன்றுவதும் எப்படி? அது அனுபவிப்பவர்களின் ப்ரேமை எத்தகையது என்பதன் அடிப்படையில் அமைகின்றது. இவ்விதம் அல்லாமல், முரண்பாடாக உள்ள தன்மை என்பது திருக்கல்யாணகுணங்கள் முதலானவற்றின் தன்மைகளில் உள்ள வேறுபாடுகளால் அல்ல. ஆகவே பக்தியின் நிலைகளில் உள்ள வேறுபாடுகள் காரணமாக உண்டாகும் செயல் விசேஷங்கள் இப்படிப்பட்ட பல பொருள்களின் விசேஷங்களாகப் பிரதிபலிப்பதைக் காணலாம் என்கிறார். மேலே உள்ள எடுத்துக்காட்டுகளில், திருக்கல்யாண குணங்கள் போன்ற பலவும் நன்மை அளிப்பதாகவும், தீமை அளிப்பதாகவும் கூறப்பட்டபோதிலும் அங்குள்ள இரண்டுவிதமான பாசுரங்களை (நன்மை அளிப்பதைக் கூறும் பாசுரம், தீமை அளிப்பதைக் கூறும் பாசுரம்) ஒருவரே அருளிச்செய்யவில்லையே என்று கேள்வி கேட்கலாம் (அதாவது ஒருவரே இரண்டையும் கூறியிருந்தால் முரண்பட்ட தன்மைகள் வெளிப்படும். ஆனால் இருவர் கூறியதால், ஒருவருக்கு நன்மை அளிக்கும் பொருள் மற்றவருக்குத் தீமை அளிக்கலாமே என்பது இயல்பான சந்தேகத்தின் அடிப்படையில் எழும் கேள்வி). இந்தச் சந்தேகம் எழ அவசியமே இல்லை – காரணம், ஆழ்வார்கள் அனைவரும் ஒரே தன்மை உள்ளவர்கள், அவர்கள் அனைவரது பக்தி என்பது எம்பெருமானின் கடாக்ஷம் காரணமாக உண்டான பரபக்தியே ஆகும் – எனவே பக்தியின் தன்மை குறித்து மட்டுமே இங்கு கூறப்படுவதால் எந்தவிதமான முரண்பாடும் இல்லை என்றாகிறது. பெரியதிருமொழி (10-2-9) – சரங்களே கொடிதாயடுகின்ற – என்று கூறப்படும் பாசுரம் இராமனிடம் தோற்றுப்போன அரக்கர்கள் கூறுவது அல்லவோ? இதனை எவ்விதம் பெரியதிருமொழி (7-3-4) – சரங்களாண்ட - என்ற பாசுரத்திற்கு முரண்பட்ட தன்மை அளிக்கிறது என உரைக்க இயலும் (அதாவது நன்மை அளிப்பதாகக்

கூறுவதும், தீமை அளிப்பதாகக் கூறுவதும் பக்தியினால் கட்டுண்டவன் அல்லவோ கூறவேண்டும்?). அதாவது இராமனின் வெற்றி என்பது தனக்கு விருப்பமான ஒன்று என ஆழ்வார் உள்ளார். இதன் காரணமாக இவர் செய்தது என்னவென்றால் – நாயகி பாவத்தை எடுத்துக்கொண்டு பேசுவது போன்று இங்கு இவர் அரக்கர்களின் பாவத்தை எடுத்துக்கொண்டு, தான் பேசுவது போன்று அல்லாமல், தோற்றுப்போன அரக்கர்கள் மூலமாக வெற்றியைக் கூறி அனுபவிக்கிறார் என்று கருத்து – இப்படி அல்லவோ இந்தத் திருமொழிக்கு நமது பூர்வர்கள் வ்யாக்யானம் இட்டனர்? எனவே தனக்குப் பெருகி நின்ற ப்ரேமை காரணமாக, அந்த அரக்கர்களின் நிலையில் நின்று, அவர்களுக்குத் தீமை செய்யும் அம்புகள் தனக்கும் தீமையே செய்தன என்று மயங்கிப் பேசுவதால் இங்கு எந்த வ்ரோதமும் இல்லை.

**வ்யாக்யானம்** – அதவா, (தன்னைப் பேணவும் பண்ணும் தரிக்கவும் பண்ணும்) என்ற விவையிரண்டாலும் அவன் தானே வருமளவும் தரியாமல் வரவுக்குடலாக யத்நிக்கப் பண்ணுவது, வரக்கொள்ள ப்ரணயரோஷத்தாலே தள்ளித் தரித்திருக்கப்பண்ணுவதாம் படியையிறே சொல்லிற்று; இப்படி விருத்த ஸ்வபாவங்களை யொன்றுதானே செய்கிறார் (இந்த) என்று தொடங்கி. அதாவது - இப்படிப்பட்ட ஸ்வபாவ விசேஷங்கள், "கோவிந்தன் குணம்பாடி" என்று தொடங்கி கீழ்சொன்னபடியே ஒரு தசையிலே தாரகமாகப் பேசுவது, ஒரு தசையிலே பாதகமாகப் பேவதாம்படி, இவர்களுக்கு தரிப்பும் பாதையுமாகிற விருத்த ஸ்வபாவங்களை விளைக்கிற கல்யாணகுணாதிகளிலேயுங் காணலாமென்கை. ஆக, (ப்ரபத்திக்கு) என்று தொடங்கி இவ்வளவாக – ப்ரபத்தி வைபவத்தையும்; தத்விஷய வைபவத்தையும், தத்திகாரி த்ரைவித்யத்தையும், த்ரிவித ப்ரபத்தியிலும் பக்திபாரவச்ய ஹேதுக ப்ரபத்தியினுடைய முக்க்யத்தையும், அது தனக்கு ஸ்வ ஹேதுபூத பக்த்யவஸ்தா பேதத்தால் வரும் குலைதலையும், அந்த பக்த்யவஸ்தாபேதஞ் செய்விக்கு மம்சங்களையு மருளிச்செய்தார்.

**விளக்கம்** - அல்லது கடந்த சூர்ணையான "தன்னைப் பேணவும் பண்ணும் தரிக்கவும் பண்ணும்" என்பதற்கு இங்கு வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். கடந்த சூர்ணையில் கூறப்பட்ட பொருள் – அவன் தானாகவே தன்னைத் தேடி வரும்வரை பொறுத்துக்கொள்ள இயலாமல், அவன் விரைந்து வரும் பொருட்டு தானே சில முயற்சிகளில் ஈடுபடுவதும்; அவன் தாமதமாக வந்த காரணத்தால் அவனை வெறுத்து

ஒதுக்குவது போன்று செய்வதும் – என்பதாகும். இப்படிப்பட்ட மாறுபட்ட தன்மைகளை ஏற்படுத்தும் பொருள் ஒன்றுதான் இருக்க இயலும்; இதனை ஏற்படுத்தும் வேறு பொருள்களும் உள்ளனவோ, இந்தத் தன்மையை வேறு பொருள்களிலும் காணலாமோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். இப்படிப்பட்ட நிலைமாறுபாடுகள் "கோவிந்தன் குணம்பாடி" என்று தொடங்கி மேலே கூறியபடி ஒரு நிலையில் இவர்களுக்கு நன்மை அளிப்பதற்குக் காரணமாகவும், மற்றோரு நிலையில் இவர்களுக்குத் தீமை அளிப்பதற்குக் காரணமாகவும் உள்ளது என்று பேசும்படிச் செய்கின்ற தன்மை; அதாவது இவர்களுக்கு இன்பமும் துன்பமும் என்பதான மாறுபட்ட நிலைகளை ஏற்படுத்தும் தன்மை – இவற்றைத் திருக்கல்யாண குணங்கள் போன்றவற்றிலும் காணலாம் என்கிறார் - எனவும் பொருள் கூறலாம். ஆகவே "ப்ரபத்திக்கு" என்றுள்ள சூர்ணை 37 தொடங்கி, இந்தச் சூர்ணை முடிய கீழே உள்ள பலவற்றையும் அருளிச்செய்தார்.

- ப்ரபத்தியின் பெருமை
- ப்ரபத்தி செய்யும் வஸ்துவின் (ப்ரபத்திக்கு இலக்கான அர்ச்சை) மேன்மை
- ப்ரபத்தி செய்கின்ற அதிகாரிகளின் மூன்றுவிதமான பிரிவுகள்
- மூன்று வகையான அதிகாரிகள் செய்யும் ப்ரபத்தியில் பக்தியின் அடிப்படையில் உள்ள ப்ரபத்தியே உயர்ந்தது என்றும், அத்தகைய ப்ரபத்தியே முக்கியம் என்றும் கூறுதல்
- அத்தகைய ப்ரபத்தி ஏற்படுவதற்குக் காரணமாகத் தன்னிடம் உள்ள பக்தியால் தனக்கு உண்டாகும் நிலைகுலைதல்
- பக்தி நிலை வேறுபாடுகளால் ஏற்படும் மாற்றங்கள்.

54. இது தன்னைப் பார்த்தால் பிதாவுக்குப் புத்ரனெழுத்து வாங்குமாபோலேயிருப்பதொன்று.

**அவதாரிகை** - இப்ப்ரபத்தி தனக்கு (தர்மபுத்ராதிகளும்) என்று தொடங்கி கீழுக்தரானவதிகாரிகள் பக்கலிலே ஸாதநதயா அநுஷ்டாநம் காண்கையாலும், கர்ம ஜ்ஞாந பக்தி ப்ரபத்திகளென்று உபாயங்களோடே ஸஹபடிதமாய்ப் போருகையாலும் "யத் யேந காமகாமேந நஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந

நச பக்தித: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே புந: தேந தேநாப்யதே தத்தந்ந்யா ஸேநைவ மஹாமுநே பரமாத்மாச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம:" என்றும், "இதம் சரணமஜ்ஞாநாம்" என்றும் இப்படியே சாஸ்த்ரங்களித்தை ஸாதநாமாகச் சொல்லுகையாலும் உபாயத்வ ப்ரதிபத்தி யோக்யதை யுண்டாகையாலே, அத்தை வ்யாவர்த்திக்கைக்காக அதுக்குடலான பலவற்றையுமருளிச் செய்கிறார் மேல்; அதில் ப்ரதமத்திலே, இப்ப்ரபத்தியை யுபாயமாகக் கொண்டால் வருமவத்யத்தை தர்சிப்பிக்கிறார் "இது தன்னை" என்று தொடங்கி.

**விளக்கம்** – கீழே உள்ள பல காரணங்களால் ப்ரபத்தி என்பதை உபாயமாக எண்ணி விடக்கூடிய நிலை ஏற்படும்:

- சூர்ணை 32ல் கூறப்பட்ட தர்மபுத்திரர் முதலான அதிகாரிகளிடம் ப்ரபத்தியைச் சாதனமாகக் கொண்ட செயல்பாடு காணப்படுகிறது.
- கர்மம், ஞானம், பக்தி, ப்ரபத்தி என்று ப்ரபத்தியானது மற்ற உபாயங்களுடன் சேர்த்துப் பேசப்படுகிறது.
- லக்ஷ்மீதந்திரம் - யத் யேந காமகாமேந நஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந நச பக்தித: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே புந: தேந தேநாப்யதே தத்தந்ந்யா ஸேநைவ மஹாமுநே பரமாத்மாச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம: – ஐச்வர்யத்தை விரும்பும் யாரால் எந்த ஓர் ஐச்வர்யம் மற்ற சாதனங்களால் பெற இயலாமல் உள்ளதோ அது ப்ரபத்தியினால் பெறத் தக்கது; எந்த ஒரு முமுக்ஷுவால் மீண்டும் திரும்புதல் இல்லாமை என்ற இடமான பரமபதமானது கர்மயோகம் போன்றவற்றால் பெற இயலாமல் உள்ளதோ அந்த இடம் ப்ரபத்தியினால் அடையப்படுகிறது; கைவல்யத்தை விட உயர்ந்த பரமாத்ம அனுபவம் ப்ரபத்தியில் கிட்டுகிறது.

- லக்ஷ்மீ தந்திரம் – இதம் சரணமஜ்ஞாநாம் – அறிவற்றவர்களுக்கும் இந்த ப்ரபத்தியே உபாயம்

ஆக மேலே உள்ள பல வரிகளின் மூலம் ப்ரபத்தியை ஓர் உபாயமாக எண்ணிவிடக்கூடிய வாய்ப்பு உள்ளது. இந்த எண்ணத்தை நீக்கும் பொருட்டு மற்ற பலவற்றையும்

விளக்குகிறார். இப்படியாக விளக்கவுள்ள பலவற்றில், முதலில் ப்ரபத்தியை உபயமாக எண்ணினால் வரும் குற்றத்தை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ”இது தன்னைப் பார்த்தால்” என்றது இச்சேதனீச்வர விஷயத்தில் பண்ணுமிப்ப்ரபத்தி தன்னையுபாயமென்னப் பார்த்தாலென்றபடி. ஈச்வரன் தன்னை ரக்ஷிக்கைக்கு ஹேதுவாக விச்சேதநன் பண்ணும் ப்ரபத்தி தன்னை நிரூபித்தால் என்றிங்ஙனே அநத்யாஹாரேண யோஜிக்கவுமாம்; அப்போதும் அர்த்த மொக்குமிறே.

**விளக்கம்** – “இது தன்னைப் பார்த்தால்” – சேதனர்கள் எப்பெருமானிடம் செய்கின்ற ப்ரபத்தியை ஓர் உபாயம் என்று கூறினால் – என்று பொருள். மேலும், எம்பெருமான் தங்களைக் காப்பாற்றுவதற்கான உறுப்பாகவே சேதனர்கள் இந்த ப்ரபத்தியைக் செய்கின்றனர் என்று ப்ரபத்தியை நிரூபிக்கும்போது “உபாயம்” என்ற சொல்லை எடுத்தாள வேண்டிய அவசியம் இல்லாமலேயே கூற இயலும். அப்போதும் இதே கருத்து வெளிப்படும்.

**வ்யாக்யானம்** – ”பிதாவுக்குப் புத்ரனெழுத்து வாங்குமாப்போலே யிருப்பதொன்று” என்றது உத்பாதகனாகையாலே ஹிதைஷியாய் தானறியாத தசையிலும் தன்னை ரக்ஷித்துக் கொண்டுபோரும் தமப்பனுக்கு, புத்ரனானவன், தானறிந்த தசையிலே என்னை நீ ரஷிக்கவேணும் என்றெழுத்து வாங்கினால், இரண்டு தலைக்குமுண்டான உறவுக்குக் கொத்தையாமாப்போலே, ஸத்தாகாரணபூதனாய் ஸர்வதசையிலும் ரக்ஷகனாய்க் கொண்டு போருகிற அகாரவாச்யனான ஸர்வேச்வரனுக்கும் மகாரவாச்யனான விவனுக்கு முண்டான ஸம்பந்தத்துக் கவத்யகர மென்றபடி. ”எழுத்து வாங்குகையாவது” ரக்ஷகன் பேரைத் தன் மார்பிலே யெழுதிக் கொள்ளுகை.

**விளக்கம்** - “பிதாவுக்குப் புத்ரனெழுத்து வாங்குமாப்போலே யிருப்பதொன்று” – தன்னை இந்த உலகத்தில் உண்டாக்கியவன் என்பதால் தனது நலத்தை எப்போதும் எண்ணியவனக, தான் ஏதும் அறியாத பருவத்தில் இருந்தபோதிலும், ஒரு மகன் தந்தையிடம் “என்னைப் நீ பாதுகாக்க வேண்டும்” என்று வளர்ந்த பிறகு எழுதி வாங்கிக் கொள்வானோ? அப்படி எழுதி வாங்கிக் கொண்டால் அந்த இருவருக்கும் இடையே உள்ள உறவு என்பது கொச்சையாகிவிடாதோ? இது போன்று நாம் அனைவரும்

“இருக்கிறோம்” என்று கூறும்படியாக நம்மை வைப்பதற்குக் காரணமாக உள்ளவனும், அனைத்து நிலையிலும் நமக்குப் பாதுகாப்பாக உள்ளவனும், ப்ரணவத்தில் உள்ள ”அ” என்ற எழுத்தின் பொருளாக உள்ளவனும் ஆகிய எம்பெருமானை அடையும் உபாயமாக ப்ரணவத்தில் உள்ள “ம” என்ற எழுத்தின் பொருளான ஜீவன், ப்ரபத்தியைக் கைக்கொண்டால் (உபாயம் என்று கைக்கொண்டால்) இந்த இருவருக்கும் இடையே உள்ள ஸம்பந்தத்திற்கு (ரக்ஷகன், ரக்ஷிக்கப்படுபவன்) குற்றமே உண்டாகும். ”எழுத்து வாங்குகை” என்றால் தனக்குத் தொடர்பு இல்லாமல் நம்மைக் காப்பாற்றுபவன் பெயரை, தான் தொடர்பு இல்லாமல் காப்பாற்றப்பட்டதால் மார்பில் எழுதிக்கொள்ளுதல்.

55. இது தனக்கு ஸ்வரூபம் தன்னைப் பொறாதொழிகை.

**அவதாரிகை** - ஆனால் இது தனக்கு ஸ்வரூபமேதென்ன வருளிச்செய்கிறார் (இது தனக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – இந்த ப்ரபத்தியின் தன்மை என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இது தனக்கு ஸ்வரூபம்) என்றது - இப்ப்ரபத்தி தனக்கு அஸாதாரணாகாரமென்றபடி (தன்னைப் பொறாதொழிகையாவது) - உபாயவரணாத்மகமான தன்னை உபாயமென்ன ஸஹியாதபடியாயிருக்கை. அதாவது - ஆபாதப்ரதீதியி லொழிய உள்ளபடி நிரூபித்தால் ஸ்வஸ்மிந்நுபாயத்வ ப்ரதிபத்திக்கு யோக்யமாகமாட்டாதபடியிருக்கை யென்றபடி. அன்றிக்கே, (தன்னைப் பொறாதொழிகை) என்கிறவிடத்தில், உபாயத்வேந ப்ரதீதமான தன்னைப் பொறாதொழிகையென்று அநத்யாஹாரேண யோஜிக்கவுமாம்; இப்படி சொன்னாலும், ஸ்வஸ்மிந் நுபாயத்வப்ரதிபத்த் யஸஹத்வமே பொருளாமிறே.

**விளக்கம்** – ”இது தனக்கு ஸ்வரூபம்” என்றால் “இந்த ப்ரபத்திக்கே உரிய சிறப்புத்தன்மை” என்று பொருள். ”தன்னைப் பொறாதொழிகையாவது” என்றால் – உபாயமாக உள்ள (தன்னை) ப்ரபத்தியை உபாயம் என்று கூறினால், அப்படிக் கூறுவதைத் தாங்க இயலாத தன்மை என்று பொருள். ஆபாதப் பிரதீதி தவிர (ஆபாத ப்ரதீதி என்றால் ஒன்றை நன்றாக

உணர்ந்து அறிவதற்கு முன்பாக, அதனைப் பற்றிக் கேட்பதன் மூலம் உண்டாகும் ஞானம்) உள்ளபடி நிரூபித்தால் தன்னிடம் உபாயமாகும் தன்மை உள்ளது என்று சிந்தனையை ப்ரபத்தி ஏற்படுத்தாமல் இருப்பதாகும் (ப்ரபத்தியைப் பற்றி நன்கு உணர்ந்து அறிந்த பின்னர், அது உபாயம் அல்ல என்ற எண்ணம் உண்டாகும்; இந்த எண்ணத்தை ப்ரபத்தியே உண்டாகும்). அல்லது "தன்னைப் பொறாதொழிகையாவது" என்பதற்கு வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். உபாயமாகத் தோற்றம் அளிக்கவல்லபோதும் தன்னை உபாயமாக எண்ணுவதைப் பொறாது எனலாம். இப்படியாக அநத்யாகாரமாகப் பொருள் உரைக்கலாம் (ஒன்றை விளக்க மற்ற எதனையும் கூறாமல் அங்குள்ளவற்றை மட்டுமே கூறி விளக்குதல்). இப்படியாக விளக்கும் போதும் தன்னை உபாயம் என்று எண்ணுவதைப் பொறாது ஒழிகை என்று கொள்ளவேண்டும்.

56. அங்கம் தன்னையொழிந்தவற்றைப் பொறாதொழிகை.

**அவதாரிகை** - சரமச்லோகத்தில் இத்தை ஸாங்கமாக விதிக்கையாலே "யத் யத் ஸாங்கம் தத்தத் ஸாதநம்" என்கிற ந்யாமிதுக்கும் வாராதோவென்ன; அங்க ஸ்வரூபத்தை தர்சிப்பிக்கவே அந்த ந்யாயமிங்குவாராதென்று பார்த்து, இது தன்னையருளிச் செய்கிறார் (அங்கம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - சரமச்லோகம் இத்தகைய ப்ரபத்தி என்பதை அங்கமாக விதிக்கிறதே. ஆகவே, "எது அங்கத்துடன் உள்ளதோ அது உபாயம்" என்ற ந்யாயத்தின்படி ப்ரபத்தி உபாயம் ஆகிவிடாதோ? ஆகாது. "அங்கத்தின் தன்மை இதற்குக் கூறியதால் மட்டுமே இதற்கு அந்த ந்யாயம் பொருந்தாது" என்கிறது. அந்த அங்கத்தை இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (தன்னை யொழிந்தவற்றைப் பொறாதொழிகையாவது) - ஸ்வீகாரரூபமான தன்னையொழிந்த சேதந ப்ரவ்ருத்திகளி லொன்றையும் ஸஹியாதபடி யிருக்கை. ஸாதநரூப ஸகல ப்ரவ்ருத்திகளினுடையவும் ஸவாஸநத்யாகமிறே யிதுக்கங்கம். "யத்யத் ஸாங்கம்" என்கிறவிடத்தில், ப்ரவ்ருத்தி ரூபாங்க ஸஹிதமானவற்றையிறே ஸாதநமாகச் சொல்லுகிறது; அப்படியன்றிக்கே, இதினுடைய வங்கம் நிவ்ருத்தி ரூபமாகையாலே; இது தானே யிதினுடைய வநுபாயத்வ ஸூசகமென்று கருத்து.

**விளக்கம்** – ”தன்னை யொழிந்தவற்றைப் பொறாதொழிகையாவது” என்பதன் மூலம் - எம்பெருமானைப் பற்றவேண்டும் என்ற நோக்கத்துடன் மக்கள் செய்கின்ற செயல்களில் தன்னைத் தவிர மற்ற எதனையும் ஏற்றுக் கொள்ள இயலாமல் இருப்பதே ப்ரபத்திக்கு அங்கமாக உள்ளது. ஆனால் சாதனம் என்ற பெயர் கொண்ட அனைத்தையும் அவற்றின் வாஸனையுடன் கைவிடுவது அல்லவோ ப்ரபத்திக்கு அங்கம் என்ற கேள்வி எழலாம். யத்யத் ஸாங்கம் என்னும்போது செயல் ரூபமாக உள்ள அங்கத்துடன் கூடியவற்றையே ஸாதனம் என்பர். ஆனால் ப்ரபத்தியின் அங்கம் என்பது செயல்களைச் செய்யாமல் இருப்பது என்ற காரணத்தினால் இந்த ப்ரபத்தி என்பது அந்த ந்யாயத்தின்படி ஸாதனம் (உபாயம்) ஆகாது என்று கருத்து.

## 57. உபாயம் தன்னைப் பொறுக்கும்.

**அவதாரிகை** - இதினுடைய வநுபாயத்வத்தை த்ருடீகரிக்கைக்காக ஸித்த ஸாத்யோபாயங்களின்படிகளைச் சொல்லி, அவையிரண்டையும் பற்ற விதுக்குண்டான வ்யாவ்ருத்தியையருளிச் செய்கிறார் (உபாயம்) என்று தொடங்கி, (பொறாது) என்னுமளவாக.

**விளக்கம்** – இத்தகைய ப்ரபத்தி என்பது உபாயம் ஆகாது என்பதை விளக்கும் பொருட்டு ஸித்தோபாயத்தின் (எம்பெருமானின்) தன்மை மற்றும் ஸாத்யோபாயத்தின் தன்மை (பக்தி, மனிதர்கள் மூலம் செய்யப்படுவது) ஆகிய இரண்டையும் கூறுகிறார். மேலும் இவற்றின் இடையே உள்ள வேறுபாட்டினையும் அருளிச்செய்கிறார்

**வ்யாக்யானம்** - (உபாயம் தன்னைப் பொறுக்கும்) என்றது - ஸித்தோபாயமான ஸர்வேச்வரன் இஷ்டாநிஷ்ட ப்ராப்தி பரிஹாரங்களிரண்டுக்கும் ஸ்வயமேவ நிர்வாஹகனா கையாலே, தன்னை யுபாயமென்றால் அதுக்குத் தகுதியாயிருக்கு மென்றபடி ”உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம் நது குணௌ” என்று உபேயத்வத்தோ பாதி வஸ்துவுக்கு ஸ்வரூபமாயிறே உபாயத்வமுமிருப்பது. ”யேச வேதவிதோ விப்ரா யோசாத்யாத்மவிதோ ஜநா: தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம்”, “சரண்யம் சரணஞ்ச த்வாமாஹுர் திவ்யா மஹர்ஷய:”, ”அம்ருதம் ஸாதநம் ஸாத்யம் ஸம்பச்யந்தி மநீஷிண:” என்னக்கடவதிறே – (தன்னைப் பொறுக்கும்) என்கிற

விவ்வளவே சொல்லிவிடுகையாலே – தன்னை யொழிந்தவற்றைப் பொறாமை அர்த்தாத் ஸித்தம். இந்த ஸித்தோபாயம் ஸஹாயாந்தர ஸம்ஸர்க்காஸஹமாயிறே யிருப்பது, “இவ்வுபாய விசேஷம் ஸ்வவ்யதிரிக்தமா யிருப்பதொன்றை ஸஹியாமை யாலேயிறே அநுகூல்ய ஸங்கல்பாதிகளுக் குபாயாங்கத்வமன்றிக்கே, அவகாத ஸ்வேதம் போலே ஸம்பாவித ஸ்வபாவத்வமுண்டாகிறது” என்று இவ்வர்த்தத்தை பரந்தபடியிலே இவர்தாமே யருளிச்செய்தாரிறே.

**விளக்கம்** - “உபாயம் தன்னைப் பொறுக்கும்” என்பதன் மூலம் ஸித்தோபாயமாக உள்ள ஸர்வேச்வரன் தன்னை அண்டியவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுதல், அவர்களுக்கு எது விருப்பம் இல்லையோ அவற்றை விலக்குதல் ஆகிய இரண்டையும் செய்கிறான். இதன் காரணமாக, “எம்பெருமான் உபாயம்” என்று கூறினால், அவ்விதம் கூறப்படுவதற்கான தகுதி முழுவதும் கொண்டவனாக இருக்கிறான். இதனை ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் – உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம் நது குணௌ - உபாயம் மற்றும் உபேயமாக உள்ள தன்மை ஆகிய இரண்டும் உனக்கு ஸ்வரூபங்கள்; அவை உனக்கு வந்த ஏறிய குணங்கள் அல்ல - என்கிறார். ஆக உபேயமாக உள்ள தன்மை போன்றே உபாயமாக உள்ள தன்மையும் எம்பெருமானின் ஸ்வரூபம் ஆகும். கீழே உள்ள வரிகள் காண்க:

- யேச வேதவிதோ விப்ரா யோசாத்யாத்மவிதோ ஜநா: தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம் – எந்த அந்தணர்கள் வேதம் அறிந்தவர்களாக உள்ளனரோ, எந்த மனிதர்கள் வேதாந்தம் அறிந்தவர்களோ அப்படிப்பட்டவர்கள் க்ருஷ்ணனையே எப்போதும் உள்ள மோக்ஷ ஸாதனம் என்று கொள்கின்றனர்.

- சரண்யம் சரணஞ்ச த்வாமாஹுர் திவ்யா மஹர்ஷய: – உன்னைக் காப்பாற்றுபவன் என்றும், உபாயம் என்றும் மஹரிஷிகள் கூறுகின்றனர்.

- அம்ருதம் ஸாதநம் ஸாத்யம் ஸம்பச்யந்தி மநீஷிண: - அனைத்தும் அறிந்தவர்கள் எம்பெருமானையே உபாயம் மற்றும் பலன் என்று காண்கின்றனர்.

ஆக இங்கு “தன்னை” என்று மட்டுமே கூறி நிறுத்தி வருவதால், “தன்னைத் தவிர மற்ற ஸாதனங்களை இவன் பொறுத்துக் கொள்வதில்லை” என்பது தெளிவாகிறது. இப்படிப்பட்ட ஸித்தோபாயம் என்பது மற்ற ஸாதனங்களின் சேர்க்கை என்பதைப் பொறுத்துக் கொள்ளாமல் உள்ளதாகும். இதனைப் பரந்தபடியில் - இவ்வுபாய விசேஷம் ஸ்வவ்யதிரிக்தமா யிருப்பதொன்றை ஸஹியாமை யாலேயிறே அநுகூல்ய ஸங்கல்பாதிகளுக் குபாயாங்கத்வமன்றிக்கே, அவகாத ஸ்வேதம் போலே ஸம்பாவித ஸ்வபாவத்வமுண்டாகிறது - இப்படிப்பட்ட ஸித்தோபாயமான எம்பெருமான் தன்னைத் தவிர மற்ற உபாயங்கள் எதனையும் பொறுத்துக்கொள்வதில்லை; இதனால் தான் நன்மை செய்தல் போன்ற பலவற்றையும் தனக்கு அங்கமாக வந்து ஏறிய தன்மை போன்று அல்லாமல், அவற்றைத் தனது ஸ்வரூபமாகவே கொண்டுள்ளான் - என்றது காண்க.

## 58. உபாயாந்தர மிரண்டையும் பொறுக்கும்.

**வ்யாக்யானம்** – (உபாயாந்தர மிரண்டையும் பொறுக்கும்) என்றது - ஸித்தோபாயேதரமான ஸாத்யோபாயம், ஸ்வபாரதந்த்ர்ய ஜ்ஞாரஹிதாராய் ஸ்வயத்நபாரா யிருப்பார்க்கு மோக்ஷ ஸாதநதயா சாஸ்த்ர விஹிதமாகையாலே ஸ்வஸ்மிந் உபாயத்வ ப்ரதிபத்தி ஸஹமுமாய் ஸ்வோத்பத்த்யாதிகளில் ப்ரவ்ருத்தி ரூபாங்க ஸாபேக்ஷமாகையாலே ஸ்வவ்யதிரிக்தங்களையும் ஸஹிக்குமதா யிருக்குமென்றபடி ”பக்த்யா லப்யஸ் த்வநந்ய்யா”, ”உபாய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய ஐகாந்திகாத்யந்திக பக்தியோகைக லப்யா”, ”ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ த்யாந ஸமாதிபி: நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே” என்னக் கடவதிறே.

**விளக்கம்** - “உபாயாந்தர மிரண்டையும் பொறுக்கும்” என்பது என்ன? இங்கு ஸித்தோபாயத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஸாத்யோபாயம் பற்றிக் கூறுகிறார். ஒரு சிலர் தாங்கள் யாருக்கு (எம்பெருமான்) வசப்பட்டவர்கள் என்ற ஞானம் இல்லாமல், தங்களது முயற்சிகளிலேயே தொடர்ந்து ஈடுபட்டபடி இருக்கக்கூடும். அவர்கள் மோக்ஷத்திற்கு ஒரு ஸாதனமாக விதிக்கப்பட்ட ஸாத்யோபாயத்தை உபாயமாக எண்ணக்கூடும். இப்படியாக அவர்கள் தன்னை உபாயமாக எண்ணுவதை அந்தச் ஸாத்யோபாயம் பொறுத்துக் கொள்ளும். இத்தகைய ஸாத்யோபாயம் என்பது, தன்னைப் பற்றி மனிதர்கள்

எண்ணுவதும், சிந்திப்பதும் ஆகிய செயல்கள் நிறைவேறச் செயல் வடிவமாக உள்ள கர்மம், ஞானம் போன்ற வற்றையே தனது அங்கமாக விரும்பி நிற்கும். ஆகவே தனக்கு வேறாக உள்ள மற்றவற்றையும் இத்தகைய ஸாத்யோபாயம் பொறுத்துக்கொள்ளும். கீழே உள்ள வரிகள் காண்க:

- கீதை – பக்த்யா லப்யஸ் த்வநந்ய்யா - மற்ற எதுவும் கலக்காத தூய பக்தியினால் அடையத்தக்கவன்
- ஆளவந்தாரின் ஆத்மஸித்தி – உபாய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய ஐகாந்திகாத்யந்திக பக்தியோகைக லப்யா – ஒருவன் கர்மம் மற்றும் ஞானம் மூலம் அலங்கரிக்கப்பட்ட மனம் கொண்டிருக்கக்கூடும். இத்தகைய தூய்மையான மனம் கொண்ட அவன் வேறு எந்த உபாயத்தையும் எண்ணாமல், இத்தகைய பக்திக்கு மேல் வேறு ஏதும் இல்லை என்று எண்ணியபடிச் செய்யும் பக்தியால் மட்டுமே எம்பெருமான் அடையப்படுகிறான்.
- ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ த்யாந ஸமாதிபி: நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே – ஆயிரம் பிறவிகளில் செய்யப்பட்ட தவம் என்ற கர்மம், ஞானம் மற்றும் பக்தியால் பாவங்கள் ஒருவனுக்கு விலகக்கூடும். அதன் பின்னரே அவனுக்கு க்ருஷ்ணனிடம் பக்தி உண்டாகிறது.

## 59. இது இரண்டையும் பொறாது.

**வ்யாக்யானம்** - (இதிரண்டையும் பொறாது) என்றது, ஸித்தோபாய வரண ரூபமாய், நிவ்ருத்தி ஸாத்ய ரூபமாய் அதிகாரி விசேஷணமாய், ஸ்வரூபாநதிரேகியா யிருக்கிறவிந்த ப்ரபத்தி, உபாயாஸஹமா யிருக்கு மென்றபடி. ஆகையால் ஸித்த ஸாத்யோபாய வ்யாவ்ருத்த வேஷையா யிருக்கிறவிந்த ப்ரபத்திக் குபாயத்வ மஸம்பாவித மென்ற தாய்த்து.

**விளக்கம்** - “இதிரண்டையும் பொறாது” என்பது என்ன? ஸித்தோபாயமான எம்பெருமானைப் பற்றக் கூடிய ரூபமாக, மற்ற அனைத்தையும் கைவிட்ட பின்னர் பெறக்கூடியதாக, அதிகாரிகளுக்கு ஏற்றதாக, ஸ்வரூபத்தில் நிலை பெறத்தக்கதாக உள்ள ப்ரபத்தி என்பது இரண்டையும் பொறுத்துக் கொள்ள இயலாததாக இருக்கும் என்று

கருத்து. எனவே ஸித்தோபாயம் மற்றும் ஸாத்யோபாயம் ஆகிய இரண்டைக் காட்டிலும் மாறுபட்ட தன்மையைக் கொண்டதாக் உள்ள ப்ரபத்திக்கு, உபாயமாக உள்ள தன்மை என்பது ஏற்புடையது அல்ல என்றாகிறது.

**வ்யாக்யானம்** - அன்றிக்கே (இது தனக்கு ஸ்வரூபம்) இத்யாதிக்கு – ஆனால் ஸாங்கமாக சாஸ்த்ர விஹிதமானவிந்த ப்ரபத்திக்கு ஸ்வரூபமேது, இதுக்குச் சொல்லுகிற அங்கந்தா னேதென்ன; அவையிரண்டையுமடையவே யருளிச் செய்கிறார் (இது தனக்கு) இத்யாதி வாக்யத்தாலே. ஆனால் தன்னைப் பொறுப்ப தேதென்னவருளிச் செய்கிறார் (உபாயம்) இத்யாதி. தன்னையும் தன்னையொழிந்தவற்றையும் பொறுக்குமதேதென்ன வருளிச் செய்கிறார் (உபாயாந்தரம்) இத்யாதி. இந்த ஸித்தஸாத்யோபாயங்க ளிரண்டிலும் இப்ப்ரபத்திக் குண்டான வ்யாவ்ருத்தியை தர்சிப்பியா நின்று கொண்டு உக்தார்த்தத்தை நிகமிக்கிறார் (இதிரண்டையும்) இத்யாதி - என்றிங்ஙனே ஸங்கதியாகவுமாம்.

**விளக்கம்** – அல்லது " இது தனக்கு ஸ்வரூபம்" என்று தொடங்கும் சூத்திரம் முதலாக உள்ள சூத்திரங்களுக்கு வேறு பொருள் உணரலாம். ஆனால், அங்கத்துடன் கூடியதாக உள்ளது என்று சாஸ்த்ரங்கள் மூலம் விதிக்கப்படும் ப்ரபத்தியின் தன்மை என்ன? அப்படி கூறப்படும் அங்கம் எது? – இதற்கான விடைகளை "இது தனக்கு" மற்றும், "அங்கம் தன்னை" ஆகிய இரண்டு சூர்ணைகள் மூலமாக அருளிச் செய்கிறார். மேலும் "தன்னையும், தன்னைத் தவிர உள்ள மற்றதையும் எது பொறுத்துக்கொள்ளும்?" என்ற கேள்விக்கு "உபாயாந்தரம்" என்ற சூர்ணையால் பதில் அருளிச் செய்கிறார். ஸித்தோபாயம், ஸாத்யோபாயம் ஆகிய இரண்டிலும் ப்ரபத்திக்கு உள்ள வேறுபாடு என்பதைக் காண்பிக்காமல் நின்றபடி தான் கூறிய பொருளை முடிக்கிறார்.

**வ்யாக்யானம்** - அதவா, இதினநுபாயத்வத்தை ஸாதிக்கைக்காக இதினுடைய ஸ்வரூபாங்கங்க ளிரண்டையும் தாமே யருளிச் செய்கிறார் (இது தனக்கு) இத்யாதி வாக்ய த்வயத்தாலே. இதினநுபாயத்வத்தை ஸ்புடமாக்குகைக்காக ஸித்தஸாத்யோபாயங்களின் படிகளை தர்சிப்பிப்போமென்று திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் ஸித்தோபாயத்தின் படியை அருளிச் செய்கிறார் (உபாயம்) இத்யாதியால். அநந்தரம், ஸாத்யோபாயத்தின் படியை யருளிச் செய்கிறார் (உபாயாந்தரம்) இத்யாதியாலே. இவையிரண்டிலும் ப்ரபத்திக்குண்டான வ்யாவ்ருத்தியை தர்சிப்பிக்கிறார் (இதிரண்டையும்) இத்யாதியால்,

என்றிங்ஙனே ஸங்கதியாகவுமாம். இவ்வுபய ஸங்கதிக்கும் வாக்கியங்களுக்கர்த்தம் பூர்வவத்.

**விளக்கம்** - அல்லது ப்ரபத்தி என்பது உபாயம் ஆகாது என்பதைத் தெளிவாக உணர்த்துவதற்காக இந்த ப்ரபத்தியின் தன்மை மற்றும் அங்கம் ஆகிய இரண்டையும் தாமே தாமே இங்கு அருளிச்செய்கிறார் எனலாம். இவற்றையே “இது தனக்கு” உள்ளிட்ட சூர்ணைகளில் கூறுகிறார். இத்தகைய ப்ரபத்தி உபாயம் இல்லை என்பதை உணர்த்தும் விதமாக ஸித்தோபாயம் மற்றும் ஸாத்யோபாயம் குறித்து முதலில் விளக்கத் திருவுள்ளம் பற்றினார். எனவே இவற்றில் முதலில் ஸித்தோபாயத்தின் தன்மையைக் காட்டுகிறார். இதனை “உபாயம்” என்ற சூர்ணையால் காண்பித்தார். அதன் பின்னர் “உபாயாந்தரம்” என்பதன் மூலம் ஸாத்யோபாயத்தின் தன்மையை உணர்த்தினார். இந்த இரண்டிலும் ப்ரபத்திக்கு உள்ள வேறுபாட்டினை “இது இரண்டையும்” என்பதன் மூலம் அருளிச் செய்கிறார்.

60. பலத்துக்கு ஆத்மஜ்ஞாநமும் அப்ரதிஷேதமுமே வேண்டுவது.

**அவதாரிகை** - இப்படி இப்ப்ரபத்தியுபாயமல்லவாய் விட்டால், பலஸித்திக் கிவன் பக்கலிலும் சில வேண்டாவோவென்ன வருளிச்செய்கிறார் (பலத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – ப்ரபத்தி என்பது உபாயம் அல்ல என்று கூறிவிட்டால், தகுந்த பலன் கிட்டுவதற்கு சேதனனிடம் வேறு ஏதாவது உபாயம் வேண்டும் அல்லவோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "பலத்துக்கு" என்றது – பல ஸித்திக்கென்றபடி. "ஆத்ம ஜ்ஞாநமாவது" - ஸ்வஸ்வரூபஜ்ஞாநம். அதாவது - ததேகசேஷத்வ ததேகரக்ஷ்யத்வங்களையறிகை. "அப்ரதிஷேதமாவது" – நிருபாதிக சேஷியாய் நிருபாதிக ரக்ஷகனானவவன் பண்ணும் ரக்ஷணத்தை விலக்காமை. அதாவது – ஸ்வரக்ஷணே ஸ்வாந்வய நிவ்ருத்தி. அவதாரணத்தால் – இவையிரண்டுமொழிய பின்னையொன்றும் வேண்டாவென்றபடி. சரமபதத்தில் சொல்லுகிற பலத்துக்கு, ப்ரதமபத்தில் சொல்லுகிற வாத்ம ஜ்ஞாநமும், மத்யமபதத்தில் சொல்லுகிற அப்ரதிஷேதமுமிறே வேண்டுவது.

**விளக்கம்** – ”பலத்துக்கு” என்றால் “பலன் கிட்டுவதற்கு” என்று பொருள். “ஆத்மஜ்ஞாநம்” என்றால், தனது ஸ்வரூபத்தைப் பற்றிய ஞானம். இந்த ஞானம் என்பது எம்பெருமானுக்கு மட்டுமே அடிமைப்பட்டிருத்தல் மற்றும் அவனால் மட்டுமே நாம் காக்கப்படுகிறோம் என்று அறிவதாகும். ”அப்ரதிஷேதம்” என்றால் எந்தவிதமான கைம்மாறும், காரணமும் இன்றி நம்மைக் காப்பாற்றுகின்றபோது எம்பெருமானை விலக்காமல் இருத்தல்; நாமாகவே நம்மைக் காப்பாற்றிக் கொள்ள இயலும் என்பதான முயற்சியைக் கைவிடுதல். சூர்ணையில் உள்ள ஏவகாரம் (அப்ரதிஷிதமே என்பதில் உள்ள ஏவகாரம்) மூலம், இவை இரண்டும் இல்லை என்று கூறப்பட்டது. திருஅஷ்டாக்ஷரத்தில் உள்ள “நாராயணாய” என்ற இறுதிப் பதத்திற்குக் கூறப்படும் பலன் என்பது - முதலில் உள்ள ப்ரணவம் மூலம் உரைக்கப்படும் ஆத்மஞானம் கிட்டுதலும், நடுவில் உள்ள “நம” என்பதன் மூலம் உணத்தப்படும் விலக்காமை என்பதே ஆகும். இது போன்றே இங்கும் கொள்ளவேண்டும்.

61. அல்லாதபோது பந்தத்துக்கும் பூர்த்திக்கும் கொத்தையாம்.

**அவதாரிகை** - இப்படியன்றிக்கே, பலஸாதநமாகவிவனுஞ் சில செய்யவேணுமென்றால் வரும் தீங்கென்னென்ன வருளிச்செய்கிறார் (அல்லாத) என்று தொடங்கி.

**விளக்கம்** - மேலே கூறப்பட்டவற்றைத் தவிர்த்து இவனிடம் வேறு சில உபாயங்கள் இருத்தல் வேண்டும் என்று சிலர் கூறலாம். இவ்விதம் கொண்டால் விளையக்கூடிய தீமை என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ”அல்லாதபோது” என்றது - இவ்வளவன்றிக்கே பலஹேதுவாக விவன் சில செய்யவேண்டும்போதென்றபடி. ”பந்தத்துக்கும் பூர்த்திக்கும் கொத்தையாகையாவது - இவனுடைய ரக்ஷணம் தன்பேறாம்படியான வவனுடைய நிருபாதிக நிரபேக்ஷோபாய த்வத்துக்கு அவத்யமாய்த் தலைக்கட்டுமென்கை.

**விளக்கம்** – “அல்லாதபோது” என்பதன் மூலம், ”மேலே கூறப்பட்டது தவிர்த்து பலன் அடைவதற்குச் சாதனமாக ஒருவன் வேறு ஏதாவது செய்ய முற்படும்போது” என்பது கூறப்பட்டது. “பந்தத்துக்கும் பூர்த்திக்கும் கொத்தை” என்பதன் மூலம் - சேதனனைப்

பாதுகாத்தல் என்பதைத் தனது பேறு என்று ஸர்வேச்வரன் உள்ளான்; சேதனன் தன்னைப் பற்ற எதனையும் அவன் எதிர்பாராமல் உள்ளான்; தானே வலியச்சென்று சேதனனுக்கு உபாயமாக நிற்கிறான்; இத்தகைய அனைத்தும் குற்றமாக முடிகின்ற நிலை உண்டாகும் - என்று கூறப்பட்டது.

62. ஆபத்தைப் போக்கிக்கொள்ளுகிறோமென்று ப்ரமித்து அத்தை விளைத்துக் கொள்ளாதொழிகையே வேண்டுவது.

**அவதாரிகை** - ஆனாலும் அநந்த க்லேச பாஜநமான ஸம்ஸாரஸாகரத்தில் அழுந்திக் கிடந்தலைகிற தன்னாபத்தை யுணர்ந்தால், ஆபத்ஸகனான வீச்வரனை ஸ்வ ப்ரபத்தியாலே வசீகரித்து, தத்ப்ரஸாதத்தாலே இத்தைக் கழித்துக் கொள்ளவேண்டாவோ வென்ன வருளிச்செய்கிறார் (ஆபத்தை) என்று தொடங்கி.

**விளக்கம்** - இந்த உலக வாழ்க்கை என்பது எல்லையற்ற துன்பங்களின் இருப்பிடமாக உள்ளது. இத்தகைய உலகில் ஸம்ஸாரம் என்ற கடலில் அழுந்திக் கிடக்கின்ற சேதனன் தனது துயரமான (ஆபத்தான) நிலையை எண்ணிப் பார்க்கிறான். உடனே இத்தகைய ஆபத்தை நீக்கவல்லவன் ஸர்வேச்வரன் மட்டுமே என்று அறிந்து, அவனைத் தனது ப்ரபத்தி மூலம் வசீகரம் செய்து, அவனது கடாக்ஷம் மூலமாகத் தனது ஆபத்தை உடனே போக்க முயலவேண்டாமோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸர்வேச்வரன் திருவடிகளிலே ப்ரபத்தி பண்ணி ஸம்ஸாரமாகிற ஆபத்தைப் போக்கிக்கொள்ளுகிறோமென்று, தான் பண்ணுகிற ப்ரபத்தியாலே தன்னாபத்தைப் போக்கிக்கொள்ளுகிறானாக ப்ரமித்து, ததேக பாரதந்த்ர்ய ரூப ஸ்வரூப ஹாநியாகிற ஆபத்தை விளைத்துக் கொள்ளாதொழிகையே தந்நிவ்ருத்திக்கு இவன் செய்யவேண்டுவதென்றபடி. ஓராபத்தைப் பரிஹரிக்கப்புக்கு ஓராபத்தை விளைத்துக்கொள்ளாதே, இவன் ஸ்வயத்நத்தில் நிவ்ருத்தனாயிருக்கவே எம்பெருமான் தானே ரக்ஷிக்குமென்று கருத்து. "அத்தை" என்றது - ஆபத் ஸாமாந்யத்தைப் பற்ற; அல்லது, ப்ரக்ருதாபத்து தன்னையே பராமர்சித்தபடி யன்று.

**விளக்கம்** - ஸர்வேச்வரனின் திருவடிகளில் நாம் ப்ரபத்தி செய்துவிட்டோம்; இதனால் ஸம்ஸார வாழ்க்கையின் ஆபத்துக்களை நீக்கிக்கொண்டோம் - என்று தான் செய்த ப்ரபத்தியால் மட்டுமே தனது ஆபத்து நீங்கியது என்று சிலர் மயங்கியபடி இருக்கக்கூடும். அவ்விதம் இருத்தல் கூடாது. உண்மையில் ஸம்ஸாரத்தின் மூலம் உண்டாகும் ஆபத்து நீங்க வழி என்னவென்றால் - ஸர்வேச்வரன் ஒருவனுக்கு மட்டுமே தான் அடிமைப் பட்டவன் என்று உள்ள நிலைமைக்குப் பங்கம் உண்டாகாமல் பார்த்துக் கொள்ளுகிற நிலையே ஆபத்து நீங்க வழியாகும். அதாவது, ஓர் ஆபத்தை நீக்கிக் கொள்ள எண்ணி மற்றோர் ஆபத்தை இவன் தனக்கு உண்டாக்கிக் கொள்ளாமல் தடுக்கும் பொருட்டு, இவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தானே முயலாதபடி, எம்பெருமான் காத்து நிற்பான் என்று இருத்தல் வேண்டும். சூர்ணையில் உள்ள "அத்தை" என்பது - மேலே கூறப்பட்ட ஸம்ஸார ஆபத்தை மட்டுமே கூறவில்லை, பொதுவாக உணர்த்தப்பட்டது.

63. ரக்ஷணத்துக்கபேக்ஷிதம் ரக்ஷயத்வாநுமதியே.

**அவதாரிகை** – ஆனாலும், "ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்று ரக்ஷகனான ஸர்வேச்வரன் ரக்ஷ்யபூதனான விச்சேதநனுடைய வபேக்ஷையைக் பார்த்திருக்கு மென்கையாலே, அவன் பண்ணும் ரக்ஷணத்துக்கு இவனுடைய வபேக்ஷையும் வேண்டியன்றோ இருக்கிறதென்ன வருளிச்செய்கிறார் (ரக்ஷணத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஆனால் லக்ஷ்மீதந்த்ரம் - ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே - பாதுகாக்கப்படுகின்றவனின் வேண்டுதலை எதிர்பார்த்தபடி - என்று கூறுவதற்கு ஏற்ப, காப்பவனாகிய ஸர்வேச்வரன், தன்னால் காக்கப்படுகின்ற சேதனனின் "என்னைக் காப்பாற்றவேண்டும்" என்ற வேண்டுதலை எதிர்பார்க்கிறான். ஆக அவன் காப்பாற்றுவதற்கு இவனுடைய வேண்டுதலும் தேவையாக உள்ளது அல்லவோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நிருபாதிக ரக்ஷகனானவன் பண்ணும் ரக்ஷணத்துக்கு இச்சேதநன் பக்கல் வேண்டுவது, நீ எனக்கு ரக்ஷ்யமென்றால் அல்லே னென்னாதே தன்னுடைய ரக்ஷ்யத்வத்தை யிசையு மிவ்வளவே என்கை. "ரக்ஷ்யாபேக்ஷாம்" என்கிறவிடத்தில் சொல்லுகிற வபேக்ஷை, ரக்ஷ்யத்வாநுமதி த்யோதகமித்தனை என்று

கருத்து. "யாச்நா ப்ரபத்தி: ப்ரார்த்தநா மதி:" என்கிற ஸ்வீகாரத்தை அப்ரதிஷேத த்யோதக மென்றிறே இவர்தா மருளிச்செய்தது.

**விளக்கம்** – எந்த ஒன்றையும் எதிர்பாராமல் காக்கின்ற ஸர்வேச்வரன், சேதனனைக் காப்பாற்றும்போது சேதனனிடம் இருக்கவேண்டியது என்னவென்றால் - ஸர்வேச்வரன் இவனிடம், "நீ என்னால் பாதுகாக்கப்படுபவன்" என்று கூறும்போது, இவன் எம்பெருமானிடம், "அல்லேன்" என்று மறுக்காமல், தான் பாதுகாக்கப்படும் பொருளாக இருப்பதை ஒப்புக் கொள்ளுதலே ஆகும். ரக்ஷ்யாபேக்ஷாம் - பாதுகாக்கப்படும் சேதனனின் விருப்பத்தை - என்கிற வரியில் கூறப்படும் "விருப்பம்" என்பது, எம்பெருமானால் தான் காக்கப்படுவதை ஏற்றுக்கொண்டு இருப்பதே ஆகும். லக்ஷ்மீ தந்த்ரத்தில் உள்ள - யாச்நா ப்ரபத்தி: ப்ரார்த்தநா மதி: - வேண்டுதல் வடிவான ப்ரபத்தி, வேண்டுதலுடன் கூடிய புத்தி ஆகிய இரண்டையும் ஏற்பது பற்றி இவரே (ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர்) முமுக்ஷுப்படி சூர்ணை 233-ல் அருளிச்செய்தார் அல்லவோ?

64. எல்லா வுபாயத்துக்கும் பொதுவாகையாலும் சைதந்யகார்ய மாகையாலும், ப்ராப்தி தசையிலுா மநுவர்த்திக்கையாலும், ஸ்வரூபாதிரேகி யல்லாமையாலும், அசித்வ்யாவ்ருத்த வேஷத்தை ஸாதநமாக்க வொண்ணாது.

**அவதாரிகை** - இப்படி அநுமதி ஸாபேக்ஷனாய் ரக்ஷிக்குமாகில் இவ்வநுமதிதான் ஸாதந மாகாதோ வென்ன வருளிச் செய்கிறார் (எல்லாம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - "இது போன்று சேதனனின் அனுமதியை எதிர்பார்த்தபடி நின்று மட்டுமே ஸர்வேச்வரன் ஒருவனைக் காப்பாற்றுவான் என்றால், அத்தகைய அனுமதி என்பது எம்பெருமானை அடையச் செய்யும் ஸாதனமாகிவிடாதோ" என்று கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "எல்லாவுபாயத்துக்கும் பொதுவாகையாவது" – போக மோக்ஷோபாயங்களிலேதேனு மொன்றிலே யதிகரிக்குமவனுக்கும், நீ யிவ்வுபாயத்தை யநுஷ்டி என்றால், அப்படியே செய்கிறேன் என்னு மநுமதி பூர்வகமாக வதிலிழிய வேண்டுகையாலே, ஸகலோபாய ஸாதாரணமாயிருக்கை. இத்தால் ஓரிடத்திலும்

இவ்வநுமதிக்கு அதிகாரி விசேஷணத்வ மொழிய, பல ஸாதநத்வமில்லாமை காட்டப்பட்டது. "சைதந்ய கார்யமாகையாவது" ரக்ஷ்யத்வம் சேதநாசேதந ஸாதாரணமா யிருக்கச்செய்தே, ஜ்ஞாந சூந்யமாகையாலே அவ்வாகாரத்தை யறிகைக்கு யோக்யமல்லாத அசேதநம் போலன்றிக்கே, ஜ்ஞாநாச்ரய பூதனாகையாலே யத்தை யறிகைக்கு யோக்யனா யிருக்கிற விச்சேதநன் பக்கலுண்டான வநுமதி, இவனுடைய ஜ்ஞாந கார்யமாய்க் கொண்டு வந்ததாயிருக்கை. இத்தால் – இவ்வநுமதி சேதநனான வாசியைப் பற்ற வந்ததாகையாலே, ஸாதந கோடியில் அந்வயியா தென்றபடி. "ப்ராப்தி தசையிலுமநுவர்த்திக்கையாவது" உபாய தசையளவி லன்றிக்கே உபேய தசையிலும், அவன் வ்யாமோஹாநு குணமாகக் கொள்ளும் விநியோக விசேஷங்களில், திருவுள்ளமானபடி கொண்டருளவேணு மென்னு மநுமதி யிவனுக்கு நடந்து செல்லுகை. இத்தால் ஸாதநமாகில் பல ஸித்தியளவிலே மீள வேணுமென்று கருத்து. "ஸ்வரூபாதிரேகியல்லாமையாவது" – சேஷி செய்யுமதுக் குடன்பட்டிருக்கை சேஷத்வ பாரதந்த்ர்ய கார்யமாகையாலே இவ்வநுமதி ஸ்வரூபத்துக்குப் புறம்பன்றிக்கே ஸ்வரூபமா யிருக்கை, இத்தால் ஸாதநமாகில் ஸ்வரூபாதிரேகியாயிருக்க வேணுமென்று கருத்து. "அசித் வ்யாவ்ருத்த வேஷமாவது" - ஜ்ஞாத்ருத்வத்தாலே ஜ்ஞாந சூந்யமான வசித்தில் வேறுபட்டிருக்கிற வாத்மாவினுடைய வாகாரம். இவ்விடத்தில் அவ்வாகாரமாவது ஜ்ஞாநகார்யமானவநுமதி. இத்தை "ஸாதநமாக்கவொண்ணாது" என்றது - இப்படி இதினுடைய அஸாதநத்வ ஹேதுக்கள் அநேகமுண்டாகையால் இத்தை ஸாதநமாகக் கற்பிக்கப் போகாதென்றபடி. "அசித் வ்யாவ்ருத்தி வேஷம்" என்று பாடமாகில், ஜ்ஞாந சூந்யமான வசித்திற் காட்டி லாத்மாவுக்குண்டான ஜ்ஞாத்ருத்வரூப வ்யாவ்ருத்தியின் வேஷமான வநுமதியை என்று சப்தார்த்தம்.

**விளக்கம்** - "எல்லாவுபாயத்துக்கும் பொதுவாகையாவது" என்பது - ஒருவன் போக உபாயம், மோக்ஷ உபாயம் ஆகிய இரண்டில் ஏதேனும் ஒன்றைக் கைக்கொள்ள முயல்கிறான் என்று வைப்போம். அவனிடம், "நீ இந்த உபாயத்தைக் கைக்கொள்வாய்", என்று கூறினால் அவன், "அப்படியே செய்கிறேன்", என்று கூறுகிறான். அத்தகைய அனுமதியை முன்னிட்டுக்கொண்டு அந்த உபாயத்தில் இறங்குகிறான். இது அனைத்து உபாயங்களுக்கும் பொதுவானதே ஆகும். இதன் மூலம் இத்தகைய அனுமதி என்பது அந்த அதிகாரிக்கு விசேஷமாக உள்ள தன்மை என்பது மட்டுமே கூறப்பட்டது அல்லாமல், பலன் அடைய வைக்கும் ஸாதனமாக உரைக்கப்படவில்லை.

“சைதந்ய கார்யமாகையாவது” என்பது என்ன? பாதுகாக்கப்படும் பொருள் என்னும் தன்மை அறிவுள்ள பொருள்கள் மற்றும் அறிவற்ற பொருள்கள் ஆகிய இரண்டிற்கும் பொதுவானதே ஆகும். “தாங்கள் காக்கப்படுகிறோம்” என்னும் அறிவானது, அறிவற்ற பொருள்களுக்கு ஏற்படத் தகுதியில்லாமல் உள்ளது. ஆனால் அறிவுள்ள சேதனன் ஒருவனுக்கு இத்தகைய அறிவு, ஞானத்தின் இருப்பிடமாக உள்ளதால், அவனுக்கு ஏற்படும் தகுதி உள்ளது. இதனால் இவனது அனுமதி என்பது இவனுடைய ஞானத்தின் காரணமாக வந்தது என்று கொள்ளப்படும். ஆகவே இத்தகைய அனுமதி இவனுடைய அறிவுள்ள தன்மை என்பதான வேற்றுமையின் அடிப்படையில் வந்ததால், இதனை ஸாதனம் என்று கொள்வதில்லை.

“ப்ராப்தி தசையிலுமநுவர்த்திக்கையாவது” என்பது என்ன? உபாய நிலையில் மட்டுமே அல்லாமல் உபேய நிலையிலும் ஸர்வேச்வரன் தனது எத்தகைய நிலையிலும், ”உனது திருவுள்ளத்தின்படி என்னைக் கொள்வாயாக” என்னும் அனுமதியானது இவனுக்கு நடந்து செல்லுகை என்பதாகும். ஆக அனுமதியை ஸாதனம் என்று கொண்டால், பலன் கிட்டிய அளவில் அனுமதியை நிறுத்தவேண்டும் என்றாகிவிடும். ”ஸ்வரூபாதிரேகியல்லாமையாவது” என்பது என்ன? எஜமானன் என்ன செய்கிறானோ அதற்கு உடன்பட்டிருத்தல் என்பது, அந்த எஜமானனுக்கு மட்டுமே வசப்பட்டிருத்தல் என்னும் தன்மை கொண்ட அடிமைத்தனத்தின் காரணமாக உண்டாவதாகும். இத்தகைய நிலையில் அனுமதி என்பது, அடிமைத்தனத்தின் ஸ்வரூபத்திற்குப் புறம்பாக இல்லாமல், அடிமைத்தனத்தின் ஸ்வரூபமாகவே உள்ளது என்று கருத்து. ஆக அனுமதி என்பது ஸாதனமாக இருப்பின், அது அடிமைத்தனத்தின் ஸ்வரூபத்திற்குப் புறம்பாகிவிடும் என்று கொள்ளவேண்டும்.

“அசித் வ்யாவ்ருத்த வேஷமாவது” என்பது என்ன? ஞானம் என்பது இல்லாமல் உள்ள அசித்தைக் காட்டிலும் ஞானமயமான தன்மை காரணமாக வேறுபட்டுள்ள ஆத்மா என்று கருத்து. இத்தகைய ஆத்மாவின் அந்தத் தன்மை என்பது ஞானத்தின் செயலான அனுமதியே ஆகும்.

இதனை “ஸாதநமாக்கவொண்ணாது” என்று ஏன் கூறப்பட்டது என்றால் - இப்படியாகப் பலவிதமான காரணங்களால் இந்த அனுமதி என்பது ஸாதனமாக இருக்க இயலாது என்று கூறப்பட்டதால், இத்தகைய அனுமதி என்பதை ஸாதனமாக ஏற்க இயலாது.
“அசித் வ்யாவ்ருத்தி வேஷம்” என்று சூர்ணையைச் சிலர் படிப்பர். இப்படிக் கொண்டால் - ஞானம் அற்ற அசித்தைக் காட்டிலும் ஆத்மாவிற்கு உள்ள அறியும் தன்மை என்ற வேறுபாட்டின் வெளிப்பாடான அனுமதி - என்று கொள்ளவேண்டும்.

65. அசித் வ்யாவ்ருத்திக்கு ப்ரயோஜநம், உபாயத்திலுபகார ஸ்ம்ருதியும் உபேயத்திலுகப்பும்.

**அவதாரிகை** - ஆனால் இவ்வசித் வ்யாவ்ருத்தி தனக்கொரு ப்ரயோஜநம் வேண்டாவோ வென்ன வருளிச்செய்கிறார் (அசித் வ்யாவ்ருத்திக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – என்றாலும் அசித்தைக் காட்டிலும் மாறுபட்டுள்ள இந்தத் தன்மைக்கு (ஆத்மாவை அறியக்கூடிய தன்மை) ஏதேனும் பயன் இருக்கவேண்டும் அல்லவா என்னும் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (உபாயத்திலுபாகார ஸ்ம்ருதியாவது) ”என்னைத் தீமனங்கெடுத்தாய்” , “மருவித்தொழும் மனமே தந்தாய்” என்கிறபடியே ஸித்தோபாயமான வெம்பெருமான் தன் திறத்தில் பண்ணின உபாகாரங்களை யநுஸந்திக்கை. (உபேயத்திலுகப்பாவது) அவன் திருவடிகளில் தான் பண்ணும் கைங்கர்யங்களில் ”உகந்து பணி செய்து” என்கிற உகப்பும், அத்தாலவனுக்கு விளைகிற ப்ரீதியைக் கண்டு தனக்கு விளைகிற ப்ரீதியும்.

**விளக்கம்** – ”உபாயத்திலுபாகார ஸ்ம்ருதியாவது” என்பது: திருவாய்மொழி (2-7-8) - என்னைத் தீமனங்கெடுத்தாய், திருவாய்மொழி (2-7-7) - மருவித்தொழும் மனமே தந்தாய் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஸித்தோபாயமாக உள்ள ஸர்வேச்வரன் நமக்காகச் செய்த உபகாரங்களை எண்ணிப் பார்த்தபடி இருத்தல் ஆகும். “உபேயத்திலுகப்பாவது” என்பது: அவன் திருவடிகளில் நாம் செய்கின்ற கைங்கர்யங்களில் திருவாய்மொழி (10-8-10) - உகந்து பணி செய்து – என்று கூறுவதற்கு ஏற்ப மகிழ்ச்சியும், இதனால் அவனுக்கு உண்டாகின்ற ப்ரீதியைக் கண்டு நமக்கு அவன் மீது ஏற்படும் ப்ரீதியும் கூறப்படுகிறது.

66. “உன்மனத்தா லென்னினைந் திருந்தாய்” என்கிறபடியே ப்ராப்திக்கு உபாயம் அவன் நினைவு.

**அவதாரிகை** - இப்படி இவன் பக்கலுள்ளதொன்று முபாயமன்றாகில் இவனுக்கு தத் ப்ராப்த்யுபாயந்தா னேதென்ன வருளிச்செய்கிறார் (உன் மனத்தால்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் சேதனன் பக்கம் உள்ள எதுவும் சேதனன் அவனை அடையும் உபாயம் அல்ல என்றால், அவனை அடையும் வழி என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, இத்தலையிலுள்ளதொன்றும் பேற்றுக்குபாய மல்லாமையாலே, ”உன் மனத்தாலென்னினைந்திருந்தாய்” என்று – கை கழிந்தவற்றுக்குமொரு போக்கடி பார்த்திருக்கக் கடவ உன் திருவுள்ளத்தால் நினைத்திருந்ததென்னென்று, ஹிதைஷியான அவன் நினைவே உபாயமென்று ஆழ்வாரநுஸந்தித்தபடியே, அவனை ப்ராபிக்கைக்குபாயம் – ஸர்வஜ்ஞனாய் ஸர்வ சக்தியாய் ப்ராப்தனாய் பரமதயாளுவாய் இருக்கிற அவனுடைய இச்சேதநோஜ் ஜீவநார்த்தமான நினைவென்றபடி.

**விளக்கம்** - பெரியதிருமொழி (12-7-1) - உன் மனத்தால் என்னினைந்திருந்தாய் - என்று கூறுவதற்கு ஏற்ப, ”எதனாலும் காப்பாற்ற இயலாது என்று கைவிட்ட நிலையிலும் ஏதேனும் உதவ இயலுமா என்று உனது மனதால் நினைப்பது என்னே குணம்” என்று நமது நலத்தை எண்ணியபடி எம்பெருமான் உள்ளான். நம்மிடம் உள்ள எதுவும் இப்படிப்பட்ட இவனை அடையும் பேறு என்பதற்கான உபாயம் அல்லாத காரணத்தினால், அவனது நினைவு மட்டுமே உபாயம் என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்தது போன்று, அவனது நினைவு மட்டுமே அவனை அடைவதற்கான உபாயம் ஆகிறது. அனைத்தும் அறிந்தவனாக, அனைத்து வல்லமையும் கொண்டவனாக, நமக்கு ஸம்பந்தம் உடையவனாக, பரம தயாளுவாக உள்ள அவன் இந்தச் சேதனனைப் பற்றி எண்ணுவதே உய்வதற்கான உபாயம் என்று கொள்க.

67. அதுதானெப்போதுமுண்டு.

**அவதாரிகை** – அந்நினைவுதானவனுக்கெப்போதுண்டாவ தென்னவருளிச் செய்கிறார் (அதுதானெப்போதுமுண்டு) என்று தொடங்கி.

**விளக்கம்** - அப்படிப்பட்ட நினைவு எம்பெருமானுக்கு எப்போது உண்டாகும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "எப்போதும்" என்றது, இவன் யாதானும் பற்றி நீங்கித் திரிகிற காலத்தோடு இன்றோடு வாசியற ஸர்வ காலத்திலுமென்றபடி.

**விளக்கம்** - "எப்போதும்" என்பதன் மூலம் உணர்த்தப்பட்டது என்ன? திருவிருத்தம் (96) – யாதானும் பற்றி நீங்கித் திரிகிற என்பதற்கு ஏற்ப வேறு உபாயங்களைப் பற்றி, அதன் பின்னே சென்ற காலம் தொடக்கமாக, எம்பெருமானே கதி என்று வந்து நின்ற காலம் முடிய, எப்போதும் வேறுபாடு காணாமல் அவன் சேதனனை எண்ணியபடி உள்ளான் என்று கருத்து.

68. அது பலிப்பது இவன்னினைவு மாறினால்.

**அவதாரிகை** – ஆனால் அது இந்நாள்வரை பலியாதிருப்பானென்னென்ன வருளிச் செய்கிறார் (அது பலிப்பது இவன்னினைவு மாறினால்) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஆயினும் அத்தகைய எம்பெருமானின் நினைவு இதுநாள் வரை பலிக்காமல் உள்ளதற்கு என்ன காரணம் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அவன் நினைவு இவனுக்குக் கார்யகரமாவது, இவனுடைய ஸ்வரக்ஷண சிந்தை மாறின காலத்திலென்றபடி.

**விளக்கம் -** எம்பெருமானின் நினைவு சேதனனுக்கு எப்போதும் பலன் அளிக்கும் என்றால் சேதனன், "நானே என்னைப் பாதுகாத்துக்கொள்வேன்" என்று எண்ணுகின்ற சிந்தனை நீங்கும் நேரத்தில் ஆகும்.

69. "அந்திம காலத்துக்குத் தஞ்சம், இப்போது தஞ்சமென் என்கிற நினைவு குலைகை" என்று ஜீயரருளிச் செய்வர்.

**அவதாரிகை -** இவ்வர்த்தத்தினுடைய ஆப்த்யர்த்தமாக நஞ்சீயர் வார்த்தையையருளிச் செய்கிறார் (அந்திம காலத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம் -** மேலே கூறப்பட்ட சூர்ணையின் பொருளானது நம்பகத் தன்மை நிறைந்தது என்று உணர்த்தும் விதமாக நஞ்சீயரின் சொற்களை இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது நஞ்சீயர், தம்முடைய ஸ்ரீபாதத்திலேயுள்ளாரொரு ஸ்ரீவைஷ்ணவரை நோவறிகைக்காகச் சென்றெழுந்தருளியிருக்கிறவளவிலே, அந்த ஸ்ரீவைஷ்ணவர், "அடியேனுக்கு அந்திம காலத்துக்குத் தஞ்சமாயிருப்பதொன் றருளிச் செய்யவேணும்" என்ன, "அந்திம காலத்துக்குத் தஞ்சம் நமக்கிப்போது தஞ்சமென் என்கிற தன்னுடைய ஸ்வரக்ஷண சிந்தை குலைகை காணும்" என்றருளிச் செய்த வார்த்தை. ஆகையாலே, ஈச்வரன் இவ்வாத்மோஜ்ஜீவநத்துக்குக் குறுப்பாகப் பண்ணும் சிந்தை பலிப்பது இவனுடைய ஸ்வரக்ஷண சிந்தை மாறினாலென்றதாய்த்து.

**விளக்கம் -** நஞ்சீயர் தனது சிஷ்யர்களில் ஒருவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளது என்று அறிந்து, அவரைக் காண்பதற்காகச் சென்றார். அப்போது அந்த சிஷ்யர் அவரிடம், "அந்திம காலத்தில் எனக்குத் தஞ்சமாகப் பற்றுவதற்கு ஏற்ற ஒன்றை அருளிச்செய்ய வேண்டும்", என்றார். இதற்கு நஞ்சீயர், "அந்திம காலத்தில் எனக்குத் தஞ்சம் எது, இப்போது எனக்குத் தஞ்சம் எது என்ற வேறுபாட்டை விலக்குவாயாக. இப்போது உன்னை நீயே காத்துக் கொள்ள இயலும் என்ற சிந்தனை இருக்கின்ற காரணத்தினால் அல்லவோ இப்படி வினவுகிறீர்? இதனை நீக்குவாயாக", என்றார். ஆக சேதனன் உய்யவேண்டும் என்பதற்கு உறுப்பாக எம்பெருமான் ஜீவனைப் பற்றி எண்ணி இருத்தல்

என்பது எப்போது பலன் அளிக்கும் என்றால், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதல் என்ற எண்ணம் ஜீவனிடம் நீங்கினால் மட்டுமே ஆகும்.

70. ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்குகப்பானுமவனே.

**அவதாரிகை** - ப்ராபகன் ஈச்வரனானாலும் ப்ராப்தாவும் ப்ராப்திக்குகப்பானும் இவனன்றோ, ஆனபின்பு இவன்னினைவையிப்படி நேராகத் துடைக்கலாமோ வென்ன அருளிச்செய்கிறார் (ப்ராப்தாவும்) என்று தொடங்கி. அன்றிக்கே, இச்சேதநன் கையிலுள்ளவற்றில் உபாயத்பகந்தமறத் துடைத்து ஈச்வரனை உபாயமென்று நிஷ்கர்ஷித்தபோதே, ப்ராப்த்ருத்வமும் ப்ராப்தியில் வருமுகப்பும் இவனதன்றிக்கே, உபாய பூதனான ஈச்வரனதேயாய்ப் பலித்து விடுகையாலே (ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு உகப்பானுமவனே) என்று நிகமித்தருளுகிறாராகவுமாம்.

**விளக்கம்** – " எம்பெருமானை அடைய வைப்பது" என்ற செயலைச் செய்வது (ப்ராபகன்) எம்பெருமானே ஆவான். ஆனாலும் அவனை அடைகின்றவனும் (ப்ராப்தா), அப்படி அடைந்த காரணத்தினால் (ப்ராப்தி = அடைதல்) மகிழ்வதும் எம்பெருமானை அடைந்த சேதனன் அல்லவோ என்று கேள்வி எழலாம். இதற்கு இந்தச் சூர்ணையில் விடை அளிக்கிறார். அல்லது வேறுவிதமாகவும் அவதாரிகையின் பொருள் கொள்ள இயலும். சேதனனிடம் எம்பெருமானை அடைகின்ற செயலுக்கான உபாயம் ஏதும் இல்லை என்று முடிவு செய்யக்கூடும். அந்த நிலையில் அடையும் தன்மை மற்றும் அப்படி அடைவதன் மூலம் ஏற்பட்ட மகிழ்ச்சி ஆகிய இரண்டும் சேதனனுக்கு உடையது அல்ல, அவை உபாயமாக உள்ள ஸர்வேச்வரனுக்கு உள்ள தன்மைகள் என்றாகிறது. எனவே எம்பெருமானே "ப்ராப்தா, ப்ராபகன், ப்ராப்திக்கு உகப்பவன்" என்றாகிறது.

**வ்யாக்யானம்** - ப்ராப்தா அவனாகையாவது "ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்" என்கிற ஸ்வதஸ் ஸித்தமான ஸ்வஸ்வாமித்வ ஸம்பந்தமடியாக, உடைமையை ப்ராபிக்குமுடையானைப்போலே இவ்வாத்மாவை ப்ராபிப்பான் தானாயிருக்கை. ப்ராபகன் அவனாகையாவது - தான் இவனை ப்ராபிக்குமிடத்தில் ப்ராப்திக்கு உபாமும், ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வ ஸத்ய ஸங்கல்பத்வாதி குணவிசிஷ்டனாய் நிரங்குச ஸ்வதந்த்ரனான தானாயிருக்கை. ப்ராப்திக்குகப்பான் அவனாகையானது - ஸ்வத்தினுடைய லாபத்திலே தத் போக்தாவான ஸ்வாமி ஹ்ருஷ்டனாமாப்போலே, இவனை ப்ராபித்தால் ப்ராபிக்கப் பெற்றோமே! என்று

உகப்பானும் இவ்வாத்மாவுக்கு நித்யபோக்தாவான தானாயிருக்கை. இவை மூன்றும் (அவனே) என்கிற அவதாரணத்தாலே – இவற்றிலிவனோடு அந்வயிப்பதொன்றுமில்லையென்கை. இதில் (ப்ராப்தாவும் ப்ராபகனும் அவனே) என்கையாலே - இவனுக்கு ஸ்வயத்நத்திலே அந்வயமில்லையென்னுமிடமும், (ப்ராப்திக்கு உகப்பானுமவனே) என்கையாலே ஸ்வப்ரயோஜநத்தில் யெல்னுமிடத்தில் அந்வயமில்லையென் னுமிடமும் ஸித்தமாய்த்து.

**விளக்கம்** - எம்பெருமான் ப்ராப்தா(அடைகிறவன்) ஆவது எப்படி? மஹாபாரதம் - ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம் - ஸர்வேச்வரனுக்கு உரிய சொத்தாக இருப்பது என்னும் தன்மை ஆத்மாவிடம் உள்ளது, இத்தகைய சொத்தின் எஜமானனாக இருக்கும் தன்மை என்பது ப்ரஹ்மமாகிய நாராயணனிடம் உள்ளது - என்றது காண்க. இப்படியாக இயற்கையாகவே எம்பெருமானின் "உடைமையை உடையவன்" என்ற தொடர்பு காரணமாகத் தனக்கு உரியதை அடைபவன் போன்று ஆத்மாவை அடைபவனாக உள்ளான்.

எம்பெருமான் ப்ராபகன் (அடைவிப்பவன்) ஆவது எப்படி? எம்பெருமானாகிய தான் ஜீவனை அடைகின்றபோது அடைய வைக்கும் உபாயமும்; அனைத்தும் அறிந்தவன், அனைத்து வலிமையும் கொண்டவன், ஸத்யஸங்கல்பன் போன்ற குணங்களுடன் எந்தவிதமான இடையூறும் இல்லாத பரிபூர்ண சுதந்திரமும் கொண்டவனாக இருத்தல் மூலம் ஆகும்.

எம்பெருமானே ப்ராப்திக்கு உகப்பவன் என்பது எப்படி? தனக்கு உரிய பொருள் ஒன்றை அடையும்போது, அதாவது ஜீவனை அடையும்போது "இவனை அடைந்துவிட்டோம்" என்று எம்பெருமான் மகிழ்கிறான். இத்தகைய ஆத்மாவை எப்போதும் அனுபவித்தபடி உள்ளான். இதனால் இவனே ப்ராப்திக்கு உகப்பவன் ஆகிறான். இதனால் மூன்றும், "அவனே" என்று ஏவகாரத்தில் கூறுவதால் இந்த மூன்றுள் இவனுடன் சேர்வது ஏதும் இல்லை என்றார். "ப்ராப்தாவும் ப்ராபகனும் அவனே" என்பதன் மூலம் எம்பெருமானை அடைவதற்கு வேறு உபாயங்களைக் கைக்கொள்ளும் முயற்சி ஜீவனிடம் இல்லை என்பது உணர்த்தப்பட்டது. "ப்ராப்திக்கு உகப்பவன் அவனே" என்பதன் மூலம் ஸர்வேச்வரனின்

இன்பத்திற்காக தான் உள்ளானே தவிர, தனக்கு என்று எந்தப் பயனும் கொள்வதில்லை என்பது உணர்த்தப்பட்டது.

71. ஸ்வயத்த நிவ்ருத்தி பாரதந்த்ர்ய பலம்; ஸ்வப்ரயோஜந நிவ்ருத்தி சேஷத்வ பலம்.

**அவதாரிகை** - ஆனால் ஜ்ஞாத்ருத்வ கார்யமான கர்த்ருத்த்வ போக்த்ருத்வங்களையுடையவனாகையாலே ஸ்வயத்ந ஸ்வப்ரயோஜநங்களுக்கு அர்ஹனாயிருக்க, இவையிரண்டினுடையவும் நிவ்ருத்தி இவனுக்கெவ்வழியாலே வருகிறதென்கிற சங்கையிலே அத்தையருளிச் செய்கிறார் (ஸ்வயத்ந நிவ்ருத்தி) இத்தியாதி வாக்ய த்வயத்தாலே.

**விளக்கம்** – ஆனால் ஜீவன் ஞானமயமாக உள்ளதால் அந்த ஞானத்தின் செயலாகிய காரியத்தைச் செய்பவனாக இருத்தல், அதற்கான பலனை அனுபவிக்கவல்லவனாக இருத்தல் ஆகிய இரண்டும் கைகூடும் அல்லவோ? இப்படி உள்ளபோது, தான் எந்த ஒரு முயற்சியிலும் இறங்குதல், பலனை அடையும் தகுதி பெற்றிருத்தல் ஆகிய இரண்டும் இவனை விட்டு எவ்விதம் நீங்குகிறது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது ஜ்ஞாத்வத்வ நிபந்தநமான கர்த்ருத்வமுண்டாயிருக்கச் செய்தே பகவத் ப்ராப்திக்குத் தானொரு யத்நம் பண்ணாமலிருக்கையாகிற இந்த ஸ்வயத்ந நிவ்ருத்தி, பராதீந ஸ்வரூப ஸ்தித்யாதிமத்தவமாகிற பாரதந்த்ர்யத்தின் கார்யம்; அப்படியே, போக்த்ருத்வமுண்டாயிருக்கச் செய்தே அத்தலையை ரஸிப்பிக்குமதொழிய தனக்கென்ன ஒன்றில் ரஸமின்றிக்கேயிருக்கையாகிற ஸ்வப்ரயோஜன நிவ்ருத்தி, பராதிசயாதாயகத்வமே வடிவாயிருக்கையாகிற சேஷத்வத்தின் கார்யம். இத்தால் - பாரதந்த்ர்ய சேஷத்வங்களிரண்டும் ஆத்மாவுக்கு ஸ்வரூபமாகையாலே, அவ்வாகாரங்களை யறியவே இவையிரண்டும் தன்னடையே வருமென்றதாய்த்து.

**விளக்கம்** – ஞானம் உள்ளதன் காரணமாக கர்த்தாவாக உள்ள தன்மை ஜீவனுக்கு உண்டு. ஆனால் எம்பெருமானை அடைவதற்கான எந்த முயற்சியும் தானே செய்யாமல் இருத்தல் என்று "தனது முயற்சியில் இருந்து விலகுதல்" என்னும் நிலை எவ்விதம் உண்டாகும் என்றால் – எம்பெருமானுக்கு மட்டுமே வசப்பட்டுள்ள ஆத்மாவின் தன்மை, அதன் நிலை, காரியங்கள் செய்தல் மற்றும் செய்யாமை என்பதான பாரதந்த்ரியத்தின் மூலம் உண்டாகும். இது போன்று பயனை அனுபவித்தல் என்பதும் இவனுக்கு இயல்பாக உண்டு. ஆனால், எம்பெருமானை அனுபவிப்பவனாக்குவது அல்லாமல் தனக்கு என்று எந்தவிதமான சுவையும் இன்றி இருத்தல் என்பதான "தனது பயனில் இருந்து விலகுதல்" என்பது எவ்விதம் உண்டாகும் என்றால் – அவனுக்கு மகிழ்வை ஏற்படுத்துதல் என்பதையே வடிவாகக் கொண்ட அடிமைத்தனத்தின் மூலம் உண்டாகும். இதன் மூலம் ஆத்மாவின் இயல்பான தன்மைகளாக "அவனுக்கு மட்டுமே வசப்படுதல், அவனுக்கு

எப்போதும் அடிமையாக இருத்தல்” என்பவை மட்டுமே உள்ளன என்பதை உணர்ந்தால் மேலே கூறப்பட்ட இரண்டு நிலைகளும் தாமாகவே உண்டாகும் என்கிறார்.

72. ப்ரப்ரயோஜந ப்ரவ்ருத்தி ப்ரயத்நபலம்: த்த்விஷய ப்ரீதி சைதந்யபலம்.

**அவதாரிகை** - ஆனால் இப்படி ஸ்வ்யத்ந ஸ்வப்ரயோஜநங்களிலந்வயமற்றிருக்குமாகில், இவனுடைய ப்ரயத்நத்துக்கும் சைதந்யத்துக்கும் ப்ரயோஜநமென்னென்ன வருளிச் செய்கிறார் (ப்ரப்ரயோஜந) இத்யாதி வாக்ய த்யத்தாலே.

**விளக்கம்** - ஆனால் இவ்விதம் ஒருவன் தனது முயற்சிகள் மற்றும் பலனில் பற்றுகள் இன்றி இருக்கிறான் என வைப்போம். அப்படி என்றால் இவனது முயற்சி மற்றும் ஞானம் ஆகியவற்றின் பயன் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது “அஹம் ஸர்வம் கரிஷ்யாமி”, “வழுவிலா வடிமை செய்யவேண்டும்”, “உனக்கே நாமாட் செய்வோம்” என்கிறபடியே பரனுக்கு ப்ரயோஜநமாகப் பண்ணும் கைங்கர்யரூப ப்ரவ்ருத்தி இவனுடைய ப்ரவ்ருத்த்யுத் யோகரூபமான ப்ராயத்நத்துக்கு ப்ரயோஜநம். “நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி” என்கிறபடியே – அத்தலையிலுகப்புக் குறுப்பாகத் தான் பண்ணுகிற கைங்கர்யத்தாலே அத்யந்த ஹ்ருஷ்டனாயிருக்கிற அந்த பரனை விஷயமாகவுடைத்தான ப்ரீதி, இவனுடைய அசித் வ்யாவ்ருத்தி ரூபமான சைதந்யத்துக்கு ப்ரயோஜநமென்கை. “படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே” என்னக்கடவதிறே. இத்தால் - பாரதந்த்ர்ய சேஷத்வங்களாலே பலித்த ஸ்வயத்ந ஸ்வப்ரயோஜந நிவ்ருத்திகளையுடையனான சேதநனுடைய ப்ரயத்ந சைதந்யங்களுக்கு, பாரதந்த்ர்ய சேஷத்வாநுகுணமாக ப்ரயோஜநங்கள் சொல்லிற்றா ய்த்து.

**விளக்கம்** - இவனால் ஒரு செயலைச் செய்யமுடியும் என்ற முயற்சிக்கான பலன் என்னவென்றால் கீழே உள்ள வரிகளில் உள்ளது போன்று, எம்பெருமானுக்குச் செய்யும் கைங்கர்யமே ஆகும்:

- இராமாயணம் அயோத்யாகாண்டம் (31-25) - அஹம் ஸர்வம் கரிஷ்யாமி – நான் உனக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களும் செய்வேன்
- திருவாய்மொழி (3-3-1) - வழுவிலா வடிமை செய்யவேண்டும்
- திருப்பாவை (29) – உனக்கே நாமாட் செய்வோம்

அசித் வஸ்துவான சரீரத்தைக் காட்டிலும் இவனை வேறுபடுத்திக் காண்பிக்கின்ற இவனது ஞானத்திற்கு என்ன பயன் என்றால், ஸ்தோத்ரரத்னம் (46) – நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி – ஆத்மா உள்ளவரையில் செய்யவேண்டியதான கைங்கர்யங்கள்

அனைத்தையும் செய்து, அதன் மூலம் உன்னை மகிழச் செய்வேன் - என்பதற்கு ஏற்ப, அவனது மகிழ்வுக்காகத் தான் செய்யும் கைங்கர்யங்கள் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தவனாகிய அந்த எம்பெருமானை விஷயமாகக் கொண்ட ப்ரீதியே ஆகும். பெருமாள்திருமொழி (4-9) - படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே – என்றது காண்க. இப்படியாக இவனது பாரதந்த்ர்யம் மற்றும் சேஷத்வம் ஆகிய இரண்டின் மூலம் "தனது முயற்சிகளில் இருந்து விலகுதல் மற்றும் தனக்கே பயன் என்று கொள்ளாமை" ஆகிய இரண்டும் பலிக்கின்றன. இப்படியாக உள்ள இவனுக்கு இவனது முயற்சி மற்றும் ஞானம் ஆகிய இரண்டிற்கும், இவனது பாரதந்த்ர்யம் மற்றும் சேஷத்வம் என்பதற்கு ஏற்றபடி உள்ள பலன்கள் உரைக்கப்பட்டன.

73. அஹமர்த்தத்துக்கு ஜ்ஞாநாநந்தங்கள் தடஸ்தமென்னும்படி தாஸ்யமிறே அந்தரங்க நிரூபகம்.

**அவதாரிகை** - சேஷத்வாதிகளும் ஜ்ஞாத்ருத்வாதிகளும் ஆத்ம தர்மங்களாயிருக்கச் செய்தே, சேஷத்வாதிகளை ப்ரதாநமாக்கி ஜ்ஞாத்ருத்வாதிகளை ததநுகுணமாக யோஜிக்கைக்கு நியாமகமேது? மற்றைப்படி தானானாலோவென்ன வருளிச்செய்கிறார் (அஹமர்த்தத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – சேஷத்வம் போன்ற பலவும், அனைத்தையும் அறிந்து கொள்கின்ற தன்மை போன்ற பலறும் ஆத்மாவின் தர்மங்களாக உள்ளன. இப்படி உள்ளபோது சேஷத்வம் போன்ற பலவற்றை முக்கியம் என்று வைத்து, அறிந்து கொள்ளும் தன்மை போன்றவற்றை அந்த சேஷத்வம் உள்ளிட்டவற்றுக்குத் தகுதியான வைக்கின்ற காரணம் என்ன? அளிக்கின்ற தன்மைகள் போன்றவற்றை முக்கியமாக வைத்து, அதற்கு உறுப்பாக சேஷத்வம் போன்றவற்றை வைத்தால் என்ன என்றும் கேள்விகளுக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (அஹமர்த்தமாவது) ப்ரத்யக்த்வேந அஹம் புத்தி வ்யவஹாரார்ஹமான ஆத்ம வஸ்து; ஜ்ஞாநாநந்தங்களாவன - தத்கதமான ப்ரகாசத்வாநுகூலத்வங்கள்; "ஜ்ஞாநாநந்தமயஸ் த்வாத்மா", "ஸ்வரூபமணுமாத்ரம் ஸ்யாத் ஜ்ஞாநாநந்தைக லக்ஷணம்" என்று இவற்றையிட்டிறே வஸ்துவை நிரூபிப்பது. (தடஸ்தமென்னும்படி) என்றது - பஹிரங்க நிரூபகதயா புறவிதழென்னும்படி யென்றபடி. (தாஸ்யமாவது) – சேஷத்வம். இது (அந்தரங்க நிரூபகமாகையாவது) - பகவத் ஸ்வரூபத்துக்கு ப்ரகாரதயா சேஷமாய்க் கொண்டு தன் ஸத்தையாம்படியிருக்கும் வஸ்துவாகையாலே, ப்ரதமம் சேஷத்வத்தை யிட்டு நிரூபித்துக்கொண்டே மற்றுள்ள ஆகாரங்களையிட்டு நிரூபிக்க வேண்டும்படி யிருக்கை. இத்தால் நிரூபகமாகையாவது - வஸ்துவை வஸ்த்வந்தரத்திற் காட்டில் வ்யாவர்த்திப்பிக்குமதாகையாலே, தாஸ்யம் ஈச்வர வ்யாவர்த்தகமாய், ஜ்ஞாநாநந்தங்கள் அசித்வ்யாவர்த்தகங்களாயிருக்கும்; இப்படி நிரூபக த்வயமும் வஸ்துவுக்கு அபேக்ஷிதமாயிருக்கச்செய்தே பகவத் ப்ரகாரதயா லப்த ஸத்தாகமான வஸ்துவுக்கு

அசித்திற் காட்டில் உண்டான வாசியை யறிவிக்கிற மாத்ரமான ஜ்ஞாநாநந்தங்கள் புறவிதழாம்படி ப்ரகாரத்வ ப்ரயுக்தமான சேஷத்வமே அந்தரங்க நிரூபகமாயிருக்குமென்றதாய்த்து. (இறே) என்று – இவ்வர்த்தத்தில் ப்ரமாணப்ரஸித்தி. ப்ரதமம் சேஷத்வத்தையிட்டு வஸ்துவை நிரூபித்துக்கொண்டு, பின்னை ஜ்ஞாநாநந்த லக்ஷணமுமாய் ஜ்ஞாந குணகமுமாய் அசித்வ்யாவ்ருத்தமுமாயிருக்குமென்னுமிடத்தை த்ருதீய பதத்தாலே நிரூபிக்கிற ப்ரணவமும், ஸமஸ்த வஸ்துக்களும் ஸர்வேச்வரனுக்கு ப்ரகாரமென்னுமத்தை ப்ரதிபாதிக்கிற நாராயண பதமும், முதலானவை இதில் ப்ரமாணம். ”தாஸ பூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவச” இத்யாதிகளுமுண்டிறே. ”அடியேனுள்ளான்” என்றாரிறே ஆழ்வார். திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீபாதத்திலே ஆறுமாஸம் ஆழ்வான் ஸேவித்து நின்று மஹா நிதியாகப் பெற்ற அர்த்தமிறேயிது. இப்படி சேஷத்வம் அந்தரங்க நிரூபகமாகையாலே நிரூபித ஸ்வரூப விசேஷணங்களான ஜ்ஞாத்ருத்வாதிகளையே ததநு குணமாக யோஜிக்க வேணுமென்று கருத்து.

**விளக்கம்** - “அஹம் அர்த்தம்” என்றால் என்ன? தன்னைத்தானே அறியவல்ல தன்மை காரணமாக ”நான் என்ற எண்ணம், நான் என்று கூறவைப்பதற்கும்” உரிய விஷயமாக உள்ள ஆத்ம வஸ்துவாகும். “ஞான ஆநந்தங்கள்” – அந்த ஆத்மாவின் ஞானம் (ப்ரகாசம்) மற்றும் ஆனந்தங்கள் ஆகும். கீழே உள்ள வரிகள் மூலமாக ஆத்மாவை நிரூபிப்பர்:

- ஜ்ஞாநாநந்தமயஸ் த்வாத்மா – ஞானம் மற்றும் ஆனந்தம் ஆகியவற்றை வடிவமாகக் கொண்ட ஆத்மா
- ஸ்வரூபமணுமாத்ரம் ஸ்யாத் ஜ்ஞாநாநந்தைக லக்ஷணம் – ஆத்மா அணுபரிணாமமே உள்ளது, அது ஞானம் மற்றும் ஆனந்தமயமானது.

”தடஸ்தம்” - புறத்திலும் நிரூபகமாக உள்ளதால் புறவிதழ் என்னும்படி உள்ள தன்மை. ”தாஸ்யம்” – சேஷத்வம் கூறப்பட்டது. ”அந்தரங்க நிரூபகம்” - எம்பெருமானின் ஸ்வரூபத்திற்குச் சரீரமாக ஆத்மா உள்ளதால், அவனது சேஷமாய் நின்றால் மட்டுமே தனது இருப்பு உள்ளது என்றபடி உள்ளது ஆத்மாவாகும். எனவே முதலில் சேஷத்வத்தைக் கூறி நிரூபித்த பின்னரே மற்ற தன்மைகளைக் கொண்டு நிரூபித்தல் வேண்டும் என்றாகிறது. நிரூபகம் என்றால் ஒரு வஸ்துவை மற்றொரு வஸ்துவைக் காட்டிலும் வேறானது என்று வேறுபடுத்திக் காட்டுதல் ஆகும். ஆகவே சேஷத்வம் என்பது ஆத்மாவை எஜமானனாகிய எம்பெருமானிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது, ஞானம் மற்றும் ஆனந்தம் ஆகியவை ஆத்மாவை அசித் வஸ்துக்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது என்று அறிக. இவ்விதம் மேலே கூறப்பட்ட இரண்டுவிதமான நிரூபகங்களும் ஆத்மாவிற்கு அவசியமானவை ஆகும். ஆனால் எம்பெருமானின் சரீரம் என்னும் தன்மையால் மட்டுமே தான் தரிக்கின்ற நிலையைப் பெற்றது ஆத்மாவாகும். இதனால் அசித் வஸ்துவைக் காட்டிலும் ஆத்மா வேறுபட்டது என்பதை அறிவிக்கின்ற ஞானம் மற்றும் ஆனந்தம் ஆகிய இரண்டும் புறஇதழ் போன்றவையே ஆகும்.

எம்பெருமானின் சரீரம் என்ற தன்மை காரணமாக உண்டான அடிமைத்தனம் என்பதே அந்தரங்கமாகும் என்று அறிய வேண்டும். “இறே” என்ற பதம் மூலம் இந்தப் பொருளின் ப்ரமாணங்களைக் கூறுகிறார். ஆத்மாவிற்கு சேஷத்வம் என்பதே அந்தரங்கம், ஆனந்தம் மற்றும் ஞானம் ஆகிய இரண்டும் வெளி அளவில் மட்டுமே என்பதற்கான ப்ரமாணம் என்ன? சேஷத்வத்தை முதலில் கூறிவிட்டு, அதன் பின்னர் ஞானம் மற்றும் ஆனந்தம் ஆகியவையாக, ஞானம் என்னும் குணம் உள்ள, அசித் வஸ்துவைக் காட்டிலும் மாறுபட்ட ஆத்மா என்பதை தனது மூன்றாம் எழுத்து மூலமாக நிரூபிக்கின்ற ப்ரணவம்; அனைத்தும் ஸர்வேச்வரனின் சரீரம் என்று கூறுகின்ற நாராயண என்னும் பதம் – ஆகிய இரண்டும் இதற்கு ப்ரமாணங்கள் ஆகும். ஹாரித ஸ்ம்ருதி - தாஸ பூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவச - பரமபுருஷனாக உள்ள எம்பெருமானுக்கு அனைத்து ஆத்மாக்களும் இயற்கையிலேயே அடிமைகள் ஆகும்; இது போன்று ஆத்மாக்களுக்கு இந்தச் சரீரத்துடன் கட்டுப்பட்ட நிலையிலும் மோக்ஷத்தைக் காட்டிலும் வேறான தன்மை ஏதும் இல்லை - என்பது ப்ரமாணம் ஆகும். திருவாய்மொழி (8-8-2) - அடியேன் உள்ளான் – என்றது. திருக்கோட்டியூர் நம்பியின் திருவடிகளில் கூரத்தாழ்வான் ஆறு மாத காலங்கள் வணங்கி நின்று அடைந்த பொக்கிஷம் இந்தக் கருத்தே ஆகும். ஆகவே சேஷத்வம் என்பது அந்தரங்கமாக உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டதால், இவ்விதம் நிரூபிக்கப்பட்ட ஆத்மாவின் தன்மைகளான ஞானம் கொண்ட தன்மை போன்றவை, இந்தகைய சேஷத்வத்திற்குத் தகுதியானவை என்று உணர வேண்டும்.

74. இதுதான் வந்தேறியன்று.

**அவதாரிகை** - இது ஸ்வரூப நிரூபகமாகில் ஆத்மாவுள்ளவன்றே தொடங்கியுண்டாய்ப் போரவேண்டாவோ, இதுக்கு முன்பின்றிக்கே இப்போதுண்டாகையாலும், லோகத்திலிதுதான் ஔபாதிகமாய் நடக்கக் காண்கையாலும், தாஸ்யமாத்மாவுக்கு வந்தேறியன்றேவென்னவருளிச்செய்கிறார் (இதுதான் வந்தேறிய யன்று) என்று தொடங்கி.

**விளக்கம்** - இத்தகைய சேஷத்வம் (அடிமைத்தனம்) என்பது ஆத்மாவின் ஸ்வரூபத்தை நிரூபிப்பதாக உள்ளதாக என்றால், இத்தகைய கைங்கர்யம் என்பது ஆத்மா இருக்கும் போதே தொடங்கியிருக்க வேண்டும் அல்லவோ? இதற்கு முந்தைய காலத்தில் இல்லாமல் இப்போது உள்ளதாலும், இந்த உலகில் ஏதோ ஒரு காரணத்தின் பின்னரே கைங்கர்யம் உண்டாவதாலும், இத்தகைய அடிமைத்தனம் என்பது ஆத்மாவிற்கு இடையில் வந்து சேர்ந்த தன்மையே அல்லவோ? இந்தக் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இதுதான்) என்று ப்ரக்ருதமான தாஸ்யத்தைப் பராமர்சிக்கிறது. (வந்தேறி யாவது) - ஆகந்துகம். (அன்று) என்கையாலே – ஸ்வாபாவிகமென்றபடி. ”ஸ்வோஜ்

ஜிவநேச்சா யதி தே ஸ்வ ஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி, ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர", "நானு முனக்குப் பழவடியேன்" என்னக்கடவதிறே.

**விளக்கம்** – "இதுதான்" என்னும் பதம், மேலே கூறப்பட்ட அடிமைத்தனத்தை உரைக்கிறது. "வந்தேறி" என்றால் நடுவில் வந்து சேர்ந்த தன்மை என்பதை உணர்த்துகிறது. "அன்று" என்பதால் அடிமைத்தனம் என்பது "நடுவில் வந்தது அல்ல. இயல்பாகவே உள்ளது" என்று உணர்த்தப்பட்டது. கீழே உள்ள வரிகள் காண்க:

- ஸ்வோஜ் ஜிவநேச்சா யதி தே ஸ்வ ஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி, ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர - உன்னுடைய ஆத்மா பிழைக்கவேண்டும் என்று எண்ணினால், ஆத்மாவானது "இருக்கிறது" என்ற நிலை ஏற்படவேண்டும் என்று விரும்பினால் நீ நினைக்கவேண்டியது இரண்டாகும். அவை: ஆத்மாவிற்கு உள்ள அடிமைத்தன்மை, ஸ்ரீஹரிக்கு உள்ள எஜமானத்தன்மை என்பதாகும்.
- திருப்பல்லாண்டு (11) - நானும் உனக்கு பழவடியேன்

75. ஸ்வாதந்த்ர்யமும் அந்யசேஷத்வமும் வந்தேறி.

**அவதாரிகை** - ஆனால், வந்தேறியாக விவக்ஷிதங்களெவை என்ன? இதுக்கு விரோதி களானவையென் றருளிச்செய்கிறார் (ஸ்வாதந்த்ர்யமும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – அடிமைத்தனம் என்பது ஆத்மாவிற்கு இயல்பானது என்றாலும், இத்தகைய தன்மை இடையில் வந்து சேர்ந்த ஒன்று எனக் கூறும்படியாகச் செய்பவை எவை என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஸ்வாதந்த்ர்யமாவது நாநெனக்குரியனென்றிருக்கை. அந்ய சேஷத்வ மாவது – பகவதந்ய விஷயங்களிலே தொண்டுபட்டிருக்கை. இவற்றை வந்தேறி யென்கிறது - இவனுடைய அவித்யாதிகளடியாக வந்தவையாகையாலே.

**விளக்கம்** – "ஸ்வாதந்த்ரியம்" என்றால் "நான் எனக்கு உரியவன்" என்று இருத்தல் ஆகும். "அந்யசேஷத்வம்" என்றால் எம்பெருமான் நீங்கலாக உள்ள மற்ற விஷயங்களில் ஈடுபட்டிருத்தல் ஆகும். இவை இரண்டும் "வந்தேறி" என்றது - இவனது அறியாமை காரணமாக இவை ஏற்பட்டதால் ஆகும்.

76. சேஷத்வ விரோதி ஸ்வாதந்த்ர்யம்; தச்சேஷத்வ விரோதி ததிதர சேஷத்வம்.

**அவதாரிகை -** இவை இதுக்கு விரோதிகளானமையை உபபாதிக்கிறார்மேல் (சேஷத்வ விரோதி) என்று தொடங்கி.

**விளக்கம் –** இவை இரண்டும் அடிமைத்தனத்திற்கு எவ்விதம் விரோதிகளாக உள்ளன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (சேஷத்வ விரோதி ஸ்வாதந்த்ர்யம்) என்றது - நானெனக்குரியே னென்றி ருக்குமளவில் ஒரு விஷயத்திலும் சேஷத்வமில்லாமையாலே ஸ்வாதந்த்ர்யம் சேஷத்வத்தை யுதிக்க வொட்டாதென்றபடி. (தச்சேஷத்வ விரோதி ததிதர சேஷத்வம்) என்றது ஸ்வாதந்த்ர்யங் குலைந்து சேஷத்வத்துக் கிசைந்தாலும் பகவத்வ்யதிரிக்த விஷயங்களிலே ஒன்றுக்குத் தன்னை சேஷமென்றிருக்குமது நிருபாதிக சேஷியாக அவன் பக்கல் சேஷத்வத்தைத் தலையெடுக்க வொட்டா தென்றபடி.

**விளக்கம் –** “சேஷத்வ விரோதி ஸ்வாதந்த்ர்யம்” என்றது ஏன்? “நான் எனக்கே உரியவன்” என்று இருக்கும்போது மற்ற எதற்கும் அடிமையாக இல்லை என்றாகிறது; இதனால் “தனக்கு மட்டுமே உரியன்” என்பதன் மூலம் அடிமைத்தனம் தோன்றாமல் இருந்துவிடும் என்பதால் விரோதியாகிறது. “தத்சேஷ” என்றது ஏன்? “எனக்கே உரியன்” என்ற நிலை மாறிப்போய் அடிமைத்தனத்தில் நின்றபோதிலும், எம்பெருமானை விடுத்து மற்றொரு வஸ்துவிற்குத் தான் அடிமை என்ற நிலையில் இருக்கக்கூடும்; இப்படிப்பட்ட நிலையானது, எந்தவிதமான காரணமும் இல்லாமலேயே நமக்கு எஜமானனாக உள்ள எம்பெருமானிடம் அடிமைத்தனம் கொள்வதைத் தடுத்துவிடும்.

77. அஹங்காரமாகிற ஆர்ப்பைத் துடைத்தால் ஆத்மாவுக் கழியாதபேர் அடியானென்றிறே.

**அவதாரிகை -** (இதுதான் வந்தேறியன்று) என்று தொடங்கி உபபாதித்த அர்த்தத்தை முதலிக்கிறார்மேல் (அஹங்காரம்) என்று தொடங்கி.

**விளக்கம் -** “இதுதான்” என்று தொடங்கும் சூர்ணை 74 முதல், கடந்த சூர்ணை முடிய உள்ளவற்றின் ஆழ்பொருளை விவரிக்கிறார்.

**வ்யாக்யானம் -** அஹங்காரந்தான், தேஹாத்மாபிமாநரூபமாயும் ஸ்வாதந்த்ர்யரூபமாயும் இரண்டு வகைப்பட்டிறேயிருப்பது; அதில் இங்கு ஸ்வாதந்த்ர்யத்தைச் சொல்லுகிறது. (ஆர்ப்பு) என்கையாலே அதினுடைய திரோதாயகத்வமும் ஆகந்துகத்வமும் தோற்றுகிறது; அத்தை (துடைக்கையாவது) ஸதாசார்யோபதேசாதிகளாலே ஸவாஸநமாகப் போக்குகை. (ஆத்மாவுக்கழியாத்பேர் அடியான்) என்றது, ஔபதிகமான வர்ணாச்ரமாதிகளாலே வந்து அழிந்துபோம் நாமங்கள் போலன்றிக்கே, யாவதாத்மாநுவர்த்தியான நாமம்

தாஸனென்னுமதென்றபடி. (இறே) என்று இவ்வர்த்தத்தில் ப்ரமாணப்ரஸித்தி. "தாஸபூதாஸ் ஸ்வத:", "ஆத்மதாஸ்யம்" இத்யாதிகள் இவ்விடத்தில் விவக்ஷிதங்கள். ஆகையால், ஸ்வாதந்த்ர்யாதிகள் ஔபாதிகம், தாஸ்யம் ஸ்வாபாவிகமென்னக் குறையில்லையென்று கருத்து.

**விளக்கம்** - அஹங்காரம் என்பது சரீரத்தையே ஆத்மாவாக என்னுதல், "நான் எனக்கு மட்டுமே உரியன்" என்பதான சுதந்திரமான எண்ணம் என்று இருவிதமாக இருக்கும். இவற்றில் இங்கு அஹங்காரம் என்பதன் மூலம் ஸ்வாதந்த்ர்யம் கூறப்பட்டுள்ளது. "ஆர்ப்பு" என்பதன் மூலம் இத்தகைய அஹங்காரம் என்பது நன்மையை மறைக்கும் தன்மை மற்றும் இடையில் வந்து சேர்ந்த தன்மை ஆகியவற்றை இயல்பாக உடையது எனப்பட்டது. இதனை "துடைத்தல்" என்றால் சிறந்த ஆசார்யன் உபதேசம் மூலமாக அதன் வாசனையுடன் நீக்குதல் ஆகும். "ஆத்மாவுக்கு" என்பதன் மூலம் உணர்த்தப்பட்டது என்ன? குறிப்பிட்ட சில காரணங்களால் நமக்குப் பல பெயர்கள் ஏற்படும்; ஆனால் ஆத்மா என்பது உள்ளவரையில் அதன் மாறாத பெயர் "தாஸன்" என்பதாகும். இதற்குப் பின்வரும் ப்ரமாணங்கள் உள்ளன:

- தாஸபூதாஸ் ஸ்வத: – அனைத்து ஆத்மாக்களும் இயல்பாகவே அடிமைத்தனம் கொண்டவை
- ஆத்மதாஸ்யம் - ஆத்மாவிற்கு அடிமைத்தனம் என்பது இயல்பானது.

ஆகவே ஸ்வாதந்த்ர்யம் போன்ற தன்மைகளே இடையில் ஆத்மாவிடம் வந்து சேர்பவை ஆகும், அடிமைத்தனம் என்பது ஆத்மாவிற்கு இயல்பாகவே உள்ளது என்று கருத்து.

78. க்ராமகுலாதிகளால் வரும் பேர் அநர்த்தஹேது.

**அவதாரிகை** - அதுவென்? க்ராமகுலாதிகளால் வரும் வ்யபதேசமன்றோ நடந்து போகுகிறதென்ன வருளிச் செய்கிறார் (க்ராம) இத்யாதியால்.

**விளக்கம்** – மேலே உள்ள சூர்ணையில் உள்ளபடி ஆத்மாவிற்கு "தாஸன்" என்பது மட்டுமே நிலையான பெயர் என்று எவ்விதம் கூற இயலும்? அவரவர்களின் ஊர் பெயர்கள், குலப் பெயர்கள் ஆகியவை அல்லவோ வழங்கப்படுகின்றன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, க்ராமகுலாதி வ்யபதேசம் அஹங்கார ஜநகமாகையாலே ஸ்வரூபஹாநிரூபாநர்த்தகரமென்றபடி. ஆகையால், அவற்றாலிவன் வ்யபதேஷ்டவ்ய னல்லனென்று கருத்து

**விளக்கம்** – ஊரின் பெயர்கள், குலத்தின் பெயர்கள் ஆகியவற்றால் கூறப்படும்போது ஒருவனுக்கு "நான்" என்னும் அஹங்காரம் உண்டாகிவிடும். இதனால் இவை ஸ்வரூபத்தின் அழிவு என்பதை உண்டாக்கிவிடும். எனவே அப்படிப்பட்ட பெயர்கள் மூலம் ஒருவன் அழைக்கப்பட வேண்டியவன் அல்லன் என்று கருத்து.

79. ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்ய:

**அவதாரிகை** - உகதார்த்தத்துக்கு ப்ரமாணம் காட்டுகிறார் மேல் (ஏகாந்தீ வ்யபதேஷடவ்ய:) என்று.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் கூறப்பட்டதற்கு ஏற்ற ப்ரமாணங்களைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** - "ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராமகுலாதிபி:, விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ் தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி". இத்தால் – பகவதேக பரனாயிருக்குமவன் க்ராமகுலாதி ஸம்பந்தங்களையிட்டுச் சொல்லப்படுமவனல்லன், பகவத் ஸம்பந்தத்தையிட்டுச் சொல்லப்படுமவன்; அவனுக்கு அந்த க்ராமகுலாதிகளெல்லாம் பகவானேயென்கிறது. (ப்ராப்தாவும்) இத்யாதி வாக்யத்திலே இச்சேதநனுடைய ஸ்வயத்ந நிவ்ருத்த்யாதிகள் தோற்றினபடியாலே இவற்றுக்கு நிதாநமின்னதென்றும், ஏவம் பூதனுடைய ப்ரயத்ந சைதந்ய ப்ரயோஜநமும் சேஷத்வாதி ப்ராதாந்யஹேது ஆத்ம ஸ்வரூபத்தினுடைய தாஸ்யாந்தரங்க நிரூபகத்வமென்றும் இப்படியிருக்கிறவிது ஸ்வாபாவிகம், ஏதத் விரோதிகள் ஔபாதிகமென்றும், தந்நிவ்ருத்தியிலாத்மாவுக்கு தாஸ்யமே நித்ய நிரூபகமாயிருக்குமென்கையாலே யிவ்வர்த்தத்தை மூதலித்தும், க்ராம குலாதிகளாலிவன் வ்யபதேஷ்டவ்யனல்லனென்றும், உத்தார்த்தத்தில் ப்ரமாணமுஞ் சொல்லுகையாலே, (ஸ்வயத்ந நிவ்ருத்தி) இத்யாதி வாக்யம் தொடங்கியிவ்வளவும் ப்ராஸங்கிகம்.

**விளக்கம்** - விஷ்வக்ஸேந ஸம்ஹிதை – ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராமகுலாதிபி:, விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ் தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி – ப்ரபன்னன் ஒருவன் தனது குலம், கிராமம் போன்றவற்றைக் கொண்டு அழைக்கப்படுபவன் அல்லன்; அவன் எம்பெருமானுடைய தொடர்பை மட்டுமே கொண்டு அழைக்கப்படவேண்டியவன் ஆவான்; அவனுக்கு குலம், கிராமம் போன்றவை பகவானே ஆவான் - என்றது. ஆகவே பகவானுக்கு மட்டுமே வசப்பட்டு நிற்கும் ப்ரபன்னன் ஒருவன் கிராமம், குலம் போன்ற அடைமொழிகளால் அழைக்கப்பட வேண்டியவன் அல்லன். அவன் பகவத் ஸம்பதத்தை மட்டுமே கூறி அழைக்கப்பட வேண்டியவன் ஆவான். அந்தக் கிராமம், குலம் போன்ற அனைத்துமாகப் பகவானே உள்ளான். "ஸ்வயத்ந" என்று தொடங்கும் சூர்ணை-71 முதல், இந்தச் சூர்ணை முடிய உள்ள அனைத்தும் ப்ராஸங்கிகம் ஆகும். ஏன்? "ப்ராப்தா" என்று

தொடங்கும் சூர்ணை – 70ல்; தனது முயற்சிகள் போன்ற பலவற்றிலிருந்தும் இவன் நீங்கியிருப்பது முதலானவை வெளிப்பட்டதால் கீழே உள்ள பலவும் கூறப்பட்டன:

- இவற்றுக்கு நிதானம் இன்னது என்றும்
- இப்படிப்பட்டவனின் முயற்சி மற்றும்அறிவு ஆகியவற்றின் பயன் இத்தகையது என்றும்
- ஆத்ம ஸ்வரூபத்தின் அடிமைத்தன்மை என்பது அந்தரங்க நிரூபகமாக உள்ள தன்மையால் என்ற காரணத்தினால் அடிமைத்தனம் என்பது முக்கியமாகக் கொள்ளப்பட்டது என்றும்
- இப்படிப்பட்ட அடிமைத்தனத்துடன் உள்ள தன்மையே ஆத்மாவிற்கு இயல்பானது என்றும், அடிமைத்தனத்திற்கு விரோதிகளாக உள்ள மற்ற தன்மைகள் வந்து அடைந்தவை என்றும்
- அஹங்காரம் போன்றவை விலகினால் ஆத்மாவிற்கு அடிமைத்தனமே ஸ்வரூபம் என்பது நிரூபகமாகும் என்பதால் மேலே உள்ளதை விளக்கியும்
- கிராமம், குலம் போன்றவற்றால் இவன் வழங்கப்படத்தக்கவன் அல்லன் என்றும், இவ்விதம் கூற ப்ரமாணம் உண்டு என்றும்

பலவிதமாக உரைக்கப்பட்டன.

**வ்யாக்யானம் -** ஆக, இப்ப்ரகரணத்தால் ப்ரபத்திக்கு தேசாதிநியமங்களில்லை, விஷய நியமமேயுள்ளதென்னுமிடமும், அவ்விஷயந்தானின்னதென்னுமிடமும் அவ்விஷயத்தி னுடைய வைலக்ஷண்யமும், அதில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகளுடைய த்ரைவித்யமும், ப்ரபக்தியையுபாயமாக்கினால் வருமவத்யமும், ப்ரபத்தி தன்னுடைய ஸ்வரூபாதிகளும், ப்ரபத்தவ்யனே உபாயமென்னுமிடமும் ப்ரதிபாதிக்கப்பட்டது.

**விளக்கம் -** ஆகவே இந்த ப்ரகரணத்தில் கீழே உள்ள பலவும் கூறப்பட்டன:

- ப்ரபத்திக்கு காலம், தேசம் போன்ற கட்டுப்பாடு இல்லை, விஷய நியமம் மட்டுமே உள்ளது
- அந்த விஷயம் இன்னது
- அந்த விஷயத்தின் மேன்மையும் சிறப்பும் இன்னது
- அந்த விஷயத்தில் ப்ரபத்தி செய்கின்ற அதிகாரியின் மூன்று பிரிவுகள்
- ப்ரபத்தி செய்கின்ற அதிகாரியின் சிறப்பு
- ப்ரபத்தியை உபாயம் என்று கொண்டால் ஏற்படும் தோஷம்
- ப்ரபத்தியின் தன்மைகள்
- ப்ரபத்திக்கு விஷயமாக உள்ள எம்பெருமானே உபாயம்

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த
ஶ்ரீவசனபூஷணத்தில்
இரண்டாம் ப்ரகரணமான உபாய ப்ரகரணம்
ஸம்பூர்ணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகள் தஞ்சம் அடைந்த நம்
உடையவர் திருவடிகளே சரணம்

உடையவர் திருவடிகள் சரணம் புகுந்த
ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

பிள்ளைலோகாசார்யர் திருவடிகள் சரணம் புகுந்த
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்



ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

( இதற்கு ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யான மூலம், எளிய தமிழ்நடை)

## மூன்றாம் ப்ரகரணம்

## (அதிகாரி நிஷ்டா க்ரமம்)

## (சூர்ணைகள் 80 – 307)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

80. உபாயத்துக்கு, பிராட்டியையும் த்ரௌபதியையும் திருக்கண்ணமங்கை யாண்டானையும் போலேயிருக்கவேணும்; உபேயத்துக்கு, இளையபெருமாளையும் பெரிவுடையாரையும் பிள்ளைதிருநறையூரரையரையும் சிந்தயந்தியையும் போலேயிருக்க வேணும்.

**அவதாரிகை** - அநந்தரம், அதிகாரி சோதநம் பண்ணுகிறது. உபாயம் உபேயார்த்தமாகையாலும், "உபேயத்திலுகப்பும்" என்றும், "பரப்ரயோஜநப்ரவ்ருத்தி ப்ரயத்நபலம் தத்விஷயப்ரீதி சைதந்யபலம்" என்றும் உபேயாதிகாரமும் கீழ் ப்ரஸக்தமாகையாலும், த்வயநிஷ்டனானவதிகாரிக்கு உபயமும் அபேக்ஷிதமாகையாலும், உபாயோபேயாதிகாரங்களில் இச்சேதநனின்னவின்னபடி யிருக்கவேணு மென்னுமத்தை தத்தந்நிஷ்ட்டரை நிதர்சநமாக்கிக்கொண்டருளிச்செய்கிறார் (உபாயத்துக்கு) இத்யாதி வாக்ய த்வயத்தாலே.

**விளக்கம்** – அடுத்து அதிகாரியின் தன்மைகள் எப்படி இருக்கவேண்டும் என்று அருளிச்செய்கிறார். அதாவது, உபாயத்துக்கு ஏற்ற அதிகாரம் பெறவேண்டும் என்றால் எப்படி இருக்கவேண்டும், உபேயத்துக்கு ஏற்ற அதிகாரம் பெறவேண்டும் என்றால் எப்படி இருக்கவேண்டும் என்பதை உரைக்கிறார். இவ்விதம் உபாயம் என்பது உபேயத்தின் பொருட்டே உள்ளபோதிலும், கீழே உள்ள சூர்ணைகள் மூலம் இவற்றுக்கு உரிய அதிகாரம் தனித்தனியாக உரைக்கப்பட்டதால் இவ்விதம் அதிகாரிகளின் தன்மைகளையும் தனித்தனியே அருளிச்செய்கிறார்:

- சூர்ணை 65 - உபேயத்திலுகப்பும்
- சூர்ணை 72 - பரப்ரயோஜநப்ரவ்ருத்தி ப்ரயத்நபலம் தத்விஷயப்ரீதி சைதந்யபலம்

மேலே உள்ள இரண்டாலும் உபேயத்திற்கு உரிய அதிகாரம் கூறப்பட்டன. மேலும் த்வயத்தில் உபாயம் மற்றும் உபேயம் என்ற இரண்டும் கூறப்பட்டன. எனவே இந்தச் சூர்ணையில் உபாய மற்றும் உபேய அதிகாரங்களில் நின்றவர்களை உவமையாக எடுத்துக்காட்டுகிறார்.

**வ்யாக்யானம்** - (உபாயத்துக்கு) என்றது, உபாயத்துக்கதிகாரியாம்போதென்றபடி, உபாயாதிகாரத்துக்கென்னவுமாம். அப்படியே (உபேயத்துக்கு) என்றதுவும். (உபாயத்தில்) என்று பாடமானபோது, உபாயவிஷயத்திலென்றபடி, இப்படியே மற்றையதுவும்.

**விளக்கம்** – “உபாயத்துக்கு” என்பதன் மூலம் “உபாயம் மூலம் கிட்டும் பலனைப் பெறுவதற்கான தகுதியைப் பெற்ற ஒருவனாகும்போது” என்பது உணர்த்தப்பட்டது. அல்லது உபாயத்தின் அதிகாரத்திற்கு என்றும் உரைக்கலாம். ”உபேயத்துக்கு” என்பதன் மூலம் “உபாயத்தினால் பெறும் பலனை அடைவதற்கு முன்பாக இருக்கவேண்டிய தகுதி” என்பதாகும். “உபாயத்தில்” என்று சூர்ணையைப் படித்தால் “உபாய விஷயத்தில்” என்று கொள்ளவேண்டும். “உபேயத்தில்” என்று சூர்ணையைப் படித்தால் “உபாய விஷயத்தில்” என்று கொள்ளவேண்டும். (சூர்ணையில் பிராட்டி என்பது சீதையையும், பெரிய உடையார் என்பது ஜடாயுவையும் குறிக்கும்).

81. பிராட்டிக்கும் த்ரௌபதிக்கும் வாசி, சக்தியும் அசக்தியும்.

**அவதாரிகை** – அவர்களைப் போலேயிருக்கவேணுமென்றதின் கருத்தை தர்சிப்பிக்கைக்காக, அவர்கள் தங்கள்படிகளையடைவேயருளிச் செய்கிறார் மேல். அதில் பிராட்டியுடையவும் த்ரௌபதியுடையவும் படிகளையருளிச்செய்கைக்குடலாக ப்ரதமத்திலே உபயர்க்கும் வாசியையருளிச்செய்கிறார் (பிராட்டிக்கும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – அவர்கள் போன்று இருக்கவேண்டும் என்று கூறுவதன் பொருள் என்ன என்பதை விளக்கும் பொருட்டு அவர்களின் தன்மைகளை அருளிச்செய்கிறார். இவர்களில் சீதை மற்றும் திரௌபதி ஆகிய இவர்களின் தன்மைகளை அருளிச் செய்யும் பொருட்டு தொடங்கி, அதற்கு முன்பாக இவர்களுக்கு உள்ள வேறுபாட்டினை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “தத் தஸ்ய ஸத்ருசம் பவேத்” என்றிருந்த பிராட்டிக்கும் ”ரக்ஷமாம்” என்ற த்ரௌபதிக்கும் தம்மில்வாசி, ”சீதோ பவ” என்று நெருப்பை நீராக்கினாப்போலே ”தக்தோ பவ” என்று விரோதிவர்க்கத்தை பஸ்மமாக்கித் தன்னை ரக்ஷித்துக் கொள்ளவல்ல சக்தியுண்டாகையும், ஸ்வயத்நத்தாலே விரோதிகளைத் தள்ளித் தன்னை நோக்கிக்கொள்ளப் பார்த்தாலும் நோக்கிக்கொள்ளுகைக் கீடான சக்தி தனக்கில்லாமையுமென்கை.

**விளக்கம்** – இராமாயணம் ஸுந்தரகாண்டம் (39-30) – தத் தஸ்ய ஸத்ருசம் பவேத் - என்னை இங்கிருந்து அவரே அழைத்துப் போகும் செயல் மட்டுமே அவருக்கு ஏற்றதாக இருக்கும் – என்று சீதை இருந்தாள். மஹாபாரதம் - ரக்ஷமாம் – என்னைக் காப்பாய் – என்று திரௌபதி இருந்தாள். இவர்கள் இருவருக்கும் உள்ள வேறுபாடு என்ன? ஸுந்தரகாண்டம் (53-29) - சீதோ பவ: - குளிர்ந்திருத்தல் வேண்டும் – என்று நெருப்பை நீராக்குவது போன்று, தக்தோ பவ - எரிந்து சாம்பலாக மாறவேண்டும் - என்று விரோதியை எரித்துத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் வலிமை பிராட்டிக்கு உண்டு. தன்னுடைய முயற்சியால் தனது விரோதிகளைத் தன் அருகில் வரவிடாமல் தடுத்தும்,

தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முயலுதலும் இயலாமல், இதற்குத் தேவையான வலிமை இன்றி திரௌபதி இருந்தாள்.

82. பிராட்டி ஸ்வசக்தியை விட்டாள்; த்ரௌபதி லஜ்ஜையை விட்டாள்; திருக்கண்ணமங்கையாண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான்.

**அவதாரிகை** - ஏவம்பூதரானவர்கள் செய்தவைதன்னையருளிச்செய்கிறார் (பிராட்டி ஸ்வசக்தியை விட்டாள், த்ரௌபதி லஜ்ஜையை விட்டாள்) என்று.

**விளக்கம் -** இவர்கள் செய்தது என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஸ்வசக்தியை விடுகையாவது) – நாயகரானபெருமாள் ரக்ஷிக்குமத்தனையல்லது நம்முடைய சக்தியால் நம்மை ரக்ஷித்துக்கொள்ளுகை நம் பாரதந்த்ர்யத்துக்கு நாசகமென்று ஸ்வசக்தியைக் கொண்டு கார்யம் கொள்ளாதொழிகை "அஸந்தேசாத்து ராமஸ்ய தபஸச் சாநுபாலநாத், ந த்வாம் குர்மி தசக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹதேஜஸா" என்றாளிறே. (லஞ்ஜையை விடுகையாவது) – துச்சாஸநன் ஸபாமத்யே துகிலையுரிகிறவளவில் லஜ்ஜாவிஷ்டையாய்க் கொண்டு தானொருதலை யிடுக்குகையன்றிக்கே இரண்டுகையும் விடுகை. பேரளவுடையாளாகையாலே பிராட்டிக்கு "பெருமாளே ரக்ஷகர்" என்று விச்வஸித்து ஸ்வசக்தியை விட்டிருக்கலாம், அத்தனையளவின்றிக்கேயிருக்கச்செய்தே, மஹாபத்தசையிலே "இவ்வளவில் க்ருஷ்ணனே ரக்ஷகன்" என்று மஹாவிச்வாஸம் பண்ணி மஹாஸபாமத்யே இவள் லஜ்ஜையை விட்டதிறே அரிது. (திருக்கண்ணமங்கையாண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான்) அதாவது, ஸ்வரக்ஷண ஹேதுவான ஸ்வவ்யாபாரங்களை விட்டாளென்றபடி. ஒரு ஸேவகனுடைய நாயை ஒரு ஸேவகனடிக்க, அவன் அது பொறாமல் அடித்தவனோடே எதிர்த்துப் பொருது அவனையுங்கொன்று தானும் குத்திக் கொள்வதாக விருக்கிறபடியைக்கண்டு, ஒரு க்ஷுத்ரசேதநன் தன்னபிமாநத்திலேயொதுங்கினதென்னு மிவ்வளவுக்காகத் தன்னையழியமாறினபடி. கண்டால் பரமசேதநனபிமாநத்திலே யொதுங்கினால் அவனென்படுமோ என்று, ஸ்வரக்ஷண வ்யாபாரங்களையடையவிட்டு அந்த நாயோ பாதியாகத் தம்மையநுஸந்தித்துக் கொண்டு அப்போதே வந்து திருக்கண்ணமங்கையில் பத்தராவி திருவாசலில் கைப்புடையிலே புகுந்து கன்வளர்ந்தாரென்று ப்ரஸித்தமிறே.

**விளக்கம்** - "ஸ்வசக்தியை விடுதல்" என்பது என்ன? "நம்முடைய நாயகனான இராமன் வந்து நம்மைக் காப்பாற்றவேண்டும். இப்படி அல்லாமல் நமது சக்தி மூலம் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்தல் என்பது 'அவனுக்கு மட்டுமே வசப்பட்டிருத்தல்' என்னும் பாரதந்த்ர்யத்துக்கு இழிவு ஏற்படுத்தும்", என்று உணர்ந்து, தனது முயற்சியால் தன்னைக் காத்துக்கொள்ள முயலாமல் உள்ளதாகும். இதனை ஸுந்தரகாண்டத்தில் (22-

20) - அஸந்தேசாத்து ராமஸ்ய தபஸச் சாநுபாலநாத், ந த்வாம் குர்மி தசக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹதேஜஸா – இராமனின் உத்தரவு இல்லாத காரணத்தினாலும், எனது பாரதந்த்ர்யம் என்பதைக் காப்பாற்ற வேண்டியதாலும் உன்னை நான் எனது சக்தியால் எரித்துச் சாம்பல் ஆக்காமல் விட்டுவைத்துள்ளேன்; பத்துத்தலை உள்ள நீ சாம்பல் ஆகத்தக்கவனே – என்றாள்.

“லஜ்ஜையை விடுதல்” என்பது என்ன? துச்சாதனன் சபையின் நடுவே நின்றபடி வஸ்திரத்தை அவிழ்க்கிறபோது, தனது நிலைக்காக வெட்கம் கொண்டவளாகத் தனது கைகளால் பிடித்துக் கொள்ளாமல் இரண்டு கைகளையும் விட்டபடி நின்ற நிலையாகும். சீதை உயர்ந்த ஞானம் கொண்டவள் என்பதால், தன்னைக் காப்பாற்றுவதற்கு எம்பெருமானுக்கு உரிமையும் கடமையும் உண்டு என்று எண்ணியபடி, தனது வலிமையைக் காண்பிக்காமல் இருந்த தன்மை பொதுவானதே ஆகும். அப்படிப்பட்ட துணை தனக்கு துச்சாதனின் சபையில் ஏதும் இல்லை என்று அறிந்திருந்தும், அந்தச் சபையில் தன்னைக் காப்பாற்றுவதற்கு உரியவன் க்ருஷ்ணனே என்று மஹாவிச்வாஸத்துடன் நின்று, தனது நாணத்தை மறந்த நிலையே மிகவும் உயர்ந்த, அரிதான செயலாகும்.

“திருக்கண்ணமங்கையாண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான்” என்பது என்ன? இவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் செயல் அனைத்தையும் விட்டார் - என்பதாகும். அவர் ஒரு காட்சியைக் கண்டார் - அதாவது, ஒரு வேலைக்காரனுடைய நாய் ஒன்றை மற்றோரு வேலைக்காரன் அடித்துவிட்டான். இதனால் கோபம் கொண்ட நாயின் சொந்தக்காரனான வேலைக்காரன், அடித்தவனை எதிர்த்துப் போராடி அவனைக் கொன்றான். பின்னர் தனது நாய் இறந்த சோகம் தாளாமல் தானும் குத்திக் கொண்டான். இதனைக் கண்ட திருக்கண்ணமங்கையாண்டான், ”சிறிய மனிதன் தனது நிழலில் ஒதுங்கின அற்பமான நாய்க்காகத் தன்னையே அழித்துக் கொள்ளத் துணிந்தானே! இப்படி உள்ளபோது, எம்பெருமானின் நிழலில் ஒதுங்கிவிட்டால் அவன் நம்மைக் காக்க எத்தனை பொறுப்பு கொள்வான்!!”, என்று வியந்து, தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்ற செயல்கள் அனைத்தையும் கைவிட்டார். அந்த நாய் போன்று தன்னை எண்ணியவராக, உடனே ஓடி வந்து திருக்கண்ணமங்கையில் எழுந்தருளியுள்ள பத்தராவிப்பெருமாள் திருவாசலில் உள்ள திண்ணையில் அமர்ந்து, அங்கு உறங்கினார்.

83. பசியராயிருப்பார் அட்டசோறுமுண்ணவேணும் அடுகிறசோறுமுண்ணவேணு மென்னுமாப் போலே காட்டுக்குப் போகிறபோது இளையபெருமாள் பிரியில் தரியாமையை முன்னிட்டு, அடிமை செய்யவேணும் எல்லாவடிமையும் செய்யவேணும் ஏவிக்கொள்ளவும் வேணும் என்றார்; படைவீட்டில் புகுந்த பின்பு, காட்டில் தனியிடத்தில் ஸ்வயம் பாகத்திலே வயிற்றை பெருக்கினபடியாலே, ஒப்பூணுண்ணமாட்டாதே, ஒரு திருக்கையாலே திருவெண்கொற்றக்குடையையும், ஒரு திருக்கையாலே திருவெண் சாமரத்தையும் தரித்து அடிமை செய்தார்.

**அவதாரிகை** - இனி உபேயாதிகாரிகளில் ப்ரதாநரான இளையபெருமாள்படியை விஸ்தரேணவருளிச் செய்கிறார் (பசியர் என்று தொடங்கி).

**விளக்கம்** – அடுத்து உபேய அதிகாரிகளில் மிகவும் சிறந்தவனாகிய லக்ஷ்மணன் உள்ளிட்டவர்கள் குறிந்து விரிவாக உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பசியராயிருப்பார், தங்கள் பசியின் கனத்தாலே, இதுக்கு முன்பாக்கின சோறும் இப்போதாக்குகிற சோறும் எல்லாம் நாமேயுண்ணவேணும் என்று மநோரதிக்குமாப்போலே; பெருமாள் காட்டுக்கெழுந்தருளுகிறபோது, பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்தரானவிளையபெருமாள், படைவீட்டில் நின்றும் புறப்படுவதற்கு முன்னே கூடப்போவதாக உத்யோகிக்கிற படியைக்கண்டு, நீர்நில்லும் என்று நிர்ப்பந்தித்தருள "குருஷ்வ மாமநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே, க்ருதார்த்தோஹம் பவிஷ்யாமி தவசார்த்த: ப்ரகல்பதே" என்றும், கங்கை கடந்தேறினவன்று மீளவிடுகைக்குறுப்பாக அவர் அனேகமருளிச்செய்ய, "ந ச ஸீதா த்வயா ஹீநா தசாஹமபி ராகவ, முஹுர்த்தமபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யா விவோத்த்ருதௌ" என்றும் சொல்லுகையாலே பிரியில் தாமுளராக மாட்டாமையை முன்னிட்டு "குருஷ்வ மாம்" என்றவநந்தரத்திலே, "தநுராதாய ஸகுணம் கநித்ர பிடகாதர:, அக்ரதஸ் தே கமிஷ்யாமி பந்தாநமநுதர்சயந் ஆஹரிஷ்யாமி தே நித்யம் மூலாநிச பலாநிச: வந்யாநி யாநி சாந்யநி ஸ்வாஹாராணி தபஸ்விநாம்" என்கையாலே ஸ்வசேஷத்வாநுகுணமாக அடிமை செய்யவேணுமென்றும், ததநந்தரத்திலே "பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே; அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச்ச தே" என்கையாலே – அதுதன்னிலுமின்னவின்ன வடிமையென்று ஒரு நியதியின்றியே எல்லாவடிமையும் செய்யவேணுமென்றும்; பஞ்சவடியில் எழுந்தருளினபோது, நீரும் நிழலும் வாய்த்திருப்பதொரு ப்ரதேசத்தைப் பார்த்துப் பர்ணசாலையைச் சமையும் என்ன, "ஏவமுக்தஸ்து ராமேண லக்ஷ்மணஸ் ஸம்யதாஞ்ஜலி:, ஸீதா ஸமக்ஷம் காகுத்ஸ்தமிதம் வசதமப்ரவீத்" என்று - நந்தலையிலே ஸ்வாதந்த்ர்யத்தை வைந்தபோதே பெருமாள் நம்மைக்கைவிட்டாரென்று விக்ருதராய்; பிராட்டி முன்னிலையாகக் கையுமஞ்சலியுமாய் நின்று "பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷசதம் ஸ்திதே, ஸ்வயந்து ருசிரே தேசே க்ரியநாமிதி மாம் வத" என்கையாலே – அடிமை செய்யுமளவில் ஸ்வாதந்த்ர்யமாகிற தோஷம் கலசாதபடி உசித கைங்கர்யங்களிலேயேவிக் கொள்ள வேணுமென்றும் ப்ரார்த்தித்தாரென்கை. (படைவீட்டில்) இத்யாதி. திருப்படை வீட்டில் எழுந்தருளிவந்து புகுந்து திருவபிஷேகம் பண்ணியருளினபோது, தம்மோடுகூட அடிமை செய்கைக்கொருவருமில்லாததொரு தனிக்காட்டிலே தாமேயடிமை செய்து கைங்கர்யாபி நிவேசத்தைப் பெருக்குகையாலே, ஸ்வயம்பாகத்திலே வயிற்றைப் பெருக்கினவன் ஒப்பூணுண்ண மாட்டாதாப்போலே, ஸ்ரீபரதாழ்வான் தொடக்கமானவர்களோடொக்கத் தாமும் ஓரடிமைசெய்து நிற்கமாட்டாதே, திருவெண்கொற்றக்குடையையெடுக்கை திருவெண்சாமரம் பரிமாறுகையாகிற விரண்டடிமையை ஏககாலத்தில் செய்தாரென்கை. இந்த வ்ருத்தாந்தந்தான் ஸ்ரீராமாயணத்திலில்லை. "சத்ரசாமர பாணிஸ்து லக்ஷ்மணோ

நுஜகாமாஹா” என்கிறது ஸ்ரீராமாயணமன்றோவென்னில்; காட்டுக் கெழுந்தருளுவதற்கு முன்னே திருவபிஷேகார்த்தமாகவலங்கரித்து, தம்முடைய திவ்யாந்தப்புரத்தில் நின்றும் புறப்பட்டு, சக்ரவர்த்தி திருமாளிகையை நோக்கித் திருத்தேரிலேயேறிப் பெருமாளெழுந்தருளுகிறபோது, இளையபெருமாள் செய்த வ்ருத்தாந்தமாக திருவயோத்யா காண்டத்திலே சொல்லப்பட்டதாகையாலே, இவ்விடத்துக்கது சேராது. ஆனால் இவர் என்கொண்டிப்படியருளிச் செய்தாரென்னில்; பாத்மபுராண ப்ரக்ரியையாலே யருளிச்செய்தார். “அத தஸ்மிந் திநே புண்யே சுப லக்நே சுந்விதே, ராகவஸ்யாபிக்ஷேகார்த்தம் மங்களஞ்சக்ரிரே ஜநா:” என்று தொடங்கி பரக்கச் சொல்லிக் கொண்டு வந்து, ”மந்த்ர பூத ஜலைச் சுத்தைர் முநயஸ் ஸம்ச்ரித வ்ரதா: - ஜபந்தோ வைஷ்ணவாந் ஸூக்தாந் சதுர்வேத மயாந் சுபாந் - அபிக்ஷேகம் சுபஞ்சக்ரு: காகுத்ஸ்தம் ஜகதாம் பதிம் - தஸ்மிந் சுபதமே லக்நே தேவ துந்துபயோ திவி - நிநேது: புஷ்ப வர்ஷாணி வவர் ஷுச்ச ஸமந்தத: - திவ்யாம்பரைர் பூஷணைச்ச திவ்யகந் தாநுலேபநை: - புஷ்பைர் நாநா விதைர் திவ்யைர் தேவ்யா ஸஹ ரகூத்வஹ: - அலங்க்ருதச்ச சுசுபே முநிபிர் வேதபாரகை: - சத்ரஞ்ச சாமரம் திவ்யம் த்ருதவாந் லக்ஷ்மணஸ் ததா – பராச்வே பரத சத்ருக்நௌ தாளவ்ருந்தம் விவேஜது: - தர்ப்பணம் ப்ரததௌ ஸ்ரீமாந் ராக்ஷஸேந்த்ரோ விபீஷண: - ததார பூர்ண கலசம் ஸுக்ரீவோ வாநரேச்வர: - ஜாம்பவாம்ச்ச மஹாதேஜா புஷ்பமாலாம் மநோஹராம் – வாலிபுத்தரஸ்து தாம்பூலம் ஸகர்ப்பூரம் ததௌ ப்ரியாத் – ஹநூமாந் தீபிகாம் திவ்யாம் ஸுஷேணஸ்து த்வஜம் சுபம் – பரிவார்ய மஹாத்மாநம் மந்த்ரிணஸ் ஸமுபாஸிரே” என்று பாத்மபுராணத்தில் உத்தரகாண்டத்தில் நாற்பத்தொன்பதாமத்யாயத்திலே சொல்லப்பட்டதிறே, ”சத்ரஞ்ச சாமரம் திவ்யம் த்ருதவாந்” என்றது தோற்றவிறே (திருவெண்கொற்றக்குடையையும் திருவெண் சாமரத்தையும் தரித்து) என்றருளிச்செய்தது.

**விளக்கம்** - பசியுடன் உள்ள ஒருவன், தனது பசியின் காரணமாக, “இப்போது செய்த உணவும் வேண்டும். இதற்கு முன்பாகச் செய்த உணவும் வேண்டும். அனைத்தையும் நான் உண்பேன்” என்று கூறுவது காணலாம். இதனைப் போன்று லக்ஷ்மணன் விஷயத்தில் காணலாம். இராமன் கானகம் எழுந்தருள முற்பட்டபோது, குழந்தைப்பருவம் தொடங்கியே இராமனுடன் அன்பாக இருந்துவரும் லக்ஷ்மணனும் அயோத்தியை விட்டு, இராமன் புறப்படுவதற்கு முன்பாகத் தானும் புறப்பட முயற்சித்தான். இதனைக் கண்ட இராமன், ”நீ இங்கேயே இருப்பாயாக”, என்று கூறினான். இதனைக் கேட்ட லக்ஷ்மணன் அயோத்யாகாண்டம் (30-22) – குருஷ்வ மாமநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே, க்ருதார்த்தோஹம் பவிஷ்யாமி தவசார்த்த: ப்ரகல்பதே – உன் பின்னே வரும்படி அடியேனுக்கு உத்தரவிடவேண்டும்; அவ்விதம் செய்யாமல் நீ விட்டால், நான் உயிர் தாங்கமாட்டேன்; உனக்குக் கைங்கர்யம் செய்தால் மட்டுமே நான் செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவன் ஆவேன்; உனக்கும் சேதன லாபம் கிட்டும் - என்றான்.

அடுத்து கங்கையைக் கடந்த பின்னர் லக்ஷ்மணன் அயோத்திக்குத் திரும்பும்படி மீண்டும் இராமன் பலவிதமாகக் கூறினான். இதனை கேட்ட லக்ஷ்மணன் அயோத்யாகாண்டம்

(53-31) - ந ச ஸீதா த்வயா ஹீநா தசாஹமபி ராகவ, முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யா விவோத்த்ருதௌ – இராகவா! நானும் சீதையும் உன்னைப் பிரிந்து உயிர் வாழ்வோம் என்றால், நீரில் இருந்து எடுக்கப்பட்ட மீன் போன்று மிகவும் அற்பமான காலம் மட்டுமே வாழ்வோம் – என்றான். இதன் மூலமாக இராமனைப் பிரிந்தால் தான் உயிருடன் இருக்கமாட்டாத நிலையை முன்னிட்டு - குருஷ்வ மாம்- என்னை நியமிப்பாய் – என்றான்.

அடுத்து அயோத்யாகாண்டம் (31-23, 24) – தநுராதாய ஸகுணம் கநித்ர பிடகாதர:, அக்ரதஸ் தே கமிஷ்யாமி பந்தாநமநுதர்சயந் ஆஹரிஷ்யாமி தே நித்யம் மூலாநிச பலாநிச: வந்யாநி யாநி சாந்யநி ஸ்வாஹாராணி தபஸ்விநாம் - வில், மண்வெட்டி, கூடை ஆகியவற்றைத் தனது தலையில் வைத்தபடி, உனக்கு வழிகாட்டியபடி நான் செல்லக் கடவன்; கானகத்தில் உள்ள முனிவர்களுக்கு ஏற்றபடியாக உள்ள உணவான பழங்கள் மற்றும் கிழங்குகள் ஆகியவை கானகத்தில் எங்கு உள்ளனவோ அவற்றை நான் அன்றாடம் தேடிக் கொணர்ந்து உனக்கு அளிப்பேன் - என்பதன் மூலம் தன்னுடைய சேஷத்வத்திற்கு ஏற்றபடி கைங்கர்யம் செய்யவேண்டும் என்பதை உணர்த்தினான்.

அடுத்த அயோத்யாகாண்டம் (31-25) - பவாம்ஸ்து ஸஹ வைதேஹயா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே; அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச்ச தே – நீ சீதையுடன் மலைகளின் அடிவாரத்தில் விளையாடி மகிழ்வாயாக, உன்னுடைய அடிமையாகிய நான் விழித்துக் கொண்டுள்ளபோதும், உறங்கிக்கொண்டிருக்கும்போதும் அனைத்துவிதமான கைங்கர்யங்களும் செய்வேனாக – என்பதன் மூலம் அடிமைத்தொழில் செய்யும்போது “இந்த இந்த கைங்கர்யம்” என்று இல்லாமல் அனைத்துவிதமான கைங்கர்யங்களும் செய்வதை உணர்த்தினான்.

அடுத்து பஞ்சவடியில் நின்றபோது இராமன் லக்ஷ்மணனிடம் ,”நல்ல நீர் மற்றும் நல்ல நிழல் கொண்ட இடமாகப் பார்த்து நீயே தங்கும் இடம் அமைப்பாயாக” என்றான். உடனே லக்ஷ்மணன், “நமக்கு இவ்விதம் சுதந்திரம் கொடுத்ததன் மூலம் இராமன் நம்மைக் கைவிட்டானே”, என்று நடுங்கியவனாக நின்றான். உடனே சீதையின் முன்னிலையில் கைகளைக் குவித்தபடி லக்ஷ்மணன் கூறியதை இராமாயணம் ஆரண்யகாண்டம் (15-6,7) - ஏவமுக்தஸ்து ராமேண லக்ஷ்மணஸ் ஸம்யதாஞ்ஜலி:, ஸீதா ஸமக்ஷம் காகுத்ஸ்தமிதம் வசதமப்ரவீத் - இராமனால் இவ்விதமாகக் கூறப்பட்ட லக்ஷ்மணன் தனது கைகளைக் குவித்தபடி சீதையின் முன்பாக இராமனைப் பார்த்து இவ்விதமாக உரைத்தான், “ காகுத்ஸ்தா! நீ எத்தனை காலம் உள்ளாயோ அத்தனை காலம் உனக்கு அடிமையாக நான் இருப்பேன், ஆகவே உனது மனதிற்கு ஏற்ற இடம் எது என்று ஆராய்ந்து, அந்த இடத்தில் பர்ணசாலை அமைப்பாய் என்று என்னைப் பார்த்து நீ நியமிக்கவேண்டும் - என்றது காண்க. இதன் மூலம் கைங்கர்யம் செய்யும்போது அதில் “நான் சுதந்திரமானவன்” என்ற எண்ணம் மேலிடாதபடி, கைங்கர்யங்களை எம்பெருமான் மூலம் ஏவப்பட்டுச் செய்தல் வேண்டும் என்பது உணர்த்தப்பட்டது.

“படைவீட்டில்” என்று சூர்ணையில் தொடங்குவதன் பொருள் என்ன? அதன் பின்னர் இராமன் வனவாசம் முடிந்து, மீண்டும் அயோத்தியை அடைந்து முடிசூட்டிக்கொண்டான். அப்போது பரதன் முதலானவர்கள் இராமனுக்குக் கைங்கர்யம் செய்ய முற்பட்டபோது, தானும் அவர்களுக்குச் சமமாக நின்று கைங்கர்யம் செய்வதை லக்ஷ்மணனால் தாங்க இயலவில்லை. கானகத்தில் தன்னுடன் கூடவிருந்த இராமனுக்கு அடிமைத்தொழில் செய்தபோது உதவுவதற்கு யாரும் இல்லாமல் தான் மட்டுமே கைங்கர்யம் செய்து, அதில் பெரும் ஆசையை ஏற்படுத்திக்கொண்டான். தனது உணவைத் தானே செய்து உண்பவன், மற்றவர் செய்த உணவை ஏற்காதது போன்று இவனுக்கு மற்றவர் செய்யும் கைங்கர்யங்கள் ஏற்கவில்லை. இதுவே இங்கு கூறப்பட்டது. இதற்கு ஓர் ஆக்ஷேபம் எழலாம். இந்த நிகழ்ச்சி இராமாயணத்தில் கூறப்படவில்லையே என்று கேட்கலாம். இதற்கு ஒரு சிலர், இராமாயணம் அயோத்யகாண்டம் (12-32) – சத்ரசாமர பாணிஸ்து லக்ஷ்மணோநுஜகாமாஹா – வெண்கொற்றக்குடை மற்றும் சாமரம் ஆகிய இரண்டையும் பிடித்தபடி இராமன் பின் நின்றான் - என்று கூறியது அல்லவோ எனலாம். ஆனால் இது இராமாயணத்தில் எங்கு கூறப்பட்டது என்றால் – கானகம் செல்லும் நிகழ்வுக்கு முன்னர், திருமுடி புனைவதற்காக இராமன் தனது அந்தப்புரத்திலிருந்து புறப்பட்டு, சக்ரவர்த்தியின் சபைக்கு திருத்தேரிலே வந்தபோது, மேலே கூறப்பட்டபடி லக்ஷ்மணன் செய்தான் என்று உள்ளது. ஆக இது அயோத்யா காண்டத்தில் கூறப்பட்டதால் இந்த இடத்தில் பொருத்தம் அற்றது என்று கூறலாம். ஆயினும் இதனை ஏன் இங்கு அருளிச்செய்தார்? இதன் காரணம் பாத்மபுராணத்தில் கூறப்பட்டபடி அருளிச்செய்தார் என்பதாகும். அது என்ன?

பாத்மபுராணத்தில் – அத தஸ்மிந் திநே புண்யே சுப லக்நே சுந்விதே, ராகவஸ்யாபிஷேகார்த்தம் மங்களஞ்சக்ரிரே ஜநா: - அதன் பின்னர் அந்தப் பட்டாபிஷேக நல்லநாளில், நல்ல நேரத்தில், நல்ல லக்னத்தில், இராகவனுக்குப் பட்டாபிஷேகம் செய்யும்விதமாக அயோத்தியின் மக்கள் நல்ல செயல்களைச் செய்தபடி இருந்தனர் - என்று தொடக்கப்பட்டு, பின்வரும் பல வரிகள் கூறப்பட்டன:

- மந்த்ர பூத ஜலைச் சுத்தைர் முநயஸ் ஸம்ச்ரித வ்ரதா: - ஜபந்தோ வைஷ்ணவாந் ஸூக்தாந் சதுர்வேத மயாந் சுபாந் அபிஷேகம் சுபஞ்சக்ரு: காகுத்ஸ்தம் ஜகதாம் பதிம் - தூய்மையான விரதம் பூண்ட பல முனிவர்கள் நான்கு வேதங்கள் ஒலிக்கும்படியாகவும், மங்களகரமாக உள்ளதாயும் இருக்கின்ற விஷ்ணுவின் மந்த்ரங்களை ஜபித்தனர்; தூய்மையான வேதமந்திரங்களால் தூய்மை செய்யப்பட்ட தீர்த்தம் மூலம் உலகம் அனைத்திற்கும் நாயகனான இராமனுக்குத் திருமஞ்சனம் செய்தனர்.

- தஸ்மிந் சுபதமே லக்நே தேவ துந்துபயோ திவி - நிநேது: புஷ்ப வர்ஷாணி வவர் ஷுச்ச ஸமந்தத: - அந்தப் புண்ணிய லக்னத்தில் ஆகாயம் எங்கும் துந்துபி வாத்தியங்கள் முழங்கின; நான்கு திசைகளிலிருந்து மலர்கள் தூவப்பட்டன.

- திவ்யாம்பரைர் பூஷணைச்ச திவ்யகந் தாநுலேபநை: புஷ்பைர் நாநா விதைர் திவ்யைர் தேவ்யா ஸஹ ரகூத்வஹ: அலங்க்ருதச்ச சுசுபே முநிபிர் வேதபாரகை: - வேதபாராயணம் செய்தபடி உள்ள முனிவர்களுடன் உள்ளவனும்; திவ்யமான வஸ்திரங்கள், திவ்யமான ஆபரணங்கள், நறுமணம் வீசும் சந்தனம், பலவிதமான திவ்யமான மலர்கள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்டவனும் ஆகிய இராமன் சீதையுடன் விளங்கினான்.

- சத்ரஞ்ச சாமரம் திவ்யம் த்ருதவாந் லக்ஷ்மணஸ் ததா – பராச்வே பரத சத்ருக்நௌ தாளவ்ருந்தம் விவேஜது: - அந்த நேரத்தில் லக்ஷ்மணன் திவ்யமான வெண்கொற்றக்குடை மற்றும் வெண்சாமரம் ஆகியவற்றைத் தரித்தபடி கைங்கர்யம் செய்தான்; பரதனும் சத்ருக்கனனும் இரண்டு பக்கமும் நின்றபடி விசிறி வீசினர்.

- தர்ப்பணம் ப்ரததௌ ஸ்ரீமாந் ராக்ஷஸேந்த்ரோ விபீஷண: - ததார பூர்ண கலசம் ஸுக்ரீவோ வாநரேச்வர: - செல்வந்தனான விபீஷணன் கண்ணாடியை ஏந்தியபடி நின்றான். வானரங்களின் அரசனான சுக்ரீவன் பூர்ணகும்பம் ஏந்தி அடிமைத்தனம் செய்தான்.

- ஜாம்பவாம்ச்ச மஹாதேஜா புஷ்பமாலாம் மநோஹராம் – வாலிபுத்தரஸ்து தாம்பூலம் ஸகர்ப்பூரம் ததௌ ப்ரியாத் – மிகுந்த தேஜஸ் கொண்ட ஜாம்பவான் மனதிற்கு ஏற்ற மலர்மாலையை வைத்திருந்தான். கற்பூரம் மற்றும் தாம்பூலத்தை வாலியின் புத்திரனான அங்கதன் அன்புடன் அளித்தான்.

- ஹநூமாந் தீபிகாம் திவ்யாம் ஸுஷேணஸ்து த்வஜம் சுபம் – பரிவார்ய மஹாத்மாநம் மந்த்ரிணஸ் ஸமுபாஸிரே - சிறியதிருவடியான அனுமன் தனது கையில் தெய்வீகமான கைப்பந்தம் பிடித்தபடி நின்றான். இப்படியாக இருந்த இராமனைச் சூழ்ந்தபடி நின்ற மந்திரிகள் வணங்கியபடி இருந்தனர்.

மேலே உள்ளபடி பாத்மபுராணத்தில் உத்தரபாகத்தில் நாற்பத்துஒன்பதாம் அத்தியாயத்தில் கூறப்பட்டது காண்க. இந்தப் பகுதியில் கூறப்பட்ட – சத்ரஞ்ச சாமரம் திவ்யம் த்ருதவாந் - என்பது வெளிப்படும்படியாக அல்லவோ இவர் இங்கு ”திருவெண்கொற்றக்குடையையும் திருவெண்சாமரத்தையும் தரித்து” என்று அருளிச் செய்தார்.

84. பெரியவுடையாரும் பிள்ளை திருநறையூரரையரும் உடம்பை யுபேக்ஷித்தார்கள்; சிந்தயந்திக்குடம்பு தன்னடையே போயிற்று.

**வ்யாக்யானம்** - (பெரியவுடையாரும் பிள்ளை திருநறையூரரையரும் உடம்பை யுபேக்ஷித்தார்கள்) ஸ்ரீஜடாயு மஹாராஜரை பெரியவுடையார் என்றாய்த்து நம் முதலிகளருளிச்செய்வது. இவர்தாம், பஞ்சவடியிலே பெருமாளெழுந்தருளி தம்மை யங்கீகரித்து "இஹ வத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்தமேதேந பக்ஷிணா" என்றவன்று தொடங்கி திருவடிகளுக்கு மிகவும் பரிவராய், பெருமாளெழுந்தருளியிருக்கிற திவ்யாச்ரமத்துக் காஸந்நமாக வர்த்தியா நிற்கச்செய்தே, அசிந்திதமாக ராவணன் வந்து பிராட்டியைப் பிரித்துக்கொண்டு போக, அப்போது பிராட்டி இவரையொரு வ்ருக்ஷத்தின் மேலே கண்டு "என்னை யிவனிப்படி யபஹரித்துக் கொண்டு போகாநின்றான்" என்று இவர் பேரைச் சொல்லிக்கூப்பிட, உறங்குகிறவிவர் அந்த ஆர்த்த த்வநியைக் கேட்டுணர்ந்து, ராவணன் கொண்டு போகிறபடியைக் கண்டு "உனக்கிது தகாதுகாண்" என்று தர்மோபதேசம் பண்ணினவளவில் அவன் கேளாமையாலே, "நம் ப்ராணனோடேயிது கண்டிருக்கக் கடவோமல்லோம், யுத்தம் பண்ணி மீட்குதல், இல்லையாகில் முடிதல் செய்யக் கடவோம்" என்று அத்யவஸித்து, அதிபல பராக்ரமராகையாலே யவனோடே மஹாயுத்தத்தைப் பண்ணி, அவன் கையாலேயடிபட்டு விழுந்து தந்திருமேனியை விட்டாரிறே.

**விளக்கம்** - ஸ்ரீஜடாயு மஹாராஜரைப் பெரியஉடையார் என்றே ஸ்ரீவைஷ்ணவர்கள் அழைப்பார்கள். பஞ்சவடியில் இராமன் எழுந்தருளியபோது லக்ஷ்மணனிடம் இராமாயணம் ஆரண்யகாண்டம் (15-19) – இஹ வத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்தமேதேந பக்ஷிணா - பறவைகளின் அரசனாகிய இந்த ஜடாயுவுடன் நான் இங்கே வசிக்கப்போகிறேன் - என்றான். இவ்விதமாகத் தன்னை ஏற்றுக்கொண்ட இராமனின் திருவடிகளில் ஜடாயு மிகவும் அன்புடன் விளங்கினார். இராமன் வசித்து வந்த பர்ணசாலைக்கு மிகவும் அருகில் தானும் வசிந்து வந்தார். அப்போது சற்றும் எதிர்பாராமல் இராவணன் வந்து சீதையைப் பிரித்துக்கொண்டு சென்றான். அந்த நேரத்தில் ஜடாயு ஒரு மரத்தின் மீது அமர்ந்துள்ளதைக் கண்ட சீதை, "என்னை இவ்விதமாக இவன் அபகரித்துச் செல்கிறான்" என்று இவரது பெயரைக் கூறி அழைத்தாள். உறங்கிக் கொண்டிருந்த ஜடாயு சீதையின் அந்த துயர ஓசை கேட்டு விழித்தவராக, இராவணன் சீதையைக் கொண்டு செல்வதைக் கண்டார். அப்போது இராவணனிடம், "இந்தச் செயல் உனக்கு ஏற்புடையது அல்ல" என்று தர்மஉபதேசம் செய்தார். அதனை இராவணன் கேட்கவில்லை. உடனே ஜடாயு தனது மனதில், "நாம் உயிரோடு உள்ளவரை இதனைக் காணமாட்டோம். யுத்தம் செய்து சீதையை மீட்போம். இல்லையேல் யுத்தத்தில் உயிரைவிடுவோம்", என்று முடிவு செய்தார். மிகுந்த வலிமை மற்றும் வீரம் கொண்டவர் என்பதால் இராவணனுடன் கடும் யுத்தம் செய்தார். அவன் கையால் அடிப்பட்டு விழுந்து தனது திருமேனியை விட்டார்.

**வ்யாக்யானம் -** பிள்ளை திருநறையூரரையர் ஸகுடும்பமாக திருநாராயணபுரத்தில் வேதநாராயணப் பெருமாளை ஸேவிக்கச் சென்று புகுந்தவளவிலே பரஸமயிகள் அந்தக் கோயிலிலே அக்நி ப்ரக்ஷேபத்தைப் பண்ண, உள்ளு நின்றவர்களெல்லாரும் புறப்பட்டோடிப் போகச்செய்தே, அந்த வெம்பெருமான் திருமேனிக் கழிவு வருகிற படியைக் கண்டு ஸஹிக்கமாட்டாத ப்ரேமாதிசயத்தாலே தாமுமொக்க முடிவதாக வத்யவஸித்து இவர் நிற்கையாலே பிள்ளைகளும் இவரை விட்டுப் போகோம் என்று நிற்க, அவர்களும் தாமும் கூடவதுக்குள்ளே நின்று திருமேனியை விட்டாரென்று ப்ரஸித்தமிறே.

**விளக்கம் –** பிள்ளை திருநறையூரரையர் தனது குடும்பத்துடன் திருநாராயணபுரத்தில் எழுந்தருளியுள்ள வேதநாராயணைப் பெருமாளைச் சேவிக்கச் சென்றார். அப்போது மற்ற சமயத்தினர் அந்தக் கோயிலுக்குத் தீ வைத்தனர். அந்தக் கோயிலுக்குள் நின்றிருந்த அனைவரும் அங்கிருந்து புறப்பட்டு ஓடினர். எம்பெருமானின் திருமேனிக்கு அழிவு உண்டாவதைக் கண்டு அரையரால் பொறுக்க இயலவில்லை. அவன் மீது கொண்ட அன்பின் மிகுதி காரணமாகத் தானும் அவனது திருமேனியுடன் முடிந்து போவது என்று முடிவு செய்து அங்கே நின்றார். அவரது புத்திரர்களும் அவரைவிட்டு அகல்வதில்லை என்று அங்கேயே நின்றனர். ஆக இப்படியாக இவர்களும் தாமுமாகத் தனது திருமேனியை அங்கேயே விட்டார்.

**வ்யாக்யானம் -** (சிந்தயந்திக்குடம்பு தன்னடையே போயிற்று) அதாவது "காசித் ஆவஸதஸ்யாந்தே ஸ்தித்வ த்ருஷ்ட்வா பஹிர்குரும் தந்மயத்வேந கோவிந்தம் தத்யௌ மீலிதலோசநா. தச்சித்த விமலாஹ்லாத க்ஷிண புண்யசயா ததா ததப்ராப்தி மஹாதுக்க விலீநாசேஷ பாதகா – சிந்தயந்தீ ஜகத்ஸூதிம் பரப்ரஹ்ம ஸ்வரூபிணம் – நிருச்ச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகந்யகா" என்கிறபடியே திருக்குரவையினன்று திருக்குழலோசையைக் கேட்டு, ஸ்ரீப்ருந்தாவநத்தேறப் போவதாகப் புறப்பட்டவளவிலே, குருதர்சநத்தாலே போகமாட்டாமல் நின்று க்ருஷ்ணனை த்யாநம் பண்ணி, தத்கதசித்தை யாகையாலே வந்த நிர்மல ஸுகத்தாலும் தத்ப்ராப்தி நிபந்தநமான நிரவதிக துக்கத்தாலும் ப்ரக்ஷீணாசேஷ புண்யபாபையாய், தத்ஸ்மரணம் செல்லாநிற்க, தத்ப்ராப்த்யலாப க்லேசத்தாலே தரிக்கமாட்டாமல் மூச்சடங்குகையாலே, இவளுக்குத் தானுபேக்ஷிக்க வேண்டாதபடி தேஹம் தன்னடையே விட்டுக்கொண்டு நின்றதென்கை.

**விளக்கம் –** "காசித் ஆவஸதஸ்யாந்தே ஸ்தித்வ த்ருஷ்ட்வா பஹிர்குரும் தந்மயத்வேந கோவிந்தம் தத்யௌ மீலிதலோசநா. தச்சித்த விமலாஹ்லாத க்ஷிண புண்யசயா ததா ததப்ராப்தி மஹாதுக்க விலீநாசேஷ பாதகா – சிந்தயந்தீ ஜகத்ஸூதிம் பரப்ரஹ்ம ஸ்வரூபிணம் – நிருச்ச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகந்யகா" - க்ருஷ்ணனின் குழலோசையைக் கேட்ட சிந்தயந்தி என்னும் ஓர் ஆயர்குலப் பெண் வீட்டை விட்டு வெளியே ஓடிவர முயலும்போது வீட்டில் உள்ள பெரியவர்கள் அங்கு நின்றதன் காரணமாக வர இயலவில்லை; இதனால் அவள் வீட்டில் இருந்தபடியே கண்களை

மூடியபடி கோவிந்தனை த்யானித்தாள்; அப்போது க்ருஷ்ணனிடம் வைத்த தூய்மையான மனம் காரணமாக உண்டான தூய்மையான சுகங்களால் தனது புண்ணியங்கள் அனைத்தும் நீங்கும்படியாகச் செய்தாள்; அவனை நேரில் சென்று அடைய இயலாமல் போனதால் உண்டான துக்கத்தின் காரணமாகத் தனது பாவங்களையும் அழித்தாள்; பரப்ரஹ்மமும் உலகின் காரணமாக உள்ளவனும் ஆகிய க்ருஷ்ணனை த்யானித்தபடி, தனது மூச்சை அடக்கி நின்றதால், தன்னை விட்டுச் சரீரம் நீங்கப் பெற்றாள் – என்றது காண்க. ஆயர்பாடியில் அழகிய குழலோசையைக் கேட்டாள். உடனே ஸ்ரீப்ருந்தாவனம் புறப்படத் தயாரானாள். அப்போது வழியில் வீட்டின் பெரியவர்கள் நின்றிருந்ததால் வெளியே கிளம்ப இயலாமல் நின்றாள். அவனிடம் மட்டுமே ஈடுபட்ட தூயமனம் கொண்டவள் ஆனாள். த்யானம் காரணமாக உண்டான தூய சுகம் மூலம் தனது புண்ணியங்களையும், அவனைச் சென்று அடைய இயலாமல் போனதால் உண்டான துக்கம் மூலமாகத் தனது பாவங்களையும் அழித்தாள். அவனுடைய நினைவிலேயே நிலைநின்றாள். அவனை அடைய இயலவில்லை என்ற வேதனை தாங்காமல் மூச்சு அடங்கியது. இவளுக்கு வெறுக்கவேண்டும் என்ற நிலை ஏற்படாதபடி இவளது சரீரம் இவளைத் தானாகவே விட்டது.

85. உபாயத்துக்கு, சக்தியும் லஜ்ஜையும் யத்நமும் குலைய வேணும்; உபேயத்துக்கு ப்ரேமமும் தன்னைப் பேணாமையும் தரியாமையும் வேணும்.

**அவதாரிகை** - ஆக இப்படி நிதர்சநபூதர்படிகளைச் சொல்லி, இனி யிவர்களைப்போலே யிருக்கவேணுமென்றதின் கருத்தையருளிச் செய்கிறார் (உபாயத்துக்கு) இத்யாதி வாக்யத்வயத்தாலே.

**விளக்கம்** – இப்படியாக உண்மையாகவே நடந்தவற்றைக் கூறி, “இனி இவர்கள் போன்று இருத்தல் வேண்டும்” என்ற கருத்தை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, உபாயத்துக்கதிகாரியாம்போது, தன்னுடைய ரக்ஷணம் தானே பண்ணிக்கொள்ளுகைக்குறுப்பான சக்தியும், தான் பரிக்ரஹிக்கிற உபாயத்துக்கு விரோதிகளானவற்றை விடுமளவில் நாட்டார் சிரிக்குமதுக்குக் கூசும் லஜ்ஜையும், தன் பாரதந்த்ர்ய விரோதியான ஸ்வயத்நமும் கைவிடவேணும்; உபேயத்துக் கதிகாரியாம்போது, சேஷியைப் பிரியாதே நின்று எல்லாவடிமையு மவனேவினபடி செய்ய வேணுமென்னும் ப்ரேமமும், அத்தலைக்கொரு தீங்குவரில் அது கண்டாற்ற மாட்டாமல் தன்னுடம்பை யுபேக்ஷிக்கையும், தத்விக்ரஹாநுபவாலாபத்தில் தரித்திருக்க மாட்டாமல் மூச்சடங்கும்படியாகையும் வேணுமென்றபடி. ஆகையாலே, அவர்களைப் போலேயிருக்கையாவது - இவ்வதிகாரங்களை யுடையராகை யென்று கருத்து.

**விளக்கம்** - உபாயத்திற்கு அதிகாரியாகும்போது - தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள உதவியாக உள்ள சக்தி, தான் கைக்கொள்ளும் உபாயத்திற்கு விரோதிகளாக உள்ளவற்றைக் கைவிடும்போது அதனைக்கண்டு உலகில் உள்ளவர்கள் சிரித்தால் கொள்ளும் வெட்கம், தனது பாரதந்த்ர்யத்திற்கு விரோதியாக உள்ள தனது முயற்சிகள் – ஆகிய அனைத்தையும் கைவிடவேண்டும். உபேயத்திற்கு அதிகாரியாகும்போது - எஜமானனாகிய எம்பெருமானை விட்டு அகலாமல் அனைத்து அடிமைத் தொழில்களையும் அவனது ஆணைக்கு ஏற்பச் செய்யவேண்டும் என்றுள்ள அன்பு, அவனுக்கு ஏதேனும் தீமை உண்டானால் அதனைக் கண்டு பொறுத்துக்கொள்ள இயலாமல் தனது உடலையும் வெறுத்தல், அவனது விக்ரஹத்தை அனுபவிக்க இயலாதபோது தாங்க இயலாமல் மூச்சு அடங்குவது - என்று இருத்தல் வேண்டும். ஆக சூர்ணை 84-ல் கூறியவர்கள் போல் இருப்பது என்பது, இந்தச் சூர்ணையில் கூறப்பட்டது போன்று இருத்தல் ஆகும்.

86. இவனுக்கு வைதமாய் வருமதிறே த்யஜிக்கலாவது, ராகப்ராப்தமாய் வருமது த்யஜிக்கவொண்ணாதிறே.

**அவதாரிகை** – ”விஷ்ணோ: கார்யம் ஸமுத்திச்ய தேஹ த்யாகோ யதா க்ருத: ததா வைகுண்டமாஸாத்ய முக்தோ பவதி மாநவ” என்று ஆக்நேய புராணத்திலும், ”தேவகார்ய பரோ பூத்வா ஸ்வாம் தநும் ய: பரித்யஜேத் ஸயாதி விஷ்ணு ஸாயுஜ்யமபி பாதக க்ருந் நர:” என்று வாயவ்யத்திலும், “ரங்கநாதம் ஸமாச்ரித்ய தேஹத்யாகம் கரோதிய: தஸ்ய வம்சேம்ருதாஸ் ஸர்வே கச்சந்த்யாத்யந்திகம் லயம்” என்று வாமநீயத்திலும் சொல்லுகையாலும், விசேஷித்து ஆச்வமேதிக பர்வத்தில் வைஷ்ணவ தர்மசாஸ்த்ரத்தில் பஞ்சமாத்யாயத்திலே “அக்நி ப்ரவேசம் யச்சாபி குருதே மத்கதாத்மநா ஸ யாத்யக்நி ப்ரகாசேந விமாநேந மமாலயம், ப்ராணாம்ஸ் த்யஜதி யோ மர்த்யோ மாம் ப்ரபந்நோ ப்யநாசகம் பாலஸூர்ய ப்ரகாசேந வ்ரஜேந் யாநேந மத் க்ருஹம்” என்று பகவான் தானேயருளிச் செய்கையாலும், இப்படி மோக்ஷ ஸாதநமாகச் சொல்லப்படுகிற பகவதர்த்தமானே ஸ்வதேஹ த்யாகம் அநந்ய ஸாதநனான விவனுக்கு த்யாஜ்யமன்றோ, ப்ரபந்நராயிருக்கிற பிள்ளை திருநறையூரரையரித்தை யநுஷ்டிப்பா னென்னென்ன வருளிச் செய்கிறார் (இவனுக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஆக்நேய புராணம் விஷ்ணோ: கார்யம் ஸமுத்திச்ய தேஹ த்யாகோ யதா க்ருத: ததா வைகுண்டமாஸாத்ய முக்தோ பவதி மாநவ - மஹாவிஷ்ணுவின் காரியத்தை எண்ணியபடியே எப்போது சரீரம் விடப்படுகிறதோ அப்போதே அந்த ஜீவன் ஸ்ரீவைகுண்டம் அடைந்து முக்தன் ஆகிறான் - என்றது. வாயுபுராணம் தேவகார்ய பரோ பூத்வா ஸ்வாம் தநும் ய: பரித்யஜேத் ஸயாதி விஷ்ணு ஸாயுஜ்யமபி பாதக க்ருந் நர: - யார் ஒருவன் தேவகாரியத்தைச் செய்பவனாக தனது சரீரத்தை விடுகிறானோ, அவன் பாவங்கள் செய்திருந்தாலும் விஷ்ணுலோகம் அடைகிறான் - என்றது. வாமநபுராணம் - ரங்கநாதம் ஸமாச்ரித்ய தேஹத்யாகம் கரோதிய: தஸ்ய வம்சேம்ருதாஸ் ஸர்வே

கச்சந்த்யாத்யந்திகம் லயம் - எந்தப் பயனும் எண்ணாமல் யார் ஒருவன் ஸ்ரீரங்கநாதனை அடைந்து தனது சரீரத்தை விடுகிறானோ அவனது வம்சத்தில் இருந்து போன அனைவரும் மோக்ஷம் அடைகின்றனர் - என்றது. ஆச்வமேதிக பர்வம், வைஷ்ணவ தர்ம சாஸ்த்ரம் ஐந்தாம் அத்யாயத்தில் - அக்நி ப்ரவேசம் யச்சாபி குருதே மத்கதாத்மநா ஸ யாத்யக்நி ப்ரகாசேந விமாநேந மமாலயம், ப்ராணாம்ஸ் த்யஜதி யோ மர்த்யோ மாம் ப்ரபந்நோ ப்யநாசகம் பாலஸூர்ய ப்ரகாசேந வ்ரஜேந் யாநேந மத் க்ருஹம் - என்னிடம் மனதை வைத்து யார் ஒருவன் தீயில் முழுகுகிறானோ அவன் தீ போன்று ப்ரகாசத்துடன் கூடிய விமானத்தில் பரமபதம் அடைகிறான்; எந்த ஒருவன் தனது பாரம் முழுவதையும் என்னிடம் வைத்தவனாக இறக்கிறானோ, அவன் இளஞ்சூரியன் போன்று மின்னும் விமானம் ஏறி, நாசம் இல்லாத பரமபதம் அடைகிறான் - என்று எம்பெருமான் தானே அருளிச்செய்தான். ஆக இவற்றின் மூலம் மோக்ஷத்திற்கு ஸாதனமாகக் கூறப்படும் எம்பெருமான் விஷயமாக சரீரத்தை விடுதல் என்பது, மற்ற ஸாதனங்கள் எதனையும் கைக்கொள்ளாத ப்ரபந்நனால் கைவிடத்தக்கது அல்லவோ? இப்படி உள்ளபோது ப்ரபந்நராக உள்ள பிள்ளை திருநரையூர் அரையர் இந்தச் செயலை ஏன் செய்தார் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது "இதம் குர்யாத்" என்று ஒரு விதிப்ரயுக்தமாய் வருமதிறே ப்ராப்தா ப்ராப்த விவேகம் பண்ணியிவனுக்குக் கைவிடலாவது; அங்ஙனன்றிக்கே, தன் விரஹத்திலாற்றப் போகாதபடி போக்யமுமாய் ப்ராப்தமுமான விஷயத்தில் ராகப்ரயுக்தமாய் வருமது வருந்தியும் கைவிடப்போகாதிறே யென்கை.

**விளக்கம்** - செய்யத்தக்கது எது, தள்ளத்தக்கது எது என்று அறிந்து, ப்ரபந்நனால் "இதம் குர்யாத் = இதனைச் செய்" போன்ற விதி வாக்கியங்களால் வருபவை மட்டுமே தள்ளக்கூடியதாக இருக்கும். ஆனால் எம்பெருமானைப் பிரிந்த பிரிவின்போது தாங்க இயலாமல், இனிமையானவனும் அடைவதற்கு ஏற்றவனும் ஆகிய எம்பெருமான் விஷயத்தில் ஆசையின் அடிப்படையில் வருவதே அரையர் செய்த செய்கை ஆகும். இது போன்றவை மிகவும் கடினப்பட்டு கைவிட முயற்சித்தாலும் இயலாது.

87. உபாயத்வநுஸந்தாநம் நிவர்த்தகம்; உபேயத்வாநுஸந்தாநம் ப்ரவர்த்தகம்.

**அவதாரிகை** - வைதமாய் வருமளவில் ஸுத்யஜமாய், ராகப்ராப்தமாய் வருமளவில் துஸ்த்யஜமாவானென்னென்ன வருளிச்செய்கிறார் (உபாயத்வ) இத்யாதியாலே.

**விளக்கம்** - சாஸ்த்ரம் மூலமாக உண்டாகின்ற விதிகளை எளிதில் தள்ளும்படியாகவும், ஆசை காரணமாக உண்டாவதை எளிதில் கைவிட இயலாதபடியும் எவ்விதம் நிகழ்கிறது என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – (உபாயத்வாநுஸந்தாநம் நிவர்த்தகம்) என்றது, வைதமாய் வரும் தசையில் தேஹ த்யாக ரூப ப்ரவ்ருத்தியிலுபாயத்வாநுஸந்தாநம் நடக்கையாலே, அவ்வநுஸந்தாநமிவனை ஸாதநதயா ஸம்ப்ரதிபந்நமான இத்தேஹ த்யாக ரூப ப்ரவ்ருத்தியில் நின்றும் மீளுவிக்குமென்றபடி. (உபேயத்வாநுஸந்தாநம் ப்ரவர்த்தகம்) என்றது, ராகப்ராப்தமாய் வரும் தசையில், இவ்விஷயத்துக்கு ஹாநி வரக்கண்டிருப்பதில் முடிகையே நல்லது என்று தேஹ த்யாகந்தன்னை புருஷார்த்தமாக வநுஸந்திக்கையாலே, அவ்வநுஸந்தாநமிவனையதிலே மூளுவிக்குமென்றபடி. அன்றிக்கே, வைதமாய் வரும்போது, பகவத் விஷயத்திலுபாயத்வாநுஸந்தாநம் இதுக்கு நிவர்த்தகமாம்; ராக ப்ராப்தமாய் வரும்போது, அவ்விஷயத்தில் உபேயத்வாநுஸந்தாநமிதுக்கு ப்ரவர்த்தகமா மென்னவுமாம்.

**விளக்கம்** - “உபாயத்வாநுஸந்தாநம் நிவர்த்தகம்” என்பது என்ன? சாஸ்த்ரம் மூலமாக உண்டாகின்ற விதிகளில், ”சரீரத்தைக் கைவிடுதல்” என்பதில் அந்தச் செயல் உபாயம் என்று எண்ணிவிடக்கூடிய தன்மை உண்டு; ஆகவே அந்த அந்த எண்ணம் காரணமாக இவன் அந்தச் செயலில் ஈடுபடாமல் இருந்துவிடுவான். “உபேயத்வாநுஸந்தாநம் ப்ரவர்த்தகம்” என்பது என்ன? ஆசை காரணமாக உண்டாகின்ற செயல்களில் – எம்பெருமானுக்குத் தீமை உண்டாகும்போது அதனைக் கண்டவுடன் உயிரை விடுதலே நன்மை என்று சரீரத்தை விடுதல் என்பதை ஒரு பேறாக எண்ணும்போது, அந்த எண்ணம் அந்தச் செயலில் அவனை ஈடுபடுத்திவிடும். அல்லது சாஸ்த்ரம் மூலமாக வரும்போது பகவானே உபாயம் என்ற எண்ணம் அந்தச் செயலில் இருந்து மீட்டுவிடும்; ஆசை காரணமாக வரும்போது பகவானே உபாயம் என்ற எண்ணம் அந்தச் செயலில் நிலைநிறுத்திவிடும் எனலாம்.

88. அப்ராப்த விஷயங்களிலே ஸக்தனானவன் அது லபிக்கவேணும் என்றிரா நின்றால், ப்ராப்த விஷயப்ரவணனுக்குச் சொல்லவேண்டாவிறே.

**அவதாரிகை** - இப்படியொரு ஸாதந புத்த்யாவன்றிக்கே, தத் விஷய ப்ராவண்யாதிசயத்தாலே ஸ்வதேஹத்தை விடும்படியான நிலை விளையக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (அப்ராப்த) இத்யாதி.

**விளக்கம்** - எம்பெருமானை எண்ணியபடியே சரீரத்தை விடுதல் என்பது மோக்ஷ ஸாதனம் என்ற எண்ணம் காரணமாகவே ஒருவன் சரீரத்தை விடக்கூடும். இவ்விதம் அல்லாமல் எம்பெருமான் மீது உள்ள ஆசை காரணமாக சரீரத்தை விரும்பியதான நிலை உண்டாகுமோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸ்வரூப ப்ராப்தமல்லாத ஹேயவிஷயங்களிலே ப்ரவணனானவன், தன்னையழிய மாறியாகிலும் அவ்விஷயத்தை லபிக்கவேணுமென்று ஸ்வதேஹ த்யாகத்திலே ப்ரவர்த்தியா நின்றால் ஸ்வரூப ப்ராப்தமான விலக்ஷண விஷயத்திலே ப்ரவணனானவனுக்கு, அவ்விஷயத்தைப் பற்றித் தன்னையழிய மாறுகையாகிறவிது கூடுமென்னுமிடம் கிம்புநர் ந்யாயஸித்தமன்றோவென்கை. ஒரு வேச்யையளவிலேயொருவன் அதிஸக்தனாய்க்கொண்டு போருமவனாய், அவளுக்கு வ்யாதி கனக்கவந்தவளவிலே "இவள் ஆறியெழுந்தவறே நான் என் தலையையரிந்து தருகிறேன்" என்றொரு தேவதைக்கு ப்ரார்த்தித்து, பின்பு தலையையரிந்து கொடுப்பது செய்தானென்று ப்ரஸித்தமிறே.

**விளக்கம்** - தனது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றதாக இல்லாத தாழ்வான விஷயங்களில் நாட்டம் கொண்ட ஒருவன், தனது சரீரம் அழியும் என்றாலும் துணிந்து அந்த விஷயங்களில் ஈடுபடவேண்டும் என்று எண்ணுகிறான். இதன் விளைவாக தனது சரீரத்தை விடுகின்ற நிலைக்கும் செல்கிறான். அற்பமான விஷயத்தைக் குறித்தே இப்படி உள்ளபோது, தனது ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்றதான எம்பெருமான் விஷயத்தில் மிகுந்த ப்ரேமை கொண்ட ஒருவன் எம்பெருமானுக்காகத் தன்னை அழித்துக்கொள்வது என்பது நிகழும் என்பதை மீண்டும் தனியாகக் கூறவேண்டுமோ? ஒரு வேசி மீது மிகுந்த காதல் கொண்ட ஒருவன் அவளுக்கு உள்ள நோயைக் கண்டான். உடனே அவன், "இவளது நோய் குணமானால் எனது தலையை அளிக்கிறேன்", என்று ஒரு தெய்வத்திடம் வேண்டினான். அந்த நோய் நீங்கியவுடன், தான் கூறியது போன்று, தனது தலையை அறுத்து அளித்தான் என்பது மிகவும் ப்ரஸித்தமான நிகழ்வாகும்.

89. அநுஷ்டாநமும் அநநுஷ்டாநமும் உபாயகோடியிலந்வயியாது.

**அவதாரிகை** - உபாயோபேயாதிகாரங்களுக்குடலாக மற்றுஞ் சொன்ன அநுஷ்டாநங்கள் போலன்றிக்கே, உபாயதயா சாஸ்த்ரஸித்தமாகையாலே, அநந்ய ஸாதநனுக்கு அநநுஷ்டாநமானவிந்த தேஹத்யாகம் ராகப்ராப்தமாகையாலே துஸ்த்யஜமா யிருந்ததே யாகிலும், உபாய கோடியிலே யந்வயித்தன்றி நில்லாதே யென்னவருளிச் செய்கிறார் "அநுஷ்டாநமும்" என்று தொடங்கி.

**விளக்கம்** – மற்ற எந்தவிதமான ஸாதனத்தையும் கைக்கொள்ளாமல் எம்பெருமானை மட்டுமே ஸாதனமாக ஒருவன் பற்றியுள்ளான் என்று வைத்துக்கொள்வோம். மேலே கூறப்பட்ட உபாய உபேய அதிகாரங்களுக்கு அங்கமாக உள்ள சரீரத்தைத் துறத்தல் முதலானவை சாஸ்த்ரங்களால் உபாயமாக விதிக்கப்பட்டவை ஆகும். அப்படி உள்ளபோது மேலே கூறப்பட்ட ஒருவன் தனது ஆசை காரணமாக உண்டான செய்கை என்பதால் எம்பெருமானுக்காக சரீரம் விடுதல் போன்றவற்றைக் கைவிடாமல் உள்ளபோதும், அவை உபாயங்களாக ஆகிவிடாதோ (அப்போது எம்பெருமான் தவிர

மற்ற உபாயங்களைக் கைக்கொள்வதாக ஆகிவிடுமே)? இந்தக் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, அநுஷ்டாநமாகச் சொன்ன ஸ்வசக்தி த்யாகாதிகளும் ப்ரேமாதிகளும் உபாயோபேயாதிகாராந்தர்ப்பூதமாகையாலே உபாயகோடியிலந்வயியாதாப் போலே அநநுஷ்டாநமாகச் சொன்ன ஸ்வதேஹத்யாகமும், உபாய புத்த்யா அநுஷ்டிதமன்றிக்கே ராகப்ராப்தமாகையாலே உபாயகோடியிலந்வயியாது; உபேயாதிகாரத்திலே யந்தர்ப்பவிக்குமத்தனை என்கை. உபாயதயா சாஸ்த்ர ஸித்தமேயாகிலும், உபாயபுத்த்யா வநுஷ்டிதமானதுக்கேயிறே உபாயத்வமுள்ளது. அங்ஙனன்றாகில் ப்ரபந்நனானவனுபாய புத்தியற உபேயபுத்த்யா பண்ணுகிற புண்யதேச வாஸாதிகளுமுபாய கோடியிலே அந்வயிக்க வேணுமிறே.

**விளக்கம் -** அநுஷ்டானங்களாக உரைக்கப்பட்ட "தனது சக்தியைக் கைவிடுதல்" போன்றவையும், "அன்பு" முதலானவையும் உபாயம் மற்றும் உபேய அதிகாரங்களில் சேர்ந்தவை என்பதால் அவை உபாயங்களின் வரிசையில் சேராது. தனது சரீரத்தை விடுதல் என்பது ப்ரபந்நன் ஒருவனுக்கு முரணாக செய்கை என்று கூறப்படாமல்; ஆனால் அத்தகைய செய்கையானது "உபாயம்" என்ற எண்ணத்துடன் செய்யப்படாமல், ஆசை காரணமாகச் செய்யப்படும்போது உபாயம் ஆகாது; அதுவும் உபேயம் என்பதிலேயே அடங்கிவிடும். எந்த ஒரு செயலும் உபாய புத்தியுடன் செய்யப்பட்டால் மட்டுமே, அது சாஸ்த்ரங்களில் கூறப்பட்டபடி உபாயமாகும் தன்மை அடைகிறது. இவ்விதம் கொள்ளவில்லை என்றால், உபாயம் என்று கருதாமல், உபேயம் என்று எண்ணியபடி ப்ரபந்நன் ஒருவன் திவ்யதேசத்தில் வசித்தல் என்பதும் உபாயமாக அல்லவோ கொள்ளப்படவேண்டும்? (இவ்விதம் கொள்ளப்படுவதில்லை)

90. அநந்யோபாயத்வமும் அநந்யோபேயத்வமும் அநந்யதைவத்வமும் குலையும்படியான ப்ரவ்ருத்தி காணாநின்றோமிறே.

**அவதாரிகை -** அன்றிக்கே, இந்த ப்ரவ்ருத்திதான் உபாயகோடிலேயந்வயித்ததாகிலும் அநந்யோபாயத்வத்துக்குக் குலைதல் வருமித்தனையிறே, அது ப்ரேமபரவசர்க்கு அவத்யமன் றென்கைக்காக ப்ரேமபரவசர் ப்ரவ்ருத்திகளை தர்சிப்பிக்கிறார் (அநந்யோ பாயத்வமும்) என்று தொடங்கி.

**விளக்கம் -** அல்லது, இது போன்று சரீரம் விடுவது முதலான செயல்கள் உபாயமாகக் கொள்ளப்பட்டாலும் தவறு இல்லை எனலாம். இவ்விதம் கொண்டால் வேறு எந்த ஒரு உபாயத்தையும் கைக்கொள்ள்வதில்லை என்ற நிலைக்கு முரண்பாடு உண்டாகும் அல்லவோ? இதற்கு விடையாக "இந்தச் செய்கை அன்பின் மிகுதியால் வருவதால், அது

அவர்களின் தோஷம் ஆகாது” என்று விளக்கும் விதமாக, அன்பின் வசப்பட்டவர்கள் செய்யும் செயல்களை உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** - அநந்யோபாயத்வம் குலையும்படியான ப்ரவ்ருத்தியாவது “திருந்தவே தோற்கின்றேன்”, ”நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள்”, ”குதிரியாய் மடலூர்தும்”, ”ஓதிநாமம்”, “ஊராதொழியேன் நான் வாராரர்பூம் பெண்ணைமடல்”, ”உலகறியவூர்வன் நான் மன்னியபூம் பெண்ணைமடல்” என்று நோன்பு நோற்கை, மடலெடுக்கை முதலான வ்யாபாரங்களிலே யிழிகை. அநந்யோபேயத்வம் குலையும்படியான ப்ரவ்ருத்தியாவது - அத்தலைக்கதிசயத்தை விளைக்கையே புருஷார்த்தமென்றிருக்கை தவிர்ந்து, “நமக்கே நலமாதலில்” என்றும், “தூமலர்த் தண்ணந்துழாய் மலர்கொண்டு சூடுவோம்” என்றும் தனக்கதிசயம் தேடத்தொடங்குகை. அநந்யதைவத்வம் குலையும்படியான ப்ரவ்ருத்தியாவது, “காமதேவா வுன்னையுமும்பியையும் தொழுதேன்”, “பேசுவதொன்றுண் டிங்கெம்பெருமான்” என்று காமன் பக்கலிலே தேவதா புத்தி பண்ணி யாராதிக்கை. (காணா நின்றோமிறே) என்றது, ப்ராப்ய வஸ்துவின் ப்ராவண்யாதிசயத்தாலே பேரளவுடையவர்கள் பக்கலிலு முண்டாகக் காணாநின்றோமிறே என்கை. முன்பு சொன்ன ப்ரவ்ருத்திக்கு உபயகோட்யநவயம் வஸ்துகதயா வருமென்று கொள்ளுகிற மாத்ரமிறே; அங்ஙனன்றிக்கே, நேரேயுபாய புத்த்யாவநுஷ்ட்டிதமானவையிறே யிவை; ஆகையால் ப்ரேமபரவசர்க்கிது அவத்யமன்றென்று கருத்து.

**விளக்கம்** - “அவனைத் தவிர மற்ற எதனையும் உபாயமாகக் கொள்ளாமல் இருத்தல்” என்னும் உறுதி மாறும்படியாகக் காமனைக் குறித்து நோன்பு எடுத்தல், அவன் அழியவேண்டும் என்று மடல் எடுத்தல் போன்ற செய்கைகள் உள்ளனவே. இவற்றை நாச்சியார் திருமொழி (1-6) – திருந்தவே தோற்கின்றேன், (1-8) – நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள், திருவாய்மொழி (5-3-9) – குதிரியாய் மடலூர்தும், பெரிய திருமொழி (9-3-9) – ஓதிநாமம், சிறியதிருமடல் – ஊராதொழியேன் நான் வாராரர்பூம் பெண்ணைமடல், சிறியதிருமடல் – உலகறியவூர்வன் நான் மன்னியபூம் பெண்ணைமடல் – போன்றவைகளில் காணலாம். “அவனைத் தவிர வேறு எதனையும் உபாயமாகக் கொள்ளாமல் இருத்தல்” என்னும் உறுதி மாறும்படியாக, ”அவனுக்கு மேன்மை உண்டாக்குவதே எனது புருஷார்த்தம்” என்னும் எண்ணம் மாறுபட்டு, தனக்கு ஏற்ற நன்மையைத் தேடுதல் காணலாம். எங்கு? பெரியதிருமொழி (9-3-9) – நமக்கே நலமாதலில், திருவாய்மொழி (5-3-10) - தூமலர்த் தண்ணந்துழாய் மலர்கொண்டு சூடுவோம் – போன்ற பாசுரங்களில் காணலாம். “அவனைத் தவிர மற்ற தெய்வம் இல்லை” என்னும் உறுதி குலையும்படி, காமனைத் தெய்வம் என்று ஆராதிக்கும் நிலையை நாச்சியார் திருமொழி (1-1) – காமதேவா வுன்னையுமும்பியையும் தொழுதேன், (1-8) – பேசுவதொன்றுண் டிங்கெம்பெருமான் - என்ற வரிகளில் காணலாம். ”காணா நின்றோமிறே” என்பது என்ன? அடையத்தகுந்தவனாகிய எம்பெருமானிடம் உண்டான அளவு கடந்த ப்ரேமை காரணமாக, பேரளவுடையவர்கள் பக்கமும் அதே ப்ரேமை ஏற்படுகிறது என்று கருத்து. “சரீரத்தை விடுதல்” என்பது அந்தச் செயலின் தன்மை

காரணமாகவே உபாயமாகக் கொண்டு பேசப்பட்டது. ஆனால் இங்கு கூறப்பட்ட மூன்று செயல்களும் உபாயம் என்ற எண்ணத்துடன் செய்யப்பட்டவை ஆகும். அப்படி என்றால் "அவனைத் தவிர மற்ற உபாயம் கைக்கொள்ளுதல்" என்ற தோஷம் ஏற்படுமே என்றால், பக்தியின் வசப்பட்டு நிற்பவர்களுக்கு இந்தத் தோஷம் ஏற்படாது என்று கருத்து.

91. ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞானத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும்.

**அவதாரிகை -** இத்தனையும் கலக்கத்தாலே வந்தவையிறே, அஜ்ஞாந மூலமாய் வருமவை யொன்று மாதரணீயமன்றே என்ன வருளிச்செய்கிறார் (ஜ்ஞாந) இத்யாதியாலே.

**விளக்கம் -** இப்படிப்பட்ட செயல்கள் அனைத்தும் (காமனைத் தொழுவது, மடல் எடுப்பது) எம்பெருமானைக் குறித்து எண்ணியபடி உள்ளதால் ஏற்பட்ட கலக்கம் காரணமாக வந்தது அல்லவோ? ஆகவே அறிவின்மை காரணமாக இவை வந்ததால் இவற்றைக் குற்றம் என்றே கொள்ள வேண்டும் அல்லவோ? இதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (ஜ்ஞாந விபாகமாவது) – "ஞானங்கனிந்தநலம்" என்கிறபடியே, ஜ்ஞாநத்தினுடைய பரிபாக ரூபையான பக்தி; அதின் கார்யமான (அஜ்ஞாநமாவது) – அந்த பக்த்யதிசயத்தாலே வரும் ப்ராப்தாப்ராப்த விவேகாபாவம்; அத்தாலே வரும் ப்ரவ்ருத்தி விசேஷங்களெல்லாம் (அடிக்கழஞ்சுபெறும்) என்றது, அதி ச்லாக்யங்களா யிருக்கு மென்றபடி. கர்ம நிபந்தநமான அஜ்ஞாநத்தாலே வருமவையே ஹேயங்களென்று கருத்து.

**விளக்கம் -** "ஜ்ஞாநம விபாகம்" என்றால் இராமாநுச நூற்றந்தாதி (66) – ஞானம் கனிந்த நலம் – என்று கூறுவதற்கு ஏற்ப ஞானம் என்பது உயர்ந்த பக்குவத்தை அடைந்து ஏற்படுகின்ற பக்தி என்பதாகும். அதன் விளைவாக உண்டாகும் அஜ்ஞானம் என்பது என்ன? அந்தப் பக்தியின் எல்லையற்ற நிலை காரணமாக எது சரி, எது தவறு என்று அறிய இயலாமல் உள்ள தன்மை ஆகும். இந்த நிலையின் மூலம் செய்யப்படும் செயல்கள் அனைத்தும் மிகுந்த போற்றுதல்களுக்கு உரியவை என்று கருத்து. அடிக்கழஞ்சு என்றால் - ஓர் அடி அளவே உள்ள நிலமானது கழஞ்சு என்னும் அளவு கொண்ட தங்கத்திற்கு சமம் என்று பொருள்; அதாவது நிலம் இங்கு மேன்மையுடன் கூறப்பட்டது. இந்த நிலம் போன்று இவர்களின் அறியாமை கொள்ளப்படுகிறது. ஆனால் கர்மம் காரணமாக உண்டாகிற அறியாமை என்பது மட்டுமே தாழ்வானவையே ஆகும்.

92. உபாயபலமாய் உபேயாந்தர்ப் பூதமாயிருக்குமது உபாயப்ரதிபந்தகமாகாது.

**அவதாரிகை** - ஆனாலும், இவ்வதிப்ரவ்ருத்தி இத்தலையில் ப்ரவ்ருத்தியி லொன்றையும் ஸஹியாத ஸித்தோபாயத்தின் கார்யகரத்வத்துக்கு ப்ரதிபந்தகமாகாதோ வென்னவருளிச் செய்கிறார் (உபாய) இத்யாதியாலே.

**விளக்கம்** – ஆனால் ஸித்தோபாயமாக உள்ள எம்பெருமான் எதனையும் எதிர்பாராமல் கடாக்ஷிக்கும்போது, இவர்களது இந்தச் செய்கைகள் காரணமாக, எம்பெருமானின் செய்கைக்குத் தடை உண்டாகாதோ என்ற சந்தேசத்தை நீக்குகிறார்.

**வ்யாக்யானம்** – "உபாயபலம்" என்றது, ஸித்தோபாயமானவவன் பண்ணின க்ருஷிபல மென்றபடி "மயர்வற மதிநல மருளினன்", "பேரமர் காதல் கடல் புரைய விளைவித்த காரமர்மேனி நங் கண்ணன்" என்றும் ஏவம்பூத ப்ரவ்ருத்தி ஹேதுவான பக்திக்கு உத்பாதகனும் வர்த்தகனு மவனேயிறே; ஆகையாலே, பக்தி பாரவச்ய நிபந்தநமான இப்ப்ரவ்ருத்தியை யுபாயபல மென்கிறது. (உபேயாந்தர்பூதா யிருக்குமது) என்றது – ப்ராப்ய த்வரையில் முறுகுதலாலே கண்ணாஞ் சுழலையிட்டு இத்தலைபடுகிற அலமாப் பெல்லாம் நம்மையாசைப்பட்டிப்படி படப்பெறுவதே என்று அவன் முகமலருகைக் குறுப்பாகையாலே. மடலெடுக்கை தொடக்கமான விந்த ப்ரவ்ருத்திகள் அவன் முகமலர்த்திக்காகப் பண்ணும் கைங்கர்யத்தோபாதியாய்க் கொண்டு உபேயத்திலே அந்தர்ப்பூதமாயிருக்குமென்கை. (உபாய ப்ரதிபந்தகமாகாது) என்றது, ஏவம் பூதமானது உபாயத்தினுடைய கார்யகரத்வத்துக்கு விலக்காகா தென்றபடி.

**விளக்கம்** - "உபாயபலம்" என்றால் ஸித்தோபாயமாக உள்ள எம்பெருமான் எதனையும் எதிர்பாராமல் செய்த செய்கை என்பதாகும். திருவாய்மொழி (1-1-1) - மயர்வற மதிநல மருளினன் – என்றும், திருவாய்மொழி (5-3-4) – பேரமர் காதல் கடல் புரைய விளைவித்த காரமர்மேனி நங் கண்ணன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப "சரீரம் துறத்தல்" உள்ளிட்ட செயல்களுக்கு அடிப்படைக் காரணமாக உள்ள பக்தியை உண்டாக்கியவனும், வளர்த்தவனும் அவனே அல்லவோ? எனவே பக்தியால் பரவசம் அடைந்த நிலை காரணமாக விளைகின்ற இச்செயல்களை உபாய பலம் என்றது பொருத்தமே ஆகும். " உபேயாந்தர்பூதா யிருக்குமது" என்பது என்ன? அவனை விரைவாக அடைந்து விட வேண்டும் என்ற வேகத்தின் காரணமாக நிலைதடுமாறி ஒருவன் படுகிற பிரிவாற்றாமை துன்பங்கள் அனைத்தும் "நம்மை அடைய இவன் இத்தனை பாடுபடுகிறானே!" என்று எம்பெருமான் திருமுகம் மலர்வதற்கே ஆகும்; இதனால் மடல் எடுத்தல் போன்ற செயல்கள் அனைத்தும் அவனது திருமுகம் மலர்வதற்காகச் செய்யப்படும் கைங்கர்யம் போன்ற உபாயத்தில் அடக்கமே ஆகும். "உபாய ப்ரதிபந்தகமாகாது" என்பது என்ன? இத்தகைய செயல்கள் உபாயமான எம்பெருமான் நமக்காகச் செய்கின்ற செயல்களுக்குத் தடையை உண்டாக்காது என்பதாகும்.

93. ஸாத்யஸமாநம் விளம்பாஸஹமென்றிறே ஸாதநத்துக்கேற்றம்; ஸாத்ய ப்ராவண்ய மடியாகவிறே ஸாதநத்திலிழிகிறது.

**அவதாரிகை** - இப்படி மடலெடுக்கை முதலானவை ஸித்தோபாய ப்ரதிபந்தகமாகாதென்னுமிடம் சொல்லி, அவை தனக்கு ஸித்தோபய ஸாம்யத்தை விவக்ஷித்தருளிச் செய்கிறார்மேல் (ஸாத்ய ஸமாநம்) இத்யாதி வாக்யத்வயத்தாலே.

**விளக்கம்** - இப்படியாக மடலெடுத்தல் போன்ற செயல்கள், ஸித்தோபாயமான எம்பெருமான் நமக்காகச் செய்ய உள்ளவற்றைத் தடுக்காது என்று கூறி, அவற்றுக்குள்ள ஸித்தோபாய ஒற்றுமையைக் கூற எண்ணியவராய், இந்தச் சூர்ணையை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ஸாத்ய வஸ்துவே ஸாதநமாகையாலே ஸாத்யத்துக்கு ஸமாநமென்றும், பல விளம்பத்தை ஸஹியாதே சீக்ரமாக கார்யம் செய்து கொடுக்குமென்றுமிறே இதர ஸாதநங்களிற் காட்டில் ஸித்தஸாதநத்துக்கேற்றம்; ஸாத்யத்தில் ப்ராவண்யமடியாகவிறே இந்த ஸாதகபரிக்ரஹந்தன்னிலிழிகிறது; அவை இரண்டுமிவற்றுக்கு முண்டென்று கருத்து. எங்ஙனேயென்னில்; மடலெடுக்கை முதலான, ப்ரவ்ருத்திகள் சேஷிக்கதிசய கரங்களாகையாலே கைங்கர்யரூப ஸாத்யத்துக்கு ஸமாநங்களாயிருக்கையாலும், மடலூருதல் நோன்பு நோற்குதல் செய்வனென்று துணிந்தபோதே ஸர்வேச்வரன் த்வரித்துக் கொண்டு வந்து இவர்கள் காலிலே விழும்படி பண்ணிக் கொடுக்கையாலே பல விளம்பாஸஹங்களாயிருக்கையாலும், ஸித்த ஸாதநம் போலே இதர ஸாதநங்களிற் காட்டிலேற்றத்தையுடைத்தாய், ஸாத்யப்ராவண்யமடியாக இவற்றிலிழிகிற வாகாரமு மொத்திருக்கையாலே இத்தால் - ஸித்தோபயத்தை யொழியவு மிதுதானே கார்யம் செய்யவற்றாகையாலே தத் ப்ரதிபந்தகமென்னும் தூஷணமில்லையென்று கருத்து. அன்றிக்கே (உபாயப்ரதிபந்தகமாகாது) என்றத்தை யின்னமும் முகபேதத்தாலே யுபபாதிக்கிறார் (ஸாத்ய) இத்யாதி வாக்ய த்வயத்தாலே, அதாவது – பால் மருந்தாமாப்போலே ஸாத்ய வஸ்து தானே ஸாதநமகையாலே ஸாரஸ்யத்தில் ஸாத்யத்தோடொத்திருக்கு மென்றும், ஸாத்யத்தை ப்ராபிக்கு மளவில் காலவிளம்பத்தைப் பொறாது கடுக ப்ராபித்துவிடுமென்றுமன்றே ஸாதநாந்தரத்திற் காட்டில் ஸித்த ஸாதநத்துக்கேற்றம்; இப்போதிது சொல்லுகிறது, இவ்வாகார த்வயமும் ஸாத்ய ப்ராவண்ய ஹேதுவாமென்று தோற்றுகைக்காக. இப்படியாகையாலே, தானடியாக விளைந்து க்ஷண காலவிளம்பம் பொறாமல் துடிக்கும்படி முறுகடியிடுகிற ஸாத்ய ப்ராவண்யமடியாகவிறே மடலெடுக்கை முதலான விஸ்ஸாதநத்தி விழிகிறதென்கை. ஆகையாலே, ஏவம் பூத ப்ராவண்யத்தின் முறுகுதலாலே கண்ணாஞ்சுழலையிட்டுச் செய்கிற விப்ப்ரவ்ருத்திகள் உபாயம் மேல்விழுந்து கார்யஞ்செய்கைக்குடலாமித்தனை யல்லாது தத்ப்ரதிபந்தகமாகாதென்று கருத்து.

**விளக்கம் -** மற்ற அனைத்து உபாயங்களையும் விட எம்பெருமான் என்னும் உபாயத்திற்கு ஏற்றம் என்னவென்றால் – எம்பெருமான் என்னும் ஸாத்ய வஸ்துவே அவனை உடைய உதவும் ஸாதனமான ஸித்தோபாயமாகவும் உள்ளான். எனவே அந்த ஸாதனம் அவனுக்கு ஒத்ததாக உள்ளது என்பதும், பலனாகிய தன்னைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதை அவன் பொறுத்துக் கொள்வதில்லை, எனவே விரைவாகத் தன்னை அடையும்படிச் செய்கிறான் என்பதும் - ஆகும். இப்படிப்பட்ட ஸாத்ய வஸ்துவான எம்பெருமான் மீது கொண்ட அன்பு காரணமாக அல்லவோ ஸித்தோபாயமான எம்பெருமானையே ஸாதனமாகக் கொள்கின்றனர். ஆகவே காலதாமதம் பொறுத்துக் கொள்ள இயலாமை, அன்பின் காரணமாகவே ஸித்தோபாயத்தைப் பற்றுதல் என்று இரண்டும் மடல் எடுத்தல் போன்ற செயல்களுக்கு அடிப்படை ஆகிறது. எப்படி? மடல் எடுத்தல் போன்ற செயல்கள் எஜமானனாகிய எம்பெருமானுக்கு மேன்மையை ஏற்படுத்தவல்லவை என்பதால் இவை கைங்கர்யம் என்னும் ஸாத்யத்தை ஒத்தவை ஆகும் (ஸாத்யம் என்பது மூன்றாகும் - எம்பெருமான் ஸாத்யம் எனப்படுபவன், கைங்கர்யம் ஸாத்யம் எனப்படும், கைங்கர்யம் மூலம் ஏற்படும் அன்பும் ஸாத்யம் எனப்படும்). மேலும் அவர்கள் மடல் எடுத்தல்,நோன்பு நோற்றல் போன்ற செயல்களில் ஈடுபட எண்ணிய உடனேயே, ஸர்வேச்வரன் விரைவாக ஓடிவந்து இவர்களின் காலில் விழும்படிச் செய்யவல்லவை என்பதால் பலனைப் பெறுவதில் உள்ள தாமதத்தைப் பொறுக்க இயலாத தன்மை இவைகளுக்கு உண்டு. மற்ற அனைத்தும் உபாயங்களையும் விட, ஸித்தோபாயமான எம்பெருமான் என்னும் உபாயத்திற்கு ஏற்றம் உள்ளது போன்று, இவைகளுக்கு ஏற்றம் உண்டு. எம்பெருமான் மீது கொண்ட அன்பு மட்டுமே காரணமாக இவர்கள் இதில் ஈடுபடுகின்றனர் போன்ற பல காரணங்கள் கூறலாம். ஆகவே ஸித்தோபாயம் அல்லாமல் இவை தாங்களாகவே காரியம் செய்யவல்லவை என்பதால், இவை எம்பெருமானின் செய்கைகளுக்குத் தடை ஆகாது என்று அறிக. இந்தச் சூர்ணைக்கு வேறு பொருளும் கூறலாம். கடந்த சூர்ணையில் “உபாயப்ரதிபந்தகமாகாது” என்று கூறியதற்கு மேலும் காரணம் கூறி இந்தச் சூர்ணையில் விளக்குகிறார் எனலாம். பால் என்பது உணவாகவும் மருந்தாகவும் உள்ளது போன்று, உபேயமாக உள்ள எம்பெருமான் தானே உபாயமாகவும் உள்ளான். ஆகவே தன்னை அடைவிப்பதற்கான காலதாமதத்தைத் தானே பொறுத்துக் கொள்ள இயலாமல், விரைவாகப் பலனை அளிப்பதால், மற்ற உபாயங்களான பக்தி போன்றவற்றைக் காட்டிலும் ஸித்தோபாயமான எம்பெருமானுக்கு ஏற்றமே உள்ளது. இதனை இங்கு ஏன் கூற வேண்டும் என்றால், ஸாத்யவஸ்து மீது அன்பு உண்டாவதற்கு இந்த இரு தன்மைகளுமே காரணம் என்பதை உணர்த்தவே ஆகும். ஆகவே ஸர்வேச்வரன் அடியாக ஏற்பட்டு, ஒரு நொடிப்பொழுது கூட அவனை அடையும் காலத்தில் தாமதம் ஏற்படுவதைப் பொறுக்க இயலாமல் துடித்தபடி, அந்த ஸாத்யவஸ்து மீது உண்டான அன்பு காரணமாக அல்லவோ மடல் எடுத்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர்? எனவே அன்பு மேலிடுவதன் காரணமாகச் செய்கின்ற இந்தச் செய்கைகள், ஸர்வேச்வரன் பதிலுக்கு ஓடி வந்து மேலே விழுந்து செய்கின்ற செயல்களுக்குக் காரணமாக இருக்குமே அல்லாமல், அவனது செயல்களுக்குத் தடையாக இருக்காது என்று கருத்து.

**வ்யாக்யானம் -** ஆக (இவனுக்கு வைதமாய் வருமதிறே த்யஜிக்கலாவது) என்று தொடங்கி இவ்வளவு வர, பிள்ளை திருநறையூரரையர் ப்ரவ்ருத்தி வ்யாஜத்தாலே, பகவத் ப்ரபந்நனாயிருந்தனேயாகிலும் உபேயபரனானவனுக்கு தத் விஷயப்ராவண்யத்தாலே வரும் ஸ்வதேஹ த்யாகம் துஸ்த்யஜம், உபாய புத்த்யாவநுஷ்டித மல்லாமையாலே அதுதானுபாய கோடியிலந்வயியாது, வஸ்துகத்யா அந்வயித்ததாகிலும் ப்ரேம பரவசர்க்கு தோஷாயவன்று. புத்தி பூர்வகமாக வநந்யோபாயத்வாதிகள் குலையும் படியான ப்ரவ்ருத்திகள் தெளியக் கண்டவர்கள் பக்கலிலும் காண்கையாலே; இவைதான் அஜ்ஞாந மூலமேயாகிலும் ப்ரேம கார்யமான வஜ்ஞாநத்தாலே வந்தவையாகையால் அதிச்லாக்யாங்கள், ஸித்தோபாய ப்ரதிபந்தகமாகாது; அவ்வளவன்றிக்கே அத்தோடொக்கச் சொல்லலாம்படியன்றோ விவற்றின் பெருமையென்று சொல்லுகையாலே உபேயாதிகாரத்தில் (தன்னைப் பேணாமை) என்று சொன்னவிது அநந்ய ஸாதநத்வத்துக்குச் சேருமோவென்னு மதிசங்கா பரிஹாரம் பண்ணப்பட்டது.

**விளக்கம் -** ஆகவே சூர்ணை-86 முதல் இந்தச் சூர்ணை முடிய, பிள்ளை திருநறையூர் அரையரின் செயலானது கூறப்பட்டு, அந்தச் செய்கை ஏற்புடையதா என்ற ஐயத்திற்கான விடை அளிக்கப்பட்டது. இதனைக் கீழே காண்க:

- பகவத் ப்ரபந்நனாக உள்ளபோதிலும் அந்த உபேயமான எம்பெருமான் மீது கொண்ட அன்பு காரணமாகத் தனது சரீரம் துறத்தல் என்பதை விட இயலாது.
- அப்படி சரீரம் துறத்தல் என்னும் செயலானது உபாய புத்தியுடன் செய்யப்படவில்லை என்பதால், எம்பெருமான் அல்லாமல் மற்றொரு உபாயம் கைக்கொண்டான் என்ற தோஷம் ஏற்படாது.
- அந்தச் செயலின் தன்மை காரணமாக அதனை உபாயமாக என்று சிலர் எண்ணினாலும், அன்பின் வசப்பட்டிருக்கும் அவனைப் பொறுத்தவரை அது தோஷம் அல்ல.
- மற்ற உபாயங்களைக் கைவிட்டவர்களின் பார்வையில் இது போன்று சரீரம் விடுதல் முதலான செயல்களை உணர்ந்தே செய்தனர் என்று தோன்றினாலும் தோஷம் எற்படாது.
- இது போன்ற செயல்கள் அறிவில்லாத தன்மையின் விளைவாக ஏற்படுவது என்று கூறலாம். ஆனாலும் மிகுந்த பக்தி காரணமாக அந்த அறிவின்மை ஏற்படுவதால், இந்தச் செயல்கள் போற்றப்பட வேண்டியவையே ஆகும்.
- இது போன்ற செயல்கள் ஸித்தோபாயமான எம்பெருமான் நமக்காகச் செய்யும் செய்கைகளுக்குத் தடை ஏற்படுத்தாது.
- இது போன்று செயல்கள் ஸித்தோபாயமான எம்பெருமானின் செயல்களை ஒத்திருப்பவை என்னும்படி மேன்மை பெற்றவை ஆகும்.

இப்படியாக உபாய அதிகாரத்தில் “தன்னைப் பேணாமை” என்று கூறப்பட்ட இது, மற்ற உபாயங்களின் வரிசையில் சேர்ந்துவிடுமோ என்ற சந்தேகம் விலக்கப்பட்டது.

94. இவனுக்குப் பிறக்குமாத்மகுணங்களெல்லாவற்றுக்கும் ப்ரதாந ஹேது இந்த ப்ராவண்யம்.

**அவதாரிகை** - ஏவம்பூதமான ப்ராவண்யம் விஷய வைலக்ஷண்யாதீநமத்தனையன்றோ, சமதமாதி யாத்ம குணங்களன்றோ அதிகாரத்தை மினுங்குவிப்பதென்ன; அவை தன்னையு மிதுதானே யுண்டாக்கு மென்கிறார் மேல் (இவனுக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - இத்தகைய பகவத் விஷய ஈடுபாடு என்பது எம்பெருமானின் அழகு போன்றவற்றால் ஏற்படுவது அல்லவோ? ஆனால் சமம், தமம் போன்ற ஆத்மகுணங்களால் ஒருவன் பயன் பெறுவதால் அல்லவோ மேன்மை அடைகிறான் என்று கேட்கலாம். உண்மை, ஆயினும் அத்தகைய ஆத்மகுணங்களை இத்தகைய பகவத் ஈடுபாடு அல்லவோ ஏற்படுத்தும் என்று கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – "சமதம நியதாத்மா", "அமாநித்வம்" இத்யாதியிற் சொல்லுகிறபடியே – இச்சேதநனுக்குண்டாகத் தக்கவாத்மகுணங்கள் தானனேகமுண்டிறே; இவை யெல்லாவற்றுக்கும் இந்த ப்ராவண்யம் - (ப்ரதாந ஹேதுவாகையாவது) – அநுகூல ஸஹவாஸ சாஸ்த்ராப்யா ஸாசார்யோபதேசாதிகளான ஹேத்வந்தரங்களிற் காட்டில் முக்க்ய ஹேதுவாயிருக்கை.

**விளக்கம்** - இவனுக்கு ஏற்படும் ஆத்மகுணங்கள் அனைத்திற்கும் மூலகாரணம் எது என்றால், பகவத் விஷய ஈடுபாடே ஆகும். இதனை "சமதம நியமாத்மா", "அமாநித்வம்" போன்ற ச்லோகங்கள் மூலம் அறியலாம். ஒருவனுக்கு ஆத்மகுணங்கள் ஏற்பட முக்கியமான காரணம் பகவத் விஷய ஈடுபாடே ஆகும்.

95. "மாற்பால் மனஞ் சுழிப்ப", "பரமாத்மநி யோரக்த:", "கண்டு கேட்டுற்றுமோந்து".

**அவதாரிகை** - இவ்வர்த்தத்தில் ப்ரமாணோபாதாநம் பண்ணுகிறார் (மாற்பால்) என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்ட விஷயத்திற்கு ஏற்ற ப்ரமாணங்களை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு நூற்பால் மனம் வைக்க நொய்விதாம்" என்று ஸர்வேச்வரன் பக்கலிலே ஹ்ருதயம் ப்ரவணமாக, போக்யைகளான ஸ்த்ரீகளுடைய தோளோடேயணைகையில் நசையற்று, ப்ரமாணங்களிலே மநஸ்ஸை வைக்க வெளிதாமென்றும்; "பரமாத்மநி யோ ரக்தோ

விரக்தோ பரமாத்மநி” என்று பரமாத்மாவின் பக்கலிலே ரக்தனாய் அத்தாலே பரமாத்மேதர விஷயத்தில் விரக்தனானவனென்றும்; ”ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக் கண்ட சதிர் கண்டு கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலு மைங்கருவி கண்ட வின்பம் தெரிவரிய வளவில்லாச் சிற்றின்பம் ஒழிந்தேன்” என்று பெரியபிராட்டியாரும் தேவருமாயொரு தேசவிசேஷத்திலே யெழுந்தருளியிருக்கிற சேர்த்தியைக் கண்டு அங்கே ப்ரவணனாய், ஐச்வர்ய கைவல்யங்களில் விரக்தனானே னென்றும்; பகவத் ப்ராவண்ய மிதர விஷய விரக்தி ஹேதுவாகச் சொல்லப்பட்டதிறே.

**விளக்கம்** – மூன்றாம் திருவந்தாதி (14) மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு நூற்பால் மனம் வைக்க நொய்விதாம் – என்பது என்ன? ஸர்வேச்வரனிடம் சென்று விட்டால் தனக்கு இனியவர்களாக இருந்து வந்த பெண்களின் தோள்களைத் தழுவுதலில் உள்ள ஆசை விலகி, ப்ரமாணங்களில் மனம் செல்லும் என்பதாகும். பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோ பரமாத்மநி – எம்பெருமானிடம் ஆசை வைத்து, அவன் நீங்கலாக உள்ள மற்றவற்றில் ஆசையை விலக்கி - என்றால் என்ன? பரம்பொருளான எம்பெருமானிடம் ஆசை கொண்டுவிட்டால், அவன் நீங்கலாக உள்ள மற்ற விஷயங்களில் ஆசை நீங்கும் என்பதாகும். திருவாய்மொழி – ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக் கண்ட சதிர் கண்டு கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலு மைங்கருவி கண்ட வின்பம் தெரிவரிய வளவில்லாச் சிற்றின்பம் ஒழிந்தேன் – என்பது என்ன? பெரிய பிராட்டியும் ஸர்வேச்வரனும் ஒன்றாக எழுந்தருளியுள்ள அழகைக் கண்ட பின்னர் அங்கு என் அன்பு சென்றவனாக, செல்வத்திலும் கைவல்யத்திலும் அன்பு இல்லாதவனாக நின்றேன் - என்பதாகும். ஆக எம்பெருமான் மீது கொண்ட ஈடுபாடு என்பது மற்ற விஷயங்களின் மீது உண்டாகும் வெறுப்பிற்குக் காரணம் என்று காட்டப்பட்டது.

96. ஆத்ம குணங்களில் ப்ரதாநம் சமமும் தமமும்.

**அவதாரிகை** - பகவத்ப்ராவண்ய மாத்க குணங்களெல்லாவற்றுக்கும் ப்ரதாந ஹேதுவென்று ப்ரஸ்தாவித்து, இதரவிஷய விரக்தி ஹேதுத்வமாத்ரத்தில் ப்ரமாணங்களை தர்சிப்பிப்பானென்னென்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார் (ஆத்ம குணங்களில் ப்ரதாநம் சமமும் தமமும்) என்று.

**பொருள்** - ஆத்ம குணங்கள் அனைத்திற்கும் முக்கியமான காரணம் ஸர்வேச்வரனிடம் உள்ள அன்பே ஆகும் என்று கூறினார். தொடர்ந்து சிற்றின்பத்தின் மீது ஆசை ஏற்படாமல் போவதற்கான காரணமும் அவன் மீது கொள்ளும் ஈடுபாடே என்று ஏன் ப்ரமாணங்கள் மூலம் கூறவேண்டும் என்ற சந்தேகத்திற்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – சமமாவது, அந்த:கரண நியமநம்; தமமாவது, பாஹ்ய கரண நியமநம். ”சமச் சித்த ப்ரசாந்திஸ் ஸ்யாத் தமச்சேந்த்ரிய நிக்ரஹ:” என்னக் கடவதிறே. “க்ஷமா ஸத்யம் தமச்சம:” என்கிறவிடத்தில், “தமோ பாஹ்ய கரணாநா மநர்த்த விஷயேப்யோ நியமநம் - சமோந்த: கரணஸ்ய ததா நியமநம்” என்றிறே பாஷ்யகாரருமருளிச் செய்தது. மாறிச்சொல்லுமிடமுமுண்டு. இந்த சம தமங்களுண்டானவிடத்தில் அல்லாத குணங்கள் தன்னைடையே வருமாகையாலே ப்ரதாநமான விவற்றுக்கு ஹேதுவென்னுமிடத்தில் ப்ரமாணம் காட்டப்பட்டதென்று கருத்து. அன்றிக்கே, கீழ்ச்சொன்ன விரக்தி ஹேதுத்வம், ஸகலாத்ம குணோத்பத்திக்கும் ஹேதுவென்னுமிடத்துக்கு உபலக்ஷணமாக்கி, இவ்வாத்ம குணங்களில் ப்ரதாநமேதென்கிற சங்கையிலே, (ஆத்மகுணங்களில் ப்ரதாநம் சமமும் தமமும்) என்றருளிச் செய்தாராகவுமாம்.

**விளக்கம்** - சமம் என்றால் அந்தகரணமான மனதை அடக்குதல், தமம் என்றால் புற உறுப்புகளான ஐந்து இந்த்ரியங்களை அடக்குதல் ஆகும். இதனை – சமச் சித்த ப்ரசாந்திஸ் ஸ்யாத் தமச்சேந்த்ரிய நிக்ரஹ: – அக உறுப்புகளை அடக்குதல் சமம், புற இந்த்ரியங்களை அடக்குதல் தமம் – என்பதன் மூலம் காணலாம். கீதையில் உள்ள (10-4) – க்ஷமா ஸத்யம் தம: சம: - என்ற ச்லோகத்திற்கு ஸ்ரீபாஷ்யகாரர் தனது கீதாபாஷ்யத்தில் - தமோ பாஹ்ய கரணாநா மநர்த்த விஷயேப்யோ நியமநம் - சமோந்த: கரணஸ்ய ததா நியமநம் - தமம் என்றால் துன்பங்கள் அளிக்கவல்ல ஐந்து புலன்களின் இன்பத்தில் சிக்கி அழிந்துபோகாமல், புற உறுப்புகளை அடக்குதல்; சமம் என்றால் அக உறுப்பாகிய மனதை அவ்விதமே அடக்குதல் – என்றது காண்க. ஒரு சில இடங்களில் சமம் என்பதற்குக் கூறப்படும் பொருள் தமம் என்பதற்கும், தமம் என்பதற்குக் கூறப்படும் பொருள் சமம் என்பதற்கும் மாற்றிக் கொள்ளப்படும். ஒருவனுக்குச் சமம் மற்றும் தமம் ஆகிய இரண்டும் உண்டானால், மற்ற ஆத்ம குணங்கள் தானாகவே அவனிடம் வந்தடையும் என்பதால், இந்தக் குணங்களுக்கு ”முக்கியமான காரணம் இன்னது” என்பதற்கு மட்டும் ப்ரமாணம் காட்டப்பட்டது. அல்லது, மற்ற விஷயங்களின் மீது பற்றுதல் இல்லாத நிலை உண்டாகக் காரணம், அனைத்து ஆத்ம குணங்கள் உண்டாவதற்கும் காரணம் என்ற இடத்திற்குக் கூறி, “இந்த ஆத்ம குணங்களில் முக்கியமானது எது?” என்ற கேள்விக்கு - ஆத்ம குணங்களில் முக்கியமானவை சமம் மற்றும் தமம் என்றார் - எனவும் கொள்ளலாம்.

97. இந்தயிரண்டுமுண்டானால் ஆசார்யன் கைபுகுரும்; ஆசார்யன் கைபுகுந்தவாறே திருமந்திரம் கைபுகுரும்; திருமந்திரம் கைபுகுந்தவாறே ஈச்வரன் கைபுகுரும்; ஈச்வரன் கைபுகுந்தவாறே, “வைகுந்தமாநகர் மற்றது கையதுவே” என்கிறபடியே ப்ராப்ய பூமி கைபுகுரும்.

**அவதாரிகை** - இந்த சமதங்களுண்டானால் இவனுக்குண்டாகக்கடவ பலபரம்பரையை யருளிச் செய்கிறார் மேல் (இவையிரண்டும்) என்று தொடங்கி.

**பொருள்** – இப்படிப்பட்ட சமமும் தமமும் ஏற்பட்டால் ஒருவனுக்குக் கிட்டக்கூடிய பலன்களின் வரிசையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - பகவத் ப்ராவண்யமடியாகவரும் பரிபூர்ணமான சமதமங்களைக் கீழ்ச்சொல்லிற்றேயாகிலும், இவ்விடத்தில் ஆசார்யாங்கீகாரத்துக்குப் பூர்வபாவியான வளவிலே யொதுக்கிச் சொல்லுகிறது. இந்த சமதமங்க ளிரண்டுமுண்டானால் ஆசார்யன் கைபுகுருகையாவது - இவ்வாத்மகுணம் கண்டுகந்து ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்திரத்தை ஸார்த்தமாகவுபதேசிக்கும்படியிவனுக்கு வச்யனாகை. "தஸ்மை ஸ வித்வாநுபஸந்நாய ஸம்யக் ப்ரசாந்த சித்தாய சமாந்விதாய – யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம்" என்று சமதமோபேதனாய்க் கொண்டு உபஸந்நனானவனுக்கிறே ப்ரஹ்மவித்யையை தத்வத: உபதேசிக்கச் சொல்லிற்று. இந்த ச்ருதியில் ஆசார்யோபஸக்திக்குடலாகச்சொன்ன சமதமங்களுக்கு, "ஏதேந ச்ரவணோபயுக்த மவதாநம் விவக்ஷிதம் – நதூபாஸ நோபயுக்தாத்யந்தேந்த்ரிய ஜயாதி:" என்றிறே ச்ருதிப்ரகாசிகாகாரர் வ்யாக்யாநம் பண்ணிற்று. (ஆசார்யன் கைபுகுந்தவாறே திருமந்த்ரம் கைபுகுருகையாவது) – "தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம்" என்று - திருமந்த்ரமும் ஆசார்யாதீநமாகையாலே, உபதேஷ்டாவானவன் கைபுகுந்தவாறே, ததுபதேச முகத்தாலே ஸார்த்தமாக விவன்நெஞ்சிலே ப்ரதிஷ்டிதமாகை. "ப்ரஹ்மவித் ப்ராஹ்மணோ விது:" என்கையாலே "ப்ராஹ்மணாதீநம்" என்கிறவிடத்தில், ப்ராஹ்மண சப்தத்தால் – ஆசார்யனைச் சொல்லுகிறது. (திருமந்த்ரம் கைபுகுந்தவாறே ஈச்வரன் கைபுகுருகையாவது) – "மந்த்ராதீநஞ்ச தைவதம்" என்று – திருமந்த்ரமிட்டவழக்கா யிருக்குமவனாகையாலே, அர்த்தஸஹிதமாக அது கைபுகுந்தவாறே, தத் ப்ரதிபாத்யனான தானிவனுக்கு அநிஷ்ட நிவ்ருத்தி பூர்வ கேஷ்ட ப்ராப்திக்கு ப்ராபகனான (ஈச்வரன் கை புகுந்தவாறே, "வைகுந்தமாநகர் மற்றது கையதுவே" என்கிறபடியே - ப்ராப்ய பூமி கைபுகுருகையாவது) – "தைவாதீநம் ஜகத் ஸர்வம்" என்று – உபய விபூதியுமீச்வரனிட்ட வழக்காகையாலே, அவன் ப்ராபகனாய் கைபுகுந்தவாறே, ப்ராப்ய பூமியான ஶ்ரீவைகுண்ட மிவனுக்குக்கத்யந்த ஸுலபமாகை.

**விளக்கம்** – ஸர்வேச்வரனிடம் பூண்ட அன்பு காரணமாக உண்டாகின்ற பரிபூர்ணமான சமம் மற்றும் தமம் ஆகியவற்றை மேலே உரைத்தார். அடுத்து இங்கு ஆசார்யனின் அனுக்ரஹம் கிட்டுவதற்கு முன்பாக இவை இரண்டும் உண்டாவது பற்றியும், இவைகளின் விளைவு பற்றியும் கூறுகிறார். இந்தச் சமம் மற்றும் தமம் ஆகிய இரண்டும் ஒருவனுக்கு உண்டானால் – ஆசார்யன் கை புகுரும். அதாவது, இந்த ஆத்ம குணங்கள் ஒருவனிடம் இருப்பது கண்டு மகிழ்கின்ற ஆசார்யன், அவனுக்குப் பிறவியை அறுக்கவல்ல திருமந்த்ரத்தைப் பொருளுடன் உபதேசிக்கும்படியாக அந்த ஆசார்யன் அவனுக்கு வசப்பட்டு நிற்கிறான். முண்டக உபநிஷத் (1-2-12) – தஸ்மை ஸ வித்வாநுபஸந்நாய ஸம்யக் ப்ரசாந்த சித்தாய சமாந்விதாய யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம் - அருகில் வந்து, தூய்மையான மனம் கொண்டவனாக, அகம் மற்றும் புறம் ஆகிய அனைத்து உறுப்புகளையும் அடக்கியவனாக

நிற்கின்ற சிஷ்யனுக்கு, எந்த ஒன்றின் மூலம் ஸத்யமாகவும் அழிவற்றதாகவும் உள்ள ப்ரஹ்மத்தை ஆசார்யன் அறிந்தானோ, அந்த ப்ரஹ்மவித்யையை உள்ளது உள்ளபடி உபதேசிக்கக் கடவன் – என்றது காண்க. ஆக சமம் மற்றும் தமம் ஆகியவற்றுடன் வந்து சேர்ந்த சிஷ்யனுக்கு அல்லவோ ப்ரஹ்மவித்யையை உள்ளதுஉள்ளபடி உபதேசிக்க வேண்டும் எனப்பட்டது? இத்தகைய இந்த உபநிஷத் வாக்கியத்திற்கு, ஆசார்யனை அடைவதற்குத் தேவையானதாக உரைக்கப்பட்ட சமம் மற்றும் தமம் ஆகியவை குறித்து ச்ருதப்ரகாசிகாகாரர் - ஏதேந ச்ரவணோபயுக்த மவதாநம் விவக்ஷிதம் நதூபாஸ நோபயுக்தாத்யந்தேந்த்ரிய ஜயாதி: – இதன் மூலமாக கேட்பதால் ஏற்படுகின்ற பயனாக இந்த்ரிய விலக்குதல் கூறப்பட்டது, உபாஸனம் செய்வதற்கு ஏற்றதான பரிபூர்ணமான இந்த்ரிய விலக்குதல் கூறப்பட்டவில்லை - என்றது காண்க. “ஆசார்யன் கைபுகுந்தவாறே திருமந்த்ரம் கைபுகுருகையாவது” என்பதன் பொருள் என்ன? தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம் - அந்த மந்த்ரம் ஆசார்யனின் வசத்தில் உள்ளது - என்பதற்கு ஏற்ப திருமந்த்ரம் ஆசார்யனின் வசப்பட்டு உள்ளது; எனவே ஆசார்யனின் அருகில் சென்றவுடன் அவரது உபதேசம் மூலமாக அந்த திருமந்த்ரம் பொருளுடன் சேர்ந்து இவன் மனதில் நிலைநிற்கும் என்று கருத்து. ப்ரஹ்மவித் ப்ராஹ்மணோ விது: – ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ராஹ்மணன் – என்பதால், ”தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம்” என்ற வரியில் உள்ள “ப்ராஹ்மணா” என்ற பதம் ஆசார்யனைக் குறித்தது என்றே கொள்க. “திருமந்த்ரம் கைபுகுந்தவாறே ஈச்வரன் கைபுகுருகையாவது” என்பது என்ன? மந்த்ராதீநஞ்ச தைவதம் - மந்திரத்தின் வசப்பட்டது தெய்வம் - என்பதற்கு ஏற்ப, திருமந்த்ரம் கூறுவதைக் கேட்பவனாக ஈச்வரன் உள்ளான்; எனவே பொருளுடன் சேர்ந்து அந்த திருமந்த்ரம் நிலை நின்றவுடன், அந்த மந்த்ரம் மூலம் கூறப்படுகின்ற ஸர்வேச்வரன், அந்தச் சேதனனுக்கு விருப்பம் இல்லாதவற்றை விலக்கியும், விரும்பியதை அடைவித்தும் செய்கிறான். “ஈச்வரன் கை புகுந்தவாறே, ‘வைகுந்தமாநகர் மற்றது கையதுவே’ என்கிறபடியே ப்ராப்ய பூமி கைபுகுருகையாவது” என்றால் என்ன? தைவாதீநம் ஜகத் ஸர்வம் – அனைத்தும் தெய்வத்தின் வசப்பட்டது – என்பதற்கு ஏற்ப இந்த உலகம் மற்றும் அந்த உலகம் ஆகிய இரண்டுமே அவன் வசப்பட்டதாக உள்ளது; ஆகவே அவனை மட்டுமே உபாயமாகப் புகுந்த இவனுக்கு மிகவும் சுலபமாகக் கிட்டுகிறது.

98. ப்ராப்யலாபம் ப்ராபகத்தாலே; ப்ராபகலாபம் திருமந்த்ரத்தாலே; திருமந்த்ரலாபம் ஆசார்யனாலே; ஆசார்யலாபம் ஆத்மகுணத்தாலே.

**அவதாரிகை -** இப்படி சமதமங்களுண்டாகவே உத்தரோத்தர மிவையெல்லாம் ஸித்திக்கும் ப்ரகாரத்தை ஆரோஹ க்ரமத்தாலே அருளிச்செய்து, இதில் யாதொன்றுக்கு யாதொன்று ஹேதுவாகச் சொல்லிற்று ஆக நியதமென்னுமிடத்தை அவரோஹ க்ரமத்தாலே யருளிச் செய்கிறார் (ப்ராப்ய லாபம்) இத்யாதியாலே.

**விளக்கம்** - இப்படியாகச் சமம் மற்றும் தமம் ஆகியவை உண்டாக, மேன்மேலும் இவை அனைத்தும் கிடைக்கின்ற வழியை ஆரோஹமாக உரைக்கிறார் (முதலில் காரணம் கூறி பின்னர் காரியம் உரைத்தல்). அதன் பின்னர் எதற்கு எது காரணமாக உரைக்கப்பட்டதோ அது எப்போதும் பொருந்துவதாகும் என்பதை அவரோஹமாக உரைக்கிறார் (காரியம் கூறி பின்னர் காரணம் உரைத்தல்).

**வ்யாக்யானம்** - இது தனக்கு ப்ரயோஜநம், இது ஹேதுபரம்பரையில் ப்ரதமஹேது சமதமங்களாகையாலே, அவச்யமிவை யிரண்டு மிவனுக்குண்டாகவேணு மென்கை. ஈச்வரனே ப்ராபகனாகையாலே, ப்ராப்யலாப மீச்வரனாலே என்கிற ன்தாநத்திலே (ப்ராபகத்தாலே) என்றருளிச்செய்தது.

**விளக்கம்** – இவ்விதம் உரைக்கப்பட்டதன் பலன், இந்தக் காரண வரிசையில் முதலில் உரைக்கப்பட்டவை காரணமான சமம் மற்றும் தமம் என்பதால், அவை முதலில் இவனுக்கு உண்டாகவேண்டும். ஈச்வரனே உபாயம் என்பதால் "ப்ராப்யலாபம் ஈச்வரனாலே" என்பதற்குப் பதிலாக "ப்ராப்யலாபம் ப்ராபகத்தாலே" என்று கூறியது காண்க.

99. இதுதான் ஐச்வர்யகாமர்க்கும் உபாஸகர்க்கும் ப்ரபந்நர்க்கும் வேணும்.

**அவதாரிகை** - இந்த சமதமாதிகள்தான் போகமோக்ஷகாமரெல்லார்க்கும் வேணுமென்கிறார் (இதுதான்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இத்தகைய சமம் மற்றும் தமம் ஆகிய இரண்டும் இன்பத்தை விரும்புகின்றவர்கள், மோக்ஷத்தை விரும்புகின்றவர்கள் ஆகிய இருவருக்கும் வேண்டுவதாகும் என்கிறார்.

**வ்யாக்யானம்** - ஐச்வர்யகாமர்க்கு சப்தாதி போகமே புருஷார்த்தமாகிலும், தத் ஸாதநாநுஷ்டாந தசையில் சமதமாதிகள் வேணும்; "இந்த்ரியாணி புராஜித்வா ஜிதம் த்ரிபுவநம் த்வயா", "படிமன்னு பல்கலன் பற்றோடறுத் தைம்புலன் வென்று" என்னக் கடவதிறே. "ஐம்புலன்வென்று" என்றது மநோ நியமநத்துக்கு முபலக்ஷணம். உபாஸகர்க்கு வித்யாங்கதயா சமாதி வேணும்; "தஸ்மாதேவம்வித் சாந்தோதாந்த உபரத ஸ்திதிக்ஷுஃஸ் ஸமாஹிதோ பூத்வாத்மந்யேவாத்மாநம் பச்யேத்", "புன்புல வழியடைத் தரக்கிலச்சினை செய்து நன்புல வழி திறந்து ஞான நற்சுடர் கொளீஇ" என்னக்கடவதிறே. ப்ரபந்நாக் கதிகாரார்த்தமாக சமாதி வேணும்; "ஏகாந்தீது விநிச்சித்ய தேவதா விஷயாந்தரை: பக்தியுபாயம் ஸமம் க்ருஷ்ண ப்ராப்தௌ க்ருஷ்ணைகஸாதந:", "அடக்கரும்புலன்க ளைந்தடக்கி யாசை யாமவை துடக்கறுத்து வந்து நின்தொழிற் கணின்ற வென்னை" என்னக் கடவதிறே.

**விளக்கம்** - ஐச்வர்யத்தை விரும்புகிறவர்களுக்கு ஐந்து புலன்களால் கிட்டக்கூடிய இன்பம் என்பதே புருஷார்த்தமாக உள்ளது. ஆனாலும் அந்த இன்பங்களை அடைவதற்கான வழிகளைச் செய்யும்போது சமம் மற்றும் தமம் அவசியமாகிறது. கீழே உள்ள வரிகள் காண்க:

- இராமாயணம் யுத்தகாண்டம் (114-18) – இந்த்ரியாணி புராஜித்வா ஜிதம் த்ரிபுவநம் த்வயா - உன்னால் இந்த்ரியங்கள் வெல்லப்பட்டதால் அல்லவோ மூன்று உலகங்களும் வெல்லப்பட்டன – என்றது. இது இராவணனைக் குறித்து மண்டோதரி உரைத்தது.
- திருவாய்மொழி (4-1-9) - படிமன்னு பல்கலன் பற்றோடறுத் தைம்புலன் வென்று – இங்கு "ஐம்புலன் வென்று" என்பதன் மூலம் மன அடக்குதலும் சேர்த்தே கூறப்பட்டது என்று கொள்க.

உபாஸகன் ஒருவனுக்குப் பக்தி உண்டாவதற்கு ஏதுவாக இத்தகைய சமம் மற்றும் தமம் ஆகிய இரண்டும் வேண்டியதாகிறது. கீழே உள்ள வரிகள் காண்க:

- ப்ருஹத் உபநிஷத் – தஸ்மாதேவம்வித் சாந்தோதாந்த உபரத ஸ்திதிக்ஷுஃஸ் ஸமாஹிதோ பூத்வாத்மந்யேவாத்மாநம் பச்யேத் - இப்படியாக அறிந்தவன் அகம் மற்றும் புறம் ஆகிய உறுப்புகளை அடக்கியவனாக, மற்ற உலக விஷயங்களில் பற்றுதல் அற்றவனாக, விழிப்புடன் உள்ளவனாக நிலைநின்று ஆத்மாவில் பரமாத்மாவைக் காண்பானாக.
- திருச்சந்தவிருத்தம் (96) – புன்புல வழியடைத் தரக்கிலச்சினை செய்து நன்புல வழி திறந்து ஞான நற்சுடர் கொளீஇ.

அடுத்து ப்ரபந்நன் ஒருவனுக்கு இத்தகைய சமம் மற்றும் தமம் ஆகிய இரண்டும் அவசியமாகிறது. கீழே உள்ள ப்ரமாணங்கள் காண்க:

- ப்ருஹத் உபநிஷத் – ஏகாந்தீது விநிச்சித்ய தேவதா விஷயாந்தரை: பக்தியுபாயம் ஸமம் க்ருஷ்ண ப்ராப்தௌ க்ருஷ்ணைகஸாதந: - பரமைகாந்தி ஒருவன் கண்ணனை மட்டுமே உபாயமாகக் கொண்டிருக்கக்கூடும். அப்படிப்பட்ட அவன் அந்த க்ருஷ்ணனை அடையும் விஷயத்தில் மற்ற தேவதைகளைத் தனது ஐந்து புலன்களால் அடையப்படும் இன்பங்களுக்குச் சமமாக வைத்து (அதாவது ஒதுக்கி), பக்தி என்னும் உபாயத்தைக் கைக்கொள்வானாக.
- திருச்சந்தவிருத்தம் (95) – அடக்கரும்புலன்க ளைந்தடக்கி யாசை யாமவை துடக்கறுத்து வந்து நின்தொழிற் கணின்ற வென்னை.

100. மூவரிலும் வைத்துக்கொண்டு மிகவும் வேண்டுவது ப்ரபந்நனுக்கு.

**அவதாரிகை** - இப்படி யதிகாரி த்ரயத்துக்கு மபேக்ஷிதமேயாகிலும், அதிகமாக வேண்டுவது ப்ரபந்நனுக்கென்கிறார் (மூவரிலும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – சமம் மற்றும் தமம் ஆகிய இரண்டும் மேலே உள்ள சூர்ணையில் கூறியபடி மூன்றுவிதமான மனிதர்களுக்கும் அவசியம் என்றாலும், ப்ரபந்நன் ஒருவனுக்கு மிகவும் அதிகமாக இவை இருக்கவேண்டும் என்கிறார்.

**வ்யாக்யானம்** - இவனுக்கிதிலாதிக்யம் சொல்லுகைக்காகவிறே அல்லாதவர்களை யிவ்விடத்தில் ப்ரஸங்கித்ததும்.

**விளக்கம்** - ப்ரபந்நன் ஒருவனுக்கு இவை இரண்டும் மிகவும் அதிகமாக இருத்தல் வேண்டும் என்று உணர்த்துவதற்காகவே, ப்ரபந்நன் அல்லாதவர்களைக் குறித்தும் இங்கு இவர் அருளிச்செய்தார்.

101. மற்றையிருவர்க்கும் நிஷித்த விஷய நிவ்ருத்தியேயமையும்; ப்ரபந்நனுக்கு விஹித விஷய நிவ்ருத்தி தன்னேற்றம்.

**அவதாரிகை** - அவ்வாதிக்யந்தன்னை யருளிச்செய்கிறார் (மற்றையிருவர்க்கும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்டதான "ப்ரபந்நனுக்கு இது மிகவும் வேண்டும்" என்பதை மேலும் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சப்தாதி போகபரனான வைச்வர்யகாமனுக்கும், ஸாதநாந்தரபரனான உபாஸகனுக்கும், சாஸ்த்ர நிஷித்த விஷயமான ப்ரபந்நனுக்கு, சாஸ்த்ர விஹித விஷயமான பரதாராதியில் நிவ்ருத்தி மாத்ரமமையும்; ததுபய வ்யாவ்ருத்தனா யிருக்கிற ப்ரபந்நனுக்கு, சாஸ்த்ர விஹித விஷயமான ஸ்வதாரத்தில் நிவ்ருத்தி அவர்களைப் பற்ற வேற்றமென்கை. அவர்களிருவரிலும், ஐச்வர்யகாமனுக்கு, ஸ்வதாரத்தில் ஸாதந தசையில் தர்மபுத்த்யா ப்ரவ்ருத்தியும், பல தசையில் போக்யதா புத்த்யா ப்ரவ்ருத்தியுமாயிருக்கும்; உபாஸகனுக்கு பலம் பகவதநுபவமாகையாலே, அவனைப்போலே பல தசையில் அந்வயமில்லையே யாகிலும், உபாஸநதசையில் தர்மபுத்த்யா ப்ரவ்ருத்தி வேணும்; ப்ரபந்நனுக்கு, தர்மபுத்த்யா ப்ரவர்த்திக்கையும் ஸ்வாதிகார பஞ்ஜகமாகையாலே விஹித விஷயத்திலும் நிவ்ருத்தி வேணுமென்ற தாய்த்து.

**விளக்கம்** - சப்தம் முதலான புலன்களின் விஷயங்களில் வசப்பட்ட ஐச்வர்யத்தை விரும்புகின்றவன், பக்தி என்னும் ஸாதனத்தைக் கைக்கொண்டு நிற்கும் உபாஸகன் ஆகியவர்களுக்குச் சாஸ்த்ரங்களால் தள்ளப்பட்டதான பிறர்மனை நோக்குதல் போன்றவற்றைத் தவிர்த்தல் முதலானவையே போதுமானதாகும். ஆனால் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டபடி உள்ளதான தனது மனைவியைச் சேர்தல் என்பதையே தள்ளுகின்ற செயலானது, ப்ரபந்நனுக்கு அவர்களைக் காட்டிலும் ஏற்றம் அளிக்கவல்லதாகும். ஐச்வர்யத்தை விரும்பும் ஒருவனுக்கு அவன் ஸாதன நிலையில் உள்ளபோது மனைவியிடம் கொள்ளும் சேர்க்கை என்பது தனது இல்லற தர்மம் என்பதாகவும், பலதசையில் அவள் ஒரு இன்பப்பொருள் என்னும் புத்தியுடன் கூடியதாகவும் இருக்கும். உபாஸகனின் பலன் என்பது எம்பெருமானின் அனுபவமே ஆகும். எனவே, மேலே உள்ள ஐச்வர்யம் விரும்புகின்றவன் போல பலதசையில், தனது மனைவி ஒரு இன்பப்பொருள் என்னும் புத்தியுடன் சேர்க்கை இல்லை என்றாலும், உபாஸனத்தின் போது இல்லற தர்மம் என்ற புத்தியால் சேர்க்கை வேண்டும். ஆனால் ப்ரபந்நன் ஒருவன் தனது இல்லற தர்மத்திற்கு ஏற்றபடி மனைவியுடன் சேர்தல் என்பது உள்ளபோதிலும், அத்தகைய சேர்க்கை என்பது "எம்பெருமானைத் தவிர மற்ற எதிலும் இன்பம் இல்லை" என்ற அதிகாரத்திற்குத் தடை ஏற்படுத்தும் என்பதால் கூடாது.

102. இதுதான் சிலர்க்கழகாலே பிறக்கும்; சிலர்க்கருளாலே பிறக்கும்; சிலர்க்காசாரத்தாலே பிறக்கும்.

**அவதாரிகை** - தர்மபுத்த்யா ப்ரவ்ருத்திக்கு பரிஹாரம் பண்ணுவது போக்யதா புத்த்யா ப்ரவ்ருத்திதான் தவிர்ந்தாலன்றோ, அநாதிகாலம் வாஸநை பண்ணிப்போந்த விஷயங்களில் நிவ்ருத்திதான் பிறக்கும்படி யெங்ஙனே யென்கிற சங்கையிலேயருளிச் செய்கிறார் (இதுதான் சிலர்க்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – இல்லற தர்மம் என்னும் புத்தியுடன் சேர்கின்ற சேர்க்கை என்பதையும் தவிர்த்தல் என்பது, "இன்பம் அளிக்கவல்லது" என்னும் புத்தியுடன் சேர்கின்ற சேர்க்கையைத் தவிர்த்தால் அல்லவோ கைகூடும்? ஆனால் எல்லையற்ற காலமாக ஈடுபட்டு வந்த மற்ற விஷயங்களில் ஆசை என்பது எவ்விதம் நீங்கும் என்பதை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (சிலர்க்கழகாலே பிறக்கும்) என்றது, ஸாக்ஷாத்க்ருத பகவத் தத்வரான பக்திபாரவச்ய ப்ரபந்நர்க்கு, ஸகலஜநமோஹநமான தத்விக்ரஹ ஸௌந்தர்யாநு பவத்தாலே பிறக்குமென்றபடி. (சிலர்க்கருளாலே பிறக்கும்) என்றது, தத்வயாதாத்ம்ய தர்சிகளான ஜ்ஞாநாதிக்ய ப்ரபந்நர்க்கு, "நம்மையநுபவிக்க இட்டுப் பிறந்த வஸ்து இப்படி அந்யவிஷய ப்ரவணமா யநர்த்தப்படுவதே" என்று அந்யவிஷய ஸங்கமறும்படி யவன் பண்ணும் பரமக்ருபையாலே பிறக்குமென்றபடி. (சிலர்க்காசாரத்தாலே பிறக்கும்) என்றது, அளவிலிகளான அஜ்ஞாந ப்ரபந்நர்க்கு, அவதாரங்களில் "மர்யதாநாஞ்ச லோகஸ்ய

கர்த்தா காரயிதாச ஸா” என்கிறபடியே, அதிகாராநுகுணமாக வவனாசரித்தும் ஆசரிப்பித்தும் போந்தபடிகளையும், அளவுடையரான பூர்வாசார்யர்க ளாசரித்துப் போந்தபடிகளையும், சாஸ்த்ரமுகத்தாலு மாசார்யோபதேச க்ரமத்தாலுமறிகையாலே அவ்வாசாரங்களை யநுஸந்திக்க வநுஸந்திக்கப் பிறக்கு மென்றபடி.

**விளக்கம்** – “சிலர்க்கழகாலே பிறக்கும்” என்பது என்ன? ஸர்வேச்வரனை நேரிலேயே கண்டு அறிந்த காரணத்தால் பக்திப் பரவசத்தில் மூழ்கிய ப்ரபந்நர்களுக்கு (இப்படியாக பெண்கள் உட்பட மற்ற விஷயத்தில் உள்ள ஆசை எவ்விதம் விலகும் என்றால்) பார்ப்பவர்களின் மனங்களைக் கவர்கின்ற எம்பெருமானின் திவ்யமான திருமேனி அழகு காரணமாக ஆகும். “சிலர்க்கருளாலே பிறக்கும்” என்பது என்ன? உண்மையான மெய்ப்பொருளை உள்ளதுஉள்ளபடி உணர்ந்த ஞானம் மூலமாக ப்ரபந்நராக உள்ளவர்களுக்கு (இந்த ஆசை எப்படி விலகும் என்றால்) ”உன்னுடைய ஆத்மாவானது என்னை அனுபவிப்பதற்காகவே உள்ளது. அப்படிப்பட்ட ஆத்மா இவ்விதம் உலக விஷயங்களில் சிக்கி அழிவது ஏனோ?” என்று உலக விஷயங்களின் மீது உள்ள பற்றுதல்களை அழிக்கும்படியாக எம்பெருமான் செய்கின்ற கருணையான செயல்கள் மூலம் ஏற்படும். “சிலர்க்காசாரத்தாலே பிறக்கும்” என்பது என்ன? சூர்ணை 44-ல் கூறியபடி அறியாமை என்பதால் ப்ரபந்நரானவர்களுக்கு (இந்த ஆசை விலகுவது எப்படி என்றால்), இராமாயணம் ஸுந்தரகாண்டம் (35-11) – மர்யதாநாஞ்ச லோகஸ்ய கர்த்தா காரயிதாச ஸா – இந்த உல்கில் உள்ள அனைத்துவிதமான தர்மங்களைத் தான் செய்பவனாகவும், மற்றவர்களைச் செய்ய வைப்பவனாகவும் இராமன் உள்ளான் - என்று கூறியபடி, அதிகாரங்களுக்குத் தகுதி ஏற்படும்படியாகத் தர்மங்களைக் கடைபிடித்தும், மற்றவர்களைக் கடைபிடிக்கும்படிச் செய்தும், ஞானம் நிறைந்த ஆசார்யர்களின் தர்மங்களை அறிந்தும், சாஸ்த்ரம் மற்றும் ஆசார்யன் மூலமாக இவைகளை அறிந்தும் செய்வதால், அந்த ஒழுக்க முறைகளை எண்ணியபடி உள்ளதால் கைக்கூடும்.

103. பிறக்கும் க்ரமமென் என்னில்; அழகு அஜ்ஞாநத்தை விளைக்கும்; அருள் அருசியை விளைக்கும்; ஆசாரம் அச்சத்தை விளைக்கும்.

**அவதாரிகை** - இவ்வோஹேதுக்களால் பிறக்கும் க்ரமத்தை, தஜ்ஜிஜ்ஞாஸு ப்ரச்நத்தை யநுவதித்துக் கொண்டருளிச் செய்கிறார் (பிறக்கும் க்ரமம்) என்று தொடங்கி.

**விளக்கம்** – மேலே பல காரணங்கள் கூறப்பட்டன. இப்படிப்பட்ட காரணங்கள் மூலமாக “மற்ற விஷயங்களின் மீது உள்ள நாட்டம் தவிர்தல்” என்பது எவ்விதம் பிறக்கும் என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு, அதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (அழகு அஜ்ஞாநத்தை விளைக்கையாவது), சித்தாபஹாரியாகையாலே, விஷயாந்தரந்தன்னை யொன்றாக வறியாதபடி யாக்குகை. (அருள் அருசியை விளைக்கையாவது) – விஷயாந்தரங்களைக் காணும்போது அருவருத்துக் காரித்துமிழ்ந்து போம்படி பண்ணுகை. (ஆசாரம் அச்சத்தை விளைக்கையாவது) – ருசி செல்லச் செய்தே, அவர்களாசரித்தபடி செய்யாதபோது நமக்கநர்த்தமே பலிக்கும் என்று, விஷய ஸ்பர்சத்திலிழிய நடுங்கும்படி பண்ணுகை. ஆகையால் இக்க்ரமத்திலே பிறக்குமென்று கருத்து.

**விளக்கம்** - "அழகு அஜ்ஞாநத்தை விளைக்கையாவது" என்பது என்ன? காண்பவர்களின் மனதைச் சட்டென்று கவரும்படி ஸர்வேச்வரன் உள்ளதால், தன்னைத் தவிர உள்ள மற்ற சிற்றின்பங்களை ஒன்றாக அறிந்து கொள்ளாதபடிச் செய்வதாகும். "அருள் அருசியை விளைக்கையாவது" என்பது என்ன? மற்ற விஷயங்களைக் காணும்போது அருவருப்பு அடைந்து, காரி உமிழ்ந்து அகன்று போகும்படிச் செய்தலாகும். "ஆசாரம் அச்சத்தை விளைக்கையாவது" என்பது என்ன? நம் போன்றவர்களுக்கு நமது ஆசார்யர்கள் என்ன செய்தார்களோ அதனை நாம் செய்யாமல் விட்டால் கேடு உண்டாகும் என்று பெண்களின் சேர்க்கையில் ஈடுபடுவதை எண்ணி நடுங்கும்படிச் செய்வதாகும். இப்படியாக இந்த மூன்று நிலைகளும் உண்டாகும் என்று கருத்து.

104. இவையும் ஊற்றத்தைப் பற்றச் சொல்லுகிறது.

**அவதாரிகை** - இந்த த்ரிவித ப்ரபந்நர்க்கும் ஸௌந்தர்யாதி த்ரயத்திலோரொன்றே விரக்தி ஹேதுவாகச் சொல்லுகிறதுக்கு நிதாநத்தையருளிச் செய்கிறார் (இவையும் ஊற்றத்தைப் பற்றச் சொல்லுகிறது) என்று.

**விளக்கம்** - இப்படியாக உள்ள மூன்றுவிதமான ப்ரபந்நர்களுக்கு எம்பெருமானின் ஸௌந்தர்யம் போன்று மூன்று விதமான காரணங்களில் ஏதேனும் ஒன்று, அவர்கள் மற்ற விஷயங்களின் மீது கொள்ளும் பற்றில்லாமைக்குக் காரணமாகும் என்று கூறுவதற்கான ந்யாயத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது (அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர்) இத்யாதியால் – இவர்களுக்குச் சொன்ன ப்ரபத்தி ஹேதுக்களானவை ஒரொன்றினூற்றத்தைப் பற்றச் சொன்னாப் போலே, (அழகாலே பிறக்கும்) என்று தொடங்கிச் சொன்ன விரக்தி ஹேதுக்களான விவையும் ஒரொன்றினூற்றத்தைப் பற்றச்சொல்லுகிறதென்கை. இத்தால் – பக்திபாரவச்ய ப்ரபந்நர்க்கு, அருசிக்கடியான க்ருபையும் அச்சத்துக்கடியான ஆசாராநுஸந்தாநமு முண்டாயிருக்கச்செய்தே, பகவத் விக்ரஹ வைலக்ஷண்யத்தை ஸாக்ஷாத்கரித் தநுபவிக்குமவர்களாகையாலே எப்போதும் நெஞ்சு பற்றிக்கிடக்கையால் விஷயாந்தரங்களையறியாதபடி பண்ணுமவ்வழகே அவர்கள் பக்கலுறைத்திருக்கும்;

ஜ்ஞாநாதிக்ய ப்ரபந்நர்க்கு, அஜ்ஞாந ஹேதுவான விக்ரஹ ஸௌந்தர்யத்தை அர்ச்சாவதாரத்திலே கண்டநுபவிக்கையும் பயஹேதுவான ப்ராக்தந சிஷ்டாசாராநு ஸந்தாநமுமுண்டாயிருக்கச்செய்தே, அவன் தன் க்ருபையை முழுமடைசெய்தெடுத்த விஷயங்களாகையாலே அருசிக்கடியான க்ருபையவர்கள் பக்கலுறைத்திருக்கும். அஜ்ஞாந ப்ரபந்நர்க்கு, அர்ச்சாவதாரத்திலே காதாசித்கமாக விக்ரஹ ஸௌந்தர்யாநுபவமும் அருசிஹேதுவான க்ருபையும் ஒருமர்யாதையுண்டாயிருக்கச் செய்தே, பூர்வர்களாசாரங்களையே பலகாலம் அநுஸந்தித்துக் கொண்டு போருகையாலே பயஹேதுவானவவ்வாசரங்கள் அவர்கள் நெஞ்சிலேயூன்றியிருக்கும். இவ்வூற்றத்தைப் பற்ற ஓரொன்றே விரக்தி ஹேதுவாகச் சொல்லுகிறதென்றதாய்த்து.

**விளக்கம்** - "அஜ்ஞானத்தால் ப்ரபந்நர்" என்று கூறிய சூர்ணை 43-ல் இந்த மூன்று விதமான ப்ரபந்நர்களுக்கும் கூறப்பட்ட ப்ரபத்திக்கான காரணங்கள் கூறப்பட்டன; அங்கு அவற்றில் ஏதோ ஒன்று அவரவர்களுக்கு அந்தந்த காரணங்களைப் பற்றுவதன் வாய்ப்பாக உரைக்கப்பட்டது. இது போன்று "அழகாலே பிறக்கும்" என்று கூறிய சூர்ணை 102-ல் கூறப்பட்ட விரக்தியின் காரணங்கள் ஒவ்வொன்றின் அடிப்படையும் அவரவர்களின் ஈடுபாட்டைப் பொறுத்தது என்கிறார்.

பக்தியால் பரவசத்துடன் கூடியுள்ளவர்களுக்கு மற்ற விஷயத்தின் மீது உண்டாகிற ருசியற்ற நிலைக்கு அடிப்படையாக உள்ள எம்பெருமானின் க்ருபை மற்றும் மற்ற விஷயங்களைக் கண்டு அச்சத்துடன் ஒதுங்குவதற்கு அடிப்படையான ஆசாரத்தின் நினைவும் உள்ளன என்றாலும் – அவர்கள் ஸர்வேச்வரனின் திருமேனி அழகைத் தங்கள் மனக்கண் மூலமாகத் தெளிவாகக் கண்டு அனுபவித்தபடி உள்ளவர்கள் என்பதால், அவனுடைய அழகில் மட்டுமே தங்கள் மனம் பறி கொடுத்து நிற்பதால், மற்ற விஷயங்களை அவர்கள் காணாதபடி செய்கின்ற அவனது திருமேனி அழகு என்பதே அவர்களிடம் நிலைத்திருக்கும்.

ஞானத்தின் காரணமாக ப்ரபந்நரானவர்களிடம் மற்ற விஷயங்களைக் கண்டு மயங்காமல் உள்ளதற்குக் காரணமான எம்பெருமானின் அழகினை அவனது அர்ச்சாவதாரத்திலே கண்டு அனுபவித்தல், மற்ற உலக விஷயங்களில் ஈடுபடுதல் கூடாது என்ற அச்சத்தின் அடிப்படையான ஆசார்யர்களின் உபதேசத்தின் மூலம் உண்டாகும் ஆசாரம் பற்றிய எண்ணம் ஆகியவை உள்ளன என்றாலும் - ஸர்வேச்வரன் தனது க்ருபை என்னும் வெள்ளத்தை மடையை முழுமையாகத் திறந்துவிட்டது போன்று அவர்களிடம் பாயும்படிச் செய்வதால் மற்ற விஷயங்களில் ஈடுபடுவதைத் தடுக்கின்ற அவனது க்ருபை என்பது அவர்களிடம் நிலைத்து காணப்படும்.

அறியாமையின் விளைவால் ப்ரபந்நரானவர்களிடம் அர்ச்சாவதார திருமேனியில் உண்டாகின்ற அனுபவம், மற்ற விஷயங்களில் வெறுப்பு உண்டாக்கவல்ல அவனது க்ருபை ஆகிய இரண்டும் உள்ளன என்றாலும் – பூர்வாச்சார்யர்கள் கடைபிடித்து வந்த ஆசாரங்களையே பல காலமாக எண்ணியபடி வந்ததால், அச்சத்திற்குக் காரணமாக அந்த ஆசாரங்கள் அவர்கள் உள்ளத்தில் நிலைநின்றிருக்கும். ஆகவே இத்தகைய ஈடுபாடு ஏற்படுவதற்கு ஏதேனும் ஒன்று மட்டுமே ப்ரதான காரணம் எனப்பட்டது.

105. அருசி பிறக்கும்போதைக்கு தோஷதர்சநமபேக்ஷிதமாயிருக்கும்.

**அவதாரிகை** - விஷய வைலக்ஷண்யாதிசயத்தாலே விஷயாந்தராஜ்ஞாநம் விளையவும் கூடும். ஆப்தரான சிஷ்டர்களுடைய வாசாராநுஸந்தாநத்தாலே அவிஹித விஹித விஷய ஸ்பர்சத்திலச்சம் விளையவும் கூடும், அநாதிகாலமாசைப்பட்டு மேல் விழுந்து போந்த விஷயங்களிலேயருசி பிறக்கை அகடிதமிறே; அப்படிப்பட்ட அருசிதானவனருளாலே பிறக்கும்போதைக்கு அபேக்ஷிதாம்சத்தையருளிச் செய்கிறார் (அருசி) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஸர்வேச்வரனின் திருமேனி அழகு என்பது மிகவும் வேறுபட்ட மேன்மை உடையது என்பதால், அதன் விளைவாக மற்ற விஷயங்களில் அறியாமை உண்டாகலாம். நமக்கு நன்மை செய்பவர்கள் என்று நம்பக்கூடிய ஆசார்யர்களின் ஆசாரம் பற்றி எண்ணுவதால் சாஸ்த்ரங்கள் உரைக்கின்ற பிறர்மனை நோக்குதல் கூடாது என்பது பற்றியும், விதிக்கப்பட்டபடி தனது மனைவியைச் சேர்தலிலும் அச்சம் உண்டாகலாம். ஆனால் எல்லையற்ற காலம் மிகுந்த ஈடுபாட்டுடன் இருந்து வருவதான பெண்கள் விஷயத்தில் வெறுப்பு ஏற்படுதல் என்பது உண்டாகக் கூடியதோ? அத்தனை எளிது அல்லவே! ஆகவே அப்படிப்பட்ட வெறுப்பு என்பது அவனது க்ருபை மூலமாக நமக்கு உண்டாகும்போது நம்மிடம் நிலைநிற்க வேண்டியது என்ன என்பதை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (தோஷ தர்சநமாவது) போக்யதா புத்த்யா பரிஷ்வங்கிக்கிற யோஷித்தேஹம் மாம்ஸாஸ்ருக் பூயவிண் மூத்ர ஸ்நாயு மஜ்ஜாஸ்தி ஸமுதாயமாய் சர்மாவநத்தமாய் துர்கந்தியாயிருக்கும்படியையும், போகந்தானல்பமாய் அஸ்திரமாய் துக்க மிச்ரமாய் அநர்த்தாவஹமாயிருக்கும்படியையும் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களாலே தர்சிக்கை.

**விளக்கம்** – "தோஷ தர்சநம்" என்றால் என்ன? இன்பம் அளிக்கவல்லது என்ற எண்ணத்துடன் அணைக்கப்படும் சரீரம் என்பது - மாம்ஸாஸ்ருக் பூயவிண் மூத்ர ஸ்நாயு மஜ்ஜாஸ்தி – மாமிசம், இரத்தம், சீ, மலம், மூத்திரம், நரம்பு, மஜ்ஜை – போன்ற பலவற்றின் கூட்டம் என்பதும்; துர்நாற்றம் வீசக்கூடியது எனவும்; இன்பம் மிகவும்

அற்பமாயும் நிலையற்றதாயும், துன்பம் என்பது மிகவும் அதிகமாகவும் அளிக்கவல்லது என்பதை நேரடியாகவும் ப்ரமாணங்கள் மூலமாகவும் காண்பதாகும்.

106. அது ப்ரதானஹேதுவன்று.

**அவதாரிகை -** ஆனால் அதுவோ பின்னை அருசிஹேதுவென்ன அருளிச்செய்கிறார் (அது) இத்யாதியால்.

**விளக்கம் -** ஆனால் இப்படிப்பட்ட தோஷதர்சநம் என்பதுதான் மற்ற விஷயங்களின் மீது வெறுப்பு உண்டாக முக்கியமான காரணமா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (ப்ரதாந ஹேதுவன்று) என்றது, அதுவுமொரு ஹேது, முக்க்ய ஹேதுவன்றென்றபடி.

**விளக்கம் -** "ப்ரதான ஹேதுவன்று" என்பதன் மூலம் அதுவும் ஒரு காரணமாக உள்ளதே அன்றி, முக்கியமான காரணம் அல்ல என்றார்.

107. அப்ராப்ததையே ப்ரதாநஹேது.

**அவதாரிகை -** ஆனால் ப்ரதாந ஹேதுதானேதென்ன (அப்ராப்த்தையே ப்ரதாந ஹேது) என்கிறார்.

**விளக்கம் –** அப்படி என்றால், முக்கியமான காரணம் எது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (அப்ராப்ததையாவது) பகவதேக போகமான ஸ்வரூபத்துக்குச் சேராததாயிருக்கை. இத்தால் - அருளருசியை விளைக்குமிடத்தில் தோஷ தர்சநாதிகளைப் பண்ணுவித்து விளைப்பிக்கையால், தோஷ தர்சநமும் அப்ராப்தி தர்சநமும் தத்வவித்துக்களுடைய அருசிக்கு கௌணமுக்க்ய ஹேதுக்களாயிருக்கு மென்றதாய்த்து.

**விளக்கம் –** "அப்ராப்ததை" என்பது என்ன? எம்பெருமானை மட்டுமே அனுபவிக்க ஏற்றதான இந்த ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு விரோதமாக இருத்தல். ஸர்வேச்வரனின் க்ருபை என்பது மற்ற விஷயங்களில் வெறுப்பை ஏற்படுத்தும்போது, சரீரத்தின்

தோஷங்கள் போன்றவற்றை நாம் ஆராயும்படிச் செய்தல் முதலானவை மூலமே நமக்கு அவற்றின் மீது வெறுப்பு உண்டாகும்படிச் செய்கிறது. ஆனால் உண்மையை அறிந்த உயர்ந்தவர்களுக்கு இப்படியாக வெறுப்பு உண்டாவதற்குச் சரீரத்தின் தோஷம் காணுதல் என்பது முக்கியமான காரணம் அல்ல, அவர்களைப் பொறுத்தவரை ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு விரோதமாக இருத்தல் (அப்ராப்தி தர்சநம்) என்பதே முக்கியமான காரணம் ஆகும்.

108. பகவத் விஷயத்திலிழிகிறதும் குணங்கண்டன்று; ஸ்வரூப ப்ராப்தமென்று.

**அவதாரிகை** – "மாற்பால் மனஞ் சுழிப்ப" இத்யாதிப்படியே ப்ராவண்ய விஷயமாகச் சொன்ன பகவத் விஷயத்தில் குணங்கண்டிழிகிறவோபாதி, இதுவும் தோஷங்கண்டே விடுகிறதானாலோவென்ன (பகவத் விஷயத்திலிழிகிறதும் குணங்கண்டன்று; ஸ்வரூப ப்ராப்தமென்று) என்கிறார்.

**விளக்கம்** – "மாற்பால் மனஞ் சுழிப்ப" என்னும் சூர்ணை 95-ல் கூறப்பட்டபடி நமது அன்புக்கு இலக்காக உள்ள ஸர்வேச்வரனின் குணங்களில் ஈடுபாடு கொள்வதால் அவனிடம் செல்கிறோம் என்று கூறுவது போன்று, சரீரத்தில் உள்ள பல்வேறு தோஷங்களைக் கண்டதால் மட்டுமே நமக்கு விஷயங்கள் மீது வெறுப்பு உண்டாகிறது என்று கூறினால் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

109. இப்படி கொள்ளாதபோது, குணஹீநமென்று நினைத்த தசையில் பகவத்விஷய ப்ரவ்ருத்தியும், தோஷாநுஸந்தாநதசையில் ஸம்ஸாரத்தில் ப்ரவ்ருத்தியும் கூடாது.

**அவதாரிகை** - ஆகிலெத்தாலேயென்ன (ஸ்வரூப ப்ராப்தமென்று) என்கிறார். அதாவது - பகவத் விஷயத்தைப் பற்றுகிறது அத்தலையில் கல்யாண குணங்களடியாகவன்று இவ்வாத்மாவுக்கு வகுத்த விஷயமென்னுமத்தாலே என்கை.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் அருளிச்செய்த அர்த்தத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் உண்டாகின்ற முரண்பாட்டினை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இப்படி கொள்ளாதபோது) என்றது, இதர விஷயங்களிலருசிக்கு ஹேது அப்ராப்ததை; பகவத் விஷயத்தில் ருசிக்கு ஹேது ப்ராப்ததை என்று கொள்ளாதே, தோஷ தர்சநத்தையும் குண தர்சநத்தையும் இவற்றுக்கு ஹேதுவாகக் கொள்ளும் போதென்றபடி. (குண ஹீநமென்று நினைத்த தசையில் பகவத் விஷய ப்ரவ்ருத்தியாவது) - பிரிவாற்றாமை கரைபுரண்டு பொருவிடாய்ப்பட்டுத் துடித்து அலமரா நிற்க சடக்கென வந்து முகங்காட்டாமையாலே குண ஹீநமென்று சிந்தித்த தசையிலே, பின்னையும் "அவனை

யல்லதறியேன்” என்று அவன் பக்கலிலே அத்யபிநிவேசத்தைப் பண்ணுகை. (தோஷாநு ஸந்தாந தசையில் ஸம்ஸாரத்தில் ப்ரவ்ருத்தியாவது) - மாதா பித்ராதிகளும் பார்யா புத்ராதிகளும் ஜ்ஞாதிகளும் பந்துக்களும் க்ருஹ க்ஷேத்ராதிகளுமாய் சப்தாதி போகங்களை யநுபவித்திருக்கையாகிற ஸம்ஸாரத்தின் துக்க பஹுளத்வாதி தோஷத்தை ப்ரத்யக்ஷாதிகளாலேயறிந்தநுஸந்தியா நிற்கச்செய்தேயும், அதிலே அபிநிவேசம் நடந்து செல்லுகை. இவையிரண்டுங் கூடாதென்றபடி. அன்றிக்கே, (தோஷாநுஸந்தாந தசையில் ஸம்ஸாரத்தில் ப்ரவ்ருத்தியாவது) - தத்வ வித்துக்களான மஹர்ஷிகள் தொடக்கமானார் ஸாராஸார விவேக வத்தயா விஷய தோஷாநுஸந்தாநமுண்டாயிருக்கச் செய்தே சாஸ்த்ர விஹித தயா ப்ராப்தமென்கிற புத்தியாலே பண்ணுகிற ப்ரஜோத்பாதநாதிரூப ஸம்ஸாரத்தில் ப்ரவ்ருத்தியாகவுமாம். இப்படி கொள்ளாதபோதிவை கூடாதென்று விரோதங் காட்டுகையாலே இப்படி கொள்ளாவேணுமென்னுமிடம் ஸ்தாபிக்கப்பட்டது.

**விளக்கம்** – ”இப்படி கொள்ளாதபோது” என்றால்: மற்ற விஷயங்களில் உண்டாகும் வெறுப்புக்குக் காரணம் அவர்கள் ஏற்ற விஷயமாக இல்லாமல் இருத்தலே என்றும்; ஸர்வேச்வரனிடம் கொள்ளும் ப்ரேமைக்குக் காரணம் அவன் நமக்கு ஏற்ற விஷயமாக உள்ளதால் என்றும் கொள்ளாமல் - மற்ற விஷயங்களில் உள்ள தோஷதர்சநம் மற்றும் எம்பெருமானிடம் உள்ள குணங்கள் என்பவற்றையே அந்த வெறுப்பு மற்றும் விருப்புகளுக்குக் காரணமாகக் கொள்ளும்போது - என்று பொருள். “குணஹீநம்” என்றால் – அவனையே எண்ணி பிரிவாற்றாமை காரணமாக, அவனை அடைந்தே தீரவேண்டும் என்று மிகுந்த தாகம் எடுத்தவன் போன்று துடித்துக் கொண்டு உள்ளபோது, அதனை நீக்கும்படி அவன் தனது திருமுகம் காண்பிக்கவில்லையே என்பதால், “அவன் குணங்கள் அற்றவன்” என்று எண்ணிவிடக்கூடும்; ஆகவே எம்பெருமானிடம் திருவாய்மொழி (5-3-5) – அவனையல்லதறியேன் - என்பதற்கு ஏற்ப அவனது குணங்களின் காரணமாக அவனிடம் ஈடுபட்டால், அவன் தனது குணங்களை வெளிப்படுத்தவில்லை என்ற எண்ணம் ஏற்படும்போது, அவன் மீது உள்ள ஈடுபாடு விலகிவிடக்கூடும்; ஆகவே அவனது குணங்களின் தர்சநம் என்பது காரணமாக இருத்தல் கூடாது என்று கருத்து. “தோஷாநு ஸந்தாந தசையில் ஸம்ஸாரத்தில் ப்ரவ்ருத்தியாவது” என்றால் தாய், தந்தை, மனைவி, புத்திரர்கள், பங்காளிகள், உறவினர்கள், வீடு, நிலம் என்று அனைத்துவிதமான இன்பங்களுடன் உள்ளதாக எண்ணிக் கொண்டிருக்கும் ஸம்ஸாரத்தில், துக்கம் முதலானவை அதிகமாகவே உள்ளது என்பதை நேரில் பல இடங்களில் கண்டு அறிந்த பின்னரும் அவற்றை விடவேண்டும் என்று எண்ணாமல், அதில் மேலும் நாட்டத்துடன் இருத்தல் கூடாது - என்பதாகும். அல்லது “தோஷாநு ஸந்தாந தசையில் ஸம்ஸாரத்தில் ப்ரவ்ருத்தியாவது” என்பதற்கு வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். உண்மையான கருத்துக்களை உள்ளது உள்ளபடி அறிந்த மஹரிஷிகள் போன்றவர்கள் ஏற்கத்தக்கது எது,

ஏற்கத்தகாதது எது என்று பகுத்து வைத்துள்ளனர்; இதன் மூலமாக ”விஷயங்களின் சேர்க்கை” என்பது துன்பத்தையே அளிக்கவல்லது என்ற எண்ணம் உண்டாகக்கூடும். ஆயினும் ”சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டது” என்ற காரணத்தை முன்னே வைத்து, “இந்த செயல்கள் ஏற்புடையது” என்று எண்ணி மக்கட்பேறு முதலான ஸம்ஸார செய்கைகளில் ஈடுபடுவது கூடாது என்று கொள்ளலாம்.

110. ”கொடியவென்னெஞ்சமவனென்றே கிடக்கும்”, ”அடியேன் நான் பின்னுமுன்சேவடி யன்றி நயவேன்” என்னாநின்றார்களிறே.

**அவதாரிகை -** குண ஹீநமென்று நினைத்த தசையில் பகவத் விஷய ப்ரவ்ருத்தி எங்கே கண்டதென்னவருளிச் செய்கிறார் (கொடியவென்னெஞ்சம்) என்று தொடங்கி.

**விளக்கம் –** எம்பெருமான் குணம் அற்றவன் என்று எண்ணிய நிலையில் அவனை விட்டுவிடவேண்டும் என்று எண்ணுவதை எங்கே காணலாம் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது “கடியன்” என்று தொடங்கி, “அறிவரு மேனி மாயத்தன்” என்னுமளவும் ஸ்வகார்யபரன், பிறர்நோவறியாதவன், ஒருவர்க்குமெட்டாதவன், வஞ்சகன், துர்ஜ்ஞேய ஸ்வபாவன் என்று அவன் குண ஹாநியைச் சொல்லி, இப்படியிருந்தானாகிலும், அதிலோக க்ரூரமான வென்னெஞ்சு அவனையல்ல தறியாதே யிருக்குமென்றும்; வேம்புக் கிட்டுப்பிறந்த புழு அந்த வேம்பையே புஜிக்குமதொழிய கரும்பைக் கண்டாலும் விரும்பாது. அப்படியே, “கடல்மல்லைக் கிடந்த கரும்பு” என்னும்படி நிரதிசய போக்யனான நீதானே வேம்பு போலே விரஸனானவன்றும், த்வதநந்யார்ஹ சேஷபூதனான நான் எனக்கு வகுந்த சேஷியான உன் திருவடிகளையொழிய வாசைப்படேனென்றும் மயர்வற மதிநல மருளப்பெற்றவர்கள் அருளிச்செய்யா நின்றார்களிறே என்கை.

**விளக்கம் –** திருவாய்மொழி (5-3-5) – கடியன் - என்று தொடங்கி, “அறிவரு மேனி மாயத்தன்” என்பது முடிய உள்ள வரிகளில் அவன் தனது காரியத்தில் மட்டுமே குறியாக உள்ளவன், தன்னை எண்ணி பிறர்படும் துன்பங்களை அறியாமல் உள்ளவன், யாராலும் அடைய இயலாதவன், வஞ்சகன், அறிந்து கொள்வதற்குக் கடிமையான தன்மை கொண்டவன் போன்று அவனது குணமற்ற தன்மைகள் கூறப்பட்டன. இப்படி அவன் உள்ளபோதிலும் உலக விஷயங்களை வெறுக்கும் எனது நெஞ்சம், அவனை அல்லாமல் வேறு ஏதும் அறியாது என்றும்; வேப்பங்காயில் உள்ள புழுவிற்கு அந்த வேப்பங்காய்

அல்லாமல் கரும்பு கூடக் கசப்பதால், அந்த வேப்பங்காயை மட்டுமே உண்ணும் அல்லாது கரும்பை உண்ணாது என்றும்; பெரியதிருமொழி (7-1-4) – கடல்மல்லைக் கிடந்த கரும்பு – என்று கூறுவதற்கு ஏற்ப எல்லையற்ற இனிமையானவனாக உள்ள நீ வேம்பு போன்று இனிமை அற்றவனாக உள்ள நேரங்களிலும், வேறு யாருக்கும் அடிமை அல்லாது உனக்கு மட்டுமே அடிமையாக உள்ள நான், எனக்காகவே உள்ள உனது திருவடிகள் தவிர வேறு எதற்கும் ஆசைப்படமாட்டேன் என்றும் - இப்படியாகப் பலவிதமாக மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் அருளிச்செயல்களில் காணலாம்.

111. குணக்ருத தாஸ்யத்திலுங்காட்டில் ஸ்வரூப ப்ரயுக்தமான தாஸ்யமிறே ப்ரதாநம்.

**அவதாரிகை** – "குணைர் தாஸ்யமுபாகத:" என்றாருமில்லையோவென்ன வருளிச்செய்கிறார் (குணக்ருத தாஸ்யத்திலும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – அவனது குணங்களில் தோற்றுப்போய் அவனுக்கு அடிமையாக உள்ள நிலையை அடைந்தவர்கள் என்று யாரும் உள்ளனரா என்று கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – (குணக்ருத தாஸ்யமாவது) அவன் குணங்களுக்குத் தோற்றடிமை யாயிருக்கை. (ஸ்வரூப ப்ரயுக்தமான தாஸ்யமாவது) சேஷத்வைக நிரூபணியமான தன் ஸ்வரூபத்தைப் பார்த்தடிமையாயிருக்கை. ஸ்வரூபமிப்படியிருந்தாலும் குணாதிக விஷயமாகையாலே குணக்ருத தாஸ்யமுமிவ்விஷயத்திலே யநுவர்த்தியாநிற்கும்; ஆகையிறே, சேஷத்வைக நிரூபகரானவிளையபெருமாள் தாமப்படி அருளிச்செய்ததும். ஆனாலும் குணக்ருதமானது ஔபாதிகமாகையாலே அப்ரதாநமாய், மற்றையது நிருபாதிகமாகையாலே ப்ராதாநமாயிருக்கும்; அத்தைப் பற்றவிறே தத் ப்ராதாந்ய ப்ரஸித்தி தோற்றவருளிச்செய்தது.

**விளக்கம்** - "குணக்ருத தாஸ்யம்" என்றால் அவனுடைய குணங்களில் தோற்றுப்போய் அவனுக்கு அடிமையாய் இருத்தல் ஆகும். " ஸ்வரூப ப்ரயுக்தமான தாஸ்யம்" என்றால் தனது அடிமைத்தனம் மூலமாக நிரூபிக்கப்படுவதாக உள்ள தன்னுடைய ஆத்மாவின் ஸ்வரூபத்தைப் பார்த்து அடிமையாக இருத்தல் ஆகும். ஆத்மாவின் ஸ்வரூபம் இப்படி உள்ளபோதிலும் ஸர்வேச்வரன் குணங்களின் கடலாக உள்ளதால் அவனுடைய குணத்தில் தோற்று அடிமையாதல் என்பது எப்போதுமே இருப்பதாகும். இப்படி உள்ளதால் அல்லவோ அடிமைத்தனம் என்பதன் மூலம் நிரூபிக்கப்படும் லக்ஷ்மணன் இராமாயணத்தில் – குணைர் தாஸ்யமுபாகத - இராமனின் குணங்களுக்குத் தோற்று அடிமையானேன் – என்றான். ஆனால் குணங்களுக்குத் தோற்றதன் காரணமாக அடிமையாதல் என்பது ஒரு குறிப்பிட்ட காரணத்தை அடிப்படையாகக் கொண்டதால் அது

ப்ரதானமாக இருக்காது; மாறாக மற்றவற்றால் உண்டாகும் அடிமைத்தனம் என்பது காரணத்தின் அடிப்படையில் அமையாததால் ப்ரதானமாக இருக்கும். ஆகவே “ஸ்வரூப” என்பதன் மூலம் எந்தவிதமான காரணத்தையும் அடிப்படையாகக் கொள்ளாமல் எடுக்கின்ற அடிமைத்தனத்தின் சிறப்பை அருளிச்செய்கிறார்.

112. அநஸூயைக்குப் பிராட்டியருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.

**அவதாரிகை** - இவ்வர்த்தத்துக்கு ஸம்வாதமாக பிராட்டி வார்த்தையை ஸ்மரிப்பிக்கிறார் மேல் (அநஸூயைக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - மேலே கூறியதற்கு ப்ரமாணம் கூறும் பொருட்டு பிராட்டி அருளிச்செய்த சொற்களை நினைவூட்டுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அத்ரி பகவாநாச்ரமத்திலே பெருமாளெழுந்தருளி மஹர்ஷியையு மநுவர்த்திருந்த வநந்தரம், தத்பத்நியான அநஸூயையைப் பிராட்டி சென்று அநுவர்த்தித்திருக்கிறவளவிலே அவள் பிராட்டியைப் பார்த்து “பந்துஜநத்தையும் அபிமாநத்தையும் ஐச்வர்யத்தையும் விட்டுப் பெருமாள் பின்னே காட்டிலே போந்தவிது தைவயோகத்தாலேயுமக்கு நன்றாகக்கூடிற்று, நகரஸ்தனாகிலுமாம், வநஸ்தனாகிலுமாம், நல்லவனாகிலுமாம், தீயவனாகிலுமாம், ஸ்த்ரீகளுக்கு தைவம் பர்த்தாவே கிடீர், நீரிப்படி எப்போதும் பெருமாள் விஷயமாகவநுகூலித்துப் போரும்” என்ன; பிராட்டி, ஸஜ்ஜித்துக் கவிழ்தலையிட்டிருந்து, எனக்குப் பெருமாள் பக்கல் பாவபந்தம் ஸ்வத: உண்டாயிருக்கச் செய்தே, அவர்தாம் குணாதிகராயிருக்கையாலே, என்னுடைய பாவபந்தத்தை குணநிபந்தமேயென்றியிருப்பர்கள் நாட்டார், அவ்வாச்ரயத்தை குணங்களோடு வ்யதிரேகித்துக் காட்டவொண்ணாமையாலே நானவர்பக்கலிருக்குமிருப்பை யறிவிக்கப் பெறுகிறிலேன், அவர் குணஹீநருமாய் விரூபருமானவன்றும் நானவர்பக்கலிப்படி காணுமிருப்பது” என்றருளிச்செய்த வார்த்தை.

**விளக்கம்** - அத்ரி பகவானின் ஆச்ரமத்திற்கு இராமன் எழுந்தருளி, அந்த முனிவரை வணங்கி அவரது அருளாசியைப் பெற்றான். அதன் பின்னர், அவரது பத்தினியான அநசூயையைப் பிராட்டியான சீதை வணங்கி அவள் அருகில் நின்றாள். அப்போது அநசூயை சீதையிடம், “உனது உறவினர்கள், உனக்குத் தாழ்வு ஏற்படும் என்ற உணர்வு, செல்வம் போன்ற பலவற்றையும் நீ கைவிட்டாய். இராமனுடன் கானகம் வந்தாய். இந்த வாய்ப்பு உனக்கு அவனது ஸங்கல்பத்தால் கைகூடியது. நாட்டில் உள்ளபோதிலும், கானகத்தில் உள்ளபோதிலும், நல்லவனாக உள்ளபோதிலும், தீயவனாக உள்ளபோதிலும் பெண் ஒருவளுக்கு அவளது கணவனே முதல் தெய்வம் ஆவான். நீ இப்படியே எப்போதும்

இராமனுக்குத் தொண்டு புரிந்தபடி இருப்பாயாக", என்றாள். இதனைக் கேட்ட சீதை மிகுந்த நாணம் கொண்டு தனது தலையைத் தாழ்த்தியபடி, "எனக்கு இராமனிடம் உள்ள அன்பு இயற்கையனது ஆகும். அவர் மிகுந்த குணங்களுடன் கூடியவராக உள்ளதால், எனது இந்த அன்பிற்குக் காரணம் அவரது குணங்களே என்று உலகில் உள்ளவர்கள் எண்ணக்கூடும். ஆனால் இராமனை எப்போதும் குணங்களில் இருந்து தனியே பிரித்துக் காட்டஇயலாது; ஆகவே அவரிடம் நான் அன்புடன் உள்ள நிலையானது குணங்களுக்காக மட்டும் அல்ல என்று என்னால் நிரூபிக்க இயலாது. ஆனால் அவர் குணங்கள் அற்றவராக இருந்தாலும், அழகற்றவராக இருந்தாலும் நான் அவரிடம் இப்போது இருப்பது போன்று இருப்பேன்", என்றாள்.

113. பகவத்விஷய ப்ரவ்ருத்தி பின்னைச் சேருமோவென்னில், அதுக்கடி ப்ராவண்யம்; அதுக்கடி ஸம்பந்தம்; அதுதான் ஔபாதிகமன்று; ஸத்தாப்ரயுக்தம்.

**அவதாரிகை** – இப்படி ஸ்வரூப ப்ரயுக்தமான தாஸ்யமே ப்ரதாநமாகில், சேஷி செய்தபடி கண்டிருக்குமதொழிய, அநந்யோபாயத்வாதிகள் குலையும்படி யவ்விஷயத்தைக் குறித்துப் பண்ணுகிற ஸ்வப்ரவ்ருத்தி சேருமோ வென்கிற சங்கையை யநுவர்த்திக்கிறார் (பகவத்விஷய ப்ரவ்ருத்தி) இத்யாதியால். அத்தைப் பரிஹரிக்கிறார் (அதுக்கடி ப்ராவண்யம்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதம் ஆத்மஸ்வரூபத்தின் காரணமாக உண்டான அடிமைத்தன்மை என்பதே சிறந்தது என்றால், நமது இயல்பான எஜமானனாகிய ஸர்வேச்வரன் என்ன செய்கிறானோ அப்படியே செய்து கொள்ளட்டும் என்று இருத்தல் வேண்டும். அப்படி உள்ளபோது மற்ற எதனையும் உபாயமாகக் கொள்ளாமல் இருத்தல் போன்று ஸர்வேச்வரனைக் குறித்து ஒருவன் செய்கின்ற செயல்களைத் தொடர்ந்து செய்யவேண்டுமா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ப்ராவண்யமாவது, அதிமாத்ர ஸ்நேஹம். அந்த ப்ராவண்யத்துக்கடி விஷய வைலக்ஷண்யமன்றோவென்ன, (அதுக்கடி ஸம்பந்தம்) என்கிறார். (ஸம்பந்தமாவது) – சேஷசேஷிபாவம். அதுதான் குணக்ருதமாயும் வாராதோ வென்ன, (அதுதான் ஔபாதிகமன்று, ஸத்தா ப்ரயுக்தம்) என்கிறார். (ஸத்தா ப்ரயுக்தம்) என்றது - இவ்வாத்மாவினுடைய ஸத்தையே பிடித்துள்ளதொன்றென்கை.

**விளக்கம்** – ப்ராவண்யம் என்றால் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட எல்லைகளையும் ஸர்வேச்வரனுக்காக மீறுகின்ற அளவிற்கு அவனிடம் உள்ள அன்பாகும். அப்படிப்பட்ட அன்பிற்குக் காரணம் அவனது திருமேனி அழகோ என்ற கேள்விக்கு, "அந்த அன்பிற்குக்

காரணம் அவனுடன் நமக்கு உள்ள ஸம்பந்தமே" என்கிறார். இந்த ஸம்பந்தம் என்பது எஜமானன் – அடிமை என்பதாகும். அத்தகைய ஸம்பந்தம் என்பது குணங்கள் காரணமாக வரலாம் அல்லவோ என்னும் சந்தேகத்திற்கு, "அந்த ஸம்பந்தம் வேறு காரணங்களால் வருவது அல்ல, ஆத்மாவின் இருப்பு என்பதுடன் கூடியதாகும்", என்கிறார். ஸத்தா ப்ரயுக்தம் என்றால், "ஆத்மாவின் இருப்பு என்பது என்று முதல் உள்ளதோ அன்றிலிருந்து உள்ளது" என்பதாகும்.

114. அந்த ஸத்தை ப்ராவண்ய கார்யமான அநுபவமில்லாதபோது குலையும்; அது குலையாமைக்காக வருமவையெல்லாம் அவர்ஜநீயங்களுமாய் ப்ராப்தங்களுமாயிருக்கும்; ஆகையாலே பகவத் விஷயப்ரவ்ருத்தி சேரும்.

**அவதாரிகை** – இத்தால் கீழ்ப் பண்ணின சங்கைக்குப் பரிஹாரமானதேதென்னவருளிச் செய்கிறார் மேல் வாக்யத்ரயத்தாலே.

**விளக்கம்** – மேலே எழுப்பப்பட்ட கேள்விக்கு இங்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (அந்த ஸத்தை ப்ராவண்ய கார்யமான வநுபவமில்லாதபோது குலையும்) என்றது - அப்படிப்பட்ட ஸத்தைதான், ஸ்வப்ரயுக்த ஸம்பந்தமடியாய் வருகிற ப்ராவண்ய கார்யமான பகவதநுபவமில்லாதபோது க்ஷணகாலமும் நில்லாதென்றபடி. (அது குலையாமைக்காக வருமவை யெல்லாம் அவர்ஜநீயங்களுமாய் ப்ராப்தங்களுமாயிருக்கும்) என்றது - அந்த ஸத்தையழியாமைக்குறுப்பாக வருகிற மடலெடுக்கை முதலான ஸகல ப்ரவ்ருத்திகளும், பகவதநுபவமொழியத் தரிப்பில்லாமையாலே தவிருவோமென்றாலும் தவிரப்போகாதவையுமாய், எல்லாம் சேஷிக்கதிசய கரங்களாகையாலே ஸ்வரூப ப்ராப்தங்களுமா யிருக்குமென்றபடி. (ஆகையாலே பகவத் விஷயப்ரவ்ருத்தி சேரும்) என்று – உக்தத்தை ஹேதுவாக்கிக் கொண்டு ப்ரக்ருத சங்கையைப் பரிஹரித்துத் தலைக்கட்டுகிறார்.

**விளக்கம்** - "அந்த ஸத்தை ப்ராவண்ய கார்யமான வநுபவமில்லாதபோது குலையும்" என்றால் - ஆத்மாவின் இருப்பு என்பது: தான் உள்ளதற்குக் காரணமாக இருக்கின்ற எஜமான-அடிமை என்ற தொடர்பு மூலமாக ஏற்படும் மிகுந்த அன்புக்கு இலக்கான எம்பெருமானின் அனுபவம் கிட்டாதபோது ஒரு நொடி கூடத் தாங்க இயலாது என்பதாகும். "அது குலையாமைக்காக வருமவை யெல்லாம் அவர்ஜநீயங்களுமாய் ப்ராப்தங்களுமாயிருக்கும்" என்றால் - ஆத்மாவின் இருப்பு அழியாமல் இருக்கவேண்டும் என்பதன் பொருட்டு மடல் எடுத்தல் போன்ற செயல்களில் ஈடுபடக்கூடும்; இது போன்ற செயல்களை, எம்பெருமானின் அனுபவம் கிட்டாமல் தரிக்கமுடியாது என்பதால்

செய்யக்கூடாது என்று எண்ணினலுல் இயலாதபடி இருக்கும்; இப்படியாக இவை எம்பெருமானின் தன்மை குறித்து மற்றவர்களை வியக்கவைக்கும்படிச் செய்வதால், இவை சேதனனின் ஸ்வரூபம் (இயற்கை) ஆகும். எனவே "ஆகையாலே பகவத் விஷயப்ரவ்ருத்தி சேரும்" என்று மேலே எழுப்பப்பட்ட சந்தேகத்தை நிவர்த்தி செய்து முடிக்கிறார்.

115. ப்ரபகாந்தர பரித்யாகத்துக்கும் அஜ்ஞாநாசக்திகளன்று, ஸ்வரூப விரோதமே ப்ரதான ஹேது.

**அவதாரிகை** - இதரவிஷயபரித்யாகத்துக்கும் பகவத்விஷய பரிக்ரஹத்துக்கும் ப்ரதாந ஹேதுக்களின்னதென்றார் கீழ்; இந்த ப்ரஸங்கத்திலே, இதரோபாய பரித்யாகத்துக்கு ப்ரதாநஹேதுவின்னதென்கிறார் மேல் (ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - பெண்களுடனான தொடர்பு உள்ளிட்ட மற்ற விஷயங்களைக் கைவிடுவதற்கும், எம்பெருமானைப் பற்றுவதற்கும் உள்ள முக்கியமான காரணங்கள் இவை இவை என்று மேலே கூறினார். இங்கு ப்ரபத்தி தவிர்த்து உள்ள மற்ற உபாயங்களைக் கைவிடுவதற்கான காரணம் இவை இவை என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ப்ராபகாந்தரங்களாவன – ப்ரபத்த்யுபாயத்தை யொழித்த உபாயங்கள் (அஜ்ஞாநாசக்திகளன்று) என்றது - அவற்றையறிகைக்கும் அநுஷ்டிக்கைக்குமீடான ஜ்ஞாநசக்திகளில்லாமை தத்த்யாகத்துக்கு ப்ரதாநஹேதுவன்று என்றபடி. (ஸ்வரூப விரோதமே ப்ரதாநஹேது) என்றது – பகவதத்யந்த பாரதந்த்ர்யமாகிற ஸ்வரூபத்துக்குச் சேராதென்னுமதுவே முக்கிய ஹேதுவென்றபடி. இத்தால் – "அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர்" என்கிறவிடத்தில் சொன்ன அஜ்ஞாநாசக்திகள் முக்கியஹேதுவன்றென்னுமிடம் சொல்லுகிறது. அஜ்ஞாநாசக்திகளடியாகாவிடில் ஜ்ஞாநசக்திகளுண்டாகில் பரிக்ராஹ்யமாமிறே , ஸ்வரூபவிரோதமென்றுவிட்டாலிறே மறுவலிடாதொழிவது.

**விளக்கம்** – "ப்ராபகாந்தரங்கள்" என்பவை ப்ரபத்தியைத் தவிர உள்ள மற்ற உபாயங்கள் ஆகும். "அஜ்ஞாநாசக்திகளன்று" என்றால் அப்படிப்பட்ட மற்ற உபாயங்கள் எவை என்று அறிந்து கொள்வதற்குத் தேவையான ஞானம் மற்றும் அவற்றை இயற்ற நம்மிடம் ஆற்றல் இல்லை என்பதன் காரணமாகவே அவற்றைக் கைவிடவேண்டும் என்பது அவற்றைக்

கைவிடுவதற்கான முக்கியமான காரணங்கள் அல்ல - என்பதாகும். "ஸ்வரூப விரோதமே ப்ரதாநஹேது" என்றால் – அது போன்று மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளுதல் என்பது எமபெருமானுக்கு மட்டுமே நாம் அனைத்துவகையிலும் வசப்பட்டவர்கள் என்பதான நமது ஆத்மஸ்வரூபத்திற்குப் பொருந்தாது என்பதால் கைவிடவேண்டும் என்று கொள்ளவேண்டும். இதன் மூலம் சூர்ணை 43ல் "அஜ்ஞாநத்தால்" கூறப்பட்டதான அறிவு இல்லாத தன்மை மற்றும் ஆற்றல் இல்லாத தன்மை ஆகிய இரண்டும் முக்கியமான காரணம் அல்ல எனப்பட்டது. ஏனென்றால் அறிவற்ற தன்மை மற்றும் ஆற்றல் அற்ற நிலை ஆகிய இரண்டும் மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளாமல் இருப்பதற்கு முக்கியமாகக் காரணமாக இருந்தால், ஞானம் மற்றும் ஆற்றல் ஏற்பட்டால் அந்த உபாயங்களைக் கைக்கொள்ளக்கூடும் அல்லவோ? ஆனால் அவை ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு விரோதம் என்று எண்ணிய பின்னர் மீண்டும் தலைதூக்காது அல்லவோ?

## 116. ப்ராபகாந்தரம் அஜ்ஞர்க்கு உபாயம்

**அவதாரிகை** - இப்படி ப்ராபகாந்தரத்தை விரோதியென்று தள்ளலாமோ, அதுவும் மோக்ஷோபாயமாயன்றோ போருகிறது, அது பின்னையார்க்கு உபாயமென்ன வருளிச்செய்கிறார் (ப்ராபகாந்தரம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் மற்ற மோக்ஷ உபாயங்களை ஆத்மஸ்வரூபத்திற்கு விரோதி என்று ஒதுக்குவது சரியா, அவை மோக்ஷ உபாயங்கள் அல்லவா, அவற்றை விலக்கினால் அவை பின்னர் எந்த அதிகாரிகளுக்கு உபாயமாக உள்ளது போன்ற கேள்விகளுக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "அஜ்ஞர்க்குபாயம்" என்றது ஸ்வரக்ஷணே ஸ்வயத்ந கந்தாஸஹமான ஸ்வரூபத்தையுள்ளபடி தர்சிப்பிக்கைக்கீடான ஜ்ஞாநமில்லாதவர்களுக்கு உபாயமா யிருக்குமென்றபடி.

**விளக்கம்** - "அஜ்ஞர்க்குபாயம்" என்றால், தங்களைக் காப்பாற்றிக் கொள்வதில் தங்களுக்கு முக்கியமான பங்கு உள்ளது என்று எண்ணியவர்களாக, ஆத்மஸ்வரூபத்தைச் சரியாக அறியாதவர்களுக்கு (தாங்களே தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முயல்வது ஆத்மஸ்வரூபத்திற்கு விரோதம் ஆகும்) மற்ற உபாயங்கள் உள்ளன.

117. ஜ்ஞாநிகளுக்கு அபாயம்.

**அவதாரிகை** – ஆனால், ஜ்ஞாநிகளுக்கு இது எங்ஙனேயென்ன (ஜ்ஞாநிகளுக்கபாயம்) என்கிறார்.

**விளக்கம்** - இது போன்ற உபாயங்கள் ஞானிகளுக்கு எவ்விதம் இருக்கும் என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநமுடையவர்களுக்கு அபாயமாயிருக்குமென்கை.

**விளக்கம்** - ஆத்மாவின் ஸ்வரூபம் இன்னது என்ற ஞானம் கொண்டவர்க்கு இது போன்ற மற்ற உபாயங்கள் அனைத்தும் அபாயமாகவே (ஆபத்து ஏற்படுத்துவதாக) இருக்கும்.

118. அபாயமாயிற்றது ஸ்வரூபநாசகமாகையாலே.

**அவதாரிகை** - இவர்களுக்கு அபாயமாவானென்னென்ன (அபாயமாய்த்தது ஸ்வரூபநாசகமாகையாலே) என்கிறார்.

**விளக்கம்** – ஞானிகளுக்கு மற்ற உபாயங்கள் ஏன் அபாயமாக இருக்கும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஸ்வரூபமாவது அத்யந்த பாரதந்த்ர்யம்; இதுக்கு ஸ்வயத்நரூபமானவது நாசகமிறே.

**விளக்கம்** – ஸ்வரூபம் என்றால் எம்பெருமானிடம் மிகுந்த ப்ரேமை காரணமாக அவனுக்கு மட்டுமே வசப்பட்டு இருத்தல் ஆகும். மற்ற உபாயங்கள் இப்படிப்பட்ட நிலையை மாற்றிவிடுவதால், அவை ஸ்வரூபத்திற்கு அழிவை ஏற்படுத்தக்கூடியவை ஆகும்.

119. “நெறிகாட்டி நீக்குதியோ” என்னாநின்றதிறே.

**அவதாரிகை** - ததபாயத்வத்தை ஜ்ஞாநிநாமக்ரேஸரரானவாழ்வார் பாசுரத்தாலே தர்சிப்பிக்கிறார் (நெறிகாட்டி) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படிப்பட்ட அபாயத்தன்மை என்பது மற்ற உபாயங்களுக்கு உள்ளது என்பதை ஞானிகளில் முதல்வரான நம்மாழ்வார் தனது பாசுரத்தில் கூறுவதை உணர்த்துகிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது உன்னையொழிய வேறோருபாயத்தை காட்டி உன்பக்கலினின்றும் அகற்றப் பார்க்கிறாயோவென்கையாலே, ப்ராபகாந்தராபாயத்வம் ஸித்தமிறே என்கை. நீக்குகையாவது - பரதந்த்ரமான வஸ்துவை ஸ்வதந்த்ரக்ருத்யமான உபாயாநுஷ்ட்டாநத்திலே மூட்டித் தனக்கு அசலாக்குகையிறே.

**விளக்கம்** - பெரிய திருவந்தாதி (6) - நெறிகாட்டி நீக்குதியோ – என்ற பாசுரம் காண்க. இதில் ஆழ்வார், “மற்ற உபாயங்களைக் காண்பித்து உன்னை விட்டு என்னை அகற்றப் பார்க்கிறாய் போலும்” என்கிறார். இதன் மூலம் மற்ற உபாயங்களின் அபாயத்தன்மை தெளிவு அல்லவோ? இங்கு பாசுரத்தில் உள்ள “நீக்குதல்” என்றால் என்ன? அவனுக்கு மட்டும் வசப்பட்டதான ஆத்மாவைத் தனது முயற்சியால் சேதனன் காப்பாற்றிக்கொள்ள மற்ற உபாயங்களை நாடும்படிச் செய்து, அதன் மூலம் விலக்கிவைத்தல் ஆகும்.

120. “வர்த்ததே மே மஹத் பயம்” என்கையாலே பயஜநகம்; “மா சுச:” என்கையாலே சோக ஜநகம்.

**அவதாரிகை** - இதினுடைய ஸ்வரூபநாசகத்வ ப்ரயுக்தமான தூஷணவிசேஷங்களை யருளிச் செய்கிறார் (வர்த்ததே) இத்யாதி வாக்ய த்வயத்தாலே.

**விளக்கம்** – ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு அழிவை ஏற்படுத்தக்கூடிய தோஷங்களை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது “காலேஷ்வபிச ஸர்வேஷு திக்ஷு ஸர்வாஸுசாச்யுத, சரீரேச கதௌசாபிவர்த்ததே மே மஹத் பயம்” என்று உபாயாந்தராநுஷ்ட்டாநத்துக்கு

யோக்யமான கால தேச தேஹ விஷயமாகவும், உபாயாந்தரங்கள் தன்விஷயமாகவும் எனக்கு மஹாபயம் வர்த்தியா நின்றதென்கையாலும்; உபாயாந்தர ச்ரவணாநந்தரம் அர்ஜுநனுக்கு சோகம் பிறக்க ஸ்வரூபாநுரூபோபாயத்தை யுபதேசித்து "மாசுச:" என்று சோகாபநோதநம் பண்ணியருளுகையாலும்; ஸ்வரூப விரோதியான ப்ராபகாந்தரம் ஜ்ஞாநிகளுக்கு பயஜநகமுமாய் சோகஜநகமுமாயிருக்குமென்கை.

**விளக்கம்** – ஜிதந்தே ஸ்தோத்ரம் (9) – காலேஷ்வபிச ஸர்வேஷு திக்ஷு ஸர்வாஸுசாச்யுத, சரீரேச கதௌசாபிவர்த்ததே மே மஹத் பயம் – அடியார்களை எப்போதும் கைவிடாத அச்சுதா! மற்ற உபாயங்களைக் கைக்கொள்ள ஏதுவாக புண்ணிய தேசங்கள், புண்ணிய காலங்கள், சரீரம் போன்றவை உள்ளன; அந்த உபாயங்களைக் கண்டால் எனக்கு அச்சமே ஏற்படுகிறது - என்றது காண்க. இதன் மூலம் மற்ற உபாயங்களைக் கைக்கொள்வதற்கு ஏற்றதான காலம், தேசம், சரீரம், உபாயம் போன்றவற்றைக் கண்டால் அச்சமே ஏற்படுகிறது என்பது தெளிவு. கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் போன்ற பலவற்றையும் கேட்ட பின்னரும் அர்ஜுனனுக்கு சோகமே நிலை நின்றது. எனவே ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றதான ப்ரபத்தி உபாயத்தை உபதேசம் செய்து, "மாசுச: - கவலைப்படாதே" என்று அவன் சோகத்தை எம்பெருமான் நீக்கினான். ஆகவே ஆத்மஸ்வரூபத்திற்கு அழிவை ஏற்படுத்தவல்ல மற்ற உபாயங்கள் அனைத்தும் ஞானிகளுக்கு சோகத்தைப் பிறப்பிக்க வல்லவையாகும்.

121. இப்படி கொள்ளாதபோது ஏதத்ப்ரவ்ருத்தியிலே ப்ராயச்சித்தவிதி கூடாது.

**அவதாரிகை** - கீழ்ச்சொன்னபடியே அர்த்தத்தை அங்கீகரியாதவளவில் விரோதங் காட்டுகிறார் (இப்படி கொள்ளாதபோது) என்று தொடங்கி.

**விளக்கம்** - மேலே கூறிய கருத்தை ஏற்காவிடில் உண்டாகும் விரோதத்தை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இப்படிகொள்ளாதபோது) என்றது - ஸ்வரூப நாசகமென்று கொள்ளாத போதென்றபடி. (ஏதத் ப்ரவ்ருத்தியில் ப்ராயச்சித்தவிதி கூடாது) என்றது "ஸ்க்ருதேவஹி சாஸ்த்ரார்த்த: க்ருதோயம் தாரயேந் நரம், உபாயாபாய ஸம்யோகே நிஷ்ட்டயா ஹீயதே அநயா; அபயஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத். ப்ராயச்சித்திரியம் ஸாத்ர யத்

புநச்சரணம் வ்ரஜேத்; உபாயாநாமுபாயத்வ ஸ்வீகாரேப்யேததேவஹி" என்று ப்ரபந்நனானவனுக்கு ப்ராமாதிகமாக உபாயாந்தர ப்ரவ்ருத்தி வந்த காலத்தில், அபாய ப்ரவ்ருத்தியில்போலே புந:ப்ரபதநரூப ப்ராயச்சித்தத்தை விதிக்கக்கூடாதென்கை. புந: ப்ரபதநமாவது பூர்வப்ரபதந ஸ்மரணம்; புந: ப்ரயோகமன்று.

**விளக்கம்** – "இப்படிகொள்ளாதபோது" என்றால் – மற்ற உபாயங்கள் ஆத்மாவின் தன்மையை அழிக்கக்கூடியவை என்று கொள்ளாதபோது – என்று பொருள். "ஏதத் ப்ரவ்ருத்தியில் ப்ராயச்சித்தவிதி கூடாது" என்றால் - லக்ஷ்மீ தந்த்ரம் – ஸ்க்ருதேவஹி சாஸ்த்ரார்த்த: க்ருதோயம் தாரயேந் நரம், உபாயாபாய ஸம்யோகே நிஷ்ட்டயா ஹீயதே அநயா; அபயஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத். ப்ராயச்சித்திரியம் ஸாத்ர யத் புநச்சரணம் வ்ரஜேத்; உபாயாநாமுபாயத்வ ஸ்வீகாரேப்யேததேவஹி - சாஸ்த்ரங்களில் உரைக்கப்பட்டதான இந்த ப்ரபத்தி என்பது ஒருமுறை செய்தாலே காப்பாற்றிவிடும் தன்மை கொண்டது; மற்ற உபாயங்களாகிற அபாயங்களை ஒருவன் கைக்கொண்டால் இந்த ப்ரபத்தியில் இருந்து அவன் நழுவியவன் ஆகிறான்; விலக்கப்பட்ட தீய செயல்களுடன் மீண்டும் தொடர்பு உண்டானால் உடனே அதற்கான ப்ராயச்சித்தம் செய்யவேண்டும்; மீண்டும் ப்ரபத்தி செய்தலே இங்கு ப்ராயச்சித்தம் ஆகிறது; மற்ற உபாயங்களை நாடுதல் என்ற எண்ணம் ஏற்பட்டாலே இதுவே ப்ராயச்சித்தம் – என்றது காண்க. ஆனால் ப்ரபந்நன் ஒருவன் எந்தவிதமான குறிக்கொளும் இன்றி மற்ற உபாயங்களைக் கைக்கொள்ள நேர்ந்தால், (பாவம் செய்தால் எவ்விதம் ப்ராயச்சித்தம் செய்யவேண்டுமோ அது போன்று) மீண்டும் ப்ரபத்தி செய்தல் என்ற ப்ராயச்சித்தத்தை விதித்தல் கூடாது. "மீண்டும் ப்ரபத்தி செய்தல்" என்று லக்ஷ்மீ தந்த்ரத்தில் கூறப்பட்டது என்னவெனில், முன்பு செய்த ப்ரபத்தியை மீண்டும் நினைவு கூறுதல் என்பதே ஆகும் அல்லாமல் மீண்டும் ப்ரபத்தி செய்தல் அல்ல.

122. திருக்குருகைப்பிரான்பிள்ளான் பணிக்கும்படி – மதிராபிந்துமிச்ரமான சாதகும்பமய கும்பகத தீர்த்தஸலிலம்போலே அஹங்காரமிச்ரமானவுபாயாந்தரம்.

**அவதாரிகை** - இப்படி ஸ்வரூப நாசகமான உபாயாந்தரத்தினுடைய அத்யந்த நிஷித்தத்வத்தை அபியுக்த வசநத்தாலே தர்சிப்பிக்கிறார் (திருக்குருகைப்பிரான்பிள்ளான் என்று தொடங்கி).

**விளக்கம்** – இப்படியாக ஆத்மாவின் ஸ்வரூபத்தை அழிக்கக்கூடியதாக உள்ளவற்றில், மற்ற உபாயங்கள் மிகவும் தாழ்ந்ததாக உள்ளன என்பதை வேதங்களை நன்றாக அறிந்தவர்களின் சொற்கள் மூலம் உணர்த்துகிறார்.

**வ்யாக்யானம்** – திருக்குருகைப்பிரான்பிள்ளானாகிறார் ஸர்வஜ்ஞரான பாஷ்யகாரர் திருவடிகளிலே ஸேவித்து ததபிமத விஷயமாய் ஸகல சாஸ்த்ரங்களையுமாராய்ந்தறுதி யிட்டிருக்குமவ ராகையாலே, ஆப்த தமராயிருக்குமவரிறே. (பணிக்கும்படி) என்றது – அருளிச்செய்யும் ப்ரகாரமென்றபடி. (மதிரையாவது) - அத்யந்த நிஷித்த த்ரவ்யமாய் ஸ்வஸ்பர்ச லேசமுள்ள வஸ்துக்களையும் தன்னைப்போலே நிஷித்தமாக்குமதிறே; இத்தை அஹங்காரத்துக்கு த்ருஷ்டாந்த மாக்குகையாலே, அதினுடைய அத்யந்த நிஷித்தத்வமும்; தத்ஸ்பர்சலேசமுள்ள வஸ்துவும் தத்வத் நிஷித்தமென்னுமிடமும் தோற்றுகிறது; (சாதகும்பமாவது) - ஸுவர்ணம். (தந்மயகும்பம்) என்றது. உள்ளு த்ரவ்யாந்தரமாய் ஸுவர்ணம் மேல்பூச்சாயிருக்கையன்றிக்கே, அதுதானே உபாதாநமாகப் பண்ணின குடமென்றபடி; இத்தால் – பாத்ரசுத்தி சொல்லுகிறது. (தத்கததீர்த்த ஸலிலம்) என்கையாலே - அதுக்குள்ளிருக்கிற ஜலத்தின் பாவநத்வம் சொல்லுகிறது. (அதுபோலே அஹங்கார மிச்ரமான உபாயாந்தரம்) என்கையாலே இங்கும் பாத்ர சுத்தியும் தத்கத பதார்த்த சுத்தியும் சொல்லவேணும். அதாவது “ஆத்மா ஜ்ஞாநமயோமல:” என்கிற ஸ்வதோ நிர்மலதையாலும் பகவதநந்யார்ஹ சேஷதையாலும் பரிசுத்தமாயிறே பக்த்யாச்ரயமானவாத்மவஸ்துவிருப்பது; தத்கத பக்தியும் பகவதேகாகரதயா பரிசுத்தையிறே; அஹங்காரம் கலசிற்றில்லையாகிலொரு குறையில்லையே. ஆக, இத்தால் சொல்லிற்றாய்த்த தென்னென்னில்; ஸுவர்ணபாத்ரகதமான தீர்த்தஜலம், பாத்ரசுத்தியுமுண்டாய்த் தானும் பரிசுத்தமாயிருக்க, ஸுராபிந்து மிச்ரதையாலே நிஷித்தமாமாப்போலே, ஸ்வதோநிர்மலத்வாதிகளாலே பரிசுத்தமான ஆத்மவஸ்து கதையாய் பகவதேகவிஷயதயா பரிசுத்தையாயிருக்கிற பக்திதான், ஸ்வயத்ந மூலமான வஹங்கார ஸ்பர்சத்தாலே ஜ்ஞாநிகளங்கீகரியாதபடி நிஷித்தையாயிருக்குமென்றதாய்த்து (பணிக்கும்படி) என்றதுக்குச் சேர, வாக்யத்தின் முடிவிலே, என்று என்கிற வித்தனையும் கூட்டி நிர்வஹிப்பது.

**விளக்கம்** - அனைத்தும் அறிந்தவரான எம்பெருமானாரின் திருவடிகளிலே பணிந்தவராக, அவருக்கு மிகவும் அபிமான சீடராக, அனைத்து சாஸ்த்ரங்களும் ஆராய்ந்து அறிந்தவராக உள்ளவர் திருக்குருகைப்பிரான்பிள்ளான் ஆவார். “பணிக்கும்படி” என்றால் அவர் அருளிச்செய்தபடி என்று பொருள். ”மதிரை” என்றால் – மிகவும் விலக்கப்பட்ட வஸ்து;

தனது தொடர்பு சிறிது ஏற்பட்டாலும் கூட, அந்த வஸ்துவையும் தன்னைப் போன்றே மிகவும் விலக்கப்பட்டதாக மாற்றவல்ல வஸ்து என்று பொருள். இதனை அஹங்காரத்திற்கு உவமையாகக் கூறுவதால், அத்தகைய அஹங்காரம் என்பது மிகவும் விலக்கப்படவேண்டிய ஒன்று என்பதும், அந்த அஹங்காரத்துடன் தொடர்புடைய அனைத்தும் விலக்கிவைக்கப்படும் என்பதும் தெளிவாகிறது. “சாதகும்பம்” என்றால் தங்கம் ஆகும். “தந்மயகும்பம்” என்றால் உட்புறம் வேறு உலோகம் ஒன்றினால் செய்யப்பட்டு, மேலே தங்கமுலாம் பூசப்பட்டது போல் அல்லாமல், முழுவதுமாகவே தங்கத்தால் செய்யப்பட்ட குடம் என்று பொருள்; இதன் மூலம் அந்தக் குடத்தின் தூய்மை உணர்த்தப்பட்டது. “தத்கததீர்த்த ஸலிலம்” என்பதன் மூலம் அத்தகைய குடத்தின் உள்ளே வைக்கப்படுகின்ற தண்ணீரின் தூய்மை கூறப்பட்டது. “அதுபோலே அஹங்கார மிச்ரமான உபாயாந்தரம்” என்றால் இங்கு பாத்திரத்தின் தூய்மை மற்றும் அந்தப் பாத்திரத்தில் வைக்கப்பட்ட பொருளின் தூய்மை கூறப்படவேண்டும். ஸ்ரீவிஷ்ணு புராணம் – ஆத்மா ஜ்ஞாநமயோமல: - ஆத்மா ஞானமயமானது, தோஷம் அற்றது - என்று கூறுவதற்கு ஏற்ப இயற்கையாகவே தோஷம் அற்ற தன்மை மற்றும் எம்பெருமான் தவிர மற்ற யாருக்கும் அடிமையற்ற தன்மை ஆகிய இரண்டாலும் மிகவும் தூய்மையாக உள்ளது ஆத்மாவாகும். அத்தகைய ஆத்மாவில் உள்ள எம்பெருமானைக் குறித்த பக்தி என்பதும், ஸர்வேச்வரன் விஷயமாக மட்டுமே உள்ளதால், மிகவும் தூய்மையானது ஆகும். அதில் அஹங்காரம் கலக்காமல் உள்ளபோது எந்தவிதமான குறையும் இல்லை. ஆகவே இதன் மூலம் உணர்த்தப்பட்டது என்ன? தங்கப்பாத்திரத்தில் வைக்கப்பட்ட தூய்மையான தண்ணீர் என்பது அந்தப் பாத்திரத்தின் தூய்மை மற்றும் தன்னுடைய தூய்மை ஆகியவற்றுடன் இருந்தாலும், அதில் சிறிது கள் சேர்க்கப்பட்டாலும் விலக்கப்படும். இது போன்று ஆத்மாவானது இயல்பாகவே குற்றங்கள் இல்லாத தன்மை போன்றவற்றால் தூய்மையாக உள்ளது. அத்தகைய ஆத்மாவில் உள்ளதாகவும், எம்பெருமானை மட்டுமே தனக்கு விஷயமாகக் கொண்டதால் மேலும் தூய்மையாகவும் உள்ள பக்தி என்பது, ”தன்னுடைய முயற்சி” என்பதை மூலமாகக் கொண்ட அஹங்காரத்துடன் தொடர்பு கொண்டால், அத்தகைய பக்தியானது ஞானிகளால் ஏற்கப்படாமல் விலக்கப்படும் என்று அறிக. “பணிக்கும்படி” என்பதற்கு ஏற்ப சூர்ணையின் இறுதியில் “என்று” என்பதைக் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

123. ரத்நத்துக்குப் பலகறை போலேயும் ராஜ்யத்துக்கு எலுமிச்சம்பழம் போலேயும் பலத்துக்கு ஸத்ருசமன்று.

**அவதாரிகை** - இன்னமுமிதுக்குப் பல விஸத்ருசத்வ மென்பதொரு தூஷணமுண் டென்கிறார் (ரத்நத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – மேலும், கிட்டுகின்ற பலனாகிய மோக்ஷத்திற்குப் பக்தி என்பது ஈடாகாது என்ற தோஷமும் பக்திக்கு உள்ளது என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, த்வீபாந்தரங்களிலே சிலர் பலகறையை ஆபரணமாகப் பூண்கையாலே, பலகறையைக் கொடுத்தவர்களுக்கு ரத்நத்தைக் கொடுப்பர்கள்; உதாரரான ராஜாக்கள் ராஜ்யார்த்தியாய் வந்து ஓரெலுமிச்சம்பழத்தைக் கொடுத்தவனுக்கு ராஜ்யத்தைக் கொடுப்பர்கள்; இப்படி கொடுப்பர்களென்றால், மஹார்க்கமான ரத்நத்துக்கும் மஹாஸம்பத்தான ராஜ்யத்துக்கும், பலகறையு மெலுமிச்சம்பழமும் ஸத்ருச ஸாதநமல்லாதாப்போலே, “பக்த்யா லப்யஸ் த்வநந்யயா”, ”பக்த்யா த்வநந்யயா சக்ய:” என்கின்றபடியே, பக்தி சபலனாய் பரமோதாரனான வீச்வரன் இவன் பக்கல் பக்தி மாத்ரமே பற்றாசாக பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தைக் கொடுத்தாலும், பலத் துக்கிது ஸத்ருச ஸாதநமன்றென்கை.

**விளக்கம்** - ஒரு சில தீவுகளில் சிலர் சோழிகளை (பலகறை) ஆபரணமாக அணிவார்கள். அங்கு சோழிகளைக் கொண்டு வந்து கொடுத்தால் அதற்கு ஈடாக இரத்தினக்கற்களை அளிப்பார்கள். இது போன்று தன்னை மிகவும் விருப்பத்துடன் வந்து காணும் ஒருவன் எலுமிச்சம்பழம் அளித்தான் என்றால், அந்த அரசன் அதற்கு ஈடாக பல நாடுகளையும் நகரங்களையும் கூடப் பரிசாக அளிப்பான். இப்படி அளித்தபோதிலும் இரத்தினக்கல்லும், நாடுநகரங்களும் சோழிக்கோ அல்லது எலுமிச்சம் பழத்திற்கோ ஈடாகுமோ? அப்படி ஆகாது என்று கருத்து. கீதை (8-22) - பக்த்யா லப்யஸ் த்வநந்யயா - வேறு எதனையும் நாடாத பக்தி மூலம் மட்டுமே அடையத்தக்கவன் என்றும், கீதை (11-54) - பக்த்யா த்வநந்யயா சக்ய: - வேறு எதனாலும் அல்லாமல் பக்தியால் மட்டுமே - என்றும் கூறுகின்றபடி, நமது பக்தி மூலமாக மிகவும் ப்ரீதி அடைந்த, தாராள மனம் கொண்ட ஈச்வரன் நம்மிடம் உள்ள பக்தியை மட்டுமே ஏற்றுக்கொண்டு மோக்ஷத்தைப் பரிசாக அளித்தாலும், அந்த மோக்ஷம் என்ற பலனுக்கு நமது பக்தி ஈடாகாது என்பதால், பக்தி மோக்ஷ ஸாதனம் அல்ல என்று கருத்து.

124. தான் தரித்ரனாகையாலே தனக்குக்கொடுக்கலாவதொன்றில்லை.

**அவதாரிகை** - ஆனால் விஸத்ருசமான பலகறையையுமெலுமிச்சம் பழத்தையு முபஹாரமாகக் கொடுத்த, ரத்நத்தையும் ராஜ்யத்தையும் பெறுகிறவர்கள்தான் பெறுகிறபடியென், அவ்வோபாதியாகிறதென்ன; அது தனக்கு யோக்யதையில்லை யென்கிறார் (தன்) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஆனால் ஈடாகாத எலுமிச்சம்பழம் மற்றும் சோழிகள் ஆகியவற்றைக் கொடுத்து நாட்டையோ அல்லது இரத்தினக்கற்களையோ பெறுவது உண்மைதானே; இது போன்றுதானே இங்கு பக்தி என்பது உள்ளது என்று கேட்கலாம். ஆனால் அதற்கும் தகுதி இல்லை என்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அங்கு தானும் தனக்குரியனாய் தனக்கென்னவொரு பலகறையும் எலுமிச்சம் பழமுமுண்டாகையாலே அது செய்யலாம்; இங்கு அப்படியன்றிக்கே "யானே நீ என்னுடைமையும் நீயே" என்கிறபடியே ஆத்மாத்மீயங்களிரண்டு மங்குத்தையதாய், தனக்கென்ன ஒன்றுமில்லாத வகிஞ்சநனாகையாலே, பேற்றுக்கு ஹேதுவாக அவன் விஷயத்தில் தனக்கு ஸம்ர்ப்பிக்கலாவதொன்றுமில்லை என்கை.

**விளக்கம்** – அதாவது இங்கு தான் தனக்கே உரியவன் என்று எண்ணுவதாலும், ஒரு சோழி அல்லது எலுமிச்சம்பழம் என்பது தனக்கே உரியது என்று உள்ளதாலும், இது போன்று செய்வது ஏற்கும். ஆனால் திருவாய்மொழி (2-2-9) – யானே நீ என்னுடைமையும் நீயே - என்பதற்கு ஏற்ப ஆத்மாவும், அதனுடன் தொடர்புடைய அனைத்தும் எம்பெருமானின் உடைமைகள் என்பதால் அவனுக்கே உரியதாகின்றன. எனவே மோக்ஷ விஷயத்தில் சேதனன் தனக்கு என்று ஏதும் இல்லாத தரித்ரன் ஆகிறான். எனவே எம்பெருமானுக்கு அளிப்பதற்குத் தன்னிடம் ஏதும் இல்லாதவனாகவே ஆகிறான்.

125. அவன் தந்தத்தைக் கொடுக்குமிடத்தில், அடைவிலே கொடுக்கில் அநுபாயமாம்; அடைவு கெடக் கொடுக்கில் களவு வெளிப்படும்.

**அவதாரிகை** - கோதாநத்தில் பிதாவுக்கு புத்ரன் தக்ஷிணை கொடுக்குமாப்போலே, அவன் தந்ததுதன்னை அவனுக்குக் கொடுத்தாலோவென்ன வருளிச்செய்கிறார் (அவன்) என்று தொடங்கி.

**விளக்கம்** – உபநயனத்தில் ப்ரம்மோபதேசத்தின்போது, தன்னுடைய தந்தையிடம் வாங்கிய பணத்தையே தந்தைக்குப் பிள்ளை தக்ஷிணை அளிப்பதுண்டு. அது போன்று இங்கும் ஸர்வேச்வரன் அளித்ததை அவனிடம் திரும்ப அளிப்பதில் தவறில்லையே என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (அவன் தந்தத்தைக் கொடுக்கையாவது) “விசித்ரா தேஹ ஸம்பத்தி ஈச்வராய நிவேதிதும், பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்த பாதாதி ஸம்யுதா” என்றும், “அந்நாள் நீ தந்த வாக்கை” என்றும் சொல்லுகிறபடியே - அடியிலே அவன் தந்த கரணகளேபரங்களை “மந்மநாபவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு” என்றும், ”ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தச்ச த்ருடவ்ரதா” என்றும் சொல்லுகிறபடியே த்யாநார்ச்சந ப்ரணாமாதிகளாலே தச்சேஷமாம்படி பண்ணுகை. (அடைவிலே கொடுக்கையாவது) – ததீயமென்னும் புத்தியாலே ஸமர்ப்பிக்கை. இப்படி கொடுக்கில் (அநுபாயமாம்) என்றது – அவனத்தை யவனுக்கே கொடுத்தவித்தனை யொழியத் தானொன்று கொடுத்ததா காமையாலே, அது பேற்றுக்கு ஸாதநமாகாதென்றபடி. (அடைவுகெடக் கொடுக்கையாவது) மதீயமென்னும் புத்தியாலே ஸமர்ப்பிக்கை. இப்படி செய்யில் (களவு வெளிப்படும்) என்றது – பகவத் த்ரவ்யாபஹாரம் ப்ரகாசிக்குமென்றபடி. ராஜமஹேந்த்ரன்படியை ரஹஸ்யத்திலே களவு கண்டு ஓலக்கத்திலே கொடுக்குமாப் போலேயிறே இவன் கொடை.

**விளக்கம்** - “அவன் தந்தத்தைக் கொடுக்கையாவது” என்றால் கீழே உள்ள பல வரிகளில் கூறப்பட்டபடி த்யானம், அர்ச்சனை, வணங்குதல் போன்ற பல செயல்களாலும் அவன் தந்த உடலை அவனுக்கே அடிமை என்னும்படி பண்ணுகையாகும்.

- ஸ்ரீவிஷ்ணுதர்மம் - விசித்ரா தேஹ ஸம்பத்தி ஈச்வராய நிவேதிதும், பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்த பாதாதி ஸம்யுதா - அந்தணரே! வியக்க வைப்பதாகவும், கைகால்களுடன் கூடியதாகவும் உள்ள இந்தச் சரீரம் என்பது ஈச்வரனை வணங்குவதற்காக மட்டுமே படைக்கப்பட்டது.
- திருவாய்மொழி – அந்நாள் நீ தந்த வாக்கை – நீ எனக்கு அளித்த இந்த உடல்
- கீதை (9-31) - மந்மநாபவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு - என்னிடம் மனம் வைப்பாய், என்னிடம் பக்தியுடன் இருப்பாய், என்னை வணங்குவாய்.

- கீதை (9-14) – ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தச்ச த்ருடவ்ரதா – எப்போதும் என்னையே பாடுபவராகவும், எனது கைங்கர்யங்களில் ஈடுபட்டவராகவும், என்னுடன் இருப்பதையே விரும்புகிறவராகவும் த்யானிக்கின்றனர்.

”அடைவிலே கொடுக்கையாவது” என்றால் அவனது உடைமை என்ற எண்ணத்துடன் அளித்தல் என்பதாகும். “அநுபாயமாம்” என்றால் இப்படிப்பட்ட எண்ணத்துடன் அளிக்கும் போது, அவனுக்கு உடைமையான ஒன்றை அவனிடமே மீண்டும் அளித்ததாகும் அல்லாமல், தான் புதிதாகக் கொடுத்தது ஆகாது; எனவே அது பேற்றுக்கு உபாயம் அல்ல. ” அடைவுகெடக் கொடுக்கையாவது” என்றால் அவனது உடைமை என்று எண்ணாமல், என்னுடையது ஒன்றை அவனிடம் கொடுத்தேன் என்ற எண்ணத்துடன் அளிப்பதாகும். இவ்விதம் செய்தால் “களவு வெளிப்படும்” என்பது என்ன? எம்பெருமானின் ஆபரணத்தைக் களவு செய்த செயலானது உலகிற்கு வெளிப்படும் என்று கருத்து. உதாரணமாக, நம்பெருமாள் தனது திருமார்பில் அணிந்து கொள்ளும் ஆபரணமான “ராஜமஹேந்த்ரன்படி” என்பதை யாரும் அறியாமல் திருடிக்கொண்டு சென்ற ஒருவன், சில நாட்கள் கழித்து அந்த ஆபரணத்தைத் தான் நம்பெருமாளுக்குச் சாற்றுவதற்காகக் கொடுப்பது போன்றதாகும். இது போன்று மற்ற உபாயங்களைக் கடைபிடிப்பவர்களின் செய்கை உள்ளது என்று கருத்து (**குறிப்பு**: மூன்றாம் குலோத்துங்கன் என்பவன் நம்பெருமாளுக்கு அளித்த ஆபரணங்களில் ராஜமஹேந்த்ரன்படி என்பதும் ஒன்று. இந்த ஆபரணம் தற்போது பெரியகோயிலில் இல்லை என்பது அறிந்தவர்களின் கூற்று).

126. பர்த்ருபோகத்தை வயிறு வளர்க்கைக்கு உறுப்பாக்குமாபோலே இவருக்குமவத்யம்.

**அவதாரிகை** - இன்னமு முபாயாந்தரத்துக்கொரு தூஷணம் சொல்லுகிறார் (பர்த்ரு போக) இத்யாதியாலே.

**விளக்கம்** - பக்தியை உபாயம் என்று கொள்வதற்கு மேலும் ஒரு தோஷம் உண்டு என்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது பார்யையானவள் ஸ்வயம் ப்ரயோஜநமான பர்த்ருபோகத்தை ஸ்வோதர போஷணத்துக்கு ஸாதநமாக்கிக் கொள்ளுமளவில், தன்னை பார்யையாக விரும்பின பர்த்தாவுக்கும் தத்பார்யையென்று பேரிட்டிருக்குற தனக்குமவத்யமாமாப் போலே, பகவத் வைலக்ஷண்யாநுபவத்தாலே விளைந்த போக ரூபையான பக்தியை

மோக்ஷ ஸாதநமாக்குமளவில் தன்னை சேஷபூதனாக விரும்பித் தன்னோடே கலந்து பரிமாறினவீச்வரனுக்கும் தச்சேஷபூதனென்று பேரிட்டிருக்கிற தனக்குமவத்யமாய்த் தலைக்கட்டுமென்கை. “ராத்ரி பர்த்தாவோடே ஸம்ச்லேஷித்து விடிவோறே கைக்கூலி தரவேணும் என்று வளைக்குமாப்போலே, பக்தியையுபாயமாகக்கொள்ளுகை” என்றிறே பிள்ளானுமருளிச்செய்தது.

**விளக்கம்** - மனைவி ஒருவள் வேறு எதனையும் இன்பம் அளிப்பதற்குச் சாதனம் என்று ஆக்காமல், தானே தனது கணவனின் இன்பத்திற்கு ப்ரயோஜனமாக உள்ளாள். அப்போது தனது வயிறு வளர்ப்பதற்காக மட்டுமே (அதாவது தான் பிழைப்பதற்காக) அந்த இன்பத்தை எண்ணியபடி இருந்தாள் என்றால் - தன்னை மனைவி என்பதால் விருப்பத்துடன் உள்ள கணவன், அவனுக்கு மனைவி என்ற இரண்டு பேருக்குமே தாழ்வாகிவிடும். அது போன்று ஸர்வேச்வரனின் மேன்மை, குணங்கள் போன்றவற்றின் ஈடுபாடு காரணமாக ஏற்பட்ட பக்தி என்பது மோக்ஷத்திற்கான உபாயம் என்று எண்ணப்பட்டால் - தன்னை அடிமை என்று எண்ணித் தன்னுடன் அன்பாகப் பழகியபடி உள்ள ஸர்வேச்வரன், அவனுடைய அடிமை என்றுள்ள சேதனன் ஆகிய இருவருக்குமே தாழ்வாகிவிடும். "இரவில் கணவனுடன் கூடியிருந்துவிட்டு, காலை நேரம் வந்தவுடன் மனைவியானவள் அவ்வாறு இரவு இருந்ததற்குக் கூலி கேட்பதை ஒத்ததே பக்தியை உபாயமாகக் கொள்வதாகும்", என்று திருக்குருகைப்பிரான்பிள்ளான் அருளிச்செய்தது காண்க.

127. வேதாந்தங்கள் உபாயமாக விதிக்கிறபடியென் என்னில்;

**வ்யாக்யானம்** - இப்படி ஸ்வரூப விரோதாதி தோஷ துஷ்டமான வித்தை, ஹிதாதநுசாஸநம் பண்ணுகிற வேதாந்தங்கள் "ஓமித் யாத்மாநம் த்யாயத", "ஆத்மாநமேவ லோக முபாஸீத", "ஆத்மாவா அரே த்ரஷ்டவ்யச் ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" என்று இச்சேதநனுக்கு மோக்ஷோபாயமாக விதிக்கிறதுக்கு நிதாநமருளிச் செய்வதாக, தஜ்ஜிஜ்ஞாஸு ப்ரச்நத்தை யநுவதிக்கிறார் (வேதாந்தங்கள்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாகப் பக்தி என்பதை உபாயமாகக் கொண்டால் அது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு விரோதமாக உள்ளது. ஆனால் இத்தகைய பக்தி என்பதையே நமது நன்மையை உபதேசிக்கும் வேதாந்தங்கள் பின்வருமாறு கூறுகின்றன:

- முண்டக உபநிஷத் (2-2-6) – ஓமித் யாத்மாநம் த்யாயத - பரமாத்மாவை ஓம் என்று உபாஸிக்கவேண்டும்.
- ப்ருஹத் உபநிஷத் (1-4-15) - ஆத்மாநமேவ லோக முபாஸீத – இந்த உலகைத் தனது சரீரமாகக் கொண்டவன் பரமாத்மா என்று உபாஸிப்பானாக
- ப்ருஹத் உபநிஷத் ( 4-4-5) – ஆத்மாவா அரே த்ரஷ்டவ்யச் ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: - அவனே பார்ப்பதற்கு ஏற்றவன், கேட்பதற்கு ஏற்றவன், மனனம் செய்வதற்கு ஏற்றவன், த்யானிப்பதற்கு ஏற்றவன்.

அதாவது இவை ஏன் பக்தி என்பதை மோக்ஷ உபாயமாக விதிக்கின்றன என்ற காரணத்தை அருளிச்செய்யும்விதமாக, அதனை அறிந்து கொள்ள ஆவல் கொண்ட ஒருவன் எழுப்பும் கேள்வியை உரைக்கிறார் - வேதாந்தங்கள் ஏன் பக்தியைக் கூறின? – என்று.

128. ஔஷதஸேவை பண்ணாதவர்களுக்கு அபிமத வஸ்துக்களிலே அத்தைக் கலசியிடுவாரைப்போலே ஈச்வரனைக் கலந்து விதிக்கிறவித்தனை.

**அவதாரிகை** - தந்நிதாநந்தன்னை யருளிச்செய்கிறார் (ஔஷதஸேவை) இத்யாதியாலே.

**விளக்கம்** - அதற்கான காரணத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது அத்யந்தருக்ணராய்த் திரியா நிற்கச்செய்தே அத்தை அவிளம்பேந போக்குமாப்தமான மஹௌஷதத்தை ஸேவிக்கச்சொன்னா லதுக்கிசையாத பால புத்ராதிகளுக்கு அவர்களாசைப்பட்டு விநியோகங்கொள்ளும் வஸ்துக்களிலே அந்த ஔஷதத்தைக் கலசியிடும் வத்ஸலரான மாத்ராதிகளைப்போலே, சீக்ரமாக ஸம்ஸார வ்யாதியைத் தீர்க்கும் ஸித்தோபாயமாகிற நச்சுமாமருந்தை ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி பூர்வகமாக ஸேவிக்கச் சொல்லி முதலிலேயுபதேசித்தால், அநாதியாய் வருகிற வாஸநையாலே அதுக்கிசையாத சேதநரையும் விடமாட்டாமையாலே அவர்களுக் கபிமதமான ஸ்வயத்ந ரூபமாயிருக்கிற உபாஸநத்திலே ததங்கத்வேந ஸித்தோபாயமான வீச்வரனைக் கலந்து தாத்ருசமான உபாஸநத்தையவர்களுக்கு மோக்ஷோபாயமாக விதிக்கிறவித்தனையென்கை. த்ருஷ்டாந்தத்தில் அபிமதவஸ்து வ்யாதிஹரமன்றியே தந்மிச்ரமாக ப்ரயோகித்த ஔஷதமே வ்யாதி ஹரமாகிறாப்போலே, தார்ஷ்டாந்திகத்திலும், உபாஸநமன்றிக்கே தந் மிச்ரனான வீச்வரனே

யுபாயமென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம். அவ்யவதாநேந ஸேவிக்குமளவில் அவிளம்பேந வ்யாதியைப் போக்கும் ஔஷதம் அபிமத வஸ்து மிச்ரமானபோது விளம்பேந கார்யகரமாகிறாப்போலேயாய்ந்து, உபாஸந மிச்ரனானபோது ஈச்வரன் விளம்ப்ய பலப்ரதனாகிறதும்.

**விளக்கம்** – ஒரு சிறுவன் நோயால் மிகவும் தீவிரமாகத் தாக்கப்பட்டுள்ளான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அந்த நோயை மிகவும் விரைவாகப் போக்கவல்லதான சிறப்பான மருந்து ஒன்றைப் பருகும்படி உரைத்தால் அதனை அந்தச் சிறுவன் கேட்கமாட்டான். ஆகவே அவன் மிகவும் விருப்பத்துடன் உண்கின்ற உணவில் அந்த மருந்தைக் கலந்து அவனது தாய் அளிப்பாள். இது போன்று ஸம்ஸாரம் என்ற நோயை மிகவும் விரைவாகத் தீர்க்கவல்லதான, திருவாய்மொழி (3-4-5) – நச்சுமாமருந்தை - கூறுவதான, ஸர்வேச்வரன் பற்றி தொடக்கத்திலேயே உபதேசம் செய்தால் யாரும் கேட்கமாட்டனர். ஏன் என்றால் எல்லையற்ற காலமாகத் "தங்களது முயற்சி" என்ற வாஸனையால் பீடிக்கப்பட்டதால் ஆகும். ஆகவே அவர்களது விருப்பத்திற்கு ஏற்றதான "தங்கள் முயற்சி" என்ற வடிவத்தில் உள்ளதான பக்தியில், அத்தகைய பக்திக்கு அங்கமாக ஸித்தோபாயமாக உள்ள ஸர்வேச்வரனைக் கலந்து, அந்த பக்தி அவர்களுக்கு மோக்ஷஸாதனம் என்று விதிக்கப்படுகிறது.

உபமானத்தில் நோயைக் குணப்படுத்தும் மருந்தாக உள்ளது அதில் கலக்கப்படும் வெல்லம் அல்ல; அதனில் காணப்படும் மருந்தே ஆகும். இதே போன்று மோக்ஷத்திற்கு உபாயமாகப் பக்தி இருப்பதில்லை, அந்த பக்தியில் கலக்கப்பட்டு உரைக்கப்படும் ஸர்வேச்வரனே ஆகிறான். இதுவே எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இன்றி ஒப்புக்கொள்ளப்படும் கருத்தாகும். மேலும் எந்த ஒரு பொருளும் கலக்கப்படாமல் நேரடியாக மருந்தாக மட்டுமே உட்கொள்ளப்படும் மருந்து என்பதே விரைவாக நோய் தீர்த்தல் என்ற பலனை அளிக்கிறது; அத்தகைய மருந்து விரும்பப்படும் மற்ற பொருள்களுடன் கலக்கப்படும்போது பலன் தர பலநாள் ஆகிறது. இது போன்று பக்தியால் கலக்கப்பட்ட ஸர்வேச்வரன், மோக்ஷம் அளிக்கப் பல நாட்கள் ஆகலாம்.

129. இத்தை ப்ரவர்த்திப்பித்தது பரஹிம்ஸையை நிவர்த்திப்பிக்கைக்காக.

**அவதாரிகை** - இனி இப்படியிது தன்னை விதித்தது கீழ்நின்ற நிலையைக் குலைத்து மேலே கொண்டு போகைக்காகவித்தனை யென்கிறார் (இத்தை) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாகப் பக்தி என்பதை சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டது ஏன் என்றால் அப்படிப்பட்ட நிலைகளைத் தள்ளி மேலே உயர்த்துவதற்காக என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சாஸ்த்ரமாகிறது "த்ரைகுண்ய விஷயா வேதா:" என்கிறபடியே பெற்ற தாய் அந்த பதிராதிகளான விகலகரணரோடு படுகரணரோடு வாசியற வத்ஸலையா யிருக்குமாப்போலே, மாதாபித்ரு ஸஹஸ்ரங்களிற் காட்டிலும் வத்ஸலதரமாகையாலே, தம:ப்ரசுரரோடு ரஜ:ப்ரசுரரோடு ஸத்வப்ரசுரரோடு வாசியற அவர்கள் அபதேப்ரவ்ருத்தராய் நசிக்கவிட க்ஷமமல்லாமையாலே, அவ்வோருடைய குணாநுகுணமாக புருஷார்த்தங்களையும் தத்ஸாதநங்களையு முபதேசித்து, கொள்கொம்பிலே யேற்றுகைக்குச் சுள்ளிக்கால் நாட்டுவாரோபாதி, இவ்வோமுகங்களால் தன்னுடைய தாத்பர்யாம்சத்திலே யாரோபிக்கைக்காக ப்ரவர்த்திப்பிக்கிறதாகையாலே, ச்யேநவிதி தொடங்கி ப்ரபத்தி பர்யந்தமாக வருமளவும், சேதநர் நின்றநின்றவளவுக் கீடாக உத்தரோத்தர புருஷார்த்த ஸாதநங்களை ப்ரவர்த்திப்பித்து பூர்வபூர்வங்களை நிவர்த்திப்பிக்கக் கடவதாயிருக்கும்; ஆகையாலே இவ்வுபாஸநத்தை ப்ரவர்த்திப்பித்தது பரஹிம்ஸையை நிவர்த்திப்பிக்கைகாக. (பரஹிம்ஸை) என்றது மேலான ஹிம்ஸையென்றபடி; பரதேவதை, பரகதி என்கிற விடங்களில் மேலான தேவதை, மேலான கதி என்றர்த்தமாகிறாப்போலே. அதாவது ச்யேந விதிக்கு மேலாக விதிக்கப்பட்ட பச்வாலம்பநாதிகளைச் சொன்னபடி. அத்தை ஹிம்ஸையென்னலாமோ வென்னில்; விஹித ஹிம்ஸையென்னக் கடவதிறே. "அக்நீ ஷோமீயம் பசுமாலபேத" என்கிறவிடத்தில், ஆலம்பசப்தம், "ஆலம்ப: ஸ்பர்ச ஹிம்ஸயோ:" என்கையாலே ஹிம்ஸா வாசியிறே. இத்தால், காம்யகர்மத்தைச் சொன்னபடி. (பூர்வ விஹித ஹிம்ஸை) என்று ச்யேந விதியைச் சொல்லுகையாலும், ததுபரி விஹிதமான காம்யமே இவ்விடத்தில் விவக்ஷிதம்.

**விளக்கம்** – "இத்தை ப்ரவர்த்திப்பித்தது" என்றால் என்ன? சாஸ்த்ரங்கள் என்பவை கீதை (2-45) – த்ரைகுண்ய விஷயா வேதா: - மூன்று குணங்களுடன் கூடிய ஆத்மாவை விஷயமாகக் கொண்ட வேதங்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ளவை வேதங்கள் ஆகும். பெற்ற தாய் ஒருவள் குருடு மற்றும் செவிடு போன்ற குறைகளுடன் பிறந்த தனது குழந்தைகள் மற்றும் அவ்விதம் எந்த விதமான குறைகளும் இன்றிப் பிறந்த தனது குழந்தைகள் ஆகிய இரண்டுவிதமான குழந்தைகளுடன் சரிசமமாகவே அன்புடன் இருப்பது போன்று, இத்தகைய வேதங்கள் ஆயிரம் தாய்தந்தைகளுக்கு மேலான அன்புடன் கூடியதாக நம்மிடம் உள்ளன (**குறிப்பு**: இத்தகைய வேதங்களே ஆயிரம் தாய்

தந்தைகளைக் காட்டிலும் நம்மிடம் அன்புடன் உள்ளபோது, அத்தகைய வேதங்களால் போற்றப்படும் ஸ்ரீரங்கநாதன் நம்மிடம் எத்தனை அன்புடன் இருப்பான் என்று சற்றே எண்ணிப்பாருங்கள்). அந்தத் தாய் போன்று வேதங்கள் தமோ மற்றும் ரஜோ குணம் மிக்கவர்கள் மற்றும் ஸத்வ குணம் மிக்கவர்கள் என்று எந்தவிதமான பாகுபாடும் பாராமல் அனைவரிடமும் ஒரே போன்று அன்புடன் உள்ளன. ஆகவே நாம் தகாத வழியில் சென்று அழியும்படிச் செல்ல அவை விடுவதில்லை. ஆகவே அவரவர்களின் தகுதிக்கு ஏற்றதான புருஷார்த்தங்களையும், அந்தப் பலன்களை அடைவதற்கான உபாயங்களையும் உபதேசிக்கின்றன. இப்படியாகப் பெரியபந்தலைக் கொடிகள் பற்றிக் கொள்ளச் சிறு குச்சிகளை நடுவது போன்று, தங்களது தாத்பர்யமான வழிகளில் ஈடுபடுத்தும் பொருட்டு பல வழிகளையும் அவை மேற்கொள்கின்றன. ஆகவே ச்யேந விதி தொடங்கி ப்ரபத்தி முடிய உள்ள பல விதிகளை, இந்த உலகில் உள்ள மக்கள் அவரவர்கள் எந்த நிலையில் உள்ளனரோ அதற்கு ஏற்றபடி உபதேசம் செய்து, அந்தந்த உபாயங்கள் மற்றும் அவற்றின் பலன் உரைத்து, அவர்களை மேன்மேலும் உயர்த்துகின்றன (அதாவது கீழே உள்ள நிலைகளைத் தள்ளித்தள்ளி அவர்கள் மேலே வருகின்றனர்). ஆகவே பக்தி விதி ஏன் கூறப்பட்டது என்றால் ஹிம்ஸை செய்வதை அங்கமாகக் கொண்ட காம்யகர்மங்களைத் தள்ளுவதற்காக ஆகும். "பரஹிம்ஸை" என்றால் மேலான ஹிம்ஸை என்று பொருள். பரதேவதை, பரகதி என்பவை உயர்ந்த தேவதை மற்றும் உயர்ந்த மார்க்கம் என்று குறிப்பது போன்று ஆகும். மிகவும் மேலான ஹிம்ஸை என்றால் ச்யேந விதிக்குக் கூறப்பட்ட பசுவைக் கொல்லுதல் போன்றவை ஆகும். ஆனால் சாஸ்த்ரத்தில் கூறப்பட்ட ஒரு விதியை ஹிம்ஸை என்று உரைக்கலாமா என்ற கேள்வி எழலாம். அதனால்தான் "விதிக்கப்பட்ட ஹிம்ஸை" என்கிறார். அக்நீஷோமீயம் பசுமாலபேத – என்ற வரியில் உள்ள "ஆலம்ப" என்ற பதம், அமரகோசத்தில் - ஆலம்ப: ஸ்பர்ச ஹிம்ஸயோ: – என்பதன் மூலம் "ஹிம்ஸை" என்ற பொருளை அளிக்கிறது. "பூர்வஹித ஹிம்ஸை" என்று ச்யேந விதியை உரைப்பதால், அதற்கு மேல் கூறப்பட்ட காம்யகர்மங்கள் அனைத்துமே "பரஹிம்ஸை" என்ற பதம் மூலம் கூறப்பட்டது என்றாகிறது.

**வ்யாக்யானம் -** அன்றிக்கே, விஹிதமேயாகிலும், பகவச்சேஷத்வ ஜ்ஞாநபூர்வகமாக அநந்யப்ரயோஜநனாய்க் கொண்டு அக்நீந்த்ராதி தேவதாந்தர்யாமி ஸமாராதநமாகவே பண்ணும் பச்வாலம்பநாதியுக்த யாகாதி கர்மத்தைப் பற்ற ஸ்வதந்த்ரனாய்க் கொண்டு ஸ்வர்காதி பலஸாதநமாக அக்நீந்த்ராதி தேவதாமாத்ரங்களை யுத்தேசித்துப் பண்ணும் பச்வாலம்பநாதி யுக்த காம்ய கர்மம் விசேஷஜ்ஞர்க்கு பரஹிம்ஸாப்ராயமென்னலாம்படி யத்யந்த நிக்ருஷ்டமாயிருக்கையாலே, இவ்வாகாரத்தை யிட்டு அது தன்னை பரஹிம்ஸை யென்றருளிச் செய்தாராகவுமாம். சாஸ்த்ரவிஹிதமுமாய் பகவதேக விஷயமுமா யிருக்கிற ப்ராபகாந்தரத்தை ஜ்ஞாநிகளுக்கபாய மென்றவோபாதி, இதுவு மதிகாரி

விசேஷத்தையிட்டுச் சொல்லலாமிறே. “அத பாதகபீதஸ் த்வம்” என்று - உபயாந்தரத்தை பாதகமாகச் சொல்லிற்றிறே தர்மதேவதையும். புபுக்ஷுவுக்குபாதேயமான புண்யந்தானே முமுக்ஷுவுக்கு பாபசப்த வாக்யமாகா நின்றதிறே. ஆக எல்லாவற்றாலும் - இவ்விடத்தில் காம்யகர்மத்தையே சொல்லுகிறது. இப்படி தான் யோஜிக்கிறது – உபாஸந விதிக்கு நிவர்த்யம் காம்ய கர்மமாக விவர்தாமே பரந்த (படி) ரஹஸ்யத்திலேயருளிச் செய்கையாலே.

**விளக்கம்** - இதற்கு வேறு விதமாகவும் பொருள் உரைக்கலாம். அதாவது பரஹிம்ஸை என்ற பதம் மூலம் காம்யகர்மம் கூறப்பட்டதற்கு வேறு காரணமும் உள்ளது என்று கூறுகிறார். ஒருவன் தான் ஸர்வேச்வரனுக்கே வசப்பட்டவன் என்ற ஞானம் கொண்டவனாக, பசுஹிம்சை போன்ற கர்மங்கள் அனைத்தும் அக்னி மற்றும் இந்த்ரன் ஆகியவர்களின் அந்தர்யாமியாக உள்ள ஸர்வேச்வரனுக்குச் செய்யும் ஆராதனமே என்ற எண்ணம் கொண்டவனாக அத்தகைய கர்மங்களைக் காணக்கூடும். ஒருவன் தான் சுதந்திரமானவன் என்றும், ஸ்வர்க்கம் போன்ற பலன்களுக்காகவே பசுவதை போன்றவற்றுடன் கூடிய காம்யகர்மங்கள் அந்தப் பலன்களை அளிக்கவல்ல அக்னி, இந்திரன் போன்றவர்களுக்காக இயற்றப்படுகின்றன என்றும் எண்ணக்கூடும். ஆகவே இவை சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டபோதும், உயர்ந்த ஞானம் கொண்டவர்களுக்கு மேலான ஹிம்ஸை என்று தோன்றும்படியாக உள்ள தாழ்ந்த நிலை காரணமாகவே காம்யகர்மங்களைப் பரஹிம்ஸை என்றார்.

அல்லது மூன்றாவதாக ஒரு காரணமும் கூறலாம். சாஸ்த்ரங்களால் கூறப்பட்டதும், எம்பெருமானை மட்டுமே விஷயமாகக் கொண்டுள்ளதும் ஆகிய பக்தியை ஞானிகளுக்கு அபாயம் என்று கூறியது காண்க. இது போன்றே காம்யகர்மங்களை “பரஹிம்ஸை” என்று அதிகாரிகளின் நிலையால் கூறுவது தவறில்லை. மஹாபாரதம் - அத பாதகபீதஸ் த்வம் - ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு விரோதமான செயல்கள் குறித்து உனக்குப் பயம் உள்ளது என்றால் - என்று மற்ற உபாயங்கள் அனைத்தையும் தவறு என்றே தர்மதேவதை கூறியது அல்லவோ? மேலும் இன்பங்களை அடைவதில் மிகவும் ஆசை கொண்டவர்களால் செய்யப்படும் புண்ணியச்செயல்கள் அனைத்துமே மோக்ஷத்தில் விருப்பம் கொண்டவர்களால் செய்யத்தகாத பாவங்கள் என்று கூறப்பட்டது. ஆக இங்கு பலவற்றாலும் காம்யகர்மமே ”பரஹிம்ஸை” என உரைக்கப்பட்டது. பரஹிம்சை என்ற பதம் மூலம் காம்யகர்மமே உரைக்கப்படுகிறது என்று பொருள் கொள்ளக் காரணம் இவரே (ஸ்வாமி பிள்ளைலோகாசார்யார்) அருளிச்செய்த பரந்தபடியில் உள்ளதால் ஆகும்.

130. இதுதான் பூர்வவிஹிதஹிம்ஸைபோலே; விதி நிஷேதங்களிரண்டுக்கும் குறையில்லை.

**அவதாரிகை** - ஆனால் இப்படி விதித்தத்தைப்பின்னை நிஷேதிக்கிற தென்னென்ன வருளிச் செய்கிறார் (இதுதான்) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஆயினும் இவ்விதம் விதிக்கப்பட்டவற்றை (பத்தியை) விலக்குவது ஏன் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – (இதுதான்) என்கிறது - கீழ்ச்சொன்ன உபாஸநத்தை. (பூர்வ விஹித ஹிம்ஸையாவது) "ச்யேநேநாபிசரந் யஜேத" என்று ப்ரதமத்திலே விதிக்கப்பட்ட அபிசார கர்மம்; அது, தம:ப்ரசுரராய் நாஸ்திகராயிருப்பாரைப் பற்ற விதிக்கப்பட்டு ஆஸ்திகராய் காரீர்யாதி காம்ய கர்மங்களிலேயிழிகைக்கு யோக்யரான ரஜ:ப்ரசுரரைப்பற்ற நிஷேதிக்கப்படுகிறாப்போலே, உபாஸநமும் ஸ்வாதந்த்ர்யாந்யசேஷத்வ நிவ்ருத்தி பூர்வகமாக பகவச்சேஷத்வத்திலே யூன்றுவிக்கைக்கு யோக்யரான ஸத்த்வ ப்ரசுரரைப் பற்ற விதிக்கப்பட்டு, பாரதந்த்ர்யஜ்ஞாநம் பிறந்து பகவதேகோபாயத்வத்திலே யூன்றுகைக்கு யோக்யரான பரமஸ்த்வ நிஷ்ட்டரைப்பற்ற நிஷேதிக்கப்படவும் குறையில்லை.

**விளக்கம்** – "இதுதான்" என்பதன் மூலம் மேலே கூறப்பட்ட உபாஸநம் அல்லது பக்தி கூறப்பட்டது. "பூர்வ விஹித ஹிம்ஸை" என்பது என்ன? ச்யேநேநாபிசரந் யஜேத - விரோதியை அழிக்க எண்ணுபவன் ச்யேநயாகம் செய்யக்கடவன் - என்பது முதலில் விதிக்கப்பட்ட அபிசாரகர்மம் ஆகும் (அபிசாரம் என்பது கொலை; அபிசாரகர்மம் என்றால் அந்தக் கொலை என்பதைப் பலனாகக் கொண்ட கர்மம் ஆகும்). இது போன்ற கர்மங்கள் தமோ குணம் மிக்கவராகவும், நாஸ்திகராகவும் இருப்பவர்களை சாஸ்த்ரத்தின் பக்கம் ஈர்க்கும் விதமாக முதலில் விதிக்கப்படுகிறது (அதாவது இதன் மூலம் அவன் சாஸ்த்ரங்களைப் பற்றிக் கொள்ள வாய்ப்புள்ளது); ஆனால் இதே கர்மங்கள் ஆஸ்திகர்களாக காரீரி என்று கூறப்படும் மழையைக் குறித்த கர்மம் போன்ற காம்ய கர்மங்களை இயற்றத் தகுதி கொண்ட ரஜோகுணம் மிக்கவர்களுக்கு விலக்கப்படுகிறது; அதாவது அவர்களை ஈர்க்கும் பொருட்டு விலக்கப்படுகிறது (இவர்கள் கொலை செய்தல் போன்றவற்றை விரும்பமாட்டனர் என்பதால் விலக்கப்படுகிறது). இதே போன்று பக்தி என்பதும் – "நான் சுதந்திரமானவன்" மற்றும் "நான் மற்றவர்க்கு அடிமை" என்னும்

எண்ணங்களை நீக்கிய பின்னர், ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ள நிலைக்குத் தகுதி பெற்ற ஸத்வகுணம் மிக்கவர்களை ஈர்க்கும் விதமாக விதிக்கப்பட்டது; ஆனால் அதே பக்தி என்பது - தான் எம்பெருமானுக்கே வசப்பட்டவன் என்ற ஞானம் தலை தூக்கி, ஸர்வேச்வரன் என்ற உபாயத்தில் நிலைநிற்பதற்குத் தகுதி பெற்ற பரமஸத்வநிஷ்டர்களை ஈர்க்கும் விதமாக விலக்கப்பட்டது.

131. அத்தை சாஸ்த்ரவிச்வாஸத்துக்காக விதித்தது. இத்தை ஸ்வரூபவிச்வாஸத்துக்காக விதித்தது.

**அவதாரிகை** - இப்படி நிஷேதிக்கப்படுமவையானவிவைதன்னை அடியிலே யெதுக்காக விதித்ததென்ன வருளிச்செய்கிறார் (அத்தை) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் பின்னர் விலக்கிவைக்கப்படும் இவற்றை முதலில் ஏன் விதிக்கவேண்டும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "சடசித்த சாஸ்த்ர வசதோபாயோபிசார ச்ருதி:" என்கிறபடியே அபிசாரகர்மத்தை விதித்தது, சாஸ்த்ரத்தை யில்லையென்றிருக்கும் நாஸ்திகனுக்கு சாஸ்த்ர விச்வாஸம் பிறக்கைக்காக; உபாஸநத்தை விதித்தது, தன்னை ஸ்வதந்த்ரனென்றும் அந்யசேஷபூதனென்றும் ப்ரமித்துப் போந்த சேதநனுக்கு, அவை யிரண்டு வந்தேறி, பகவச்சேஷத்வமே நிலைநின்ற வேஷமென்று தன் ஸ்வரூபத்தில் விச்வாஸம் பிறக்கைக்காக வென்கை.

**விளக்கம்** - ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் – சடசித்த சாஸ்த்ர வசதோபாயோபிசார ச்ருதி: – அபிசார யாகத்தை ச்ருதியானது ஏன் விதித்தது என்றால் சாஸ்த்ரங்களில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தி ஈர்க்கும் வழி அதுவே என்பதால் – என்று கூறுவதற்கு ஏற்ப, அபிசாரகர்மம் ஏன் விதிக்கப்பட்டது என்றால், சாஸ்த்ரங்களே இல்லை என்று கூறும் நாஸ்திகனுக்கு சாஸ்த்ரங்கள் மீது விச்வாசம் உண்டாவதற்கே ஆகும். சரி, ஏன் பக்தியை விதிக்கவேண்டும்? விடை அளிக்கிறார். தன்னைச் சுதந்திரமானவன் என்றும், மற்றவர்களுக்கு அடிமைப்பட்டவன் என்றும் எண்ணம் கொண்ட ஒருவனுக்கு அந்த இரண்டு சிந்தனைகளும் மாறி, ஸர்வேச்வரனுக்குக் கைங்கர்யம் செய்து நிற்பதே

தனது ஸ்வரூபத்திற்கு நிலையான தன்மை என்று, தனது ஸ்வரூபத்தின் மீது விச்வாஸம் ஏற்படுத்துவதற்காக விதிக்கப்பட்டது.

132. அது தோல்புரையே போம்; இது மர்மஸ்பர்சி.

**அவதாரிகை** - இப்படியோரோ விச்வாஸத்துக்காக விதித்து நிஷேதித்தமை யொத்திருந்ததாகிலும், இவ்வுபாஸநத்தை விடாமல் பற்றி நின்றால் அபிசார கர்மம் போலே க்ரூரமன்றே யிதுவென்ன; அதிலுங்காட்டில் க்ரூரமென்கிறார் (அது) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதம் சாஸ்த்ரங்களில் விதிக்கப்படுவதும், அவற்றை விலக்குதல் என்பதும் அந்தந்த நம்பிக்கையை ஏற்படுத்தவே என்று கொண்டாலும், பக்தி என்பது அபிசாரகர்மம் போன்று அவ்வளவு கொடியது அல்ல அல்லவோ? இந்தக் கேள்விக்கு விடை அளிக்கிறார் – அதனைக் காட்டிலும் கொடியது என்கிறார்.

வ்யாக்யானம் - பரஹிம்ஸா ரூபமான அந்த அபிசார கர்மம், தேஹாத்மாபிமாநி செயலாய் விசிஷ்ட வேஷ விரோதியாய் அத்தால் வரும் பலமும் சில துக்காநுபவ மாத்ரமாய்க் கொண்டு மேலெழப் போகையாலே, (தோல்புரையே போம்) என்கிறது; அஹங்கார கர்ப்பமானவிந்தவுபாஸநம், ஆத்ம ஜ்ஞாநம் பிறந்தவன் செயலாய் நிஷ்க்ருஷ்டவேஷ விரோதியாய் பகவதேக பாரதந்த்ர்யரூப ஸ்வரூப நாசகமாகையாலே (மர்ம ஸ்பர்சி) என்கிறது.

**விளக்கம்** – பரஹிம்சை என்பதை ஒத்ததான அபிசாரகர்மம் என்பது இந்த உடலையே ஆத்மா என்று எண்ணியிருப்பவன் செய்யக்கூடிய செயலாகவும், சரீரத்துடன் தொடர்புள்ள ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு விரோதமான செயலாகவும், இதனால் உண்டாக்கக்கூடிய பலன் என்பது துக்கத்தைச் சற்றே அனுபவிக்கும்படியாகவும், அதன் பின்னர் கழிவதாகவும் உள்ளது. ஆனால் பக்தியைத் தொடர்ந்து பற்றியபடி இருத்தல் என்பது, ஆத்மாவின் விரோதியாகவும், ஸர்வேச்வரனுக்கு மட்டுமே வசப்பட்டுள்ள ஆத்மாவின் தன்மையை அழிக்கவல்லதாகவும் உள்ளதால், பக்தி என்பது அபிசார கர்மத்தைக் காட்டிலும் கொடியது ஆகும்.

133. இதுதான் கர்மஸாத்யமாகையாலே துஷ்கரமுமாயிருக்கும்.

**அவதாரிகை** - இவ்வளவேயன்று, இது துஷ்கரமுமென்கிறார் (இதுதான்) இத்யாதியாலே.

**விளக்கம்** - அது மட்டும் அல்ல, இந்தப் பக்தி என்பது இயற்றுவதற்கு மிகவும் கடினமானதும் ஆகும் என்கிறார் (துஷ்கரம் என்றால் ஸ்வரூப விரோதி, அபாயமாக இருத்தல், அச்சம் ஏற்படக் காரணமாக இருத்தல், சோகம் உண்டாகக் காரணம், அஹங்காரம் உண்டாகக் காரணம் போன்ற பல தோஷங்களுடன் கூடியுள்ளதால் கடினமானது என்றார்).

**வ்யாக்யானம்** - இப்படி ஸ்வரூபவிரோதியாயிருக்கிற விவ்வுபாஸநந்தான், "யஜ்ஞேந தாநேந தபஸா அநாசகேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி", "அவித்யயா ம்ருத்யும் தீர்த்வா வித்யயாம்ருத மச்நுதே", "ஸர்வாபேக்ஷாச யஜ்ஞாதி ச்ருதே ரச்வவத்", "கஷாய பங்க்யதே கர்மாணீ ஜ்ஞாநந்து பரமா கதி:", "கஷாயே கர்மபி: பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே", "ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ ஜ்ஞாந ஸமாதிபி: நராணாம் க்ஷீண பாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே காய க்லேசகரமான கர்மாநுஷ்ட்டாநத்தாலே ஸாதிக்கப்படுமதாகையாலே, அசக்தனானவிவனால் செய்து தலைக்கட்ட அரிதாயிருக்குமென்கை. ஆக (ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கும்) என்று தொடங்கி இவ்வளவாக உபாயாந்தர தோஷம் விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது.

**விளக்கம்** - இப்படியாக இந்தப் பக்தி என்பது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு விரோதியாக உள்ளது. கீழே உள்ள பல வரிகளிலும் கூறப்பட்டதற்கு ஏற்ப பக்தி என்பது சரீரத்தை வருத்தி இயற்றப்படவேண்டிய கர்மங்கள் மூலம் கிட்டக்கூடியது என்பதால், சக்தியற்ற சேதனன் செய்து முடிக்கக் கடினமானது ஆகும் என்று கொள்க:

- ப்ருஹத் உபநிஷத் – யஜ்ஞேந தாநேந தபஸா அநாசகேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி - வேள்விகள், தானம், தவம், விரதங்கள் போன்ற பலவற்றாலும் பரம்பொருளைப் பற்றிய ஞானம் உள்ளவர்கள் உபாஸனை செய்கின்றனர்.
- அவித்யயா ம்ருத்யும் தீர்த்வா வித்யயாம்ருத மச்நுதே – கர்மங்கள் மூலமாக, உபாஸனை கைகூடுவதற்கு விரோதியாக உள்ள பாவங்கள் நீங்கி, அந்த உபாஸனை மூலம் மோக்ஷம் அடைகிறான்.

- ப்ரஹ்மஸூத்ரம் (3-4-26) - ஸர்வாபேக்ஷாச யஜ்ஞாதி ச்ருதே ரச்வவத் – யாகம் போன்ற கர்மங்களை அவற்றின் அங்கங்களுடன் இயற்றவேண்டும், குதிரையைப் போன்று.
- கஷாய பங்க்யதே கர்மாணீ ஜ்ஞாநந்து பரமா கதி: - இயற்றப்படும் கர்மங்கள் அனைத்தும் ரஜோ மற்றும் தாமஸ குணங்களை நீக்கக்கூடியவையாகும்.
- கஷாயே கர்மபி: பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே – கர்மங்களை இயற்றுவதன் மூலம் பாவங்கள் நீங்குகின்றன. ஆகவே இயற்றுவதற்கு அவை கடினமானது ஆகும்.
- ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ ஜ்ஞாந ஸமாதிபி: நராணாம் க்ஷீண பாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே - ஆயிரம் பிறவிகளில் இயற்றப்படும் தவம் மூலமும், ஞானம் மூலமும், த்யானம் மூலமும் பாவங்கள் அழியப்பெற்றவனுக்கு மட்டுமே க்ருஷ்ணனிடம் பக்தி ஏற்படுகிறது.

ஆக, “ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கும்” என்று தொடங்கிய சூர்ணை-115 முதல் இந்தச் சூர்ணை முடிய பக்தி என்பதை உபாயமாகக் கொள்ளும் நிலைக்கு உள்ள தோஷங்களை மிகவும் விரிவாக அருளிச்செய்தார்.

134. ப்ரபத்த்யுபாயத்துக்கு இக்குற்றங்களொன்றுமில்லை.

**அவதாரிகை** - இப்படி ப்ராபகாந்தரத்துக்கு அநேகம் குற்றங்களை ப்ரதிபாதித்தீர், ப்ரபத்த்யுபாயத்துக்கு ஒரு குற்றமுந்தானில்லையோவென்ன வருளிச்செய்கிறார் (ப்ரபத்த்யுபாயத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாகப் பக்திக்கு உள்ள பலவிதமான தோஷங்களை உரைத்தீர்கள்; ப்ரபத்தி என்ற உபாயத்திற்கு எந்தவிதமான தோஷமும் இல்லையோ என்ற கேள்வி எழலாம். இதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இக்குற்றங்கள்) என்று ஸ்வரூப விரோதம் முதலாக துஷ்கரத்வ பர்யந்தமாகச் சொன்னவை யெல்லாவற்றையும் பராமர்சிக்கிறது. (ஒன்றுமில்லை) என்றது, ஒரு தோஷமும் இதன் பக்கலில்லை என்றபடி. (இக்குற்றங்களொன்றுமில்லை) என்கையாலே மற்றொரு குற்றமுண்டென்னுமிடம் தோற்றுகிறது அதாவது, வஸ்துத:

உபாயத்வம் தனக்கின்றிக்கேயிருக்கச்செய்தே ஆபாதப்ரதீதியிலே உபாய ப்ரதிபத்த் யர்ஹமாம்படியிருக்கை.

**விளக்கம்** - "இக்குற்றங்கள்" என்பது பக்தியானது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு விரோதமானது என்பது தொடக்கமாக, துஷ்கரத்வம் என்று கடந்த சூர்ணையில் உரைக்கப்பட்டது முடிய உள்ள அனைத்து தோஷங்களையும் காண்பிக்கிறது. "ஒன்றும் இல்லை" என்றால், ப்ரபத்தி உபாயத்தில் இது போன்று எந்தவிதமான தோஷங்களும் இல்லை என்று கருத்து. "இக்குற்றங்களொன்றுமில்லை" என்பதன் மூலம் இவை நீங்கலாக வேறு ஏதேனும் தோஷம் ஒன்று உள்ளது என்றாகிறது. அது என்ன தோஷம்? உண்மையாக ஆராயும்போது ஸர்வேச்வரன் மட்டுமே மோக்ஷ உபாயம் அன்றி, ப்ரபத்தி உபாயம் அல்ல என்பது தெளிவு. ஆனால் மேலோட்டமாகப் பார்க்கும்போது தன்னை மோக்ஷ உபாயம் என்று எண்ணுவதற்குக் காரணமாக ப்ரபத்தி இருக்கிறது என்ற தோஷம் ப்ரபத்திக்கு உள்ளது.

135. ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞாநகார்யமாகையாலே ஸ்வரூபத்துக்கு உசிதமுமாய், "சிற்றவேண்டா" என்கிறபடியே நிவ்ருத்தி ஸாத்யமாகையாலே ஸுகரமுமாயிருக்கும்.

**அவதாரிகை** - இக்குற்றங்களிதுக்கில்லையென்னுமத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக இதினுடைய ஸ்வரூபோசிதத்வ ஸுகரத்வங்களையருளிச் செய்கிறார் (ஆத்ம யாதாத்ம்ய) இத்யாதியாலே.

**விளக்கம்** – மேலே கூறப்பட்ட பக்திக்குரிய பலவிதமான தோஷங்கள் ப்ரபத்திக்கு இல்லை என்பதை உணர்த்தும்விதமாக ப்ரபத்தியானது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றது, எளிதாக இயற்றக்கூடியது போன்ற தன்மைகளை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - இப்ப்ரபத்தி (ஆத்ம யாதாத்ம்யஞாந கார்யமாகையாவது) திருமந்த்ரத்தில் மத்யம பதத்தில் சொல்லுகிறபடியே ஆத்மாவினுடைய யதாவஸ்தித வேஷமான பகவதத்யந்த பாரதந்த்ர்யத்தை யுணருகையாலே வந்ததாயிருக்கை. (ஸ்வரூபத்துக்கு சிதமாகையாவது) - அந்த பாரதந்த்ர்யமாகிறது ஸ்வரூபத்துக் கநுரூபமாயிருக்கை. (சிற்றவேண்டா) என்கிறது, சிற்றுதல் – சிதறுதலாய், பரக்கவேண்டாவென்கை. அதாவது ஒரு வ்யாபாரமும் பண்ணவேண்டா வென்றபடி. (நிவ்ருத்தி ஸாத்யமாகையாலே ஸுகரமுமாயிருக்கும்) என்றது – "பகவத் ப்ரவ்ருத்திவிரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி:

ப்ரபத்தி" என்கிறபடியே – ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியாலே ஸாதிக்கப்படுமதாகையாலே எளிதாகச் செய்யலுமாயிருக்குமென்கை.

**விளக்கம்** - இந்த ப்ரபத்தி என்பது " ஆத்ம யாதாத்ம்யஞாந கார்யமாகையாவது" எனப்படுதல் எப்படி? திருமந்த்ரத்தின் நடுப்பதமான "நம:" என்பதில் உரைப்பதற்கு ஏற்ப, ப்ரபத்தி என்பது ஆத்மாவின் ஸ்வரூபமான ஸர்வேச்வரனுக்கு மட்டுமே வசப்பட்டிருத்தல் என்பதை உணர்ந்ததன் காரணமாகவே ஏற்படுவது என்பதால் ஆகும். "ஸ்வரூபத்துக்கு சிதமாகையாவது" என்பது என்ன? இப்படியாக ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமைப்பட்டிருத்தல் என்பதான பாரதந்த்ர்ய தன்மைக்கு ஏற்றபடி இருத்தல் ஆகும். "சிற்றவேண்டா" என்றால் பரக்க வேண்டாதபடி இருப்பதாகும். அதாவது நாமாக முனைந்து எந்தச் செயலும் செய்யவேண்டாம் என்னும்படி உள்ளதாகும். "நிவ்ருத்தி ஸாத்யமாகையாலே ஸுகரமுமாயிருக்கும்" என்பது என்ன? பகவத் ப்ரவ்ருத்திவிரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி: ப்ரபத்தி – என்பதற்கு ஏற்ப நம்மை நாமே காப்பாற்றிக்கொள்ள முயலும் செயல்களில் இருந்து விலகி இருப்பதன் மூலம் உணர்த்தப்படுவதால் ப்ரபத்தி என்பது எளிதாகச் செய்யலாம்படி உள்ளது.

**வ்யாக்யானம்** - இவையிரண்டையும் சொல்லவே, கீழ்ச்சொன்ன தோஷங்களொன்று மிதுக்கில்லை யென்னுமிடம் ஸித்தித்தபடி யென்னென்னில்; அபாயத்வ பயஜநகத்வ சோக ஜநகத்வ அஹங்கார மிச்ரதயா நிஷித்தத்வ அவத்யகரத்வங்கள் ஸ்வரூப விரோதித் வத்தைப் பற்றி வருகிறவையாகையாலும் பலவிஸத்ருசத்வம். இது பலஸாந்தநமன்றிக்கே ஸித்தோபாயமே பல ஸாதநமாய் இது தத்வரணமாத்ரமாய் அதிகாரி விசேஷணமாயிருப்ப தொன்றாகையாலே இதின் பக்கல் வருகைக்கவகாசமில்லாமையாலும், இவ்வாறு தோஷமுமிதுக்கில்லாமை (ஸ்வரூபத்துக் குசிதம்) என்றதிலே ஸித்தமாமிறே. கர்மஸாத்யதயா வரும் துஷ்கரத்வமில்லை யென்னுமிடம் (நிவ்ருத்தி ஸாத்யமாகையாலே ஸுகரம்) என்றதிலே ஸுஸ்பஷ்டமிறே. ஆகையால், ஸ்வரூபௌசித்ய ஸுகரத்வங்களாகிற விவையிரண்டு மிதுக்குண்டென்னவே, கீழ்ச்சொன்ன தோஷங்களொன்று மிதுக்கில்லை யென்னுமிடம் ப்ரகாசிதமாய்த்து.

**விளக்கம்** – இந்த இரண்டு கருத்துக்களின் மூலம் ப்ரபத்திக்கு மேலே கூறப்பட்ட தோஷங்கள் இல்லை என்பது எவ்விதம் உணர்த்தப்பட்டது என்ற கேள்வி எழலாம். அபாயமாக உள்ள தன்மை, அச்சம் ஏற்படக் காரணமாக இருத்தல், சோகம் உண்டாகக்

காரணமாக இருத்தல், அஹங்காரத்துடன் கூடியதால் விலக்கப்பட ஏற்றதாக உள்ள தன்மை, தாழ்வினை ஏற்படுத்திவிடல் போன்ற ஆத்ம ஸ்வரூபத்திற்கு விரோதமான தன்மைகளுடன் கூடியுள்ளதால் பக்தி என்பது மோக்ஷமாகிய பலன் என்பதற்கு ஒத்ததாக உள்ளது அல்ல. ஆனால் ப்ரபத்தி என்பது மோக்ஷத்திற்கு சாதனமாக அல்லாமல், ஸித்தோபாயமான ஸர்வேச்வரனே அதற்குச் சாதனமாக உள்ளான்; ப்ரபத்தி என்பது அவனைப் பற்றும் உபாயமாக மட்டுமே உள்ளது; ஆகவே மேலே உள்ள தோஷங்கள் ப்ரபத்திக்கு இல்லை. ஆக மேலே உள்ள தோஷங்கள் எதுவும் இந்த ப்ரபத்திக்கு இல்லை என்பது "ஸ்வரூபத்துக்கு உசிதமாய்" என்பதால் தெளிவு. "நிவ்ருத்தி ஸாத்யமாகையாலே ஸுகரம்" என்பதன் மூலம் கர்மத்தால் இயற்றப்படும்போது செய்து முடிக்கக் கடினமானது என்ற தோஷம் இல்லை என்பது தெளிவாகிறது. ஆக ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றதாக இருத்தல், இயற்றுவதற்கு எளிமையாக இருத்தல் என்ற இரண்டும் ப்ரபத்திக்கு உள்ளதால், மேலே கூறப்பட்ட தோஷங்கள் ஏதும் ப்ரபத்திக்கு இல்லை என்பது மிகவும் தெளிவாகிறது.

136. பூர்ணவிஷயமாகையாலே பெருமைக்கீடாகப் பச்சையிடவொண்ணாது.

**அவதாரிகை** - இப்படி உபாயமவனென்றத்யவஸித்து ஸ்வப்ரவ்ருத்தியில் நிவ்ருத்தனாயிருந்துவிட வமையுமோ, தத்ஸந்தோஷார்த்தமாக விவன் சில பச்சையிட வேண்டாவோவென்ன வருளிச்செய்கிறார் (பூர்ணவிஷயம்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாக அவனே உபாயம் என்று உறுதியாக எண்ணியபடி, நாம் செய்யவேண்டிய செயல்களைச் செய்யாமல் இருப்பது சரியா? நமக்கு மோக்ஷம் அளிப்பதன் காரணமாக அவன் மகிழ்வு கொள்வதற்காகவாவது ஒரு சில உபகாரங்களைக் கைக்கொள்ளவேண்டாமோ? இவற்றுக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, லோகத்தில் பச்சையிடுவார் அவ்வோவிஷயங்களின் தரத்துக் கீடாகவிறேயிடுவது, இங்கும் பச்சையிடப் பார்க்கிலப்படியிடவேணுமிறே; அவன் அவாப்தஸமஸ்தகாமதயா பரிபூர்ணனாயிருக்குமவனாகையாலே, அவனுடைய வைபவத்துக் கநுகுணமாக விவனாலொரு பச்சையிடப்போகா தென்கை.

**விளக்கம்** - இந்த உலகில் உபகாரம் செய்பவர்கள், தாங்கள் பெற்ற உபகாரத்தின் அளவிற்கு ஈடாக மட்டுமே ப்ரதிஉபகாரம் செய்வார்கள். இங்கு மோக்ஷம் அளிப்பதற்காக ப்ரதிஉபகாரம் செய்யவேண்டும் என்றால் ஸர்வேச்வரனின் தகுதிக்கு ஏற்பவும், அவன் செய்யும் உபகாரத்திற்கு ஏற்பவும் செய்யவேண்டும். ஆனால் அவனோ அனைத்தும் பூர்ணமாக நிரம்பி உள்ளவன் ஆவான். எனவே அவனது மேன்மைக்கு ஏற்றபடி நம்மால் ஒரு பொருளையும் அவனுக்கு அளிக்கஇயலாது என்று அறியவேண்டும்.

137. ஆபிமுக்ய்யஸூசக மாத்ரத்திலே ஸந்தோஷம் விளையும்.

**அவதாரிகை** - ஆனால் அவனுக்கிவனளவில் ஸந்தோஷம் விளையும்படியென்ன வருளிச் செய்கிறார் (ஆபிமுக்ய்ய) இத்யாதியாலே.

**விளக்கம்** – ஆனால் (நாம் ஏதும் செய்யாதபோதிலும்) ஒரு சேதநனிடம் ஸர்வேச்வரனுக்கு மகிழ்வு எவ்விதம் ஏற்படும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அநாதிகாலம் யாதானும் பற்றி நீங்கும் விரதத்தையேறிட்டுக் கொண்டு தன்பக்கல் விமுகனாய்ப் போந்தவிவன், அந்நினைவு குலைந்து தன் பக்கலபிமுகனானமைக்கு ஸூசகமானதொரு வ்யாபாரம் பெற்றவளவிலே, “இத்தனை காலம் விமுகனாய்ப் போந்தவன் இன்றபிமுகனாகப் பெறுவதே” என்று அவன் திருவுள்ளம் மிகவுமுகக்குமென்றபடி.

**விளக்கம்** – எல்லையற்ற காலமாக, திருவிருத்தம் (96) - யாதானும் – என்பதற்கு ஏற்ப ஏதேனும் காரணத்தைக் கற்பித்துக்கொண்டு அவனை விட்டு நீங்கியபடி உள்ளோம். இப்படியாக அவனைவிட்டு அகன்றபடி உள்ள நாம், அவனை வந்து அடையும்படி, அவனிடம் மாறாத அன்பு கொள்ளும்படி ஏதேனும் ஒரு செயலைச் ஸர்வேச்வரன் செய்கிறான். அதனைப் பிடித்துக்கொண்டு அந்தச் சேதனன் அவனிடம் திரும்பும்போது, “இத்தனை காலம் நம்மிடம் அன்பு இல்லாமல் திரிந்தவன், இன்று நம்மிடம் மீண்டும் அன்பு கொண்டவனாக வந்து நின்றான்”, என்று மகிழ்ந்து கொண்டாடுகிறான்.

138. பூர்த்தி கைவாங்காதே மேல்விழுகைக்கு ஹேது வித்தனை.

**அவதாரிகை** - அவனப்படியிருந்தாலும்; அவன் பூர்த்தியானது, அகிஞ்சநரான நம்மாலவனை யுகப்பித் தணுகப்போகாது என்று இவன் கைவாங்கும்படி பண்ணாதோவென்ன வருளிச்செய்கிறார் (பூர்த்தி) என்று தொடங்கி.

**விளக்கம்** – அவன் பரிபூர்ணனாக உள்ளபோதிலும், அவனிடம் உள்ள நிறைவான தன்மை என்பது, எந்தவிதமான கைம்மாறும் நம்மிடம் இல்லை என்ற தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு, "நம்மால் அவனை மகிழச் செய்ய இயலாது, ஆகவே அவனிடம் செல்வது சரியல்ல", என்று சேதநனைத் தடுத்துவிட வாய்ப்பு உள்ளதே என்ற சந்தேகத்திற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அவனுடைய அவாப்தஸமஸ்தகாமத்வம், ஆச்ரயணோந்முகனான விவன் "நம்மாலவனை யொருபடியாலும் ஸந்தோஷிப்பிக்கப் போகாது" என்று ததாச்ரயணத்தினின்றும் மீளுகையன்றிகே, நாமிட்டது கொண்டு த்ருப்தனாக வேண்டாத பரிபூர்ணனாகையாலே, நம்பக்கல் பெற்றது கொண்டு ஸந்தோஷிக்குமென்று அபிநிவேசித்தப் பற்றுகைக்குடலாமித்தனை யென்கை.

**விளக்கம்** - "தான் விரும்பியவை அனைத்தும் அடையப்பெற்றவன்" என்ற அவனது தன்மை எத்தன்மையது என்றால் – "நம்மால் அவனை எந்தவிதத்திலும் மகிழ்வடையச் செய்யஇயலாது" என்று அவனைப் பற்றுதல் செய்யாமல் அகல்கின்ற நம்மைத் தடுத்து; நாம் எத்தனை சிறிய அளவில் அளித்தாலும் அதனைக் கொண்டு மனநிறைவு கொள்வதற்கு அவசியம் இல்லாமல் அனைத்தையும் உள்ளவன் ஆகையால், நம்மிடமிருந்து பெறப்பட்டதை வைத்து அவன் மகிழ்வான் என்ற எண்ணம் நமக்குத் தோன்றக் காரணமாக உள்ளது.

**வ்யாக்யானம்** – அன்றிக்கே, அவன் பூர்த்தி அவனையிப்படி ஸந்தோஷிக்க வொட்டுமோ, உபேக்ஷித்துக் கைவாங்கப்பண்ணாதோவென்ன; (பூர்த்தி) இத்யாதியாலே யருளிச் செய்கிறாராகவுமாம். அதாவது - அவனுடைய பூர்த்தியானது, "இவன் பச்சையிட்டிலன்" என்று அநாதிரித்து அங்கீகாரத்தினின்றும் கைவாஙாதே, "ஆபிமுக்ய ஸூசகமாத்ரத்துக்கு மேற்பட நமக்கிவன் சில செய்ய வேண்டுவதுண்டோ" என்று விரும்பிக் கைக்கொள்ளுகைக்குடலாமித்தனையென்கை.

**விளக்கம்** – அல்லது, அவனுடைய நிறைவான தன்மை என்பது மகிழும்படிச்செய்யுமோ, நாம் ஏதும் அளிக்கவில்லை என்று அவனைப் பின்வாங்க வைத்துவிடுமோ – என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். அவனது பூர்த்தியான தன்மை, "இவன் (சேதனன்) தனக்கு ஏதும் செய்யவில்லை" என்று வெறுப்பு ஏற்படுத்தி நம்மை ஆதரிக்காமல் தள்ளும்படிச் செய்வதில்லை; மாறாக, "நம்மீது அன்புடன் உள்ளவன் என்ற நிலையை இவன் கொண்டுள்ளான். இதற்கும் மேலே இவன் செய்யவேண்டுவது உண்டோ?", என்று நம்மை விரும்பி ஏற்கும்படிச் செய்துவிடும்.

139. "பத்ரம் புஷ்பம்", "அந்யத் பூர்ணாத்", "புரிவதுவும் புகை பூவே".

**அவதாரிகை** - இப்படியவன் அல்பஸந்துஷ்டனென்னுமதுக்கு ப்ரமாணமுண்டோ வென்ன வருளிச் செய்கிறார் மேல் (பத்ரம் புஷ்பம்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதம் நாம் செய்யும் மிகவும் சிறிய செயல்களைக் கண்டும் அவன் மனமகிழ்வு கொள்பவன் என்பதற்கு ஏதேனும் ப்ரமாணம் உள்ளதா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, ததஹம் பக்த்யுப ஹ்ருத் மச்நாமி ப்ரயதாத்மந:" என்று பத்ரத்தையாகவுமாம், பலத்தையாகவுமாம், ஜலத்தையாகவுமாம், யாவனொருவனெனக்கு பக்தியாலே தருகிறான், அநந்ய ப்ரயோஜநதையாகிற சுத்தியோடே கூடின மநஸ்ஸையுடையனான வப்படிப்பட்ட பக்தியோடே தரப்பட்டவத்தை, அவாப்தஸமஸ்தகாமனாயிருக்கிற நான், அவன் ப்ரேமத்தாலே கலங்கித் தருமாப்போலே வ்யாமோஹத்தாலே கலங்கி அடைவுகெட விநியோகங் கொள்ளுவன் என்று தானேயருளிச்செய்தானிறே.

**விளக்கம்** - கீதை (9-26) - பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, ததஹம் பக்த்யுப ஹ்ருத் மச்நாமி ப்ரயதாத்மந: – இலை, மலர், கனி, நீர் என்று எதனை அன்புடன் அளித்தாலும் நான் ஏற்பேன் - என்று கூறுவதற்கு ஏற்ப இலை, மலர்கள், பழங்கள், தண்ணீர் என்று ஒருவன் எனக்கு எதையாவது அளிக்கக்கூடும்; மற்ற எந்தப் பயனையும் எதிர்பாராமல் தூய்மையுடன் கூடியதான பக்தி கொண்டு அவ்விதம் அளிக்கும்

அவற்றை நான் ஏற்கிறேன்; அனைத்தையும் எல்லையில்லாமல் கொண்டுள்ள நான் செய்வது என்னவென்றால், அவன் என் மீது கொண்ட ப்ரேமையால் தடுமாற்றம் அடைந்து எனக்கு எதனை அளிப்பது என்று எவ்விதம் கலங்கித் தவித்து, எதனையாவது அளிக்கிறானோ, அதே போன்று நானும் அதே ப்ரேமையுடன் கலங்கி நின்று அவன் எதனை அளித்தான் என்று ஆராயாமல் ஏற்றுக்கொள்கிறேன் - என்று ஸர்வேச்வரன் உரைத்ததே ப்ரமாணம் ஆகிறது.

**வ்யாக்யானம்** – "அத்யத் பூர்ணாதபாம் கும்பா தந்யத் பாதாவநேஜநாத், அந்யத் குசல ஸம்ப்ரச்நாந், நசேச்சதி ஜநார்தந". அதாவது – ஸ்ரீதூதெழுந்தருளுகிறபோது, த்ருதராஷ்ட்ரன், "பாண்டவ பக்ஷபாதியாயிருக்கிற க்ருஷ்ணன் வாராநின்றான். அவனுக்குச் சில நாட்டையுங் கொடுத்துப் பொன்னையுங் கொடுத்து நமக்காக்கிக் கொள்ளுகிறோம்" என்றாப்போலே சிலவற்றைச் சொல்ல; நினைவுஞ் சொலவுமொத்திராத வஞ்சகனான வவன் கருத்தையறிந்த ஸஞ்ஜயன், "வருகிறவ னங்ஙனொத்தவனல்லகாண், அவனுக்கு வேண்டுவதிவ்வளவு", என்றான். அதாவது - தான் குடிக்குந் தண்ணீரையொரு குடத்திலே நிறைத்துக் குளிரவைக்கக் கடவனே, அத்தை அவன் வருகிற வழியிலே வாசலிலே வைக்கவமையும், அதுக்குமேலொன்றும் வேண்டா; தன் க்ருஹத்திலே அதிதி வந்து புகுந்தால் காலைக் கழுவுவதாக ஸாமாந்ய சாஸ்த்ரம் விதித்து வைத்ததிறே, அவ்வோபாதி அவன் திருவடிகளை விளக்கவமையும், அவனான வாசிக்கு விசேஷித்தொன்றும் செய்யவேண்டா; நெடுந்தூரம் வந்தவனை குசலப்ரச்நம் பண்ணக்கடவதிறே, அவ்வோபாதியோரின்சொல் சொல்லவமையும், ஏற்றமாகவொன்றும் வேண்டா, இவ்வளவுகளையொழிய மற்றோன்றை இச்சியான் காணவனென்கை. இத்தால் - நீ கொடுக்க நினைக்கிற நாட்டையும் பொன்னையு மவனொரு சரக்காக நினைத்திருக்குமோ, வல்லையாகில் உன் ஆபிமுக்ய ஸூசகமாக விவ்வளவுகளைச் செய்யப்பாரென்றபடி.

**விளக்கம்** – மஹாபாரதம் உத்யோகபர்வம் – அத்யத் பூர்ணாதபாம் கும்பா தந்யத் பாதாவநேஜநாத், அந்யத் குசல ஸம்ப்ரச்நாந், நசேச்சதி ஜநார்தந – என்ற வரிகள் காண்க. பாண்டவர்களுக்காக க்ருஷ்ணன் தூது வந்தபோது த்ருதராஷ்ரன், "பாண்டவர்களிடம் மட்டுமே அன்பு கொண்டு ஓரவஞ்சனையுடன் செயல்படும் க்ருஷ்ணன் வருகிறான். அவனிடம் நாம் சில நாடுகளையும் செல்வங்களையும் வழங்கி நம் பக்கம் சேர்த்துக் கொள்வோம்", என்று கூறினான். எண்ணமும் சொற்களும் செயலும் ஒத்துப்போகாத அவனது எண்ணத்தை உணர்ந்த ஸஞ்ஜயன், "அவன் உனது எண்ணத்திற்கு ஒத்துப்போக

மாட்டான். அவனுக்கு வேண்டியது இவ்வளவே", என்று உரைக்கத் தொடங்குகிறான். அவன் வரும்போது, ஒருவன் தான் தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கும் சொம்பை அவன் வரும் வழியில், வாசலில் வைத்தாலே போதுமானது. அதனையே அவன் பூர்ணகும்பம் என்று ஏற்றுக்கொண்டு குளிர்ந்துவிடுவான். அதற்கு மேல் அவனுக்கு ஏதும் செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஒரு இல்லத்திற்கு வரும் விருந்தினன் ஒருவன் உள்ளே வருவதற்கு முன்பாகத் தனது கால்களைக் கழுவவேண்டும் என்று சாஸ்த்ரம் உரைக்கிறது. அதற்கு உதவும்விதமாக க்ருஷ்ணன் வரும்போது ஒரு சொம்பு நீரை வைத்தால், அவன் தனது திருவடிகளை விளக்கிக்கொள்ள அதுவே உதவி செய்யும். அவனுக்காக வேறு ஏதும் சிறப்பாகச் செய்யவேண்டாம். நீண்ட தூரத்திலிருந்து வந்த ஒருவனை நலம் கேட்பதைக் காட்டிலும் உயர்ந்த செயல் ஏதேனும் உண்டோ? ஆகவே அது போன்று இனிமையான சொல் ஒன்றே போதுமானது. வேறு எதனையும் செய்ய வேண்டாம் - என்று உரைத்தான். இதன் மூலம் ஸஞ்ஜயன், "நீ அவனுக்கு அளிக்க எண்ணும் நாட்டையும் பொன்னையும் அவன் ஒரு பொருளாக எண்ணுவானோ? நீ ஏதேனும் அளிப்பதில் வல்லவன் என்று எண்ணினால் உனது அன்பு என்பதை வெளிப்படுத்தும் விதமாக நான் கூறியவற்றைச் செய்ய முயற்சிப்பாய்", என்று உணர்த்தினான்.

**வ்யாக்யானம்** – "பரிவதிலீசனை" என்று தொடங்கி, "புரிவதுவும் புகைபூவே" என்று – ஹேய ப்ரத்யநீகனான ஸர்வேச்வரனை ஸம்ஸாரந்முக்தரா யநுபவித்து, அவ்வநுபவஜநித ப்ரீதியாலே "ஏதத்ஸாமகாயந் நாஸ்தே" என்கிறபடியே பாடி, விஸ்த்ருதராகையைப் பெறவேண்டிருப்பீர், உபகரணங்களில் குறைவு பார்த்தகலுகை தவிர்த்து, அஸம்ஸ்க்ருதமான ஜலத்தை யேதேனு மொருபடி ப்ரயோகித்து, பின்னையவனுக்கு அருள் கொடையாகக் கொடுப்பதுவுமேதேனுமொரு புடையும் ஏதேனுமொரு பூவும், இவ்வளவு மமையுங் கிடிகோளவனுக்கு என்று அவனுடைய ஸ்வாராததையை ஸுஸ்பஷ்டமாக ஆழ்வாரருளிச் செய்தாரிறே.

**விளக்கம்** – திருவாய்மொழி (1-6-1) – என்ற பாசுரத்தை அருளிச்செய்கிறார். தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாக உள்ள ஸர்வேச்வரனை ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டவர்களாக அநுபவித்தபடி, அந்த அனுபவத்தின் காரணமாக எழுந்த மகிழ்வின் விளைவாக - ஏதத்ஸாமகாயந் நாஸ்தே – சாமத்தைப் பாடியபடி உள்ளான் - என்னும்படியாகப் பாடி, ஆத்மஸ்வரூபமானது ப்ரகாசம் அடைவதற்காக வேண்டுவீர்களாக; அவனை ஆராதிக்க

நம்மிடம் ஏதும் இல்லையே என்று நம்மிடம் இல்லாதவற்றை ஒரு குறையாகப் பார்த்து அதன் காரணமாக அவனை விட்டு அகலாமல் இருப்பீர்களாக; வாசனைப்பொருள் அற்றதான வெறும் தண்ணீரை ஒரு படியாவது அளித்து, அதன் பின்னே அவனுக்கு ஏதேனும் புகையையோ அல்லது மலரையோ இட்டாலே போதுமானது - என்று திருவாய்மொழியில் உரைத்தார். இப்படியாக அவனது ஆராதிக்கப்படும் தன்மை உள்ளதை ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்தார்.

140. புல்லைக்காட்டி யழைத்துப் புல்லையிடுவரைப்போலே பல ஸாதநங்களுக்கு பேதமில்லை.

**அவதாரிகை** – “பூர்ண விஷயம்” என்று தொடங்கி இவ்வளவும் ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக வந்தவித்தனையிறே. ப்ரபத்தி வைலக்ஷண்யமிறே கீழ்ச்சொல்லப்பட்டது, ஆகையாலே அதுக்கின்னமுமோரு வைலக்ஷண்யம் சொல்லுகைக்காக ஸித்தோபாயத்துக்கும் பலத்துக்குமுண்டான ஐக்யத்தை முந்துறவருளிச்செய்கிறார் (புல்லைக்காட்டி) என்று தொடங்கி.

**விளக்கம்** – ”பூர்ணவிஷயம்” என்று தொடங்கும் சூர்ணை-136 முதல் கடந்த சூர்ணை முடிய உள்ள அனைத்தும் ஒன்றிலிருந்து ஒன்றாகத் தொடர்ந்து வந்தவை ஆகும். ப்ரபத்தியின் மேன்மை குறித்து அல்லவோ கூறிவந்தார்? அதனைத் தொடரும்விதமாக, அத்தகைய ப்ரபத்திக்கு மேலும் ஒரு மேன்மை உள்ளது என்று உரைக்க எண்ணினார். எனவே ஸித்தோபாயம் மற்றும் பலன் ஆகிய இரண்டிற்கும் உள்ள ஒற்றுமையை முதலில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கோவை வரவழைத்துப் பின்னையதுக்கு தாரகாதிகளையிட்டு நோக்க நினைப்பார் தத்போக்யமான புல்லுதன்னையே தத்வசீகார ஸாதநமாக முன்னிட்டழைத்துக் கொண்டு, அது தன்னையே மேலுமிடுமளவில் பல ஸாதநங்களுக்கு பேதமில்லாதாப்போலே, விலக்ஷணகுண விக்ரஹ விசிஷ்டனானதானே முந்துற விவனைச் சேர்த்துக் கொள்ளுகைக் குபாயமாய், பின்னை யென்றுமொக்க விவனுக்கு பேயமாயிருக்கையாலே பலஸாதநங்களிரண்டும் ஏகவஸ்துவாயிருக்குமென்கை.

**விளக்கம்** – ஒரு பசுவைத் தன்னிடம் அழைக்க எண்ணுபவர்கள், அதற்குப் பிடித்தமான புல்லைக் காண்பிப்பார்கள். அந்தப் பசு தங்களிடம் வந்த பின்னர் அந்த புல்லையே

உணவாக அளித்து விடுவார்கள். இங்கு உபாயமாகவும், பலனாகவும் அந்தப் புல்லே உள்ளது. ஆக பலன் மற்றும் உபாயம் ஆகிய இரண்டிற்கும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி அந்தப் புல் உள்ளது. இது போன்று மேன்மையான குணங்கள் மற்றும் விக்ரஹம் ஆகியவற்றுடன் உள்ள தானாகவே சேதனனைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ள முதலில் தானே உபாயமாக நின்று, அதன் பின்னர் எப்போதும் உபேயமாகவும் உள்ளான். ஆகவே பலனும் ஸாதனமுமாக இவனே உள்ளான்.

141. ஆகையாலே ஸுகரூபமாயிருக்கும்.

**அவதாரிகை** – இத்தால், ப்ரபத்திக்கு வைலக்ஷண்யம் பலித்தபடியே அருளிச்செய்கிறார் (ஆகையாலே) என்று தொடங்கி.

**விளக்கம்** – இதன் மூலம் ப்ரபத்தியின் மேன்மையானது உணரப்பட்டதைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸாத்ய வஸ்துதானே ஸாதநமாகையாலே, தத் வரணரூபமானவிது தேவையாயிராதே ஸுகரூபமாயிருக்குமென்றபடி. அன்றிக்கே, இன்னமும் ப்ரபத்திக்கொரு வைலக்ஷண்யமருளிச்செய்கிறார் (புல்லை) இத்யாதியாலே. அதாவது – புல்லைக்காட்டி தேநுவை அழைத்துக்கொண்டு பின்னை அப்புல்லையே யிடுமளவில் பல ஸாதநங்களுக்கு பேதமில்லாதாப்போலே, “ஸக்ருத் க்ருதோஞ்ஜலி:”, “நமச் சக்ருர் ஜநார்தநம்” இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே அஞ்ஜல்யாதி ரூபையான ப்ரபத்தியை முன்னிட்டு ஈச்வரனை வசீகரித்தால் பின்னையவனுக்குகப்பாகச் செய்யுமடிமையும், “பத்தாஞ்ஜலி புடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிந:”, ”கைகளாலாரத் தொழுது தொழுதுன்னை” இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே தன் ஸ்வரூபாநுரூபமான அஞ்ஜல்யாதி வ்ருத்தி விசேஷங்களாகையாலே பலஸாதநங்களுக்கு பேதமில்லை. இப்படி பலமானது தானே ஸாதநமாகையாலே, இப்ப்ரபத்திதான் தேவையாயிராதே இவனுக்கு ஸுகரூபமாயிருக்குமென்கை. ஆக (ப்ரபத்த்யுபாயத்துக்கு) என்று தொடங்கி இவ்வளவாக ப்ரபத்தியினுடைய தோஷராஹித்யமும் குணஸாஹித்யமும் சொல்லப்பட்டது.

**விளக்கம்** - தன்னைப் பெறுவதற்கான ஸாதனாமாகத் தானே உள்ளான். எனவே அவனைப் பற்றுதல் என்பதில் நோக்குடைய இந்த ப்ரபத்தி என்பது விதிக்கப்பட்ட செயல் போன்று கடினமாக அல்லாமல், செய்வதற்குச் சுகம் அளிப்பதாகவே இருக்கும். அல்லது

ப்ரபத்திக்கு மேலும் ஒரு மேன்மையை வெளிப்படுத்துகிறார். புல்லைக் காண்பித்துப் பசுவை வரவழைத்து, அதற்கு அந்தப் புல்லையே தின்பதற்கு அளிப்பதன் மூலம் பலன் மற்றும் ஸாதனம் ஆகிய இரண்டிற்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை எனலாம். இது போன்று இங்கு வேறுவிதமாக உரைக்கலாம். ஸ்தோத்ரரத்னம் - ஸக்ருத் க்ருதோஞ்ஜலி: – ஒருமுறை செய்யப்பட்ட அஞ்ஜலி என்பது - என்றும், மஹாபாரதம் - நமச் சக்ருர் ஜநார்தநம் - ஜநார்த்தனனை வணங்கினர் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அஞ்ஜலி செய்தல் போன்றவையான ப்ரபத்தி செயல்பாடுகளை முன்னே நிறுத்திக் கொண்டு ஸர்வேச்வரனை வசீகரித்த பின்னர் அவனது மகிழ்ச்சிக்காகப் பல கைங்கர்யங்கள் செய்யக்கூடும். இப்படிப்பட்ட அடிமைத் தன்மையனது - பத்தாஞ்ஜலி புடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிந: - குவித்த கரங்களுடன் சந்தோஷம் கொண்டவர்களாக நம: என்று உரைப்பவர்களாக - என்றும், திருவாய்மொழி (3-8-4) – கைகளாலாரத் தொழுது தொழுதுன்னை – என்றும் கூறுவதற்கு ஏற்ப தனது ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்றதான அஞ்ஜலி போன்ற செயல்களாக உள்ளதால் பலன் மற்றும் ஸாதனம் ஆகியவற்றுக்கு இடையே வேறுபாடு இல்லை. இப்படியாகப் பலன் என்பது தானே ஸாதனமாகவும் உள்ளதால் ப்ரபத்தி என்பது விதிக்கப்பட்ட ஒன்று போல சுமையாக இல்லாமல் சுகமாகவே உள்ளது. ஆக, “ப்ரபத்த்யுபாயத்துக்கு” என்று தொடங்கும் சூர்ணை-134 முதல் இந்தச் சூர்ணை முடிய ப்ரபத்தியின் குற்றம் இல்லாத தன்மை, குணங்களுடன் கூடியுள்ள தன்மை ஆகிய இரண்டும் உணர்த்தப்பட்டது.

142. இவன் அவனைப்பெற நினைக்கும்போது இந்த ப்ராபத்தியும் முபாயமன்று.

**அவதாரிகை** - இப்படி ப்ரஸ்துதையான ப்ரபத்தியினுடைய அநுபாயத்வத்தையும், தத்ப்ரதிகோடியான பரகத ஸ்வீகாரோபாயத்வத்தையும், தத்ப்ரதிகோடியான பரகத ஸ்வீகாரோபாயத்வத்தையும், ”இது தன்னைப்பார்த்தால்” இத்யாதியாலும், ”ப்ராப்திக்கு பாயம் அவன் நினைவு” இத்யாதியாலும் கீழருளிச்செய்தபடியன்றியே, முகாந்தரேண வருளிச்செய்கிறார் மேல். அதில், இப்படி ஸ்வரூபாநுரூபமானவித்தை ஸாதநமாக்கிக் கொண்டு ஸ்வதந்த்ரனான வவனை யிவன் பெறப் பார்க்குமன்று அவன் நினைவு கூடாதாகில் இது விபலிக்குமென்கிறர் (இவனவனை) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் மேலே கூறப்பட்டதான ப்ரபத்தி என்பது உபாயம் ஆகாத தன்மையை சூர்ணை 54ல் – இது தன்னைப்பார்த்தால் - என்பதன் மூலம் உணர்த்தினார்;

அதன் எதிர்தட்டாக உள்ள “எம்பெருமானே வந்து பற்றுதல்” என்பது உபாயமாகின்ற தன்மையை சூர்ணை 66ல் - ப்ராப்திக்குபாயம் அவன் நினைவு – என்பதன் மூலம் உணர்த்தினார். இவற்றை மேலும் சில காரணங்கள் மூலம் அருளிச்செய்கிறார். ஸ்வரூபத்திற்கு ஏற்றதான ப்ரபத்தியை ஒரு சாதனமாகக் கொண்டு, சுதந்திரமாகச் செயல் புரிகின்ற ஸர்வேச்வரனைப் பெறுவதற்கு முயலும்போது, அவனது பற்றுதல் கைகூடாமல் உள்ள காரணத்தினால், ப்ரபத்தியானது பலன் அளிக்காது என்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, உடைமையை உடையவன் சென்று கைக்கொள்ளுமாப்போலே ஸ்வாமியான அவன்றானே வந்து அங்கீகரிக்கக் கண்டிருக்கக்கடவ பரதந்த்ரனான விச்சேதநன், தான் பலியாய் தன் ஸ்வீகாரத்தாலே ஸ்வதந்த்ரனான வவனைப்பெற நினைக்குமளவில் அவன் நினைவு கூடாதாகில், இப்படி விலக்ஷணையாயிருக்கிற ப்ரபத்தியும் தல்லாப ஸாதநமாகாதென்றபடி.

**விளக்கம்** - ஒரு பொருளின் சொந்தக்காரன் தானாகவே வலியச்சென்று தன்னுடையதான அந்தப் பொருளைக் கைக்கொள்வதே இயல்பாகும். இது போன்று சேதனன் ஒருவன், ஸர்வேச்வரன் தானாகவே வலிய வந்து ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுதி கொண்டவன் ஆவான். ஆனால் இதனை விடுத்து, தன்னுடைய பலனைத் தானே பெறப்போகிறோம் என்று எண்ணியவனாக, தனது ப்ரபத்தி காரணமாக, சுதந்திரமாக உள்ள ஸர்வேச்வரனை பெற முயற்சிக்கலாம். அப்போது அவனது பற்றுதல் கைகூடாது என்பதால், தூய்மையாக உள்ள ப்ரபத்தி என்பது அவனைப் பெற உதவும் சாதனம் அல்ல என்று கொள்க.

143. அவன் இவனைப்பெற நினைக்கும்போது பாதகமும் விலக்கன்று.

**அவதாரிகை** - இனி அவனே ஸ்வீகரிக்குமளவில் உள்ள வாசி சொல்லுகிறார் அவனிவனை) என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து ஸர்வேச்வரன் தானாகவே வந்து சேதனனைப் பற்றுவதற்கு உள்ள வேறுபாட்டை அருளிச்செய்கிறார்

**வ்யாக்யானம்** – அதாவது, ஸ்வாமியாய் ஸ்வதந்த்ரனானவன் ஸ்வம்மாய் பரதந்த்ரனா யிருக்கிற விவனை ஸ்வேச்சையாலே பெற நினைக்குமளவில், பாபங்களில் ப்ரதநமாக வெண்ணப்படும் பாதகமும் ப்ரதிபந்தகமாகமாட்டா தென்கை. இவை யிரண்டாலும்

ஸ்வகதஸ்வீகாராநுபாயத்வமும், பரகத ஸ்வீகாரோபாயத்வமும் காட்டப்பட்டது. "சித: பரம் சில்லாபே ப்ரபத்திரபி நோபதி:, விபர்யயேது நைவாஸ்ய ப்ரதிஷேதாயபாதகம்" என்னக்கடவதிறே.

**விளக்கம்** – அனைத்தையும் உடையவனாகவும், சுதந்திரமாக உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரன் தனது உடைமையாக உள்ளவனும், வேறு எதற்கும் கட்டுப்படாமல் தனக்கு மட்டுமே அடிமையாக உள்ளவனும் ஆகிய சேதனனை, தான் அந்தச் சேதனன் மீது கொண்ட ஆசை காரணமாக அவனை அடைய எண்ணுகிறான். அப்போது பாவங்களில் முதன்மையாகக் கொள்ளப்படுகின்ற தீயவினைகள் என்பது தடையாக நிற்பதில்லை. இந்த இரண்டு சூர்ணைகள் மூலம் அவனை அடைய தானாகவே முயலுதல் என்பது உபாயம் அல்ல என்பதும், அவனே வந்து நம்மைப் பற்றுதலே உபாயம் ஆகும் என்பதும் உணர்த்தப்பட்டன. சித: பரம் சில்லாபே ப்ரபத்திரபி நோபதி:, விபர்யயேது நைவாஸ்ய ப்ரதிஷேதாயபாதகம் – பரம்பொருளைப் பெறும் விஷயத்தில் ப்ரபத்தி உபாயம் அல்ல, ஸர்வேச்வரன் இவனைப் பற்ற எண்ணும்போது பாவங்கள் தடை அல்ல - என்பது காண்க.

144. இவை யிரண்டும் ஸ்ரீபரதாழ்வான் பக்கலிலும் ஸ்ரீகுஹப்பெருமாள் பக்கலிலும் காணலாம்.

**அவதாரிகை** - இப்படியிவை யிரண்டும் காணலாமிடமுண்டோ வென்ன வருளிசெய்கிறார் (இவை) என்று தொடங்கி.

**விளக்கம்** - இந்த இரண்டு கருத்துக்களையும் எங்காவது சான்றுடன் காண முடியுமா என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்.

இதற்கு வ்யாக்யானம் அருளப்படவில்லை.

145. ஸ்ரீபரதாழ்வானுக்கு நன்மைதானே தீமையாயிற்று; ஸ்ரீகுஹப்பெருமாளுக்குத் தீமைதானே நன்மையாயிற்று.

**அவதாரிகை** - அவர்கள் தங்கள் பக்கலிவை கண்டபடி என்னவென்ன வருளிச்செய்கிறார் (ஸ்ரீபரதாழ்வானுக்கு) இத்யாதி வாக்ய த்வயத்தாலே.

**விளக்கம்** - அவர்களிடம் இவை இரண்டும் எப்படிக் காணலாம் என்பதற்கான விடையை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பெருமாளை மீட்டுக் கொண்டுவந்து திருவபிஷேகம் பண்ணுவித்துத் தன் ஸ்வரூபாநுரூபமான வடிமையைப் பெற்று வாழுகைகாக, "ஏபிச்ச ஸசிவைஸ்ஸார்த்தம்" இத்யாதிப்படியே வழியே பிடித்து மநோரதித்துக் கொண்டு சென்று பெரியவார்த்தியோடேயவர் திருவடிகளிலே ப்ரபத்தி பண்ணிய ஸ்ரீபரதாழ்வானுக்கு, அப்படி பண்ணின ப்ரபத்தியாகிற நன்மைதானே, சரண்யரான பெருமாள் திருவுள்ளத்துக் கநிஷ்டமாகையாலே தீமையாய்விட்டது. "ஏழை ஏதலன்" இத்யாதிப்படியே பெருமாள் தாமே வந்தங்கீகரிக்கப்பெற்ற ஸ்ரீகுஹப்பெருமாளுக்கு, தோஷமே பச்சையாக வங்கீகரிக்கையாலே, பாதகமாகிற தீமைதானே நன்மையாய்விட்ட தென்கை. "யத் த்வத்ப்ரியம் ததிஹ புண்யம புண்ய மந்யத்" என்றிறே புண்யபாப லக்ஷணம்; ஆகையா லிவர்கள் பக்கலிலே காணலாமென்கை.

**விளக்கம்** - இராமன் கானகம் சென்றபோது, எப்படியாவது இராமனை மீண்டும் நாட்டுக்குக் கொண்டுவந்து, அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்து, அதன் மூலம் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்றதான கைங்கர்யத்தைப் பெற்றுவிடலாம் என்று பரதன் எண்ணினான். ஆகவே இராமாயணம் அயோத்யாகாண்டம் (104-12) - ஏபிச்ச ஸசிவைஸ்ஸார்த்தம் - என்ற ச்லோகத்திற்கு ஏற்ப இராமன் சென்ற வழியில் சென்று, மிகுந்த துன்பத்துடன் இருந்த பரதன் இராமனின் திருவடிகளில் சரணாகதி செய்தான். ஆனால் இத்தகைய ப்ரபத்தி என்பது இராமனின் திருவுள்ளத்திற்கு ஏற்றபடி அமையாத காரணத்தினால் நன்மையில் முடியவில்லை. குகனைப் பொறுத்தவரை பெரியதிருமொழி (5-8-1) – ஏழை ஏதலன் – என்று கூறும் பாசுரத்திற்கு ஏற்ப, இராமன் தானாகவே வலிய வந்து ஏற்றுக்கொண்டான். இதனால் தாழ்ந்தவன், வேடன் போன்ற தோஷங்கள் குகனுக்கு உள்ளபோதிலும், அத்தகைய தீமைகளே நன்மைகளாக மாறின. அதிமாநுஷ்யஸ்தவம் – யத் த்வத்ப்ரியம் ததிஹ புண்யம புண்ய மந்யத் - எது உனக்கு விருப்பமோ அதுவே புண்ணியம், எது விருப்பம் அல்லனவோ அதுவே பாவம் – என்று

புண்ணியபாவ இலக்கணங்கள் கூறியது காண்க. ஆகவே இவர்களிடம் இந்த இரண்டையும் இவ்விதம் காணலாம்.

146. ஸர்வாபராதங்களுக்கும் ப்ராயச்சித்தமான ப்ரபத்தி தானும் அபராத கோடியிலேயாய் க்ஷாமணம் பண்ண வேண்டும்படி நில்லாநின்றதிறே.

**அவதாரிகை -** இவன் பண்ணும் ப்ரபதநம் சரண்ய ஹ்ருதயாநுஸாரி யல்லாதபோது அபராதகோடி கடிதமாமென்னுமிட மருளிச்செய்தார் கீழ்; இதுதா னிவனுடைய பூர்வவ்ருத்தத்தைப் பார்த்தாலும் அபராதகோடியிலேயா யிருக்குமென்னு மிடத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக பாஷ்யகாரருடைய வநுஷ்டாந ப்ரகாரத்தை யருளிச் செய்கிறார் மேல் (ஸர்வாபராதங்களுக்கும்) என்று தொடங்கி.

**விளக்கம் –** அனைவரும் சென்று சரண் புகுவதற்கு ஏற்றவனுடைய திருவுள்ளத்திற்கு, ஒருவன் செய்த ப்ரபத்தி என்பது ஏற்கத்தக்கதாக இல்லாதபோது, அத்தகைய ப்ரபத்தி என்பது அபராதங்களின் வரிசையில் சேர்ந்துவிடும் என்று அருளிச்செய்தார். இத்தகைய ப்ரபத்தி என்பது ஒருவனுடைய முந்தைய செயல்களை ஆராய்ந்தாலும் அபராதவரிசையில் நிற்கும் என்பதை மேலும் விளக்க எண்ணியவராய், பாஷ்யக்காரரின் அநுஷ்டானத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, "அஹமஸ்ம்யபராதாநா மாலய" என்கிறபடியே, அபராதங்களுக் கெல்லாம் கொள்கலமாயிருக்கிற விச்சேதநன் ப்ரபத்தி பண்ணவே, "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்னும்படி இவனளவில் ஸர்வேச்வரன் திருவுள்ளம் ப்ரஸந்நமாய் விடுகையாலே, ஸர்வாபராதங்களுக்கும் ப்ராயச்சித்தமாயிறே ப்ரபத்திதா னிருப்பது; இப்படி யிருந்துள்ள ப்ரபத்தியை "த்வத் பாதாரவிந்த யுகளம் சரணமஹம் ப்ரபத்யே" என்று பண்ணியருளின பாஷ்யகாரர்க்கு, ஸ்வபூர்வ வ்ருத்தத்தை யநுஸந்தித்தவாறே அது தானும் அபராத கோடியிலேயாய் "த்வமேவ மாதாச" என்று தொடங்கி இத்தலையிலபராதத்தைப் பொறுக்கைக் குறுப்பான பந்தவிசேஷங்களை யெல்லாம் விண்ணப்பஞ் செய்துகொண்டு, "தஸ்மாத் ப்ரணம்ய" இத்யாதியாலே இப்படி திருமுன்பே கூசாமல் வந்து நின்று ப்ரபத்தி பண்ணின இவ்வபராதத்தைப் பொறுத்தருளவேணுமென்று க்ஷாமணம் பண்ண வேண்டும்படி நில்லாநின்றதிறே யென்கை; ஆகையால், இவ்வழியாலுமிது அபராதகோடி கடிதமாயிருக்கு மென்கை. அநாதிகால மபராதத்தைப்பண்ணிப் பின்பொருநாளிலே ஆபி முக்கியம் பண்ணினானேயாகிலும், "ரிபூணாமபி வத்ஸல:", "யதிவா ராவணஸ் ஸ்வயம்"

என்றிருக்கு மீச்வர ஹ்ருதயத்தைப் பார்த்தால் அவன் கைக்கொள்ள ஒரு குறை இல்லை. அவனப்படி யிருந்தானே யாகிலும், தன் பூர்வவ்ருத்தத்தை யுணர்ந்தால் இவனித்தை அபராதமாகவே நினைத்து க்ஷாமணம் பண்ணவேண்டும் படியாயிறே யிருப்பது.

**விளக்கம்** - அஹமஸ்ம்யபராதாநா மாலய - நான் குற்றங்களின் இருப்பிடமாகவே உள்ளேன் - என்று கூறுவதற்கு ஏறப அபராதங்கள் அனைத்திற்கும் இருப்பிடமாக உள்ள நாம் ப்ரபத்தி செய்யும்போது, கீதை (18-66) - ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி - அனைத்து பாவங்களில் இருந்தும் நான் விடுவிபேன் - என்று கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரன் தன்னுடைய திருவுள்ளத்தில் இரக்கம் கொண்டு விடுகிறான். இதனால் அனைத்துவிதமான பாவங்களுக்கும் ப்ராயச்சித்தமாக ப்ரபத்தி உள்ளது. சரணாகதி கத்யத்தில் – த்வத் பாதாரவிந்த யுகளம் சரணமஹம் ப்ரபத்யே - உனது தாமரை மலர் போன்ற இரண்டு திருவடிகளையும் நான் சரணம் என்று பற்றுகிறேன் - என்று உரைத்த பாஷ்யகாரருக்கு தம்முடைய கடந்தகால செயல்களின் சிந்தனை முன்னே வந்து நின்றது. ஆகவே ப்ரபத்தியை அபராதங்களின் வரிசையில் சேர்த்தார். எப்படி? சரணாகதி கத்யத்தில் – த்வமேவ மாதா ச – என்று தொடங்கி, நமது வாழ்க்கையில் நாம் செய்து வந்த அனைத்துவகையான குற்றங்களையும் பொறுத்துக் கொள்ளும்படியாக உறவுமுறைகளை விண்ணபித்தபடி கத்யத்தில் உரைக்கிறோம். அதன் பின்னர் - தஸ்மாத் ப்ரணம்ய - என்பது போன்றவை மூலம் இவ்விதமாக அனைத்தையும் செய்துவிட்டு, அவனுடைய திருமுகத்தின் முன்பாகச் சற்றும் கூசாமல் வந்து நின்று, "ப்ரபத்தி செய்தல்" என்ற பெரும் அபராதத்தையும் செய்கிறோம். இதனைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்படியாக அவனிடம் விண்ணப்பம் செய்யும் அளவில் ப்ரபத்தி உள்ளது என்று பாஷ்யக்காரர் உணர்த்தினார். எனவே எந்தவகையாலும் ப்ரபத்தி என்பது அபராத வரிசையில் உள்ளது. எல்லையற்ற காலம் பாவங்களை மட்டுமே செய்து வந்து, ஒருநாள் சட்டென்று தனது ப்ரேமையை ஸர்வேச்வரன் பக்கம் திருப்பினான் என்றாலும், ரிபூணாமபி வத்ஸல: - விரோதியிடமும் வாத்ஸல்யம் கொண்டவன் - என்பதையும், இராமாயணம் யுத்தகாண்டம் (18-38) – யதிவா ராவணஸ் ஸ்வயம் – இராவணனாக உள்ளபோதிலும் – என்பதையும் கருத்தில் கொண்டு, ஸர்வேச்வரனின் திருவுள்ளத்தை நோக்கினால், அவன் நம்மை ஏற்றுக்கொள்ள எந்தத் தடையும் இல்லை. ஸர்வேச்வரன் இவ்விதம் உள்ளான் என்றபோதிலும், சேதனன் தனது முந்தைய செயல்களைச் சற்றே எண்ணிப் பார்த்து, அதன் காரணமாக ப்ரபத்தியை அபராதமாகவே எண்ணி, இதனை எம்பெருமான்

பொறுத்துக் கொள்ளவேண்டும் என்று விண்ணப்பம் செய்ய வேண்டும்படியாக ப்ரபத்தி உள்ளது என்று கருத்து.

147. நெடுநாள் அத்யபரையாய்ப் போத்த பார்யை லஜ்ஜாபயங்களின்றிக்கே பர்த்ருஸகாரத்தாலே நின்று என்னை யங்கீகரிக்கவேணுமென்று அபேக்ஷிக்குமாபோலே யிருப்பதொன்றிதிறேயிவன் பண்ணும் ப்ரபத்தி.

**அவதாரிகை** - இவன் பண்ணும் ப்ரபத்தி, ஸ்வபூர்வ வ்ருத்தத்தை யநுஸந்தித்தால் அபாராதகோடிலேயா யிருக்குமென்னுமத்தை த்ருஷ்டாந்தமுகேந தர்சிப்பிக்கிறார் மேல் (நெடுநாள்) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஒருவன் தன்னுடைய முந்தைய செயல்களை எண்ணிப் பார்த்தான் என்றால், அவன் செய்கின்ற ப்ரபத்தி என்பது அபராதங்களின் எல்லையாகவே இருப்பதை உணரலாம் என்பதை ஓர் உதாரணம் மூலம் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நெடுங்காலம் பர்த்தாவோடு ஒட்டற்று பரபுருஷகாமிநியாய் தந்நிக்ரஹ பாத்ரமாய்ப் போந்தாளொருபார்யை, “இப்படிப்பட்டநாமவன் ஸந்நிதியிலே கூசாமல் சென்று நிற்கும்படியென்” என்கிற லஜ்ஜையும், “இத்தனை காலமும் நாம் செய்து திரிந்ததெல்லாம் கண்டிருக்கிறவன், இப்போது நம்மைவந்திப்படியபேக்ஷிப்பதே! என்று தண்டிக்கில் செய்வதென்!” என்னும் பயமுமின்றிக்கே, அவன் முன்னே சென்று நின்று என்னையங்கீகரிக்கவேணும் என்றபேக்ஷிக்குமளவில் எத்தனையபராதமுண்டு; அப்படியே யிருப்பதொன்றிறே, பகவதநந்யார்ஹனாய் வைத்து அநாதிகாலம் அவனுடன் பற்றின்றிக்கே அந்யபரனாய்ப்போந்தவிவன், ஸ்வபூர்வ வ்ருத்தாந்தாநுஸந்தாநத்தால் வரும் லஜ்ஜையும் ஸ்வதந்த்ரனானவவன் தண்டிக்கில் செய்வதென் என்னும் பயமுமின்றிக்கே, தத்ஸந்நிதியிலே சென்று நின்று தன்னை யங்கீகரிக்கவேணுமென்று பண்ணுகிற சரண வரண மென்கை. ஆக இவ்வளவும், ஸ்வகத ஸ்வீகாராநுபாயத்வமும், பரகத ஸ்வீகாரோபாயத்வமும் ப்ரதிபாதிக்கப்பட்டது.

**விளக்கம்** – பல காலமாகத் தனது கணவனுடன் எந்தவிதமான தொடர்பும் இல்லாமல், மற்ற ஆண்மகன் ஒருவனை நாடி அவனை அடைந்த மனைவி ஒருவள், மீண்டும் தனது கணவனை அடைந்தால் தண்டிக்கப்படுவோம் என்ற நிலையில் உள்ளாள். அவள் தனது

கணவன் முன்பாகச் சென்று, “இப்படிப்பட்ட நான் எனது கணவன் முன்பு எந்த முகத்துடன் விழிப்பேன்”, என்று எண்ணிச் சிறிதும் வெட்கம் அடையாமலும்; ”இத்தனை காலம் தவறான செய்கைகளுடன் நான் திரிந்து வந்ததை இவன் பார்த்திருப்பான். இப்படிப்பட்ட இவள் மீண்டும் நம்மை நாடி வந்து விரும்புவது எப்படி என்று எண்ணி என்னைத் தண்டித்தால் என்ன செய்வது?” என்று எண்ணி அச்சம் கொள்ளாமலும், அவன் முன்பாகச்சென்று, ”என்னை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்” என்று கேட்பது போல் - என்கிறார். இத்தகைய செய்கை எத்தனை அபராதங்களுடன் கூடியது! இத்தகைய அபராதங்கள் போன்றே - ஸர்வேச்வரனுக்கே உரியவனாக உள்ள நாம், எல்லையற்ற காலம் அவன் மீது எந்தவிதமான பற்றுதலும் இன்றி, வேறு எண்ணங்களுடன் திரிகிறோம். நம்முடைய முந்தைய செயல்களால் எந்தவிதமான நாணமும் கொள்வதில்லை. சுதந்திரமானவனாகிய ஸர்வேஸ்வரன் தண்டித்தால் என்ன செய்வது என்ற அச்சமும் இல்லை. அவன் முன்பாக நின்று நம்மை ஏற்கவேண்டும் - என்று ப்ரபத்தி செய்யும் செய்கை உள்ளது.

இப்படியாக நாமாகவே சென்று ஸர்வேச்வரனிடம் ப்ரபத்தி செய்வதன் ஆகாத தன்மை மற்றும் அவனாகவே வந்து நம்மை ஏற்றுக்கொள்வதன் ஏற்புடைய தன்மை என்பது உணர்த்தப்பட்டது.

148. க்ருபையாலே வரும் பாரதந்த்ர்யத்திற்காட்டில் ஸ்வாதந்த்ர்யத்தாலே வரும் பாரதந்த்ர்யம் ப்ரபலம்.

**அவதாரிகை** - இனி, இவன் ஸ்வீகாரங்கண்டிரங்கி யவனிவனுக்கு பரதந்த்ரனாவதிலும் தன் ஸ்வாதந்த்ர்யத்தால் வந்து பரதந்த்ரனாவதே ப்ரபலமென்கிறார் (க்ருபையாலே) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஸர்வேச்வரன் சேதனனின் ப்ரபத்தியைக் கண்டு இரக்கம் கொண்டு, தனது க்ருபை காரணமாக அந்தச் சேதனனுக்கு வசப்படுவதைக் காட்டிலும், தன்னுடைய சுதந்திரம் காரணமாக தானாகவே வலியச் சென்று சேதனனுக்கு வசப்படுதலே சிறந்தது என்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஆர்த்தராய் அநந்ய சரண்யராய் தன் திருவடிகளிலே வந்து சரணம் புகுந்தவர்களளவில் தனக்குண்டான க்ருபையாலே அவர்கள் சொன்னதே

செய்யும்படி பரதந்த்ரனாகையும், பட்டத்துக்குரியவானையுமரசும் போலே தன்நிரங்குச ஸ்வாதந்த்ர்யத்தாலே நிர்ஹேதுகமாகச் சிலரை யங்கீகரீத்துத் தன்னையவர்களிட்டது வழக்காக்கி வைக்கையும், இரண்டுமீச்வரனுக் குள்ளதொன்று; இதில் முற்பட்டது, ஓரோதசைகளிலே ஸ்வாதந்த்ர்ய நிருத்தமாய் விபலிக்கவுங் கூடும்; பிற்பட்டது, அப்ரதிஹதமாகையாலே ஒருக்காலும் கண்ணழிவில்லை. ஆகையாலே அதிலுங் காட்டிலிது ப்ரபலமென்கை.

**விளக்கம் –** மிகுந்த துன்பம் அடைந்தவர்களாக, தன்னைத் தவிர வேறு புகலிடம் இல்லை என்று தன்னை அடைந்தவர்களாக, தனது திருவடியில் சரணம் புகுந்தவர்களிடம் ஸர்வேச்வரன் மிகுந்த இரக்கம் கொள்கிறான். இதனால் தனது க்ருபை காரணமாக உண்டான பாரதந்த்ர்யமாகும். மாறாக, எந்தவிதமான காரணமும் இன்றி ஒரு சிலரை ஸர்வேச்வரன் அங்கீகாரம் செய்கிறான்; அதன் பின்னர், தான் அவர்கள் சொற்படிக் கேட்டு நடக்கிறான். இது ஸ்வாதந்த்ர்யம் காரணமாக உண்டான பாரதந்த்ர்யமாகும். இந்த இரண்டு தன்மைகளுமே ஸர்வேச்வரனுக்கு உள்ளது. இந்த இரண்டில் முதலில் கூறப்பட்டதான "க்ருபை காரணமாக உண்டான பாரதந்த்ர்யம்" என்பது ஒரு சில நேரங்களில் ஸர்வேச்வரனின் ஸ்வாதந்த்ர்யம் காரணமாகத் தடைப்பட்டு, பலன் அளிக்காமல் போய்விடக்கூடும். ஆனால் இரண்டாவதாகக் கூறப்பட்ட "ஸ்வாதந்த்ர்யம் காரணமாக ஏற்பட்ட பாரதந்த்ர்யம்" என்பது எந்தவிதமான தடையும் இல்லாதது என்பதால், பலன் உண்டாக எந்த இடையூறும் இல்லை. எனவே முந்தையதைக் காட்டிலும் பிந்தையது ஏற்றமானது என்று கருத்து.

149. இவ்வர்த்தத்தை வேதபுருஷனபேக்ஷித்தான்.

**அவதாரிகை -** இவ்வர்த்தந்தான் வேதாபிமதமென்கிறார் மேல் (இவ்வர்த்தத்தை) என்று தொடங்கி.

**விளக்கம் -** "ஸ்வாதந்த்ர்யம் காரணமாக ஏற்பட்ட பாரதந்த்ர்யம்" என்பது எந்தவிதமான தடையும் இல்லாதது என்னும் கருத்தானது, வேதங்களாலும் விரும்பப்படும் கருத்து என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** (இவ்வர்த்தம்) என்கிறது கீழ் ப்ரபலமாகச் சொல்லப்பட்ட பரகதஸ்வீகாரத்தை. (வேத புருஷனித்தை யபேக்ஷித்தான்) என்றது "நாயமாத்மா

ப்ரவசநேந லப்ய: நமேதயா நபஹுநா ச்ருதேந, யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்” என்று கடவல்லியிலும் முண்டகோபநிஷத்திலும் சொல்லுகையாலே யாதரித்தானென்கை. அஸக்ருத் கீர்த்தந மபேக்ஷா கார்யமிறே.

**விளக்கம்** – “இவ்வர்த்தம்” என்பதன் மூலம் கடந்த சூர்ணையில் கூறப்பட்ட ”ஸ்வாதந்த்ர்யம் காரணமான பாரதந்த்ர்யம்” என்பது உணர்த்தப்பட்டது. “வேத புருஷனித்தை யபேக்ஷித்தான்” என்பதன் மூலம் கூறப்படுவது என்ன? கடவல்லியும் (2-43), முண்டக உபநிஷத்தும் (3-2-37) – நாயமாத்மா ப்ரவசநேந லப்ய: நமேதயா நபஹுநா ச்ருதேந, யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் - ஸர்வேச்வரன் மனனம் காரணமாகவோ, பக்தி வடிவமான உபாசனம் காரணமாகவோ, பலவகையான கேள்விகள் மூலமாகவோ அடையப்படுபவன் அல்லன்; ஸர்வேச்வரன் யார் ஒருவனை விரும்பி ஏற்கிறானோ அந்த ஒருவனால் மட்டுமே அடையப்படுபவன்; அந்தச் சேதனனுக்கே ஸர்வேச்வரன் தனது ஸ்வரூபம் உள்ளிட்ட அனைத்தையும் உணர்த்துகிறான் - என்றது காண்க. ஆகவே வேதபுருஷன் இதே கருத்தை ஏற்றான் என்றாகிறது. பலமுறை ”ஏற்கிறான்” என்று கூறப்படுவதன் காரணம் விருப்பத்தால் ஆகும்.

150. அபேக்ஷா நிரபேக்ஷமாகத் திருவடிக்கும் ஸ்ரீகுஹப்பெருமாளுக்கும் இது உண்டாயிற்று.

**அவதாரிகை** - இத்தலையிலபேக்ஷையின்றிக்கேயிருக்க இவ்விஷயீகாரம் ஸித்திக்கப் பெற்றவர்களுண்டோவென்ன வருளிச்செய்கிறார் (அபேக்ஷாநிரபேக்ஷமாக) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஸர்வேச்வரனிடம் தானாகவே வராமல், இப்படிப்பட்ட “ஸ்வாதந்த்ர்யம் காரணமான பாரதந்த்ர்யம்” என்பது கைகூடப்பெற்றவர்கள் யாரேனும் உண்டா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, தந்தாம்பக்கல் அபேக்ஷையின்றிக்கேயிருக்கச்செய்தே, பம்பா தீரத்திலும் கங்காகூலத்திலும் பெருமாள் தாமே சென்றங்கீகரிக்கப் பெற்ற திருவடிக்கும் ஸ்ரீகுஹப்பெருமாளுக்கும் இந்த பரகதஸ்வீகாரா முண்டாய்த்தென்கை.

**விளக்கம் -** தன்னிடம் விருப்பம் இல்லாமல் உள்ளபோதிலும், பம்பை நதியின் கரையிலும், கங்கையின் கரையிலும் இராமன் தானாகவே சென்று ஏற்றுக்கொண்ட அனுமன் மற்றும் குஹன் ஆகிய இருவருக்கும் இந்தப் பரகதஸ்வீகாரம் (ஸ்வாதந்த்ர்யம் காரணமான பாரதந்த்ர்யம்) உண்டானது.

151. இவன் முன்னிடுமவர்களை அவன் முன்னிடுமென்னுமிடம் அபயப்ரதாநத்திலும் காணலாம்.

**அவதாரிகை –** இப்படி ஸ்வதந்த்ரனாயிவர்களை யங்கீகரிக்கிற விடத்திலும், "தமப்யபாஷ ஸௌமித்ரே ஸுக்ரீவ ஸசிவம் கபிம்", "மாழைமான் மடநோக்கி யுன் தோழியும்பி யெம்பி" என்று இளையபெருமாளையும் பிராட்டியையும் முன்னிட்டாப்போலே மற்றும் புருஷகாரத்தை முன்னிட்டு அங்கீகரித்தவிடம் காணலாமோவென்ன வருளிச்செய்கிறார் (இவன்) என்று தொடங்கி.

**விளக்கம் –** இப்படியாக அனுமனையும், குகனையும் எம்பெருமான் ஏற்று அங்கீகரித்த நேரங்களில் பின்வரும் வரிகளில் உள்ளது போன்று லக்ஷ்மணனையும், சீதையையும் புருஷகாரமாக முன்னிட்டே ஏற்றான்:

- இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (3-27) – தமப்யபாஷ ஸௌமித்ரே ஸுக்ரீவ ஸசிவம் கபிம் - லக்ஷ்மணா! சுக்ரீவனுடைய மந்திரியாகவும், பேசுவதில் வல்லவனும் ஆகிய அனுமன், இனிய சொற்களுடன் நம்முடன் எப்போதும் கூடியிருக்கும்படியாக நீ பேசுவாயாக.

- பெரியதிருமொழி (5-8-1) - மாழைமான் மடநோக்கி யுன் தோழியும்பி யெம்பி

மேலே உள்ள வரிகள் போன்று மற்ற புருஷகாரங்களை முன்னிட்டு எம்பெருமான் யாரையேனும் ஏற்றுக் கொண்ட நிகழ்வுகள் உள்ளனவா என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, இச்சேதநன் தான் ஆச்ரயிக்கிறபோது புருஷகாரமாக முன்னிடுமவர்களை, அவனு மங்கீகரிக்குபோதும் முன்னிடுமென்னுமிடம், திருவடியையும் ஸ்ரீகுஹப்பெருமாளையும் அங்கீகரித்த ஸ்தலங்கள் மாத்ரமன்றிக்கே,

ஸ்ரீவிபீஷணாழ்வானை யங்கீகரித்த ஸ்தலத்திலும் காணலாமென்கை. எங்ஙனே யென்னில்? "ஸோஹம்பருஷிதஸ்தேந தாஸவச் சாவமாநித: த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம்கத:" என்று சரணம் புகுந்து, "ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம்" என்று நின்ற விபீஷணாழ்வானை அபயப்ரதாநபூர்வகமாக அங்கீகரிக்கிறவிடத்தில், "ஆநயைநம் ஸ்வயம்" என்று முதலிகளுக்கெல்லாம் மூலபூதரான மஹாராஜரை முன்னிட்டிறே அங்கீகரித்தது. திருவடியையும் ஸ்ரீவிபீஷணாழ்வானையுமங்கீகரிக்கிறவிடத்தில் பிராட்டி ஸந்நிஹிதையல்லாமையாலே யவளை முன்னிட்டமை தோற்றிற்றில்லையேயாகிலும், பிராட்டி லங்கைக்கெழுந்தருளுகிறபோது மஹாராஜரும் திருவடியும் நிற்கிறவிடத்திலே, திருவாபரணங்களைப் பொகட்டு கடாக்ஷித்து வைத்துப்போகையாலும், லங்கையிலே எழுந்தருளினபின்பு ஸ்ரீவிபீஷணாழ்வானைப் பெருமாள் திருவடிகளிலே வரும்படி கடாக்ஷித்தருளுகையாலும், பெருமாளிருவரையு மங்கீகரிக்குமிடத்தில் பிராட்டியை முன்னிட்டே யங்கீகரித்தாரென்று கொள்ளவேண்டும். பரதந்த்ரையான வவளுக்கு இத்தலையில் நினை வொழியத் தனித்தொரு ப்ரவ்ருத்தி கூடாதிறே; ஆகையாலேயிறே, பரகத ஸ்வீகாரம் சொல்லுகிறவிடத்திலே ஸ்ரீவிபீஷணாழ்வானை யங்கீகரித்த தத்தையுமிவர் ஸஹபடித்தது.

**விளக்கம்** - எம்பெருமானை சேதனன் பற்றும்போது யாரைப் புருஷகாரமாகக்கொண்டு பற்றுகிறானோ அதே போன்று ஸர்வேச்வரனும் அவர்களை முன்னிட்டுக் கொண்டே ஏற்கிறான் என்ற நிகழ்வானது அனுமனையும் குகனையும் ஏற்ற இடம் தவிர, விபீஷணனை ஏற்றபோதிலும் காணலாம் எப்படி? இராமாயணம் யுத்தகாண்டம் (17-16) – ஸோஹம்பருஷிதஸ்தேந தாஸவச் சாவமாநித: த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம்கத: - நான் இராவணனுக்கு நன்மையை மட்டுமே உபதேசம் செய்தேன்; ஆனால் அவனால் துன்பமான சொற்கள் உரைக்கப்பெற்றேன்; வேலையாட்களைக் காட்டிலும் தாழ்வாக நடத்தப்பட்டேன்; எனது புத்திரர்களையும் மனைவியையும் விட்ட நான் இராகவனைச் சரணம் புகுந்தேன் – என்று சரணம் அடைத்தான். அப்போது இராமாயணம் யுத்தகாண்டம் (17-13) - ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம் - அனைத்து உயிர்களும் சரணம் புகுவதற்கு ஏற்றவனும், மிகவும் உயர்ந்தவனும் ஆகிய இராகவனிடம் சென்று எனது பெயரான விபீஷணன் என்பதை உடனே தெரிவிப்பீர்களாக - என்று கூறினான். அப்போது அந்த விபீஷணனை இராமாயணம் யுத்தகாண்டம் (18-34) – ஆநயைநம் ஸ்வயம் - வானரர்களின் தலைவனாகிய சுக்ரீவா! அவனை அழைத்து வருவாயாக; அவனுக்கு என்னால் அபயம்

அளிக்கப்பட்டது; விபீஷணனாக இருந்தாலும், இராவணனாக இருந்தாலும் அழைத்து வா - என்று அழைத்து வரக் கூறி, அனைத்திற்கும் முதல்வனான சுக்ரீவன் முன்னிட்டே அபயம் அளித்தான். அனுமனையும், விபீஷணனையும் ஏற்றுக்கொண்ட இடத்தில் அங்கு புருஷகாரமாகப் பெரியபிராட்டி இல்லையே, ஆக அவளை முன்னிட்டுச் சரணாகதி நடைபெற்றதாக வெளிப்படவில்லையே என்று கேள்வி எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். அங்கு பெரியபிராட்டி இல்லை என்றபோதிலும் சுக்ரீவனும், அனுமனும் நின்ற இடத்தில், இராவணனால் தான் அபகரித்துச் செல்லப்பட்டபோது, மேலிருந்து தனது திருவாபரணங்களை அங்கு விழும்படியாகச் செய்து அனுமனைக் கடாக்ஷித்தாள். விபீஷணனின் மனைவியாகிய சரமை என்பவள் சீதையுடன் நட்புடன் இருந்த காரணத்தினால் அவள் மூலமாக விபீஷணன் இராமனின் திருவடிகளை அடையும்படி கடாக்ஷித்தாள் (அல்லது விபீஷணனின் மகளாகிய த்ரிஜடை என்பவள் மூலம் கடாக்ஷித்தாள் என்றும் கொள்ளலாம்). ஆகவே இந்த இருவரையும் பெரியபிராட்டியை முன்னிட்டே இராமன் ஏற்றான் என்றாகிறது. எம்பெருமானுக்கு வசப்பட்டவளான பிராட்டிக்கு, அவனது நினைவுகள் நீங்கலாக வேறு எந்தச் செய்கையும் இருத்தல் பொருந்தாது. ஆகவேதான் பரகத ஸ்வீகாரம் குறித்துக் கூறும்போது, விபீஷணனை இராமன் ஏற்றதைப் பற்றிக் கூறினார்.

152. இருவர் முன்னிடுகிறது தந்தாம் குற்றங்களை சமிப்பிக்கைக்காக.

**அவதாரிகை** - இவன் நிருபாதிக சேஷபூதனாய் அவன் நிருபாதிகசேஷியாயிருக்கையாலே அவ்யவதாநேந ஆச்ரயிக்கவும் அங்கீகரிக்கவு மமைந்திருக்க, இப்படியிருவரும் புருஷகாரத்தை முன்னிடுகிற தெதுக்காகவென்ன வருளிச்செய்கிறார் (இருவர் என்று தொடங்கி).

**விளக்கம்** - (சூர்ணையில் உள்ள இருவர் என்பது சேதனன் மற்றும் ஈச்வரன் ஆவர். சமிப்பிக்கை என்றால் பொறுத்துக்கொள்ளுதல் என்று பொருள்). சேதனன் எந்தவிதமான காரணமும் இன்றி அவனுக்கு அடிமையாகவும், ஸர்வேச்வரன் எந்தவிதமான காரணமும் இன்றி எஜமானனாகவும் உள்ளனர். இப்படி உள்ளபோது சேதனன் நேராகச் சென்று எம்பெருமானைப் பற்றுவது என்பதும், அவன் இவனை நேரடியாக ஏற்பது என்பதும் நிகழலாம். அல்லவா? இதற்கு ஏன் இவர்கள் இருவரும் புருஷகாரமாக மற்றொருவரை நாடவேண்டும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** சேதநனுக்குக் குற்றமாவது, அநாதிகாலமவன் பக்கல் விமுகனாய் அந்ய விஷயப்ரவணனாய் ததாஜ்ஞாதிலங்கநமேபண்ணிக் கூடுபூரித்து வைத்தவபராதம்; ஈச்வரனுக்குக் குற்றமாவது, அவர்ஜநீயமான ஸம்பந்தமுண்டாயிருக்க அபராதத்தையே கணக்கிட்டு அநாதிகாலமிவனை யகலவடித்திருந்தவிது. இவன்றன் குற்றத்தை சமிப்பிக்கையாவது – இத்தைப் பார்த்து ஈச்வரன் சீறாதபடி பண்ணுகை; அவன்றன் குற்றத்தை சமிப்பிக்கையாவது – இத்தை நினைத்து சேதநன் வெருவாதபடி பண்ணுகை.

**விளக்கம்** – சேதனனிடம் உள்ள குற்றங்கள் எவை என்றால்: எல்லையற்ற காலமாக ஸர்வேச்வரனிடம் எந்தவிதமான ஈடுபாடும் அற்றவனாக, மற்ற உலகவிஷயங்களில் ஈடுபாடு கொண்டவனாக, ஸர்வேச்வரனின் ஆணைகளை எப்போதும் மீறியபடி உள்ளவனாக, நெல் முதலிய தான்யங்கள் களஞ்சியத்தை நிறைப்பது போன்று தனது பாவங்களால் ஆத்மாவை நிறைத்து வைப்பவனாக உள்ள தன்மையே ஆகும். ஸர்வேச்வரனிடம் உள்ள குற்றங்கள் எவை என்றால்: சற்றும் நீக்க இயலாத ஸம்பந்தம் என்பது சேதனர்களிடம் இவனுக்கு உள்ளபோதிலும், சேதனர்களின் பாவங்களை மட்டுமே கணக்கில் வைத்தபடி இருந்து, எல்லையற்ற காலம் அந்தப் பாவங்களின் காரணமாக சேதனனைத் தன்னருகில் சேர்க்காமல் தள்ளி வைத்திருத்தல் ஆகும். புருஷகாரமாக உள்ள பிராட்டி சேதனனின் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளும்படிச் செய்வது என்றால்: இவனது குற்றங்களைக் கண்டு ஸர்வேச்வரன் கோபம் கொண்டு சீறாமல் செய்வதாகும். ஸர்வேச்வரனின் குற்றத்தை பிராட்டி சமிப்பிக்கை என்றால்: தனது குற்றங்களைக் கண்டு அச்சம் கொண்ட சேதனனை ஆறுதல்படுத்தி, அதன் காரணமாக அவன் ஈச்வரனை விட்டு அகலாதபடி செய்தல் ஆகும்.

153. ஸ்வரூபஸித்தியுமத்தாலே.

**அவதாரிகை -** இவ்வளவேயன்று, இன்னமுமிதுக்கொரு ப்ரயோஜநமுண் டென்கிறார் (ஸ்வரூப) இத்யாதியாலே.

**விளக்கம் -** இது மட்டும் அல்ல, புருஷகாரத்தினால் மேலும் ஒரு பயன் உள்ளது என்கிறார்.

**வ்யாக்யானம் -** ஸ்வரூபமாவது இவனுக்கு ததீய பாரதந்த்ர்யம்; அவனுக்கு ஆச்ரித பாரதந்த்ர்யம்; "தேவுந் தன்னையும்" என்று ஆச்ரித பாரதந்த்ர்யத்தையிறே யவனுக்கு

தானான தன்மையாகவாழ்வாரருளிசெய்தது. இவையிரண்டு மிருவர்க்கும் ஸித்திப்பது புருஷகார புரஸ்கரணத்தாலே என்கை.

**விளக்கம்** - ஸ்வரூபம் என்பது என்ன? சேதனனைப் பொறுத்தவரையில் ஸர்வேச்வரனின் உடைமையாக உள்ள பிராட்டிக்குக் கீழ்ப்படிந்து இருத்தல் (ததீய பாரதந்த்ர்யம்); ஸர்வேச்வரனைப் பொறுத்தவரையில், தன்னைப் பற்றி நிற்கும் பிராட்டிக்கு வசப்பட்டிருத்தல் (ஆச்ரித பாரதந்த்ர்யம்) என்பதாகும். திருவாய்மொழி (2-7-4) – தேவுந் தன்னையும் - என்ற பாசுரத்தின் மூலம் ஆச்ரித பாரதந்த்ர்யம் என்பதையே ஸர்வேச்வரனின் ஸ்வரூபமாக ஆழ்வார் உரைத்தது காண்க. சேதனன் ஸர்வேச்வரனை அண்டும்போது ஸர்வேச்வரனுக்கு ஆச்ரித பாரதந்த்ர்யம் வெளிப்படுவது என்பது புருஷகாரத்தினால் ஆகும்.

154. ஔபாதிகமுமாய் நித்யமுமான பாரதந்த்ர்யம் இருவர்க்கு முண்டிறே.

**அவதாரிகை** – கீழே “ஸ்வரூபம்” என்று சொன்னதை உபபாதிக்கிறார் (ஔபாதிகமுமாய்) என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறிய ஸ்வரூபம் பற்றி மேலும் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சேதநனுக்கிவ்விஷயத்தில் பாரதந்த்ர்யம் ததீயத்வ ப்ரயுக்த மாகையாலே ஔபாதிகமுமாய், அவ்வுபாதிதான் நித்யமாகையாலே நிருபாதிக பகவத் பாரதந்த்ர்யத்தோபாதி நித்யமுமாயிருக்கும்; ஈச்வரனுக்கிவ்வி ஷயத்தில் பாரதந்த்ர்யம் ஆச்ரிதத்வ ப்ரயுக்தமாகையாலே ஔபாதிகமுமாய் அவ்வுபாதி நித்யமாகையாலே அதுதானும் நித்யமாயிருக்குமென்கை. ”இருவர்க்குமுண்டு” என்னாதே, ”உண்டிறே” என்றது, இவ்வர்த்தத்தில் ப்ரமாண ப்ரஸித்தியைத் தோற்றுவிக்கைக்காக.

**விளக்கம்** - சேதனன் ஒருவனுக்குப் பெரியபிராட்டி விஷயத்தில் பாரதந்த்ர்யம் என்பது, “பெரியபிராட்டியானவள் ஸர்வேச்வரனின் உடைமை” என்ற காரணத்தை முன்னிட்டு ஏற்படுவதால் ஔபாதிகமாக (காரணத்தின் அடிப்படையில் ஏற்பட்ட ஒன்று) இருக்கும். மேலும் பெரியபிராட்டி ஸர்வேச்வரனின் உடைமை என்பது எப்போதும் உள்ளதால், எந்தவிதமான காரணத்தின் அடிப்படையிலும் வராத பகவத் பாரதந்த்ர்யம் போன்று

நித்யமாக இருக்கும். ஸர்வேச்வரனுக்குப் பெரியபிராட்டி விஷயத்தில் பாரதந்த்ர்யம் என்பது, “தன்னைப் பற்றுபவள்” என்ற காரணத்தின் அடிப்படையில் உள்ளதால் ஔபாதிகமாக உள்ளது. ஆயினும் அந்தக் காரணம் என்பது நித்யமாக உள்ளதால், பாரதந்த்ர்யம் என்பது நித்யமாக உள்ளதாகிறது. “இருவருக்கும் உண்டு” என்று கூறாமல் “இருவருக்கும் உள்ளதைக் காணலாம் அல்லவா” என்று கூறியதன் காரணம் இந்தக் கருத்திற்குப் பல ப்ரமாணங்கள் உள்ளன என்பதை உணர்த்தவே ஆகும்.

155. அநித்யமான விருவர் பாரதந்த்ர்யமும் குலைவது அத்தாலே.

**அவதாரிகை** - இவ்வளவன்று இன்னமுமிதுக்கொரு ப்ரயோஜநமுண்டென்கிறார் (அநித்யமான) என்று தொடங்கி.

**விளக்கம்** - இது மட்டுமே அல்ல, மேலும் ஒரு பலன் உள்ளது என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அநித்யமான பாரதந்த்ர்யமாவது கர்மபாரதந்த்ர்யம். அதில் சேதநனுக்கு கர்மபாரதந்த்ர்யமாவது: அவச்ய மநுபோக்தவ்யங்களான சுபாசுப கர்மங்களின் வசத்திலே இழுப்புண்டு ஸம்ஸரிக்கை; ஈச்வரனுக்கு கர்மபாரதந்த்ர்யமாவது: தான் செய்த கர்மம் தானநுபவிக்கிறானாகில் நாம் செய்வதென்? என்று இவன் செய்த கர்மத்தையே ப்ரதாநமாக்கி அதுக்கீடாகவே நிர்வஹித்துக்கொண்டு போருகை. இது நடப்பது “ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி” என்னுமளவுமாகையாலே, இத்தை அநித்யமென்கிறது. இவை புருஷகார புரஸ்கரணத்தாலே குலைகையாவது - இவன் முன்னிடுமளவில் அத்தலையைத் திருத்தியும், அவன் முன்னிடுமளவில் இத்தலையைத் திருத்தியும், இரண்டு தலையும் ரக்ஷ்யரக்ஷகபாவேந சேரும்படி பண்ணுகையாலே இவை தன்னடையே நிவ்ருத்தமாகை.

**விளக்கம்** - “அநித்யமான பாரதந்த்ர்யம்” என்றால் கர்ம பாரதந்த்ர்யம் ஆகும் (கர்மத்திற்கு வசப்படல்). சேதனன் ஒருவனின் கர்ம பாரதந்த்ர்யம் என்பது கண்டிப்பாக அனுபவித்தே தீரவேண்டும் என்பதான நல்வினை மற்றும் தீவினைப் பயன்களால் ஈர்க்கப்பட்டு, அவற்றின் பிடியில் சிக்கி, ஸம்ஸாரத்தில் ஆழமாகக் கிடத்தல் ஆகும். ஸர்வேச்வரன் கர்மத்திற்குப் பாரதந்த்ர்யப்படுதல் என்பது – “இந்தச் சேதனன் தான் செய்த கர்மங்களின் பலன்களை அனுபவிக்கிறான். இதில் நாம் என்ன செய்ய உள்ளது?” என்று எண்ணியபடி,

சேதனர்களின் கர்மங்களை முன்னிட்டுக்கொண்டு, அவற்றுக்கு ஏற்றபடி அவர்களை வழிநடத்திச் செல்லுதல் என்பதாகும். இப்படியாகச் சேதனன் சிக்குண்டு கிடத்தல், என்பதும், வழிநடத்திச் செல்லுதல் என்பதும், கீதையில் (18-66) – ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – அனைத்து பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன் – என்ற நிலை முடிய மட்டுமே என்பதால், கர்ம பாரதந்த்ர்யத்தை “அநித்யம்” என்றார். ஆனால் இந்த இரண்டும், சேதநன் புருஷகாரத்தை முன்னிடும்போது ஸர்வேச்வரனைத் திருத்தியும், ஸர்வேச்வரன் புருஷகாரத்தை முன்னிடும்போது சேதனனைத் திருத்தியும், ஒருவன் காக்கப்படும் பொருள், மற்றவன் காக்கும் பொருள் என்று இருவரையும் சேர வைப்பதும் செய்வதால் இவர்களது கர்ம பாரதந்த்ர்யம் தானாகவே நீங்கும் என்று கருத்து.

156. ஸஸாக்ஷிகமாகையாலே இப்பந்தத்தை யிருவராலுமில்லை செய்யப்போகாது.

**அவதாரிகை** - அநாதிகால ஸ்வதந்த்ரனாய் யாதானும் பற்றி நீங்கித் திரிந்தவிவன் இன்றிறே ஆபிமுக்க்யம் பண்ணிற்று; ப்ரக்ருதியோடே யிருக்கையாலே துர்வாஸநை மேலிட்டு ஆச்ரயணாங்கீகாரங்களாலே உத்பூதமான இந்த ரக்ஷ்ய ரக்ஷக பந்தத்தையில்லை செய்து பழையபடியே போகப்பார்க்குதல், நிரங்குச ஸ்வதந்த்ரனாய் கர்மாநுகுணமாக விவனை லீலையிலே யநாதிகாலம் விநியோகங்கொண்டு போந்த வீச்வரன்றானிப்பந்தத்தை யில்லை செய்து முன்பு போலே இவனை கர்மாநுகுணமாக நிர்வஹிக்கப் பார்க்குதல் செய்யிலோவென்ன வருளிச்செய்கிறார் (ஸஸாக்ஷிகம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - எல்லையற்ற காலமாகச் சேதனன் தனக்குத் தானே உரியவன் என்று எண்ணியவனாக, உலகவிஷயஙளை மட்டுமே பற்றித் திரிகின்றவனாக உள்ளான். அதன் பின்னர் ஒருநாள் ஸர்வேச்வரன் முன்பாக வந்து அன்பு பூண்டு நிற்கிறான். ஆனாலும் அந்தச் சேதனன் சரீரத்துடன் கூடியவன் என்பதால் தீயவாசனைகள் மீண்டும் தலை தூக்கலாம். அப்போது அவன் வந்து பற்றியதாலும், ஸர்வேச்வரன் ஏற்றுக்கொண்டதாலும் உண்டான ”காக்கப்படுபவன், காப்பவன்” என்ற உறவு முறையைத் தள்ளிவிட்டு, மீண்டும் பழைய நிலைக்குச் சேதனன் சென்றுவிட்டால் என்ன ஆகும்? யாராலும் தடுக்க இயலாத சுதந்திரத்துடன் கூடிய ஸர்வேச்வரன், கர்மங்களின் அடிப்படையில் சேதனனின் பிறப்பு மற்றும் இறப்பு ஆகிய சுழற்சியில் தனது லீலையை நடத்தியபடி உள்ளான். இப்படி உள்ள ஸர்வேச்வரன் சட்டென்று மேலே கூறப்பட்ட ”காக்கப்படுபவன், காப்பவன்” என்ற உறவு முறையைத் தள்ளிவிட்டு, முன்பு போன்றே இந்தச் சேதனனை கர்மங்களின் பிடியில்

இட்டு நடத்த முயன்றால் என்ன ஆகும்? இந்த இரண்டு கேள்விகளுக்கும் விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இந்த ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்த மிரண்டு தலையுமறிந்ததாக வந்த தன்றிக்கே புருஷகாரரூப ஸாக்ஷி ஸஹிதமாக வந்ததாகையாலே, இத்தை இருவராலு மழிய மாறப்போகாதென்கை.

**விளக்கம்** - "காக்கப்படுபவன், காப்பவன்" என்ற உறவுமுறை என்பது "தான் காக்கப்படும் பொருள்" என்று சேதனன் அறிந்த காரணத்தினாலோ அல்லது "தான் காப்பவன்" என்று ஸர்வேச்வரன் உணர்ந்த காரணத்தினாலோ வந்தது அல்ல. புருஷகாரமாக உள்ள பெரியபிராட்டி என்னும் சாட்சியை ஆதாரமாகக் கொண்டு வந்ததால், இந்த உறவுமுறை என்பது இந்த இருவரும் தாங்களாகவே அழிக்க முயன்றாலும் அறியாதது என்கிறார்.

158. கர்மணி வ்யுத்பத்தியில் ஸ்வரூபகுணங்களால் வருகிற கர்த்ருஸங்கோச ராஹித்யத்தை நினைப்பது.

**அவதாரிகை** – (ஸஸாக்ஷிகமான விப்பந்தத்தை யில்லை செய்யப் போகாது) என்றது - ஸாக்ஷியான புருஷகார விஷயத்தி லிருவர்க்குமுண்டான நித்யபாரந்த்ர்யத்தைப் பற்ற வகையாலே, இருவர்க்கு மிவ்விஷயத்திலுண்டான நித்யபாரதந்த்ர்யத்தில் ப்ரமாணங் காட்டுகிறார் மேல் (கர்மணி) என்று தொடங்கி.

**விளக்கம்** – "ஸஸாக்ஷிகமான விப்பந்தத்தை யில்லை செய்யப் போகாது" என்று சூர்ணை 156-ல் கூறப்பட்டதை ப்ரமாணத்துடன் விளக்குகிறார். அந்தச் சூர்ணையின் மூலம், அந்த உறவுக்கு சாக்ஷியான பெரியபிராட்டி விஷயத்தில் ஈச்வரன் மற்றும் சேதனன் ஆகிய இருவருக்கும் எப்போதும் உள்ள பாரதந்த்ர்யம் உணர்த்தப்படுகிறது. ஆகவே இந்த இருவருக்கும் பெரியபிராட்டி விஷயத்தில் உள்ள பாரதந்த்ர்யம் நித்யமானது என்பதற்கு ப்ரமாணம் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (கர்மணி வ்யுத்பத்தி) யாவது – "ச்ரீங்ஸேவாயாம்" என்கிற தாதுவில், "ஸ்ரீயதே" என்கிற வ்யுத்பத்தி. இதுக்கர்த்தம் – ஸேவிக்கப்படாநின்றா ளென்றிறே. இவ்வ்யுத்பத்தியில், (ஸ்வரூப குணங்களால் வருகிற கர்த்ரு ஸங்கோச ராஹித்யமாவது) –

சேஷத்வமாகிற ஸ்வரூபத்தாலும் ப்ரணயித்வமாகிற குணத்தாலும் வருகிற சேதந பரமசேதநர்களாகிற ஸேவாகர்த்தாக்களுக்கு ஸங்கோசமில்லாமை. அதாவது - இரண்டு தலைக்குமிவள் விஷயத்தி லுண்டான ஸேவை அவிச்சிந்நமாய்ச் சொல்லுகை. இத்தை (நினைப்பது) என்றது - இவ்விஷயத்தி லிரண்டு தலைக்கு முண்டான பாரதந்த்ர்யத்தை ஸ்மரிப்பதென்றபடி.

**விளக்கம்** – " கர்மணி வ்யுத்பத்தி" என்பது என்ன? கர்மணி வ்யுத்பத்தி என்றால் செயல்பாட்டுவினை என்பதாகும் (passive voice). "ச்ரீங்ஸேவாயாம்" என்றால் என்ன? "ஸ்ரீ" என்ற பதத்திற்கு ஆறுவகையான வ்யுத்பத்தி (வினைப்பொருள்) உரைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று "ச்ரீங்ஸேவாயாம்" என்னும் தாதுவில் அமைக்கப்பட்ட "ஸ்ரீயதே" என்ற வ்யுத்பத்தி ஆகும். இது "ஸ்ரீயதே இதி ஸ்ரீ:" - அனைவராலும் பற்றப்படுகிறாள் – என்பதாகும். "அனைவராலும் வணங்கப்படுகிறாள்" என்ற நிலைக்கு ஒருவரது ஸ்வரூபத்திற்கு ஏற்ப குறைவு உண்டாகுமோ என்ற சந்தேகம் தோன்ற, அதற்கு விடை அளிக்கிறார். இந்த நிலைக்கு ஸ்வருபத்தின் குணங்களால் உண்டாகிற எந்தவிதமான குறையும் இல்லை என்கிறார். சேதனர்களுக்கு உள்ள சேஷத்வ ஸ்வரூபம் காரணமாக சேதனர்களும் (அனைத்து சேதனர்களும் எம்பெருமானின் வசப்பட்டவர்கள், அவன் பெரியபிராட்டியின் வசப்பட்டவன், ஆக அனைவரும் பெரியபிராட்டியின் வசப்பட்டவர்கள்), எல்லையற்ற காதல் காரணமாக ஸர்வேச்வரனும் பெரியபிராட்டியை வணங்கியே நிற்கின்றனர் என்பதால் "அனைவராலும் வணக்கப்படுகிறாள்" என்பதற்கு எந்தக் குறைவும் இல்லை (மனைவியைக் கணவன் வணங்குதல் என்பது பல தமிழ் நூல்களிலும் காணப்படுகின்ற தமிழர் மரபே ஆகும்). அதாவது இவள் விஷயத்தில் உள்ள பாரதந்த்ர்யம் என்பது இருவருக்கும் எந்தவிதமான இடையூறும் இன்றி உள்ளது. இதனை "நினைப்பது" என்பதன் கருத்து - இப்படியாக இவர்கள் இருவருக்கும் பெரியபிராட்டி விஷயத்தில் உண்டான பாரதந்த்ர்யம் பற்றி நினைத்தல் – என்பதாகும்.

159. அதிகாரி த்ரயத்துக்கு புருஷகார மவர்ஜநீயம்.

**அவதாரிகை** - இப்படியிருக்கையால் இப்புருஷகாரம் ப்ரபத்தியதிகாரிக ளெல்லார்க்கும் அவச்யாபேக்ஷிதமென்கிறார் மேல் (அதிகாரி) இத்யாதியாலே.

**விளக்கம் -** இப்படியாக உள்ளதால் புருஷகாரம் என்பது ப்ரபத்தியைக் கைக்கொள்ளும் அதிகாரிகள் அனைவருக்கும் அவசியம் இருக்கவேண்டியதாகிறது என்கிறார்.

**வ்யாக்யானம் -** (அதிகாரி த்ரயமாவது) - அஜ்ஞர், ஜ்ஞாநாதிகர், பக்தி விவசர் என்கிற மூன்றதிகாரிகளும். இவர்களுக்கு (புருஷகார மவர்ஜநீயம்) என்கிறது – குற்றத்தை சமிப்பிக்கை முதலானவற்றுக்கு புருஷகாராந்வயம் வேண்டுகையாலே, ஸர்வதா கைவிட வொண்ணாதென்கை. அதவா, இப்புருஷகாரந்தான் அநந்யப்ரயோஜநராய் ப்ரபத்தி பண்ணுமவர்களுக்கேயோ, ப்ரயோஜநாந்தரபரராய்ப் பண்ணுமவர்க்கும் வேணுமோ வென்ன வருளிச் செய்கிறார் (அதிகாரி) இத்யாதியாலே. (அதிகாரித்ரயம்) என்கிறது - ஐச்வர்ய கைவல்ய பகவச்சரணார்த்திகள். இவர்கள் மூவர்க்கும் (புருஷகார மவர்ஜநீயம்) என்றது - ஸ்வஸ்வாபிலக்ஷித ஸித்திக்கு ஈச்வரனை யுபாயமாக ஸ்வீகரிக்குமளவில் இவர்களபராதங்களைப் பொறுத்து அவனங்கீகரிக்கும்படி பண்ணுகைக்கு புருஷகார மவச்யாபேக்ஷித மென்கை. ”பூர்வவாக்யத்தில் புருஷகார பூர்வகமான உபாய வரணம் ப்ரயோஜ்நாந்தரபரர்க்கும் பொதுவாகையாலேயிறே, உத்தரவாக்யத்தாலே அநந்ய ப்ரயோஜநத்வத்தை ப்ரகாசிப்பிக்க வேண்டுகிறது; பூர்வவாக்யத்தில் ப்ரதிபாதிதமான ஸாதந விசேஷம் பலசதுஷ்டய ஸாதாரணமாயிறே யிருப்பது. அதில் இவ்வதிகாரிக்கு அபிலக்ஷிதமான பல விசேஷமின்ன தென்னுமிடத்தை ப்ரகாசிப்பிக்கிறது இவ்வாக்யம்” என்று பரந்தபடியிலும்; “கீழ்ச்சொன்ன ஸாதநம் பல சதுஷ்டய ஸாதாரணமாயிருக்கையாலே இவனுக்கபேக்ஷிதமான பல விசேஷத்தைச் சொல்லுகிறது” என்று ச்ரிய:பதிப்படியிலும்; “உத்தர வாக்யத்தாலே ப்ராப்யம் சொல்லுகிறது, ப்ராப்யாந்தரத்துக் கன்றென்கை” இத்யாதியாலே முமுக்ஷுப்படியிலும் இவர்தாமேயருளிச் செய்தாரிறே. “திருமாலைக் கைதொழுவர்”, “அடியாரைச் சேர்தல் தீர்க்குந் திருமாலை” என்கிறபடியே, புருஷகாரம் முன்னாகப் பற்றி ப்ரயோஜநங்களைக் கொண்டகலாதே அவற்றை யொழிந்து “ஒண்டொடியாள் திருமகளுமவனுமான சேர்த்தியி லடிமையைப் பேறென்று கீழ்ச்சொன்னவுபாய பலத்தைக் காட்டுகிறது பிற்கூறு” என்றிறே இவர் திருத்தம்பியாரும் அருளிச்செயல் ரஹஸ்யத்திலருளிச் செய்தது. ஆக, (இவனவனை) என்று தொடங்கி இவ்வளவாக – ஸ்வகத ஸ்வீகாராநுபாயத்வமும், பரகத ஸ்வீகாரோபாயத்வமும், தத்ப்ராபல்யமும், அவனே ஸ்வீகரிக்குமளவிலும் புருஷகாரம் முன்னாகவே ஸ்வீகரிக்கும்படியையும், இருவருமிப்புருஷகாரத்தை முன்னிடுகிறது தனக்கு ப்ரயோஜந மின்னதென்னுமிடமும், ப்ரபத்த்யதிகாரிக ளெல்லாருக்கும் புருஷகார மவர்ஜநீய மென்னுமதுவும் சொல்லப்பட்டது.

**விளக்கம்** – ”அதிகாரி த்ரயமாவது” என்றால் அஜ்ஞர், ஜ்ஞாநாதிகர் மற்றும் பக்தி பரவசர் என்பவர் ஆவர் (இவர்கள் பற்றி சூர்ணை 42 மற்றும் 43-ல் காண்க). இவர்களுக்குப் புருஷகாரம் அவர்ஜநீயம் (அவர்ஜநீயம் = எப்போதும் கைவிடத்தக்கது அல்ல) என்றால் - குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளும்படிச்செய்தல் போன்ற பலவற்றுக்கும் புருஷகாரத்தின் தொடர்பு அவசியம் என்பதால், புருஷகாரமானது எப்போதும் கைவிட இயலாத ஒன்று – என்பதாகும். இந்தப் புருஷகாரம் என்பது மற்ற எந்தவிதமான பயன்களையும் எண்ணாமல் ப்ரபத்தி செய்பவர்களுக்கு மட்டும் வேண்டுமா அல்லது மற்ற பயன்களையும் மனதில் கொண்டு ப்ரபத்தி செய்பவர்களுக்கும் வேண்டுமா என்ற கேள்விக்கு இந்தச் சூர்ணை மூலம் விடை அளிக்கிறார் என்றும் கூறலாம். இவ்விதமாகச் சூர்ணைக்குப் பொருள் கொண்டால் “அதிகாரித்ரயம்” என்பது - ஐச்வர்யம், கைவல்யம் மற்றும் பகவத் சரணார்த்திகளைக் குறிக்கும் (இவர்களில் முதல் இரு பிரிவினரும் பயன்களை எண்ணி ப்ரபத்தி செய்பவர்கள், மூன்றாமவர் பயன் ஏதும் எண்ணாமல் ப்ரபத்தி செய்பவர்). இவர்களுக்குப் புருஷகாரம் அவர்ஜநீயம் என்றால் என்ன? இவர்கள் மூவரும் அவரவர்கள் விரும்பும் பலனை அடைவதற்காக ஈச்வரனை உபாயமாகக் கொள்கின்றனர்; அப்போது இவர்களது குற்றங்களைப் பொறுத்துக் கொண்டு, அவன் இவர்களை ஏற்கும்படியாகச் செய்வதற்குப் புருஷகாரம் அவசியம் வேண்டியதாகிறது; எனவே இவர்களால் புருஷகாரம் கைவிடத்தக்கது அல்ல.

இப்படியாக மேலே இரண்டாவதாக உரைக்கப்பட்ட பொருளில் கூறப்பட்ட மூன்று விதமான அதிகாரிகளுக்கும் ப்ரபத்தியின்போது புருஷகாரம் அவசியம் என்பதைத் தகுந்த ப்ரமாணங்கள் மூலம் அருளிச்செய்கிறார். இதனை இவர் (ஸ்வாமி பிள்ளைலோகாசார்யார்) கீழே மூன்று க்ரந்தங்கள் மூலமாக அருளிச்செய்தமை காண்க:

- பரந்தபடி - பூர்வவாக்யத்தில் புருஷகார பூர்வகமான உபாய வரணம் ப்ரயோஜ்நாந்தரபரர்க்கும் பொதுவாகையாலேயிறே, உத்தரவாக்யத்தாலே அநந்ய ப்ரயோஜநத்வத்தை ப்ரகாசிப்பிக்க வேண்டுகிறது; பூர்வவாக்யத்தில் ப்ரதிபாதிதமான ஸாதந விசேஷம் பலசதுஷ்டய ஸாதாரணமாயிறே யிருப்பது. அதில் இவ்வதிகாரிக்கு அபிலக்ஷிதமான பல விசேஷமின்ன தென்னுமிடத்தை ப்ரகாசிப்பிக்கிறது இவ்வாக்யம் - த்வய மந்த்ரத்தின் முதல் வாக்கியம் மூலம் ”புருஷகாரத்தை முன்னிட்ட ப்ரபத்தி” என்பது பயன்களை எதிர்பார்த்து ப்ரபத்தி செய்பவர்களுக்கும் பொதுவானது என்று உணர்த்தப்பட்டது. இதன் காரணமாகவே இரண்டாவது வரியின் மூலம் பயன்களை எதிர்பாராமல் செய்யும் ப்ரபத்தி குறித்துத் தெளிவுபடுத்த வேண்டியதாயிற்று. முதல் வாக்கியம் மூலம்

வெளிப்படும் சாதனம் என்பது இழந்த செல்வம், புதியதான செல்வம், கைவல்யம் மற்றும் மோக்ஷம் ஆகிய நான்கினை அடைவதற்குப் பொதுவாகவே உள்ளதாகிறது. இவற்றில் கைங்கர்யத்தை மட்டுமே விரும்பும் அதிகாரிக்கு விருப்பம் இன்னது என்பதை த்வயத்தின் முதல் வாக்கியம் தெளிவாக்குகிறது.

- ச்ரிய:பதிப்படி – கீழ்ச்சொன்ன ஸாதநம் பல சதுஷ்டய ஸாதாரணமாயிருக்கையாலே இவனுக்கபேக்ஷிதமான பல விசேஷத்தைச் சொல்லுகிறது - த்வயத்தின் முதல் வாக்கியமானது நான்கு விதமான பலன்கள் பற்றியும் பொதுவாக உள்ளதால், நான்காம் பலனாகிய மோக்ஷம் விரும்பும் அதிகாரியின் விருப்பம் குறித்து த்வயத்தின் இரண்டாம் வாக்கியம் உரைக்கிறது.

- முமுக்ஷுப்படி – உத்தர வாக்யத்தாலே ப்ராப்யம் சொல்லுகிறது, ப்ராப்யாந்தரத்துக் கன்றென்கை – த்வயத்தின் பின் வாக்கியம் மூலம் (மோக்ஷ) பலன் பற்றி மட்டுமே கூறப்படுகிறது அல்லாமல் மற்ற பலன்கள் பற்றி அல்ல.

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யரின் திருத்தம்பியாரான ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள்நாயனார் தனது அருளிச்செயல் ரஹஸ்யத்தில் உரைப்பது என்னவென்றால் - முதல்திருவந்தாதி (52) - திருமாலைக் கைதொழுவர், திருவாய்மொழி (1-5-7) - அடியாரைச் சேர்தல் தீர்க்குந் திருமாலை - போன்ற பாசுரங்களில் கூறப்படுவது போன்று புருஷகாரத்தை முன்னிட்டு ஸர்வேச்வரனைப் பற்றிய பின்னர், அற்பமான பயன்களைப் பெற்ற பின் அவனை விட்டு அகலக்கூடாது; மாறாக இது போன்ற பயன்களை ஒழிக்கவேண்டும்; திருவாய்மொழி (4-9-10) – ஒண்டொடியாள் திருமகளுமவனுமான சேர்த்தியி லடிமையைப் பேறென்று கீழ்ச்சொன்னவுபாய பலத்தைக் காட்டுகிறது பிற்கூறு - பெரியபிராட்டியும் ஸர்வேச்வரனும் ஒன்றாக உள்ளபோது அவனுடைய கைங்கர்யத்தை எதிர்பார்த்துப் பெறவேண்டும் என்று அல்லவோ த்வயத்தின் இரண்டாம் வாக்கியம் உரைக்கிறது - என்பதாகும்.

ஆகவே “இவன் அவனைப் பெற” என்றுள்ள சூர்ணை 142 தொடங்கி இந்தச் சூர்ணை முடிய, நாமாகவே அவனைக் கைக்கொள்வது ஏற்காது (ஸ்வகத ஸ்வீகாரம்) என்பதும், அவனே வந்து நம்மைக் கைக்கொள்வதே (பரகதஸ்வீகாரம்) ஏற்புடையது என்பதும், பரகதஸ்வீகாரத்தின் வலிமையும், ஸர்வேச்வரனே நம்மை வலிய வந்து ஏற்றுக்

கொள்கின்ற நேரத்திலும் புருஷகாரமாகப் பெரியபிராட்டியை முன்னிட்டே ஏற்கிறான் எனபதும், சேதனன் மற்றும் ஸர்வேச்வரன் ஆகிய இருவரும் புருஷகாரத்தை முன்னிடுவதற்குப் பயன் இன்னது என்பதும், ப்ரபத்தியைக் கைக்கொள்ளும் அனைத்துவிதமான அதிகாரிகளுக்கும் புருஷகாரம் கண்டிப்பாக தேவையானதாகும் என்பதும் கூறப்பட்டன.

**மூலம் -** ப்ரதம ப்ரகரணத்திலே, புருஷகார வைபவகதநமுகேந "ஸ்ரீமத்" பதார்த்தத்தையும் உபாயவைபவகதநமுகேந "நாராயண சரணௌ சரணம்" என்கிற பதங்களினர்த்தங்களையும் ப்ரதிபாதித்த வநந்தரம், (ப்ரபத்திக்கு தேச நியமமும்) என்று தொடங்கி "ப்ரபத்யே" என்கிற பதத்தால் சொல்லப்பட்ட ப்ரபத்தியினுடைய தேசகாலாதி நியமாபாவத்தையும், அதுக்கு விஷய நியமம் சொல்லுகைக்காக (குணபூர்த்தி யுள்ளவிடமே விஷயமாகை) என்று தொடங்கி முக்தகண்டமாக மீளவும் நாராயண பதார்த்தத்தையும் (இதில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகள் மூவர்) என்று உத்தமனாலே ஆக்ஷிப்பதனான வதிகாரியையும் ப்ரபத்தியில் ஸாதநத்வமில்லாமையையும், ப்ரபத்த் யதிகாராபேக்ஷிதமான சக்தி லஜ்ஜா யத்ந நிவ்ருத்தி சமதமாதிசயம் முதலானவற்றையும், ப்ரபத்த்யங்கதயா த்யாஜ்யமான உபாயாந்தரத்தினுடைய தோஷ பூயஸ்த்வத்தையும், தத்ப்ரதிகோடிதயா ப்ரபத்தியினுடைய நைர்தோஷ்யாதிகளையும், ப்ரபத்தி ப்ரஸங்கத்தாலே முகபேதேந ஸ்வகத ஸ்வீகாராநுபாயத்வத்தையும் பரகத ஸ்வீகாரோபாயத்வத்தையும், தத்ப்ராபல்யத்தையும் அவனே ஸ்வீகரிக்குமளவிலும் புருஷகாரத்தை முன்னிட்டே ஸ்வீகரிக்குமென்னுமிடத்தையும், உபயரும் புருஷகாரத்தை முன்னிடுமதுக்குண்டான ப்ரயோஜந விசேஷங்களையும், அதிகாரி த்ரயத்துக்கு புருஷகார மவர்ஜநீய மென்னுமத்தையும் ப்ரதிபாதிக்கையாலே இவ்வளவும் பூர்வகண்டார்த்தத்தை யருளிச்செய்தாராய்த்து.

**விளக்கம் -** முதல் ப்ரகரணத்தில் புருஷகார வைபவம் பற்றி அருளிச்செய்தபோது "ஸ்ரீமத்" என்ற பதத்தின் பொருளை உரைத்தார்; உபாய வைபவம் பற்றி அருளிச்செய்தபோது "நாராயண சரணௌ சரணம்" என்பதன் பொருளை அருளிச்செய்தார். அதனைத் தொடர்ந்து "ப்ரபத்திக்குத் தேசநியமம்" என்ற சூர்ணை-23 தொடங்கி, "தர்ம புத்ராதிகளுக்கு" என்ற சூர்ணை-33 முடிய உள்ள சூர்ணைகளின் மூலம் "ப்ரபத்யே" என்ற பதத்தால் விளக்கப்படுகின்ற ப்ரபத்தி என்பதற்கு, தேசம் போன்ற வரையறை இல்லை என்ற கருத்தை அருளிச்செய்தார். இப்படிப்பட்ட ப்ரபத்திக்கு விஷய நியமம் இன்னது

என்று உணர்த்துவதான “நாராயண” என்ற பதத்தை வெளிப்படையாக அருளிச்செய்யும் பொருட்டு “விஷய நியமமாவது” என்று தொடங்கும் சூர்ணை-34 முதல், “இதுதான்” என்றுள்ள சூர்ணை-40 முடிய உள்ள சூர்ணைகளை இட்டார். “ப்ரபத்யே” என்ற பதம் மூலம் உணர்த்தப்படும் அதிகாரி குறித்து “இதில் ப்ரபத்தி” என்றுள்ள சூர்ணை-41ஐ அருளிச்செய்தார். மேலும் கீழே உள்ள பலவற்றையும் அருளிச்செய்தார் என்பதால், இதுவரை த்வயத்தின் முற்பகுதியை விளக்கினார் என்று கருத்து:

- ப்ரபத்தியில் ஸாதனம் அளிக்கின்ற தன்மை இல்லை
- ப்ரபத்திக்கு அதிகாரம் (தகுதி) என்னவென்றால் தனது சக்தி இல்லாமை, நாணம் இல்லாமை, தனது முயற்சி இல்லாமை, சமம் மற்றும் தமம் போன்றவற்றுடன் இருத்தல் என்பவை
- ப்ரபத்திக்கு ஓர் அங்கமாக மற்ற உபாயங்களைக் கைவிட வேண்டும் என்பதையும் அவற்றின் தோஷங்கள் பற்றியும் உரைத்தார்.
- ப்ரபத்தியின் தோஷம் அற்ற தன்மை
- ப்ரபத்தியைப் பற்றிய ப்ரகரணம் என்பதால் ஸ்வகத ஸ்வீகாரம் உபாயம் ஆகாது என்பதும், பரகத ஸ்வீகாரத்தின் உபாயமாகின்ற தன்மை, அந்த பரகத ஸ்வீகாரத்தின் வலிமை இன்னது என்பதை உனர்த்தினார்.
- ஸர்வேச்வரன் தானே வலிய வந்து ஏற்றாலும், ஒரு புருஷகாரத்தை முன்னிட்டே எற்பான்.
- சேதனன் மற்றும் ஸர்வேச்வரன் ஆகிய இருவரும் ஏன் புருஷகாரத்தை முன்னிடுகின்றனர் என்பதைக் காரணத்துடன் பயன்கள் மூலமாக உரைத்தார்.
- மூன்றுவகையான அதிகாரிகளுக்கும் புருஷகாரம் என்பது தள்ளப்படத்தக்கது அல்ல.

160. தனக்குத்தான் தேடும் நன்மை தீமையோபாதி விலக்காயிருக்கும்.

**அவதாரிகை -** இப்ப்ரகரணாதியிலே (உபாயத்துக்கு) என்று தொடங்கி உபேயாதிகாரமும் சில சொல்லிற்றேயாகிலும் அது ப்ராஸங்கிகமித்தனை. இனி உபேயாதிகாரபரமான ப்ரகரண சேஷத்தாலும் உத்தரகண்டார்த்தத்தை யருளிச்செய்கிறார். அது செய்கிற விடத்தில், பாஷ்யகாரர் கத்யத்தில் உத்தரகண்டார்த்த மநுஸந்தித்தருளின க்ரமத்திலே, நமச்சப்தார்த்தம் முன்னாக வருளிச்செய்கிறார். அதில் இந்த நமஸ்ஸுதான் ப்ராப்ய விரோதி நிவ்ருத்தி ப்ரதிபாதகமாகையாலே, ப்ராப்ய விரோதிகளானவற்றை

தர்சிப்பிப்பதாகத் திருவுள்ளம் பற்றி ப்ரதமம் அவற்றிலே யொன்றை யருளிச்செய்கிறார் (தனக்குத்தான்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இந்த ப்ரகரணத்தின் தொடக்கமான "உபாயத்துக்கு" என்னும் சூர்ணை-80 தொடங்கி ஒரு சில இடங்களில் உபேய அதிகாரம் கூறப்பட்டது என்றாலும், அந்த இடத்திற்கு அதிகமான கருத்துக்களாகவே உரைக்கப்பட்டது. அடுத்து உபேய அதிகாரம் பற்றியதான கருத்துக்களை கூறுகின்ற ப்ரகரணத்தில், மீதம் உள்ள கருத்துக்களைக் கூறுவதன் மூலம் (சூர்ணை-80 போன்றதான சில சூர்ணைகளின் எஞ்சிய கருத்துக்கள்) த்வய மந்த்ரத்தின் இரண்டாம் வரியினுடைய பொருளை அருளிச்செய்கிறார். இதனை அருளிச்செய்யும்போது, உடையவர் தன்னுடைய கத்யத்ரயத்தில் பின்வாக்கியத்தின் பொருளை எவ்விதம் அருளிச்செய்தாரோ அதே போன்று இவரும் "நம:" என்ற பதத்தை முதலில் அருளிச்செய்கிறார். "நம:" என்று இரண்டாம் வரியின் இறுதியில் உள்ள பதமானது, அடையப்போகும் பேற்றுக்குத் தடையாக உள்ளவை (ப்ராப்ய விரோதிகள்) நீங்குவது பற்றி உரைகிறது என்பதால், பேற்றுக்குத் தடையாக உள்ளவற்றை முதலில் காண்பிப்பதற்குத் திருவுள்ளம் கொண்டவராக, அவற்றில் ஒன்றை முதலில் இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - கீழே (ஸ்ரீபரதாழ்வானுக்கு நன்மைதானே தீமையாய்த்து) என்று – ஸ்வகத ப்ரபத்தி "சரண்யஹ்ருதயாநுஸாரி யல்லாதபோது தீமையாய்த் தலைக்கட்டும்படி சொன்ன வித்தாலே, உபாய தசையில் தனக்குத்தான் தேடும் நன்மை தீமையாமென்னுமிட மருளிச்செய்தாராய், இப்ப்ரஸங்கத்திலே உபேய தசையிலும் தான் தனக்குத்தேடும் நன்மை தீமையாய் விடுமென்னுமிட மருளிச்செய்கிறாரென்று கீழோடிதுக்கு ஸங்கதி. (தனக்கு) இத்யாதி. அதாவது – சேஷியானவன் போகதசையில் தன் வ்யாமோஹத்தாலே "ஆருயிர்பட்ட தெனதுயிர் பட்டது" என்னும்படி தன் திறத்தில் மிகவும் தாழநின்று பரிமாறுமளவில், "நாம் சேஷபூதரன்றோ, நம் சேஷத்வத்தை நோக்கவேண்டாவோ" என்று ஸ்வநைச்யாநுஸந்தாநத்தாலே பிற்காலித்து, தனக்குத்தான் தேடுகிற சேஷத்வமாகிற நன்மை, அநாதிகாலம் "ஸ்வதந்த்ரோஹம்" என்றிருக்க தீமையோபாதி அவன் போகத்துக்கு ப்ரதிபந்தகமா யிருக்குமென்கை. (தீமை) என்று – அக்ருத்ய கரணாதிகளைச் சொல்லவுமாம்.

**விளக்கம்** – சூர்ணை-145ல் “ஸ்ரீபரதாழ்வானுக்கு நன்மைதானே தீமையாய்த்து” என்று அருளிச்செய்தார். அதாவது தானாகவே வலியச்சென்று இயற்றும் ப்ரபத்தி என்பது ஸர்வேச்வரனின் திருவுள்ளத்திற்கு ஏற்புடையதாக இல்லாதபோது, அந்த ப்ரபத்தி என்பதே தீமையாக முடிந்துவிடும் என்று கூறினார். இதன் மூலம் உபாயநிலையில் தனக்குத்தானே தேடிக்கொள்ளும் நன்மை என்பதே தீமையில் சென்று முடியும் என்பதை அருளிச்செய்கிறார். ஆக மேலே கூறியதற்கும் இதற்கும் பொருத்தம் உள்ளது. எஜமானனாக உள்ள ஸர்வேச்வரன் தன்னை வந்தடைந்த சேதனனுடன் தான் கூடி நின்று அனுபவிக்கவேண்டும் என்று எண்ணுவான். இப்படிப்பட்ட அளவு கடந்த பேரன்பு காரணமாகத் திருவாய்மொழியில் (9-6-9) – ஆருயிர்பட்ட தெனதுயிர் பட்டது - என்பதற்கு ஏற்ப, தன்னுடைய நிலையில் இருந்து மிகவும் தாழ்வாக இறங்கி வந்து கலக்க எண்ணுவான். அப்போது, “நாம் இவனுடைய அடிமை அல்லவோ? நம்முடைய அடிமைத்தனத்தைச் சற்று எண்ணவேண்டாமா?”, என்று நம்முடைய தாழ்வை மனதில் முன்னிறுத்தி, அவனை விட்டு அகன்று, நாம் நம்முடைய அடிமைத்தன்மையைக் காண்பிப்பதாக எண்ணினால், எல்லையற்ற காலம் ”நானே எனக்கு எஜமானன்” என்று எண்ணும் தீய எண்ணம் போன்றதே ஆகும். அதுவே ஸர்வேச்வரனின் இன்பத்திற்குத் தடையாகிவிடும். ”தீமை” என்றால் செய்யத்தகாதவற்றைச் செய்கின்ற பாவங்கள் என்று கருத்து.

161. அழகுக்கிட்ட சட்டை அணைக்கைக்கு விரோதியாமாபோலே.

**அவதாரிகை** - சேஷியுடைய விருப்பத்துக்குடலாய் ஆத்மாவுக்கு அலங்காரமாயிருக்கிற சேஷத்வம், போகவிரோதியாகிறபடி யெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (அழகுக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – எஜமானனாகிய ஸர்வேச்வரனின் விருப்பத்திற்கு ஏற்பவும், ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு அலங்காரமாகவும் திகழ்கின்ற அடிமைத்தன்மை என்பது ஸர்வேச்வரனின் விருப்பத்திற்கு எப்படித் தடையாகும் என்ற கேள்விக்கு விடை அருளிசெய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸ்த்ரீக்கு அழகுக்கிட்ட சட்டை நாயகனுகப்புக்கு விஷயமுமாய் அவளுக்கலங்காரமுமா யிருந்ததேயாகிலும், போகதசையில் ஆலிங்கந விரோதியாமாப் போலே, இதுவும் போகவிரோதியாமென்றபடி.

**விளக்கம்** - ஒரு பெண் தன்னுடைய அழகிற்காக அணிந்து கொள்ளும் ஆடை மற்றும் ஆபரணங்கள், அவளது கணவனின் மனமகிழ்வுக்கும் அவளது அலங்காரத்திற்கும் பொருத்தமாகவே உள்ளபோதிலும், அத்தகைய ஆடை ஆபரணங்கள் அவர்கள் புணரும்போது தடையாகவே இருக்கும். இது போன்றே சேதநனின் அடிமைத்தன்மை என்பது ஸர்வேச்வரனின் இன்பத்திற்குத் தடையே ஆகும்.

162. ஹாரோபி

**அவதாரிகை** - அழகுக்குடலானது அநுபவவிரோதியாமென்னுமிடம் சேஷி வசநத்தாலே தர்சிப்பிக்கிறார் மேல் (ஹாரோபி) என்று.

**விளக்கம்** – அழகிற்கு இலக்கணமாக உள்ளவை அனுபவிக்கும்போது தடையாக இருக்கும் என்பதை ஸர்வேச்வரனே உரைத்த வரி மூலமாக அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "ஹாரோபி நார்ப்பித: கண்டே ஸ்பர்சஸம்ரோத பீருணா, ஆவயோரந்தரே ஜாதா: பர்வதாஸ் ஸரிதோ த்ருமா:" என்று ஸம்ச்லேஷ தசையில் ஸ்பர்ச விரோதியாமென்னுமச்சத்தாலே பிராட்டி திருக்கழுத்தி லொருமுத்துவட முட்படப் பூண்பதில்லை என்றாரிறே பெருமாள். "பீருணா" என்கிற லிங்கவ்யத்யயம் ஆர்ஷம். அன்றிக்கே, அழகுக்கிட்டது அணைக்கைக்கு விரோதியாமென்னுமிட மறிவிக்கையே ப்ரயோஜநமாக்கி, லிங்காநுகுணமாகப் பெருமாள் தம்மளவிலே யோஜிக்கவுமாம்.

**விளக்கம்** - இராமாயணம் – ஹாரோபி நார்ப்பித: கண்டே ஸ்பர்சஸம்ரோத பீருணா, ஆவயோரந்தரே ஜாதா: பர்வதாஸ் ஸரிதோ த்ருமா: - "புணரும்போது தடையாக இருக்கும்" என்ற அச்சம் கொண்ட சீதை ஒரு சிறிய முத்துமாலையைக்கூட தனது கழுத்தில் அணிந்து கொள்ளவில்லை; அப்படிப்பட்ட எங்கள் இருவரின் நடுவே மலைகள், நதிகள் மற்றும் மரங்கள் உள்ளன - என்று இராமன் உரைத்தான். அதாவது சீதை தனது திருக்கழுத்திலே சிறிய முத்துமாலை கூட அணியவில்லை என்றார். இங்கு மேலே உள்ள ச்லோகத்தின் இறுதியில் உள்ள "பீருணா" என்ற பதம் ஆண்பால் சொல்லாகும். இந்தச் சொல்லிற்கு "அச்சம் கொண்ட சீதையாலே" என்று பொருள் உரைக்கப்படுவதால், பால் மாறாட்டம் உண்டானது என்கிறார். அல்லது இது போன்று பால்மாறாட்டம்

கொள்ளாமலேயே, “இராமன் எந்தவிதமான நகையும் அணியவில்லை”, என்று சீதை உரைப்பதாகவும் கொள்ளலாம்.

163. புண்யம் போலே பாரதந்த்ர்யமும் பராநுபவந்துக்கு விலக்கு.

**அவதாரிகை** - ஆனால் பின்னை பாரதந்த்ர்யமேயோ நல்லதென்ன வருளிச்செய்கிறார் மேல் (புண்யம் போலே) என்று தொடங்கி.

**விளக்கம்** – இங்கு “புண்யம்” என்பது அடிமைத்தனத்தைக் குறிக்கும். இத்தகைய புண்யம் போன்று பாரதந்த்ர்யம் என்பது நல்லதோ என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – (புண்யம்) என்றது, கீழ் (நன்மை) என்கிற சொல்லாலே சொன்ன சேஷத்வத்தை; அது கீழ்ச்சொன்னபடியே ஸ்வநைச்யாநுஸந்தாநத்தாலே யிறாய்க்கைக் குறுப்பாய்க் கொண்டு யாதொருபடி போகவிரோதியாகா நிற்கும். அப்படியே, போக திசையில் அவனுக்கு எதிர் விழிகொடாதே அசித்துப் போலே கிடக்கைக் குறுப்பான கேவல பாரதந்த்ர்யமும் எதிர்விழி ஸாபேக்ஷனான வீச்வரனுடைய போகத்துக்கு மிடறுபடியா மென்றபடி.

**விளக்கம்** – ”புண்யம்” என்பது மேலே உள்ள சூர்ணைகளில் “நன்மை” என்ற பதம் மூலம் கூறப்பட்ட அடிமைத்தன்மை ஆகும். அத்தகைய சேஷத்வம் என்பது தன்னுடைய தாழ்வை நினைத்தபடி உள்ளதால், ஸர்வேச்வரனின் போகத்திற்குத் தடையாக இருக்கும். இது போன்று ஸர்வேச்வரன் நம்மைக் கிட்டும்போது, நாம் அவனுடைய எண்ணத்திற்கு ஏற்றபடி செயல்கள் ஏதும் செய்யாமல், அறிவற்ற பொருள் போன்று நிற்பதான பாரதந்த்ர்யம் என்பது - நம்மிடம் இருந்து ஈடுபாட்டுடன் கூடிய செயல்களை விரும்புகின்ற ஸர்வேச்வரனின் இன்பத்திற்குத் தடையே ஆகிறது.

**வ்யாக்யானம்** – அன்றிக்கே, (புண்யம்) என்கிறது - ஸத்கர்மத்தையாய், அது யாதொருபடி பாபத்திற்காட்டில் வ்யாவ்ருத்தமா யிருக்கச்செய்தே பகவத் ப்ராப்தி ப்ரதிபந்தகமாகா நிற்கும். அப்படியே, இறாய்க்கைக் குறுப்பான சேஷத்வத்திற்காட்டில் அசித்துப்போலே எதிர்தலையிட்டது வழக்காயிருக்கைக் குறுப்பாகையாலே வ்யாவ்ருத்தமான பாரதந்த்ர்யம் எதிர்விழி கொடுக்கைக் குறுப்பல்லாமையாலே பரனுடைய வநுபவத்துக்கு ப்ரதிபந்தகமா

மென்னவுமாம். இத்தாலே – கேவல சேஷத்வமும் கேவல பாரதந்த்ர்யமும் ஓரோராகாரங்களாலே போகவிரோதியாகா நிற்கும்; பாரதந்த்ர்யத்தோடே கூடின சேஷத்வமே உத்தேச்யமென்கை.

**விளக்கம்** - அல்லது "புண்யம்" என்பதை சேஷத்வம் என்று பொருள் கொள்ளாமல், நல்வினை என்று பொருள் கொள்ளலாம். இவ்விதம் பொருள் கொண்டால், அத்தகைய நற்செயல்கள் என்பது பாவங்களைக் காட்டிலும் வேறுபட்டதாக உள்ளபோதிலும், ஸர்வேச்வரனை அடையத் தடையாகவே இருப்பதாகும். இது போன்று சேஷத்வம் என்பதைக் காட்டிலும், அறிவற்ற பொருள் போன்று தன்னை எடுப்பவர் எண்ணப்படி அப்படியே செயல் புரிவது என்ற பாரதந்த்ர்யம் வேறுபட்டதாக உள்ளபோதிலும், அவனுக்குத் தகுந்த செயல்களைச் செய்தபடி இருத்தல் என்ற நிலை இல்லாத காரணத்தினால், ஸர்வேச்வரனுடைய அனுபவத்திற்குத் தடையே ஆகும் என்றும் பொருள் உரைக்கலாம். இதனால் சேஷத்வம் மற்றும் பாரதந்த்ர்யம் ஆகிய இரண்டும் தனித்தனியாக உள்ளபோது அவற்றின் தனித்தன்மைகள் காரணமாக ஸர்வேச்வரனின் இன்பத்திற்குத் தடையே ஆகின்றன. ஆகவே பாரதந்த்ர்யத்துடன் கூடிய சேஷத்வமே மிகவும் சிறந்தது என்கிறார்.

164. குணம்போலே தோஷ நிவ்ருத்தி.

**அவதாரிகை** - இப்படி உபேய தசையில் சேஷத்வ பாரதந்த்ர்யங்கள் பராநுபவத்துக்கு விலக்காம்படியை அருளிச்செய்த அநந்தரம் ப்ராப்தி தசையில் இவனுடைய நிர்பந்த மூலமாகவுண்டான தோஷ நிவ்ருத்தி பராநுபவத்துக்கு விலக்காம்படியை யருளிச் செய்கிறார் (குணம்போலே தோஷ நிவ்ருத்தி) என்று.

**விளக்கம்** – இப்படியாக உபேயநிலையில் சேஷத்வம் என்பதும், பாரதந்த்ர்யம் என்பதும் ஸர்வேச்வரனின் அனுபவத்திற்குத் தடையாக உள்ளதை அருளிச்செய்தார். அடுத்து ஸர்வேச்வரனை அடையக்கூடிய நிலையில், ஸர்வேச்வரனின் நிர்பந்தம் காரணமாகவே ஏற்பட்ட இந்த சரீரத்தின் தொடர்பை விலக்குதல் என்பதும் ஸர்வேச்வரனின் அனுபவத்தை விலக்கக் காரணம் என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (குணம்) என்கிறது, கீழ் விரோதியாகச் சொன்ன சேஷத்வ பராதந்த்ர்யங்களிரண்டையும். இவைதான் ஆத்மாவுக்கு அந்தரங்க குணமாயிறே

யிருப்பது. இதுபோலே (தோஷ நிவ்ருத்தி) என்றது - இவ்வாத்மகுண த்வயமும் கீழ்ச்சொன்னபடியே யாதொருபடி பராநுபவத்துக்கு விலக்காகிறது, அப்படியே, இவன் நிர்பந்தித்துப் பண்ணுவித்துக் கொள்ளுகிற ப்ரக்ருதி ஸம்பந்தமாகிற தோஷத்தினுடைய நிவ்ருத்தியும், சரமசரீரமாகையாலே இத்தோடே சிறிது தான் வைத்தநுபவிக்க விச்சிக்கிற வனுடைய வநுபவத்துக்கு விலக்காமென்கை. (குணம்போலே) என்று – பாரதந்த்ர்யமொன்றையும் த்ருஷ்டாந்திக்கிற தாகவுமாம்.

**விளக்கம்** - "குணம்" என்ற பதம் மூலம் கடந்த சூர்ணைகளில் கூறிய சேஷத்வம் மற்றும் பாரதந்த்ர்யம் ஆகியவை கூறப்பட்டது. இவை இரண்டுமே ஆத்மாவின் அந்தரங்கத் தன்மைகள் ஆகும். "தோஷநிவ்ருத்தி" என்றால் "ஆத்ம குணங்களாக உள்ள இவை இரண்டும், மேலே கூறியபடி எவ்விதம் ஸர்வேச்வரனுடைய அனுபவத்திற்குத் தடையாக உள்ளனவோ அது போன்று, ஸர்வேச்வரன் நிர்பந்தித்து ஏற்படுத்தும் சரீர ஸம்பந்தம் என்ற தோஷத்தின் நீக்குதலும் தடையே ஆகும்" - என்பதாகும். அதாவது சேதநன் ஒருவனுக்கு இந்தச் சரீரம் இறுதியாக உள்ளதால், இந்தச் சரீரத்துடன் இவனைச் சிலகாலம் இந்த உலகில் வைத்து அனுபவிக்க விரும்புகின்ற ஸர்வேச்வரனின் விருப்பத்திற்குத் தடையாகிறது என்றபடி பொருள் கொள்ளவேண்டும். அல்லது "குணம்போலே" என்பதற்குப் பாரதந்த்ர்யம் மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டது என்றும் கொள்ளலாம் (அதாவது ஸர்வேச்வரன் நம்மை இந்தச் சரீரத்துடன் சிலகாலம் இந்த உலகில் வைத்து, நம்மை அனுபவிக்க விரும்பும்போது, "இந்தச் சரீரம் நீங்கவேண்டும்" என்று எண்ணுவது அவனது அனுபவத்திற்குத் தடை என்கிறார்).

165. ஆபரணம் அநபிமதமாய் அழுக்கு அபிமதமாயிரா நின்றதிறே.

**அவதாரிகை** – தோஷநிவ்ருத்தியிலாத்ம ஸ்வரூபம் அத்யந்த பரிசுத்தமாய் போக்யமாயிருக்குமத்தனை யன்றோ, ஆனபின்பு தோஷநிவ்ருத்தி அநபிமதமாய் தோஷமபிமதமாயிருக்கக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (ஆபரணம்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இந்தச் சரீரத்தின் தொடர்பு என்பது விலகிய பின்னரே ஆத்மாவின் ஸ்வரூபம் என்பது மிகவும் தூய்மையானதாக, அனுபவிக்க இனிமையான ஒன்றாக இருக்கும் அல்லவோ? இப்படி உள்ளபோது, சரீரத்தின் தொடர்பு விலக்குதல் என்பது விருப்பம்

அற்றதாய், தோஷங்களுடன் கூடிய இந்தச் சரீரம் என்பது விருப்பத்திற்கு உரியதாய் எவ்விதம் இருக்கும்? இந்தக் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது லோகத்தில் விஷய ப்ரவணராயிருப்பார்க்கு, அபிமத விஷயத்தினுடைய ஔஜ்ஜ்வல்ய ஹேதுவான ஆபரணம் அநபிமதமாய், அநௌஜ்ஜ்வல்ய ஹேதுவான அழுக்கு அபிமதமாயிரா நின்றதிறே என்கை.

**விளக்கம்** - இந்த உலகத்தில் ஸர்வேச்வரன் தவிர மற்ற அனைத்து விஷயங்களின் மீதும் பற்றுடன் உள்ள ஒருவனுக்குத் தான் விரும்பும் பெண் ஒருவளது சரீரத்திற்கு அழகு சேர்க்கின்ற ஆபரணங்களைப் பிடிக்காமல் இருக்கும்; மாறாக அவளது அழுக்கான சரீரம் என்பது மிகவும் விரும்பப்படுவதாக இருக்கும், அதாவது அழகு இல்லாத நிலைக்குக் காரணமாக உள்ள அழுக்கானது விரும்பப்படுவதாக இருக்கும்.

166. "ஸ்நாநம் ரோஷஜநகம்" என்கிற வார்த்தையை ஸ்மரிப்பது.

**அவதாரிகை** - இதுதான் லௌகிகத்தி லன்றிக்கே பிராட்டி திறத்தில் அவன் றனக்குமிப்படி யிருந்தமைக்கு ஸூசகமான வார்த்தையை ஸ்மரிப்பிக்கிறார்மேல் (ஸ்நாநம் என்று தொடங்கி).

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் கூறப்பட்ட விஷயமானது உலகில் உள்ள சாதாரண மக்களுக்கு மட்டும் அல்ல, சீதை விஷயத்தில் இராமனுக்கும் இருந்தது என்பதைச் சூசகமாக உணர்த்துகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பிராட்டி திருமஞ்சனம் செய்து வந்தது பெருமாளுக்கு ரோஷஜநகம் என்னுமத்தை ப்ரகாசிப்பிக்கிற "தீபோ நேத்ராதுரஸ்யேவ ப்ரதிகூலாஸி மே த்வம்" என்கிற வார்த்தையை இவ்வர்த்தத்துக்குடலாம் ஸ்மரிப்பதென்கை. "ஸபங்கா மநலங்காரம்" இத்யாதிப்படியே, பத்து மாஸம் திருமஞ்ஜநம் பண்ணாமலழுக்கடைந்திருந்த வடிவைக்காண வாசைப்பட்டிருந்தவர்க்கு, இவள் திருமஞ்ஜநம் பண்ணிவந்தவிது ரோஷஜநகமாகச் சொல்லவேண்டாவிறே. ஆனால், "தீர்க்கமுஷ்ணம் விநிச்வஸ்ய மேதிநீவமவலோகயந், உவாச மேகஸங்காசம் விபீஷண முபஸ்திதம்; திவ்யாங்கராகாம் வைதேஹீம் திவ்யாபரண பூஷிதாம், இஹஸீதாம் சிரஸ்ஸ்நாதா முபஸ்தாபய மாசிரம்" என்று இவர்தாமேயன்றோ திருமஞ்ஜநம் பண்ணியலங்கரித்துக் கொண்டு வரும்படி

ஸ்ரீவிபீஷணாழ்வானைப் பார்த்தருளிச் செய்தது; இப்படி இருக்கச்செய்தே பின்னை ரோஷம் ஜநிப்பானென்னென்னில்; நாம் நல்வார்த்தை சொல்லிவிடக்கடவோம், தானே யறியாளோ என்று சொல்லிவிட்டாரித்தனை போக்கி, அது ஸஹ்ருதமாகச் சொன்ன வார்த்தையல்ல, அல்லாதபோது ருஷ்டராகக் கூடாதிறே. அவன் தான், "அஸ்நாதா த்ரஷ்டுமிச்சாமி பர்த்தாரம் ராக்ஷஸாதிப" என்றிருக்கச்செய்தே, "யாதாஹ ராமோ பர்த்தா தே ததா தத் கர்த்து மர்ஹஸி" என்று ஸ்ரீவிபீஷணாழ்வன் நிர்பந்தித்துச் சொன்ன பின்பன்றோ திருமஞ்ஜநம் பண்ணிற்றென்னில்? அவன் பெருமாள் திருவுள்ளக் கருத்தை யறியாதே, அருளிச்செய்த வார்த்தையைக் கொண்டு சொன்னானித்தனையிறே. எல்லாஞ் செய்தாலும், பத்துமாஸம் ராவண பவநத்திலேயிருந்த விவள் சிறையிருந்த வேஷத்தோடே சென்று காணுமித்தனையல்லது, திருமஞ்ஜனம் பண்ணேன் என்றிருக்கவேணுமிறே; அது செய்யாதே, சடக்கென திருமஞ்ஜனம் பண்ணி வந்தாளிறே; அது, அவ்விருப்புக்காண வாசைப்பட்டவர்க்கு ரோஷ ஹேதுவாய்த்து. ஆகையாலே (ஸ்நாநம் ரோஷஜநகம்) என்னக் குறையில்லை.

**விளக்கம்** – சீதை இராவணனின் சிறை வாசத்திற்குப் பின்னர் இராமனைக் காண வந்தபோது நீராடிவிட்டு வந்தாள். இப்படியாக வந்தது இராமனுக்கு மிகுந்த சீற்றத்தை உண்டாக்கியது. இதனை உணர்ந்துகின்ற இராமாயணம் யுத்தகாண்டம் (115-17) - தீபோ நேத்ராதுரஸ்யேவ ப்ரதிகூலாஸி மே த்வம் - சீதையே! கண்களில் நோய் உள்ள ஒருவனுக்கு விளக்கானது எத்தனை வெறுப்பை உண்டாக்குமோ அது போன்று நீ இப்போது உள்ளாய் - என்ற இராமனின் சொற்கள், கடந்த சூர்ணையில் கூறப்பட்டதை விளக்குவதாக உள்ளன. இராமாயணம் ஸுந்தரகாண்டம் (15-21) - ஸபங்கா மநலங்காரம் - அலங்காரம் இல்லாமலும், அழுக்கு படிந்தபடியும் இருந்த சீதை - என்று கூறுவதற்கு ஏற்ப, பத்து மாதங்கள் நீராடாமல் இருந்த சீதையின் அழுக்கான வடிவழகைக் காண வேண்டும் என்ற ஆசையுடன் இராமன் இருந்தான். அப்போது இவள் நீராடிவிட்டு வந்த நிலை என்பது சீற்றத்திற்குக் காரணமாக இருந்தது என்பதைக் கூறவும் வேண்டுமோ? இங்கு ஒரு சந்தேகம் எழலாம். கீழே உள்ள இராமாயண வரிகள் காண்க:

- யுத்தகாண்டம் (114-6) - தீர்க்கமுஷ்ணம் விநிச்வஸ்ய மேதிநீவமவலோகயந், உவாச மேகஸங்காசம் விபீஷண முபஸ்திதம் – இராமன் தனது அருகில் நின்றிருந்த மேகம் போன்ற நிறம் கொண்ட விபீஷணனிடம் மிகவும் தீர்க்கமாகவும், பூமியைப்

பார்த்தபடியும், பெருமூச்சு விட்டபடியும் பின்வருமாறு உரைத்தான் (இங்கு – தீர்க்கமபிநிச்வவஸ்ய – என்று சில இராமாயண ப்ரதிகளில் உள்ளது).

- யுத்தகாண்டம் (114-7) - திவ்யாங்கராகாம் வைதேஹீம் திவ்யாபரண பூஷிதாம், இஹஸீதாம் சிரஸ்ஸ்நாதா முபஸ்தாபய மாசிரம் – நீராடியவளாகவும், நறுமணத்துடன் கூடிய சந்தனம் பூசப்பட்டவளாகவும், திவ்யமான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாகவும் விதேக தேசத்து அரசனின் புத்திரியான சீதையை இங்கு தாமதிக்காமல் அழைத்து வருவாயாக.

அதாவது மேலே உள்ள வரிகளின்படி, இராமன் தானாகவே அல்லவோ சீதையை நீராடி அலங்காரம் செய்துகொண்டு வரும்படி விபீஷணன் மூலமாக உரைத்தான்? இப்படி உள்ளபோது, சீதை நீராடி வந்தவுடன் சீற்றம் அடைந்தது எவ்விதம் ந்யாயம் ஆகும்? ஏன் சீற்றம் அடைந்தான்? இதற்குச் சமாதானம் அருளிச்செய்கிறார். அதாவது இராமனின் எண்ணம், "நாம் அவளை இவ்விதம் நீராடி அலங்கரித்துக்கொண்டு வரும்படி உரைத்துவிடுவோம். ஆனால் என்னுடைய மன ஓட்டம் எப்படிப்பட்டது என்று அவள் அறிவாள்", என்பதாகும். ஆக இராமன் விபீஷணனிடம் உரைத்தது ஆழ்மனதில் இருந்து வெளிப்பட்டது அல்ல; எனவே சீற்றம் அடைந்தான். இவ்விதம் கொள்ளவில்லை என்றால் சீற்றத்துடன் கூடியவனாக இருந்த நிலை பொருந்தாது அல்லவோ? அடுத்து இராமனின் எண்ணத்தைச் சீதை புரிந்துகொண்டாளா என்று சந்தேகத்திற்கு விடை அளிக்கிறார். இராமாயணம் யுத்தகாண்டம் – அஸ்நாதா த்ரஷ்டுமிச்சாமி பர்த்தாரம் ராக்ஷஸாதிப - சீதை விபீஷணனிடம், "அரக்கர்களின் தலைவனே! நான் நீராடாமல் உள்ள நிலையிலேயே இராமனைக் காண விரும்புகிறேன்", என்றாள். இதனைக் கேட்ட விபீஷணன், "இராமாயணம் யுத்தகாண்டம் – யாதாஹ ராமோ பர்த்தா தே ததா தத் கர்த்து மர்ஹஸி - உனது நாயகனான இராமன் உன்னை என்ன செய்யச் சொல்கிறானோ அதன்படி நீ செய்யக் கடமைப்பட்டுள்ளாய்", என்று உரைத்தான். ஆக இராமன் கூறியதைக் கேட்ட விபீஷணன் இராமனின் சொற்கள் அளவில் கேட்டு வந்தானே தவிர, இராமனின் திருவுள்ளத்தைப் புரிந்து கொள்ளவில்லை. இவன் வந்து இவ்விதம் நிர்பந்தம் செய்த காரணத்தினால் அல்லவோ சீதை நீராடினாள்? என்ன சமாதானம் உரைத்தாலும், சீதை பத்து மாதங்கள் இராவணனின் சிறையில் இருந்தாள். அப்போது அந்தச் சிறை வாசத்தின் பின்னர் அதே சிறைக்கோலத்துடன் அல்லவோ இராமனைச் சென்று கண்டிருக்க வேண்டும்? "நீராடமாட்டேன்" என்று உறுதிபட இருந்திருக்கவேண்டும். அதனை விடுத்து,

விபீஷணன் உரைத்தவுடன் சட்டென்று நீராடினாள் அல்லவா? இதுவே சிறையிருந்த கோலத்துடன் காண்பதற்கு விருப்பத்துடன் வந்த இராமனுக்குச் சீற்றம் உண்டாகக் காரணம் ஆகிவிட்டது. எனவே “ஸ்நாநம் ரோஷஜநகம்” என்பதில் எந்தவிதமான தோஷமும் இல்லை.

**வ்யாக்யானம்** - அன்றிக்கே (ஸ்நாநம் நோஷஜநக மென்கிற வார்த்தையாவது) - ஸ்ரீவிபீஷணாழ்வான் திருமஞ்ஜநம் செய்தருளச் சொன்னபோது பெருமாள் திருவுள்ளத்தை யறியுமவளாகையாலே, “அவர்க்கிது அநபிமதமாகையாலே ரோஷ ஜநகமாய் வந்துமுடியும்” என்று நினைத்து, “அஸ்நாதா த்ரஷ்டுமிச்சாமி பர்த்தாரம் ராக்ஷஸாதிப” என்று பிராட்டியருளிச் செய்த வார்த்தையாகவுமாம். ரோஷஜநக மென்னுமத்தை ப்ரகாசிப்பிக்கிற வார்த்தையென்று கீழ்சொன்ன ந்யாயமிங்கு மொக்கும்.

**விளக்கம்** - அல்லது “ஸ்நாநம் நோஷஜநகம்” என்பதற்கு வேறு பொருள் உரைக்கலாம். விபீஷணன் வந்து நீராடும்படி உரைத்தபோது, இராமனின் திருவுள்ளம் என்ன என்பதை சீதை அறிந்தவள் என்பதாலும், இந்தச் செயல் இராமனுக்கு விருப்பம் அல்லாத ஒன்று என்பதாலும், இந்தச் செயலானது இராமனின் சீற்றத்திற்குக் காரணமாகிவிடும் என்று எண்ணினாள். ஆகவே யுத்தகாண்டம் – அஸ்நாதா த்ரஷ்டுமிச்சாமி பர்த்தாரம் ராக்ஷஸாதிப - அரக்கர்களின் தலைவனே! நான் நீராடாமல் உள்ள இந்த நிலையையே என்று கணவனான இராமனுக்குக் காண்பிக்க விரும்புகிறேன் – என்று கூறியதாகக் கொள்ளலாம்.

## 167. “வஞ்சக்கள்வன்” ”மங்கவொட்டு”.

**அவதாரிகை** - இப்படியபிமத விஷயத்தி லழுக்குகக்குமாப்போலே, ஆத்மஜ்ஞானம் பிறந்தவிவன் “அழுக்குடம்பு” என்று கழிக்கிற வித்தேஹத்தை ஈச்வரன் விரும்ப எங்கே கண்டதென்ன வருளிச்செய்கிறார் (வஞ்சக்கள்வன்) இத்யாதியாலே.

**விளக்கம்** - இவ்விதம் தனது மனைவியின் விஷயத்தில் அழுக்கை விரும்புவது போர்னு, ஆத்ம ஞானம் உண்டான பன்னர் “இந்தச்சரீரம் அழுக்கானது” என்று ஒருவன் தள்ளுகின்ற சரீரத்தை ஈஸ்வரன் விரும்புகிறான் என்பதை எங்கே காணலாம் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது “வஞ்சக்கள்வன்” என்று தொடங்கி “மங்கவொட்டு” என்னுமளவாக, தம்முடைய திருமேனியிலே அத்யாதரத்தைப் பண்ணியவனநுபவித்தபடி களையும்; அவ்வளவன்றிக்கே அதிசாபலத்தாலே இத்திருமேனியோடே தம்மைத் திருநாட்டில் கொண்டுபோவதாக வவன் அபிநிவிஷ்டனாயிருக்கிறபடியைக் கண்டு “பிரானே! இப்படி செய்தருளவொண்ணாது” என்று நிர்பந்தித்து, இதினுடைய தோஷத்தையவனுக் குணர்த்தி, இப்படி ஹேயமான விது மங்கும்படி யிசைய வேணும் என்று கால்கட்டி, அவனித்தை விடுவித்துக் கொண்டு போம்படி வருந்தி இசைவித்துக் கொண்டபடியையு மருளிச்செய்தாரிறே யாழ்வார்.

**விளக்கம்** – திருவாய்மொழி (10-7-1) – வஞ்சக்கள்வன் – என்று தொடங்கி, (10-7-10) - மங்கவொட்டு – என்று முடிகின்ற பாசுரங்கள் மூலமாக ஆழ்வார் உரைப்பது என்னவென்றால், தனது திருமேனியை மிகுந்த ஆசையுடன் ஸர்வேச்வரன் எவ்விதம் அனுபவித்தான் என்பதையும், திருமேனி மீது கொண்ட சபலம் காரணமாகத் தன்னை அதே திருமேனியுடன் பரமபதம் கொண்டு செல்ல அவன் மிகுந்த ஆசையுடன் உள்ளதாகவும் இருப்பதைக் காண்கிறார். இதனைக் கண்ட ஆழ்வார் ஸர்வேச்வரனிடம், “பிரானே! இப்படிச் செய்வது முறையல்ல”, என்று அன்பாகக் கட்டளை இட்டு, இந்தச் சரீரத்தின் தோஷங்களை அவனுக்கு நன்றாக உணர்த்தி, “இப்படியாக உள்ள தாழ்ந்த சரீரம் இங்கேயே மடியும்படி நீ சம்மதிக்கவேண்டும்”, என்று கூறினார். மேலும் அவன் இந்தச் சரீரத்திலிருந்து தனது ஆத்மாவை விடுவித்துக்கொண்டு போகும்விதமாக வருத்தத்துடன் உரைத்த பாசுரங்களை ஆழ்வார் அருளிச்செய்தார் அல்லவோ?

168. வேர்சூடுமவர்கள் மண்பற்றுக் கழற்றாதாப்போலே ஜ்ஞாநியை விக்ரஹத்தோடே ஆதரிக்கும்.

**அவதாரிகை** - அபிமத விஷயத்தி லழுக்குப்போலே யாதரிக்கிற மாத்ரமன்றிக்கே, இவனுடைய ஜ்ஞாநபரிமளம் இத்தேஹத்திலே ப்ரகாசிக்கையாலும் இத்தை யாதரிக்கு மென்னுமிடத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் (வேர்) இத்யாதியாலே.

**விளக்கம்** – மனதிற்குப் பிடித்தவளின் விஷயத்தில் உள்ள அழுக்கு போன்ற சேதனனின் சரீரத்தை விரும்பும் ஸர்வேச்வரன், சேதனனின் ஞானம் என்பது இந்தச் சரீரத்தின் மூலமாகவே வெளிப்படுவதால், இதனைப் பெரிதும் விரும்புகிறான் என்பதை ஓர் உதாரணம் மூலம் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, மணத்தின் வாசியறிந்து வோ்சூடும் போகிகளானவா்கள், மண்ணையுதறில் மணங்குன்றும் என்று மண்பற்றுக்கழற்றாதே சூடுமாபோலே, பரம போகியான ஸா்வேச்வரன் ஜ்ஞாநியான விவனை விரும்பி யநுபவிக்குமிடத்தில், "ஆஹ்லாத சீத நேத்ராம்பு:" இத்யாதிப்படியே ஜ்ஞாந காா்யமான விக்ருதிகளுக்கெல்லா மாச்ரயமாய்க் கொண்டு இவனுடைய ஜ்ஞாந பரிமளவெல்லாம் தோற்றும்படியிருக்கிற விக்ரஹத்தோடே கூட விரும்புமென்றபடி.

**விளக்கம்** – குருவேர் என்று கூறப்படுகின்ற வேரைத் தலையில் நறுமணம் காரணமாகச் சூடிக்கொள்ள எண்ணுகின்ற இன்பம் அனுபவிக்க எண்ணுபவர்கள், அதில் உள்ள மண்ணைத் தட்டி உதறிவிட்டால், அதன் நறுமணம் குறைந்துவிடும் என்று கருதி, அந்த மண்ணுடனேயே தங்கள் தலையில் சூடிக்கொள்வார்கள். இதே போன்று இன்பத்தை அனுபவிப்பவர்களில் மிகவும் உயர்ந்தவனாகிய ஸர்வேச்வரன் செய்வது என்னவென்றால் "ஆஹ்லாத சீத நேத்ராம்பு:" - ஸர்வேச்வரனின் குணங்களை எண்ணிய மாத்திரத்தில் கண்களில் ஆனந்தக்கண்ணிர் பெருகும்படியும், மயிர்க்கூச்சல் எடுக்கும்படியும் உள்ளவன் என்பதற்கு ஏற்ப, ஞானத்தின் வெளிப்பாடு காரணமாக அத்தகைய ஞானவேறுபாடுகளை வெளிப்படுத்தவல்ல இடமாக உள்ள ஞானியின் சரீரத்தை விரும்புகிறான்.

169. பரமார்த்தனான விவனுடைய சரீர ஸ்திதிக்கு ஹேது கேவல பகவதிச்சையிறே.

**அவதாரிகை** - இன்னம் முகாந்தரத்தாலே இவன் தேஹத்திலவன் விருப்பத்தை தர்சிப்பிக்கிறார் (பரமார்த்தன்) என்று தொடங்கி.

**விளக்கம்** – வேறு ஒரு காரணம் என்பதாலும் சேதனனின் சரீரத்தின் மீது ஸர்வேச்வரனுக்கு உள்ள ஆசையைக் காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம்** - (பரமார்த்தனாகிறான்) – "இந்நின்ற நீர்மை யினியாமுறாமை", "எந்நாள் யானுன்னை யினி வந்து கூடுவன்", "எங்கினித் தலைப்பெய்வன்", "நாளே லறியேன்", "தரியே னினி", "கூவிக்கொள்ளுங்கால மின்னங் குறுகாதோ" என்று ஸம்ஸாரத்தில் அடிக்கொதிப்பாலும், பகவதநுபவத்தில் பெருவிடாயாலும் இருக்குமேலில்லை என்னும்படி யார்த்தி விளைந்தவன்; ஏவம் பூதனானவனுடைய சரீர ஸ்திதிக்கு ஹேது ப்ராரப்த கர்மமென்ன வொண்ணாதிறே, "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி"

என்றத்தோடு விரோதிக்கையாலே; "ஆர்த்தாநா மாசுபலதா ஸக்ருதேவ க்ருதா ஹ்யஸௌ, த்ருப்தாநாமபி ஜந்தூநாம் தேஹாந்தர நிவாரிணீ" என்றிறே ப்ரபத்தி ஸ்வபாவந்தானிருப்பது. ஆகையால், இவனுடைய சரீர ஸ்திதிக்கு ஹேது, "இன்னமும் சில நாளிவனை யிச்சரீரத்தோடே வைத்துநுபவிக்கவேணும்" என்கிற ஈச்வரோச்சையொழிய வேறொன்றில்லாமையாலே (கேவல பகவதிச்சையிறே) என்கிறார். ப்ராரப்த கர்மமடியாக விருக்கிற த்ருப்த விஷயத்திலும் பகவதிச்சை யுண்டாகையாலே அத்தை வ்யாவர்த்திக்கிறார் கேவல சப்தத்தாலே.

**விளக்கம்** – ஆர்த்தன் என்றால் இப்போதுள்ள சரீரத்தின் மீது வெறுப்பு அடைபவன், பரமார்த்தன் என்றால் இவ்விதம் உள்ளவர்களில் மிகவும் சிறந்தவன் ஆவான். இப்படிப்பட்டவன் யார் என்றால், கீழே உள்ள வரிகளில் உள்ளது போன்று இருப்பவன்:

- திருவிருத்தம்(1) - இந்நின்ற நீர்மை யினியாமுறாமை
- திருவாய்மொழி (3-2-1) – எந்நாள் யானுன்னை யினி வந்து கூடுவன்
- திருவாய்மொழி (3-2-9) - எங்கினித் தலைப்பெய்வன்
- திருவாய்மொழி (9-8-4) - நாளே லறியேன்
- திருவாய்மொழி ( 5-8-7) - தரியே னினி
- திருவாய்மொழி(6-9-9) - கூவிக்கொள்ளுங்கால மின்னங் குறுகாதோ

மேலும் ஸம்ஸாரத்தில் சிக்கித் தவிப்பதாலும், ஸர்வேச்வரனைப் பிரிந்து அதிக தாகம் எடுத்தவன் தண்ணீருக்காகத் தவிப்பது போன்று உள்ளவனாகவும் ஆவான் (அல்லது இதனை விட வேறு ஏதும் இல்லை என்னும்படியான துன்பத்தில் உள்ளவன்). இவனது இந்தச் சரீர இருப்பிற்குக் (அவனைப் பொறுத்தவரை துன்பத்துடன் கூடிய சரீர இருப்பு) காரணம் பலரும் நினைப்பது போன்று கடந்த பிறவிகளில் செய்த செயல்கள் காரணமாகப் பலன் தரத் தொடங்கிவிட்ட (ப்ராரப்த) கர்மங்கள் அல்ல; ஏன் என்றால், இவ்விதம் கொண்டால் இந்தக் கருத்தானது, கீதை (18-66) - ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி - அனைத்து பாவங்களிலிருந்தும் நான் விடுவிப்பேன் – என்பதுடன் முரணாகிறது அல்லவா? மேலும் ப்ரபத்தியின் தன்மை எப்படிப்பட்டது என்றால், ஆர்த்தாநா மாசுபலதா ஸக்ருதேவ க்ருதா ஹ்யஸௌ, த்ருப்தாநாமபி ஜந்தூநாம் தேஹாந்தர நிவாரிணீ – ஒருமுறை செய்யப்பட்ட ப்ரபத்தியானது துன்பம் அடைந்தவர்களுக்கு விரைவான நல்ல பயனை அளிக்கிறது, த்ருப்தப்ரபந்நன் ஒருவனுக்கு வேறு சரீரம் கிட்டாமல் செய்கிறது -

என்பதற்கு ஏற்ப அல்லவா உள்ளது? எனவே இவனது சரீரம் இருப்பதன் காரணம் என்னவென்றால், “இன்னும் சில நாட்கள் இவனை இந்தச் சரீரத்துடன் வைத்து நாம் இவனை அனுபவிபோம்”, என்பதான ஸர்வேச்வரனின் ஆசை அல்லாமல் வேறு ஏதும் இல்லை என்கிறார். ப்ராரப்த கர்மம் காரணமாக ஏற்படுகின்ற த்ருப்தப்ரபந்தன் (இந்த பிறவியின் இறுதியில் மோக்ஷம் அடைபவன்) குறித்தும் ஸர்வேச்வரனுக்கு ஆசை ஏற்படுவதால், அந்த ஆசையை வேறுபடுத்துவதற்காக “கேவல” என்ற பதம் இடப்பட்டது.

170. “திருமாலிருஞ்சோலை மலையே” என்கிறபடியே உகத்தருளின நிலங்க ளெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை இவனுடைய சரீரைக தேசத்திலே பண்ணும்.

**அவதாரிகை -** இப்படி தன் விருப்பத்துக்கு விஷயமான விவன் சரீரத்தை அவன் விரும்பும் ப்ரகாரமருளிச் செய்கிறார் மேலே (திருமாலிருஞ்சோலை மலை) என்று தொடங்கி.

**விளக்கம் –** இப்படியாகத் தனது விருப்பத்திற்கு இலக்காக உள்ள சேதநனின் சரீரத்தை ஸர்வேச்வரன் எவ்விதம் விரும்புகிறான் என்பதை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, தெற்குத் திருமலையும் திருப்பாற்கடலையும் என் உத்தமாங்கத்தையுமொக்க விரும்பா நின்றான், ஸ்ரீவைகுண்டத்தையும் வடக்குத் திருமலையையும் என்னுடைய சரீரத்தையுமொக்க விரும்பாநின்றான் என்றாரிறே ஆழ்வார். இப்படி யோரோ ரவயவங்களிலே இரண்டிரண்டு திருப்பதியில் பண்ணும் விருப்பத்தைப் பண்ணினானென்றவிது, எல்லாத் திருப்பதிகளிலும் பண்ணின விருப்பத்தை ஓரோரவயவங்களிலே பண்ணிநின்றா னென்னுமதுக்குபலக்ஷணம். ஆகையாலே, அப்பாட்டிற் சொல்லுகிறபடியே, தனக்கபிமதமான திவ்ய தேசங்களெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை ஜ்ஞாநியான விவனுடைய சரீரைகதேசத்திலே பண்ணுமென்கிறார்.

**விளக்கம் -** திருவாய்மொழி (10-7-8) - திருமாலிருஞ்சோலை மலையே - என்னும் பாசுரம் காண்க. அதில் ஆழ்வார் கூறுவது - திருமாலிருஞ்சோலை, திருப்பாற்கடல் மற்றும் எனது தலை ஆகிய மூன்றையும் ஒரே போன்று விரும்பி நின்றான்; ஸ்ரீவைகுண்டம், திருவேங்கடம் மற்றும் எனது சரீரம் ஆகிய மூன்றையும் ஒரே போன்று விரும்பி நின்றான் - என்பது ஆகும். இவ்விதம் தனது ஒவ்வொரு அவயவம் குறித்தும் இரண்டு

திவ்யதேசங்களில் கொள்கின்ற விருப்பத்தைக் கொண்டான் என்று கூறுகிறார். இதன் மூலம் அனைத்து திவ்யதேசங்களிலும் கொண்ட விருப்பத்தைத் தனது ஒவ்வொரு அவயவத்தில் வைத்தான் என்கிறார். அதாவது அந்தப் பாசுரத்தில் கூறப்பட்டபடி தமக்கு விருப்பமான பல திவ்யதேசங்களில் கொள்ளும் விருப்பத்தை ஞானியின் சரீரத்தின் மீது கொள்கிறான் என்கிறார்.

171. அங்குத்தை வாஸம் ஸாதநம்; இங்குத்தை வாஸம் ஸாத்யம்.

**அவதாரிகை** - உகந்தருளின நிலங்களி லெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை இவ்விஷயமொன்றிலுமே பண்ணுமென்றார் கீழ்; இவ்விஷயம் ஸித்தித்தால் உகந்தருளின நிலங்களிலாதரம் அவனுக்கு ஸங்குசிதமா மென்னுமிட மருளிச்செய்கைக்காக, இரண்டிடத்துக்கு முண்டான வாசியையருளிச் செய்கிறார் (அங்குத்தை) என்று தொடங்கி.

**விளக்கம்** – தான் மிகவும் விருப்பத்துடன் எழுந்தருளியுள்ள அனைத்து திவ்யதேசங்கள் மீதும் எத்தனை விருப்பம் கொள்வானோ, அந்த அளவிற்கு ஞானியின் சரீரம் மீது விருப்பம் கொள்கிறான் என்று கடந்த சூர்ணையில் உரைத்தார். இப்படியாக ஞானியின் சரீரம் ஒன்றில் வசிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது என்றால், திவ்யதேசங்களின் மீது ஸர்வேச்வரன் கொள்ளும் ஈடுபாடு குறைவுபடும் என்பதை விளக்கும்விதமாக இரண்டிற்கும் இடையே உள்ள வேற்றுமையை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - உகந்தருளின நிலங்களில் விரும்பிவர்த்திக்கிறது உசிதோபாயங்களாலே சேதநரையகப்படுத்திக் கொள்ளுகைக்காகையாலே (அங்குத்தை வாஸம் ஸாதநம்) என்கிறது. இச்சேநநன் திருந்தி இவன் ஹ்ருதயத்தினுள்ளே தான் வஸிக்கப்பெற்றவிது அங்கு நின்று பண்ணின க்ருஷிபலமாகையாலே (இங்குத்தை வாஸம் ஸாத்யம்) என்கிறது. "நாகத்தணைக் குடந்தை", "மலைமேல்தான் நின்று", "பனிக்கடலில் பள்ளிகோளை" இத்யாதிகளிலே, இவற்றினுடைய ஸாதநஸாத்யத்வங்கள் தோற்றாநின்றதிறே.

**விளக்கம்** - "அங்குத்தை வாஸம் ஸாதநம்" என்பது என்ன? தான் விரும்பிய திவ்ய தேசங்களில் அதிக ஈடுபாட்டுடன் வசிப்பது ஏன் என்றால் அங்கு வருபவர்களைத் தகுந்த உபாயங்கள் மூலமாகத் தன்னிடம் அகப்பட்டுக் கொள்ளும்படிச் செய்வதற்காக ஆகும். இதனால்தான் இப்படி வசிப்பதை "ஸாதனம்" என்றார். "இங்குத்தை வாஸம் ஸாத்யம்" என்பது என்ன? இந்த மக்கள் திருந்தும் விதமாக திவ்யதேசங்களுக்கு வருபவர்களின்

மனதில் அவன் புகுந்து விடுகிறான். ஆக இது மேலே கூறப்பட்ட சாதனம் அல்லது உபாயத்தில் பலனாக உள்ளதால் ஸாத்யம் (அல்லது பலன்) எனப்பட்டது. கீழே உள்ள பல பாசுரங்கள் இங்கு கூறப்பட்ட ஸாதனம் மற்றும் பலன் ஆகியவற்றை உரைப்பது காண்க:

- நான்முகன் திருவந்தாதி (36) – நாகத்தணைக் குடந்தை
- திருவாய்மொழி (10-4-4) – மலைமேல்தான் நின்று
- பெரியாழ்வார் திருமொழி (5-4-9) – பனிக்கடலில் பள்ளிகோளை

172. “கல்லும் கனைகடலும்” என்கிறபடியே இது ஸித்தித்தால் அவற்றிலாதரம் மட்டமாயிருக்கும்.

**அவதாரிகை** - இந்த ஸாதந ஸாத்யத்வ ப்ரயுக்தமான ஆதரதாரதம்யத்தை யருளிச் செய்கிறார் (கல்லும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாக உள்ள உபாயம் மற்றும் பலன் காரணமாக ஏற்படுகின்ற ஆசையின் உயர்வு மற்றும் தாழ்வுகளை இந்தச் சூர்ணையின் உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, தன் திருவுள்ளத்தில் புகுந்தபின்பு, தனக்குப் புறம்பொன்றிலு மாதரமில்லை என்று தோற்றும்படி அவனிதிலே அத்யாதரத்தைப் பண்ணி நித்யவாஸம் பண்ணுகையாலே, திருமலையும், தன் ஸந்நிதாநத்தாலே கோஷிக்கிற திருப்பாற்கடலும், ஒருத்தர்க்குமெட்டாத பரமபதமான தேசமும் புல்லியவாய்த்தினவோ என்றாரிறே யாழ்வார்; இப்படியே, ஸாத்யமான இச்சேதநஹ்ருதயம் ஸித்தித்தால், இதுக்கு ஸாதநமாக முன்பு விரும்பிப்போந்த திவ்யதேசங்களி லாதரம் ஸங்குசிதமாயிருக்கும் மென்கை. ஸாத்யம் கைபுகுரு மளவுமிறே ஸாதநத்தி லாதரம் மிக்கிருப்பது.

**விளக்கம்** - முதலில் பெரியதிருவந்தாதி (68) - கல்லும் கடலும் - என்ற பாசுரத்தின் விளக்கத்தை அருளிச்செய்கிறார். நம்மாழ்வார் கூறுவது - என்னுடைய மனதில் அவன் புகுந்த பின்னர் அவனுக்கு மற்ற எதன் மீதும் ஆசை இல்லை என்பது புலப்படும்படியாக, அவன் எனது சரீரம் மீது மிகுந்த ஆசையுடன் எப்போதும் வசிக்கிறான். இதனால் திருமலை, தன்னுடைய சேர்க்கை காரணமாக ஒலிக்கின்ற திருப்பாற்கடல், யாருக்கு

எளிதில் எட்டாத பரமபதம் ஆகிய பலவும் தாழ்ந்ததாக அவனுக்கு மாறியது போலும் – என்பதாகும். ஆக, இப்படி இவன் செய்கின்ற உபாயத்திற்குப் பலனாக மனிதர்களின் மனம் வசிப்பதற்குக் கிட்டினால், அவற்றை அடையும் உபாயமாகத் தான் விருப்பத்துடன் வசித்து வந்த திவ்ய தேசங்களின் மீது ஆசை குறைவாகவே இருக்கும் என்று கருத்து. பலன் கைகூடும் காலம் வரை மட்டுமே அந்தப் பலனைப் பெறுவதற்காக மேற்கொள்ளும் உபாயத்தின் மீது ஈடுபாடு இருக்கும் அல்லவோ?

173. "இளங்கோவில் கைவிடேல்" - என்றிவன் ப்ரார்த்திக்க வேண்டும்படியாயிருக்கும்.

**அவதாரிகை** - ஆதரம் மட்டமாம்படிக்கு அவதியை தர்சிப்பிக்கிறார் (இளங்கோயில்) இத்யாதியாலே.

**விளக்கம்** - திவ்யதேசங்களின் மீது ஸர்வேச்வரனுக்கு உண்டாகின்ற விருப்பம் குறைவுபடுவதை மேலும் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸ்ரீபூதத்தார், தம்மைப் பெறுகைக் குறுப்பாக முன்பு தான் விரும்பின திவ்யதேசங்களில் முன்புத்தை யாதரமின்றிக்கே தன் திருவுள்ளத்திலே அத்யாதரத்தைப் பண்ணிச்செல்லுகிறபடியைக் கண்டு, அவ்வோ திவ்யதேசங்களைக் கைவிடப்புகுகிறானோ என்றதிசங்கை பண்ணி, என் ஹ்ருதயத்திலே புகுந்திருக்கைக்கு பாலாலயமான திருப்பாற்கடலைக் கைவிடாதொழிய வேணும் என்றாரிறே. ஆகையால், இப்படியிவன் ப்ரார்த்திக்க வேண்டும்படியாய்த்து அவனுக்கவற்றி லாதரம் மட்டமாம்படி என்கை.

**விளக்கம்** - இங்கு பூதத்தாழ்வார் அருளிச்செய்த இரண்டாம் திருவந்தாதி (54) – இளங்கோயில் கைவிடேல் – என்ற பாசுரத்தை விளக்குகிறார். இதில் பூதத்தாழ்வார் கூறுவது: என்னை அடைவதற்காக அவன் முன்பு பல திவ்யதேசங்களிலும் எழுந்தருளி நின்றான். இப்போது என்னைப் பெற்ற பின்னர் அவன் அந்த திவ்யதேசங்களின் மீது முன்பு போன்று ஆசை இல்லாமல், என்னுடைய மனதில் மிகுந்த விருப்பம் கொண்டு நிற்கிறான் – என்பதாகும். இதனைக் கண்ட ஆழ்வார் – அவன் தனது மற்ற திவ்யதேசங்கள் அனைத்தையும் கைவிட முயல்கிறான் போலும் – என்று சந்தேகம் கொள்கிறார். ஆகவே அவனிடம், "என் மனதில் நீ புகுவதற்கு பாலாலயம் போன்று

விளக்கிய திருப்பாற்கடலை நீ கைவிடாமல் இருத்தல் வேண்டும்", என்கிறார். ஆக ஞானி ஒருவன் அவனிடம் "திவ்யதேசங்களைக் கைவிடாதே" என்று வேண்டிக்கொள்ளும் அளவிற்கு அவனுக்கு மற்ற திவ்யதேசங்கள் மீது உள்ள ஆசையானது குறைவுபடத் தொடங்கியது என்று கருத்து.

174. ப்ராப்யப்ரீதி விஷயத்வத்தாலும் க்ருதஜ்ஞதையாலும் பின்பவை அபிமதங்களாயிருக்கும்.

**அவதாரிகை** – இப்படியிவனர்த்தித்தாலும், ஸாத்யம் ஸித்தித்த பின்பு அவனுக்கவை அபிமதங்களா யிருக்குமோ வென்ன வருளிச்செய்கிறார் (ப்ராப்ய) இத்யாதியாலே.

**விளக்கம்** – இப்படியாக ஞானி அவனிடம் வேண்டிக் கொள்கின்றபோதிலும், ஸர்வேச்வரனுக்குத் தேவையான பலன் அவனுக்குக் கிட்டிய பின்னர், திவ்யதேசங்கள் அவனுக்கு இன்னமும் விரும்புவதற்கு ஏற்றபடி இருக்குமோ என்ற சந்தேகத்திற்கான விடையை அருளிச்செய்கிறர்.

**வ்யாக்யானம்** - (ப்ராப்யப்ரீதி விஷயத்வமாவது) – தனக்கு ப்ராப்யபூதனான விச்சேதநனுடைய வுகப்புக்கு விஷயமாயிருக்கை; "கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர்மல்லை" யென்று மண்டியிரே யிவனிருப்பது. க்ருதஜ்ஞதையாவது – இவ்வோ தேசவாஸத்தாலேயன்றோ நாமிவனைப்பெற்றது என்று அத்தேசம் தனக்குப் பண்ணின வுபகாரத்தை யநுஸந்திக்கை. இவையிரண்டாலும், ஸாத்யமான விச்சேதநன் கைபுகுந்திருக்கச் செய்தேயும். அவனுக்கு அவ்வோ தேசங்கள் அபிமதங்களா யிருக்கும் மென்கை.

**விளக்கம்** - "ப்ராப்யப்ரீதி விஷயத்வமாவது" என்பது என்ன? ஸர்வேச்வரனாகிய தன்னை அடையத்தகுந்தவனாக உள்ள சேதனன் ஒருவனுடைய மகிழ்ச்சிக்குக் காரணமாக தான் இருத்தல் என்பதாகும். திருக்குறுந்தாண்டகம் (19) - கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர்மல்லை – என்று திவ்யதேசங்களின் மீது மிகுந்த ஈடுபாடும் மகிழ்வும் கொண்டபடி அல்லவோ சேதநன் உள்ளான்? "க்ருதஜ்ஞதை" என்றால் – ஸர்வேச்வரன் தனது திருவுள்ளத்தில், "இந்தத் திவ்யதேசங்களில் நாம் வசித்த காரணத்தால் அல்லவோ இந்தச் சேதநன் அங்கு வந்தன், இதனால் அல்லவோ நாம் அவனைப் பெற்றோம்", என்று அந்த

திவ்யதேசம் ஸர்வேச்வரனாகிய தனக்குச் செய்த உபகாரத்தை எண்ணிப்பார்ப்பதாகும். இந்த இரண்டு காரணங்களாலும், தன்னுடைய முயற்சிக்குப் பலனாக சேதநனை அடைந்துவிட்டபோதிலும், ஸர்வேச்வரனுக்கு அந்த திவ்யதேசங்கள் விரும்பத் தகுந்தவையாகவே இருக்கும் என்று கருத்து.

**வ்யாக்யானம் -** ஆக, (குணம் போலே தோஷநிவ்ருத்தி) என்று கீழ்ச்சொன்ன சேஷத்வ பாரதந்த்ர்யரூப ஆத்மகுணம் போலே தோஷ நிவ்ருத்தியும், (பராநுபவத்துக்கு விலக்கு) என்று ப்ரதிஜ்ஞை பண்ணி ததுபபாதநார்த்தமாக அபிமதவிஷயத்தில் அழுக்கபிமதமா யிருக்கும்படியையும், இவன் "அழுக்குடம்பு" என்று கழிக்கிறவிதிலே யவனத்யாதரத்தைப் பண்ணும்படியையும், ஜ்ஞாநியான விவனை ஸவிக்ரஹமாக வாதரிக்கைக்கு ஹேதுவிசேஷத்தையும், பரமார்த்தனான விவன் தேஹ ஸ்திதி கொண்டே இவன் தேஹத்திலவன் விருப்பமறியலா மென்னுமத்தையும், அவனிவனுடைய தேஹத்தை விருப்பும் ப்ரகாரத்தையும், ஸாத்யமானது விது ஸித்தித்தால் ஸாதநாதரம் மட்டமாம்படியையும், அதினெல்லையையும், இவன் அவ்வோதேசங்களைக் கைவிடாதொழியவேணும் என்று அர்த்தித்தால் ஸ்வஸாத்யம் ஸித்தித்திருக்கச் செய்தேயும் ஹேது த்வயத்தாலே அவனுக்கவை அபிமதங்களா யிருக்கும் படியையு மருளிச் செய்தாராயிற்று.

**விளக்கம் -** ஆகவே சூர்ணை 146ல் (குணம் போலே தோஷநிவ்ருத்தி) கூறப்பட்டதான சேஷத்வம் மற்றும் பாரதந்த்ர்யம் என்னும் ஆத்மகுணங்கள் போன்று சரீரத்தின் தொடர்பை விலக்க எண்ணுதல் என்பது சூர்ணை 164ல் (பராநுபவத்துக்கு விலக்கு) கூறப்பட்டதான பகவத் அனுபவத்திற்கு விலக்காக உள்ளது என்று எடுத்துக்கூறினார். இதனை விளக்கும்விதமாக கீழே உள்ள பலவற்றையும் அருளிச்செய்தார்:

- தான் விரும்பும் பெண் ஒருவளிடம் உள்ள அழுக்கு என்பது விரும்பத்தக்கதாக உள்ள நிலையையும்
- சேதநன் ஒருவன் தன்னுடைய சரீரமானது "அழுக்குடம்பு" என்று எண்ணியபடி சரீரத்தைக் கைவிட உள்ளபோது, ஈச்வரன் அதனை விரும்புகிற நிலையையும்
- ஞானியாக உள்ள சேதநன் ஒருவனை அவனது சரீரத்துடன் ஈச்வரன் விரும்புவதற்கான காரணத்தையும்

- தான் எடுத்துள்ள சரீரத்தின் மீது வெறுப்பு கொண்டுள்ள ஒருவனது சரீரமானது இந்த உலகில் இருக்கின்ற நிலை மூலமாக அந்தச் சரீரத்தின் மீது ஈச்வரன் எந்த அளவு விருப்பம் கொண்டுள்ளான் என்பதை அறியலாம் என்பதையும்
- ஈச்வரன் சேதனன் ஒருவனின் சரீரத்தை எவ்விதம் விரும்புகிறான் என்பதையும்
- ஈச்வரனாகிய தான் பெற்ற பலனாக எண்ணுகின்ற சேதனனின் சரீரம் கிட்டினால், தான் இந்த சேதநனை அடைவதற்கு உபாயமாக இருந்த திவ்யதேசங்கள் மீது ஈச்வரனுக்கு ஆசை சற்றே குறைவதையும்
- இவ்விதம் அந்த திவ்யதேசங்களைக் கைவிடாமல் இருக்கவேண்டும் என்று சேதநன் வேண்டினால், தனது பயன் கிட்டியபோதிலும் ஈச்வரன் அந்த திவ்யதேசங்களை விடாமல் இருப்பதற்கான இரண்டு காரணங்களையும்

175. ஆகையாலே தோஷநிவ்ருத்திபோலே ஆந்தர குணமும் விரோதியாயிருக்கும்.

**அவதாரிகை** - இப்படி தோஷநிவ்ருத்தி பராநுபவத்துக்கு விலக்கென்னுமிடம் ஸுஸ்பஷ்டமாம்படியான ஹேதுக்கள் பலவற்றையும் அருளிச்செய்கையாலே அத்தை ஸித்திப்பித்தாராய், அது தன்னை த்ருஷ்டாந்தமாக்கி ஸிம்ஹாவலோகந ந்யாயத்தாலே கீழ்ச்சொன்ன சேஷத்வ பாரதந்த்ர்ய ரூபாத்மகுணத்தினுடைய பராநுபவவிரோதித்வத்தை ஸ்திரீகரிக்கிறார் (ஆகையாலே) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக சேதநன் ஒருவன் தனது சரீரத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளுதல் என்பது பகவத் அனுபவத்திற்கு விலக்காக உள்ளது என்பது நமக்குத் தெளிவாகப் புரிவதற்காகப் பல காரணங்களால் அருளிச்செய்தார். இந்தக் கருத்தில் நிலை நின்றவராக, இதனையே உவமையாக உரைக்கிறார். சிங்கம் ஒன்று தான் நடந்து வந்த பாதையை சற்று தூரம் சென்ற பின்னர் திரும்பிப் பார்ப்பதாகிய "ஸிம்ஹாவலோகந ந்யாயம்" என்ற ரீதியில் அருளிச்செய்கிறார். இது என்ன? அதாவது சரீரத்தை விடுதல் என்பது எம்பெருமான் சேதநனை அனுபவிக்க எண்ணும்போது, அத்தகைய அனுபவத்திற்குத் தடையாக எவ்விதம் இருக்குமோ அது போன்று, ஆத்மகுணங்களாக உள்ள அடிமைத்தன்மை மற்றும் பார்தந்த்ர்யம் ஆகிய இரண்டும் எம்பெருமான் சேதநனை அனுபவிக்க எண்ணும்போது தடையாக உள்ளன என்பதை இங்கு உறுதியாக உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஆகையாலே) என்று கீழே ஸித்திப்பித்தவர்த்தத்தை யநுவதிக்கிறார். (தோஷ நிவ்ருத்திபோலே) என்றது - தோஷங்கழிகை ஸ்வரூபௌஜ்ஜ்வல்யத்துக் குறுப்பாயிருக்கச் செய்தேயும் தோஷத்தையே போக்யமாக விரும்புகிற ப்ரணயியான

வவனுக் கநபிமதமாகையாலே யாதொருபடி பராநுபவத்துக்கு விரோதியாகிறது, அதுபோலேயென்றபடி. (ஆந்தர குணம்) என்கிறது - சேஷத்வபாரதந்த்ர்யங்களை. இவற்றை (ஆந்தர குணம்) என்கிறது - ஜ்ஞாநாநந்தங்களிலுங்காட்டில் ஆத்மாவுக்கு அந்தரங்கமாகையாலே. இதினுடைய பராநுபவ விரோதித்வப்ரகாரம் கீழ்ச் சொல்லப்பட்டதிறே. இவ்விடத்திலும் (ஆந்தர குணம்) என்கிறது – பாரதந்த்ர்ய மொன்றையுமாம்.

**விளக்கம்** - "ஆகையாலே" என்பதன் மூலம் இதுவரை உரைத்தவற்றின் ஆழ்பொருளை உணர்த்துகிறார். "தோஷ நிவ்ருத்திபோல்" என்றால் என்ன? சரீரத்தைக் கைவிடுதல் என்பது, ஆத்மாவானது தனது இயல்பான ஒளியை மீண்டும் அடைவதற்கான (தனது சுருங்கிய ஞானத்தில் இருந்து விடுபடுதல்) நிலைக்கு உதவுவதாக உள்ளது; ஆனால் இது, அழுக்கையே இன்பமானது என்று எண்ணும் காதல் கொண்ட ஸர்வேச்வரனுக்கு விருப்பம் இல்லாத ஒன்றாக இருப்பதால், சரீரம் விடுதல் என்பது எவ்விதம் ஸர்வேச்வரனுடைய அனுபவத்திற்குத் தடையாக உள்ளதோ அது போன்று – என்று பொருள் கொள்க. "ஆந்த்ர குணம்" என்பதால் சேஷத்வம் மற்றும் பாரதந்த்ர்யம் கூறப்பட்டது. இந்த இரண்டும் ஞானம் மற்றும் ஆனந்தம் என்பதான ஆத்மகுணங்களைக் காட்டிலும் ஆத்மாவிற்கு மேலும் அந்தரங்க குணமாக உள்ளதால் இவ்விதம் கூறப்பட்டது. இந்த இரண்டும் ஸர்வேச்வரன் சேதநனை அனுபவிக்கத் தடையாக உள்ளது குறித்து சூர்ணை 159 முதல் சூர்ணை 163 முடிய கூறப்பட்டது. இந்தச் சூர்ணையில் கூறப்பட்ட ஆந்த்ரகுணம் எனபது பாரதந்த்ர்யத்தை மட்டுமே என்று கொள்ளலாம்.

176. தோஷநிவ்ருத்திதானே தோஷமாமிறே.

**அவதாரிகை** – இப்படிச் சொல்லுகைக்கு தோஷ நிவ்ருத்தியில் வரும் தோஷமேதென்ன; வேறொரு தோஷமும் வேண்டா, இதுதானே தோஷமா மென்கிறார் (தோஷ) இத்யாதியாலே.

**விளக்கம்** - இவ்விதம் கூறுவதற்கு சரீர்த்தின் தொடர்பை நீக்கிக்கொள்வதில் உண்டாகும் வ்ருப்பம் எனப்தன் மூலம் எண்ண குற்றம் ஏற்படுகிறது என்ற கேள்வி கேட்கலாம்.

இதற்கு விடை அளிக்கிரார்- வேரு தனியாக குற்றமே அவசியம் இல்லை, சரீரத்தை நீக்கிக்கொள்வதில் ஏற்படும் விருப்பமே குற்ற்மாகிரது- என்கிறார்

**வ்யாக்யானம்** – அதாவது, காமிநியானவள் தன்னுடம்பி லழுக்குக் கழற்றி போகத்திலே யந்வயிக்க இச்சிக்குமாப்போலே, ஸ்வத: பரிசுத்தமான வாத்ம ஸ்வரூபத்துக்கு வந்தேறியான தோஷத்தைக் கழித்து ஸ்வசேஷிக்கு போக்யமாக விநியோகப்பட வேணும் என்று ஸ்வநிர்ப்பந்தத்தாலே இவன் பண்ணுவித்துக் கொள்ளுகிற தோஷநிவ்ருத்திதானே, காமிநியுடைய வழுக்குகக்கும் காமுகனைப்போலே தோஷமே யபிமதமாய் இத்தோடே தன்னை புஜிக்க வாதரிக்கிற வவனுடைய போகத்துக்கு விலக்காகையாலே தோஷமாமிறே யென்கை. அவனுக்கு அநிஷ்டமாமதிறே தோஷமாவது. (இறே) என்று ப்ரஸித்தி தோற்ற வருளிச்செய்தது கீழுபபாதித்தத்தையெல்லாம் நினைத்து.

**விளக்கம்** - காமத்தில் விருப்பம் கொண்ட ஒரு பெண் தனது உடலில் உள்ள அழுக்குகளை அகற்றி, தன்னைத் தூய்மைப்படுத்திக்கொண்டு, இன்பம் அனுபவிக்க எண்ணுவது போன்று - இயற்கையாகவே தூய்மையாக உள்ள ஆத்மாவிற்கு இடையில் வந்து சேர்ந்த தோஷம் போன்றதான இந்தச் சரீரத்தைக் கழித்துவிட்டு, தன்னுடைய எஜமானனாக உள்ள ஸர்வேச்வரனுக்கு, தனது ஆத்மா தோஷங்கள் அற்றதான இன்பமான வஸ்துவாகக் கிட்டவேண்டும் என்று சேதநன் எண்ணுகிறான். ஆனால், தான் விரும்பிய பெண்ணின் உடல் அழுக்கை விரும்பும் காதலன் போன்று, தோஷம் என்பதே தனக்குப் பிடித்த விஷயமாகக் கொண்டு இந்தச் சரீரத்துடன் சேதநனை அனுபவிக்க எண்ணும் ஈச்வரனின் அனுபவித்திற்கு இந்தச் சரீர தொடர்பை நீக்கவேண்டும் என்பதான விருப்பம் தடையாக உள்ளது அல்லவோ? ஆகவே இது குற்றமே ஆகிறது. தோஷம் என்றால் ஸர்வேச்வரனுக்கு விருப்பம் அற்றது அல்லவோ? "இறே" என்று முடித்தது ஏன் என்றால் இதுவரை கூறப்பட்டது அனைத்தையும் தனது திருவுள்ளத்தில் இப்போது மீண்டும் ஒருமுறை எண்ணியதால் ஆகும்.

177. "தன்னால் வரும் நன்மை விலைப்பால்போலே; அவனால் வரும் நன்மை முலைப்பால் போலே" என்று பிள்ளான்வார்த்தை.

**அவதாரிகை** – ஆக, (நன்மைதானே தீமையாயிற்று) என்றும், (தனக்குத்தான் தேடும் நன்மை தீமையோபாதி விலக்காயிருக்கும்) என்றும், (தோஷ நிவ்ருத்திதானே தோஷமாமிறே) என்றும் - தான் தனக்குத் தேடும் நன்மை ஹேயமென்னுமிடம்

சொல்லுகையாலே, அவன் தேடும் நன்மையே யுபாதேயமென்னுமிடம் பலித்ததிறே; இப்படி தான் தனக்குத் தேடும் நன்மை ஹேயம், அவன் தேடும் நன்மை யுபாதேய மென்னுமிடத்தை ஆப்த வசநத்தாலே தர்சிப்பிக்கிறார் மேல் (தன்னால்) என்று தொடங்கி.

**விளக்கம் -** "நன்மைதானே தீமையாயிற்று (சூர்ணை 145)", "தனக்குத்தான் தேடும் நன்மை தீமையோபாதி விலக்காயிருக்கும் (சூர்ணை 160), "தோஷ நிவ்ருத்திதானே தோஷமாமிறே (சூர்ணை 176)" போன்ற பல சூர்ணைகள் மூலமாகத் தானாகவே தனக்குத் தேடிக்கொள்கின்ற நன்மை என்பது தீமையை ஏற்படுத்துவதால் கைவிடத்தக்கது என்று உரைக்கப்பட்டன; இதன் மூலமாக ஸர்வேச்வரன் நமக்குத் தேடி அளிக்கின்ற நன்மையே ஏற்புடையது என்பது மறைமுகமாக உணர்த்தப்பட்டது. இவ்விதம் நாமாகவே நமக்குத் தேடிக்கொள்கின்ற நன்மை கைவிடத்தக்கது என்றும், அவன் நமக்கு அளிக்கின்ற நன்மையே ஏற்கத்தக்கது என்றும் நம்பத் தகுந்த சான்றோர்கள் கூறும் சொற்களை இங்கு உரைக்கிறார்.

**வ்யாக்யானம் -** (தன்னால் வரும் நன்மையாவது) - ஸ்வயத்நத்தாலே தான் தனக்குண்டாக்கிக் கொள்ளும் நன்மை. (விலைப்பால்போலே) என்றது - ஔபாதிகமுமாய், விரஸமுமாய், அப்ராப்தமுமா யிருக்குமென்கை. (அவனால் வரும் நன்மையாவது) – நிருபாதிக ஸ்வாமியான வவன்றானே இவனுக்கிது வேணும் என்றுண்டாக்கும் நன்மை. முலைப்பால் போலே என்றது - நிருபாதிகமுமாய், ஸரஸமுமாய், ப்ராப்தமும யிருக்குமென்கை.

**விளக்கம் –** "தன்னால் வரும் நன்மையாவது" என்றால் – தன்னுடைய முயற்சி மூலமாகத் தானாகவே தனக்குத் தேடிக்கொள்ளும் நன்மை என்பதாகும். "விலைப்பால்போலே" என்றால் – இத்தகைய முயற்சி எப்படிப்பட்டது என்றால், ஒரு குறிப்பிட்ட காரணத்தை அடியொற்றி வந்ததால் எந்தவிதமான சுவையும் இன்றி, ஏற்கத்தகாத ஒன்றாக இருக்கும். "அவனால் வரும் நன்மையாவது" என்றால் – எந்தவிதமான காரணமும் இன்றி நமக்கு உதவுகின்ற ஸர்வேச்வரன் "இந்தச் செயல் இவனுக்கு ஏற்புடையது, இந்த வஸ்து இவனுக்குத் தேவை" என்று தானாகவே அளிப்பதாகும். இது தாய்ப்பால் போன்று காரணம் இன்றி சுரக்கின்ற காரணத்தினால் சுவையானதாக, ஏற்கத்தக்கதாக இருக்கும் என்று கருத்து.

178. அவனையொழியத் தான் தனக்கு நன்மை தேடுகையாவது - ஸ்தநந்தய ப்ரஜையை மாதாபிதாக்கள் கையில் நின்றும் வாங்கி காதுகனான ஆட்டு வாணியன் கையிலே காட்டிக்கொடுக்குமா போலே யிருப்பதொன்று.

**அவதாரிகை** - இவ்வளவன்றிக்கே, எம்பெருமானை யொழியத்தான் தனக்கு நன்மை தேடவிழிந்தால் ஸ்வவிநாசமே பலிக்குமென்னுமிடத்தை ஸநிதர்சநமாக அருளிச் செய்கிறார் (அவனை என்று தொடங்கி).

**விளக்கம்** - எம்பெருமானைத் தவிர்த்துவிட்டு, தனக்குத்தானே நன்மையைத் தேடிக்கொள்ளும் முயற்சியில் ஒருவன் ஈடுபட்டாலோ, அல்லது அது போன்று சிந்தித்தாலோ அது அழிவையே உண்டாக்கும் என்பதை ஓர் உதாரணத்துடன் அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ப்ராப்தனுமாயாப்தனுமானவவன் இவனுக்கு நன்மை தேடுமதொழிய, அதுக்கெதிர்த்தட்டான தான் தனக்கு ஸ்வோஜ்ஜீவநார்த்தமான நன்மை ஸம்பாதிக்கையாவது - ஸ்வரக்ஷணோபயோகியான ஜ்ஞாநசக்திகளொன்றுமின்றிக்கே ஸ்வமாத்ராதிக ளுணர்ந்து நோக்கவேண்டும்படியான ஸ்தநந்தய ப்ரஜையை, ரக்ஷகரான மாதாபிதாக்கள் கையில் நின்றும் வலிய வாங்கி, கொலைக்குக் கூசாதே உயிர்க் கொலையாகக் கொன்று மாம்ஸங்களோடே கலசி விற்றுவிடும் காதுகனான ஆட்டு வாணியன் கையிலே இத்தை நோக்கிக்கொள் என்று காட்டிக்கொடுக்குமாப் போலேயிருப்பதொன்றென்கை. இத்தால் - ஸர்வேச்வரனே ரக்ஷகன், தான் தனக்கு நாசகன் என்னுமிடம் சொல்லப்பட்டது.

**விளக்கம்** - நமக்கு உரியவனும், நமக்கு நன்மையை மட்டுமே பண்ணுபவனும் ஆகிய ஸர்வேச்வரன் நமக்கு நன்மையைத் தேடுவதைத் தவிர்த்து, அதற்கு மாறாக நாமே நம்முடைய நன்மையைத் தேடிக்கொள்ளுதல் எப்படி உள்ளது என்றால் – தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான அறிவும் ஆற்றலும் இல்லாத, தன்னைக் காப்பாற்றுவதற்குத் தனது தாய்தந்தையரே வேண்டும் என்னும்படியாக உள்ள தாய்ப்பால் பருகுகின்ற கைக்குழந்தை ஒன்றை, அதனைக் காப்பாற்றுபவர்களான அதன் தாய்தந்தையர் கைகளில் இருந்து வலுக்கட்டாயமாகப் பிடுங்கி, அதனை எந்தவிதமான கொலைக்கும் அஞ்சாமல் உயிர்களைக் கொன்று, மாமிஸங்கள் பலவற்றைக் கலந்து விற்கின்ற ஆட்டு இறைச்சியை விற்கும் ஒருவனிடம், "இந்தக் குழந்தையைப்

பார்த்துக்கொள்” என்று கூறுவது போன்றதாகும். இதன் மூலம் ஸர்வேச்வரனே நம்மைக் காப்பவன் என்பதும், தானே தனக்கு நாசத்தை ஏற்படுத்திக் கொள்பவன் என்பதும் உரைக்கப்பட்டது.

179. தன்னைத் தானேயிறே முடிப்பான்.

**அவதாரிகை** - இப்படி இவன் தன்னைத்தானே முடித்துக்கொள்ளுமோவென்ன வருளிச் செய்கிறார் (தன்னைத்தானே) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக ஒருவன் தனக்குத்தானே நன்மை தேடிக்கொள்ளுதல் என்பதில் ஈடுபட்டு, தனக்குத்தானே முடிவு தேடிக்கொள்பவர்கள் யாரும் உண்டா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். (அல்லது இப்படியாகத் தனக்குத் தானே நன்மை தேடிக் கொண்டு ஒருவன் முடிந்து போனால், அதற்கு எம்பெருமான் அல்லவோ காரணம் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்).

**வ்யாக்யானம்** – அதாவது, ஸர்வேச்வரனின் உஜ்ஜீவிப்பிக்கைக்கு அவஸர ப்ரதீக்ஷணாய்ப் போருமவனாகையாலே இவனுடைய விநாசத்துக்கு ஒரு நாளுமவன் ஹேதுவன்று; இனி “அஸந்நேவ” என்னும்படி தன்னை நசிப்பித்துக்கொள்ளுவான் தானேயிறே யென்கை. “யானே என்னை” என்கிற பாட்டிலே “யானே” என்று – என்னிழவு பகவத் க்ருதமல்ல, அவன் எதிர் சூழல்புக்குத் திரியாநிற்க நானே கிடீர் விநாசநத்தைச் சூழ்த்துக்கொண்டேன் என்றாரிறே யாழ்வார்.

**விளக்கம்** - ஸர்வேச்வரன் நம்மைக் கரை ஏற்றுவதற்குச் சரியான தருணம் பார்த்தபடி உள்ளவன் என்பதால் நம்முடைய கேட்டிற்கு அவன் எப்போதும் காரணம் ஆகமாட்டான். தைத்திரீயத்தில் – அஸந்நேவ – ஸர்வேஸ்வரனை இல்லை என்று கூறினால் தானே இல்லாதவன் ஆகிறான் – என்பதற்கு ஏற்ப தன்னை அழித்துக் கொள்பவன் தானாகவே அல்லவோ அவ்விதம் அழித்துக்கொள்பவன் ஆகிறான்? திருவாய்மொழியில் (2-9-7) - யானே என்னை - என்று கூறும் பாசுரத்தில், “எனது அழிகை என்பது பகவானின் செயல் காரணமாக அல்ல, நானே எனது அழிவை ஏற்படுத்திக்கொண்டேன்”, என்கிறார்.

180. தன்னைத் தானே முடிக்கையாவது - அஹங்காரத்தையும் விஷயங்களையும் விரும்புகை.

**அவதாரிகை** - இவன் தன்னைத்தானே முடிக்கையாவது ஏதேன்னு மாகாங்க்ஷையிலே யருளிச் செய்கிறார் (தன்னைத்தானே) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஒருவன் தன்னைத்தானே முடித்துக்கொள்வது எந்தவிதத்தில் நிகழ்கிறது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – (அஹங்காரமாவது) தேஹாத்மாபிமாநமும், ஸ்வாதந்த்ர்யாபிமாநமும்; (விஷயங்களாவன) – விஹிதநிஷித்த விஷயங்கள். இவற்றை (விரும்புகையாவது) - இவற்றிலே மிகவும் ப்ரவணனாகை. ஆத்ம ஸ்வரூபந்தான் பகவதநந்யார்ஹ விசேஷமாய் பகவதேகபோகமாயிறே யிருப்பது; தாத்ருச ஸ்வரூபத்தை நசிப்பிக்கையிறே – இவற்றிலே இவன் ப்ரவணனாகையாவது. உத்தரவாக்ய நமச்சப்தார்த்தஞ் சொல்லுகிறாராகில் இவை எல்லா மென்னென்னில்; உத்தர வாக்கியத்தில் நமஸ்ஸிலே புருஷார்த்தத்துக் கிடைச்சுவரான விரோதிகளெல்லாம் தள்ளுண்ணுமென்னுமிடம் தோற்றவிறே "மநோவாக்காயை:" என்று தொடங்கி மூன்று சூர்ணையாலே ஸகல விரோதி நிவ்ருத்தியையும் பாஷ்யகாரரருளிச் செய்தது. இவர் தாமும் முமுக்ஷுப்படியிலே இந்த நமச்சப்தார்த்தம் சொல்லுகிறவளவில், "இதிலே அவித்யாதிகளும் கழியுண்ணும்" என்றாரிறே. ஆகையாலே இவ்விடத்திலும் தேஹாத்மாபிமாநாதிரூபமான அஹங்காரம், தத்கார்யமான விஷயப்ராவண்யம், ததுபயகார்யமான பாகவதாபசாரம் முதலான விரோதிகளை யெல்லாம் ப்ரஸக்தாநு ப்ரஸக்தமாக வருளிச் செய்கிறார்; ஆகையாலே விரோதமில்லை.

**விளக்கம்** – "அஹங்காரம்" என்றால் – சரீரமே ஆத்மா என்ற எண்ணமும், தான் சுதந்திரமானவன் அல்லது தான் தனக்கே உரியவன் என்ற எண்ணமும் ஆகும். விஷயங்கள் என்றால் சாஸ்த்ரங்களால் தள்ளி வைக்கப்பட்ட விஷயங்கள் மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்கள் (மற்றவர் மனைவியை நாடுதல், தனது மனைவியுடன் சேர்தல்) என்பதாகும். இவற்றை விரும்புதல் என்றால் இவற்றில் மிகுந்த ஈடுபாட்டுடன் எப்போதும் உள்ள நிலையாகும். ஆத்மாவின் தன்மை எப்படிப்பட்டது என்றால், தான் பகவானுக்கு மட்டுமே ஏற்ற கைங்கர்யங்களைச் செய்தபடி அவனது அடிமையாக

இருத்தலும், அவனுடைய அனுபவத்தையே தனக்கு இன்பமாகக் கொண்டிருத்தலும் ஆகும். இத்தகைய தன்மையை அழிப்பது அல்லவோ இவன் மற்ற விஷயங்களில் மிகுந்த ஈடுபாட்டுடன் உள்ளது ஆகும்? நன்கு ஆராய்ந்தால் த்வயத்தின் இரண்டாவது வரியின் இறுதியில் உள்ள “நம:” என்ற பதம் மூலமாக அடையப் போகின்ற பேற்றுக்குத் தடையாக உள்ள விரோதிகள் அனைத்தும் தள்ளப்பட்டன என்பதை உணர்த்தும்விதமாக கத்யத்ரயத்தில் “மநோவாக்காயை:” என்று தொடங்கி உள்ள மூன்று வரிகளில் விரோதிகளின் நீக்கம் குறித்து ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்தார். ஸ்வாமி பிள்ளை லோகசார்யார் தாம் அருளிச்செய்த முமுக்ஷுப்படியில் (183) – இதிலே அவித்யாதிகளும் கழியுண்ணும் - என்பதில் “நம:” பதத்தின் பொருளைக் கூறும்போது இதனை உணர்த்தினார். இது போன்றே இங்கும் சரீரத்தை ஆத்மாவாக எண்ணுகின்ற நிலை போன்றதான வடிவில் உள்ள அஹங்காரம், அதன் செயலாக உள்ள உலகவிஷயங்களின் மீது ஈடுபாடு, இவற்றின் விளைவுகளான பாகவத அபசாரம் போன்ற பலவிதமான விரோதிகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கூறுவதால் விரோதம் இல்லை என்று கருத்து.

181. அஹங்கார மக்நிஸ்பர்சம் போலே.

**அவதாரிகை** - இவ்வஹங்காராதிகளின் கொடுமையை விஸ்தரேணோபபாதிப்பதாகத் திருவுள்ளம் பற்றி ப்ரதமம் அஹங்காரத்தின் கொடுமையை அருளிச்செய்கிறார் (அஹங்காரம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - அஹங்காரம் உள்ளிட்டவற்றின் கொடுமையை விரிவாக எடுத்துரைப்பதற்குத் திருவுள்ளம் கொண்டவராக, முதலில் அஹங்காரத்தின் கொடுமையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (அக்நி ஸ்பர்சம் போலே) என்றது - அக்நி ஸ்பர்சமானது அந்வயித்த விடமெங்கும் சுட்டுருவழிக்குமாப்போலே, இதுவும் ஆச்ரயாசியாய் ஸ்வரூபத்தை நேராக வுருவழித்துவிடு மென்கை.

**விளக்கம்** – ”அக்நி ஸ்பர்சம் போலே” என்றால் நெருப்பின் சேர்க்கை என்பது அது பரவிய இடம் எங்கும் எரித்து, ஒன்றும் இல்லாமல் அழிப்பது போன்று, இத்தகைய அஹங்காரம் என்பது அதனை அடைந்தவர்களை அழிப்பதாகவும் ஆத்மஸ்வரூபத்தை அழிப்பதாகவும் உள்ளது என்று கருத்து.

183. “ந காமகலுஷம் சித்தம்”, “ந ஹி மே ஜீவிதேநார்த்த:”, “ந தேஹம்”, “எம்மாவீட்டுத்திறமும்”.

**அவதாரிகை** - இவ்வஹங்காரத்தினுடைய க்ரௌர்யத்துக்கு ப்ரமாணங்கள் காட்டுகிறார் மேல்.

**விளக்கம்** - அஹங்காரத்தின் கொடுமைகளுக்கான ப்ரமாணங்களை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதில் ப்ரதமத்திலே, ருக்வேதகிலமான ஜிதந்தாவசநத்தை யருளிச் செய்கிறார்; “நகாமகலுஷம் சித்தம் மமதே பாதயோஸ்ஸ்திதம், காமயே வைஷ்ணவத்வந்து ஸர்வ ஜந்மஸு கேவலம்”, இதுக்கர்த்தம் – நிருபாதிக சேஷியாய் நிரதிசய போக்யரான தேவரீர் திருவடிகளிலே வ்யவஸ்திதமான வென்னெஞ்சானது, ஸ்ரீவைகுண்டாதிகளாகிற வேறொன்றை ஸ்வயம் புருஷார்த்தமாக நினைத்துக் கலங்கியிருக்கிற தன்று, ஸர்வ ஜந்மங்களிலும் தேவர்க்கே ரஸமாம்படியிருக்கிற தாஸ்யத்தையே யாசைப்படாநின்ற தென்று. கேவலபதத்தாலே – இத்தலைக்குமாயிருக்கு மிருப்பைக் கழிக்கிறது; து சப்தம் அவதாரணார்த்தம். இத்தால் – மோக்ஷபர்யந்தமாகத் தன்னுகப்பால் வருமதெல்லாம் அஹங்கார கர்ப்பமாகையாலே த்யாஜ்யமென்னுமிடம் சொல்லப்பட்டது.

**விளக்கம்** - ப்ரமாணங்களில் முதலில் ருக்வேதகிலமாகிய ஜிதந்தாவில் எடுக்கப்பட்ட வரிகள் உரைக்கிறார். இந்த வரியானது - நகாமகலுஷம் சித்தம் மமதே பாதயோஸ்ஸ்திதம், காமயே வைஷ்ணவத்வந்து ஸர்வ ஜந்மஸு கேவலம் - என்பதாகும். இதன் பொருள் – எந்தவிதமான காரணமும் இன்றி எஜமானனாகவும், எல்லையற்ற இனிமையும் கொண்ட உன்னுடைய திருவடிகளில் மட்டுமே நிலையாக நிற்கின்ற எனது நெஞ்சமானது ஸ்ரீவைகுண்டம் உள்ளிட்ட மற்றொரு புருஷார்த்தம் அவசியம் என்று இல்லாமல், தாங்களாகவே புருஷார்த்தமாக உள்ள திவ்யதேசங்களை எண்ணிக் கலங்கியபடி இருப்பதில்லை; அனைத்துப் பிறவிகளிலும் உனக்கு மட்டுமே கைங்கர்யம் செய்தபடி இருத்தல் என்ற இன்பமான அடிமை நிலையை மட்டுமே எண்ணியபடி உள்ளது - என்பதாகும் (இதன் மூலம் நமது மகிழ்விற்காகக் கிட்டும் பரமபதம் கூட அஹங்காரத்தின் அடிப்படை என்கிறார்). இந்த வரியில் உள்ள “கேவலம்” என்ற பதம் நாம் நமக்காக உள்ள இருப்பை விலக்குகிறது. ”து” என்ற பதம் “அடிமைத்தனத்தையே” என்பதைப் பிரித்து உணர்த்துகிறது. ஆக இதன் மூலமாக மோக்ஷம் என்பது முடிய தனது மகிழ்விற்காக வரும்

அனைத்தும் அஹங்காரத்தைக் கொண்டே ஏற்படுகின்றன என்பதால் அவை அனைத்தையும் கைவிட வேண்டும் என்பது உரைக்கப்பட்டது.

**வ்யாக்யானம்** - அநந்தரம், பிராட்டி வசநத்தை யருளிச்செய்கிறார். "நஹிமே ஜீவிதேநார்த்தோ நைவார்த்தைர் நச பூஷணை:, வஸந்த்யா ராக்ஷஸீமத்யே விநா ராமம் மஹாரதம், இதுக்கர்த்தம் - மஹாரதரான பெருமாளைப் பிரிந்து ராக்ஷஸிகள் நடுவே வஸியா நிற்கிற வெனக்கு ப்ராணனாலொரு ப்ரயோஜநமில்லை, அர்த்தங்களாலுமொரு ப்ரயோஜநமில்லை, ஆபரணங்களாலு மொருப்ரயோஜநமில்லை என்று. இத்தால் - ப்ராணாதிகளெல்லாம் அத்தலையி விநியோகத்துக்கான வன்றிக்கே தனக்கான போது அஹங்கார ஸ்பர்சியாகையாலே த்யாஜ்யமென்னுமிடம் சொல்லப்பட்டது.

**விளக்கம்** – அடுத்து சீதாப்பிராட்டியின் சொற்களை உரைக்கிறார். இந்த வரியானது இராமாயணம் ஸுந்தரகாண்டம் – நஹிமே ஜீவிதேநார்த்தோ நைவார்த்தைர் நச பூஷணை:, வஸந்த்யா ராக்ஷஸீமத்யே விநா ராமம் மஹாரதம் – என்பதாகும். இதன் பொருள் – மிகச் சிறந்த வீரனாகிய இராமனைப் பிரிந்து அரக்கிகளின் நடுவே வாழ்கின்ற எனக்கு, எனது ப்ராணன் மூலம் எந்தப் பயனும் இல்லை; ஐச்வர்யங்களால் எந்தப் பயனும் இல்லை; ஆபரணங்கள் மூலம் எந்தப் பயனும் இல்லை - என்பதாகும். இதன் மூலம் நம்முடைய உயிர் உள்ளிட்ட அனைத்தும் அவனுக்காக மட்டுமே உள்ளன அல்லாமல் அவை தனக்கு என்று எண்ணும்போது அஹங்காரத்துடன் சேர்ந்து விடுவதால், விடத்தக்கவை என்கிறார்.

**வ்யாக்யானம்** - அநந்தரம், பரமாசார்யரான ஆளவந்தார் வசநத்தை யருளிச்செய்கிறார். "நதேஹம் நப்ராணாந் நசஸுக மசேஷாபிலக்ஷிதம் நசாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வ விபவாத், பஹிர்ப்பூதம் நாத! க்ஷணமபிஸஹே யாது சததா விநாசம் தத்ஸத்யம் மது மதந விஜ்ஞாபந மிதம், இதுக்கர்த்தம் – எனக்கு வகுத்த சேஷியானவனே, உன்னுடைய சேஷத்வமாகிற வைச்வர்யத்துக்குப் புரம்பான தேஹத்தையும் க்ஷணமும் ஸஹியேன், இத்தேஹத்துக்கு தாரகங்களான பராணங்களையும் ஸஹியேன், எல்லாராலுமா சைப்படப்பட்ட சுகத்தையும் ஸஹியேன், புத்ரமித்ர களத்ராதிகளான மற்றொன்றும் ஸஹியேன், இவையித்தனைக்கும் போக்தாவான ஆத்மா தன்னையும் ஸஹியேன், இதெல்லா முருக்காணவொண்ணாதபடி சததாவாக நசித்துப்போக வேணும், இந்த விஜ்ஞாபநம் ஸத்யம், இங்ஙனன்றாகில் தேவர்க்குப் பொய்யனான மது பட்டது

படுகிறேன் என்று. இத்தால் – இத்தலையில் சேஷத்வத்துக்குப் புறம்பானதெல்லாம் அஹங்கார துஷ்டமாகையாலே த்யாஜ்யமென்னுமிடம் சொல்லப்பட்டது.

**விளக்கம்** - அடுத்து மிகவும் உயர்ந்த ஆசார்யரான ஸ்வாமி ஆளவந்தாரின் சொற்களை அருளிச்செய்கிறார். இது ஸ்தோத்ரரத்னத்தின் (57) - நதேஹம் நப்ராணாந் நசஸுக மசேஷாபிலக்ஷிதம் நசாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வ விபவாத், பஹிர்ப்பூதம் நாத! க்ஷணமபிஸஹே யாது சததா விநாசம் தத்ஸத்யம் மது மதந விஜ்ஞாபந மிதம் – என்ற ச்லோகம் ஆகும். இதன் பொருள் - எனக்கு எஜமானனாக உள்ளவனே! உன்னுடைய கைங்கர்யம் என்பதான் ஐச்வர்யத்திற்கு மாறாக உள்ள எனது சரீரத்தை நான் பொறுத்துக் கொள்ளமாட்டேன்; இந்தச் சரீரம் நிலைநிற்கக் காரணமாக உள்ள பலவற்றையும் பொறுக்கமாட்டேன்; அனைவராலும் விரும்பப்படும் சுகத்தையும் பொறுக்கமாட்டேன்; புத்திரர்கள், மனைவி, உறவினர்கள் போன்றவர்களையும் பொறுக்கமாட்டேன்; இவை அனைத்தும் அனுபவிக்கவல்ல ஆத்மாவையும் பொறுக்கமாட்டேன்; இவை அனைத்தும் அனுபவிக்க அடையாளம் தெரியாதபடி நூறு பகுதிகளாகப் பிளந்து போகட்டும்; எனது இந்த விண்ணப்பம் உண்மையானது; இவ்விதம் இல்லை என்றால், உம்மிடம் பொய் உரைத்தமைக்காக மது என்ற அசுரன் எப்படி அழிந்தானோ அது போன்று அழிந்து போகிறேன் - என்பதாகும். ஆக ஸர்வேச்வரனின் கைங்கர்யத்திற்குப் புறம்பாக உள்ள அனைத்தும் அஹங்காரம் என்பதுடன் சேர்வதால் விடத்தக்கவை என்பது கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** – அநந்தரம், மயர்வற மதிநல மருளப் பெற்றவர்களில் தலையானவர் வசநத்தை யருளிச்செய்கிறார் (எம்மாவீட்டுத் திறமும்) என்று. அதாவது - "ஆழ்வீர் மோக்ஷத்தைக் கொள்ளும்" என்ன; என்னுகப்புக்காகத் தருகிற மோக்ஷம் எப்ப்ரகாரத்தாலும் விலக்ஷணமா யிருந்ததேயாகிலும், அதின் இடையாட்டமும் ப்ரஸங்கிக்கக் கடவோ மல்லோமென்கை. இத்தால் – தன்னுகப்பால் வரும் மோக்ஷமும் அஹங்காரம் கர்ப்பமாகையாலே, ஐச்வர்யாதிகளோபாதி த்யாஜ்யமென்னுமிடம் சொல்லப்பட்டது.

**விளக்கம்** - அடுத்து மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்களான ஆழ்வார்களில் முதன்மையான ஸ்வாமி நம்மாழ்வாரின் திருவாய்மொழியை - எம்மாவீட்டுத் திறமும் – எண்று உரைக்கிறார். இதன் பொருள் – ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், "ஆழ்வாரே! இதோ மோக்ஷத்தைப் பெற்றுக் கொள்ளும்", என்கிறான்; இதற்கு ஆழ்வார், "நம்முடைய

மகிழ்ச்சிக்காக இவன் நமக்கு அளிக்கின்ற மோக்ஷம் மேன்மையானதே என்றாலும், அது புருஷார்த்தம் ஆகாது", என்று எண்ணினார் - என்பதாகும். ஆகவே நமது மகிழ்ச்சிக்காகக் கிட்டும் மோக்ஷம் என்பது அஹங்காரத்தை அனுமதிக்கக்கூடும் என்பதால், ஐச்வர்யம் போன்று இத்தகைய மோக்ஷமும் கைவிடத்தக்கதே என்று உணர்த்தப்பட்டது.

183. ப்ரதிகூலவிஷயஸபர்சம் விஷஸ்பர்சம் போலே, அநுகூலவிஷயஸ்பர்சம் விஷமிச்ர போஜனம் போலே.

**அவதாரிகை** - ஆக அஹங்காரத்தின் கொடுமையை யருளிச் செய்தார் கீழ்; அநந்தரம் விஷயங்களின் கொடுமையை யருளிச் செய்கிறார் மேல் (ப்ரதிகூலவிஷய ஸ்பர்சம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இதுவரை அஹங்காரம் ஏற்படுத்துகின்ற கொடுமைகள் பற்றி விரிவாக அருளிச்செய்தார். அடுத்து புலன்களின் விஷயங்கள் குறித்த கொடுமைகள் பற்றி அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (ப்ரதிகூல விஷயமாவது) லோகவிருத்தமுமாய் நரகஹேதுவுமா யிருந்துள்ள நிஷித்த விஷயம்; தத்ஸ்பர்சத்தை விஷஸ்பர்சம்போலே என்றது - ப்ராணபாதகத்வேந ப்ரஸித்தமாகையாலே ப்ராதிகூல்யந் தோற்றநின்ற ப்ராணனை முடிக்கும் விஷஸ்பர்சம்போலே, சாஸ்தர நிஷித்ததயா ப்ரஸித்தமாகையாலே ப்ரதிகூல மென்றே தோற்றியிருந்து ஸ்வரூப நாசத்தைப் பண்ணுகையாலே. (அநுகூல விஷயமாவது) - லோகவிருத்தமுமன்றிக்கே நரகஹேதுவுமன்றிக்கே விசிஷ்ட வேஷாநுகூலமாயிருந்துள்ள விஹிதவிஷயம்; தத்ஸ்பர்சத்தை (விஷமிச்ர போஜநம் போலே) என்றது - விஷமிச்ராந்ந போஜநம் அதறியாதவனுக்கு அநுகூலமென்றே தோற்றியிருந்து அவன் ப்ராணனை முடித்துவிடுமாப்போலே, சாஸ்த்ர விஹிததயா ப்ரஸித்தமாகையாலே அநுகூலம்போலே தோற்றியிருந்து ஆத்மாவினுடைய அநந்யபோகத்வரூபமான ஸ்வரூபத்தை நசிப்பிக்கையாலே. "விஷஸ்ய விஷயாணாஞ்ச தூரமத்யந்த மந்தரம், உபபுக்தம் விஷம்ஹந்தி விஷயாஸ் ஸ்மரணாதபி" என்று புஜிக்கவும் வேண்டாதே ஸ்மரணமாத்ரத்தாலும் முடிக்கையாலே, விஷத்திற்காட்டில் விஷயமதி க்ரூரமென்னாநின்றதிறே.

**விளக்கம்** – "ப்ரதிகூல விஷயம்" என்றால், இந்த உலகினரால் வெறுக்கத்தக்கதாகவும், நரகம் ஏற்படக் காரணமாக உள்ளதும் ஆகிய மற்றவர் மனைவியை நாடுதல் போன்ற செயல்களாகும். இப்படிப்பட்டவர்களின் சேர்க்கை என்பதை "விஷஸ்பர்சம்" போன்றது என்றார். இவை உயிரை எடுக்கவல்ல விஷம் போன்று அல்லது விஷத்தின் தொடர்பு போன்று சாஸ்த்ரங்களால் விலக்கப்படுவதன் காரணமாக ப்ரதிகூலம் என்றே தோற்றம் அளித்து, ஸர்வேச்வரனின் இன்பத்திற்காக மட்டுமே உள்ள ஆத்மாவின் ஸ்வரூபத்தை அழித்துவிடுவதால் "விஷஸ்பர்சம்" போன்றது என்கிறார். "அநுகூலவிஷயம்" என்றால் இந்த உலகினரால் வெறுக்கப்படாததாகவும், நரகம் ஏற்படக்காரணமாக ஆகாததும், சரீரத்துடன் கூடியதான ஆத்மாவிற்கு நன்மை அளிப்பதாகவும், சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டதும் ஆகிய தனது மனைவியுடன் சேர்தல் போன்றவையாகும். இவை "விஷமிச்ர போஜனம் = விஷம் கலந்த உணவு" போன்றவை என்கிறார். விஷம் கலந்த உணவை ஒருவன் உண்டால், அதனை அறியாமல் உண்ட அவனுக்கு அந்த உணவு நன்மை அளிப்பது போன்று காணப்பட்டாலும், விஷமானது உயிரைக் குடித்துவிடும்; இது போன்று ஆத்மாவிற்கு நன்மை அளிப்பது போன்று தோன்றினாலும் ஆத்மாவானது "ஸர்வேச்வரனுக்கு மட்டுமே நான் இன்பமான பொருளாக இருப்பேன்" என்று எண்ணுவதை மாற்றி, அதன் ஸ்வரூபத்தை அழித்துவிடும். இதற்கான ப்ரமாணம் – விஷஸ்ய விஷயாணாஞ்ச தூரமத்யந்த மந்தரம், உபபுக்தம் விஷம்ஹந்தி விஷயாஸ் ஸ்மரணாதபி - விஷத்திற்கும் புலன்களின் விஷயங்களுக்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது; எப்படி எனில், விஷம் உண்டால் மட்டுமே கொல்லும், விஷயங்கள் நினைக்கப்பட்டவுடன் கொன்றுவிடும் – என்பதாகும். ஆகவே உண்ணவேண்டிய அவசியம் இல்லாமல், நினைக்கப்பட்டவுடன் கொல்லுவதால், விஷத்தைக் காட்டிலும் புலன்களின் விஷயங்கள் மிகவும் கொடியவை என்கிறார்.

184. அக்நிஜ்வாலையை விழுங்கி விடாய் கெட நினைக்குமா போலேயும் ஆடுகிற பாம்பின் நிழலிலேயொதுங்க நினைக்குமாபோலேயும் விஷய ப்ரவணனாய் ஸுகிக்க நினைக்கை.

**அவதாரிகை** - இப்படி விநாசகரமான விஷயங்களிலே ப்ரவணனாய் ஸுகிக்க நினைக்குமது விபரீதஜ்ஞாந கார்யமென்னுமத்தை ப்ரமாண ப்ரஸித்த த்ருஷ்டாந்தமுகேந வருளிச்செய்கிறார் (அக்நி ஜ்வாலையை) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் கெடுதலை மட்டுமே அளிப்பதாகிய புலன்களின் விஷயங்களில் அதிகமான ஈடுபாடு கொண்டவனாக, இன்பத்தை அனுபவிக்கவேண்டும் என்ற எண்ணம் நிறைந்தவனாக இருத்தல் என்பது விபரீத ஞானத்தின் செயல்பாடு காரணமாகவே ஏற்படுகிறது என்பதை ப்ரமாணங்களில் கூறப்படும் உவமைகள் மூலம் காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது “ஆஸ்வாத்ய தஹந ஜ்வாலாமுதந்யாசமநம் யதா ததா விஷய ஸம்ஸர்காத் ஸுகசிந்தா சரீரிண:” என்றும், “விஷயாணாந்து ஸம்ஸர்காத் யோ பிபர்த்தி ஸுகம் நர: ந்ருத்யத: பணிநச்சாயாம் விச்ரமாயாச்ரயேத ஸ:” என்றும் சொல்லுகிறபடியே – தண்ணீர்க்கு விடாய்ப்பட்டவன், விபரீத ஜ்ஞாநத்தாலே தாபஹேதுவான அக்நி ஜ்வாலையை விழுங்கித் தன்விடாய் தீர நினைக்குமாப்போலேயும்; ஆதித்ய கிரணங்களாலே அதிமாத்ர தப்தனானவன் அந்த தாபத்தை யாற்றுகைக்காக நிழலென்கிற மாத்ரத்தைக்கொண்டு, ஆகாம்யநர்த்தத்தை நிரூபியாதே, அத்யந்த குபிதமாய்ப் படத்தை விரித்து நின்றாடுகிற பாம்பின் நிழலிலே யொதுங்க நினைக்குமாப்போலேயும் இருப்பதொன்று, பாதகமான விஷயங்களை ஸுகாவஹமாக ப்ரமித்து அவற்றிலே ப்ரவணனாய் அவற்றை யநுபவித்து ஸுகிக்க நினைக்குமதென்றபடி.

**விளக்கம்** - ஆஸ்வாத்ய தஹந ஜ்வாலாமுதந்யாசமநம் யதா ததா விஷய ஸம்ஸர்காத் ஸுகசிந்தா சரீரிண: - அக்னியின் ஜ்வாலைகள் மூலம் தனது தண்ணீர்த் தாகத்தைத் தீர்க்க எண்ணுவது போன்று, உலகவிஷயங்களின் இன்பம் மூலமாக ஆத்மாவிற்கு இன்பம் சேர்க்கவேண்டும் என்று என்னுகிறான் - என்றதுகாண்க. ஆக, மிகுந்த தண்ணீர்த் தாகம் கொண்டவன் தன்னுடைய விபரீதமான ஞானம் காரணமாக, தனக்குத் தாகம் ஏற்படக் காரணமாக இருக்கின்ற அக்னியின் ஜ்வாலையையே விழுங்கித் தனது தாகம் தீர்க்க எண்ணுவது போன்று – என்று கருத்து. விஷயாணாந்து ஸம்ஸர்காத் யோ பிபர்த்தி ஸுகம் நர: ந்ருத்யத: பணிநச்சாயாம் விச்ரமாயாச்ரயேத ஸ: - உலகவிஷயங்கள் மூலம் யார் ஒருவன் இன்பம் அனுபவித்தபடி உள்ளானோ அவன் படம் விரித்து ஆடுகின்ற பாம்பின் நிழலில் இளைப்பாரச் சென்றவன் போன்று ஆவான் - என்றது காண்க. சூரியனின் சுட்டுப் பொசுக்குகின்ற கதிர்களின் வெப்பம் காரணமாக மிகுதியாகத் தாக்கப்பட்டவன், அந்த வேதனை தீர்வதற்காக, நிழலை அடையும்விதமாக, தனக்கு ஏற்பட உள்ள தீமையை எண்ணாமல், மிகுந்த கோபத்துடன் படம் எடுத்து ஆடும் பாம்பின் நிழலில் ஒதுங்குவது போன்று - என்று கருத்து. தீமை தரவல்ல விஷயங்களை, சுகம் அளிப்பவை என்று மயங்கி

அவற்றில் மிகுந்த ஆசை கொண்டவனாக, அவற்றை அனுபவித்து இன்பம் பெற வேண்டும் என்ற எண்ணுகிறான்.

185. அசுணமா முடியுமாபோலே பகவதநுபவைகபரனாய் ம்ருதுப்ரக்ருதியாயிருக்குமவன் விஷயதர்சநத்தாலே முடியும்படி.

**அவதாரிகை** - விஷய ஸ்பர்சம் ஸ்வரூப நாசகம், விஷய ப்ரவணனாய் ஸுகிக்க நினைக்குமது விபரீத ஜ்ஞாநகார்ய மென்றிறே கீழ்ச்சொல்லி நின்றது; இவ்விஷய ஸ்பர்சம் வேண்டா, பகவத் குணங்களிலே நைந்திருக்குமவன் இவற்றைக் காணவே முடியமென்கிறார் மேல் (அசுணமா) என்று தொடங்கி.

**விளக்கம்** – உலகவிஷயங்களின் தொடர்பு என்பது ஆத்மஸ்வரூபத்தை அழித்துவிடும் என்றும், உலகவிஷயங்களின் மீது ஆசை கொண்டவனாக இன்பம் பெறவேண்டும் என்ற எண்ணமானது விபரீத ஞானத்தின் செயல் என்றும் உரைத்தார். இத்தகைய உலக விஷயங்களில் தொடர்பு ஏற்பட்டால் மட்டுமே ஒருவனை அவை முடிக்கும் என்பது அவசியம் அற்றது; ஸர்வேச்வரனின் குணங்களில் மட்டுமே ஈடுபட்டபடி உள்ள ஒருவன், இவற்றைக் கண்ணால் கண்டாலே முடிந்துவிடுவான் என்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அசுணமாவென்கிற பக்ஷி அதிமதுரமான கரந ச்ரவணத்தாலே நெஞ்சு நீர்ப்பண்டமாயிளகின தசையிலே அதிகடிநமான பறையையடிக்கக் கேட்டுப் பட்டுக் கிடக்குமாப்போலேயாய்த்து, பகவதநுபவமொன்றிலுமே தத்பரனாய் தத்குண ரஸத்திலே நைந்து இதர விஷயங்களின் பேர் கேட்கிலும் மாந்தும்படி ம்ருது ப்ரக்ருதியா யிருக்குமவன் பகவதேகபோகத்வரூப ஸ்வரூப நாசகங்களான விஷயங்களைக் கண்ட மாத்ரத்திலே யேங்கி முடியும்படி யென்கை.

**விளக்கம்** - அசுணமா என்று ஒரு பறவை உள்ளது. அது மிகவும் இனிமையான இசையைக் கேட்டவுடன் நீர்ப்பண்டம் போன்று உருகி நிற்கும். ஆனால் அந்தப் பறவை மிகவும் கடினமான பறை இசையைக் கேட்டவுடன் இறந்துவிடும். இது போன்று ஒருவன் ஸர்வேச்வரனின் அனுபவம் என்பதில் மட்டுமே ஈடுபாடு கொண்டு, அவனுக்கு மட்டுமே அடிமையாக, அவனது குணங்களை எப்போதும் எண்ணி, அந்தக் குணங்களின் இனிமையில் ஊறிப்போய், மற்ற விஷயங்கள் பற்றி அவற்றின் பெயரைக் கேட்டவுடனேயே மயங்கும்படி மென்மையான தன்மை கொண்டு இருக்கக்கூடும்.

இப்படிப்பட்டவன், ஸர்வேச்வரனின் அனுபவத்தை மட்டுமே இன்பமாகக் கொண்டுள்ள ஆத்மாவின் ஸ்வரூபத்தை அழிக்கக்கூடிய விஷயங்களைக் கண்களால் கண்டவுடனேயே முடித்துவிடுவான்.

186. “காட்டிப்படுப்பாயோ” என்னக்கடவதிறே.

**அவதாரிகை** - இவ்வர்த்தத்தை ஆப்தவசநத்தாலே யிசைவிக்கிறார் (காட்டி) என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்டதை நம்புவதற்கு ஏற்ப உள்ள உயர்ந்தவர்களின் சொற்கள் மூலம் உணர்த்துகிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது அல்ப ரஸங்களாய் அநேகவிதங்களாயிருந்துள்ள துர்விஷயங்களைக் காட்டி, அவற்றோடு பொருந்தாதபடியாய் அவற்றுக்குப் பாங்கான நிலத்திலேயிருக்கைக் கீடான பாபத்தைப் பண்ணின வென்னை முடிக்கப்பார்க்கிறாயோ வென்றபடி.

**விளக்கம்** - மிகவும் அற்பமான சுவையும், பலவிதங்களாகவும் உள்ள புலன்கள் மூலம் கிட்டக்கூடியவற்றை இன்பங்களாகக் காண்பிக்கிறாய்; அவற்றுடன் பொருந்தாமலும், அந்த இன்பங்களை அனுபவிக்க ஏற்றதாக உள்ள இந்த உலகில் இருப்பதற்குத் தகுதியான பல பாவங்கள் செய்த என்னை நீ முடிக்கப்பார்க்கிறாய் போலும் - என்று திருவாய்மொழியில் ஸ்வாமி நம்மாழ்வார் உரைத்ததைக் காண்பிக்கிறார்.

187. அஜ்ஞனான விஷயப்ரவணன் கேவல நாஸ்திகனைப்போலே; ஜ்ஞாநவானான விஷயப்ரவணன் ஆஸ்திக நாஸ்திகனைப்போலே.

**அவதாரிகை** - ஏவம்பூத விஷய தோஷத்தை யறியாமையாலே யிதிலே ப்ரவணனானமவனுக்கும், இத்தை யறிந்துவைத்தே ப்ரவணனானமவனுக்கும் வாசியை யருளிச்செய்கிறார் மேல் (அஜ்ஞனான) என்று தொடங்கி.

**விளக்கம்** – இதுவரை கூறப்பட்டதான ஐந்து புலன்களின் மூலம் அடையப்படுகின்ற இன்பங்கள் என்பதன் தோஷத்தினை அறிந்து கொள்ளாமல், அவற்றின் மீது விருப்பம்

கொள்பவன், மற்றும் இவற்றின் தோஷங்களைப் பற்றி நன்றாக அறிந்த பின்னரும் அவற்றின் மீது ஆசை கொள்பவன் ஆகிய இருவருக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை இந்தச் சூர்ணை மூலம் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (அஜ்ஞனான விஷய ப்ரவணனாகிறான்) – விஷயங்களினுடைய தோஷ பூயஸ்தையையும் ஸ்வரூப விருத்தத்தையையும் அறியாதே, அவற்றை யாசைப்பட்டு மேலே விழுகிறவன். (கேவல நாஸ்திகனாகிறான்) – தர்மாதர்ம பரலோக சேதநேச்வராதிகளுக்கு ப்ரதிபாதகமான சாஸ்த்ரத்தில் ப்ராமாண்ய புத்தியொன்று மின்றிக்கே ஸ்வைர ஸஞ்சாரபரனாய் திரிகிற சுத்த நாஸ்திகன். (ஜ்ஞாநவானான விஷய ப்ரவணனாகிறான்) – விஷயங்களினுடைய தோஷதுஷ்டதையையும் ஸ்வரூப விருத்ததையையு மறிந்துவைத்தே, அவற்றை விரும்பி மேல்விழுகிறவன். (ஆஸ்திக நாஸ்திகனாகிறான்) – தர்மாதர்மாதி ஸகல ப்ரதிபாதகமான சாஸ்த்ரத்தை ப்ரமாண மென்றிசைகையாலே யாஸ்திகனென்று சொல்லலாம்படி யிருப்பானாய். அந்த சாஸ்த்திர மர்யாதையிலடங்காதே தோற்றிற்றுச் செய்து திரிகையாலே நாஸ்திக ஸமனாயிருக்குமவன்.

**விளக்கம்** - “அஜ்ஞனான விஷய ப்ரவணனாகிறான்” என்பது யார்? புலன்களின் மூலம் கிட்டக்கூடிய இன்பங்கள் அனைத்தும் நிலையாக இல்லாதவை என்னும் தோஷம் கொண்டுள்ளதையும், அவை தனது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு விரோதமாக உள்ளதையும் அறியாமல், அவற்றின் மீது ஆசை கொண்டு, அவற்றில் ஈடுபட்டபடி உள்ளவன் ஆவான். “கேவல நாஸ்திகனாகிறான்” என்பது யார்? தர்மம், அதர்மம், பரலோகம், சேதனர், ஈச்வரன் உள்ளிட்ட பலவற்றையும் குறித்து உணர்த்துகின்றதான சாஸ்த்ரங்களில் எந்தவிதமான புத்தியும் இல்லாமல் தனது விருப்பத்தின்படியே திரிகின்ற முழு நாஸ்திகன் ஆவான். அதாவது புலன்களின் இன்பங்கள் பற்றிய தோஷம் அறியாமல் அவற்றில் ஈடுபடுபவன், இத்தகைய நாஸ்திகன் போன்றவன் ஆவான் என்று கருத்து. “ஜ்ஞாநவானான விஷய ப்ரவணனாகிறான்” என்பது யார்? புலன்களின் மூலம் கிட்டுகின்ற இன்பங்கள் தோஷம் நிறைந்தவை என்பதை அறிந்திருந்தும், அவை ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்பவை அல்ல என்பதை அறிந்திருந்தும், அவற்றில் ஈடுபட்டபடி உள்ளவன் ஆவான். இவன் எப்படிப்பட்டவன் என்பதை அடுத்து கூறுகிறார். “ஆஸ்திக நாஸ்திகனாகிறான்” – தர்மம் எது, அதர்மம் எது என்பதைத் தெளிவாக உரைக்கின்ற சாஸ்த்ரங்களை ப்ரமாணம் என்று இவன் ஏற்றுக் கொள்வதால் ஆஸ்திகன் என்று உரைக்கலாம்; ஆனால் அந்த சாஸ்த்ரங்களில் உரைக்கப்பட்டபோதிலும் அவற்றை

மதிக்காமல், புலன்களின் இன்பங்கள் குறித்த விஷயத்தில் தனக்குத் தோன்றியபடி திரிவதால் நாஸ்திகனுக்கு ஒத்தவன் ஆகிறான்.

188. கேவல நாஸ்திகனைத் திருத்தலாம்; ஆஸ்திக நாஸ்திகனை யொருநாளும் திருந்த வொண்ணாது.

**அவதாரிகை** - த்ருஷ்டாந்தபூதரான விவர்களிருவர்க்கும் விசேஷமேதென்ன வருளிச் செய்கிறார் (கேவல) இத்யாதியாலே.

**விளக்கம்** – உவமையாக கூறப்பட்ட இந்த இருவருக்கும் உள்ள விசேஷம் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சாஸ்த்ரத்தை யில்லையென்று, தோற்றிற்றுச் செய்து திரிகிறவனை சாஸ்த்ராஸ்திக்யம் பிறக்கைக் குறுப்பான உபதேசங்களைப் பண்ணி விதிநிஷேத வச்யனாம்படி திருத்தலாம்; சாஸ்த்ராஸ்திக்யமுடையனாய் தத்ப்ரதிபாத்ய ப்ரமேயங்களையும் அறிந்துவைத்து, பாப பயமின்றியே, நாஸ்திகவத் ஸ்வைரம் ஸஞ்சரிக்கிறவனைச் சொல்லி யறிவிக்கத்தக்க தொன்றில்லாமையாலே உபதேச முகத்தா லொருநாளும் திருத்தவொண்ணாதென்கை. இத்தால் – அஜ்ஞனான விஷயப்ரவணனை, விஷயதோஷாத்யுபதேச முகத்தாலே விரக்தனாம்படி திருத்தலாம்; ஜ்ஞாநவானான விஷய ப்ரவணனை, விஷயதோஷாதிகளை வ்யக்தமாக வறிந்துவைத்தே ப்ரவர்த்திக் கிறவனாகையாலே ததுபதேசத்தா லொருநாளும் திருத்த வரிதென்றதாய்ந்து. "அஜ்ஞஸ் ஸுகமாராத்யஸ் ஸுகதர மாராத்யதே விசேஷஜ்ஞ:, ஜ்ஞாநலவதுர்விதத்தம் ப்ரஹ்மாபி நரம் நரஞ்ஜபதி" என்னக்கடவதிறே. ஆகையால் அவனிலுமிவன் நிக்ருஷ்டதமனென்று கருத்து.

**விளக்கம்** – "சாஸ்த்ரங்களே இல்லை" என்று கூறியபடி, தனக்குத் தோன்றியபடி திரிபவனை, நாம் சாஸ்த்ரங்களில் நம்பிக்கை ஏற்படும்படிச்செய்யலாம்; எப்படி என்றால் தகுந்த உபதேசங்கள் செய்து, சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டவை மற்றும் விலக்கப்பட்டவை குறித்து உபதேசம் செய்து அந்த நாஸ்திகனைத் திருத்திவிடலாம். ஆனால் சாஸ்த்ரங்களே தகுந்த ப்ரமாணங்கள் என்ற அறிவு கொண்டவனாக, அவற்றில் கூறப்படும் பாவங்கள் பற்றி எந்தவிதமான அச்சமும் இல்லாமல், நாஸ்திகன் போன்று தனது மனதின் வழியே திரிகின்றவனைச் சொல்லித் திருத்த ஏதும் இல்லாத

காரணத்தினால், எந்த உபதேசம் மூலமும் அவனைத் திருத்த இயலாது. ஆக அறிவில்லாத காரணத்தினால் புலன்களின் இன்பங்கள் மீது விருப்பம் கொண்டு திரிபவனை, அவற்றில் உள்ள தோஷங்கள் போன்றவற்றை அவனுக்கு விளங்கும்படி எடுத்துக்கூறி, இதனால் அவன் அந்த விஷயங்களில் வைராக்யம் கொண்டவனாக ஆகும்படிச் செய்யலாம். ஆனால் அனைத்தும் தெரிந்திருந்தும் புலன்களின் இன்பங்களின் பின்னே செல்பவன், அவற்றின் தோஷங்கள் குறித்து விளக்கமாக உணர்ந்தவன் என்பதால் எந்தவிதமான உபதேசம் மூலமும் அவனை ஒருநாளும் திருத்த இயலாது. அஜ்ஞஸ் ஸுகமாராத்யஸ் ஸுகதர மாராத்யதே விசேஷஜ்ஞ:, ஜ்ஞாநலவதுர்விதத்தம் ப்ரஹ்மாபி நரம் நரஞ்ஜபதி - ஏதும் அறியாமல் உள்ளவன் எளிதாக சாஸ்த்ர ஞானத்தைப் பெறும் தகுதி கொண்டவன்; ஞானம் உள்ளவன் மிகவும் எளிதாக அறியத்தக்கவன்; சிறியதான அற்ப ஞானம் கொண்டவன் கர்வம் உள்ளவன் என்பதால் அவனை நான்முகனாலும் திருத்த இயலாது – என்றது காண்க.

189. இவையிரண்டும் ஸ்வரூபேண முடிக்குமளவன்றிக்கே பாகவத விரோதத்தையும் விளைத்து முடிக்கும்.

**அவதாரிகை** - (தன்னைத்தானே) என்கிற வாக்யத்தில் ஸ்வரூப நாசகங்களாகச் சொன்ன அஹங்காரத்தினுடையவும் விஷயங்களினுடையவும் க்ரௌர்யத்தைத் தனித்தனியே யருளிச்செய்தார் கீழ்; உபயத்துக்கு முள்ளதொரு க்ரௌர்ய விசேஷத்தை தந்த்ரேண வருளிச் செய்கிறார் மேல் (இவை) என்று தொடங்கி.

**விளக்கம்** – "தன்னைத்தானே" என்றுள்ள சூர்ணை 180ல், ஆத்ம ஸ்வரூபத்தை அழிப்பதாக உள்ள அஹங்காரத்தின் கொடுமை பற்றியும், புலன்களின் கொடுமை பற்றியும் தனித்தனியாக உரைத்தார். இனி இவை இரண்டிற்கும் உள்ள கொடுமை குறித்த விஷயத்தை ஒரே சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, உக்த தோஷ யுக்தமான விவ்வஹங்காரமும் விஷய ப்ராவண்யமுமாகிற விரண்டும், தானானவாகாரத்தாலே நின்று நசிப்பிக்குமளவன்றிக்கே, பாகவதாபசாரமாகிற மஹாநர்த்தத்தையும் விளைத்து ஸ்வரூபநாசத்தைப் பண்ணுமென்கை. (ஸ்வரூபேண) என்றது, ஸ்வேநரூபேண வென்றபடி.

அஹங்காராதிகளிலே ப்ரவணனானாலுள்ள வளவன்றிறே பாகவதாபசாரம் பண்ணினாலுள்ள பகவந் நிக்ரஹம்.

**விளக்கம் -** இதுவரை கூறப்பட்டு வந்த தோஷங்களுடன் கூடிய அஹங்காரம் மற்றும் புலன்களின் இன்பங்கள் மீது விருப்பம் ஆகிய இரண்டும், ஆத்மஸ்வரூபத்தை அழிப்பதுடன் மட்டும் நிற்பதில்லை. அவை பாகவத அபசாரம் என்பதான மிகப் பெரிய கேட்டினையும் ஏற்படுத்தி ஆத்மாவை அழித்துவிடும். ஸ்வரூபேண என்பதன் மூலம் தாமான தன்மை என்பது கூறப்பட்டது. பாகவத அபசாரம் செய்தால் ஏற்படும் பகவானின் தண்டனை என்பது, அஹங்காரம் மற்றும் விஷயங்களின் மீது கொள்ளும் ஆசை என்பதான தண்டனையைக் காட்டிலும் கொடியது என்று கருத்து.

190. நாமரூபங்களையுடையராய் பாகவதவிரோதம் பண்ணிப்போருமவர்கள் தக்தபடம் போலே.

**அவதாரிகை -** ஆனால் பாகவத விரோதம் விளைந்தபோதே ஸ்வரூப நாசம் பிறக்குமாகில், பாகவத விரோதத்தைப் பண்ணிப் போராநிற்கச்செய்தே ஸ்வரூபாநுரூபமான நாமரூபங்களையுடையராய் கொண்டிருக்கிறபடி யெங்ஙனே யென்ன வருளிச்செய்கிறார் (நாம ரூபங்களை) என்று தொடங்கி.

**விளக்கம் –** பாகவத அபசாரம் ஒன்றே ஸ்வரூபத்திற்கு அழிவை ஏற்படுத்தப் போதுமானது. இப்படி உள்ளபோது, பாகவதர்களிடம் விரோதம் பாராட்டுவது மட்டும் அல்லாமல், தங்களது ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி "தாஸன்" என்ற பெயரையும், திருமண் உள்ளிட்ட பலவற்றையும் தரித்துக்கொண்டவர்கள் உள்ள நிலை என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, வைஷ்ணவத்வ சிஹ்நமான தாஸ்ய நாமத்தையும் ததநுகுணமான ரூபத்தையுமுடையராய்க் கொண்டு, உள்ளொரு பசையின்றிக்கே அஹங்காராதி வச்யராய் பாகவதர்கள் திறத்திலே விரோதத்தைப் பண்ணிப் போருமவர்கள், உருக்குலைய வெந்திருக்கச்செய்தே உருவுடைத்துப்போலே தோற்றிருக்கும் தக்த படத்தோடு ஸத்ருசரென்கை.

**விளக்கம்** - வைஷ்ணவர்கள் என்றுள்ள தன்மைக்கு ஏற்றபடி “தாஸன்” என்ற பெயரை ஏற்றுக்கொள்ளுதல், அதற்கு ஏற்றபடியான ரூபத்தையும் கொள்ளுதல் (பன்னிரண்டு திருமண்காப்பு தரித்தல் போன்றவை) ஆகியவற்றை ஒரு சிலர் செய்யக்கூடும். ஆனாலும் தங்கள் மனதில் வைஷ்ணவத்தில் எந்தவிதமான ஈடுபாடும் இல்லாமல், அஹங்காரம் போன்ற பலவற்றில் ஊறியவர்களாக, பாகவதர்களிடம் விரோதம் பாராட்டியபடி இருப்பார்கள். இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால், உள்புறம் நன்றாகத் தீயில் வெந்து போய், ஆனால் புடவை என்ற தோற்றம் மாறாமல், மடிப்பு கலையாமல் உள்ள “மடித்த வெந்த புடவை” போன்றவர்கள் ஆவர்.

191. மடிபுடவை வெந்தால் உண்டையும் பாவுமொத்துக் கிடக்கும்; காற்றடித்தவாறே பறந்துபோம்.

**அவதாரிகை** - தக்தபடத்தின்படிதன்னை தர்சிப்பிக்கிறார் மேல் (மடி) என்று தொடங்கி.

**விளக்கம்** - வெந்த புடவையின் தன்மை எப்படிப்பட்டது என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, தட்டிமடித்திருக்கிற புடவையானது தட்டுருவவெங்கும் வெந்திருக்கச் செய்தே உண்டையும் பாவும் முன்புபோலே யொத்திருக்கும். ஒரு காற்று வந்து சிதறவடித்தவாறே யுருக்காணவொண்ணாதபடி பாறிப் பறந்து போமென்கை. அப்படியே, அபசாராக்நி தக்தராய் வைத்து நாமரூபங்களோடே யிருக்கிறவர்களும் பகவந் நிக்ரஹ விஷேத்தாலே பாறவடியுண்டு உருமாய்ந்து போவர்களென்று கருத்து.

**விளக்கம்** – மடிப்புடவை என்றால் மடித்து வைக்கப்பட்ட துணி ஆகும். மடித்து வைக்கப்பட்ட நிலையிலேயே தீயில் எரிந்து போன ஒரு துணியை எடுத்து அதன் மடிப்பு கலையும்படி பிரித்துப் பார்த்தால், தறியில் உள்ள நூலும், தறியின் அடிப்பாகத்தில் உள்ள நூலும் எவ்விதம் சேர்த்திருக்குமோ (ஒத்தபடி இருக்குமோ) அது போன்றுதான் காணப்படும். ஆனால் அப்போது பலமாக ஒரு காற்று வீசும்போது துணி என்ற வடிவமே சிதைந்து போகும்படி, சிதறி, பறந்துவிடும். அது போன்று அபசாரம் என்ற தீயினால் எரிக்கப்பட்டவர்கள், திருமண் மற்றும் தாஸன் என்பதான அடையாளங்களுடன் உள்ளபோதிலும், ஸர்வேச்வரனின் தண்டனை காரணமாக உருமாறிச் செல்வார்கள் என்று கருத்து.

192. ”ஈச்வரனவதரித்துப் பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமை” என்று ஜீயரருளிச்செய்வர்.

**அவதாரிகை** - பாகவதாபசாரம் பண்ணினால் ஈச்வரன் அஸஹமாநனாய் உசிததண்டம் பண்ணுமென்னுமத்தை ஆப்தவசநத்தாலே யருளிச்செய்கிறார் (ஈச்வரன்) என்று தொடங்கி.

**விளக்கம்** - பாகவதர்களிடம் அபசாரம் செய்தால், அதனைக் காணும் ஈச்வரன் பொறுத்துகொள்வதில்லை. அதற்கு ஏற்றபடியான தண்டனையை அளிக்கிறான் என்பதை நம்பத்தகுந்தவர்களின் சொற்கள் கொண்டு இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, ஸங்கல்ப மாத்ரத்தாலே ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வ சக்தியான ஸர்வேச்வரன் தன்னையழியமாறி இதர ஸஜாதீயனா யவதரித்தும் கை தொடானாய் நின்று செய்த ஹிரண்ய ராவணாதி நிரஸந ரூபாத்யதிமாநுஷ சேஷ்டிதங்களெல்லாம், ப்ரஹ்லாதன் மஹர்ஷிகள் தொடக்கமான அவ்வோபாகவத விஷயங்களில் அவ்வவர் பண்ணின வபசாரம் ஸஹியாமையாலே யென்று ஆப்ததமரான நஞ்ஜீய ரருளிச்செய்வரென்கை.

**விளக்கம்** - தன்னுடைய நினைவு ஒன்றின் மூலம் மட்டுமே அனைத்தையும் நடத்தவல்லவனாகிய, அனைத்து வலிமையும் கொண்டவனாகிய ஸர்வேச்வரன் தன்னுடைய தன்மைகள் மற்றும் உருவத்தை மாற்றியபடி, பல குலங்களில் வந்து அவதரிக்கிறான். அப்படி அவதரித்ததுடன் மட்டுமே அல்லாமல், நினைவினாலேயே அனைத்தையும் செய்யவல்ல அவன், தனது திருக்கரங்களால் இரணியன் மற்றும் இராவணன் ஆகியோர்களை அழித்தான். இப்படியாக மனிதச் செயல்களுக்கு அப்பாற்பட்டதான செயல்கள் செய்தான். ஏன் என்றால் – அவர்கள் இருவரும் ப்ரஹ்லாதன் மற்றும் பல மஹரிஷிகளுக்குச் செய்த எல்லையற்ற அபசாரங்களைக் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாத காரணத்தினால்தான் என்பதை, நம்பத்தகுந்தவர்களில் மிகவும் உயர்ந்தவரான ஸ்வாமி நஞ்ஜீயர் அருளிச்செய்தார்.

193. அவமாநக்ரியா

**அவதாரிகை** - இந்த பாகவதாபசாரத்தினுடைய க்ரௌர்யத்தில் பகவ துக்தியை தர்சிப்பிக்கிறார் (அவமாநக்ரியா) என்று.

**விளக்கம்** – பாகவத அபசாரத்தின் கொடுமையைப் பற்றி ஸர்வேச்வரனின் சொற்கள் மூலமாகவே உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** – "யா ப்ரீதிர் மயி ஸம்வ்ருத்தா மத்பக்தேஷு ஸதாஸ்துதே, அவமாந க்ரியா தேஷாம் ஸம்ஹரத்யகிலம் ஜகத்" என்றானிறே.

**விளக்கம்** - மஹாபாரதம் – யா ப்ரீதிர் மயி ஸம்வ்ருத்தா மத்பக்தேஷு ஸதாஸ்துதே, அவமாந க்ரியா தேஷாம் ஸம்ஹரத்யகிலம் ஜகத் - என் மீது எத்தகைய ப்ரேமை உனக்கு ஏற்பட்டதோ அதே ப்ரேமை எனது அடியார்கள் மீதும் உனக்கு உண்டாகக் கடவது. அந்த பக்தர்களிடம் செய்யப்படும் அபசாரம் என்பது அனைத்து உலகங்களையும் அழித்துவிடும் - என்று ஸர்வேச்வரனே கூறியது காண்க.

194. பாகவத்ஜாபசாரத்தான அநேகவிதம்

**அவதாரிகை** - இப்படிப்பட்ட பாகவதாபசாரத்தினுடைய வைவித்யத்தை யருளிச் செய்கிறார் (பாகவதாபசாரந்தான்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாக உள்ள பாகவத அபசாரம் என்பது பலவிதமாக உள்ளது என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (அநேக விதம்) என்றது, ஜந்மநிரூபணம், ஜ்ஞாந நிரூபணம், வ்ருத்த நிரூபணம், ஆகார நிரூபணம், பந்து நிரூபணம், வாஸ நிரூபணம் இத்யாதிகளாலே பலபடிப்பட்டிருக்குமென்றபடி.

**விளக்கம்** - பாகவதர்களின் பிறப்பு குறித்து ஆராய்தல், அவர்களின் ஞானம் குறித்து ஆராய்தல், அவர்களது ஒழுக்கம் குறித்து எண்ணுதல், அவர்களின் உருவம் குறித்து எண்ணுதல், அவர்களது உறவினர்கள் குறித்து ஆராய்தல், அவர்களின் இருப்பிடம் குறித்து எண்ணுதல் போன்று பாகவத அபசாரம் என்பது பலவிதமாக உள்ளது.

195. அதிலே யொன்று அவர்கள் பக்கல் ஜந்மநிருபணம்.

**அவதாரிகை** - அவற்றில் வைத்துக்கொண்டு, ஜந்மநிரூபணத்தினுடைய க்ரௌர்யத்தை யருளிச் செய்வதாக, அத்தை யுபாதாநம் பண்ணுகிறார் (அதிலே யொன்று அவர்கள் பக்கல் ஜந்மநிரூபணம்) என்று.

**விளக்கம்** - இப்படியாக உள்ள பலவிதமான பாகவத அபசாரங்களில் ஒன்றான அவர்களது பிறப்பு பற்றி ஆராய்தல் என்பதால் ஏற்படுகின்ற கொடுமை பற்றி விளக்கவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டு, அதனை இந்தச் சூர்ணையில் அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஜந்மநிரூபணமாவது) நிக்ருஷ்ட குலங்களிலே யவதீர்ணரான பாகவதர்களை, பகவதீயத்வ ப்ரயுக்தமான மாஹாத்ம்யத்தைப் பாராதே நிகர்ஷ புத்த்யா தத்தஜ்ஜந்மங்களை நிரூபிக்கை.

**விளக்கம் -** ஜந்மநிரூபணம் என்றால் என்ன? தாழ்ந்த குலங்களில் பிறந்த பாகவதர்களுக்கு ஸர்வேச்வரனுடன் கொண்ட தொடர்பு காரணமாக உண்டாகின்ற பெருமை பற்றி சிலர் அறிவதில்லை; இதனால் அவர்களைத் தாழ்ந்தவர்கள் என்றே எண்ணியபடி, அவர்களது பிறப்பு பற்றி ஆராய்தல் என்று பொருள்.

196. இதுதான் அர்ச்சாவதாரத்தி லுபாதாந ஸ்ம்ருதியிலுங்காட்டில் க்ரூரம்.

**அவதாரிகை** - இதினுடைய க்ரௌர்யம் தன்னை யருளிச்செய்கிறார் (இதுதான்) என்று தொடங்கி.

**விளக்கம் -** அடியார்களின் பிறவி பற்றி ஆராய்வதன் மூலம் ஏற்படவல்ல கொடுமை பற்றி இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இதுதான்) என்று – பாகவதஜந்ம நிரூபணத்தைப் பராமர்சிக்கிறது. (அர்ச்சாவதாரத்தி லுபாதாந ஸ்ம்ருதியாவது) ஆச்ரிதருகந்ததேதேனுமொரு த்ரவ்யத்தைத் தனக்குத் திருமேனியாகக் கொண்டு அதிலே அப்ராக்ருத திவ்ய விக்ரஹத்தில் பண்ணும் விருப்பத்தைப் பண்ணி எழுந்தருளியிருக்கிற வைபவத்தை யறியாதே, நிகர்ஷ புத்தி

பண்ணி விக்ரஹோபாதாந த்ரவ்ய மின்னதன்றோவென்று சிந்திக்கை; அதிலும் காட்டில் க்ரூரமாகையாவது – அத்தைப் பற்றவும் ஸர்வேச்வரனுக்கு அத்யந்த நிக்ரஹ ஹேதுவாகை.

**விளக்கம்** - "இதுதான்" என்பதன் மூலம் பாகவதர்களின் பிறவியை ஆராய்தல் என்பது கூறப்பட்டது. "அர்ச்சாவதாரத்தி லுபாதாந ஸ்ம்ருதியாவது" என்றால் என்ன? ஸர்வேச்வரன் செய்வது என்னவென்றால் - அவனது அடியார்கள் அவன் மீது மிகவும் ஆசை கொண்டு, ஏதேனும் ஒரு வஸ்துவை ஸர்வேச்வரனின் திருமேனியாகவே எண்ணக்கூடும்; ஸர்வேச்வரன் தனது அந்த உலகில் உள்ள தன் திருமேனி மீது எத்தகைய விருப்பம் கொண்டபடி உள்ளானோ அதே விருப்பத்துடன் அடியார்கள் வைத்துள்ள வஸ்துவையே தனது திருமேனி என்று கொண்டு அதில் எழுந்தருளுகிறான். இத்தகைய நிலையில் உள்ள அந்த வஸ்துவின் மேன்மையை அறியாமல், "இந்த விக்ரஹம் செய்யப்படுவதற்கு முன்னர் இந்தப் பொருள் இன்ன உலோகம் அல்லவோ?" என்று எண்ணுவதே இதன் பொருள் ஆகும். இதனைக் காட்டிலும் கொடுமை என்னவென்றால் - இப்படி அந்த வஸ்துவைப் பற்றி எண்ணுவதைக் காட்டிலும், ஸர்வேச்வரனின் மிகுதியான தண்டனைக்குக் காரணமாகவே "அடியார்களின் பிறவி பற்றி ஆராய்தல்" என்ற செய்கை உள்ளது என்று கருத்து.

196. அத்தை மாத்ருயோநி பரீக்ஷையோ டொக்கும் என்று சாஸ்த்ரம் சொல்லும்.

**அவதாரிகை** - அது தன்னினுடைய க்ரௌர்யந்தா னெவ்வளவென்ன வருளிச்செய்கிறார் (அத்தை) இத்யாதியாலே.

**விளக்கம்** - இப்படியாக ஸர்வேச்வரனின் அர்ச்சா விக்ரஹம் பற்றி ஆராய்வது என்பதன் கொடுமை எப்படிப்பட்டது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "அர்ச்சாவதாரோபாதாந வைஷ்ணவோத்பத்தி சிந்தநம் மாத்ருயோநி பரீக்ஷாயாஸ் துல்யமாஹுர் மநீஷிண:" என்னா நின்றதிறே. இப்படி உபயத்தையும் மாத்ருயோநி பரீக்ஷா ஸமமாக சாஸ்த்ரஞ் சொல்லிற்றேயாகிலும், அது அர்ச்சாவதாரத்தி லுபாதாந ஸ்ம்ருத்திக்கு நிதர்சநமாமித்தனை; வைஷ்ணவோத்பத்தி சிந்தனமதிலும் க்ரூரமென்றிவர்க்குக் கருத்து. (மாத்ருயோநி பரீக்ஷையாவது) - அந்ய ஸ்த்ரீயோநி வைலக்ஷண்யாவைலக்ஷண்ய நிரூபண வாஸநையாலே யித்தையுமப்படி நிரூபிக்கை.

(அத்தோடொக்கும்) என்றது - இப்படி நிரூபித்தால் அதுக்கு எத்தனை பாபமுண்டு, அர்ச்சாவதார விக்ரஹோபாதாந சிந்தநத்திலு மத்தனைபாப முண்டென்றபடி.

**விளக்கம்** - அர்ச்சாவதாரோபாதாந வைஷ்ணவோத்பத்தி சிந்தநம் மாத்ருயோநி பரீக்ஷயாஸ் துல்யமாஹுர் மநீஷிண: - அர்ச்சை விக்ரஹங்கள் எந்த உலோகத்தால் செய்யப்பட்டவை என்று ஆராய்தல், பாகவதன் ஒருவனின் குலம் பற்றி ஆராய்தல், தாயின் யோநியை ஆராய்தல் ஆகிய மூன்றும் ஒரே செயல் போன்றது – என்றது காண்க. இப்படியாக திவ்யமங்கள விக்ரஹம் பற்றி ஆராய்தல், பாகவதன் ஒருவனின் குலம் பற்றி ஆராய்தல் ஆகிய இரண்டும் தாயின் யோனி ஆராய்ச்சி என்பதற்கு ஒப்பாகக் கூறப்பட்ட போதிலும், அந்தச் செய்கை என்பது அர்ச்சா விக்ரஹத்தை ஆராய்வதற்கு மட்டுமே ஒப்பாகும். ஏன் என்றால், பாகவதர்களின் பிறவி பற்றி ஆராய்வது இந்தச் செய்கைகளைக் காட்டிலும் கொடுமையானது என்று அறிஞர்கள் கூறுவர். “மாத்ரு யோநி பரீக்ஷை” என்றால் என்ன? ஒரு பெண்ணின் பிறப்பு உறுப்பின் அழகினையும், அழகற்ற தன்மையையும் பற்றி ஆராய்ந்த அதே எண்ணத்தின் காரணமாக, தனது தாயின் யோனியையும் அதே போன்று எண்ணுதல் என்பதாகும். “அத்தோடொக்கும்” இந்தச் செய்கைக்கு எத்தனை பாவம் உண்டோ, அதே அளவு பாவம் அர்ச்சாவதார விக்ரஹத்தின் மூலப்பொருள் என்ன என்று ஆராய்வதிலும் உண்டு.

198. த்ரிசங்குவைப்போலே கர்மசண்டாளனாய் மார்விலிட்ட யஜ்ஞோபவீதந்தானே வாராய்விடும்.

**அவதாரிகை** – இவ்வபசாரத்துக்குப் பலம் தக்தபடம்போலே நஷ்ட கல்பனாயிருந்து தேஹாவஸாநத்திலே யுருமாய்ந்து போமளவேயல்ல, இவ்வபசாரம் பண்ணினபோதே கர்ம சண்டாளனாய் விடுமென்கிறார் (த்ரிசங்குவைப்போலே) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக பாகவத அபசாரத்தின் பலன் என்பது - வெந்த புடவையானது எவ்விதம் தனது உருத்தெரியாமல் போய்விடுமோ அது போன்று நாசம் அடைந்தவனாக, தனது சரீரத்தை விடுகின்றபோது உருமாய்ந்து போவது மட்டும் அல்ல. வேறு என்னவென்றால் – அத்தகைய அபசாரம் செய்த உடனேயே கர்மங்களின் காரணமாகத் தாழ்ந்த பிறவியை அடைந்து சண்டாளன் ஆகிறான் என்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது இக்ஷ்வாகு வம்ச்யனாயிருக்கிற த்ரிசங்குவாகிற ராஜா, தன் குல குருவாயிருக்கிற வஸிஷ்ட மஹர்ஷியை, "ஸசரீர ஸ்வர்காவாப்த்யர்த்தமாக வென்னை யஜிப்பிக்கவேணும்" என்றபேக்ஷிக்க; மஹர்ஷி, "அது நமக்கசக்யம்" என்ன; அங்கு நின்றும் தத்புத்ரர்கள் தபஸ்ஸு பண்ணுகிற விடத்திலே சென்று இச்செய்தியைச் சொல்லி அவர்கள் மிகவு மநுவர்த்தித்து, "நீங்க ளென்னை யிப்படி யஜிப்பிக்க வேணும்" என்று நிர்பந்திக்க, "நீ துர்புத்தியா யிருந்தாய். மஹர்ஷி 'போகாது' என்றத்தை எங்களாலே செய்யப்போமோ" என்ன; "தேஷாம் தத்வசநம் ச்ருத்வா க்ரோத பர்யாகுலாக்ஷரம் ஸராஜா புநரேவைதா நிதம் வசந அப்ரவீத். ப்ரத்யாக்க்யாதோ பகவதா குருபுத்ரைஸ் த்தைவச அந்யாம்கதிம் கமிஷ்யாமி ஸ்வஸ்திவோஸ்து தபோதநா:" என்று அவன் க்ருத்தனாய், "குருவானவரும் தத்புத்ரர்களான நீங்களும் மாட்டோ மென்றிகோளாகில் நான் மற்றோரிடத்திலே போகிறேன், நீங்கள் ஸுகமேயிருங்கோள்" என்ன; "ருஷிபுத்ராஸ்து தச்ச்ருத்வா வாக்யம் கோராபிஸம்ஹிதம் சேபு: பரம ஸங்க்ருத்தாச் சண்டாளத்வம் கமிஷ்யஸி" என்று ஸ்வாசார்யனையும் தத்புத்ரர்களான தங்களையுமிவன் அவமதி பண்ணிச் சொன்ன வார்த்தையைக் கேட்டு அவர்கள் மிகவும் க்ருத்தராய், "நீ சண்டாளனாகக் கடவை" என்று சபிக்க; "அத ராத்ர்யாம் வ்யதீதாயாம் ராஜா சண்டாளதாங்கத: நீலவஸ்த்ர தரோ நீல: புருஷோ த்வஸ்தமூர்த்தஜ: சித்ரமால்யாங்க ராகாச்ச ஆயஸாபரணோபவத்" என்கிறபடியே அநந்தரம் அவன் கர்மசண்டாளனாய் விட்டானிறே. அப்படியே, பாகவதாபசாரம் பண்ணினபோதே கர்மசண்டாளனாய், ப்ரஹ்மவர்ச்சஸ்த்வத்துக்குறுப்பாக மார்பிலிட்ட யஞ்ஞோபவீதந்தான் சண்டாள வேஷத்துக் கடைத்த வாராய்விடுமென்கை. அங்கு சாப ஸித்தமாகையாலே ப்ரத்யக்ஷமாய்த்து; இங்கு சாஸ்த்ர ஸித்தமாகையாலே, ஜ்ஞாந த்ருஷ்டி விஷயமாக விருக்கும். "அநாசாராந் துராசாராநஜ்ஞாத்ருந் ஹீந ஜந்மந: மத்பக்தாந் ச்ரோத்ரியோ நிந்தந் ஸத்யச் சண்டாளதாம் வ்ரஜேத்" என்னக்கடவதிறே.

**விளக்கம் -** இக்ஷ்வாகு வம்சத்தில் வந்த திரிசங்கு என்ற அரசன் தனது குலகுருவான வசிஷ்ட முனிவரிடம் சென்று, "இந்தச் சரீரத்துடன் நான் ஸ்வர்க்கம் செல்ல ஒரு யாகம் இயற்ற நீங்கள் உதவவேண்டும்", என்று கேட்டான். இதனைக் கேட்ட அந்த முனிவர், "இது நம்மால் செய்யத்தக்கது அல்ல", என்று கூறிவிட்டார். உடனே அந்த அரசன் அங்கிருந்து புறப்பட்டு அவரது புத்திரர்கள் தவம் இயற்றுகின்ற இடத்திற்குச் சென்றான். அவர்களிடம் தான் முனிவரிடம் உரைத்த செய்தியையும், முனிவர் தனக்கு உரைத்த பதிலையும் கூறியவனாக, அவர்களிடம் தொடர்ந்து, "நான் இவ்விதம் ஒரு யாகம் இயற்ற நீங்கள் உதவவேண்டும்", என்றான். இதனைக் கேட்ட அவர்கள், "நீ துர்புத்தி

கொண்டவனாக உள்ளாய். மஹரிஷி இயலாது என்று மறுத்த ஒன்றை எங்களால் செய்ய இயலுமோ?", என்று உரைத்தனர். இந்த இடத்தில் திரிசங்கு அவர்களிடம் பின்வரும் வரிகளில் உள்ளபடி உரைத்தான்: இராமாயணம் பாலகாண்டம் (58-6) - தேஷாம் தத்வசநம் ச்ருத்வா க்ரோத பர்யாகுலாக்ஷரம் ஸராஜா புநரேவைதா நிதம் வசந அப்ரவீத். ப்ரத்யாக்க்யாதோ பகவதா குருபுத்ரைஸ் த்தைவச அந்யாம்கதிம் கமிஷ்யாமி ஸ்வஸ்திவோஸ்து தபோதநா: – ஆசார்யரும் அவரது புத்திரர்களாகிய நீங்களும் எனது வேண்டுகோளை மறுத்துவிட்டீர்கள்; உங்களால் நான் தள்ளப்பட்டேன்; தவத்தில் சிறந்தவர்களே! உங்களுக்கு நன்மை ஏற்படட்டும். நான் வேறு புகலிடம் தேடிச் செல்கிறேன் – என்றது காண்க. அதாவது அந்த அரசன் வசிஷ்டரின் புத்திரர்களுடைய கோபத்துடன் கூடிய சொற்களைக் கேட்டு, அவர்களிடம் மீண்டும் உரைக்கத் தொடங்கினான். மேலே உள்ள இராமாயண வாக்கியங்களின்படி அவன் அவர்களிடம், "குருவாக உள்ளவரும், அவரது புத்திரர்களாக உள்ளவர்களும் ஆகிய நீங்கள் மறுத்து விட்டீர்கள். ஆகவே நான் வேறு இடம் தேடிச்செல்கிறேன். நீங்கள் சுகமாக இருப்பீர்களாக", என்று உரைத்தான். இராமாயணம் பாலகாண்டம் (58-8) - ருஷிபுத்ராஸ்து தச்ச்ருத்வா வாக்யம் கோராபிஸம்ஹிதம் சேபு: பரம ஸங்க்ருத்தாச் சண்டாளத்வம் கமிஷ்யஸி – அவனுடைய உள்ளத்தில் இருந்த வெறுப்பை வெளிப்படுத்தும் வகையில் இருந்த அந்தச் சொற்களைக் கேட்ட வசிஷ்டரின் புத்திரர்கள் மிகவும் கோபத்துடன், "நீ சண்டாளனாகப் போகக்கடவாய்", என்று சபித்தனர் - என்று கூறியது போன்று, தனது ஆசார்யனையும் அந்த ஆசார்யனின் புத்திரர்களாகிய தங்களையும் அவன் அவமரியாதை செய்யும்படியாகக் கூறிய சொற்களைக் கேட்டு மிகுந்த கோபம் கொண்டவர்களாக, "நீ சண்டாளனாக ஆவாய்", என்று சபித்தனர். உடனேயே இராமாயணம் பாலகாண்டம் (58-9,10) - அத ராத்ர்யாம் வ்யதீதாயாம் ராஜா சண்டாளதாங்கத: நீலவஸ்த்ர தரோ நீல: புருஷோ த்வஸ்தமூர்த்தஜ: சித்ரமால்யாங்க ராகாச்ச ஆயஸாபரணோபவத் - அதன் பின்னர் அந்தச் சாபம் பெற்ற இரவுப்பொழுது கழிந்த பின்னர் அந்த அரசன் சண்டாளனாக மாறியிருந்தான்; கரியசரீரம் மற்றும் கரிய ஆடை அணிந்தவனாக, சிறிய தலைமுடி கொண்டவனாக, பிணச்சாம்பல் பூசப்பட்டவனாக, இரும்பால் செய்யப்பட்ட ஆபரணங்கள் அணிந்தவனாக நின்றான் - என்று கூறுவதற்கு ஏற்ப அவன் உடனேயே கர்மசண்டாளன் ஆகிவிட்டான். ஆக பாகவத அபசாரம் செய்தபோதே கர்மசண்டாளனாக மாறுதலும், ப்ரஹ்ம தேஜஸ் அளிப்பதான மார்பில் உள்ள யஜ்ஞோபவீதம் சண்டாள வேஷத்திற்கு ஏற்ற கயிர் போன்று மாறுவதும் நிகழும். திரிசங்கு விஷயத்தில் சாபம் மூலம் சண்டாளத்தன்மை கிட்டியதால் நம்மால்

காண இயலும்படி அவன் சண்டாளன் ஆனான்; ஆனால் பாகவத அபசாரம் குறித்த விஷயத்தில் சாஸ்த்ர விதிகள் கூறுவதால் ஞானக்கண்களால் மட்டுமே கர்மசண்டாளனாக ஆனதைக் காண இயலும். ப்ரஹ்மாண்டபுராணம் - அநாசாராந் துராசாராநஜ்ஞாத்ருந் ஹீந ஜந்மந: மத்பக்தாந் ச்ரோத்ரியோ நிந்தந் ஸத்யச் சண்டாளதாம் வ்ரஜேத் – ஆசாரத்தைக் கைவிட்டவர்களாகவும், தவறான ஆசாரத்தைக் கைக்கொண்டவர்களாகவும் எனது பக்தர்கள் இருக்கலாம்; ஆயினும் அவர்களை ஒரு அந்தணன் நிந்தித்தால் உடனேயே அவன் சண்டாளத்தன்மையை அடைந்து விடுகிறான் – என்றது காண்க.

199. ஜாதிசண்டாளனுக்குக் காலாந்தரத்திலே பாகவதனாகைக்கு யோக்யத்தை யுண்டு; அதுவுமில்லையிவனுக்கு.

**அவதாரிகை** - சண்டாளனோபாதியாகிலும் இவனுமொரு காலத்திலே யீடேறு மென்று நினைக்கைக் கவகாசமில்லாதபடி, ஜாதி சண்டாளனில் கர்மசண்டாளனுக்குள்ள தண்மையை யருளிச்செய்கிறார் (ஜாதி சண்டாளனுக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவன் பிறவிச்சண்டாளன் போன்று ஆனபோதிலும், பிறவிச்சண்டாளன் ஒரு காலகட்டத்தில் கரை ஏறி விடுகிறான் என்று கூறுவது போன்று, இவனைக் கூற இயலாதபடி ஆகிறான். பிறவியிலேயே சண்டாளனாக உள்ளதைக் காட்டிலும் இந்தக் கர்மசண்டாளனுக்கு உள்ள தாழ்வை உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது ஜாத்யா சண்டாளனானவனுக்கு தஜ்ஜந்மத்திலேயாதல் ஜந்மாந்தரத்திலோயாதல் பகவத் கடாக்ஷ முள்ளதொரு காலவிசேஷத்திலே நாம ரூபங்களை யுடையனாய் பகவத் ஸம்பந்த நிரூபிதனாகைக்கு யோக்யதை யுண்டு, அந்த யோக்யதையுமில்லை பாகவதாபசார ரூப கர்மத்தாலே சண்டாளனான இப்பாபிஷ்டனுக்கு.

**விளக்கம்** - பிறப்பிலேயே சண்டாளனாகப் பிறக்க நேர்ந்தாலும், அந்தப் பிறவியிலோ அல்லது ஏதோ ஒரு பிறவியிலோ கிட்டுகின்ற பகவத் கடாக்ஷம் காரணமாக, தகுதியான நாமரூபங்கள் கொண்டவனாக, பகவானுடன் இவன் தொடர்பு உடையவன் என்று எண்ணும்படியாக அறியக்கூடிய தகுதிகள் ஏற்படக்கூடும். ஆனால் பாகவத அபசாரம் காரணமாகக் கர்மசண்டாளனாக மாறியவனுக்கு, மிகுந்த பாவங்கள் நிறைந்தவன் என்பதால், இப்படிப்பட்ட தகுதிகள் எப்போதும் ஏற்படாது.

200. ஆரூடபதிதனாகையாலே.

**வ்யாக்யானம்** – அதுக்கடி, பாகவதத்வமாகிற உயர்ந்த நிலத்திலே யேறி "பத்மகோடி சதேநாபி நக்ஷமாமி" என்னும்படி அதிக்ரூரமான பகவந் நிக்ரஹத்துக்கு ஹேதுவான பாகவதாபசாரத்தாலே பாறவடியுண்டு அத:பதித்தவனாகையாலே யென்கை.

**விளக்கம்** - (ஆரூடபதிதன் என்பவன் மேலே ஏறி, பின்னர், கீழே விழுந்தவன் ஆவான்) பகவானுக்கு அடிமை என்பதான உயர்ந்த தகுதியைப் பெற்று, வராஹ புராணம் – பத்மகோடி சதேநாபி நக்ஷமாமி – எனது அடியார்களை நிந்தித்தவர்களை நான் நூறு கோடி தாமரை மலர்கள் கொண்டு அர்ச்சித்தாலும் பொறுக்கமாட்டேன் – என்று கூறுவதற்கு ஏற்ப மிகவும் கொடூரமான பகவத் தண்டனையை அடைகிறான். இதன் காரணம் பாகவத அபசாரம் ஆகும். ஆக உயர்ந்த நிலையில் இருந்து கீழே விழுகின்ற இவனுக்குச் சரியான அடியே ஏற்படும்.

201. இது தனக்கு அதிகாரி நியமமில்லை.

**அவதாரிகை** – இதுதான் ஜந்மாதிகளாலும் ஜ்ஞாநாதிகளாலும் அபக்ருஷ்டரானவர்கள் உத்க்ருஷ்ட விஷயத்தில் பண்ணுமளவிலேயோ, அவற்றா லுத்க்ருஷ்டரானவர்கள் அபக்ருஷ்ட விஷயத்தில் பண்ணுமளவிலு மொக்குமோவென்ன வருளிச்செய்கிறார் (இது தனக்கு) இத்யாதியாலே.

**விளக்கம்** – இந்த பாகவத அபசாரம் எப்படிப்பட்டது? தங்களது பிறப்பு, ஞானம் போன்றவற்றால் கீழானவர்கள், இவற்றின் முலம் உயர்ந்தவர்கள் விஷயத்தில் செய்கின்ற அபசாரமா? அல்லது பிறவி போன்றவற்றால் உயர்ந்தவர்கள், இவற்றின் மூலம் தாழ்ந்த அடியார்களுக்குச் செய்யும் அபசாரமா? இதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது, பாகவதாபசாரத்துக்கு அப்படி யிருப்பதோ ரதிகாரி நியதியில்லை யென்கை.

**விளக்கம்** – பாகவத அபசாரத்திற்கு இது போன்ற பாகுபாடு ஏதும் இல்லை.

202. "தமர்களில் தலைவராய சாதியந்தணர்களேலும்" என்கையாலே.

**அவதாரிகை** - இது தனக்கு ப்ரமாணமுண்டோ வென்னு மாகாங்க்ஷையிலே அருளிச் செய்கிறார் (தமர்களில்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இது போன்ற பாகுபாடு இல்லை என்பதற்கான ப்ரமாணம் ஏதேனும் உண்டா என்று கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது ஸாங்கமாக ஸகல வேதங்களையும் அத்யயநம் பண்ணி ததீய ச்ரேஷ்ட்டருமாய் உத்க்ருஷ்ட ஜந்மாக்களுமா யிருந்தார்களேயாகிலும், தேவரீர் திருவடிகளில் ஸம்பந்தைக நிரூபகரான ஸ்ரீவைஷ்ணவர்களை ஜந்மாதிகளை யிட்டு நிந்திப்பர்களாகில், காலாந்தரே தேசாந்தரே யன்றிக்கே அப்போதே யவ்விடம் தன்னிலே யவர்கள் தாங்கள் சண்டாளரும் இவர்களுக்கொரு போலிமாத்ரமென்னும்படி யவர்களிற் காட்டி லத்யந்த நீசராவரென்று, தத்வயாதாத்ம்ய தர்சிகளான தொண்டரடிப்பொடியாழ்வா ரருளிச் செய்கையாலே யென்கை.

**விளக்கம்** - வேதங்கள் அனைத்தையும் அவற்றின் அங்கங்களுடன் அத்யயனம் செய்து, அடியார்களில் மிகவும் உயர்ந்தவர்களாக இருந்து, உயர்ந்த பிறவிகளைப் பெற்றவர்களாகச் சிலர் இருக்கக்கூடும். ஆனால் ஸ்ரீரங்கநாதனாகிய உனது திருவடிகளில் உள்ள தொடர்பைக் கொண்டு மட்டுமே அறியப்படும் ஒரு சிலரை, மேலே கூறப்பட்டவர்கள் நிந்தித்தார்கள் என்றால், மற்றொரு இடம் அல்லது மற்றொரு காலம் என்ற அவசியம் இல்லாமல், அந்த இடத்திலேயே அப்போதே "சண்டாளர்கள் போன்று இவர்கள் உள்ளனர்" என்று உதாரணம் கூற இயலாதபடி, சண்டாளர்களைக் காட்டிலும் தாழ்ந்த நிலையை அடைகின்றனர். இதனை உள்ளது உள்ளபடி உரைக்கவல்லவர்களின் தலைவரான தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலையில் (43) உரைத்தது காண்க.

203. இவ்விடத்திலே வைநதேய வ்ருத்தாந்தத்தையும் பிள்ளைப் பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வான் பணித்த வார்த்தையையும் ஸ்மரிப்பது.

**அவதாரிகை** – இவ்வர்த்த விஷயமாக இரண்டு ஐதிஹ்யத்தை ஸ்மரிப்பிக்கிறார் (இவ்விடத்திலே) என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்ட விஷயம் குறித்து முன்பு ஏற்பட்ட இரண்டு நிகழ்ச்சிகளை நினைவு கூர்கிறார்.

**வ்யாக்யானம்** - (வைநதேய வ்ருத்தாந்தமாவது) – விச்வாமித்ரன் பக்கலிலே வித்யைகளெல்லாமதிகரித்த காலவனென்கிற ப்ராஹ்மணன், குருதக்ஷிணை கொடுத்தாலொழிய நமக்கு இவ்வித்யைகள் நிலைநில்லாது என்று பார்த்து, “நானிங்குத்தைக்கு தக்ஷிணையாகத் தரத்தக்கதேது” என்று கேட்க; ”நீ நமக்கொன்றும் செய்யவேண்டா, நாமுன்னுடைய சுச்ரூஷையாலும் பக்தியாலும் மிகவும் ப்ரீதரானோம், இனியுன்னுடைய இஷ்டத்திலே போயிரு” என்று பலகாலும் சொன்னவளவிலும், இவனதுசெய்யாதே, ஸர்வதா, என்பக்கலே தக்ஷிணை வாங்கிக்கொள்ளவேணும் என்று அதிநிர்பந்தம் பண்ணுகையாலே, “கிஞ்சிதாகத ஸம்ரம்போ விச்வாமித்ரோப்ரவீதிதம் ஏகதச்ச்யாம கர்ணாநாம் சதாந்யஷ்டௌது தேஹி மே; ஹயாநாம் சந்த்ர சுப்ராணம் கச்ச காலவ மாசிரம்” என்று - அவன் குபிதனாய், இவனைப் பார்த்து, “உடம்பெங்கும் சந்த்ரமண்டலம் போலே வெளுத்து ஒரு செவி பச்சையாயிருக்கும் எண்ணூறு குதிரை நமக்குக் கொண்டு வந்து தா” என்ன; இத்தைக் கேட்டு மஹா வ்யாகுலனாய், இதுக்கினிச் செய்வதென்? என்று பஹுமுகமாக விசாரித்து, ஸர்வாபேக்ஷித ப்ரதனான ஸர்வேச்வரனை யுபாஸிப்போம் என்று உத்யோகிக்கிறவளவிலே, முன்பே யிவனுக்கு ஸகாவாயிருக்கிற பெரியதிருவடிநாயனார் இவனுக்கு வந்து முன்னிற்க; அவரை ஸ்தோத்ரம் பண்ணி, இதுக்குச் செய்ய வடுப்பதென்? என்று கேட்க; அவர், உன்னை நானிப்பூமி எங்கும் கொண்டு போகிறேன், இருவருங்கூட ஆராய்வோம் வா என்று, இவனை இடுக்கிக் கொண்டு திரிகிறவளவிலே, இளைப்பானவாறே, இங்கே யிளைப்பாறிப் போகக்கடவோம் என்று, மேல் ஸமுத்ரத்திலே ருஷபம் என்கிற பர்வதத்தின் மேலே வஸியா நிற்பாளாய் ஜ்ஞாநாதிகையா யிருக்கிற சாண்டிலி என்கிற பாகவதையைச் சென்று கண்டு அபிவாதநாதிகள் பண்ண; அவள் அத்யாதரத்தோடே மிகவும் ஸத்கரிக்க; அநந்தரம், விச்ராந்தராய் சயிக்கிறவளவிளே; இப்படி விலக்ஷணையா யிருக்கிற இவள் ஒரு விலக்ஷண தேசங்களிலே வஸிக்கப்பெற்றதில்லையே என்று பெரிய திருவடிநாயனார் விசாரித்து, இவளையிங்குநின்றும் நாமொரு திவ்யதேசங்களிலே கொண்டு போய் வைக்கக்கடவோம் என்று நினைத்துக்கொண்டு கிடக்கச்செய்தே; அந்த பாகவதையிருந்த தேசத்தைக் குறைய நினைத்த இவ்வபசாரத்திலே சிறகுகளுமுதிர்ந்து நிச்சேஷ்டராய்விட; இத்தைக்கூடப்போன ப்ராஹ்மணன் கண்டு, “கிந்நு தே மநஸா த்யாத மசுபம் பததாம்வர நஹ்யயம் பவதஸ் ஸ்வல்போ வ்யபிசாரோ பவிஷ்யதி” என்று ஏதேனும்மும்முடைய திருவுள்ளத்தாலே தீங்கு நினைத்ததுண்டோ, தேவரீருக்கு அல்பமும்

வ்யபிசாரம் வருகைக்கு யோக்யதையில்லையே என்ன; உண்டாய்த்துக்காண் என்று, தாமந்த பாகவதை விஷயத்தில் நினைத்த ப்ரகாரத்தை யவனுக்கருளிச்செய்து; அநந்தரம் இத்தைப் பொறுக்கவேணும் என்று அவளைச் சென்றநுவர்த்தித்து, அவளநுக்ரஹத்தாலே அவ்வபசாரம் நீங்கி முன்பு போலேயானாரென்கிறது. இதுதான், க்ருஷ்ணன் ஸ்ரீதூதெழுந்தருளினபோது நாரதாதி மஹரிஷிகள் பலரும் வந்திருக்கிறவளவிலே க்ருஷ்ணன் திருவுள்ளக் கருத்தைப் பின்செல்லுகைக்குறுப்பாக த்ருதராஷ்ட்ரனைக் குறித்துப் பல கதைகளும் சொல்லி வருகிற ப்ரகரணத்திலே, ஸ்ரீநாரதபகவானநுக்ரஹித்ததாக உத்யோகபர்வத்திலே உக்தமாகையாலே, வேதாந்தோ பப்ருஹ்மண ஸித்தமிறே.

**விளக்கம்** - முதலில் கருடன் பற்றிய நிகழ்ச்சி ஒன்றை அருளிச்செய்கிறார். விச்வாமித்திரரிடம் காலவன் என்னும் ஓர் அந்தணன் அனைத்து வித்யைகளையும் கற்றுத் தேர்ந்தான். அதன் பின்னர் தனது மனதில், "இவருக்கு ஏற்ற குருதக்ஷிணை அளிக்காமல் நம்மிடம் கல்வி நிலையாக இருக்காது", என்று எண்ணினான். ஆகவே அவரிடம், "நான் உம்மிடம் கற்ற கல்விக்கு ஏற்றபடி எந்தவிதமான தக்ஷிணை அளிக்கவேண்டும்?", என்றான். இதனைக் கேட்ட விச்வாமித்திரர் அவனிடம், "நீ நமக்கு ஏதும் அளிக்க வேண்டாம். நீ நம்மிடம் செய்த பணிவிடைகள் மற்றும் நம்மிடம் கொண்ட பக்தி ஆகிய இரண்டிலுமே மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். ஆக இங்கிருந்து புறப்பட்டுச் சென்று உனது விருப்பத்தின்படி வாழ்வாயாக", என்று கூறினார். அவனும் இதனை ஏற்காமல் மீண்டும்மீண்டும் விண்ணப்பம் செய்ய, அவரும் பலமுறை இப்படியே உரைத்தார். இதனால் அவர் சற்றே கோபம் அடைந்தார். கிஞ்சிதாகத ஸம்ரம்போ விச்வாமித்ரோப்ரவீதிதம் ஏகதச்ச்யாம கர்ணாநாம் சதாந்யஷ்டௌது தேஹி மே; ஹயாநாம் சந்த்ர சுப்ராணம் கச்ச காலவ மாசிரம் - கோபம் கொண்ட விச்வாமித்ரர் இவ்விதமாக உரைத்தார்: ஒரு காது பச்சை நிறத்துடன், சந்த்ரன் போன்று வெளுத்த சரீரத்துடன் கூடியதான எண்ணூறு குதிரைகளை காலவனே, நீ எனக்கு அளிப்பாயாக, விரைவாகக் கொண்டு வா - என்ற வரியில் கூறியதற்கு ஏற்ப மிகவும் கோபத்துடன் காலவனை நோக்கி, "உடல் முழுவதும் சந்த்ரன் போன்று வெளுத்தும், ஒரு காது மட்டும் பச்சையாக உள்ளபடி இருக்கின்ற எண்ணூறு குதிரைகளை எனக்குக் கொண்டு வந்து தருவாயாக", என்றார். இதனைக் கேட்டு கலக்கம் அடைந்த அவன், "இப்போது என்ன செய்வது?", என்று பலவிதமாக ஆராய்ந்தான். அதன் பின்னர், "அனைத்து விருப்பங்களையும் அளிப்பவனாக உள்ள ஸர்வேச்வரனை உபாசித்து நிற்போம்" என்று

முடிவு செய்து, அது போன்று செய்யத் தொடங்கிய உடனேயே, இவனுக்கு எப்போதும் துணையாக உள்ள கருடன் இவன் முன்பாக வந்து நின்றார். கருடனிடம் நடந்தவற்றைக் கூறி வணங்கி நின்றான். கருடன் இவனிடம், "உன்னை நான் இந்தப் பூமி முழுவதும் கொண்டு செல்கிறேன், இருவருமாகச் சேர்ந்து ஆராய்வோம், வருவாயாக", என்று இவனைத் தன் மீது அமரவைத்தபடி பல இடங்களிலும் அலைந்தார். அப்போது களைப்பு அடைந்த அவர் சற்றே ஓய்வு எடுக்க எண்ணி, "அதோ, அங்கு சென்று சற்று ஓய்வு எடுத்துச் செல்வோம்", என்றார். மேலே ஸமுத்திரத்தில் உள்ள ருஷபம் என்ற மலை மீது வசித்து வரும் மிகுந்த ஞானம் கொண்ட சாண்டிலீ என்னும் பாகவதை உள்ள இடத்திற்குச் சென்றனர். அவளை வணங்கி நின்றனர். அவளும் இவர்களுக்கு மிகவும் விருப்பத்துடன் உணவு அளித்து உபகாரம் செய்தாள். அதன் பின்னர் சற்று ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும்போது கருடன் தனது மனதில், "இந்த அளவிற்கு ஞானமும் பக்தியும் கொண்ட இந்தப் பெண் ஒரு உயர்ந்த திவ்யதேசத்தில் வசிக்காமல் உள்ளாளே! இவளை நாம் இங்கிருந்து கொண்டு சென்று, ஒரு திவ்யதேசத்தில் வசிக்கும்படிச் செய்வோம்", என்று நினைத்துக் கொண்டே உறங்கிவிட்டார். அந்தப் பாகவதை வாழ்ந்து வரும் இடத்தைத் தாழ்வாக எண்ணிய அந்த நொடியிலேயே அபசாரம் செய்தவராக, கருடனின் அனைத்து சிறகுகளும் உதிர்ந்தன. இதனை கண்ட காலவன் - கிந்நு தே மநஸா த்யாத மசுபம் பததாம்வர நஹ்யயம் பவதஸ் ஸ்வல்போ வ்யபிசாரோ பவிஷ்யதி - கருடனே! உனது மனதில் என்ன குற்றத்தை நீ செய்தாய்? இப்படிப்பட்ட அபசாரம் உனக்கு உண்டாக ஏதும் வழி கிடையாதே - என்றான். அதாவது, "உனது மனதில் ஏதேனும் தீமை நினைத்தாயோ? உனக்குச் சிறிய அபசாரம் வந்து சேர்வதற்குக் கூட வாய்ப்பு இல்லையே", என்றான். இதனைக் கேட்ட கருடன் அவனிடம், "அபசாரம் ஏற்பட்டுவிட்டது" என்று கூறி, தான் அந்த பாகவதை விஷயத்தில் நினைத்தது பற்றி உரைத்தார். அதன் பின்னர் அந்தப் பாகவதையிடம், "எனது அபசாரத்தைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்", என்று வேண்டி நின்றார். அவளது கருணையால் தனது அபசாரம் நீங்கப் பெற்று முன்பு போல மாறினார். மேலே கூறப்பட்ட நிகழ்வு பற்றி நாரதர் மஹாபாரதம் உத்யோக பர்வத்தில் அருளிச்செய்தார். அதாவது க்ருஷ்ணன் தூது சென்ற நேரத்தில் நாரதர் முதலான பல முனிவர்களும் அங்கு கூடியபோது க்ருஷ்ணனின் திருவுள்ளத்தைப் பின் செல்லுகைக்கு ஏற்றபடி த்ருதராஷ்ட்ரன் குறித்துப் பல கதைகள் கூறப்பட்டபோது இதுவும் அடக்கம். ஆகவே இது இதிஹாசத்திலே உள்ளதாகிறது.

**வ்யாக்யானம்** – (பிள்ளைப்பிள்ளையாழ்வானுக் காழ்வான் பணித்த வார்த்தையானது) – பிள்ளைப்பிள்ளையாழ்வானை யங்கீகரித்துநாளிலே, இவர் ஆபிஜாத்யாதிகளாலே யுத்க்ருஷ்டராகையாலே பாகவத விஷயங்களில் அவிநயமாக வர்த்தித்துக்கொண்டு போகிறபடியைக் கண்டு, "இவர்க்கு இப்பாகவதாபசாரம் இவருடைய ஜ்ஞாநாநுஷ்ட்டாநங்களெல்லாவற்றையும் கீழ்ப்படுத்தித் தானே மேலாய் விநாச பர்யந்தமாக்கி விடும்; அதுக்கு வேலியிட்டு வைக்கவேணுமென்று திருவுள்ளம் பற்றி, ஓரயநத்தினன்று நீராடியேறினவளவிலே, இவரைப் பார்த்து, எல்லாரும் தாநம் பண்ணுகிற காலத்திலே நீரும் நமக்கொரு தாநம் பண்ணமாட்டீரோ? என்ன; அடியேனெத்தை தாநம் பண்ணுவது, எல்லாமங்குத்தையதாயிருந்ததே! என்ன; அர்த்தஸ்திதியன்றோவது, அவ்வளவு போராது", கரணத்ரயத்தாலும் பாகவதாபசாரம் பண்ணாமல் வர்த்திக்கக்கடவன்" என்று நங்கையிலே உதகம் பண்ணித்தரவேணும் என்ன; அப்படியேயிவரும் உதகம் பண்ணிக் கொடுத்த வநந்தரம், ஒரு பாகவத தோஷத்தை பூர்வவாஸநையாலே நினைத்து, "நாமினிமுடிந்தோம்" என்று பயப்பட்டு மூடிக்கொண்டு தன் திருமாளிகையிலே கண்வளர; இவர் முன்பு வருகிற காலத்தில் வரக்காணாமையாலே, ஆழ்வானிவர் திருமாளிகையிலே எழுந்தருளி, "ஏன்தான், முசிப்பென்" என்று வினவியருள; தாம் மநஸ்ஸால் நினைத்தத்தை விண்ணப்பஞ்செய்து, கரண த்ரயத்தாலுமபசாரம் புகுராதபடி யித்தேஹத்தோடு வர்த்திக்கை யரிதா யிராநின்றது, என்செய்யக்கடவேன் என்று திருவடிளைக் கட்டிக் கொண்டு கிடந்து க்லேசிக்க; இத்தனை யநுதாபமிவர்க் குண்டாகப் பெற்றோமே! என்றுகந்தருளி, மநஸ்ஸாலே நினைத்ததுக்கு அநுதாபமுண்டாகவே ஈச்வரன் க்ஷமித்தருளும், ப்ரத்யக்ஷ தண்ட பயத்தாலே காயிகமாகவொருவரையும் நலியக்கூடாது, ஆன பின்பு அவையிரண்டு முமக்குக் கழித்துத் தந்தோம், இனி வாக்கொன்றையும் நன்றாகக் குறிக்கொண்டு வர்த்தித்துப் போரும் – என்றருளிச்செய்தது.

**விளக்கம்** – அடுத்து, பிள்ளைப்பிள்ளையாழ்வான் விஷயத்தில் ஸ்வாமி கூரத்தாழ்வான் உபதேசித்தது பற்றி அருளிச்செய்கிறார். கூரத்தாழ்வான் தன்னுடைய சிஷ்யனாக பிள்ளைப்பிள்ளையாழ்வானை ஏற்றுக் கொண்டார். அப்போது தனது குலப்பிறப்பு போன்ற பலவற்றாலும் பிள்ளைப்பிள்ளையாழ்வான் உயர்ந்தவர் என்பதால் அவர் எந்த ஒரு பாகவதரிடத்திலும் பணிவு காண்பிக்காதபடி உள்ளதைக் கண்ட கூரத்தாழ்வான் தனது மனதில், "இவருக்கு ஏற்படும் இந்த பாகவத அபசாரம் என்பது இவரது ஞானம் மற்றும் அநுஷ்டானங்களைப் பின்னே தள்ளிவிட்டு, உயர்ந்த கேட்டினையும் ஏற்படுத்திவிடுமே", என்று எண்ணினார். ஒருநாள் தக்ஷிணாயன காலத்தில் நீராடி

வந்தபோது அவரிடம் கூரத்தாழ்வான், “அனைவரும் தானம் செய்கிறார்களே! நீரும் நமக்கு ஒரு தானம் செய்யமாட்டீரோ?”, என்றார். இதனைக் கேட்ட பிள்ளைப் பிள்ளையாழ்வான், “அடியேன் எதனைத் தானம் செய்வது?”, என்றார். இதற்கு ஆழ்வான், “பொருளின் நிலை அப்படி உள்ளது. நீவிர் பொருள் தானம் ஏதும் செய்யவேண்டாம். மனம், உடல், வாக்கு ஆகிய மூன்றாலும் இனி எப்போதும் பாகவத அபசாரம் செய்யாமல் வாழ்வேன் என்று நம்முடைய கைகளில் தண்ணீர் வார்த்து வாக்களிக்கவேண்டும்”, என்றார். இவரும் அப்படியே தண்ணீர் வார்த்து வாக்களித்தார். அதன் பின்னர் ஒருநாள் தனது மனதளவில் பாகவத அபசாரம் செய்துவிட்டு அதற்காக வருந்தி, “நாம் இனி முடிந்து விட்டோம்”, என்று எண்ணி, தனது வீட்டிலேயே உறங்கிவிட்டார். நெடுநேரம் ஆகிய பின்பும் அவர் வராத காரணத்தினால் இவரது வீட்டிற்கு இவரைத் தேடி, கூரத்தாழ்வான் வந்துவிட்டார். அவரிடம் ஆழ்வான், “ஏன் இப்படி உள்ளீர்?”, என்று வினவ, அவரும் தான் மனதால் செய்த பாகவத அபசாரம் குறித்து உரைத்து, “மூன்று கரணங்களாலும் அபசாரம் செய்யாதபடி இந்தச் சரீரத்துடன் வாழ்வது மிகவும் கடினமாகவே உள்ளது. என்ன செய்வது?”, என்றார். ஆழ்வானின் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு கதறினார். இதனைக் கண்ட ஆழ்வான், “இவருக்கு இத்தனை அனுதாபம் உண்டாகும்படி உயர்ந்துள்ளாரே!”, என்று வியந்தார். அவரிடம், “மனதால் எண்ணிய பாகவத அபசாரத்திற்கு நீவிர் உமது மனதால் இத்தனை வருந்துவது போதுமானது; இதனால் இதனை ஈச்வரன் பொறுத்துக்கொள்வான். கண்கூடாகத் தண்டனை கிடைக்கும் என்ற காரணத்தினால் நீவிர் உமது சரீரத்தைக் கொண்டு யாரையும் துன்புறுத்த மாட்டீர். இவை இரண்டையும் நாம் நீக்கினோம். இனி உமது நாக்கு ஒன்றை மட்டுமே கவனமாகப் பார்த்துக் கொண்டு இருப்பீராக (அதாவது மனம், சரீரம் ஆகிய இரண்டாலும் ஏற்படும் அபசாரங்கள் போக்கப்பட்டன. எஞ்சியுள்ளது வாக்கின் மூலம் உண்டாகக்கூடியது மட்டுமே)”, என்று அருளிச்செய்தார்.

204. ஜ்ஞாநாநுஷ்டாநங்களை யொழிந்தாலும் பேற்றுக்கு அவர்கள்பக்கல் ஸம்பந்தமே யமைகிறாப்போலே அவையுண்டானாலு மிழவுக் கவர்கள் பக்கல் அபசாரமே போரும்.

**அவதாரிகை** - பகவல்லாப ஹேதுவான ஜ்ஞாநாநுஷ்டாநங்களிரண்டும் பரிபூர்ணமாக வுடையா னொருவனுக்கு பாகவதாபசாரமுண்டாய்த்ததாகிலும், பகவான் அதுக்கு லகுவானதொரு தண்டங்களைப் பண்ணிக் கூட்டிக் கொண்டுவிடானோ, அவையிரண்டு

மஸத்ஸமமாய் அபசாரமே ப்ரபலமாய் எம்பெருமானை யிழந்தே போய்விடு மென்னலாமோவென்ன வருளிச்செய்கிறார் (ஜ்ஞாநாநுஷ்டாநங்கள்) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஸர்வேச்வரனை அடைவதற்குக் காரணமாக உள்ள ஞானம் மற்றும் அநுஷ்டானம் ஆகியவற்றை ஒருவன் பெற்றிருக்கக்கூடும். அப்படிப்பட்ட ஒருவன் பாகவத அபசாரம் அடைந்தான் என்றால், அத்தகைய அபசாரத்திற்குப் பலனாக ஒரு சிறிய அளவு தண்டனையை மட்டுமே அளித்துவிட்டு ஸர்வேச்வரன் அவனைத் தன் பக்கம் மீண்டும் சேர்க்கமாட்டானோ? இதனை விடுத்து, அவன் அடைந்த பாகவத அபசாரம் என்பதே முதன்மையானது என்னும் நிலை ஏற்பட்டு, ஞானம் மற்றும் அநுஷ்டானம் ஆகிய இரண்டும் அவனிடம் இல்லை என்ற நிலைக்கு ஒப்பாக ஸர்வேச்வரனை அவன் இழந்துவிடுகிறான் என்பது சரியா என்ற சந்தேகம் ஏற்படலாம். இதற்கான விடையை அருச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "உபாப்யாமேவ பக்ஷாப்யா மாகாசே பக்ஷிணாம் கதி:, ததைவ ஜ்ஞாந கர்மப்யாம் ப்ராப்யதே பகவாந் ஹரி:" என்றும், "வீசுஞ் சிறகால் பறத்தீர் விண்ணொடு நுங்கட்கெளிது" என்றும் சொல்லுகிறபடியே - பகவல்லாப ஹேதுவான தத்வஜ்ஞாநமும் ததநுரூபாநுஷ்டாநமு மின்றிக்கே யொழிந்தாலும்; பகவல்லாபத்துக்கு, "பசுர் மநுஷ்ய: பக்ஷீவா யேச வைஷ்ணவ ஸம்ச்ரயா:, தேநைவதே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம்பதம்" என்றும், "யம் யம் ஸ்ப்ருசதி பாணிப்யாம் யம்யம் பச்யதி சக்ஷுஷா, ஸ்தாவராண்யபி முச்யந்தே கிம் புநர் பாந்தவா ஜநா:" என்றும் சொல்லுகிறபடியே - பாகவத ஸம்பந்தமே நிரபேக்ஷ ஸாதநமாகிறாப்போலே, அந்த ஜ்ஞாநாநுஷ்டாநங்களிரண்டும் குறைவற வுண்டாய்த்தாகிலும் பகவத் விஷயத்தை யிழந்துபோகைக்கு பகவதபிமதரான அந்த பாகவத விஷயத்தில் பண்ணுமபசாரமே நிரபேக்ஷ ஸாதநமாகப் போருமென்றபடி.

**விளக்கம்** - கீழே உள்ள இரண்டு ப்ரமாணங்களின்படி, ஸர்வேச்வரனை அடைவதற்குக் காரணமாக உள்ள தத்வஞானம், அந்த ஞானத்தை அடைவதற்குத் தகுதியான ஒழுக்கம் ஆகிய இரண்டும் ஒருவருக்கு இல்லை என்றாலும்:

- உபாப்யாமேவ பக்ஷாப்யா மாகாசே பக்ஷிணாம் கதி:, ததைவ ஜ்ஞாந கர்மப்யாம் ப்ராப்யதே பகவாந் ஹரி: - பறவைகளின் இரண்டு சிறகுகள் மூலம் எவ்விதம்

அவற்றுக்கு வானில் பறக்கவல்ல நிலை ஏற்படுகிறதோ அது போன்று ஞானம் மற்றும் அநுஷ்டானம் மூலம் பகவான் ஸ்ரீஹரி அடையப்படுகிறான்.

- திருவிருத்தம் (54) – வீசுஞ் சிறகால் பறத்தீர் விண்ணொடு நுங்கட்கெளிது.

அதாவது, மேலே உள்ள வரிகளின்படி ஞானம் மற்றும் அனுஷ்டானம் ஆகிய இரண்டும் ஒருவனுக்கு இல்லை என்றபோதிலும், கீழே உள்ள வரிகளின்படி ஸர்வேச்வரனை அடையும் பேற்றுக்கு, பாகவதர்களின் தொடர்பு என்பது மட்டுமே போதுமானது; வேறு எந்தவிதமான சாதனமும் அவசியம் இல்லை என்றாகிறது:

- பசுர் மநுஷ்ய: பக்ஷீவா யேச வைஷ்ணவ ஸம்ச்ரயா:, தேநைவதே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம்பதம் - விலங்குகள், மனிதர்கள், பறவைகள் ஆகிய எதுவாக இருந்தாலும், அவை ஒரு ஸ்ரீவைஷ்ணவனைச் சார்ந்திருந்தால் போதுமானது; அந்த ஸ்ரீவைஷ்ணவனின் ஸம்பந்தம் காரணமாகவே அவை மஹாவிஷ்ணுவின் பரமபதத்தை அடைகின்றன.

- பராசரஸ்ம்ருதி – யம் யம் ஸ்ப்ருசதி பாணிப்யாம் யம்யம் பச்யதி சக்ஷுஷா, ஸ்தாவராண்யபி முச்யந்தே கிம் புநர் பாந்தவா ஜநா: – ஒரு பாகவதன் எவற்றைத் தனது கரங்களால் தொடுகிறானோ, எவற்றைத் தனது கண்களால் பார்க்கிறானோ அவை நிலையான பொருள்கள் என்றாலும், மோக்ஷம் அடைகின்றன; இப்படி உள்ளபோது அவனது உறவினர்கள் மோக்ஷம் பெறுவர் என்று கூறவும் வேண்டுமோ?

அதாவது, ஞானம் மற்றும் அனுஷ்டானம் ஆகிய இரண்டும் ஒருவனுக்கு எந்தவிதமான குறைவும் இன்றி நிரம்ப உண்டாகலாம். ஆனால் அவன் பகவானின் ப்ரீதிக்கு ஏற்றவர்களாக உள்ள பாகவதர்கள் விஷயத்தில் செய்யும் அபசாரம் என்பது " பகவானின் ஸம்பந்தத்தை இழக்கும் நிலை" என்பது உருவாக மற்ற ஏதும் தேவையில்லை என்னும்படியான சாதனம் ஆகிவிடுகிறது என்று கருத்து.

205. இதில் ஜன்ம வ்ருத்தாதி நியமமில்லை.

**அவதாரிகை -** இதில் ஜந்மவ்ருத்தாதி நியமமுண்டோ வென்னுமாகாங்க்ஷையிலே யருளிச் செய்கிறார் (இதில்) என்று தொடங்கி.

**விளக்கம்** – பகவத்பேறு என்பதை அடைவதில் பாகவத ஸம்பந்தம் மட்டுமே போதுமானது, பகவத் ஸம்பந்தம் இழத்தல் என்பதில் பாகவத அபசாரம் மட்டுமே போதுமானது என்ற நிலையில் - பிறப்பு, ஒழுக்கம் ஆகியவற்றால் ஏதும் பேதம் உள்ளதா என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (இதில்) என்றது "பேற்றுக்கு பாகவத ஸம்பந்தமே யமையும். இழவுக்கு அவர்கள் பக்கலபசாரமே போரும்" என்று சொன்ன விவையிரயிரண்டிலுமென்றபடி. (ஜந்ம வ்ருத்தாதி நியமமில்லை) என்றது, ஜந்ம வ்ருத்தாதிகளாலுத்க்ருஷ்டரான பாகவதர்களோடுண்டான ஸம்பந்தமே பேற்றுக்கு ஹேதுவாவது, அவற்றால் அபக்ருஷ்டரானவர்களோட்டை ஸம்பந்தம் பேற்றுக்கு ஹேதுவாகாது என்கிற நியமமும் ஜந்மவ்ருத்தாதிகளா லுத்க்ருஷ்டரானவர்கள் திறத்தில் பண்ணூமபசாரமே யிழவுக் குடலாவது; அவற்றாலபக்ருஷ்டரானவர்கள் திறத்தில் பண்ணும் அபசாரம் அப்படி யிழவுக் குடலாகாதென்கிற நியமமில்லை யென்றபடி.

**விளக்கம்** - "இதில்" என்பது என்ன? பாகவத ஸம்பந்தமே பகவத் பேற்றுக்குப் போதுமானது, அவர்களிடம் ஏற்படும் அபசாரம் என்பது மட்டுமே பகவத் ஸம்பந்தம் இழப்பதற்குப் போதுமானது என்பதைக் குறிப்பதாக "இதில்" என்ற பதம் உள்ளது. அதாவது "இந்த இரண்டிலும்" என்று பொருள். "ஜந்ம வ்ருத்தாதி நியமமில்லை" என்பது என்ன? பிறப்பு மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றால் உயர்ந்தவர்கலாக உள்ள பாகவதர்களின் தொடர்பு மட்டுமே பகவத்பேற்றுக்குக் காரணமாகும்; இவற்றால் தாழ்ந்த பாகவதர்களின் தொடர்பு அத்தகைய பேற்றுக்குக் காரணமாகாது என்ற விதி இல்லை. இதே போன்று, பிறப்பு மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றால் உயர்ந்த பாகவதர்களிடம் செய்யும் அபசாரம் மட்டுமே பகவத் ஸம்பந்தத்தை இழக்கும்படிச் செய்யும்; அவற்றில் தாழ்ந்த பாகவதர்களின் விஷயத்தில் செய்யும் அபசாரம் என்பது பகவத் ஸம்பந்தத்தை இழக்கும்படிச் செய்யாது என்ற விதியும் இல்லை.

206. இவ்வர்த்தம் கைசிகவ்ருத்தாந்தந்திலும், உபரிசரவஸுவ்ருத்தாந்தத்திலும் காணலாம்.

**அவதாரிகை** – இவ்வர்த்தங் காணலாமிட முண்டோவென்ன வருளிச்செய்கிறார் (இவ்வர்த்தம்) என்று தொடங்கி.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் கூறப்பட்ட விஷயத்திற்கான உதாரணம் எங்காவது உண்டா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சரக குலோத்பவனான ஸோமசர்மாவாகிற ப்ராஹ்மணன், யாகத்தைச் செய்வதாக வுபக்ரமித்து யதாக்ரம மநுஷ்டியாமல் அது ஸமாபிப்பதுக்கு முன்னே மரிப்பதும் செய்கையாலே ப்ரஹ்மராக்ஷஸனாய்ப் பிறந்து திரியாநிற்க, “மத்பக்தம் ச்வபசம் வாபி” என்கிறபடியே – ஜந்மஸித்தமான நைச்யத்தை யுடையராய் பகவத் பக்தியே நிரூபகமாம்படி யிருப்பாரொரு பாகவதர், உத்தாந ஏகாதசியினன்று ராத்ரி ஸித்தாச்ரமமான திருக்குறுங்குடியிலே நம்பியைப் பாடிப் பறை கொள்வதாக வீணாபாணி யாய்க் கொண்டு போகாநிற்கச் செய்தே, அவரை பக்ஷிப்பதாக வந்தடர்க்க, அவர் மீண்டு வருகைக்குறுப்பான அனேக சபதங்களைப் பண்ணிக் கொடுத்து ததநுமதிகொண்டுபோய் யதாமநோரதம் ஸேவித்து ஹ்ருஷ்டராய், அந்த ப்ரஹ்மராக்ஷஸன் நிற்கிறவிடத்திலே மீளவும் விரைந்து வந்து, “யதேஷ்டம் இனியென் சரீரத்தை நீ புஜி” என்ன; அவன், அவருடைய ஸத்யவாதித்வாதி வைபவத்தைக் கண்டு, “நீ இன்று பாடின பாட்டின் பலத்தைத் தா, நானுன்னை ப்ராணனோடே போகவிடும்படி” என்ன; அவரதுக் கிசையாதொழிய; அர்த்தராத்ரத்தில் பலம், ஏகயாமத்தில் பலம் என்றாப்போலே சொல்லிக் கொண்டு வந்தவளவிலும், “நானது செய்வதில்லை, முன்பு நீ சொன்னபடியே என்னை பக்ஷிக்குமத்தனை” என்று ஒரு நிலைநின்றபடியாலே, “த்வம் வை கீதப்ரபாவேந நிஸ்தாரயிது மர்ஹஸி, ஏவமுக்த்வாத சண்டாளம் ராக்ஷஸச் சரணம் கத:” என்கிறபடியே – ”நீ யுன்னுடைய கீத ப்ரபாவத்தாலே என்னையிப் பாபத்தினின்றும் கரையேற்றவேணும்” என்று சரணம் புகுர; அந்த பாகவதர் “யந்மயா பச்சிமம் கீதம் ஸ்வரம் கைசிகமுத்தமம்”; இத்யாதிப்படியே – தாம் பின்பு பாடின கைசிகமாகிற பண்ணின் பலத்தைக் கொடுத்து, கர்மதோஷத்தால் வந்த ராக்ஷஸ வேஷத்தைக் கழித்து, முன்பு போலே ப்ராஹ்மணனாய் அதுக்குமேலே பாகவதனுமா யுஜ்ஜீவிக்கும்படி பண்ணினார் என்கிற கைசிக வ்ருத்தாந்தத்திலே – ஜந்மாதிகளா லுத்க்ருஷ்டரான பாகவதர்களோட்டை ஸம்பந்தமே

யுஜ்ஜீவந ஹேதுவாவது, அவற்றா லபக்ருஷ்டரானவர்களோட்டை ஸம்பந்தமுஜ்ஜீவந ஹேதுவாகாது என்கிற நியமமில்லை யென்னுமது காணலாம்.

**விளக்கம்** - சரக கோத்திரத்தில் பிறந்த ஸோமசர்மா என்ற ஓர் அந்தணன் யாகம் ஒன்றை இயற்றத் தொடங்கினான். அந்த யாகத்தை இயற்றவேண்டிய முறைப்படிச் செய்யாமல், அந்த யாகம் முடிவதற்கு முன்பாக இறந்தும் போனான். எனவே அவன் மீண்டும் ப்ரஹ்ம ராக்ஷஸனாகப் பிறந்து எங்கும் திரிந்தபடி இருந்தான். மத்பக்தம் ச்வபசம் வாபி - என்னிடம் பக்தி கொண்ட ஒருவன் நாயின் மாமிசத்தை உண்ணுகின்ற தாழ்ந்தவனாக உள்ளபோதிலும் – என்கிற ப்ரமாணத்தின்படி மிகவும் தாழ்ந்த பிறவியுடன் கூடியவராகவும், பகவத்பக்தி என்பதன் மூலம் இவரை அறியலாம் என்று கூறப்படும்படி இருப்பவரும் ஆகிய பாகவதர் (இவரது பெயர் நம்பாடுவான் என்பதாகும். இனி இந்தப் பெயரையே நாம் பயன்படுத்துவோம்) ஒருவர் இருந்தார். அவர் ஓர் உத்தான ஏகாதசியில் (கார்த்திகை மாதம் சுக்லபக்ஷத்தில் வரும் ஏகாதசி) இரவுப்பொழுதில், வாமன அவதாரம் நிறைந்த இடமான திருக்குறுங்குடியில் எழுந்தருளியுள்ள நம்பி என்ற திருநாமம் கொண்ட ஸர்வேச்வரனைப் பாடி, தனது ஸ்வரூபத்தை விளங்க வைக்கும் பொருட்டு, வீணையைக் கையில் கொண்டபடி சென்றார். அப்படிச் செல்லும் பாதையில் அந்த ப்ரஹ்மராக்ஷஸன் அவரை உண்ணும் பொருட்டு வழியை மறித்தான். நம்பாடுவான் அதனிடம், தான் சென்று நம்பியைப் பாடிவிட்டு வரும்போது நிச்சயமாக உணவாக இருப்பேன் என்று பலவிதமான சபதங்களை அந்த ப்ரஹ்மராக்ஷஸனுக்குச் செய்த பின்னரே அவர் செல்ல அனுமதித்தது. அவரும் அனுமதியைப் பெற்று, தனது விருப்பத்தின்படி நம்பியைச் சென்று சேவித்து மகிழ்ந்தார். பின்னர் அந்தப் ப்ரஹ்மராக்ஷஸன் இருந்த இடத்திற்கு மீண்டும் விரைவாக வந்தார். அவனிடம், "யதேஷ்டம் – உனது விருப்பத்தின்படியே இனி நீ என்னை உணவாகக் கொள்ளலாம்", என்றார். அந்த ப்ரஹ்மராக்ஷஸன் இவரது ஸத்யத்தின் உறுதியைக் கண்டு வியந்தான். தொடர்ந்து அவரிடம், "நீ இன்று பாடிய பாடலின் பலனை எனக்கு அளித்து விடு; உன்னை நான் உயிருடன் விட்டுவிடுகிறேன்", என்றான். அவர் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. இதற்கு அவன், "முழு பலனையும் நீ அளிக்க வேண்டாம்; நடு இரவில் பாடிய பாடலின் பகுதிக்கு மட்டும் ஏற்படும் பலனை அளிப்பாய்; அல்லது கடைசி யாமத்தில் கிட்டிய பலனை மட்டுமே அளிப்பாய்", என்று பலவிதமாக உரைத்தான். இதற்கு அவர், "நான் அவ்விதம் அளிக்கமாட்டேன். நீ முன்பு உரைத்தபடியே என்னை உண்பாயாக", என்றார். இப்படியாக உறுதியுடன் நின்றார். இதனைக் கண்ட அவன் – த்வம் வை கீதப்ரபாவேந நிஸ்தாரயிது மர்ஹஸி, ஏவமுக்த்வாத

சண்டாளம் ராக்ஷஸச் சரணம் கத: – உம்முடைய இசையின் மஹத்வம் காரணமாக என்னை இந்த ராக்ஷஸப் பிறவியில் இருந்து மேலே உயர்த்துவதற்கு நீரே ஏற்றவர் - என்று கைசிகமாஹாத்மயத்தில் உள்ளது போன்று, "நீவிர் உம்முடைய இசையின் ப்ரபாவம் காரணமாக என்னை இந்தப் பாவத்திலிருந்து கரையேற்றவேண்டும்", என்று கூறிச் சரணம் அடைந்தான். உடனே அவர் - யந்மயா பச்சிமம் கீதம் ஸ்வரம் கைசிகமுத்தமம் - கைசிகம் என்ற பண் என்னால் கடைசி யாமத்தில் பாடப்பட்டது - என்று கைசிகமாஹாத்ம்யத்தில் உள்ளபடி, தான் பாடிய கைசிகம் என்ற பண்ணின் பலனை அவனுக்கு அளித்தார்; கர்மத்தின் தோஷம் காரணமாக ஏற்பட்டிருந்த ப்ரஹ்மராக்ஷஸப் பிறவியை நீக்கினார்; முன்பு போன்று அவன் அந்தணனாக, அதிலும் பாகவதனாக மாறிப் பிழைக்கும்படிச் செய்தார். இதனைக் கைசிகமாஹாத்மயத்தில் காணலாம். இதன் மூலம் உணரப்படுவது என்ன? பிறப்பு போன்ற பலவற்றால் உயர்ந்துள்ள பாகவதர்களின் ஸம்பந்தம் மட்டுமே உய்வதற்கான காரணத்தை ஏற்படுத்தும்; பிறப்பு போன்றவற்றால் தாழ்ந்த பாகவதர்களின் ஸம்பந்தம் உய்வதற்கான காரணம் ஆகாது என்பது போன்றதான எந்தவிதமான வேறுபாடும் இல்லை என்பதே ஆகும்.

**வ்யாக்யானம்** - ருஷிகளும் தேவர்களும் தன்பக்கலிலே தர்மஸந்தேஹம் கேட்கும்படி வித்யாதிகனுமாய், ஸ்வவர்ணாநுரூப வ்ருத்தி மாத்ரமன்றிக்கே ஸாத்வததந்த்ர நிஷ்ணாதனாய், பகவதாராதந தத்பரனாய்க் கொண்டு போருகையாலே வந்த வ்ருத்தாதிகனுமாய், ஸ்வதபோ பலத்தாலே ஸவாஹந பரிவாரனாய்கொண்டு அந்தரிக்ஷ சரனாய்த் திரியும் உபரிசரவஸு என்கிற மஹாராஜாவானவன்; யாகார்த்தமான பசு நிமித்தமாக ருஷிகளும் தேவர்களும் தங்களில் விவாதம் பண்ணுகிறவளவிலே, "மார்க்காகதோ ந்ருபச்ரேஷ்டஸ் தம்தேசம் ப்ராப்தவாந் வஸு:, அந்தரிக்ஷ சரச் ஸ்ரீமாந் ஸமக்ரபலவாஹந: தம் த்ருஷ்ட்வா ஸஹஸாயாந்தம் வஸும் தேத்வந்தரிக்ஷகம், ஊசுர் த்விஜாதயோ தேவா ஏஷச்சேத்ஸ்யதி ஸம்சயம்" என்று ஆகாசத்திலே போகாநின்ற விவனைக் கண்டு, இவன் நம்முடைய ஸம்சயத்தை யறுக்க வல்லன் என்றறுதியிட்டு, இவனைச் சென்று கிட்டி, "செய்ய வடுப்பதேது" என்று கேட்க, அவன் "உந்தாமுடைய மதங்களைச் செல்லுங்கோள்" என்ன, "தாந்யைர் யஷ்டவ்யமித்யேஷ பக்ஷோ ஸ்மாகம் நராதிப, தேவதாநாம் ஹி பசுபி: பக்ஷோ ராஜந் வதஸ்வந:" என்று – "தாந்யங்களாலே யஜிக்கப்படுமென்று எங்களுக்கு பக்ஷம், பசுக்களாலே யஜிக்கவேணுமென்று தேவர்களுக்கு பக்ஷம், நாங்கள் செய்யுமதென்? சொல்" என்று ருஷிகள் கேட்க; "தேவாநாந்து மதம் ச்ருத்வா வஸுநா பக்ஷ ஸம்ச்ரயாத், சாகேநாஜேந யஷ்டவ்யமேவ

முக்தம் வசஸ் ததா” என்கிறபடியே – அவன் தேவர்களளவில் பக்ஷபாதத்தால் ”சாகத்தாலே யஜிக்கவேணும்” என்ன; “குபிதாஸ் தே ததா ஸர்வே முநயஸ் ஸூர்யவர்ச்சஸ: ஊசுர்வஸுும் விமாநஸ்த்தம் தேவ பக்ஷார்த்த வாதிநம், ஸுர பக்ஷோ க்ருஹீதஸ் தே யஸ்மாத் தஸ்மாத் திவ: பத, அத்யப்ரப்ருதி தே ராஜந் ஆகாசே விஹதா கதி, அஸ்மச்சாபாபிகாதேந மஹீம் பித்த்வா ப்ரவேக்ஷ்யஸி, விருத்தம் வேதஸூத்ராணாம் உக்தம் யதிபவேந் ந்ருப, வயம் விருத்த வசநா யதி ததா பதாமஹே” என்று – ருஷிகளெல்லாரும் குபிதராய், தேவ பக்ஷார்த்த வாதியாய் விமாநஸ்த்தனாயிருக்கிற விவனைப்பார்த்து, “நீ சொன்னது வேதஸூத்ரங்களுக்கு விருத்தமாகில், தேவ பக்ஷாபாதியாய் வார்த்தை சொன்ன நீ, த்யௌளவில் நின்றும் அதர்பதியாய், இப்போது தொடங்கி யுன்னுடைய வாகாச கமநமும் மாறி பாதாளத்திலே விழக்கடவை, நாங்கள் தான் விருத்தவசநம் சொன்னோமாகில் அப்படியே பாதாளத்திலே விழக்கடவோம்” என்று சொல்லி சபிக்க; “ததஸ் தஸ்மிந் முஹூர்தேது ராஜோ பரிசரச் ததா அதோவை ஸம்பபூவாசு பூமேர் விவரகோ ந்ருப” என்கிறபடியே அப்போதே பாதாளத்திலே விழுந்தானென்கிற உபரிசரவஸு வ்ருத்தாந்தத்தில், ருஷிகளும் தர்மஸந்தேஹங்கள் தன்னைக் கேட்கும்படி வித்யாதிகளாலவர்களி லுத்க்ருஷ்டனானவன் அவர்கள் திறத்தி லபசாரத்தாலே யத:பதித்தமை காண்கையாலே, ஜந்மவ்ருத்தாதிகளா லுத்க்ருஷ்ட ரானவர்கள் அபக்ருஷ்டர் பண்ணுமபசாரமே யிழவுக் குடலாவது, அவற்றா லுத்க்ருஷ்ட ரானவர்கள் அபக்ருஷ்டர்திறத்தில் பண்ணுமபசார மிழவுக்குடலாகாதென்கிற நியமமில்லை யென்னுமது காணலாமென்கை. ஜந்மாதிக்யம் ருஷிகளுக்குண்டானாலும் ஜ்ஞாநாத்யாதிக்ய மிவனுக்குண்டாகையாலே அவர்களி லிவனுக்கேற்றம் சொல்லக் குறையில்லை. ஜன்மமும் ஜ்ஞாநாதிகளு மொருதலையானால் ஜ்ஞாநாதிகள் ப்ரபலங்களாயிறே யிருப்பது.

**விளக்கம்** – (அடுத்து மற்றொரு நிகழ்வு பற்றி அருளிச்செய்கிறார்). உபரிசரவஸு என்னும் ஓர் அரசன் இருந்தான். இவன் எப்படிப்பட்டவன் என்றால் - ரிஷிகளும் தேவர்களும் கூட தர்மங்கள் பற்றி தங்களுக்கு உள்ள சந்தேகங்களைத் தன்னிடம் கேட்டுத் தெளிவு அடையும்படியாகக் கல்வியில் மேம்பட்டவன்; தனது க்ஷத்ரிய வர்ணத்திற்கு ஏற்ற செயல்பாடுகளை மட்டுமே அறிந்திராமல், ஸாத்த்வதந்த்ரத்தில் நிபுணனாக இருந்தவன்; ஸர்வேச்வரனின் ஆராதனத்தில் எப்போதும் நிலைநிற்பவன், அதனால் சிறந்த ஒழுக்கம் நிறைந்தவன்; தனது தவத்தின் வலிமையால், தனது வாகனங்கள் அனைத்துடனும் ஆகாயத்தில் சஞ்சாரம் செய்கின்ற நிலையை அடைந்தவன் ஆவான். ஒரு சமயம் ரிஷிகளும் தேவர்களும் யாகத்தில் பயன்படுத்தப்படும் பசு பற்றி விவாதம் ஒன்றைச்

செய்தபடி இருந்தனர். அப்போது - மார்க்காகதோ ந்ருபச்ரேஷ்டஸ் தம்தேசம் ப்ராப்தவாந் வஸு:, அந்தரிக்ஷ சரச் ஸ்ரீமாந் ஸமக்ரபலவாஹந: தம் த்ருஷ்ட்வா ஸஹஸாயாந்தம் வஸும் தேத்வந்தரிக்ஷகம், ஊசுர் த்விஜாதயோ தேவா ஏஷச்சேத்ஸ்யதி ஸம்சயம் - விரிந்த தனது படைகளுடனும் வாகனங்களுடனும் கூடியபடி ஆகாயத்தில் சஞ்சரிக்கின்றவனும், நிறைந்த செல்வங்கள் கொண்டவனும், அனைத்து அரசர்களுக்குத் தலைவனும் ஆகிய உபரிசரவஸு என்னும் அரசன் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த அந்த இடத்திற்கு வந்தான்; ஆகாயத்தில் உள்ளவனும், மிகவும் விரைவாகச் சென்றபடி உள்ளவனும் ஆகிய அவனைக் கண்ட ரிஷிகளும் தேவர்களும், "இவன் நமது சந்தேகத்தைத் தீர்ப்பான்" - என்று கூறுவதற்கு ஏற்ப, ஆகாயத்தில் சென்று கொண்டிருந்த அவனைக் கண்டு, அவன் நமது சந்தேகத்தைத் நீக்கவல்லவன் என்று முடிவு செய்து, அவனிடம் சென்றனர். அவனிடம், "நாங்கள் என்ன செய்யவேண்டும்?", என்றனர். இதற்கு அவன், "உங்களது இரண்டு பிரிவுகளின் வாதங்கள் என்ன என்பதை முதலில் கூறுங்கள்", என்றான். இதற்கு அவர்கள் – தாந்யைர் யஷ்டவ்யமித்யேஷ பக்ஷோ ஸ்மாகம் நராதிப, தேவதாநாம் ஹி பசுபி: பக்ஷோ ராஜந் வதஸ்வந: - தானியங்களால் உண்டாக்கப்படும் அரைத்த மாவு கொண்டு யாகம் செய்யவேண்டும் என்பது ரிஷிகளான எங்கள் வாதம்; பசுவைக் கொண்டு யாகம் செய்யவேண்டும் என்பது தேவர்களின் வாதம்; அரசனே! நீயே சரியான முடிவை உரைக்கவேண்டும் - என்று கூறுவதற்கு ஏற்ப, "தானியங்கள் மூலம் யாகம் இயற்றப்படவேண்டும் என்பது எங்கள் முடிவு; பசுக்களால் இயற்றப்படவேண்டும் என்பது தேவர்கள் முடிவு; நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை உரைப்பாயாக", என்றனர். இதற்கு – தேவாநாந்து மதம் ச்ருத்வா வஸுநா பக்ஷ ஸம்ச்ரயாத், சாகேநாஜேந யஷ்டவ்யமேவ முக்தம் வசஸ் ததா - தேவர்கள் முடிவைக் கேட்டு, அந்த முடிவை ஏற்றுக்கொண்டு வெள்ளாடு ஒன்றை வைத்து யாகம் இயற்றப்படவேண்டும் என்பது அவனால் உரைக்கப்பட்டது - என்றபடி முடிவு உரைத்தான். அதாவது, தேவர்கள் மீது அவன் காண்பித்த பாரபக்ஷமான எண்ணம் காரணமாக, "வெள்ளாடு ஒன்றைக் கொண்டு யாகம் இயற்றவேண்டும்", என்றான். இதனைக் கேட்ட முனிவர்கள் – குபிதாஸ் தே ததா ஸர்வே முநயஸ் ஸூர்யவர்ச்சஸ: ஊசுர்வஸும் விமாநஸ்த்தம் தேவ பக்ஷார்த்த வாதிநம், ஸுர பக்ஷோ க்ருஹீதஸ் தே யஸ்மாத் தஸ்மாத் திவ: பத, அத்யப்ரப்ருதி தே ராஜந் ஆகாசே விஹதா கதி, அஸ்மச்சாபாபிகாதேந மஹீம் பித்த்வா ப்ரவேக்ஷ்யஸி, விருத்தம் வேதஸூத்ராணாம் உக்தம் யதிபவேந் ந்ருப, வயம் விருத்த வசநா யதி ததா பதாமஹே - அனைவரும் மிகவும் கோபம் கொண்டனர்; சூரியன் போன்ற ஒளியைக் கொண்ட அவர்கள் விமானத்தில் அமர்ந்தவனும், தேவர்கள் பக்கம் பாரபக்ஷமாக தீர்ப்புக்

கூறியவனும் ஆகிய அந்த அரசனைப் பார்த்து உரைத்தனர்; எந்த ஒரு காரணத்தினால் உன்னால் தேவர்களின் வாதம் ஏற்கப்பட்டதோ அதே காரணத்தினால் நீ ஆகாயத்திலிருந்து பூமியில் விழுவாய்; ஆகாயத்தில் ஸஞ்சாரம் செய்தல் உனக்கு இன்று முதல் இயலாமல் போவதாக; வேதங்களுக்கு முரணாக நீ பேசியது இருந்தது என்றால் எங்கள் சாபம் காரணமா, நீ பூமியைப் பிளந்து விழுவாயாக; நாங்கள் வேதங்களுக்கு முரணாகப் பேசியிருந்தோம் என்றால் அப்படியே நாங்கள் விழுவோமாக – என்றனர். அதாவது இவன் கூறியதைக் கேட்ட முனிவர்கள் மிகவும் கோபம் கொண்டு, தேவர்களின் பக்கமாக முடிவு உரைத்தவனும் விமானத்தில் உள்ளவனும் ஆகிய அவனிடம், "நீ உரைத்த முடிவு என்பது வேதவாக்கியங்களுக்கு முரண்பட்டதாக உள்ளது என்றால் தேவர்கள் பக்கம் சாதமாக உள்ளபடி உரைத்த நீ ஆகாயத்தில் இருந்து கீழே விழுவாய்; இப்போதிலிருந்து ஆகாயத்தில் சஞ்சாரம் செய்வது உனக்குக் கூடாமல், பாதாள லோகத்தில் விழுவாயாக. மாறாக நாங்கள் கூறும் கொள்கை வேதங்களுக்கு முரணாக உள்ளது என்றால், நாங்கள் அது போன்று பாதாளத்தில் விழுக்கடவோம்", என்று சபித்தனர். அப்போது – ததஸ் தஸ்மிந் முஹூர்தேது ராஜோ பரிசரச் ததா அதோவை ஸம்பபூவாசு பூமேர் விவரகோ ந்ருப - அவ்விதம் சபிக்கப்பட்ட அந்த நொடியிலேயே உபரிசிரவஸு என்ற அந்த அரசன் தலைகீழாகப் பூமியின் பாதாள லோகத்தில் விழுந்தான் – என்றது காண்க. அதாவது, அந்த நேரத்திலேயே பாதாளத்தில் விழுந்தான். இந்தச் சரிதத்தில், ரிஷிகளும் தேவர்களும் கூட தன்னிடம் தர்மம் குறித்த சந்தேகங்கள் கேட்கும்படியாக, கல்வி உள்ளிட்ட பலவற்றிலும் அவர்களைக் காட்டிலும் மேன்மையாக உபரிசரவஸு இருந்தான். ஆனால் ரிஷிகளிடம் அபசாரம் ஏற்பட்ட காரணத்தினால் பாதாளத்தில் விழுந்த நிலையைக் காண்க. ஆக பிறவி, ஒழுக்கம் போன்றவற்றால் உயர்ந்தவர்கள் விஷயத்தில், அவர்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்கள் அபசாரம் செய்தால் மட்டுமே அந்தத் தாழ்ந்தவர்கள் அழிந்து போவார்கள்; பிறவி மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றால் தாழ்ந்த பாகவதர்கள் விஷயத்தில் அவர்களைக் காட்டிலும் பிறவி உள்ளிட்ட அனைத்தாலும் உயர்ந்தவர்கள் அபசாரம் செய்தால் அவர்கள் அழிவிற்கு அது ஏதுவாகாது - என்னும் விதிமுறை ஏதும் இல்லை. பிறப்பு என்பதால் ரிஷிகளுக்கு உயர்வு உண்டு என்றபோதிலும், ஞானம் மூலம் உபரிசரவஸுக்கு உயர்வு உண்டு என்பதால், அவர்களைக் காட்டிலும் இவனுக்கு மேன்மை உண்டு என்று கூறுவதில் எந்தவிதமான தவறும் இல்லை. பிறவி, ஞானம் போன்ற பலவும் ஒருவரிடம் ஒன்றாக அமைந்தாலும், ஞானம் என்பது மட்டுமே மேன்மையான ஒன்றாகக் கருதப்படும்.

**வ்யாக்யானம்** - கைசிகவ்ருத்தாந்தம் ஸ்ரீவராஹ புராணத்திலே ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு ஸ்ரீவராஹ நாயனாரருளிச் செய்ததாகையாலும், உபரிசரவஸு வ்ருத்தாந்தம் பஞ்சமவேதமான மஹாபாரதத்திலே மோக்ஷ தர்மத்திலே தர்மபுத்ரர்க்கு ஸ்ரீபீஷ்மராலே சொல்லப்பட்ட தாகையாலும் இவைதான் ஆப்த ப்ரமாண ஸித்தமிறே.

**விளக்கம்** – மேலே உள்ள கைசிக நிகழ்வு என்பது ஸ்ரீவராஹ புராணத்தில் ஸ்ரீவராஹப்பெருமான் ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு அருளிச்செய்த ஒன்று என்பதாலும், உபரிசிரவஸு பற்றிய நிகழ்வு என்பது ஐந்தாவது வேதமான மஹாபாரதத்தின் மோக்ஷதர்மத்தில் தர்மபுத்திரருக்கு பீஷ்மரால் உரைக்கப்பட்டது என்பதாலும் - இந்த இரண்டும் நன்மையை உபதேசிக்க எண்ணுபவர்களால் கூறப்பட்ட ப்ரமாணம் என்பது உறுதியாகிறது.

207. ப்ராஹ்மண்யம் விலைச்சொல்லுகிறது வேதாத்யயநாதி முகத்தாலே பகவல்லாப ஹேது வென்று; அதுதானே யிழவுக்குறுப்பாகில் த்யாஜ்யமாமிறே.

**அவதாரிகை** – இப்படி ஐந்மாதிகளாவரு முத்கர்ஷத்தில் பசையில்லையென்று சொல்லலாமோ சாஸ்த்ரங்களெல்லாம் ப்ராஹ்மண்யத்தை அத்யாதரம்பண்ணிச் சொல்லா நிற்கச்செய்தே யென்ன வருளிச்செய்கிறார் மேல் (ப்ராஹ்மண்யம்) என்று தொடங்கி.

**விளக்கம்** – அனைத்து சாஸ்த்ரங்களும் அந்தணத்தன்மை என்பதை மிகவும் உயர்ந்த ஒன்றாகவே உரைக்கின்றன. இப்படி உள்ளபோது பிறவி போன்றவற்றால் வருகின்ற மேன்மை என்பது முக்கியத்வம் வாய்ந்தது அல்ல என்று கூறலாமா என்னும் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (விலை செல்லுகையாவது) விருப்பத்துக்கு விஷயமாய்ச் செல்லுகை. (வேதாத்யயநாதிமுகத்தாலே பகவல்லாப ஹேதுவாகையாவது) – "ஸர்வே வேதா யத்பத மாமநந்தி" என்றும், "வேதைச்ச ஸர்வை ரஹமேவ வேத்ய:" என்றும் சொல்லுகிறபடியே, ஆராதந ஸ்வரூபத்தையும் ஆராத்ய ஸ்வரூபத்தையும் பூர்வோத்தர பாகங்களாலே ப்ரதிபாதியா நின்றுகொண்டு, பகவதேகபரமாயிருக்கிற வேதத்தை, "ஸ்வாத்யாயோ உத்யேதவ்ய:" என்கிற விதிபரதந்த்ரனாய் அத்யயநம் பண்ணி, மீமாம்ஸாதிகளாலே ததர்த்த நிர்ணயம் செய்து, பகவதுபாஸநாதிகளிலே யிழிந்து பகவத் விஷயத்தைப் பெறுகைக்குறுப்பாகை. (அதுதானே யிழவுக் குறுப்பாகில்) என்றது - அந்த ப்ராஹ்மண்யந்தானே அஹங்கார ஹேதுவாய்க்கொண்டு, "மத்பக்தாந் ச்ரோத்ரியோ

நிந்தந் ஸத்யச் சண்டாளதாம் வ்ரஜேத்” என்கிறபடியே, பகவதத்யந்த நிக்ரஹஹேதுவான பாகவதாபசரத்தைப்பண்ணி பகவத் விஷயத்துக்கு அசலாய்ப்போகைக் குறுப்பாகி லென்றபடி. (த்யாஜ்யமாமிறே) என்று ப்ரஸித்தி தோற்ற வருளிச்செய்தது - யாதொன்று பகவல்லாபத்துக் குறுப்பு அது உபாதேயம்; யாதொன்று ததலாபத்துக் குறுப்பு அது த்யாஜ்யமாய்த்த பின்பு, இதுவு மிழவுக் குறுப்பானபோதே அப்படியாகக் குறையில்லை என்கிற நிச்சயத்தாலே.

**விளக்கம்** - “விலைச்செல்லுகை” என்றால் விருப்பத்திற்கு ஏற்றதாக உள்ளது என்று பொருள். ”வேதாத்யயநாதிமுகத்தாலே பகவல்லாப ஹேதுவாகையாவது” என்பது என்ன? கட உபநிஷத் – ஸர்வே வேதா யத்பத மாமநந்தி - அனைத்து வேதங்களும் எந்தப் பரம்பொருள் குறித்து முழங்குகின்றனவோ – என்றும், கீதை (15-15) – வேதைச்ச ஸர்வை ரஹமேவ வேத்ய: - அனைத்து வேதங்களாலும் அறியப்படும் பரம்பொருளாக நானே உள்ளேன் - என்றும் கூறியபடி, வேதமானது பூர்வபாகத்தில் அனைத்து தேவதைகளின் அந்தர்யாமியாக ஸர்வேச்வரன் உள்ள தன்மையையும், உத்தரபாகத்தில் அத்தகைய ஸர்வேச்வரனின் தன்மை எத்தகையது என்றும் கூறுகிறது. இப்படியாக வேதங்கள் ஸர்வேச்வரனை மட்டுமே கூறுவதாக உள்ளன. அப்படிப்பட்ட வேதத்தை - ஸ்வாத்யாயோ உத்யேதவ்ய: - வேதம் அத்யயனம் செய்யத்தக்கது – என்ற விதிக்கு ஏற்றபடி அத்யயனம் செய்து, மீமாம்ஸை மூலம் ஸர்வேச்வரனை உபாஸித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டு என்று பொருள். “அதுதானே யிழவுக் குறுப்பாகில்” என்பது என்ன? வேதங்களால் கொண்டாடப்படும் அந்தணத்தன்மை என்பது அஹங்காரத்திற்குக் காரணமாகி, மத்பக்தாந் ச்ரோத்ரியோ நிந்தந் ஸத்யச் சண்டாளதாம் வ்ரஜேத் – ஒருவன் வேத அத்யயனம் செய்தவன் என்றாலும் எனது அடியார்களை நிந்தித்தான் என்றால் அப்போதே சண்டாளன் ஆகிறான் – என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனின் சீற்றத்துக்குக் காரணமான பாகவத அபசாரத்தைச் செய்தவன் என்பதால், ஸர்வேச்வரனால் விலக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்துவிடுகிறது என்று கருத்து. “த்யாஜ்யமாமிறே” என்பது என்ன? அதாவது “த்யாஜ்யமாம்” என்று மிகவும் ப்ரஸித்தி பெற்ற கருத்து என்பது தோன்றும்படியாக அருளிச்செய்தது என்னவென்றால் – எது ஸர்வேச்வரனை அடைவதற்குக் காரணமாக உள்ளதோ அது ஏற்கப்படக்கூடியது; எது அவனை அடைவதற்குத் தடையாக உள்ளதோ அது தள்ளப்படத்தக்கது; அந்தணத்தன்மை என்பது ஸர்வேச்வரனை இழப்பதற்குக் காரணமாகிறது என்று நிலையில் அதனைக் கைவிடுவது சரியே – என்பதாகும்.

208. ஜன்ம வ்ருத்தங்களினுடைய உத்கர்ஷமும் அபகர்ஷமும் பேற்றுக்கு மிழவுக்கு மப்ரயோஜகம்.

**அவதாரிகை** – இப்படி உத்க்ருஷ்ட ஜந்மாதிக ளிழவுக் குறுப்பாமாகில் அபக்ருஷ்ட ஜந்மாதிகள்தான் பேற்றுக் குடலாமோவென்ன வருளிச்செய்கிறார் (ஜந்ம வ்ருத்தங்களினுடைய) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக உயர்ந்த பிறவி போன்றவை ஸர்வேச்வரனை இழப்பதற்குக் காரணமாகின்றன என்றால், அவற்றால் தாழ்ந்த பிறவிகள் ஸர்வேச்வரனை அடைவதற்குக் காரணமாகுமோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது ஜந்ம வ்ருத்தங்களினுடைய உத்கர்ஷமும் பேற்றுக்கு மிழவுக்கும் ப்ரயோஜகமன்று, அவற்றினுடைய அபகர்ஷமு மிவையிரண்டுக்கும் ப்ரயோஜக மன்றென்கை.

**விளக்கம்** – (இந்தச் சூர்ணைக்கு இரண்டுவிதமான வ்யாக்யானங்களை அருளிச்செய்கிறார்). பிறப்பு, ஆசாரம் (நல்ல ஒழுக்கம்) போன்ற பலவற்றின் உயர்த்தி என்பது ஸர்வேச்வரனை அடைவதற்கும் காரணமாக இருப்பதில்லை, அவனை அடைவதற்குத் தடையாக இருந்து அவனை இழப்பதற்கும் காரணமாக இருப்பதில்லை. இதே போன்று, அவற்றின் தாழ்வு என்பதும் இந்த இரண்டு நிலைகளுக்கும் காரணமாக இருப்பதில்லை என்று கருத்து.

**வ்யாக்யானம்** - அன்றிக்கே, (இதில் ஜந்ம வ்ருத்தாதி நியமமில்லை) என்பது (இழவுக்குறுப்பாமாகில் த்யாஜ்யமாமிறே) என்பதாகா நின்றீர்; இங்ஙனே சொல்லலாமோ, வேதாத்யயாநதி முகத்தாலே பகவல்லாபஹேதுவாகையாலே ஜந்ம வ்ருத்தங்களினுடைய உத்கர்ஷம் பேற்றுக்குடலாகவும், அவற்றினுடைய வபகர்ஷம் அத்யயநாதிகளுக்கு அநர்ஹமாகையாலே இழவுக்குடலாகவும் கொள்ளவேண்டாவோ வென்ன வருளிச் செய்கிறார், (ஜந்ம வ்ருத்தங்களினுடைய) என்று தொடங்கி. அதாவது ஜந்ம வ்ருத்தங்களினுடைய உத்கர்ஷம் பேற்றுக்கு ப்ரயோஜகமன்று, அவற்றினுடைய அபகர்ஷமும் இழவுக்கு ப்ரயோஜன மன்றென்கை. பேறிழவுகளாவன - பகவல்லாப ததலாபங்கள். (ப்ரயோஜகமாவது) பலிப்பிக்குமது. உத்க்ருஷ்ட ஜந்ம வ்ருத்தங்களுடையவர்களில் சிலரிழப்பாரும் சிலர் பெறுவாருமாகக் காண்கையாலும், அபக்ருஷ்ட ஜந்ம வ்ருத்தங்களுடையவர்களிலு மப்படியே யிரண்டுவகையு முண்டாகக்

காண்கையாலும் இவையிரண்டும் இரண்டுக்கும் ப்ரயோஜக மன்றென்னுமிடம் ப்ரத்யக்ஷ ஸித்தமிறே.

**விளக்கம்** – அல்லது, (அடுத்த பொருளை அருளிச்செய்கிறார்) வேறு பொருள் உரைப்போம். "இதில் ஜந்ம வ்ருத்தாதி நியமமில்லை" என்னும் 205வது சூர்ணையில் பாகவத அபசாரத்திற்குப் பிறப்பு மற்றும் ஆசாரம் ஆகியவற்றின் மூலம் உண்டாகும் ஏற்றத்தாழ்வுகள் காரணமாகாது என்றும், "இழவுக்கு" என்னும் 207வது சூர்ணையில் அந்தணத்தன்மை என்பது ஸர்வேச்வரனை இழப்பதற்குக் காரணமாக இருந்தால் கைவிடத்தக்கது என்றும் உரைத்தீர்கள்; இப்படிக் கூறலாமா? பிறவி மற்றும் ஆசாரம் ஆகிய இரண்டும் வேத அத்யயனம் செய்வதற்கான தகுதியை உண்டாக்குவதால், அவை ஸர்வேச்வரனை அடைவதற்கான காரணமாக உள்ளன, ஆகவே அவை பேற்றுக்கு ஆதாரமாக உள்ளன; அவற்றின் தாழ்வு என்பது வேத அத்யயனம் செய்வதற்கான தகுதியை இழக்கச்செய்வதால், அவற்றின் தாழ்வு என்பது ஸர்வேச்வரனை இழப்பதற்கும் காரணமாகின்றன என்று கொள்ளவேண்டாமோ? இந்தக் கேள்விக்கான சமாதானத்தை அருளிச்செய்கிறார். இதற்கன பதிலாக இந்தச் சூர்ணையை அருளிச்செய்கிறார் என்று கருத்து. பிறவி மற்றும் ஆசாரம் ஆகியவற்றின் உயர்வு என்பது ஸர்வேச்வரனை அடைவதற்கான காரணம் அல்ல, அவற்றின் தாழ்வு என்பது ஸர்வேச்வரனை இழப்பதற்கும் காரணம் அல்ல என்று பொருள். இங்கு பேறு என்பது அவனை அடைதல், இழவு என்பது அவனை அடைய இயலாமல் இழத்தல் என்பதாகும். ப்ரயோஜகம் என்றால் இப்படியாக உள்ள அடைதல் மற்றும் இழத்தல் ஆகியவற்றுக்குக் காரணமாக இருத்தல் என்பதாகும். உயர்ந்த பிறவி மற்றும் ஆசாரம் கொண்டவர்களில் சிலர் ஸர்வேச்வரனை அடைய இயலாமல் போவதையும், சிலர் அடைவதையும் காண்கிறோம்; இதே போன்று தாழ்ந்த பிறவி மற்றும் ஆசாரம் கொண்டவர்களில் சிலர் இப்படியாகவே இரண்டுவகையிலும் உள்ளதையும் காண்கிறோம். ஆகவே பிறவி மற்றும் ஆசாரம் என்பது ஸர்வேச்வரனை அடைவதற்கும், அடைய இயலாமல் போவதற்கும் காரணமாகாது என்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது அல்லவோ?

209. ப்ரயோஜகம் பகவத் ஸம்பந்தமும் தத்ஸம்பந்தமும்.

**அவதாரிகை** - ஆனால் பேறிழவுகளுக்கு ப்ரயோஜகமாவதேதென்ன வருளிச்செய்கிறார் (ப்ரயோஜகம்) என்று தொடங்கி.

**விளக்கம் -** மேலே உள்ளபடி உரைத்தால், அவனை அடைதல் மற்றும் அடைய இயலாமல் இழத்தல் ஆகியவற்றுக்குக் காரணமாக எதுதான் உள்ளது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, பகவல்லாபமாகிற பேற்றுக்கு ப்ரயோஜகம், நாம் பகவ தநந்யார்ஹ சேஷபூதரென்றிருக்கையாகிற பகவத் ஸம்பந்தம்; தத்லாபமாகிற விழவுக்கு ப்ரயோஜகம், ததநந்யார்ஹ சேஷத்வ ஜ்ஞாநாபாவமாகிற தத்ஸம்பந்தாபாவ மென்றபடி.

**விளக்கம் -** ஸர்வேச்வரனை அடைதல் என்ற பேற்றுக்குக் காரணம் எதுவென்றால் "நாம் ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமையாக உள்ளவர்கள்" என்று இருக்கின்ற பகவத் ஸம்பந்தம் ஆகும். அவனை அடைய இயலாமல் உள்ள நிலைக்குக் காரணம் எதுவென்றால், "நாம் அவனுக்கு மட்டுமே அடிமைப்பட்டவர்கள் என்கிற ஞானம் இல்லாமல் இருத்தல்" என்பதான பகவத் ஸம்பந்தம் இன்மை என்பதே ஆகும்.

210. பகவத்ஸம்பந்த முண்டானா லிரண்டு மொக்குமோ என்னில்.

**அவதாரிகை -** உத்க்ருஷ்டாபக்ருஷ்ட ஜந்மாக்களிருவர்க்கும் பகவத் ஸம்பந்தமுண்டானால் பாகவதத்வ ஸாம்யமன்றோ உள்ளது, அத்தோடே ஜந்மோத்கர்ஷ முடையவன் மற்றையவனைப்பற்ற விசிஷ்டனன்றோவென்று நினைத்துப் பண்ணுகிற ப்ரச்நத்தை யநுவதிக்கிறார்.

**விளக்கம் -** உயர்ந்த பிறவி, ஆசாரம் போன்றவற்றை உடையவன் மற்றும் அவற்றால் தாழ்ந்தவன் ஆகிய இருவருக்கும் பகவத் ஸம்பந்தம் ஏற்பட்டவுடன், அவர்கள் இருவருக்கும் பாகவதர்கள் என்ற ஒற்றுமை ஏற்படுகின்றது அல்லவோ? இவ்விதம் கொள்ளும்போது, பாகவதனாகவும் உள்ளான் மற்றும் பிறப்பிலும் உயர்ந்தவனாக உள்ளான் என்றுள்ள ஒருவனுக்கு, மற்றவனைக் காட்டிலும் சிறப்பு உள்ளது என்று அல்லவோ ஆகிறது? இப்படிப்பட்ட எண்ணம் காரணமாக உண்டாகும் கேள்வியைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம் -** (பகவத் ஸம்பந்தமுண்டானா லிரண்டுமொக்குமோ வென்னில்) என்று, (இரண்டும்) என்று உத்க்ருஷ்டாபக்ருஷ்ட ஜந்மங்களைச் சொல்லுகிறது.

**விளக்கம்** - ”இரண்டும்“ என்பதன் மூலம் உயர்ந்த பிறவி மற்றும் தாழ்ந்த பிறவு ஆகிய இரண்டும் கூறப்பபட்டது.

211. ஒவ்வாது.

**அவதாரிகை** - ப்ரஷ்டாவானவன் உத்க்ருஷ்டமாக நினைத்தத்தை அபக்ருஷ்டமாகவும், அபக்ருஷ்டமாக நினைத்தத்தை உத்க்ருஷ்டமாகவும் திருவுள்ளம் பற்றி, அதுக்குத்தர மருளிச்செய்கிறார்.

**விளக்கம்** – இப்படியாகக் கேள்வியை எழுப்பியவன் உயர்ந்ததாக எண்ணியதைத் தான் (ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர்) தாழ்வானதாகவும், அவன் தாழ்வாக எண்ணிய ஒன்றை தான் உயர்ந்ததாகவும் தனது திருவுள்ளத்தில் கொண்டவராக, பதில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – (ஒவ்வாது) என்று.

**விளக்கம்** - ஒத்தது ஆகாது என்கிறார்.

212. உத்க்ருஷ்டமாக ப்ரமித்த ஜன்மம் ப்ரம்சஸம்பாவனையாலே “சரீரே ச” என்கிறபடியே பயஜநகம்.

**அவதாரிகை** - அத்தை உபபாதிக்கிறார் (உத்க்ருஷ்டமாக) என்று தொடங்கி.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் “ஒத்தது ஆகாது” என்று கூறியதை மேலும் விளக்கும் பொருட்டு தொடங்குகிறார்.

**வ்யாக்யானம்** - ஆபிஜாத்யாதிகளாலே அஹங்கரித்து நசிக்கைக்குறுப்பாகையாலே அபக்ருஷ்டமாயிருக்கிறவித்தை உத்க்ருஷ்டமாக நினைத்து ப்ரச்நம் பண்ணிற்று அதஸ்மிந் தத்புத்தியாலே என்னுமிடந்தோற்ற (உத்க்ருஷ்டமாக ப்ரமித்த ஜந்மம்) என்கிறார். (ப்ரம்ச ஸம்பாவநையாவது) - உபாயாந்தரங்களி லந்வயத்தாலே அநந்யோபாயத்வமாகிற வதிகாரத்தினின்றும் நழுவுதல் வருகைக்கு யோக்யமாயிருக்கை. (சரீரேச என்கிறபடியே பய ஜநகம்) என்றது. “காலேஷ்வபிச ஸர்வேஷு” என்று

தொடங்கி, உபாயாந்தரானுஷ்டாநத்துக்கு யோக்யங்களாகையாலே பயஹேதுக்களான வற்றைச் சொல்லிவருகிற வடைவிலே அவை யெல்லாவற்றிலும் ப்ரதாநமாக, "சரீரேச வர்த்ததே மே மஹத்பயம்" என்று சொல்லுகிறபடியே ஸ்வரூப யாதாத்ம்ய வித்துக்களாய் உபாயாந்தரகந்தாஸஹரா யிருக்கு மதிகாரிகளுக்கு இது இருக்கவிருக்க என்செய்யத் தேடுகிறதோ! என்னும் பயத்தை விளைக்குமதா யிருக்குமென்றபடி.

**விளக்கம்** - உயர்ந்த பிறவி போன்ற பலவற்றால் அஹங்காரம் கொண்டு, ஆத்மா ஸ்வரூபம் அழிவதற்குக் காரணமாக இந்தச் சரீரம் உள்ளது; ஆகவே தாழ்ந்ததாக உள்ள இந்தச் சரீரம், மிகவும் உயர்ந்தது என்று எண்ணி கேள்வி கேட்கப்பட்டது (சூர்ணை 210). உயர்வாக இல்லாத ஒன்றை உயர்ந்தது என்று எண்ணிய காரணத்தால் மட்டுமே இந்தக் கேள்வி கேட்கப்பட்டது என்பதை உணர்த்தும்விதமாக "உத்க்ருஷ்டமாக ப்ரமித்த ஜன்மம்" என்றார். " ப்ரம்ச ஸம்பாவனை" என்பது என்ன? கர்மம், ஞானம், பக்தி போன்ற உபாயங்களில் ஈடுபடுவதன் காரணமாக, மற்ற உபாயங்களில் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதான தகுதி தனக்கு உள்ளதாக எண்ணி மயங்குகிறான்; இதற்குக் காரணமாக சரீரம் உள்ளது (அதாவது உயர்ந்த பிறவியில் பிறந்த ஒருவன், தனக்குத் தகுதி இல்லாத பல உபாயங்களைக் கைக்கொள்ள முயல்வான் என்று கருத்து) "சரீரேச என்கிறபடியே பய ஜநகம்" என்பதால் என்ன கூறப்படுகிறது? ஜிதந்தே ஸ்தோத்ரம் – காலேஷ்வபிச ஸர்வேஷு - அனைத்து காலங்களைப் பார்த்தாலும், புண்ணியமான இடங்களைப் பார்த்தாலும், எனது சரீரத்தைப் பார்த்தாலும் எனக்கு அச்சம் ஏற்படுகிறது - என்று தொடங்கி, மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளத் தகுதி உள்ளவை என்பதாலேயே ஒரு சில காரணங்களைக் காணும்போது பயம் ஏற்படுகிறது என்று கூறப்பட்டது; இவற்றுள் மிகவும் முக்கியமான காரணம் அல்லது முதன்மையான காரணம் என்று - சரீரேச வர்த்ததே மே மஹத்பயம் – சரீரத்தைக் காணும்போது எனக்கு மிகவும் அச்சம் ஏற்படுகிறது - என்று கூறப்பட்டது; இதன் மூலம் ஆத்மாவின் ஸ்வரூபம் எத்தகையது என்பதை உள்ளது உள்ளபடி அறிந்தவர்களாகவும், மற்ற உபாயங்கள் எதனையும் சற்றும் பொறுத்துக் கொள்ள இயலாமல் உள்ளவர்களாகவும் இருப்பவர்களுக்குக்கூட, "இந்தச் சரீரம் தொடரத்தொடர என்ன ஆகுமோ?", என்று அச்சத்தை ஏற்படுத்துவதாக இந்தச் சரீரம் உள்ளது என்று கருத்து.

213. அதுக்கு ஸ்வரூபப்ராப்தமான நைச்யம் பாவிக்க வேணும்.

**அவதாரிகை** - இன்னமு மிதுக்கொரு தோஷமருளிச்செய்கிறார் (அதுக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – மேலும் ஒரு தோஷத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (அதுக்கு) என்று – கீழ்ச்சொன்ன ஜந்மத்தைப் பராமர்சிக்கிறது. (ஸ்வரூப ப்ராப்தமான நைச்யம் பாவிக்கவேணும்) என்றது – பாகவதானுவர்த்தநாதிகளில் வந்தால் சேஷத்வமாகிற ஸ்வரூபத்துக்குத் தகுதியான தாழ்ச்சி, பிறர் செய்கிறது கண்டநுகரித்துக் கற்கவேணுமென்றபடி.

**விளக்கம்** - “அதுக்கு” என்ற பதம் கடந்த சூர்ணைகளில் கூறப்பட்ட பிறவியை உணர்த்துகிறது. “ஸ்வரூப ப்ராப்தமான நைச்யம் பாவிக்கவேணும்” என்பது என்ன? பாகவதர்களுக்கு ஏற்ற கைங்கர்யம் செய்யவேண்டும் என்னும்போது, தனது அடிமைத்தனத்திற்கே உரிய ஸ்வரூபத்திற்கு ஏற்றதான தாழ்மை உண்டாகவேண்டும்; அவற்றை மற்ற பாகவதர்கள் செய்வதைப் பார்த்து, கற்றுக் கொள்ளவேண்டும் (அதாவது இத்தகைய தாழ்வு என்ற சிந்தனை இயற்கையாகவே இவனுக்கு இருப்பதில்லை, மேலும் இந்தத் தாழ்வு தனக்கு உள்ளதாக ஒரு சிலர் போலியாகக் காட்டிக்கொள்ளக்கூடும். இந்தக் காரணங்களால் தோஷம் உள்ளது என்றுகருத்து).

214. அபக்ருஷ்டமாக ப்ரமித்த உத்க்ருஷ்ட ஜந்மத்துக்கு இரண்டு தோஷமுமில்லை.

**அவதாரிகை** – ஏதத்ப்ரதிகோடியான ஜந்மத்தினுடைய தோஷாபாவத்தை யருளிச் செய்கிறார் (அபக்ருஷ்டமாக) என்று தொடங்கி.

**விளக்கம்** – மேலே கூறப்பட்டதற்கு மாறாக உள்ளதான, “இந்தப்பிறவி தாழ்ந்தது” என்று மயங்கிய பிறவிக்கு, மேலே கூறப்பட்ட தோஷங்கள் இல்லை என்று அருளிச்செய்கிறார் (அதாவது பிறப்பாலும், ஞானத்தாலும் உண்மையாகவே உயர்ந்து காணப்படும் ஒரு பிறவியை தாழ்ந்ததே என்று எண்ணிக் கொள்பவர்களுக்கு இந்தத் தோஷம் இல்லை).

**வ்யாக்யானம்** – ஆபிஜாத்யாதிகளால் வருமஹங்கார யோக்யதை யின்றிக்கே சேஷத்வாநு கூலமாயிருக்கையாலே, உத்க்ருஷ்டமாயிருக்கிறவித்தை அபக்ருஷ்டமாக நினைத்ததும் அதஸ்மிம்ஸ்தத் புத்தியென்னுமிடந் தோற்ற (அபக்ருஷ்டமாக ப்ரமித்த உத்க்ருஷ்ட ஜந்மம்) என்கிறார். (இரண்டு தோஷமுமில்லை) என்றது ப்ரம்ச ஸம்பாவநையாலே வரும் பயாஜநகத்வமும் ஸ்வரூப ப்ராப்தமான நைச்யம் பாவிக்க வேண்டுகையுமாகிற தோஷ த்வயமுமில்லை யென்றபடி.

**விளக்கம்** - உயர்ந்த பிறவி, ஆசாரம் போன்றவற்றால் ஏற்படக்கூடிய அஹங்காரம் உண்டாவதற்கு வழி இல்லாமல், ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றதான அடிமைத்தனத்துடன் இருந்தால், அந்தப் பிறவி உண்மையிலேயே உயர்ந்த ஒன்றே ஆகும். ஆனால் அப்படிப்பட்ட பிறவியைத் தாழ்ந்த ஒன்றாக எண்ணுதல் என்பதும் தவறான ஞானம் என்பதை உணர்ந்தும்விதமாக "அபக்ருஷ்டமாக ப்ரமித்த உத்க்ருஷ்ட ஜந்மம்" என்றார். " இரண்டு தோஷமுமில்லை" என்பது என்ன? கடந்த சூர்ணையில் கூறப்பட்ட நழுவுதல் என்பதற்குக் காரணமாக உள்ள பயத்தை ஏற்படுத்துவதும், ஸ்வரூபத்துடன் கூடியதான தாழ்வை எப்போதும் எண்ணியபடி இருக்கவேண்டும் என்பதான இரண்டு தோஷங்களும் இல்லை என்று பொருள் (அதாவது தனக்குத் தகுதி இல்லாத உபாயங்களைக் கைக்கொள்வதால் தான் நழுவிவிடுவோமோ என்னும் அச்சம் மற்றும் தன்னுடைய தாழ்வை விண்ணப்பிக்க வேண்டும்படியான நிலை ஆகிய இரண்டும் இவர்களுக்கு இல்லை).

215. நைச்யம் ஜன்மஸித்தம்.

**அவதாரிகை** - ப்ரம்சஸம்பாவநையன்றோ இல்லாதது, நைச்ய பாவநை யில்லையோ வென்ன வருளிச்செய்கிறார் (நைச்யம் ஜந்ம ஸித்தம்) என்று தொடங்கி.

**விளக்கம்** – "நமக்குத் தகுதி அல்லாத உபாயங்களைக் கைக் கொள்கிறோம்" என்ற அச்சம் அல்லவோ தாழ்ந்த பிறவிகளுக்கு இல்லாத ஒன்றாக உள்ளது? தாழ்வை எண்ணியபடி இருத்தல் வேண்டும் என்று எண்ணம் கூடவா அவர்களுக்கு இயற்கையில் இல்லை என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது பாகவதாநுவர்த்தநாதிகளுக் குறுப்பான தாழ்ச்சி பிறந்துடைமை யாயிருக்கையாலே பாவிக்கவேண்டாதே பள்ளமடையா யிருக்குமென்றபடி.

**விளக்கம்** – பாகவதர்களுக்குக் கைங்கர்யம் செய்து, அவர்களுக்கு ஏற்றபடி நடத்தல் என்பது போன்ற செயல்களுக்குக் காரணமான தாழ்ச்சி என்பது இவர்களுக்கு (தாழ்ந்தவர்கள் என்று தவறாக மயங்கிய உயர்ந்தவர்கள்) பிறவியிலேயே ஏற்பட்ட ஒன்று; ஆகவே இவர்களின் தாழ்ச்சி என்பது நீரை மேட்டிலிருத்து பள்ளத்திற்கு பாயச்செய்வது என்னும் செயல் எளிதாக உள்ளது போன்று, இவர்களுக்கு எளிதாகவே அமைந்துவிடும்.

216. ஆகையாலே உத்க்ருஷ்ட ஜந்மமே ச்ரேஷ்டம்.

**அவதாரிகை** - இவ்வர்த்தத்தை நிகமிக்கிறார் (ஆகையாலே) என்று தொடங்கி.

**விளக்கம்** – இதுவரை கூறிவந்ததை நிறைவு செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஆகையால்) என்றது, இப்படி அது ஸதோஷமும் இது நிர்தோஷமுமாகை யாலென்றபடி. (உத்க்ருஷ்டஜந்மமே ச்ரேஷ்டம்) என்றது, சேஷத்வோசிதமாய்க் கொண்டு உத்க்ருஷ்டமாயிருக்கிற விந்த ஜந்மமே தததுசித ஜந்மத்தைப்பற்ற ச்ரேஷ்டமென்றபடி.

**விளக்கம்** – "ஆகையால்" என்பதன் மூலம் பிறப்பினால் கூறப்படும் உயர்வு என்பது தோஷம் கொண்டது என்றும், பிறப்பினால் தாழ்ச்சி என்று கூறுவதும் தோஷம் கொண்டது என்றும் உள்ளதன் காரணமாக – என்று உணர்த்துகிறார். "உத்க்ருஷ்டஜந்மமே ச்ரேஷ்டம்" என்பது என்ன? (கடந்த வரியில் உள்ள "உள்ளதன் காரணமாக" என்று தொடங்கிப் படிக்கவும்) அடிமைத்தனத்துடன் கூடியதாக, உண்மையாகிய உயர்பிறவி என்றுள்ள தாழ்ந்த குலத்தில் பிறத்தல் என்பது இப்படிப்பட்ட மேன்மை அற்றதான உயர்ந்த குலத்தில் பிறப்பதைக் காட்டிலும் சிறந்தது.

217. "ச்வபசோபி மஹீபால".

**அவதாரிகை** - இவ்வர்த்தத்துக்கு ப்ரமாணங் காட்டுகிறார் (ச்வபசோபி மஹீபால) என்று தொடங்கி.

**பொருள்** - கடந்த சூர்ணையில் அருளிச்செய்ததற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம்** – ”ச்வபசோபி மஹீபால விஷ்ணு பக்தோ த்விஜாதிக: விஷ்ணுபக்தி விஹீநஸ்து யதிச்ச ச்வபசாதம:” எத்தனையேனும் நிக்ருஷ்ட ஜந்மாவாயிருந்தா னேயாகிலும், பகவத் பக்தனானவன் த்விஜனிற்காட்டில் அதிகன்; உத்க்ருஷ்ட ஜந்மாவானவளவன்றிக்கே உத்தமாச்ரமியுமா யிருந்தானேயாகிலும், பகவத் பக்தி ஹீநனானவன் ச்வபசனிற் காட்டில் அதமனென்று, வர்ணாச்ரமங்களில் சரக்கறுத்து பகவத்ஸம்பந்தமே உத்கர்ஷ ஹேதுவாகச் சொல்லுகையாலே, ப்ரம்சஸம்பாவநாதி களாலே தத்ஸம்பந்த விரோதியான ஜந்மத்திற்காட்டில் ததநுரூபமான ஜந்மமே ச்ரேஷ்டமென்று கருத்து. இங்ஙனன்றாகில், கீழ்ச்சொன்ன வர்த்தத்துக்கு இது ப்ரமாணமாக மாட்டாதிறே.

**விளக்கம்** - ஸ்ரீமத்பாகவதம் – ச்வபசோபி மஹீபால விஷ்ணு பக்தோ த்விஜாதிக: விஷ்ணுபக்தி விஹீநஸ்து யதிச்ச ச்வபசாதம: - அரசே! மஹாவிஷ்ணுவிடம் பக்தி கொண்ட ஒருவன் நாய் இறைச்சி உண்பவன் என்றாலும், அவன் அந்தணனைக் காட்டிலும் சிறந்தவன்; மஹாவிஷ்ணுவிடம் பக்தி இல்லாத ஒருவன் அந்தண ஸந்யாஸியாக இருந்தாலும் மேலே கூறப்பட்டவனைக் காட்டிலும் தாழ்ந்தவன் – என்று கூறியது. அதாவது, ஒருவன் எத்தனை தாழ்வான பிறவியைக் கொண்டிருந்தாலும் அவன் ஸர்வேச்வரனிடம் பக்தி கொண்டவன் என்றால், இரண்டு பிறப்பு உடையவன் என்று கூறப்படும் அந்தணனைக் காட்டிலும் உயர்ந்தவன் ஆகிறான். உயர்ந்த பிறவி மட்டும் அல்லாமல், மிகவும் உயர்ந்த வர்ணாச்ரமமான ஸந்யாஸியாக ஒருவன் இருந்தபோதிலும், அவன் பகவத்பக்தி அற்றவனாக இருந்தால், அவன் நாய் இறைச்சி உண்பவனைக் காட்டிலும் தாழ்ந்தவன் ஆகிறான் – அதாவது வர்ணாச்ரமங்கள் என்னும் உயர்த்தியைக் காட்டிலும் பகவத்ஸம்பந்தமே மேலான உயர்த்தி பெறக் காரணம் எனப்பட்டது. தனக்கு ஏற்புடையதாக இல்லாத உபாயம் போன்றவற்றைக் கைக்கொண்டு, அதன் மூலம் தன்னுடைய நிலையில் இருந்து நழுவுகின்ற அபாயம் ஏற்படும்படியாகச் செய்து கொள்ளுதல் என்பது போன்றதான நிலை, பகவத்ஸம்பந்தத்திற்கு விரோதியாக உள்ள பிறவி என்றே ஆகிறது. இத்தகைய பிறவியைக் காட்டிலும் பகவத்ஸம்பத்தத்திற்குத் தகுதியான பிறவியே உயர்ந்தது என்று கருத்து. இப்படிக் கொள்ளவில்லை என்றால், கடந்த சூர்ணையில் கூறப்பட்ட கருத்துக்கு இது ப்ரமாணம் ஆகாது அல்லவோ?

218. நிக்ருஷ்ட ஜந்மத்தால் வந்த தோஷம் சமிப்பது விலக்ஷண ஸம்பந்தத்தாலே.

**அவதாரிகை** - ஆக, நிக்ருஷ்டோத்க்ருஷ்ட ஜந்மங்களின்னதென்று நிச்சயிக்கப்பட்டது கீழ்; அதில் நிக்ருஷ்ட ஜந்மத்தால் வந்த தோஷம் சமிப்பதெத்தாலேயென்ன வருளிச் செய்கிறார் மேல் (நிக்ருஷ்ட) இத்யாதியாலே.

**பொருள்** - தாழ்ந்த ஜன்மம் எது என்றும், உயர்ந்த ஜன்மம் எது என்றும் கடந்த சில சூர்ணைகளில் உறுதி செய்யப்பட்டது. அப்படியாக உள்ள பிறவுகளில், தாழ்ந்த பிறப்பு மூலம் ஏற்படும் தோஷம் எவ்விதம் நீங்கும் என்ற கேள்விக்கான விடையை இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அஹங்கார ஹேதுதயா நிக்ருஷ்டமான ஜந்மமடியாக வந்த நைச்யம் பாவிக்க வேண்டுகை முதலான தோஷம் மறுவலிடாதபடி மாறுவது, ஜந்மஸித்தமான நைச்யத்தையுடையராய் உபாயாந்தராந்வயயோக்யதா கந்த ரஹிதரா யிருக்கும் விலக்ஷணாதிகாரிகளோடுண்டான சேஷத்வரூப ஸம்பந்தத்தாலே யென்கை.

**விளக்கம்** - அஹங்காரத்தின் விளைவால் (அல்லது அஹங்காரம் ஏற்படக் காரணமாக உள்ளதால்), உண்மையாகவே தாழ்ந்த அந்தணப்பிறவி உள்ளவர்கள், தங்களுக்குத் தாழ்வை செயற்கையாக உண்டாக்கிக் கொள்ளுதல் போன்ற தோஷங்கள் ஏற்படாமல் நீக்குவது எப்படி என்றால் - பிறப்பிலேயே ஏற்பட்ட தாழ்வைக் கொண்டவர்களாக, கர்மம்-ஞானம்-பக்தி போன்ற எந்தவிதமான உபாயங்களையும் கைக்கொள்ளத் தகுதி அற்றவர்களாக உள்ள மிகவும் சிறந்த பாகவதர்களின் அடிமை என்ற தொடர்பு மூலமே நீங்கும் என்று கொள்ளவேண்டும்.

219. ஸம்பந்தத்துக்கு யோக்யதை யுண்டாம்போது ஜன்மக்தொத்தை போகவேணும்.

**அவதாரிகை** - தத்ஸம்பந்தயோக்யதை ஸம்பவிக்கும்படி யென்னென்ன வருளிச் செய்கிறார் (ஸம்பந்தத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – அப்படிப்பட்ட மேன்மையான சிறந்த பாகவதர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும்படியான தகுதி எவ்விதம் உண்டாகும் என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அந்த விலக்ஷணரோட்டை ஸம்பந்தத்துக்கு அர்ஹதையிவனுக் குண்டாம்போது, தன்னுடைய ஜந்மகதமான கொத்தை கழியவேணுமென்றபடி.

**விளக்கம்** - அப்படிப்பட்ட உயர்ந்த பாகவதர்களுடனான ஸம்பந்தம் ஏற்படுவதற்கு, உயர்பிறவியில் பிறந்தான் என்று எண்ணப்படுகின்ற இவனுடைய பிறவி காரணமாக ஏற்படும் தோஷம் நீங்கவேண்டும் (இங்கு தோஷம் என்பது அஹங்காரம் போன்றவை).

220. ஜந்மத்துக்குக் கொத்தையும் அதுக்குப் பரிஹாரமும் “பழுதிலா வொழுகல்” என்கிற பாட்டிலே யருளிச்செய்தார்.

**அவதாரிகை** – ஜந்மத்துக்குக் கொத்தையேது? தத்பரிஹாரமேதென்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் (ஜந்மத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - பிறவிக்கு ஏற்படும் தோஷம் என்ன? அந்த தோஷம் நீங்குவதற்கான பரிகாரம் என்ன? இந்தக் கேள்விகளுக்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, மயர்வற மதிநல மருளப்பெற்று தத்வவிதக்ரேஸரராய் ததீய சேஷத்வ ஸீமாபூமியான ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார், “பழுதிலா வொழுகல்” இத்யாதியாலே, ப்ரஹ்மா தொடங்கி தங்களளவும் வர நெடுகப்போருகிற வம்ச ப்ரவாஹத்திலொரு தோஷமின்றிக்கேயிருக்குமவர்களாய் பலராயிருக்கிற சதுர்வேதிகாள்! இதில் கீழ்ப்பட்டதில்லையென்னும் நிஹீந குலத்திலே பிறந்தார்களேயாகிலும், என்னோடுண்டான வஸாதாரண ஸம்பந்தத்தையறிந்து அந்த ஜ்ஞாநாநுரூபமான ஸ்வாசாரத்தையுடையராகில், நீங்களவர்கள் காலிலே விழுந்து ஆராதியுங்கோள். அவர்களுங்கள் பக்கலிலே ஜ்ஞாநாபேக்ஷை பண்ணில் நீங்களாதரித்துச் சொல்லுங்கோள். அவர்கள் பகவத் ஜ்ஞாநத்தை யுங்களுக்கு ப்ரஸாதிக்கில், கேட்டு க்ருதார்த்தராகுங்கொள். எனக்கு மேல் பூஜ்யரில்லாமையாலே என்மாத்ரமாகிலு மவர்களை யாராதித்து நல்வழி போகுங்கொள் என்று இந்த பரமரஹஸ்யத்தை, “பத்தி ரஷ்டவிதாஹ் யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே, தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதாஹ்யஹம்” என்று – பரமாப்தரான தேவரருளிச் செய்த பின்பு இதிலொரு ஸம்சயமுண்டோ? இப்படி யுபதேச மாத்ரமாய்ப் போகாதே கோயிலிலே வந்தருளி லோகஸாரங்கமஹாமுநிகள் தலையிலே திருப்பாணாழ்வாரை வைத்து இவ்வர்த்தத்தை வ்யாபித்துக் காட்டிற்றிலீரோவென்ன; இப்பாட்டிலே அபிஜநாத்யபிமாந ஜந்மக்கொத்தை அந்த துரபிமாநமில்லாத விலக்ஷணரான ததீயர்களளவில் பண்ணுமநுவர்த்தந விசேஷ மதுக்குப் பரிஹாரமென்று ஸுவ்யக்தமாக வருளிச்செய்தாரென்கை.

**விளக்கம்** - மயர்வற மதிநலம் அருளப்பெற்று, அனைத்துவிதமான தத்துவங்களையும் அவற்றின் தன்மைகளையும் உள்ளதுஉள்ளபடி அறிந்தவர்களின் தலைவராக உள்ளவரும், அடியார்களுக்கு அடிமையாக இருத்தல் என்ற தன்மையின் எல்லையாக உள்ளவரும் ஆகிய தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலையில் (42) – பழுதிலாவொழுகல் – என்று அருளிச்செய்தமை காண்க. இந்தப் பாசுரத்தில் ஆழ்வார் உரைப்பது என்னவென்றால் – நான்முகன் தொடக்கமாக உங்கள் முடிய உள்ள நீண்ட வம்சப்பரம்பரையில் ஒருவிதமான தோஷமும் அற்றவர்களாகவும், பலராக உள்ளவர்களாகவும் இருக்கின்ற நான்கு வேதமும் கற்றவர்களே! இவர்கள் எடுத்துள்ள இந்தப் பிறவியைக் காட்டிலும் தாழ்ந்த பிறவி வேறு ஏதும் இல்லை என்று கூறும்படியான தாழ்ந்த பிறப்பு கொண்டவர்கள் என்றாலும், அவர்களுக்கு என்னுடன் (ஸர்வேச்வரன் தன்னைக் கூறிக் கொள்கிறான்) உள்ள தொடர்பை அறிந்துகொண்டு, அந்த ஞானத்திற்கு ஏற்றபடியான ஒழுக்கத்துடன் இருந்தார்கள் என்றால், நீங்கள் அவர்கள் கால்களில் விழுந்து வணங்குவீர்களாக. அவர்கள் உங்களிடம் இருந்து ஏதேனும் அறிந்து கொள்ளவேண்டும் என்று விருப்பினால், நீங்கள் அதனை ஆசையுடன் உரைப்பீகளாக. அவர்கள் ஸர்வேச்வரனாகிய என்னைப் பற்றிய ஞானத்தை உங்களுக்கு உபதேசம் செய்ய எண்ணினால், நீங்கள் அந்த உபதேசத்தைக் கேட்டுப் பயன் பெற்றவர்கள் ஆகுங்கள். என்னைக் காட்டிலும் ஆராதித்து வணங்கத்தக்க உயர்ந்தவர்கள் வேறு யாரும் இல்லை என்பதால், என் அளவிற்கு அவர்களை ஆராதித்து நல்லவழியைத் தேடுவீர்களாக – என்னும் உயர்ந்த இந்த ரஹஸ்யத்தைக் கருடபுராணம் – பத்தி ரஷ்டவிதாஹ் யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே, தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதாஹ்யஹம் - எட்டுவிதமான பக்தியானது மிகவும் தாழ்ந்த குலத்தில் பிறந்த ஒருவனுக்கு உள்ளது என்றால், அவனுக்கு அனைத்து சாஸ்த்ரங்களையும் உபதேசம் செய்யலாம்; நான் எவ்விதம் வணங்கத் தக்கவனோ அதே போன்று அவனும் வணங்கத்தக்கவன் – என்றது; இதனையே நான் (தொண்டரடிப்பொடியாழ்வார் கூறிக்கொள்கிறார்) மிகவும் நம்புகின்றவர்களில் உயர்ந்தவனாகிய ஸ்ரீரங்கநாதனான நீயே அருளிச்செய்த பின்னர் இந்த விஷயத்தில் ஏதேனும் சந்தேகம் ஏற்படுமோ? இவ்விதம் உபதேசம் செய்தது மட்டும் அல்லாமல், திருவரங்கம் பெரியகோயிலில் வந்து எழுந்தருளி, லோகஸாரங்கமஹாமுநிகள் தலையில் திருப்பாணாழ்வாரை எழுந்தருளச்செய்து, இந்தக் கூற்றின் உண்மையைச் செயல் அளவில் நிகழ்த்தியும் காட்டினாய் அல்லவோ? - என்று அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில், “உயர்ந்த குலப்பிறவி போன்றவற்றால் ஏற்படும் அஹங்காரம் என்பதே தோஷம் ஆகும்.

அத்தகைய அஹங்காரம் இல்லாத மேன்மையான பாகவதர்களுக்குச் செய்யப்படும் கைங்கர்யம் என்பதே அதற்குப் பரிகாரம்", என்பதைத் தெளிவாக அருளிச்செய்தார்.

221. வேதகப்பொன் போலே யிவர்களோட்டை ஸம்பந்தம்.

**அவதாரிகை** - ஏவம்பூதமான ஜந்மக்கொத்தை கழிந்து விலக்ஷணரோடே ஸம்பந்த முண்டாகவே யிவனும் விலக்ஷணனாய் விடுமோவென்ன வருளிச்செய்கிறார் (வேதகப்பொன்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாக இவனுக்குப் பிறவி காரணமாக ஏற்பட்ட தோஷம் நீங்கி, மேன்மையானவன் ஆகிவிடுவானோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - வேதகமென்கிறவித்தை, வேதகமென்று த்ராவிடோக்தியாலே யருளிச் செய்கிறார். (வேதகப்பொன்னாவது) அநேக ஸித்தௌஷதங்களியிட்டுப் பலகாலுருக்கி குளிகையாகப் பண்ணி ரஸவாதிகள் கையிலிருக்கும் ஸ்பர்சவேதியான பொன். அது ஸ்பர்ச மாத்ரத்தாலே இரும்பைப் பொன்னாக்குமாப்போலேயாய்த்து, ஜந்மஸித்தமான நைச்யாதிகளையுடைய விலக்ஷணரான விவர்களோட்டை ஸம்பந்தம் நிக்ருஷ்ட ஜந்மத்தால் வந்த தோஷத்தைப் போக்கி இவனையும் விலக்ஷணனாக்கிவிடும்படி.

**விளக்கம்** - வேதகம் என்பதான வடமொழிச் சொல்லை வேதகம் என்று தமிழ்ப்படுத்தி அருளிச்செய்கிறார். வேதகப்பொன் என்பது என்ன? பலவிதமான சித்த மருந்துகளைச் சேர்த்து, பலமுறை உருக்கி, அதனைக் குளிகை போன்று ஆக்கி, ரஸவாதிகள் தங்கள் கைகளில் வைத்திருப்பதான தொட்டவுடன் இரும்பையும் தங்கமாக்கக் கூடிய பொன் என்பதே வேதகப்பொன் எனப்படும். அத்தகைய வேதகப்பொன் என்பது இரும்பைத் தொட்டவுடன் அதனைப் பொன்னாக்கும் தன்மை கொண்டது ஆகும். அப்படி இரும்பும் பொன்னாவது போன்று, பிறப்பிலேயே தங்களுடைய தாழ்வை அறிந்தவர்களாக மேன்மையுடன் விளங்கும் பாகவதர்களின் ஸம்பந்தம் என்பது, அந்தணப்பிறவியாக உள்ளபோதிலும் அஹங்காரம் போன்றவற்றால் தாழ்ந்த பிறவி என்றே கருதும்படியாக உள்ள பிறவியின் தோஷத்தை நீக்கி, அவனையும் மேன்மையானவன் என்னும்படி மாற்றிவிடும்.

222. இவர்கள் பக்கல் ஸாம்யபுத்தியு மாதிக்யபுத்தியும் நடக்கவேணும்.

**அவதாரிகை** - இப்படி ஸ்வஸம்பந்தத்தாலே யித்தலையில் தோஷத்தைக் கழித்து ஸ்வஸாம்யாபத்தியைத் தரும் விலக்ஷணரானவர்களை எங்ஙனே ப்ரதிபத்தி பண்ணிருக்க வேணுமென்ன வருளிச்செய்கிறார்.

**விளக்கம்** – இப்படியாகத் தங்களது ஸம்பந்தம் என்பதன் மூலம் அந்தணர்களின் தோஷத்தைக் கழித்து, தங்களுக்கு ஒத்த மேன்மையைக் கிட்டச் செய்கின்ற, மேன்மையான பாகவதர்களை எவ்விதம் ஒருவன் எண்ணவேண்டும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இவர்கள் பக்கல் ஸாம்யபுத்தியும் ஆதிக்ய புத்தியும் நடக்கவேணும்) என்று.

**விளக்கம்** - அப்படிப்பட்டவர்கள் தங்களுக்குப் பிறவியால் சமம் ஆனவர்கள் என்றும், தங்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்றும் எண்ணவேண்டும்.

223. அதாவது, ஆசார்யதுல்யரென்றும் ஸம்ஸாரிகளிலும் தன்னிலு மீச்வரனிலும் அதிகரென்றும் நினைக்கை.

**அவதாரிகை** - இத்தை விவரிக்கிறார் (அதாவது) என்று தொடங்கி.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் கூறப்பட்டதை விவரிக்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஆசார்ய துல்யரென்று நினைக்கையாவது) “குருரேவ பரம்ப்ரஹ்ம” இத்யாதிப்படியே தனக்கு ஸர்வப்ரகாரோத்தேச்யனான ஆசார்யனோடு இவர்களை ஸமராக ப்ரதிபத்தி பண்ணுகை. (ஸம்ஸாரிகளிலதிகராக நினைக்கையாவது) - ஜாத்யாதிகளையிட்டு ஸம்ஸாரிகளோடு ஸமபுத்தி பண்ணாதே, ஜ்ஞாநாதிகளால் வந்த வ்யாவ்ருத்தியாலே தததிகரென்று ப்ரதிபத்தி பண்ணுகை. (தன்னிலதிகரென்று நினைக்கையாவது) ஸம்ஸாரிகளில் வ்யாவ்ருத்தி தனக்குமுண்டாகையாலே அத்தையிட்டுத் தன்னோடொக்க நினைத்திருக்கையன்றிக்கே, தனக்கு சேஷிகளான

ஆகாரத்தாலே தன்னிலதிகரென்று ப்ரதிபத்தி பண்ணுகை. (ஈச்வரனிலதிகரென்று நினைக்கையாவது) – சேஷித்வத்தையிட்டு நமக்கவனு மிவர்களு மொக்குமென்றிராதே கர்மாநுகுணமாக லீலையிலும் விநியோகங் கொள்ளக்கடவனாய் ஸ்வசரணகமல ஸமாச்ரயண தசையில் புருஷகாரம் வேண்டும்படியாய் உகந்தருளின நிலங்களிலே ஸந்நிஹிதனாயிருக்கச் செய்தேயும் அர்ச்சாவதார ஸமாதியாலே வாய்திறந்தொரு வார்த்தை சொல்லக்கடவனுமன்றிக்கே யிருக்குமவனைப் போலன்றியே, ஸ்வரூபாநு குணமாகவே விநியோகங் கொள்ளுமவர்களாய், ஸ்வாச்ரயணத்தில் புருஷகார நிரபேக்ஷராய், வாய்திறந்து த்யாஜ்யோபாதேயங்களை யுபதேசித்து நோக்கிக் கொண்டு போருமவர்களாகையாலே தததிகரென்று ப்ரதிபத்தி பண்ணுகை.

**விளக்கம்** - "ஆசார்ய துல்யரென்று நினைக்கையாவது": ஸ்ரீஸாத்வத தந்த்ரத்தில் – குருரேவ பரம்ப்ரஹ்ம - ஆசார்யனே பரம்பொருள் - என்று கூறுவதற்கு ஏற்ப அனைத்து வகையிலும் மிகவும் போற்றத்தக்க ஆசார்யனோடு இந்தப் பாகவதர்கள் ஒத்தவர்கள் என்று எண்ணுவதே கூறப்பட்டது. "ஸம்ஸாரிகளிலதிகராக நினைக்கையாவது": அவர்களுடைய பிறவி போன்றவற்றை முன்னிட்டு அவர்களை ஸம்ஸாரிகளுடன் ஒத்தவர்கள் என்று எண்ணாமல், அவர்களுக்கு உள்ள ஞானம் போன்றவை காரணமாக ஸம்ஸாரிகளைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்று எண்ணுவதாகும். "தன்னிலதிகரென்று நினைக்கையாவது": ஸம்ஸாரிகளைக் காட்டிலும் வேறுபாடு என்பது, சிறந்த உள்ள தனக்கும் ஏற்படுவதால், அதன் காரணமாக அவர்கள் தன்னுடன் ஒத்தவர்கள் என்று எண்ணாமல், தனக்கு சேஷியாக உள்ள தன்மையால் தன்னைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்று எண்ணுவதாகும். "ஈச்வரனிலதிகரென்று நினைக்கையாவது": சேஷியாக உள்ள தன்மை காரணமாக ஸர்வேச்வரனும் இவர்களும் ஒத்தவர்கள் என்று எண்ணாமல் ஸர்வேச்வரனைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்று எண்ணவேண்டும். எப்படி? நம்முடைய முன்வினைப்பயன் காரணமாக இந்த லீலாவிபூதியில் நம்மை வைக்கக்கூடியவன், தனது திருவடித்தாமரைகளை ஒருவன் பற்றும்போது அதற்கு சிபாரிசு என்பதான புருஷகாரம் இருக்கவேண்டும் என்று எண்ணுபவன், தான் மிகவும் மகிழ்வுடன் எழுந்தருளியுள்ள திவ்யதேசங்களில் சேதநர்களுக்கு மிகவும் அருகாமையில் உள்ள போதிலும் அர்ச்சாவதாரத்தின் உறுதி காரணமாகத் திருவாய் மலர்ந்து யாரிடமும் ஏதும் பேசாதவன் என்பதான தன்மைகள் கொண்டவனாக ஸர்வேச்வரன் உள்ளான். ஆனால் இவர்கள் இது போன்று இல்லாமல் - தங்கள் ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி நம்மை ஏற்றுக் கொள்பவர்களாகவும், தங்களை அண்டும் விஷயத்திற்காக எந்த ஒரு புருஷகாரத்தையும்

எதிர்பாராமல் உள்ளவர்களாகவும், தங்களது திருவாய் திறந்து நாம் கைக்கொள்ள வேண்டியவை எவை என்றும் கைவிடத்தக்கவை எவை என்றும் உபதேசம் செய்ய வல்லவர்களாகவும் இருந்து நம்மைக் காப்பாற்ற எண்ணுபவர்கள் என்பதால் இவர்கள் அவனைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்று கொள்ளவேண்டும்.

224. ஆசார்யஸாம்யத்துக்கடி ஆசார்யவசனம்.

**அவதாரிகை** – ஆசார்யனோடொரு விஷயத்தையும் ஸமபுத்தி பண்ணுகை அயுக்தமாயிருக்க, ஆசார்ய ஸாம்ய புத்திக்கடியேதென்னு மாகாங்க்ஷையிலே யருளிச் செய்கிறார் (ஆசார்ய) இத்யாதியாலே.

**விளக்கம்** - ஆசார்யனுக்கு ஈடாக வேறு யாரையும் எண்ணுதல் என்பது ஏற்கக்கூடாது ஒன்றாகும். அப்படி உள்ளபோது இவர்கள் ஆசார்யனை ஒத்தவர்கள் என்று எண்ணுவதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஆசார்ய ஸாம்ய ப்ரதிபத்திக்கு மூலம் – ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால் நம்மைக் கண்டாப்போலே காணும், என்று உபதேச ஸமயத்திலே ஆசார்யனருளிச் செய்த வசநமென்கை.

**விளக்கம்** - ஆசார்யனை ஒத்தவர்கள் என்று எண்ணுவதற்கு மூலகாரணம், "ஸ்ரீவைஷ்ணவர்களைக் காணும்போது நம்மைக் (ஆசார்யன் தன்னைக் கூறிக் கொள்ளுதல்) காணுவது போன்று இருத்தல் வேண்டும்", என்று உபதேசம் செய்யும்போது ஆசார்யன் அருளிச்செய்தலே ஆகும்.

225. இப்படி நினையாதொழிகையு மபசாரம்.

**அவதாரிகை** - இப்படி நினையாதபோது வருமநர்த்தமுண்டோ வென்ன வருளிச் செய்கிறார் (இப்படி) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதம் எண்ணாதபோது ஏற்படக்கூடிய தீமை ஏதேனும் உண்டா என்ற சந்தேகத்திற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஜந்மாதிகளை யிட்டு நிகர்ஷபுத்தி பண்ணுகை அபசாரமானாப் போலே, இப்படி கௌரவித்து நினையாதொழிகையும் அபசாரமாய்த் தலைக்கட்டு மென்றபடி.

**விளக்கம்** - பிறப்பு போன்றவற்றை முன்னிட்டு ஸ்ரீவைஷ்ணவர்களைத் தாழ்வாக எண்ணுவது அபசாரம் என்று கூறப்பட்டது. இதே போன்று இவர்களை (ஆசார்யனுக்கு ஒத்தவர்கள் என்று) எண்ணாமல் இருப்பது அபசாரமே ஆகிறது.

226. இவ்வர்த்தம் இதிஹாஸ புராணங்களிலும், பயிலுஞ் சுடரொளி நெடுமாற் கடிமையிலும் கண்சோர வெங்குருதியிலும் நண்ணாதவாளவுணரிலும் தேட்டருந் திறல் தேனிலும், மேம்பொருளுக்கு மேலில் பாட்டுக்களிலும் விசதமாகக் காணலாம்.

**அவதாரிகை** – இப்படியிந்த பாகவதவைபவம் ஆப்தவசநங்களில் விசதமாகக் காணலாம் இடங்களுண்டோவென்ன வருளிச்செய்கிறார் (இவ்வர்த்த மிதிஹாஸ புராணங்களிலும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதமாக உள்ள பாகவதர்களின் மேன்மை குறித்து நம்பத்தகுந்தவர்களின் வாக்கியங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன என்றுள்ள இடங்களைக் காண்பிக்க இயலுமா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இவ்வர்த்தம்) என்று - கீழ் விஸ்தரேணோக்தமான பாகவத வைபவத்தைப் பராமர்சிக்கிறது. மஹாபாரதத்திலே, "மத் பக்தம் சூத்ர ஸாமாந்யா தவமந்யந்தி யே நரா: நரகேஷ்வவதிஷ்டந்தி வர்ஷகோடீர் நராதமா:; சண்டாளமபி மத்பக்தம் நாவமந்யேத புத்திமாந், அவமாநாத் பதத்யேவ ரௌரவே நரகே ஸ:" இத்யாதியாலும், "நசூத்ரா பகவத் பக்தா விப்ரா பாகவதாஸ் ஸ்ம்ருதா:, ஸர்வ வர்ணேஷு தே சூத்ரா யேஹ்ய பக்தா ஜநார்தநே" இத்யாதியாலும், "மத்பக்த ஜநவாத்ஸல்யம் பூஜாயாஞ்சாநுமோதநம், ஸ்வயமப்யர்ச்சநஞ்சைவ மதர்த்தே டம்ப வர்ஜநம், மத் கதா ச்ரவணே பக்திஸ் ஸ்வர நேத்ராங்க விக்ரியா, மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி; பக்தி ரஷ்டவிதாஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே ஸவிப்ரேந்த்ரோ முநிச் ச்ரீமாந் ஸயதிஸ் ஸச பண்டித:, நமே பூஜ்யச் சதுர்வேதீ பூஜயந் பக்திவர்ஜித:; ஸ மே பூஜ்யஸ் ஸதாசாஸௌ மத்பக்தச் ச்வபசோபி ய:, தஸ்மை தேயம் ததோக்ராஹ்யம் ஸசபூஜ்யோ யதாஹ்யஹம்" இத்யாதியாலும் பலவிடங்களிலும் பாகவத வைபவம் ப்ரதிபாதிதம்;

**விளக்கம்** – "இவ்வர்த்தம்" என்பதன் மூலம் கடந்த சூர்ணையில் விரிவாக உரைக்கப்பட்ட பாகவதர்களின் மேன்மை கூறப்பட்டது. மஹாபாரதத்தில் கீழே காண்பிக்கப்பட்டுள்ள பல வரிகளில் பாகவதர்களின் பெருமை கூறப்பட்டுள்ளது:

- மத் பக்தம் சூத்ர ஸாமாந்யா தவமந்யந்தி யே நரா: நரகேஷ்வவதிஷ்டந்தி வர்ஷகோடீர் நராதமா: - எந்த மனிதர்கள் எனது பக்தன் சூத்திரனாக உள்ளதால் அவமானப்படுத்துகிறார்களோ (அல்லது எனது பக்தனைச் சூத்திரனுக்குச் சமானமாக எண்ணியபடி உள்ளார்களோ), அவர்கள் மிகவும் தாழ்ந்தவர்கள் ஆவர்; அவர்கள் கோடிக்கணக்கான வருடங்கள் நரகத்தில் வீழ்வர்.

- சண்டாளமபி மத்பக்தம் நாவமந்யேத புத்திமாந், அவமாநாத் பதத்யேவ ரௌரவே நரகேச ஸ: – என்னுடைய பக்தன் சண்டாளனாகவே இருந்தாலும் அவனை ஞானம் கொண்ட எந்த ஒரு மனிதனும் அவமதித்தல் கூடாது. அவ்விதம் அவமானப்படுத்தினால் அவன் ரௌரவம் என்ற நரகத்தில் விழக்கடவன்.

- நசூத்ரா பகவத் பக்தா விப்ரா பாகவதாஸ் ஸம்ருதா:, ஸர்வ வர்ணேஷு தே சூத்ரா யேஹ்ய பக்தா ஜநார்தநே - ஸர்வேச்வரனின் அடியார்கள் பிறப்பிலேயே சூத்திரர்கள் என்றபோதிலும், அவர்கள் சூத்திரர்கள் அல்லர், அவர்கள் அந்தணர்களை ஒத்தவர்கள் என்று எண்ணப்படவேண்டும். ஆனால் ஜநார்த்தனனிடம் பக்தி அற்ற ஒருவன் எந்தப் பிறவியில் பிறந்துள்ளபோதிலும் அவன் சூத்திரனே ஆவன்.

- மத்பக்த ஜநவாத்ஸல்யம் பூஜாயாஞ்சாநுமோதநம், ஸ்வயமப்யர்ச்சநஞ்சைவ மதர்த்தே டம்ப வர்ஜநம், மத் கதா ச்ரவணே பக்திஸ் ஸ்வர நேத்ராங்க விக்ரியா, மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி; பக்தி ரஷ்டவிதாஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே ஸவிப்ரேந்த்ரோ முநிச் ச்ரீமாந் ஸயதிஸ் ஸச பண்டித:, நமே பூஜ்யச் சதுர்வேதீ பூஜயந் பக்திவர்ஜித:; ஸ மே பூஜ்யஸ் ஸதாசாஸௌ மத்பக்தச் ச்வபசோபி ய:, தஸ்மை தேயம் ததோக்ராஹ்யம் ஸசபூஜ்யோ யதாஹ்யஹம் - என்னுடைய அடியார்களிடம் அன்பு; என்னை ஆராதிப்பதில் மகிழ்ச்சி, நானே திருவாராதனம் செய்யப்பட வேண்டியவன்;

எனக்குக் கைங்கர்யம் செய்யும்போது ஆரவாரம் மற்றும் ஆடம்பரம் இல்லாமை; என் சரிதங்களைக் கேட்பதில் மிகுந்த ஆசை; அவ்விதம் கேட்கும்போது குரல் தழுதழுப்பது, ஆனந்தக்கண்ணீர் பெருகுவது, மயிர்க்கூச்சல் எடுப்பது போன்ற மாற்றங்கள் அடைதல்; எப்போதும் என்னையே நினைத்து த்யானித்தல், என்னை விட்டு வாழ இயலாது என்பதான எட்டுவிதமான பக்தியும் எத்தகைய தாழ்வான ஒருவனிடம் இருந்தாலும் அவன் அந்தணர்களில் உத்தமன், அவனே ஸந்யாஸி, அவனே பண்டிதன் ஆவான். ஆனால் நான்கு வேதங்களை அறிந்துள்ளபோதிலும் என்னிடம் எந்தவிதமான பக்தியும் இன்றி என்னை ஆராதித்தவன் என்றால், அவன் என்னால் விரும்பப்படுபவன் அல்லன். நாய் இறைச்சி உண்பவனாக இருந்தாலும், என்னிடம் ப்ரேமை கொண்டிருந்தால், அவன் எப்போதும் என்னால் விரும்பப்படுபவன் ஆவான். இப்படிப்பட்டவனிடமிருந்து ஞானம் பெற்றுக் கொள்ளவேண்டும். என்னைப் போன்றே அவனும் வழிபடத்தக்கவன் ஆவான்.

**வ்யாக்யானம்** - இதிஹாஸோத்தமத்திலே, "சூத்ரம்வா பகவத்பக்தம் நிஷாதம் ச்வபசம் ததா, வீக்ஷதே ஜாதி ஸாமாந்யாத் ஸ யாதி நரகம் நர:" இத்யாதியாலே - பாகவத ப்ரபாவம் ப்ரகீர்த்திதம்; இன்னமு மிதிஹாஸத்திலே பலவிடங்களிலும் - பாகவத மஹாத்ம்ய ப்ரதிபாதநம் வந்தவிடங்களிலே கண்டு கொள்வது;

**விளக்கம்** – இதிஹாஸ உத்தமத்தில் – சூத்ரம்வா பகவத்பக்தம் நிஷாதம் ச்வபசம் ததா, வீக்ஷதே ஜாதி ஸாமாந்யாத் ஸ யாதி நரகம் நர: - ஸர்வேச்வரனுடைய பக்தன் ஒருவன் சூத்திரனாக உள்ளபோதிலும், வேடனாக உள்ளபோதிலும், சண்டாளனாக உள்ளபோதிலும் அவனை யார் ஒருவன் தாழ்ந்த பிறவியாகப் பார்க்கிறானோ அவன் நரகம் செல்வான் – என்றது காண்க. இதன் மூலம் பாகவதர்களின் ப்ரபாவம் வெளிப்படை ஆகிறது. மேலும் இதிஹாஸங்களில் பல இடங்களில் பாகவதர்களின் மாஹாத்ம்யம் குறித்து கூறப்பட்டதைக் கண்டு கொள்க.

**வ்யாக்யானம்** - ஸ்ரீவராஹபுராணத்திலே, "மத்பக்தம் ச்வபசம்வாபி நிந்தாம் குர்வந்தி யே நரா:, பத்மகோடி சதேநாபி நக்ஷமாமி வஸுந்தரே" இத்யாதியாலே – பாகவத வைபவம் ப்ரோக்தம்; ஸ்ரீபாகவதத்திலே, "ச்வபசோபி மஹீபால விஷ்ணுபக்தோ த்விஜாதிக: விஷ்ணுபக்தி விஹீநஸ்து யதிச்ச ச்வபசாதம:". "விப்ராத் த்விஷட்குணயுதாத் அரவிந்தநாப பாதாரவிந்த விமுகாச் ச்வபசம் வரிஷ்டம், மந்யே ததர்ப்பிதமநோ வசநே ஹிதார்த்த

ப்ராண: புநாதி ஸகலம் நது பூரிமாந:" இத்யாதிகளாலே பாகவத வைபவம் பலவிடங்களிலும் அபிஹிதம்; லைங்கத்திலும், "வைஷ்ணவாநாம் விசேஷோஸ்தி விஷ்ணோராயதநம் மஹத் ஜங்கம ஸ்ரீ விமாநாநி ஹ்ருதயாதி மநீஷிணாம். ய: பச்யதி சுபாசாரம் வைஷ்ணவம் வீதகல்மஷம், யஸ்மிந் கஸ்மிந் குடூலஜாதம் ப்ரணமேத் தண்டவத்புவி" இத்யாதியாலே - பாகவத வைபவம் ப்ரதிபாதிதம். இப்படி பாகவத மாஹாத்ம்ய ப்ரதிபாதநம் பல புராணங்களிலுமுண்டாகையாலே, அந்தவந்த ஸ்தலங்களிலே கண்டுகொள்வது;

**விளக்கம்** – ஸ்ரீவராஹபுராணத்தில் - மத்பக்தம் ச்வபசம்வாபி நிந்தாம் குர்வந்தி யே நரா:, பத்மகோடி சதேநாபி நக்ஷமாமி வஸுந்தரே - என்னுடைய பக்தன் ஒருவன் சண்டாளனாகவே உள்ளபோதிலும் அவனை அவமதிப்பவர்களை நான் பலகோடி கல்ப காலங்கள் ஆனாலும் பொறுத்துக் கொள்ளமாட்டேன் – என்பதன் மூலம் பாகவதர்களின் மேன்மை கூறப்பட்டது. ஸ்ரீமத்பாகவதத்தில் – ச்வபசோபி மஹீபால விஷ்ணுபக்தோ த்விஜாதிக: விஷ்ணுபக்தி விஹீநஸ்து யதிச்ச ச்வபசாதம: - அரசனே! விஷ்ணுபக்தி கொண்டவர்கள் நாய் இறைச்சி உண்பவன் என்றாலும், அவன் அந்தணன் ஒருவனைக் காட்டிலும் உயர்ந்தவன்; விஷ்ணுபக்தி அற்ற ஒருவன் உயர்ந்த பிறவியில் பிறந்த ஸந்ந்யாஸி என்றாலும் அவன் நாய் இறைச்சி உண்பவனைக் காட்டிலும் தாழ்ந்தவனே ஆவான் - என்று கூறப்பட்டது. மேலும் ஸ்ரீமத்பாகவதத்தில் - விப்ராத் த்விஷட்குணயுதாத் அரவிந்தநாப பாதாரவிந்த விமுகாச் ச்வபசம் வரிஷ்டம், மந்யே ததர்ப்பிதமநோ வசநே ஹிதார்த்த ப்ராண: புநாதி ஸகலம் நது பூரிமாந: - பத்மநாபன் திருவடிகள் மீது பக்தி இல்லாத ஒருவன் பன்னிரண்டு குணங்களுடன் கூடிய அந்தணன் என்றாலும், அவனைக் காட்டிலும் விஷ்ணுபக்தி கொண்ட நாய் இறைச்சி உண்ணும் சண்டாளன் உயர்ந்தவன் என்றே நான் எண்ணுகிறேன்; இப்படிப்பட்ட சண்டாளன் ஸர்வேச்வரனின் திருவடிகளில் தனது மனம், வாக்கு, சரீரம், ப்ராணன் பலவற்றுடன் உள்ளான் என்பதால் அவன் அனைத்தையும் தூய்மை ஆக்குகிறான்; அஹங்காரத்துடன் கூடிய அந்தணன் இவ்விதம் எதனையும் தூய்மைப்படுத்துவதில்லை - என்று பாகவதர்களின் மேன்மை குறித்து பல இடங்களிலும் உரைக்கப்பட்டது. லைங்க புராணத்தில் – வைஷ்ணவாநாம் விசேஷோஸ்தி விஷ்ணோராயதநம் மஹத் ஜங்கம ஸ்ரீ விமாநாநி ஹ்ருதயாதி மநீஷிணாம் - ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஒரு தனியான சிறப்பு உண்டு; அது என்னவென்றால் அவர்கள் விஷ்ணுவின் இருப்பிடமாக உள்ளனர்; அவர்களில் சிறந்த ஞானம் கொண்டவர்களின் மனம் என்பது நடமாடும் கோவில்கள் என்றே ஆகின்றன - எனப்பட்டது. மேலும்

அதிலேயே – ய: பச்யதி சுபாசாரம் வைஷ்ணவம் வீதகல்மஷம், யஸ்மிந் கஸ்மிந் குடூலஜாதம் ப்ரணமேத் தண்டவத்புவி - சிறந்த ஒழுக்கம் கொண்டவன், எந்தவிதமான குற்றமும் அற்றவன் என்னுபடி உள்ள ஒரு ஸ்ரீவைஷ்ணவன் எந்தக் குலத்தில் பிறந்தவனாக உள்ளபோதிலும், அவனைக் காண்பவன் அவன் முன்பாக ஒரு தடி போன்று தரையில் விழுந்து வணக்கவேண்டும் - போன்ற பல வரிகளால் பாகவதர்களின் மேன்மை கூறப்பட்டது. இப்படியாக பாகவதர்களின் மேன்மை குறித்து பல புராணங்களில், பல இடங்களில் கூறப்பட்டுள்ளதால், அவற்றை அந்தந்த இடங்களில் காண்க.

**வ்யாக்யானம்** – இதிஹாஸாதிகளில் உபாத்த வசநங்களிலே பாகவதர்களை ஜந்மநிரூபேணந அவமதி செய்தால் வருமநர்த்த விசேஷமும், பாகவதரானபோதே யவர்களபக்ருஷ்ட ஜாதீயரல்லர் உத்க்ருஷ்ட ஜாதீயதுல்ய ரென்னுமிடமும், உத்க்ருஷ்ட ஜாதீயரிலும் ச்ரேஷ்டராய் அவர்களுக்கு ஜ்ஞாந ப்ரதாத்ருதயா குருக்களுமாய் பரம சேஷியான ஈச்வரனோபாதி பூஜ்யருமாவர்களென்னுமிடமும், அவர்கள் திறத்தில் அபசாரம் காலதத்த்வமுள்ளதனையுமீச்வரன் பொறானென்னுமிடமும் கரணத்ரய வ்யாபாரத்தோடு அர்த்தத்தோடு ப்ராணாதிகளோடு வாசியற பகவத்விஷயத்திலே ஸமர்ப்பித்து நிரபிமாநராயிருக்குமவர்கள் ஸ்பர்சபாவநரென்னுமிடமும், அவர்களுடைய ஹ்ருதயமீச்வரனுக்கு ஜங்கமவிமாநமென்னுமிடமும், அவர்களைக் கண்டால் தண்டவத் ப்ரணாமம் செய்வானென்னுமிடமும் சொல்லப்பட்டதிறே; இப்படி இதிஹாஸ புராணங்களிலும்.

**விளக்கம்** - மேலே நாம் பார்த்த பலவிதமான இதிஹாஸ புராண ப்ரமாணங்களில் கீழே கூறப்பட்ட பல விஷேஷங்கள் உரைக்கப்பட்டதைக் காண்க:

- பாகவதர்களின் பிறவியைக் கருத்தில் கொண்டு அவர்களைத் தாழ்வாக நினைத்தால் ஏற்படும் தீமை
- பாகவதர்கள் என்று ஆனபோதே அவர்கள் தாழ்ந்தகுலம் அல்லர், அவர்கள் உயர்ந்த குலத்தினர்களுக்கு ஒத்தவர்கள்
- உயர்ந்த குலத்தில் பிறந்தவர்களைக் காட்டிலும் அவர்கள் உயர்ந்தவர்கள் என்பதால், உயர்ந்த குலத்தில் பிறந்தவர்களும் அவர்களிடம் உபதேசம்

பெறுகின்றனர் என்பதால் ஆசார்யர்கள் போன்றும், அனைத்திற்கும் எஜமானனாகிய ஸர்வேச்வரன் போன்றும் வணங்கத்தக்கவர்கள் ஆவர்

- அவர்களிடம் செய்யப்படும் அபசாரம் என்பதை காலம் என்பது உள்ளவரை ஸர்வேச்வரன் பொறுத்துக் கொள்ளமாட்டான்

- மூன்று கரணங்களையும் (மனம், வாக்கு, சரீரம்), செல்வங்களையும், ப்ராணன் போன்ற அனைத்தையும் ஸர்வேச்வரனுக்குச் சமர்பாணம் செய்துவிட்டு, எந்தவிதமான அஹங்காரமும் இல்லாமல் உள்ள இவர்கள், தங்களுடைய தொடுதல் என்பதாலேயே அனைத்தையும் தூய்மைப்படுத்த வல்லவர் ஆவர்

- அவர்களது இதயம் என்பது ஸர்வேச்வரனுக்கு நடமாடும் கோயிலாகவே உள்ளது

- அவர்களைக் கண்டால் தடி போன்று தரையில் விழுந்து வணங்கவேண்டும்

இப்படியாக இதிஹாஸம் மற்றும் புராணங்களில் கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** - நம்மாழ்வார், “பாற்கடல் சேர்ந்த பரமனைப் பயிலுந் திருவுடையார் பயிலும் பிறப்பிடைதோ றெம்மையாளும் பரமர்” என்று தொடங்கி - பகவத் குணசேஷ்டிதாதிகளிலே ப்ரவணரான பாகவதர்களே தமக்கு சேஷிகளென்னுமிடத்தை ப்ரதிபாதித்தருளுகிறவிடத்தில், “யவரேலுமவர்கண்டீர்”, “கும்பி நரகர்களேத்துவரேலு மவர் கண்டீர்”, “எத்தனை நலந்தானிலாத சண்டாள சண்டாளர்களாகிலும்” என்று ஜந்மாதிகளாலெத்தனையேனும் தண்ணியரேயாகிலும் சேஷத்வ விரோதியான ஜந்மாத் யபிமாநமில்லாதவர்கள் கிடீர் நமக்கு மிகவுமுத்தேச்யரென்றருளிச்செய்த “பயிலுஞ் சுடரொளியிலும்”, “கொடு மாவினையே னவனடியாரடியே கூடு மிதுவல்லால் வியன் மூவுலகு பெறினும் விடுமா றென்பதென் னந்தோ” என்று தொடங்கி - பாகவதர்களே தமக்கு பரமப்ராப்யரென்னுமிடத்தை ப்ரதிபாதிக்கிறவளவில், ஜந்ம வ்ருத்தாதி விபாகமின்றிக்கே, “சயமே யடிமை தலைநின்றார்”, “அவனடியார்”, “மணிமலை போல் கிடந்தான் தமர்கள்”, “கோதிலடியார்”, “நீக்கமில்லாவடியார்” என்று – பகவத் ஸௌந்தர்யாதிகளிலே தோற்றிருக்குமாகாரமே யவர்களுக்கு நிரூபகமாக வருளிச்செய்த ”நெடுமாற் கடிமையிலும்”;

**விளக்கம்** – நம்மாழ்வார் திருவாய்மொழியில் (3-7-1) – பாற்கடல் சேர்ந்த பரமனைப் பயிலுந் திருவுடையார் பயிலும் பிறப்பிடைதோ றெம்மையாளும் பரமர் – என்பது தொடக்கமாக ஸர்வேச்வரனின் திருக்கல்யாண குணங்கள் மற்றும் லீலைகள் ஆகியவற்றில் ஈடுபட்டவர்களான பாகவதர்களே தனக்கு எஜமானர்கள் என்பதை அருளிச் செய்கிறார். அப்போது (3-7-1) - யவரேலுமவர்கண்டீர் - என்றும், (3-7-8) – கும்பி நரகர்களேத்துவரேலு மவர் கண்டீர் – என்றும், (3-7-9) – எத்தனை நலந்தானிலாத சண்டாள சண்டாளர்களாகிலும் - என்றும் அருளிச்செய்தார். ஆக "பயிலும் சுடரொளி" என்று திருவாய்மொழி மூலமாக, பிறவி போன்ற பலவற்றாலும் ஒருவன் எத்தனை தாழ்ந்தவன் என்றபோதிலும், தொண்டுகள் செய்வதற்குத் தடையாக வரக்கூடிய பிறவி–ஞானம்–ஒழுக்கம் என்பதால் ஏற்படக்கூடிய கர்வம் மற்றும் அஹங்காரம் அற்றவர்கள் அல்லவோ நமக்கு மிகவும் வேண்டியவர்கள் – என்றார். அடுத்து தனது திருவாய்மொழியில் (8-10-1) - கொடு மாவினையே னவனடியாரடியே கூடு மிதுவல்லால் வியன் மூவுலகு பெறினும் விடுமா றென்பதென் னந்தோ - என்பது தொடக்கமாக பாகவதர்களே, தான் சென்று அடையக்கூடியவர்களில் மிகவும் உயர்ந்தவர்கள் – என்பதை அருளிச்செய்தார். அந்தத் திருவாய்மொழியில் பிறவி, ஒழுக்கம் போன்றவற்றில் வேறுபாடுகள் காணமல் (8-10-2) - சயமே யடிமை தலைநின்றார் – என்றும், (8-10-7) - அவனடியார் - என்றும், (8-10-8) – மணிமலை போல் கிடந்தான் தமர்கள் - என்றும், (8-10-8) – கோதிலடியார் – என்றும், (8-10-10) - நீக்கமில்லாவடியார் - என்றும் அருளிச்செய்தார். ஆக "நெடுமாற்கடிமை" என்னும் திருவாய்மொழி மூலமாக - ஸர்வேச்வரனின் அழகு போன்ற தன்மைகளில் ஈடுபட்டு, தங்களை மறந்திருக்கும் நிலை என்பதே அவர்களுக்கு அடையாளம் – என்கிறார்.

**வ்யாக்யானம்** - திருமங்கையாழ்வார், "தண்சேறையெம்பெருமான் தாள் தொழுவார் காண்மினென் தலைமேலார்" என்று தொடங்கி - அர்ச்சாவதார ப்ரவணரான ஸ்ரீவைஷ்ணவர்கள் எனக்கு சிரஸாவாஹ்யர், ஸதாத்யேயர், ஸூரிகளிலும் கைங்கர்ய ஸம்ருத்தியுடையவர்கள், அவர்களையொரு க்ஷண காலமும் பிரிய க்ஷமனல்லேன், அவர்களுக்கென் ஹ்ருதயம் தேனூறி யெப்பொழுதுமினியதாகா நின்றது, அவர்களைக் கண்ட மாத்திரத்திலே கண்டிகோளே யென்னுடைய மநோ த்ருஷ்டிகள் களிக்கிறபடி, அவர்களளவிலே யாகாநின்றது என்னன்பானது, அவர்களை நெஞ்சாலே நினைக்கவே ம்ருத்யுவுக்கும் பாபத்துக்கு மஞ்சவேண்டா, என்னுடைய ஹ்ருதயமவர்கள் விஷயத்திலே

யிழிகிறபடி கண்டிகோளே என்று இப்படியருளிச் செய்கிறவிடத்தில், ஜந்மாதி ப்ரஸங்கமற வருளிச்செய்த "கண்சோர வெங்குருதியிலும்"; "கடன்மல்லைத் தலசயன மாரெண்ணும் நெஞ்சுடையாரவரெம்மை யாள்வாரே" என்று - ஏதேனும் ஜந்மவ்ருத்தாதிகளை யுடையராகவுமாம், திருக்கடல்மல்லைத் தலசயனத்தை யநுஸந்திக்குமவர்கள் நின்ற நிலைகளிலே ப்ரமாணம் காட்டாதே நம்மைக் காரியங்கொள்ள வுரியாரென்று தொடங்கி, "ஞானத்தினொளியுருவை நினைவா ரென்னாயகர்", "அவரெங்கள் குலதெய்வமே" என்று – உகந்தருளின நிலத்திலே ப்ரவணரா யிருக்குமவர்களே நமக்கு சேஷிகள் என்றருளிச் செய்த "நண்ணாதவாளவுணரிலும்";

**விளக்கம்** - அடுத்து திருமங்கையாழ்வார் பெரியதிருமொழியில் (7-4-1) – தண்சேறையெம்பெருமான் தாள் தொழுவார் காண்மினென் தலைமேலார் – என்று தொடங்கும் ஒன்பது பாசுரங்களில் கூறியதை இங்கு காண்பிக்கிறார். ஸர்வேச்வரனின் அர்ச்சாவதாரத் திருமேனியில் ஈடுபட்ட ஸ்ரீவைஷ்ணவர்களே எனது தலையின் மீது இருக்கத்தக்கவர்கள்; எப்போதும் த்யானிக்கத் தக்கவர்கள்; நித்யஸூரிகளைக் காட்டிலும் உயர்ந்த கைங்கர்யச் செல்வம் கொண்டவர்கள்; அவர்களை ஒரு நொடிப்பொழுது கூட என்னால் பிரிய இயலாது; அவர்களுக்காக எனது மனம் தேன் ஊறி எப்போதும் இனிமையாகவே இருக்கிறது; அவர்களைக் கண்டவுடன் எனது மனமும் கண்களும் இன்பம் அடைவதைப் பார்த்தீர்களா; என்னுடைய அன்பு என்பது அவர்கள் பக்கம் மட்டுமே நிற்கிறது; அவர்களை உள்ளத்தால் நினைத்தாலே போதுமானது, அதன் பின்னர் யமனைக் கண்டும் பாவங்களைக் கண்டும் அச்சம் கொள்ளவேண்டாம்; எனது இதயம் அவர்கள் விஷயத்தில் இப்படியாக ஈடுபட்டு நின்றதைப் பார்த்தீர்களா? - என்று அருளிச்செய்கிறார். ஆக பெரியதிருமொழி (4-7-1) – கண்சோர வெங்குருதியிலும் - என்பதில் பிறவி உள்ளிட்ட பலவற்றால் வேற்றுமை இல்லாத பாகவதர்களின் மேன்மை குறித்து அருளிச்செய்கிறார். அடுத்து பெரியதிருமொழி (2-6-2) - கடன்மல்லைத் தலசயன மாரெண்ணும் நெஞ்சுடையாரவரெம்மை யாள்வாரே - என்று எப்படிப்பட்ட பிறவிகளில் பிறந்துள்ளபோதிலும், அவர்கள் எப்படிப்பட்ட ஒழுக்கம் போன்றவற்றை உடையவராக இருந்தாலும், திருக்கடல்மல்லைத் தலசயனம் என்னும் திவ்யதேசத்தை எண்ணுவார்கள் என்றால், தாங்கள் உள்ள நிலை எதுவாக இருந்தாலும், எந்தவிதமான அடிமைத்தன ஓலை ஆதாரத்தையும் காண்பிக்க வேண்டிய அவசியம் இல்லாதபடி, நம்மை ஏவி, தங்களுடைய செயல்களை நிறைவேற்றிக் கொள்ளும் தகுதி படைத்தவர்கள் – என்று தொடங்குகிறார். மேலும் பெரியதிருமொழி (2-6-3) - ஞானத்தினொளியுருவை நினைவா ரென்னாயகர் –

என்றும், (2-6-4) – அவரெங்கள் குலதெய்வமே – என்றும் கூறுவதன் மூலம் திவ்யதேசங்களின் மீது மிகுந்த அன்புடன் உள்ளவர்களே தமக்கு எஜமானர்கள் என்று உணர்த்தினார். இதனைப் பெரியதிருமொழி (2-6) – நண்ணாதவாளவுணர் – என்பதில் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** ஸ்ரீகுலசேகரப்பெருமாள், "மெய்யடியார்கள் தம் மீட்டங் கண்டிடக்கூடுமே லதுகாணும் கண்பயனாவது", "தொண்டரடிப்பொடியாட நாம் பேறில் கங்கை நீர் குடைந்தாடும் வேட்கை யென்னாவது" இத்யாதிகளாலே தம்முடைய பாகவத ப்ரேம ப்ரகர்ஷத்தை ப்ரதிபாதிக்கிறவளவில், ஜந்மாத் யுத்கர்ஷாபகர்ஷ ப்ரஸங்கமின்றியே பகவத் பக்தி பாரவச்யமே யவர்களுக்கு நிரூபகமாக வருளிச்செய்த "தேட்டருந் திறல் தேனிலும்";

**விளக்கம்** – அடுத்து ஸ்ரீகுலசேகராழ்வார் பெருமாள்திருவாழி (2-1) – மெய்யடியார்கள் தம் மீட்டங் கண்டிடக்கூடுமே லதுகாணும் கண்பயனாவது – என்றும், (2-2) - தொண்டரடிப்பொடியாட நாம் பேறில் கங்கை நீர் குடைந்தாடும் வேட்கை யென்னாவது – என்றும் அருளிச்செய்த பாசுரங்கள் மூலம் பாகவதர்களின் மீது தனக்கு இருந்த ப்ரேமையின் மிகுதியை உணர்த்தினார். அப்போது பிறவி போன்றவற்றின் ஏற்றத்தாழ்வு ஏதும் கூறாமல், ஸர்வேச்வரனிடம் கொண்ட பக்தியின் மூலம் பரவசப்பட்ட நிலையில் உள்ளதே அவர்களது அடையாளம் என்று (2-2) – தேட்டரும் திறல் தேனிலும் - என்பதில் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் த்வயநிஷ்டர்பக்க லீச்வரனுக்குண்டான வுகப்பை யருளிச்செய்த "மேம்பொருள்" என்கிற பாட்டுக்கு மேலில் - எத்தனையேனும் தண்ணிய ஜந்மங்களிலே பிறந்தார்களே யாகிலும், மேம்பொருளில் சொன்ன ஜ்ஞாநத்திலே நிஷ்டையுடையராகில் திருத்துழாயோபாதி ஈச்வரனுக்கு சிரஸாவாஹ்ய ரென்றும், ஜந்மத்தாலே வந்த தண்மையே யன்றிக்கே எத்தனையேனும் தண்ணிய வ்ருத்தமுடையாரு மிந்த ஜ்ஞாந நிஷ்டராகில் அந்த துஷ்க்ருத பலமநுபவியாரென்றும், தங்களுக்கு ஜந்ம வ்ருத்தாதிகளால் வரும் குறையில்லாமையே யன்று, தங்களோடு ஸம்பந்தித்த ஸம்ஸாரிகளும் தங்கள் ப்ரஸாத ஸ்வீகாரத்தால் பரிசுத்தராம்படியான உத்கர்ஷமுடையாரென்றும், ஜந்ம வ்ருத்தாதிகளால் குறைய நின்றேயிந்த ஜ்ஞாநமுடையவர்கள் இந்த ஜ்ஞாந விதுரராய் ஜந்ம வ்ருத்தாதிகளா லுயர்ந்தவர்களுக்கு ஸர்வேச்வரனோபாதி பூஜ்யராய் ஜ்ஞாந தாந ப்ரதிக்ரஹங்களுக்கு அர்ஹராவரென்றும்,

ஜந்ம வ்ருத்தாதிகளுக்கு மேலே ஜ்ஞாநாதிகருமானவர்கள் ஜந்ம வ்ருத்தாதி வைலக்ஷண்யமின்றிக்கே இந்த ஜ்ஞாநமுடையரானவர்களை பகவத் ப்ரபாவத்தால் வந்த வைலக்ஷண்யத்தை புத்தி பண்ணாதே கர்ம நிபந்தநமான ஜந்மாத்யபகர்ஷத்தையே புத்தி பண்ணித் தாழ நினைத்தார்களாகில் அந்த க்ஷணத்திலே யவர்கள் கர்மசண்டாளராவ ரென்றும், இப்படி ப்ரஸாதித்த வர்த்தங்கள் ஸம்பவிக்குமென்னுமிடம் ப்ரஹ்மாதிகளுக்கும் துர்லபமான பேற்றை திர்யக் ஜாதியிலே பிறந்தானொருவன் பெற்ற பின்பு சொல்ல வேணுமோ வென்று அருளிச்செய்த ஆறு பாட்டுக்களிலும், (விசதமாகக் காணலாம்) என்றது - ஸம்சய விபர்யயமற தர்சிக்கலாமென்றபடி.

**விளக்கம்** - அடுத்து ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலை (38) – மேம்பொருள் - என்ற பாசுரத்தில் த்வயமந்த்ரத்தில் எப்போதும் ஈடுபட்டு உள்ளவர்கள் மீது ஸ்ரீரங்கநாதனுக்கு ஏற்படுகின்ற மகிழ்வை அருளிச்செய்தார். அந்தப் பாசுரத்தைத் தொடர்ந்து உள்ள ஆறு பாசுரங்களில் கீழே உள்ளவற்றை அருளிச்செய்கிறார்:

- எத்தனை தாழ்ந்த பிறவியில் பிறந்தவர்களாக உள்ளபோதிலும் அவர்கள் "மேம்பொருள்" என்ற பாசுரத்தில் கூறப்பட்ட ஞானத்தில் நிலையாக நின்றால், ஸர்வேச்வரன் எவ்விதம் துளசியைத் தனது தலையால் ஏற்கிறானோ அது போன்று இவர்களும் அவன் தனது தலையால் தாங்கும்படியான தகுதி கொண்டவர்கள்

- பிறவி மூலம் ஏற்பட்ட தாழ்வு மட்டும் அல்லாமல், ஒழுக்கம் காரணமாகவும் தாழ்வுடன் ஒருவர் இருக்கலாம். அவரும் மேலே கூறப்பட்ட ஞானத்தில் நிலை நின்றால் தீய வினைகளின் பயனை அடையமாட்டார்.

- தங்களுக்கு பிறவி மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றால் எந்தவிதமான குறையும் இன்றி சிலர் இருக்கக்கூடும். அவர்கள் மேலே கூறப்பட்ட ஞானத்தை அடைந்தவர்கள் என்றால், தங்களுடன் கூடிய ஸம்ஸாரிகள், தாங்கள் உண்டு மீதம் வைத்துள்ள உணவை உட்கொண்டாலே தூய்மையாகும்படியான உயர்த்தியை உடையவர்கள் ஆவர்.

- பிறவி மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றால் தாழ்ந்த ஒருவர் இந்த ஞானத்தில் நிலை நிற்கக்கூடும். அப்படிப்பட்டவர்கள், இத்தகைய ஞானம் இன்றி, பிறவி மற்றும் ஒழுக்கத்தால் உயர்ந்தவர்களால் ஸர்வேச்வரன் எவ்விதம் ஆராதிக்கப்படுவானோ

அது போன்று ஆராதிக்கப்படும் தகுதி கொண்டவர்கள் ஆவர்; அவர்களிடமிருந்து அனைவரும் உபதேசம் பெறலாம்.

- ஒரு சிலர் பிறவி மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றால் மேன்மை பெற்றதுடன், இத்தகைய ஞானத்திலும் நிலையாக நிற்கக்கூடும். அவர்கள் - பிறவி மற்றும் ஒழுக்கத்தால் சிறப்பின்றி, இந்த ஞானத்தை மட்டுமே கொண்டவர்களுக்கு, ஸர்வேச்வரனின் பெருமை காரணமாக ஏற்பட்ட அவர்களது சிறப்பை அறியாமல், அவர்களுக்குக் கர்மம் காரணமாக உண்டான தாழ்வை மட்டுமே எண்ணி, அவர்கள் தாழ்ந்தவர்கள் – என்று எண்ணக்கூடும். இவ்விதம் எண்ணியபோதே அவர்கள் சண்டாளர்கள் ஆகின்றனர்.

- இவ்விதம் கூறப்பட்டவை அனைத்தும் நிச்சயமாக நடக்கும் என்பதை, நான்முகன் போன்றவர்களுக்குக் கூடக் கிட்டாத அரிய பேற்றை, விலங்காகப் பிறந்த கஜேந்திரன் அடைந்ததைக் கண்ட பின்னரும், தனியாகக் கூறவும் வேண்டுமோ – என்றார்.

"விசதமாகக் காணலாம்" என்றால் எந்தவிதமான சந்தேகமும் இல்லாமல் காணலாம் என்று பொருள்.

227. க்ஷத்ரியனான விச்வாமித்ரன் ப்ரஹ்மர்ஷியானான்.

**அவதாரிகை** - இப்படி இதிஹாஸாதிகளிலே பாகவத வைபவம் சொல்லப்பட்டதேயாகிலும், "ந சூத்ரா பகவத்பக்தா விப்ரா பாகவதாஸ் ஸ்ம்ருதா:, ஸவிப்ரேந்த்ரோ முநிச் ஸ்ரீமாந் ஸயதிஸ் ஸச பண்டித:" என்று சொன்ன விப்ரத்வாதிகள் அர்த்தவாதமா மித்தனையல்லது, அபக்ருஷ்ட ஜந்மாவானவன் அந்த சரீரந்தன்னில் உத்க்ருஷ்டனாகக்கூடுமோ வென்ன; கூடுமென்னுமிடத்துக்கு உதாஹாரணதயா வருளிச்செய்கிறார் (க்ஷத்ரியனான) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதமாக இதிகாசம் மற்றும் புராணங்களில் பாகவதர்களின் மேன்மை கூறப்பட்டது. ஆயினும் கீழே உள்ள வரிகள் காண்க:

- ந சூத்ரா பகவத்பக்தா விப்ரா பாகவதாஸ் ஸ்ம்ருதா: - ஸர்வேச்வரனின் அடியார்கள் சூத்திர குலத்தில் பிறந்தவர்கள் என்றாலும் சூத்திரர்கள் அல்லர்; அவர்கள் அந்தணர்கள், பாகவதர்களாகவும் கொள்ளத்தக்கவர்கள்

- ஸவிப்ரேந்த்ரோ முநிச் ஸ்ரீமாந் ஸயதிஸ் ஸச பண்டித: - அவனே அந்தணர்களில் உத்தமன், ஸந்ந்யாஸி, ஸ்ரீமாந், முனிவன்

மேலே உள்ள வரிகளில் கூறப்பட்ட அந்தணத்தன்மை போன்றவை வெறும் புகழ்ச்சி உரை மட்டுமே அல்லாமல், தாழ்ந்த பிறவியில் பிறந்த ஒருவன் அந்தச் சரீரத்திலேயே உயர்ந்த பிறவி கொண்டவனாக இயலுமா என்ற கேள்விக்கு உதாரணம் மூலம் விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, க்ஷத்ரிய குலோத்பவனான விச்வாமித்ரன், அஜ்ஜந்மத்திலே தான் பண்ணின தபோ விசேஷமடியாக, வஸிஷ்ட வாக்யத்தாலே க்ஷத்ரியத்வம் பின்னாட்டாதபடி ப்ரஹ்மர்ஷியாய் விட்டானிறே; ஆகையாலே, அத்யந்தாபக்ருஷ்ட குலோத்பவரானலும் அந்த சரீரந்தன்னோடே அநவதிக சக்திக பகவத் ஸம்பந்தரூப ஸம்ஸ்கார விசேஷத்தாலே, அத்யந்தோத்க்ருஷ்ட குலஜாநுவர்த்தநீயராம்படி உத்க்ருஷ்ட தமராகக் குறையில்லை யென்கை. அல்ப சக்திக வஸிஷ்டவாக்யம் செய்தபடி கண்டால், ஸர்வசக்தி ஸம்பந்த விசேஷ மென்செய்யமாட்டாது.

**விளக்கம்** – க்ஷத்ரிய குலத்தில் தோன்றிய விச்வாமித்ரர், அந்தப் பிறவியில் தான் செய்த மிகப்பெரும் தவத்தின் விளைவாக, வசிஷ்டரின் வாக்கியம் மூலம், தான் மீண்டும் க்ஷத்ரியனாக மாறாதபடி, ப்ரஹ்மரிஷி ஆனார் அல்லவோ? ஆக தாழ்ந்த குலத்தில் ஒருவர் பிறந்தவர் என்றபோதிலும், அந்தப் பிறவியிலேயே, எல்லையற்ற சக்தி கொண்ட ஸர்வேச்வரனின் தொடர்பு என்ற காரணத்தால், மிகவும் உயர்ந்த பிறவி கொண்டவர்களாலும் பின்பற்றத்தக்கவர்கள் என்றபடி உயர்ந்தவர்களில் உயர்ந்தவர்கள் ஆகின்றனர் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. மிகவும் குறைந்த சக்தி கொண்ட வசிஷ்டரின் வாக்கியத்திற்கே இத்தனை வலிமை உள்ளது என்றால், அனைத்து சக்தியும் கொண்ட ஸர்வேச்வரனின் தொடர்பு என்பது எதனைத்தான் செய்யாது?

228. ஸ்ரீவிபீஷணனை ராவணன் குலபாம்ஸநமென்றான்; பெருமாள் இக்ஷ்வாகு வம்ச்யனாக நினைத்து வார்த்தை யருளிச்செய்கிறார்.

**அவதாரிகை** - இதிஹாஸாதி ப்ரமாண முகத்தாலே பாகவத வைபவத்தை தர்சிப்பித்தார் கீழ்; சிஷ்டர்களுடைய வாசார முகத்தாலும் பாகவத வைபவத்தை தர்சிப்பிக்கிறார் மேல். “தர்மஜ்ஞஸமய ப்ரமாணம் ...” என்று ஆப்த ப்ரமாணமான வேதத்துக்கு முன்னே எடுக்கும்படியிறே சிஷ்டாசாரத்தினுடைய ப்ராமாண்யமிருப்பது; அதில் ப்ரதமத்திலே, அபக்ருஷ்ட ஜாதீயரானவர்கள் அந்த சரீரத்தோடே ஸஜாதீய வ்யாவ்ருத்தராய் உத்க்ருஷ்ட தமராவர்களென்று கீழ்ச்சொன்ன வர்த்தத்தை ஸ்திரீகரிக்கைக்காக, ராவணாநுஜனைக் குறித்து பெருமா ளருளிச்செய்த வார்த்தையை யருளிச்செய்கிறார் (விபீஷணனை) என்று தொடங்கி.

**விளக்கம்** - இதிகாசம் மற்றும் பலவிதமான ப்ரமாணங்கள் மூலமாக இதுவரை பாகவதர்களின் மேன்மையை நிரூபித்தார். வேதங்களை அதன் அங்கங்களுடன் கற்பதே தர்மம் என்றுள்ள பெரியோர்களின் ஒழுக்கம் மூலம் இதனை நிரூபிக்க உள்ளார். ஆபஸ்தம்பஸூத்ரம் – தர்மஜ்ஞஸமய ப்ரமாணம் - தர்மம் அறிந்தவர்களின் ஒழுக்கமே முதல் ப்ரமாணம் ஆகும்; வேதங்கள் அடுத்த ப்ரமாணம் ஆகின்றன - என்பதற்கு ஏற்றபடி, நம்பத்தகுந்த ப்ரமாணமாக உள்ள வேதங்களுக்கும் முன்பாக உள்ள ப்ரமாணமாக, சான்றோர்களின் ஒழுக்கம் என்பது முக்கிய ப்ரமாணமாக உள்ளது. இவற்றில் முதலில், தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்கள், அந்தப் பிறவியிலேயே உயர்ந்தவர்களைக் காட்டிலும் வேறுபட்டவர்களாக உள்ளனர் என்று கடந்த சூர்ணையில் கூறியதை நிலைநாட்டும் விதமாக, இராவணனின் தம்பியாகிய ஸ்ரீவிபீஷணன் குறித்து இராமன் அருளிச் செய்ததைக் காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “ப்ரதீயதாம் தாசரதாய மைதிலீ” என்று தனக்கு ஹிதத்தைச் சொன்ன தர்மாத்மாவான ஸ்ரீவிபீஷணாழ்வானை பாபிஷ்டனான ராவணன் குபிதனாய், “த்வாந்து திக் குலபாம்ஸநம்” என்று - இக்குலத்துக்கு இழுக்காகப் பிறந்தவுன்னை வேண்டேன் என்று பருஷித்துத் தள்ளிவிட்டான்; இக்ஷ்வாகு குலநாதரான பெருமாள் இவனை ஆதரபூர்வகமாக வங்கீகரித்த வநந்தரம், “ஆக்க்யாஹி மம தத்வேநராக்ஷஸாநாம் பலாபலம்” என்று – “ராக்ஷஸருடைய பலாபலமிருக்கும்படியே நமக்குச் சொல்லும்” என்கையாலே, இவனை ராக்ஷஸஜாதீயனாக நினையாதே, திருத்தம்பிமாரோபாதியாக வபிமாநித்து வார்த்தையருளிச் செய்தாரென்கை. இவ்வாக்யத்திலே ராவணன்

பரித்யஜித்தமையும் பெருமாள் பரிக்ரஹித்தமையும் சொல்லுகையாலே, பாகவதா நுகூல்யமுண்டாகவே ப்ராக்ருதர் "இவன் நமக் குடலல்லன்" என்று கைவிடுவர்க ளென்னுமிடமும், பகவான் விரும்பி மேல் விழுந்து பரிக்ரஹிக்கு மென்னுமிடமும் சொல்லப்பட்டது.

**விளக்கம்** - இராமாயணம் யுத்தகாண்டம் (14-4) - ப்ரதீயதாம் தாசரதாய மைதிலீ - சீதையை இராமனிடம் ஒப்படைப்பாயாக - என்று தனக்கு நன்மையை உபதேசித்த, தர்மத்தின் வழி நிற்கின்ற ஸ்ரீவிபீஷணனை, மிகுந்த பாவங்கள் பல செய்த இராவணன் செய்தது என்ன? அவனிடம் மிகவும் கோபம் கொண்ட இராவணன், யுத்தகாண்டம் (16-15) - த்வாந்து திக் குலபாம்ஸநம் - அரக்கர் குலத்தை அழிக்கவந்த நீ தேவை இல்லை – என்று இகழ்ந்து தள்ளினான். ஆனால் அந்த விபீஷணனை இக்ஷ்வாகு குலத்தின் நாயகனான இராமன் அன்பு முந்தி நிற்க ஏற்றுக்கொண்டான். தொடர்ந்து யுத்தகாண்டம் (19-7) – ஆக்க்யாஹி மம தத்வேநராக்ஷஸாநாம் பலாபலம் - அரக்கர்களின் பலம் மற்றும் பலவீனம் ஆகியவற்றை உரைப்பாயாக - என்று உள்ளதற்கு ஏற்ப விபீஷணனிடம் இராமன், "அரக்கர்களின் பலம் என்ன, பலவீனம் என்ன என்பதை எனக்கு உரைப்பாயாக", என்றான். இதன் மூலம் விபீஷணனை அரக்கர் குலத்தைச் சேர்ந்தவன் என்று எண்ணாமல், தன்னுடைய சகோதரர்களில் ஒருவனாகவே எண்ணி, அவனிடம் இவ்விதம் கூறினான் என்றாகிறது. இந்த வாக்கியத்தில் இராவணன் விபீஷணனைக் கைவிட்டதையும், இராமன் அவனை ஏற்றுக் கொண்டதையும் கூறியதால் – ஒருவனுக்கு ஸர்வேச்வரனிடம் பக்தி ஏற்பட்டவுடன் பாமரமக்கள் அவனைக் குறித்து, "இவன் நம்மைச் சார்ந்தவன் அல்லன்", என்று கைவிடுவர் என்பதும், ஸர்வேச்வரன் அப்படிப்பட்ட பக்தனை ஏற்றுக் கொள்வான் என்பதும் கூறப்பட்டது.

229. பெரியவுடையார்க்குப் பெருமாள் ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் பண்ணியருளினார்.

**அவதாரிகை** - இப்படி உக்திமாத்ரத்தாலன்றிக்கே, பாகவத வைபவத்தை வ்ருத்தியாலும் பெருமாள் வெளியிட்டபடியை யருளிச்செய்கிறார் (பெரியவுடையார்க்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் தனது சகோதரர்களில் ஒருவன் விபீஷணன் என்று வார்த்தை அளவில் மட்டுமே இராமன் கூறவில்லை; பாகவதர்கள் மேன்மையை தன்னுடைய செயலாலும் வெளிப்படுத்தினான் என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ”மர்யாதாநாஞ்ச லோகஸ்ய கர்த்தா காரயிதாச ஸ:” என்கிறபடியே – லோகமர்யாதா ஸ்தாபநார்த்தமாக வவதரித்து, பித்ருவசந பரிபாலநாதிகளாலே ஸாமாந்ய தர்ம ஸ்தாபந சீலராயிருப்பா ரொருவரிறே பெருமாள்; ஏவம்பூதரானவர், பிராட்டி பிரிவுகண்டு பொறுக்கமாட்டாமல் தம்மை யழியமாறின பெரியவுடையார்க்கு, ஜந்மவ்ருத்தாதிகளா லுத்க்ருஷ்டரானவர்களுக்கு தத்புத்ர சிஷ்யர்கள் பண்ணும் ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரத்தை, அவருடைய ப்ரேமாதிக்யமே ஹேதுவாக, திருத்தம்பியாரும் கூட நிற்கச்செய்தே தாமே ஸாதரமாகப் பண்ணியருளினாரிறே. இத்தால் – ஜந்மாத்யுத்க்ருஷ்டரானவர்கள், அவற்றால் குறைந்திருக்கும் விலக்ஷண பாகவத விஷயத்தில் புத்ரக்ருத்ய மநுஷ்டிக்கலாமென்னுமிடம் காட்டப்பட்டது.

**விளக்கம்** - பெரியவுடையார் என்பது ஜடாயுவைக் குறிக்கும். இராமாயணம் ஸுந்தரகாண்டம் (35-11) – மர்யாதாநாஞ்ச லோகஸ்ய கர்த்தா காரயிதாச ஸ: - உலகில் உள்ள நான்கு வர்ணத்தினருக்கும் ஏற்ற மரியாதைகளைச் செய்பவனும், செய்யும்படிச் செய்பவனும் இராமனே - என்று கூறப்பட்ட வாக்கியத்திற்கு ஏற்ப, உலகில் உள்ள ஒழுக்கங்களை நிலைநாட்டுவதற்காக வந்து அவதரித்தான்; தந்தையின் சொல்லை நிறைவேற்றுதல் போன்ற தர்மங்களை நிலைநாட்டினான்; இப்படியாக உள்ளவன் அல்லவோ இராமன்! இப்படிப்பட்ட இராமன் செய்தது என்னவென்றால் - சீதையை இராவணன் இராமனிடமிருந்து பிரித்துச் சென்றதைக் கண்டு பொறுக்க இயலாமல் ஜடாயு இராவணனிடம் போர் செய்து தனது உயிரை விட, அந்த ஜடாயுவுக்கு - பிறவி மற்றும் ஒழுக்கத்தால் மிகவும் உயர்ந்தவர்களுக்கு அவர்களது புத்திரர்களும் சிஷ்யர்களும் செய்யவேண்டியதான ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரத்தைச் செய்தான். ஜடாயுவின் மீது கொண்ட மிகுந்த அன்பு காரணமாக, தனது தம்பியான லக்ஷ்மணன் அருகில் இருந்தபோது, தானே இத்தகைய ஸம்ஸ்காரத்தை அன்புடன் செய்தான். இதன் மூலம் பிறப்பு போன்றவற்றால் உயர்ந்தவர்கள், அவற்றால் தாழ்ந்து இருக்கின்ற பாகவதர்களுக்கு, அவர்களது புத்திரர்கள் செய்யவேண்டிய ஸம்ஸ்காரங்களைச் செய்யலாம் என்று கூறப்படுகிறது.

230. தர்மபுத்ரர் அசரீரிவாக்யத்தையும் ஜ்ஞாநாதிக்யத்தையும் கொண்டு ஸ்ரீவிதுரரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்தார்.

**அவதாரிகை** - இவ்வர்த்தத்தை தர்மபுத்ர ரநுஷ்டாநத்தாலும் தெளிவிக்கிறார் (தர்மபுத்ரர்) என்று தொடங்கி.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் கூறப்பட்ட கருத்தை, தர்மபுத்திரரின் செய்கை மூலமும் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - பெருமாள் பரார்த்தமாக ஸாமாந்ய தர்மத்தைப் பண்ணிப் போந்தாரேயாகிலும், விசேஷ தர்மத்திலே திருவுள்ளம் ஊற்றிருக்கையாலே அவர்க்குச் செய்யலாம்; இவர் செய்ததிறே யரிது. ஸ்வவர்ண தர்மத்தையே உத்தேச்யமாக நினைத்து ஸர்வாவஸ்தையிலும் அதுக்கொரு நழுவுதல் வாராதபடி ஸாவதாநமாக நடத்திக்கொண்டு போருமவரிறேயிவர்; இப்படியிருக்கிறவர், ஸ்ரீவிதுரரை ஸம்ஸ்கரிக்கிற தசையில், அவருடைய வர்ணத்தைப் பார்ப்பது, ஜ்ஞாநாதிக்யத்தைப் பார்ப்பதாய், "என் செய்யக்கடவோம்" என்று வ்யாகுலப்படா நிற்கச்செய்தே "தர்மராஜஸ்து தத்ரைநம் ஸஞ்சிஸ்கரயிஷுஸ் ததா தக்து காமோபவத் வித்வாந் அதாகாசேவசோப்ரவீத்; போபோ ராஜந் நதக்தவ்யமேதத் விதுர ஸம்ஜ்ஞிதம் களேபரமிஹைதத் தே நைஷதர்மஸ் ஸநாதய: லோக வைலக்ஷணோ நாம பவிஷ்யத்யஸ்ய பார்த்திவ யதிதர்ம மவாப்தோஸௌ ந சோச பரதர்ஷப" என்று இவர் ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரார்ஹர் என்று சொன்ன அசரீரி வாக்யத்தாலும் ஸம்ப்ரதிபந்நமான விவருடைய ஜ்ஞாநாதிக்யத்தாலும் ஸந்தேஹமற்று வைதிகாக்ரேஸரர்க்குச் செய்யக்கடவ ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரத்தாலே ஸம்ஸ்கரித்தாரிறே.

**விளக்கம்** - ஸர்வேச்வரனாகிய இராமன் கடந்த இரண்டு சூர்ணைகளில் கூறப்பட்டபடி தர்மங்களை மற்றவர்களுக்கு உணர்த்தும் பொருட்டு தானே சில செயல்களைச் செய்தான் என்றுபோதிலும், மிகவும் விசேஷமான தர்மமாகிய "தன்னைச் சரணம் அடைந்தவனைக் காப்பாற்றுதல்" என்பதைத் திருவுள்ளத்திலே எப்போதும் நிலைநாட்டியவன் என்பதால் அவனுக்கு அப்படிப்பட்ட செயல்கள் செய்யக்கூடியதாகவே உள்ளதில் வியப்பில்லை. ஆனால் தர்மபுத்திரர் அத்தகைய செயலை ஒத்தபடி செய்தது அரிதே ஆகும் (விதுரருக்கு ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் செய்தார்). தன்னுடைய வர்ணாச்ரம தர்மத்திற்கு எப்போதும் புறம்பாக நடக்கக்கூடாது என்று எண்ணி, அதனை மட்டுமே கைக்கொண்டு, அனைத்து நிலைகளிலும் அதிலிருந்து நழுவுதல்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார்.

இப்படி உள்ளபோது ஸ்ரீவிதுரரை ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் செய்யவேண்டிய நிலையில், விதுரரின் பிறவி (அவர் சூத்ர ஸ்த்ரீக்குப் பிறந்தவர்) மற்றும் மேன்மையான ஞானம் ஆகிய இரண்டையும் கண்டு "நான் என்ன செய்வது?", என்று கலங்கியபடி நின்றார். மஹாபாரதம் – தர்மராஜஸ்து தத்ரைநம் ஸஞ்சிஸ்கரயிஷுஸ் ததா தக்து காமோபவத் வித்வாந் அதாகாசேவசோப்ரவீத்; போபோ ராஜந் நதக்தவ்யமேதத் விதுர ஸம்ஜ்ஞிதம் களேபரமிஹைதத் தே நைஷதர்மஸ் ஸநாதய: லோக வைலக்ஷணோ நாம பவிஷ்யத்யஸ்ய பார்த்திவ யதிதர்ம மவாப்தோஸௌ ந சோச பரதர்ஷப - தர்மபுத்திரர் அந்தச் சூழ்நிலையில் ஸ்ரீவிதுரரை மிகவும் சிறந்த ஞானம் கொண்டவர் என்று அறிந்து சரியான மந்த்ரங்கள் மூலமாக அவரை ஸம்ஸ்காரம் செய்யவேண்டும் என்று எண்ணினார்; ஆனால் அவரது தாழ்ந்த பிறவியைக் கண்டு மந்திரங்கள் ஏதும் இன்றி ஸம்ஸ்காரம் செய்யவேண்டும் என்றும் எண்ணினார். இந்த நிலையில் ஓர் அசரீரி வாக்கியம் கேட்டது - அரசனே! விதுரர் என்ற பெயர் கொண்ட இந்தச் சரீரமானது மந்த்ரங்கள் இன்றி அப்படியே தகனம் செய்வதற்கு ஏற்றது அல்ல. தகுந்த மந்த்ரங்கள் மூலம் ஸம்ஸ்காரம் செய்வதே சரியானது; இந்த ஸநாதந தர்மம் உனக்கு முரணாக இருக்காது. அரசனே! இந்த விதுரர் ஸந்ந்யாஸியின் தர்மத்தை அடைந்தவர் ஆவார். அரசனே! இவ்விதம் இவரை நீ ஸம்ஸ்காரம் செய்யப்போவதால், மேன்மையான தர்மத்தில் நிலைநிற்பவன் என்ற நற்பெயரை நீ அடையப் போகிறாய். ஆகவே சோகம் கொள்ளாதே - என்றது காண்க. ஆக இவர் ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரத்திற்கு ஏற்றவர் என்று கூறப்பட்ட அசரீரி வாக்யத்தாலும், அவருடைய மேன்மையான ஞானம் என்பதாலும் தன்னுடைய சந்தேகம் நீங்கப்பெற்றார். வைதிகர்களின் தலைவர்களுக்கு மட்டுமே உரித்தான ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரத்தை தர்மர் விதுரருக்குச் செய்தார் அல்லவோ?

231. ருஷிகள் தர்மவ்யாதன் வாசலிலே துவண்டு தர்மஸந்தேஹங்களை சமிப்பித்துக் கொண்டார்கள்.

**அவதாரிகை** - அநந்தரம், ஜந்மாத்யுத்க்ருஷ்டரான ருஷிகள் ததபக்ருஷ்டன் பக்கலிலே தர்மச்ரவணம் பண்ணினபடியை அருளிச்செய்கிறார் (ருஷிகள்) என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து, பிறப்பு போன்றவற்றால் உயர்ந்தவர்களான ரிஷிகள், அவற்றால் தாழ்ந்த ஒருவனிடம் சென்று தர்மங்கள் பற்றிய சந்தேகங்கள் கேட்டதை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - சதுர்வேததரராய் ஸர்வோத்க்ருஷ்டராயிறே ருஷிகளிருப்பது; ஏவம் பூதரானவர்கள், வேத ச்ரவண யோக்யதையில்லாத குலத்திலே பிறந்துள்ளவனாய், ஜாதி ஸ்ம்ருதியோடே ஜாதனாகையாலே பூர்வஜந்மஸித்தமான ஜ்ஞாநத்தில் ப்ரம்சமில்லாமையாலும் மாதாபித்ரு சுச்ரூஷா விசேஷத்தாலும் ஸகல தர்மஸூக்ஷ்ம ஜ்ஞாநவானாயிருக்கும் தர்மவ்யாதன் வாசலிலே சென்று, மாதாபித்ரு சுச்ரூஷைகபரனாய் இருக்கிறவவ னவஸரம் பார்த்துத் துவண்டு ஜ்ஞாதவ்யங்களான தர்மங்களில் தங்களுக்கு ஸந்நிக்தங்களானவை யெல்லா மவன் பக்கலிலே கேட்டு, அதில் ஸந்தேஹங்களைப் போக்கிக்கொண்டார்க ளென்கை.

**விளக்கம்** – ரிஷிகள் நான்கு வேதங்களை எப்போதும் அத்யயனம் செய்தபடி இருந்து, அனைவரையும்விட மேம்பட்டவர்களாக எப்போதும் இருப்பார்கள். இப்படிப்பட்ட சில ரிஷிகள் செய்தது என்னவென்றால் – வேதங்களைக் காதால் கேட்பதற்குக் கூடத் தகுதியில்லாமல் உள்ள குலத்தில் பிறந்தவனாகிய தர்மவ்யாதன் என்பவனின் வீட்டிற்குச் சென்றனர். இவன் எப்படிப்பட்டவன் என்றால் – கடந்த பிறவியில் அறிவுடன் பிறந்தவன் என்பதால் அந்தப் பிறவியில் உண்டான ஞானத்தில் இருந்து சற்று பிசகாமல், தாய்தந்தைக்குச் செய்யும் கைங்கர்யம் என்ற பெருமையைக் கொண்டபடி, தர்மங்களைப் பற்றி மிகவும் நுட்பமான கருத்துக்களையும் அறிந்தவன் ஆவான். இவர்கள் அங்கு சென்றபோது அவன் தனது தாய்தந்தைக்குப் பணிவிடைகள் செய்து கொண்டிருந்தான். அவன் அந்தச் செயல்களைச் செய்து முடிக்கும்வரை இவர்கள் அங்கேயே நின்றனர். அதன் பின்னர் தாங்கள் அறியவேண்டிய தர்மங்களைப் பற்றிய சந்தேகங்கள் பலவற்றையும் அவனிடம் கேட்டு, அந்தச் சந்தேகங்களைப் போக்கிக் கொண்டனர்.

**வ்யாக்யானம்** – "கச்சித் த்விஜாதிப்ரவரோ வேதாத்யாயீ தபோதந:, தபஸ்வீ தர்ம சீலச்ச கௌசிகோநாம பாரத ஸாங்கோபநிஷதாந் வேதாந் அதீதே த்விஜஸத்தம:, ஸவ்ருக்ஷ மூலே கஸ்மிம்ச்சித் வேதாநுச்சாரயந் ஸ்தித:, உபரிஷ்டாச்ச வ்ருக்ஷஸ்ய பலாகா ஸம்ந்யலீயத, தயாபுரீஷமுத்ஸ்ருஷ்டம் ப்ராஹ்மணஸ்ய ததோரஸி" என்று தொடங்கி – கௌசிகனென்று பேரையுடையனாய் அதீதஸாங்க ஸசிரஸ்க ஸகல வேதத்தை யுடையனா யிருப்பானொரு ப்ராஹ்மணாத்தமன், ஒரு வ்ருக்ஷ மூலத்திலே வேதங்களையு முச்சரித்துக் கொண்டு நிற்கச்செய்தே, அதின்மேலே யிருந்ததொரு கொக்கு எச்சமிட்டது தன் மார்பிலே வந்து பட்டவாறே க்ருத்தனாய், பார்த்த பார்வையிலே அது பட்டுவிழ, அத்தைக்கொண்டு, தப்தசித்தனாய்க் கனக்க சோகித்து, "ராகத்வேஷ பலாத்க்ருதராய்க்

கொண்டு அக்ருத்யத்தைச் செய்தோம்” என்று பலகாலும் சொல்லிக் கொண்டு, ஆஸந்நமானதொரு க்ராமத்திலே பிக்ஷார்த்தமாகப்போய்,

**விளக்கம்** – மஹாபாரதத்தில் கச்சித் த்விஜாதிப்ரவரோ வேதாத்யாயீ தபோதந:, தபஸ்வீ தர்ம சீலச்ச கௌசிகோநாம பாரத ஸாங்கோபநிஷதாந் வேதாந் அதீதே த்விஜஸத்தம:, ஸவ்ருக்ஷ மூலே கஸ்மிம்ச்சித் வேதாநுச்சாரயந் ஸ்தித:, உபரிஷ்டாச்ச வ்ருக்ஷஸ்ய பலாகா ஸம்ந்யலீயத, தயாபுரீஷமுத்ஸ்ருஷ்டம் ப்ராஹ்மணஸ்ய ததோரஸி – வேதங்களை நன்றாகக் கற்றவனும், சிறந்த தவம் என்பதையே தனது செல்வமாகக் கொண்டவனும், ஸத்வகுணம் நிரம்பப் பெற்றவனும், தர்மம் என்பதையே தனது ஒழுக்கமாகக் கொண்டவனும், அந்தணர்களில் மிகவும் உயர்ந்தவனும் ஆகிய கௌசிகன் என்னும் ஒருவன் இருந்தான். அந்தணர்களின் தலைவனும், அங்கங்கள் மற்றும் உபஅங்கங்கள் ஆகியவற்றுடன் கூடிய வேதத்தை நன்றாகக் கற்றவனும் ஆகிய அவன் ஒரு நாள் வேதங்களை உச்சரித்தபடி ஒரு மரத்தின் அடியில் அமர்ந்திருந்தான். அப்போது அந்த மரத்தின் மேல் அமர்ந்திருந்த ஒரு கொக்கு எச்சம் இட்டது. அந்த எச்சமானது கீழே அமர்ந்திருந்த கௌசிகனின் மார்பில் விழுந்தது – என்று கூறப்பட்டது. இந்த வரிகளில் கூறியபடி கௌசிகன் என்ற பெயர் கொண்டவனாக, அங்கங்கள் மற்றும் உபநிஷத்துக்கள் ஆகியவற்றுடன் கூடிய வேதங்களை நன்கு அறிந்தவனாக, அந்தணர்களின் தலைவனாக உள்ள ஓர் அந்தணன் ஒரு மரத்தின் அடியில் வேதங்களை உச்சரித்தபடி அமர்ந்திருந்தான். அப்போது மரத்தின் மேல் அமர்ந்திருந்த ஒரு கொக்கு எச்சம் இட்டது. அதன் எச்சம் தனது மார்பில் வந்து விழுந்தவுடன் மிகவும் கோபம் கொண்டான். அந்தக் கொக்கை அதே கோபத்துடன் பார்த்தான். இவன் பர்வை பட்டவுடன் அந்தக் கொக்கு இறந்து விழுந்தது. இதனைக் கண்ட அவன் மிகவும் வருந்திய மனம் கொண்டான். தனது மனதில், “ஆசை மற்றும் வெறுப்பு ஆகியவற்றால் தூண்டப்பட்டு செய்யக்கூடாத செயலைச் செய்தோமே”, என்று பலமுறை கூறியபடி அங்கிருந்து புறப்பட்டு, அருகில் உள்ள ஒரு கிராமத்திற்குப் பிச்சை எடுத்து உண்பதற்காகச் சென்றான்.

**வ்யாக்யானம்** - ப்ரதமமொரு க்ருஹத்திலே சென்று, “பிக்ஷாம்தேஹி” என்று யாசித்தவளவிலே, அந்த க்ருஹிணியானவள், “நில்லும், வருகிறேன்” என்று சொல்லி, கரசுத்த்யாதிகளைப் பண்ணி பிக்ஷை கொண்டு வருவதாக உத்யோகியா நிற்கச்செய்தே, பர்த்தாவானவன் அதீவக்ஷுதார்த்தனாய் வந்து புகுர, அவள் பதிவ்ரதையாகையாலே

பிக்ஷை கொண்டு வருகிறத்தை விட்டு பாத்யாசமநீயாஸந ப்ரதாநாதிகளாலே அவனை சுச்ரூஷிக்கிற பராக்கிலே ப்ராஹ்மணன் நிற்கிறத்தை மறந்து, நெடும்போது நின்று, பின்னை யவன் நிற்கிறத்தைக் கண்டு நடுங்கி, பிக்ஷை கொண்டுவந்தவளவிலே,

**விளக்கம்** – அங்குள்ள முதல் வீட்டின் வாயிலில் நின்று - பிக்ஷாம்தேஹி - பிச்சை இடுவீர்களாக - என்றான். உடனே அந்த வீட்டின் பெண் இவனிடம், “சற்றே இருப்பீர். இதோ வருகிறேன்”, என்று கூறிவிட்டுச் சென்றாள். உள்ளே சென்று கைகால்களைக் கழுவி, பிச்சை அளிப்பதற்காக முயல்கின்ற நேரத்தில் அவளது கணவன் மிகுந்த பசியுடன் வீட்டிற்கு வந்தான். அவள் பதிவ்ரதை என்பதால் பிச்சை எடுத்து வருவதை நிறுத்தியவளாக, தனது கணவனுக்குக் கைகால்கள் கழுவி ஆசனம் இடுதல் போன்ற செயல்களைச் செய்தாள். இப்படியாகக் கணவனுக்கு ஏற்ற பணிவிடைகளை செய்தபடி இருந்தபோது, வாசலில் அந்தணன் ஒருவன் நிற்பதை மறந்தாள். நீண்டநேரம் கழித்து அவன் நிற்பதைக் கண்டவளாக, தான் செய்த செயலுக்கு நடுக்கம் அடைந்தவளாக, பிச்சையை எடுத்துக்கொண்டு வந்தாள்.

**வ்யாக்யானம்** - “என்னை நிற்கச்சொல்லி இத்தனைபோது நீ புறப்படாதிருப்பானேன்?” என்று அவன் குபிதனானவாறே; அவளவனை ஸாந்த்வநம் பண்ணி, “இத்தைப் பொறுக்க வேண்டும்” என்று வேண்டிக்கொண்டு, ”நான் பர்த்தாவே தெய்வம்” என்றிருப்பா ளொருத்தி, அவனிளைத்துவருகையாலே தத்சுச்ருஷை பண்ணி நின்றேனித்தனை” என்ன; “உனக்கு பர்த்தாவையன்றோ ஸத்கரிக்க வேண்டுவது, ப்ராஹ்மணரளவில் கௌரவ ப்ரதிபத்தியில்லையே!” என்று வ்யங்க்யமாகச் சொல்லி, “க்ருஹதர்மத்திலே வர்த்திக்கிற நீ ப்ராஹ்மணரையிப்படி யவமதி பண்ணலாகாது காண்” என்ன; “நானொருக்காலும் ப்ராஹ்மணரை யவமதி பண்ணேன், ப்ராஹ்மணருடைய வைபவமெல்லாம் நன்றாக வறிவன்” என்று பரக்கச் சொல்லிக்காட்டி, “இவ்வபராதத்தைப் பொறுக்கவேணும், ‘பர்த்தாவே தெய்வம்’ என்றிருக்கையாலே தச்சுச்ரூஷையிலே பரவசையாய் நின்றே னித்தனை, என்னுடைய பதிசுச்ரூஷையினுடைய பலத்தைப் பாரீர், உம்முடைய ரோஷத்தாலே அந்தக் கொக்கு யாதொருபடி தக்தமாய்த்து அதுவுமெனக்கு விதிதங் காணும்” என்று சொல்லி,

**விளக்கம்** – இவளைக் கண்ட அந்தணன் மிகவும் கோபம் கொண்டவனாக, "என்னை நிற்கச் சொல்லிவிட்டுச் சென்ற நீ இத்தனை நேரம் ஏன் வராமல் இருந்தாய்?", என்றான். அவள் அவனைச் சமாதானம் செய்தவளாக, "எனது செயலைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்", என்றாள். தொடர்ந்து அவனிடம், "ஒரு பெண்ணிற்கு அவளது கணவனே உயர்ந்த தெய்வம் ஆவான். நான் இப்படிப்பட்ட எண்ணம் கொண்டவள் ஆவேன். அவர் களைப்புடன் வந்த காரணத்தினால் அவருக்கு வேண்டிய பணிவிடைகள் செய்துவிட்டு வருவதற்குத் தாமதம் ஆனது", என்றாள். இதனைக் கேட்ட கௌசிகன் என்ற அந்த அந்தணன், "உனக்கு உன்னுடைய கணவனை உபசரிப்பதே பெரிதாக உள்ளதே! அந்தணர்களிடம் காண்பிக்கப்பட்ட வேண்டிய மரியாதை இல்லையே", என்று குறிப்பாகக் கூறினான். தொடர்ந்து, "இல்லற தர்மத்தில் சிறந்துள்ள நீ அந்தணர்களை இவ்விதம் அவமதிப்பது கூடாது என்பதை அறிவாயாக", என்றான். இதனைக் கேட்ட அந்தப் பெண், "நான் அந்தணர்களை எப்போதும் அவமரியாதை செய்பவள் அல்லள். அந்தணர்களின் பெருமைகளை நான் நன்றாகவே அறிவேன்", என்று விரிவாகக் கூறினாள். மேலும் அவள், "இந்தக் குற்றத்தைத் தாங்கள் பொறுத்து கொள்ளவேண்டும். நான் 'கணவனே தெய்வம்' என்றுள்ளதால், அவருக்கு ஏற்ற பணிவிடைகளைச் செய்வதில் பரவசம் அடைந்து நின்றேன். இவ்விதம் எனது கணவருக்குச் செய்யும் பணிவிடைகள் மூலம் நான் பெற்ற வலிமையை நீவீர் காண்கிறீரா? உம்முடைய கோபம் காரணமாக ஒரு கொக்கு எவ்விதம் எரிந்து சாம்பலானது என்பதை நான் இங்கிருந்தபடியே அறிவேன்", என்றாள்.

**வ்யாக்யானம்** – "க்ரோதச் சத்ருச் சரீர ஸ்த்தோமநுஷ்யாணாம் த்விஜோத்தம, ய: க்ரோத மோஹௌ த்யஜதி தம் தேவா ப்ராஹ்மணம் விது:" என்று தொடங்கி, "காமக்ரோதாதிகள் ப்ராஹ்மணனுக் காகாது, ஸத்யார்ஜவாதிக ளுண்டாக வேணும்" என்று விஸ்தரேண தான் ப்ரதிபாதித்து, "பவாநபிச தர்மஜ்ஞஸ் ஸ்வாத்யாய நிரதச்சுசி:, நது தத்வேந பகவந் தர்மாந் வேத்ஸீதி மே மதி:, மாதாபித்ருப்யாம் சுச்ரூஷூஸ் ஸத்யவாதீ ஜிதேந்த்ரிய:, மிதிலாயம் வஸந் வ்யாதஸ் ஸ தே தர்மாந் ப்ரவக்ஷ்யதி, தத்ர கச்சஸ்வ பத்ரம் தே யதா காமம் த்விஜோத்தம – வ்யாத: பரமதர்மாத்மா ஸதேச்சேத்ஸ்யதி ஸம்சயாந்" என்று, "நீரும் தர்மஜ்ஞர், வேதாத்யயந நிரதர், சுத்தர், ஆயிருக்கச்செய்தேயும், தர்மங்களை உள்ளபடி யறியீர் என்றெனக்கு நினைவு, மாதாபித்ரு சுச்ரூஷுவாய் ஸத்யவாதியாய் ஜிதேந்த்ரியனாய்க் கொண்டு மிதிலையிலே யிருக்கிற வ்யாதன் உமக்கு தர்மங்களைச் சொல்லக்கடவன், அங்கே போம், உமக்கு நன்மை யுண்டாவதாக, பரமதர்மாத்மாவா

யிருக்கிற அந்த வ்யாதன் வேண்டினபடி யும்முடைய ஸம்சயங்களை யெல்லாம் போக்கக் கடவன்" என்ன;

**விளக்கம்** - மஹாபாரதம் – க்ரோதச் சத்ருச் சரீர ஸ்த்தோமநுஷ்யாணாம் த்விஜோத்தம, ய: க்ரோத மோஹௌ த்யஜதி தம் தேவா ப்ராஹ்மணம் விது: – அந்தணரே! மனிதர்களுக்குக் கோபம் மற்றும் மோகம் என்பதான இரண்டு விரோதிகள் அவர்களுடைய சரீரத்திலேயே உள்ளன. யார் ஒருவன் இந்த கோபத்தையும், மோகத்தையும் விடுகிறானோ அவனைத் தேவன் என்றும், அந்தணன் என்றும் அறிகின்றனர் – என்றுள்ளதைச் சுட்டிக் காண்பித்தவளாய், "ஆசை மற்றும் வெறுப்பு போன்றவை அந்தணர்களுக்கு ஆகாது; உண்மையும், நேர்மையும் மட்டுமே அந்தணர்களுக்கு வேண்டியதாகும்", என்று விரிவாக உரைத்தாள். மேலும் கீழே உள்ள பல வரிகளையும் உரைத்தாள்:

- பவாநபிச தர்மஜ்ஞஸ் ஸ்வாத்யாய நிரதச்சுசி:, நது தத்வேந பகவந் தர்மாந் வேத்ஸீதி மே மதி: - அந்தணரே! தர்மத்தை அறிந்தவராகவும், வேதங்களை விரும்புபவராகவும், சிறந்த ஒழுக்கம் உடையவராகவும் நீவிர் உள்ளபோதிலும், தர்மங்கள் பலவற்றையும் உள்ளது உள்ளபடி நீவீர் அறியவில்லை என்றே நான் எண்ணுகிறேன்.

- மாதாபித்ருப்யாம் சுச்ரூஷுஸ் ஸத்யவாதீ ஜிதேந்த்ரிய:, மிதிலாயம் வஸந் வ்யாதஸ் ஸ தே தர்மாந் ப்ரவக்ஷ்யதி - தாய்தந்தைக்குக் கைங்கர்யம் செய்பவனும், உண்மையை மட்டுமே பேசுபவனும், புலன்களைத் தன்வசப்படுத்தியவனும், மிதிலை நகரத்தில் வாழ்பவனும் ஆகிய வ்யாதன் என்பவன் உமக்குத் தர்மங்கள் குறித்து உரைப்பான்.

- தத்ர கச்சஸ்வ பத்ரம் தே யதா காமம் த்விஜோத்தம – வ்யாத: பரமதர்மாத்மா ஸதேச்சேத்ஸ்யதி ஸம்சயாந் - நீவிர் அந்த இடத்திற்குச் செல்வீராக. உமக்குச் சிறந்த நன்மையும் மங்களமும் ஏற்படும். தர்மத்தில் சிறந்தவனாகிய அந்த வ்யாதன் உமது விருப்பத்திற்கு ஏற்றபடி அனைத்து சந்தேகங்களையும் போக்குவான்.

ஆக அந்தப் பெண் கௌசிகனிடம், "நீவிர் தர்மங்களை அறிந்தவர், வேத அத்யயனம் செய்தவர், தூய்மையான எண்ணங்களுடன் உள்ளவர். ஆயினும் தர்மங்களை உள்ளது

உள்ளபடி நீவிர் அறியவில்லை என்பதே எனது எண்ணம் ஆகும். தாய்தந்தைக்கு ஏற்ற பணிவிடைகள் செய்தபடி உள்ளவனாகவும், உண்மையை மட்டுமே உரைப்பவனாகவும், புலன்களை வென்றவனாகவும், மிதிலையில் வாழ்கின்றவனாகவும் உள்ள வ்யாதன் என்பவன் தர்மங்களை உமக்கு ஏற்ப உபதேசிப்பானாக. நீவிர் அங்கு செல்வீராக. உமக்கு ஏற்ற நன்மைகள் அங்கு உண்டாகும். மிகவும் உயர்ந்த தர்மங்களில் சிறந்தவனாகிய அந்த வ்யாதன், நீவிர் வேண்டியபடி உமக்குத் தெளிய வேண்டிய சந்தேகங்களையும் போக்குவான்", என்றாள்.

**வ்யாக்யானம்** - அவன் ப்ரீதனாய் இவளைக் கனக்க ஸ்தோத்ரம் பண்ணி, அங்கு நின்றும் மிதிலையிலே சென்று, "பஞ்ச காநி பவித்ராணி சிஷ்டாசாரேஷு நித்யதா, ஏதந் மஹாமதே வ்யாத ப்ரப்ரவீஹி யதாததம்" என்று – "சிஷ்டாசாரங்களிலே யெப்போது முளவாயிருக்கிற பவித்ரங்களஞ்சுமெவை? மஹாமதியானவனே! இத்தைச் சொல்லவேணும்" என்ன; "யஜ்ஞோ தாநம் தபோ வேதாஸ் ஸத்யஞ்ச த்விஜ ஸத்தம, பஞ்சைதாநி பவித்ராணி சிஷ்டாசாரேஷு நித்யதா" என்று - "யஜ்ஞமும் தாநமும் தபஸ்ஸும் வேதங்களும் ஸத்யமுமாகிற பவித்ரங்களானவிவை யைந்தும் சிஷ்டாசாரங்களிலே யெப்போது முளவாயிருக்கும்" என்று இத்யாதியாலே அவனித்தை யுபதேசிக்க, இப்படி மேன்மேலும் தனக்கு ஸம்சயமானவை யெல்லாமிவன் கேட்கக்கேட்க, உபதேசமுகத்தாலே ஸகலதர்ம ஸம்சயங்களையும் தர்மவ்யாத னறுத்த ப்ரகாரத்தை தர்மபுத்ரர்க்கு மார்க்கண்டேய னநுக்ரஹித்ததாக ஆரண்ய பர்வத்திலே இருநூறாமத்யாயம் தொடங்கிப் பதின்மூன்ற த்யாயத்தாலே பரக்கச் சொல்லப்பட்டதிறே. இன்னமு மிப்படி பலருமிவன் வாசலிலே துவண்டு தர்ம ஸந்தேஹங்கள் சமிப்பித்துக் கொண்டமை பலவிடங்களிலுமுண்டு.

**விளக்கம்** - இதனைக் கேட்ட அந்த அந்தணன் மிகவும் மகிழ்ந்து, அந்தப் பெண்ணின் உள்ளம் நெகிழும்படியாகத் துதித்து, அங்கிருந்து புறப்பட்டு மிதிலைக்குச் சென்றான். மஹாபாரதம் – பஞ்ச காநி பவித்ராணி சிஷ்டாசாரேஷு நித்யதா, ஏதந் மஹாமதே வ்யாத ப்ரப்ரவீஹி யதாததம் - மிகவும் சிறந்த ஞானம் கொண்ட வ்யாதனே! நல்லவர்களின் ஒழுக்கங்களில் மிகவும் தூய்மையானதும், எப்போதும் நிலைக்கவேண்டியும் உள்ள ஐந்து விஷயங்கள் எவை – என்றுள்ளபடி வ்யாதனிடம், "நல்லவர்களின் ஒழுக்கங்களில் எப்போதும் உள்ளதும், தூய்மையானதும் உள்ளவை என்றுள்ள ஐந்து விஷயங்கள் எவை? சிறந்த அறிவு கொண்டவனே! இதனை நீ எனக்குக் கூறவேண்டும்", என்றான். இதனைக் கேட்ட வ்யாதன் மஹாபாரதன் – யஜ்ஞோ தாநம் தபோ வேதாஸ் ஸத்யஞ்ச த்விஜ

ஸத்தம, பஞ்சைதாநி பவித்ராணி சிஷ்டாசாரேஷு நித்யதா – அந்தணர்களின் உயர்ந்தவரே! யஜ்ஞம், தானம், தவம், வேதங்கள் உண்மை ஆகிய ஐந்துமே நல்லவர்களின் ஒழுக்கங்களில் மிகவும் தூய்மையானது - என்று கூறியபடி, “யஜ்ஞம், தானம், தவம், வேதங்கள் மற்றும் உண்மை என்பதான ஐந்து தூய்மைகளே நல்லவர்களின் ஒழுக்கங்களில் காணப்படும்”, என்று தொடங்கி உபதேசம் செய்தான். இவ்விதம் கௌசிகன் தனக்கு இருந்த சந்தேகங்கள் அனைத்தையும் கேட்கக் கேட்க, உபதேசம் மூலமாக அனைத்துவிதமான தர்மங்கள் பற்றிய சந்தேகங்களை வ்யாதன் வேருடன் நீக்கினான். இப்படியாக இந்த நிகழ்வு பற்றி தர்மபுத்திரரிடம் மார்க்கண்டேய மஹரிஷி உரைத்ததாக, மஹாபாரதம் ஆரண்யபர்வம் இருநூறாம் அத்யாயம் தொடங்கி, பதின்மூன்று அத்யாயங்களில் விரிவாக உரைக்கப்பட்டது காண்க. இப்படியாக மேலும் பலரும் அந்த வேடனின் வீட்டு வாயிலுக்கு வந்து, தர்மங்கள் குறித்த சந்தேகங்கள் பற்றிய கேள்விகளை எழுப்பி, தெளிந்து சென்றனர் என்பதைப் பல இடங்களில் காணலாம்.

**வ்யாக்யானம்** – இத்தால், ஜந்மாத்யுத்க்ருஷ்டரானவர்களுக்கு ததபக்ருஷ்டரானவர்கள் ஜ்ஞாநாதிகராயிருக்கில் அவர்கள் வாசலிலே துவண்டு ஜ்ஞாதவ்யார்த்தங்கள் கேட்கக் குறையில்லை யென்னுமிடம் காட்டப்பட்டது.

**விளக்கம்** - இதன் மூலம் பிறவி போன்றவற்றால் உயர்ந்தவர்களுக்கு, அவற்றால் தாழ்ந்தவர்களாக உள்ளபோதிலும், அறிவாளிகளாக இருந்தால் அவர்களது வீட்டின் வாயிலில் சென்று தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்களைக் கேட்டு அறிந்து கொள்வதில் எந்தவிதமான தோஷமும் இல்லை என்று உணர்த்தப்பட்டது.

232. க்ருஷ்ணன் பீஷ்மத்ரோணாதிகள் க்ரஹங்களை விட்டு ஸ்ரீவிதுரர் திருமாளிகையிலே அமுது செய்தான்.

**அவதாரிகை** – அநந்தரம், “யத்யதாசரதி ச்ரேஷ்ட:” என்று க்ருஷ்ணனாசரித்த படியை யருளிச் செய்கிறார் (க்ருஷ்ணன்) என்று தொடங்கி.

**விளக்கம்** - அடுத்து கீதையில் (3-21) – யத் யத் ஆசரதி ச்ரேஷ்ட: - உயர்ந்தவர்கள் எந்தக் கர்மங்களை இயற்றுகிறார்களோ (அந்தக் கர்மங்களை மற்றவர்களும் இயற்றுகிறார்கள்)

என்று தான் கூறியதற்கு ஏற்ப க்ருஷ்ணன் தானே நடந்துகொண்டதை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - தர்ம ஸம்ஸ்தாபநார்த்தமாக வவதரித்தருளி, "லோக ஸங்க்ரஹமேவாபி ஸம்பச்யந் கர்த்துமர்ஹஸி" என்று – "ஜ்ஞாநியானாலும் லோக ஸங்க்ரஹத்தைப் பார்த்து வர்ணாச்ரம தர்மங்களை நன்றாக வநுஷ்டிக்கவேணும்" என்று உபதேசித்தும், "யதிஹ்யஹம் நவர்த்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித:, மம வர்த்மாநுவர்த்தந்தே மநுஷ்யா, பார்த்த ஸர்வச:" என்று "ஒருக்கால் கர்மத்தில் சோம்பாதே நான் ப்ரவர்த்தியேனாகில் மநுஷ்யரெல்லாம் மென்வழியைப் பின்செல்லும்" என்றபடியே பரார்த்தமாகத் தான் குறிக்கொண்ட நுஷ்டித்துப் போரும் ஸ்வபாவனிறே க்ருஷ்ணன்; ஏவம் பூதனானவன் ஸ்ரீதூதெழுந்தருளினபோது, "பீஷ்மத்ரோணா வதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந, கிமர்த்தம் புண்டரீகாக்ஷ புக்தம் வ்ருஷல போஜநம்" என்னும்படி - உத்க்ருஷ்ட வர்ண வ்ருத்தராய் இங்கே யெழுந்தருளுவரென்று பார்த்துக் கொண்டிருந்த பீஷ்மாதிகளுடைய க்ருஹங்களை யுபேக்ஷித்து, வர்ணாத் யுத்கர்ஷ ரஹிதராய் அத்தாலே இங்கே யெழுந்தருளுவரென்னும் நினைவுமற்றிருந்த ஸ்ரீவிதுரர் திருமாளிகையிலே ஸாதரமாகச் சென்று புக்கு, "ஸம்ப்ரமைஸ் துஷ்ய கோவிந்த ஏதந் ந: பரமம் தநம்" என்று – பக்திபரவசரான வவர் பண்ணின ஸம்ப்ரமங்களை யெல்லாங்கண்டுகந்து, "விதுராந்நாதி புபுஜே சுசீநி குணவந்திச" என்கிறபடியே - அஹங்காரோபஹத மல்லாமையாலே பரமபாவநமாய், பக்தியுபஹ்ருத மாகையாலே பரமபோக்யமாயிருக்கிற அந்நத்தை, அந்த பாவநத்வ போக்யத்வங்களடியாக அத்யாதரம் பண்ணி யமுதுசெய்தானிறே.

**விளக்கம்** - தர்மமார்க்கத்தை நிலை நாட்டவேண்டும் என்பதற்காக க்ருஷ்ண அவதரித்தருளினான். கீதை (3- 20) – லோக ஸங்க்ரஹமேவாபி ஸம்பச்யந் கர்த்துமர்ஹஸி – உலகத்தில் உள்ளவர்களின் நன்மையைக் கருதி கர்மங்களை இயற்றியபடி இருத்தல் வேண்டும் - என்று கூறுவதற்கு ஏற்ப, "ஞானியாக உள்ளபோதிலும் உலகினரின் நன்மையைக் கருத்தில் கொண்டு வர்ணாச்ரம தர்மங்களைச் செய்வனே இயற்ற வேண்டும்", என்று உபதேசித்தான். மேலும் கீதை (3-23) - யதிஹ்யஹம் நவர்த்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித:, மம வர்த்மாநுவர்த்தந்தே மநுஷ்யா, பார்த்த ஸர்வச: – அர்ஜுனா! நான் சோம்பல் இல்லாமல் எப்போதும் கர்மத்தில் ஈடுபடாமல் இருந்தேன் என்றால், இந்த உலகமக்கள் என்னைப் பின்பற்றத் தொடங்கிவிடுவர் - என்றது காண்க; அதாவது, "நான் எனக்கு உரிய கர்மங்களைச் சோம்பல் இன்றி இயற்றவில்லை என்றால்

அனைத்து மனிதர்களும் இதே வழியைப் பின்பற்றுவர்", என்றான். ஆகவே மற்றவர்களின் பொருட்டு தனது கர்மங்களை இயற்றியபடி உள்ள ஸ்வபாவம் கொண்டவனாக க்ருஷ்ணன் இருந்தான். இப்படிப்பட்ட க்ருஷ்ணன் பாண்டவர்களின் பொருட்டு துரியோதனனிடம் தூது சென்றான். அப்போது மஹாபாரதம் உத்யோகபர்வம் – பீஷ்மத்ரோணா வதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந, கிமர்த்தம் புண்டரீகாக்ஷ புக்தம் வ்ருஷல போஜநம் – மதுசூதனா! தாமரை போன்ற கண்கள் கொண்டவனே! பீஷ்மர், துரோணர் மற்றும் என்னையும் விடுத்து தாழ்ந்த குலத்தவரான விதுரர் வீட்டில் எவ்விதம் உணவு உட்கொண்டாய் - என்றது காண்க. அதாவது உயர்ந்த குலம், ஒழுக்கம் போன்றவற்றைக் கொண்டவர்களான பீஷ்மர் போன்றவர்கள் க்ருஷ்ணன் இங்கே தங்களது இல்லத்திற்கு எழுந்தருள்வான் என்று எதிர்பார்த்தபடி இருந்தனர். ஆனால் இந்த வீடுகளை விரும்பாமல், பிறப்பு போன்றவற்றால் எந்தவிதமான உயர்வும் இல்லாதவரும், இதன் காரணமாகத் தனது வீட்டிற்கு க்ருஷ்ணன் எழுந்தருள்வான் என்ற நினைவு அற்றவருமாகிய விதுரரின் இல்லத்திற்கு க்ருஷ்ணன் தானாகவே விருப்பத்துடன் எழுந்தருளினான். அங்கு விதுரர், மஹாபாரதம் உத்யோகபர்வம் - ஸம்ப்ரமைஸ் துஷ்ய கோவிந்த ஏதந் ந: பரமம் தநம் – கோவிந்தா! உன்னுடைய இந்த வருகை என்பது எங்களுக்கு மிகவும் உயர்ந்த செல்வம் ஆகும், இதனைக் கண்டு நீ மகிழ்வாயாக - என்று கூறியதற்கு ஏற்ப விதுரர் பக்திப் பரவசத்துடன் செய்தருளிய செயல்களைக் கண்டு மிகவும் உகப்படைந்தான். மஹாபாரதம் உத்யோகபர்வம் – விதுராந்நாதி புபுஜே சுசீநி குணவந்திச - தூய்மையானதாகவும், அன்பு கலந்ததாகவும் இருந்த விதுரர் அளித்த உணவை க்ருஷ்ணன் உட்கொண்டான் - என்றுள்ளது காண்க; அதாவது அஹங்காரம் கலக்காமல் உள்ளதால் மிகவும் தூய்மை கொண்டதாகவும், பக்தியும் இருந்ததால் மிகவும் இனிமையாகவும் விளங்கிய உணவைக் கண்ட க்ருஷ்ணன், அந்தத் தூய்மை மற்றும் இனிமைக்காகவே உண்டான்.

## 233. பெருமாள் ஸ்ரீசபரி கையாலே அமுது செய்தருளினார்.

**அவதாரிகை** - ஏதத்பூர்வாவதாரத்திலும் இப்படி யநுஷ்டித்த ப்ரகாரத்தை யருளிச் செய்கிறார் (பெருமாள்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இத்தகைய க்ருஷ்ணாவதாரத்திற்கு முந்தைய அவதாரமான இராமாவதாரத்திலே இது போன்றே செய்ததை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ரகுகுல திலகராய் ஆசார ப்ரதாநரான பெருமாள், “சபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராமோ தசரதாத்மஜ:” என்னும்படி – வேடுவச்சியாய் வைத்தே குரு சுச்ரூஷையிலே பழுத்து ஜ்ஞாநாதிகையாய், தன்னாவுக் கினியதாயிருந்த பல மூலதிகளெல்லா மிங்குத்தைக்கு என்று ஸஞ்சயித்துக் கொண்டு வரவு பார்த்திருந்த ஸ்ரீசபரி, தன்னாதராநுகுணமாகத் தன் கையாலே யமுது செய்யப்பண்ண, அதி ஸந்துஷ்டராயமுது செய்தாரென்கை. இத்தால் – அபிஜநாதிகளால் வருமபிமாந கந்தமற்ற ஜ்ஞாநப்ரேமாதிகருடைய அபிமாந ஸ்பர்சமுள்ளவை ஆத்மகுணைக தர்சிகளான விசேஷஜ்ஞர்க்கு அதீவ பாவந போக்யங்களாயிருக்கு மென்னுமிடம் காட்டப்பட்டது.

**விளக்கம்** - ரகுவம்சத்தில் தோன்றியவர்களில் உயர்ந்தவனும், ஒழுக்கத்தில் நிலைநின்றவனும் ஆகிய இராமன் செய்ததைக் காண்போம். இராமாயணம் ஆரண்ய காண்டம் (1-5-7) - சபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராமோ தசரதாத்மஜ: - சபரியை அடைந்த தசரதனின் புத்ரனாகிய இராமன் அந்தச் சபரியால் நன்றாக ஆராதிக்கப்பட்டான் – என்றது காண்க. சபரி என்பவள் வேடுவிச்சியாக உள்ளபோதிலும் தன்னுடைய ஆசார்யர்களுக்கு மிகவும் சிறந்த கைங்கர்யம் செய்பவளாக, ஞானத்தில் மேன்மை பெற்றவளாக, தனது நாக்கில் சுவைத்து எவை இனிமையாக இருந்தனவோ அந்தப் பழங்கள் மற்றும் கிழங்குகள் பலவற்றையும் இராமனுக்கு அளிக்கவேண்டும் என்று சேர்த்து வைத்தவளாக இருந்தாள். இராமனின் வரவை எதிர்பார்த்தபடியும் இருந்தாள். இராமன் அங்கு எழுந்தருளியபோது தனது அன்பிற்கு ஏற்றபடி, இராமனைத் தனது கையாலேயே அவற்றை உண்ணும்படிச் செய்தாள். இதனால் மகிழ்வுடன் இராமன் அவற்றை உட்கொண்டான். இதன் மூலம் (கடந்த இரு சூர்ணைகள்) உயர்ந்த குலத்தில் பிறவி போன்றவை மூலமாக உண்டாகவல்ல அஹங்காரம் கலக்காத ஞானத்தாலும், அன்பாலும் நிறைந்துள்ளவர்களுடைய அன்புடன் கலந்த அனைத்துமே, ஆத்மகுணத்தை உணர்ந்த பெரியவர்களுக்குத் தூய்மையும் இனிமையும் கூடியதாகவே இருக்கும் - என்பது கூறப்பட்டது.

234. மாறனேரிநம்பி விஷயமாகப் பெரியநம்பி உடையவர்க்கருளிச் செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.

**அவதாரிகை** - இப்படி ஸ்ரீராமாயண மஹாபாரத ஸித்தமான சிஷ்டாசாரங்களாலே பாகவத வைபவத்தை ப்ரகாசிப்பித்தார் கீழ்; இன்னமு மிவ்வர்த்த விஷயமாக பூர்வாசார்ய வசநத்தை ஸ்மரிப்பிக்கிறார் (மாறனேரி நம்பி) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக இராமாயணம் மற்றும் மஹாபாரதம் போன்றவற்றில் காணப்படுகின்ற நல்லவர்களின் ஒழுக்கங்கள் மூலமாக பாகவதர்களின் மேன்மையை உணர்த்தினார். இனி இதே கருத்தைப் பூர்வாசார்யர்களின் சொற்கள் மூலமாகவும் உணர்த்துகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அபிமாந ஹேதுவான ஜந்ம வ்ருத்தாதிகளின்றிக்கே ஆளவந்தார் ஸ்ரீபாதத்தையுடையராய் அத்யாத்ம ஜ்ஞான பரிபூர்ணராயிருக்கிற மாறனேரிநம்பி, தம்முடைய அந்திம தசையிலே, "ஆளவந்தா ரபிமாநித்தருளின வித்தேஹத்தை ப்ரக்ருதி பந்துக்கள் ஸ்பர்சிக்கில் செய்வதென்!" என்று அதிசங்கை பண்ணி, ஸப்ரஹ்மசாரிகளான பெரியநம்பியைப் பார்த்து, "புரோடாசத்தை காய்க்கிடாதே கிடீர்" என்றருளிச்செய்து திருநாட்டுக்கெழுந்தருள; பெரியநம்பியும் அப்படியே பிறர் கையில் காட்டிக்கொடாதே தாமே பள்ளி படுத்துவந் தெழுந்தருளியிருக்க; இத்தை உடையவர் கேட்டருளி, பெரியநம்பி ஸ்ரீபாதத்திலே வந்து, "ஜீயா, மரியாதை கிடக்கக் காரியஞ் செய்யவேண்டாவோ, தேவரீர் செய்தருள வேண்டிற்றோ" என்ன, "ஆளிட்டந்தி தொழவோ? நான் பெருமாளிற்காட்டி லுத்க்ருஷ்டனோ, இவர் பெரியவுடையாரிற் காட்டி லபக்ருஷ்டரோ, "பயிலுஞ் சுடரொளி நெடுமாற்கடிமை கடலோசையோபாதியோ, ஆழ்வாரருளிச் செய்த வர்த்தத்தைச் சிறிது குறையவாகிலு மாசரிக்கவேண்டாவோ" என்றருளிச்செய்த வார்த்தை.

**விளக்கம்** - அஹங்காரம் போன்ற பல தாழ்வுகளுக்கும் காரணமாக உள்ள உயர்ந்த குலப் பிறப்பு, ஆசாரம் போன்ற ஏதும் இல்லாதவராக, ஸ்வாமி ஆளவந்தாரின் திருவடிகளை மட்டுமே பற்றியவராக, ஆத்மாவைப் பற்றி உள்ளது உள்ளபடி அறிந்தவராக ஸ்வாமி மாறனேரிநம்பி என்பவர் இருந்தார். அவர் தன்னுடைய அந்திமகாலத்தில், "ஸ்வாமி ஆளவந்தாரின் ஸம்பந்தம் பெற்று, அவர் அபிமானத்திருந்த இந்தச் சரீரத்தை, இந்தச் சரீரத்தின் உறவினர்களான தாழ்ந்தவர்கள் வந்து தீண்டி, இறுதிச் சடங்குகள் செய்தால் என்ன செய்வது?", என்று எண்ணி வருந்தினார். அப்போது அங்கிருந்த ஆளவந்தாரின் மற்றோரு சிஷ்யரான ஸ்வாமி பெரியநம்பியிடம், "புரோடாசத்தை நாய்க்கு அளித்து

விடாதீர் (புரோடாசம் என்றால் யாகத்தில் தேவர்களுக்கு அளிக்கப்படும் ஒருவிதமான அடை)", என்றார் (அதாவது தனது சரீரத்தைத் தனது பந்துக்கள் தீண்டாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றார்). அதன் பின்னர் திருநாட்டுக்கு எழுந்தருளினார். அதன் பின்னர் பெரியநம்பியும் அவர் கூறியபடி மற்றவர்கள் ஈமக்கடன்கள் செய்துவிடாதபடி, தானே முன்னின்று இறுதிச்சடங்குகளைச் செய்துவிட்டு வந்தார். இதனை உடையவர் அறிந்தார். உடனே அவர் பெரியநம்பியின் திருவடிகளில் பணிந்து அவரிடம், "ஸ்வாமி! சாஸ்த்ரங்களின் வரம்பை மீறுவதான இது போன்ற செயல்களை நீவிர் செய்யலாமோ", என்றார். இதனைக் கேட்ட பெரியநம்பி உடையவரிடம், "நாம் செய்யவேண்டிய ஸந்த்யாவந்தனம் போன்றவற்றை மற்றொருவர் மூலமாகவா செய்ய இயலும்? நான் இராமனைக் காட்டிலும் உயர்ந்தவனோ? மாறனேர்நம்பி ஜடாயுவைக் காட்டிலும் தாழ்ந்தவரோ? (அதாவது, இராமனே ஜடாயுவுக்கு அந்திமச் சடங்குகள் செய்தபோது இந்தச் செயல் மிகவும் குறைந்ததே என்று கருத்து). திருவாய்மொழி (3-7) - பயிலும் சுடரொளி, (8-10) – நெடுமாற்கடிமை - போன்றவற்றில் நம்மாழ்வார் அருளிச்செய்த பாகவதர்களின் மேன்மை என்பது கடல் ஓசை போன்று எந்தவிதமான பயனும் இல்லாத ஓசையோ? ஆழ்வார் அருளிச்செய்த அந்தச் சொற்களை நாம் சிறிதளவாவது நடைமுறையில் செயல்படுத்த வேண்டாமோ?", என்றார்.

235. ப்ராதுர்ப்பாவை: இத்யாதி.

**அவதாரிகை** – இனி, பாகவத ஜந்மாதி ச்லாக்யதா கதநபூர்வகமாக, அபாகவதோத்கர்ஷ நிந்த்யதையை ப்ரகாசிப்பிக்கிறார் (ப்ராதுர்ப் பாவை) இத்யாதி என்று.

**விளக்கம்** – அடுத்து பாகவதர்களின் பிறப்பு போன்ற பலவும் சிறந்தவை என்றுள்ளதை முன்னிட்டுக்கொண்டு, பாகவதர் அல்லாதவரின் மேன்மைகள் தாழ்ந்தவையே என்பதை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "ப்ராதுர்ப்பாவைஸ் ஸுரநர ஸமோ தேவதேவஸ் ததீயா ஜாத்யா வ்ருத்தைரபிச குணதஸ் தாத்ருசோ நாத்ர கர்ஹா, கிந்து ஸ்ரீமத், புவநபவந த்ராணதோந்யேஷு வித்யா வ்ருத்த ப்ராயோ பவதி விதவா கல்பகல்ப: ப்ரகர்ஷ:" இத்தால் - அயர்வறு மமரர்களதிபதியானவன் ப்ராதுர்ப் பாவங்களாலே ஸுர நர ஸஜாதீயனாகா நிற்கும், ததீயரும் ஜாதியாலும் வ்ருத்தங்களாலும் குணத்தாலுமப்படியே இதர ஸமரா

இருப்பார்கள், இதில் கர்ஹையில்லை, ச்லாக்யையே யுள்ளது, உபயருமிப்படி நிற்கிறது இந்த லோகரக்ஷண நிமித்தமாக, இனி அபாகவதர் பக்கலுண்டான வித்யா வ்ருத்த பாஹுள்ய ரூபமான உத்கர்ஷம் விதவாலங்காரம்போலே நிந்த்யமாகா நின்றதென்கிறது.

**விளக்கம் -** ப்ராதுர்ப்பாவைஸ் ஸுரநர ஸமோ தேவதேவஸ் ததீயா ஜாத்யா வ்ருத்தைரபிச குணதஸ் தாத்ருசோ நாத்ர கர்ஹா, கிந்து ஸ்ரீமத், புவநபவந த்ராணதோந்யேஷு வித்யா வ்ருத்த ப்ராயோ பவதி விதவா கல்பகல்ப: ப்ரகர்ஷ: - ஸர்வேச்வரன் தன்னுடைய பல அவதாரங்களில் தேவர்கள் மற்றும் மனிதர்கள் ஆகியோருக்கு ஒத்தபடி அவதரிக்கிறான்; அவனது ஸம்பந்தம் காரணமாக உயர்ந்த ஞானம் பெற்றவர்கள் பிறந்த குலம், ஒழுக்கம் மற்றும் குணங்களால் அவ்விதமே பிறக்கின்றனர்; பாகவதர்களைப் பொறுத்தவரை இது இகழத்தகுந்தது அல்ல (அதாவது இவ்விதம் மற்றவர்களுக்குச் சமமாகப் பிறத்தல்). பாகவதர்கள் விஷயத்தில் இது எவ்விதம் உயர்ந்தது என்றால் அவர்கள் உலகைக் காப்பாற்றும் பொருட்டு அவதரிப்பதால் ஆகும். பாகவதர்கள் அல்லாதவர்களிடம் காணப்படும் கல்வி, ஒழுக்கம் போன்றவற்றின் மேன்மை என்பது விதவையின் அலங்காரம் போன்று பழிப்பதற்கு ஏற்றதாக ஆகிறது - என்றது காண்க. ஆக, அயர்வறும் அமரர்களின் அதிபதியான ஸர்வேச்வரன் தனது அவதாரங்கள் காரணமாக தேவர்கள் மற்றும் மனிதர்கள் ஆகியவர்களுடன் ஒத்தவனாகவே நிற்பான்; அவனால் ஞானம் பெற்ற முமுக்ஷுக்கள் குலம், ஒழுக்கம் மற்றும் குணம் ஆகியவற்றால் மற்ற மனிதர்கள் போன்றே இருப்பார்கள்; இவற்றில் எந்தவிதமான தாழ்வும் இல்லை, உயர்வே உள்ளது. ஏனென்றால் இவர்கள் இவ்விதம் உள்ளது என்பது, இந்த உலகத்தைக் காப்பாற்றும் பொருட்டே என்பதால் ஆகும். பாகவதர்கள் அல்லாதவர்களிடம் காணப்படுகின்ற கல்வி, ஒழுக்கம் போன்றவை மூலம் அவர்களுக்கு உண்டாகும் மேன்மை என்பது விதவைக்குச் செய்யும் அலங்காரம் போன்று பலராலும் பழிக்கப்படுவதே ஆகும்.

236. பாகவதனன்றிக்கே வேதார்த்தஜ்ஞாநாதிகளையுடையவன் குங்குமம் சுமந்த கழுதையோபாதியென்று சொல்லாநின்றதிறே.

**அவதாரிகை** - பாகவதர்களன்றென்னா அவர்களுக்குண்டான வேதவித்யாதிகள் வ்யர்த்தமாமோவென்ன; அப்படி ப்ரமாணம் சொல்லா நின்றதிறே யென்கிறார் (பாகவத னன்றிக்கே) என்று தொடங்கி.

**விளக்கம்** - பாகவதர்கள் அல்லாதவர்களுக்கு வேதங்களில் உள்ள அறிவு போன்றவை வீணாகப்போகுமோ என்ற கேள்வி எழலாம். இதற்கு, "வீணாகப்போகும் என்றே ப்ரமாணம் உரைக்கிறது", என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "சதுர்வேத தரோ விப்ரோ வாஸுதேவம் நவிந்ததி, வேத பார பராக்ராந்தஸ் ஸவை ப்ராஹ்மண கர்தப:" என்று வேத தாத்பர்யமான பகவத் ஜ்ஞாநாதிக ளில்லாமையாலே, பாகவதனன்றிக்கே வேதாத்யயநத்தோடே அதில் ஸ்தூலார்த்த ஜ்ஞாநாதிகளை யுடையனா யிருக்குமவன், போகிகளாயிருப்பார் விரும்பும் பரிமள த்ரவ்யமான குங்குமத்தைச் சுமந்து திரியா நிற்கச்செய்தே அதின் வாசியறியாத கழுதை போலே, பூர்வோத்தர பாகங்களால் ஆராதந ஸ்வரூபத்தையும் ஆராத்ய ஸ்வரூபத்தையும் ப்ரதிபாதியாநின்று கொண்டு பகவதேகபரமாயிருக்கிற வேதமாகிற விலக்ஷண வஸ்து பாரத்தைக் கினியச் சுமந்து கொண்டிருக்கச் செய்தே அதன் சுவடறியாத ப்ராஹ்மணக் கழுதை யென்று வேதோபப்ரும்ஹணமான ப்ரமாணம் சொல்லாநின்றதிறே யென்கை.

**விளக்கம்** - சதுர்வேத தரோ விப்ரோ வாஸுதேவம் நவிந்ததி, வேத பார பராக்ராந்தஸ் ஸவை ப்ராஹ்மண கர்தப: – ஓர் அந்தணன் நான்கு வேதங்களை அறிந்தவனாக உள்ளபோதிலும் எங்கும் நிறைந்த வாஸுதேவனை அறியவில்லை என்றால் அவன் வேதங்கள் என்னும் பாரத்தைச் சுமக்கின்ற அந்தணக்கழுதையே ஆகிறான் - என்றது காண்க. ஆகவே பாகவதன் அல்லாதவன் வேதங்களை எப்போதும் அத்யயனம் செய்து, அவற்றில் உரைக்கப்பட்ட பொருளை மேலோட்டமாக அறிந்துள்ளான் என்று வைத்துக் கொள்வோம்; இவன் பாகவதன் அல்லாத காரணத்தால் அந்த வேதங்களால் கூறப்படும் ஸர்வேச்வரன் பற்றி எந்தவிதமான ஞானமும் இல்லாதவன் ஆகிறான். இவன் எப்படிப்பட்டவன் என்பதை அடுத்து உரைக்கிறார். இன்பத்தில் மட்டுமே ஆசை கொண்டுள்ளவர்கள் விரும்புகின்ற பரிமளம் வீசுவதான குங்குமத்தைச் சுமந்து நின்றபோதிலும் அதன் வேறுபாட்டினை, அதனைச் சுமக்கின்ற கழுதை எப்போதும் அறியாது. அது போன்று - வேதங்களின் பூர்வபாகம் எனப்படும் கர்மகாண்டத்தில் ஸர்வேச்வரனுடைய ஆராதனையின் தன்மை குறித்தும், உத்தரபாகம் எனப்படும் ஞானகாண்டத்தில் ஸர்வேச்வரனின் தன்மை குறித்தும் கூறப்பட்டதால், ஸர்வேச்வரனை மட்டுமே அறிவிக்கின்றது என்ற பெருமை கொண்ட வேதங்களின் மேன்மையான பாரத்தை நன்றாகச் சுமந்தபடி உள்ளான்; அதாவது வேதங்களின் இனிமையை அறியாத அந்தணக்கழுதை என்றே வேதங்களின் ஆழ்பொருளை உணர்த்துகின்ற இதிகாசங்கள் கூறுகின்றன.

237. ராஜாவான ஸ்ரீகுலசேகரப்பெருமாள் திர்யக்ஸ்தாவர ஜந்மங்களையாசைப்பட்டார்.

**அவதாரிகை** - பகவத் ஸம்பந்த ரஹிதமான ஜந்மாதிகள் ஸத்கர்ஹிதமென்னுமத்தை தர்சிப்பித்தார் கீழ்; தத் ஸம்பந்த ஸஹிதமான திர்யக்காதி ஜந்மமும் ஸத்ப்ரார்த்த்ய மென்னுமத்தை தர்சிப்பிக்கிறர் மேல் (ராஜாவான) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஸர்வேச்வரனுடன் தொடர்பு இல்லாத பிறப்பு என்பது சான்றோர்களால் பழிக்கப்படுவதாகும் என்று உரைத்தார். அடுத்து ஸர்வேச்வரனுடன் தொடர்பு கொள்கின்ற விலங்குகள், தாவரங்கள் போன்ற பலவும் பெரியோர்களால் கொண்டாடப்படுகின்றன என்பதை இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, த்விதீயவர்ணரான ஏற்றத்தையுடைய ஸ்ரீகுலசேகரப்பெருமாள், திர்யக்ஸ்தாவர ஜந்மங்களானவை, "வாசிகை: பக்ஷி ம்ருகதாம்" இத்யாதிகளாலே பாபயோநிகளாகச் சொல்லப்படாநிற்கச்செய்தே, "வேங்கடத்துக் கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே", "மீனாய்ப் பிறக்கும் விதியுடையேனாவேனே", "செண்பகமாய் நிற்கும் திருவுடையேனாவேனே", "தம்பகமாய் நிற்கும் தவமுடையேனாவேனே" என்று – திருமலையாழ்வாரோடு ஸம்பந்தமுடைய திர்யக்ஸ்தாவர ஜந்மங்களைப் பெறாப்பேறாக வாசைப்பட்டா ரென்றபடி.

**விளக்கம்** - இரண்டாவது வர்ணம் என்று கூறப்படும் உயர்ந்த க்ஷத்ரிய வம்சத்தில் பிறந்த ஏற்றத்தை உடையவர் ஸ்ரீகுலசேகராழ்வார் ஆவார். வாசிகை: பக்ஷி ம்ருகதாம் – சரீரத்தால் செய்யப்படும் பாவங்களால் மரம், செடி போன்ற பிறப்பையும், வாக்கினால் செய்யப்படும் பாவங்களால் பறவைகள் மற்றும் விலங்குகளின் பிறப்பையும் மனிதன் அடைகிறான் - என்பதற்கு ஏற்ற விலங்குகள் மற்றும் தாவரங்கள் போன்றவை பாவங்களால் உண்டான பிறவிகளாக உள்ளன. இப்படி உள்ளபோது குலசேகராழ்வார் கீழே உள்ள பல வரிகளில் அருளிச்செய்தபடி, ஆதிசேஷனின் அவதாரமாகவே உள்ள திருமலையுடன் ஸம்பந்தம் கொண்டதாலேயே, அந்தந்த விலங்குகள் மற்றும் தாவரங்களின் பிறவிகளை வியந்து பாராட்டி, இந்தப் பிறவிகள் கிடைத்தற்கு அரியவை என்று கொண்டாடினார்:

- பெருமாள் திருமொழி (4-1) – வேங்கடத்துக் கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே

- பெருமாள் திருமொழி (4-2) – மீனாய்ப் பிறக்கும் விதியுடையேனாவேனே
- பெருமாள் திருமொழி (4-4) – செண்பகமாய் நிற்கும் திருவுடையேனாவேனே
- பெருமாள் திருமொழி (4-5) – தம்பகமாய் நிற்கும் தவமுடையேனாவேனே

238. ப்ராஹ்மணோத்தமரான பெரியாழ்வாரும் திருமகளாரும் கோபஜந்மத்தை ஆஸ்தாநம் பண்ணினார்கள்.

**அவதாரிகை** – இப்படி யாசைப்பட்டவளவன்றிக்கே, தாழ்ந்த ஜந்மத்தை யாஸ்த்தாநம் பண்ணினவர்களை யருளிச்செய்கிறார் (ப்ராஹ்மணோத்தமரான) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் ஆசைப்பட்டதுடன் நிற்காமல், தாழ்ந்த பிறவியைத் தங்கள் மீது ஏறிட்டுக் கொண்டவர்கள் (அதாவது தாங்கள் அந்தப் பிறவிகள் என்று எண்ணியவர்கள்) குறித்து இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "இனி இதுக்குமேலில்லை" என்னும்படியான வர்ணத்திலே யவதரித்து வித்யா மாஹாத்ம்யாதிகளாலே தஜ்ஜாதீய ஸகலோத்தமரான பெரியாழ்வாரும், வேதப்பயன் கொள்ளவல்ல அவர் தம்மைப்போலே பேதைப் பருவத்திலே வேத ஸாரார்த்தவித்தமை யாயிருக்கும் அவர் திருமகளான வாண்டாளும், ஸ்ரீக்ருஷ்ணவதாராநுபவத்தில் அபிநிவேசாதிசயத்தாலே, "மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன் நங்காய்", "என் மகன் கோவிந்தன்", "பன்னிரு திங்கள் வயிற்றிற் கொண்டவப் பாங்கினால்" இத்யாதியாலும், "ஆயர்பாடிச் செல்வச் சிறுமீர்காள்", "நாமும் நம் பாவைக்கு", "ஆய்க்குலத்து உன்றன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்" இத்யாதியாலும் தானவளாகப் பேசும்படி, தாங்களவதரித்த வர்ணத்துக்கு மூன்றாம் வர்ணமாகையாலே தண்ணிதாயிருந்துள்ள அறிவொன்றுமில்லாத கோப ஜந்மத்தைப் புரையற வேறிட்டுக் கொண்டார்களென்கை.

**விளக்கம்** - இதற்கு மேல் சிறந்த பிறவி இல்லை என்னும்படியான உயர்ந்த குலத்தில் அவதாரம் செய்து, தன்னுடைய வித்யை போன்ற பலவற்றாலும் தன்னுடைய குலத்தில் உள்ள மற்ற அனைவரைக் காட்டிலும் உயர்ந்தவராகத் திகழ்ந்தவர் பெரியாழ்வார் ஆவார். பெரியாழ்வார் திருமொழி (2-8-10) - வேதப்பயன் கொள்ளவல்ல – என்று கூறும்படியான மேன்மை கொண்ட அவரைப் போன்றே, ஏதும் அறியாத சிறிய வயதிலேயே, வேதங்களின் சாரங்களில் உள்ள ஆழ்பொருளை அறிந்தவர்களில் தலைமையாக நிற்பவளாக அவரது திருமகளான ஆண்டாள் திகழ்ந்தாள். இவர்கள் இருவரும்

க்ருஷ்ணாவதாரத்தின் மீது கொண்டிருந்த அனுபவத்தில் பேசுவதன் காரணமாகக் கீழே உள்ள பல வரிகளை அருளிச்செய்தார்கள்:

- பெரியாழ்வார் திருமொழி (1-1-9) - மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன் நங்காய்
- பெரியாழ்வார் திருமொழி (1-4-1) - என் மகன் கோவிந்தன்
- பெரியாழ்வார் திருமொழி (3-2-8) - பன்னிரு திங்கள் வயிற்றிற் கொண்டவப் பாங்கினால்
- திருப்பாவை (1) - ஆயர்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
- திருப்பாவை (2) - நாமும் நம் பாவைக்கு
- திருப்பாவை (28) - ஆய்க்குலத்து உன்றன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்

மேலே காணப்படும் முதல் மூன்று பாசுர வரிகளால் பெரியாழ்வார் தன்னை யசோதையாகவும், அடுத்துள்ள மூன்று வரிகளால் ஆண்டாள் தன்னை ஆயர்குலச் சிறுமியாகவும் எண்ணியது காண்க. இப்படியாக இவர்கள், தாங்கள் அவதரித்த குலத்துக்கு மூன்றாம் குலமாக உள்ளதால் தாழ்ந்துள்ளதும், திருப்பாவை (28) - அறிவு ஒன்றும் இல்லாத – என்பதற்கு ஏற்றபடி உள்ளதும் ஆகிய ஆயர்களின் குலத்தை எந்தக் குறையும் காணாமல் ஏற்றுக்கொண்டனர்.

239. கந்தல் கழிந்தால் ஸர்வர்க்கும் நாரீணாமுத்தமையுடைய அவஸ்தை வரக்கடவதாயிருக்கும்.

**அவதாரிகை** - இப்படியாசைப்படுகையும் ஆஸ்தாநம் பண்ணுகையுமொழிய, கந்தல் கழிந்தால் ஸ்வரூபமிருக்கும்படிதா னென்னென்ன வருளிச்செய்கிறார் (கந்தல்கழிந்தால்) என்று தொடங்கி. அன்றிக்கே, இப்படி விசிஷ்டவேஷ ப்ரயுக்தமான தாரதம்யா வஸ்தைகளின்றிக்கே கந்தல் கழிந்தால் ஸகலாத்மாக்களுக்கும் வருமவஸ்தைதான் ஏதென்ன வருளிச்செய்கிறா ராகவுமாம் (கந்தல் கழிந்தால்) இத்யாதி.

**விளக்கம்** – இப்படியாக ஆசைப்பட்டதும், தங்களை அவர்களாகவே எண்ணிக் கொண்டதும் இருக்கட்டும்; சரீரம் நீங்கிய பின்னர் ஆத்மாவின் ஸ்வரூபம் எப்படி இருக்கும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். அல்லது சரீரத்துடன்

கூடியுள்ளபோது காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் அல்லாமல், சரீரம் நீங்கிய பின்னர் அனைத்து ஆத்மாக்களுக்கும் ஏற்படும் நிலை என்ன என்று கேட்பதாகவும் கொள்ளலாம்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஆத்மஸ்வரூபத்தை யுள்ளபடி ப்ரகாசியாதபடி அநாதிகால மபிபவித்துப் போந்த வந்தேறியான அவித்யாதி தோஷம் பகவத் ப்ரஸாத விசேஷத்தாலே பின்னாட்டாதபடி ஸவாஸநமாகப் போனால், ஸகலாத்மாக்களுக்கும், "ஸர்வ லக்ஷண ஸம்பந்நா நாரீணா முத்தமாவதூ:" என்கிறபடியே – ஸ்த்ரீத்வ லக்ஷணங்களெல்லாவற்றிலும் குறைவற்று ஸ்வேதர ஸகல ஸ்த்ரீணாமுத்தமையா யிருக்கும் பெரியபிராட்டியாருடைய நிலை தன்னடையே வரக்கடவதாயிருக்குமென்கை.

**விளக்கம்** – ஆத்மஸ்வரூபமானது உள்ளது உள்ளபடி பிரகாசிக்காதபடி, எல்லையற்ற காலமாக அந்தப் பிரகாசத்தை மறைத்துக் கொண்டு இருப்பதும், ஆத்மாவிற்கு இயல்பாக இல்லாமல் நடுவில் வந்து புகுந்து கொண்டதுமாக அவித்யை போன்ற தோஷங்கள் உள்ளன. இவை ஸர்வேச்வரனின் கருணை காரணமாக மீண்டும் வந்து தலைக்காட்டாதபடி அடியுடன் நீங்கக்கூடும். இவ்விதம் நீங்கினால், இராமாயணம் பாலகாண்டம் (1-27) - ஸர்வ லக்ஷண ஸம்பந்நா நாரீணா முத்தமாவதூ: - பெண்களுக்கு உரிய அனைத்துவிதமான லக்ஷணங்களுடன் கூடியவளும், அனைத்துப் பெண்களிலும் உயர்ந்தவளாக இருப்பவளும் ஆகிய சீதை - என்று கூறுவதற்கு ஏற்ப, பெண்களுக்கு இருக்கவேண்டிய அனைத்துத் தன்மைகளும் சற்றும் குறைவில்லாமல் உள்ளவளாக, தன்னைத் தவிர மற்ற பெண்கள் அனைவரையும்விட உயர்ந்தவளாக இருக்கின்ற பெரியபிராட்டியாரின் நிலை தானாகவே அந்த ஆத்மாவிற்கு வந்து சேரும் என்று கருத்து.

240. ஆறு ப்ரகாரத்தாலே பரிசுத்தாத்ம ஸ்வரூபத்துக்கு தத்ஸாம்யமுண்டாயிருக்கும்.

அவதாரிகை - அதெங்ஙனே யென்னு மபேக்ஷையிலே அத்தையுபபாதிக்கிறார் (ஆறு ப்ரகாரத்தாலே) என்று தொடங்கி.

**விளக்கம்** – அத்தகைய ஒற்றுமை எப்படிப்பட்டது என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது அநந்யார்ஹசேஷத்வம், அநந்யசரணத்வம், அநந்யபோக்யத்வம், ஸம்ச்லேஷத்தில் தரிக்கை, விச்லேஷத்தில் தரியாமை, ததேகநிர்வாஹ்யத்வமாகிற ஆறு ப்ரகாரத்தாலே, நிச்சேஷநிவ்ருத்த அவித்யாதி தோஷதயா பரிசுத்தமானவாத்ம ஸ்வரூபத்துக்கு, ப்ரகார ஷட்க பரிபூர்ணையான பிராட்டியோடு ஸாம்யம் நைஸர்கிகமாக வுண்டாயிருக்குமென்கை. இந்த ஸாம்ய ஷட்கத்தை நினைத்திறே, "கடிமாமலர்ப்பாவை யொப்பாள்" என்று ஆழ்வாரருளிச்செய்தது. ஆக இவ்விரண்டு வாக்யமும் ப்ராஸங்கிகம்.

**விளக்கம்** - ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமைப்பட்டிருத்தல் (அநந்யார்ஹசேஷத்வம்), அவனை மட்டுமே தஞ்சம் என்று நம்பியிருத்தல் (அநந்யசரணத்வம்), அவனை மட்டுமே இனிமையாக வஸ்துவாகக் கொண்டிருத்தல் (அநந்யபோக்யத்வம்), அவனுடன் கூடியிருந்தால் மட்டுமே உயிர் தாங்குதல், அவனை விட்டுப் பிரிய நேர்ந்தால் உயிர் தரியாமல் இருத்தல், அவனால் மட்டுமே காப்பாற்றப்படுதல் என்றுள்ள ஆறு தன்மைகள் மூலமாக அடியுடன் தோஷங்கள் நீங்கப் பெற்றதான தூய்மையான ஆத்ம ஸ்வரூபத்துக்கு - இத்தகைய ஆறு தன்மைகளைப் பரிபூர்ணமாக இயல்பாகவே கொண்டுள்ள பெரியபிராட்டியுடனான ஒற்றுமை ஏற்படுகிறது என்று கருத்து. இப்படிப்பட்ட ஆறு தன்மைகளால் ஒற்றுமையைத் திருவுள்ளத்தில் எண்ணியதன் காரணமாகவே பெரிய திருமொழியில் (3-7-9) - கடிமாமலர்ப்பாவை யொப்பாள் - என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்தார். கடந்த இரண்டு சூர்ணைகளும் ப்ராஸங்கிகமாக வந்தன (ப்ராஸங்கிகம் என்றால் – இந்த இடத்துடன் தொடர்பு இல்லை என்றபோதிலும், கூறவேண்டும் என்னும் நினைவு வந்ததால் கூறுவதாகும்).

241. த்ருஷ்டத்திலுத்கர்ஷ மஹங்காரத்திலே; அத்ருஷ்டத்திலுத்கர்ஷ மஹாங்கார ராஹித்யத்தாலே.

**அவதாரிகை –** இனி, அவர்களுத்க்ருஷ்டமான ஜந்மங்களை யுபேக்ஷித்து நிக்ருஷ்டமான ஜந்மங்களை விரும்புவா னென்னென்ன வருளிச்செய்கிறார் (த்ருஷ்டத்தில்) என்று தொடங்கி.

**விளக்கம் –** அவர்கள் (குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள்) உயர்ந்த பிறவிகளை விரும்பாமல் தாழ்ந்த பிறவிகளை விரும்புவது ஏன் என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது ஆபிஜாத்யாதிகளும் ஐச்வர்யமுமாகிற த்ருஷ்ட புருஷார்த்தத்தி லொருவனுக் குண்டாமுயர்த்தி, விச்வாமித்ராதிகளைப்போலே தான் நின்ற நிலைக்கு மேலே உத்கர்ஷம் தேடப்பண்ணு மஹங்காரத்தாலே யுண்டாம்; சேஷத்வாதிகளும் கைங்கர்ய ஸம்பத்துமாகிற அத்ருஷ்ட புருஷார்த்தத்தில் ஒருவனுக்குண்டா முயர்த்தி, இவற்றினுடைய வபிவ்ருத்தியி லாசையாலே நிலைக்குநிலை தாழப்போம்படியான அஹங்கார ராஹித்யத்தாலே யுண்டாமென்கை.

**விளக்கம்** – உயர்ந்த குலப்பிறப்பு, செல்வம் போன்ற பலவும் இந்த உலகில் ஏற்படும் பயன்கள் என்பதால் உண்டாகின்றன; ஆனால் இவற்றால் ஏற்படும் மேன்மை என்பது, விச்வாமித்ரன் போன்று, தங்களுக்குள்ள நிலையைக் காட்டிலும் உயர்வைத் தேடும்படியாகச் செய்விக்கின்ற அஹங்கரத்தால் ஏற்படுவதாகும். அவனுக்கே அடிமைப்பட்டிருத்தல், அவனுக்கே கைங்கர்யம் செய்தல் போன்ற பலவும் அந்த உலகில் ஏற்படவல்லவை ஆகும்; இவற்றால் ஒருவனுக்கு ஏற்படும் மேன்மை என்பது, இவற்றின் வளர்ச்சியில் உண்டான ஆசை காரணமாகப் படிப்படியாகத் தேய்கின்ற அஹங்காரம் இல்லாமையால் உண்டாவதாகும்.

242. ப்ரஹ்மாவா யிழந்துபோதல் இடைச்சியாய்ப் பெற்று விடுதல் செய்யும்படியா யிருக்கும்.

**அவதாரிகை -** இவ்வஹங்கார தத்ராஹித்யங்களிழவு பேறுகளுக்குடலாம்படியை யருளிச் செய்கிறார் (ப்ரஹ்மாவாய்) என்று தொடங்கி.

**விளக்கம் -** இப்படிப்பட்ட அஹங்காரம் என்பது பேற்றை இழப்பதற்கும், அஹங்காரம் இல்லாத தன்மை என்பது பேற்றை அடைவதற்கும் எவ்விதம் காரணமாகின்றன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, த்ருஷ்டோத்கர்ஷாதிசயத்துக்குத் தக்க அஹங்காராதிகனான ப்ரஹ்மாவாய், "த்விபரார்த்தாவஸாநே மாம் ப்ராப்து மர்ஹஸி பத்மஜ" என்றும், "கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணனடிக் கமலந்தன்னை யயன்" என்றும் சொல்லுகிறபடியே இழந்து போதல், அஹங்கார ஹேதுக்களொன்றுமில்லாமையாலே தத்ரஹிதையாய் இடக்கை வலக்கை யறியாத விடைச்சியான சிந்தயந்தியாய், "முக்திம் கதாந்யா கோப கந்யகா" என்னும்படி அவன் திருவடிகளைப் பெற்றுவிடுதல்

செய்யும்படியா யிருக்கும் இவ்வஹங்கார தத் ராஹித்யங்களின் ஸ்வபாவமென்கை. இப்படி அஹங்கார தத்ராஹித்யங்கள் அவனை யிழக்கைக்கும் பெறுகைக்கு முடலாகையாலே, ஸ்ரீகுலசேகரப்பெருமாள் முதலானவர்கள் அஹங்கார ஹேதுவான ஜந்மங்களை யநாதரித்து தத் ரஹித ஜந்மங்களை யாதரித்தார்களென்று கருத்து.

**விளக்கம்** - இப்பிறவியில் மேன்மை உண்டாவதற்கு காரணமாக உள்ள அஹங்காரம் என்பதைக் கொண்டவனாக உள்ள நான்முகன், கீழே உள்ள வரிகளுக்கு ஏற்ப எம்பெருமானை நீண்டகாலம் இழப்பதற்கு, அவனது அஹங்காரமே காரணமாகிறது:

- த்விபரார்த்தாவஸாநே மாம் ப்ராப்து மர்ஹஸி பத்மஜ – தாமரையில் பிறந்த நான்முகனே! உன்னுடைய ஆயுட்காலமான இரண்டாவது பரார்த்தத்தின் முடிவில் என்னை அடைவாய்

- முதல் திருவந்தாதி (56) – கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணனடிக் கமலந்தன்னை யயன்

இவ்விதம் அஹங்காரம் கொள்வதற்குக் காரணம் ஏதும் இல்லாததால், அஹங்காரம் அற்றவளாக, க்ருஷ்ணனைத் தவிர தனது இடதுகை மற்றும் வலதுகை வேறுபாடு கூட அறியாதவளாக சிந்தயந்தி என்ற ஆயர்குலப்பெண் இருந்தாள். இவள் ஸ்ரீவிஷ்ணுபுராணம் (4-520) - முக்திம் கதாந்யா கோப கந்யகா – கண்ணனையே எண்ணி மூச்சடைத்து முக்தி பெற்றாள் - என்று கூறுவதற்கு ஏற்ப, க்ருஷ்ணனின் திருவடிகளைப் பெற்றுத் தருவதாகவே "அஹங்காரம் இல்லை" என்னும் தன்மை இருக்கும் என்று கருத்து. ஆகவே அஹங்காரம் மற்றும் அஹங்காரம் அற்ற தன்மை ஆகிய இரண்டும் முறையே அவனை இழப்பதற்கும், அடைவதற்கும் காரணமாக உள்ளன. இதனால்தான் குலசேகராழ்வார் போன்றவர்கள் அஹங்காரம் ஏற்படுவதற்குக் காரணமாக உள்ள உயர்ந்த பிறவிகளை எண்ணாமல், அவை இல்லாத தாழ்ந்த பிறவிகளையே எண்ணினர் என்று கருத்து.

243. இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் நாசஹேதுவான அஹங்காரத்துக்கும் அதினுடைய கார்யமான விஷயப்ராவண்யத்துக்கும் விளைநிலம் தானாகையாலே தன்னைக் கண்டால் சத்ருவைக் கண்டாற்போலேயும்; அவற்றுக்கு வர்த்தகரான ஸம்ஸாரிகளைக் கண்டால் ஸர்ப்பத்தைக் கண்டாற்போலேயும், அவற்றுக்கு நிவர்த்தகரான ஸ்ரீவைஷ்ணவர்களைக்

கண்டால் பந்துக்களைக் கண்டாற்போலேயும், ஈச்வரனைக் கண்டால் பிதாவைக் கண்டாற்போலேயும், ஆசார்யனைக் கண்டால் பசியன் சோற்றைக் கண்டாற்போலேயும்; சிஷ்யனைக் கண்டால் அபிமத விஷயத்தைக் கண்டாற்போலேயும் நினைத்து, அஹங்காரார்த்த காமங்கள் மூன்றும் அநுகூலர்பக்கல் அநாதரத்தையும் ப்ரதிகூலர்பக்கல் ப்ராவண்யத்தையும் உபேக்ஷிக்குமவர்கள் பக்கலபேக்ஷையையும் பிறப்பிக்குமென்றஞ்சி, ஆத்மகுணங்கள் நம்மாலும் பிறராலும் பிறப்பித்துக் கொள்ளவொண்ணாது, ஸதாசார்ய ப்ரஸாதமடியாக வருகிற பகவத் ப்ரஸாதத்தாலே பிறக்குமத்தனை யென்று துணிந்து தேஹயாத்ரையி லுபேக்ஷையும் ஆத்மயாத்ரையி லபேக்ஷையும் ப்ராக்ருத வஸ்துக்களில் போக்யதா புத்திநிவ்ருத்தியும் தேஹதாரணம் பரமாத்ம ஸமாராதன ஸமாப்தி ப்ரஸாத ப்ரதிபத்தி யென்கிற புத்திவிசேஷமும், தனக்கொரு க்லேசமுண்டானால் கர்ம பலமென்றாதல் க்ருபா பலமென்றாதல் பிறக்கும் ப்ரீதியும், ஸ்வாநுஷ்டானத்தில் ஸாதநத்வ புத்திநிவ்ருத்தியும்; விலக்ஷணருடைய ஜ்ஞாநாநுஷ்டானங்களில் வாஞ்சையும், உகந்தருளின நிலங்களி லாதராதிசயமும், மங்களாசாஸநமும், இதர விஷயங்களில் அருசியும், ஆர்த்தியும், அநுவர்த்தந நியதியும், ஆஹாரநியதியும் அநுகூலஸஹவாஸமும், ப்ரதிகூல ஸஹவாஸ நிவ்ருத்தியும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக் கொண்டு போரக்கடவன்.

**அவதாரிகை** – "தன்னைத்தானே முடிக்கையாவது" என்று தொடங்கி இவ்வளவாக, அஹங்காராதிகளின் தோஷ முபபாதிக்கப்பட்டது; அநந்தரம் ப்ராப்யப்ராபகங்களிரண்டு மவனே யென்றிருக்கும் ப்ரபந்நாதிகாரியுடைய திநசர்யா விசேஷம் சொல்லப்படுகிறது (இப்படி ஸர்வப்ரகாரத்தாலும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - "தன்னைத்தானே முடிக்கையாவது" என்றுள்ள சூர்ணை-180 தொடங்கி, கடந்த சூர்ணை முடிய உள்ள சூர்ணைகளில் அகங்காரம் போன்ற பலவற்றின் தோஷங்கள் விரிவாக உரைக்கப்பட்டது. அடுத்து, "ப்ராப்யம் என்னும் பேறு மற்றும் ப்ராபகம் என்னும் உபாயம் ஆகிய இரண்டும் ஸர்வேச்வரனே" என்று வாழ்கின்ற ப்ரபந்நர்களின் அன்றாட வாழ்க்கை முறையை இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக் கொண்டு போரக் கடவன்) என்னுமளவாக. (இப்படி) என்று – கீழுக்தமான ப்ரகாரத்தைப் பராமர்சிக்கிறது. (ஸர்வ ப்ரகாரத்தாலும் நாசஹேதுவாகையாவது) - ஸ்வரூபேண முடித்தும், பாகவத விரோதத்தை விளைத்து முடித்தும், பகவல்லாப விரோதியாயும், எல்லாப்படியாலும்,

"அஸந்நேவ" என்கிறபடியே - அஸத்கல்பமாம்படி ஸ்வரூபத்தை உருவழியப் பண்ணுமதாயிருக்கை. அஹங்காரந்தான், தேஹாத்மாபிமாந ரூபமாயும், தேஹாதிரிக்தாத்ம விஷயத்தில் ஸ்வாதந்த்ர்யாபிமாந ரூபமாயும், இரண்டு வகைப்பட்டிறே யிருப்பது; இவ்விடத்தில் அவை யிரண்டும் சேரச்சொல்லப்படுகிறது. (அதினுடைய கார்யமான விஷயப்ராவண்யத்துக்கும்) தேஹாத்மாபிமாநமும் ஸ்வாதந்த்ர்யாபிமாநமுமே விஷயங்களை ஸ்வபோக்யத்வேந விரும்புகைக்கு மூலமாகையாலே, விஷய ப்ராவண்யத்தை அஹங்கார கார்யமென்கிறது. விஷயசப்தத்தாலே – கீழ் அநுகூலமாகவும் ப்ரதிகூலமாகவும் சொல்லப்பட்ட விஹித நிஷித்த ரூபவிஷய த்வயத்தையுஞ் சொல்லுகிறது. (விளைநிலம் தானாகையாலே) என்றது - இவை யிரண்டுக்கும் ஜந்மபூமி பகவத் ஸ்வரூப திரோதாநாதிகளைப் பண்ணக்கடவ குண த்ரயாத்மக ப்ரக்ருதி பரிணாம ரூபமாய் ஸ்வகர்ம விசேஷாரப்தமா யிருக்கிற சரீர விசிஷ்டனான தானாகையாலே யென்றபடி. கர்மாநுகுணமாக ரஜஸ்தமஸ்ஸுக்களாலே கலங்கவடிக்கும் சரீர விசிஷ்டதையாலே மதிமயங்கித் தானல்லாத தேஹத்தைத் தானாகவும் தனக்குரிய னல்லாத தன்னை ஸ்வதந்த்ரனாகவு மபிமாநிப்பதும் தனக்கநர்த்தகரமான விஷயங்களிலே அத்யாதரத்தைப் பண்ணுவது மவன்தானேயிறே. (தன்னைக் கண்டால்) இத்யாதி - இப்படி அநாதிகாலம் போந்தவனாய் இப்போதுமதுக்கு யோக்யமான சரீரவிசிஷ்டனா யிருக்கிற தன்னை தர்சித்தால் "கொன்றல்லது விடேன்" என்று ஸாயுதனாய்ப் பல்கல்வித் திரியும் சத்ருவைக் கண்டாப்போலே குடல் கரித்து தனக்கு நாசகனாக நினைத்தும்; தங்களுடைய உக்தி வ்ருத்திகளாலே துர்வாஸநையைக் கிளப்பி அஹங்காராதிகளை மேன்மேலும் வளரும்படி பண்ணும் ததுபயவச்யரான ஸம்ஸாரிகளைக் கண்ணெதிரே கண்டால், அணுகில் மேல் விழுந்தள்ளிக் கொள்ளும் அதிக்ரூரமான ஸர்ப்பத்தைக் கண்டாப்போலே அஞ்சி நடுங்கிப் பிற்காலித்து நமக்கு பாதகரென்றே நினைத்தும்; தங்களுடைய உபதேசாநுஷ்டாநங்க ளிரண்டாலும் அஹங்காராதிகளின் தோஷ தர்சநத்தைப் பண்ணுவித்து தத்ப்ரஸங்கத்திலே பீதபீதனாம்படி பண்ணி ஸவாஸநமாக அவற்றை நிவர்த்திப்பிக்கும் மத்யமபத நிஷ்ட்டரான ஸ்ரீவைஷ்ணவர்களைக் காணப்பெற்றால், தன்னுடைய அநர்த்தாப்யுதயங்க ளிரண்டும் தங்களதாய் தீயது விலக்கி நல்லதில் மூட்டி ரக்ஷிக்கும் ஆப்தபந்துக்களைக் காண்டாப்போலே யத்யாதரம் பண்ணி நமக்கு நற்றுணையானவர்களென்று நினைத்தும்;

**விளக்கம்** – "இப்படி" என்ற பதம் சூர்ணைகள் 189 தொடங்கி, 241 முடிய உள்ளவற்றில் கூறப்பட்டதை உணர்த்துகிறது. (ஸர்வ ப்ரகாரத்தாலும் நாசஹேதுவாகையாவது) - தன்னுடைய ஆத்ம ஸ்வரூபத்திற்கு அழிவை ஏற்படுத்திக்கொள்ளுதல், பாகவதர்களின்

விரோதத்தை சம்பாதித்துக் கொண்டு அழிதல், ஸர்வேச்வரனை அடைவதற்கு விரோதியாக இருத்தல், தைத்திரீயம் – அஸந்நேவ - ப்ரஹ்மம் இல்லை என்பவன் இல்லாதவன் ஆவான் - என்பதற்கு ஏற்ப அறிவற்ற வஸ்துக்கள் போன்று தன்னுடைய ஸ்வரூபம் உருமாறும்படியாகச் செய்தல் – போன்றதாகும். அஹங்காரம் என்பது – சரீரத்தையே ஆத்மாவாக எண்ணுகின்ற நினைவின் வடிவமாகவும், சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டதான ஆத்மாவானது தனக்கே உரியது என்ற எண்ணத்தின் வடிவமாகவும் இரண்டுவிதமாக உள்ளது. இந்தச் சூர்ணையில் உள்ள அஹங்காரம் என்ற பதம் மூலம் இந்த இரண்டும் ஒன்றாகச் சேர்த்து உரைக்கப்படுகிறது. (அதினுடைய கார்யமான விஷயப்ராவண்யத்துக்கும்) - சரீரத்தையே ஆத்மாவாக நினைக்கிற எண்ணம், ஆத்மா சுதந்திரமானது என்ற எண்ணம் ஆகிய இரண்டும்தான் உலகில் உள்ள விஷயங்களைத் தனக்கு இன்பம் அளிக்கவல்லவை என்று எண்ணி அவற்றின் மீது ஆசை கொள்வதற்கு மூலகாரணங்களாக உள்ளன; ஆக இந்த ஆசை என்பதே அகங்காரத்தின் செயல் என்றார். “விஷய” என்னும் பதம் மூலம் – சூர்ணை 183 முதல் உரைக்கப்பட்டதான தனது மனைவியுடன் சேர்தல் போன்ற விதிக்கப்பட்ட விஷயங்களும், மற்றவர் மனைவியை நாடுதல் போன்ற தள்ளப்பட்ட விஷயங்களும் – கூறப்பட்டது. (விளைநலம் தானாகையாலே) – அகங்காரம் மற்றும் உலக விஷயங்களில் நாட்டம் ஆகிய இரண்டிற்கும் பிறப்பிடம் எது என்றால்: ஸர்வேச்வரனின் ஸ்வரூபத்தை மறைத்தல் போன்ற பலவற்றையும் செய்வதாகவும், ஸத்வ ரஜோ தமஸ் ஆகிய மூன்று குணங்களும் இணைந்த ப்ரக்ருதியின் பரிணாமமாக உள்ளதாகவும், தன்னுடைய கர்மத்தின் காரணத்தால் உண்டான சரீரத்துடன் கூடியதாகவும் இருக்கிற “தான்” என்பதால் - என்று பொருள். கர்மங்களுக்கு ஏற்றபடி ரஜஸ் மற்றும் தமஸ் குணங்களால் கலங்க வைக்கின்ற சரீரத்தின் பிடியில் உள்ளதால் அறிவு மயங்குகிறது; இதனால் தன்னைக் காட்டிலும் வேறுபட்டதான சரீரத்தைத் ”தான்” என்றும், தனக்கே உரியவனாக அல்லாத தன்னை சுதந்திரமானவன் என்றும் எண்ணுகிறான்; தனக்குக் கேடு விளைவிப்பதான உலக விஷயங்களின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டபடி இருப்பதும் ஜீவாத்மாவே ஆவான். (தன்னைக் கண்டால் சத்ருவைக் கண்டாற்போலேயும்) - இப்படியாகவே எல்லையற்ற காலமாக நடந்துவருகிறான். இப்போதும் அதன்படியே நடந்து கொள்வதற்கான தகுதி கொண்ட சரீரத்துடன் கூடிய தன்னைக் கண்டால் [அதாவது தன்னை யார் என்று உணர்ந்து கொண்டு, தனது ஸ்வரூபத்தை உணர்ந்து, அகங்காரம் ஆகியவை அழியப் பெற்ற “தான்”], “கொலை செய்யாமல் விடமாட்டேன்” என்று ஆயுதத்தைக் கையில் எடுத்து, தன் எதிரே பல்லைக் கடித்தபடி நிற்கும் பகைவர்களைக் கண்டது போன்று வயிறு எரிந்து தன்னை அழிக்க வந்தவனாக எண்ணுதல். தங்களது சொற்கள் மற்றும் செயல்கள்

ஆகியவற்றால் தீய எண்ணங்கள் மேன்மேலும் வளரும்படிச் செய்கின்றனர். (அவற்றுக்கு வர்த்தகரான ஸம்ஸாரிகளைக் கண்டால் ஸர்ப்பத்தைக் கண்டாற்போலேயும்) - இப்படியாக உள்ள இரண்டு தன்மைகள் கொண்ட [அகங்காரம் மற்றும் புலன் இன்பங்கள்] ஸம்ஸாரிகளைக் கண்டால், அருகில் செல்ல முனையும்போது மேலே விழுந்து கடித்து இறந்து போகும்படிச் செய்கின்ற மிகவும் கொடிய நாகத்தைக் கண்டது போன்று அச்சம் கொண்டு நடுங்கியபடியே பின்வாங்கி, அவர்கள் நமக்குத் தீமை செய்வார்கள் என்று எண்ணுதல். (அவற்றுக்கு நிவர்த்தகரான ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால் பந்துக்களைக் கண்டாற்போலேயும்) - தங்களது உபதேசம், வாழ்க்கைமுறை போன்ற பலவற்றால் அகங்காரம், உலகவிஷயங்களில் உள்ள பற்றுதல் போன்றவற்றின் தோஷங்களை மற்றவர்களுக்குச் சிலர் அறிவிப்பர்; இவர்கள் இவற்றைப் பற்றி மற்றவர்கள் பேசுவதைக் கேட்டால் அச்சம் கொண்டு நடுங்குவர்; அவற்றை அடியுடன் நீக்குபவர்களாக இருப்பர்; இவ்விஷயங்களை அவற்றின் வாசனையுடன் நீக்கவல்லதான திருமந்த்ரத்தின் நடுப்பதமான "நம:" என்பதிலேயே நிஷ்டை கொண்டு இருப்பர்; இப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களைக் காண நேரிட்டால் – மற்றவர்களின் நன்மை மற்றும் தீமை ஆகிய இரண்டையும் தங்களுக்கு வந்ததாகவே எண்ணி, தீமையை விலக்கி, நன்மையை மட்டுமே ஏற்கும்படிச் செய்து காப்பாற்றுகின்ற நல்ல உறவினர்களைக் கண்டது போன்று விரும்பவேண்டும்; "இவர்கள் நமக்குச் சிறந்த துணையாவர்கள்" என்று எண்ணவேண்டும்.

**வ்யாக்யானம்** - அடியிலே கரணகளேபரங்களைத் தந்து அவற்றைக் கொண்டு வ்யபிசரியாமல் நல்வழி நடக்கும்படி சாஸ்த்ரங்களைக் காட்டி அக்ருத்யகரணாதிகளில் சிக்ஷித்து ஸர்வாவஸ்தையிலும் தன்னுடைய ஹிதமே பார்த்துப்போரு மீச்வரனை அர்ச்சா ஸ்தலங்களிலே கண்களாரக் கண்டால், உத்பாதகனாய் வித்யாப்ரதனாய் அபதே ப்ரவ்ருத்தனாகாதபடி நியமித்து நடத்திக்கொண்டு போரும் ஹிதைஷியான பிதாவைக் கண்டாப்போலே ஸ்நேஹஸாத்வஸ விநயங்களை யுடையனாய்க்கொண்டு நமக்கு ஹிதபரமென்று நினைத்தும்; அநாதிகாலம் "அஸந்நேவ" என்னும்படிகிடந்த தன்னை பகவத் ஸம்பந்தத்தை யறிவித்து ஸந்தாவானாக்கி மேன்மேனும் தன்னுபதேசத்தால் ஜ்ஞாந வைராக்ய பக்திகளை விளைத்து கையிற்கனியென்ன பகவத் விஷயத்தைக் காட்டித்தரும் மஹோபகாரகனாய் "உன் சீரேயுயிர்க்குயிராய்" என்றும், "உன்றன் மெய்யிற் பிறங்கிய சீரன்றி வேண்டிலன்" என்றும் சொல்லுகிறபடியே குணவிக்ரஹங்களாலே தனக்கு தாரகபோக்யனாயிருக்கு மாசார்யனைக் கண்ணுக் கிலக்காம்படி கண்டால், கண்ணாஞ்சுழலையிடும் பெரும் பசியன் தாரகமுமாய் போக்யமுமான சோற்றைக் கண்டாப்போலே அத்யபிநிவேசத்தோடே யநுபவித்து நமக்கு

தாரக போக்யவிஷயமென்றே நினைத்தும்; ஸாத்யாந்தர நிவ்ருத்த்யாதி ஸமஸ்த ஸ்வபாவ ஸம்பந்நதயா ஸம்யக்ஜ்ஞாந ப்ரரேமவானா யிருக்கும் ஸச்சிஷ்யனைக் கண்டால், தனக்காநந்தாவஹமான அபிமத விஷயத்தைக் கண்டாப்போலே பகவத் குணாநுஸந்தாந தசையில் நாம் சொல்லுகிற பகவத் குணங்களை யாதரித்துக் கேட்பது அநுபாஷிப்பது வித்தனாவதாம் ஆகாரங்களினாலே நமக்காநந்தாவஹனென்று நினைத்தும்;

**விளக்கம்** - (ஈச்வரனைக் கண்டால் பிதாவைக் கண்டாற்போலேயும்) – ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் சரீரம் மற்றும் இந்த்ரியங்கள் ஆகியவற்றை நமக்கு அளிக்கிறான்; அவற்றைக் கொண்டு நாம் தவறான வழியில் செல்லாமல் தடுத்து, நல்ல வழியில் செல்வதற்கு ஏற்றபடி சாஸ்த்ரங்களை உணர்த்துகிறான்; சாஸ்த்ரங்கள் கூறும் மார்க்கத்திற்கு விரோதமாகச் சென்றால் தண்டித்துத் திருத்துகிறான்; அனைத்து நிலைகளிலும் நம்முடைய நன்மையை மட்டுமே எண்ணியபடி உள்ளான். இப்படிப்பட்ட ஸர்வேச்வரனை அர்ச்சாவதார விக்ரஹமாகக் கோயில்களில் கண்ணாரக் காணும்போது, "இவனே நம்மைப் படைத்தவன், நமக்குக் கல்வி புகுத்தியவன்", என்று எண்ணவேண்டும். மேலும் தீய மார்க்கங்களில் நாம் செல்லாதபடி நம்மை நியமித்து நடத்திக் கொண்டு போகின்ற, நமது நலத்தை மட்டுமே விரும்பும் தந்தையைக் கண்டது போன்று அன்பு, அச்சம் மற்றும் அடக்கம் ஆகியவற்றுடன் நிற்கவேண்டும். "இவன் நம்முடைய நன்மையை மட்டுமே கருத்தாகக் கொண்டவன்" என்று எண்ணவேண்டும். (ஆசார்யனைக் கண்டால் பசியன் சோற்றைக் கண்டாற்போலேயும்) - எல்லையற்ற காலமாக தைத்திரீய ஆநந்தவல்லியில் – அஸந்நேவ - ப்ரஹ்மஞானம் இல்லாதவன், இல்லாதவனாகவே ஆவான் – என்று கூறுவதற்கு ஏற்ப நாம் இல்லாதவனாகவே இருந்தோம். இப்படிப்பட்ட நமக்கு பகவத் ஸம்பந்தம் குறித்து உணர்த்தி, நம்மை "உள்ளவன்" என்று ஆக்குகிறார். மேலும் தன்னுடைய உபதேசம் மூலமாக ஞானம், வைராக்யம், பக்தி போன்றவற்றை நமக்கு ஏற்படுத்தி, உள்ளங்கை நெல்லிக்கனி போன்று நமக்கு ஸர்வேச்வரனைக் காட்டித் தரும் மிகப் பெரிய உதவியைப் புரிகிறார். இத்தகையவர் நம்முடைய ஆசார்யன் ஆவார். இராமாநுஜ நூற்றந்தாதி (25) - உன் சீரேயுயிர்க்குயிராய் – என்றும்,(104) - உன்றன் மெய்யிற் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப தனது உயர்ந்த குணங்களாலும், அழகான திருமேனியாலும் நமக்கு இனிமையாகவும், நாம் உயிர் வாழக் காரணமாகவும் உள்ள ஆசார்யனைக் காணும்போது – மிகுந்த பசி காரணமாகக் கண்கள் இருட்டிக்கொண்டு கீழே விழும் நிலையில் உள்ள ஒருவன், தன்னை வாழ வைக்கவல்ல இனிமையான உணவைக் கண்டால் மகிழ்வது போன்று, மிகுந்த ஆசையுடன் அவரை

அனுபவிக்கவேண்டும்; "நம்மை வாழ வைத்து, நமக்கு எப்போதும் இனிமையாக உள்ளவர்" என்று எண்ணவேண்டும். (சிஷ்யனைக் கண்டால் அபிமத விஷயத்தைக் கண்டாற்போலேயும் நினைத்து) - மற்ற எந்தவிதமான பலன்களையும் விரும்பாமல் இருத்தல் போன்ற பல உயர்ந்த தன்மைகளால் நிறைவாக உள்ளதால் சிறந்த ஞானம் மற்றும் பக்தியைக் கொண்டபடி ஒரு சிஷ்யன் இருப்பான். இப்படிப்பட்ட சிஷ்யனைக் கண்டால் - நமக்கு ஆனந்தத்தை அளிக்கவல்ல மனைவியைக் கண்டது போன்று எண்ணவேண்டும். ஸர்வேச்வரனின் திருக்கல்யாண குணங்கள் குறித்து உரையாடும் போது, "நாம் கூறும் பகவத் குணங்கள் பற்றி விருப்பத்துடன் இவன் கேட்கிறான், அதனை மீண்டும் உரைக்கிறான், அவற்றை எண்ணி எண்ணி வியத்தல் போன்றவற்றைச் செய்வதன் மூலம் இவன் நமக்கு ஆனந்தம் அளிக்கிறானே", என்று எண்ணவேண்டும்.

**வ்யாக்யானம்** – (அஹங்காரார்த்தகாமங்கள் மூன்றும்) இத்யாதி. இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு, அஹங்காரம் அநுகூலர்பக்கல் அநாதரத்தைப் பிறப்பிக்கும்; அதாவது – சேஷத்வத்தை தன் ஸந்நிதியில் ஜீவிக்கவொட்டாதபடியிறே அஹங்காரத்தின் பலமிருப்பது; அஹங்காரியானவன் "ந நமேயம்" என்றிருக்குமதொழிய ஒரு விஷயத்திலும் தலைதாழ்க்க விசையானே; ஆகையாலே அஹங்காரம் மேலிடுமாகில், ஸ்வரூபவர்த்தகராய்க் கொண்டு அநுகூலராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால் "நம்முடைய சேஷிகள்" என்று துடைநடுங்கி யெழுந்திருந்து ப்ரணாமாதிபூர்வகமாக அநுவர்த்தனங்களைப் பண்ணவொட்டாதே, தன்னை அவர்களி லதிகனாகவாதல், அவர்களைத் தன்னோடு ஸமராகவாதல் புத்தி பண்ணியநாதரித்திருக்கும்படிப் பண்ணுமென்கை. அர்த்தம் ப்ரதிகூலர் பக்கல் ப்ராவண்யத்தைப் பிறப்பிக்கும்; அதாவது – ஆரையாகிலும் சென்றநுவர்த்தித்து ஒருகாசு பெற்றதாய்விடவேணு மென்னும்படியிறே அர்த்தராகமிருக்கும்படி; ஆகையால், அது ஸ்வரூப நாசகத்வேந ப்ரதிகூலரான ஸம்ஸாரிகளைக் கண்டால் வெருவி யோடிப்போக வேண்டியிருக்க, ஒருகாசை நச்சி அவர்களோடே யுறவு பண்ணி அவர்களிருந்த விடங்களிலே பலகாலும் செல்லுவது, அவர்களை யழைத்து விருந்திடுவது, அவர்கள் குணகீர்த்தநம் பண்ணுவதாம்படி அவர்கள் விஷயத்திலே ப்ராவண்யத்தை யுண்டாக்குமென்கை. காமம் (உபேஷிக்குமவர்கள் பக்க லபேக்ஷையைப் பிறப்பிக்கும்) "காம்யத இதி காம:" என்கிறபடியே – காம சப்தத்தாலே விஷய ஸம்போக ஸுகத்தைச் சொல்லுகிறது; அது, "ஈசிபோமின்" இத்யாதிப்படியே – தாரித்ர்ய வார்த்தகாதிகளடியாக தன்னை முகம் பாராமல் தள்ளிக் கதவடைத்து உபேஷாவாதம் பண்ணும் ஸ்த்ரீகள் பக்கலிலே, "ஏழையர் தாமிழிப்பச் செல்வர்" என்கிறபடியே அவர்களுபேக்ஷாவாதம் முதலானவை தன்னையே யுத்தேச்யமாகக்

கொண்டு செல்லும்படி, விலக்ஷணர் கேட்டால் சிரிக்கும்படியான ஹேயாபேக்ஷையை விளைக்குமென்கை. ஆக இப்படி அஹங்காராதிகள் மூன்றும் ஸ்வரூப வர்த்தகரை யநாதரிக்கும்படியும், ஸ்வரூப நாசகரை யாதரிக்கும்படியும், ஸ்வரூப நாசகதையோடே யுபேக்ஷகருமா யிருக்குமவர்களை யபேக்ஷிக்கும்படியும் பண்ணுமென்று அவற்றின் கொடுமைகளை யநுஸந்தித்து என் செய்யத் தேடுகிறதோ வென்றஞ்சி; (அர்த்த காமாபி மாநங்கள் மூன்றும்) என்று பாடமானாலும், "கர்வோபிமாநோஹங்கார:" என்கிறபடியே - அபிமாந சப்தத்தாலே அஹங்காரத்தைச் சொல்லுகிறதாகையாலே (அநுகூலர்பக்கல்) இத்யாதியை நிரை நிரையாக்காதே யதாயோகங்கொண்டு கீழ்ச் சொன்ன ப்ரகாரத்திலே யோஜிக்கக் கடவது;

**விளக்கம்** - (அஹங்காரார்த்த காமங்கள் மூன்றும்) - அஹங்காரம், செல்வம், காமம் ஆகிய மூன்றில் அஹங்காரம் என்பது நமக்கு ஏற்றவர்களாக உள்ள பாகவதர்களிடம் அன்பு இல்லாத தன்மையைக் கொண்டு வருவதாகும். வேறு ஒருவருக்கு அடிமைப்பட்டுள்ள தன்மையை, நான் உள்ள இடத்தில் இருக்கவிடாமல் செய்வது என்பது அஹங்காரத்தின் வலிமை ஆகும். அஹங்காரத்துடன் உள்ளவன், இராமாயணம் யுத்தகாண்டம் (36-11) - ந நமேயம் – நான் தலை வணங்கமாட்டேன் - என்று கூறும்படியாக உள்ள இராவணன் போன்று இருப்பானே அல்லாமல், யாருக்கும் தலை தாழ்த்தி நிற்கமாட்டான். இப்படிப்பட்ட அஹங்காரம் ஒருவனுக்கு ஓங்கி நிற்கும்போது, தங்களது ஸ்வரூபத்தை வளர்ப்பவர்களாக உள்ள ஸ்ரீவைஷ்ணவர்களை அவன் கண்டவுடன், "இவர்கள் நமது எஜமானர்கள்" என்று அச்சத்துடன் சட்டென்று எழுந்து வணங்கி நிற்பது போன்ற செயல்களைச் செய்ய இயலாதபடி தடுத்துவிடும். மேலும் தான் அவர்களைக் காட்டிலும் உயர்ந்தவன் என்ற எண்ணத்தையும், அவர்கள் தன்னை ஒத்தவர்களே என்ற எண்ணத்தையும் உண்டாக்கி, அவர்கள் பக்கம் சேராதபடி செய்துவிடும். இதனால் அஹங்காரம் குறித்து அச்சம் கொண்டிருக்கவேண்டும். (அர்த்தம் ப்ரதிகூலர் பக்கல் ப்ராவண்யத்தைப் பிறப்பிக்கும் என்று அஞ்சி) - அர்த்தம் என்பதான செல்வம் பாகவதர்களிடம் பக்தியற்றவர்கள் விஷயத்தில் ஈடுபாட்டை ஏற்படுத்திவிடும். அதாவது யாரையாவது அண்டிச் சென்று, அவர்களுக்கு ஏதேனும் செய்து, ஒரு காசேனும் பெற்றுவிடவேண்டும் என்ற அளவிற்குப் பொருள் ஆசை இருக்கும். இந்த நிலை ஆத்ம ஸ்வரூபமான ஸர்வேச்வரனுக்கு அடிமை என்ற நிலையை மாற்றிவிடும் என்பதால், பகவத் விரோதிகளாக உள்ள ஸம்ஸாரிகளைக் கண்டாலேயே ஓடி விடவேண்டும்; ஆனால் அவ்விதம் செய்யாமல் அவர்கள் உள்ள இடத்திற்குப் பலமுறை சென்று,

அவர்களைத் தமது இருப்பிடத்திற்கு அழைத்து விருந்து வைத்து, அவர்களைப் புகழ்ந்து பாடியபடி இருத்தல் போன்ற பலவற்றால் அவர்கள் மீது உள்ள ஈடுபாடு அதிகரித்துவிடும் என்று அஞ்சவேண்டும். (காமம் உபேக்ஷிக்குமவர்கள் பக்கல் அபேக்ஷையைப் பிறப்பிக்கும் என்று அஞ்சி) – ”காம்யத இதி காம:” விரும்பப்படுவதால் காமம் எனப்படும் - என்பதற்கு ஏற்ப காமம் என்ற பதம் பெண்கள் மூலம் ஏற்படும் இன்பத்தைக் கூறுவதாகும். அத்தகைய காமம் என்பது பெரியதிருமொழி (1-3-8) – ஈசிபோமின் – என்ற பாசுரத்தில் உரைப்பதற்கு ஏற்ப தங்களிடம் இன்பம் நாடி வருபவர்களிடம் உள்ள ஏழ்மை, வயோதிகம் போன்ற காரணங்களால் அவர்களைக் கண் எடுத்தும் பாராமல், தங்கள் வீட்டு வாயிற்கதவுக்கு வெளியே தள்ளிக் கதவடைக்கும் பெண்கள் உண்டு. ஆனால் இப்படிப்பட்ட பெண்களிடமும் திருவாய்மொழி (4-1-5) – ஏழையர்தாம் இழிப்பச் செல்வர் – என்று கூறுவதற்கு ஏற்ப, அந்தப் பெண்கள் தங்களை வெறுத்தல் போன்றதான செயல்களைச் செய்தாலும், அவர்களையும் அச்செயல்களையும் தங்களுக்கு ஏற்றதாகவே சிலர் கொண்டு அவர்களிடம் செல்வர். இச்செயலைப் பெரியவர்கள் கேள்விப்பட்டால் சிரிக்கும்படியான தாழ்ந்த ஆசையை ஏற்படுத்தும் என்று கருதி அச்சம் கொள்ளவேண்டும். ஆகவே இப்படியாக அஹங்காரம், பொருள் மற்றும் காமம் ஆகிய மூன்றும் ஆத்மஸ்வரூபத்தை வளர்க்கின்ற ஸ்ரீவைஷ்ணவர்களிடம் உள்ள அன்பைப் போக்கி அவர்களை விரும்பாதபடியும், ஆத்மஸ்வரூபத்தை அழிப்பத்துடன் அல்லாமல் தங்களை வெறுத்துத் தள்ளும் குணங்கள் கொண்ட பெண்களை விரும்பும்படியும் செய்துவிடும். இப்படியாக இவை செய்வதைக் குறித்து எண்ணி, “இவை நம்மை என்ன செய்து விடுமோ?” என்று அஞ்சியபடி இருக்கவேண்டும். “அஹங்கார அர்த்த காமம்” என்று படிப்பதற்குப் பதிலாக “அர்த்த காம அபிமானங்கள்” என்றும் சிலர் படிப்பர். கர்வோபிமாநோஹங்கார: - கர்வம், அபிமாநம், அஹங்காரம் ஆகிய மூன்றும் அஹங்காரத்தைக் குறிக்கும் சொற்கள் – என்பதற்கு ஏற்ப அபிமானம் என்ற பதம் அஹங்காரத்தைக் கூறுகிறது. ஆகவே “அநுகூலர் பக்கல்” என்று தொடங்குகின்ற வாக்கியத்திற்கு வரிசைப்படி விவரணம் செய்யப்பட்டது என்று கொள்ளாமல், வரிசை மாறிப் பொருள் கூறப்பட்டதாகக் கொள்ளவேண்டும்.

**வ்யாக்யானம்** - (ஆத்ம குணங்கள்) இத்யாதி. சமதமாத்யாத்மகுணங்கள், அநாதிகால மஹங்காராதிகளுக்கு விளைநிலமாய் அநாத்மகுணங்களைக் கூடுபூரித்துக்கொண்டு கர்மபரதந்த்ரராயிருக்கிற நம்முடைய யத்நத்தாலும், ஆத்ம குணோதய விரோதிகளான அஹங்காராதிகளுக்கு வர்த்தகராய் அநாத்மகுண பரிபூர்ணராய் கர்மவச்யரா யிருக்கிற

பிறருடைய யத்நத்தாலும் பிறப்பித்துக் கொள்ளவொண்ணாது. ஆத்ம குணங்களுக்கெல்லாம் கொள்கலமாய் அடியிலே தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே நம்மை யங்கீகரித்தருளி நமக்காத்ம குணங்க ளுண்டாவ தெப்போதோவென்று பலகாலும் கரைவது பகவானை யர்த்திப்பதாய்க் கொண்டு போரும் ஸதாசார்யனுடைய ப்ரஸாதமடியாகவருகிற, நம்முடைய வாத்மகுணோதய விரோதி பாபக்ஷயம் பிறக்கும்படி "அமலங்களாக விழிக்கும் பகவானுடைய பரிபூர்ண ப்ரஸாதத்தாலே பிறக்குமத்தனையென் றத்யவஸித்து. (தேஹயாத்ரையி லுபேக்ஷையாவது) - சேஷத்வமே வடிவான வாத்மாவுக்கு தாரகாதிகளான குணாநுபவ கைங்கர்ய ப்ரவ்ருத்தியில் பெற்றவளவால் த்ருப்தனாயிராதே மேன்மேலு மாசைப்படுகை. (ப்ராக்ருத வஸ்துக்களில் போக்யதா புத்திநிவ்ருத்தியாவது) - அசநாச்சாதநாதிகளுக் குறுப்பான ப்ராக்ருத பதார்த்தங்களில் ஆதரத்துக்கடியான போக்யத்வ புத்தி தவிருகை. (தேஹதாரணம்) இத்யாதி. அதாவது - அந்த ப்ராக்ருதி வஸ்துக்களில் தேஹம் தரிக்கைக்கு தக்க அளவு புஜிக்கை, பரமாத்மாவான ஸர்வேச்வரனுடைய ஸமாராதநத்தின் ஸமாப்தி ரூபையான ப்ரஸாத ப்ரதிபத்தியென்கிற புத்தி விசேஷமுமென்கை. அன்றிக்கே, (பரமாத்ம ஸமாராதந ஸமாப்தி) என்கிற புத்தி விசேஷமும், தத்ப்ரஸாத ப்ரதிபத்தி யென்கிற புத்தி விசேஷமும் என்னவுமாம்;

**விளக்கம்** - (ஆத்மகுணங்கள் நம்மாலும் பிறராலும் பிறப்பித்துக் கொள்ளவொண்ணாது) - எல்லையற்ற காலமாக மேலே கூறப்பட்ட அஹங்காரம் போன்ற பலவும் உற்பத்தி ஆகின்ற இடமாகவும், ஆத்மகுணங்கள் அல்லாதவற்றை வளர்ப்பவராகவும் கர்ம வசப்பட்டுள்ள நாம் உள்ளோம். வேறு சிலரும் ஆத்மகுணங்கள் வளர்வதற்குத் தடையாக உள்ள அஹங்காரம் போன்றவற்றை வளர்ப்பவராகவும், ஆத்மகுணங்கள் அல்லாத தன்மைகள் நிறைந்தவராகவும் கர்மவசப்பட்டபடி இருக்கக்கூடும். இப்படியாக உள்ள நமது முயற்சியாலும், வேறு ஒருவர் முயற்சியாலும் உட்புலன் மற்றும் வெளிப்புலன் ஆகியவற்றை அடக்குவதான ஆத்மகுணங்களைப் பிறப்பித்துக் கொள்ள இயலாது. (ஸதாசார்ய ப்ரஸாதமடியாக வருகிற பகவத் ப்ரஸாதத்தாலே பிறக்குமத்தனை யென்று துணிந்து) – ஆத்மகுணங்கள் அனைத்திற்கும் இருப்பிடமாக உள்ளவர், தொடக்கம் முதலாகவே எந்த ஒரு காரணமும் இன்றி ஏற்பட்ட கருணை காரணமாக நம்மை ஏற்றுக் கொண்டவர், நமக்குத் தேவையான ஆத்மகுணங்கள் நமக்கு எப்போது ஏற்படும் என்று பலமுறை நமக்காக ஏங்கித் தவிப்பவர், நமக்காகப் பலமுறை ஸர்வேச்வரனிடம் வேண்டியபடி உள்ளவர் - இப்படியாக உள்ள நம்முடைய ஆசார்யனின் அருளால் நமக்கு ஆத்மகுணங்கள் தோன்றுகின்றன. ஆயினும் இவை ஏற்படத் தடையாக உள்ள நமது

பாவங்கள் அனைத்தும் அழிந்து, திருவாய்மொழி (1-9-9) – அமலங்களாக விழிக்கும் - நமது அறியாமை ஆகியவை நீங்கும்படியாக நம்மை விழித்துப் பார்க்கும் கண்கள் – என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனின் பரிபூர்ண கடாக்ஷம் காரணமாக இந்த ஆத்ம குணங்கள் உண்டாகும் என்று உறுதியுடன் இருத்தல். (தேஹயாத்ரையி லுபேக்ஷையும்) – சரீரத்தைக் காப்பாற்றவேண்டும் என்பதான செயல்களில் விருப்பம் அற்ற தன்மை ஏற்படவேண்டும். (ஆத்மயாத்ரையி லபேக்ஷையும்) - ஸர்வேச்வரனுக்கு அடிமையாக இருத்தல் என்பதையே தன்னுடைய ஸ்வரூபமாகக் கொண்டது ஆத்மாவாகும்; இப்படிப்பட்ட ஆத்மாவைத் தரிப்பதும், வளர்ப்பதும், அதற்கு இனிமையாக உள்ளதும் எது என்றால் ஸர்வேச்வரனின் திருக்கல்யாண குண அனுபவங்கள் மற்றும் அவனது கைங்கர்யங்களில் ஈடுபடுதல் போன்றவையே ஆகும். இவற்றை அடைந்த பின்னர் அப்படியே இருந்துவிடாமல், மேன்மேலும் இவற்றில் ஆசை ஏற்படவேண்டும். (ப்ராக்ருத வஸ்துக்களில் போக்யதா புத்திநிவ்ருத்தியும்) - உண்பதற்கும், உடுத்துவதற்கும் தேவையான பொருள்களில் ஈடுபாடு உண்டாவதற்குக் காரணம் “அவை மிகவும் இனியவை” என்ற எண்ணமாகும்; இந்த எண்ணத்தைத் தவிர்க்கவேண்டும். (தேஹ தாரணம்) – உலகத் தொடர்புடைய பொருள்களில், இந்தச் சரீரம் உயிருடன் உள்ள அளவிற்குத் தேவையான அளவு மட்டுமே உண்ணுதல். (பரமாத்ம ஸமாராதன ஸமாப்தி ப்ரஸாத ப்ரதிபத்தி யென்கிற புத்திவிசேஷமும்) – பரமாத்மாவான ஸர்வேச்வரனின் திருவாராதனத்தின் இறுதியில் அவனுக்கு அளிக்கப்படும் ப்ரஸாதத்தை ஏற்றுக் கொள்ளுதல் மட்டுமே சிறந்தது என்ற மேன்மையான எண்ணம் என்று பொருள். அல்லது ஸர்வேச்வரனின் திருவாராதனத்தின் நிறைவுப் பகுதி என்னும் எண்ணம் மற்றும் அவனது ப்ரஸாதத்தை ஏற்பது என்னும் எண்ணம் என்றும் கொள்ளலாம்.

**வ்யாக்யானம்** - (தனக்கு) இத்யாதி. அதாவது, முமுக்ஷுவாய் ப்ரபந்நனானாலும் ப்ராரப்த சரீர மிருக்குமளவும் தாபத்ரயம் வருகை தவிராதிறே; ஆகையாலே, இச்சரீரத்தோடேயிருக்கிற தனக்கு தாபத்ரயங்களி லேதேனுமொரு க்லேசமுண்டானால், “இது அநுபவ விநாச்யமான ப்ராரப்த கர்மபலமன்றோ, ஏவம் பூதகர்மங்களுள்ளவை கழியுமளவன்றோ இச்சரீரத்தோடே நம்மை யெம்பெருமான் வைக்கிறது, ப்ராப்தி ப்ரதிபந்தகங்களிலே யென்றாகிலுங் கழியப்பெற்றோமே” என்கிற வநுஸந்தாநத்தாலே யாதல், துர்வாஸநையாலே யிவ்வுடம்பைவிட இசையாமல் ப்ராக்ருத பதார்த்தங்களையும் ஜீவித்துக் கொண்டு ஸம்ஸாரத்துக்குள்ளே பொருந்தியிருக்கிற நம்மை துக்க தர்சநத்தைப் பண்ணுவித்து இதைப் பற்றறுத்துக் கொண்டு போக நினைக்கிற ஸர்வேச்வரனுடைய

க்ருபையின் பலமன்றோவிது என்கிற அநுஸந்தாநத்தாலே யாதலுண்டாகக் கடவ ப்ரீதியு மென்கை. பூர்வாகம் உத்தராகம் ப்ராரப்தகண்டமெல்லாம் கழிக்கிறவனுக்கு, வர்த்தமான சரீரத்திலநு பாவ்ய கர்ம மித்தனையும் கழிக்கை யரிதன்றிறே; கர்மபலமான துக்க பரம்பரைகளை யநுபவியா நின்றாலும் இத்தேஹத்தை விட வென்றால் இசையாத விவனை நிர்துக்கனாக்கி வைப்போமாகில், இச்சரீரத்தோடே நெடுங்காலமிருக்க விச்சித்தல் இன்னமொரு சரீரந்தன்னை யிச்சித்தல் செய்யுமாகையால் இச்சரீரத்துக்குள்ள கர்மமநுப வித்தே யிறுக்கக் கடவனென்றிறே வைக்கிறது; ஆனபின்பு, மற்றுண்டான கர்மங்களெல்லாம் கழிந்து ஸம்ஸாரத்தில் நின்று மிவனைக் கடுகத் திருவடிகளிலே சேர்த்துக் கொள்ளுகையிலுண்டான க்ருபையாலேயானாப்போலே, இத்தனையும் கழியாமல் வைத்ததும் க்ருபையாலேயிறே. அநாதிகாலம் பரிக்ரஹித்த சரீரத்தோறு மநுபவித்த துக்கம் பகவந் நிக்ரஹபலம், இது அவனநுக்ரஹபலம்; "யஸ்யாநுக்ரஹ மிச்சாமி தஸ்யவித்தம் ஹராம்யஹம்" என்றானிறே; ஆகையாலித்தை (க்ருபாபலம்) என்கிறது.

**விளக்கம்** – (தனக்கொரு க்லேசமுண்டானால் கர்ம பலமென்றாதல் க்ருபா பலமென்றாதல் பிறக்கும் ப்ரீதியும்) - ஒருவன் மோக்ஷத்தில் விருப்பம் கொண்டுள்ள ப்ரபந்நன் என்றபோதிலும், பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்களின் காரணமாக உண்டான இந்தச் சரீரம் உள்ளவரை மூன்றுவகையான துன்பங்களான ஆதிபௌதிகம், ஆத்யாத்மிகம் மற்றும் ஆதிதைவிகம் ஆகியவை அவனை நெருங்காமல் இருக்காது அல்லவோ? ஆகவே இந்தச் சரீரத்துடன் உள்ளபோது, ஒருவனுக்கு இந்த மூன்றுவிதமான துன்பங்களில் ஏதாவது ஒன்றின் மூலம் துக்கம் ஏற்படலாம். அப்போது, "இந்தத் துன்பம் என்பது அனுபவித்தால் மட்டுமே கழியவல்ல பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்களின் மூலம் விளைவது அல்லவோ? இத்தகைய கர்மங்கள் அனைத்தும் கழியும் வரை மட்டுமே இந்தச் சரீரத்துடன் நம்மை எம்பெருமான் விட்டுவைக்கிறான். ஆக ஸர்வேச்வரனை அடையத் தடையாக இருந்த ஏதோ ஒரு கர்மத்தையாவது நாம் இப்போது கழித்தோமே", என்று எண்ணிய நினைவால் ஏற்படும் மகிழ்ச்சி. அல்லது, "எல்லையற்ற காலமாகத் தொடர்ந்து வரும் வாசனையால் உண்டாகின்ற தீய பழக்கங்களால் இந்தச் சரீரத்தை விடுவதற்கு விரும்பாமல் நாம் உள்ளோம். இந்த உலகில் உள்ள பொருள்கள் பலவற்றையும் அனுபவித்தபடி, இந்த ஸம்ஸாரத்துடன் நன்கு பொருந்தி நிற்கிறோம். இப்படிப்பட்ட நம்மை, துன்பங்களை அனுபவிக்கச் செய்து, இந்தப் பற்றுதல்களை அறுத்து, நம்மை விரைவாகக் கொண்டு போக எண்ணும் ஸர்வேச்வரனின் கருணையின் பலம் அல்லவோ இது", என்று எண்ணியதால்

உண்டாகும் மகிழ்ச்சி. ஸர்வேச்வரன் நம்மைத் துன்பத்தை அனுபவிக்குமாறு செய்கிறான் என்று கூறிய பின்னர் அவனது கருணையின் பலம் என்று எவ்விதம் கூற இயலும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். இதனை "பூர்வாகம்" என்று தொடங்கி உரைக்கிறார். ஸர்வேச்வரனைப் பற்றுவதற்கு முன்பாகச் செய்த வினைகள், அவனைப் பற்றிய பின்னர் தன்னை அறியாமலே செய்யும் வினைகள், பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்களின் மீதம் உள்ள வினைப்பயன்கள் ஆகிய அனைத்தையும் நீக்கவல்ல ஸர்வேச்வரனுக்கு, இந்தச் சரீரத்தில் இருந்தபடி இன்னமும் கழிக்க வேண்டிய வினைப்பயன்களை நீக்குவது அரிதான செயல் அல்ல. ஆயினும் ஏன் அவ்விதம் செய்வதில்லை என்பதற்கு விடை அளிக்கிறார் "கர்மபலன்களை" என்று தொடங்கி. கர்மங்களின் பலன்களால் ஏற்படுவதான துன்பங்களைத் தொடர்ந்து அனுபவித்தபடி இருந்தாலும், இந்தச் சரீரத்தை விடுவதற்கு இந்த ஜீவன் எளிதில் ஒப்புக் கொள்வதில்லை. இப்படிப்பட்ட இவனை, இந்தச் சரீரத்தில் இருந்து கழிக்கவேண்டிய பாவங்களை நீங்கி, துன்பம் அற்றவனாக மாற்றிவிட்டால், அதன் பின்னர் இந்தச் சரீரத்துடன் நீண்டகாலம் இருப்பதையே விரும்புவான். ஆகையால்தான் இந்தச் சரீரத்திற்கான கர்மங்களை அனுபவித்தே தீரவேண்டும் என்று ஸர்வேச்வரன் வைத்துள்ளான். ஆகவே, முன்னர் செய்த வினைகள் அனைத்தையும் நீக்கி இவனை ஸம்ஸாரத்தில் இருந்து மீட்டு, விரைவாகத் தன்னுடைய திருவடிகளில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பது ஸர்வேச்வரனின் கருணையால் ஏற்படும் நிலை என்பது போன்றே, இதனை நீக்காமல் வைத்துள்ளதும் அவனது கருணையாலேயே ஆகும். எல்லையற்ற காலமாக எடுத்த சரீரம் ஒவ்வொன்றிலும் அனுபவித்த துக்கம் என்பது ஸர்வேச்வரனின் தண்டனையால் ஏற்படுவதாகும்; இது போன்று சரீரத்தில் இருந்து விடுவிப்பதும் அவனது கருணையாலேயே ஆகும். இராமாயணம் யுத்தகாண்டம் (36-11) – யஸ்யாநுக்ரஹ மிச்சாமி தஸ்யவித்தம் ஹராம்யஹம் - யாருக்கு நான் அனுக்ரஹம் செய்யவேண்டும் என்று எண்ணுகிறேனோ, அவனது செல்வத்தை முதலில் அழிக்கிறேன் - என்று அவனே கூறினான் அல்லவோ? எனவேதான் இதனைக் கருணையின் பலன் என்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஸ்வாநுஷ்டாநத்தில் ஸாதத்வபுத்தி நிவ்ருத்தியாவது) - ப்ரபந்நனான தன்னுடைய வதிகாராநுகுணமாக வநுஷ்டித்துக் கொண்டு போரும் நல்லொழுக்களைப் பேற்றுக்கு ஸாதநமாக நினையாதொழிகை. (விலக்ஷணருடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்களில் வாஞ்சையாவது) நாட்டாரோ டியல்வொழிந்து நாரணனை நண்ணி யிருக்கையாலே நிர்மல ஜ்ஞாந பக்திகரரா யிருக்கும் விலக்ஷணரான விலக்ஷணமான வந்தஜ்ஞாநமும் அநுஷ்டாநமும் நமக்குண்டாகவேணுமென்னுமாசை. (உகந்தருளின நிலங்களி

லாதராதிசயமாவது) "தானுகந்தவூர்" என்கிறபடியே - ஸர்வேச்வரனுகந்து வர்த்திக்கிற திவ்யதேசங்களென்றால், "கண்டியூரரங்கம் மெய்யங்கச்சிபேர் மல்லையென்று மண்டினார்" என்கிறபடியே - மநஸ்ஸு அங்கே மண்டி விழும்படி மேன்மேலும் பெருகுகிற ஆதரம். (மங்களாசாஸநமாவது) - அவ்வோ திவ்யதேசங்களை விரும்பி, வர்த்திக்கிற வவனுடைய ஸௌந்தர்யத்தையும் ஸௌகுமார்யத்தையும் வாசியறிந்து நோக்கும் பரிவரில்லாமையையும் ப்ரதிகூல வர்க்கங்களி னதிசயத்தையும் நினைத்தேங்கி, "என் செய்யத் தேடுகிறது!" என்று வயிறெரிந்து இரவும்பகலும் திருப்பல்லாண்டு பாடுகை. (இதர விஷயங்களி லருசியாவது) - பகவத் வ்யதிரிக்தங்களான ஹேய விஷயங்களில் தோஷ தர்சநாதிகளாலே விருப்பமற்றிருக்கை. (ஆர்த்தியாவது) - இதர விஷய ப்ராவண்ய ஹேதுவான விவ்வுடம்போடே இருள் தருமா ஞாலத்திலிருக்கிற விதி லடிக்கொதிப்பாலும், ப்ராப்ய வைலக்ஷண்ய தர்சநத்தால் வந்த ப்ராப்தி விளம்பாஸஹத்வத்தாலும் படும் க்லேசம். (அநுவர்த்தந நியதியாவது) - பகவத் பாகவத விஷயங்களில் ஸ்வசேஷத்வா நுகுணமாக நீசோக்தி நீச வ்ருத்திகளாலே பண்ணு மநுவர்த்தநத்தை ப்ராக்ருத விஷயங்களில் மறந்தும் செய்யாதொழிகை. (ஆஹார நியதியாவது) - ஜாத்யாச்ரய நிமித்தாநுஷ்டங்களாய், ஸர்வேச்வரனுடையவும் ததீயருடையவும் ப்ரஸாதங்களான வஸ்துக்களையே ஆஹாரமாகக் கொள்ளுமதொழிய, ததிதரங்களானவை கொள்ளக் கடவோமல்லோ மென்றிருக்கை.

**விளக்கம்** – (ஸ்வாநுஷ்டாநத்தில் ஸாதத்வபுத்தி நிவ்ருத்தியாவது) - ஸர்வேச்வரனிடம் சரணம் புகுந்த ப்ரபந்நன் தன்னுடைய அதிகாரத்திற்கு ஏற்றபடியாகத் தான் பின்பற்றி வருகின்ற நல்ல நடத்தைகளே, தான் பெற்ற பேற்றுக்கு உபாயமாக இருந்ததாக எண்ணாமல் இருக்கவேண்டும். (விலக்ஷணருடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்களில் வாஞ்சையாவது) - திருவாய்மொழி (10-6-2) – நாட்டாரோடு இயல்வொழிந்து நாரணனை நண்ணி - என்று கூறுவதற்கு ஏற்ப தோஷங்கள் ஏதும் இல்லாத ஞானம், பக்தி போன்றவற்றைக் கொண்டுள்ள மேன்மையான முன்னோர்களின் உயர்ந்த ஞானம் மற்றும் நல்நடத்தை நமக்கு ஏற்படவேண்டும் என்ற ஆசையுடன் இருத்தல் வேண்டும். (உகந்தருளின நிலங்களி லாதராதிசயமாவது) - திருநெடுந்தாண்டகம் (6) – தான் உகந்த ஊர் - என்று கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் மிகவும் மகிழ்வுடன் கோயில் கொண்டுள்ள திவ்யதேசங்களை மனதால் எண்ணியவுடன், திருக்குறுந்தாண்டகம் (19) – கண்டியூரரங்கம் மெய்யங்கச்சிபேர் மல்லையென்று மண்டினார் – என்று கூறுவதற்கு ஏற்ப மனம் அங்கேயே விருப்பம் கொண்டு, நிலை நிற்கும்படியாக, மேன்மேலும் ஆசை பெருக

வேண்டும். (மங்களாசாஸநமாவது) - அந்த திவ்ய தேசங்களில் விருப்பம் கொண்டு வாசம் செய்கின்ற ஸர்வேச்வரனுடைய அழகு, மேன்மை போன்றவற்றை உணர்ந்து அவனை நன்றாகக் கவனித்துக் கொள்பவர்கள் இல்லாமை, அவனுக்குத் தீமையை எண்ணும் கூட்டத்தினரின் மிகுதி ஆகியவற்றை எண்ணி ஏங்கவேண்டும்; “இவனது இந்த நிலைக்கு, நாம் என்ன செய்யப் போகிறோம்” என்று அச்சம் கொண்டு, வயிறு கலங்கி, இரவும் பகலும் அவனுக்காகத் திருப்பல்லாண்டு பாடியபடி இருத்தல் வேண்டும். (இதர விஷயங்களி லருசியாவது) – ஸர்வேச்வரனைத் தவிர உள்ள மற்ற தாழ்ந்த விஷயங்களில் உள்ள குற்றங்களைக் கண்ட பின்னர், அவற்றில் விருப்பம் இல்லாதபடி இருத்தல் வேண்டும். (ஆர்த்தியாவது) - ஸர்வேச்வரன் தவிர மற்ற உலகவிஷயங்களில் ஏற்படும் ஆசைக்குக் காரணமாக உள்ள இந்தச் சரீரத்துடன், திருவாய்மொழி (10-6-1) – இருள்தரு மாஞாலம் – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள இந்த உலகத்தில் இருக்கமுடியாமல் தவிப்பதும்; தான் அடையக்கூடிய பேற்றின் மேன்மையைக் கண்ட பின்னர், அப்படிப்பட்ட பேற்றை உடனே அடைய இயலாமல் ஏற்படும் காலதாமதத்தைப் பொறுக்க இயலாததும் ஆர்த்தி எனப்படும் துன்பம் ஆகும். (அநுவர்த்தந நியதியாவது) - ஸர்வேச்வரனிடமும், அவனது அடியார்களிடமும் தான் கொண்டுள்ள அடிமைத்தனம் காரணமாக, அந்த அடிமைத்தனத்திற்கு ஏற்றபடிப் பேசும் பணிவான சொற்கள் மற்றும் அடக்கமான செயல்கள் ஆகியவற்றை மற்ற எந்த ஸம்ஸாரிகளிடமும் மறந்தும் பேசாதபடியும் செய்யாதபடியும் இருத்தல் வேண்டும். (ஆஹார நியதியாவது) - ஜாதி, ஆச்ரயம் மற்றும் நிமித்த தோஷங்கள் அற்றதாக உள்ளதும், ஸர்வேச்வரன் மற்றும் அவனது அடியார்கள் ஆகியவர்களின் ப்ரஸாதங்களாக உள்ளதும் ஆகிய பொருள்களை மட்டுமே உணவாக எடுத்துக்கொள்வோம்; இவற்றிலிருந்து ஒழிந்த எதனையும் உணவாக ஏற்கமாட்டோம் என்னும் உறுதி கொள்ளவேண்டும் (பூண்டு, முறுங்கை, வெண்கத்திரிக்காய், சுரைக்காய் போன்றவை ஜாதி தோஷம் கொண்டவை; மற்ற தெய்வங்களின் தொடர்புடையதும், ஆசாரம் அல்லாத மனிதர்களிடம் உள்ளதும் ஆச்ரய தோஷம் கொண்டவை; சிரார்த்தம் போன்ற இடத்தில் உள்ள உணவு, விலைக்கு வாங்கும் உணவு ஆகியவை நிமித்த தோஷம் கொண்டவை).

**வ்யாக்யானம்** - (அநுகூல ஸஹவாஸமாவது) - ஸ்வஸம்ஸர்க்கத்தாலே ஜ்ஞாநாநுஷ்டாநங்களை வர்த்திப்பியாநிற்கு மநுகூலரானவர்களுடனே க்ஷணகாலமும் பிரியாதே கூடிவர்த்திக்கை. (ப்ரதிகூல ஸஹவாஸ நிவ்ருத்தியாவது) - ஸ்வஸம்ஸர்க்கத்தாலே ஜ்ஞாநாநுஷ்டாநங்களை நசிப்பியா நிற்கும் ப்ரதிகூலரான

வர்களுடன் க்ஷணகாலமும் கூடி வர்த்தியாதொழிகை. இங்குச் சொன்ன அநுகூலரும் ப்ரதிகூலரு மின்னாரென்னுமிடம் மேலே தாமே யருளிச் செய்யக்கடவரிறே. (ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக்கொண்டு போரக்கடவன்) அதாவது - கீழ்ச்சொன்ன விவையித்தனையும், ஜ்ஞாநாநுஷ்டான பரிபூர்ணனான ஸதாசார்யனுடைய ஸர்வமங்களாவஹமான ப்ரஸாதத்தாலே தன்னடையே மேன்மேலு மபிவ்ருத்தமாம்படி செய்து கொண்டு போரக்கடவனென்றபடி. ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி யிவன் பண்ணிக்கொண்டு போருகையாவது – தத்ப்ரஸாதங்களைச் செய்து கொண்டு போருகை. தத்ப்ரஸாதங்களாவன - இதினுடைய வுபபாதந ஸ்தலத்தி லருளிச் செய்கிறவை. (போரக்கடவன்) என்று விதிரூபேண வருளிச் செய்தது - இதினுடைய அவச்யாநுஷ்டேயத்வம் தோற்றுகைக்காக.

**விளக்கம்** - (அநுகூல ஸஹவாஸமாவது) - தங்களுடைய தொடர்பு என்பதன் மூலமாக நமது ஞானம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றை மேன்மேலும் ஓங்கி வளரச் செய்யும் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் ஒரு நொடிப்பொழுது கூடப் பிரியாமல் சேர்ந்து வசித்து வரவேண்டும். (ப்ரதிகூல ஸஹவாஸ நிவ்ருத்தியாவது) - தங்களுடைய தொடர்பு என்பதன் மூலமாக நமது ஞானம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றை அடியுடன் நீக்கவல்ல மனிதர்களுடன் ஒரு நொடிப்பொழுது கூடச் சேராமல் வாழவேண்டும். இங்கே கூறப்பட்ட அநுகூலர் மற்றும் ப்ரதிகூலர் யார் என்பதை இவரே பின்னே உள்ள சூர்ணைகளில் அருளிச்செய்ய உள்ளார். (ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக்கொண்டு போரக்கடவன்) - இதுவரை கூறப்பட்ட அனைத்தையும், ஞானம் மற்றும் நன்னடத்தை ஆகியவற்றால் நிறைந்துள்ள ஆசார்யனுடைய அனைத்து நன்மைகளையும் அளிக்கவல்ல க்ருபை மூலமாக, தானாகவே மேன்மேலும் வளரும்படியாக அமைத்துக்கொண்டு வாழவேண்டும். அதாவது, அவருடைய நல்ல அருள் வளர்வதற்கு ஏற்றபடியான செயல்களை இவன் செய்தபடி வாழ்தல். அந்தச் செயல்கள் எத்தகையவை என்பதை இவரே மேலே அருளிச்செய்ய உள்ளார். (போரக்கடவன்) - இவை அனைத்தும் அவசியம் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று உணர்த்துவதற்காக "கடவன்" என்று விதிமுறை போன்று அருளிச்செய்கிறார்.

244. மங்களாசாஸநம் ஸ்வரூபவிருத்தமன்றோ வென்னில் ஜ்ஞாநதசையில் ரக்ஷ்யரக்ஷகபாவம் தன்கப்பிலே கிடக்கும்; ப்ரேமதசையில் தட்டு மாறிக் கிடக்கும்.

**அவதாரிகை** - இந்த திநசர்யையிற் சொன்னவற்றில் விவரிக்க வேண்டுமவற்றை விவரிப்பதாகத் திருவுள்ளம் பற்றி, ப்ரதமத்தில் மங்களாசாஸநத்தை விவரித்தருளுகிறார் (மங்களாசாஸந) என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்டதான, ப்ரபந்நன் தன்னுடைய அன்றாட வாழ்க்கையில் தினசரி கடைப்பிடிக்க வேண்டிய பலவற்றில், விவரிக்க வேண்டியவை சில குறித்து, மேலும் விவரிக்கத் திருவுள்ளம் பற்றினார். ஆகவே முதலில் மங்களாசாஸநம் குறித்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஹேயப்ரத்யநீகனாய் கல்யாணைகதாநனாய் ஸ்வேதர ஸகல ரக்ஷகனாயிறே ஸர்வேச்வரனிருப்பது; இப்படி யிருக்கிற வவனைக் கொண்டு தனக்குண்டான அமங்களங்களைப் போக்கி இல்லாத மங்களங்களை யுண்டாக்கிக் கொள்ளக்கடவ தத்ரக்ஷ்ய பூதனானவிவன், தனக்கு ரக்ஷகனானவவனுக்குத் தான் மங்களங்களை யாசாஸிக்கை ததேக ரக்ஷ்யத்வரூபமான ஸ்வரூபத்துக்கு விருத்தமன்றோ வென்கிற சங்கையை யநுவதிக்கிறார் (மங்களாசாஸநம் ஸ்வரூப விருத்தமன்றோ வென்னில்) என்று. அத்தைப் பரிஹரிக்கிறார் (ஜ்ஞாந தசையில்) என்று தொடங்கி. (ஜ்ஞாந தசையாவது) - ஸர்வேச்வரனே ரக்ஷகனாகவும் தானவனுக்கு ரக்ஷ்யபூதனாகவும் ப்ரணவத்திற் சொல்லுகிறபடியே தெளியக் கண்டநுஸந்திக்கும் தசை; அந்த தசையில் "களைவாய் துன்பம் களையாதொழிவாய்" இத்யாதிப்படியே, தன்னுடைய அநிஷ்ட நிவ்ருத்த்யாதிகளுக்கவனே கடவனென்றிருக்கையாலே, ரக்ஷ்யரக்ஷக பாவம் தனக்கடைத்த ஆச்ரயத்திலே கிடக்கும். (ப்ரேம தசையாவது) – ஸர்வேச்வரனுடைய ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களை யநுஸந்தித்து "இவ்விஷயத்துக்குக் கென்வருகிறதோ" என்று அஸ்தாநே பயசங்கை பண்ணி அவன் ஸ்வரூபத்தை யநுஸந்திக்க க்ஷமரன்றிக்கே நெஞ்சு மறுகும்படியான தசை; அந்த தசையில் ஈச்வரனை ரக்ஷிக்க வழிதேடித் தடுமாறுகையாலே, ஈச்வரன் பக்கலிலே ரக்ஷ்யபாவமும் சேதநன் பக்கலிலே ரக்ஷக பாவமுமாய்த் தனக்கடைத்த ஆச்ரயத்தி லன்றிக்கே மாறாடிக்கிடக்கு மென்றபடி.

**விளக்கம்** - அனைத்துவிதமான தாழ்வுகளுக்கும் எதிர்த்தட்டாகவும், அனைத்து திருக்கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாகவும், தன்னைத் தவிர உள்ள மற்ற அனைத்திற்கும் ரக்ஷகனாகவும் ஸர்வேச்வரன் உள்ளான். இப்படியாக உள்ள ஸர்வேச்வரன் மூலமாக தனக்கு உண்டாகின்ற தாழ்வுகள் அனைத்தையும் நீக்கிக்

கொண்டு, தன்னிடம் இல்லாத மக்களங்களை ஏற்படுத்திக்கொண்டு, அவனால் ரக்ஷிக்கப்படுபவனாக இந்த ஜீவன் உள்ளான். இவ்விதம் உள்ளபோது, தன்னைக் காப்பாற்றும் ஸர்வேச்ரனுக்கு மங்களம் உண்டாகவேண்டும் என்று ஜீவன் விரும்புவது, அவனால் காப்பாற்றப்படும் ஜீவனுடைய ஸ்வரூபத்திற்கு முரணாக இருக்கிறது அல்லவோ என்று சந்தேகம் எழலாம். இதனையே "மங்களாசாஸநம் ஸ்வரூப விருத்தமன்றோ வென்னில்" என்றார். இதற்கான விடையை "ஜ்ஞாந" என்று தொடங்கி அருளிச்செய்கிறார். "ஜ்ஞாந தசை" என்பது என்ன? ஸர்வேச்வரனே தன்னைக் காப்பாற்றும் ரக்ஷகன், தான் அவனால் காப்பாற்றப்படும் வஸ்து என்பதைத் திருமந்த்ரத்தின் ப்ரவணத்தில் கூறியுள்ளது குறித்து தெளிவாக அறிந்து, அதற்கேற்றபடி இருக்கின்ற தன்மை என்பதாகும். இப்படிப்பட்ட நிலையில் திருவாய்மொழி (5-8-8) – களைவாய் துன்பம் களையாதொழிவாய் - என்று கூறியதற்கு ஏற்ப, தனக்கு விருப்பம் அல்லாதவற்றை நீக்குவதற்கும், தேவையானவற்றை அடைவதற்கும் ஸர்வேச்வரனே கதி என்று இருக்கக்கூடும். இதனால் காக்கின்ற தன்மை, காக்கப்படும் பொருளின் தன்மை ஆகியவை அந்தந்த இடங்களில் சரியாகவே பொருந்தியிருக்கும். "ப்ரேம தசை" என்பது என்ன? ஸர்வேச்வரனுடைய திருமேனி அழகையும் மென்மையையும் எண்ணிப் பார்த்து, "இவனுக்கு என்ன நேருமோ?", என்று அச்சம் கொள்ளுதல்; அவனது உண்மையான ஸ்வரூபத்தை எண்ணிப் பார்க்கவும் பொறுமை இல்லாமல், மனம் உருகி நிற்கின்ற நிலை ஆகும். அப்போது ஸர்வேச்வரனை எப்படிக் காப்பாற்றுவது என்று புரியாமல் திகைத்து நிற்கக்கூடும். இதனால் ஸர்வேச்வரனிடம் காக்கப்படும் பொருள் என்ற நிலையும், ஜீவனிடம் காப்பாற்றுபவன் என்ற நிலையும் மாறிக் கிடப்பதைக் காணலாம்.

245. அவன் ஸ்வரூபத்தை யநுஸந்தித்தால் அவனைக் கடகாகக் கொண்டு தன்னை நோக்கும், ஸௌகுமார்யத்தை யநுஸந்தித்தால் தன்னைக் கடகாகக் கொண்டு அவனை நோக்கும்.

**அவதாரிகை** - உக்தார்த்தத்தை விசதீகரிக்கிறார் (அவன் ஸ்வரூபத்தை) என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்டதை மேலும் விவரிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ப்ரதமாக்ஷரத்தில் சொல்லுகிறபடியே ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாய் ஸர்வரக்ஷகனான வவனுடைய ஸ்வரூபத்தை யநுஸந்தித்தால், அவனை தனக்கநிஷ்ட நிவாரகனாகக் கொண்டு, அஜ்ஞனாய் அசக்தனாய் அப்ராப்தனான தன்னை ரக்ஷித்துக்கொள்ளும்; பேசப் பிசகும்படியான வவனுடைய ஸௌகுமார்யத்தை யநுஸந்தித்தால், அவனுடைய ஸர்வசக்தித்வாதிகளை மறந்து குழைச்சரக்காக நினைத்துத் தன்னை ரக்ஷகனாகக் கொண்டு மங்களாசாஸநம் பண்ணி அவனை ரக்ஷிக்குமென்கை. இவ்விடத்தில் ஸௌந்தர்யம் சொல்லிற்றில்லையேயாகிலும், அதுவும் மங்களாசாஸந ஹேதுவாகையாலும் மேலே சொல்லுகையாலும் ஸௌகுமார்யமிதுக்கு முபலக்ஷணம்.

**விளக்கம்** - ப்ரணவத்தின் முதல் எழுத்தாகிய “அ” என்பதால் உரைக்கப்பட்டபடி ஸர்வேச்வரன் அனைத்தைம் அறிந்தவனாகவும், அனைத்து சக்தியும் கொண்டவனாகவும், அனைத்தையும் காப்பாற்றுபவனாகவும் உள்ளான். இப்படிபட்ட அவன் ஸ்வரூபத்தை உணர்ந்து கொண்டால், தனக்கு விருப்பம் அல்லாதவற்றை அவனே நீக்கிவிடுவான் என்ற சிந்தனை ஏற்பட்டுவிடும்; இதனால், தான் ஏதும் அறியாதவன், எந்தச் சக்தியும் அற்றவன், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள மற்றவர்களை நாடவேண்டும் என்ற சிந்தனை போன்றவற்றைக் கொண்ட தன்னை அவன் காப்பாற்றுவான் என்று இருந்து, தன்னைக் காப்பாற்றிக் கொள்வான். ஆனால், “அவனது திருமேனி குறித்துப் பேசினால் கூட வாடிவிடும்படியான மென்மை கொண்டவன்” என்று எண்ணியபடி சிலர் இருக்கக்கூடும். இவர்கள் அவனது அனைத்து சக்திகளையும் குழைந்து போகும் பொருள் போன்று எண்ணி, தான் அவனைக் காப்பாற்றுவதாக எண்ணிக் கொண்டு, அவனுக்குத் திருப்பல்லாண்டு கூறி, அவனைக் காப்பாற்ற முயல்வார்கள். இங்கு மென்மையுடன் சேர்த்து திருமேனியின் அழகு பற்றி ஏதும் கூறவில்லை என்றாலும், அதுவும் திருப்பல்லாண்டு பாடுவதற்குக் காரணமே என்பதாலும், கடந்த சூர்ணையில் கூறப்பட்டதாலும் மென்மை என்பது அழகையும் சேர்த்தே உணர்த்துகிறது என்று கொள்க.

246. இவ்வர்த்தம் சக்ரவர்த்தி, ஸ்ரீஜநகராஜன் திருமகள், விச்வாமித்ரன், ஸ்ரீதண்டகாரண்ய வாஸிகளான ருஷிகள், திருவடி, மஹாராஜர், நந்தகோபர், ஸ்ரீவிதுரர், பிள்ளையுறங்காவில்லிதாஸர் தொடக்கமானவர்கள் பக்கலிலே காணலாம்.

**அவதாரிகை** - இப்படி ஸௌகுமார்யாதிகளைக் கண்டு கலங்கி ரக்ஷகனான வவனுடைய சக்திவைபவத்தை மறந்து தானவனை ரக்ஷிக்குமென்கிற விவ்வர்த்த மெங்கே

காணலாமென்னு மபேக்ஷையிலே, இது சிஷ்டாசார ஸித்தமென்னுமிடங் காட்டுகிறார் மேல் (இவ்வர்த்தம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக ஸர்வேச்வரனின் மென்மை, அழகு போன்றவற்றைக் கண்டு, “இவனுக்கு என்ன ஆகுமோ?” என்று கலக்கம் கொண்டு, அனைவரையும் காப்பாற்றும் அவனுடைய வலிமை என்ன என்பதையும் மறந்து, தான் அவனைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடுவான் என்று கடந்து சூர்ணையில் கூறப்பட்டது. இத்தகைய நிகழ்வை எங்கே காணலாம் என்ற கேள்விக்கு, “உயர்ந்தவர்கள் பலரிடம் இதனைக் காணலாம்”, என்று காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம்** - சக்ரவர்த்தி, பெருமாள் பிராட்டியைத் திருமணம் புணர்ந்து மீண்டெழுந் தருளா நிற்க, பரசுராமன் வந்து தோற்றின வளவிலே, தாடகாதாடகேய நிரஸநங்களாலே யிவருடைய சக்திவைபவத்தை வ்யக்தமாக அறிந்திருக்கச் செய்தேயும், இவருடைய பால்யத்தையும் ஸௌகுமார்யத்தையும் பார்த்து, “என்னாகப் புகுகிறதோ!” என்று பீதனாய், தான் முன்னேயோடிச் சென்றும், “க்ஷத்ர ரோக்ஷாத் ப்ரசாந்தஸ் த்வம் ப்ராஹ்மணச்ச மஹாயசா:, பாலாநாம் மம புத்ராணாமபயம் தாதுமர்ஹஸி” என்று சரணம் புக்கு, பின்னையுமவன் பெருமாள் மேலே அடர்ந்து செல்லுகிறபடியைக் கண்டு நிஷ்ப்ராணனாய் நின்று, “கதோ ராம இதி ச்ருத்வா ஹ்ருஷ்ட: ப்ரமுதிதோ ந்ருப:, புநர் ஜாதம் ததா மேநே ஸுதா நாத்மாநமேவச” என்கிறபடியே – அவன் தோற்று மீண்டு போனானென்று கேட்டபின்பு, தானும் பிள்ளைகளும் மறுபிறவி பிறந்ததாக நினைத்திருந்தானிறே.

**விளக்கம்** - இராமன் சீதையைத் திருமணம் செய்து கொண்டு அயோத்திக்கு மீண்டும் திரும்பும்போது, அவன் எதிரில் பரசுராமன் தோன்றினான். தாடகை மற்றும் அவளது புத்திரர்கள் ஆகியவர்களை இராமன் அழித்ததன் மூலம் அவனுடைய சக்தியின் மேன்மையை தசரதர் நன்கு உணர்ந்தார். ஆயினும் இராமனின் பால்யம் மற்றும் மென்மை ஆகியவற்றை ஆராய்ந்து, பரசுராமனுக்கு முன்பாக தான் சென்று நின்றார். “இவனால் நம் இராமனுக்கு என்னவாகுமோ”, என்று கலங்கினார். அந்த அச்சத்துடன் ஓடிச்சென்று பரசுராமனிடம், “இராமாயணம் பாலகாண்டம் (75-6) - க்ஷத்ர ரோக்ஷாத் ப்ரசாந்தஸ் த்வம் ப்ராஹ்மணச்ச மஹாயசா:, பாலாநாம் மம புத்ராணாமபயம் தாதுமர்ஹஸி – நீவிர்

அரசர்கள் மீது கொண்டுள்ள சீற்றம் தணிந்தவராகவும், மிகவும் புகழ் கொண்டவராகவும், அந்தணராகவும் உள்ளீர்கள். எனவே மிகவும் சிறிய வயது கொண்ட எனது புத்திரர்களுக்கு நீவிர் அபயம் அளிக்கவேண்டும்", என்று சரணம் புகுந்தார். இவ்விதம் உரைத்த பின்னரும் பரசுராமன் இராமன் மீது கோபத்துடன் உள்ளதைக் கண்டு, தனது உயிர் நின்றுவிடும்படியாக ஆனார். அதன் பின்னர், இராமாயணம் பாலகாண்டம் (77-5) - கதோ ராம இதி ச்ருத்வா ஹ்ருஷ்ட: ப்ரமுதிதோ நிருப:, புநர் ஜாதம் ததா மேநே ஸுதா நாத்மாநமேவச – பரசுராமன் இராமனிடம் தோற்றுப்போனான் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட தசரதன் மகிழ்ச்சி அடைந்தார்; மிகுந்த ஆனந்தம் கொண்டார்; தானும் தனது புத்திரர்களும் மறுபிறவி எடுத்தாகவே எண்ணினார் - என்று கூறுவதற்கு, பரசுராமன் தோற்றுப்போய் அங்கிருந்து சென்றுவிட்டான் என்பதைக் கேள்விபட்ட பின்னர் தானும் தனது புத்திரர்களும் மறுபிறவி எடுத்துப் பிறந்ததாக எண்ணினார் அல்லவோ?

**வ்யாக்யானம்** - ஸ்ரீஜநகராஜன் திருமகள், தலைநீர்ப்பாட்டிலே யிவருடைய வைபவமெல்லா மறியுமவளா யிருக்கச் செய்தேயும், திருவபிஷேகம் பண்ணுகைக்காக அலங்க்ருத திவ்ய காத்ரராய்க் கொண்டு சக்ரவர்த்தி திருமாளிகைக் கெழுந்தருளுகிற போது, இவரழகிலே தோற்று "இதுக்கென் வருகிறதோ" என்று ப்ரேமத்தாலே கலங்கி, "பதி ஸம்மாநிதா ஸீதா பர்த்தாரமஸிதேக்ஷணா, ஆத்வாரமநுவவ்ராஜ மங்களாந் யபி தத்யுஷீ" என்று - திருவாசலளவும் தான் மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு பின் சென்று, "பூர்வாம் திசம் வஜ்ரதரோ தக்ஷிணாம் பாது தே யம:, வருண: பச்சிமாமாசாம் தநேசஸ்துத்தராம் திசம்" என்று – திக்பாலர்களை யிவர்க்கு ரக்ஷகராக அபேக்ஷித்தாளிறே. "ஸ்ரீஜநகராஜன்" என்றும், "திருமகள்" என்றும் பிரித்துச் சொல்லவுமாம். அப்போதைக்கு ஸ்ரீஜநகராஜன், மஹேச்வர தநுர்பங்கத்தாலே பெருமாளுடைய சக்திவைபவத்தைக் கண்டிருக்கச் செய்தேயும், "இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ, ப்ரதீச்சசைநாம் பத்ரந் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா" என்று "ஆபிஜாத்யாதிகளால் வீறுடையளான விவளைக் கைக்கொண்டருளும்" என்று காட்டிக் கொடுக்கிறவளவிலே, இவருடைய வழகையும் ஸௌகுமார்யத்தையும் கண்டு கலங்கி, இச்சேர்த்திக்கொரு தீங்கு வாராதொழியவேணும் என்று "பத்ரம் தே" என்று மங்களாசாஸநம் பண்ணினானென்கை.

**விளக்கம்** - சீதை இராமனின் மேன்மைகள் அனைத்தையும் நேரடியாக அறிந்தவள் ஆவாள். ஆயினும் அவள் செய்தது என்ன? இராமன் பட்டாபிஷேகம் செய்து கொள்ளும் பொருட்டு, தனது திருமேனி முழுவதும் நன்றாக அலங்கரித்துக்கொண்டு, தசரதனின் மாளிகைக்கு எழுந்தருளியபோது, அவனது வடிவழகில் சீதை மயங்கி நின்றாள். அவன் மீது கொண்ட மாறாத காதலால், "இவனுக்கு என்ன ஆபத்து ஏற்படுமோ", என்று கலங்கினாள். இராமாயணம் அயோத்யாகாண்டம் (19-2) – பதி ஸம்மாநிதா ஸீதா பர்த்தாரமஸிதேக்ஷணா, ஆத்வாரமநுவவ்ராஜ மங்களாந் யபி தத்யுஷீ - தனது கணவனாகிய இராமனால் நன்கு கௌரவிக்கப்பட்டவளும், கருமையான விழிகளைக் கொண்டவளும் ஆகிய சீதை, இராமனை மங்களாசாஸநம் செய்தபடியே அவனைத் தொடர்ந்து வாசல்வரை சென்றாள் – என்று கூறுவதற்கு ஏற்ப தன்னுடைய மாளிகையின் வாசல் முடிய அவனுக்குப் பல்லாண்டு பாடியபடியே சென்றாள். அத்துடன் நிற்காமல், இராமாயணம் அயோத்யாகாண்டம் (16-24) – பூர்வாம் திசம் வஜ்ரதரோ தக்ஷிணாம் பாது தே யம:, வருண: பச்சிமாமாசாம் தநேசஸ்தூத்தராம் திசம் – உம்மைக் கிழக்குத் திசையில் இந்த்ரனும், தென் திசையில் யமனும், மேற்குத் திசையில் வருணனும், வடக்குத் திசையில் குபேரனும் பாதுகாப்பார்களாக – என்று கூறுவதற்கு ஏற்ப, திக்பாலகர்களை இராமனுக்குப் பாதுகாவலர்களாக இருக்க விரும்பினாள் அல்லவோ?

சூர்ணையில் உள்ள "ஸ்ரீஜநகராஜன் திருமகள்" என்பதை "ஸ்ரீஜநகராஜன்", "திருமகள்" என்று தனித்தனியாகப் பிரித்தும் பொருள் உரைக்கலாம். இவ்விதம் கொண்டால், சிவனின் வில்லை இராமன் உடைத்ததன் மூலம், இராமனது சக்தியின் மேன்மையை ஜனகன் நேரடியாகவே கண்டார். ஆயினும் அவர் செய்தது என்ன? இராமாயணம் பாலகாண்டம் (73-27) - இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ, ப்ரதீச்சசைநாம் பத்ரந் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா – எனது பெண்ணாகிய இந்தச் சீதை நீவிர் செய்யும் அனைத்து தர்மங்களுக்கும் துணையாக நிற்பாள்; இப்படிப்பட்ட இவளை நீவிர் திருக்கரம் பற்றவேண்டும்; உமக்கு மங்களங்கள் உண்டாகட்டும்; இவளை ஏற்றுக்கொள்வீராக - என்று கூறியதற்கு ஏற்ப, "உயர்ந்த பிறப்பு போன்றவற்றால் சிறந்த இவளைத் திருக்கரம் பற்றவேண்டும்", என்று பாணிக்ரஹணம் செய்வித்தார். அப்போது சீதையுடன் சேர்ந்த இராமனின் திருமேனி அழகு, மென்மை ஆகியவற்றை கண்டு நெகிழ்ந்து, கலங்கி, இந்தச் சேர்க்கைக்கு எந்தவிதமான தீமையும் வரக்கூடாது என்று எண்ணியவராக, "பத்ரம் தே - மங்களம் உண்டாகட்டும்", என்று வாழ்த்தினார் அல்லவோ?

**வ்யாக்யானம்** - விச்வாமித்ரன், தன்னுடைய அத்வர த்ராணார்த்தமாகப் பெருமாளை யழைத்துக் கொண்டு போருகிறபோது, நடுவே தாடகை பெரிய ஆர்ப்பரவத்தோடே ஆக்ரமித்துக் கொண்டு வருகிறபடியைக் கண்டு, "அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்ய பராக்ரமம்" என்கிறபடியே - பெருமாளுடைய சக்தி வைபவத்தை யறிந்திருக்கச் செய்தேயும், ஸௌகுமார்யத்தைப் பார்த்துக் கலங்கி, "விச்வாமித்ரஸ்து ப்ரஹ்மர்ஷிர் ஹுங்காரேணாபிபர்த்ஸ்ய தாம், ஸ்வஸ்தி ராகவயோரஸ்து ஜயஞ்சை வாப்யபாக்ஷத" என்கிறபடியே – தான் முன்னே நின்று அவனை ஹுங்கரித்து, பெருமாளுக்கும் திருத்தம்பியார்க்கும் ஒரு தீங்கு வாராமைக்காக மங்களாசாஸநமும் செய்தானிறே.

**விளக்கம்** – விச்வாமித்திரர் தனது யாகத்தைக் காப்பாற்றும் பொருட்டு இராமனை அழைத்துக்கொண்டு செல்லும்போது நடுவில் மிகப் பெரிய ஆரவாரத்துடன் தாடகை எதிர்த்து வருவதைக் கண்டார். அப்போது அவர் இராமாயணம் பாலகாண்டம் (19-14) - அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்ய பராக்ரமம் – மஹாத்மாவும், உண்மையான பராக்ரமம் கொண்டுள்ளவனும் ஆகிய இராமனை நான் அறிவேன் – என்பதற்கு ஏற்ப இராமனின் வலிமையை அவர் முழுமையாக அறிந்துள்ளபோதிலும் அவனுடைய மென்மையைக் கண்டு கலங்கினார். இதனால் இராமாயணம் பாலகாண்டம் (26-14) – விச்வாமித்ரஸ்து ப்ரஹ்மர்ஷிர் ஹுங்காரேணாபிபர்த்ஸ்ய தாம், ஸ்வஸ்தி ராகவயோரஸ்து ஜயஞ்சை வாப்யபாக்ஷத - ப்ரஹ்மரிஷியான விச்வாமித்திரர் தனது ஹும் என்ற ஒலியால் தாடகையை விரட்டினார்; ரகுவம்சத்தில் வந்த உங்கள் இருவருக்கும் வெற்றி, மங்களம் உண்டாகட்டும் என்றார் - என்று கூறுவதற்கு ஏற்ப, தான் தாடகையின் முன்பாக நின்று அவளை "ஹும்" என்று அதட்டி, இராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் எந்தத் தீமையும் வராமல் இருப்பதற்காகப் பல்லாண்டு கூறினார் அல்லவோ?

**வ்யாக்யானம்** - ஸ்ரீதண்டகாரண்யவாஸிகளான ருஷிகள், "தே தம் ஸோமமிவோத்யந்தம் த்ருஷ்ட்வாவை தர்மசாரிண: மங்களாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்யக்ருஹ்ணந் த்ருடவ்ரதா:" என்று தங்களாபந் நிவ்ருத்தியையும் அபிமத ஸித்தியையும் பண்ணித்தருவாரிவரேயென்று ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகிற தாங்கள், இவர் ஸந்நிஹிதரானவாறே அவற்றை மறந்து, இவர் வடிவழகிலே துவக்குண்டு மங்களாசாஸநம் பண்ணினார்களிறே.

**விளக்கம்** – ஸ்ரீதண்டகாரண்யத்தில் வசிக்கும் முனிவர்கள் இராமாயணம் ஆரண்யகாண்டம் (1-11) - தே தம் ஸோமமிவோத்யந்தம் த்ருஷ்ட்வாவை தர்மசாரிண: மங்களாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்யக்ருஹ்ணந் த்ருடவ்ரதா: – தர்மத்தைச் செய்பவர்களும், உறுதியான விரதங்கள் பூண்டவர்களும் ஆகிய அந்த ரிஷிகள், உதிக்கின்ற சந்திரன் போன்ற இராமனைக் கண்டார்கள்; அவனைப் பார்த்தபடி அவனுக்கு மங்களாசாஸநம் செய்தார்கள் – என்று கூறியபடியே தங்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்திலிருந்து காப்பாற்றவும், தங்களுக்கு விருப்பமானவற்றை அளிக்கவும் செய்பவன் இராமனே என்று அறிந்து அவனைக் குறித்தே தவம் இயற்றியபடி உள்ளபோதிலும், இராமன் தங்களுடைய அருகாமையில் வந்தவுடன் அவற்றை மறந்து, இவன் வடிவழகில் கலங்கிப் போய் மங்களாசாஸநம் செய்தார்கள் அல்லவோ?

**வ்யாக்யானம்** - திருவடி, ப்ரதம தர்சநத்தில் "ஆயதாச்ச ஸுவ்ருத்தாச்ச பாஹவ: பரி கோபமா: ஸர்வ பூஷண பூஷார்ஹா: கிமர்த்தம் நவிபூஷிதா:" என்று கணையங்கள் போலே இருக்கிற திருத்தோள்களில் மிடுக்கைக் கண்டு, "நமக்கிவர் ரக்ஷகராகக் குறைமில்லை" என்று புத்தி பண்ணாநிற்கச்செய்தே, அவற்றினழகைக் கண்டு ஈடுபட்டு, "பிறர் கண்ணெச்சில் படில் செய்வதென்" என்றதிசங்கை பண்ணி, "திருவாபரணங்களாலே யித்தை மறைத்திட்டு வையாதே யிப்படி வெளியிடக்காரணமென்" என்று வயிறு பிடித்து, பின்பும், பெருமாளுடைய சக்திவிசேஷத்தை பஹுமுகமாகக் காணா நிற்கச் செய்தேயும், ஸௌகுமார்யாநுஸந்தாநத்தாலே "இவர்க்கென் வருகிறதோ" என்று துணுக்குத் துணுக்கென்று ஸர்வ தசையிலும் கூட நின்று நோக்கிக்கொண்டு திரிந்தானிறே.

**விளக்கம்** – அனுமன் முதன்முதலாக இராமனைக் கண்டபோது இராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் (3-14) – ஆயதாச்ச ஸுவ்ருத்தாச்ச பாஹவ: பரி கோபமா: ஸர்வ பூஷண பூஷார்ஹா: கிமர்த்தம் நவிபூஷிதா: - நீண்டிருப்பவையும், அழகுடன் திரண்டுள்ளவையும், உலக்கை போன்றுள்ளவையும், அனைத்து ஆபரணங்கள் மூலம் மறைக்கப்பட வேண்டியவையும் ஆகிய திருக்கரங்கள் ஏன் அலங்கரிக்கப்படவில்லை – என்று கூறியதற்கு ஏற்ப, உலக்கை போன்ற உறுதியான திருத்தோள்களின் வலிமையைக் கண்டவுடன், "நம்மைக் காப்பாற்றுபவராக இவர் நிச்சயம் இருப்பார்", என்று எண்ணினான். ஆனால் உடனே அந்த திருத்தோள்களின் அழகில் ஈடுபட்டு நின்று, "யாருடைய கண் த்ருஷ்டியாவது பட்டுவிடப் போகிறதே" என்று சந்தேகப்பட்டு, "திருவாபரணங்கள் கொண்டு மறைக்கவேண்டிய இந்த அழகை இவ்விதம் வெளியிட்ட

காரணம் என்ன?", என்று வயிறு கலங்கினான். இராமனின் வலிமையைப் பல இடங்களில் கண்டுள்ளபோதிலும், "இவனுக்கு என்ன நேரப்போகிறதோ?", என்று எப்போதும் அவனை விட்டுப் பிரியாமல் நின்று, அவனைக் காப்பாற்றியபடி இருந்தான் அல்லவோ?

**வ்யாக்யானம் -** மஹாராஜர், வாலிவதாதிகளாலே பெருமாளுடைய சக்தி கௌரவத்தைக் கண்டிருக்கச் செய்தேயும், ஸௌகுமார்யத்தையே பார்த்துக் கலங்கி, ஸ்ரீவிபீஷணாழ்வான் நாலு பேரும் தானுமாய் வந்து தோற்றினபோது, "ஏஷ ஸர்வாயுதோ பேதச் சதுர்ப்பிஸ் ஸஹ ராக்ஷஸை:, ராக்ஷஸோப்யேதி பச்யத்வம் அஸ்மாந் ஹந்தும் ந ஸம்சய:" என்று – நமக்கெல்லாம் ஒருயிரான பெருமாளை நலிகிற வழியாலே நம்மை யெல்லாரையும் முடிப்பதாக வருகிறானிவன் என்றறுதியிட்டு, முதலிகளுக்குக் காட்டி, "ராகவம் சரணம் கத:", "நிவேதயத மாம் க்ஷிப்ரம்" என்று உக்திகளைக் கேட்டு வைத்தும், "வத்யதாமேஷ தீவ்ரேண தண்டேந ஸசிசைஸ் ஸஹ, ராவணஸ்ய ந்ருசம்ஸஸ்ய ப்ராதா ஹ்யேஷ விபீஷண:" என்று – ராவண ஸம்பந்தத்தையே பார்த்து இவனை சித்ரவதம் பண்ண வேணுமென்பது, "ராவணேந ப்ரணிஹிதம் தமமைஹி நிசாசரம், தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே க்ஷமம் க்ஷமவதாம்வர" என்று ராவணன் வரவிட வந்தவனென்றே யவனைத் திருவுள்ளம் பற்றவேணும், அவனை தண்டிக்கையே ப்ராப்தமென்று புத்தி பண்ணா நின்றேன் என்பதாய் இப்புடைகளிலே பலவற்றையுஞ் சொல்லி, "இவனை ஸர்வதா கைக்கொள்ளவொண்ணாது" என்று ஒரு நிலைநின்று, "பிசாசாந் தாநவாந்" இத்யாதியாலே நம்முடைய பலத்தைக் காட்டியும், கபோதோபாக்க்யாநம் கண்டுபாக்க்யாநம் இவை யருளிச் செய்தும் தெளிவித்து பயத்தைக் கெடுத்து, "ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட" என்ன வேண்டும்படி பெருமாளைக் குழைச்சரக்காக நினைத்துக் காத்துக் கொண்டு போந்தாரிறே. "மஹாராஜர்" என்கிறது ஸ்ரீஜடாயுமஹாராஜரை யென்றும் சொல்லுவர்கள். அதாவது ஸ்ரீஜடாயுமஹாராஜர், பிராட்டிக்காக ராவணனோடே பொருது குற்றுயிராய்க் கிடக்கிற தம்மைப் பெருமாள் வந்து கண்டவளவிலே, ஜநஸ்தாநத்திலிருந்த பதினாலாயிரம் ராக்ஷஸரையும் தனி வீரஞ்செய்து நின்று கொன்ற தோள்வலியை யறிந்திருக்கச் செய்தேயும், "யாமோஷதி மிவாயுஷ்மந் அந்வேஷஸி மஹாவநே, ஸாதேவீ மமசப்ராணா ராவணேநோபயம் ஹ்ருதம்" என்று "அருமருந்து தேடுவார் அடவிதோறுந் தடுமாறுமாப்போலே யாவளொருத்தியை யிந்தப் பரந்த காட்டிலே தேடிக்கொண்டு திரிகிறீர், உமக்கு நித்யம் ப்ராண ஸமையான வளும் என்னுடைய ப்ராணங்களு மிரண்டும் ராவணானாகிற பையலாலே அபஹ்ருதமாய்த்துக்காணும்" என்று சொல்லா

நிற்கச்செய்தே; இவருடைய விரஹக்லேசத்தால் வந்த தளர்த்தியையும் ஸௌகுமார்யத்தையும் ராக்ஷஸரோட்டை வான் பகையையும் நினைத்து "என்னாகத் தேடுகிறதோ" என்றஞ்சி, "ஆயுஷ்மந்" என்று ஆயுஸ்ஸை ப்ரார்த்தித்தாரிறே.

**விளக்கம்** – சுக்ரீவன் இராமனின் வலிமைக்கு உள்ள மேன்மையை வாலி வதை போன்ற பல இடங்களில் நேரடியாகப் பார்த்துள்ளான். ஆயினும் இராமனின் மென்மையான திருமேனியைக் கண்டு கலங்கினான். ஸ்ரீவிபீஷணன் தன்னுடன் நான்கு அரக்கர்கள் சூழ வந்தபோது இராமாயணம் யுத்தகாண்டம் (17-5) - ஏஷ ஸர்வாயுதோ பேதச் சதுர்ப்பிஸ் ஸஹ ராக்ஷஸை:, ராக்ஷஸோப்யேதி பச்யத்வம் அஸ்மாந் ஹந்தும் ந ஸம்சய: - இந்த அரக்கன் தன்னுடன் நான்கு அரக்கர்களுடன் கூடியவனாக நம்மைக் கொல்ல வந்துள்ளான். இதில் ஐயம் இல்லை, பார்த்தீர்களா – என்று கூறுவதற்கு ஏற்ப, நம் அனைவருக்கும் உயிராக உள்ள இராமனை அழிப்பதன் மூலம் நம் அனைவரையும் முடிப்பதற்காகவே இவன் வருகிறான் என்று முடிவு செய்தான். அவனை மற்ற வானர வீரர்களுக்கும் காண்பித்தான். இராமாயணம் யுத்தகாண்டம் (17-16) - ராகவம் சரணம் கத: – இராமனைச் சரணம் அடைகிறேன், யுத்தகாண்டம் (17-13) - நிவேதயத மாம் க்ஷிப்ரம் – விபீஷணனாகிய என்னைப் பற்றி இராமனுக்குத் தெரிவியுங்கள் – என்றும் கூறியபடி விபீஷணன் வந்தான். ஆயினும் இந்தச் சொற்களைக் கேட்ட பின்னரும், இராமாயணம் யுத்தகாண்டம் (17-27) - வத்யதாமேஷ தீவ்ரேண தண்டேந ஸசிவைஸ் ஸஹ, ராவணஸ்ய ந்ருசம்ஸஸ்ய ப்ராதா ஹ்யேஷ விபீஷண: – இந்த விபீஷணனை அவனது மந்திரிகளுடன் சேர்த்து மிகவும் கடுமையான தண்டனை அளித்துக் கொல்லவேண்டும்; இவன் இராவணனின் தம்பி அல்லவோ - என்று கூறுவதற்கு ஏற்ப இராவணனுடன் இவனுக்கு உள்ள ஸம்பந்தத்தை ஆராய்ந்து, இவனைச் சித்ரவதை செய்யவேண்டும் என்றான். மேலும் சுக்ரீவன் இராமனிடம், இராமாயணம் யுத்தகாண்டம் (17-24) - ராவணேந ப்ரணிஹிதம் தமமைஹி நிசாசரம், தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே க்ஷமம் க்ஷமவதாம்வர – பொறுமை உள்ளவர்களில் உயர்ந்தவனே! இந்த அரக்கன் இராவணனால் அனுப்பப்பட்டவன் என்பதை அறிவாயாக; எனவே இவன் தண்டிக்கப்படவேண்டியவன், இவனுக்குத் தக்க தண்டனை அளிப்பதே சிறந்தது என்று நான் எண்ணுகிறேன் - என்று கூறுவதற்கு ஏற்ப, "இவன் இராவணன் அனுப்பி இங்கே வந்தவன் என்பதை உமது திருவுள்ளத்தில் கொள்ளவேண்டும். இவனைத் தண்டிப்பதே ஏற்றது என்று நான் எண்ணுகிறேன்", என்பது போன்ற சொற்கள் பல உரைத்தான். மேலும், "இவனை எப்போதும் நாம் கைக்கொள்ளக்கூடாது", என்று உறுதியாக நின்றான். அப்போது

இராமன், இராமாயணம் யுத்தகாண்டம் (18-23) – பிசாசாந் தாநவாந் – சுக்ரீவனே! பிசாசுகள், தானவர்கள், யக்ஷர்கள், உலகில் உள்ள அசுரர்கள் என்றுள்ள அனைவரையும் நான் விரும்பினால் எனது விரல் நுனி மூலமே கொல்ல இயலும் – என்று தனது வலிமையைச் சுக்ரீவனுக்கு உணர்த்தி, ஒரு சரிதங்களை அவனுக்கு எடுத்துரைத்து, அவன் மனதைத் தெளிய வைத்து, அவன் அச்சத்தை நீக்கினான். மேலும் இராமாயணம் யுத்தகாண்டம் (18-34) – ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட - வானரர்களின் தலைவனே! அவனை இங்கே அழைத்து வாரும் – என்று வேண்டும்படி, இராமனைக் காக்கப்பட வேண்டிய ஒருவனாகவே சுக்ரீவன் நினைத்தான் அல்லவோ?

சூர்ணையில் உள்ள மஹாராஜர் என்ற பதம் மூலம் ஜடாயுவைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். அதாவது மஹாராஜர் என்று ஸ்ரீஜடாயுமஹாராஜரையும் உரைப்பார்கள். சீதைக்காக இராவணனுடன் சண்டையிட்டு, குற்றுயிராகக் கிடந்த ஜடாயு, தன்னைக் காண வந்த இராமனைப் பார்த்தார். இராமன், தான் உள்ள இடத்திலிருந்த பதினாலாயிரம் அரக்கர்களைத் தனி ஒருவனாகவே நின்று அழித்த தோள் வலிமையைப் பற்றி நன்றாக அறிந்திள்ளபோதிலும், இராமாயணம் ஆரண்யகாண்டம் (67-15) – யாமோஷதி மிவாயுஷ்மந் அந்வேஷஸி மஹாவநே, ஸாதேவீ மமசப்ராணா ராவணேநோபயம் ஹ்ருதம் – தீர்க்கமான ஆயுள் கொண்ட இராமா! எந்த ஒரு சீதையை, இத்தனை பெரிய கானகத்தில் உயிர்காக்கும் மூலிகைக் கொடியைத் தேடுவது போன்று தேடுகிறாயோ, அந்தப் பிராட்டி மற்றும் எனது உயிர் ஆகிய இரண்டுமே இராவணனால் கவரப்பட்டது - என்று கூறுவதற்கு ஏற்ப, “அரியவகை மூலிகையைத் தேடுபவர்கள் ஒவ்வொரு காட்டிலும் தடுமாறியபடி உள்ளது போன்று, நீவிர் எந்த ஒரு பிராட்டியைத் தேடுகிறீர்களோ, உமக்கு நித்யமான உயிர் போன்றுள்ள அந்தப் பிராட்டியும் எனது உயிரும் இராவணன் என்ற அற்பனால் அபகரிக்கப்பட்டது”, என்று உரைத்தார். சீதையைப் பிரிந்த துன்பத்தால் வாடுகின்ற நிலையில் இராமனுக்கு ஏற்பட்ட தளர்ச்சி மற்றும் மென்மை, அரக்கர்களுடன் இராமனுக்கு உள்ள பகை ஆகியவற்றை எண்ணிப் பார்த்து, “இவனுக்கு என்ன ஆகுமோ”, என்று பயந்து, ஆயுஷ்மந் – நீண்ட ஆயுள் கொண்டவனே என்று வாழ்த்தினார் அல்லவோ?

**வ்யாக்யானம்** - ஸ்ரீநந்தகோபர், பூதநா நிரஸநத்தாலே க்ருஷ்ணனுடைய திவ்ய சக்தி யோகத்தைக் கண்டிருக்கச் செய்தேயும், சைசவ ப்ரயுக்தமான ஸௌகுமார்யத்தையே பார்த்துக் கலங்கி வயிறெரிந்து, “ரக்ஷது த்வாம் அசேஷாணாம் பூதாநாம் ப்ரபவோ ஹரி:

யஸ்ய நாபி ஸமுத்பூத பங்கஜா தபவஜ் ஜகத்" என்று – "ஸர்வ ஜகத்காரண பூதனாய் ஸகல விரோதி நிரஸநசீலனான ஸர்வேச்வரன் உம்மை ரக்ஷிப்பானாக" என்று ரக்ஷை யிட்டாரிறே.

**விளக்கம்** - பூதனையைக் கொன்ற செயல் மூலமாக க்ருஷ்ணனுடைய திவ்யமான வலிமையை நந்தகோபர் நேரடியாகவே பார்த்துள்ளார். ஆயினும் அவனது மென்மையை எண்ணிப் பார்த்து உள்ளம் கலங்கினார். இதனால் மஹாபாரதம் – ரக்ஷது த்வாம் அசேஷாணாம் பூதாநாம் ப்ரபவோ ஹரி: யஸ்ய நாபி ஸமுத்பூத பங்கஜா தபவஜ் ஜகத் – யாருடைய திருநாபியில் தோன்றிய தாமரை மலரிலிருந்து அனைத்து உலகங்களும் தோன்றினவோ, உலகின் காரணமாக உள்ள அந்த ஸ்ரீஹரி உன்னைக் காப்பாற்ற வேண்டும் – என்று கூறுவதற்கு ஏற்ப, "அனைத்து உலகங்களுக்கும் காரணமாக உள்ளவனும், அனைத்து விரோதிகளையும் அழிப்பவனுமாகிய ஸர்வேச்வரன் உன்னைக் காப்பாற்றுவானாக", என்று காப்பு உரைத்தார் அல்லவோ?

**வ்யாக்யானம்** - ஸ்ரீவிதுரர், க்ருஷ்ணனுடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வாதிகளை அறிந்திருக்கச் செய்தேயும், துர்யோதந கோஷ்டியில் எழுந்தருளினபோது பொய்யாஸநமிட்ட படியைக் கண்டஞ்சி ப்ரேமாந்ததையாலே, "ஸம்ஸ்ப்ருசந் நாஸநம் சௌரேர் விதுரஸ்ஸ மஹாமதி:" என்று – தம்முடைய திருமாளிகையில் தாமிட்ட ஆஸநத்தையு மதிசங்கை பண்ணித் தன் கையாலே அமுக்கிப் பார்த்தாரிறே.

**விளக்கம்** - க்ருஷ்ணனின் அனைத்தும் அறிகின்ற வலிமை, அனைத்தும் செய்யவல்ல திறமை போன்றவற்றை விதுரர் நன்கு அறிவார். ஆயினும் அவன் துரியோதனனின் அவைக்கு எழுந்தருளியபோது, அவனுக்கு அளிக்கப்பட்ட பொய்யான ஆசனத்தைக் கண்டு அச்சம் கொண்டார். அவன் மீது கொண்ட ப்ரேமையால், அவனது வலிமை பற்றி மறந்தவராக, மஹாபாரதம் உத்யோக பர்வம் - ஸம்ஸ்ப்ருசந் நாஸநம் சௌரேர் விதுரஸ்ஸ மஹாமதி: - மிகுந்த ஞானம் கொண்ட விதுரர் க்ருஷ்ணனுக்கு அளிக்கப்பட்ட ஆசனத்தைத் தனது கரங்களால் அழுத்திப் பார்த்தார் - என்று கூறுவதற்கு ஏற்ப, தனது திருமாளிகையில், தான் க்ருஷ்ணனுக்கு அளித்த ஆசனத்தின் மீதே சந்தேகம் கொண்டவராக ஒருமுறை நன்றாக அழுத்திப் பார்த்தார் அல்லவோ?

**வ்யாக்யானம் -** பிள்ளையுறங்காவில்லி தாஸர், அத்தலையில் ஜ்ஞாந சக்தியாதிகளெல்லா மறிந்து, "பெருமாள் நமக்கு ரக்ஷகர்" என்றிராநிற்கச் செய்தேயும், ப்ரேம பரவசராகையாலே, "பெருமாளுலாவி யருளும்போது எங்கேனுமொரு சலநம் பிறக்கில் நம் பிராணனை விடுமித்தனை" என்று சொட்டையை யுருவிப் பிடித்துக் கொண்டு ஸேவிப்பரென்று ப்ரஸித்தமிறே.

**விளக்கம் -** ஸ்ரீரங்கநாதனின் ஞானம், சக்தி போன்ற அனைத்தையும் பிள்ளயுறங்கா வில்லிதாஸர் என்பவர் நன்கு அறிவார். "இந்த நம்பெருமாளே நம்மைக் காப்பவன்", என்பதையும் நன்கு அறிவார். ஆயினும் திருவரங்கன் மீது கொண்டிருந்த ஆழ்ந்த ப்ரேமை காரணமாக, "நம்பெருமாள் திருவீதியில் எழுந்தருளும்போது அவனுக்கு ஏதேனும் சிறிய அசைவு உண்டானால் கூட நாம் நமது உயிரை மாய்த்துக்கொள்வோம்" என்று எண்ணியபடி நம்பெருமாள் அருகிலேயே ஒரு சிறிய உடைவாளை ஏந்தியபடி வருவார் என்பது மிகவும் ப்ரஸித்தம் ஆகும்.

**வ்யாக்யானம் -** (தொடக்கமானவர்கள்) என்கிற வித்தால் – "ஸ்த்ரியோ வ்ருத்தஸ் தருண் யச்ச ஸாயம் ப்ராதஸ் ஸமாஹிதா:, ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யசஸ்விந:" என்கிற திருவயோத்யவாஸி ஜநங்கள்; "யந் மங்களம் ஸுபர்ணஸ்ய விநதா கல்பயத் புரா, அம்ருதம் ப்ரார்த்தயாநஸ்ய தத்தே பவது மங்களம்" என்ற ஸ்ரீகௌஸலையார்; "ஜாதோஸி தேவதேவேச சங்கசக்ர கதாதர! திவ்யரூபமிதம் தேவ ப்ரஸாதே நோபஸம்ஹர" என்று ஸ்ரீவஸுதேவர்; "உபஸம்ஹர ஸர்வாத்மந் ரூபமேதச் சதுர்புஜம், ஜாநாது மாவதாரம் தே கம்ஸோயம் திதி ஜந்மஜ:" என்கிற தேவகிப்பிராட்டி முதலானோரையெல்லாம் நினைக்கிறது.

**விளக்கம் –** சூர்ணையில் உள்ள "தொடக்கமானவர்கள்" என்று கூறப்பட்ட பதம் மூலம் கீழே உள்ள பலரையும் எண்ணவேண்டும்:

- இராமாயணம் அயோத்யாகாண்டம் (2-52) – ஸ்த்ரியோ வ்ருத்தஸ் தருண் யச்ச ஸாயம் ப்ராதஸ் ஸமாஹிதா: ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யசஸ்விந: - அயோத்தியில் உள்ள வயதான பெண்கள், ஆண்கள், இளைய பெண்கள் என்று பலரும் இராமனின் நலத்தை முன்னிட்டு காலை மற்றும் மாலை

நேரங்களில் அனைத்து தேவர்களையும் வணங்கியபடி உள்ளனர் – என்று கூறப்படும் திருஅயோத்தியில் உள்ள மக்கள்.

- இராமாயணம் அயோத்யாகாண்டம் (52-33) – யந் மங்களம் ஸுபர்ணஸ்ய விநதா கல்பயத் புரா, அம்ருதம் ப்ரார்த்தயாநஸ்ய தத்தே பவது மங்களம் - தனது தாயான விநதைக்காக கருடன் அமிர்தத்தைத் தேடிச் சென்றபோது, கருடனின் பொருட்டு விநதை எத்தகைய மங்களத்தை வேண்டினாளோ அத்தகைய மங்களம் உனக்கு ஏற்படவேண்டும் – என்று உரைத்த இராமனின் தாயான கௌஸலை.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-3-10) - ஜாதோஸி தேவதேவேச சங்கசக்ர கதாதர! திவ்யரூபமிதம் தேவ ப்ரஸாதே நோபஸம்ஹர - தேவர்களின் தலைவனே! சங்கு சக்கரம் கொண்டவனே! சங்கு சக்கரத்துடன் காட்சி அளிக்கின்ற இந்த திவ்யமான ரூபத்தை நீ கருணையுடன் மறைத்துக் கொள்ளவேண்டும் - என்று வேண்டிய வஸுதேவர்.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-3-13) - உபஸம்ஹர ஸர்வாத்மந் ரூபமேதச் சதுர்புஜம், ஜாநாது மாவதாரம் தே கம்ஸோயம் திதி ஜந்மஜ: - அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளவனே! நான்கு திருத்தோள்களுடன் கூடிய இந்த திவ்யமான ரூபத்தை மறைத்துக் கொள்வாயாக. அசுரனாகிய கம்ஸன் இந்த அவதாரத்தை அறிதல் கூடாது - என்று வேண்டிய தேவகிப்பிராட்டி.

247. இளையபெருமாளை ஸ்ரீகுஹப்பெருமாளதிசங்கை பண்ண இருவரையு மதிசங்கை பண்ணி ஸ்ரீகுஹப்பெருமாள் பரிகரம் பெருமாளை நோக்கிற்றிறே.

**அவதாரிகை** - இவ்விஷய வைலக்ஷ்ண்ய மெல்லாரையும் மங்களாஸாஸநத்திலே மூட்டு மென்னுமிடத்துக்கு இன்னமொரு உதாஹரணம் காட்டுகிறார் (இளையபெருமாளை) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஸர்வேச்வரனுடைய திருமேனி அழகு போன்றவை, அனைவரையும் அவனுக்குத் திருப்பல்லாண்டு பாடும்படிச் செய்யும் என்பதை மேலும் ஓர் உதாரணம் மூலம் காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ச்ருங்கிபேரபுரத்திலே யெழுந்தருளி ஸ்ரீகுஹப்பெருமாளை விஷயீகரித்தருளினவன்று, பாங்கறிந்து இளையபெருமாள் படுத்துக்கொடுத்த பர்ணசய்யையிலே பெருமாளும் பிராட்டியும் பள்ளிகொண்டருளாநிற்க, "பால்யாத் ப்ரப்ருதி" ஸுஸ்நிக்தராகையாலே என்வருகிறதோ வென்றஞ்சி, முதுகிலிட்ட அம்பறாத் தூணியும் கட்டின விரற்சரடும் நாணியேறிட்டு நடுக்கொத்துப் பிடித்த வில்லும் தாமுமாய் நடையாடும் மதிள் போலே வளைய வருகிற இளையபெருமாளைக் கண்டு ஸ்ரீகுஹப்பெருமாள், ஒரு தம்பி தாயைக் கொண்டு ராஜ்யத்தை வாங்கி கட்டின காப்போடே காட்டிலே தள்ளிவிட்டான், இவனுமவ்வோபாதியொரு தம்பியன்றோ, தனியிடத்திலே என் செய்ய நினைத்திப்படி ஆயத்தமாய் நின்றானென்று தெரியாது என்றதி சங்கை பண்ணி, அப்படி யேதேனுமொரு தீங்கு நினைக்கில் இவன் றன்னைத் தீரக் காணக்கடவோமென்று வில்லும் கோலுமாய்க் கொண்டு இவரிட்டவடியிலே அடியிட்டுநிற்க; ஸ்ரீகுஹப்பெருமாள் ஏவற்றொழிற் செய்து திரியும் பரிகரம், "அவன் ஜ்ஞாதி, இவன் குறும்பனானவன்னியன், இவர்களிருவருமாக இவ்விஷயத்தை என் செய்யத் தேடுகிறார்களோ" என்று இருவரையுமதி சங்கை பண்ணி, அப்படி செய்யில் இவர்களை யழியச் செய்தும் நாமத்தலையை நோக்கக் கடவோமென்று தனித்தனியே கையும் வில்லுமாய்க் கொண்டு பெருமாளை ரக்ஷித்ததிறே என்கை.

**விளக்கம்** - இராமன் கானகம் எழுந்தருளியபோது ச்ருங்கிபேரம் என்ற இடத்தில் தங்கி, குஹன் என்ற ஓடக்காரனை நலம் விசாரித்தார். அங்கு தங்கியபோது இராமனுடைய திருமேனியின் மென்மையான ஸ்வபாவத்தை அறிந்த லக்ஷ்மணன், அதற்கு ஏற்றபடியாக அமைத்துக் கொடுத்த படுக்கையில், இராமனும் சீதையும் சயனித்தனர். அப்போது, இராமாயணம் பாலகாண்டம் (18-27) – பால்யாத் ப்ரப்ருதி - சிறுவயது முதலே இராமனிடம் அன்புடன் இருந்தான் - என்று கூறுவதற்கு ஏற்ப லக்ஷ்மணன் அன்புடன் இருந்த காரணத்தினால், இராமனுக்கு என்ன நேருமோ என்று அச்சம் கொண்டவனாக, முதுகில் கட்டப்பட்ட அம்பறாத்தூணியும், அம்பு விடுவதற்காக இடையில் கட்டப்பட்ட சரகும், நாணில் ஏற்றி நடுவில் பிடித்தபடி இருந்த அம்புமாக, நடமாடும் மதிள் சுவர் போன்று அவர்கள் சயனித்த இடத்தை வலம் வந்தபடி இருந்தான். இதனைக் கண்ட குஹன் தனது மனதில், "தம்பியான பரதன் தனது தாய் மூலமாக இவனிடமிருந்து நாட்டை வாங்கிக் கொண்டு, கட்டிய ஆடையுடன் கானகம் அனுப்பிவிட்டான். இவனும் அவனைப் போன்றுள்ள தம்பி அல்லவோ? யாரும் இல்லாத இடத்தில் இராமனை என்ன செய்வதற்கு எண்ணியபடி இவ்விதம் ஆயுதத்துடன் தயாராக உள்ளானோ என்று புரியவில்லையே",

என்று சந்தேகம் கொண்டான். அப்படி இவன் இராமனுக்கு ஏதேனும் தீமை செய்தால், இவனைக் கொன்றுவிடுவோம் என்று முடிவு செய்தவனாக, தனது கையில் வில்லும் அம்புமாக லக்ஷ்மணன் வைத்த ஒவ்வொரு அடியின் பின்னேயும் தானும் சென்றான். இவர்கள் இருவரையும், குஹன் இட்ட கட்டளையை ஏற்று வேலை செய்கின்ற குஹனின் வீரர்கள் கண்டனர். அவர்கள் தங்களது மனதில், "லக்ஷ்மணன் இராமனின் உறவினன், இந்த குஹன் தீமை என்பதைச் செய்யவல்ல காட்டுவாசி, இவர்கள் இருவருமாகச் சேர்ந்து இராமனுக்கு என்ன தீங்கு செய்ய எண்ணுகிறார்களோ", என்று அஞ்சினர். இப்படியாக இவர்கள் மீது சந்தேகம் கொண்டு, இவர்கள் ஏதேனும் தீமை செய்தால் அவர்களை அழித்து, நாம் இராமனையும் சீதையையும் காப்பாற்றுவோம் என்று முடிவு செய்தனர். இப்படியாக இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கையில் வில்லை ஏந்தியபடி இராமனைக் காத்து நின்றனர்.

**வ்யாக்யானம்** - ஸ்ரீபரதாழ்வானுக்கு விசேஷம் சொல்லுகிறவிடத்திலே, ஸ்ரீகுஹப்பெருமாள் "நியம்ய ப்ருஷ்டே து தலாங்குளித்ரவாந் சரைஸ் ஸுபூர்ணாமிஷுதிம் பரந்தப: - மஹத்தநுஸ் ஸஜ்ய மபோஹ்ய லக்ஷ்மணோ நிசாமதிஷ்டத் த்வரிதோஸ்ய கேவலாம் ததஸ் த்வஹஞ்சோத்தம சாபபாண ப்ருத் ஸ்திதோபவம் தத்ர ஸ யத்ர லக்ஷ்மண: - அதந்த்ரிபிர் ஜ்ஞாதிபிராத்த கார்முகைர் மஹேந்த்ரகல்பம் பரிபாலயம் ஸ்ததா: - என்று ஒற்றை ராத்தியில் வ்ருத்தாந்தத்தைச் சொன்னானிறே.

**விளக்கம்** - பரதனுக்கு ச்ருங்கிபேரத்தில் நடந்த நிகழ்ச்சியை குகன் உரைக்கும்போது பின்வருமாறு கூறினான். இராமாயணம் அயோத்யாகாண்டம் (87-22,23) - நியம்ய ப்ருஷ்டே து தலாங்குளித்ரவாந் சரைஸ் ஸுபூர்ணாமிஷுதிம் பரந்தப: - மஹத்தநுஸ் ஸஜ்ய மபோஹ்ய லக்ஷ்மணோ நிசாமதிஷ்டத் த்வரிதோஸ்ய கேவலாம் ததஸ் த்வஹஞ்சோத்தம சாபபாண ப்ருத் ஸ்திதோபவம் தத்ர ஸ யத்ர லக்ஷ்மண: - அதந்த்ரிபிர் ஜ்ஞாதிபிராத்த கார்முகைர் மஹேந்த்ரகல்பம் பரிபாலயம் ஸ்ததா: - எதிரிகளை அழிக்கவல்ல லக்ஷ்மணன் அம்புடன் நிறைந்த அம்பறாத்தூணியைத் தனது முதுகில் கட்டியவராக, பெரிய வில் ஒன்றை நாண் ஏந்திப் பிடித்தபடி, இரவுப்பொழுது முழுவதும் இராமனுக்குக் காவலாக நான்கு பக்கமும் சுற்றி வந்தார். அதன் பின்னர் நானும் உயர்ந்த அம்புகள் கொண்ட வில்லை ஏந்தியபடி, லக்ஷ்மணன் பின்னே சென்றபடி இருந்தேன். எனது இனத்தைப் சேர்ந்தவர்கள் விழிப்புடன் வில் ஏந்தி இந்திரனுக்கு நிகரான இராமனைக் காத்தபடி நின்றனர் – என்றனர்.

248. ஒரு நாள் முகத்திலே விழித்தவர்களை வடிவழகுபடுத்தும் பாடாயிற்றிது.

**அவதாரிகை** - ஸ்ரீ குஹப்பெருமாளுக்கும் பரிகரத்துக்குமன்று கண்டமாத்ரமொழிய பெருமாளுடன் முன்பு வாஸநையில்லையே; இப்படியிருக்கச் செய்தே, இவர்களுக்கிவ் வாதரம் கூடினபடி யென்னென்ன வருளிச்செய்கிறார் (ஒரு நாள்) என்று தொடங்கி.

**விளக்கம்** – குகன் மற்றும் அவனது வீரர்கள் ஆகியோருக்கு இராமனை அன்றுதான் கண்டனர் என்ற நிலை உண்டு. அவர்கள் இராமனுடன் அதற்கு முன்பாகப் பழகியது இல்லை. இவ்விதம் உள்ளபோது, இவர்களுக்கு இராமனைக் காப்பதில் இத்தகைய ஈடுபாடு தோன்றியது எப்படி என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது நெடுநாள் வாஸநை பண்ணுகையன்றிக்கே ஒருநாள் முக தர்சநம் பண்ணினவர்களையும் அவன் விக்ரஹ வைலக்ஷண்யம் படுத்தும்படியாய்த் திதுவென்கை. “ஸதாபச்யந்தி” பண்ணினாரோபாதி ஸக்ருத் தர்சநம் பண்ணினாரையும் ப்ரேமாந்தராய் அஸ்தாநே பயசங்கையாலே அநுகூலரையுமதி சங்கை பண்ணிப் பரிந்து நோக்கும்படி பண்ணவற்றாயிறே பகவத் விக்ரஹ ஸௌந்தர்யமிருப்பது.

**விளக்கம்** – நீண்டநாள் பழகவேண்டும் என்பது இல்லாமல், ஒரு நாள் திருமுகத்தைக் கண்டாலே போதுமானது, அவனது திருமேனியின் மேன்மையானது அவர்களைப் படுத்தும் பாடு இதுவே என்கிறார். உபநிஷத்துக்களில் – ஸதா பச்யந்தி - எப்போதுமே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் - என்று கூறுவதற்கு ஏற்ப, அவனை எப்போதுமே பார்த்தபடி உள்ள நித்யஸூரிகள் போன்றே, ஒருமுறை கண்டவர்களும் அவன் மீது கொண்ட அன்பினால் தங்களை மறக்கிறார்கள். அவன் மீது மிகவும் அன்புடன் உள்ளவர்களைக் கண்டபோதிலும் இவர்கள், “என்ன ஆபத்து வருமோ” என்று சந்தேகம் கொண்டு, பரிவாக ஸர்வேச்வரனை நோக்கும்படியாக அல்லவோ அவன் திருமேனி அழகு உள்ளது!

249. இவர்கள் நம்முடைய கோடியிலே யென்னும்படியாயிற்று ஆழ்வார்கள் நிலை.

**அவதாரிகை** - இன்னமு மிவ்வர்த்தத்துக்கு உதாஹரணமாக, கீழ்ச் சொன்னவர்களைக் காட்டில் வ்யாவ்ருத்தரான ஆழ்வார்களுடைய மங்களாசஸந நிஷ்டையை யருளிச்செய்கிறார் (இவர்கள்) என்று தொடங்கி.

**விளக்கம்** - மேலும் இந்தப் பொருளை விளக்கும் பொருட்டு, மேலே கூறப்பட்ட உதாரணங்களைக் காட்டிலும் வேறுபட்டவர்களாகிய ஆழ்வார்களின் மங்களாசாஸநம் செய்கின்ற ஈடுபாட்டினை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இவர்கள்) என்று சக்ரவர்த்தி முதலாகக் கீழ்ச்சொன்ன வதிகாரிகளையடையப் பராமர்சிக்கிறது. ஆனால் பிராட்டியையுமொக்கச் சொல்லலாமோ வென்னில்; ஆழ்வார்களில் தலைவரான நம்மாழ்வாரிலுங் காட்டில், பெரியாழ்வார்க்கு ஏற்றம் சொல்லுகிறவோபாதி, போக பரவசையான அவளிற்காட்டில் மங்களாசாஸநத்தி லூற்றத்தாலே ஆழ்வார்களுக்கேற்றம் சொல்லக்குறையில்லை. ஆனாலும், (நம்முடைய கோடியிலே) என்னலாமோ வென்னில்; இவ்வர்த்த நிஷ்டையிலவர்களுடைய வாதிக்யத்தை தர்சிப்பிக்கைக்காகச் சொன்னதாகையாலே விரோதமில்லை. ஆகையால் இவ்விஷய வைலக்ஷண்ய கலுஷசித்தராய் இதுக்கென் வருகிறதோ வென்று பரிந்து நோக்கினவர்களாகக் கீழ்ச்சொல்லப்பட்டவர்க ளெல்லாருமென்றபடி. (நம்முடைய கோடியிலே என்னும்படியாய்த்து) என்றது - இவ்விஷயத்திலே அந்வயித்திருக்கச் செய்தேயும் ப்ரேமாபாவத்தாலே மங்களாசாஸநத்தி லூற்றமற்றிருக்கிற நம்போல்வார் மாத்ரமென்று சொல்லலாம்படியாய்த் தென்றபடி. (ஆழ்வார்கள் நிலை) என்றது - மயர்வற மதிநலம் பெற்றவர்களாகையாலே நிரதிசய ப்ரேமயுக்தரான ஆழ்வார்களுடைய மங்களாசாஸந நிஷ்ட்டையென்றபடி.

**விளக்கம்** – “இவர்கள்” என்ற பதம் சூர்ணை 246ல் கூறப்பட்ட தசரதன் போன்றவர்களைக் குறிப்பதாகும். ஆனால் அவர்களைப் பொதுவாக உரைக்கும்போது, பெரியபிராட்டியான சீதையையும் சேர்த்து உரைக்கலாமோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். ஆழ்வார்களுக்குத் தலைவராகிய நம்மாழ்வாரைக் காட்டிலும் பெரியாழ்வாருக்குத் திருப்பல்லாண்டு மூலம் ஏற்றம் கூறுவது போன்று, இராமனுடன் இன்பத்தில் பரவசம் அடைந்து நிற்கும் பிராட்டியைக் காட்டிலும் அவனுக்குத் திருப்பல்லாண்டு பாடவேண்டும் என்று ஈடுபாடு கொண்ட ஆழ்வாகளுக்கு ஏற்றம் கூறுவதில் தோஷம் இல்லை. ஆனாலும் “நம்முடைய வரிசையில்” என்று சீதையைக் கூறலாமோ என்றால் - திருப்பல்லாண்டு பாடுவதில் ஆழ்வார்களுக்கு இருந்த ஈடுபாடு காரணமாக அந்தப் பதமானது, ஸர்வேச்வரனுடைய மென்மை மற்றும் திருமேனி அழகு போன்றவற்றைக் கண்டு கலங்கியபடி, “இவனுக்கு என்ன ஆகுமோ”, என்று பரிவுடன் நோக்குகின்ற மேலே கூறப்பட்ட அனைவரையுமே குறிக்கிறது என்று கருத்து.

"நம்முடைய கோடியிலே என்னும்படியாய்த்து" என்பது என்ன? அவனுக்குத் திருப்பல்லாண்டு பாடுவதில் ஈடுபட்டுள்ளபோதிலும், ஸர்வேச்வரனிடம் ப்ரேமை கொள்ளாத காரணத்தினால் திருப்பல்லாண்டு பாடுவதில் ஈடுபாடு கொள்ளாத நம்மைப் போன்றவர்கள் என்று கூறலாம்படியாக ஆழ்வார்களுக்குத் திருப்பல்லாண்டில் உள்ள ஈடுபாடு என்று பொருள்.

250. ஆழ்வார்களெல்லாரையும் போலல்லர் பெரியாழ்வார்.

**அவதாரிகை** - இவ்வாழ்வார்கள் தாங்கள் மங்களாசாஸநத்தில் வந்தால் தங்களிலொப்பர்களோ வென்ன வருளிச்செய்கிறார் மேல் (ஆழ்வார்கள்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இந்த ஆழ்வார்கள் ஸர்வேச்வரனுக்குத் திருப்பல்லாண்டு பாடுவதில் ஒருவருக்கு ஒருவர் ஒத்தவர்களாக இருப்பார்களோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, மங்களாசாஸநத்தில் மற்றுள்ள வாழ்வார்களுக்கும் பெரியாழ்வாருக்கும் நெடுவாசி யுண்டென்கை.

**விளக்கம்** - திருப்பல்லாண்டு பாடுவதைப் பொறுத்தவரை மற்ற ஆழ்வார்களுக்கும் பெரியாழ்வாருக்கும் வேறுபாடு உண்டு என்பதை அறியவேண்டும்.

251. அவர்களுக்கிது காதாசித்கம்; இவர்க்கிது நித்யம்.

**அவதாரிகை** - அவர்களைப் பற்ற இவர்க்கிதி லேற்றமேதென்ன வருளிச்செய்கிறார் (அவர்களுக்கிது) என்று தொடங்கி.

**விளக்கம்** – (காதாசித்கம் என்றால் ஏதோ ஒரு காலகட்டத்தில் மட்டுமே உண்டாவது) மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் திருப்பல்லாண்டு பாடும் விஷயத்தில் பெரியாழ்வாருக்கு உள்ள ஏற்றம் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, மயர்வற மதிநலம் பெற்றமை யொத்திருக்கச் செய்தே, வயிரவுருக்காய் ஆண்களையும் பெண்ணுடை யுடுத்தும் பகவத் விக்ரஹ

வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்தால், உத்தரோத்தராநுபவ காமராகா நிற்கும் மற்றையாழ்வார்களுக்கு பரஸம்ருத்தியே ப்ரயோஜநமான விந்த மங்களசாஸநம் எப்போதுமொக்க வன்றிக்கே எங்கேனு மொருதசையிலே தேடிப்பிடிக்கவேண்டும் படியாயிருக்கும்; தத் வைலக்ஷண்ய தர்சநாநந்தரம் தததநுபவ பரராகையன்றிக்கே, அஸ்தாநே பயசங்கை பண்ணித் திருப்பல்லாண்டு பாடும் ப்ரேம ஸ்வபாவரான விவர்க்கிந்த மங்களாசாஸநம் ஸர்வ காலார்த்தியாய்ச் செல்லுமென்கை.

**விளக்கம்** - மயர்வற மதிநலம் அருளப் பெற்றமை என்பது அனைத்து ஆழ்வார்களுக்கும் ஒன்றாகவே உள்ளது. வைரம் போன்ற உறுதியான நெஞ்சம் கொண்ட ஆண்களையும் பெண்களின் பாவம் (நாயகி பாவம்) கொள்ளச் செய்வதான ஸர்வேச்வரனின் திருமேனி மேன்மையை எண்ணியவுடனேயே, அவனை மேன்மேலும் அனுபவித்தபடி இருக்க வேண்டும் என்று மற்ற ஆழ்வார்கள் இருப்பர்கள். இப்படியாக உள்ள அவனுடைய சிறப்பு என்பதே அவர்களுக்குப் பயனாக இருக்கும். அவனை மங்களாசாஸநம் செய்தல் என்பது இவர்களுக்கு எப்போதும் இல்லாமல், ஏதோ சில இடங்களில் தேடிப்பிடிக்க வேண்டுவதாக இருக்கும். ஸர்வேச்வரனின் திருமேனி மேன்மையைக் கண்டவுடன் அவனை அனுபவிப்பதில் மட்டுமே ஆசை கொண்டு நிற்காமல், “இவனுக்கு என்ன ஆகுமோ” என்று பயம் கொண்டு, திருப்பல்லாண்டு பாடும்படியாக அவனிடம் பெரியாழ்வார் ப்ரேமையை இயல்பாகவே கொண்டுள்ளார். ஆகவே இவரைப் பொறுத்தவரை மங்களாசாஸநம் என்பது எப்போதும் உள்ளது என்று கருத்து.

252. அவர்களுடைய ஆழங்கால்தானே இவர்க்கு மேடாயிருக்கும்.

**அவதாரிகை** - அதுக்கு ஹேதுவென்னென்ன வருளிச்செய்கிறார் (அவர்களுடைய) என்று தொடங்கி.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் உள்ளபடி இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அநுபவபரரான வவர்களை த்ருஷ்டி சித்தாபஹாரம் பண்ணி ஆழங்கால் படுத்து மவனுடைய ஸௌந்தர்யந்தானே இதுக்கென் வருகிறதோ என்றஞ்சி மேன்மேலும் காப்பிடும்படி மங்களாசாஸந பரரான விவர்க்கு தரித்து நின்று மங்களாசாஸநம் பண்ணுகைக்கீடான நிலமாயிருக்கு மென்கை.

**விளக்கம்** – ஸர்வேச்வரனின் அனுபவம் என்பதில் திளைத்து நிற்கும் மற்ற ஆழ்வார்களின் கண்களையும் மனதையும் கவர்ந்து இழுத்து, தன்னிடம் மட்டுமே ஆழ்ந்து நிற்கும்படியாகச் செய்வது அவனது திருமேனி அழகு ஆகும். இந்தத் திருமேனியின் அழகு என்பதுதான், "இதற்கு என்ன வருமோ", என்று அச்சம் கொண்டு மேன்மேலும் காப்பிட்டு, திருப்பல்லாண்டு பாடும்படியாக இவரைச் செய்வதற்கு ஏற்றதாக உள்ளது என்று கருத்து.

253. அவர்களுக்கு உபய சேஷத்வத்தையுமழித்து ஸ்வரூபத்தைக் குமிழ்நீருண்ணப் பண்ணுமது, இவர்க்கு உபயவ்ருத்திக்கும் ஹேதுவாய் ஸ்வரூபத்தைக் கரையேற்றும்.

**அவதாரிகை** - அதெங்ஙனேயென்னு மபேக்ஷையிலே யருளிச்செய்கிறார் (அவர்களுக்கு உபய சேஷத்வத்தையும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்ட விஷயம் எப்படி ஆகிறது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பகவதநுபவைகபரராய் ததலாபத்தி லாற்றாமை கரை புரளும்படியிருக்கும் மற்றை ஆழ்வார்களுக்கு "கண்ணபுரமொ ன்றுடையானுக்கடியே னொருவர்க் குரியேனோ" என்றும், "உற்றது முன்னடியார்க் கடிமை" என்றும் அநுஸந்திக்கும்படி ப்ரதம மத்யம பத ஸித்தமான பகவச் சேஷத்வமும், தத்காஷ்டையான பாகவத சேஷத்வமுமாகிற உபய சேஷத்வத்தையும், "நமக்கே நலமாதலில்" என்னும்படி ஸ்வப்ரயோஜநத்திலே மூட்டியும், விளம்பரோஷத்தாலே "போகுநம்பி", "கழகமேறேல் நம்பி" என்னும்படியாக்கியும், ஸ்வப்ரவ்ருத்தி யாகாதென்னுமளவில் "உங்களோ டெங்களிடை யில்லை" என்று உதறும்படி பண்ணியும், "வெஞ்சிறைப்புள்" இத்யாதியாலே வெறுத்து வார்த்தை சொல்லுவித்தும் அழித்து, பராதிசயகரத்வமே வடிவான ஸ்வரூபத்தை மங்களாசாஸனமென்பதொன் றறியாதபடி தன் பக்கலிலே மக்நமாகப் பண்ணுமதான பகவத் ஸௌந்தர்யம்; அந்த ஸௌந்தர்ய தர்சநத்தில் அநுபவத்திலே நெஞ்சு செல்லாதே அதுக்கென் வருகிறதோ வென்று வயிறெரிந்து காப்பிடுமவரான விவர்க்கு, "உன் சேவடி செவ்வி திருக்காப்பு", "மங்கையும் பல்லாண்டு", "சுடராழியும் பல்லாண்டு", "பாஞ்சசன்னியமும் பல்லாண்டு" என்று தத்விஷயத்துக்கும் ததீயவிஷயத்துக்கும் மங்களாசாஸநம் பண்ணுவிக்கையாலே, உபய சேஷத்வவ்ருத்திக்கும் ஹேதுவாய், ஸ்வரூபத்தைத் தன்பக்கல் மக்நமாகாதபடி நடத்துமென்றபடி. ஆக,

அவர்களுக்கப்படி ஸ்வரூபத்தைக் குமிழ் நீருண்ணப் பண்ணுகிறவவனுடைய ஸௌந்தர்யம் இவர்க்கிப்படி செய்கையாலே அவர்களுடைய ஆழங்கால்தானே யிவர்க்கு மேடாயிருக்கையால், அவர்களுக்குப்போலே காதாசித்கமாகையன்றிக்கே மங்களாசாஸநமிவர்க்கு நித்யமாய்ச் செல்லுமென்றதாய்த்து.

**விளக்கம்** – "ஸர்வேச்வரனின் அனுபவம்" என்பதை மட்டுமே எண்ணியவர்களாக, அதிலேயே ஈடுபட்டபடி உள்ள மற்ற ஆழ்வார்களுக்கு, அந்த அனுபவம் சற்றே தடைப்பட்டாலும், அவர்களது பிரிவாற்றாமை கரைபுரண்டு நிற்பதாகிறது. இவர்களை ஸர்வேச்வரனின் அழகு என்பது என்ன செய்கிறது என்றால்:

- பெரியதிருமொழி (8-9-3) - கண்ணபுரமொ ன்றுடையானுக்கடியே னொருவர்க் குரியேனோ - என்றும், பெரியதிருமொழி (8-10-3) - உற்றது முன்னடியார்க் கடிமை - என்றும் உரைக்கிறபடி, ப்ரணவ மந்த்ரத்தின் முதல்பதம் மற்றும் நடுப்பதம் (ஓம், நம:) ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் ஸர்வேச்வரனுக்கு அடிமையாக இருத்தலும், அதன் எல்லையான பாகவதர்களுக்கு அடிமையாக இருத்தலும் என்பதான இரண்டுவிதமான அடிமைத்தனங்களையும், பெரியதிருமொழி (9-3-9) - நமக்கே நலமாதலில் – என்று கூறுவதற்கு ஏற்ப தன்னுடைய சுயநலமான ஆனந்தத்தில் ஈடுபடுத்திவிடுகிறது.

- ஸர்வேச்வரன் வருவதற்குத் தாமதம் செய்த காரணத்தால், அந்த தாமதத்தைப் பொறுக்க இயலாமல் திருவாய்மொழி (6-2-2) - போகு நம்பீ, திருவாய்மொழி (6-2-6) – கழகம் ஏறேல் நம்பி - என்று உரைக்கும்படிச்செய்கிறது.

- ஸர்வேச்வரனை அடைவதற்கு நீயாகவே முயல்வது கூடாது, அது ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்றது அல்ல என்று கூறினால், திருவாய்மொழி (8-2-7) - உங்களோ டெங்களிடை யில்லை - என்று கூறுவதற்கு ஏற்ப அவர்களை வெறுக்கும்படிச் செய்கிறது.

- திருவாய்மொழி (1-4-1) - வெஞ்சிறைப்புள் – என்று ஸர்வேச்வரனை அழைத்துச் சென்றுவிட்ட கருடனை வெறுத்து உரைக்கும்படியாக அழிக்கிறது.

இப்படியாக ஸர்வேச்வரனுக்கு மேன்மை செய்வதையே தனது ஸ்வரூபமாகக் கொண்டதான ஜீவன், அவனுக்கு மங்களாசாஸநம் என்பதைச் செய்யவேண்டும் என்று உணராதபடி தன்னிடம் ஈடுபடுத்திவிடுகிறது ஸர்வேச்வரன் அழகு.

அப்படிப்பட்ட ஸௌந்தர்யத்தின் அனுபவத்தில் ஈடுபட்டுவிடாமல் தப்பித்து, "இந்த அழகுக்கு என்ன ஆபத்து வருமோ?", என்று அடிவயிற்றில் பயம் காரணமாக எரிச்சல் ஏற்பட்டு மங்களாசாஸநம் செய்தபடி பெரியாழ்வார் உள்ளார். ஆகவே அவர் திருபல்லாண்டு (1) – "உன் சேவடி செவ்வி திருக்காப்பு", "மங்கையும் பல்லாண்டு", "சுடராழியும் பல்லாண்டு", "பாஞ்சசன்னியமும் பல்லாண்டு" – என்று அவனுக்கும் அவனது அடியார்களுக்கும் மங்களாசாஸநம் செய்கிறார். இதனால் பகவானுக்கு அடிமையாக இருத்தல், அவனது அடியார்களுக்கு அடிமையாக இருத்தல் ஆகிய இரண்டுவகையான அடிமைத்தனமும் மேன்மேலும் ஓங்கி வளர்வதற்குக் காரணமாகவும், ஜீவனின் ஸ்வரூபம் என்பது தன்னிடம் மூழ்கிவிடாதபடியும் இவர் விஷயத்தில் உள்ளது.

ஆகவே மற்ற ஆழ்வார்களுக்கு தன்னுடைய அழகில் மூழ்கும்படியாகச் செய்கின்ற ஸர்வேச்வரனின் அழகு என்பது, இவரை மங்களாசாஸநம் செய்யும்படிச் செய்கிறது. ஆக அவர்களை மூழ்கும்படியாகச் செய்கின்ற ஸௌந்தர்யம், இவருக்கு மேடாக உள்ளது. எனவே "மங்களாசாஸநம் செய்தல்" என்பது அவர்களுக்கு எப்போதாவது தோன்றுவது போன்று அல்லாமல், இவருக்கு எப்போதுமே தோன்றியபடி உள்ளது.

254. பயிநிவர்த்தகங்களுக்கு பயப்படுவது ப்ரதிகூலரையு மநுகூலராக்கிக் கொள்ளுவது, அதீத காலங்களி லபதாநங்களுக்கு உத்தரகாலத்திலே வயிறெரிவது ப்ராப்தி பலமு மிதுவே யென்பது அநிமிஷரைப் பார்த்து உறகலுறகல் என்பதாய்க் கொண்டு இதுதானே யாத்ரையாய் நடக்கும்.

**அவதாரிகை** – மற்றை யாழ்வார்களுக்கு மங்களாசாஸநம் கதாசித்கமாகச் செய்தே இவர்க்கு நித்யமாகைக்கு நிதான மின்னதென்று தர்சிப்பிதார் கீழ்; இதுதானிவர்க்கு நித்யமாய்ச் செல்லும்படி தன்னை வ்யக்தமாக வருளிச்செய்கிறார் மேல் (பய நிவர்த்தகங்களுக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – மற்ற ஆழ்வார்களுக்கு ஸர்வேச்வரனை மங்களாசாஸநம் செய்தல் என்பது எப்போதாவது தோன்றுவதாக உள்ளதற்கும், பெரியாழ்வாருக்கு இந்த நிலை எப்போதும்

உள்ளதற்கும் காரணத்தை அருளிச்செய்தார். இனி, இந்த மங்களாசாஸநம் என்பது இவருக்கு எப்போதும் உள்ளதை விரிவாக அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது தன் ஸௌகுமார்யத்தைக் கண்டு கலங்கி இவ்விஷயத்துக்கென் வருகிறதோவென்று மறுகுகிற விவர் பயத்தைப் பரிஹரிக்கைக்காக மல்லவர்க்கத்தை அநாயாஸேந அழித்த தோள் வலியைக் காட்ட, அந்தத் தோள் வலியை நினைத்து மதியாதே அஸுர ராக்ஷஸ யுத்தத்திலே புகுரில் என்னாகக்கடவது என்று அது தனக்கு பயப்பட்டு மங்களாசஸநம் பண்ணுவது; உண்டான அமங்களங்கள் போகைக்கும் இல்லாத மங்களங்க ளுண்டாகைக்கும் தன் கடாக்ஷமே அமைந்திருக்கிற விவள் “அகலகில்லேனிறையும்” என்று நம்மைப் பிரியமாட்டாதேயிருக்க நமக்கு வருவதொரு அமங்களங்களுண்டோ! என் செய்யப்படுகிறீர்! என்று லக்ஷ்மீ ஸம்பந்தத்தைக் காட்ட, இச்சேர்த்தி தனக்கொரு தீங்குவரிற் செய்வதென் என்றஞ்சி, “மங்கையும் பல்லாண்டு” என்று மங்களாசாஸநம் பண்ணுவது;

**விளக்கம்** – ஸர்வேச்வரனின் மென்மையான திருமேனியைக் கண்டு கலங்கிய பெரியாழ்வார், “இவனுக்கு என்ன ஆபத்து வருமோ”, என்று உருகினார். இவரது அச்சத்தைப் போக்கும்விதமாக அவன் மல்லர்களை மிகவும் எளிதாக அழித்த தனது தோள் வலியைக் காண்பித்தான். இதனைக் கண்ட இவர் அந்தத் தோள்வலியைப் பாராட்டாமல், அசுரர்களும் தேவர்களும் செய்கின்ற போரின் நடுவில் இவன் புகுந்தால், இந்தத் தோள்களுக்கு என்ன ஆகுமோ என்று அச்சம் கொண்டு, இந்தத் தோள்களுக்கு மங்களாசாஸநம் செய்கிறார் (மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா - என்றது காண்க). ஒருவனுக்கு ஏற்பட்ட அமங்களங்கள் அனைத்தும் நீங்கவும், அவனிடம் இல்லாத மங்களங்கள் வந்து சேரவும் காரணமாக உள்ளவள் பெரியபிராட்டியார் ஆவாள்; அவள் நம்முடன், திருவாய்மொழி (6-10-10) – அகலகில்லேன் இறையும் என்று – என்பதற்கு ஏற்ப எப்போதும் பிரியாமல் உள்ளபோது நமக்கு ஏதேனும் அமங்களம் ஏற்படுமோ என்று மஹாலக்ஷ்மியுடனான ஸம்பந்தத்தை இவருக்குக் காண்பித்தான். உடனே இவர், “இந்தச் சேர்த்திக்கு ஒரு தீமை ஏற்பட்டால் என்ன செய்வது”, என்று எண்ணியவராக அச்சம் கொண்டு - மங்கையும் பல்லாண்டு - என்று மங்களாசாஸநம் செய்தார்.

**வ்யாக்யானம்** - இந்தப் பயத்தைப் பரிஹரிக்கைக்காக இச்சேர்த்திக்கொரு தீங்கு வாராதபடி கல்மதிளிட்டாப்போலே யிருக்கிற விவர்களைப் பாரீரென்று இரண்டட்டத்திலு மேந்தின ஆழ்வார்களைக் காட்ட, அவர்கள் தங்களுக்கொரு தீங்கு வரிற் செய்வதென்

என்றஞ்சி, “சுடராழியும் பல்லாண்டு”, “பாஞ்சசன்னியமும் பல்லாண்டு” என்று மங்களாசாஸநம் பண்ணுவது;

**விளக்கம்** – இதனைக் கண்ட ஸர்வேச்வரன் இவருக்கு ஏற்பட்ட பயத்தை நீக்க எண்ணியவனாக, “நம்முடைய இந்தச் சேர்த்திக்கு எந்தவிதமான தீமையும் ஏற்படாத விதமாக, கற்கள் கொண்டு மதிள் சுவர் எழுப்பப்பட்டது போன்று, நமக்கு இருபக்கமும் இருக்கின்ற இவர்களைப் பாரீர்”, என்று கூறி சங்கு மற்றும் சக்கரங்களைக் காண்பித்தான். இதனைக் கண்ட ஆழ்வார், “இவர்களுக்கு ஒரு தீமை ஏற்பட்டால் என்ன செய்வது”, என்று அச்சம் கொண்டவராக - சுடராழியும் பல்லாண்டு, பாஞ்சசன்னியமும் பல்லாண்டு – என்று அவற்றுக்கும் மங்களாசாஸநம் செய்தார்.

**வ்யாக்யானம்** - அநந்ய ப்ரயோஜநதயா அநுகூலரான பகவச் சரணார்த்திகளை மங்களாசாஸநத்துக்குத் துணையாகக் கூட்டிக் கொண்டவளவாலே பர்யாப்தி பிறவாமையாலே, ப்ரயோஜநாந்தர பரதயா ப்ரதிகூலரான கேவலரையும் ஐச்வர்யார்த்திகளையும் திருத்தி மங்களாசாஸநத்துக் காளாம்படி யநுகூலராக்கிக் கொள்வது;

**விளக்கம்** - “ப்ரதிகூலரையு மநுகூலராக்கிக் கொள்ளுவது” என்றால் என்ன? ஸர்வேச்வரனின் திருவடிகள் தவிர மற்ற எந்தவிதமான பயன்களையும் விரும்பாமல் உள்ளதால், அநுகூலர்களாக ஸர்வேச்வரனின் திருவடிகளைப் பணிந்து நிற்பவர்களைத் தனது மங்களாசாஸநத்துக்குத் துணையாகக் கூட்டிக் கொள்கிறார் (இதனை – வாழாட்பட்டு உள்ளீரேல் – என்பதில் காண்க). ஆயினும் இவர் மனம் சமாதானம் அடையவில்லை. ஆகவே மற்ற பலன்களை எண்ணுவதால் ப்ரதிகூலராக உள்ள கைவல்ய நிஷ்டர்களையும், செல்வத்தை விரும்புகிறவர்களையும் திருத்தி, தன்னுடைய மங்களாசாஸநத்துக்குத் துணையாக நிற்கும்படியாக அவர்களையும் அநுகூலராக்குகிறார் என்று கருத்து. இதனை - ஏடு நிலத்தில் – என்ற பாசுரத்தில் காணலாம்.

**வ்யாக்யானம்** - “இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் பல்லாண்டு கூறுதும்” இத்யாதியாலே கீழ்க் கழிந்த காலத்தி லவன் செய்த அபதாநங்களுக்குப் பிற்காலத்திலே ஸமகாலத்திற் போலே வயிறெரிந்து மங்களாசாஸநம் பண்ணுவது; “சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டு” என்று பகவத் ப்ராப்திக்குப் பலமுமிந்த மங்களாசாஸநமே யென்பது;

**விளக்கம் -** "அதீத காலங்களி லபதாநங்களுக்கு உத்தரகாலத்திலே வயிறெரிவது" என்றால் என்ன? திருப்பல்லாண்டு (5) - பாழாளாகப் படை பொருதானுக்குப் பல்லாண்டு கூறுதும் - என்பது போன்ற பாசுரங்கள் மூலம், இதற்கு முன்பு கடந்து சென்ற காலங்களில் இவன் செய்தருளின செயல்களைக் கண்டார்; ஆனால் அதனை எண்ணி, பிற்காலத்தில், அதே காலத்தில் வாழ்கின்றவர் போன்று வயிறு கலங்கி மங்களாசாஸநம் செய்தல் என்பதாகும். "ப்ராப்தி பலமு மிதுவே யென்பது" என்றால் என்ன? திருப்பல்லாண்டு (12) – சூழ்ந்து இருந்து ஏத்துவர் பல்லாண்டே - என்று கூறுவது போன்று ஸர்வேச்வரனைப் பரமபதத்தில் சென்று கிட்டுவது என்ற பலனும் இப்படி மங்களாசாஸனம் செய்தலே ஆகும் என்று பொருள்.

**வ்யாக்யானம் -** "ஸ்நேஹா தஸ்த்தாநரக்ஷா வ்யஸநிபிரபயம் சார்ங்க சக்ராஸி முக்க்யை" என்கிறபடியே - அஸ்தாந ரக்ஷா வ்யஸநிகளாகையாலே அநிமிஷராயிருக்கிற திவ்யாயுதாழ்வார்கள் முதலானாரைப் பார்த்து குணவித்தராய் நஞ்சுண்டாரைப் போலே உந்தாமை யறியாதிருத்தல் அநுபவத்திலே யிழிந்து கைங்கர்ய பரராயிருத்தல் செய்யாதே உணர்ந்து நோக்குங்கோளென்று பலகாலும் சொல்லுவதாய்க் கொண்டு இம்மங்களாசாஸநமே வ்ருத்தியாய்ச் செல்லுமென்கை.

**விளக்கம் -** "அநிமிஷரைப் பார்த்து உறகலுறகல் என்பதாய்" என்றால் என்ன? ஸ்ரீகுணரத்நகோசம் (24) – ஸ்நேஹா தஸ்த்தாநரக்ஷா வ்யஸநிபிரபயம் சார்ங்க சக்ராஸி முக்க்யை - ஸர்வேச்வரன் மீது கொண்ட அன்பினால், எந்தவிதமான காரணமும் இன்றி அவனைக் காப்பாற்றுவதில் மட்டுமே ஈடுபட்டு நிற்கும் சார்ங்கம் என்னும் வில், சுதர்சன சக்கரம், நந்தகம் என்ற வாள் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனின் திருக்கல்யாண குணங்களில் ஈடுபட்டு, நஞ்சுண்டவர்கள் போன்று உங்களை அறியாமல் மயங்கி நிற்பதோ அல்லது அவனை அனுபவிக்கத் தொடங்கி, கைங்கர்யம் செய்தபடி உங்களை ஈடுபடுத்தி மெய்மறந்து நிற்பதோ செய்யாமல், அவனைக் காப்பாற்றுவதில் மட்டுமே நோக்கம் கொண்டு இருங்கள் - என்று பலமுறை பெரியாழ்வார் திருமொழி (5-2-9) - உறகல் உறகல் உறகல் - என்று கூறித் திருப்பல்லாண்டு பாடுதலையே மேன்மேலும் செய்தபடி இருப்பார் என்று பொருள்.

255. அல்லாதவர்களைப்போலே கேட்கிறவர்களுடையவும் சொல்லுகிறவர்களுடையவும் தனிமையைத் தவிர்க்கை யன்றிக்கே ஆளுமாளாரென்கிறவனுடைய தனிமையைத் தவிர்க்கைக்காகவாயிற்று பாஷ்யகாரருமிவரு முபதேசிப்பது.

**அவதாரிகை** - இப்படி மங்களாசாஸநத்துக்கு ஆள் தேடி ப்ரதிகூலரை யநுகூலராக்குகைக்குப் பண்ணுகிற வுபதேசம் திருப்பல்லாண் டொன்றிலுமன்றோ வுள்ளது, மேலிவ ருபதேசித்த விடங்களில் அல்லாதா ருபதேசத்திற்காட்டில் வ்யாவ்ருத்தி என்? என்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார் (அல்லாதவர்களைப்போலே) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் திருப்பல்லாண்டு பாடுவதற்காக ஆளைத் தேடியபடி ப்ரதிகூலரையும் அநுகூலராக மாற்றுவதற்கு இவர் செய்கிற உபதேசம் என்பது திருப்பல்லாண்டு என்னும் பிரபந்தத்தில் மட்டுமே உள்ளது அல்லவோ? இந்தப் பிரபந்தத்தைத் தொடர்ந்து இவர் அருளிச்செய்த பிரபந்தங்களில் உள்ள உபதேசங்களில், மற்ற ஆழ்வார்கள் செய்த உபதேசங்களை காட்டிலும் வேறுபாடு என்ன உள்ளது என்ற சந்தேகம் எழலாம். இதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பரோபதேசத்தில் வந்தால், மற்றுள்ள ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் போலே உபதேசிக்கிறவர்த்தங் கேட்கிற ஸம்ஸாரிகளுடைய அநாத்ய ஜ்ஞாநத்தாலே நற்றுணையான பகவத்விஷயத்தை அகன்று திரிகையால் வந்த தனிமையையும், வக்தாக்களான தங்களுடைய பகவத்குணா நுஸந்தாந தசையிலே "போதயந்த: பரஸ்பரம்" பண்ணுகைக்கு உசாத்துணை யில்லாமையால் வந்த தனிமையையும் தவிர்க்கை ப்ரயோஜநமாக உபதேசிக்கையன்றிக்கே,

**விளக்கம்** – "அல்லாதவர்களைப்போலே" என்றால் - மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும்போது மற்ற ஆழ்வார்கள் மற்றும் ஆசார்யர்கள் போன்று - என்று பொருள். "கேட்கிறவர்களுடையவும் சொல்லுகிறவர்களுடையவும் தனிமையைத் தவிர்க்கை யன்றிக்கே" என்பதன் பொருள் – இவரது உபதேசத்தைக் கேட்ட பின்னரும் ஸம்ஸாரிகள் எல்லையற்ற காலம் அறிவற்ற நிலையிலேயே உள்ளதால், தங்களுக்குச் சிறந்த துணையாக உள்ள ஸர்வேச்வரனை விட்டு அவர்கள் அகன்று செல்கின்றனர்; இதனால் அவனுக்குத் தனிமை ஏற்படுகிறது; மேலும் ஸர்வேச்வரனின் குணங்களை எண்ணியபடி ஒருவருக்கொருவர் அதனைக் குறித்துப் பேச முற்படும்போது தகுந்த துணையின்றி அடியார்களுக்குத் தனிமை ஏற்படுகிறது; இந்தத் தனிமைகளை நீக்குவது எப்படி என்று உபதேசிக்காமல், ஸர்வேச்வரனின் மென்மையை மட்டுமே எண்ணியபடி பெரியாழ்வார் உள்ளார்; ஆகவே இவர் ஆராய்ந்து பார்க்கும்போது, மற்றவர்கள் யாரும் மங்களாசாஸநம் செய்யாதவர்கள் என்றே இவருக்குத் தோன்றுகிறது.

**வ்யாக்யானம்** - ஸௌகுமார்யா நுஸந்தாநத்தாலே வயிறுமறுகின ஆழ்வார் ஆராய்ந்து பார்த்தவிடத்தில், அடைய அந்யபரராய்த் தோற்றுகையாலே, உபயவிபூதியிலும் பரிகைக்காளில்லை, தம் வாசியறிந்து பரிந்து நோக்குகைக்கு ஓராளு மாளுகிறிலரே யென்று பேசும்படி யிருக்கிற நிரதிசய ஸௌகுமார்ய யுக்தனான ஸர்வேச்வரனுடைய தனிமை தீர மங்களாசாஸநத்துக்கு இவர்கள் ஆளாகவேணுமென்னுமிதுவே ப்ரயோஜநமாக வாய்த்து, ப்ராமாணிகரான வாசார்யர்களில் பாஷ்யகாரரும் மயர்வற மதிநலம் பெற்றவர்களி லிவ்வாழ்வாரு முபதேசித்தருளுவ தென்கை. ஆகையால் இவ்வாழ்வார் ப்ரதிகூலரை அநுகூலராக்க உபதேசிக்குமிடமெல்லாம் மங்களாசாஸ நார்த்தமாக வென்னக் குறையில்லையென்று கருத்து. எம்பெருமானா ரென்னாதே, பாஷ்யகாரரென்றது – ஸ்ரீபாஷ்ய முகத்தாலே வேதாந்த தாத்பர்ய நிர்ணயம் பண்ணி யருளினவ ரென்னும் வைபவந் தோற்றுகைக்காக.

**விளக்கம்** - “ஆளுமாளாரென்கிறவனுடைய தனிமையைத் தவிர்க்கைக்காக வாயிற்று பாஷ்யகாரருமிவரு முபதேசிப்பது” என்றால் என்ன? திருவாய்மொழி (8-3-3) – ஆளும் - என்று கூறுவதற்கு ஏற்ப, “நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டிலும் உள்ளவர்களில் ஸர்வேச்வரனாகிய என்னைப் பரிவதற்கு யாரும் இல்லை; எனது மென்மையை உள்ளது உள்ளபடி அறிந்து அன்புடன் நோக்குவதற்கும் யாரும் இல்லை” என்று கூறும்படியாக இருக்கின்ற ஈடில்லாத மென்மை கொண்ட ஸர்வேச்வரனின் வருத்தம் என்பது விலகும் பொருட்டு மங்களாசாஸநம் செய்வதற்கு, மற்ற ஆழ்வார்களையும் ஆளாக்கவேண்டும் என்பதே தாங்கள் பெறும் பயன் என்று கருதினர். யார் இவ்விதம் கருதினர் என்றால் - தகுந்த ப்ரமாணங்கள் கொண்டே எதனையும் நிலைநிறுத்தும் ஆசார்யர்களில் முக்கியமானவரான ஸ்ரீபாஷ்யகாரர் மற்றும் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற பெரியாழ்வார் ஆகியோர் ஆவர். ஆகவே பெரியாழ்வார் ப்ரதிகூலரை அநுகூலராக மாற்ற முயற்சிக்கும்போது உபதேசம் செய்த அனைத்துமே அவர்களை மங்களாசாஸநத்தில் ஈடுபடுத்தும் முயற்சியே என்று கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. எம்பெருமானார் என்று உரைக்காமல் ஸ்ரீபாஷ்யகாரர் என்றது ஏன்? ஸ்ரீபாஷ்யத்தின் மூலம் வேதாந்தங்களில் கூறப்பட்ட அனைத்தையும் உள்ளது உள்ளபடி நிரூபித்து அருளியவர் என்பது புலப்படவே ஆகும்.

256. அல்லாதார்க்கு ஸத்தாஸம்ருத்திகள் தர்சநாநுபவ கைங்கர்யங்களாலே; இவர்க்கு மங்களாசஸநத்தாலே.

**அவதாரிகை** – மயர்வற மதிநலம் பெற்றவர்க ளெல்லார்க்கும் ஸத்தாஸம்ருத்திகள் பகவத் தர்சநாநுபவ கைங்கர்யங்களாலே யாகவன்றோ தோற்றுகிறது, அவ்வாகார மிவர்க்கு மொவ்வாதோ, அப்போதைக்கு மங்களாசாஸநமே யாத்ரையாக நடக்குமென்னுமிது கூடும்படி என்னென்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார் (அல்லாதார்க்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் அனைவருக்கும் உயிர் தரித்தல், வாழ்வு போன்ற பலவும் ஸர்வேச்வரனைத் தரிசிப்பது, அவனுக்கு கைங்கர்யம் செய்வது என்பதால் அல்லவோ ஏற்படுகிறது? அப்படிப்பட்ட நிலை இவருக்கும் ஒத்துப்போகும் அன்றோ? இவ்விதம் கொள்ளும்போது, திருப்பல்லாண்டு பாடுவது மட்டுமே இவருக்கு ஒரே செயலாக இருக்கும் என்று உரைப்பது எப்படி? இந்தக் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஸத்தையாவது தாங்களுளராகை. இது பகவத் தர்சநாநுபவ கைங்கர்ய காமரான மற்றை யாழ்வார்களுக்கவனைக் காணாதபோது தரிக்கமாட்டாதே, "காணவாராய்" என்றென்று கூப்பிடுகையாலே தத்தர்சநத்தாலேயாயிருக்கும்; "அவராவி துவராமுன் – அவர் வீதியொரு நாள் – அருளாழிப் புட்கடவீர்" என்று – எங்கள் ஸத்தை கிடக்கைக்கு ஜாலகரந்த்ரத்தாலேயாகிலு மொருக்கால் காணும்படி எங்கள் தெருவே யொருநாள் போகவமையுமென்று சொல் லென்கையாலே, தர்சநமே ஸத்தா ஹேது வென்னுமிடம் ஸித்தமிறே. (ஸம்ருத்தியாவது) – உளராயிருக்கிற மாத்ர மன்றிக்கே மேலுண்டாய்ச் செல்லுந் தழைப்பு. அது அவர்களுக்கு "அந்தாமத்தன்பு", "முடிச்சோதி" தொடக்கமானவற்றிற் போலுண்டான அநுபவத்தாலும், "ஒழிவில் கால" த்திற்படியே செய்யும் கைங்கர்யத்தாலுமா யிருக்கும். அன்றிக்கே, தர்சநாநுபவங்களிரண்டாலும் ஸத்தையும், கைங்கர்யத்தாலே ஸம்ருத்தியுமாகச் சொல்லவுமாம். அங்ஙனுமன்றிக்கே, (அந்த ஸத்தை ப்ராவண்ய கார்யமான வநுபவமில்லாதபோது குலையும்) என்று இவர்தாமே கீழே அருளிச்செய்கையாலும், நாளை விநியோகங் கொள்ளுகிறோ மென்னில், அழுகவுங்கூட ஸத்தையில்லை என்று கைங்கர்யம் ஸத்தா ஹேதுவாக வநுஸந்தாநத்திலே சொல்லுகையாலும், "கண்டு களிப்பன்" என்று தர்சநந்தான் ஸம்ருத்தி ஹேதுவாகவும் தோற்றுகையாலும், ஸத்தைக்கும் ஸம்ருத்திக்கும் மூன்று காரணமென்னவுமாம்.

**விளக்கம்** - ஸத்தை என்றால் தாங்கள் உயிர் தாங்கி நிற்பது என்று பொருள். ஸர்வேச்வரனின் தரிசனம், அவன் அனுபவம், அவனுக்குக் கைங்கர்யம் போன்றவற்றைச் செய்வதை விரும்பும் மற்ற ஆழ்வார்களுக்கு, அவனைக் காண இயலவில்லை என்றபோது உயிர் தரிக்க இயலாமையும், திருவாய்மொழி (8-5-2) - காணவாராய் – என்று அழைப்பது போன்று அவனைக் காண முடிந்தால் மட்டுமே உயிர் தரிப்பது என்னும் நிலையும் ஏற்படும். திருவாய்மொழி (1-4-6) - அவராவி துவராமுன் – அவர் வீதியொரு நாள் – அருளாழிப் புட்கடவீர் - நாங்கள் உயிர் தரிக்கும் பொருட்டு, எங்கள் வீட்டில் உள்ள ஜன்னல்களின் வழியாக நாங்கள் பார்க்கும்படி, ஒரு நாளாவது எங்கள் வீடு உள்ள தெரு வழியே சென்றால் போதுமானது என்று கூறுவதற்கு ஏற்ப, அவனைக் காண்பது என்பது மட்டுமே உயிர் தரிப்பது, உயிர் தங்குவதற்கான காரணம் என்பது தெளிவாகிறது. ஸம்ருத்தி என்பது உயிர் தரிப்பது என்பது மட்டும் அல்லாமல், அதன் பின்னர் வாழ்வது என்பதாகும். இத்தகைய வாழ்வு என்பது மற்ற ஆழ்வார்களுக்கு திருவாய்மொழி (2-5) – அந்தாமத்தன்பு, திருவாய்மொழி (3-1) – முடிச்சோதி – போன்றவற்றில் ஏற்படுகின்ற அனுபவங்கள் மூலமும், திருவாய்மொழி (3-3) – ஒழிவில் காலம் – என்பதில் ஏற்படுகின்ற கைங்கர்யம் மூலமும் ஏற்படுவதாக உள்ளது. அல்லது ஸர்வேச்வரனின் தரிசனம், அனுபவம் ஆகியவற்றின் மூலம் உயிர் தங்குதலும், கைங்கர்யம் மூலம் வாழ்வும் ஏற்படுகிறது என்றும் உரைக்கலாம். அப்படியும் இல்லாமல், மூன்றாவதாகவும் ஒரு பொருள் உரைக்கலாம். சூர்ணை 114ல் - அந்த ஸத்தை ப்ராவண்ய கார்யமான வநுபவமில்லாதபோது குலையும் – என்று இவரே முன்பு அருளிச்செய்த காரணத்தாலும்; “உம்முடைய கைங்கர்யத்தை நாளை நாம் பயன்படுத்திக் கொள்கிறோம்” என்று ஸர்வேச்வரன் உரைத்தால், “இன்று நாம் இவனுக்குப் பயன்படவிலையே” என்று அழுவதற்கும் கூட தெம்பு இன்றி இருத்தலால், உயிர் தரிப்பதற்குக் கைங்கர்யம் காரணம் என்று அநுஸந்தானம் என்னும் நூல் உரைப்பதாலும்; திருவாய்மொழி (10-8-7) – கண்டு களிப்பன் - என்று ஸர்வேச்வரனைக் காண்பதே வாழ்வதற்குக் காரணம் என்று உரைப்பதாலும் தரிசனம், அனுபவம், கைங்கர்யம் ஆகிய மூன்றுமே உயிர் தரிக்கவும், வாழ்வதற்கும் காரணம் என்றாகிறது.

**வ்யாக்யானம்** - மயர்வற மதிநலம் பெற்ற வன்று முதல் பகவத் ஸௌகுமார்யாதிகளைக் கண்டு இவற்றுக்கென் வருகிறதோ வென்று வயிறெரிந்து மங்களாசாஸநாபி நிவிஷ்டரான விவர்க்கு, மங்களாசாஸந விச்சேதம் வரில் தாமுளராக மாட்டாமையாலும்,

அப்படி யவிச்சிந்நமாய்ச் சொல்லுமதுதானே தழைப்புக் குடலா யிருக்கையாலும், ஸத்தையும் ஸம்ருத்தியு மிரண்டும் மங்களாசாஸநத்தாலேயா யிருக்கும்; ஆகையா லிவர்க்கு மங்களாசாஸநம் நித்யமாய்ச் சொல்லத் தட்டில்லையென்று கருத்து.

**விளக்கம்** - மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நாள் முதலாகவே ஸர்வேச்வரனுடைய மென்மை போன்ற தன்மைகளைக் கண்டு “அவனுக்கு என்ன ஆபத்து உண்டாகுமோ”, என்று வயிறு கலங்கி, திருப்பல்லாண்டு பாடுவதிலேயே பெரும் ஆசை கொண்டவராகவே பெரியாழ்வர் விளங்குகிறார்.அப்படிப்பட்ட அவருக்குத் திருப்பல்லாண்டு பாடுவதில் ஏதேனும் தடை ஏற்பட்டால் உயிர் தரிக்கமாட்டார் என்பதாலும், இவ்விதம் தடை இன்றி இருக்கின்ற திருப்பல்லாண்டு உரைத்தல் என்பதே இவர் வாழ்வதற்குக் காரணமாக உள்ளதாலும் - பெரியாழ்வாரைப் பொறுத்தவரையில் திருப்பல்லாண்டு என்பதாலேயே இவருக்கு உயிர் தரித்தல், வாழ்தல் என்ற இரண்டும் கூடும் என்றாகிறது. எனவே இவருக்குத் திருப்பல்லாண்டு என்பது எப்போதும் உள்ளது என்று கூறுவதில் எந்தவிதமான தோஷமும் இல்லை.

257. உகந்தருளின நிலங்களை யநுஸந்தித்தால் ஊணு முறக்கமு மின்றிக்கே இவருடைய யாத்ரையே நமக்கெல்லார்க்கும் யாத்ரையாக வேணும்.

**அவதாரிகை** – ஆக, மங்களாசாஸநத்தில் பெரியாழ்வார்க்குண்டான அநவரத நிஷ்ட்டையை தர்சிப்பித்தார் கீழ்; இனிமேல், இவருடைய யாத்ரையே நமக்கெல்லார்க்கும் யாத்ரையாக வேணுமென்று, (உகந்தருளின நிலங்களி லாதராதிசயமும் மங்களாசாஸநமும்) என்று முன்பு திநசர்யையி லுக்தமான மங்களாசாஸநத்தினுடைய அவச்ய கர்த்தவ்யதையை யருளிச்செய்கிறார் (உகந்தருளின நிலங்களை) என்று தொடங்கி.

**விளக்கம்** – இதுவரை, திருப்பல்லாண்டு பாடுவதில் மட்டுமே பெரியாழ்வார் எப்போதும் நாட்டத்துடன் உள்ளதை அருளிச்செய்தார். இனி, இப்படியாக இவர் திருப்பல்லாண்டு பாடிய செயலே நம் அனைவருக்கும் எற்றது என்பதைக் காட்டுகிறார். சூர்ணை 243ல் – உகந்தருளின நிலங்களி லாதராதிசயமும் மங்களாசாஸநமும் – என்றுள்ள, அன்றாடம்

கடைப்பிடிக்க வேண்டிய செயல்கள் குறித்துக் கூறப்பட்ட வாக்கியத்தில் உணர்த்தப்படும் மங்களாசாஸநம், எப்போதும் செய்யப்பட வேண்டியது என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது அத்யந்த ஸுகுமாரனான ஸர்வேச்வரன் ஆச்ரித ஸுலபத்வார்த்தமாகத் தன்னை யமைத்துக் கொண்டு "தானுகந்தவூர்" என்னும்படி தானத்யாதரத்தைப் பண்ணி வர்த்திருக்கும் கோயில் திருமலை முதலான திவ்ய தேசங்களை யநுஸந்தித்தால், அபாய பஹுளமான தேசமாகையாலே இங்கெழுந்தருளி நிற்கிற நிலைக்கு ஏதேனுமொரு தீங்குகள்வரில் என்னாகக் கடவது என்னும் வயிறெரிச்சலாலே, ஆஹார நித்ரைகளிலு மந்வயமின்றிக்கே நிரதிசய ப்ரேமயுக்தரான விவ்வாழ்வாருடைய நிரந்தர மங்களாசாஸந யாத்ரையே சேஷபூதரான நமக்கெல் லார்க்கும் யாத்ரையாக வேணுமென்கை.

**விளக்கம்** – மிகுந்த மென்மையான திருமேனியைக் கொண்ட ஸர்வேச்வரன், தன்னை அடைகின்றவர்களுக்குத் தான் எளிதாக அடையப்படும்விதமாகத் தன்னை அமைத்துக் கொள்கிறான். திருநெடுந்தாண்டகம் (6) – தான் உகந்த ஊர் - என்பதற்கு ஏற்ப, அவன் இவ்வாறு நிற்கின்ற திவ்யதேசங்களான திருவரங்கம், திருமலை போன்றவற்றை எண்ணிப் பார்த்தவுடன், "அபாயங்கள் பல உள்ள இந்த உலகத்தில் இப்படியாக இவன் எழுந்தருளியுள்ள நிலைக்கு ஏதேனும் தீமை நேரிட்டால் என்ன ஆகுமோ?", என்று அச்சம் கொண்டு, உண்பதும் உறங்குவதும் செய்ய இயலாமல், அவனிடம் மிகுந்த காதல் கொண்டதன் காரணமாக, வயிறு கலங்கி பெரியாழ்வார் இருந்தார். இப்படியாக இருந்த இவருடைய திருப்பல்லாண்டு பாடுதல் என்னும் செய்கையே, அவனுடைய அடியார்களான நமக்கும் ஏற்ற செய்கையாக இருக்கவேண்டும்.

258. ஆகையாலே மங்களாசாஸநம் ஸ்வரூபாநுகுணம்.

**அவதாரிகை** - உக்தார்த்தத்தை நிகமித்தருளுகிறார் (ஆகையாலே) என்று தொடங்கி.

**விளக்கம்** – இதுவரை கூறி வந்த திருப்பலாண்டு குறித்த ப்ரகரணத்தை நிறைவு செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது இப்படி சேஷபூதரானவர்களுக்கெல்லாம் அவச்ய கர்த்தவ்யமாயிருப்ப தொன்றாகையாலே, மங்களாசாஸநம் ஸ்வரூபத்துக்குச் சேருமென்கை. சேஷ வஸ்துவாகில் சேஷிக்கதிசயத்தை விளைத்தே தன் ஸ்வரூப ஸித்தியாகையாலே, சேஷிக்கதிசயத்தை யாசாஸிக்கிறவிது சேஷபூதனானவிவனுடைய ஸ்வரூபத்துக்கநுகுணமிறே.

**விளக்கம் –** இப்படியாக ஸர்வேச்வரனுக்கு அடிமையாக இருப்பவர்கள் அனைவராலும் அவசியம் செய்யத்தக்கதாகத் திருப்பல்லாண்டு உள்ளதால், அது ஸ்வரூபத்திற்கு ஏற்றதாகும். அடிமையாக இருக்கும் வஸ்துவானது தனது எஜமானனுக்கு ஏதேனும் மேன்மையை உண்டாக்கினால் மட்டுமே தன்னுடைய ஸ்வரூபத்தை நிலை நிறுத்திக் கொள்ள இயலும்; ஆகவே ஸர்வேச்வரனுக்கு மேன்மையை ஏற்படுத்தவல்ல திருப்பல்லாண்டு என்பது அடிமையாக உள்ள நம்முடைய ஸ்வரூபத்திற்கு அவசியமான ஒன்றாகிறது.

259. அநுகூலராகிறார் ஜ்ஞான பக்தி வைராக்யங்கள் இட்டுமாறினாற்போலே வடிவிலே தொடை கொள்ளலாம்படியிருக்கும் பரமார்த்தர்.

**அவதாரிகை -** இப்படி திநசர்யையி லுக்தமான மங்களாசாஸநத்தினுடைய ஸ்வரூப விருத்தத்வ சங்கையைப் பரிஹரித்த வநந்தரம், “அநுகூல ஸஹவாஸம்” என்றவிடத்திற் சொன்ன அநுகூலருடைய லக்ஷணத்தை யருளிச்செய்கிறார் (அநுகுலர்) என்று தொடங்கி.

**விளக்கம் –** இப்படியாக அன்றாடம் கடைப்பிடிக்கவேண்டிய விதிகளை உரைப்பதான சூர்ணை 243-ல் கூறப்பட்ட மங்களாசாஸநம் என்பது ஆத்ம ஸ்வரூபத்திற்கு முரணானது அல்லவோ என்று எழுந்த சந்தேகத்தை விலக்கினார். தொடர்ந்து அதே சூர்ணையில் அருளிச் செய்யப்பட்ட “அநுகூல ஸஹவாஸம்” என்ற தொடரை எடுத்துக்கொண்டு, அநுகூலர் என்பவர்களின் தன்மை என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** (அநுகூலராகிறார்) என்றது, ஜ்ஞாநாதி வர்த்தகராகையாலே ஸஹவாஸ யோக்யராகக் கீழ்ச் சொல்லப்பட்ட வநுகூலராகிறா ரென்றபடி. (ஜ்ஞாந பக்தி வைராக்யங்களாவன) தத்வயாதாத்ம்ய ஜ்ஞாநமும், பகவதேக விஷயையான பக்தியும்,

ததுபய கார்யமாய் வரும் பகவத் வ்யதிரிக்த விஷயவிரக்தியும்; இவைதான் வைஷ்ணவ அலங்காரங்களிறே. இவற்றையிட்டிறே ஸ்ரீவைஷ்ணவர்களுக் கேற்றஞ் சொல்லுவது. ஆகையிறே, நாதமுநிகளுடைய திவ்ய வைபவத்தை யருளிச்செய்கிற ஆளவந்தார் “அசிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞாந வைராக்ய ராசயே, அகாத பகவத் பக்தி ஸிந்தவே” என்றருளிச்செய்தது.

**விளக்கம்** - (அநுகூலராகிறார்) - அனைவரது ஞானம் போன்றவற்றை வளர்ப்பவர்கள் என்பதால் பழகுவதற்கு ஏற்றவர்கள் என்று சூர்ணை 243-ல் கூறப்பட்ட அநுகூலர் ஆகிறார்கள். (ஜ்ஞாந பக்தி வைராக்யங்களாவன) - உண்மையான பொருளை உள்ளது உள்ளபடி அறியவல்ல ஞானமும், ஸர்வேச்வரனை மட்டுமே விஷயமாகக் கொண்ட பக்தியும், ஞானம் மற்றும் பக்தி ஆகியவற்றின் மூலம் ஏற்படுவதான ஸர்வேச்வரன் நீங்கலாக உள்ள மற்ற விஷயங்களின் மீது ஈடுபாடு இல்லாத தன்மையும் ஆகும். இவையே ஒரு ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஏற்ற அலங்காரங்களாக உள்ளன. இவை மூலம் மட்டுமே ஒரு ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஏற்றம் கூறப்படுகிறது அல்லவா? நாதமுனிகளின் திவ்யவைபவத்தை அருளிச்செய்தபோது ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னத்தில் (1) – அசிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞாந வைராக்ய ராசயே, அகாத பகவத் பக்தி ஸிந்தவே - இப்படிப்பட்டது என்று மனதால் எண்ணி அளவிட இயலாததும், வியக்க வைப்பதும், எளிதாகக் கிட்டியதும் ஆகிய ஞானம் மற்றும் வைராக்யத்தின் குவியல் போன்று உள்ளவர்; ஆழ்ந்த பக்தியின் ஸமுத்திரமாகவே உள்ளவர் - என்று போற்றியது காண்க.

**வ்யாக்யானம்** - (இட்டுமாறினாப்போலே) என்றது, ஒரு பதார்த்தமிருந்த பாத்ரத்திலே பதார்த்தாந்தரத்தையிட்டு முன்பிருந்தத்தை மாற்றினா லதுவே யுள்ளதாய்த் தோற்றுமாப் போலே, இந்த ஜ்ஞாநாதிகள் மூன்றும் ஏகாச்ரயகதமா யிருக்கச்செய்தே, இவற்றி லோரொன்றையே பார்க்குமளவில் ஒன்றையிட்டு மற்றையவற்றை மாற்றினாப்போலே இதுவே யிவ்வாச்ரயத்திலுள்ளதென்று தோற்றும்படி யிருக்கை. (வடிவிலே தொடை கொள்ளலாம்படி யிருக்கையாவது) – இவர்கள் வடிவு கண்டபோதே இவற்றோ டிவர்களுக் குண்டான ஸம்பந்தம் க்ரஹிக்கலாம்படி யிருக்கை. த்யாஜ்யோபாதேய விவேக பூர்வகமான பரிமாற்றத்தாலே, ஜ்ஞாநம் வடிவிலே தொடை கொள்ளலாம்; “ஆஹ்லாத சீத நேத்ராம்பு:”, “காலுமெழா கண்ணநீரும் நில்லா” இத்யாதிப்படியே யிருக்கையாலே பக்தி வடிவிலே தொடை கொள்ளலாம்; இதர விஷயங்களைக் கடைக்கணியாம

லிருக்கையாலே வைராக்யம் வடிவிலே தொடை கொள்ளலாம். அன்றிக்கே, ஜ்ஞாந பக்தி வைராக்யங்கள் மூன்றும் நவநவோந்மேஷ சாலிகளாய் வருகையாலே அபூர்வமான ஜ்ஞாநாதிகளையிட்டு பூர்வத்தி லவற்றை மாற்றினாப்போலே தங்கள் வடிவிலே யிவை காணலாம்படி யிருக்கும் பரமார்த்த ரென்னவுமாம். (பரமார்த்தர்) என்றது - ஸம்ஸாரத்தில் பொருந்தாமையாலும் பகவத்விஷயத்தைக் கிட்டப் பெறாமையாலும் இனியிதுக்கு மேலில்லை யென்னும்படியான ஆர்த்தியை யுடையவர்களென்கை.

**விளக்கம்** - (இட்டுமாறினாப்போலே) - ஒரு பொருள் இருந்த பாத்திரத்தில் வேறு ஒரு பொருளை வைத்துவிட்டு, இதுவரை இருந்து வந்த பொருளை மாற்றினாலும், முன்பு இருந்த பொருளே உள்ளதாகத் தோன்றுவது இயல்பாகும். இது போன்று ஞானம், பக்தி, வைராக்யம் ஆகிய மூன்றும் ஒரே ஜீவனில் உள்ளபோதிலும் இவற்றில் ஏதேனும் ஒன்றை மட்டுமே உள்ளதாகக் கண்டாலும், ஒன்றைத் தவிர்த்து மற்றொன்றைப் பார்ப்பதாகவே எண்ணுவது இயல்பாகிறது. (வடிவிலே தொடை கொள்ளலாம்படி யிருக்கையாவது) - இப்படிப்பட்டவர்களின் உருவத்தைப் பார்த்த உடனேயே இவர்களிடம் ஞானம், பக்தி வைராக்யம் உள்ளது என்று கூறும்படியாக உள்ளது. இவற்றைக் கைவிடவேண்டும், இவற்றைக் கைக்கொள்ளவேண்டும் என்று தெளிவாக அறிந்து, அதன்படி நடந்து கொள்வதால், அவர்களுடைய ஞானம் என்பது அவர்களின் உருவத்திலேயே உள்ளதை எளிதாக உணரலாம். ஆஹ்லாத சீத நேத்ராம்பு: - ஸர்வேச்வரனையே எப்போதும் எண்ணியபடி உள்ளதால் ஆனந்தக்கண்ணீர் பெருகியபடி உள்ளவன் - என்றும், பெரியாழ்வார் திருமொழி (3-3-5) - காலுமெழா கண்ணநீரும் நில்லா - என்றும் கூறுவதற்கு ஏற்ப பக்தி என்பதையும் இவர்களது உருவத்திலேயே காணலாம். மற்ற விஷயங்கள் எதனையும் இவர்கள் காணாமல் உள்ளதால், இவர்களது வைராக்யம் என்பதையும் இவர்களுடைய உருவத்தில் காணலாம். அல்லது வேறுவிதமாகவும் கூறலாம். இவர்களுக்கு உள்ள ஞானம், பக்தி மற்றும் வைராக்யம் ஆகிய மூன்றும் ஒவ்வொரு நொடியும் புதிதுபுதிதாகப் பெருகியபடி உள்ளது; ஆக புதிதாகப் பிறந்த ஞானம் போன்றவை மூலம் முன்பிருந்த ஞானத்தை மாற்றியமைத்தல் போன்றவற்றை இவர்களுடைய வடிவில் காணலாம். (பரமார்த்தர்) - ஸம்ஸாரத்தில் நிற்கின்ற நிலைமையை ஒவ்வொரு நொடியும் பொறுத்துக்கொள்ள இயலாமல், ஸர்வேச்வரனை விரைத்து கிட்ட முடியாமல் உள்ளதால், “இதற்கும் மேல் படவேண்டிய துன்பம் ஏதும் இல்லை” என்று கூறலாம்படியாக உள்ள துன்பம் பொருந்தியவர்கள் என்று கருத்து.

260. ஒரு செய் நிரம்ப நீர் நின்றால் அசல் செய் பொசிந்து காட்டுமாபோலே இவையில்லாதார்க்கு மிவர்களோட்டை ஸம்பந்தத்தாலே உறாவுதல் தீரக் கடவதாயிருக்கும்.

**அவதாரிகை** - இவர்களோட்டை ஸஹவாஸத்தால் ஸித்திக்கு மதேதென்ன வருளிச் செய்கிறார் மேல் (ஒரு செய்) என்று தொடங்கி.

**விளக்கம்** – மேலே கூறப்பட்டவர்களின் ஸம்பந்தம் காரணமாகக் கிட்டுவது என்ன என்பதை அருளிச்செய்கிறார்

**வ்யாக்யானம் –** அதாவது, ஒரு வயலிலே நிறைய நீர் நின்றால் நீரற்று உறாவிக் கிடக்கிற அசல் வயல் ததாஸத்தியால் வந்த பொசிவாலே வாட்டமற்றுக் கிடக்குமாப்போலே, ஜ்ஞாந பக்தி வைராக்யங்களாகிறவிவை யில்லாமையாலே ஸ்வரூபமுறாவிக் கிடக்கிறவர் களுக்கும் இவற்றால் பரிபூர்ணரான விவர்களோட்டை ஸஹவாஸ ரூப ஸம்பந்தத்தாலே இவற்றிலே சிறிதந்வயமுண்டாய் இவை நேராக வில்லாமையாலுண்டான வுறாவுதல் தீரக்கடவதாயிருக்கை.

**விளக்கம்** - ஒரு வயலில் நீர் நிரம்ப உள்ளது என்னும்போது, அதன் அருகில் உள்ள நீர் இன்றி இருக்கும் வயலுக்கு, முதல் வயலில் இருந்து நீர் கசிவதால் ஏற்படும் தொடர்பு காரணமாக நீரின்றி உள்ள வயலானது வாட்டம் அடையாமல் இருக்கும். இந்த இரண்டாவது வயல் போன்று ஒரு சிலர் ஞானம், பக்தி, வைராக்யம் ஆகிய ஏதும் இல்லாமல் தங்களுடைய ஸ்வரூபத்தை இழந்து இருக்கக்கூடும். இப்படிப்பட்டவர்கள் இவை பரிபூர்ணமாக உள்ளவர்களுடன் ஸம்பந்தம் ஏற்படுத்திக் கொள்வதன் மூலம், இந்த மூன்றிலும் சிறிதளவு சேர்க்கை ஏற்படுகிறது; இதன் மூலம் இவை இயல்பாக இல்லாத காரணத்தால் ஏற்படவல்ல ஸ்வரூபத்தின் அழிவு என்பது நீக்கப்படுகிறது.

261. ஆறு நீர் வரவணித்தானால் அதுக்கீடான அடையாளங்களுண்டாமாபோலே ப்ராப்தியணித்தானவாறே இந்த ஸ்வபாவ விசேஷங்கள் தன்னடையே விளையக் கடவதாயிருக்கும்.

**அவதாரிகை** - ஏதத் ஸஹவாஸத்தால் இப்படி உறாவுதல் தீர்ந்துகிடக்குமளவோ வென்னில்; இவ்வளவு மன்று, இந்த ஸ்வபாவ விசேஷங்கள் ப்ராப்திக்கு முன்னே பூர்ணமாக விளைந்தறுமென்கிறார் (ஆறு நீர்) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஒரு சிலருக்கு ஏற்படவுள்ள ஸ்வரூப நாசம் என்பது ஞானம், பக்தி மற்றும் வைராக்யம் ஆகிய மூன்றும் உள்ளவர்களின் தொடர்பு காரணமாக விலகிவிடுமோ என்னும் சந்தேகம் எழலாம். இதற்கு விடை அளிக்கிறார் – அவை விலகுவது மட்டும் அல்ல; இவை இயல்பாகவே இல்லாமல் உள்ளவர்கள், ஸர்வேச்வரனை அடைவதற்கு முன்பாகப் பரிபூர்ணமாக இவை நிறைந்துவிடும் என்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது வற்றிக் கிடக்கிற ஆறு நீர் வரத்து ஆஸந்நமானவாறே தத்ஸூசகமான மணல் பொசிகை முதலான அடையாளங்களுண்டாமாப்போலே, பகவத் ப்ராப்தி ஆஸந்நையானவாறே தத்ஸூசமாகவிந்த ஜ்ஞாநாதி ஸ்வபாவ விசேஷங்கள் ஸ்வயமேவ விளையக் கடவதாயிருக்குமென்கை.

**விளக்கம்** - வற்றிக் கிடக்கின்ற ஓர் ஆற்றில் நீர்வரத்து ஏற்படுவதற்கு முன்பாக, அந்த நீர் வரப்போவதற்கு அடையாளமாக, மண்ணானது ஈரப்பசையை அடைதல் போன்ற தன்மைகளைக் கொள்கிறது. இது போன்றே ஸர்வேச்வரனை சேதநன் அடையும் காலம் நெருங்க நெருங்க, அதற்கு அடையாளமாக ஞானம் போன்றவை தாமாகவே அவனை வந்தடைந்துவிடும் என்று கருத்து.

262. இவற்றைக் கொண்டு சரமசரீரமென்று தனக்குத்தானே யறுதியிடலாயிருக்கும்.

அவதாரிகை - இவையிப்படி விளைந்து வரப்புக்கால் ப்ராப்தி அணித்தென்று தோற்றியிருக்குமோவென்ன வருளிச்செய்கிறார் (இவற்றைக்கொண்டு) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஞானம் போன்றவை ஒருவனுக்கு உண்டாகும்போது அவன் ஸர்வேச்வரனை அடைகின்ற காலம் நெருங்கிவிடுகிறது என்று எப்படிக் கூற இயலும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்படி மேன்மேலும் புதுக்கணித்து விளைந்து வருகிற ஜ்ஞாந பக்தி வைராக்யங்களைக் கொண்டு, “இனி நமக்கொரு சரீர பரிக்ரஹமில்லை, இது சரம சரீரம்” என்று தன் மநஸ்ஸுக்கே நிச்சயித்துக் கொள்ளலாயிருக்குமென்கை.

**விளக்கம்** – இப்படியாகப் புதிதுபுதிதாக ஏற்படுகின்ற ஞானம், பக்தி மற்றும் வைராக்யம் ஆகியவை மூலம், “இனி நமக்கு அடுத்த சரீரம் (பிறவி) எடுக்கவேண்டிய அவசியம் இல்லை. இதுவே நமக்கு இறுதியான சரீரம்” என்று தனது மனமே நிச்சயம் செய்து கொள்ளலாம்படியாக ஆகிவிடும் – என்கிறார்.

263. ப்ரதிகூலராகிறார் தேஹாத்மாபிமாநிகளும் ஸ்வதந்த்ரரும் அந்யசேஷபூதரும் உபாயாந்தர நிஷ்டரும் ஸ்வப்ரயோஜநபரரும்.

**அவதாரிகை** – ஆக, இப்படி ஸஹவாஸ விஷயமாக திநசர்யையிற் சொன்ன அநுகூலருடைய லக்ஷணத்தையும் தத்ஸஹவாஸ பலத்தையு மருளிச்செய்து, ததநந்தரம் ஸஹவாஸ நிவ்ருத்தி விஷயமாகச் சொன்ன ப்ரதிகூல ரின்னாரென்னுமிட மருளிச் செய்கிறார் மேல் (ப்ரதிகூலராகிறார்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் சூர்ணை 243ல் கூறப்பட்ட தினசர்யையில் அருளிச்செய்த பழகுவதற்கு ஏற்றவர்களான அநுகூலர்களின் இலக்கணம் என்ன என்பதையும், அவர்களுடன் பழகுவதால் ஏற்படும் நன்மையையும் அருளிச்செய்தார். அடுத்து அதே சூர்ணையில் பழகக்கூடாதவர்கள் என்று கூறப்பட்ட ப்ரதிகூலர் என்பவர்கள் யார் என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (ப்ரதிகூலராகிறார்) என்றது, ஜ்ஞாநாதி நாசகராகையாலே ஸஹவாஸ யோக்யரல்லராகக் கீழ்ச்சொன்ன ப்ரதிகூலராகிற ரென்றபடி. (தேஹாத்ம அபிமாநிகளாகிறார்) – இத்யாதி. (தேஹாத்ம அபிமாநிகளாகிறார்) காண்கிற தேஹத்துக் கவ்வருகு ஓராத்மா வுண்டென்றறியாதே தேஹத்திலே அஹம் புத்தியைப் பண்ணி அத்தையே யாத்மாவாக வபிமாநித்திருக்குமவர்கள். (ஸ்வதந்த்ரராகிறார்) - தேஹாதிரிக்தமான வாத்ம வஸ்துவை யறிந்திருக்கச்செய்தே அத்தைத் தனக்குரித்தாகவே நினைத்து ஒரு விஷயத்திலும் சேஷத்வத்துக்கிசையாதவர்கள். (அந்யசேஷபூதராகிறார்) -

சேஷத்வத்தை யிசைந்திருக்கச்செய்தே அத்தை அப்ராப்த விஷயங்களிலே விநியோகித்திருக்குமவர்கள். (உபாயாந்தர நிஷ்டராகிறார்) - ப்ராப்த சேஷிவிஷய சேஷத்வத்தை யுடையராய்வைத்தே தத்ப்ராப்த்யுபாயம் தச்சரணாரவிந்த சரணாகதி என்றிருக்கை யன்றிக்கே, கர்மாத்யுபாயங்களைப் பற்றி நிற்கிறவர்கள். (ஸ்வப்ரயோஜந பரராகிறார்) - ப்ராப்தசேஷி சரண கமலங்களை யுபாயமாகப் பற்றியிறுக்கச் செய்தே தாங்கள் பற்றின பற்றை யுபாயமாக நினைத்தும், உபேயமான கைங்கர்யத்தை ஸ்வபோக்யமாக நினைத்துமிருக்கிறவர்கள். இப்படி யிருக்கிறவிவர்கள், ப்ரணவத்தில் த்ருதீயாக்ஷரத்தாலே ஆத்மாவினுடைய தேஹாதிரிக்ததையும், ப்ரதமாக்ஷரத்தில் சதுர்த்தியாலே - பகவச்சேஷத்வத்தையும், மத்யமாக்ஷரத்தாலே - ததநந்யார்ஹத்வத்தையும், மத்யம பதத்தாலே அநந்ய சரணத்வத்தையும், சரம பதத்தாலே - அநந்ய போக்யத்வத்தையும் தர்சித்திருக்க மதிகாரிக்கு ப்ரதிகூலரிறே.

**விளக்கம்** - (ப்ரதிகூலராகிறார்) - ஞானம், பக்தி போன்றவற்றை அழிப்பவர்கள் என்பதால் பழகுவதற்கு ஏற்றவர்கள் அல்லர் என்று சூர்ணை 243ல் கூறப்பட்ட ப்ரதிகூலர்கள். (தேஹாத்ம அபிமாநிகளாகிறார்) – நாம் கண்களால் காணக் கூடியதான இந்தச் சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டதான ஓர் ஆத்மா உண்டு என்பதை அறியாமல், இந்தச் சரீரமே ஆத்மா என்று எண்ணியுள்ளவர்கள். (ஸ்வதந்த்ரராகிறார்) – சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஓர் ஆத்மா உண்டு என்பதை அறிந்துள்ளபோதிலும், "இந்த ஆத்மா எனக்கே உரியது, அது மற்ற யாருக்கும் வசப்படுவதை ஏற்க இயலாது", என்று இருப்பார்கள் (அந்யசேஷபூதராகிறார்) – ஆத்மாவானது ஒருவருக்கு அடிமைப்பட்டது என்று அறிந்துள்ளபோதிலும், அதனை ஸர்வேச்வரன் தவிர வேறு வஸ்துக்களுக்கு அடிமைப்பட்டது என்று எண்ணுபவர்கள். (உபாயாந்தர நிஷ்டராகிறார்) - "நம்மால் அடையத்தக்கவன் ஸர்வேச்வரன் மட்டுமே ஆவான், நாம் அவனுக்கு மட்டுமே அடிமை" என்று அறிந்துள்ளபோதிலும், அவனை அடைவதற்கு அவனுடைய திருவடிகளில் சரணாகதி செய்வது மட்டுமே என்று அறியாமல், கர்மம் போன்ற உபாயங்களில் ஈடுபட்டபடி உள்ளவர்கள். (ஸ்வப்ரயோஜந பரராகிறார்) – தங்களுடைய ஸ்வரூபத்திற்கு ஏற்ற எஜமானனாகிய ஸர்வேச்வரனின் திருவடிகளை மட்டுமே உபாயம் என்று உணர்ந்து, அதனையே சரணாகதி செய்தபோதிலும், தாங்கள் செய்த ப்ரபத்தி என்பதையே உபாயமாக நினைத்தும், புருஷார்த்தமாக உள்ள கைங்கர்யம் என்பது தங்களுக்கு இனிமையாக உள்ளது என்று எண்ணியும் உள்ளவர்கள். இப்படிப்பட்டவர்கள்

– "ஓம்" என்னும் ப்ரணவத்தில் உள்ள மூன்றாவது எழுத்தான – "ம" என்பதன் மூலம் ஆத்மாவானது சரீரத்தைக் காட்டிலும் வேறானது என்பதையும், முதல் எழுத்தான "அ" என்பதில் ஏறிக் கழிந்த நான்காம் வேற்றுமை மூலம் ஆத்மா ஸர்வேச்வரனுக்கு அடிமைப்பட்டது என்பதையும், நடு எழுத்தான "உ" என்பதன் மூலம் ஆத்மா ஸர்வேச்வரனை மட்டுமே உபாயமாகக் கொண்டது என்பதையும், இறுதியாக உள்ள "நாராயணாய" என்ற பதம் மூலம் ஆத்மாவானது ஸர்வேச்வரனால் மட்டுமே இனிமையாக அனுபவிக்கத்தக்கது என்பதையும் அறிந்தவர்களான அதிகாரிகளுக்கு முரண்பட்டவர்கள் ஆவர்.

264. இவர்களுக்கு உத்தேச்யரும் உபாயோபேயங்களும் பேதித்திருக்கும்.

**அவதாரிகை** - இந்த ப்ராதிகூல்யத்தை உபபாதிக்கைக்காக இவர்களுடைய விப்ரதிபத்தி நிபந்தநமான வுத்தேச்யாதி பேதங்களை யருளிச்செய்கிறார் மேல் (இவர்களுக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் இவர்கள் மெய்யான ஞானத்திற்கு விரோதமான தன்மை கொண்டவர்கள் என்பதை விளக்குவதற்காக, இவர்களுக்கு (ப்ரதிகூலர்களுக்கு) வேண்டப்பட்டவர்கள் போன்ற பலவும் வெவ்வேறு விதமாக உள்ளதை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (உத்தேச்யராகிறார்) ஆதரணீயர். அவர்களாகிறார் - இவ்விடத்தில் ஸ்வாபிமத ப்ரதரானவர்கள். (உபாயங்களாவன) - ஸ்வாபிமத புருஷார்த்த ஸாதநங்கள் . (உபேயங்களாவன) – ஸ்வாபிமத புருஷார்த்தங்கள். இவை (பேதித்திருக்கையாவது) – தத்தத்விப்ரதிபத்த்யநுகுணமாக வேறுபட்டிருக்கை.

**விளக்கம்** - (உத்தேச்யராகிறார்) – கடந்த சூர்ணையின் வ்யாக்யானத்தினுடைய இறுதியில் உரைக்கப்பட்ட ப்ரதிகூலர்களால் விரும்பப்படுபவர்கள். அவர்கள் விரும்பும் பலன்களை அளிப்பவர்கள் என்று கருத்து. (உபாயங்களாவன) - அவர்கள் விரும்பும் பலன்களை அளிக்கவல்ல சாதனங்கள். (உபேயங்களாவன) - அவர்கள் அடைய விரும்பும் பலன்கள். இவை அனைத்தும் அவரவர்களின் தன்மைகளுக்கு ஏற்ப வெவ்வேறாகக் காணப்படும்.

265. தேஹாத்மாபிமானிகளுக்கு உத்தேச்யர் தேஹவர்த்தகரான மநுஷ்யர்கள், உபாயம் அர்த்தம், உபேயம் ஐஹிகபோகம்; ஸ்வதந்த்ரர்க்கு உத்தேச்யர் ஸ்வர்க்காதி போகப்ரதர், உபாயம் கர்மாநுஷ்டாநம், உபேயம் ஸ்வர்க்காதி போகம்; அந்யசேஷபூதர்க்கு உத்தேச்யர் ப்ரஹ்மருத்ராதிகள், உபாயம் தத்ஸமாச்ரயணம், உபேயம் தத்ஸாயுஜ்யம்; உபாயாந்தர நிஷ்டர்க்கு உத்தேச்யன் தேவதாந்தர்யாமியான ஸர்வேச்வரன், உபாயம் கர்ம ஜ்ஞாந பக்திகள், உபேயம் பகவதநுபவம்; ஸ்வப்ரயோஜநபரர்க்கு உத்தேச்யன் நெஞ்சினால் நினைப்பான் யவனென்கிறவன், உபாயம் ஸ்வகீய ஸ்விகாரம், உபேயம் ஸ்வார்த்த கைங்கர்யம்.

**அவதாரிகை** - அது தன்னையடையே யுபபாதிக்கிறார் மேல் (தேஹாத்மாபிமாநிகளுக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் கூறியதை விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, தேஹத்தையே தானாக வபிமாநித்திருக்குமவர்களுக் குத்தேச்யர், தாரக போஷக போக்ய பதார்த்தங்களையிட்டு தேஹத்தை நன்றாக வளர்த்துக் கொண்டு போரும் மநுஷ்யர்; அபிமத ஸித்திக்குபாயம், ஸுவர்ணாதியான தநம்; அபிமதமான உபேயம், இஹலோகத்திலுண்டான ஸ்த்ர் யந்ந பாநாதி விஷயாநுபவம்.

**விளக்கம்** – (தேஹாத்மாபிமானிகளுக்கு உத்தேச்யர் தேஹவர்த்தகரான மநுஷ்யர்கள், உபாயம் அர்த்தம், உபேயம் ஐஹிகபோகம்) - சரீரத்தையே ஆத்மா என்று எண்ணியபடி உள்ளவர்களால் விரும்பப்படுகிறவர்கள் யார் என்றால் சரீரத்திற்குத் தாரகமாக உள்ள சோறு, போஷகமாக உள்ள தண்ணீர், இன்பமாக உள்ள வெற்றிலை போன்றவற்றை எப்போதும் எண்ணியபடியே தங்கள் சரீரத்தை நன்றாக வளர்ந்துக் கொள்பவர்கள் ஆவர். இவர்கள் விரும்பும் பலன்களை அளிக்கவல்லது எதுவென்றால் தங்கம் போன்ற செல்வங்கள் ஆகும். இவர்கள் அடைய விரும்பும் பேறு என்னவென்றால் இந்த உலகில் உள்ள பெண்கள், சோறு, தண்ணீர் போன்றவையே ஆகும்.

**வ்யாக்யானம்** - தேஹாதிரிக்தனாயிருப்பானொரு ஆத்மா உளன்; அவன்றான் ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வ யுக்தனாயிருக்க மென்கிற மாத்ரத்தை சாஸ்த்ர முகத்தாலே யறிந்து, தங்களை ஸ்வதந்த்ரராக நினைத்திருக்குமவர்களுக் குத்தேச்யர், அநுஷ்டித்த ஸாதநத்துக் கநுகுணமாக ஸ்வர்காத் யாமுஷ்மிக போகங்களைக் கொடுக்கும் அக்நீந்த்ராதி தேவதைகள்; உபாயம் "ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்காமோ யஜேத" இத்யாதிகளாலே சொல்லப்படுகிற பலாபிஸந்தி ஸஹிதமான யாகாதி கர்மாநுஷ்டாநம்; உபேயம், ஐஹிக போகாத் விலக்ஷணமான ஸ்வர்காத் யநுபவம்;

**விளக்கம்** – (ஸ்வதந்த்ரர்க்கு உத்தேச்யர் ஸ்வர்க்காதி போகப்ரதர், உபாயம் கர்மாநுஷ்டாநம், உபேயம் ஸ்வர்க்காதி போகம்) - இவர்கள் யார் என்றால், "சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டதான ஆத்மா என்று ஒருவன் உள்ளான். அவன் அறிபவனாகவும் செயல்களைச் செய்தபடி உள்ளவனாகவும், அனைத்தையும் அநுபவிப்பனாகவும் உள்ளான்", என்பதைச் சாஸ்த்ரங்களின் மூலம் தெளிவாக அறிந்துள்ளபோதிலும், தாங்கள் யாருக்கும் வசப்படாத ஸ்வதந்த்ரமானவர்கள் என்று எண்ணியிருப்பவர்கள் ஆவர். இவர்களுக்கு உத்தேச்யர் யார் என்றால் – செய்யப்பட்ட உபாயங்களுக்கு ஏற்ற பலன்களான ஸ்வர்க்கம் உள்ளிட்ட மேலுலக இன்பமான பயன்களை அளிக்கின்ற அக்னி, இந்திரன் போன்றவர்கள் ஆவர். இவர்களுக்கு ஏற்ற உபாயமாக உள்ளது எது என்றால், ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்காமோ யஜேத - ஸ்வர்க்கத்தை விரும்பும் ஒருவன் ஜ்யோதிஷ்டோமம் போன்ற யாகங்களை இயற்றவேண்டும் - என்னும் வாக்கியங்களால் கூறப்படும் பலனை எண்ணியபடி கூடிய யாகம் போன்றவற்றை இயற்றுதலே ஆகும். இவர்களுக்கு உபேயம் எது என்றால் – இந்த உலகில் உள்ள இன்பங்களைக் காட்டிலும் வேறுபட்டதான ஸ்வர்க்கம் போன்றவற்றின் அனுபவம் ஆகும்.

**வ்யாக்யானம்** - ஜகத்து தைவாதீநமென்னுமத்தை சாஸ்த்ரங்களிற் கேட்கையாலே சேஷத்வத்தை யிசைந்து வைத்தே அத்தை பரதேவதா பர்யந்தமாகப் போகவறியாதே, ஆபாத ப்ரதீதி ஸித்தங்களிலே, ஒன்றைப் பற்றி நிற்குமந்ய சேஷபூதர்க் குத்தேச்யர் ஜகத் ஸர்காதி கர்த்ருதயா பரத்வ புத்த்யர்ஹரான ப்ரஹ்ம ருத்ராதிகள்; உபேயம் துராராதரானவர்கள் பக்கல் பண்ணும் துஷ்கர ஸமாச்ரயணம்; உபேயம் அவர்களோடு ஸமாநபோகனாகையாகிற ஸாயுஜ்யம்; "ஸாயுஜ்யமுபயோரத்ர போக்தவ்யஸ்யா விசிஷ்டதா, ஸார்ஷ்டிதாதத்ர போகஸ்ய தாரதம்ய விஹீநதா" என்னக்கடவதிறே.

**விளக்கம்** – (அந்யசேஷபூதர்க்கு உத்தேச்யர் ப்ரஹ்மருத்ராதிகள், உபாயம் தத்ஸமாச்ரயணம், உபேயம் தத்ஸாயுஜ்யம்) - இந்த உலகமானது அனைத்து பலன்களையும் தேவர்களிடமிருந்தே பெறுகிறது என்பதை மட்டும் சாஸ்த்ரங்களிலிருந்து தெரிந்து கொண்டு, ஆத்மாவானது அப்படிப்பட்ட தேவர்களுக்கு அடிமைப்பட்டது என்று அறிகின்றனர். ஆயினும் அந்தத் தேவர்களின் அந்தராத்மாவாக உள்ள ஸர்வேச்வரனே, அந்தத் தேவர்கள் மூலம் தங்களுக்குப் பலன் கொடுக்கிறான் என்று அறிந்து கொள்ளாமல், அந்தத் தேவர்களையே தங்களுடைய தெய்வங்களாகக் கொள்பவர்கள் அந்யசேஷபூதர் ஆவர். இவர்களுக்கு உத்தேச்யர் யார் என்றால் – இந்த உலகைப் படைத்தல், அழித்தல் போன்ற செயல்களைச் செய்வதனால் அவர்களே பரம்பொருள் என்று பலராலும் தவறாக எண்ணத்தக்கவர்களாக உள்ள நான்முகன், சிவன் போன்றவர்கள் ஆவர். இவர்களுக்கு ஏற்ற உபாயம் எது என்றால் – எளிதாக ஆராதிக்க இயலாமல், மிகுந்த சிரமத்துடன் ஆராதிக்க வேண்டியவர்களான இந்தத் தேவர்கள் விஷயத்தில் செய்யும் ஆராதனம் ஆகும். இவர்களுக்கு ஏற்ற உபேயம் எதுவென்றால் - தேவர்களுக்கு ஒத்த இன்பத்தை அடைவதான ஸாயுஜ்யம் ஆகும். ஸாயுஜ்யமுபயோரத்ர போக்தவ்யஸ்யா விசிஷ்டதா, ஸார்ஷ்டிதாதத்ர போகஸ்ய தாரதம்ய விஹீநதா - மோக்ஷத்தில் ஜீவன் மற்றும் ஸர்வேச்வரன் ஆகிய இருவராலும் அனுபவிக்கப்படும் பொருள்கள் சமமாக உள்ளதே ஸாயுஜ்யம் எனப்படும்; அனுபவிக்கப்படும் பொருள்களை அனுபவிக்கும்போது ஏற்றத்தாழ்வு இன்றி இருப்பதே ஸார்ஷ்டிதா எனப்படும் – என்றது காண்க.

**வ்யாக்யானம்** - ஆத்மஸ்வரூபம் பகவதநந்யார்ஹ சேஷமென்னுமித்தை வேதாந்த முகேந அறிந்து வைத்தே அபிமத லாபத்துக் கவன்றன்னையே யுபாயமாகப் பரிக்ரஹிக்க வறியாதே உப்பாயாந்தர நிஷ்டரானவர்களுக்கு உத்தேச்யன் அக்நீந்த்ராதி தேவதைகளுக் கந்தர்யாமியான வீச்வரன். இது கர்மயோகத்துக்கு ஸ்வரஸம்; ஜ்ஞாநயோக பக்தியோகங்களுக்கு அஸாதாரண விக்ரஹ விஷயத்வமுண்டேயாகிலும் அவை கர்மாநுஷ்ட்டாநம் தளமாக வெழுந்திருந்தவையாகையாலும், கர்மாராத்யனான வவனே ஸ்வாஸாதரண விக்ரஹ விசிஷ்டவேஷத்தை நமக்கு ப்ரகாசிப்பித்ததானென்னும் நினைவு நடக்கையாலும், தேவதாந்தர்யாமியே யுத்தேச்யனாகச் சொல்லுகிறதென்று கொள்ள வேணும். உபாயம், தனித்தனி மோக்ஷ ஸாதநதயா சாஸ்த்ர ஸித்தங்களான கர்ம ஜ்ஞாந பக்தி யோகங்கள்; இவை தனித்தனி யுபாயமாமிடத்தில் ஒரொன்றுக்கு மற்றை யவையிரண்டும் அங்கமாயிருக்கும். "ஜ்ஞாந பக்தியந்விதம் கர்ம ஜநகாதிஷு த்ருச்யதே,

கர்ம பக்த்யந்விதம் ஜ்ஞாநம் ப்ராயேண பரதாதிஷு; கர்ம ஜ்ஞாநாந்விதா பக்தி: ப்ரஹ்லாத ப்ரமுகாச்ரய" என்னக்கடவதிறே. அன்றிக்கே (கர்மஜ்ஞாநபக்திகள்) என்கிற விடத்திலே, வேதாந்த மர்யாதையாலே கர்ம ஜ்ஞாநாநு க்ருஹீதையான பக்தியே யுபாயமாய், ததங்கதயா கர்மஜ்ஞாநங்களை யுபாயமென்று உபசரித்துச் சொல்லுகிறதாகவுமாம். உபேயம் "ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹப்ரஹ்மணா விபச்சிதா" இத்யாதி ச்ருதிகளாலும், "நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுகபாவைக லக்ஷணா பேஷஜம் பகவத் ப்ராப்திர் ஏகாந்தாத்யந்திகீ மதா" இத்யாதி ச்ருத் யுபப்ரும்ஹணங்களாலும் சொல்லப்படுகிற நிரதிசயாநந்தரூப பகவதநுபவம். இந்த ச்லோகத்தில் "பகவத் ப்ராப்தி:" என்கிறவிது பகவதநுபவமாகவிறே நம்மாசார்யர்கள் ஸ்வப்ரபந்தங்களிலே யருளிச்செய்தது.

**விளக்கம்** – (உபாயாந்தர நிஷ்டர்க்கு உத்தேச்யன் தேவதாந்தர்யாமியான ஸர்வேச்வரன், உபாயம் கர்ம ஜ்ஞாந பக்திகள், உபேயம் பகவதநுபவம்) - ஆத்மஸ்வரூபம் என்பது ஸர்வேச்வரனுக்கு மட்டுமே வசப்பட்டது என்பதை வேதாந்தங்கள் மூலம் அறிந்துள்ள போதிலும், தாங்கள் விரும்பும் பலனைப் பெறுவதற்கு அவனைப் பற்றவேண்டும் என்று அறியாமல், கர்மயோகம் போன்ற மற்ற உபாயங்களைப் பற்றுபவர்கள் உபாயாந்தர நிஷ்டர்கள் ஆவர். அவர்களுக்கு உத்தேச்யர் யார் என்றால் – அக்னி, இந்திரன் போன்ற அனைத்து தேவர்களுக்கும் அந்தர்யாமியாக உள்ள ஸர்வேச்வரனே ஆவான். இத்தகைய நிலை கர்மயோகத்தைக் கைக்கொண்டவர்களுக்குப் பொருந்தும். ஆனால் ஞானம் மற்றும் பக்தி யோகங்களைக் கைக்கொண்டவர்களுக்கு இது பொருந்தாதே என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். ஞானயோகம் மற்றும் பக்தியோகம் ஆகியவற்றிலும் ஸர்வேச்வரனின் திருமேனியே உபாஸிக்கத்தக்கது என்றுள்ளது; இப்படியாக உள்ள இவை இரண்டும் கர்மயோகத்தின் அடிப்படையில்தான் உள்ளன; ஆகவே கர்மங்கள் மூலம் ஆராதிக்கப்படும் ஸர்வேச்வரனே, தனக்கான விக்ரஹத்துடன் கூடிய தன்மையை நமக்கு வெளிப்படுத்தினான் என்ற எண்ணம், ஞானம் மற்றும் பக்தியோகங்களில் ஈடுபட்டவர்களுக்கு எழுவது இயல்பே ஆகும். எனவே இப்படிப்பட்டவர்களுக்கும், தேவர்களின் அந்தர்யாமியான ஸர்வேச்வரனே உத்தேச்யன் என்றே கொள்ளவேண்டும். இவர்களுக்கான உபாயம் எவை என்றால் – சாஸ்த்ரங்களில் தனித்தனியே உரைக்கப்படும் கர்மயோகம், ஞானயோகம் மற்றும் பக்தியோகம் ஆகியவையே ஆகும். இவை தனித்தனியே உபாயங்களாக நிற்கும்போது மற்ற இரண்டும் அதன்

அங்கங்களாகின்றன; கர்மயோகத்திற்கு மற்ற இரண்டும் அங்கங்கள் என்பது போன்று கொள்க. ஜ்ஞாந பக்தியந்விதம் கர்ம ஜநகாதிஷு த்ருச்யதே, கர்ம பக்த்யந்விதம் ஜ்ஞாநம் ப்ராயேண பரதாதிஷு; கர்ம ஜ்ஞாநாந்விதா பக்தி: ப்ரஹ்லாத ப்ரமுகாச்ரய – ஞானம் மற்றும் பக்தி ஆகியவற்றுடன் கூடிய கர்மயோகமே ஜனகர் போன்றவர்களிடம் காணப்படுகிறது; கர்மம் மற்றும் பக்தி ஆகியவற்றுடன் கூடிய ஞானயோகமே ஜடபரதன் போன்றவர்களிடம் காணப்படுகிறது; கர்மம் மற்றும் ஞானம் ஆகியவற்றுடன் கூடிய பக்தியோகமே ப்ரஹ்லாதன் போன்றவர்களிடம் காணப்படுகிறது – என்றது காண்க. அல்லது "கர்மஜ்ஞாநபக்திகள்" என்று சூர்ணையில் உள்ளதற்கு வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். அதாவது வேதாந்தங்களில் கூறப்பட்டது போன்று கர்மம் மற்றும் ஞானம் ஆகியவை மூலம் ஏற்படுகின்ற பக்தியோகம் என்பதே இவர்களுக்கு உபாயமாக உள்ளது; இதற்கு அங்கமாக உள்ள கர்மம் மற்றும் ஞானம் ஆகிய இரண்டும் இங்கு அமுக்கியமாக உரைக்கப்பட்டன எனலாம். இவர்களுக்கான உபேயம் எது என்றால் ஸர்வேச்வரனுடைய அனுபவமே ஆகும். இதனை மேலும் விவரிக்கிறார். தைத்திரீய உபநிஷத் - ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹப்ரஹ்மணா விபச்சிதா – அனைத்து திருக்கல்யாண குணங்களையும் பரமாத்மாவுடன் அனுபவிக்கிறான் - என்றுள்ள ச்ருதி வரிகள்; ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-5-59) - நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுகபாவைக லக்ஷணா பேஷஜம் பகவத் ப்ராப்திர் ஏகாந்தாத்யந்திகீ மதா – தனக்கு மேல் ஏதும் இல்லாத ஆனந்தத்தையே ஸ்வரூபமாக உடையதாகவும், சுகமாக உள்ளதையே வடிவமாகக் கொண்டதாகவும், துன்பங்கள் ஏதும் அற்றதாகவும், என்றும் உள்ளதாகவும் இருக்கும் பரமாத்மாவை அடைதலே ஸம்ஸாரம் என்ற நோய்க்கு மருந்து - எனப்படும் வரிகள் – இப்படியாக உள்ள ச்ருதி மற்றும் புராணங்களால் விவரிக்கப்படும் எல்லையற்ற ஆனந்தம் என்பதையே வடிவாக உடைய ஸர்வேச்வரனை அனுபவிப்பதே இவர்களுடைய உபேயமாக உள்ளது. மேலே கூறப்பட்ட ஸ்ரீவிஷ்ணுபுராண ச்லோகத்தில் உள்ள "பகவத் ப்ராப்தி:" என்ற பதத்திற்கு "ஸர்வேச்வரனுடைய அனுபவம்" என்றே நம்முடைய பூர்வர்கள் தங்களுடைய க்ரந்தங்களில் அருளிச்செய்தனர் அல்லவோ?

**வ்யாக்யானம்** - கர்மாத்யுபாயங்களில் துஷ்கரத்வ புத்தியாலே யவற்றை விட்டு ஸுகரத்வ புத்த்யா ப்ரபத்தியிலே யிழிந்த ஸ்வப்ரயோஜநபரர்க்கு உத்தேச்யன், "நெஞ்சினால் நினைப்பான் யவன்" என்கிறபடியே, ஆச்ரிதர் தங்கள் நெஞ்சாலே யாதொரு த்ரவ்யத்தைத் தனக்குத் திருமேனியாகக் கோலினார்கள், அத்தையே தனக்குத் திருமேனியாக

வபிமாநித்து அதிலே அப்ராக்ருத விக்ரஹத்தில் பண்ணுமாதரத்தைப் பண்ணிக்கொண்டு அத்யந்த ஸுலபனாயிருக்கிற அர்ச்சாவதாரமான ஸர்வேச்வரன்; உபாயம், அநிஷ்ட நிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்கு மவனை யுபாயமாக நினைத்து தான் பற்றின பற்று; உபேயம், தனக்குகப்பாகப் பண்ணும் கைங்கர்யம்.

**விளக்கம்** - ஸ்வப்ரயோஜநபரர்க்கு உத்தேச்யன் நெஞ்சினால் நினைப்பான் யவனென்கிறவன், உபாயம் ஸ்வகீய ஸ்விகாரம், உபேயம் ஸ்வார்த்த கைங்கர்யம் - கர்மயோகம் போன்ற மூன்றும் கைக்கொள்வதற்கு மிகவும் கடினம் என்று உணர்ந்து, அவற்றைக் கைவிட்டு, செய்வதற்கு மிகவும் சுலபம் என்று அறிந்ததால், ப்ரபத்தி உபாயத்தில் ஈடுபட்டவர்களே ஸ்வப்ரயோஜநபரர் ஆவர். இவர்கள் திருவாய்மொழி (3-6-9) - நெஞ்சினால் நினைப்பான் யவன் – என்பதற்கு ஏற்றபடி உள்ளவர்கள் ஆவர். இவர்களுக்கு ஏற்ற உத்தேச்யன் யார் என்றால் – தங்களுடைய மனதால் எந்த ஒரு வஸ்துவைத் தனது திருமேனியாக எண்ணி ஆராதிக்கிறார்களோ, அந்த வஸ்துவையே தனக்குத் திருமேனியாகக் கொண்டு, அந்த விக்ரஹத்தையே தனக்கு ஏற்றதாக ஆதரம் செய்து, ஆராதிக்க மிகவும் சுலபமாக உள்ள அர்ச்சாவதார ஸர்வேச்வரன் ஆவான். இவர்களுக்கான உபாயம் எது என்றால் - தங்களுக்கு விருப்பம் அல்லாதவற்றை நீக்கியும், விருப்பம் உள்ளதை அடையும்படியும் செய்விக்கின்ற உபாயம் என்று தாங்கள் எண்ணி அடைந்த பற்றுதலே ஆகும். இவர்களுக்கான உபேயம் எது என்றால் – தங்களுடைய உகப்புக்காகச் செய்யப்படும் கைங்கர்யமே ஆகும்.

266. முதல் சொன்ன மூவரும் நிக்ரஹித்துக்கிலக்கு. மற்றை இருவரும் அநுக்ரஹத்துக்கிலக்கு.

**அவதாரிகை** - ஆக, உத்தேச்யாதி பேதத்தாலே யிவர்களுக்குண்டான அந்யோந்ய விசேஷத்தை தர்சிப்பித்தார் கீழ்; இவர்களில் பகவத்விஷயத்தோடு ஒட்டற நின்ற மூவர்க்கும் பகவத்விஷயத்தையே பற்றி நின்ற இருவருக்குமுண்டான விசேஷத்தை தர்சிப்பிக்கிறார் மேல் (முதல் சொன்ன மூவரும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – உத்தேச்யன், உபாயம் மற்றும் உபேயம் ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகள் காரணமாகப் பலவிதமான அதிகாரிகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளைக் கடந்த

சூர்ணையில் அருளிச்செய்தார். மேலே கூறப்பட்ட ஐந்துவிதமான அதிகாரிகளில், பகவத் விஷயத்துடன் சிறிதும் ஸம்பந்தம் இல்லாமல் உள்ள மூவருக்கும் (தேஹமே ஆத்மா என்று உள்ளவர்கள், தன்னைச் சுதந்திரமானவர்கள் என்று எண்ணுபவர்கள், மற்ற தேவதைகளுக்கு வசப்பட்டவர்கள்), பகவத் விஷயத்தை மட்டுமே பற்றி நிற்கும் இருவருக்கும் (கர்மயோகம் போன்ற மற்ற உபாயங்களைக் கைக்கொள்பவர்கள், ப்ரபத்தி உபாயத்தில் ஈடுபட்டவர்கள்) இடையே உள்ள வேறுபாட்டை அடுத்து அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, தேஹாத்மாபிமாநமும் ஸ்வஸ்வாதந்த்ர்யமும் அந்யசேஷத்வமுமாகிற விவற்றுக்கு அவ்வருகொன் றறியாமையாலே, பகவதந்வயகந்த ரஹிதரான மூவரும், “க்ஷிபாமி” என்கிற பகவந் நிக்ரஹத்துக்குக்கு விஷயம்; ப்ரக்ருதே: பரமாய் பகவதநந்யார்ஹசேஷமான ஸ்வரூபத்தை யறிந்து பகவதநுபவ கைங்கர்யங்களைப் புருஷார்த்தமாகக் கொள்ளுகையாலே அநந்யப்ரயோஜநராய், கர்மஜ்ஞாநாதிகளான வுபாயாந்தரங்களிலும் ப்ரபதநத்திலும் நிஷ்டரான விருவரும் “ததாமி”, “மோக்ஷயிஷ்யாமி” என்கிற பகவதநுக்ரஹத்துக்கு விஷயமென்கை.

**விளக்கம்** - சரீரமே ஆத்மா என்ற எண்ணம், தாங்கள் யாருக்கும் வசப்பட்டவர் அல்லவர் என்பதால் சுதந்திரமானவர்கள் என்ற எண்ணம்; மற்ற தேவதைகளுக்கு அடிமைப்பட்டவர்கள் என்ற எண்ணம் ஆகிய மூன்றைத் தவிர வேறு எதனையும் அறியாமல் சிலர் இருப்பர். இப்படிப்பட்டவர்கள் ஸர்வேச்வரனுடன் எந்தவிதமான ஸம்பந்தமும் இல்லாதவர்கள் ஆவர். இப்படிப்பட்ட மூன்று பிரிவினரும், கீதை (16-19) – க்ஷிபாமி – தீய பிறவிகளில் தள்ளுகிறேன் - என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனின் தண்டனைக்கு இலக்காக இருப்பார்கள். அறிவில்லாத ப்ரக்ருதியின் மாற்றத்தால் எற்படும் சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டதும், ஸர்வேச்வரனுக்கு மட்டுமே வசப்பட்டதும் ஆகிய ஆத்மாவின் ஸ்வரூபத்தை இன்னது என்று உணர்ந்து, ஸர்வேச்வரனுடைய அனுபவம் மற்றும் கைங்கர்யம் ஆகியவற்றையே புருஷார்த்தமாகக் கொள்வதால், மற்ற எந்தப் பயனையும் கருதாமல் உள்ளவர்களாக கர்மம், ஞானம், பக்தி போன்ற மற்ற உபாயங்களிலும், ப்ரபத்தியிலும் ஈடுபட்டவர்களான இருவகை அதிகாரிகள் உள்ளனர். இவர்கள் கீதை (10-10) – ததாமி - பக்தியோகத்தை அளிக்கிறேன் - என்றும், கீதை (18-

66) – மோக்ஷயிஷ்யாமி - மோக்ஷத்தை அளிக்கிறேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனின் அனுக்ரஹத்துக்கு இலக்காக உள்ளவர்கள் ஆவர்.

267. மூவருடையவும் கர்மமநுபவ விநாச்யம், நாலாமதிகாரிக்கு ப்ராயச்சித்த விநாச்யம்; அஞ்சாமதிகாரிக்குப் புருஷகார விநாச்யம்.

**அவதாரிகை** - இவர்களுக்கு கர்மவிநாச ஹேதுபேதத்தால் வந்த விசேஷங்களை தர்சிப்பிக்கிறார் மேல் (மூவருடையவும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இந்த ஐந்துவிதமான அதிகாரிகளுக்கு உள்ள கர்மவினைகள் அழிவதற்கான காரணங்களில் வேறுபாடுகள் உண்டு. அத்தகைய வேறுபாடுகள் என்ன என்பதைக் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நிக்ரஹத்துக்கிலக்கான மூவருடையவும் அநாதிகாலார்ஜிதமான ஸதஸத் கர்மம், "அவச்ய மநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம் நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி சதைரபி" என்கிறபடியே – அவச்யம் தத்பலமுள்ளது அநுபவித்தாலன்றி நசியாமையாலே (அநுபவிநாச்யம்) என்கிறார். அநுக்ரஹத்துக் கிலக்காகச் சொன்ன விருவரிலும் வைத்துக்கொண்டு, உபாயாந்தர நிஷ்டனான நாலாமதிகாரிக்கு, கர்மஜ்ஞாநபக்திகளாகிற வுபாய விசேஷங்களிலொன்றை யநுஷ்டித்தால் அத்தை ப்ராயச்சித்த ஸ்தாநீயமாக்கி ஈச்வரன் ஸர்வகர்மங்களையும் கழிக்கையாலே, கர்மம் ப்ராயச்சித்த விநாச்யமென்கிறார். ப்ரபதந நிஷ்டனான அஞ்சாமதிகாரிக்கு, ஆச்ரயண வேளையிலே யநாதிகால க்ருதாபராதபீதனாய் அவற்றையடைய ஈச்வரன் பொறுக்கைக் குறுப்பாகப் பிராட்டியை புருஷகாரமாக முன்னிட்டாச்ரயிக்கையாலே அவளுக்காக விவனுடைய வபராதத்தை யெல்லா மவன் பொறுத்தங்கீகரித்து இவனுடைய அகில கர்மங்களையும் தள்ளிப் பொகடுகையாலே புருஷகார விநாச்யமென்கிறார்.

**விளக்கம்** - ஸர்வேச்வரனின் தண்டனைக்கு இலக்கான மூன்றுவிதமான அதிகாரிகளுடைய (சரீரமே ஆத்மா என்று உள்ளவர், தங்களைச் சுதந்திரமானவர் என்று எண்ணுபவர், மற்ற தேவதைகளுக்கு வசப்பட்டவர்) எல்லையற்ற காலமாகச்

சேர்க்கப்பட்ட நல்வினைகள் மற்றும் தீவினைகள் ஆகிய இரண்டும், அவச்ய மநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம் நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி சதைரபி - முன்பு செய்யப்பட்ட பாவ புண்ணியங்கள் என்ற கர்மங்களின் பலன்களை அனுபவித்தே தீரவேண்டும்; நூறு கோடி கல்ப காலங்கள் ஆனாலும் கர்மங்கள் அனுபவிக்காமல் கழியாது - என்ற விதிப்படி, அவற்றின் பலன்களை அனுபவிக்காமல் கர்மங்கள் கழியாது என்பதால் "அனுபவித்தே கழியவேண்டும்" என்று அருளிச்செய்தார். ஸர்வேச்வரனின் அனுக்ரஹத்திற்கு இலக்கான இருவிதமான அதிகாரிகளில், கர்ம ஞான பக்தி உபாயங்களில் இழிகின்ற உபாயாந்தர நிஷ்டன் (மற்ற உபாயங்களில் ஈடுபட்டவன்) கர்மயோகம், ஞானயோகம் மற்றும் பக்தியோகம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் நிலை நிற்கிறான்; அப்போது அதனையே அவனுடைய வினைகளுக்கான பிராயச்சித்தம் என்று கொண்டு, ஸர்வேச்வரன் அனைத்து கர்மங்களையும் போக்கிவிடுகிறான்; ஆகவே இப்படிப்பட்ட அதிகாரிக்கு கர்மங்கள் பிராயச்சித்தம் மூலம் அழிவதாக உரைத்தார். ப்ரபத்தியில் ஈடுபட்டு சரணாகதி செய்த ஒருவன் ஸர்வேச்வரனைப் பற்றும்போது எல்லையற்ற காலமாக தான் செய்தபடி உள்ள கர்மவினைகளை எண்ணி அச்சம் கொள்கிறான்; அவற்றைச் ஸர்வேச்வரன் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக பெரியபிராட்டியைத் தனக்குப் புருஷகாரமாகக் (சிபாரிசு செய்பவளாக) கொள்கிறான்; இதனைக் கண்ணுற்ற ஸர்வேச்வரன் பெரியபிராட்டிக்காக, இவன் செய்த அபராதங்கள் அனைத்தையும் பொறுத்துக் கொள்கிறான்; இவனை ஏற்றுக்கொண்டு, இவனுடைய நல்வினை மற்றும் தீவினைகளைப் போக்குகிறான்; எனவே இந்த அதிகாரியின் கர்மங்கள் புருஷகாரத்தால் அழியும் என்றார்.

268. உபாயம் ஸ்வீகாரகாலத்தில் புருஷஸாபேக்ஷமுமாய் புருஷகாரஸாபேக்ஷமுமாய் இருக்கும்; கார்ய காலத்தில் உபய நிரபேக்ஷமாயிருக்கும்.

**அவதாரிகை** - இப்படி புருஷகார ஸாபேக்ஷமென்னில் உபாயத்தினுடைய நைரபேக்ஷ்ய ஹாநி வாராதோ வென்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார் மேல் (உபாயம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் ஐந்தாவது விதமாக உள்ள அதிகாரிக்குப் புருஷகாரம் மூலமே கர்மங்கள் அழியும் என்றால், "உபாயமாக தானே உள்ள ஸர்வேச்வரன் மற்ற எந்த ஒரு

உபாயத்தையும் எதிர்பார்க்கமாட்டான்” என்றுள்ள ஸித்தாந்தத்துக்குப் பங்கம் ஏற்படும் அல்லவோ என்ற சந்தேகத்திற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது ஸஹாயாந்தர ஸம்ஸர்காஸஹமான ஸித்தோபாயம், சரணவரண ரூப ஸ்வீகார காலத்தில் ஸ்வீகர்த்தாவான புருஷனையும், ஸ்வீகரிப்பிக்கும் புருஷனையும், ஸ்வீகரிப்பிக்கும் புருஷகாரத்தையும் அபேக்ஷித்திருக்கும்; ஸ்வீக்ருதனான தான் இவனுக் கநிஷ்ட நிவ்ருத்தி பூர்வக இஷ்ட ப்ராப்தியைப் பண்ணுகையாகிற கார்யகாலத்தில், புருஷனும் புருஷகாரமுமாகிற வுபயத்தையு மபேக்ஷியாதே தானே செய்து தலைக்கட்டுமென்கை. கார்யகாலத்தில் ஸஹகாரி ஸாபேக்ஷத்வமுண்டாகுமிறே உபாயத்தினுடைய நைரபேக்ஷ்யத்துக்கு ஹாநிவருவதென்று கருத்து.

**விளக்கம்** - வேறு எந்த ஒரு உபாயத்தின் துணையையும் எதிர்பாராமல் உள்ள ஸர்வேச்வரன், தன்னை ஒருவன் உபாயமாகப் பற்றும் காலத்தில் ப்ரபத்தி செய்த புருஷனையும், அவனைத் தன்னிடம் கொண்டு சேர்த்த புருஷகாரத்தையும் எதிர்பார்த்தபடியே உள்ளான். ஸர்வேச்வரனையே தஞ்சம் என்று அடைந்த பின்னர், அந்த ப்ரபன்னனின் விருப்பங்களை நிறைவேற்றுதல், விரும்பாதவற்றை விலக்குதல் போன்றவற்றைச் செய்து கொடுக்கிறான்; இவ்விதம் செய்யும்போது அந்தப் புருஷனையும், புருஷகாரத்தையும் எதிர்பார்க்காமல், தானாகவே வலிய நின்று அந்தச் செயல்களை முடித்துக் கொடுக்கிறான். ப்ரபன்னன் ஒருவனின் செயல்களை முடித்துக் கொடுக்கும்போது மற்றொரு துணையை எதிர்பார்த்தால் அல்லவோ “ஸர்வேச்வரன் வேறு உபாயங்களை எதிர்பாராமல், தானே உபாயமாக உள்ளான்” என்ற விதிக்குப் பங்கம் ஏற்படும் என்று கருத்து.

269. ஸ்வப்ரயோஜநபரரெல்லாரையும் ப்ரதிகூலராக நினைக்கலாமோ வென்னில்?

**அவதாரிகை** - ஸ்வப்ரயோஜநபரரை (ப்ரதிகூலர்) என்று அவிசேஷேண வருளிச் செய்தாரிறே; இந்த ஸ்வப்ரயோஜநபரதை அநுகூலாக்ரேஸரரான ஆழ்வார்கள் பக்கலிலும் தோற்றியிருக்கையாலே தந்நிபந்தநமான ப்ரதிகூல்யம் அவர்கள் பக்கல் வாராதபடி பரிஹரிக்கவேணுமென்று திருவுள்ளம் பற்றி, தத்விஷய சங்கையை யநுவதிக்கிறார் (ஸ்வப்ரயோஜந பரரெல்லாரையும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – தன்னுடைய ஆனந்தத்தை விரும்பும் அனைவரையும் சூர்ணை 263ல் ப்ரதிகூலர் என்று உரைத்தார் அல்லவோ? ஆனால் அநுகூலர்களின் தலைவர்கள் என்றே போற்றப்படும் ஆழ்வார்களிடம், இது போன்று தங்களது ஆனந்தத்தை விரும்பியுள்ள தன்மை ஒரு சில இடங்களில் வெளிப்படுகிறது என்பதைக் காணலாம். இதன் காரணமாக அவர்கள் பக்கம் எந்தவிதமான விரோதமும் ஏற்பட்டுவிடாதபடி நீக்கவேண்டும் என்பதைத் தனது திருவுள்ளத்தில் பற்றினார். ஆகவே அது தொடர்பான ஒரு கேள்வியை இந்தச் சூர்ணையில் எழுப்பிக்கொண்டு, பின்வரும் சூர்ணைகளில் சமாதானம் உரைக்கிறார்.

**வ்யாக்யானம் -** "நமக்கே நலமாதலில்" என்றும், "நாம் கண்டுகந்து கூத்தாட ஞாலத்தூடே நடவாயே" என்றும், "கண்டு நானுன்னை யுகக்க" என்றும் இத்யாதி வசநங்களாலும், மடலெடுக்கை முதலான ப்ரவ்ருத்திகளாலும் ஆழ்வார்களுக்கு மிந்த ஸ்வப்ரயோஜந பரத்வ முண்டாகத் தோற்றாநின்றதிறே; ஆனபின்பு, ஸ்வப்ரயோஜநபர ரெல்லாரையும் ப்ரதிகூலரென்று சொல்லப் பார்க்கில் ஆழ்வார்களையு மப்படி நினைக்கவேண்டி வாராதோ வென்று சங்கைக் கபிப்ராயம்.

**விளக்கம்** – பெரியதிருமொழி (9-3-9) - நமக்கே நலமாதலில் – என்றும், திருவாய்மொழி (6-9-2) – நாம் கண்டுகந்து கூத்தாட ஞாலத்தூடே நடவாயே - என்றும், பெரியாழ்வார் திருமொழி (2-7-9) – கண்டு நானுன்னை யுகக்க – என்றும் காணப்படும் வரிகள் மற்றும் திருமடல்கள் போன்ற பிரபந்தங்கள் ஆகியவற்றின் மூலம் ஆழ்வார்களும் தங்களுடைய ஆனந்தத்தை விரும்பும் தன்மை கொண்டவர்களாக உள்ளனர் என்றாகிறது அல்லவோ? அப்படி உள்ளபோது, தங்கள் பயனை விரும்பும் அனைவரையும் ப்ரதிகூலர் என்று உரைத்தால், ஆழ்வார்களையும் ப்ரதிகூலர்கள் என்று எண்ணும்படி அல்லவோ ஆகிறது? (இதற்கான விடையை அடுத்து அருளிச்செய்கிறார்)

270. இங்கு ஸ்வப்ரயோஜந மென்கிறது ஆச்ரயதோஷ ஜந்யமானத்தை.

**அவதாரிகை –** அத்தைப் பரிஹரிக்கிறார் (இங்கு) என்று தொடங்கி.

**விளக்கம் -** கடந்த சூர்ணையில் எழுந்த கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, ப்ரதிகூலமாகச் சொல்லுகிற இவ்விடத்தில், ஸ்வப்ரயோஜநமென்கிறது, அநுபவ கைங்கர்யங்களுக்காச்ரயமான சேதநனுடைய அவித்யாதி தோஷத்தால் வந்த ஸ்வப்ரயோஜநத்தை என்கை. இத்தை (ஆச்ரயதோஷஜந்யம்) என்றொதுக்குகையாலே, ஆழ்வார்களுடைய ஸ்வப்ரயோஜநம் விஷயதோஷ ஜந்யமென்று கருத்து. இது தன்னை (விஷயதோஷத்தாலே வருமவை) என்கிற வாக்யத்திலே வ்யக்தமாக வருளிச்செய்கிறாரிறே.

**விளக்கம் -** ப்ரதிகூலர்களின் வகைகள் குறித்து உரைக்கும்போது “ஸ்வயம் ப்ரயோஜனம்” என்று கூறப்பட்டது என்னவென்றால் (சூர்ணை263ல் காண்க) – ஸர்வேச்வரனின் கைங்கர்யம் மற்றும் அனுபவம் ஆகியவை ஏற்படுகின்ற ஜீவனுக்கு, அவனது அறியாமை காரணமாக அவற்றில் தன்னுடைய ஆனந்தத்தை விரும்பி நிற்கும் நிலை ஆகும். இதனை “ஆச்ரய = தனது அறியாமையால் உண்டான தோஷம் காரணமாக ஏற்படுவது” என்று இந்தச் சூர்ணையில் விளக்குகிறார். ஆனால் ஆழ்வார்களின் ஸ்வப்ரயோஜனம் என்பது ஸர்வேச்வரனின் திருமேனி அழகு, குணங்கள் போன்றவற்றால் ஏற்படுவதாகும். இதனை சூர்ணை 272ல் விளக்கக் காணலாம்

271. ஆகையாலே தோஷமில்லை.

**அவதாரிகை –** இவ்வர்த்தத்தை நிகமிக்கிறார் (ஆகையாலே தோஷமில்லை) என்று தொடங்கி.

**விளக்கம் –** கடந்த சூர்ணையில் அருளிச்செய்தவற்றை முடிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ப்ராதிகூல்ய ஹேதுவாகச் சொல்லப்பட்ட ஸ்வப்ரயோஜநம் ஆச்ரயதோஷ ஜந்யமாய், ஆழ்வார்கள் பக்கல் ஸ்வப்ரயோஜநம் விஷயதோஷ ஜந்யமா யிருக்கையாலே, அந்த ப்ராதிகூல்யம் இவர்கள் பக்கலிலும் வருமென்கிற தோஷமில்லை யென்கை. அன்றிக்கே, ஸ்வப்ரயோஜநபரரை ஸாமாந்யேந ப்ரதிகூலரென்று சொல்லுமளவில், அநுகூலரான ஆழ்வார்கள் பக்கலிலுமிந்த ஸ்வப்ரயோஜநபரதை தோற்றுகையாலே அவர்களையும் ப்ராதிகூலரென்று நினைக்கவேண்டி வருகையால், ஸ்வப்ரயோஜநபரரை ப்ரதிகூலரென்கை தோஷமன்றோவென்று நினைத்துப் பண்ணுகிற சங்கையை யநுவதிக்கிறார் (ஸ்வப்ரயோஜநபர ரெல்லாரையும் ப்ரதிகூலராக நினைக்கலாமோ வென்னில்) என்று. அத்தைப் பரிஹரிக்கிறார் (இங்கு) என்று தொடங்கி. அர்த்தம் பூர்வவத். நிகமிக்கிறார் (ஆகையாலே தோஷமில்லை) என்று. (ஆகையாலே) என்கிற விதுக்கர்த்தம் பூர்வவத். (தோஷமில்லை) என்றது, ஸ்வப்ரயோஜநபரரை ப்ரதிகூலரென்று சொன்னதில் தோஷமில்லை யென்கை - என்று இங்ஙனே யோஜிக்கவுமாம்.

**விளக்கம்** - ஆகவே ப்ரதிகூலராக ஒருவர் உள்ளார் என்பதற்குக் காரணமாக உரைக்கப்பட்ட ஸ்வப்ரயோஜனம் என்பது ஜீவனுடைய தோஷம் காரணமாக ஏற்படுவதாலும், ஆழ்வார்களிடம் காணப்படும் ஸ்வப்ரயோஜனம் என்பது பகவத் விஷயத்தின் இனிமை என்ற தோஷம் காரணமாக எற்படுவதாலும், ஆழ்வார்களிடம் உள்ள ஸ்வப்ரயோஜநம் என்பதற்குத் தோஷம் இல்லை என்று கருத்து. அல்லது வேறு விதமாகவும் விளக்கம் கூறலாம். “தங்களுடைய ஆனந்தத்தை விரும்புகின்ற அனைவரையும் ப்ரதிகூலர்கள்” என்று கூறுவதாக வைத்துக்கெள்வோம். இவ்விதம் கொண்டால், அநுகூலர்களாக உள்ள ஆழ்வார்களும் ஒரு சில இடங்களில் தங்களுடைய ஆனந்தத்தை விரும்புவது போன்று அருளிச்செய்துள்ளதைக் காணமுடியும் என்பதால், அவர்களையும் ப்ரதிகூலர்கள் என்றே எண்ணவேண்டும் என்றாகிறது அல்லவோ; இதனைப் போக்கவே சூர்ணை269ல் ஸ்வப்ரயோஜன- என்று கேள்வி எழுப்பிக்கொண்டல் அநுகூலர்களாக உல்ல அழ்வார்களும் ஒரு சில இடங்களில் தங்களுடைய ஆனந்தத்தை விரும்புவது போன்று அருளிச்செய்துள்ளதை காணமுடியும் என்பதால் அவர்களையும் ப்ரதி கூலர்கள் என்றே எண்ணவேண்டும் என்றாகிறது; இதனைப்போக்கவே சூர்ணை 269ல் – ஸ்வப்ரயோஜன பரரெல்லாரையும் ப்ரதிகூலராக நினைக்கலாமோ வென்னில் - என்று கேள்வி எழுப்பிக்கொண்டார். அதற்கான விடையை

சூர்ணை 270ல் – இங்கு ஸ்வப்ரயோஜந மென்கிறது ஆச்ரயதோஷ ஜந்யமானத்தை - என்பதில் உரைத்தார். இப்போது அந்த விஷயம் குறித்த கேள்வி பதில் பகுதியை, “ஆகையால்” என்று கூறி முடிக்கிறார். “ஆகையால்” என்பதற்கு முன்பு கூறப்பட்ட பொருளையே கொள்ளவேண்டும். “தோஷம் இல்லை” என்றால் தனது இன்பத்தில் நாட்டம் உள்ளவர்களை ப்ரதிகூலர் என்று உரைப்பதில் தவறு ஏதும் இல்லை என்று பொருள்.

272. விஷய தோஷத்தாலே வருமவையெல்லாம் துஸ்த்யஜமாயிறேயிருப்பது.

**அவதாரிகை** - இப்படி ஆச்ரயதோஷ ஜந்யமன்றிக்கே விஷயதோஷ ஜந்யமானாலும் ஸ்வரூபவிருத்தமானது த்யாஜ்யமன்றோ வென்ன வருளிச்செய்கிறார் மேல் (விஷய தோஷத்தாலே) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாக ஜீவனின் குற்றத்தால் வராமல், ஸர்வேச்வரனிடம் உள்ள இன்பம் என்பதால் வந்தபோதிலும், ஆத்ம ஸ்வரூபத்திற்கு விரோதமாக உள்ள “தனக்கு ஏற்படும் ஆனந்தத்தை விரும்புதல்” என்பது விலக்க வேண்டியது அல்லவோ என்ற சந்தேகத்திற்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அநுபவ விஷயமான வவனுடைய வயிரவுருக்காய் ஆண்களையும் பெண்ணுடை யுடுத்தும்படியான விக்ரஹ வைலக்ஷண்யமாகிற தோஷத்தாலே வருகிற ஸ்வப்ரயோஜநபரதை, தத்தேதுவான ப்ராவண்யம், தத்ஸித்த்யர்த்தமான வ்யாபாரங்களாகிற விவையெல்லாம் ஸ்வரூபவிருத்தமென்று விடப்பார்த்தாலும் விட வரிதாயிறே யிருப்பதென்கை. (விஷய தோஷத்தாலே வருமது) என்று பாடமானபோது, ஸ்வப்ரயோஜந மாத்ரத்தையே சொல்லுகிறது.

**விளக்கம்** - “விஷயதோஷத்தால்” என்பது என்ன? அனுபவிக்கப்படும் ஸர்வேச்வரனுடைய மிகவும் சிறந்ததாக உள்ளதும், இதனைக் காண்கிற ஆண்களையும் நாயகி பாவத்தில் பெண் உடை அணிந்து கொள்ளும்படிச் செய்வதும் ஆகிய ஸர்வேச்வரனின் திருமேனி என்பது சிறப்புடன் இருத்தல் என்ற தன்மை கொண்டுள்ளது; இதுவே ஸ்வப்ரயோஜன நிலையை அடையச் செய்யும் குற்றத்தைப் புரிகிறது; இதனால் அவன் மீது ஆசை, அந்த

ஆசை நிறைவேறும் பொருட்டு நோன்பு நோற்பது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள். இதனையே இங்கு உரைக்கிறார். இவை ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு முரணாக உள்ளது என்ற போதிலும், விடுவதற்கு மிகவும் அரிதாக உள்ளது என்று கருத்து. சூர்ணையில் உள்ள "விஷயதோஷத்தால் வருமவை" என்பதற்குப் பதிலாக "விஷயதோஷத்தால் வருமது" என்று சிலர் படிப்பர்; இவ்விதம் கொண்டால் "ஸ்வப்ரயோஜனம்" என்பது குறித்து மட்டுமே கூறப்பட்டது என்று கொள்க.

273. "ஊமையரோடு செவிடர் வார்த்தை", " கதமந்யதிச்சதி"

**அவதாரிகை** - விஷயதோஷத்தால் வருமதன் துஸ்த்யஜத்வத்தில் ப்ரமாணங்காட்டுகிறார் மேல் ("ஊமையரோடு செவிடர் வார்த்தை", "கதமந்யதிச்சதி") என்று.

**விளக்கம்** – ஸர்வேச்வரனின் மேன்மை என்ற குற்றத்தால் ஏற்படும் ஸ்வப்ரயோஜனம் என்பது கைவிடுவதற்கு மிகவும் அரியது என்பதற்கு ப்ரமாணங்கள் காட்டுகிறார்.

**வ்யாக்யானம்** - "மற்றிருந்தீர்கட்கு" என்று தொடங்கி "அத்தலையாலே பேறென் றுறுதி யிட்டால் அவன் வருமளவு க்ரமப்ராப்தி பார்த்தாறியிருக்க வேணுங்காண், நீ இங்ஙனே பதறலாகாது காண்" என்ற தாய்மாரைக் குறித்து, "இவ்விஷயத்தில் ப்ராவண்ய மின்றிக்கே என்னுடைய நிலைக்கு வேறாயிருந்த வுங்களுக்கு எனக் கோடுகிற தசையறியப்போகாது, அவன் அவன் என்று வாய்புலற்றும்படி ஸ்ரீய:பதி விஷயமான ப்ராவண்யத்தை மறுபாடுருவ வுடையேனாய், இப்படி யவனை யொழியச் செல்லாமை யுண்டானா லவனிருந்த விடத்தே சென்று கிட்டுகை ப்ராப்தமாயிருக்க, அதுக்குக் கால் நடைதாராதபடி யிருக்கிற வெனக்கு. நானவனோடே சென்று சேராமைக் குறுப்பாக நீங்கள் சொல்லும் வார்த்தை கேட்கைக்குப் பரிகரமில்லாத செவிடரோடே சொல்லுகைக்குப் பரிகரமில்லாத ஊமைகள் வார்த்தை சொன்னாப்போலே யிருப்பதொன்று" என்று ஆண்டாளருளிச் செய்கையாலும்;

**விளக்கம்** – நாச்சியார் திருமொழி (12-1) – மற்றிருந்தீர்கட்கு - என்ற பாசுரத்தைக் காண்பிக்கிறார். அதாவது தாய்மார்கள் ஸர்வேச்வரனை எண்ணியபடி உருகும் இவளிடம், "ஸர்வேச்வரன் மூலம் மட்டுமே நமக்கு பேறு கிட்டும் என்ற நீ உறுதியாக

நம்புபவளாக இருந்தால், அவன் வரும்வரை நீ காத்திருக்கவேண்டும். இவ்விதம் பதற்றம் அடைதல்கூடாது”, என்றனர். இதனைக் கேட்ட அவள், “ஸர்வேச்வரன் விஷயத்தில் எனக்கு இருகின்ற அளவிற்கு ஆசையில்லாமல், என்னுடைய நிலையில் இருந்து மாறுபட்ட நிலையில் இருக்கும் உங்களால், என்னுடைய நிலையைச் சரியாக அறிய இயலாது. ‘அவன் அவன்’ என்று எப்போதும் பிதற்றியபடி, பெரியபிராட்டியின் நாயகனான ஸர்வேச்வரன் மீது உள்ள ஈடுபாட்டை நான் மாற்ற இயலாமல் பரிபூர்ணமாகக் கொண்டவளாக உள்ளேன்; இப்படி அவனை விட்டு வாழ இயலாத நிலை ஏற்பட்ட பின்னர், அவன் உள்ள இடத்திற்குச் செல்வதே எனக்கு ஏற்புடையதாகும்; ஆனால் அந்தச் செயலைச் செய்வதற்கான சக்தி இன்றி நான் உள்ளேன்; இப்படியாக உள்ள என்னிடம், நான் அவனைச் சென்று அடையாமல் இருக்கும்படியான சொற்களை நீங்கள் உரைக்கிறீர்களே! இந்தச் சொற்கள் அனைத்தும் கேட்கும் சக்தி இல்லாத செவிடர்களின் காதுகளில், பேசும் திறன் அற்ற ஊமைகள் உரைத்த சொற்கள் போன்றே எனக்கு உள்ளது”, என்றாள்.

**வ்யாக்யானம்** – “தவாம்ருத ஸ்யந்திநி” என்று தொடங்கி – “வகுத்த சேஷியான தேவரீருடைய தேனே மலரும் திருவடித்தாமரைகலிள் போக்யதையிலே யழுந்தின நெஞ்சு மற்றொரு க்ஷுத்ர விஷயத்தை விரும்பும்படி யெங்ஙனே! மதுவே ஜீவநமான வண்டு மது பரிபூர்ணமான தாமரைப்பூவானது நில்லாநிற்கச்செய்தே, அதன் சுவடறிந்த தான், கிட்டுகை யரிதாய் கிட்டினாலும் நாக்கு நினைக்கப் போராததா யிருக்கிற முள்ளிப்பூவிற் சென்று படியாத மாத்ரமன்றிக்கே அத்தைக் கடாக்ஷிப்பதும் செய்யாதிறே” என்று ஆளவந்தாரருளிச் செய்கையாலும்; விக்ரஹ வைலக்ஷண்யங் கண்டு பகவத் விஷயத்தில் ப்ரவணரானவர்களை மீட்க வரிதென்று தோற்றுகையாலே, விஷய தோஷத்தால் வருமது துஸ்த்யஜ மென்னுமிடம் ஸித்தமிறே.

**விளக்கம்** – அடுத்து ஸ்தோத்ரரத்னம் (27) – தவாம்ருத ஸ்யந்திநி – என்பதை ப்ரமாணம் காட்டுகிறார். இங்கு ஆளவந்தார், “எனது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி உள்ள ஸ்வாமியான உன்னுடைய தேன் பெருகும் திருடித்தாமரைகளில் மட்டுமே எனது நெஞ்சம் ஆழ்ந்து நிற்கிறது. இப்படி உள்ளபோது இந்த நெஞ்சம் எவ்விதம் மற்ற தாழ்ந்த விஷயங்களை விரும்பும்? தேனை மட்டுமே பருகி வாழ்கின்ற வண்டானது, தேன் நிறைந்ததான தாமரைமலர் ஒன்று எட்டாத ஆழத்தில் உள்ளபோதிலும், அந்தத் தேனின்

சுவையை அறிந்துள்ளதால் அதனையே எட்ட நினைக்கும்; இப்படி அல்லாமல் தேன் இல்லாமல் உள்ள முள்ளிப்பூவில் மொய்க்காமல் செல்வதோடு மட்டும் அல்லாமல், அதனைத் திரும்பிக் கூடப் பார்க்காது அன்றோ?", என்று அருளிச்செய்தார். இதன் மூலம் ஸர்வேச்வரனின் திருமேனி எழில் மற்றும் மேன்மையை உணர்ந்து, அவற்றில் ஈடுபட்டவர்களை மீட்பது மிகவும் அரிது என்பதால் "ஸர்வேச்வரனின் விஷயம் மூலம் ஏற்படும் இனிமை என்ற குற்றத்தால் வரும் ஸ்வப்ரயோஜனம்" என்பதை விட இயலாது என்று கருத்து.

274. இப்படி யிவை யித்தனையும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும் போதைக்கு வஸ்தவ்ய மாசார்ய ஸந்நிதியும் பகவத் ஸந்நிதியும்; வக்தவ்ய மாசார்ய வைபவமும் ஸ்வநிகர்ஷமும்; ஜப்தவ்யம் குருபரம்பரையும் த்வயமும்; பரிக்ராஹ்யம் பூர்வாசார்யர்களுடைய வசநமு மநுஷ்டாநமும்; பரித்யாஜ்ய மவைஷ்ணவ ஸஹவாஸமு மபிமாநமும்; கர்த்தவ்ய மாசார்ய கைங்கர்யமும் பகவத் கைங்கர்யமும்.

**அவதாரிகை** - ஆக தினசர்யோக்த மங்களாசாஸந அநுகூல ஸஹவாஸ ப்ரதிகூல ஸஹாவாஸ நிவ்ருத்திகளை விவரித்தார் கீழ்; (ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக் கொண்டு போரக்கடவன்) என்றத்தை விவரிக்கிறார் மேல் (இப்படி) என்று தொடங்கி.

**விளக்கம்** – இதுவரை சூர்ணை 243ல் கூறப்பட்டதான தினசர்யையில் விளக்கப்பட்டதான மங்களாசாஸனத்துக்கு அநுகூலர்களாக உள்ளவர்களுடன் பழகுதல், ப்ரதிகூலரின் சேர்க்கையில் இருந்து பிரிதல் போன்றவற்றை விவரமாக அருளிச்செய்தார். அந்தச் சூர்ணையின் இறுதி வாக்கியமான "ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக் கொண்டு போரக்கடவன்" என்பதை அடுத்து விவரிக்கிறார்.

**வ்யாக்யானம்** - (இப்படி யிவை யித்தனையும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும் போதைக்கு) என்றது, கீழ்ச்சொன்ன ப்ரகாரத்திலே இந்த ஸ்வபாவ விசேஷங்களெல்லாம் ஸதாசார்யனுடைய ப்ரஸாதத்தாலே கொழுந்துவிட்டு வளர்ந்து வரும் போதைக் கென்றபடி. (வஸ்தவ்யம் ஆசார்ய ஸந்நிதியும் பகவத் ஸந்நிதியும்) அதாவது, இவனுக்கு வாஸஸ்தலம், ஹிதைஷியாய் உபதேசாதிகளாலே யிவற்றுக்கு உத்பாதகனான

ஸ்வாசர்யனுடைய ஸந்நிதியும், அவன் காட்டிக் கொடுக்கக் கைக்கொண்டு அவனுகந்த விஷயமாய் தன் பக்கலிலே விசேஷ கடாக்ஷாதிகளைப் பண்ணிக் கொண்டு போரும் அர்ச்சாவதாரமான பகவான் ஸந்நிதியுமென்கை. இது ஸமுச்சயமுமன்று ஸம விகல்பமுமன்று, ஆசார்ய ஸந்நிதியே ப்ரதாநம். ததலாபத்தில் அர்ச்சாவதார ஸந்நிதி என்றபடி. ஆகையிறே ஆசார்ய ஸந்நிதியை முற்பட்ட வருளிச்செய்த்து. “மத்பக்தைஸ் ஸஹ ஸம்வாஸ: ததஸித்தௌ மயாபிவா” என்றிறே பகவதுக்தியும். இனி வக்தவ்யம் தொடங்கி மேலடைய ஸமுச்சயம்.

**விளக்கம்** - “இப்படி யிவை யித்தனையும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும் போதைக்கு” என்பது என்ன? இதுவரை கூறப்பட்டதான அநுகூலர் நட்பு போன்ற நேரத்தில் – என்று பொருள். “வஸ்தவ்யம் ஆசார்ய ஸந்நிதியும் பகவத் ஸந்நிதியும்” என்பது என்ன? இப்படிப்பட்ட ஒருவன் வசிப்பதற்கு ஏற்ப இடம் எதுவென்றால் - இவனுடைய நன்மையை மட்டுமே எண்ணுபவராய், உபதேசம் போன்றவற்றால் இவனுக்கு அநுகூலர்களின் நட்பு போன்றவற்றை ஏற்படுத்தித் தருபவராய் உள்ள ஆசார்யனின் இருப்பிடமும்; ஆசார்யன் மூலம் உணர்த்தப்பட்டு இவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், அந்த ஆசார்யனுக்கு ஏற்றதாக உள்ளதும், தன்னிடம் பலவிதமான விசேஷமான கடாக்ஷங்கள் செய்தபடி உள்ளதும் ஆகிய அர்ச்சாவதாரமான ஸர்வேச்வரன் உள்ள இடமும் ஆகும். இப்படியாக ஆசார்யன் உள்ள இடம், ஸர்வேச்வரன் உள்ள இடம் ஆகிய இரண்டையும் ஒன்றாக உரைத்தது என்பது - அவை இரண்டும் சமமானது என்ற பொருளில் அல்ல, அவை ஒரே பெருமை கொண்ட இடங்கள் என்ற பொருளில் அல்ல; ஆசார்யனின் இடமே முக்கியமானது, அது கிட்டாவிடில் அர்ச்சாவதார ஸ்தலம் ஏற்புடையது என்று கொள்ளவேண்டும். இதனால்தான் பகவத் சாஸ்த்ரம் – “மத்பக்தைஸ் ஸஹ ஸம்வாஸ: ததஸித்தௌ மயாபிவா - எனது அடியார்களுடன் கூடி வாழவேண்டும்; அது கிட்டவில்லை என்றால் என்னுடன் கூடி வாழவேண்டும் – என்று ஆசார்யனின் இடத்தை முதலில் உரைத்தது. தொடர்ந்து வரும் வாக்கியங்கள் அனைத்தும், இரண்டு இடங்களும் ஒத்த மேன்மை கொண்டவை என்பதைக் கூறுவதாகவே உள்ளன.

**வ்யாக்யானம்** - (வக்தவ்யம் ஆசார்ய வைபவமும் ஸ்வநிகர்ஷமும்) அதாவது, இவனுக்கு ஸர்வகாலமும் வாக்கால் சொல்லப்படுமது, துர்கதியே பற்றாசாகத் தன்னை அங்கீகரித்தருளின வாசார்யனுடைய தயா க்ஷாந்த்யாதி வைபவமும், எத்தனையேனும்

தயாதிகுணபரிபூர்ணரு மேறிட்டுப் பார்க்கில் அருவருக்கும்படி நின்ற அநாத்ம குண பூர்த்தியாகிற தன்னுடைய நிகர்ஷமுமாகிற விவையுமென்கை. ஸ்ரீமதுரகவியாழ்வார், “நன்மையால்” என்கிற பாட்டுத் தொடங்கி இவை யிரண்டையும் விசதமாக அருளிச் செய்தாரிறே.

**விளக்கம்** - (வக்தவ்யம் ஆசார்ய வைபவமும் ஸ்வநிகர்ஷமும்) - இவன் தனது காலம் முழுவதும் தன்னுடைய வாயால் எதனைக் கூறியபடி இருக்கவேண்டும் என்றால், தனது தாழ்ந்த நிலையைக் கண்ணுற்றவுடன் தன்னை அங்கீகரித்து ஏற்றுக் கொண்ட ஆசார்யனின் தயை மற்றும் பொறுமை போன்ற வைபவங்கள்; எத்தனை பொறுமையும் தயையும் நிறைந்துள்ள பெரியவர்கள் கூடக் காண்பதற்கு வெறுக்கும்படியாக தீய குணங்களால் நிறைந்துள்ள தன்னுடைய தாழ்ந்த நிலை ஆகிய இரண்டையுமே ஆகும். இந்த இரண்டையே மதுரகவியாழ்வார் கண்ணிநுண்சிறுத்தாம்பில் (14) – நன்மையால் – என்பதில் அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - (ஜப்தவ்யம் குருபரம்பரையும் த்வயமும்) அதாவது, இவனுக்கு காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கு முறுப்பாக ரஹஸ்யமாக வநுஸந்தித்துக் கொண்டு போரப்படுமது, “ராமாநுஜாங்கிரி சரணோஸ்மி” இத்யாதிப்படியே ஸர்வேச்வரன் குளிர நோக்குகைக் குடலாய், “ஸசாசார்ய வம்ஸோஜ்ஞேய: ஆசார்யாணா மஸாவஸா விதி ஆபகவத்த:” என்கிறபடியே, ஸ்வாசார்யாதி பரமாசார்ய பகவத்பர்யந்தையான குருபரம்பரையும், அந்த குருபரம்பரா ப்ராப்தமாய் ஸ்வாசார்யன் தனக்குத் தஞ்சமாக உபதேசித்த த்வயமுமென்கை. இத்தால் குருபரம்பரா பூர்வகமான த்வயமே யிவனுக்கு ரஹஸ்யமாக வநுஸந்தித்துக் கொண்டு போரப்படுமதென்றபடி. பாஷ்யகாரர்க்கு காலக்ஷேப ப்ரகார மருளிச் செய்கிறவிடத்தில் “த்வய மர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா” என்றிறே பெரியபெருமாளருளிச் செய்தது.

**விளக்கம்** – (ஜப்தவ்யம் குருபரம்பரையும் த்வயமும்) - இப்படிப்பட்டவன் தனது பொழுதைப் போக்குவதற்கும்; அனுபவத்திற்குத் தனிமையில் உள்ளபோது எண்ணியபடி இருக்கவேண்டியது குறித்து உரைக்கிறார். ஸ்ரீவரதராஜஸ்தவம் (102) - ராமாநுஜாங்கிரி சரணோஸ்மி – ராமாநுஜரின் திருவடிகளை நான் உபாயம் என்று பற்றியுள்ளேன் - என்று கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் நன்றாகக் கடாக்ஷம் செய்வதற்குக் காரணமாக உள்ளதும்; ஸசாசார்ய வம்ஸோஜ்ஞேய: ஆசார்யாணா மஸாவஸா விதி ஆபகவத்த: -

ஆசார்ய பரம்பரையில் தனது ஆசார்யன் தொடக்கமாக ஸர்வேச்வரன் முடிய உள்ள ஒவ்வொரு ஆசார்யனையும் யார் என்று அறிந்து கொள்ளவேண்டும் - என்பதற்கு ஏற்ப தனது ஆசார்யன் தொடங்கி பரமாசார்யனான ஸர்வேச்வரன் முடிய உள்ள குரு பரம்பரையும், அந்தக் குருபரம்பரையில் தொடர்ந்து வந்த தனது ஆசார்யன் தனக்குத் தஞ்சம் என்று உபதேசித்ததும் ஆகிய த்வய மந்த்ரமே ஆகும். இதன் மூலம் ஆசார்ய பரம்பரை மூலமாக உபதேசம் செய்யப்பட்ட த்வய மந்த்ரமே இவன் தனியாக அமர்ந்து த்யானித்தபடி இருப்பதற்கு ஏற்றது என்று கருத்து. ஸ்ரீபாஷ்யகாரருக்கு பொழுது போக்கும் விதத்தை பெரியபெருமாள் அருளிச்செய்தபோது சரணாகதி கத்யத்தில் – த்வய மர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா – த்வய மந்த்ரத்தை அதன் பொருளுடன் எப்போதும் எண்ணியபடியே வாழ்வீராக – என்று உரைத்தான்.

**வ்யாக்யானம்** - (பரிக்ராஹ்யம் பூர்வாசார்யர்களுடைய வசநமும் அநுஷ்டாநமும்) அதாவது, தனக்கு ஜ்ஞாநாநுஷ்டாநங்கள் ஊற்றிருக்கைக் குறுப்பாகக் கண்டகண்ட விடங்களிலே யிவனால் பரிக்ரஹிக்கப்படுமது, நாதமுநிகள் முதலாக இவ்வருகுள்ள பூர்வாசார்யர்களுடைய ஜ்ஞாதவ்யார்த்த ப்ரகாசகமான திவ்ய வசநங்களும், அந்தவசநாநு ரூபமாக மறுவற்ற வநுஷ்டாநங்களு மென்கை. "ஸுவ்யாஹ்ருதாநி மஹதாம் ஸுக்ருதாநி ததஸ்த்த:, ஸஞ்சிந்வந் தீர ஆஸீத் ஸிலஹாரீஸிலம் யதா" என்னக்கடவதிறே.

**விளக்கம்** - (பரிக்ராஹ்யம் பூர்வாசார்யர்களுடைய வசநமும் அநுஷ்டாநமும்) – தனக்கு வேண்டிய ஞானம் மற்றும் அநுஷ்டானம் ஆகிய இரண்டின் மீதும் எப்போதும் பற்றுதல் இருப்பதற்காக இவன் செய்யவேண்டியது என்ன? அனைத்து இடங்களிலும் இவன் கைக்கொள்ள வேண்டியது என்னவென்றால், நாதமுனிகள் தொடக்கமாக உள்ள பூர்வாசார்யர்களின், அறியப்படவேண்டிய பொருள்களை நன்கு விளக்குகின்ற திவ்யமான சொற்கள் மற்றும் அந்தச் சொற்களைப் பின்பற்றி உள்ளதான நேர்மையான நடத்தை போன்றவை ஆகும். இதனை லக்ஷ்மீ தந்த்ரம் – ஸுவ்யாஹ்ருதாநி மஹதாம் ஸுக்ருதாநி ததஸ்த்த:, ஸஞ்சிந்வந் தீர ஆஸீத் ஸிலஹாரீஸிலம் யதா - நெற்களஞ்சியத்தில் உள்ள உதிரியான நெல்லை, அந்த நெல்லை மட்டுமே தனக்கு உணவாக நம்பியுள்ளவன் எவ்விதம் சேகரிப்பானோ, அது போன்று அறிவுள்ள ஒருவன் சிறந்தவர்களின் தோஷம் இல்லாத சொற்களையும், ஒழுக்கத்தையும் ஆங்காங்கு சேகரித்தபடி இருத்தல் வேண்டும் – என்றது காண்க.

**வ்யாக்யானம்** - (பரித்யாஜ்யம் அவைஷ்ணவ ஸஹவாஸமும் அபிமாநமும்) அதாவது ஜ்ஞாநாநுஷ்டாந நாசகமென்னும் பயத்தாலே யிவனுக்கு ஸவாஸநமாக விடப்படுமது, வைஷ்ணவ லக்ஷணமில்லாதவர்களோட்டை ஸஹவாஸமும், அவர்கள் இவன் நம்முடையவன் என்று ஓரோரந்வயங்களாலே தன் திறத்தில் பண்ணுமபிமாநமுமென்கை.

**விளக்கம்** – (பரித்யாஜ்யம் அவைஷ்ணவ ஸஹவாஸமும் அபிமாநமும்) - நமது ஞானம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றை அழித்துவிடும் என்ற அச்சம் காரணமாக ஒருவன் விடவேண்டியது என்னவென்றால் - வைஷ்ணவ லக்ஷணம் என்பது சிறிதும் இல்லாதவர்களின் நட்பு, அவர்கள் இவனிடம் "இவன் நம்மவன்" என்று ஒவ்வொரு செயலிலும் காட்டும் அன்பு போன்றவை ஆகும்.

**வ்யாக்யானம்** - (கர்த்தவ்யம் ஆசார்யகைங்கர்யமும் பகவத் கைங்கர்யமும்) – அதாவது இவனுக்கு ஸ்வரூபாநுகூலமாகவே யெப்போதும் செய்யப்படுமது, மஹோபகாரகனான ஸ்வாசார்யன் விஷயத்தில் ப்ரேம பூர்வகமாகப் பண்ணும் கைங்கர்யமும், தந்நியோக பரதந்த்ரனாய்ப் பண்ணும் பகவத் கைங்கர்யமுமென்கை. ஆக, திநசர்யையிற் சொன்ன ஸ்வபாவ விசேஷங்களெல்லாம் (ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக் கொண்டு போருகையாவது), இப்படி யிருந்துள்ள வஸ்தவ்ய வக்தவ்ய ஜப்தவ்ய பரிக்ராஹ்ய பரித்யாஜ்ய கர்த்தவ்யங்களை யறிந்து இவற்றிலே நிஷ்டனாய்ப் போருகை யென்றதாய்த்து.

**விளக்கம்** - (கர்த்தவ்யம் ஆசார்யகைங்கர்யமும் பகவத் கைங்கர்யமும்) - சேதனன் தனது ஸ்வரூபத்திற்கு நன்மை அளிப்பதற்கு ஏற்றபடி எப்போதும் செய்யவேண்டியது என்னவென்றால் – தனக்கு மிகவும் பெரிய உபகாரம் செய்த தனது ஆசார்யன் விஷயத்தில் ப்ரேமை ஏற்பட்டு, அதன் காரணமாகச் செய்யும் கைங்கர்யம்; அந்த ஆசார்யனின் கட்டளைக்கு ஏற்றபடி ஸர்வேச்வரனுக்குச் செய்யும் கைங்கர்யம் என்பதாகும். ஆகவே சூர்ணை 243-ல் கூறப்பட்ட சேதனனின் ஸ்வபாவம் குறித்த விஷயங்கள் அனைத்தும் – கீழே கூறப்பட்டதான வசிக்கும் இடம், ஜபிக்கப்படுவது, ஏற்கப்படுவது, தள்ளப்படுவது, செய்யப்படுவது என்பவற்றை அறிந்து, அவற்றில் எப்போதும் நிலையாக நிற்பதே ஆகும்.

275. கீழ்ச்சொன்ன பகவத் கைங்கர்யமறிவது சாஸ்த்ரமுகத்தாலே, ஆசார்ய கைங்கர்யமறிவது சாஸ்த்ரமுகத்தாலு மாசார்ய வசநத்தாலும்.

**அவதாரிகை** - இப்படி கர்த்தவ்யமான கைங்கர்யங்களிரண்டு மறிவது எம்முகத்தாலே யென்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் மேல் (கீழ்ச்சொன்ன) என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையின் இறுதியில் கூறப்பட்டதான ஆசார்ய கைங்கர்யம் மற்றும் பகவத் கைங்கர்யம் ஆகிய இரண்டையும் எதன் மூலம் அறியலாம் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (கீழ்) என்றது வஸ்தவ்யாதிகளைச் சொன்ன இந்த கணநையிலென்றபடி. (பகவத் கைங்கர்யமறிவது சாஸ்த்ரமுகத்தாலே) என்றது, பகவா னிவனுக்கிப்போது வாய்திறந்தொன்றை யருளிச்செய்யாமையாலே, தத்ப்ரதிபாதகமான ச்ருதிஸ்ம்ருத்யாதி சாஸ்த்ரமுகத்தாலே யறியவேணு மென்கை. (ஆசார்ய கைங்கர்யமறிவது சாஸ்த்ர முகத்தாலுமாசார்ய வசநத்தாலும்) என்றது, ஆசார்ய விஷயத்தில் சுச்ரூஷா ப்ரகாரங்களை ப்ரதிபாதிக்கிற சாஸ்த்ரமுகத்தாலும், தனக்கிஷ்டா நிஷ்டங்க ளின்ன தென்னுமிடத்தை யவனருளிச் செய்த வசநத்தாலும் மென்கை.

**விளக்கம்** - “கீழ்” என்பது வசிக்கத்தக்க இடம் போன்றவற்றை உரைத்த அதே வரிசையிலே என்று பொருள் தரும். “பகவத் கைங்கர்யமறிவது சாஸ்த்ரமுகத்தாலே” என்பது ஸர்வேச்வரன் சேதனனுக்குத் தனது திருவாய் திறந்து எதனையும் இப்போது அருளிச்செய்யாத காரணத்தினால், அவனுக்கான கைங்கர்யங்கள் குறித்து அவனைப் பற்றி விளக்குகின்ற ச்ருதி மற்றும் ஸ்ருதி வாக்கியங்களாகிய சாஸ்த்ரங்கள் மூலம் அறிய வேண்டும் என்று கருத்து. (ஆசார்ய கைங்கர்யமறிவது சாஸ்த்ர முகத்தாலுமாசார்ய வசநத்தாலும்) - ஆசார்ய விஷயத்தில் எவ்விதம் கைங்கர்யம் செய்யவேண்டும் என்பதை உபதேசிக்கும் சாஸ்த்ரங்கள் மூலமும், தனக்கு விருப்பம் உள்ளது மற்றும் விருப்பம் அல்லாதது எது என்பதை ஆசார்யனின் வாக்கு மூலமும் அறியவேண்டும்.

276. கைங்கர்யந்தானிரண்டு.

**அவதாரிகை** - இனிமேல் கைங்கர்ய வேஷந்தன்னை யறிவிக்கைக்காக (கைங்கர்யந்தானிரண்டு) என்கிறார்.

**விளக்கம் -** இந்தக் கைங்கர்யங்கள் எப்படிப்பட்டவை என்று அருளிச்செய்கிறார்

277. அதாவது இஷ்டஞ்செய்கையும் அநிஷ்டம் தவிருகையும்.

**அவதாரிகை** – அதாவதேதென்ன. (அதாவது இஷ்டஞ்செய்கையும் அநிஷ்டம் தவிருகையும்) என்கிறார்.

**விளக்கம்** – அவற்றை விவரிக்கிறார். ஸர்வேச்வரன் மற்றும் ஆசார்யன் விரும்புவதைச் செய்தலும், விருப்பம் அல்லாதவற்றை விலக்குதலும்.

278. இஷ்டாநிஷ்டங்கள் வர்ணாச்ரமங்களையு மாத்ம ஸ்வரூபத்தையும் மவலம்பித்திருக்கும்.

**அவதாரிகை -** இவைதானிரண்டு மெத்தை யவலம்பித்திருக்குமென்ன வருளிச்செய்கிறார் மேல் (இஷ்டாநிஷ்டங்கள்) என்று தொடங்கி.

**விளக்கம் -** இவை இரண்டும் எதனைப் பற்றி உள்ளன என்பதை விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கீழ்ச்சொன்ன கைங்கர்ய ப்ரதிஸம்பந்திக ளிருவருடையவு மிஷ்டா நிஷ்டங்கள் இவ்வதிகாரியுடைய வர்ணாச்ரமங்களையும் ஆத்மஸ்வரூபத்தையும் பற்றியிருக்குமென்கை, (இஷ்டாநிஷ்டங்கள் வர்ணாச்ரமங்களைப் பற்றியிருக்கையாவது), ஸ்வவர்ண ஸ்வாச்ரமோசிதமான தர்மங்களை பரார்த்தபுத்த்யாவநுஷ்டிக்கை இஷ்டமாய், ஸ்வார்த்தபுத்த்யாவநுஷ்டிக்கை அநிஷ்டமாயிருக்கை. பரார்த்தபுத்த்யா வநுஷ்டிக் கையாவது, லோகஸங்க்ரஹதயாவாகவும் சிஷ்யபுத்ரர்களுடைய வுஜ்ஜீவநார்த்தமாகவும் ஆந்ருசம்ஸ்யத்தாலேயநுஷ்டிக்கை. இவ்வர்த்தத்தை, “இனி இவற்றில் நம்மாசார்யர்க ளநுஷ்டிக்கிறவை சிஷ்யபுத்ரர்களுடைய வுஜ்ஜீவநார்த்தமாக ஆந்ருசம்ஸ்யத்தாலே

யநுஷ்டிக்கிறார்களித்தனை; இப்படி யநுஷ்டியாதபோது பகவத்விபூதிபூதரான சேதநர்க்கு நாசஹேதுவாகையாலே ஈச்வரனுக் கநபிமதபூதனாவன்; ஆகையால், யாதோரளவாலே லோகஸங்க்ரஹம் பிறக்கும், யாதோரளவாலே சிஷ்யபுத்ரர்களுக் குஜ்ஜீவநமுண்டாம், அவ்வளவு மநுஷ்டேயமென்றதாய்த்து; ப்ரவ்ருதி தர்மந்தானே அபிஸந்தி பேதத்தாலே நிவ்ருத்தி தர்மமானவோபாதி, இந்த நிவ்ருத்தி தர்மமும் ப்ராப்யமாகக் கடவது; இவ்விடத்தில் அகரணேப்ரத்யவாயம், எம்பெருமானுடைய வநபிமதத்வமும் தன்னுடைய புருஷார்த்தஹாநியுமாகக் கடவது" என்று தனிச்லோகத்திலே இவர்தாமே யருளிச் செய்தாரிறே. இனி ஸ்வார்த்த புத்த்யா அநுஷ்டிக்கையாவது, ஸ்வவர்ண ஸ்வாச்ரமோசிதமாக விஹிதமாகையாலே நமக்கிவையநுஷ்டியா தொழியில் க்ருத்யாகரணரூப பாபம் வருமென்று நினைத்தநுஷ்டிக்கை. (இஷ்டாநிஷ்டங்கள் ஆத்மஸ்வரூபத்தைப் பற்றியிருக்கையாவது) "இச்சை ஸ்வரூபம்" என்கிறபடியே, விநியோக தசையில் சேஷியுடைய இச்சாநுகுணமாக ஸ்வரூபத்தை விநியோகப்படுத்துகை யிஷ்டமாய், தட்டுமாறி விநியோகங் கொள்ளுமளவில் தன்னுடைய சேஷத்வத்தையிட்டிறாய்த்தல் பாரதந்த்ர்யத்தையிட் டெதிர்விழி கொடா தொழிதல் செய்கை அநிஷ்டமாயிருக்கை.

**விளக்கம்** - மேலே கூறப்பட்டதான கைங்கர்யங்களை ஏற்றுக்கொள்பவர்கள் ஆசார்யனும் ஸர்வேச்வரனும் ஆவர்; இவர்கள் விரும்புவதும், விரும்பாமல் உள்ளதும் அந்தச் சேதனனின் வர்ணாச்ரமம் மற்றும் ஆத்மஸ்வரூபம் ஆகிய இரண்டையும் ஒட்டியே இருக்கும் என்று கருத்து. "இஷ்டா நிஷ்டங்கள் வர்ணாச்ரமத்தைப் பற்றியிருப்பது" என்றால் என்ன? தன்னுடைய வர்ணம் (ஜாதி) மற்றும் ஆச்ரமம் (ப்ரம்மச்சர்யம் போன்ற நான்கு நிலைகள்) ஆகியவை பற்றிய தர்மங்களை மற்றவர்களுக்காகச் செய்யும்போது விருப்பமும், தனக்காகச் செய்யும்போது விருப்பம் அற்ற நிலையும் கூடி இருத்தல் என்று கருத்து. மற்றவர்களுக்காக என்று கூறப்படுவதன் பொருள் - உலகினரின் நன்மைக்காகவும், சிஷ்யர்கள் மற்றும் புத்திரர்கள் ஆகியோரின் உஜ்ஜீவனத்திற்காகவும் அவர்களிடம் ஏற்பட்ட இரக்கம் காரணமாகச் செய்தல் – என்று பொருள். இந்த அர்த்தத்தை ஸ்வாமி பிள்ளைலோகாசார்யார் தனது தனிச்லோகம் என்னும் க்ரந்தத்தில் பின்வருமாறு அருளிச்செய்துள்ளார் - நம்முடைய ஆசார்யர்கள் அநுஷ்டிக்கும் அனைத்தும் சிஷ்யர்களும் புத்திரர்களும் உய்யவேண்டும் என்ற இரக்கத்தாலேயே ஆகும். இவ்விதம் அநுஷ்டிக்கவில்லை என்றால், ஸர்வேச்வரனின் செல்வமாக உள்ள சேதனர்கள்

இவர்களைப் பின்பற்றி, அநுஷ்டிக்காமல் இருந்து விடக்கூடும். இதனால் அவர்கள் அழியக்கூடும் என்பதால், இவன் ஸர்வேச்வரனுக்கு விருப்பம் அற்றவனாகி விடுவான். ஆகவே இவன் அநுஷ்டிப்பதால் உலகிற்கு நன்மை எந்த அளவு ஏற்படுமோ, சிஷ்யர்களும் புத்திரர்களும் எந்த அளவு உய்வார்களோ அந்த அளவு அநுஷ்டிக்கவேண்டும். ஒரு பயனை மனதில் கொண்டு செய்யப்படும் செயல் என்பது, எண்ணத்தில் ஏற்படும் மாறுபாடு காரணமாக, ஒரு பயனைக் கருதாமல் செய்யப்படும் செயலாக மாறிவிடலாம்; இதே போன்று இங்கு பலனைக் கருதாமல் செய்யப்படும் செயல்கள் அநுஷ்டிக்கத் தக்கதாக உள்ளது. இங்கு இவற்றைச் செய்யாவிட்டால் குற்றம் என்பது எப்படி என்றால் – ஸர்வேச்வரன் தன்னை விரும்பாமல் போவதும், தனது புருஷார்த்தத்தை இழப்பதும் - என்பதாகும். அடுத்து தனக்காகச் செய்தல் என்பது என்ன? வர்ணம் மற்றும் ஆச்ரமத்துக்கு விதிக்கப்பட்ட கர்மங்களை இயற்றவில்லை என்றால், செய்யக்கூடாத செயல்களைச் செய்தால் உண்டாகும் பாவம் வந்து சேரும் என்று எண்ணி அவற்றை இயற்றுதலே ஆகும். “இஷ்டா நிஷ்டங்கள் ஆத்மஸ்வரூபத்தை பற்றியிருக்கை” என்பது ஏன்? ஸ்வாமி நம்பிள்ளை - இச்சை ஸ்வரூபம் – ஸர்வேச்வரனின் விருப்பத்தின்படி நடத்தலே ஜீவாத்மாவின் லக்ஷணம் – என்று கூறுவதற்கு ஏற்ப சேதனன் ஒருவனை ஸர்வேச்வரன் பயன்படுத்திக் கொள்ளும்போது தனது விருப்பத்தின்படியே பயன்படுத்துகிறான். இவ்விதம் உள்ளபோது அவன் சேதனனை சேஷத்வத்துக்கு மாறாகப் பயன்படுத்தும் போது, சேதனன் அதற்கு எந்தவிதமான மறுப்பும் உரைத்தல் கூடாது. தனது நிலையைக் கண்டு ஸர்வேச்வரனின் விருப்பத்திற்கு இணங்காமல் இருத்தலும் கூடாது.

**வ்யாக்யானம்** - அங்ஙனன்றிக்கே, (இஷ்டாநிஷ்டங்கள்) இத்யாதிக்கு, ஸ்வவர்ண ச்வாச்ரமோசிதங்களைச் செய்கையிஷ்டம், தத்விருத்தங்களைச் செய்கை அநிஷ்டமென்றும், ஆத்மஸ்வரூபத்துக்கு உசிதமானவற்றைச் செய்கையிஷ்டம், தத்விருத்தங்களைச் செய்கை யநிஷ்டமென்றும் யோஜிக்கவுமாம். அங்ஙனுமன்றிக்கே, ஔபாதிகமுமாய் அநித்யமுமான வர்ணாச்ரமங்களிலே ஊற்றிருக்கை யநிஷ்டம், நிருபாதிக நித்யசேஷமான வாத்மஸ்வரூபத்திலே ஊற்றிருக்கை யிஷ்டமென்றும் யோஜிக்கவுமாம்.

**விளக்கம்** - இதே சூர்ணைக்கு அடுத்து வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். சேதனன் தன்னுடைய வர்ணம் மற்றும் ஆச்ரமம் ஆகியவற்றுக்கு உரிய செயல்களைச்

செய்வதை ஸர்வேச்வரன் விரும்புகிறான்; அதற்கு மாறாகச் செய்வதை அவன் விரும்புவதில்லை என்றும் உரைக்கலாம். இதே போன்று ஆத்மஸ்வரூபத்திற்குத் தகுதியானவற்றைச் செய்தலை ஸர்வேச்வரன் விரும்புகிறான்; அதற்கு முரணாக உள்ளதை அவன் விரும்புவதில்லை என்றும் உரைக்கலாம். அல்லது கர்மம் காரணமாக வந்ததும், நிலையற்றதும் ஆகிய வர்ணாச்ரம தர்மங்களில் ஆழ்ந்து இருந்தல் என்பதை ஸர்வேச்வரன் விரும்புவதில்லை; எந்தவிதமான காரணமும் இன்றி இயற்கையாகவே அவனுக்கு அடிமையாக உள்ள ஆத்மஸ்வரூபத்தில் ஆழ்ந்து இருத்தலையே அவன் விரும்புகிறான் என்றும் கூறலாம்.

**வ்யாக்யானம் -** இங்ஙனூற்றத்தை யிட்டுச் சொல்லுகையன்றிக்கே, அநிஷ்டம் வர்ணாச்ரமத்தை யவலம்பித்திருக்கும், இஷ்டம் ஆத்மஸ்வரூபத்தை யவலம்பித்திருக்கும் என்றிங்ஙனே விபஜித்தும் வர்ணாச்ரமாசாரத்தை யநிஷ்டகோடியாகச் சொல்லப் பார்க்கில், "ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தா முல்லங்க்ய வர்த்ததே, ஆஜ்ஞாச்சேதீ மமத்ரோஹீ மத்பக்தோபி நவைஷ்ணவ:" என்றும், "அவிப்லவாய தர்மாணாம் பாலநாய குலஸ்யச, ஸங்க்ரஹாயச லோகஸ்ய மர்யாதா ஸ்தாபநாயச, ப்ரியாய மம விஷ்ணோச்ச தேவதேவஸ்ய சார்ங்கிண:, மநீஷீவைதிகாசாரம் மநஸாபி நலங்கயேத", "யதாஹி வல்லபோ ராஜ்ஞோ நதீம் ராஜ்ஞா ப்ரவர்த்திதாம், லோகோப யோகிநீம் ரம்யாம் பஹுஸஸ்ய விவர்த்திநீம், லங்கயந் சூலமாரோஹே தநபேக்ஷோபி தாம்ப்ரதி, ஏவம் விலங்கயந் மர்த்யோ மர்யாதாம் வேத நிர்மிதாம், ப்ரியோபி நப்ரியோஸௌ மே மதாஜ்ஞாவ்யதிவர்த்தநாத், உபாயத்வ க்ரஹம் தத்ர வர்ஜயேந் மநஸா ஸுதீ:" என்றும் ஸர்வேச்வரனும் பிராட்டியுமருளிச் செய்த வசநங்களோடும் பூர்வாசார்யர்களுடைய வசநாநுஷ்டாநங்களோடும் விரோதிக்குமிறே; ஆனபின்பு, கீழ்ச்சொன்னபடியே இவ்வாக்யத்துக்குப் பொருளாகக் கடவது.

**விளக்கம் -** இப்படியாக ஆழ்ந்து இருந்தல் என்பதை உரைக்காமல், "வர்ணம் மற்றும் ஆச்ரம தர்மங்களைப் பற்றி இருப்பதே அவன் விரும்பாதது, ஆத்மஸ்வரூபத்தைப் பற்றி நிற்பது மட்டுமே அவன் விரும்புவது", என்று வர்ணாச்ரம தர்மங்களை அவன் விரும்புவதில்லை என்று வைத்துக்கொள்வோம். இவ்விதம் கொண்டால் கீழே உள்ள பிராட்டி மற்றும் ஸர்வேச்வரன், பூர்வாசார்யர்களின் அநுஷ்டானங்கள் ஆகிய பலவற்றுடன் முரண்பாடு ஏற்படும்.

- பாஞ்சராத்ரம் – ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தா முல்லங்க்ய வர்த்ததே, ஆஜ்ஞாச்சேதீ மமத்ரோஹீ மத்பக்தோபி நவைஷ்ணவ: - வேதவாக்கியங்கள் மற்றும் ஸ்ம்ருதி வாக்கியங்கள் எனது ஆணையாகும். அவற்றை மீறி நடப்பவன் எனது பக்தனாகவே இருந்தாலும், அவன் எனது ஆனையை மீறி நடப்பதால் வைஷ்ணவன் ஆகமாட்டான்.

- லக்ஷ்மீதந்த்ரம் – அவிப்லவாய தர்மாணாம் பாலநாய குலஸ்யச, ஸங்க்ரஹாயச லோகஸ்ய மர்யாதா ஸ்தாபநாயச, ப்ரியாய மம விஷ்ணோச்ச தேவதேவஸ்ய சார்ங்கிண:, மநீஷீவைதிகாசாரம் மநஸாபி நலங்கயேத - வர்ணாச்ரம தர்மங்கள் அழிந்து போகாமல் இருப்பதற்கும், குலதர்மங்களைக் காப்பதற்கும், உலகின் நன்மையின் பொருட்டும், சாஸ்த்ரங்களின் மரியாதைகளை நிலை நாட்டுவதற்காகவும், தேவர்களின் தேவனாகிய சார்ங்கம் என்னும் வில்லை ஏந்திய ஸர்வேச்வரன் மற்றும் அவன் பத்தினியாகிய எனக்கும் மகிழ்வு ஏற்படும் பொருட்டு மனிதனை அடக்கவல்ல ஒருவன் வேதங்களில் உரைக்கப்பட்டவற்றை மனதாலும் மீறக்கூடாது.

- பாஞ்சராத்ரம் – யதாஹி வல்லபோ ராஜ்ஞோ நதீம் ராஜ்ஞா ப்ரவர்த்திதாம், லோகோப யோகிநீம் ரம்யாம் பஹுஸஸ்ய விவர்த்திநீம், லங்கயந் சூலமாரோஹே தநபேக்ஷோபி தாம்ப்ரதி, ஏவம் விலங்கயந் மர்த்யோ மர்யாதாம் வேத நிர்மிதாம், ப்ரியோபி நப்ரியோஸௌ மே மதாஜ்ஞாவ்யதிவர்த்தநாத், உபாயத்வ க்ரஹம் தத்ர வர்ஜயேந் மநஸா ஸுதீ: – அரசனுக்கு ஒருவன் வேண்டப்பட்டவனாக உள்ளபோதிலும் அரசனால் ஏற்படுத்தப்பட்டதும், உலகிற்கு உபயோகமாக இருக்கக்கூடியதும், குற்றம் இல்லாததும், நெற்பயிர்கள் வளர்வதற்குக் காரணமாக உள்ளதும் ஆகிய ஒரு நதியை அசுத்தம் செய்தால் அவன் அரசானால் கழுவேற்றப்படுவது உறுதியே ஆகும். இது போன்றே வேதங்களில் கூறப்பட்டவற்றை மீறுபவன், எனக்கு வேண்டியவன் என்ற போதிலும், எனது ஆணைகளை மீறுவதால் எனக்கு வேண்டியவன் அல்லன் என்றாகிறான்; ஆகவே அறிவுள்ளவர்கள் வர்ணாச்ரம தர்மங்களை இயற்றும்போது அவற்றை உபாயம் என்று மனதாலும் எண்ணக்கூடாது

ஆகவே மேலே கூறப்பட்டபடியே இந்த வரிகளுக்குப் பொருள் கொள்ளவேண்டும்.

279. புண்யத்துக்கஞ்சுகிறவன் பாபத்தைப் பண்ணானிறே.

**அவதாரிகை** - இம்மூன்று யோஜனைக்கும் மேலில் வாக்யத்தோடு ஸங்கதி யென்னென்னில்; ப்ரதம யோஜனையில் இப்படி வர்ணாச்ரமாநுஷ்டாநத்தில் ப்ரதிபத்தி விசேஷங்களிலும் ஆத்மஸ்வரூபத்தினுடைய விநியோக தசையி லாநுகூல்ய ப்ராதி கூல்யங்களிலுமாக இஷ்டாநிஷ்டங்களுக்கு விஷய விபாகம் பண்ணவேணுமோ, வர்ணாச்ரமாநுரூபமாயும் ஸ்வரூபாநுரூபமாயு முள்ளவற்றைச் செய்கை யிஷ்டம், தத் விருத்தங்களான அக்ருத்யாதிகளைச் செய்கை அநிஷ்டமென்றாலோவென்ன வருளிச் செய்கிறார் மேல். (புண்யத்துக்கு) என்று தொடங்கி. த்விதீய யோஜனையில், இப்படி வர்ணாச்ரம விருத்தங்களையும் ஸ்வரூப விருத்தங்களையுஞ் செய்கை அநிஷ்டமென் றிவனுக்குச் சொல்லித் தவிர்ப்பிக்கைதான் வேணுமோ, என்ன (புண்யத்துக்கஞ்சுகிறவன்) என்று தொடங்கி யருளிச்செய்கிறார். த்ருதீய யோஜனையில், இப்படி வர்ணாச்ரமங்களி லூற்றமறுத்தால் அக்ருத்யகரணங்கள் வந்து புகுராதோ வென்ன, (புண்யத்துக் கஞ்சுகிறவன்) இத்யாதியாலே யருளிச்செய்கிறார்.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்ட மூன்றுவிதமான பொருள்கள் மற்றும் இந்தச் சூர்ணை ஆகிய இரண்டிற்கும் என்ன தொடர்பு என்ற கேள்வி எழலாம். முதல் பொருளில் – வர்ணாச்ரம தர்மங்களைப் பின்பற்றவேண்டும் என்றுள்ள எண்ணத்தில் கூட ஆத்மஸ்வரூபத்தைப் பயன்படுத்தும் நிலையில் அநுகூலமாக உள்ளது என்பது விரும்பத்தக்கது, அநுகூலமாக இல்லாமல் உள்ள நிலை விரும்பத்தகாதது என்று பிரிக்கப்பட்டது அல்லவோ? இதற்குப் பதிலாக வர்ணாச்ரம தர்மங்களுக்கு ஏற்றவையாயும், ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்றவையாயும் உள்ளவற்றைச் செய்தல் விரும்பத்தக்கது என்றும், அவற்றைச் செய்யாமல் இருத்தல் விரும்பத்தகாதது என்றும் கூறலாம் அல்லவோ? இந்தக் கேள்விக்கு, இந்தச் சூர்ணையில் பதில் அருளிச்செய்கிறார். இரண்டாவது பொருளில் – வர்ணாச்ரம தர்மங்களுக்குச் சேராதவற்றையும், ஆத்மஸ்வரூபத்துக்குச் சேராதவற்றையும் செய்வது என்பது விரும்பத்தக்கது அல்ல என்று உரைத்து, அதனைத் தடுக்கவேண்டுமோ என்ற கேள்விக்கு இந்தச் சூர்ணையில் விடை அருளிச்செய்கிறார். மூன்றாவது பொருளில் – வர்ணாச்ரமங்களில் உள்ள ஆழ்ந்த ஈடுபாடு என்பதை விலக்கினால் செய்யக்கூடாதவற்றைச் செய்தல் என்ற நிலை வந்துவிடாதோ என்ற கேள்விக்கு இந்தச் சூர்ணையில் விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (புண்யத்துக்கஞ்சுகிறவன் பாபத்தைப் பண்ணானிறே) என்றது, பகவதநுக்ரஹ ஹேதுவாக சாஸ்த்ர ஸித்தமாயிருக்கச் செய்தேயும் மோக்ஷ விரோதி யென்னுமத்தாலே புண்யம் செய்கைக்குட்பட அஞ்சுகிற இவ்வதிகாரி, பகவந்நிக்ரஹ ஹேதுவாக சாஸ்த்ர ஸித்தமாய் நரகாவஹமென்று ஸாமாந்யருமுட்படச் செய்யாத பாபத்தை யொருக்காலும் செய்யானிறே என்கை.

**விளக்கம்** - ஸர்வேஸ்வரனுடைய க்ருபையைப் பெறுவதற்குக் காரணமாக உள்ளவை என்று சாஸ்த்ரங்களில் புண்ணிய கர்மங்கள் உரைக்கப்படுகின்றன. ஆனாலும் இவை மோக்ஷத்திற்குத் தடை ஏற்படுத்திவிடும் என்பதால் புண்ணிய கர்மங்கள் குறித்து ஒருவன் அஞ்சக்கூடும். இப்படிபட்டவன் ஸர்வேச்வரனின் கோபத்திற்குக் காரணமாக இருக்கும் என்று சாஸ்த்ரங்களில் குறித்துக் கூறப்படுவதாலும், அவை நரகத்தை அளித்துவிடும் என்று உரைக்கப்படுவதாலும், சாதாரண மக்கள் கூட பாவம் என்று எண்ணுவதைச் செய்யமாட்டான்.

280. இவன் புண்யத்தைப் பாபமென்றிருக்கும்; அவன் பாபத்தைப் புண்யமென்றிருக்கும். அவனுக்கது கிடையாது; இவன் செய்யான்.

**அவதாரிகை** - இவன் புண்யத்துக்கஞ்சும்படியும், வத்ஸலனான வீச்வரனுக்கும் இடமறும்படி பாபப்ரவ்ருத்தியி லந்வயமற்றிருக்கும் படியையும் தர்சிப்பிக்கிறார் மேல் (இவன் புண்யத்தை) இத்யாதி வாக்யத்ரயத்தாலே.

**விளக்கம்** - இப்படிப்பட்ட அதிகாரி ஒருவன் மோக்ஷத்திற்குத் தடை ஏற்படுத்திவிடும் என்ற காரணத்தினால் புண்ணியம் செய்வதற்கு அச்சம் கொள்கிறான் என்றும், மிகுந்த வாத்ஸல்யம் கொண்ட ஸர்வேச்வரனால் கூட இவனைக் காப்பாற்ற இயலாமல் போவதற்கு ஏற்றதான பாவங்களைச் செய்வதற்கும் அஞ்சுபவன் என்றும் இந்தச் சூர்ணையில் காட்டுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது “ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி” என்கையாலே புண்யபாபங்களிரண்டும் மோக்ஷ விரோதி என்றிருக்கு மிவ்வதிகாரி, நாட்டார் ஸுகஹேதுவென்று விரும்பியிருக்கும் புண்யத்தை பகவத் ப்ராப்தி ப்ரதிபந்தகதயா அநிஷ்டாவஹமாகையாலே, துக்கஹேதுவான பாபமென்று நினைத்து வெருவியிருக்கும்; ஆச்ரிதர் செய்த குற்றம் நற்றமாகவே கொள்ளுமதி மாத்ரவத்ஸலனான வீச்வரன் இவ்வதிகாரி யேதேனுமொரு பாபத்தைப் பண்ணினாலும் அத்தைக் குற்றமாக நினையாதே நற்றமாக நினைத்துகந்திருக்கும்; அவனப்படி யிருந்தானேயாகிலும்,

இவ்வதிகாரி பாபப்ரவ்ருத்தியி லந்வயமற்று நியதனாய் வர்த்திக்கையாலே, பாபத்தை புண்யமாகக் கொள்ளும் வத்ஸலனானவனுக்கு, அதாசைப்பட்டுப் போமித்தனை யொழியக் கிடையாதென்கை. ஆக, கீழ் கர்த்தவ்யமாகச் சொன்ன கைங்கர்யமறிவது இன்னத்தாலே என்றும், கைங்கர்யந்தான் த்விவிதமென்றும், அதுதா னின்னதென்றும் ததுபாயமு மின்னத்தை யவலம்பித்திருக்குமென்றுஞ் சொல்லி, அதில் ப்ராஸங்கிக சங்கா பரிஹாரமும் பண்ணப்பட்டது.

**விளக்கம்** – முண்டக உபநிஷத்(3-1) - ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி – பரமபுருஷனைக் காணும் அந்த நேரத்தில் தனது புண்ணியம் மற்றும் பாவம் ஆகிய இரண்டையும் உதறியவனாக, உலகத்தொடர்பு அற்றவனாக பரம புருஷனை ஒத்த நிலையை அடைகிறான் - என்று கூறுவது காண்க. அதாவது புண்ணியம் மற்றும் பாவம் ஆகிய இரண்டுமே மோக்ஷத்திற்கு விரோதிகள் என்று இந்த அதிகாரி அறிகிறான். இந்த உலகில் உள்ள மனிதர்கள் அனைவரும் “இன்பம் அளிக்கவல்ல காரணம்” என்று புண்ணியத்தை விரும்பியுள்ளனர்; அதனால் இத்தகைய புண்ணியம் என்பது ஸர்வேச்வரனை அடையத் தடையாக உள்ளது என்பதை உணர்ந்து, அது விருப்பம் இல்லாதவற்றை அளிப்பதாக உணர்ந்து, அதனைத் துக்கத்திற்குக் காரணமான பாவம் என்றே எண்ணி பயம் கொள்கிறான். (அவன் பாபத்தைப் புண்யமென்றிருக்கும்) – தனது அடியார்கள் ஏதேனும் பாவம் செய்தபோதிலும், அதனைக் குற்றம் என்று கொள்ளாமல், மிகுந்த வாத்ஸல்யம் காரணமாக ஸர்வேச்வரன் அவற்றைக் குணம் என்றே கருதுகிறான். (அவனுக்கது கிடையாது; இவன் செய்யான்) – ஸர்வேச்வரன் இப்படி உள்ளவனாக இருந்தபோதிலும், இந்த அதிகாரி பாவச் செயல்களில் தொடர்பு அற்றவனாக எப்போதும் உள்ளதால், பாவங்களையும் புண்ணியமாகவே கொள்ளுகின்ற வாத்ஸல்யம் கொண்ட ஸர்வேச்வரனுக்கு, இத்தகைய எண்ணம் என்பது வெறும் ஆசையாக மட்டுமே இருக்கும் அல்லாது, நிறைவேறாத எண்ணமே ஆகும். இப்படியாக சூர்ணை-275 தொடங்கி, சூர்ணை-278 வரை கூறப்பட்டதான கைங்கர்யத்தை அறிவது எதன் மூலம் என்பதும், கைங்கர்யம் என்பது இரண்டுவிதமாகும் என்பதும், அந்த வகைகள் இவையே என்பதும், அந்த இரண்டும்விதங்களும் எதனைப் பற்றி இருக்கும் என்பதும் கூறப்பட்டது; மேலே இவற்றைக் கூறும்போது எழுகின்ற சந்தேகங்களும், அவற்றுக்கான சமாதானங்களும் உரைக்கப்பட்டன.

281. கைங்கர்யந்தான் பக்திமூலமல்லாதபோது பீதிமூலமாய் வரவேணும்.

**அவதாரிகை** – ஈத்ருச கைங்கர்ய மிவனுக்கு ஏதேனுமொரு வழியாலேயாகிலு முண்டாகவேணுமென்னு மிதினுடைய அவச்யகரணீயத்வத்தை யருளிச்செய்கிறார் மேல் (கைங்கர்யந்தான்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படிப்பட்ட கைங்கர்யம் என்பது இந்த அதிகாரிக்கு ஏதேனும் ஒரு வழியில் ஏற்படவேண்டும் என்றும், இப்படியாக உள்ள கைங்கர்யம் அவசியம் செய்யத்தக்கது என்றும் இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (பக்தி மூலமாய் வருகையாவது) – சேஷியுடைய முகமலர்த்திக் குறுப்பானவையே செய்துகொண்டு நிற்கவேண்டும்படியான தத்விஷய ப்ரேமமடியாக வருகை. (அல்லாதபோது பீதி மூலமாய் வருகையாவது) - அதின்றிக்கே யொழிந்தால், “அகிஞ்சித்கரஸ்ய சேஷத்வாநுபபத்தி:” என்கிறபடியே – சேஷ வ்ருத்தியில்லாதபோது சேஷத்வஹாநி பிறக்குமென்னும் பீதியடியாக வருகை. இதில் பக்தி மூலமானதுவே முக்க்யம், ததலாபத்தில் பீதிமூலந்தானாகிலும் வேணுமென்றபடி.

**விளக்கம்** - பக்தி மூலம் இத்தகைய கைங்கர்யம் உண்டாகிறது என்பது என்ன? ஸர்வேச்வரனின் திருமுக மலர்த்தி என்பதே குறிக்கோள் என்று கொண்டு, அதனையே கைங்கர்யத்தின் காரணமாகக் கொண்டு, அந்த முகமலர்த்திக்கு ஏற்றவற்றையே செய்தல் வேண்டும் என்று கொள்கிறான்; இத்தகைய நிலை அந்த ஸர்வேச்வரன் மீது கொள்ளும் ப்ரேமையால் உண்டாவதாகும். (அல்லாதபோது பீதி மூலமாய் வருகையாவது) – இவ்விதம் பக்தி காரணமாக ஒருவனுக்குக் கைங்கர்யம் செய்யவேண்டும் என்ற எண்ணம் ஏற்படவில்லை என்றால், பயம் காரணமாக ஏற்படும் என்கிறார். அகிஞ்சித்கரஸ்ய சேஷத்வாநுபபத்தி: – கைங்கர்யம் செய்யாதவனுக்கு அடிமைத்தனம் கிட்டாது - என்றுள்ள வாக்யத்தின்படி, கைங்கர்யம் செய்யாதபோது தனது அடிமைத்தனத்துக்கு அழிவு ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தால் கைங்கர்யம் செய்யவேண்டும் என்ற எண்ணம் உண்டாகிவிடும். ஆக பக்தியால் ஏற்படும் கைங்கர்யம் என்பதே மிகவும் முக்கியம் ஆகும்; இவ்விதம் ஏற்படவில்லையென்றால், பயம் காரணமாகவாவது உண்டாகவேண்டும் என்று கருத்து.

282. அதுவுமில்லாதபோது அதிகாரத்திலும் உபாயோபேயங்களிலும் அந்வயமின்றிக்கே யொழியும்.

**அவதாரிகை** - அதுதானு மில்லாவிடில் செய்வதென்னென்ன வருளிச்செய்கிறார் (அதுவுமில்லாதபோது) என்று தொடங்கி.

**விளக்கம்** - பயத்தாலும் கைங்கர்யம் ஏற்பட்டவில்லை என்றால் என்ன செய்வது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அமுக்க்யமான பீதிமூல கைங்கர்யந்தானுமில்லாதபோது, கிஞ்சித்காராபாவத்தாலே சேஷத்வரூபமான வதிகாரத்திலும், அதிகாரி ஸாபேக்ஷமா யிருந்துள்ள சேஷியுடைய க்ருபாரூபமான வுபாயத்திலும், இவனுடைய வநுகூலவ்ருத்தி ஸாபேக்ஷமான வவனுடைய முகமலர்த்தியாகிற வுபேயத்திலு மந்வயமற்று விடுமென்கை.

**விளக்கம்** - பயம் காரணமாக உண்டாகின்ற கைங்கர்யம் உயர்ந்தது அல்ல என்றபோதிலும், அந்தக் கைங்கர்யம் கூடக் கிட்டவில்லை என்றால் என்ன செய்வது? கைங்கர்யம் இல்லாத காரணத்தினால் – அடிமைத்தன்மை என்ற தகுதி, அதிகாரியை விரும்பியபடி உள்ள ஸர்வேச்வரனின் க்ருபை என்ற உபாயம், அதிகாரியின் அநுகூலமான செயல்களை எதிர்பார்த்தபடி உள்ள ஸர்வேச்வரனின் திருமுக மலர்த்தி என்ற உபேயம் ஆகிய மூன்றும் இவனுடன் எந்தவிதமான தொடர்பு இல்லாமல் போய்விடும்.

283. கைங்கர்யந்தன்னைப் பலஸாதநமாக்காதே பலமாக்க வேணும்.

**அவதாரிகை** - ஆக, கீழிரண்டு வாக்யத்தாலும் – கைங்கர்யாவச்ய கர்த்தவ்யத்வமும், கைங்கர்யாபாவத்தில்வரு மநர்த்த விசேஷங்களுங் காட்டப்பட்டது; ஏவம்வித கைங்கர்யத்தில் ஸாதந புத்தியைத் தவிர்க்கிறார் மேல் (கைங்கர்யந்தன்னை) என்று தொடங்கி.

**விளக்கம்** – கடந்த இரண்டு சூர்ணைகள் மூலம் கைங்கர்யம் என்பது அவசியம் செய்யப்படவேண்டும் என்பதும், கைங்கர்யம் செய்யாமல் விட்டால் உண்டாகும் தீமைகளும் கூறப்பட்டன. இப்படியாக உள்ள கைங்கர்யம் என்பது ஒரு பலனைப் பெற உதவுகின்ற கருவி (ஸாதனம்) என்ற எண்ணத்துடன் கைங்கர்யத்தைச் செய்தல் கூடாது என்று இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்படி யவச்ய கரணீயமாகக் கீழ்ச்சொன்ன கைங்கர்யந் தன்னைப் பண்ணுமளவில் த்ருஷ்டாத்ருஷ்ட பலங்களி லேதேனுமொன்றுக்கு ஸாதநமாக ப்ரதிபத்தி பண்ணாதே ஸ்வயம் ப்ரயோஜநமாக ப்ரதிபத்தி பண்ணவேணுமென்கை.

விளக்கம் - இப்படியாக அவசியம் செய்ய வேண்டும் என்பதாக உள்ள கைங்கர்யத்தை இயற்றும்போது, “இந்தக் கைங்கர்யம் என்பது இந்த உலகிலோ, அந்த உலகிலோ பயன் தரும்”, என்று பலனுக்குச் சாதனமாகக் கைங்கர்யத்தை எண்ணக்கூடாது; கைங்கர்யம் மேன்மேலும் கைகூடுதல் என்பதே இதன் பலன் என்று எண்ணவேண்டும்.

284. அதாவது, தான் கையேலாதே அவனைக் கையேற்கப் பண்ணுகை.

**அவதாரிகை -** இத்தை விசதீகரிக்கிறார் மேல் (அதாவது) என்று தொடங்கி.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் உரைத்தவற்றை மேலும் விவரிக்கிறார்.

**வ்யாக்யானம்** – (அதாவது) என்றது, இத்தை ஸாதநமாக்காதே பலமாக்குகையாவதென்றபடி. (தான் கையேலாதே அவனைக் கையேற்கப்பண்ணுகையாவது) – கைங்கர்யம் பண்ணுகிற தான் அதுக்குப் பலமாக வவன்பக்கலிலே யொன்றை அர்த்தியாதே ஸ்வயம் ப்ரயோஜநமாகச் செய்யா நின்று கொண்டு, கைங்கர்யங் கொள்ளுகிறவனை "தாஸ் ஸர்வாச் சிரஸா தேவ: பரதிக்ருஹ்ணாதிவை ஸ்வயம்" என்கிறபடியே தன் பூர்த்தி பாராதே ஸாபேக்ஷனாய் விரும்பிக் கொள்ளும்படி பண்ணுகை.

விளக்கம் – "அதாவது" என்றால் இந்தக் கைங்கர்யத்தைச் சாதனம் என்று கொள்ளாமல் பலன் என்று கொள்ளுதல் என்று கருத்து. "தான் கையேலாதே அவனைக் கையேற்கப்பண்ணுகையாவது" என்பது – கைங்கர்யம் செய்கின்ற ஒருவன் அதற்குப் பலனாக ஸர்வேச்வரனிடம் எதனையும் வேண்டிக் கொள்ளாமல், "கைங்கர்யம் செய்வதே பலன்" என்று எண்ணியபடிச் செய்யவேண்டும். கைங்கர்யத்தைக் கொள்ளும் ஸர்வேச்வரன், மஹாபாரதம் - தாஸ் ஸர்வாச் சிரஸா தேவ: பரதிக்ருஹ்ணாதிவை ஸ்வயம் - பரமைகாந்திகளால் செய்யப்படும் எந்தவிதமான கைங்கர்யங்களையும் ஸர்வேச்வரன் தனது தலையால் ஏற்கிறான் - என்பதற்கு எற்றபடி, தனக்கு எல்லாம் கிடைத்தது போன்று, விருப்பத்துடன் ஏற்கும்படியாகச் செய்யவேண்டும் (அதாவது ஸர்வேச்வரன் இந்தக் கைங்கர்யத்தை எதிர்பார்த்தபடி உள்ளவனாகச் செய்யவேண்டும்).

285. கொடுத்துக் கொள்ளாதே கொண்டத்துக்குக் கைக்கூலி கொடுக்கவேணும்.

**அவதாரிகை** - இவ்வளவும் போராது, தான் கொடுத்ததை அவன் கொண்டதுக்கு ப்ரத்யுபகாரம் பண்ணவும் வேணுமென்கிறார் மேல் (கொடுத்து) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஸர்வேஸ்வரனிடம் தான் எதனையும் கேட்காமல், அவனை நம்மிடமிருந்து எதேனும் பெறவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளினால் மட்டுமே போதாது; தான் அளித்ததை அவன் ஏற்றுக் கொண்டதற்கு நன்றி செலுத்தும் செயல் ஏதேனும் செய்தல் வேண்டும் என்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "தேஹிமே ததாமிதே" என்கிறபடியே, தானவனுக் கொன்றை ஸமர்ப்பித்து அவன் பக்கலிலேயொரு ப்ரயோஜநம் கொள்ளாதே, "இன்று வந்தித்தனையு

மமுது செய்திடப்பெறில், நானென்று நூறாயிரமாக் கொடுத்துப் பின்னுமாளுஞ் செய்வன்” என்ற பெரியாழ்வார் திருமகளாரைப்போலே, தான் ஸமர்ப்பித்த த்ரவ்யத்தை யவனங்கீகரித்த வுபகாரத்துக்காக, அப்படியிருந்துள்ளவற்றைத் தன்னபிநிவேசாநு குணமாக நிறையக் கொண்டு வந்து ஸமர்ப்பியா நின்று கொண்டு பின்னையு மடிமை செய்கையாகிற கைக்கூலி கொடுக்க வேணுமென்கை.

விளக்கம் - தேஹிமே ததாமிதே - எனக்கு ஏதேனும் கொடுப்பாயாக, நான் உனக்குக் கொடுக்கிறேன் - என்று கூறுவது போன்று, தான் ஸர்வேச்வரனுக்கு ஏதேனும் ஒன்றை அளித்துவிட்டு, அதன் காரணமாக, தான் அவனிடமிருந்து எந்தப் பயனையும் எதிர்பாராமல் இருக்கவேண்டும். நாச்சியார் திருமொழி (9-7) – இன்று வந்தித்தனையு மமுது செய்திடப்பெறில், நானென்று நூறாயிரமாக் கொடுத்துப் பின்னுமாளுஞ் செய்வன் - என்று அருளிச்செய்த பெரியாழ்வாரின் திருமகள் போன்று, தான் அளித்த பொருள் ஒன்றை அவன் ஏற்றுக்கொண்டால், அதன் காரணமாகவே, தனது ஆசைக்கு ஏற்றபடி அந்தப் பொருளை மிகவும் அதிகமாகக் கொண்டு வந்து அவனுக்கு அளிக்கவேண்டும். அதற்கும் மேலே, அடிமை செய்தல் என்னும் கைக்கூலியையும் அளிக்கவேண்டும்.

286. ஸ்ரீவிதுரரையும் ஸ்ரீமாலாகாரரையும் கூனியையும் போலே கிஞ்சித்கரித்தால் ஸ்வரூபம் நிறம் பெறுவது.

அவதாரிகை - இப்படி அநந்யப்ரயோஜநனாய் கிஞ்சித்கரித்தாலாய்த்து ஸ்வரூப முஜ்ஜ்வலமாவ தென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் மேல் (ஸ்ரீவிதுரரையும்) என்று தொடங்கி.

விளக்கம் – இவ்விதமாக எந்தவிதமான பயனையும் எதிர்பாராமல் கைங்கர்யம் செய்தால் மட்டுமே ஜீவன் ப்ரகாசம் அடையும் என்பதை ஓர் உதாரணம் மூலம் அருளிச்செய்கிறார்.

287. மடிதடவாத சோறும் சுருநாறாத பூவும் சுண்ணாம்பு படாத சாந்துமிறே யிவர்கள் கொடுத்தது.

**அவதாரிகை** - த்ருஷ்டாந்தபூதரான வவர்கள் கிஞ்சித்கரித்த ப்ரகாரந்தன்னை யருளிச்செய்கிறார் (மடிதடவாத) என்று தொடங்கி.

விளக்கம் - கடந்த சூர்ணையில் உதாரணமாகக் கூறப்பட்டவர்கள் செய்த கைங்கர்யத்தின் வகையை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – (மடிதடவாத சோறாவது) – முந்துற வாதரத்தோடே யிட்டு பின்னை இதுக்குக் காசு தரலாகாதோ என்று மடிச்சீலை சோதிக்கைக்காக மடியைப் பிடித்துத் தடவி உண்டவன் நெஞ்சு உளையும்படி பண்ணும் ப்ரயோஜநாந்தர பரரிடுஞ் சோறு போலன்றிக்கே, உண்டவன் நெஞ்சு உகக்கும்படி அநந்யப்ரயோஜநமான சோறு; இப்படியிருந்துள்ள சோறிறே, "புக்தவத்ஸு த்விஜாகர்யேஷு நிஷண்ண: பரமாஸநே, விதுராந்நாநிபுபுஜே சுசீநி குணவந்திச" என்று பாவநத்வ போக்யத்வ ப்ரசஸ்தமாம்படி ஸ்ரீவிதுரரவனுக்கு ஸமர்ப்பித்தது.

விளக்கம் - (மடிதடவாத சோறாவது) - முதலில் ஆசையுடன் ஒருவனுக்கு உணவு அளிக்கக்கூடும். அதன் பின்னர் அவன் அதற்கான விலையை அளிக்க்கூடாதோ என்ற ஆசை ஏற்படக்கூடும். இதற்கு அவனிடம் பணம் உள்ளதா என்று சோதிக்கும் விதமாக அவனுடைய மடியை பிடித்துத் தடவக்கூடாது. இது போன்று செய்து, உண்டவனுடைய நெஞ்சத்தை வருத்தம் கொள்ளும்படிச் செய்பவர்கள் அளிக்கின்ற உணவு போன்று அல்லாமல், உண்டவனின் நெஞ்சம் மகிழும்படியாக எந்தப் பயன்களையும் எதிர்பார்க்காத உணவு என்று கருத்து. இப்படிப்பட்ட உணவை, மஹாபாரதம் உத்யோகபர்வம் - புக்தவத்ஸு த்விஜாகர்யேஷு நிஷண்ண: பரமாஸநே, விதுராந்நாநிபுபுஜே சுசீநி குணவந்திச - அந்தணர்கள் உணவு உண்ட பின்னர், உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த க்ருஷ்ணன், தூய்மையாகவும் இனிமையாகவும் உள்ளதான விதுரரின் உணவினை ஏற்றுக்கொண்டான் – என்று கூறுவதற்கு ஏற்ப, தூய்மையும் இனிமையும் கலந்து விதுரர் அளித்தார் அல்லவோ?

**வ்யாக்யானம்** - (சுருநாறாத பூவாவது) அக்நி ஸ்பர்சமுண்டானால் சுரு நாறும்படியிறே பூவின் ஸ்வபாவமிருப்பது; அப்படியே, ப்ரயோஜநாந்தர ஸ்பர்சமாகிற சுருநாற்றமில்லாதபடி அநந்யப்ரயோஜநத்வ பரிமளயுக்தமாகவிடும் புஷ்பம்; இப்படியிருந்துள்ள பூவிறே, "ப்ரஸாத பரமௌ நாதௌ மமகேஹ முபாகதௌ, தந்யோஹ மர்ச்சயிஷ்யா மீத்யாஹ மால்யோப ஜீவந:" என்று விசேஷஜ்ஞர் ச்லாகிக்கும்படி அத்யாதர பூர்வகமாக ஸ்ரீமாலாகாரரவனுக்குக் கொடுத்தது.

விளக்கம் - (சுருநாறாத பூவாவது) - நெருப்பு பட்டவுடன் பொசுங்கும் வாசம் வீசுவது போன்று அல்லவோ மலரின் இயல்பு உண்டு? இது போன்று மற்ற பயன்களை நாடுதல் என்பதான பொசுங்கல் வாசம் இல்லாதபடியாக, மற்ற பயன் நாடாமல் இருத்தல் என்பதான நறுமணத்துடன் கூடியதான மலரை உரைக்கிறார். இப்படியாக உள்ள மலர் எது? ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-9-20) – ப்ரஸாத பரமௌ நாதௌ மமகேஹ முபாகதௌ, தந்யோஹ மர்ச்சயிஷ்யா மீத்யாஹ மால்யோப ஜீவந: - க்ருபையுடன் கூடிய க்ருஷ்ணனும் பலராமனும் இன்று எனது இல்லத்திற்கு எழுந்தருளியுள்ளனர்; மிகுந்த புண்ணியம் செய்துள்ள நான் அவர்களை ஆராதிக்கப்போகிறேன் என்று மாலை கட்டுபவன் உரைத்தான் – என்று மிகுந்த அறிவு கொண்ட பராசரர் உரைத்தது போன்று, மாலை தொடுப்பவன் மிகுந்த அன்புடன் க்ருஷ்ணனுக்கு அளித்த மலரே இங்கு உரைக்கப்பட்டது.

**வ்யாக்யானம்** – (சுண்ணாம்புபடாத சாந்தாவது) – ஆயிரம் பொன்னழியக் கூட்டியும் சுண்ணாம்பு திவலைபடக் கெடும்படியிறே சாந்தின் ஸ்வபாவம்; அப்படியே ப்ரயோஜநாந்தர ஸ்பர்சமாகிற தோஷமின்றிக்கே அநந்ய ப்ரயோஜநமான சாந்து; இப்படியிருந்துள்ள சாந்திறே "ஸுகந்த மேதத் ராஜார்ஹம் ருசிரம் ருசிராநநே, ஆவயோர் காத்ர ஸத்ருசம் தீயதா மநுலேபநம்" என்று அவனர்த்தித்த வநந்தரம் பூசுஞ்சாந்தாம்படி கூனி கொடுத்தது. ஆக, இப்படி அநந்ய ப்ரயோஜநமாக கிஞ்சித்கரித்தாலாய்த்து கைங்கர்யாச்ரயமான ஸ்வரூப முஜ்ஜ்வலமாவ தென்கை. ஆக, இவ்வளவும் வஸ்தவ்யாதி கணைநையில் சரமோக்தமான கர்த்தவ்யரூப கைங்கர்யத்தை சோதித்து தாத்ருச கைங்கர்யத்தாலே ஸ்வரூப முஜ்ஜ்வலமாமென்னுமிடத்தையு மருளிச்செய்தாராய்த்து.

விளக்கம் - (சுண்ணாம்புபடாத சாந்தாவது) – ஆயிரம் பொற்காசு செலவு செய்து அரைக்கப்பட்ட சந்தனம் என்பது ஒரு துளி சுண்ணாம்புக் கரைசல் பட்டால் வீணாகப் போகும் என்றபடி உள்ளதே சந்தனத்தின் இயல்பாகும். இப்படியாக மற்ற பயன்களை நாடுதல் என்பதான சுண்ணாம்பு கலவாமல், எந்தவிதமான பயனையும் எண்ணாமல் அளிக்கப்படும் சந்தனம் இங்கு உரைக்கப்பட்டது; இது என்ன? ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-20-3) - ஸுகந்த மேதத் ராஜார்ஹம் ருசிரம் ருசிராநநே, ஆவயோர் காத்ர ஸத்ருசம் தீயதா மநுலேபநம் – அழகான முகம் கொண்ட கூனியே! இந்தச் சந்தனம் வாசனை பொருள்கள் கலந்தது; இது அரசர்களுக்கு மட்டுமே ஏற்றது; இது குங்குமப்பூவுடன் சேர்க்கப்பட்டது; ஆகவே எங்களுடைய சரீரத்திற்கு ஏற்றபடியாக உள்ள இந்தச் சந்தனத்தை எங்களுக்கு அளிப்பாயாக – என்று க்ருஷ்ணன் விருப்பத்துடன் கேட்டான். உடனேயே, திருவாய்மொழி (4-3-1) – பூசும் சாந்து - என்பதற்கு ஏற்ப, க்ருஷ்ணனுக்கு அதனைக் கூனி அளித்தாள். எனவே மற்ற எந்தவிதமான பயனையும் எதிர்பாராமல் கைங்கர்யம் செய்தால் மட்டுமே, கைங்கர்யம் செய்வதன் பலன் காரணமாக ஆத்மா ப்ரகாசம் அடைகிறது என்று கருத்து. இப்படியாகச் சூர்ணை 274ல் வஸ்தவ்யம் போன்ற பலவிதமான கைங்கர்யங்களில் கூறப்பட்டதான தோஷங்களை விலக்கி, அப்படிப்பட்ட கைங்கர்யம் காரணமாகவே ஆத்மா தனது ப்ரகாசத்தை அடையும் என்பதை அருளிச்செய்தார்.

288. கைங்கர்ய தசைபோலே முன்புள்ள தசைகளிலும் ஸ்வரூபத்தை யுஜ்ஜ்வலமாக்க வேணும்.

**அவதாரிகை** - இப்படி அநந்யப்ரயோஜநனாய்க் கொண்டு கைங்கர்யஞ்செய்தாலே ஸ்வரூபமுஜ்ஜ்வலமாவ தென்று சொன்னவிதிலே முக்தாவஸ்தையில் கைங்கர்ய தசையில் ஸ்வரூபௌஜ்ஜவல்யமும் அர்த்தாதுக்தமென்று நினைத்து, இப்படி கைங்கர்ய தசையில் ஸ்வரூபத்தை யுஜ்ஜ்வலமாக்குமோபாதி ஏதத்பூர்வ தசாவிசேஷங்களிலும் ஸ்வரூபத்தை யுஜ்ஜ்வலமாக்கவேணுமென் றருளிச்செய்கிறார் மேல் (கைங்கர்ய தசைபோலே) என்று தொடங்கி.

விளக்கம் - இவ்விதமாக மற்ற எந்தப் பயனையும் எண்ணாமல் கைங்கர்யம் செய்தால் மட்டுமே ஜீவாத்மாவின் ஸ்வரூபம் ப்ரகாசம் அடையும் என்று கூறினார். இதே போன்று முக்தி பெற்ற நிலையிலும் கைங்கர்யம் செய்யும்போது ஆத்மா இவ்விதம் ப்ரகாசத்துடன் விளக்கும் என்பதும் இங்கு மறைமுகமாகக் கிட்டும் அர்த்தம் என்று உரைக்க எண்ணினார். ஆகவே இவ்விதமாகக் கைங்கர்யம் செய்யும்போது ஸ்வரூபம் எவ்விதம் ப்ரகாசம் அடைகிறதோ அதே போன்று, அதற்கு முந்தைய நிலைகளிலும் ஆத்மாவை ப்ரகாசம் அடையச் செய்யவேண்டும் என்று உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** – (முன்புள்ள தசைகளிலும்) என்றது – கைங்கர்யத்துக்குப் பூர்வதசைகளிலு மென்றபடி.

விளக்கம் – “முன்புள்ள தசைகளிலும்” என்பதன் மூலம் கைங்கர்யம் செய்யத் தொடங்கும் நிலைக்கு முன்பிருந்த காலங்களில் அல்லது நிலைகளில் என்று கூறினார்.

289. முன்பே நாலுதசை யுண்டு.

அவதாரிகை - முன்பே யெத்தனை தசை யுண்டென்னு மாகாங்க்ஷையிலே யருளிச் செய்கிறார் (முன்பே நாலுதசையுண்டு) என்று.

**விளக்கம்** - கைங்கர்யம் தொடங்குவதற்கு முன்பு எத்தனை நிலைகள் உண்டு என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

290. அதாவது ஜ்ஞாநதசையும் வரணதசையும் ப்ராப்திதசையும் ப்ராப்யாநுபவதசையும்.

அவதாரிகை - அந்த நாலுதசையுந்தா னேதென்னு மபேக்ஷையிலே யருளிச்செய்கிறார் (அதாவது) என்று தொடங்கி.

விளக்கம் – அந்த நான்கு நிலைகள் எவை என்ற கேள்விக்கு இப்போது விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – (ஜ்ஞாநதசையாவது) - ஆசார்யோபதேசத்தாலே தனக்கு ஜ்ஞாநம் பிறந்து செல்லுகிற தசை. (வரணதசையாவது), ஸித்தோபாயபூதனான ஸர்வேச்வரனைத் தனக்கு உபாயமாக வரிக்கிற தசை. (ப்ராப்திதசையாவது), ஸம்ஸாரிக ஸகல துரித நிவ்ருத்தி பூர்வகமாக அவன் திருவடிகளை ப்ராபிக்கிற தசை. (ப்ராப்யாநுபவ தசையாவது), ப்ராப்யபூதனான வவனைக்கிட்டி யநுபவிக்கிற தசை. இவ்வநுபவ ஜநித ப்ரீதி காரித கைங்கர்யமிறே பரமபுருஷார்த்தம். ப்ரதமாபேக்ஷிதமான தத்த்வ ஜ்ஞாநமும், ஜ்ஞாந

பலமான வுபாயவரணமும், வரணபலமான ப்ராப்தியும், ப்ராப்திபலமான வநுபவமும், அநுபவஜநித ப்ரீதிகாரித கைங்கர்யமுமாயிறே க்ரமமிருப்பது; ஆகையாலே, கைங்கர்ய தசை சரமதசையாய், பூர்வதசைகள் நாலு மிதிலே வந்தேறுகைக் கிட்டபடியொழுங்கா யிருக்கும்.

**விளக்கம்** - (ஜ்ஞாநதசையாவது) - ஆசார்யனின் உபதேசம் காரணமாக ஞானம் ஏற்பட்டு, அந்த ஞானம் தொடர்கின்ற நிலை. (வரண தசை) - தனக்கு எப்போதும் உதவி செய்யச் சித்தமாக உள்ளவனும், ஸித்தோபாயமாக உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரனைத் தனக்கு உபாயமாகக் கொள்ளும் நிலை. (ப்ராப்தி தசை) - இந்த ஸம்ஸாரத்தில் உள்ள அனைத்து பாவங்களும் நீங்கப் பெற்று ஸர்வேச்வரனின் திருவடியை அடைகின்ற நிலை. (ப்ராப்ய அனுபவ தசை) - அடையப்படும் இலக்காக உள்ள ஸர்வேச்வரனை அடைந்து அனுபவிக்கும் நிலை. இப்படிப்பட்ட அனுபவத்தின் விளைவாக ஏற்பட்ட ப்ரீதி காரணமாகவே கைங்கர்யம் ஏற்படுகிறது; இதுவே உயர்ந்த பலனாகும். முதலில் இருக்க வேண்டியதான உண்மையான ஞானமும், அந்த ஞானம் காரணமாக ஏற்படும் “உபாயத்தைக் கைக்கொள்ளுதல்” என்பதும், இவ்விதம் கைக்கொண்டதால் ஏற்படும் பகவத் ப்ராப்தியும், இவ்விதம் பகவானை அடைந்தவுடன் உண்டாகும் அனுபவமும், இந்த அனுபவம் காரணமாக ஏற்படும் மகிழ்ச்சியால் செய்யப்படும் கைங்கர்யமும் என்று வரிசையாக உள்ளது. ஆகவே கைங்கர்ய நிலை என்பது இறுதியாக உள்ள நிலையாகவும், இதற்கு முன்பு காணப்படும் நான்கு நிலைகளும் இந்தக் கைங்கர்ய நிலையை வந்தடைய உதவும் மார்க்கமாகவும் உள்ளன என்று கருத்து.

291. ஜ்ஞாந தசையில் அஜ்ஞாநத்தை முன்னிடும்; வரண தசையில் அபூர்த்தியை முன்னிடும்; ப்ராப்தி தசையில் ஆர்த்தியை முன்னிடும்; ப்ராப்யாநுபவ தசையில் அபிநிவேசத்தை முன்னிடும்.

அவதாரிகை - இவ்வோ தசைகளில் ஸ்வரூபத்தை யுஜ்ஜ்வலமாக்கும்படியை தர்சிப்பிக்கிறார் மேலே (ஜ்ஞாந தசையில்) என்று தொடங்கி.

விளக்கம் - இந்த நான்கு நிலைகளில் ஜீவாத்மா தனது ஸ்வரூபத்தை ப்ரகாசிக்கும்படிச் செய்வது எப்படி என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (ஜ்ஞாந தசையில் அஜ்ஞாநத்தை முன்னிடுகையாவது) - ஆசார்யன் மேன் மேல் தனக் கஜ்ஞாத ஜ்ஞாபநம் பண்ணும்படி தத்வஹித புருஷார்த்தங்களில் தன்னுடைய அஜ்ஞாநத்தைப் பலகாலும் விஜ்ஞாபிக்கை. (வரண தசையில் அபூர்த்தியை முன்னிடுகையாவது) “நோற்ற நோன்பிலேன்”, “நதர்ம நிஷ்டோஸ்மி”, “ஸத்கர்ம நைவகில கிஞ்சந ஸஞ்சிநோமி” இத்யாதியிற்படியே, பேற்றுக்கு ஹேதுவாகக் கொள்ளலாவதொரு ஸுக்ருதாதிகளொன்றும் தனக்கில்லாமையாகிற ஆகிஞ்சந்யத்தைப் புரஸ்கரிக்கை

(ப்ராப்தி தசையி லார்த்தியை முன்னிடுகையாவது), பெற்றபோது பெறுகிறோம் என்றிராதே, “வானுலகந் தெளிந்தே யென்றெய்துவது”, “தரியேனினி”, “கூவிக் கொள்ளுங்கால மின்னங் குறுகாதோ” இத்யாதிப்படியே, விளம்பா ஸஹத்வ நிபந்தநமான தன்னுடைய க்லேசாதிசயத்தை தர்சிப்பிக்கை. (ப்ராப்யாநுபவ தசையிலபி நிவேசத்தை முன்னிடுகையாவது), பெருவிடாயனுக்குக் குடித்த தண்ணீர் ஆராதாப்போலே அநுபூதாம்சத்தால் த்ருப்தி பிறவாதே மேன்மேலும் தனக்கு விளைந்து செல்லுகிற வநுபவாபி நிவேசத்தை ப்ராகாசிப்பிக்கை. ஆக, ஜ்ஞாநதசை முதலான நாலுதசையிலும் (ஸ்வரூபத்தை யுஜ்ஜவலமாக்குகையாவது) இவ்வோவாகாரங்களை முன்னிடுகையென்று கருத்து.

விளக்கம் - (ஜ்ஞாந தசையில் அஜ்ஞாநத்தை முன்னிடுகையாவது) - தனக்கு தத்வம், ஹிதம், புருஷார்த்தம் (உண்மை, நன்மை, பயன்) ஆகிய மூன்றைக் குறித்து ஏதும் தெரியாது என்று தனது அறியாமையை ஆசார்யனுக்கு உணர்த்தி, அவர் இவற்றைக் குறித்து நமக்கு மேன்மேலும் நாம் அறியாத விஷயங்கள் குறித்து உபதேசம் செய்யும்படியாக, பலமுறை விண்ணப்பம் செய்தல் ஆகும். (வரண தசையில் அபூர்த்தியை முன்னிடுகையாவது) - கீழே உள்ள பல வரிகளில் காணப்படுவது போன்று ஸர்வேச்வரனைப் பற்றுவதற்குக் காரணமாக உள்ள புண்ணியம் போன்ற எதுவும் தன்னிடம் இல்லை என்பதை வெளிப்படுத்தும் ஆகிஞ்சந்யத்தை (வேறு உபாயம் இல்லை என்பதை வெளிப்படுத்தல் ஆகும்:

- திருவாய்மொழி (5-7-1) – நோற்ற நோன்பிலேன்
- ஸ்தோத்ரரத்னம் (22) – ந தர்ம நிஷ்டோஸ்மி – கர்மயோகத்தில் நிற்கத் தகுதி உடையவன் அல்லன்
- ஸ்ரீவைகுண்டஸ்தவம் (88) - ஸத்கர்ம நைவகில கிஞ்சந ஸஞ்சிநோமி – சிறந்த கர்மங்களைச் சிறிதும் கடைபிடிக்கவில்லை

(ப்ராப்தி தசையி லார்த்தியை முன்னிடுகையாவது) – ஸர்வேச்வரன் தனக்குக் கிட்டும்போது கிட்டட்டும் என்று காத்திராமல், கீழே உள்ள வரிகளில் கூறுவது போன்று, தாமதத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாமல் உள்ளதற்குக் காரணமான தனது துன்பத்தைக் கூறுவதாகும்:

- பெரிய திருவாய்மொழி (6-3-8) - வானுலகந் தெளிந்தே யென்றெய்துவது
- திருவாய்மொழி (5-8-7) - தரியேன் இனி
- திருவாய்மொழி (6-9-9) – கூவிக்கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ

(ப்ராப்யாநுபவ தசையிலபி நிவேசத்தை முன்னிடுகையாவது) - மிகுந்த தாகம் எடுத்த ஒருவனுக்கு எத்தனை தண்ணீர் பருகினாலும் தாகம் சட்டென்று அடங்காதது போன்று, ஸர்வேச்வரனை அனுபவித்த காரணத்தினால் த்ருப்தி ஏற்படாமல், மேன்மேலும் அவனை

அனுபவித்தபடி இருக்கவேண்டும் என்று தனது ஆசையை வெளிப்படுத்துவது ஆகும். ஆகவே ஞானதசை போன்ற நான்கிலும் ஆத்மாவை ப்ரகாசமாக்குவது என்றால், இந்தத் தன்மைகளை முன்னிடுதல் என்று பொருள்.

292. அஜ்ஞாநம் போவது ஆசார்ய ஜ்ஞாநத்தாலே; அபூர்த்தி போவது ஈச்வர பூர்த்தியாலே; ஆர்த்தி போவது அருளாலே; அபிநிவேசம் போவது அநுபவத்தாலே.

**அவதாரிகை** - இப்படி இவனிவற்றை முன்னிட்டா லிவனுக்கிவை சமிப்ப தெத்தாலே யென்ன வருளிச்செய்கிறார் மேல் (அஜ்ஞாநம் போவது) என்று தொடங்கி.

விளக்கம் - இப்படியாக இவன் இவற்றை முன்னிறுத்துவதன் மூலம், இவனுக்கு இவை எவ்விதமாக நீங்குகிறது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - அதாவது தத்வஹிதாதிகளி லிவனுக்குள்ள அஜ்ஞாநம் ஸவாஸநமாக நிவ்ருத்தமாவது, அவற்றை யலகலகாக தர்சிப்பது அஜ்ஞாத ஜ்ஞாபநம் பண்ணுகைக் கீடான வாசார்யனுடைய ஜ்ஞாநத்தாலே; பேற்றுக்கு ஹேதுவாயிருந்துள்ள ஸத் கர்மாதிகளொன்றும் தனக்கில்லாமையாகிற வபூர்த்தி சமிப்பது, இத்தலையிலுள்ள தொன்றையு மபேக்ஷியாமல் கார்யஞ்செய்யு முபாய பூதனான வீச்வரனுடைய ஸஹகாரி நைரபேக்ஷ்யமாகிற பூர்த்தியாலே; அவிளம்பேந திருவடிகளை ப்ராபிக்கப் பெறாமையா லுண்டான வார்த்தி தீருவது, ஆர்த்திகண்டா லாற்றமாட்டாதே அப்போதே கார்யஞ்செய்து தலைக்கட்டுகைக் குறுப்பான பரது:காஸஹிஷ்ணுத்வமாகிற வவனுடைய க்ருபையாலே; அநுபவதசையி லநுக்ஷணம் பிறக்கு மபிநிவேச மடங்குவது. அவ்விஷயத்தை மேன்மேலு மநுபவிக்கையாலே யென்கை.

விளக்கம் - தத்வம் மற்றும் நன்மை (ஹிதம்) ஆகியவற்றில் இவனுக்கு உள்ள அறியாமை என்பது அடியுடன் நீங்குவது எப்படி என்றால், அவற்றை ஒவ்வொன்றாகக் காண்பித்து, இதன் காரணமாக இவற்றை இவன் அறிந்து கொள்வதற்குக் காரணமாக உள்ள ஆசார்யனின் ஞானத்தால் ஆகும். பேறு அடைவதற்குத் தகுதியாக உள்ளதான எந்தவிதமான புண்ணிய செயல்களும் தன்னிடம் இல்லை என்ற குறை நீங்குவது எப்படி என்றால் – ஜீவாத்மாவிடம் எதனையும் எதிர்பாராமல் அவனுக்குக் காரியம் செய்கின்ற உபாயமாக உள்ள ஸர்வேச்வரனுடைய “வேறு எந்தத் துணையும் எதிர்பாராமல் இருத்தல்” என்ற நிறைவு காரணமாகவே ஆகும். சற்றும் தாமதம் இல்லாமல், ஸர்வேச்வரனுடைய திருவடிகளை அடைய இயலாமல் ஏற்படும் துக்கம் நீங்குவது எப்படி என்றால் - ஜீவாத்மாவின் துன்பத்தைக் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாமல், அவனுடைய காரியங்களை உடனே செய்து முடிக்கக் காரணமாக உள்ளதான “ஸர்வேச்வரனுடைய மற்றவர்களின் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாத கருணை என்பதால் ஆகும்”. ஸர்வேச்வரனை அனுபவிக்கும்போது ஒவ்வொரு

நொடியிலும் ஏற்படுகின்ற ப்ரீதி அடங்குவது எப்படி என்றால் – அவனை மேன்மேலும் அனுபவித்தல் மூலம் ஆகும்.

293. அஜ்ஞானத்துக்கடி அபராதம், அபூர்த்திக்கடி ஜ்ஞாநபூர்த்தி, ஆர்த்திக்கடி அலாபம், அபிநிவேசத்துக்கடி அழகு.

**அவதாரிகை** – இவ்வஜ்ஞாதி சதுஷ்டயத்துக்கும் ஹேதுவேதென்னு மாகாங்க்ஷையிலே யருளிச் செய்கிறார் (அஜ்ஞாநத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - மேலே கூறப்பட்ட அஜ்ஞானம் என்பதான நான்கிற்கும் என்ன காரணம்? என்ற சந்தேகத்திற்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது ஜ்ஞாநதசையில் முன்னிடுகிற அஜ்ஞாநத்துக்கு மூலம், அநாதி காலக்ருத அக்ருத்யகரண க்ருத்யாகரணாதி ரூபமான அபராதம்; வரணதசையில் முன்னிடுகிற அபூர்த்திக்கு நிதாநம், பேற்றுக்கு ஹேதுவாக நினைக்க லாவதொன்றும் தனக்கில்லாமையை தர்சிப்பிக்கைக் குடலான ஜ்ஞாநபூர்த்தி; ப்ராப்தி தசையில் முன்னிடுகிறவார்த்திக்கு ஹேது, ப்ராப்ய வஸ்துவை சீக்ரமாகக் கிட்டப்பெறாமையாகிற அலாபம்; ப்ராப்யாநுபவ தசையில் முன்னிடுகிற அபிநிவேசத்துக்குக் காரணம், அநுபவித்தவளவால் த்ருப்தி பிறவாதே மேன்மேலு மாசைப்படப்பண்ணு மவன் வடிவழவென்கை.

**விளக்கம்** - ஞான நிலையில் ஏற்படுகின்ற அறியாமைக்குக் காரணம் எல்லையற்ற காலமாக இவனிடம் இருப்பதான "செய்யக் கூடாதவற்றைச் செய்தல், செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் இருத்தல்" என்ற இரண்டு தோஷங்கள் ஆகும். வரணநிலையில் ஏற்படும் அபூர்த்திக்குக் காரணம், அதாவது ஸர்வேச்வரனைப் பற்றும் போது முன்னிடுகிற குறைவுக்கும் காரணம் – தான் அடையப்போகும் பேற்றுக்குக் காரணமாக இருக்க வேண்டிய எதுவும் தன்னிடம் இல்லை என்பதை உணர்த்துவதான ஞானத்தின் பரிபூர்ண நிலையே ஆகும். ஸர்வேச்வரனை அடையும்போது ஏற்படுகின்ற துக்கத்துக்குக் காரணம் – அடையவேண்டிய கைங்கர்யத்தை விரைந்து அடைய இயலாமல் உள்ளதால் ஏற்படும் இழப்பு என்பதாகும். ஸர்வேச்வரனுடைய அநுபவத்தை

அடைந்த பின்னர் உண்டாகின்ற பெறும் காதலுக்குக் காரணம் – அநுபவித்த காரணத்தால் மனநிறைவு ஏற்படாமல் மேன்மேலும் ஆசைப்படும்படியாக உள்ள அவனுடைய வடிவழகு ஆகும்.

294. ஆர்த்தியு மபிநிவேசமு மிருக்கும்படி அர்ச்சிராதிகதியிலே சொன்னோம்.

**அவதாரிகை** – ஆர்த்யபிநிவேச வேஷ மிருக்கும்படி யென்னென்ன வருளிச்செய்கிறார் (ஆர்த்தியு மபிநிவேசமு மிருக்கும்படி அர்ச்சிராதிகதியிலே சொன்னோம்) என்று.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் உரைக்கப்பட்டதான ஆர்த்தி (துக்கம்) மற்றும் அபிநிவேசம் (பெருங்காதல்) ஆகிய இரண்டும் எவ்விதம் இருக்கும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ["இந்நின்ற நீர்மையினியா முறாமை" என்று தொடங்கி "திருவாணை நின்னாணை கண்டாய்" என்று தடுத்தும் வளைத்தும் பெறவேண்டும்படி பரமபக்தி தலையெடுத்தல்] என்னுமளவாக ஆர்த்தியிருக்கும்படியையும், ["செய்யவுடையுந் திருமுகமுஞ் செங்கனிவாயுங் குழலுங்கண்டு" என்கிறபடியே முன்புத்தை யழகை யநுபவித்து என்று தொடங்கி, தன்னைப் பெற்ற ப்ரீதியால் வந்த செவ்வியை யநுபவித்து] என்னுமளவாக அபிநிவேசமிருக்கும்படியையும் அந்த ப்ரபந்தத்திலே ஸுஸ்பஷ்டமாக அருளிச்செய்தாரிறே. ஆக, கைங்கர்ய தசைக்குமுன்பே நாலு தசையுண்டென்றும், அவை தானின்னதென்றும், அவ்வவ தசாநுகுணமான வஜ்ஞாதிகளை முன்னிடவே அவ்வவதசைகளில் ஸ்வரூப முஜ்ஜ்வலமாமென்றும், அவ்வஜ்ஞாதிகளைப் போக்குமவை ஆசார்ய ஜ்ஞாநாதிக ளென்றும், அவ்வஜ்ஞாநாதிகளுக்கு நிதாநங்களுஞ் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** - திருவிருத்தம் (1) – இந்நின்ற நீர்மையினியா முறாமை என்று தொடங்கி, திருவாய்மொழி (10-10-2) – திருவாணை நின்னாணை கண்டாய் – என்பது முடிய ஸர்வேச்வரனை தடுத்தும், அனைத்தும் பெறவேண்டும்படி பரமபக்தி ஏந்தி நிற்பது வரை "துக்கம்" நீடிக்கும். பெருமாள் திருமொழி (6-7) – செய்யவுடையுந் திருமுகமுஞ் செங்கனிவாயுங் குழலுங்கண்டு – என்பதற்கு ஏற்ப முன்னைய அழகை அனுபவித்து

என்று தொடங்கி, தன்னைப் பெற்ற ப்ரீதி காரணமாக அவனுக்கு ஏற்பட்ட அழகை அனுபவித்து என்று முடிய பெருங்காதல் காணப்படும். இப்படியாக இவர் அருளிச்செய்த அர்ச்சிராதி என்ற க்ரந்த்தத்தில் அருளிச்செய்தார் அல்லவோ? ஆக இதுவரை கைங்கர்ய நிலைக்கு முன்பு நான்கு நிலைகள் உள்ளன என்பதும், அவை எவை என்பதும், அந்தந்த நிலைகளுக்கு ஏற்றபடியாக அறியாமை போன்றவை வெளிப்படும்போது அந்தந்த நிலைகளில் ஆத்மா ஒளிரும் என்றும், அறியாமை போன்றவற்றை நீக்குதல் ஆசார்யனின் ஞானம் முதலானவை என்றும், அந்த அறியாமை போன்றவற்றுக்கான காரணங்கள் எவை என்றும் அருளிச்செய்தார்.

295. இவன் தனக்கு நாலுதசைபோலே நாலுகுணமுண்டு.

**அவதாரிகை** – இந்த தசாசதுஷ்டய ப்ரஸங்கத்திலே, இவனுடைய குணசதுஷ்டயத்தையு மருளிச்செய்கிறார் மேல் (இவன் றனக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - இந்த நான்கு நிலைகள் குறித்து உரைக்கப்பட்ட இந்த இடத்தில், ஜீவாத்மாவின் நான்கு குணங்களையும் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இவ்வதிகாரிக்கு ஸ்வரூபௌஜ்ஜ்வல்யத்துக் குடலாகக் கீழ்ச் சொன்ன தசாசதுஷ்டயம்போலே ஸ்வரூபௌஜ்ஜ்வல்ய ஹேதுவான குணசதுஷ்டயமு முண்டென்கை.

**விளக்கம் -** இந்த அதிகாரியின் ஆத்மா ஒளி வீசுவதற்கான காரணமாகக் கீழே கூறப்பட்ட நான்கு நிலைகள் போன்று, இந்த ஆத்மா ஒளி வீசுவதற்குக் காரணமாக நான்கு குணங்களும் உண்டு.

296. அதாவது ஜ்ஞாநமு மஜ்ஞாநமும் சக்தியுமசக்தியும்.

**அவதாரிகை** - அவைதானெவை யென்னு மாகாங்க்ஷையிலே (அதாவது ஜ்ஞாநமு மஜ்ஞாநமும் சக்தியுமசக்தியும்) என்று அந்த குணங்கள் தன்னை யருளிச்செய்கிறார்.

**விளக்கம் -** அந்த நான்கு குணங்கள் எவை என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

297. இதுதான் அவனுக்கு முண்டு.

**அவதாரிகை** – இவனுடைய குணசதுஷ்டயஞ் சொன்ன ப்ரஸங்கத்திலே ஈச்வரனுக்கு மிவையுண்டென்னுமிடத்தை யருளிச்செய்கிறார் (இதுதான் அவனுக்கு முண்டு) என்று.

**விளக்கம்** - ஜீவாத்மாவின் நான்கு குணங்கள் குறித்துக் கூறப்பட்ட இந்த இடத்தில் ஸர்வேச்வரனுக்கும் இந்த நான்கு குணங்களும் உண்டு என்கிறார்.

**வ்யாக்யானம்** – (அவன்) என்று கீழ்ச்சொல்லிக்கொண்டு வந்த ஈச்வரனைப் பராமர்சிக்கிறது.

**விளக்கம்** - “அவன்” என்று சூர்ணையில் உள்ள பதம் கடந்த சூர்ணைகளில் உரைக்கப்பட்ட ஸர்வேச்வரனைக் குறிப்பதாகும்.

298. அவனுடைய ஜ்ஞாநத்துக்கிலக்கு இவனுடைய குணம்; அஜ்ஞாநத்துக்கிலக்கு இவனுடைய தோஷம். சக்திக்கிலக்கு இவனுடைய ரக்ஷணம்; அசக்திக்கிலக்கு பரித்யாகம்.

**அவதாரிகை** – இப்படி இருந்துள்ள இருவருடைய குணங்களுக்கு விஷயங்களெவை யென்ன, அவற்றை விபஜித்தருளிச் செய்கிறார் (அவனுடைய) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக உள்ள ஜீவாத்மா மற்றும் ஸர்வேச்வரன் ஆகிய இருவருடைய குணங்களுக்கும் இலக்கு என்ன என்பதைத் தனித்தனியாக அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – கீழெடுத்தவடைவி லன்றிக்கே ஈச்வர குணவிஷயங்களை முந்துறவருளிச் செய்தது, சேதநகுண விஷயங்கள் சொல்லி முடித்தால் அதின்மேலே ப்ராஸங்கிகமாக நிஷித்த சாதுர்வித்யத்தை விஸ்தரேண அருளிச்செய்கைக்காக. (அவனுடைய ஜ்ஞாநத்துக்கிலக்கு இவனுடைய குணம்) என்றது, “யஸ்ஸர்வஜ்ஞ:” என்றும்,

"ஸஹஸ்ராம்சு:" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வஜ்ஞனான அவனுடைய திவ்ய ஜ்ஞாநத்துக்கு விஷயம், அத்வேஷாபிமுக்க்யந் தொடங்கி யிச்சேதனன் பக்கலுண்டான ஆத்மகுண மென்கை. (அஜ்ஞாநத்துக்கிலக்கு இவனுடைய தோஷம்) என்றது, "அவிஜ்ஞாதா ஸஹஸ்ராம்சு:" என்றும், "அவிஜ்ஞாதாஹி பக்தாநாமாகஸ்ஸு கமலேக்ஷண:, ஸதா ஜகத் ஸமஸ்தஞ்ச பச்யந்நபி ஹ்ருதிஸ்தித:" என்றும் சொல்லுகிறபடியே, ஸர்வஜ்ஞனா யிருக்கச்செய்தே அவிஜ்ஞாதாவாயிருக்கு மவனுடைய வஜ்ஞாநத்துக்கு விஷயம், ப்ரக்ருதிவச்யனான விவன் பண்ணும் அக்ருத்யகரணாதி தோஷமென்கை. (சக்திக்கிலக்கு இவனுடைய ரக்ஷணம்) என்றது, "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே" என்கிறபடியே ஸர்வசக்தியான அவனுடைய அகடிதகடநா ஸாமர்த்யமாகிற சக்திக்கு விஷயம், இவனுடைய ஸகலாநிஷ்டங்களையும் போக்கி ஸ்வரூபாநுகுணமான ஸகலேஷ்டங்களையும் கொடுக்கையாகிற ரக்ஷணமென்கை. (அசக்திக்கிலக்கு பரித்யாகம்) என்றது, அப்படி ஸர்வசக்தியான அவனுடைய வசக்திக்கு விஷயம், துஸ்ஸஹமாக விவன் செய்யும் தோஷங்களாலே சீறிக் கைவிடுகை யென்கை.

**விளக்கம்** - கடந்த சூர்ணைகளில் உரைத்தபடி ஜீவனின் குணங்கள் குறித்து முதலில் கூறாமல், ஸர்வேச்வரனுடைய குணங்களுக்கு உள விஷயங்களை முதலில் உரைத்தது ஏன் என்றால் – சேதனர்களின் குணங்களை உரைத்து முடித்தால், அதனை நிறைவு செய்யும்விதமாக சூர்ணை 300 தொடங்கி, தள்ளத்தக்க வேண்டிய குணங்கள் குறித்து விரிவாக உரைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால் ஆகும். (அவனுடைய ஜ்ஞாநத்துக்கிலக்கு இவனுடைய குணம்) – மாண்டூக்ய உபநிஷத் (1-10) – யஸ்ஸர்வஜ்ஞ: – யார் ஒருவன் அனைத்தையும் அறிந்தவனோ – என்றும், ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் – ஸஹஸ்ராம்சு: – அடியார்களின் குணங்களை ஆயிரம் மடங்காக ஏற்பவன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்தும் அறிந்தவனாகிய ஸர்வேச்வரனின் திவ்யமான ஞானத்திற்கு இலக்கு எது என்றால் – ஸர்வேச்வரனை வெறுக்காமல் இருத்தல், ஸர்வேச்வரனிடம் அன்புடன் இருத்தல் தொடக்கமாக உள்ள ஆத்ம குணங்களே ஆகும். (அஜ்ஞாநத்துக்கிலக்கு இவனுடைய தோஷம்) – ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் – அவிஜ்ஞாதா – அடியார்களின் குற்றங்களை அறியாதவன், அவர்களின் குணங்களை ஆயிரமாகக் கொள்பவன் – என்றும், அவிஜ்ஞாதா – தாமரை மலர் போன்ற கண்கள் கொண்ட ஸர்வேச்வரன் எப்போதும் ஜீவனின் மனதில் இருந்தபடி, அனைத்தையும் அறிந்தாலும், அவனுடைய தோஷங்களை அறியாதவன் போன்றே உள்ளான் என்றும்

கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரன் அனைத்தும் அறிந்தவன் என்றபோதிலும் அறியாதவனாக உள்ளது போன்று காணப்படும் அவனுடைய அறியாமைக்கு இலக்கு – சரீரத்தில் சிக்கியுள்ள ஜீவன் செய்யக்கூடாத பாவங்களே ஆகும். (சக்திக்கிலக்கு இவனுடைய ரக்ஷணம்) – ச்வேதாஸ்வதர உபனிஷத் – பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே – ஸர்வேச்வரனின் சக்தியானது மேலானதும் உயர்ந்ததும் ஆகும் என்றே கூறப்படுகிறது – என்பதற்கு ஏற்ப அனைத்து சக்திகளும் கொண்ட அவனுடைய "யாராலும் செய்ய இயலாதவற்றைச் செய்து முடிக்கும் சாமர்த்யம் கொண்டவன்" என்பதன் இலக்கு – ஜீவாத்மாவுக்கு விருப்பம் அல்லாத அனைத்தையும் நீக்கி, அவன் கைங்கர்யம் செய்வதற்கு ஏற்றதான ஸ்வரூபத்தை அளித்தல் என்ற ரக்ஷணம் ஆகும். (அசக்திக்கிலக்கு பரித்யாகம்) – இப்படியாக அனைத்து சக்தியும் கொண்ட அவனுடைய சக்தியின்மைக்கு விஷயம் – பொறுக்க இயலாத அளவிற்கு இவன் பாவம் செய்வதைக் கண்டு, மிகுந்த கோபம் கொண்டு, கைவிடுதலே ஆகும்.

299. இவனுடைய ஜ்ஞாநத்துக்கிலக்கு ஆசார்யகுணம்; அஜ்ஞாநத்துக்குக்கிலக்கு ஆசார்யதோஷம்; சக்திக்கிலக்கு ஆசார்யகைங்கர்யம்; அசக்திக்கிலக்கு நிஷித்தானுஷ்டாநம்.

**அவதாரிகை** – இப்படி ஈச்வர குண விஷயங்களை யருளிச்செய்து மேல் சேதந குண விஷயங்களை யருளிச்செய்கிறார் (இவனுடைய) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக ஸர்வேச்வரனுடைய குணங்களுக்கு இலக்காக உள்ள விஷயங்கள் குறித்து அருளிச்செய்து, ஜீவனின் குணங்களுக்கு இலக்காக உள்ளவை குறித்து இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (இவனுடைய ஜ்ஞாநத்துக்குகிலக்கு ஆசார்யகுணம்) என்றது, இச்சேதநனுடைய ஜ்ஞாநத்துக்கு விஷயம், மஹோபகாரகனான ஆசார்யனுடைய ஸத்குண ஸமூஹமென்கை. (அஜ்ஞாநத்துக்கிலக்கு ஆசார்ய தோஷம்) என்றது, இவனுடைய அஜ்ஞாநத்துக்கு விஷயம், ஆசார்யன் திருமேனி ஸ்வபாவஜமாய் ஆகந்துகமாயுள்ள தோஷமென்கை. (சக்திக்கிலக்கு ஆசார்ய கைங்கர்யம்) என்றது, இவன் ப்ரவ்ருத்தி சக்திக்கு விஷயம், ஸ்வாசார்யனுக்கு உகப்பாகச் செய்யும் கைங்கர்யமென்கை. (அசக்திக்கிலக்கு நிஷித்தாநுஷ்டாநம்) என்றது, இவனுடைய அசக்திக்கு விஷயம்,

ஸ்வரூபோபாய புருஷார்த்த விரோதிகளான சாஸ்த்ர நிஷித்தங்களினுடைய அநுஷ்டாந மென்கை.

**விளக்கம்** - (இவனுடைய ஜ்ஞாநத்துக்குகிலக்கு ஆசார்யகுணம்) – சேதனர்களின் ஞானத்துக்கு இலக்கு எது என்றால் மிகப் பெரிய உபகாரம் செய்த ஆசார்யனுடைய உயர்ந்த குணங்களின் கூட்டமே ஆகும். (அஜ்ஞாநத்துக்கிலக்கு ஆசார்ய தோஷம்) – சேதனனின் அறியாமைக்கு இலக்கு எதுவென்றால் ஆசார்யனுக்கு அவருடைய சரீர தொடர்பு காரணமாக ஏற்படக்கூடிய நோய் முதலான தோஷங்கள் ஆகும். (சக்திக்கிலக்கு ஆசார்ய கைங்கர்யம்) – இவன் செய்கின்ற செயல்களின் சக்திக்கு இலக்கு எதுவென்றால் தனது ஆசார்யனுக்கு மிகவும் மகிழ்வுடன் செய்கின்ற கைங்கர்யங்கள் ஆகும். (அசக்திக்கிலக்கு நிஷித்தாநுஷ்டாநம்) – இவனுடைய அசக்திக்கு இலக்கு எதுவென்றால் தனது ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் போன்றவற்றுடன் முரண்பாடு கொண்டவையும் சாஸ்திரங்களால் தடுக்கப்பட்டவையும் ஆகிய செயல்களைச் செய்தல் என்பதாகும்.

300. நிஷித்தந்தானும் நாலுபடியாயிருக்கும்.

அவதாரிகை - இப்படி யிருந்துள்ள நிஷித்தத்தினுடையபடியை அருளிச்செய்கிறார் (நிஷித்தந்தானும்) என்று தொடங்கி.

விளக்கம் – இப்படியாக சாஸ்திரங்களால் தடுக்கப்பட்டவை எவை என்று அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, உபாதேயமான குணசதுஷ்டயம் போலே ஹேயமான நிஷித்தந்தானும் சதுர்விதமாயிருக்குமென்கை.

விளக்கம் - ஏற்கப்படவேண்டியதான குணங்கள் நான்காக உள்ளது போன்றே, தாழ்வானதும், கைவிடத்தக்கதும் ஆகிய குணங்களும் நான்காகும்.

301. அதாவது அக்ருத்யகரணமும் பகவதபசாரமும் பாகவதாபசாரமும் அஸஹ்யாபசாரமும்.

அவதாரிகை - அந்நாலுபடியானவதுதா னேதென்னுமபேக்ஷையிலே (அதாவது அக்ருத்யகரணமும் பகவதபசாரமும் பாகவதாபசாரமும் அஸஹ்யாபசாரமும்) என்று அவை தன்னை யுத்தேசிக்கிறார்.

விளக்கம் - அந்த நான்கும் எவை என்ற கேள்விக்கு விடை அளிக்கும் விதமாக அவற்றைக் குறித்து விவரிக்கிறார்.

302. அக்ருத்யகரணமாவது பரஹிம்ஸை பரஸ்தோத்ரம் பரதார பரிக்ரஹம் பரத்ரவ்யாபஹாரம் அஸத்யகதநம் அபக்ஷ்ய பக்ஷணம் தொடக்கமானவை.

அவதாரிகை - இவற்றினுடைய வேஷந்தா னேதென்னு மாகாங்க்ஷையிலே யிவற்றை அடைவே விவரிக்கிறார் (அக்ருத்யகரணமாவது) என்று தொடங்கி.

விளக்கம் – அந்த நான்கு குணங்களும் எத்தன்மை கொண்டவை என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (பரஹிம்ஸையாவது), “ந ஹிம்ஸ்யாத் ஸர்வபூதாநி” என்கிற விதியை யதிக்ரமித்துப் பண்ணும் ப்ராணிபீடை. (பரஸ்தோத்ரமாவது) ப்ராப்த விஷய ஸ்தோத்ரார்ஹமான வாக்கைக் கொண்டு அப்ராப்த விஷயங்களை ஸ்துதிக்கை. (பரதார பரிக்ரஹமாவது) பிறர்க் கந்ந்யார்ஹமான ஸ்த்ரீ விஷயங்களை மோஹாதிகளாலே ஸ்வீகரிக்கை. (பரத்ரவ்யாபஹாரமாவது) பிறருடைமையாவனற்றை, அவர்களிசை வின்றிக்கேயிருக்க, ப்ரகாசமாகவாதல் அப்ரகாசமாகவாதல் க்ரஹிக்கை. (அஸத்யகதந மாவது) யதாத்ருஷ்டார்த்த விஷயமும் பூதஹிதமு மன்றிக்கேயிருக்கும் வசநத்தைச் சொல்லுகை. (அபக்ஷ்ய பக்ஷணமாவது), ஜாத்யாச்ர யநிமித்த துஷ்டங்களாய்க் கொண்டு தனக்கு பக்ஷ்யமன்றிக்கே யிருக்குமவற்றை பக்ஷிக்கை. (தொடக்கமானவை) என்றது “பரத்ரவ்யேஷ்வபி த்யாநம் மநஸாநிஷ்ட சிந்தநம், விததாபிநிவேசச்ச த்ரிவிதம் கர்ம மாநஸம், பாருஷ்ய மந்ருதஞ்சைவ பைசுநஞ்சைவ ஸர்வச: அநிபத்த ப்ரலாபச்ச வாங்மயம்ஸ்யாச் சதுர்விதம், அதத்தாநா முபாநாநம் ஹிம்ஸாசைவாவிதாநத:, பரதாரோப ஸேவாச சாரீரம் த்ரிவிதம் ஸ்ம்ருதம்” இத்யாதிகளாலே மந்வாதி ஸ்ம்ருதிகளிற் சொல்லப்படுகிறவை யநேக மாகையாலே.

விளக்கம் - (பரஹிம்ஸையாவது) – ந ஹிம்ஸ்யாத் ஸர்வபூதாநி – எந்த ஓர் உயிரையும் துன்புறுத்துதல் கூடாது – என்றுள்ள வேத விதியை மீறி மற்ற உயிரை வதைப்பது ஆகும். (பரஸ்தோத்ரம்) – பகவானையும் பாகவதர்களையும் துதிப்பதற்காக உள்ள வாக்கு கொண்டு மற்ற விஷயங்களை துதித்தபடி இருத்தல். (பரதார பரிக்ரஹமாவது) – மற்றவர்களுக்கு மனைவியாக இருக்கும் பெண்களை மயக்கி அவர்களை தன்வசப்படுத்திக் கொள்ளுதல். (பரத்ரவ்யாபஹாரமாவது) – மற்றவர்களுக்குச் சொந்தமான பொருள்களை, அவர்களுடைய சம்மதம் இல்லாமல் அறிந்தோ அல்லது அறியாமலோ எடுத்துக் கொள்ளுதல். (அஸத்யகதந மாவது) – உள்ளது உள்ளபடி

உரைக்காமலும், மற்ற உயிர்களுக்கு நன்மையை ஏற்படுத்தும்படி உரைக்காமலும் இருத்தல்; அதாவது இது போன்ற சொற்களை உரைக்காமல் இருத்தல். (அபக்ஷ்ய பக்ஷணமாவது) – ஜாதியாலும், இடத்தாலும், காரணத்தாலும் தோஷம் உள்ளதால், தான் உண்பதற்கு ஏற்றவை அல்ல என்று அறிந்தபோதிலும் அப்படிப்பட்ட உணவை ஏற்பதாகும். (தொடக்கமானவை) – இந்தப் பதம் மூலம் கீழே உள்ள வரிகளில் கூறப்பட்டவற்றை உணர்த்துகிறார்:

- மநுஸ்ம்ருதி (12) – பரத்ரவ்யேஷ்வபி த்யாநம் மநஸாநிஷ்ட சிந்தநம், விததாபிநிவேசச்ச த்ரிவிதம் கர்ம மாநஸம் – மற்றவர்களின் பொருள்களைக் கவர விரும்புதல், மற்றவர்களுக்குத் தீங்கு எண்ணுதல், பேராசை ஆகிய மூன்றும் மனதால் செய்யப்படும் பாவங்கள்.

- மநுஸ்ம்ருதி – பாருஷ்ய மந்ருதஞ்சைவ பைசுநஞ்சைவ ஸர்வச: அநிபத்த ப்ரலாபச்ச வாங்மயம்ஸ்யாச் சதுர்விதம் – கடுமையான சொற்களை உரைப்பது, நன்மை அளிக்காத பொய் உரைப்பது, கோள் மூட்டுவது, சாஸ்த்ரங்கள் உரைத்த வரைமுறை மீறி உரைப்பது போன்ற நான்கும் வாக்கினால் செய்யப்படும் பாவங்கள்.

- மநுஸ்ம்ருதி – அதத்தாநா முபாநாநம் ஹிம்ஸாசைவாவிதாநத:, பரதாரோப ஸேவாச சாரீரம் த்ரிவிதம் ஸ்ம்ருதம் – ஒருவன் விருப்பத்துடன் அளிக்காத பொருளை எடுத்துக் கொள்ளுதல், சாஸ்த்ரங்க்ளால் விதிக்கப்படாத ஹிம்ஸைகளைச் செய்தல், மற்றவர்களின் மனைவியால் செய்யப்படும் பணிவிடைகளை ஏற்பது ஆகிய மூன்றும் சரீரத்தால் செய்யப்படும் பாவங்கள்.

303. பகவதபசாரமாவது தேவதாந்தரங்களோடொக்க ஈச்வரனை நினைக்கையும் ராம க்ருஷ்ணாத்யவதாரங்களில் மநுஷ்ய ஸஜாதீயதா புத்தியும் வர்ணாச்ரம விபரீதமான வுபசாரமும், அர்ச்சாவதாரத்தி லுபாதாந நிரூபணமும் ஆத்மாபஹாரமும் பகவத் த்ரவ்யாபஹாரமும் தொடங்கமானவை.

அவதாரிகை - அநந்தரம் பகவதபசாரத்தை விவரிக்கிறார் (பகவதபசாரமாவது) என்று தொடங்கி.

விளக்கம் - அடுத்து ஸர்வேச்வரன் விஷயத்தில் செய்யப்படும் அபசாரங்கள் குறித்து உரைக்கிறார்.

வ்யாக்யானம் - (தேவதாந்தரங்களோடொக்க ஈச்வரனை நினைக்கையாவது), “யேது ஸாமாந்ய, பாவேந மந்யந்தே புருஷோத்தமம், தேவை பாஷண்டிநோஜ்ஞேயாஸ் ஸர்வகர்ம பஹிஷ்க்ருதா:; யஸ்து நாராயணம் தேவம் ஸாமாந்யேநாபிமந்யதே, ஸயாதி நரகம் கோரம் யாவச் சந்த்ர திவாகரம்” என்று, தேவதாந்தரங்களோடு ஈச்வரனை ஸமபுத்தி பண்ணலாகாதென்று சாஸ்த்ரஞ் சொல்லாநிற்க, “அந்த: ப்ரவிஷ்டச் சாஸ்தாஜநாநாம் ஸர்வாத்மா”, “தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம்”, “ந தத்ஸமச் சாப்யதிகச்ச த்ருச்யதே” என்கிறபடியே, ஸ்வேதரஸகல நியாமகனாய் ஸமாநாதிக ரஹிதனான வீச்வரனை, “அங்காந்யந்யா தேவதா:” என்று, தச்சரீரதயாபிஹிதரான ப்ரஹ்மாதி தேவதைகளோடு ஸமபுத்தி பண்ணுகை. (ராமக்ருஷ்ணாத் யவதாரங்களில் மநுஷ்ய ஸஜாதீயதா புத்தியாவது), “அஜோபிஸந் நவ்யயாத்மா பூதாநா மீச்வரோபிஸந், ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம் யாத்ம மாயயா” என்கிறபடியே, அஜஹத் ஸ்வபாவனாய் அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தாநத்தை யிதர ஸஜாதீயமாக்கிக் கொண்டு “துயரில் மலியும்” மனிசர் பிறவியிற்றோன்றி நிற்கிற நிலையறியாதே, அவதாரத்தில் மெய்ப்பாட்டுக்காக அவன் செய்து காட்டின கர்ப்பவாஸ ஜநந சோக மோஹாதிகளையிட்டு கர்மவச்யரான மநுஷ்யரோடு ஸஜாதீயனாக நினைக்கை. (வர்ணச்ரம விபரீதமான வுபசாரமாவது), ததாராதந தசையில் த்ரைவர்ணிகார்ஹமான வைதிக மந்த்ரங்களாலே சதுர்த்த வர்ணரானவர்களாராதித்தல், உத்தமாச்ரமிகள் முதலானார் க்ருஹஸ்தவத் தாம்பூல நிவேதநாதிகளைப் பண்ணுதல் தொடக்கமானவை. (அர்ச்சாவதாரத்தி லுபாதாந நிரூபணமாவது), “தமருகந்த தெவ்வுருவமவ்வுருவம்” இத்யாதிப்படியே, ஆச்ரிதர்க்கபிமத மான தேதேனுமொரு த்ரவ்யத்தைத் திருமேனியாக வங்கீகரித்து அதிலே அப்ராக்ருத விக்ரஹத்தில் பண்ணு மாதரத்தைப் பண்ணி எழுந்தருளியிருக்கிற ஏற்றத்தை யறியாதே மாத்ருயோநி பரீக்ஷிகரைப்போலே இது இன்ன த்ரவ்யமன்றோ வென்று விக்ரஹோபாதாநத்தை நிரூபிக்கை. (ஆத்மாபஹாரமாவது) “யோந்யதா ஸந்தமாத்மாந மந்யதா ப்ரதிபத்யதே, கிந்தேந நக்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா” என்று ஸகல பாப மூலமாகச் சொல்லப்படுகிற பகவதேக சேஷபூதமான வாத்ம வஸ்துவில் ஸ்வதந்தர புத்தி. (பகவத் த்ரவ்யாபஹாரமாவது), அமுதுபடி சாத்துப்படிக் கர்ஹமானவற்றை ப்ரகாசமாகவதால் அப்ரகாசமாகவாதல் தனக்காக்குகை. (தொடக்கமானவை) என்றது, இன்னமிப்படி க்ரூரமான சாஸ்த்ரங்களில் சொல்லுமவை பலவுமுண்டாகையாலே. த்வாத்ரிம்ச தபசாராதிகளு முண்டிறே.

விளக்கம் - (தேவதாந்தரங்களோடொக்க ஈச்வரனை நினைக்கையாவது) - யேது ஸாமாந்ய, பாவேந மந்யந்தே புருஷோத்தமம், தேவை பாஷண்டிநோஜ்ஞேயாஸ் ஸர்வகர்ம பஹிஷ்க்ருதா: – யார் புருஷோத்தமனை மற்ற தேவதைகளோடு சமமாக எண்ணுகிறார்களோ அவர்கள் பாஷாண்டிகள் என்றே கருதப்படுவர், அவர்கள்

சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட எந்த ஒரு கர்மத்தையும் இயற்றும் தகுதி அற்றவர்கள்; யஸ்து நாராயணம் தேவம் ஸாமாந்யேநாபிமந்யதே, ஸயாதி நரகம் கோரம் யாவச் சந்த்ர திவாகரம் – யார் ஒருவன் தேவர்களின் தேவனாகிய நாராயணனை மற்ற தேவர்களுக்குச் சமம் என்று எண்ணுகிறானோ அவன் சந்த்ரனும், சூர்யனும் உள்ளவரை நரகம் அடைகிறான் – என்பது போன்ற வரிகளில் மற்ற தேவர்களுடன் நாராயணனை ஒப்பிட்டு, சமமாக எண்ணக்கூடது என்று கூறப்பட்டுள்ளது. ஆனாலும், யஜுர்வேதம் – அந்த: ப்ரவிஷ்டச் சாஸ்தாஜநநாம் ஸர்வாத்மா - அனைத்தின் ஆத்மாவாகிய நாராயணன், அனைத்திற்குள்ளும் ப்ரவேசித்து அனைத்தையும் நியமிக்கிறான் – என்றும், ச்வேதாஸ்வதர உபனிஷத் – தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம் – அனைத்து ஈச்வரர்களுக்கும் மேலான மஹேச்வரனாகிய நாராயணன் –என்றும்; ச்வேதாஸ்வதர உபனிஷத் – ந தத்ஸமச் சாப்யதிகச்ச த்ருச்யதே – ஸர்வேச்வரனுக்கு ஒத்தவர்களும் மிக்கவர்களும் இல்லை – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்தையும் நியமிப்பவனாகவும், தனக்கு ஒத்தவர்களும் மிக்கவர்களும் இல்லை என்றுள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரனை, தைத்திரீய உபனிஷத் – அங்காந்யந்யா தேவதா: – அனைத்து தேவதைகளுக்கும் இவனே ஆத்மா, அவர்கள் இவனது சரீரங்கள் – என்று ஸர்வேச்வரனுக்குச் சரீரமாக உரக்கப்பட்ட நான்முகன் போன்ற தேவதைகளுடன் சமமாக எண்ணுதல் ஆகும். (ராமக்ருஷ்ணாத் யவதாரங்களில் மநுஷ்ய ஸஜாதீயதா புத்தியாவது) – கீதையில் (4-6) – அஜோபிஸந் நவ்யயாத்மா பூதாநா மீச்வரோபிஸந், ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம் யாத்ம மாயயா – கர்மங்களால் ஏற்படக்கூடிய பிறப்பு அற்றவனாகவும், கர்மம் காரணமாக ஏற்படும் அழிவு இல்லாதவனாகவும், அனைத்திற்கும் ஈச்வரனாகவும் நான் இருந்துகொண்டு எனக்கு மட்டுமே உரிய அப்ராக்ருதமான திருமேனியுடன் கூடியபடியே எனது இச்சையால் நான் பலவாக அவதரிக்கிறேன் – என்று கூறுவதற்கு ஏற்ப தனது மேன்மையை எப்போதும் விடாமல், திவ்யமான தனது திருமேனியை மற்றவர்களின் சரீரம் போன்றே அமைத்தபடி, திருவாய்மொழி (3-10-6) – துயரில் மலியும் – என்பதற்கு ஏற்ப துன்பங்கள் நிறைந்த மனிதப் பிறவி எடுத்துள்ள நிலைமையை அறியாமல், அவதாரத்தின் உண்மையை உணர்த்தும்விதமாக அவன் செய்தருளிய கர்ப்பவாசம், பிறத்தல், துன்பப்படுதல், மயல்குதல் போன்ற செயல்களைக் கண்டு, அவன் கர்மம் காரணமாக இங்கு பிறந்த மற்ற மனிதர்கள் போன்றவனே ஆவான் என்று எண்ணுதல் ஆகும். (வர்ணச்ரம விபரீதமான வுபசாரமாவது) – ஸர்வேச்வரனை ஆராதிக்கும்போது முதல் மூன்று வர்ணத்தினர்களுக்கு மட்டுமே உள்ள வேத மந்திரங்கள் கொண்டு நான்காம்

வர்ணத்தினர் ஆராதனை செய்தல் மற்றும் ஸந்ந்யாஸிகள் முதலானோர் இல்லறத்தில் உள்ளவர்கள் போன்றே வெற்றிலை போன்றவற்றை எடுத்தல் முதலானவற்றை ஆகும். (அர்ச்சாவதாரத்தி லுபாதாந நிரூபணமாவது) – முதல் திருவந்தாதி (44) – தமருகந்த தெவ்வுருவமவ்வுருவம் – என்பதற்கு ஏஎற்ப அடியார்களின் விருப்பத்திற்கு ஏற்றபடி அமைக்கப்பட்ட ஏதேனும் ஒரு பொருளைத் தனது திருமேனியாகக் கொண்டு, அதில் பரமபதத்தில் உள்ள திருமேனியின் மீது கொள்ளும் விருப்பத்தைச் செய்து ஸர்வேச்வரன் எழுந்தருளுகிறான்; இந்த மேன்மையை உணராமல் தாயின் பிறப்பு உறுப்பை ஆராய்வதற்கு ஒப்பான செயலாகிய ஸர்வேச்வரனின் இந்தத் திருமேனி இன்ன உலோகத்தால் ஆனதோ என்று ஆராய்ந்து பார்த்தல் ஆகும். (ஆத்மாபஹாரமாவது) - மஹாபாரதம் ஆதிபர்வம் (74-27) – யோந்யதா ஸந்தமாத்மாந மந்யதா ப்ரதிபத்யதே, கிந்தேந நக்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா – ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ள ஜீவாத்மாவை யார் தனக்கு உரியதாக எண்ணுகிறானோ, ஆத்மாவைக் களவு செய்த அந்தத் திருடனால் எவ்விதமான பாவம்தான் செய்யப்படவில்லை – என்பதற்கு ஏற்ப அனைத்துவிதமான பாவங்களுக்கும் காரணமாக உரைக்கப்படுவதான ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமையாக உள்ள ஆத்மாவைத் தனக்கு உரியதாக எண்ணுதல் ஆகும். (பகவத் த்ரவ்யாபஹாரமாவது) – ஸர்வேச்வரனுக்கு அளிக்கப்பட வேண்டியதான அரிசி போன்றவற்றையும், சந்தனம் முதலானவற்றையும் அனைவருக்கும் அறியும்படியோ அறியாதபடியோ தனக்கு உரிமை ஆக்கிக் கொள்ளுதல் ஆகும். (தொடக்கமானவை) – இது போன்று பலவிதமான கொடிய பாவங்கள் சாஸ்த்ரங்களில் கூறப்படுவதால் இவ்விதம் உரைத்தார். இப்படியாக முப்பத்திரண்டு அபசாரங்கள் உள்ளன.

304. பகவத்த்ரவ்யத்தைத் தானபஹரிக்கையும் அபஹரிக்கிறவர்களுக்கு ஸஹகரிக்கையும் அவர்கள் பக்கலிலே யாசிதமாகவும் அயாசிதமாகவும் பரிக்ரஹிக்கையும் பகவானுக்கு அநிஷ்டமாயிருக்கும்.

**அவதாரிகை** - கீழ்ச்சொன்னவற்றோபாதி பகவத் த்ரவ்யாபஹாரமும் பகவதநிஷ்டமா யிருக்குமோ வென்கிற சங்கையிலே, தானபஹரிக்கிற மாத்ரமன்றிக்கே அபஹரிப்பார்க்கு ஸஹகரிக்கை முதலானவையும் அவனுக் கநிஷ்டமாயிருக்கு மென்கிறார் (பகவத் த்ரவ்யத்தை) என்று தொடங்கி.

விளக்கம் - கடந்த சூர்ணையில் கூறப்பட்ட அபசாரங்கள் போன்று, ஸர்வேச்வரனுக்கு உரியதாக உள்ள பொருள்களை அபகரித்தல் என்பதும் அவனுக்கு விருப்பம் இல்லாத செயலாக இருக்குமோ என்ற சந்தேகம் எழலாம். இதற்கு விடையாக அபகரிப்பது மட்டும் அல்ல, அவ்விதம் அபகரிப்பவர்களுக்குத் துணையாக நிற்பதும் அவனுக்கு விருப்பம் இல்லாத செயலே என்கிறார்.

**வ்யாக்யானம் -** (தானபஹரிக்கையாவது) நேரே தானே யிதுக்கு கர்த்தாவாய்ச் செய்கை. (அபஹரிக்குமவர்களுக்கு ஸஹகரிக்கையாவது), நாமபஹரிக்கிறோ மில்லையிறே என்று நினைத்து, (அபஹர்த்தாக்களுக்கு) அநுமத்யாதிகளாலே ஸஹாயம் பண்ணுகை. (அவர்கள் பக்கலிலே யாசிதமாகப் பரிக்ரஹைக்கையாவது), நாமிவ்வபஹாரத்துக்குக் கூட்டன்றே யென்று நினைத்து தானவர்கள் பக்கலிலே சிலவற்றையபேக்ஷித்து வாங்கிக் கொள்ளுகை. (அயாசிதமாக பரிக்ரஹிக்கையாவது), நாமபேக்ஷித்திலோமே என்று நினைத்து அவர்கள் தாங்களே தருமவற்றை வாங்குகை. (பகவானுக் கநிஷ்டமாயிருக்கும்) என்றது, இவை யித்தனையும் இவனுடைய வுஜ்ஜீவநபரனாய் க்ருஷி பண்ணிப் போரும் ஸர்வேச்வரன் திருவுள்ளத்துக்கு அநபிமதமா யிருக்குமென்கை.

**விளக்கம்** – (தானபஹரிக்கையாவது) - தானே இப்படியாக ஸர்வேச்வரனுடைய பொருளை அபகரித்தல். (அபஹரிக்குமவர்களுக்கு ஸஹகரிக்கையாவது) – “நாம் நேரடியாக அபகரிக்கவில்லையே” என்று எண்ணி, களவு செய்பவர்களுக்கு அனுமதி அளிப்பது போன்ற செயல்கள் மூலம் துணையாக நிற்பதாகும். (அவர்கள் பக்கலிலே யாசிதமாகப் பரிக்ரஹைக்கையாவது) – “நாம் இந்த அபசாரச் செயலுக்கு கூட்டு அல்லவே” என்று எண்ணியபடி, அபகரிப்பவர்களிடம் நமக்கு வேண்டியவற்றை விருப்பத்துடன் வாங்கிக்கொள்வதாகும். (அயாசிதமாக பரிக்ரஹிக்கையாவது) – “நாம் இவர்களிடம் எதனையும் விரும்பவில்லையே ” என்று எண்ணியபோதும், அவர்களாகவே அளிக்கின்ற பொருளை வாங்குவதாகும். (பகவானுக் கநிஷ்டமாயிருக்கும்) – இவை அனைத்தும் இந்த ஜீவாத்மாவைக் கரையேற்ற வேண்டும் என்பதில் பெருமுயற்சி எடுக்கின்ற ஸர்வேச்வரனின் திருவுள்ளத்திற்கு விருப்பம் அற்றவையே ஆகும்.

305. பாகவதாபசாரமாவது அஹங்காரார்த்த காமங்களடியாக ஶ்ரீவைஷ்ணவர்களுக்குப் பண்ணும் விரோதம்.

**அவதாரிகை** - அநந்தரம், பகவதாபசாரத்தை விவரிக்கிறார் (பாகவதாபசாரமாவது) என்று தொடங்கி.

விளக்கம் - அடுத்து பாகவத அபசாரம் குறித்து விவரிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பரோத்கர்ஷங்கண்டு ஸஹியாமைக்கும் ஸ்வோத்கர்ஷ புத்திக்குமுடலான அஹங்காரமடியாகவும், அவர்கள் வைஷ்ணவாகாரத்தை புத்தி பண்ணி யிவர்களாசைப்பட்ட தொன்றாகில் இவற்றை விட்டுப் பற்றுவோமென் றிருக்கமாட்டாமல் அர்த்தகாமங்களடியாகவும் ஶ்ரீவைஷ்ணவர்களுக்குச் செய்யும் விரோதமென்கை.

**விளக்கம்** - மற்றவர்களின் உயர்வு கண்டு பொறுக்கமுடியாமல் இருத்தல், தன்னை உயர்ந்தவன் என்று எண்ணியபடி இருத்தல் ஆகிய இரண்டிற்கும் அஹங்காரமே காரணமாக உள்ளது. இத்தகைய அஹங்காரம் காரணமாகவும்; இவர்கள் ஶ்ரீவைஷ்ணவர்கள் என்று எண்ணி, “இவர்கள் இந்தப் பொருளை விரும்புகிறார்கள், ஆகவே நாம் அந்தப் பொருள்களை விட்டுவிடுவோம்”, என்று எண்ணியிராமல் பொருள் மற்றும் ஆசை காரணமாகவும் ஶ்ரீவைஷ்ணவர்களுக்குச் செய்யும் விரோதம் ஆகும்.

306. அஸஹ்யாபசாரமாவது நிர்நிபந்தநமாக பகவத் பாகவத விஷயமென்றால் அஸஹமாநனாயிருக்கையும் ஆசார்யாபசாரமும் தத்பக்தாபசாரமும்.

**அவதாரிகை** - அநந்தரம் அஸஹ்யாபசாரத்தை விவரிக்கிறார் (அஸஹ்யாபசாரம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - அடுத்து ஸர்வேச்வரனாலும் பொறுக்க முடியாத குற்றம் என்று கூறப்படும் அஸஹ்ய அபசாரத்தை விளக்குகிறார்.

வ்யாக்யானம் - அல்லாத அபசாரங்களிலுங் காட்டில் ஈச்வரனுக்கிது அத்யந்தாஸஹ்யமாயிருக்கையாலே (அஸஹ்யாபசாரம்) என்கிறது. “பவதஸஹநீய ஆகஸி ரத:” என்றிறே பட்டரருளிச் செய்த்து. (நிர்நிபந்தநமாக பகவத் பாகவத விஷயமென்றால் அஸஹமாநனா யிருக்கையாவது), கீழ்ச்சொன்னபடியே அர்த்தகாமாதி நிபந்தநமாக வன்றிக்கே, ஹிரண்யனைப் போலே பகவத் விஷயம் பாகவத விஷயம் என்றால் காணக் கேட்கப் பொறாதபடியிருக்கை. (ஆசார்யாபசாரமாவது), அவனருளிச்செய்த வர்த்தத்தின்படி யநுஷ்டியாமையும், அவனுபதேசித்த மந்த்ர ததர்த்தங்களை அல்பப்ரயோஜநங்களை நச்சி அநதிகாரிகளுக்கு உபதேசிக்கையுந் தொடக்கமானவை. (தத்பக்தாபசாரமாவது) - ஆசார்ய பக்தரான ஸப்ரஹ்மசாரிகளுடன் ஐகரஸ்யமுண்டாய் வர்த்திக்க வேண்டியிருக்க, அது செய்யாதே, அவர்கள் திறத்தில் பண்ணுமஸூயையும் அவஜ்ஞையுந் தொடங்கமானவை.

**விளக்கம் -** மற்ற அபசாரங்களைக் காட்டிலும் ஸர்வேச்வரனால் இது பொறுத்துக் கொள்ள இயலாத காரணத்தினால் அஸஹ்ய அபசாரம் எனப்பட்டது. ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (2-91) – பவதஸஹநீய ஆகஸி ரத: – மிகுந்த பொறுமை கொண்ட உன்னாலும் பொறுக்க முடியாத பாவங்கள் செய்வதில் நான் ஈடுபாடு கொண்டவன் – என்று ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்தமை காண்க. (நிர்நிபந்தநமாக பகவத் பாகவத விஷயமென்றால் அஸஹமாநனா யிருக்கையாவது) – கடந்த சூர்ணையில் கூறப்பட்டபடி பொருள் மற்றும் ஆசை ஆகியவை காரணமாக இல்லாமல், இரண்யகசிபு போன்று பகவத் விஷயம் மற்றும் பாகவத விஷயம் என்பனவற்றைக் காண நேர்ந்தாலும், கேட்க நேர்ந்தாலும் பொறுத்துக்கொள்ள முடியாதபடி இருத்தல் ஆகும். (ஆசார்யாபசாரமாவது) – ஆசார்யன் அருளிச்செய்த உபதேசங்களின்படி நடக்காமல் இருத்தல், அவன் நமக்கு அருளிச்செய்த உபதேசங்களை தாழ்ந்த பலன்களுக்கு ஆசைப்பட்டு தகுதி அற்றவர்களுக்கு உபதேசம் செய்தல் போன்றவை தொடக்கமான அபசாரங்கள் ஆகும். (தத்பக்தாபசாரமாவது) – ஆசார்யனின் பக்தர்களாக உள்ளவர்களும், தன்னுடன் அந்த ஆசார்யனிடம் படித்தவர்களும் ஆகியவர்களுடன் ஒற்றுமையுடன் வாழவேண்டும்; அதனைச் செய்யாமல், அவர்கள் குறித்து பொறாமை மற்றும் அவர்களை அவமதித்தல் போன்றவை ஆகும்.

307. இவை யொன்றுக்கொன்று க்ரூரங்களுமாய் உபாய விரோதிகளுமாய் உபேய விரோதிகளுமாயிருக்கும்.

அவதாரிகை - இப்படி அக்ருத்யகரணாதி சதுஷ்டயத்தையு மடைவே விவரித்தருளி, இவற்றினுடைய க்ரௌர்ய விசேஷங்களையும் இவைதானின்னதுக்கு விரோதியாயிருக்கு மென்னுமத்தையு மருளிச்செய்கிறர் மேல் (இவை) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாகச் சூர்ணை 301ல் கூறப்பட்டதான அக்ருத்யகரணம் (செய்யக்கூடாதவற்றைச் செய்தல்) போன்ற நான்கையும் வரிசையாக விளக்கினார்; இவற்றின் கொடுமைகள் என்ன, இவை எதற்கு விரோதிகள் போன்றவற்றை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஒன்றுக்கொன்று க்ரூரங்களாகையாவது), அக்ருத்யகரணத்தில் பகவதபசாரம் க்ரூரமாய், அதிலும் பாகவதாபசாரம் க்ருரமாய், அது தன்னிலும் அஸஹ்யாபசாரம் க்ரூரமாயிருக்கை. இதுக்கடி, பூர்வங்களிற காட்டி லுத்தரோத்தரங்களில் பகவந் நிக்ரஹ மதிசயித்திருக்கை. அக்ருத்யகரணத்தில், ஸ்வாஜ்ஞாதிலங்கநமடியான சீற்றமிறே; அவ்வளவன்றிறே இவ்வாத்மாவுக்கு ஆத்மாவாய் அதின் ஸத்தையே பிடித்து நோக்கிக் கொண்டு போரும் தன் திறத்திலபசாரத்தால் வரும் சீற்றம்; அவ்வளவுமன்றிறே "ஜ்ஞாநீத்வாத்மைவ" என்கிறபடியே தனக்குயிராக நினைத்திருக்கும் பாகவத விஷயங்களில் அஹங்காராதிக ளடியாகப் பண்ணுமபசாரத்தால் வரும் சீற்றம்; அது தன்னளவுமன்றிறே நிர்நிபந்தநமாகத் தன்பக்கலிலும் தன்னுடையார் பக்கலிலுமாதல் உபயவைபவ ஜ்ஞாபகனாய் உபயாபிமதனான வாசார்யன் பக்கலிலேயாதல் மூவர்க்கு மபிமதரான தத்பக்தர் பக்கலிலேயாதல் செய்யுமபசாரத்தால் வரும் சீற்றம் ஆகையா லொன்றுக்கொன்று க்ரூரமாயிருக்கும். அக்ருத்யகரணத்தில் பகவதபசாராதிகளு மந்தர்ப்பவிக்குமாயிருக்க தனித்தனி யிப்படி பிரித்துச் சொல்லுகிறது, இவற்றினுடைய க்ரௌர்ய விசேஷங்களைப் பற்றவிறே.

**விளக்கம்** - (ஒன்றுக்கொன்று க்ரூரங்களாகையாவது) - செய்யக் கூடாத செயல்களைச் செய்தல் என்பதைக் காட்டிலும் பகவத் அபசாரம் கொடியது; பகவத் அபசாரத்தைக் காட்டிலும் பாகவத அபசாரம் கொடியது; பாகவத அபசாரத்தைக் காட்டிலும் அஸஹ்ய

அபசாரம் கொடியது என்று பொருள். இப்படி உரைப்பதற்குக் காரணம் – முன்னே உரைக்கப்பட்டவற்றைக் காட்டிலும் பின்னே உரைக்கப்பட்டவை விஷயத்தில் ஸர்வேச்வரனுக்குச் சீற்றம் அதிகமாகும். செய்யத்தகாதவற்றைச் செய்தால், தனது ஆணையை மீறினான் என்ற கோபம் மட்டுமே இருக்கும்; ஆத்மாவுக்கு ஆத்மாவாக நின்று அதன் இருப்பு என்பதே தனது குறிக்கோளாகக் கொண்டிருக்கும்போது, தன்னைக் குறித்த அபசாரம் செய்தால் முன்னர் உரைத்த கோபத்தைக் காட்டிலும் அதிக கோபம் உண்டாகும். கீதையில் (7-18) – ஜ்ஞாநீத்வாத்மைவ – ஞானியாக உள்ளவன் எனது உயிர் – என்று கூறுவதற்கு ஏற்ப, தனது உயிராகவே எண்ணியுள்ள பாகவதர்கள் விஷயத்தில் அஹங்காரம் காரணமாகச் செய்யும் அபசாரங்கள் குறித்து மேலும் அதிகமாகக் கோபம் உண்டாகிறது. இதனைக் காட்டிலும் கோபம் உண்டாவது எப்போது என்றால் – எந்தவிதமான காரணமும் இல்லாமல் தன்னிடமோ, தனது அடியார்களிடமோ, தனது பெருமை மற்றும் தனது அடியார்களின் பெருமை ஆகியவற்றை உரைத்தபடி இவர்கள் இருவராலும் விரும்பப்படும் ஆசார்யனிடமோ அல்லது இந்த மூவருக்கும் விருப்பமாக உள்ள ஆசார்யனின் அடியார்களிடமோ செய்யும் அபசாரம் காரணமாக ஏற்படும் கோபம் ஆகும். ஆக இவை ஒன்றைக் காட்டிலும் மற்றது அதிகமான கோபம் ஏற்படுத்துவதாக இருக்கும். செய்யத் தகாதவற்றைச் செய்தல் என்பதை உரைக்கும்போதே, பகவத் அபசாரம் போன்றவை அதில் அடங்கிவிடும்; பின்னர் ஏன் தனித்தனியாக உரைக்கவேண்டும் என்றால், இவற்றின் கொடுமைகளில் காணப்படும் பேதம் குறித்து விவரிக்கவே ஆகும்.

**வ்யாக்யானம்** - (உபாய விரோதிகளுமாய் உபேய விரோதிகளுமா யிருக்கையாவது) - இவ்வாத்மாவினுடைய வுஜ்ஜீவநத்தி லொருப்பட்டு மேன்மேலும் க்ருஷி பண்ணுகைக்குறுப்பான வெம்பெருமானுடைய க்ருபைக்கும், எப்போது மிவனுக்கு ப்ராப்ய மாயிருந்துள்ள வவனுடைய முகோல்லாஸத்துக்கும் விலக்காயிருக்கை. “இரக்க முபாயம், இனிமையுபேயம்” என்னக்கடவதிறே. ஆகையால் இவ்வக்ருத்யகரணாதிகள் நீரிலே நெருப்பெழுமாப்போலே அவன் திருவுள்ளத்திலே நிக்ரஹத்தை கிளப்பி அவனுடைய க்ருபையு முகப்பு மிவன் பக்கலறும்படி பண்ணுகையாலே, இவற்றை யுபாயோபேய விரோதிகளென்னத் தட்டில்லை. (தனக்குத்தான் தேடும் நன்மை) என்று தொடங்கி, நமச்சப்தார்த்தத்தை விஸ்தரேண ப்ரதிபாதிக்கையாலும், உகந்தருளின நிலங்களிலாதராதிசயமும்) என்று உகந்தருளின நில ப்ரஸங்கத்தாலும், மேலே (பகவத்

கைங்கர்யம்) என்கிறவிடத்தில் பகவச்சப்தத்தாலும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி ப்ரதிபாதகமான ஸ்ரீமத்பத நாராயண பதார்த்தங்களை ஸூசிப்பிக்கையாலும்; மங்களாசாஸந ப்ரகரணத்தாலும், (கர்த்தவ்ய மாசார்ய கைங்கர்யமும் பகவத் கைங்கர்யமும்) என்று தொடங்கி (கிஞ்சிகரித்தால் ஸ்வரூபம் நிறம் பெறுவது) என்னுமளவாகவும், சதுர்த்த்யர்த்தத்தை யருளிச்செய்கையாலும்; நிஷித்த சாதுர்வித்ய ப்ரதிபாதநமுகேந ப்ராஸங்கிகமாக மீளவும் நமச்சப்தார்த்தத்தைப் பேசுகையாலும் இவ்வளவும் உத்தரகண்டார்த்தத்தை யருளிச்செய்தாராய்த்து.

**விளக்கம்** - (உபாய விரோதிகளுமாய் உபேய விரோதிகளுமா யிருக்கையாவது) - இந்த ஆத்மாவைக் கரையேற்றும் முயற்சியில் மேன்மேலும் முயற்சி செய்தபடி உள்ள ஸர்வேச்வரனுடைய கருணைக்கும், எப்போதும் நமக்கு அடையத்தக்கதாக உள்ள அவனுடைய திருமுக மலர்ச்சிக்கும் விரோதியாக உள்ளவை - இரக்கம் உபாயம், இனிமை உபாயம் – என்று கூறுவர். ஆகவே இத்தகைய "செய்யத்தகாத செயல்களைச் செய்தல்" போன்றதான செயல்கள் ஸர்வேச்வரனின் திருவுள்ளத்தில், நீரில் நெருப்பு எழுவது போன்று, மிகுந்த சீற்றத்தை உண்டாக்கிவிடும்; இதனால் அவனுடைய கருணை மற்றும் உகப்பு ஆகியவை இவன் விஷயத்தில் இல்லாதபடி ஆக்கிவிடும்; ஆகவே இவை உபாயம் மற்றும் உபேயம் ஆகிய இரண்டிற்கும் தடையாக உள்ளன என்று கூறுவதில் குற்றமில்லை. "தனக்குத் தான் தேடும் நன்மை" என்ற சூர்ணை 160 தொடக்கமாக, திருமந்த்ரத்தில் உள்ள "நம:" என்ற பதத்தின் பொருளை விரிவாக அருளிச்செய்ததாலும், "உகந்தருளின" என்ற சூர்ணை 243ல் ஸர்வேச்வரன் உகப்புடன் எழுந்தருளிய திவ்யதேசங்கள் குறித்து உரைப்பதாலும்; இனி கூறப்போகும் சூர்ணை 310ல் "பகவத் கைங்கர்யம்" என்ற வாக்கியத்தில் "பகவத்" என்ற பதத்தாலும்; கைங்கர்யங்களை ஏற்றுக் கொள்பவர்களைக் கூறுகின்ற "ஸ்ரீமந்", "நாராயண" என்ற பதங்களை உணர்த்துவதாலும்; மங்களாசாஸந ப்ரகரணம் மூலமும்; "கர்த்தவ்யம்" என்றுள்ள சூர்ணை 274 தொடங்கி, சூர்ணை 286ல் "கிஞ்சித்" என்பது முடிய உள்ள வாக்கியங்களில் திருமந்த்ரத்தில் உள்ள "நாராயண" என்ற பதத்தில் வெளிப்படும் நான்காம் வேற்றுமை குறித்து உரைப்பதாலும்; தள்ளப்படவேண்டிய விஷயங்கள் நான்கு வகை என்பதாலும்; மீண்டும் "நம:" என்பதன் பொருளைப் பற்றி உரைப்பதாலும் – இதுவரை த்வயத்தின் இரண்டாவது வாக்கியமான "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்பதன் பொருளை அருளிச்செய்தார் என்று கருத்து.

**வ்யாக்யானம் -** ஆக, இப் ப்ரகரணத்தால் கீழுக்தோபாயத்தைக் கொண்டு உபேயத்தைப் பெறும் சேதநனுக்கு உபாயோபேயாதிகார ப்ரதாநா பேக்ஷிதங்களையும், ப்ராபகாந்தர பரித்யாக ஹேதுவான ஸ்வரூப நாசகத்வாதியையும், ப்ரபத்தியின் ஸ்வரூபாநுகூலத் வாதியையும்,ஸ்வகத ஸ்வீகாராநுபாயத்வத்தையும், பரகர ஸ்வீகாரோபாயத்வதையும், தத்ப்ராபல்யத்தையும், அவனே ஸ்வீகரிக்குமிடத்திலும் புருஷகாரத்தை முன்னிடும்படியையும், உபயரும் முன்னிடு மதுக்கு ப்ரயோஜந விசேஷங்களையும், உபேய தசையிலும் ப்ராப்தி தசையிலு மிவன் சேஷத்வ பாரதந்த்ர்யங்களும் ஸ்வதோஷ நிவ்ருத்தியும் பராநுபவ விரோதியாம்படியையும், தன்னால் வரும் நன்மையில் அவனால் வரும் நன்மைக்குள்ள வாசியையும், ஈச்வரனே ரக்ஷகன், தான் தனக்கு நாசகனென்னு மத்தையும், தன்னைத்தான் நசிப்பிக்கும் ப்ரகாரத்தையும், அஹங்காரமும் விஷயங்களும் ஸ்வரூபேணவும் பாகவத விரோதத்தை விளைத்து மிவன் ஸ்வரூபத்தை நசிப்பிக்கும் படியையும், பாகவதாபசார க்ரௌர்யத்தையும், தத் ப்ரஸங்கத்திலே பாகவத மாஹாத்ம்யத்தையும், இவன் திநசர்யையும், திநசர்யோக்தங்களடைய ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்போதைக்கு அபேக்ஷிதமான வஸ்தவ்யாதியையும், தச்சர மோக்த கர்த்தவ்ய ரூபகைங்கர்ய வேஷத்தையும், கைங்கர்ய தத் பூர்வ தசைகளில் ஸ்வரூபத்தை யுஜ்ஜ்வலமாக்கும்படியையும், இவனுக்குண்டான குணசதுஷ்டயத்தையும், தத்விஷய விபாகத்தையும், அதில் அசக்தி விஷய நிஷித்த சாதுர்வித்யத்தையும் சொல்லுகையாலே, அதிகாரி நிஷ்டாக்ரமம் சொல்லப்பட்டது.

**விளக்கம்** - ஆக இந்த மூன்றாவது ப்ரகரணம் மூலம் கீழே உள்ள விஷயங்கள் கூறப்பட்டன:

- முதல் இரண்டு ப்ரகரணங்களால் கூறப்பட்ட உபாயம் மூலமாக, உபேயத்தைப் பெறுவதற்கு ஏற்ற சேதனன் ஒருவனுக்கு உபாயம் மற்றும் உபேய விஷயங்களில் உள்ள அதிகாரம் கிட்ட வேண்டப்படுவது எவை.
- அவனைத் தவிர மற்ற உபாயங்களைக் கைவிடுவதற்குக் காரணமாக உள்ள ஸ்வரூப நாசம்.
- ப்ரபத்தியின் ஸ்வரூபத்துடன் ஒத்திருப்பவை எவை.
- தான் ஸ்வயமாகப் பற்றும் பற்றுதல் என்பது உபாயமாகாது, ஸர்வேச்வரன் பற்றும் பற்றுதலே உபாயமாகும்.

- அவன் பற்றும் பற்றுதலே வலிமையானது, அவ்விதம் பற்றும்போதும் பெரியபிராட்டியைப் புருஷகாரமாக முன்னிறுத்தியே பற்றுகிறான்.
- சேதனனும் ஸர்வேச்வரனும் பெரியபிராட்டியைப் புருஷகாரமாக முன்னிறுத்துவதன் பயன் என்ன.
- கைங்கர்யம் கிட்டிய பின்னரும், ஸர்வேச்வரன் மற்றும் பெரியபிராட்டி ஆகிய இருவரை அடைந்த பின்னரும் இவனுடைய அடிமைத்தனம், பாரதந்த்ர்யம் மற்றும் தோஷங்கள் விலகுதல் போன்றவை ஸர்வேச்வரனை அனுபவிக்கும் அனுபவத்திற்குத் தடையாக உள்ளன.
- தன்னால் தனக்கு ஏற்படும் நன்மையைக் காட்டிலும் அவனால் நமக்கு உண்டாகும் நன்மையில் உள்ள வேறுபாடு.
- ஸர்வேச்வரனே நம்மைக் காப்பவன், தான் தன்னை அழித்துக் கொள்பவன்.
- தானே தன்னை அழித்துக்கொள்ளும் வகை.
- அஹங்காரம் மற்றும் உலக விஷயங்கள் ஆகியவை தாமாகவும், பாகவத விரோதத்தை உண்டாக்கியும் இவன் ஸ்வரூபத்தை எவ்விதம் அழிக்கின்றன.
- பாகவத அபசாரத்தின் கொடுமை.
- பாகவத அபசாரம் குறித்து உரைக்கும்போது பாகவதர்களின் பெருமை என்ன.
- ப்ரபந்நனின் அன்றாட வாழ்கை முறை.
- ப்ரபந்நனின் அன்றாட வாழ்கை முறையில் செய்யப்படவேண்டிய அனைத்தும் சிறந்த ஆசார்யனின் திருவருளால் ஏற்படும்போது இருக்கவேண்டியதான வாழவேண்டிய இடம் போன்றவை.
- அதன் இறுதியாக உரைக்கப்பட்டதான கைங்கர்யம் என்ன.
- கைங்கர்யம் செய்யும்போதும், அதற்கு முன்பு உள்ள நிலைகளிலும் ஸ்வரூபத்தை விளங்கச் செய்யும் மார்க்கங்கள்.
- ஜீவனுக்கு உள்ள நான்கு குணங்கள்.
- அந்தக் குணங்களில் உள்ள வேறுபாடுகள்.
- அவற்றில் அசக்திக்கு இலக்காக உள்ள நான்குவிதமான தோஷங்கள்.

மேலே உள்ள பலவிதமான விஷயங்கள் காணும்போது இங்கு அதிகாரி எப்படி இருக்க வேண்டும் என்று உரைத்தது காணலாம்.

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த
ஸ்ரீவசனபூஷணத்தில்
மூன்றாம் ப்ரகரணமான அதிகாரி நிஷ்டா ப்ரகரணம்
ஸம்பூர்ணம்

பெரியபெருமாள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகள் தஞ்சம் அடைந்த நம்
உடையவர் திருவடிகளே சரணம்

உடையவர் திருவடிகள் சரணம் புகுந்த
ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

பிள்ளைலோகாசார்யர் திருவடிகள் சரணம் புகுந்த
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்



ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

( இதற்கு ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யான மூலம், எளிய தமிழ்நடை)

## நான்காம் ப்ரகரணம்

## (ஸதாசார்ய அநுவர்த்தன க்ரமம்)

## (சூர்ணைகள் 308 – 365)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

308. தான் ஹிதோபதேசம் பண்ணும்போது தன்னையும் சிஷ்யனையும் பலத்தையும் மாறாடி நினைக்கை க்ரூர நிஷித்தம்.

**அவதாரிகை** – அநந்தரம், (தான் ஹிதோபதேசம் பண்ணும்போது) என்று தொடங்கி, (உகப்பு முபகார ஸ்ம்ருதியும் நடக்கவேணும்) என்னுமளவாக, இவ்வதிகாரிக்குக் கீழ்ச் சொன்ன அர்த்த விசேஷங்களுக்கெல்லா முபதேஷ்டாவான ஆசார்ய விஷயத்திலுண்டாக வேண்டும் ப்ரதிபத்த்யநுவர்த்தந ப்ரகாரங்களை தர்சிப்பிக்கைக்காக, ஸதாசார்ய லக்ஷணம், ஸச்சிஷ்ய லக்ஷணம், ததுபயருடைய பரிமாற்றம் இவையிருக்கும்படியை ப்ரஸக்தாநு ப்ரஸக்தமாக வருளிச்செய்கிறர். இவ்வதிகாரிக்கு அசக்தி விஷயமான நிஷித்தங்கள் சொன்ன ப்ரஸங்கத்திலே, அவையெல்லாவற்றிலும் க்ரூரநிஷித்தம் பரோபதேச ஸமயத்தில் விப்ரதிபத்தியென் றருளிச்செய்கிறார் (தான் ஹிதோபதேசம்பண்ணும்போது) இத்யாதி வாக்யாத்தாலே.

**விளக்கம்** – "தான் ஹிதோபதேசம் பண்ணும்போது" என்ற சூர்ணை 308 தொடங்கி, "உகப்பும் உபகார ஸ்ம்ருதியும் நடக்க வேணும்" என்றுள்ள சூர்ணை 365 முடிய உள்ள சூர்ணைகளில், அதிகாரி ஒருவனுக்கு மேலே கூறிய பலவற்றையும் உபதேசிக்கின்ற ஆசார்யனிடம் அந்த அதிகாரிக்கு இருக்க வேண்டிய மதிப்பு, அவரிடம் நடந்துகொள்ள வேண்டிய முறை ஆகியவற்றை உணர்த்தி திருவுள்ளம் பற்றினார். ஆகவே நல்ல ஆசார்யனின் இலக்கணம், நல்ல சிஷ்யனின் இலக்கணம், இவர்கள் ஒருவருடன் ஒருவர் பழகும் முறை போன்றவை குறித்து இப்போது நினைவில் உண்டாக, அவற்றை அருளிச்செய்கிறார். அதிகாரிக்கு அசக்தி ஏற்படக் காரணமாக உள்ள குற்றங்கள் குறித்து உரைத்தார்; அப்போது அங்கு கூறப்படவேண்டியதான – அவை அனைத்துக் குற்றங்களைக் காட்டிலும் கொடிய குற்றம் என்னவென்றால் ஆசார்யன் உபதேசம் செய்யும்போது அவருடன் கருத்து வேறுபாடு கொள்வது என்பதை இப்போது அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கீழ்ப்ரகரணத்தில் சொல்லப்பட்ட அதிகாரி லக்ஷணங்களெல்லாவற்றாலும் குறைவற்றிருந்துள்ள தான், உஜ்ஜிஜீவிஷுக்களாய் வந்து தன்னை உபஸத்தி பண்ணினவர்களுக்கு உஜ்ஜீவநஹேதுவான மந்த்ரரூபஹிதத்தை உபதேசிக்குங் காலத்தில், உபதேஷ்டாவான தன்னையும், உபதேசபாத்ரனான சிஷ்யனையும் உபதேச பலத்தையும் விபரீத ப்ரதிபத்தி பண்ணுகை, பூர்வோக்த நிஷித்தங்களிற்காட்டில் க்ரூர நிஷித்தமென்கை. அவ்வோ நிஷித்தங்கள் இவன்றனக்கு நாசகமித்தனையிறே; அவ்வளவன்றிக்கே, இவனுக்கும் உபதேசங் கேட்டவனுக்கும் கேடாகையாலே இத்தை அவற்றிலுங் காட்டில் க்ரூர நிஷித்தமென்கிறது. (இருவர்க்கும் ஸ்வரூப ஸித்தியில்லை) என்றிறே மேல் சொல்லத்தேடுகிறது.

**விளக்கம்** – (தான் ஹிதோபதேசம் பண்ணும்போது) – கடந்த ப்ரகரணத்தில் கூறப்பட்டதான அதிகாரி லக்ஷணங்கள் அனைத்தாலும் குறைவில்லாதபடி இருக்கும் ஆசார்யனாகிய தான், இந்த ஸம்ஸாரத்திலிருந்து கரையேற வேண்டும் என்ற எண்ணத்துடன் தன்னை அடைந்தவர்களுக்கு, கரையேற்ற வைப்பதற்குக் காரணமாக உள்ள திருமந்த்ர வடிவத்தில் உள்ள நன்மையைக் குறித்து உபதேசம் செய்யும் காலத்தில். (தன்னையும்) – இப்படியாக அந்த மந்த்ரத்தைக் குறித்து உபதேசம் செய்யும் தன்னையும், அந்த உபதேசம் பெறுகின்ற சிஷ்யனையும், அந்த உபதேசத்தின் பலனையும் விபரீதமாக பொருள் கொள்ளுதல் என்பது முன்பு கூறப்பட்டதான பலவிதமான தோஷங்களைக் காட்டிலும் மிகவும் கொடியது என்று கருத்து. முன்பு கூறப்பட்ட பலவிதமான தோஷங்கள், அவற்றைக் கொண்ட அதிகாரிக்கு மட்டுமே தீமையை ஏற்படுத்தும். ஆனால் இப்போது உரைக்கப்பட்ட குற்றம் என்பது ஆசார்யனுக்கும், உபதேசம் கேட்ட சிஷ்யனுக்கும் சேர்த்துத் தீமையை ஏற்படுத்தும் என்பதால், இதனை அவற்றைக் காட்டிலும் கொடியது என்று கூறினார். “இருவர்க்கும் ஸ்வரூப ஸித்தியில்லை” என்று சூர்ணை 312ல் கூற உள்ளார்.

309. தன்னை மாறாடி நினைக்கையாவது தன்னை ஆசார்யனென்று நினைக்கை; சிஷ்யனை மாறாடி நினைக்கையாவது தனக்கு சிஷ்யனென்று நினைக்கை. பலத்தை மாறாடி நினைக்கையாவது த்ருஷ்ட ப்ரயோஜனத்தையும், சிஷ்யனுடைய உஜ்ஜீவனத்தையும் பகவத் கைங்கர்யத்தையும் ஸஹ சிஷ்யனுடைய உஜ்ஜீவனத்தையும் பகவத் கைங்கர்யத்தையும் ஸஹவாஸத்தையும் பலமாக நினைக்கை.

**அவதாரிகை** - தன்னையும் சிஷ்யனையும் பலத்தையும் மாறாடி நினைக்கையாவதே தென்னு மாகாங்க்ஷையிலே, அவற்றை யுபபாதிக்கிறார் (தன்னை மாறாடி நினைக்கை யாவது) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஆசார்யனாகிய தன்னையும், சிஷ்யனையும், உபதேச பலனையும் குறித்து முரணாக எண்ணுதல் என்பது எப்படி என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, உபதேஷ்டாவான தன்னை யுள்ளபடி நினையாமல் (மாறாடி நினைக்கையாவது), உபதேச ஸமயத்தில் தன்னுடைய வாசார்யனையே யிவனுக் குபதேஷ்டாவாகவும் தான் அங்குத்தைக்குக் கரணபூதனாகவும் ப்ரதிபத்தி பண்ணிக் கொண்டு உபதேசிக்க வேண்டியிருக்க, அப்படிச் செய்யாதே, ஆசார்ய பரதந்த்ரனா யிருக்கிற தன்னை இவனுக்காசார்யனென்று நினைக்கை. உபதேச பாத்ரனான சிஷ்யனையுள்ளபடி நினையாமல் (மாறாடி நினைக்கையாவது), தன்னோபாதி இவனையும் தன்னுடைய வாசார்யனுக்கு சிஷ்யனாக ப்ரதிபத்தி பண்ணி உபதேசிக்க வேண்டியிருக்க, அது செய்யாதே, இவனைத் தனக்கு சிஷ்யனென்று நினைக்கை. உபதேச பலத்தை உள்ளபடி நினையாதே (மாறாடி நினைக்கையாவது), பரோபதேசம் பண்ணுமளவில் இவ்வாத்மா திருந்தி “ஆளுமாளார்” என்கிற விஷயத்துக்கு மங்களாசாஸநத்துக் காளாக வேண்டும் என்னுமிதுவே பலமாக உபதேசியாதே, இவனால் வரும் அர்த்த சுச்ரூஷாரூபமான த்ருஷ்ட ப்ரயோஜநத்தையாதல். சிஷ்யனானவிவன் ஸம்ஸாராத் உத்தீர்ணனாய் வாழுகையாகிற உஜ்ஜீவநத்தையாதல், திருநந்தவனாதிகளைச் செய்கிறதிலுங் காட்டிலோராத்மாவைத் திருத்தினால் எம்பெருமான் திருவுள்ள முகக்கையாலே இப்படியிருந்துள்ள பகவத் கைங்கர்யத்தையாதல், ஸம்ஸாரத்தி லிருக்கும் நாள் தன் தனிமை தீரக் கூடி வர்த்திக்கையாகிற ஸஹவாஸத்தையாதல் உபதேசத்துக்குப் பலமாக நினைக்கை யென்றபடி.

**விளக்கம்** – உபதேசம் செய்பவனாகிய தன்னை உள்ளபடி எண்ணிக்கொள்ளாமல் (முரண்பாடாக நினைத்துக் கொள்ளுதல்) உள்ள நிலை என்னவென்றால் – உபதேசம் செய்கின்றபோது தனது ஆசார்யனே தன்னுடைய ரூபத்தில் இருந்து உபதேசம் செய்வதாகவும், தனது ஆசார்யனுக்குத் தான் ஒரு கருவியாக மட்டும் அங்கு உள்ளதாகவும்

எண்ணியபடி உபதேசம் செய்யவேண்டியிருக்க, அவ்விதம் செய்யாமல், தனது ஆசார்யனுக்கு அடிமையாக உள்ள தன்னைத் தனது சிஷ்யனுக்குத் தானே ஆசார்யன் என்று எண்ணியிருப்பதாகும். தன்னிடம் உபதேசம் பெறுவதற்காக வந்த சிஷ்யனை உள்ளபடி எண்ணாமல் (முரண்பாடாக எண்ணுதல்) உள்ளது என்னவென்றால் – தன்னைப் போன்றே இந்த சிஷ்யனும் தனது ஆசார்யனுக்கு சிஷ்யன் என்று எண்ணாமல், அந்த சிஷ்யனைத் தனது சிஷ்யன் என்றே எண்ணுதல் ஆகும். உபதேசத்தால் வருகின்ற பலனை உள்ளபடி எண்ணாமல் (முரணாகச் சிந்தித்தல்) உள்ள நிலை என்னவென்றால் – உபதேசம் செய்யும்போது அந்த ஆத்மா திருந்தி, திருவாய்மொழி(8-3-3) – ஆளுமானார் – என்பதற்கு ஏற்ப உள்ள ஸர்வேச்வரனுக்கு மங்களாசாஸநம் செய்வதற்கு ஆளாகவேண்டும் என்பதே உபதேசத்தின் பலன் என்று எண்ணி உபதேசம் செய்யாமல், அந்த சிஷ்யனால் வரக்கூடிய பொருள் மற்றும் அவனால் தனக்குச் செய்யப்படும் கைங்கர்யம் என்பதான உலகவிஷயங்கள் குறித்த பயனை எண்ணுதல்; இந்த சிஷ்யன் ஸம்சாரத்தைக் கடந்து வாழ்ந்து கரையேறவேண்டும், ஸர்வேச்வரனுக்கு இவன் திருநந்தவனம் அமைத்தல் போன்ற கைங்கர்யம் செய்யவேண்டும் என்று எண்ணாமல், இந்த சிஷ்யனைத் திருத்தினால் ஸர்வேச்வரனின் உள்ளம் மகிழ்ந்து போகும் என்பதைப் பலனாகக் கொண்டு உபதேசித்தல்; இந்த உலகில் தான் ஜீவித்திருக்கும்வரை தனது தனிமையைப் போக்க தனது சிஷ்யனோடு கூடி வாழ்தல் என்பதே பலன் என்று எண்ணுதல் போன்றவையாகும்.

310. நினையாதிருக்க இந்நாலு பலமும் ஸித்திக்கிறபடி யென்னென்னில்; சேஷபூதனான சிஷ்யன் நினைவாலே த்ருஷ்டபலம் ஸித்திக்கும்; ஈச்வரன் நினைவாலே உஜ்ஜீவனம் ஸித்திக்கும், ஆசார்யன் நினைவாலே பகவத் கைங்கர்யம் ஸித்திக்கும், உபகார ஸ்ம்ருதியாலே ஸஹவாஸம் ஸித்திக்கும்.

**அவதாரிகை** - இப்படி யிவன் நினையாதிருக்க இந்நாலு பலமும் ஸித்திக்கிறபடி தானென்? என்கிற தஜ்ஜிஜ்ஞாஸு ப்ரச்நத்தை யநுவதித்துக்கொண்டு, அவை ஸித்திக்கும் வழி யருளிச் செய்கிறார் (நினையாதிருக்க) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாக நினைக்காமல் உள்ளபோதிலும், அந்த நான்கு பலன்களும் அவனுக்குக் கிட்டும் என்பது எப்படி என்று அறிந்து கொள்ள விரும்புகிறவனுடைய கேள்வியை மனதில் கொண்டு, அவை கிட்டும் வழியை உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** - (சேஷபூதனான சிஷ்யன் நினைவாலே த்ருஷ்டபலம் ஸித்திக்கும்) என்றது- சிஷ்யனானவன் தனக்கு சேஷத்வமே ஸ்வரூபம் என்றநுஸந்தித்துக் கொண்டிருக்கையாலே, கிஞ்சித்கார மில்லாதபோது சேஷத்வம் கூடாதென்று தன் ஸ்வரூப லாபத்துக்காகத் தன்னாலான கிஞ்சித்காரம் பண்ணிக்கொண்டு போருகையாலே, அர்த்த சுச்ரூஷைகளாகிற த்ருஷ்ட பலம் ஸித்திக்குமென்றபடி. (ஈச்வரன் நினைவாலே உஜ்ஜீவநம் ஸித்திக்கும்) என்றது, "எதிர் சூழல் புக்குத் திரிந்து" தன் விசேஷ கடாக்ஷங்களாலே அத்வேஷாதிகளை யுண்டாக்கி ஆசார்ய ஸமாச்ரணத்திலே மூட்டி இவ்வாசார்யனுடைய உபதேசாந்வயத்தை யுண்டாக்கி அதடியாக விவனை ஸம்ஸாரத்தில் நின்று மக்கரைப்படுத்த வேணுமென்கிற, எம்பெருமானுடைய க்ருபாகார்யமான நினைவாலே சிஷ்யனானவனுடைய வுஜ்ஜீவநம் ஸித்திக்குமென்றபடி. (ஆசார்யன் நினைவாலே பகவத் கைங்கர்யம் ஸித்திக்கும்) என்றது, இவன் ஹிதோபதேசம் பண்ணி மங்களாசாஸநத்துக் காளாம்படி சேதநரைத் திருத்துகிறவிது எம்பெருமான் திருவுள்ளத்துக்கு மிகவு முகப்பாகையாலே, இது பகவத் கைங்கர்யமன்றோ! என்றது ஸித்தித்திருக்கும் தன்னுடைய வாசார்யன் நினைவாலே உபதேஷ்டாவான தனக்கு பகவத் கைங்கர்யம் ஸித்திக்குமென்றபடி. (உபகார ஸ்ம்ருதியாலே ஸஹவாஸம் ஸித்திக்கும்) என்றது, அநாதிகால மஹங்கார மமகாரங்களாலே நஷ்ட ப்ராயனாய்க் கிடந்தவென்னை அஹேதுகமாக அங்கீகரித்து அஜ்ஞாத ஜ்ஞாபநமுகத்தாலே யவற்றில் ருசியை மாற்றி மங்களாசாஸநத்துக்காளாம்படி பண்ணின மஹோபகாரகனன்றோ என்கிற உபகார ஸ்ம்ருதியாலே, சிஷ்யனானவன் க்ஷணகாலமும் பிரியக்ஷமனன்றிக்கே கூடி நடக்கையா லவனோடுண்டான ஸஹவாஸம் தன்னடையே ஸித்திக்குமென்றபடி.

**விளக்கம்** – (சேஷபூதனான சிஷ்யன் நினைவாலே த்ருஷ்டபலம் ஸித்திக்கும்) - சிஷ்யனாக உள்ளவன் தன்னுடைய ஸ்வரூபம் என்பது ஆசார்யனுக்கு அடிமைப்பட்டு இருப்பதே என்று எப்போதும் எண்ணியபடி உள்ளதால், "கைங்கர்யம் செய்யாதபோது அடிமைத்தனம் கிட்டாது" என்றுள்ள நிலை காரணமாக, தனது ஸ்வரூபம் கிட்டும் பொருட்டு தன்னால் இயன்ற கைங்கர்யம் செய்தபடி உள்ளதால், பொருள் மற்றும்

கைங்கர்யம் ஆகிய இரண்டு பலன்களும் ஆசார்யனுக்குக் கிட்டும் என்று கருத்து. (ஈச்வரன் நினைவாலே உஜ்ஜீவநம் ஸித்திக்கும்) – திருவாய்மொழி (2-7-6 - எதிர்சூழல் புக்கு – என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் தனது விசேஷமான கடாக்ஷங்கள் மூலம் சிஷ்யனுக்கு அத்வேஷம் (வெறுப்பு இல்லாமை) போன்ற தன்மைகளை ஏற்படுத்தி, ஆசார்யனைப் பற்றும்படியாகச் செய்து, ஆசார்யனின் உபதேசம் கிட்டும்படிச் செய்து, அதன் காரணமாக சிஷ்யனை ஸம்சாரம் என்ற பெருங்கடலில் இருந்து அக்கரை ஏறும்படிச் செய்யவேண்டும் என்ற ஸர்வேச்வரனின் கடாக்ஷம் மூலம் ஏற்படும் நினைவால், சிஷ்யன் கரையேறுதல் என்ற பலன் ஏற்படும். (ஆசார்யன் நினைவாலே பகவத் கைங்கர்யம் ஸித்திக்கும்) – ஆசார்யன் சிஷ்யனுக்கு நன்மைகள் பலவற்றையும் உபதேசம் செய்து, ஸர்வேச்வரனைக் குறித்த மங்களாசாஸநத்திற்கு ஆளாகும்படித் திருத்தும் செய்கை என்பது ஸர்வேச்வரனுடைய திருவுள்ளத்திற்கு மிகவும் மகிழ்சியை ஏற்படுத்தும் என்பதால், “இது பகவத் கைங்கர்யம் அல்லவோ” என்று எண்ணியுள்ள தனது ஆசார்யனுடைய கடாக்ஷம் காரணமாக, தனக்கு ஸர்வேச்வர கைங்கர்யம் கிட்டும் என்று கருத்து. (உபகார ஸ்ம்ருதியாலே ஸஹவாஸம் ஸித்திக்கும்) – எல்லையற்ற காலமாக “நான், எனது” என்ற எண்ணங்கள் காரணமாக ஆத்ம ஸ்வரூபத்தை இழந்து கிடந்த என்னை, எந்த ஒரு காரணமும் இல்லாமல், அறியாமையைப் போக்கும் வழிகள் மூலமாக அவற்றில் உள்ள ஆசைகளை மாற்றி, மங்களாசாஸநத்திற்கு நான் ஆளாகும்படிச் செய்த மிகப்பெரும் உபகாரம் செய்தவன் இந்த ஆசார்யன் என்ற செய்ந்நன்றி உணர்வு காரணமாக, சிஷ்யன் ஒரு நொடிக்கூட பிரிவதற்குப் பொறுமை இன்றி எப்போதும் கூடி இருப்பதனால் உண்டான சேர்த்தி என்பது தானாகவே உண்டாகிறது.

311. ஸாக்ஷாத்பலமும் ஆசார்யத்வம் ஸித்திக்கிறபடி யென்னென்னில்; தன் நினைவாலும் ஈச்வரன் நினைவாலும் ஸித்திக்கும்.

**அவதாரிகை** - இப்படி யிவன் நினையாதிருக்க இப்பல சதுஷ்டயமும் சிஷ்யேச்வர ஸ்வாசார்யர்கள் நினைவாலே ஸித்திக்குமென்னுமிட மருளிச்செய்து, உபதேசத்துக்கு ஸாக்ஷாத் பலமாயுள்ளதும் உபதேஷ்டவான வாசார்ய பரதந்த்ரனுக் குபதேச பாத்ரமான விவனைக் குறித்துண்டா மாசார்யத்வமும் ஸித்திக்கும்படியை ப்ரச்நோத்தர ரூபேண வருளிச் செய்கிறார் (ஸாக்ஷாத்பலமும்) என்று தொடங்கி.

**விளக்கம் -** இப்படியாக இந்த சிஷ்யன் பலன்கள் குறித்து நினைக்காமல் உள்ளபோதிலும் இந்த நான்குவிதமான பலன்களும் சிஷ்யனுடையவும், ஈச்வரனுடையவும், ஆசார்யனின் ஆசார்யனுடையவும் நினைவு மூலம் உண்டாகிவிடும் என்பதை அருளிச்செய்கிறார்; மேலும் உபதேசத்திற்கு நேராக பலனாக உள்ளதும், உபதேசம் செய்பவனாகிய தனது ஆசார்யனுக்கு வசப்பட்டவனாகிய ஆசார்யனுக்கு உபதேசிக்கப்படும் சிஷ்யனைக் குறித்து உள்ள ஆசார்யனாகும் தன்மை எவ்விதம் ஏற்படுகிறது என்பதைக் கேள்வி பதில் வடிவில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (ஸாக்ஷாத்பலமாவது), உபதேசபாத்ரமான விவன் திருந்தி மங்களா சாஸநத்துகாளாகை; இது (தன் நினைவாலே ஸித்திக்கையாவது), உபதேஷ்டாவான தான் விப்ரதிபத்திக ளொன்றுமின்றி இதுவே பலமாக நினைத்து உபதேசிக்கவே அவனப்படி திருந்தி மங்களாசாஸநாதிகாரியாகை. (ஆசார்யத்வமாவது), தன்னை யாசார்ய பரதந்த்ரனாகவே யநுஸந்தித்திருக்கிற விவன் தன் பக்க லுபதேசங் கேட்கிறவனுக்கு ஆசார்யனாகை; இது (ஈச்வரன் நினைவாலே ஸித்திக்கையாவது), இப்படி தன்னையும் சிஷ்யனையும் பலத்தையும் விப்ரதிபத்தி பண்ணாதே உள்ளபடியநுஸந்தித்து உபதேசிக்கும் பரிபாகமுடையனானவிவன் இவனுக்காசார்யனென்று நினைப்பிட்டருளுகையாலே இவனுக்காசார்யத்வமுண்டாகை.

**விளக்கம்** – (ஸாக்ஷாத்பலமாவது) - உபதேசிக்கப்படும் சிஷ்யன் திருந்தி ஸர்வேச்வரனுக்கு திருப்பல்லாண்டு பாடும்படியாக ஆவது. (தன் நினைவாலே ஸித்திக்கையாவது) – உபதேசம் செய்கின்ற ஆசார்யனாகிய தான், கருத்து மாறுபாடுகள் ஏதும் இன்றி உபதேசம் செய்தால் மட்டுமே பலன் என்று உபதேசிக்கும்போது, அவனும் அப்படியே திருந்தி ஸர்வேச்வரனுக்கு திருப்பல்லாண்டு பாடும்படியாக ஆதல். (ஆசார்யத்வமாவது) – தன்னைத் தனது ஆசார்யனுக்கு வசப்பட்டவனாகவே எண்ணியபடி உள்ள இந்த ஆசார்யன், தன்னிடம் உபதேசம் பெற வந்த சிஷ்யனுக்கு ஆசார்யனாக ஆதல். (ஈச்வரன் நினைவாலே ஸித்திக்கையாவது) – இப்படியாகத் தன்னையும், சிஷ்யனையும், பலத்தையும் மாறுபட்டு எண்ணாமல், உள்ளது உள்ளபடி உபதேசம் செய்கின்ற தன்மை கொண்ட இந்த ஆசார்யன், தனது ஆசார்யனே தனது சிஷ்யனுக்கும் ஆசார்யன் என்று எண்ணுவதால் இவனுக்கு ஆசார்யனாகும் தன்மை ஏற்படுகிறது என்று கருத்து.

312. இப்படி யொழிய உபதேசிக்கில் இருவர்க்கும் ஸ்வரூப ஸித்தியில்லை.

**அவதாரிகை** - இங்ஙனன்றி க்ரூரநிஷ்த்தமாக வடியில் சொன்ன விப்ரதிபத்தியோடே யுபதேசிக்கில் உபயஸ்வரூபமும் ஸித்தியாதென்கிறார் (இப்படியொழிய) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக இல்லாமல், சூர்ணை 308ல் கூறப்பட்டதான, தள்ளப்பட வேண்டியவற்றில் மிகவும் கொடியதாக உள்ளதான மாறுபட்ட சிந்தனையுடன் உபதேசம் செய்தால் ஆசார்யனுக்கும் சிஷ்யனுக்கும் ஸ்வரூபம் ஏற்படாது என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இருவர்க்கும் ஸ்வரூபஸித்தியில்லை) என்கிறது - கீழ்ச்சொன்னபடியே யதா ப்ரதிபத்தியோடே யுபதேசிக்கிலொழிய ஈச்வரனிவனை யாசார்யனாக நினைப்பிடாமையாலே, உபதேஷ்டாவுக் காசார்யத்வமாகிற ஸ்வரூபஸித்தி யில்லை; இப்படி யதா ப்ரதிபத்தியோடே இவனுபதேசியாத வளவில் உபதேச சுத்தி யில்லாமையாலே, உபதேச பாத்ரமானவவனுக்கு சிஷ்யத்வமாகிற ஸ்வரூபஸித்தி யில்லை யென்கை.

**விளக்கம்** - மேலே கூறப்பட்டபடி, உள்ளது உள்ளபடி நேர்த்தியாக உபதேசம் செய்தால் அன்றி ஸர்வேச்வரன் இவனை ஆசார்யனாக ஏற்கமாட்டான் என்பதால், உபதேசம் செய்பவனுக்கு ஆசார்யன் என்ற ஸ்வரூபம் கிட்டாது. இவ்விதம் உள்ளது உள்ளபடி உபதேசம் செய்யாதபோது, செய்யப்பட்ட உபதேசம் என்பது கிட்டாமல் போவதால், உபதேசத்தைப் பெறுகின்ற சிஷ்யனுக்கு சிஷ்யத்தன்மை என்ற ஸ்வரூபம் கிட்டாது.

313. ஆசார்யனுக்கு சிஷ்யன் பக்கல் க்ருபையும் ஸ்வாசார்யன் பக்கல் பாரதந்த்ர்யமும் வேணும்.

**அவதாரிகை** – ஆசார்யனுக் கிரண்டு குண மவச்யம் வேணுமென்கிறார் (ஆசார்யனுக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஆசார்யனுக்கு இரண்டு குணங்களும் அவசியம் என்று இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது உபதேஷ்டவான வாசார்யனுக்கு, உஜ்ஜிஜீவிஷுவாய் வந்து உபஸந்நனான சிஷ்யன்பக்கல், ஐயோ! என்றிரங்கி அவனுஜ்ஜீவிக்கைக் குறுப்பான உபதேசாதிகளைப் பண்ணுகைக்கீடான க்ருபையும், தன்னைக் கர்த்தாவாக நினையாதே அத்தலைக்குக் கரணபூதனான வநுஸந்திக்கைக் கீடான ஸ்வாசார்ய விஷயத்தில் பாரதந்த்ர்யமும் அவச்யமுண்டாக வேண்டுமென்கை.

**விளக்கம்** - உபதேசம் செய்கின்ற ஆசார்யனுக்கு, உய்வதற்கான எண்ணம் கொண்டு தன்னை வந்தடைந்த சிஷ்யனிடம் – ஐயோ – என்ற இரக்கம் எழவேண்டும்; அவன் உய்வதற்கு ஏற்றதான உபதேசம் போன்றவற்றைச் செய்வதற்கு அவசியமான கருணை வேண்டும். தன்னை உபதேசம் செய்பவனாக எண்ணாமல், தனது ஆசார்யனுக்குத் தான் ஒரு கருவியாக மட்டுமே உள்ளோம் என்று எண்ணுவதற்கு அடிப்படையாக உள்ள தனது ஆசார்யனிடம் வசப்பட்டிருத்தல் என்பதும் வேண்டும்.

314. க்ருபையாலே சிஷ்யன் ஸ்வரூபம் ஸித்திக்கும், பாரதந்த்ர்யத்தாலே தன் ஸ்வரூபம் ஸித்திக்கும்.

**அவதாரிகை** - இவற்றால் பலிக்குமவற்றை யருளிச்செய்கிறார் (க்ருபையாலே) என்று தொடங்கி.

**விளக்கம்** - இந்த இரண்டு குணங்கள் மூலம் பலிக்கும் விஷயங்கள் குறித்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்படி யவன் ஸ்வரூபம் திருந்துமளவும் உபதேசாதிகளைப் பண்ணிப்போரு மிவன் க்ருபையாலே நாளுக்கு நாளும் ஸ்வரூபம் நிர்மலமாகையாலே சிஷ்யனுடைய ஸ்வரூபம் ஸித்திக்கும்; ஸ்வகர்த்ருத்வ புத்தியற்று ஸ்வாசார்ய கரண பூதனாகத் தன்னை யநுஸந்திக்கைக்கும் மற்றும் ஸர்வகார்யத்திலும் தததீநனாய்

வர்த்திக்கைக்கு முடலான பாரதந்த்ர்யத்தாலே ஆசார்யனான தன்னுடைய ஸ்வரூபம் ஸித்திக்கு மென்கை.

**விளக்கம் -** சிஷ்யனுடைய ஸ்வரூபம் திருந்துகின்ற காலம் முடிய உபதேசம் செய்கின்ற ஆசார்யனுடைய கருணை காரணமாக, நாளுக்கு நாள் ஸ்வரூபத்தில் உள்ள தோஷங்கள் அழிந்தபடி உள்ளதால், சிஷ்யனுக்கு ஸ்வரூபம் கிட்டிவிடுகிறது. தான் உபதேசம் செய்வதாக எண்ணாமல், தனது ஆசார்யனின் அவயவமாகவே தன்னை எண்ணுவதாலும், தனது அனைத்து செயல்களிலும் ஆசார்யனுக்கு வசப்பட்டவனாக நடந்துகொள்ள உறுப்பாக உள்ள பாரதந்த்ர்யம் மூலம் ஆசார்யனாகிய தனது ஸ்வரூபம் கிட்டுகிறது.

**வ்யாக்யானம் -** ஆக கீழ்ச்செய்ததாய்த்தது, ஹிதோபதேச ஸமயத்தில் ஸ்வவிஷயத்திலும் சிஷ்ய விஷயத்திலும் பல விஷயத்திலு முண்டாம் விப்ரதிபத்திகள் க்ரூரநிஷித்தமென்றும், அந்த விப்ரதிபத்திகள்தா னின்னதென்றும், இவன் நினையாதிருக்க த்ருஷ்ட ப்ரயோஜநாதிகள் வந்து ஸித்திக்கும் வழியும், ஸாஷாத் பலாசார்யத்வங்கள் ஸித்திக்கும் வழியும், இப்படியன்றியே விப்ரதிபத்த்யா உபதேசிக்கி லுபய ஸ்வரூபமும் ஸித்தியாமையும், ஆசார்யனானவனுக் கவச்யாபேக்ஷித குணத்வயமும், ததுபய பலமும் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம் -** ஆகவே இதுவரை கூறப்பட்டது என்னவென்றால் – உயர்ந்த நன்மை குறித்து சிஷ்யனுக்கு உபதேசம் செய்யும்போது தன் விஷயத்திலும், சிஷ்யன் விஷயத்திலும், பலன் விஷயத்திலும் ஏற்படக்கூடிய மாறுபட்ட எண்ணங்கள் மிகவும் கொடியவை என்றும்; அவைதாம் இவை இவை என்றும்; இவன் விரும்பாமல் உள்ளபோதிலும் இந்த உலகப் பலன்கள் தானாகவே வந்து சேரும் வழியையும்; நேரான பலனாகிய ஆசார்யத்தன்மை கிட்டும் வழியையும்; இவ்விதம் இல்லாமல் மாறுபட்ட எண்ணத்துடன் உபதேசம் செய்தால் இருவருக்கும் ஸ்வரூபம் கிட்டாமல் போவதும்; ஆசார்யனுக்கு இருக்கவேண்டியதான க்ருபை மற்றும் பாரதந்த்ர்யம் ஆகிய இரண்டு குணங்களும்; அந்தக் குணங்களால் ஏற்படவல்ல பலனும் கூறப்பட்டது.

315. நேரே ஆசார்யனென்பது ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை யுபதேசித்தவனை.

**அவதாரிகை** - இப்படி உபதேசாநுகுண நியமங்களை தர்சிப்பித்த வநந்தரம், உபதேசிக்குமளவில் இன்னமந்த்ரத்தை யுபதேசித்தவனையே ஸாக்ஷாதாசார்யன் என்பதென்கிறார் (நேரே) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாக உபதேசத்திற்கு அவசியமான நியமங்கள் பலவற்றையும் அருளிச்செய்த பின்னர், உபதேசம் செய்யும்போது இன்ன மந்த்திரத்தை உபதேசித்தவனே நேரடியான ஆசார்யன் என்று இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (நேரே ஆசார்யனென்பது) என்கிறது, ஆசார்யத்வம் குறைவறவின் றியிருக்கச் செய்தே ப்ரதீதிமாத்ரங்கொண்டு சொல்லுமளவன்றின்கே ஸாக்ஷாதாசார்ய னென்று சொல்லுவதென்றபடி. (ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை யுபதேசித்தவனை) என்றது, “ஐஹலௌகிக மைச்வர்யம்” இத்யாதிப்படியே அகில பலப்ரதமா யிருந்ததேயாகிலும் அந்யபலன்களில் தாத்பர்யமின்றிக்கே மோக்ஷபலத்திலே நோக்காயிருக்கையாலே, “ஸர்வ வேதாந்த ஸாரார்த்தஸ் ஸம்ஸாரார்ணாவதாரக: கதிரஷ்டாக்ஷரோ ந்ரூணாமபுநர்பவ காங்க்ஷிணாம்” என்கிறபடியே ஸம்ஸார நிவர்த்தகமாய், அத ஏவ “மந்த்ராணாம் பரமோ மந்த்ரோ குஹ்யாநாம் குஹ்யமுத்தமம், பவித்ரஞ்ச பவித்ராணாம் மூலமந்த்ரஸ் ஸநாதந:” என்கிறபடியே ஸர்வமந்த்ராந்தரோத்க்ருஷ்டமான பெருமையையுடையத்தான திருமந்த்ரத்தை, ஸம்ஸார நிவர்த்தகத்வ ப்ரதிபத்தியோடே யுபதேசித்தவனை யென்கை. த்வயம் பூர்வோத்தர வாக்யங்களாலே இதில் மத்யம சரமபத விவரணாமாய், சரமச்லோகம் பூர்வோத்தரார்த்தங்களாலே அதில் பூர்வோத்தர வாக்ய விவரணமா யிருக்கையாலே, மற்ற ரஹஸ்யத்வயமும் ப்ரதம ரஹஸ்யமான வித்தோடே அநந்யமா யிருக்கையாலே, இத்தைச் சொல்லவே அவற்றினுடைய வுபதேசமும் தன்னடையே சொல்லிற்றாமென்று திருவுள்ளம் பற்றி (பெரியதிருமந்த்ரத்தை உபதேசித்தவனை) என்கிறார். ஆகையால் இது ரஹஸ்யத்ரயோபதேசத்துக்கு முபலக்ஷணம்.

**விளக்கம்** - (நேரே ஆசார்யன் என்பது) – ஆசார்யனாக உள்ள தன்மை குறைவில்லாமல் உள்ளபோதிலும். மேலாகக் காணும்போது “இவன் ஆசார்யன்” என்று மனதில் தோன்றும் விதத்தில் மட்டும் அல்லாமல், நேரடியாகவே ஆசார்யனாக உள்ள தன்மை என்று கருத்து. (ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை யுபதேசித்தவனை) – பாஞ்சராத்ரத்தில் – ஐஹலௌகிக மைச்வர்யம் – திருமந்த்ரம் அனைத்து ஐச்வர்யங்களையும் அளிக்கும் – என்று கூறுவதற்கு ஏற்ப, திருமந்த்ரமானது அனைத்து பலன்களையும் அளிக்கவல்லது என்றுள்ளபோதிலும், இது போன்று மற்ற பலன்களை அளிப்பது அதன் நோக்கம் அல்ல; மோக்ஷம் என்ற உயர்ந்த பலனை அளிப்பது மட்டுமே அதன் நோக்கம் ஆகும். ஆகவே பாஞ்சராத்ரத்தில் – ஸர்வ வேதாந்த ஸாரார்த்தஸ் ஸம்ஸாரார்ணாவதாரக: கதிரஷ்டாக்ஷரோ ந்ருணாமபுநர்பவ காங்க்ஷிணாம் – அனைத்து வேதாந்தங்களின் ஆழ்கருத்தை தனது அர்த்தமாகக் கொண்டதும், ஸம்ஸாரம் என்ற பெரிய கடலைத் தாண்டுவிப்பதும் ஆகிய திருவெட்டெழுத்து என்பதான திருமந்த்ரம் மட்டுமே, மீண்டும் பிறவி என்பதை விரும்பாத மனிதர்களின் புகலிடமாக உள்ளது – என்பதற்கு ஏற்ப, ஸம்ஸாரத்திலிருந்து விடுவிப்பதாக திருமந்த்ரம் உள்ளது. ஆகவே பாஞ்சராத்ரம் – மந்த்ராணாம் பரமோ மந்த்ரோ குஹ்யாநாம் குஹ்யமுத்தமம், பவித்ரஞ்ச பவித்ராணாம் மூலமந்த்ரஸ் ஸநாதந: – எல்லையற்ற காலமாக இருந்து வரும் திருமந்த்ரம் என்பது மந்த்ரங்கள் அனைத்திலும் உயர்ந்த மந்த்ரம், இரகசியங்களில் உயர்ந்த இரகசியம், தூய்மையானவற்றில் மிகவும் தூய்மையானது – என்று கூறுவதற்கு ஏற்ப, அனைத்து மந்த்ரங்களைக் காட்டிலும் மிகுந்த பெருமை கொண்டதான திருமந்த்ரத்தை, ஸம்ஸாரம் என்ற பெருங்கடலைக் கடக்க வைக்கும் தன்மைகள் கொண்டது என்ற சிந்தனையுடன் உபதேசம் செய்தவனை - என்று கருத்து. த்வ்ய மந்த்ரத்தில் உள்ள இரண்டு வரிகளும் திருமந்த்ரத்தின் நடுப்பதமான “நம:” என்பதையும், இறுதிப்பதமான ”நாராயணாய” என்பதையும் விவரிப்பதாக உள்ளன. சரம ச்லோகத்தின் இரண்டு பாதிகளும் த்வயத்தின் இரண்டு வரிகளை விவரிப்பதாகவே உள்ளன. ஆகவே த்வ்யம், சரமச்லோகம் ஆகிய இரண்டும் முதல் இரகசியமாக உள்ள திருமந்த்ரத்தைக் காட்டிலும் வேறாக இல்லாத காரணத்தினால், திருமந்த்ரத்தை விவரித்து உபதேசம் செய்தால், மற்ற இரண்டும் தானே உபதேசிக்கப்பட்டவைகள் ஆகின்றன என்று கூற திருவுள்ளம் பற்றியவராக “பெரியதிருமந்த்ரத்தை உபதேசித்தவனை” என்றார். எனவே இது மூன்றையும் உபதேசம் செய்தமையையே காட்டுகிறது.

316. ஸம்ஸார வர்த்தகங்களுமாய் க்ஷுத்ரங்களுமான பகவந் மந்த்ரங்களை யுபதேசித்தவர்களுக்கு ஆசார்யத்வ பூர்த்தியில்லை.

**அவதாரிகை** - பகவந் மந்த்ரங்களி லேதனுமொன்றை உபதேசித்தவர்களுக்கு மாசார்யத்வமில்லையோ வென்ன அருளிச்செய்கிறார் (ஸம்ஸார வர்த்தங்களுமாய்) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஸர்வேச்வரனுடைய மந்த்ரங்களில் ஏதேனும் ஒன்றை உபதேசம் செய்தால் அவர்களுக்கு ஆசார்யனாகும் தன்மை இல்லையோ (திருமந்த்ரம் உபதேசித்தால் மட்டும் தான் ஆசார்யத் தன்மை உண்டாகுமோ) என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸம்ஸாரத்தை நிவர்த்திப்பியாத மாத்ரமன்றிக்கே வளர்க்குமவையாய், பெருமையின்றிக்கே க்ஷுத்ரங்களுமாயிருந்துள்ள ததிதர பகவந்மந்த்ரங்களை யுபதேசித்தவர்களுக்கு, உபதேஷ்ட்ருத்வ ப்ரயுக்தமான ஆசார்யத்வ ப்ரதீதிமாத்ர மொழிய தத்பூர்த்தியில்லையென்கை.

**விளக்கம்** - ஸம்ஸாரத்தை நீக்கித் தராமல், அதனை மேன்மேலும் வளர்ப்பதாகவும், பெருமை ஏதும் இல்லாமல் தாழ்ந்தவையாகவே உள்ள ஸர்வேச்வரனுடைய மற்ற மந்த்ரங்களை உபதேசம் செய்பவர்களுக்கு, உபதேசம் செய்யும் செயலைக் கொண்டு மட்டுமே ஆசார்யனாகிய தன்மை உண்டாகிறதே அல்லாமல், அவர்களுக்கு ஆசார்யன் ஆகும் தன்மை நிறைவாக இல்லை.

317. பகவந் மந்த்ரங்களை க்ஷுத்ரங்களென்கிறது பலத்வாரா.

**அவதாரிகை** - க்ஷுத்ரங்களென்பது க்ஷுத்ரதேவதா மந்த்ரங்களையன்றோ? பகவந் மந்த்ரங்களையிப்படி சொல்லுகிறதென்னென்ன அருளிச்செய்கிறார் (பகவந் மந்த்ரங்களை) என்று தொடங்கி.

**விளக்கம்** - மந்த்ரங்களை தாழ்ந்தவை என்று கூறும்போது அது தாழ்ந்த தேதைகளைப் பற்றிய மந்த்ரம் மட்டுமே அல்லவோ ஆகும்? ஸர்வேச்வரனுடைய மந்த்ரங்களை இவ்விதம் உரைப்பது ஏன் என்ற கேள்விகளுக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பரதேவதையான பகவத் விஷயமாகையாலே வந்த பெருமையையுடைய மந்த்ரங்களை க்ஷுத்ரங்களென்று சொல்லுகிறது, அர்த்த காம புத்ர வித்யாதி க்ஷுத்ரபலங்களைக் கொடுக்கிற வழியாலேயென்கை.

**விளக்கம்** - அனைத்திலும் உயர்ந்தவனாகிய ஸர்வேச்வரன் குறித்த மந்த்ரங்கள் என்ற பெருமை உடைய மந்த்ரங்களைத் தாழ்ந்தவை என்று கூறப்பட்டது ஏன் என்றால், அவை பொருள், இன்பம், புத்திரர்கள், கல்வி போன்ற தாழ்ந்த பலன்களை அளிப்பதால் ஆகும்.

318. ஸம்ஸார வர்த்தகங்களென்கிறதும் அத்தாலே.

**அவதாரிகை** - ஸம்ஸார வர்த்தங்களென்கிற தென்னென்ன வருளிச்செய்கிறார் (ஸம்ஸார) இத்யாதியாலே.

**விளக்கம்** - பகவத் மந்த்ரங்கள் ஸம்சாரத்தை வளர்ப்பவை என்று ஏன் கூறப்பட்டது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (அத்தாலே) என்றது, கீழ்ச்சொன்ன பந்தகமான க்ஷுத்ர பலங்களைக் கொடுக்கையாலேயென்கை.

**விளக்கம்** – “அத்தாலே” என்ற பதம் மூலம் ஸம்சாரத்தில் பந்தப்படுத்த ஏதுவாக உள்ள தாழ்ந்த பலன்களைக் கொடுப்பவை என்று உணர்த்தினார். இதனால் அவை ஸம்ஸாரத்தை வளர்ப்பவை என்று கருத்து.

319. இதுதான் ஔபாதிகம்.

**அவதாரிகை** - ஆனாலிவற்றுக்கிது ஸ்வாபாவிகமோ வென்ன அருளிச்செய்கிறார் (இதுதான்) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஆனால் இவை (ஸம்ஸாரத்தை வளர்த்தல், தாழ்ந்த பலன்களை அளித்தல்) இந்த மந்த்ரங்களுக்கு இயல்பான தன்மைகளோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இதுதான்) என்று, க்ஷுத்ர பலப்ரதத்வத்தைப் பராமர்சிக்கிறது. (ஔபாதிகம்) என்றது, உபாதி ப்ரயுக்தமாய் வந்ததித்தனை யென்கை.

**விளக்கம்** – "இதுதான்" என்பதன் மூலம் தாழ்ந்த பலன்களைக் கொடுத்தல் என்பது காட்டப்பட்டது. "ஔபாதிகம்" என்பதன் மூலம் இது செயற்கையாக வந்தது என்று கூறினார்.

320. சேதநனுடைய ருசியாலே வருகையாலே.

**அவதாரிகை** - அத்தை யுபபாதிக்கிறார் (சேதநனுடைய ருசியாலே வருகையாலே) என்று.

**விளக்கம்** - ஒரு குறிப்பிட்ட காரணத்தால் இந்தத் தன்மைகள் அந்த மந்த்ரங்களுக்கு வந்தது என்று கூறியதை மேலும் விவரிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பகவந் மந்த்ரங்களாகையாலே மோக்ஷப்ரதத்வ சக்தியுண்டாயிருக்கச்செய்தே, இவற்றினுடைய க்ஷுத்ர பலப்ரதத்வம், ப்ரக்ருதி வச்யனான சேதநனுடைய க்ஷுத்ர பல ருசியாலே வருகையாலே யென்கை. ஐச்வர்ய காமர்க்கு கோபால மந்த்ராதிகளும் புத்ரகாமர்க்கு ராமமந்த்ராதிகளும், வித்யாகாமர்க்கு ஹயக்ரீவ மந்த்ராதிகளும், விஜயகாமர்க்கு ஸுதர்சந நாரஸிம்ஹ மந்த்ராதிகளுமாய், இப்படி நியமேந க்ஷுத்ர பலங்களையே கொடுத்துப் போருகிறவிது, சேதநருடைய ருச்யநுகுணமாக இவ்வோ மந்த்ரங்கள் இவ்வோ பலங்களைக் கொடுக்கக் கடவதென்று ஈச்வரன் நியமேந கல்பித்து வைக்கையிறே, அதுதான் சேதநருடைய ருச்யநுகுணமாகக் கல்பித்ததாகையாலே, அவற்றுக்கவை ஸ்வாபாவிகமன்று, ஔபதிகமென்னலாமிறே.

**விளக்கம்** - ஸர்வேச்வரனைக் குறித்த மந்த்ரங்கள் என்பதால்_அவற்றுக்கு மோக்ஷத்தை அளிக்கக்கூடிய சக்தி உள்ளபோதிலும், தாழ்ந்த பலன்களை அளிக்கக்கூடிய தன்மை என்பது இந்த மந்த்ரங்களுக்கு எவ்விதம் ஏற்படுகிறது என்றால் – சரீரத்தில் அகப்பட்டுள்ள ஜீவாத்மாவின் தாழ்ந்த பலன்களில் உள்ள விருப்பம் காரணமாகவே ஏற்படுகிறது. ஐச்வர்யம் விரும்புகிறவர்களுக்கு கோபால மந்த்ரங்கள் போன்றவையும், புத்திரர்களை விரும்புகிறவர்களுக்கு ராம மந்த்ரங்கள் போன்றவையும், கல்வி மற்றும் வித்யை ஆகியவற்ற விரும்புகிறவர்களுக்கு ஹயக்ரீவ மந்த்ர்ரங்களும், வெற்றியை விரும்புகிறவர்களுக்கு சுதர்சனர் மற்றும் நரஸிம்ஹ மந்த்ரங்களும் என்று பலவாக உள்ள இந்த மந்த்ரங்களுக்கு தாழ்ந்த பலன்களை அளிக்கின்ற தன்மை என்பது, மனிதர்களின் விருப்பத்திற்கு ஏற்றபடி "இன்ன மந்த்ரம் இன்ன பலன் அளிக்கும்" என்று ஸர்வேச்வரன் நியமித்த காரணத்தினால் உண்டாகிறது. ஆக இந்த மந்த்ரங்கள் இது போன்று தாழ்ந்த பலன்கள் அளித்தல் என்பது மனிதர்களின் விருப்பத்திற்கு ஏற்ப ஸர்வேச்வரன் ஸங்கல்பம் செய்த காரணத்தினால், அவற்றுக்கு அந்தத் தன்மை இயல்பானது அல்ல, ஏதோ ஒரு காரணத்தால் வந்ததே ஆகும் என்று கருத்து.

321. சிஷ்யனென்பது ஸாத்யாந்தர நிவ்ருத்தியும் பலஸாதந சுச்ருஷையும், ஆர்த்தியும் ஆதரமும் அநஸூயையும் உடையவனை.

**அவதாரிகை** – ஆக, (தான் ஹிதோபதேசம் பண்ணும்போது) என்று தொடங்கி, (ஆசார்யத்வ பூர்த்தியில்லை) என்னுமளவும் ஆசார்ய ஸ்வரூப சோதநம் பண்ணி அநந்தரம், அதின்மேல் வந்த ப்ராஸங்கிக சங்கைகளையும் பரிஹரித்தார் கீழ்; மேல் சிஷ்ய ஸ்வரூப சோதநம் பண்ணுகிறார் (சிஷ்யமென்பது) என்று தொடங்கி.

**விளக்கம்** – "தான் ஹிதோபதேசம் பண்ணும்போது" என்றுள்ள சூர்ணை 308 தொடங்கி, "ஆசார்ய பூர்த்தியில்லை" என்றுள்ள சூர்ணை 316 முடிய உள்ள சூர்ணைகளில் ஆசார்ய ஸ்வரூபம் குறித்து ஆராய்ந்து அருளிச்செய்தார். அதனைத் தொடர்ந்துள்ள நான்கு சூர்ணைகளில் அதனைக் குறித்து எழுந்த சந்தேகங்களை விளக்கி அவற்றை நீக்கினார். இனி சிஷ்யனுடைய ஸ்வரூபம் குறித்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – (சிஷ்யனென்பது) என்றது, உபதேச ச்ரவண மாத்ரங்கொண்டு மேலெழுந்தவாரியாகச் சொல்லுகையன்றிக்கே, சிஷ்யனென்று முக்க்யமாகச் சொல்லுவதென்றபடி. (ஸாத்யாந்தர நிவ்ருத்தியாவது), ஸ்வரூப விரோதியான ஐச்வர்ய கைவல்யங்களாகிற ப்ராப்யாந்தரத்தில் மறந்து மந்வயமற்றிக்கை. அன்றிக்கே, இவ்வாசார்யன்றன்னையொழிய வேறொரு ப்ராப்யவஸ்து வறியேனென்றிருக்கை யாகவுமாம். (பலஸாதந சுச்ரூஷையாவது), "குரு சுச்ரூஷயா வித்யா" என்கிறபடியே ஆசார்யனைத் தான் பண்ணுகிற சுச்ரூஷையாலே ஸந்தோஷிப்பித்து ஜ்ஞாநோபஜீவநம் பண்ணுகை ப்ராப்தமாகையாலே, ஆசார்யன் தனக்குபகரிக்கிற தத்த்வஜ்ஞாநமாகிற பலத்தினுடைய ஸித்திக்கு ஸாதநமாயிருந்துள்ள ஆசார்யபரிசர்யை. அன்றிக்கே, ஸ்வரூபாநுரூபமான பலத்திலும் ஸாதநத்திலு முண்டான ச்ரோதுமிச்சை யாகவுமாம். அதவா, ஆசார்யமுகோல்லாஸமாகிற பலத்துக்கு ஸாதநமான தத்பரிசர்யை யென்னவுமாம். (ஆர்த்தியாவது), "இருள் தருமாஞாலம்" என்கிறபடியே பிறந்த ஜ்ஞாநத்துக்கு விரோதியான இவ்விபூதியினின்றும் கடுகப் போகப் பெறாமையாலேயுள்ள க்லேசம். அன்றிக்கே, ஆசார்ய விக்ரஹாநுபவாலாபத்தில் க்லேசமாகவுமாம். (ஆதரமாவது), உத்தரோத்தர மநுபூஷை விளையும்படி ஆசார்யனருளிச் செய்கிற பகவத்கணாநுபவத்தில் மென்மேலு முண்டாகா நிற்கிற விருப்பம். அன்றிக்கே, ஆசார்யனைக் கண்டால் பசியன் சோற்றைக் கண்டாப்போலே ததநுபவ கைங்கர்யங்களிலே மண்டி விழும்படியான விருப்பமாகவுமாம். (அநஸூயையாவது), ஆசார்யன் பகவத் பாகவத வைபவங்களை பரக்க உபபாதியா நின்றால், "ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே" என்னும்படி அதிலஸூயையற்றிருக்கை. அன்றிக்கே, ஆசார்யனுடைய உத்கர்ஷத்தையும் ஸப்ரஹ்மசாரிகளுடைய உத்கர்ஷத்தையுங் கண்டால் அதிலஸூயை யற்றிருக்கை யென்னவுமாம். "அஸூயாப்ரஸவபூ:" என்கிறவிதுக்கு, "ஹிதம் சொன்னவனுடைய உத்கர்ஷமேயாய்த்துப் பொறாதது" என்றிறே பூர்வர்களருளிச் செய்தது. பகவத் விஷயத்திலுட்பட அஸூயை பண்ணாநின்றால் ததீயவிஷயத்தில் சொல்லவேணுமோ, "இதந்து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம் யநஸூயவே" என்றானிறே. ஆக இப்படியிருந்துள்ள ஸத்குண ஸம்பந்நனையாய்த்து நேரே சிஷ்யனென்பது.

**விளக்கம்** - (சிஷ்யன் என்பது) – ஆசார்யன் கூறுகின்ற உபதேசம் கேட்பது என்று அளவுடன் கூடிய நிலை என்பது மட்டும் அல்லாமல், சிஷ்யன் என்று முக்கியமாக உரைக்கிறார். (ஸாத்யாந்தர நிவ்ருத்தியாவது) – தனது ஆத்ம ஸ்வரூபத்திற்கு

விரோதியாக உள்ள ஐச்வர்யம், கைவல்யம் போன்றதான மற்ற தாழ்ந்த பலன்களில் தன்னை மறந்தும் விருப்பம் இல்லாமல் இருத்தல் ஆகும். அல்லது, "இந்த ஆசார்யனைத் தவிர அடையத் தகுந்த வஸ்துவாக வேறு எதனையும் அறியேன்", என்றுள்ள நிலையாகும். (பலஸாதந சுச்ரூஷையாவது) – கச்யபஸம்ஹிதயில் – குரு சுக்ரூஷயா வித்யா – கல்வி என்பது ஆசார்யனுக்குச் செய்யும் கைங்கர்யம் மூலமே – என்று கூறப்பட்டபடி தான் செய்கின்ற கைங்கர்யம் காரணமாக ஆசார்யனை மகிழும்படிச் செய்து, அவனிடமிருந்து உபதேசம் செய்யப்பெறுவது ஏற்றதாக உள்ளதால், ஆசார்யன் தனக்கு உபகாரம் செய்யும் விதத்தில் அளிக்கின்ற தத்வஞானம் என்பதான பலனை அளிப்பதற்கு கருவியாக உள்ள ஆசார்யனுக்குச் செய்யப்படும் தொண்டு. அல்லது சிஷ்யனாக உள்ள தனது ஸ்வரூபத்திற்குத் தகுந்த பலனிலும், அதனை அளிக்கவல்ல சாதனத்திலும் உண்டான "கேட்கவேண்டும்" என்ற ஆசையாகும். அல்லது, ஆசார்யனின் திருமுகமலர்த்தி என்ற பலனை அளிக்கவல்ல சாதனமாக உள்ள அவனுக்குச் செய்யும் கைங்கர்யம் என்றும் கூறலாம். (ஆர்த்தியாவது) – திருவாய்மொழி (10-6-1) – இருள்தருமா ஞாலம் – என்பதற்கு ஏற்ப, நமக்கு உண்டான உண்மையான ஞானத்திற்குத் தடையாக உள்ள இந்த உலகத்திலிருந்து விரைவாக நீங்காத காரணத்தால் ஏற்பட்டும் துன்பம். அல்லது ஆசார்யனின் திருமேனி அனுபவம் கிட்டாத காரணத்தால் உண்டாகும் துக்கம் என்றும் கொள்ளலாம். (ஆதரமாவது) – மேன்மேலும் அனுபவிக்கவேண்டும் என்ற ஆசை ஏற்படும்படியாக ஆசார்யன் அருளிச்செய்த ஸர்வேச்வரனுடைய குணங்களை அனுபவிப்பதில் ஏற்படும் மேன்மேலும் ஆசை என்று கூறலாம். அல்லது, மிகுந்த பசி கொண்ட ஒருவன் உணவைக் கண்டால் அதன் மேலே விழுவது போன்று, ஆசார்யனைக் கண்டால் அவனுடைய கைங்கர்யங்களில் மண்டி விழுவது போன்ற ஆசை என்றும் கூறலாம். (அநஸூயையாவது) – ஸர்வேச்வரன் மற்றும் பாகவதர்கள் ஆகியோரின் வைபவங்கள் குறித்து ஆசார்யன் விரிவாக உபதேசம் செய்யும்போது, ஸ்ரீமத் பகவத்கீதை (9-1) – ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே – பொறாமை இல்லாத உனக்கு – என்பதற்கு ஏற்ப எந்தவிதமான பொறாமையும் இல்லாமல் இருக்கவேண்டும். அல்லது, ஆசார்யனுக்கு உள்ள பெருமை மற்றும் தன்னுடன் சேர்ந்து படிக்கும் சிஷ்யர்களின் பெருமை ஆகியவற்றைக் கண்டால், அது குறித்து பொறாமை கொள்ளாமல் இருத்தல் என்றும் கூறலாம். ஸ்தோத்ரரத்னம் (62) – அஸூயாப்ரஸவபூ: – பொறாமைக்கு பிறப்பிடமாக உள்ளவன் – என்று ஆளவந்தார் அருளிச்செய்த வரிக்கு, நமது பூர்வாசார்யர்கள் ஹிதம் சொன்னவனுடைய உத்கர்ஷமேயாய்த்துப் பொறாதது – நமக்கு நன்மையை

அளிக்கவல்ல உபதேசத்தைச் செய்தவனின் பெருமையைக் கூட பொறுத்துக் கொள்ள இயலாதவன் – என்று விளக்கம் உரைத்தது காண்க. ஸர்வேச்வரன் விஷயத்தில் பொறாமை கொள்ளும் ஒருவன், அவனுடைய அடியார்களின் விஷயத்திலும் பொறாமை கொள்வானோ என்று கூறவும் வேண்டுமோ? ஸ்ரீமத் பகவத்கீதையில் (9-1) – இதந்து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம் யநஸூயவே – இரகசியமாக பாதுகாத்துவைக்க வேண்டிய இந்த ஞானத்தை பொறாமை இல்லாத உனக்கு உபதேசிக்கிறேன் – என்றது காண்க. இப்படியாகப் பல நற்குணங்கள் உள்ளவனை சிஷ்யன் என்றார்.

322. மந்த்ரமும் தேவதையும் பலமும் பலாநுபந்திகளும் பலஸாதநமும் ஐஹிக போகமுமெல்லா மாசார்யனே யென்று நினைக்கக்கடவன்.

**அவதாரிகை** - இப்படி உக்தலக்ஷணயுக்தனான சிஷ்யனுக்கு ஸ்வாசார்ய விஷயத்தி லுண்டாக வேண்டும் ப்ரதிபத்தி விசேஷத்தை விதிக்கிறார் மேல் (மந்த்ரமும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதம் கூறப்பட்ட லக்ஷணம் கொண்டுள்ள ஒரு சிஷ்யன், தனது ஆசார்ய விஷயத்தில் எவ்விதம் சிந்திக்கவேண்டும் என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "மந்தாரம் த்ராயத இதி மந்த்ர:" என்கிறபடியே அநுஸந்தாத்ரு ரக்ஷகமாயிருந்துள்ள திருமந்த்ரமும், தத்ப்ரதிபாத்ய பரதேவதையும், தத்ப்ரஸாத லப்யமான கைங்கர்யரூப மஹாபலமும், ததநுபந்திகளான அவித்யாதி நிவ்ருத்தி பூர்வகமான ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவமும் ஸாலோக்யதிகளுமாகிற விவையும், ததாவித பலப்ரதமான ஸாதநமும், புத்ர தார க்ருஹ க்ஷேத்ர பச்வந்நாத் யநுபவரூபமான இஹலோகத்தில் போக்யமாகிற இவையெல்லாம் நமக்கு நம்முடைய ஆசார்யனேயென்று ப்ரதிபத்தி பண்ணக்கடவ னென்கை. "குருரேவ பரம்ப்ரஹ்ம குருரேவ பராகதி: குருரேவ பராவித்யா குருரேவ பராயணம், குருரேவ பர:காமோ குருரேவ பரந்தநம் யஸ்மாத் ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத் குருதரோ குரு:" என்றும், "ஐஹிகாமுஷ்மிகம் ஸர்வம் ஸசாஷ்டாக்ஷரதோ குரு: இத்யேவம் யே ந மந்யந்தே த்யக்தவ்யாஸ்தே மநீஷிபி:" என்றும் இப்படி சாஸ்த்ரங்களிற் சொல்லுகையாலே, (நினைக்கக்கடவன்) என்று விதிரூபேண அருளிச்செய்கிறார்.

**விளக்கம் -** மந்தாரம் த்ராயத இதி மந்த்ர: - தன்னை உச்சரிப்பவனைக் காப்பதால் மந்த்ரம் எனப்படுகிறது – என்பதற்கு ஏற்ப த்யானம் செய்பவர்களைக் காப்பாற்றுவதான திருமந்த்ரம், அந்த மந்த்ரத்தால் கூறப்படும் பரதேவதையாகிற ஸர்வேச்வரன், அந்த ஸர்வேச்வரனின் க்ருபை மூலம் கிட்டவல்ல கைங்கர்யம் என்ற உயர்ந்த பலன், அதன் காரணமாக ஏற்படுகின்ற "அறியாமை விலகுதல்" என்பதால் உண்டாகவல்ல தனது ஸ்வரூபம் குறித்த ஞானம், ஸர்வேச்வரனுடன் இருத்தல் மற்றும் அவனை அனுபவித்தபடி இருத்தல் போன்ற நிலை, இவற்றை அளிக்கவல்ல சாதனங்கள், புத்ரன் மனைவி வீடு நிலம் பசு மற்றும் உணவு – இவை அனைத்தும் ஆசார்யனே என்று எண்ணவேண்டும். கீழே உள்ள வரிகளைக் காண்க:

- குருரேவ பரம்ப்ரஹ்ம குருரேவ பராகதி: குருரேவ பராவித்யா குருரேவ பராயணம், குருரேவ பர:காமோ குருரேவ பரந்தநம் யஸ்மாத் ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத் குருதரோ குரு: – குருவே பரப்ரஹ்மம், குருவே உயர்ந்த கதி, குருவே உயர்ந்த வித்யை, குருவே உயர்ந்த செல்வம், எந்தக் காரணத்தினால் இந்தக் குரு மந்த்ரத்தை உபதேசம் செய்தானோ, அந்தக் காரணத்தினால் அவன் அனைத்திலும் மேம்பட்டவன் ஆவான்.
- ஐஹிகாமுஷ்மிகம் ஸர்வம் ஸசாஷ்டாக்ஷரதோ குரு: இத்யேவம் யே ந மந்யந்தே த்யக்தவ்யாஸ்தே மநீஷிபி: – இந்த உலகில் மட்டும் அல்லாமல், அந்த உலகிலும் பலன் அளிக்கவல்ல திருஅஷ்டாக்ஷர மந்த்ரத்தை உபதேசித்தவன் குரு ஆவான். இப்படியாக யார் நினைக்கவில்லையோ அவர்கள் நல்லவர்களால் கைவிடத்தக்கவர்கள்.

ஆக இப்படியாகப் பல சாஸ்த்ரங்கள் உரைப்பதால் "நினைக்கக்கடவன்" என்று விதித்தார்.

323. "மாதா பிதா யுவதய:" என்கிற ச்லோகத்திலே இவ்வர்த்தத்தைப் பரமாசார்யரு மருளிச்செய்கிறார்.

**அவதாரிகை -** இப்படி தாமருளிச் செய்த இவ்வர்த்தத்தி லாப்திக்குடலாக இது பரமாசார்ய வசந ஸித்தமுமென் றருளிச்செய்கிறார் (மாதா) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாகத் தான் அருளிச்செய்த விளக்கம் நம்புவதற்கு ஏற்றதே என்று உணர்த்தும்விதமாக, இது பரமாசார்யராக உள்ள ஸ்வாமி ஆளவந்தார் வாக்கியத்திலும் உள்ளது என்று காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது "மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:" என்று, ஐஹிக போகங்களையும், "ஸர்வம்" என்று, அநுக்த ஸகலகதநத்தாலே மந்த்ர தேவதா பலாதிகளையு மெடுத்து, இத்தனையும் ஆழ்வார் திருவடிகளே யென்றருளிச் செய்கையாலே, அந்த ச்லோகத்திலே யிவ்வர்த்தத்தைப் பரமாசார்யரான ஆளவந்தாரு மருளிச் செய்தாரென்கை.

**விளக்கம்** - அதாவது, ஸ்தோத்ரரத்னம்(3) – மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி: – தாயும் தந்தையும், மக்களும், செல்வமும் – என்று இந்த உலகத்தில் உள்ள இன்பங்களையும், "ஸர்வம்" என்ற பதம் மூலம் இவற்றில் கூறப்படாத மற்ற அனைத்து பலன்களையும் கூறிய பின்னர் – இவை அனைத்தும் நம்மாழ்வாரின் திருவடிகளே ஆகும் – என்று அருளிச்செய்தார். இதனால் இந்த ச்லோகத்தில் இங்கு உரைக்கப்பட்ட பொருளையே ஆளவந்தாரும் முன்பு அருளிச்செய்தார் என்று கருத்து.

324. இதுக்கடி உபகார ஸ்ம்ருதி.

**அவதாரிகை** - இப்படி யெல்லாமிவனே யென்றநுஸந்திக்கைக்கடியேதென்ன அருளிச் செய்கிறார் (இதுக்கடி உபகாரஸ்ம்ருதி) என்று.

**விளக்கம்** – இப்படியாக "அனைத்தும் ஆசார்யனே ஆவான்" என்று எண்ணுவதற்குக் காரணம் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்படி ஆசார்யனே நமக்கு ஸகலமும் என்றநுஸந்திக்கைக்கு ஹேது, நித்யஸம்ஸாரியாய்க் கிடந்த தன்னை உபதேசாதிகளாலே திருத்தி நித்யஸூரிகளுடைய அநுபவத்துக்கு அர்ஹனாம்படி பண்ணின உபகாராநுஸந்தாந மென்கை.

**விளக்கம் -** இவ்விதம் “ஆசார்யனே நமக்கும் அனைத்தும் ஆவான்” என்று எண்ணியபடி இருப்பதற்கான காரணம் – எப்போதும் ஸம்ஸாரத்தில் உழன்றபடி இருக்கும் நம்மை உபதேசங்கள் மூலம் நன்றாகத் திருத்தி, பரமபதத்திற்குச் சென்று நித்யஸூரிகள் அனுபவத்திற்கு ஒத்த அனுபவம் பெறும்படியாக நம்மை தகுதி உள்ளவர்களாக மாற்றிய உபகாரத்தால் ஆகும்.

325. உபகார ஸ்ம்ருதிக்கு முதலடி ஆசார்யன்பக்கல் க்ருதஜ்ஞதை; முடிந்த நிலம் ஈச்வரன் பக்கல் க்ருதஜ்ஞதை.

**அவதாரிகை –** இவ்வுபகார ஸ்ம்ருதி ப்ரஸங்கத்திலே அதினுடைய ப்ரதம சரமாவதிகளை தர்சிப்பிக்கிறார் (உபகார ஸ்ம்ருதிக்கு) என்று தொடங்கி.

**விளக்கம் –** இப்படியாகச் செய்ந்நன்றி அறிதல் என்பதைக் கூறுவதான இந்த இடத்தில், செய்ந்நன்றி அறிதல் காரணமாக ஏற்படும் முதல் நிலை மற்றும் இறுதி நிலை ஆகியவற்றை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** இச்சேதநன் முந்துற அநுஸந்திப்பது, அஜ்ஞாத ஜ்ஞாபநமுகத்தாலே தனக்கு அகிலத்தையு மறிவித்து பகவத்விஷயத்தைக் கைப்படுத்தின வாசார்யன் பண்ணின உபகாரத்தையாகையாலே, (உபகார ஸ்ம்ருதிக்கு முதலடி ஆசார்யன் பக்கல் க்ருதஜ்ஞதை) என்கிறது. க்ருதஜ்ஞதையுமுபகார ஸ்ம்ருதியும் பர்யாயம். ஆசார்ய கௌரவம் நெஞ்சில் படப்பட அவ்விஷயத்திலே தன்னைக் கொண்டு வந்து சேர்த்த வீச்வரன் பண்ணின க்ருஷி பரம்பரையைப் பின்னையநுஸந்திக்கையாலே (முடிந்தநில மீச்வரன் பக்கல் க்ருதஜ்ஞதை) என்கிறது. இதுவு மீச்வரன் பக்கலுபகார ஸ்ம்ருதி யென்றபடி. இத்தால் பகவத்விஷயத்தை யுபகரித்த வாசார்யன் பண்ணின உபகாரத்தை யநுஸந்திக்க விழிந்தால், அவனுடைய வைபவம் நெஞ்சிலே ஊற்றிருந்தவாறே, இப்படி யிருக்கிற விஷயத்தை நாம் பெற்றது எம்பெருமானாலேயன்றோ வென்று தத்க்ருதோபகாராநுஸந்தாநத்திலே சென்று தலைக்கட்டு மென்றதாய்த்து.

**விளக்கம் -** சேதனன் முதலில் எண்ணவேண்டியது என்னவென்றால் - தனது அறிவில்லாத நிலை என்பதைப் போக்கும்விதமாக தான் அறியவேண்டிய அனைத்தையும் தனக்கு

உணர்த்தி, பகவத்விஷயத்தில் தன்னை அகப்படுத்திய ஆசார்யன் செய்த உபகாரத்தையே ஆகும்; ஆகவே “உபகார ஸ்ம்ருதிக்கு முதலடி ஆசார்யன் பக்கல் க்ருதஜ்ஞதை” என்பதன் மூலம் – செய்ந்நன்றி அறிதலின் முதல் நிலை ஆசார்யன் செய்த உபகாரத்தை பாராட்டுதல் என்றாகிறது. க்ருதஜ்ஞதை (நன்றி உரைத்தல்), உபகாரஸ்ம்ருதி (செய்ந்நன்றி அறிதல்) ஆகிய இரண்டும் ஒரே பொருள் அளிப்பவை ஆகும். ஆசார்யனின் பெருமை என்பது நமது நெஞ்சில் அதிகரிக்க அதிகரிக்க, அந்த ஆசார்யன் விஷயத்தில் தன்னைக் கொண்டு வந்து சேர்த்த ஈச்வரனின் செயல்களை எண்ணுதல் என்பதை “முடிந்தநில மீச்வரன் பக்கல் க்ருதஜ்ஞதை” என்கிறார். அதாவது இதுவும் ஸர்வேச்வரனிடம் நாம் காண்பிக்கவேண்டிய செய்ந்நன்றி அறிதல் ஆகிறது. ஆகவே பகவத்விஷயத்தை நமக்கு உபதேசம் செய்து உபகாரம் செய்த ஆசார்யனின் உபகாரத்தை எண்ணும்போது, அந்த ஆசார்யனின் வைபவம் நமது உள்ளத்தில் ஊன்றியிருக்கும் நிலை ஏற்படுகிறது; இதனால் “இப்படிப்பட்ட ஆசார்ய விஷயத்தை நாம் அடைந்தது அந்த ஸர்வேச்வரனால் அல்லவோ?” என்று ஸர்வேச்வரன் செய்த உபகாரத்தை எண்ணுவதில் சென்று நிற்கும் என்று கருத்து.

326. சிஷ்யனு மாசார்யனும் அந்யோந்யம் ப்ரிய ஹிதங்களை நடத்தக் கடவர்கள்.

**அவதாரிகை** – இனி, இந்த ஸதாசார்ய ஸச்சிஷ்யர்களுடைய பரிமாற்றமிருக்கும்படியை அருளிச்செய்கிறார் மேல் (சிஷ்யனுமாசார்யனும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - அடுத்து சிறந்த ஆசார்யன், சிறந்த சிஷ்யன் ஆகிய இருவரும் ஒருவருக்கொருவர் எவ்விதம் நடந்து கொள்வார்கள் என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (அந்யோந்யம் ப்ரியஹிதங்களை நடத்துகையாவது) சிஷ்ய னாசார்யனுக்கு ப்ரியஹிதங்களிரண்டையும் நடத்துகையும், ஆசார்யன் சிஷ்யனுக்கு ப்ரியஹிதங்களிரண்டையும் நடத்துகையும். (நடத்தக்கடவர்கள்) என்றது - இதினுடைய அவச்யகரணீயத்வம் தோற்றுகைக்காக.

**விளக்கம்** – (அந்யோந்யம் ப்ரியஹிதங்களை நடத்துகையாவது) – சிஷ்யன் ஆசார்யனுக்கு பிடித்தமானவற்றையும், அவனுக்கு நன்மை அளிப்பதையும் செய்யவேண்டும். ஆசார்யன்

சிஷ்யனுக்குப் பிடித்தவற்றையும், நன்மை அளிப்பதையும் செய்தல் வேண்டும். (நடத்தக் கடவர்கள்) – இந்த இரண்டையும் அவசியம் செய்யவேண்டும் என்பதால் “கடவர்கள்” என்று விதித்தார்.

327. சிஷ்யன் தான் ப்ரியத்தை நடத்தக்கடவன்; ஈச்வரனைக் கொண்டு ஹிதத்தை நடத்தக்கடவன்; ஆசார்யன் மாறாடி நடத்தக்கடவன்.

**அவதாரிகை** - இருவரு மிரண்டையும் அந்யோந்யம் நடத்தும் க்ரமமென்னென்ன அருளிச் செய்கிறார் (சிஷ்யன்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இந்த இருவரும் ஒருவரை ஒருவர் நடத்திக்கொள்ளும் முறை என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது சிஷ்யனாசார்யனுக் கிரண்டையும் நடத்துமிடத்தில், தன் ஸ்வரூபாநுகுணமாக ஆசார்ய முகோல்லாஸமே புருஷார்த்தமென்று நினைத்து தன்னுடைய கிஞ்சித்காராதிகளாலே தானாசார்யனுக்கு ஸர்வகாலமும் ப்ரியத்தை நடத்திப் போரக்கடவன்; மங்களாசாஸநபரனாகையாலே இவ்விபூதி ஸ்வபாவத்தால் திருவுள்ளத்தி லொரு கலக்கம் வாராதொழியவேணுமென்றும், அப்படி யேதேனுமென்று வந்த காலத்தில் இத்தைப் போக்கித் தந்தருளவேணுமென்றும் ப்ரார்த்தித்து, ஈச்வரனைக் கொண்டு ஹிதத்தை நடத்தக் கடவனென்கை. (ஆசார்யன் மாறாடி நடத்துகையாவது) – ஹிதைக பரனாகையாலே இவனுக்கு ஸ்வரூபஹாநி வாராதபடி ஹேயோபாதேயங்களினுடைய ஹாநோபாதாநங்களில் ஸ்காலித்யம் பிறவாமல் நியமித்து, ஸர்வகாலமும் நல்வழி நடத்திக்கொண்டு போருகையாகிற ஹிதத்தைத் தான் நடத்தி, த்ருஷ்டத்தில் ஸங்கோசத்தால் இவன் மிகவும் நலங்குமளவில் இருந்த நாளைக்கு இவன் நலங்காமல் இவையுமவனுக்குண்டாம்படி திருவுள்ளம் பற்றி யருளவேணுமென்றர்த்தித்து, ஈச்வரனைக் கொண்டு ப்ரியத்தை நடத்தக்கடவனென்கை.

**விளக்கம்** - சிஷ்யன் ஆசார்யனுக்கு இரண்டையும் நடத்தும்போது, தனது ஸ்வரூபத்துக்கு ஏற்றபடி, ஆசார்யனின் திருமுகம் மலர்தல் என்பதே மிகவும் உயர்ந்த பயன் என்று எண்ணி, தனது கைங்கர்யங்களால் தனது ஆசார்யனுக்கு அனைத்துக் காலகட்டங்களிலும்

விருப்பமானவற்றையே செய்தபடி இருக்கக்கடவன். திருப்பல்லாண்டு பாடுவதில் நோக்கம் உள்ளவனாக, இந்த உலகத்தின் இயல்பு காராணமாக திருவுள்ளத்தில் எந்தவிதமான கலக்கங்களும் ஏற்படக்கூடது என்றும், அப்படியே ஏதேனும் சம்பவித்தால் அதனை நீக்கித் தரவேண்டும் என்று வேண்டிக்கொண்டும், ஸர்வேச்வரன் மூலமாக ஆசார்யனுக்கு நல்லவற்றைச் செய்யவேண்டும். (ஆசார்யன் மாறாடி நடத்துகையாவது) – சிஷ்யனின் நலத்தில் நோக்கம் உள்ளவராக இருப்பதால், தனது ஸ்வரூபத்திற்கு எந்தவிதமான கேடும் உண்டாகாமல், தாழ்ந்த விஷயங்களில் ஈடுபடாமல் நல்ல விஷயங்களில் கைக்கொண்டு, இதிலிருந்து மாறாமல் இருந்து, எல்லா காலகட்டத்திலும் நல்வழி நடத்திக் கொண்டு போதல் என்பதைச் செய்து வரவேண்டும்; மேலும் உலகில் உள்ள வறுமை காரணமாக இவன் கலங்கும்போது "தான் இவனோடு உள்ள காலம் முடிய இவன் சோர்ந்து போகாமல், நன்மை மட்டுமே ஏற்படவேண்டும் என்று திருவுள்ளம் பற்றவேண்டும்" என்று ஸர்வேச்வரன் மூலம் சிஷ்யனுக்கு நன்மை செய்யவேண்டும்.

328. சிஷ்யன் உகப்பிலேயூன்றிப் போரும்; ஆசார்யன் உஜ்ஜீவனத்திலே யூன்றிப்போரும்.

**அவதாரிகை** - இப்படி செய்து போருமிடத்தி லிருவர்க்குமிரண்டும் ஸமப்ரதாநமாயிருக்குமோ வென்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார் (சிஷ்யனுகப்பிலே) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக இருவரும் செய்து வரும்போது, இருவரும் செய்யும் காரியங்கள் ஒத்திருக்கவேண்டுமா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சிஷ்யன் சேஷபூதனாகையாலே சேஷியான ஆசார்யனுடைய ப்ரீதியிலே யூற்றமாய்ப்போரும்; ஆசார்யன் பரமக்ருபாவானாகையாலே தன்னுடைய சிஷ்யனானவிவன் ஸம்ஸார துத்தீர்ணனாய் உஜ்ஜீவிக்கையிலே யூற்றமாய்ப் போருமென்கை. ஆகையால், சிஷ்யனுக்கு ப்ரியகாரணமும் ஆசார்யனுக்கு ஹிதகரணமுமே ப்ரதாநமென்று கருத்து.

**விளக்கம்** - சிஷ்யன் ஆசார்யனுக்கு அடிமைப்பட்டவன் என்பதால் தனது எஜமானனாகிய ஆசார்யனின் மகிழ்வில் எப்போதும் குறியாக இருப்பான். ஆசார்யன் சிஷ்யனிடம் மிகுந்த

கருணை கொண்டவன் என்பதால், தனது சிஷ்யனாகிய இவன் ஸம்ஸாரம் என்ற கடலைக் கடந்து கரையேறவேண்டும் என்பதில் குறியாக இருப்பான். எனவே சிஷ்யன் ஆசார்யனுக்கு இனிமையானவற்றைச் செய்யவேண்டும், ஆசார்யன் சிஷ்யனுக்கு நன்மையானவற்றைச் செய்யவேண்டும் என்பதே முக்கியம் என்று கருத்து.

329. ஆகையால் சிஷ்யன் ஆசார்யனுடைய ஹர்ஷத்துக்கு இலக்காகையொழிய ரோஷத்துக்கு இலக்காகைக் கவகாசமில்லை.

**அவதாரிகை** - கீழ்சொன்னவற்றால் பலிக்குமத்தை அருளிச்செய்கிறார் (ஆகையால்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இதுவரை கூறப்பட்டதால் நிகழ்வது என்ன என்பதை அடுத்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சிஷ்யனாசார்யனுடைய ப்ரியகரணமும் ஆசார்யன் சிஷ்யனுடைய ஹிதகரணமும் ப்ரதாநமாக நடத்திப் போருகையாலே, சிஷ்யனானவிவ னாசார்யனுடைய ப்ரீதிக்கு விஷயமாய்ப் போருகையொழிய அநிஷ்டகரணாதிகளாலே நிக்ரஹத்துக்கு விஷயமாகைக்கு இடந்தான் முதலிலே யில்லையென்கை. (ஆகையால்) என்று, உகப்பிலே யூன்றிப் போருமென்று சொன்ன தொன்றையும் அநுவதிக்கிற தாகவுமாம்.

**விளக்கம்** - சிஷ்யன் ஆசார்யனுக்கு விருப்பமானவற்றைச் செய்தல், ஆசார்யன் சிஷ்யனுக்கு நன்மையானவற்றைச் செய்தல் என்பதையே முக்கியமாகக் கொண்டு நடப்பதால், சிஷ்யனாக உள்ளவன் ஆசார்யனின் மகிழ்வுக்கு ஏற்றதாக உள்ளதை மட்டுமே செய்யவேண்டும் அல்லாமல், "விருப்பம் இல்லாதவற்றைச் செய்தான்" என்று அவன் கோபத்துக்கு இடம் அளிக்கக்கூடாது என்று கருத்து. (ஆகையால்) – ஆசார்யனின் மகிழ்ச்சி என்பதில் மட்டுமே ஊன்றியிருத்தல் என்பதை மட்டும் உரைப்பதாகவும் கொள்க.

330. நிக்ரஹத்துக்குப் பாத்ரமாம்போது அநு ஹிதரூபமாகையாலே யிருவர்க்கு முபாதேயம்.

**அவதாரிகை** – ப்ரக்ருதி ஸம்பந்தத்தோடேயிருக்கிற விவனுக்கு எப்போது மொருபடிப்பட்டிருக்குமோ, காலுஷ்யங்களுண்டாகாதோ, அதடியாக நிக்ரஹ பாத்ரமாம்போது அந்த நிக்ரஹம் இரண்டு தலைக்கு மெங்ஙனேயாகக் கடவதென்ன அருளிச் செய்கிறார் (நிக்ரஹத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - சரீர ஸம்பந்துடன் உள்ள ஒருவனால் எப்போதும் ஒரே போன்ற மனநிலையில் இருக்க முடியுமா? மனதில் கலக்கம் உண்டாகாதோ? அதன் காரணமாக கோபத்துக்கு ஆளாகும்போது, அந்தக் கோபம் இந்த இருவருக்கும் எப்படி ஆகிறது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அநிஷ்டகரணாதிகளடியாக ஆசார்ய நிக்ரஹத்துக்குப் பாத்ரமாம் தசையில் அந்த நிக்ரஹம் சிஷ்யனானவிவனை அபதேப்ரவ்ருத்தனாகாதபடி நியமித்து நல்வழி நடத்துகைக் குறுப்பாய்க் கொண்டு ஹிதரூபமாயிருப்ப தொன்றாகையாலே, இப்படி நம்மை நிக்ரஹிப்பதே என்று இவன் நெஞ்சுளைதல், இவனை யிப்படி நிக்ரஹிக்க வேண்டுகிறதேயென்று ஆசார்யன் நெஞ்சுளைதல் செய்கை யன்றிக்கே, நிக்ரஹ விஷயமான விவனுக்கும் நிக்ரஹாச்ரயமான வாசார்யனுக்கும் அங்கீகார்யமென்கை.

**விளக்கம்** - விருப்பம் இல்லாதவற்றைச் செய்வதன் காரணமாக ஆசார்யனின் கோபத்திற்கு இலக்காகும்போது, அந்தக் கோபம் என்பது சிஷ்யனை தகாத வழியில் செல்லாதபடி தடுத்தும், நல்ல வழியில் வருவதற்குக் காரணமாகவும் அமைந்துவிடுகிறது; இப்படியாக அந்தக் கோபம் என்பது நன்மை வடிவாகவே உள்ளதால், “இப்படியாக ஆசார்யன் நம்மிடம் கோபம் கொள்ளும்படி ஆனதே” என்று சிஷ்யன் மனம் கலங்குகிறான். “இப்படியாக இவன் மீது கோபம் கொள்ளும்படி ஆனதே” என்று ஆசார்யன் மனம் கலங்காமல் இருந்து, கோபத்துக்கு இலக்கான சிஷ்யனுக்கும் கோபம் அடைந்த ஆசார்யனுக்கும் கைக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

331. சிஷ்யனுக்கு நிக்ரஹ காரணம் த்யாஜ்யம்

**அவதாரிகை** - நிக்ரஹ முபாதேயமாகில் நிக்ரஹ காரணமு முபாதேயமாகாதோ வென்ன? (சிஷ்யனுக்கு நிக்ரஹ காரணம் த்யாஜ்யம்) என்கிறார்.

**விளக்கம்** – கோபம் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றால், அந்தக் கோபத்துக்குக் காரணமாக உள்ள குற்றங்களும் ஏற்றுக்கொள்ளத்தக்கன என்று ஆகாதோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நிக்ரஹ முபாதேயமென்று நினைத்து மீளவும் தத்காரணத்தைச் செய்யவொண்ணாத, யாதொரு காரணத்தாலே நீரிலே நெருப்பெழுமாப்போலே தன் விஷயத்தில் குளிர்ந்து தெளிந்திருக்கிற வாசார்ய ஹ்ருதயத்திலே நிக்ரஹமெழுந்திருந்தது, அந்தக் காரணத்தை மறுவலிடாதபடி விடவேணுமென்கை.

**விளக்கம்** – கோபம் கைக்கொள்ளத்தக்கது என்று சிந்தித்து, அந்தக் கோபத்திற்குக் காரணமான குற்றத்தை மீண்டும் செய்யலாகாது. நீரில் நெருப்பு எழுவது போன்று, சிஷ்யனாகிய தன் விஷயத்தில் குளிர்ந்து நிற்கும் ஆசார்யனின் திருவுள்ளத்தில் எந்த ஒரு காரணத்தால் கோபம் எழுந்ததோ அது மீண்டும் வராமல் காக்கவேண்டும் என்று கருத்து.

332. நிக்ரஹந்தான் பகவந் நிக்ரஹம் போலே ப்ராப்யாந்தர்க்கதம்

**அவதாரிகை** - கீழ்ச்சொன்ன வாசார்ய நிக்ரஹம் ஹிதரூபமென்று வைதமாக உபாதேயமாமளவன்றிக்கே, இவனுக்கு ப்ராப்ய கோடி கடிதமாயிருக்கு மென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் (நிக்ரஹந்தான்) என்று தொடங்கி.

**விளக்கம்** – கீழே உரைக்கப்பட்ட ஆசார்யனின் கோபம் என்பது நன்மை அளிக்கவல்லது என்று விதிக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்படும் தன்மை கொண்டது; அது மட்டும் அல்லாமல், சிஷ்யன் அடையத்தக்க பேறுகளில் இதுவும் ஒன்றாக இருக்கும் என்பதை உதாரணத்துடன் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸ்வாசார்யன் ஸ்வவிஷயத்தில் ஹிதரூபேண பண்ணுகிற நிக்ரஹந்தான், ஸ்வவிரோதி நிவ்ருத்திக்குறுப்பாகையாலே, “கொண்ட சீற்றமொன்றுண்டு”, “செய்யேல் தீவினை” இத்யாதிகளிற் சொல்லுகிற பகவந் நிக்ரஹம் போலே புருஷார்த்த கோடியிலே அந்தர்பூதமென்கை. “ஆசார்ய னர்த்த காமங்களில் நசையற்றவனாகையாலே அவை ஹேதுவாகப் பொறுக்கவும் வெறுக்கவும் ப்ராப்தியில்லை, இனி இவனுடைய ஹிதரூபமாக வெறுத்தானாகில் அதுவும் ப்ராப்யாந்தர்க்கதமாகக் கடவது” என்று இது தன்னை மாணிக்கமாலையிலே ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தாரிறே.

**விளக்கம்** - தனது ஆசார்யன் சிஷ்யனாக உள்ள தனது விஷயத்தில் நன்மை அளிப்பதாகச் செய்கிற கோபம் என்பது தனது விரோதிகளை நீக்க உதவும் காரணத்தால் கீழே உள்ள பாசுர வரிகளில் கூறப்படுவது போல, ஸர்வேச்வரனின் சீற்றம் போன்று புருஷார்த்தமாகவே ஆசார்யனின் கோபமும் உள்ளது என்று கருத்து:

- பெரியதிருமொழி (5-8-3) – கொண்ட சீற்றமொன்றுண்டு
- திருவாய்மொழி (2-9-3) – செய்யேல் தீவினை

333. ஆசார்யன் சிஷ்யனுடைய ஸ்வரூபத்தைப் பேணக்கடவன்; சிஷ்யன் ஆசார்யனுடைய தேஹத்தைப் பேணக்கடவன்.

**அவதாரிகை** - கீழிருவர்க்கும் ப்ரதாந க்ருத்யங்களாகச் சொன்ன ஹிதகரண ப்ரிய கரணங்களின் வேஷத்தை விசதமாக அருளிச்செய்கிறார் (ஆசார்யன்) என்று தொடங்கி.

**விளக்கம்** - கீழே உரைக்கப்பட்டவற்றில் இருவருக்கும் செய்யவேண்டியவை என்று உரைக்கப்பட்ட நன்மையைச் செய்தல், இனிமையானவற்றைச் செய்தல் ஆகியவை எவை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, உஜ்ஜீவநபரனான ஆசார்யன், உஜ்ஜிஜீவிஷுவாய் வந்து உபஸத்தி பண்ணி உகப்பிலே யூன்றிப்போருகிற சிஷ்யனுடைய ஸ்வரூபத்தை ப்ராமாதிகமாகவும் ஒரு பழுது வாராதபடி ஏகாக்ர சித்தனாய்க் கொண்டு

உபதேசாதிகளாலே நோக்கிக் கொண்டு போரக்கடவன், ப்ரியபரனான சிஷ்யன் தன்னுடைய உஜ்ஜீவநபரனாய் தன் ஸ்வரூப ரக்ஷணமே பண்ணிக் கொண்டு போருகிற ஆசார்யனுடைய திருமேனியை உசித கைங்கர்யங்களாலே ஸர்வகாலமு மேகாக்ரசித்தனாய் நோக்கிக்கொண்டு போரக்கடவ னென்கை.

**விளக்கம்** - சிஷ்யனின் உய்வு என்பதில் நோக்கு உடையவனான ஆசார்யன், "உய்யவேண்டும்" என்ற எண்ணத்துடன் தன்னை வந்தடைந்து, ஆசார்யனின் மனமகிழ்வு என்ற விஷயத்தில் ஊறியபடி உள்ள சிஷ்யனுடைய ஸ்வரூபத்தை, மறந்தும் கூட ஒரு சிறிய பிழை உண்டாகாத விதத்தில் மனம் ஒன்றி, உபதேசம் போன்றவற்றால் காப்பாற்றியபடி இருக்கவேண்டும். ஆசார்யனுக்குப் பிடித்தமானவற்றை மட்டுமே செய்தல் என்பதில் நோக்கு உள்ள சிஷ்யன், தனது உய்வு குறித்து சிந்திப்பவனாக, தனது ஸ்வரூபத்தைக் காப்பாற்றியபடி உள்ள ஆசார்யனின் திருமேனியைத் தகுந்த கைங்கர்யம் மூலம் அனைத்துக் காலங்களிலும் ஒருமித்த மனதுடன் செய்து வரவேண்டும்.

334. இரண்டு மிருவர்க்கும் ஸ்வரூபமுமாய் பகவத் கைங்கர்யமுமாயிருக்கும்.

**அவதாரிகை** - இப்படி யிருவருமிரண்டையும் பேணினா லிரண்டு தலைக்கும் பலிக்குமத்தை அருளிச்செய்கிறார் (இரண்டும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக இருவரும் உயிர் மற்றும் சரீரம் ஆகிய இரண்டையும் பேணி வருவதால், இந்த இருவருக்கும் கிட்டுவது என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஆசார்யனானால் சிஷ்யனுடைய ஸ்வரூபத்தைப் பேணுகையும் சிஷ்யனானாலாசார்யனுடைய தேஹத்தைப் பேணுகையும் ஸ்வஸ்வா ஸாதாரணா காரங்களாகையாலே, இரண்டு மிருவர்க்கும் ஸ்வரூபமுமாய்; "அஹமந்நம்" என்கிறபடியே அவனுக்கு போக்யமாகைக்கு யோக்யமாய் வைத்து அநாதிகால மப்படி விநியோகப் படப்பெறாமல் கிடந்த விவன் ஸ்வரூபம் தாத்ருச விநியோகார்ஹமாகத் திருந்தும்படி பேணிக்கொண்டு போருகையும், "நன்கென்னுடலங் கைவிடான்" என்கிறபடியே, அவனுக்கு விட்டுப்பிடிக்க ஸஹியாதபடி போக்யமாயிருக்கிற ஆசார்ய விக்ரஹத்தைப்

பேணிக்கொண்டு போருகையும், பகவானுக்கு மிகவு முகப்பாகையாலே, இவைதான் வஸ்துகத்யா பகவத் கைங்கர்யமுமா யிருக்குமென்கை.

**விளக்கம்** – ஆசார்யன் சிஷ்யனுடைய ஸ்வரூபத்தைக் காப்பாற்றுவதும், சிஷ்யன் ஆசார்யனுடைய திருமேனியைக் காப்பாற்றுவதும் அவரவர்களின் தன்மையாக உள்ளதால் இந்த இரண்டும் அவர்களுடைய ஸ்வரூபம் ஆகும். தைத்திரீய உபநிஷத் – அஹம் அந்நம் – நான் ஸர்வேச்வரனுக்கு அன்னம் ஆவேன் – என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுக்கு இனிமையாக இருக்கக்கூடிய தகுதி ஒருவனுக்கு இயல்பாகவே உண்டு; ஆனால் எல்லையற்ற காலமாக அவ்விதம் உபயோகப்படாமல் உள்ள சிஷ்யனுடைய ஸ்வரூபம், அதன்படி மாறுவதற்கு ஏற்றபடி அவனைத் திருத்திக்கொண்டு காப்பாற்றுவதும்; திருவாய்மொழி (10-7-4) – நன்கென்னுடலங் கைவிடான் – என்பதற்கு ஏற்றபடி ஸர்வேச்வரனுக்கு ஒரு நொடியும் விட்டுப் பிடிப்பதற்குப் பொறுக்க இயலாத இனிய ஆசார்யனின் திருமேனியைப் பாதுகாத்தபடி இருப்பதும் – இந்த இரண்டும் ஸர்வேச்வரனின் உகப்புக்குக் காரணமாக உள்ளதால், இவை இரண்டும் பகவத் கைங்கர்யங்களாகவே உள்ளன என்று கருத்து.

335. ஆசார்யனுக்கு தேஹரக்ஷணம் ஸ்வரூபஹாநி; சிஷ்யனுக்கு ஆத்ம ரக்ஷணம் ஸ்வரூபஹாநி.

**அவதாரிகை** - இப்படி வயவஸ்திதமாக வேணுமோ, ஆசார்யனுக்குத் தன்னுடைய தேஹரக்ஷணத்திலும் சிஷ்யனுக்குத் தன்னுடைய ஸ்வரூப ரக்ஷணத்திலு மந்வய முண்டானால் வருமதேதென்ன அருளிச்செய்கிறார் (ஆசார்யனுக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் வரைமுறை என்று விதிக்க வேண்டுமோ? ஆசார்யனுக்குத் தனது சரீரத்தைக் காப்பாற்றுவதிலும், சிஷ்யனுக்குத் தனது ஸ்வரூபத்தைக் காப்பாற்றுவதிலும் ஸம்பந்தம் ஏற்படும்போது உண்டாகும் விளைவு என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, தன்னுடைய தேஹயாத்ரையில் தானுபேக்ஷகனாயிருக்க சிஷ்யனானவன் இதுவே நமக்கு ஸ்வரூபம் என்று தன்னுடைய தேஹத்தைப் பேணிக்

கொண்டு போருகையொழிய, தன்னுடைய தேஹத்தைத் தான் ரக்ஷிக்கையாகிறவிது ஆசார்யனுக்கு ஆசார்யத்வமாகிற ஸ்வரூபத்துக்கு ஹாநி; தானாசார்யன் பக்கலிலே ந்யஸ்தபரனான பின்பு தன் ஸ்வரூபத்தை அவன் பேணிக்கொண்டு போரக் கண்டிருக்கையொழிய தான் தன்னாத்மரக்ஷணம் பண்ணுகையாகிற விது, சிஷ்யனுக்கு சிஷ்யத்வமாகிற ஸ்வரூபத்துக்கு ஹாநியென்கை. ஆகையால், மறந்தும், சிஷ்யனுக்குத் தன்னுடைய ஸ்வரூப ரக்ஷணமும், ஆசார்யனுக்குத் தன்னுடைய தேஹரக்ஷணமும் கர்த்தவ்யமன்றென்றதாய்த்து.

**விளக்கம்** - ஆசார்யன் தனது திருமேனியைக் காப்பாற்றிக் கொள்வதில் அக்கறை எடுத்துக்கொள்ளாமல் உள்ளபோது, சிஷ்யனாக உள்ளவன் “இதுவே நமது ஸ்வரூபம்” என்று ஆசார்யனின் திருமேனியைக் காப்பதை விடுத்து, தனது சரீரத்தை மட்டும் நோக்கிக்கொண்டு இருந்தால், இந்த நிலையானது ஆசார்யனாக உள்ள தன்மைக்குக் கேடு ஏற்படுத்திவிடும். தனது ஸ்வரூபத்தைக் காப்பாற்றும் பொறுப்பை ஆசார்யனிடம் ஒப்படைத்த பின்னர், தனது ஸ்வரூபத்தை (இங்கு ஸ்வரூபம் என்பது உயிர் என்னும் பொருளில் கொள்வர்) ஆசார்யன் காப்பாற்றியபடி இருப்பதை வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதை விட்டு, தானே தனது ஆத்மாவைக் காப்பாற்ற முயற்சி செய்தால், அது சிஷ்யனாக உள்ள தன்மைக்குக் கேடு ஏற்படுத்தும். ஆகவே மறந்தும் கூட சிஷ்யனுக்குத் தனது ஸ்வரூபத்தை தானே ரக்ஷிக்க முயலுதல், ஆசார்யன் தனது சரீரத்தைக் காப்பாற்றிக்கொள்ள தானே முயலுதல் என்ற இரண்டும் செய்யத்தக்கவை அல்ல.

336. ஆசார்யன் ஆத்மரக்ஷணம் பண்ணுமிடத்தி லஹங்காரம் விரோதி; சிஷ்யன் தேஹரக்ஷணம் பண்ணுமிடத்தில் மமகாரம் விரோதி.

**அவதாரிகை** – இனி, ஆசார்யனும் சிஷ்யனுமிப்படி தந்தாமுக்கு வ்யவஸ்திதங்களான ஆத்மரக்ஷண தேஹரக்ஷணங்களைப் பண்ணுமிடத்தில், அவச்யம் பரிஹரணீயங்களான விரோதிகளை அருளிச்செய்கிறார் (ஆசார்யனாத்ம ரக்ஷணம் பண்ணுமிடத்தில்) என்று தொடங்கி.

**விளக்கம் -** இப்படியாக ஆசார்யனும் சிஷ்யனும் தங்களுக்கு என்று ஏற்பட்டதான ஆத்மாவை ரக்ஷித்தல், சரீரத்தைக் காப்பாற்றுதல் என்பனவற்றைச் செய்யும்போது, அவசியம் நீக்க வேண்டிய விரோதிகள் எவை என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, ஹிதபரனான ஆசார்யன் ஸ்வோபதேசாதிகளாலே சிஷ்யாத்ம ரக்ஷணம் பண்ணுமிடத்தில், நான் ரக்ஷித்துக்கொண்டு போருகிறேன் என்கிற வஹங்காரம், ஆசார்ய பாரதந்த்ர்யமாகிற தன்னதிகார விரோதி; ப்ரியபரனான சிஷ்யன் த்ரவ்யாதிகளாலே ஆசார்ய தேஹரக்ஷணம் பண்ணுமிடத்தில், என்னுடைய த்ரவ்யங்களாலும் கரணங்களாலும் இப்படி ரக்ஷித்துக் கொண்டு போருகிறேன் என்கிற மமகாரம் , சரீரார்த்த ப்ராணாதிகளெல்லா மாசார்யசேஷமென்றிருக்கக் கடவ தன்னதிகார விரோதி யென்கை.

**விளக்கம் -** சிஷ்யனின் நன்மையில் குறிக்கோள் உடையவனாகிய ஆசார்யன், தனது உபதேசம் போன்றவற்றால் சிஷ்யனின் ஆத்மாவைக் காப்பாற்றும்போது, "நான் இவனைக் காப்பாற்றுகிறேன்" என்று அஹங்காரம் கொண்டால், அந்த அஹங்காரமானது தனது ஆசார்யனுக்கு வசப்பட்டிருத்தல் என்ற தன்மைக்கு விரோதமாகும். ஆசார்யனுக்கு இனிமை அளிப்பதை மட்டுமே செய்தபடி உள்ள சிஷ்யன் பணம் போன்றவற்றால் ஆசார்யனின் சரீரத்தைப் பேணி வரும்போது, "எனது பொருள் மட்டும் உடல் உறுப்புகளால் இவ்விதம் காப்பாற்றுகிறேன்", என்று சிந்தித்தால், அத்தகைய மமகாரம் என்பது தனது பொருள் மற்றும் சரீரம் ஆகிய அனைத்தும் ஆசார்யனுக்கு மட்டுமே உரியவை என்று இருக்கவேண்டிய தகுதிக்கு விரோதமானவை ஆகும்.

337. ஆசார்யன் தன்னுடைய தேஹரக்ஷணம் தன் வஸ்துவைக் கொண்டு பண்ணக் கடவன்; சிஷ்யன் ஸ்வதேஹரக்ஷணம் ஆசார்யன் வஸ்துவைக் கொண்டு பண்ணக் கடவன்.

**அவதாரிகை -** ஆசார்யனுக்கும் சிஷ்யனுக்கும் தந்தாமுடைய தேஹரக்ஷண தசையில் ப்ரதிபத்தி விசேஷங்களை வகுத்தருளிச் செய்கிறார் மேல் (ஆசார்யன்) என்று தொடங்கி.

விளக்கம் – ஆசார்யனுக்கும் சிஷ்யனுக்கும் தங்களுடைய சரீரங்களைப் பேணுதல் என்பதைச் செய்யும்போது எவ்விதம் சிந்திக்கவேண்டும் என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஆசார்யன் தன்னுடைய தேஹரக்ஷணம் தன் வஸ்துவைக் கொண்டு பண்ணக்கடவன்) என்றது, “சரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ நிவேதயேத்” என்கிறபடியே சிஷ்ய ஸர்வஸ்வமும் அடியிலே ஸமர்ப்பிதமாகையாலே ஸ்வதேஹ ரக்ஷணத்துக்குறுப்பாக வவன் காலோசிதமாக கிஞ்சித்கரிக்குமவற்றை, அவனதென்னும் நினைவின்றிக்கே தன்னதென்று வாங்கி விநியோகங் கொள்ளக் கடவனென்கை. (சிஷ்யன் ஸ்வதேஹரக்ஷண மாசார்யன் வஸ்துவைக்கொண்டு பண்ணக்கடவன்) என்றது, தனக்கோருடைமை யின்றிக்கே ஸகலமுமாசார்ய சேஷமாகையாலே, ஸ்வதேஹ ரக்ஷணத்துக்குறுப்பாக விநியோகங் கொள்ளுமவற்றை ஆசார்யனுடைமை யென்று ப்ரதிபத்தி பண்ணி விநியோகங் கொள்ளக்கடவனென்கை.

**விளக்கம்** – (ஆசார்யன் தன்னுடைய தேஹரக்ஷணம் தன் வஸ்துவைக் கொண்டு பண்ணக்கடவன்) – சரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ நிவேதயேத் – சிஷ்யன் ஒருவன் தனது உயிரையும் சரீரத்தையும் சிறந்த ஆசார்யனுக்குத் தரவேண்டும் – என்றது காண்க; இதற்கு ஏற்ப சிஷ்யன் ஒருவன் ஆசார்யனுக்குச் சிஷ்யனானவுடனேயே தனது அனைத்தையும் ஆசார்யனுக்கு சமர்பித்தவனாகிறான்; ஆகவே தனது சரீரத்தின் பாதுகாப்பிற்காக சிஷ்யன் அவ்வப்போது அளிக்கின்ற பலவற்றையும் சிஷ்யனின் உடைமை என்று சிந்தனை இல்லாமல், அவை தன்னுடையதே என்று வாங்கிக்கொண்டு ஆசார்யன் பயன்படுத்தவேண்டும். (சிஷ்யன் ஸ்வதேஹரக்ஷண மாசார்யன் வஸ்துவைக்கொண்டு பண்ணக்கடவன்) – தன்னுடையது என்று எந்த ஓர் உடைமையையும் வைத்துக்கொள்ளாமல், அனைத்தும் தனது ஆசார்யனுக்கு உரிமை என்று ஆக்கியபடியால், தனது சரீரத்தை பாதுகாத்துக் கொள்ள தான் பயன்படுத்தும் அனைத்துப் பொருள்களையும் “இவை ஆசார்யன் உடைமைகள்” என்று எண்ணிப் பயன்படுத்தவேண்டும்.

338. ஆசார்யன் சிஷ்யன் வஸ்துவைக் கொள்ளக் கடவனல்லன்; சிஷ்யன் தன் வஸ்துவைக் கொடுக்கக் கடவனல்லன்.

**அவதாரிகை** - ஆசார்ய தேஹரக்ஷணத்தில் வந்தால், சிஷ்யன் தனக்குள்ளதெல்லா மங்குத்தை யுடைமையென்னும் நினைவாலே கொடுக்கையும், ஆசார்யனும் தாத்ருச வஸ்துவை வாங்குகையுமொழிய, சிஷ்யனுடைய மமதா தூஷிதமான வஸ்துவையிருவரும் கொள்ளவும் கொடுக்கவும் கடவர்களல்லரென்கிறார் (ஆசார்யன் சிஷ்யன் வஸ்துவை) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஆசார்யனின் சரீரத்தைப் பாதுகாக்கும்போது சிஷ்யன், தனக்குள்ள அனைத்தையும் ஆசார்யனின் உடைமை என்று எண்ணியபடி அளிப்பதும்; ஆசார்யன் அந்தப் பொருள்களைப் பெற்றுக் கொள்வது மட்டும் அல்லாமல், அந்த சிஷ்யன் "தன்னுடையது" என்று மமகாரத்தை ஏற்றிக்கொண்டு அளிப்பவற்றை அவனும் அளிக்கத் தக்கவன் அல்ல, பெறத்தக்கதும் அல்ல என்பதும் இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (சிஷ்யன் வஸ்துவைக் கொள்ளக்கடவன் அல்லன்) என்றது, இவன் மதீயம் என்றபிமாநித்திருக்கும் வஸ்துவை மறந்து அங்கீகரிக்கக்கடவனல்ல னென்கை. (சிஷ்யன் தன் வஸ்துவைக் கொடுக்கக் கடவனல்லன்) என்றது, ஸ்வகீயன் என்றபிமாநித்திருக்கும் வஸ்துவை, அஹங்கார மமகார ஸ்பர்சமுள்ளவை விஷம் என்று வெருவியிருக்கும் ம்ருது ப்ரக்ருதியான வாசார்யனுக்கு, விஷத்தை யிடுமாப்போலே ஸமர்ப்பிக்கக் கடவனல்ல யென்கை.

**விளக்கம்** - (சிஷ்யன் வஸ்துவைக் கொள்ளக்கடவன் அல்லன்) - என்று அபிமானித்துள்ள பொருள்களை ஆசார்யன் மறந்தும் பெறக்கூடாது. (சிஷ்யன் தன் வஸ்துவைக் கொடுக்கக் கடவனல்லன்) – "தனக்கு உரியது" என்று அபிமானித்துள்ள பொருள்களை, "அஹங்காரம் மற்றும் மமகாரம் ஆகியவற்றுடன் உள்ள பொருள் விஷம் போன்றது", என்று எண்ணியுள்ள ஆசார்யனுக்கு விஷத்தை அளிப்பது போன்று அளிக்கக்கூடாது.

339. கொள்ளில் மிடியனாம், கொடுக்கில் கள்ளனாம்

அவதாரிகை - அப்படி கொள்ளுதல் கொடுத்தல் செய்தால் வருவதென்னென்ன வருளிச்செய்கிறார் (கொள்ளில்) என்று தொடங்கி.

**விளக்கம் -** மேலே கூறியது போன்று அளிப்பதும், பெற்றுக்கொண்டதும் செய்தால் நிகழ்வது என்ன என்பதற்கு விடை அருளுகிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, சிஷ்யன் என்னது என்றிருக்கும் வஸ்துவை சாபலத்தாலே ஸ்வீகரிக்கில், ஈச்வரன் அகிலபர நிர்வாஹகனாய்ப் போருகையாலே நமக்கென்ன குறையுண்டு என்றிருக்கும் பரிபூர்ணனான தான், தேஹயாத்ரைக்குங்கூட முதலற்ற தரித்ரனாய் விடும்; என்னது என்று புத்தி பண்ணி ஒன்றை யாசார்யனுக்குக் கொடுக்கில் "சரீரமர்த்தம்" இத்யாதிப்படியே அடியிலே ஸமர்ப்பிதமாகையாலே ததீயமாய் இருக்கிறவதிலே மதீயத்வ புத்தி பண்ணுகையாலே ஆசார்ய ஸ்வாபஹாரியாய் விடுமென்கை.

**விளக்கம் -** சிஷ்யன் "என்னுடையது" என்று அபிமானித்துள்ள ஒரு பொருளை, அந்த பொருள் மீது ஆசையால் ஏற்றுக்கொண்டால், "ஸர்வேச்வர்ரன் நம்முடைய அனைத்து பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு நடத்துவதால் நமக்கு என்ன குறை", என்ற சிந்தனையால் பரிபூர்ணமாக உள்ள ஆசார்யன், தனது சரீரத்தை பாதுகாப்பதற்கும் ஏதும் இல்லாத ஏழையாகி விடுகிறான். மேலும் "என்னுடையது" என்ற எண்ணத்துடன் ஆசார்யனுக்கு அளிக்கும்போது, சரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ நிவேதயேத் – தனது சரீரம், பொருள், உயிர் ஆகியவற்றைக் கொடுக்கக் கடவன் – என்பதற்கு ஏற்ப முன்பே இவற்றை அளித்துவிட்ட காரணத்தால், ஆசார்யனின் உடைமையாக உள்ள அவற்றைத் தன்னுடையது என்று எண்ணிய காரணத்தினால், ஆசார்யனின் உடைமைகளை திருடியவன் ஆவான்.

340. கொள் கொடையுண்டானால் ஸம்பந்தம் குலையும்.

**அவதாரிகை –** இவ்வளவேயன்று, ஸம்பந்த ஹாநியும் வருமென்கிறார் (கொள் கொடை) என்று தொடங்கி.

**விளக்கம் -** இதுவரை கூறப்பட்டது மட்டுமல்லாமல் அவர்கள் இருவரின் சம்மந்தத்திற்கும் கேடு ஏற்படும் என்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சிஷ்யாசார்யத்வமாகிற ஸம்பந்தமுண்டானால், சேஷபூதனான சிஷ்யன் "சரீரமர்த்தம்" இத்யாதிப்படியே ஸர்வமு மங்குத்தைய தென்னும் நினைவாலே ஸமர்ப்பிக்கையும், அப்படி ஸமர்ப்பித்தவற்றை சேஷியான வாசார்ய னங்கீகரிக்கையும் முறையாயிருக்க, இவன் தன்னது என்றபிமாநித்தவற்றை ஆசார்யன் ஸ்வீகரிக்கையும், இவன் என்னது என்றபிமாநித்தவற்றை ஆசார்யனுக்கு ஸமர்ப்பிக்கையுமாகிற முறைகேடான கொள்கொடை யுண்டானபோது, சிஷ்யாசார்யத்வரூப ஸம்பந்தம் குலைந்தே விடுமென்கை.

**விளக்கம்** - ஒருவன் சிஷ்யன், மற்றவன் ஆசார்யன் என்ற சம்மந்தம் ஏற்படும்போது, சிஷ்யனானவன் – சரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ நிவேதயேத் – என்பதற்கு ஏற்ப தனது அனைத்து உடைமைகளும் ஆசார்யனுக்கே சொந்தம் என்று எண்ணியபடி அளிக்கவேண்டும். இவ்விதம் கொடுத்தவற்றை ஆசார்யன் ஏற்பதே சரியான முறையாகும். இதனை விடுத்து, சிஷ்யன் "தன்னுடையது" என்று அபிமானித்துள்ளதை ஆசார்யன் ஏற்றுக்கொள்வதும் "இவை என்னுடையது" என்று அபிமானித்துள்ளவற்றை ஆசார்யனுக்கு அளிப்பதும் – என்பதான முறைகேடான அளித்தல், கொள்ளுதல் என்ற காரணத்தினால் இருவருக்கும் இடையே உள்ள சம்மந்தம் அழிந்துவிடும் என்று கருத்து.

341. இவன் மிடியனாகையாலே கொடான், அவன் பூர்ணனாகையாலே கொள்ளான்.

**அவதாரிகை** - இப்படி தாரித்ர்ய த்ரவ்யாபஹாரங்கள் வருவதும் ஸம்பந்தங் குலைவதும் கொள்கொடைதா னுண்டாகிலிறே; அதுதானிவர்கள் செய்யார்களென்னுமிடத்தை ஸஹேதுகமாக அருளிச்செய்கிறார் (இவன்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதம் சிஷ்யனுக்கும் ஆசார்யனுக்கும் முறையே தரித்திரத்தன்மை மற்றும் களவுத்தன்மை ஏற்படுதல் என்பது சிஷ்யன் கொடுத்தல் மற்றும் ஆசார்யன் ஏற்றுக் கொள்ளுதல் என்பதால் உண்டாகிறது அல்லவோ? ஆகவே அவர்கள் இருவரும் அவற்றைச் செய்யமாட்டார்கள் என்பதைக் காரணத்துடன் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சிஷ்யனான இவன், "ஸகலமு மாசார்ய ஸ்வம், நம்மதென்று ஸமர்ப்பிக்கலாவ தொன்றுமில்லை" என்றிருக்கும் மிடியனாகையாலே, நாம் அங்குத்தைக்

கொன்றைக் கொடுக்கிறோம் என்று கொடான்; ஆசார்யனானவன், "ஈச்வரன் ஸகலபர நிர்வாஹகனாய் நடத்திக்கொண்டு போருகையாலே நமக்கினியென்ன குறையுண்டு" என்றிருக்கும் பரிபூர்ணனாயிருக்கையாலே, இவனபிமாந துஷ்டமானவை யொன்றையு மங்கீகரியா னென்கை.

**விளக்கம்** - சிஷ்யன் தனது மனதில், "அனைத்துப் பொருள்களும் ஆசார்யனின் உடைமையே ஆகும், நம்முடையது என்று கருதி ஆசார்யனுக்கு அளிக்கவல்லது ஏதும் இல்லை" என்று எண்ணுவதால் ஆசார்யனுக்கு ஏதும் அளிக்கமாட்டான். ஆசார்யன் தனது திருவுள்ளத்தில், "ஈச்வரன் மட்டுமே அனைத்தையும் நிகழ்த்தி வருகிறான், ஆகவே நமக்கு என்ன குறை உள்ளது?", என்று எண்ணுவதால் சிஷ்யன் தன்னுடையது என்று எண்ணியிருப்பதை ஒருபோதும் ஏற்கமாட்டான்.

342. அவனுக்குப் பூர்த்தியாலே ஸ்வரூபம் ஜீவித்தது, இவனுக்கு மிடியாலே ஸ்வரூபம் ஜீவித்தது.

**அவதாரிகை** - இந்த பூர்த்தி தாரித்ர்யங்களாக லிருவர்க்கும் பலித்தவற்றை யருளிச் செய்கிறார் (அவனுக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக ஆசார்யன் நிறைவுடன் இருப்பதும், சிஷ்யன் ஏழையாக இருப்பதும் ஆகியவற்றால் இவர்களுக்கு உண்டாவதை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, ஆசார்யனுக்கு, இவனபிமாந துஷ்டமானவை யொன்றையும் கொள்ளாமைக் குடலான பூர்த்தியாலே ஆசார்யத்வமாகிற ஸ்வரூபம் ஜீவித்தது; சிஷ்யனான இவனுக்கு, ஸ்வகீயத்வ புத்த்யா ஒன்றையும் ஸமர்ப்பிக்கைக்கு யோக்யதையில்லாத ஸகல ததீயத்வ ப்ரதிபத்தி ஸித்த தாரித்ர்யத்தாலே சிஷ்யத்வமாகிற ஸ்வரூபம் ஜீவித்ததென்கை.

**விளக்கம்** - சிஷ்யன் தன்னுடையது என்று சிந்திக்கும் எதனையும் ஆசார்யன் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்குக் காரணமான நிறைவு என்பதால் ஆசார்யத்வம் என்ற ஸ்வரூபம் உண்டாகிறது. சிஷ்யனுக்குத் தன்னுடையது என்ற எண்ணம் காரணமாக

எதனையும் அளிக்கத் தகுதியில்லாதபடி, அனைத்தும் ஆசார்யனுடையது என்ற சிந்தனை காரணமாக ஏற்படும் ஏழ்மை என்பதால் சிஷ்யத்வம் என்ற ஸ்வரூபம் உண்டாகிறது.

343. ஆனால் சிஷ்யன் ஆசார்யனுக்குப் பண்ணுமுபகாரம் ஒன்றுமில்லையோ வென்னில்.

அவதாரிகை – இனி, சிஷ்யனாசார்யனுக்குப் பண்ணு முபகார மின்னதென் றருளிச் செய்வதாக, தத்விஷய ப்ரச்நத்தை யநுவதிக்கிறார் (ஆனால் சிஷ்ய னாசார்யனுக்குப் பண்ணு முபகார மொன்றுமில்லையோ வென்னில்) என்று.

**விளக்கம்** - அடுத்து சிஷ்யன் ஆசார்யனுக்குச் செய்யும் உபகாரம் "இன்னது" என்று அருளிச்செய்யும் பொருட்டு, அது குறித்த கேள்வியை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்படி கொள்கொடைகளுக்கு யோக்யதை இல்லையாகிலும், உபகார ஸ்ம்ருதியுடைய சிஷ்யன் மஹோபகாரகனான ஆசார்யனுக்குப் பண்ணுமுபகார மொன்று மில்லை யோவென்னி லென்கை.

**விளக்கம்** - சிஷ்யன் அளிப்பதற்கும், ஆசார்யன் ஏற்பதற்கும் தகுதி இல்லை என்றபோதிலும், செய்ந்நன்றி அறிதல் என்ற நிலை உள்ள சிஷ்யன் தனக்கு மிகப் பெரிய உபகாரம் செய்கின்ற ஆசார்யனுக்குச் செய்வதற்கான உபகாரம் ஏதும் இல்லையோ என்று கேட்கலாம்.

344. ஆசார்யன் நினைவாலேயுண்டு.

அவதாரிகை - அதுக்குத்தர மருளிச்செய்கிறார் (ஆசார்யன் நினைவாலேயுண்டு) என்று.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் எழுப்பப்பட்ட கேள்விக்கான விடையை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, ஸ்வரூபஜ்ஞனான சிஷ்யன் நினைவா லொருக்காலு மொன்று மில்லை; ஸ்வக்ருஷிபல ஸந்துஷ்டனான ஆசார்யன் நினைவாலே யுண்டென்கை.

**விளக்கம்** - தனது ஸ்வரூபத்தைப் பற்றிய ஞானம் உள்ள சிஷ்யனின் நினைவால் ஆசார்யனுக்குச் செய்யக்கூடியது ஏதும் இல்லை; ஆனால் தனது உபதேசம் மூலம் சிஷ்யனுக்கு ஏற்பட்ட ஞானம் போன்றவற்றைக் கண்டு ஆசார்யன் மகிழ்தல் என்பது உண்டு.

345. அதாவது ஜ்ஞாந வ்யவஸாய ப்ரேம ஸமாசாரங்கள்.

**அவதாரிகை** - அதேதென்ன வருளிச்செய்தார் (அதாவது) என்று தொடங்கி.

விளக்கம் - கடந்த சூத்திரத்தில் கூறியதை மேலும் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** - (ஜ்ஞாந வ்யவஸாய ப்ரேம ஸமாசாரங்களாவன) ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநமும், தததநுரூபங்களான உபாய வ்யவஸாயமும், உபேய ப்ரேமமும், இவை மூன்றுக்கு மநுரூபமான ஸம்யகநுஷ்டாநமும் இத்தால், திருமந்த்ரத்தில் பதத்ரயத்தாலும் ப்ரதிபாதிக்கப்படுகிற ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களில் ஜ்ஞாந வ்யவஸாய ப்ரேமங்களையும் தததநுரூபாநுஷ்டாநங்களையுஞ் சொல்லுகிறது.

**விளக்கம்** – “வ்யவஸாய ப்ரேம ஸமாசாரங்களாவன” என்பது தனது ஸ்வரூப ஞானத்தைப் பெறுதல், அதற்கு ஏற்றபடியான உபாயம் ஸர்வேச்வரனே என்ற உறுதி, உபேயமாக உள்ள கைங்கர்யத்தில் ப்ரேமை என்பதாகும். இவை மூன்றுக்கும் தேவையான நல்ல ஒழுக்கமும் இதில் அடங்கும். இதன் மூலம் திருமந்த்ரத்தின் ஓம், நமோ, நாராயணாய என்ற மூன்றைப் பற்றிய அறிவு, உறுதி மற்றும் ஆர்வம் ஆகியவை எற்படுவதால் அவற்றை அவற்றின் ஒழுக்கத்துடன் உரைப்பதாகிறது.

346. ஆசார்ய ப்ரீத்யர்த்தமாக இவனுக்குத் தவிரவேண்டுவது பகவத் த்ரவ்யத்தை யபஹரிக்கையும் பகவத் போஜநத்தை விலக்குகையும் குரு மத்ர தேவதா பரிபவமும்.

**அவதாரிகை** - ஆசார்யனுக்குகப்பாக இவன் பண்ணும் கைங்கர்யந்தான் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபமாக இருக்கையாலே, ப்ரவ்ருத்தி ரூபமானவற்றை அருளிச்செய்த அநந்தரம்

நிவ்ருத்தி ரூபமானவற்றை யருளிச்செய்கிறார் மேல் (ஆசார்ய ப்ரீத்யர்த்தமாக இவனுக்குத் தவிர வேண்டுவது) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஆசார்யனின் மகிழ்ச்சிக்காக சிஷ்யன் செய்யும் கைங்கர்யங்கள் என்பவை செய்யப்படவேண்டியது மற்றும் செய்யக்கூடாதது என்று இருவகைப்பட்டு உள்ளது; ஆகவே செய்யவேண்டியதைக் குறித்து இதுவரை அருளிச்செய்த பின்னர், செய்யக் கூடாதது குறித்து அருளிச்செய்யத் தொடங்குகிறார்.

வ்யாக்யானம் - (பகவத் த்ரவ்யத்தை) இத்யாதியாலே, அவை தன்னை உத்தேசிக்கிறார்.

**விளக்கம்** – "பகவத் த்ரவ்யத்தை" என்பது தொடக்கமாக இதனை அருளிச்செய்கிறார்.

347. பகவத் த்ரவ்யாபஹாரமாவது ஸ்வாதந்த்ர்யமும் அந்ய சேஷத்வமும்; பகவத் போஜநத்தை விலக்குகையாவது அவனுடைய ரக்ஷகத்வத்தை விலக்குகை.

**அவதாரிகை** - இப்படி யுத்தேசித்தவற்றின் ப்ரகாரங்களை யடைவே விசதீகரிக்கிறார் மேல் (பகவத் த்ரவ்யாபஹாரமாவது) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாகக் கூறப்பட்டவையின் தன்மைகள் குறித்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (பகவத் த்ரவ்யம்) என்கிறது, "பிறர் நன்பொருள்" என்னும்படி ஸ்ரீகௌஸ்துபம் போலே ஈச்வரனுக்கு ஸ்ப்ருஹணீயமான ஆத்மத்ரவ்யத்தை. (ஸ்வாதந்த்ர்யமாவது), சேஷத்வைக நிருபணீயமான வற்றைத் தனக்குரித்தாக நினைத்திருக்கை. (அந்யசேஷத்வமாவது), பகவதேக சேஷமானவற்றை ததிதரசேஷமாக நினைத்திருக்கை. இதுதான் மாதா பித்ராதி தேவதாந்தர பர்யந்தமாயிருக்கும். இவையிரண்டும் ப்ரதமாக்ஷரத்தில் சதுர்த்தியாலும் மத்யமாக்ஷரத்தாலும், கழிக்கப் படுகிறவையிறே. இது தன்னை "கிந்தேந நக்ருதம் பாபம் சோரேண ஆத்ம அபஹாரிணா" என்று ஸகல பாப மூலமாகச் சொல்லா நின்றதிறே. (பகவத் போஜநம்) இத்யாதி. ரக்ஷணத்தை பகவத் போஜநமென்கிறது, ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷண மவனுக்கு பசித்தவனுக்குணவு போலே தாரகமாயிருக்கையாலே; "மண்ணும் விண்ணும் மெல்லா

முடனுண்ட” என்கிறவிடத்தில், “ரக்ஷண மவனுக்கு தாரகமாகையாலே ‘உண்ட’ என்கிறது, இல்லையாகில் ‘காக்கும்’ என்னவமையும்” என்றிறே நம்பிள்ளை யருளிச்செய்தது. ஏவம் பூதமான வவனுடைய ரக்ஷகத்வத்தை விலக்குகையாவது, “அவ ரக்ஷணே” என்கிற தாதுவாலே நிருபாதிக ஸர்வரக்ஷகனாகச் சொல்லப்படுகிற வவனுக்கு ரக்ஷிக்க விடமறும்படி ஸ்வயத்நத்தாலேயாதல் பிறராலேயாதல் தன்னை ரக்ஷிக்கையிலே ப்ரவ்ருத்தனாகை. இதுதான், பகவதேக ரக்ஷ்யத்வ ப்ரதிபாதகமான நமஸ்ஸாலே கழிக்கப்படுகிறதிறே.

**விளக்கம்** - (பகவத் த்ரவ்யம்) – கண்ணிநுண்சிறுத்தாம்பு (5) – பிறர் நன்பொருள் – என்பதற்கு ஏற்ப ஸ்ரீகௌஸ்துபம் போன்று ஸர்வேச்வரன் மிகவும் விரும்பும் ஆத்மா. (ஸ்வாதந்த்ர்யம்) – ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ள நிலை என்பதையே இயல்பாகக் கொண்டவற்றைத் தனக்கு உரியது என்று எண்ணுதல். (அந்யசேஷத்வமாவது) – ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமைப்பட்டபடி இருக்கும் ஆத்மாவை மற்றவர்களுக்கும் அடிமைப்பட்டது என்று எண்ணுதல். இத்தகைய சிந்தனை என்பது தாய், தந்தை என்று தொடங்கி மற்ற தேவதைகள் முடிய காணப்படும். இந்த இரண்டுமே திருமந்த்ரத்தின் முதல் பதமாக உள்ள ஓம் என்பதில் காணப்படும் நான்காம் வேற்றுமையாலும் (இதனால் அனைத்து உயிர்களும் ஸர்வேச்வரனுக்கு அடிமை எனப்படுகிறது), அதில் உள்ள நடு எழுத்தான ‘உ’ என்பதாலும் (இதனால் அவனுக்கு மட்டுமே அடிமை எனப்படுகிறது) விலகுகின்றன. மஹாபாரதம் ஆதிபர்வம்(74-27) – கிந்தேந நக்ருதம் பாபம் சோரேண ஆத்ம அபஹாரிணா – ஆத்மாவை அபசாரம் செய்த ஒருவனால் எந்தப் பாவம்தான் செய்யப்படவில்லை – என்பதன் மூலம் ஆத்ம அபசாரம் என்பது அனைத்து பாவங்களுக்கும் மூலமாக உரைக்கப்பட்டது காண்க. (பகவத் போஜநம்) – நம்மைக் காப்பாற்றுதல் என்பதை ஸர்வேச்வரனுக்கு உணவு என்றார். காக்கப்படுகின்ற பொருள்களைக் காப்பாற்றுதல் என்பது ஸர்வேச்வரனுக்கு பசி எடுத்தவனுக்கு, உணவு கிட்ட்டுவது போன்றதாகும். திருவாய்மொழி (2-2-1) – மண்ணும் விண்ணும் மெல்லா முடனுண்ட – என்று கூறும்போது ரக்ஷணம் என்ற செயல் அவன் தரிக்க உதவுவதால் ‘உண்ட’ எனப்பட்டது; இவ்விதம் இல்லையென்றால், “காக்கும்” என்றே கூறியிருப்பார் – என்பதை நம்பிள்ளை அருளிச்செய்தார். இப்படியாக உள்ள ஸர்வேச்வரனுடைய காப்பாற்றும் தன்மையை விலக்குவது எது என்றால் – அவரக்ஷணே – என்ற தாது மூலம் தனது இயல்பிலேயே அனைவரையும் எந்தவிதமான காரணமும்

இன்றி ரக்ஷிக்கும் ஸர்வேச்வரன் அச்செயலை நிறுத்திக் கொள்ளும்படியான "தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள முயலுதல் அல்லது ஸர்வேச்வரன் அல்லாமல் மற்றவர் மூலம் தன்னைக் காப்பாற்ற முயலுதல்" என்ற செயல்களால் ஆகும். இந்த விஷயம் ஸர்வேச்வரனால் மட்டுமே காப்பாற்றப்படுகிறது என்பதைக் கூறுகிற "நம:" என்ற பதம் மூலம் விலக்கப்பட்டது அல்லவோ?

348. அவனுடைய ரக்ஷகத்வக்ரமம் ப்ரபந்ந பரித்ராணதிக்லே சொன்னோம். குருபரிபவமாவது கேட்டவர்த்தத்தின்படி யனுஷ்ட்டியா தொழிகையும் அநதிகாரிகளுக்கு உபதேசிக்கையும்; மந்த்ர பரிபவமாவது அர்த்தத்தில் விஸ்ம்ருதியும் விபரீதார்த்த ப்ரதிபத்தியும்; தேவதாபரிபவமாவது கரணத்ரயத்தையும் அப்ராப்த விஷயங்களிலே ப்ரவணமாக்குகையும், தத்விஷயத்தில் ப்ரவணமாக்கா தொழிகையும்.

**அவதாரிகை** - அவன் ரக்ஷித்தருளும் க்ரமந்தா னென்னென்ன வருளிச்செய்கிறார் (அவனுடைய) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஸர்வேச்வரன் நம்மைக் காப்பாற்றும் முறை எவை என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது ஸர்வரக்ஷகனான அவனுடைய ரக்ஷகத்வ க்ரமம், ப்ரபந்ந பரித்ராண மென்கிற ப்ரபந்தத்திலே விசதமாகச் சொன்னோம், அங்கே கண்டு கொள்வதென்கை. அதிலே, அவனையொழிந்தா ரடங்கலும் அரக்ஷக ரென்னுமத்தை ப்ரதிபாதித்த வநந்தரம் "ஈச்வரன் மாதாபிதாக்கள் கைவிட்ட வவஸ்தையிலும் 'பின்னும் நின்றடியேனுக் குற்றானாய் வளர்த்து' என்கிறபடியே தன்னுருக்கெடுத்து வேற்றுருக் கொண்டு தாய் முகங்காட்டி இன்சொல் சொல்லியும்" என்று தொடங்கி, "இவனே யெல்லார்க்கும் ரக்ஷகன்" என்கிறதளவாக, அவனுடைய ரக்ஷகத்வ க்ரமத்தை ஸுவ்யக்தமாக வருளிச்செய்தாரிறே.

**விளக்கம்** – "அவன் காப்பாற்றி அருளும் விதங்கள் குறித்து ப்ரபந்ந பரித்ராணம் என்ற ப்ப்ரபந்தத்தில் விரிவாக அருளிச்செய்தோம், அங்கு அறிந்து கொள்க" என்கிறார். அந்தக் க்ரந்தத்தில் அவனைத் தவிர மற்ற யாரும் காப்பாற்றுபவர்கள் அல்லர் என்று

உரைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, "பெரிய திருமொழி (8-9-7) – பின்னும் நின்றடியேனுக் குற்றானாய் வளர்த்து – என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரன் தாயும் தந்தையும் நம்மைக் கைவிட்டாலும் தனது இயல்பான ரூபத்தை மாற்றிக் கொண்டு, வேறு அவதாரங்கள் எடுத்து, தாயின் முகத்தைக் காண்பித்தபடி இனிமையான சொற்கள் பேசுபவனாக வந்து" என்பது தொடங்கி, "இவனே அனைவருக்கும் ரக்ஷகன்" என்று முடித்தமை காண்க. இப்படியாக அவன் காக்கும் வகைகளை மிகவும் விரிவாக அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - (குருபரிபவம்) இத்யாதி. (கேட்டவர்த்தத்தின்படி அநுஷ்டியா தொழிகையாவது), ஸ்வோஜ்ஜீவநார்த்தமாக அவனருளிச்செய்யக் கேட்ட த்யாஜ்யோபாதேய ரூபமான வர்த்த விசேஷங்களுக்குத் தகுதியா யிருந்துள்ள த்யாக ஸ்வீகார ரூபமான வநுஷ்டாநத்தைப் பண்ணாதொழிகை. (அநதிகாரிகளுக் குபதேசிக்கையாவது), தனக்குத் தஞ்சமாக அவனுபதேசித்த ஸாரார்த்தங்களை, நாஸ்திக்யாதிகளாலே யிதுக்கதிகாரிக ளல்லாதவர்களுக்கு க்யாதிலாபாதிகளை நச்சி உபதேசிக்கை. (மந்த்ர பரிபவம்) இத்யாதி. (அர்த்தத்தில் விஸ்ம்ருதியாவது), ஆசார்யன் அந்த மந்த்ரத்துக்கருளிச் செய்த யதார்த்தங்களைப் பலகாலு மநுஸந்தித்து நோக்கிக் கொண்டு போருகை யன்றிக்கே ஔதாஸீந்யத்தாலே மறந்து விடுகை. (விபரீதார்த்த ப்ரதிபத்தியாவது) ஆசார்யனருளிச்செய்த ப்ரகாரமன்றிக்கே, மந்த்ரத்துக்கு விபரீதமாயிருக்கு மர்த்தங்களை இதுக்கர்த்தமென்று ப்ராந்தியாலே ப்ரதிபத்தி பண்ணியிருக்கை (தேவதாபரிபவம்) இத்யாதி. (கரணத்ரயத்தையும் அப்ராப்த விஷயங்களிலே ப்ரவணமாக்குகையாவது) "விசித்ரா தேஹ ஸம்பத்தி ரீச்வராய நிவேதிதும்", "மாயவன்றன்னை வணங்க வைத்த கரணமிவை" என்கிறபடியே – பகவத் பரிசர்யார்த்தமாக ஸ்ருஷ்டங்களாய், "உன் சின்னமும் திருமூர்த்தியும் சிந்தித்தேத்திக் கைதொழவே" என்கிறபடியே அவனை நினைக்கைக்கும் ஸ்துதிக்கைக்கும் வணங்குகைக்கு முறுப்பான மநோவாக்காயங்களை, ஸ்வரூப ப்ராப்தமல்லாத ஹேயவிஷயங்களிலே, மேட்டில் நீர் பள்ளத்தில் விழுமாப்போலே ப்ரவணமாம்படி பண்ணுகை. (தத்விஷயத்தில் ப்ரவணமாக்கா தொழிகையாவது) - "மால்கொள் சிந்தையராய்", "நாத்தழும்பெழ நாரணாவென் றழைத்து மெய்தழும்பத் தொழுது" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே – ஸ்வரூப ப்ராப்தமான வவ்விஷயத்தில் மண்டி விழும்படி பண்ணுவியாதொழிகை. ஆக, "மந்த்ரே தத் தேவதாயாஞ்ச ததா மந்த்ர ப்ரதே

குரௌ, த்ரிஷு பக்திஸ் ஸதாகார்யா” என்றும், “மந்த்ரநாதம் குரும் மந்த்ரம் ஸமத்வேநாநுபாவயேத்” என்றும் பூஜ்யமாகச் சொல்லப்படுகிற இம்மூன்று விஷயத்தை பரிபவிக்கையாவது திவையாய்த்து.

**விளக்கம்** - (குருபரிபவம்) - உபதேசம் மூலம் கேட்டவற்றைக் கடைப்பிடிக்காமல் இருப்பதும், அதிகாரி அல்லாதவர்களுக்கு உபதேசம் செய்வதும் ஆகும். (கேட்டவர்த்தத்தின்படி அநுஷ்டியா தொழிகையாவது) – தான் பிழைப்பதற்காக ஆசார்யன் அருளிச்செய்ததாகிய கைவிடவேண்டியவை, கைக்கொள்ளப்பட வேண்டியவை என்பதற்கு ஏற்றதாக இருக்கும்படியான கைவிட வேண்டிய செயல்கள் மற்றும் செய்யக்கூடிய செயல்கள் ஆகியவற்றைப் பின்பற்றாமல் இருத்தல் ஆகும். (அநதிகாரிகளுக் குபதேசிக்கையாவது) – தனக்குத் தஞ்சமாக இருக்கவேண்டும் என்று ஆசார்யன் தனக்கு உபதேசித்த ஆழ்ந்த பொருள்களை, நாஸ்திகம் போன்ற காரணமாக இந்த உபதேசங்களைப் பெறத் தகுதி அற்றவர்களுக்கு, புகழ் மற்றும் பொருள் போன்றவற்றைக் கருதி உபதேசிப்பது ஆகும். (மந்த்ர பரிபவம்) – மந்த்ரபரிபவம் என்றால் மறதியும், வேறுபட்ட அர்த்தங்களை உணர்தலும் ஆகும். (அர்த்தத்தில் விஸ்ம்ருதியாவது) – ஆசார்யன் அந்த மந்த்ரத்திற்கான உண்மையான பொருளை அருளிச்செய்தவுடன், தொடர்ந்து அதனை எண்ணியபடி இராமல், உதாசீனப்படுத்தி மறந்துவிடுதல் ஆகும். (விபரீதார்த்த ப்ரதிபத்தியாவது) – ஆசார்யன் அருளிச்செய்த அர்த்தங்களை விடுத்து, முரண்பாடாக இருக்கும் அர்த்தங்களை மயக்கத்தின் காரணமாக மந்த்ரங்களுக்கு எண்ணிக் கொள்ளுதல் ஆகும். (தேவதா பரிபவம்) – தேவதா பரிபவம் என்றால் மனம், வாக்கு மற்றும் சரீரம் போன்றவற்றை மற்ற விஷயங்களில் ஈடுபடுத்தலும், ஸர்வேச்வரன் விஷயத்தில் ஈடுபாடு இல்லாமல் இருத்தலும் ஆகும். (கரணத்ரயத்தையும் அப்ராப்த விஷயங்களிலே ப்ரவணமாக்குகையாவது) – விஷ்ணுதத்வம் – விசித்ரா தேஹ ஸம்பத்தி ரீச்வராய நிவேதிதும் – அந்தணரே! விசித்ரமாகவும், கைகால் முதலான உறுப்புகளுடன் கூடியதாகவும் உள்ள இந்தச் சரீரம், ஸர்வேச்வரனாகிய ஸ்ரீமந்நாராயணனுக்கு ஸமர்ப்பணம் செய்வதற்காகவே முன்பு படைக்கப்பட்டது – என்றும், இராமானுச நூற்றந்தாதி (67) - மாயவன்றன்னை வணங்க வைத்த கரணமிவை – என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுக்குக் கைங்கர்யம் செய்வதற்காகவே படைக்கப்பட்டவையாக; திருவாய்மொழி (7-1-8) – உன் சின்னமும் திருமூர்த்தியும் சிந்தித்தேத்திக் கைதொழவே - என்பதற்கு ஏற்ப அவனை எண்ணுவதற்கும், துதிப்பதற்கும், வணங்குவதற்கும்

படைக்கப்பட்ட மனம், வாக்கு மற்றும் சரீரம் ஆகிய மூன்றையும், "அவனுடைய அடிமை" என்ற ஸ்வரூபத்திற்கு ஏற்காத விஷயங்களில், மேட்டிலிருந்து பாள்ளத்தில் நீர் பாய்வது போன்று, தானாகவே விழும்படியாகச் செய்வதாகும். (தத்விஷயத்தில் ப்ரவணமாக்கா தொழிகையாவது) – பெருமாள் திருமொழி (2-1) – மால்கொள் சிந்தையராய் – என்றும், பெருமாள் திருமொழி (2-4) - நாத்தழும்பெழ நாரணாவென் றழைத்து மெய்தழும்பத் தொழுது – என்றும் கூறுவது போன்று ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்ற விஷயங்களான பகவத் பாகவத விஷயங்களில் ஈடுபட்டு நிற்கும்படி செய்யாமல் இருப்பதாகும். ஆகவே கீழே உள்ள வரிகளில் கூறப்பட்டபடி பக்தி செலுத்துவதற்கு ஏற்றதாக உரைக்கப்பட்ட இந்த மூன்று விஷயங்களையும் அவமானப்படுத்துவது இவையாயிற்று:

- விஷ்ணுதத்வம் – மந்த்ரே தத் தேவதாயாஞ்ச ததா மந்த்ர ப்ரதே குரௌ, த்ரிஷு பக்திஸ் ஸதாகார்யா – திருமந்த்ரத்திலும், அந்த மந்த்ரத்தின் தெய்வமான ஸ்ரீமந்நாராயணனிடமும், அதனை உபதேசித்த ஆசார்யனிடமும் பக்தி எப்போதும் இருக்கவேண்டும், இதுவே முதன்மையான உபாயம்.
- மந்த்ரநாதம் குரும் மந்த்ரம் ஸமத்வேநாநுபாவயேத் – மந்த்ரத்தின் நாதனாகிய ஸர்வேச்வரனையும், அதனை உபதேசித்த ஆசார்யனையும், மந்த்ரத்தையும் சமமாகவே எண்ணவேண்டும்.

349. இவனுக்கு சரீராவஸாநத்தளவும் ஆசார்ய விஷயத்தில் "என்னைத் தீமனம் கெடுத்தாய்", "மருவித்தொழும் மனமே தந்தாய்" என்று உபகார ஸ்ம்ருதி நடக்கவேணும்.

**அவதாரிகை** – ஆக, இப்படி ஆசார்ய ப்ரீத்யர்த்தமாகச் செய்யவேண்டுமவையும், தவிர வேண்டுமவையு மருளிச்செய்தாராய் நின்றார் கீழ்; இன்னமு மிவனுக் கபேக்ஷிதமா யிருப்பதொன்றை அருளிச்செய்கிறார் மேல் இவனுக்கு என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக ஆசார்யனின் மனமகிழ்வின் பொருட்டுச் செய்ய வேண்டியதையும், தவிர்க்க வேண்டியதையும் இதுவரை அருளிச்செய்தார். மேலும் இந்த அதிகாரிக்கு அவசியமாக இருக்கவேண்டியதொன்றை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இவ்வதிகாரிக்கு, சரீரத்தோடிருக்குங் காலமித்தனையும் மஹோபகாரகனான வாசார்யன் பக்கலில், என்னுடைய தீயமனஸ்ஸைப் போக்கினாய், அநந்ய ப்ரயோஜநமாக வநுகூல வ்ருத்திளைப் பண்ணும் மநஸ்ஸைத் தந்தாய் என்று உபகார ஸ்ம்ருதி யநுவர்த்திக்க வேணும்.

**விளக்கம்** - இந்த அதிகாரியின் சரீரம் இந்த உலகிலிருந்து மறையும் காலம் முடிய தனக்கு உபகாரம் செய்த ஆசார்யனிடம், "எனது தீய மனத்தைப் போக்கினாய். வேறு எந்தப் பலனையும் எதிர்பாராமல் அநுகூலமான கைங்கர்யங்களைச் செய்யும் மனம் அளித்தாய்", என்று செய்ந்நன்றியுடன் இருந்தல் வேண்டும்.

350. மநஸ்ஸுக்குத் தீமையாவது ஸ்வகுணத்தையும் பகவத் பாகவத தோஷத்தையும் நினைக்கை.

**அவதாரிகை** - மநஸ்ஸுக்குத் தீமையாவ தேதென்னு மாகாங்க்ஷையிலே யருளிச் செய்கிறார் மேல் (மநஸ்ஸுக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - "மனத்துக்குத் தீமை என்ன?" என்று சந்தேகத்திற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஸ்வகுணத்தை நினைக்கையாவது) - சமதமாத் யாத்ம குணங்கள் தனக்குண்டானாலும் "நிறைவொன்றுமிலேன்", "நலந்தா னொன்றுமிலேன்" என்கிறபடியே – நமக்கோ ராத்மகுணமுமில்லை என்று தன் வெறுமையை யநுஸந்திக்க வேண்டியிருக்க, இவையெல்லாம் நமக்கிப்போதுண்டென்று தனக்குண்டான ஸத்குணங்களைப் போரப்பொலிய நினைக்கை. (பகவானுடைய தோஷத்தை நினைக்கையாவது), தனக்குப் பரதந்த்ரமான இவ்வாத்ம வஸ்துவைத் தன்னுபேக்ஷையாலே அநாதிகாலம் கர்மத்தை வ்யாஜமாக்கிக் கைவிட்டிருந்தவன், அவ்வளவு மன்றிக்கே நிர்தயரைப்போலே யதாகர்ம பலதாயியாய் நிரயங்களிலே தள்ளி யறுத்தறுத்துத் தீத்துமவன் கைக்கொண்டாலும் நிரங்குச ஸ்வதந்த்ரனாகையாலே இன்னபோதின்னபடி செய்யும் என்று விச்வஸிக்கவொண்ணாதவன் என்றாப்போலேவும், க்ருஷ்ணாவதாரத்தில் ஸ்வைர விஹாரங்களையிட்டு தர்ம ஸம்ஸ்தாபநம் பண்ணப் பிறந்தவனுக்கு இங்ஙன் செய்கை முறைமையா யிருந்ததில்லையீ என்றாப்போலவும்

நினைக்கை. அல்லது, ஸமஸ்த கல்யாண குணாத்மகமான விஷயத்தில் நினைக்கலாவதொரு தோஷமில்லையிறே. இனி, (பாகவத தோஷத்தை நினைக்கையாவது), திருமேனியோடே இருக்கையாலே மேலேழத் தோற்றுகிற வாகாரங்களையிட்டு, ப்ரக்ருதிவச்யர், அஹங்காரக்ரஸ்தரர் என்றாப்போலே நினைக்கை. ஆக, இது ஸ்வகுணத்தையும் பகவத் பாகவத தோஷத்தையும் நினைக்கையாவது.

**விளக்கம்** - (ஸ்வகுணத்தை நினைக்கையாவது) - புலன் அடக்கம் போன்ற ஆத்மகுணங்கள் தன்னிடம் உள்ளபோதிலும், திருவாய்மொழி (3-3-4) – நிறைவொன்றுமிலேன் – என்றும், பெரியதிருமொழி (1-9-4) – நலந்தா னொன்றுமிலேன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, நமக்கு எந்தவிதமான ஆத்மகுணங்களும் இல்லையே என்று தனது வெறுமையை எண்ணியபடி இருக்கவேண்டும்; இதனை விடுத்து, “இவை அனைத்தும் நமக்கு உண்டு” என்று தன்னிடம் உள்ள ஸத்வகுணங்களை மிகுதியாகச் சிந்தித்தல் ஆகும். (பகவானுடைய தோஷத்தை நினைக்கையாவது) - ஸர்வேச்வரனாகிய தனக்கு உடைமையான இந்த ஜீவாத்மாவை எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள கர்மங்களைக் காரணம் காண்பித்துக் கைவிட்டிருந்தவன்; அது மட்டுமே அல்லாமல் சிறிதும் கருணை இல்லாதவர் போன்று அந்தக் கர்மங்களின் பலனாக உள்ள நரகங்கள் போன்றவற்றில் தள்ளி நம்மைத் துன்பம் அடையும்படிச் செய்தவன்; இப்படிப்பட்ட அவன் கைக்கொண்டாலும், எல்லையற்ற சுதந்திரம் உள்ளவன் என்பதால், “இன்ன சமயத்தில் இதனைச் செய்வான்” என்று நம்ப இயலாதபடி உள்ளவன் என்பது போன்று சிந்தித்தல்; க்ருஷ்ணாவதாரத்தில் தனது விருப்பப்படி பல செயல்களைச் செய்தது கண்டு, “தர்மத்தை நிலை நாட்ட வந்து அவதரித்தவன், இவ்விதம் செய்வது முறையாகுமோ”, என்று சிந்தித்தல் – போன்றவை ஆகும். இவ்விதம் அல்லாமல், அனைத்து கல்யாணகுணங்களுக்கும் இருப்பிடமாக உள்ள ஸர்வேச்வரன் விஷயத்தில் சிந்திக்கக்கூட ஒரு தோஷமும் இல்லை அல்லவோ? (பாகவத தோஷத்தை நினைக்கையாவது) - திருமேனியுடன் உள்ளதால் மேலெழ நோக்கும்போது தென்படும் தன்மைகள் மூலமாக, “இவர்களும் (நம்போன்று) இந்த உலகின் வசப்பட்டவர்கள், அஹங்காரம் போன்றவற்றில் ஈடுபாடு உள்ளவர்கள்”, என்று எண்ணுதல் ஆகும். இதுவே தனது குணத்தையும், பகவத் பாகவத தோஷத்தையும் சிந்திப்பது ஆகும்.

351. தோஷம் நினையாதொழிகிறது குணம்போலே யுண்டாயிருக்கவன்று, இல்லாமையாலே.

**அவதாரிகை** – ஆனால், தனக்குச் சில குணமுண்டாயிருக்க அது நினைக்கலாகா தென்கிறாப்போலே, அத்தலைக்கும் சில தோஷமுண்டாயிருக்க நினைக்கலாகா தென்கிறதோ வென்ன அருளிச்செய்கிறார்.

**விளக்கம் -** இவ்விதம் கொள்ளும்போது, தன்னிடம் உள்ள சில குணங்களை நினைத்தல் கூடாது என்பது போன்று, பகவான் மற்றும் பக்தர்களிடம் உள்ள சில தோஷங்களை எண்ணக்கூடாது என்று கூறப்பட்டதோ என்று சந்தேகத்திற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பகவத் பாகவத விஷயங்களில் தோஷம் நினையாதொழிகிறது, தனக்கு குணமுண்டாயிருக்க அது நினையாதொழிகிறாப்போலே, உண்டாயிருக்க நினையாதொழிகிறதன்று; முதலிலே இவ்விஷயங்களில் அதில்லாமையாலே யென்கை. எங்ஙனேயென்னில்? ஸர்வமுக்தி ப்ரஸங்கம் வராதபடி தானிட்ட கட்டளையிலே அங்கீகரிக்கைக்காக, “ஒன்றி யொன்றி யுலகம் படைத்தான்” என்றும், “எதிர் சூழல்புக்கு” என்றும் சொல்லுகிறபடியே, ஸகலாத்மாக்களுடையவு முஜ்ஜீவநத்துக்கு ஸ்ருஷ்ட்யவதாராதிகளாலே க்ருஷி பண்ணிக்கொண்டு போருகையாலே, அநாதிகால முபேக்ஷகனாய்க் கைவிட்டிருந்தா னென்னவொண்ணாது; நிர்தயரைப்போலே கர்மாநுகுணமாக தண்டிக்கிறதும், மண் தின்ற ப்ரஜையை நாக்கிலே குறியிட்டு அஞ்சப் பண்ணும் மாதாவைபோலே ஹிதபரனாய்ச் செய்கையாலே உஜ்ஜீவநத்துக் குடலாமித்தனை; நிரங்குச ஸ்வாதந்த்ர்யம் பூர்வம் பந்தஹேதுவாய்ப் போந்ததேயாகிலும், க்ருபா பரதந்த்ரனாய் அங்கீகரித்த பின்பு, நித்யஸம்ஸாரியை நித்யஸூரிகளோடு ஸமாந போகபாகியாக்குமளவில் நிவாரகரறச் செய்கைக்குறுப்பா மித்தன்னை ஆகையாலே, ச்லாக்யமாமித்தனை; க்ருஷ்ணாவதாரத்தில் ஸ்வைர விஹார “யதி மே ப்ரஹ்மசர்யம் ஸ்யாத்” என்கிறபடியே தனக்கிந்த போகத்தி லொட்டில்லாமையை வெளியிடு கைக்காகவும், “கோப்ய: காமாத்” என்கிறபடியே அவ்வழியாலே யவர்களைத் தன்பக்கல் ப்ரவணராக்கி உத்தரிப்பிக்கைக்காகவும் செய்ததாகையாலே, குணமித்தனையல்லது குற்றமன்று. இனி பாகவதர்களும், “குற்றமின்றிக் குணம் பெருக்கி” என்கிறபடியே, நிர்தோஷராய் நிரவதிககுணரா யிருக்கையாலே, உள்ளுற வாராய்ந்து பார்த்தால்,

அவர்கள் பக்கலிலுங் காணலாவதொரு தோஷமில்லையிறே. மற்றுமிப்புடைகளிலே பகவத் பாகவத விஷயங்களில் தோஷங்கள் தோற்றிற்றாகில் பரிஹாரங்கள் கண்டுகொள்வது. இத்தையெல்லாம் திருவுள்ளம் பற்றியாய்த்து (இல்லாமையாலே) என்றிவ ரருளிச்செய்தது.

**விளக்கம்** - ஸர்வேச்வரன் விஷயத்திலும், பாகவதர்கள் விஷயத்திலும் உள்ள தோஷங்களை எண்ணிப் பார்த்தல் தவிர்க்கவேண்டும் என்பது, தனக்கு ஆத்மகுணங்கள் உள்ளபோதிலும் அவற்றை எண்ணிப் பார்த்தல் கூடாது என்பது போன்று, அவர்களிடம் தோஷம் உள்ளதைச் சிந்திக்கக்கூடாது என்பது அல்ல; அவை தோஷங்களே அல்ல என்பதால் சிந்திக்கக்கூடாது என்று கருத்து. எப்படி? எல்லாரும் மோக்ஷம் பெறும் தகுதி உடையவர்கள் என்ற தன்மை உண்டாகாதபடி, தான் இட்ட ஆணையால் உலகம் நடக்கவேண்டும் என்பதற்காக, திருவாய்மொழி (3-9-10) - ஒன்றி யொன்றி யுலகம் படைத்தான் – என்றும், திருவாய்மொழி (2-7-6) - எதிர் சூழல்புக்கு – என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்து ஆத்மாக்களையும் அவை உய்வு பெறும் பொருட்டு படைத்தலும், அவதாரங்கள் மூலம் அவற்றைக் காத்தபடி இருத்தலும் செய்வதால், எல்லையற்ற காலம் நம்மை அலட்சியம் செய்து கைவிட்டான் என்று எண்ண இயலாது. கருணை இல்லாதவர்கள் போன்று நம்முடைய கர்மபலன்களுக்கு ஏற்றபடி தண்டிப்பது எதற்கு; மண்ணைத் தின்ற குழந்தையின் நாக்கைக் கிள்ளி அதனைப் பயம் கொள்ள வைக்கும் தாய் போன்று, நமது நன்மையைக் கருத்தில் கொண்டே அது போன்று செய்வதால், அந்தச் செயல் நாம் கரையேறும் பொருட்டே ஆகும். எல்லையற்ற ஸ்வதந்த்ரம் காரணமாக நம்மைச் ஸம்ஸாரத்தில் கட்டி வைக்கக் காரணமாக இருந்தபோதிலும், நம்மைக் கருணையுடன் அங்கீகரித்து ஏற்றுக் கொண்ட பின்னர், எல்லையற்ற காலமாகப் பிறப்பு இறப்பு என்றுள்ள ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ள நம்மை, நித்யஸூரிகளுக்குச் சமமான நித்யகைங்கர்யம் அளித்து ஆளாக்கும்போது, அதனைத் தடுக்க யாரும் இல்லாதபடி செய்வதற்குக் காரணமாக உள்ளதால் நன்மையே ஆகும். க்ருஷ்ணாவதாரத்தில் தனது விருப்பத்தின்படி செய்த செய்கைகள் - யதி மே ப்ரஹ்மசர்யம் ஸ்யாத் – நான் ப்ரம்மச்சாரியாக இருந்தால் அச்வத்தாமனின் அஸ்த்ரத்தால் விழுந்த இந்த பரீக்ஷித் எழவேண்டும் – என்று கூறுவதற்கு ஏற்ப கோபிகைகளுடன் உள்ள இன்பத்தில் பற்றுதல் இல்லாமையை வெளியிடுவதற்காகவும், ஸ்ரீமத்பாகவதம் - கோப்ய: காமாத் -

கோபிகைகள் காமத்தினால் மோக்ஷம் அடைந்தார்கள் - என்பதற்கு ஏற்ப அந்த மார்க்கம் மூலமாக அவர்களைத் தன்னிடம் அன்புடையவர்களாகச் செய்து கரை ஏற்றவும் என்பதற்காகச் செய்தான்; ஆகவே அவனுடைய செயல்கள் அனைத்தும் நன்மையே அல்லாமல், தோஷம் இல்லை. பாகவதர்களும், பெரியாழ்வார் திருமொழி (4-4-2) – குற்றமின்றிக் குணம் பெருக்கி – என்று கூறுவதற்கு ஏற்ப, குற்றம் இல்லாதவர்களாக எல்லையற்ற குணங்கள் கொண்டவர்களாக உள்ளதால், நன்கு ஆராய்ந்து பார்த்தால் அவர்களிடம் எந்தவிதமான குற்றமும் இல்லை என்று உள்ளவர் ஆவர். இதே போன்று பகவத் பாகவத் விஷயங்களில் குற்றங்கள் உண்டு என்று தோன்றினாலும், அவற்றைத் தகுந்த ஆதாரம் மூலம் நீக்கிக்கொள்ளும் விதம் அறிந்து, அந்தச் சந்தேகங்களை போக்கிக் கொள்ளவேண்டும். இவை அனைத்தையும் திருவுள்ளம் பற்றியே இந்தச் சூர்ணையில், “இல்லாமையாலே” என்று அருளிச்செய்தார்.

352. தோஷமுண்டென்று நினைக்கில் அது பரதோஷமன்று, ஸ்வதோஷம்.

**அவதாரிகை** - தோஷமில்லை என்று ஸ்வபக்ஷத்தாலே ஸாதித்தார் கீழ்; இனி, பரபக்ஷத்தாலே தோஷ ஸத்பாவத்தை அங்கீகரித்துக் கொண்டு தத்பரிஹாரத்தை அருளிச்செய்கிறார் மேல் (தோஷமுண்டு) என்று தொடங்கி.

**விளக்கம்** - பகவானிடமும் பாகவதர்களிடம் எந்தவிதமான தோஷமும் இல்லை என்று தன்னுடைய கருத்தின்படி இதுவரை உரைத்தார். இனி மற்றவர்களின் பார்வையில் அவர்கள் மீது தோஷம் ஏற்படலாம் என்பதை ஒப்புக்கொண்டவராக, அதற்கான பரிகாரத்தை இனி உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கீழ்ச் சொன்னபடியன்றிக்கே பகவத் பாகவத விஷயங்களில் தோஷமுண்டென்று நினைக்கில், அவர்கள் பக்கல் தனக்குத் தோற்றுகிற தோஷம் அவர்கள் தோஷமன்று; தத் த்ரஷ்டாவான தன்னுடைய தோஷமென்கை.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் விவரிக்கப்பட்டபடி பகவான் மற்றும் பாகவதர்கள் மீது எந்தவிதமான தோஷமும் இல்லை என்பதை ஒப்புக் கொள்ளாமல், அவர்களிடம் தோஷம் உண்டு என்று எண்ணினால் – அவர்கள் விஷயத்தில் தோன்றுகிற தோஷம் என்பது

உண்மையில் அவர்களிடம் இல்லை; யார் அவ்விதம் தோஷம் உள்ளதாக எண்ணுகிறார்களோ அவர்களுக்கே உள்ளது என்று கருத்து.

353. ஸ்வதோஷமானபடி யென்னென்னில்.

**அவதாரிகை** - அது ஸ்வதோஷமானபடியை ஸாதிக்கைக்காக தத்விஷய ப்ரச்நத்தை அநுவதிக்கிறார் (ஸ்வதோஷமானபடி யென்னென்னில்) என்று.

**விளக்கம்** - அது அவ்விதம் எண்ணுபவர்களிடம் உள்ள குற்றமே என்பதை விளக்கும் விதமாக, அது குறித்த கேள்வியை எழுப்பிக்கொள்கிறார்.

**வ்யாக்யானம்** - பரகதமாய்த் தோற்றுகிறவது ஸ்வதோஷமானபடி யெங்ஙனே யென்னி லென்றபடி.

**விளக்கம்** - மற்றவர்களிடம் காண்கின்ற குற்றம் என்பது எவ்விதம் தன்னிடம் காணப்படும் குற்றமாகும் என்று கருத்து.

354. ஸ்வதோஷத்தாலும் பந்தத்தாலும்.

**அவதாரிகை** - அதுக்குத்தர மருளிச்செய்கிறார் (ஸ்வதோஷத்தாலும்) இத்யாதியாலே.

**விளக்கம்** – அதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, காசாதிதுஷ்ட த்ருஷ்டிமானுக்கு, சந்த்ர த்வித்வாதிகள் தோற்றுமாப்போலே, நிர்தோஷமான விஷயங்களிலே தோஷம் தோன்றும்படியான துர்வாஸநா துஷ்ட சித்ததையாகிற ஸ்வதோஷத்தாலும், பித்ராதிகள் தோஷம் புத்ராதி களதாமாப்போலே அவர்களுக்குண்டான தோஷம் தன்னதாம்படி அவர்களோடு தனக்குண்டான பந்த விசேஷத்தாலு மென்கை. (ஸ்வதோஷத்தாலும்) என்கிறவிது, அத்தலையில் தோஷாபாவத்தைப் பற்றச் சொல்லுகிறது; மற்றையது, தோஷவத்தையை அங்கீகரித்துக்கொண்டு சொல்லுகிறது.

**விளக்கம்** – கண் நோயால் பாதிப்படைந்த ஒருவனுக்குச் சந்த்ரன் இரண்டு உள்ளதாகத் தோன்றும். இது போன்று குற்றம் இல்லாதவகள் விஷயத்தில் குற்றத்தைக் காண்பது என்பது தீய பழக்கம் காரணமாகக் கெடுக்கப்பட்ட மனத்தை உடைய தனது குற்றத்தாலே ஏற்படுகிறது. மேலும் மாதாபிதாக்களின் குற்றம் பிள்ளைகள் மீது வருவது போன்று, அவர்களுக்கு உண்டான தோஷம் (அவர்கள் மீது கற்பிக்கப்பட்ட குற்றம்) என்பது தன்னுடையது என்று அவர்களுடன் ஏற்பட்ட பந்தம் காரணமாகவும் கொள்ளலாம். “ஸ்வதோஷத்தாலும்” என்பதன் மூலம் மற்றவர்களிடம் தோஷம் இல்லை எனப்பட்டது; “பந்தத்தாலும்” என்பதன் மூலம் அவர்களிடம் குற்றம் இருப்பதாக ஒப்புக்கொண்டு உரைப்பதைக் காட்டுகிறார்.

355. ஸ்வதோஷமில்லையாகில் குணப்ரதிபத்தி நடக்கும்.

**அவதாரிகை** - ஸ்வதோஷத்தாலே என்னலாவது தோஷந்தானுண்டானாலன்றோ வென்ன அருளிச்செய்கிறார் (தோஷமில்லையாகில்) என்று தொடங்கி.

**விளக்கம்** - “ஸ்வதோஷம்” என்று கூறுவதன் மூலம் அத்தகைய குற்றம் தனக்கு இருந்தால் அல்லவோ பொருந்தும் என்று கேட்கலாம். இதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சந்த்ர த்வித்வ தர்சநஹேதுவான சக்ஷுர்தோஷமில்லாதபோது சந்த்ரைகத்வமே தோற்றுமாப்போலே, தோஷதர்சந ஹேதுவான ஸ்வசித்த தோஷமில்லாதபோது பகவத் பாகவத விஷயங்களில் குணப்ரதிபத்தியே நடக்குமென்கை. அது நடவாமையால் தோஷமுண்டென்று கொள்ளவேணுமென்று கருத்து.

**விளக்கம்** – சந்த்ரன் இரண்டு என்று தோன்றுவதற்குக் காரணமான கண் நோய் இல்லாதபோது, சந்த்ரன் ஒருவனாக மட்டுமே தோன்றுவது போன்று, குற்றத்தைக் காண வைப்பதான தனது மனக்குற்றம் இல்லாதபோது, பகவானிடமும் பாகவதர்களிடமும் குணங்களை மட்டுமே காண்பர். இப்படிக் குணத்தைக் காணாமையால், தன்னிடம் தோஷம் உண்டு என்றாகிறது.

356. நடந்ததில்லையாகில் தோஷ ஜ்ஞாநமே தோஷமாம்.

**அவதாரிகை** - நடந்ததில்லையாகில் வரும் தோஷமென்னென்ன அருளிச்செய்கிறார் (நடந்ததில்லையாகில்) என்று தொடங்கி.

**விளக்கம்** - அவர்களுடைய குணத்தைப் பற்றிய சிந்தனை உண்டாகவில்லை என்றால் ஏற்படும் தோஷம் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, குணப்ரதிபத்தி நடவாதொழிந்தால் தோஷ ப்ரதிபத்தியிறே நடப்பது, அந்த தோஷ ஜ்ஞாநந்தானே இவனுக்கு பகவந் நிக்ரஹ ஹேதுவான தோஷமாம்; இதடியாக வேறொரு தோஷமுண்டாமென்ன வேண்டாவென்கை. இத்தால், இது அவச்யம் பரிஹரணீய மென்னுமிடம் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** – “குணம் உண்டு” என்ற சிந்தனை ஏற்படவில்லையென்றால், “குற்றம் உண்டு” என்ற சிந்தனையே மேலோங்கி நிற்கும். இப்படியாகக் குற்றத்தைக் காண்பது என்ற குற்றமே, ஸர்வேச்வரன் கொள்ளும் கோபத்திற்குக் காரணமாக உள்ளது. ஆகவே தனியாக வேறு எந்தவொரு குற்றமும் உண்டாக வேண்டியதில்லை என்று கருத்து. எனவே இந்தக் குற்றம் அவசியம் நீக்கப்பட வேண்டியதாக உள்ளது.

357. இதுதனக்கு அவஸரமில்லை.

**அவதாரிகை** - இதுதானெல்லாம் சொல்ல வேண்டுவது இதுதனக்கு அவகாசமிவனுக்கு உண்டாலிறே யென்கிறார் மேல் (இதுதனக்கவஸரமில்லை) என்று.

**விளக்கம்** - இவை அனைத்தும் உரைக்க வேண்டுவது, இதற்கான அவசியம் இவனிடம் உண்டானால் மட்டுமே ஆகும் என்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பகவத் பாகவத தோஷ சிந்தநமாகிறவிது தனக்கு அவஸரந்தானிவனுக்கு முதலிலே யில்லையென்கை.

**விளக்கம்** - பகவானிடம், பாகவதர்களிடமும் குற்றத்தைக் காணுதல் என்பது முதற்கண் அவனிடம் இல்லை என்று கருத்து (அதாவது அவற்றை எண்ண இவனுக்கு நேரம் இல்லை).

358. ஸ்வதோஷத்துக்கும் பகவத் பாகவத குணங்களுக்குமே காலம் போருகையாலே.

**அவதாரிகை** - அதெத்தாலேயென்ன அருளிச்செய்கிறார் (ஸ்வதோஷத்துக்கும்) என்று தொடங்கி.

**விளக்கம் -** அது எப்படி என்று கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, "நீசனேன் நிறைவொன்றுமிலேன்", "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பு, மிந்நின்ற நீர்மை", "அமர்யாத: க்ஷுத்ர:", "வித்வேஷமாநமதராக விலோப மோஹாத்யாஜாநபூமி:", "அதிக்ராமந் நாஜ்ஞாம் தவவிதி நிஷேதேஷுபவதேப்யபித்ருஹ்யந் வாக்தீக்ருதிபிரபி பக்தாய ஸததம், அஜாநந் ஜாநந்வா பவத ஸஹநீயாகஸி ரத:", "ஸ்ரீரங்கேச த்வத் குணாநாமிவாஸ்மத்தோஷாணாம் க: பாரத்ருச்வா யதோஹம்" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே, அநவதிகமான தன்னுடைய தோஷாநுஸந்தாநத்துக்கு, அந்த தோஷத்தைப் பாராம லங்கீகரித்தருளின பகவானுடையவும்; "வேதம் வல்லார்களைக் கொண்டு" என்றும், "போதயந்த: பரஸ்பரம்" என்றும், "அவனடியார் சிறுமாமனிசரா யென்னை யாண்டா ரிங்கே திரிய, நறுமாவிரை நாண்மலரடிக் கீழ்ப்புகுதல், உறுமோ" என்றுஞ் சொல்லுகிறபடியே, புருஷகாரமும் உசாத் துணையும் ப்ராப்யருமான பாகவதர்களுடையவும்; "ஸமஸ்த கல்யாண குணாம்ருதோததி:", "அஸங்க்யேய கல்யாணகுணகணௌக மஹார்ணவ", "யதா ரத்நாநி ஜலதே ரஸங்க்யேயாநி புத்ரக, ததா குணாஹ்யநந்தஸ்ய அஸங்க்யேயா மஹாத்மந:" என்றும், "நாஹம் ஸமர்த்தோ பகவத் ப்ரியாணாம் வந்தும் குணாந் பத்மபுவோப் யகம்யாந்" என்றுஞ் சொல்லுகிறபடியே அஸங்கயேயமாயிருந்துள்ள குணாநு ஸந்தாநங்களுக்குமே காலம் போந்து மற்றொன்றுக் கவகாசமில்லாமையாலே யென்கை. (இவற்றுக்கே காலம் போருகையாலே) என்கையாலே, ஸ்வகுண ஸ்மரணத்துக்கு அவகாசமில்லை யென்னுமிடமும் அர்த்தாத்ஸித்தமிறே.

**விளக்கம்** - கீழே உள்ள பல வரிகளிலும் கூறப்பட்டபடி தனது தோஷங்களை இவன் எப்போது எண்ணியபடி உள்ளான்.

- திருவாய்மொழி (3-3-4) – நீசனேன் நிறைவொன்றுமிலேன்
- திருவிருத்தம் (1) - பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பு, மிந்நின்ற நீர்மை
- ஸ்தோத்ரரத்னம் (62) - அமர்யாத: க்ஷுத்ர: - வேதங்களில் கூறப்பட்ட விஷயங்களில் மரியாதை தவிர்த்தவனாக
- ஸ்ரீவரதராஜஸ்தவம் (76) – வித்வேஷமாநமதராக விலோப மோஹாத்யாஜாநபூமி: – காரணம் இன்றி ஒருவன் மீது விரோதம் கொள்ளுதல், குலம் போன்றவற்றால் கர்வம், உலக விஷயங்களில் ஆசை, கோபம்.
- ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-91) - அதிக்ராமந் நாஜ்ஞாம் தவவிதி நிஷேதேஷுபவதேப்யபித்ருஹ்யந் வாக்தீக்ருதிபிரபி பக்தாய ஸததம், அஜாநந் ஜாநந்வா பவத ஸஹநீயாகஸி ரத: - திருவரங்கனே! உன்னால் விதிக்கப்பட்டவை மற்றும் விலக்கப்பட்டவை என்பதை மீறி நடப்பவனாக, உனக்கும் உனது அடியார்களுக்கும் எப்போதும் பல அபசாரங்கள் செய்பவனாக, உன்னால் பொறுக்க இயலாத பல குற்றங்கள் உள்ளவனாக.
- ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-94) - ஸ்ரீரங்கேச த்வத் குணாநாமிவாஸ்மத் தோஷாணாம் க: பாரத்ருச்வா யதோஹம் – ஸ்ரீரங்கநாதா! உனது குணங்கள் போன்று எங்களுடைய குற்றங்களுக்கு எல்லை காண யாரால் இயலும்

மேலும் கீழே உள்ள வரிகளின்படி பகவானை அண்டுவதற்கு உதவுபவர்களாக உள்ளவர்களும், தனக்கு மிகவும் நன்மையைச் செய்பவர்களும் ஆகிய பாகவதர்களின் குணங்களை எப்போதும் எண்ணியபடியே உள்ளான்.

- திருவாய்மொழி ( 4-6-8) - வேதம் வல்லார்களைக் கொண்டு

- ஸ்ரீமத்பகவத்கீதை (10-9) - போதயந்த: பரஸ்பரம் - என்னிடம் மனம் வைத்து ஒருவருக்கொருவர் அறிந்தவர்களாக

- திருவாய்மொழி (8-10-3) - அவனடியார் சிறுமாமனிசரா யென்னை யாண்டா ரிங்கே திரிய, நறுமாவிரை நாண்மலரடிக் கீழ்ப்புகுதல், உறுமோ

மேலும் கீழே உள்ள வரிகளின்படி தனது குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளும் பகவானுடைய எல்லையற்ற குணங்களை எப்போதும் எண்ணியபடியே உள்ளான்.

- ஸ்தோத்ரரத்னம் (18) – ஸமஸ்த கல்யாண குணாம்ருதோததி: - அனைத்து திருக்கல்யாண குணங்களின் ஸமுத்ரமாக நீ உள்ளாய்.
- சரணாகதி கத்யம் – அஸங்க்யேய கல்யாணகுணகணௌக மஹார்ணவ - எண்ணற்ற கல்யாண குணங்களின் மிகப் பெரிய ஸமுத்ரமாக உள்ளாய்
- யதா ரத்நாநி ஜலதே ரஸங்க்யேயாநி புத்ரக, ததா குணாஹ்யநந்தஸ்ய அஸங்க்யேயா மஹாத்மந: - கடலில் உள்ள இரத்தினங்களை எவ்விதம் எண்ண இயலாதோ அது போன்று ஸர்வேச்வரனின் குணங்களையும் எண்ணமுடியாது
- நாஹம் ஸமர்த்தோ பகவத் ப்ரியாணாம் வந்தும் குணாந் பத்மபுவோப் யகம்யாந் – நான்முகனாலும் அறிய இயலாத பெருமைகள் கொண்ட ஸர்வேச்வரனுடைய பக்தர்கள் குறித்து என்னால் முழுவதுமாக உரைக்க இயலாது.

ஆக மேலே உள்ளவற்றைச் சிந்திப்பதற்கே காலம் சரியாக உள்ளதால், மற்றவற்றைக் குறித்து சிந்திக்க நேரம் இல்லை என்று கருத்து. எனவே தனது குணங்கள் குறித்துச் சிந்திக்கவும் நேரம் இல்லை.

359. ஸம்ஸாரிகள் தோஷம் ஸ்வதோஷமென்று நினைக்கக் கடவன்.

**அவதாரிகை** - ஆக (மநஸ்ஸுக்குத் தீமையாவது) என்று தொடங்கி இவ்வளவும் - பகவத் பாகவத தோஷ ஸ்மரணமாகா தென்னுமிடமும், அவர்களுடைய நைர்தோஷ்யமும்; தோஷமுண்டென்று நினைக்கில் அது தத்தோஷமன்று ஸ்வதோஷமென்றும், அது ஸ்வதோஷமாகைக்கு நிதாநங்களும், ஸ்வதோஷா பாவசங்கைக்குத்தரமும், தோஷ ப்ரதிபத்தி நடக்கிலதுதானே இவனுக்கு மஹாதோஷமாமென்றும், ஸ்வதோஷ பகவத் பாகவத குணாநுஸந்தாநத்துக்கே காலம் போருகையால் இது தனக்கு இவனுக் கவஸரமில்லை யென்றும் அருளிச்செய்தார் கீழ்; இப்படி தனக்கு உத்தேச்யமான பகவத்

பாகவத விஷயங்களில் தோஷம் நினையாமலும், நினைத்தானாகிலுமது தன்னுடைய தோஷமாக நினைத்திருக்க வேணுமென்றருளிச்செய்த ப்ரஸங்கத்திலே, ஸம்ஸாரிகள் தோஷ விஷயானுஸந்தாநமு மின்ன படியாக வேணுமென்கிறார்மேல் (ஸம்ஸாரிகள்) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஆகவே, "மநஸ்ஸுக்குத் தீமையாவது" என்றுள்ள சூர்ணை 350 தொடங்கி இதுவரை, ஸர்வேச்வரன் மற்றும் அவனுடைய அடியார்கள் விஷயத்தில் குற்றங்களை எண்ணுதல் கூடாது என்பதும்; அவர்களிடம் எந்தவிதமான தோஷமும் இல்லை என்பதும்; அவர்களிடம் தோஷம் உண்டு என்று எண்ணினால், அது உண்மையில் அவர்களிடம் உள்ள தோஷம் அல்ல, அவ்விதம் எண்ணுபவர்களிடம் உள்ள தோஷமே என்பதும்; இவ்விதம் அது எண்ணுபவர்களிடம் உள்ள தோஷமாவதற்குக் காரணங்கள் என்ன என்பதும்; "அது எவ்விதம் எனது குற்றமாகும்" என்ற சந்தேகத்திற்கான விடையும்; அவர்களிடம் தோஷம் உண்டு என்று எண்ணுவதே மிகப் பெரிய தோஷம் என்பதும்; நம்முடைய குற்றத்தையும், பகவத் பாகவதர்களின் குணங்களையும் எண்ணுவதற்கே நேரம் சரியாக இருப்பதால் மற்றவர்களின் குற்றங்களை எண்ண இவனுக்கு நேரம் இல்லை என்றும் அருளிச்செய்தார். இப்படியாகத் தனக்கு வேண்டப்பட்டவர்களாக உள்ள ஸர்வேச்வரன் மற்றும் பாகவதர்கள் விஷயத்தில் குற்றம் எண்ணாமலும், அப்படியே எண்ணினாலும் அந்தச் சிந்தனையானது தனது குற்றம் காரணமாகவே ஏற்படுகிறது என்று அருளிச்செய்த இந்த இடத்தில் - ஸம்ஸாரிகளுடைய குற்றம் குறித்த சிந்தனையும் இன்னவிதமாக இருக்கவேண்டும் என்பதை இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸம்ஸாரிகளுக்குண்டான பகவத் வைமுக்க்யம், அநாத்மந்யாத்ம புத்தி, அஸ்வேஸ்வபுத்தி முதலான தோஷங்கண்டால் அந்த தோஷங்களையிட்டு அவர்களை யிகழ்ந்து இவர்களுக்கும் நமக்கும் பணியென் னென்றிராதே, அவர்களுடைய தோஷமும் தன்னுடைய தோஷமென் றநுஸந்தித்திருக் கடவனென்கை.

**விளக்கம்** - ஸம்ஸாரிகளுக்கு ஏற்படும் ஸர்வேச்வரனிடம் பக்தி இல்லாமை, ஆத்மா அல்லாத சரீரத்தை ஆத்மாவாக எண்ணுதல், தன்னுடையது அல்லாதவற்றைத் தன்னுடையது என்று எண்ணுதல் முதலான குற்றங்களைக் கண்டால், அந்தக்

குற்றங்களை நோக்கி, அவர்களை இகழாமல் இருக்கவேண்டும். மேலும், “இவர்களுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை” என்று எண்ணி ஒதுங்காமல், அவர்களுக்குக் குற்றம் உள்ளதாகக் கண்டதும் தனது குற்றமே என்று எண்ணவேண்டும்.

360. அதுக்கு ஹேது பந்தஜ்ஞானம்.

**அவதாரிகை** - அதுக்கு ஹேதுவென்னென்ன அருளிச்செய்கிறார் (அதுக்கு ஹேது பந்த ஜ்ஞாநம்) என்று.

**விளக்கம்** – அதற்குக் காரணம் என்ன என்ற வேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, தனக்கு சேஷிகளான பகவத் பாகவதர்கள் தோஷம், ஸ்வதோஷமாக வநுஸந்திக்கைக்கு ஹேது அவர்களோடு தனக்குண்டான ஸம்பந்த ஜ்ஞாநமானாப்போலே, ஸம்ஸாரிகள் தோஷத்தைத் தன்னுடைய தோஷமாக அநுஸந்திக்கைக்கு ஹேது, நாராயணத்வ ப்ரயுக்தமான ஸம்பந்த ஜ்ஞாநமென்கை. எல்லார்க்கும் ஈச்வரனோடு ஸம்பந்த மொத்திருக்கையாலே, அவ்வழியாலே தனக்கு மவர்களுக்கும் ஸம்பந்தமுண்டாகையாலே, தனக்கு அவர்ஜநீயரான ப்ரக்ருதி பந்துக்களுக்கு வந்த தோஷம் தனக்கு வந்ததாக நினைத்திருக்குமோபாதி, ஸம்ஸாரிகளுக் குண்டான தோஷம் தன்னுடைய தோஷமென்றே நினைக்கக் குறையில்லையிறே.

**விளக்கம்** - தனக்கு எஜமானர்களாக விளங்கும் ஸர்வேச்வரன் மற்றும் பாகவதர்களிடம் குற்றம் காண்பது என்பது தன்னுடைய குற்றம் காரணமாகவே ஏற்படுகிறது என்ற எண்ணம், அவர்களுடன் தனக்கு உள்ள ஸம்பந்த ஞானம் மூலம் மட்டுமே ஏற்படுகிறது. இதே போன்று ஸம்ஸாரிகளின் குற்றங்களையும் தனது குற்றம் என்றே காண்பதற்கான காரணம், நாராயணனாகிய ஸர்வேச்வரனுடன் உள்ள ஸம்பந்த ஞானமே ஆகும். அனைவருக்கும் ஸர்வேச்வரனுடனான ஸம்பந்தம் ஒரே போன்று உள்ளதால், அதன் மூலம் நமக்கும், மற்றவர்களுக்கும் ஸம்பந்தம் ஏற்படுவதால், தன்னால் விட இயலாத உறவினர்களின் குற்றம் நம்முடைய குற்றம் என்று எண்ணுவது போன்று, ஸம்ஸாரிகளின் தோஷம் தன்னுடையது என்று எண்ணுவதில் எந்தக் குறையும் இல்லை.

361. "இறைப்பொழுது மெண்ணோம்" என்கையாலே அதுதான் தோன்றாது.

**அவதாரிகை** - இதுதான் வேண்டுவது அவர்கள் தோஷந்தா னிவனுக்குத் தோன்றிலிறே, அதுதான் முதலிலே யிவனுக்குத் தோன்றாதென்கிறார் மேல் (இறைப்பொழுது மெண்ணோம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக அவர்கள் குற்றத்தைத் தன்னுடைய குற்றமாக நினைத்தல் என்பது, அவர்களுடைய குற்றத்தை முதற்கண் இவன் உணர்ந்தால் அல்லவோ கூடும்? அது முதற்கண் இவனுக்கு ஏற்படாது என்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "கடல் மல்லைத் தலசயனுத் துறைவாரை எண்ணாதே யிருப்பாரை இறைப்பொழுது மெண்ணோம்" என்று, பரமபதத்திலே நித்யஸூரிகள் பரிந்து பரிசர்யை பண்ணவிருக்கும் பெருமையை யுடையனாய் வைத்து திருக்கடல் மல்லையிலே வந்து தங்களைப் பெறுகைக்குத் தரைக்கிடை கிடக்கிற நீர்மையை யுடையவனை, இதொரு நீர்மை யிருக்கும் படியென்! என்று அந்நீர்மையிலே தோற்று அநவரதாநு ஸந்தாநம் பண்ணவேண்டியிருக்க, அவனிடையாட்டங் கொண்டு காரியமற்று கேவல தேஹ போஷணாதி பரராயிருக்கிற ஸம்ஸாரிகளை க்ஷணகாலமும் நினையோ மென்கையாலே, ஸம்ஸாரிகள் தோஷந்தா னிவ்வதிகாரிக்குத் தோன்றாதென்கை. திருமங்கையாழ்வாரருளிச்செய்தவிது ஸ்ரீவைஷ்ணவர்களெல்லார்க்கு மொக்குமிறே.

**விளக்கம்** - பெரிய திருமொழி (2-6-1) - கடல் மல்லைத் தலசயனுத் துறைவாரை எண்ணாதே யிருப்பாரை இறைப்பொழுது மெண்ணோம் – பரமபதத்தில் நித்யஸூரிகளால் மிகவும் பரிவுடன் கைங்கர்யம் செய்யப்படும் உயர்ந்தவனாக உள்ளபோதிலும், திருக்கடல்மல்லையில் (இன்று சென்னையை அடுத்துள்ள மஹாபலிபுரம் என்று அழைக்கப்படுவதாகும்) வந்து, தரையிலே சயனித்துள்ளான் (இங்குள்ள ஸர்வேச்வரன் ஆதிசேஷனில் சயனிக்காமல், வெறும் தரையில் கிடப்பதை இன்றும் காணலாம்) நம்மை அடைய வந்த இப்படிப்பட்ட நீர்மையைக் கண்டு, "இப்படி ஒரு நீர்மையா?" என்று வியந்து, அந்த நீர்மைக்குத் தோற்று, எப்போதும் அவனைச் சிந்தித்தபடி இருக்கவேண்டும். ஆனால் இவ்விதம் செய்யாமல், அவனைப் பற்றியே எண்ணாமல், அற்பமான நமது சரீரத்தைப் பாதுகாப்பதையே சிந்தித்துள்ள ஸம்ஸாரிகள்

குறித்து ஒரு நொடியும் எண்ணமாட்டோம் என்பதால், ஸம்ஸாரிகளுடைய குற்றம் இவனுக்குத் தோன்றாது. திருமங்கையாழ்வார் அருளிச்செய்த இந்தக் கருத்து ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவருக்கும் ஒரே போன்று பொருந்தும் அல்லவோ?

362. தோன்றுவது நிவர்த்தநார்த்தமாக.

**அவதாரிகை** - (தோன்றாது) என்னப்போமோ, “சொன்னால் விரோதம்”, “ஒரு நாயகம்”, “கொண்ட பெண்டிர்” இத்யாதியிலே ஆழ்வார்க்குமுட்பட்ட ஸம்ஸாரிகள் குற்றம் தோன்றிற்றில்லையோ வென்ன அருளிச்செய்கிறார் (தோன்றுவது) என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் “தோன்றாது” என்று கூறப்பட்டது எப்படி? திருவாய்மொழி (3-9-1) - சொன்னால் விரோதம், திருவாய்மொழி (4-1-1) - ஒரு நாயகம், திருவாய்மொழி (9-1-1) – கொண்ட பெண்டிர் – போன்ற பாசுரங்களில் நம்மாழ்வாருக்கே ஸம்ஸாரிகளுடைய குற்றம் தோன்றியது அல்லவோ? இந்தக் கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸம்ஸாரிகள் தோஷம் தோன்றுவது அந்த தோஷங்களினின்று மவர்களை நிவர்த்திப்பிக்கைக்காக வென்கை. “சொன்னால் விரோதம்” முதலானவற்றால் ஆழ்வாருமதில் திருவுள்ளம் வைத்தது, அஸேவ்ய ஸேவாதிகளினின்று மவர்களை நிவர்த்திப்பிக்கைக்காகவிறே; அதெல்லார்க்கு மொக்குமென்று கருத்து.

**விளக்கம்** - ஸம்ஸாரிகளுடைய குற்றம் புலப்படுவது என்பது அந்தக் குற்றங்களிலிருந்து அவர்களை விடுவிக்கவே ஆகும். திருவாய்மொழி (3-9-1) – சொன்னால் விரோதம் – போன்ற பாசுரங்களில் ஆழ்வார் திருவுள்ளம் பற்றியது எதனைக் குறித்து என்றால், அடையத்தகாதவர்களை அடையத்தக்கதிலிருந்து விடுவிக்கவே ஆகும் என்பதால் இது அனைவருக்கும் ஒரே போன்றதாகும்.

363. பிராட்டி, ராக்ஷஸிகள் குற்றம் பெருமாளுக்கும் திருவடிக்கும் அறிவியாதாப்போலே, தனக்குப் பிறர் செய்த குற்றங்களை பகவத் பாகவத விஷயங்களில் அறிவிக்கக் கடவனல்லன்.

**அவதாரிகை** – ஆக இவ்வதிகாரி, ஸம்ஸாரிகள் தோஷங்கண்டா லநுஸந்திக்கும் ப்ரகாரமும், தத்தோஷந்தா னிவனுக்குத் தோன்றா தென்னுமிடமும் தோன்றுவ தின்னதுக்காகவென்று மருளிச்செய்தார் கீழ்; இப்படி காதாசித்கமாகத் தோன்றும் ஸம்ஸாரிகள் தோஷங்களை ஸ்வதோஷமாக நினைத்தும் தந்நிவர்த்தகனாயும் போருமளவன்றிக்கே, ஸ்வவிஷயத்திலே குற்றங்களைச் செய்தால் இவனிருக்க வடுக்கும்படி யருளிச்செய்கிறார் மேல் (பிராட்டி) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஆக இந்த அதிகாரி, ஸம்ஸாரிகளின் குற்றங்களைக் கண்டால் எண்ணியிருக்கும் விதமும், அவர்களுடைய குற்றம் அவனுக்குத் தோன்றாது என்பதும், அவ்விதம் தோன்றினாலும் அதன் காரணம் இன்னதற்காக என்பதும் கூறப்பட்டது. இப்படியாக எப்போதாவது ஒரு சமயத்தில் ஸம்ஸாரிகளின் குற்றங்கள் புலப்படும்போது அந்தக் குற்றங்களைத் தனது விஷயத்தில் அவர்கள் செய்தால், இவன் நடக்கவேண்டியது எவ்விதம் என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது ஏகாக்ஷீ, ஏககர்ணி முதலான ஏழுநூறு ராக்ஷஸிகள் ஏகதிவஸம் போலே பத்து மாஸம் தர்ஜந பர்த்ஸநம் பண்ணவிருந்த பிராட்டி, இவர்களப்படி செய்த குற்றத்தை பகவத் விஷயமான பெருமாளுக்கும் பாகவத விஷயமான திருவடிக்கு மறிவியாதாப் போலே, தன் விஷயமாகப் பிறர் செய்த குற்றங்களை பகவத் விஷயத்திலாதல் பாகவத விஷயத்திலாதல் மறந்தும் விண்ணப்பஞ் செய்யக் கடவனல்ல னென்கை. (அறிவிக்கக் கடவனல்லன்) என்கிறது, அவர்கள் திருவுள்ளத்திலே புண்பட்டால் பண்டேயழிந்து கிடக்கிற இவர்களுக்கு மிகவும் விநாச ஹேதுவாமென்று நினைத்து.

**விளக்கம்** – ஒரு காது உள்ளவள், ஒரு கண் உள்ளவள் என்று எழுநூறு ராக்ஷஸிகளால் அன்றாடம் பத்து மாதங்கள் கைளால் அதட்டப்பட்டும், வாயால் மிரட்டப்பட்டும் சீதை இருந்தாள். ஆனாலும் அவர்கள் செய்த அந்தக் குற்றங்களை, ஸர்வேச்வரனாகிய இராமனுக்கும், பாகவதனாகிய அனுமனுக்கும் தெரிவிக்கவில்லை. இதே போன்று தனக்கு மற்றவர்கள் ஏதாவது குற்றம் இழைத்திருந்தாலும், அதனை ஸர்வேச்வரனிடமும் பாகவதர்களிடமும் தெரிவிக்காமல் இருத்தல் வேண்டும். “அறிவிக்கக் கடவனல்லன்” என்பதன் மூலம் இப்படிப்பட்டவர்களைக் குறித்து ஸர்வேச்வரனிடம் உரைத்தால், அதன்

மூலம் புண்படும் ஸர்வேச்வரனுடைய திருவுள்ளம் காரணமாக, முன்பே அழிந்துள்ள இவர்கள் மேலும் அழிவார்கள் என்று உணர்த்தினார்.

364. அறிவிக்க வுரியனகப்பட வாய்திறவாதே ஸர்வஜ்ஞ விஷயங்களுக்கும் மறைக்கு மென்னா நின்றதிறே.

**அவதாரிகை** - இது கிம்புநர் ந்யாய ஸித்தமாம்படி ஈச்வரன்படியை அருளிச்செய்கிறார் (அறிவிக்க வுரியவன்) என்று தொடங்கி.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் கூறப்பட்ட விஷயத்திற்கு மேன்மேலும் விளக்கம் கூறவும் வேண்டுமோ என்ற நியாயத்தின்படி ஸர்வேச்வரனின் தன்மையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "எதிர்சூழல்புக்கு" என்கிறபடியே தம்முடைய சீல ஸௌலப்யாதிகளைக் காட்டி ஸம்ஸாரி சேதநரைத் தப்பாம லகப்படுத்திக் கொள்ளுவதாக வந்தவதரித்து தமக்கடியார் வேணுமென்றபேக்ஷித்தால் அவர்கள் அப்படி அநுகூலராய்த் தோன்றாதொழிந்தாலும், "அவர்கள் செய்தபடி செய்கிறார்கள், நாமிவர்களுக் குறுப்பாகப் பெற்றோமிறே" என்று அதுதானே போக்யமாக விருப்பர், அதுக்குமேல் அவர்கள் வைமுக்க்யம் பண்ணினார்கள் என்று அவர்கள் குற்றத்தைத் தனியிருப்பிலே பிராட்டிக்கும் அருளிச்செய்யாரென்கிற "சூழ்ந்தடியார்" என்கிற பாட்டிலே, சேதநர் செய்த குற்றங்களைத் தன் திருவுள்ளத்துக் குகந்தவர்களுட னறிவிக்கைக்கு ப்ராப்தனான ஸர்வேச்வரனுட்படத் தன் திருப்பவளம் திறந்தருளிச் செய்யாதே, தானருளிச் செய்யா தொழிந்தாலும் அறியவல்ல ஸர்வஜ்ஞ விஷயங்களுக்கும் மறைக்குமென்று சொல்லா நின்றதிறே யென்கை. இத்தால், அவனுட்பட விப்படி மறையா நின்றாலிவனுக்குப் பின்னைச் சொல்லவேணுமோ வென்றபடி.

**விளக்கம்** - திருவாய்மொழி (2-7-6) – எதிர்சூழல்புக்கு – என்பதற்கு ஏற்ப, தன்னுடைய நீர்மை மற்றும் எளிமை முதலான குணங்களை உணர்த்தி, அதன் மூலம் இந்த உலகில் உள்ள மனிதர்கள் தன்னிடமிருந்து தப்பிச் சென்று விடாமல் இருக்கும் விதமாக வந்து அவதரிக்கிறான்; மேலும் தனக்கு அடியார்கள் மேன்மேலும் கிட்டவேண்டும் என்று விரும்பியவனாக, அவர்கள் தனக்கு அனுகூலர்களாக இல்லாவிட்டாலும், "இவர்கள்

எவ்விதமாக வேண்டுமானாலும் இருந்து விட்டுப்போகட்டும். நாம்தான் இவர்களைக் கைக்கொள்கிறோமே" என்று எப்போதும் ஸர்வேச்வரனும் பெரியபிராட்டியும் இனிமையாகவே இருப்பார்கள். அதற்கும் மேலே அவர்கள் ஏதேனும் குற்றம் இழைத்திருந்தாலும், அந்தக் குற்றத்தைத் தான் பிராட்டியுடன் தனியாக உள்ளபோது அவளுக்கு அவன் தெரிவிப்பதில்லை என்பதைப் பெரியதிருவந்தாதி (17) – சூழ்ந்தடியார் - என்பதில் காணலாம்; அதாவது சேதநர்கள் செய்யும் குற்றங்களைத் தனக்குப் பிரியமான பிராட்டிக்குத் தெரிவிக்கும் உரிமை உள்ளவனாக ஸர்வேச்வரன் உள்ளபோதிலும், தன்னுடைய திருவாய் திறந்து அவ்விதம் உரைப்பதில்லை; அப்படியே அவன் உரைக்காமல் இருந்தாலும், தானாகவே அறியும் திறன் கொண்டவர்களாக உள்ளவர்களுக்கும் அந்தக் குற்றங்கள் புலப்படாமல் மறைத்துவிடுகிறான் என்பதையே அந்தப் பாசுரம் உணர்த்துகிறது. இப்படியாக ஸர்வேச்வரனே குற்றங்களை மறைத்து விடுகிறான் என்னும்போது, அவனுடைய அடியார்கள் மற்ற அடியார்களின் குற்றங்களை மறைப்பார்கள் என்று கூறவும் வேண்டுமோ?

365. குற்றம் செய்தவர்கள் பக்கல், பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகார ஸ்ம்ருதியும் நடக்கவேண்டும்.

**அவதாரிகை** - இப்படி உத்தேச்ய விஷயங்களி லறிவியாதிருக்கும் மாத்ரமும் போராது, குற்றஞ் செய்தவர்கள் விஷயமாக க்ஷமாதயாதிகளும் நடக்கவேணுமென்கிறார் மேல் (குற்றஞ் செய்தவர்கள் பக்கல்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாகத் தனக்கு வேண்டியவர்களாகிய ஸர்வேச்வரனுடைய அடியார்களின் குற்றங்களை மற்றவர்களுக்கு உரைக்காமல் இருந்தால் மட்டும் போதாது; குற்றம் செய்தவர்கள் விஷயத்தில் பொறுமை, கருணை போன்றவற்றையும் காண்பிக்க வேண்டும் என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (பொறையாவது) அவர்கள் செய்த குற்றத்துக்குத் தாமொரு ப்ரதிக்ரியை பண்ணுதல், நெஞ்சிலே கன்றியிருத்தல் செய்யாமையாகிற அபராத ஸஹத்வம். (க்ருபையாவது), நாம் பொதுத்திருந்தோமாகிலு மெம்பெருமா னுசித தண்டம் பண்ணவன்றோ புகுகிறான், ஐயோ! இனியிதுக்கென் செய்வோம்! என்கிற பரதுக்க

காஸஹிஷ்ணுத்வம். (சிரிப்பாவது), அத்ருஷ்ட விரோதமாக விவர்களால் செய்யலாவ தொன்றில்லையிறே, பாருஷ்யாதி முகத்தாலே க்யாதிலாபாதி த்ருஷ்ட விரோதங்களிறே இவர்களால் செய்யலாவது, அப்படி சிலவற்றைச் செய்தால் தங்களோபாதி நாமுமிவற்றிலே சபலராய் இவற்றினுடைய ஹாநியைப் பற்ற நெஞ்சாறல் பட்டுத் தளர்வுதோமென் றிருந்தார்களாகாதே, இவர்கள் அறிவிலித்தன மிருந்தபடியென்! என்று பண்ணும் ஹாஸம். (உகப்பாவது), அவர்கள் பண்ணும் பரிபவாதிகளுக்கு விஷயமான சரீரத்தைத் தனக்கு சத்ருவாகவும், அவர்கள் ஹாநி பண்ணும் த்ருஷ்ட பாதார்த்தங்கள் தனக்கு ப்ரதிகூலங்களாகவும் நினைத்திருக்கையாலே, தன்னுடைய சத்ரு விஷயமாக வொருவன் பரிபவாதிகளைப் பண்ணுதல் தனக்கு ப்ரதிகூலங்களானவற்றைப் போக்குதல் செய்தா லுகக்குமாப்போலே, அவர்களளவில் பிறக்கும் ப்ரீதி. (உபகார ஸ்ம்ருதியாவது), நம்முடைய தோஷங்களை நாம் மறந்திருக்கும் தசைகளிலே உணர்த்தியும் நமக்கிவ் விருப்பில் நசையறும்படியான செறுப்புக்களைச் செய்தும், இவர்கள் நமக்குப் பண்ணுகிற உபகாரமென்றான்! என்றிருக்கும் க்ருதஜ்ஞதை. (நடக்கவேணும்) என்றது, இவை இத்தனையும் குற்றஞ் செய்தவர் விஷயத்திலே இவனுக்கவச்யமுண்டாய்ப் போர வேணுமென்று தோற்றுகைக்காக.

**விளக்கம் -** (பொறை) அவர்கள் செய்த குற்றத்திற்குப் பதிலாக நாம் மீண்டும் ஒரு குற்றம் செய்தல், அவர்கள் செய்த குற்றத்தை எப்போதும் மனதில் எண்ணியபடி இருத்தல் போன்றவற்றைச் செய்யாமல் இருப்பது என்பதான குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளும் தன்மை. (க்ருபை) – “நாம் இவர்களைப் பொறுத்துக்கொண்டோம் என்றாலும், இவர்களுக்கு ஏற்ற தண்டனையை எம்பெருமான் வழங்கிவிடுவானே! இதற்கு நாம் என்ன செய்வது?”, என்று மற்றவர்களுக்கு ஏற்படவுள்ள துக்கத்தைப் பொறுக்க இயலாமல் உள்ள தன்மை. (சிரிப்பு) – நமக்குக் கிட்டவுள்ள மேல் உலகப் பலன்களைத் தடுக்கும்விதமாக இவர்களால் ஏதும் செய்ய இயலாது; கடுமையான சொற்கள் உரைத்தல் போன்றவை மூலம் இந்த உலகில் நமக்குக் கிட்டவுள்ள இன்பங்களுக்கு விரோதமாக உள்ளவற்றை மட்டுமே இவர்களால் செய்ய இயலும்; இவ்விதம் இங்கு கிட்டவுள்ள இன்பங்களைத் தடுத்தால், இவர்கள் போன்று அந்த இன்பங்கள் கிட்டாத காரணத்தால் நாமும் வருந்துவோம் என்று எண்ணுகிறார்களே! இவர்கள் எத்தனை அறிவற்றவர்கள்? இவர்களுடைய அறிவற்ற நிலை என்னே! என்று எண்ணுவதால் உண்டாகும் சிரிப்பு. (உகப்பு) – அவர்கள் நமக்குச் செய்யும் அவமானம் போன்றவற்றுக்கு இலக்காக உள்ள

சரீரத்தை நமக்குச் சத்ருவாகவும், அவர்கள் தடை ஏற்படுத்துகின்ற இந்த உலக இன்பங்கள் தனக்கு வேண்டாதவையாகவும் எண்ணுவதால் – தனது பகைவனுக்கு வேறு ஒருவன் அவமானம் உண்டாக்குவதாலும், தனக்கு விரோதமாக உள்ளவற்றை ஒருவன் விலக்கினாலும் மகிழ்ச்சி ஏற்படுவது போன்று - அவர்களிடம் நமக்கு உண்டாகும் பிரியம். (உபகார ஸ்ம்ருதி) - நமது குற்றங்களை நாம் மறந்துள்ள காலங்களில் நமக்கு அவற்றை நினைவுபடுத்தி, நாம் அவ்விதம் இருக்கும் தன்மையில் உள்ள ஆசை இல்லாதபடியாக்கப் பல வெறுக்கவல்ல செயல்கள் செய்து வருவதால், "நமக்கு இவர்கள் செய்யும் உபகாரம் என்னே!", என்று எண்ணி செய்ந்நன்றியுடன் இருத்தல். (நடக்கவேணும்) – இவை அனைத்தும் தனக்குக் குற்றம் இழைத்தவர்கள் விஷயத்தில் இவனுக்கு அவசியம் ஏற்பட வேண்டும் என்று உணர்த்தவே "நடக்கவேணும்" என்கிறார்.

**வ்யாக்யானம்** - ஆக இப்ப்ரகரணத்தால், ஹிதோபதேச ஸமயத்தில் விப்ரதிபத்தி விசேஷங்களும், தத்ரஹிதமாக உபதேசிக்க வேணுமென்னுமிடமும் உபதேச ஸாக்ஷாத் பலமும், உபதேஷ்டாவி னாசார்யத்வம் ஸித்திக்கும் வழிகளும், விப்ரதிபத்தியுட னுபதேசிக்கில் உபயர்க்கும் ஸ்வரூப ஸித்தியில்லாமையும், உபதேஷ்டாவான ஆசார்யனுக்கு அவச்யாபேக்ஷித குணத்வயமும், ஸாக்ஷாதாசார்யத்வமின்ன மந்த்ரத்தை உபதேசித்தவனுக் கென்றும் சொல்லுகையாலே, ஸதாசார்ய லக்ஷணத்தையும்; ததநந்தரம் ஸச்சிஷ்ய லக்ஷணத்தையும், ததபயருடைய பரிமாற்றங்களையும் சிஷ்யனுக் காசார்ய விஷயத்தில் "தீமனங் கெடுத்தாய்" இத்யாதிப்படியே யாவச்சரீரபாத முபகார ஸ்ம்ருதி நடக்கவேணுமென்னு மத்தையும், மநஸ்ஸுக்குத் தீமை யின்னதென்னுமிடத்தையும், அதிலுபபாதநீயாம்சத்தி னுபபாதநத்தையும், தத்ப்ரஸங்கத்திலே மற்றுமிவனுக் கபேஷிதமான ஆசார்ய விஷயத்திலுண்டாக வேண்டும் ப்ரதிபத்த் யநுவர்த்தந ப்ரகாரங்களும் சொல்லப்பட்டது.

**விளக்கம்** - ஆக இந்த ப்ரகணத்தில் கூறப்படுவது என்னவென்றால் – ஒருவனுக்கு வேண்டிய நன்மையை உபதேசம் செய்யும்போது தகாத எண்ணங்கள் எவை என்பதும், அப்படிப்பட்ட தகாத எண்ணங்கள் இல்லாமல் உபதேசிக்க வேண்டும் என்பதும், உபதேசத்தின் மூலம் ஏற்படும் நேரடியான பலனும், உபதேசம் செய்பவனுக்கு ஆசார்யனாகும் தன்மைகள் ஏற்படும் விதங்களும், தகாத எண்ணங்களுடன் உபதேசம்

செய்தால் ஆசார்யன் மற்றும் சிஷ்யன் ஆகிய இருவருக்குமே ஸ்வரூப ஸித்தி ஏற்படாது என்பதும், உபதேசம் செய்யும் ஆசார்யனுக்கு இருக்கவேண்டிய அவசியமான இரண்டு குணங்களும், ஆசார்யனாகும் தன்மை என்பது திருமந்திரத்தை உபதேசம் செய்யும் ஒருவனுக்குக் மட்டுமே உள்ளது என்றும் பலவிதமான விஷயங்கள் கூறுவதால், ஆசார்ய லக்ஷணம் விரிவாக அருளிச்செய்யபப்ட்டது. அதனைத் தொடர்ந்து - நல்ல சிஷ்யனின் லக்ஷணத்தையும், ஆசார்யனும் சிஷ்யனும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் எவ்விதம் நடக்கவேண்டும் என்பதையும், சிஷ்யன் ஆசார்யனிடம் திருவாய்மொழி (2-7-8) – தீமனம் கெடுத்தாய் - என்று கூறுவதற்கு ஏற்ப தனது சரீரம் உள்ளவரை நன்றியுடன் இருக்கவேண்டும் என்பதையும், மனதிற்கு உண்டாகவல்ல தீமை இத்தகையது என்பதையும், அந்தத் தீமைகளைக் குறித்து விவரிக்க வேண்டியவற்றை விவரித்தும், அவ்விதம் விளக்கும்போது நல்ல சிஷ்யனுக்கு அவசியமான அர்த்தங்களையும் - கூறுவதால், இதுவரை கூறப்பட்டதான த்வயமந்த்ரத்தில் நிலை நிற்கும் அதிகாரிக்கு அதனை உபதேசிக்கும் ஆசார்யனுடைய விஷயத்தில் ஏற்படவேண்டிய எண்ணங்களும் பின்பற்றவேண்டிய முறைகளும் கூறப்பட்டன.

## ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த
## ஸ்ரீவசனபூஷணத்தில்
## நான்காம் ப்ரகரணமான
## ஸதாசார்ய அநுவர்த்தன க்ரமம்
## ஸம்பூர்ணம்

## பெரியபெருமாள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகள் தஞ்சம் அடைந்த நம் உடையவர் திருவடிகளே சரணம்

உடையவர் திருவடிகள் சரணம் புகுந்த
ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

பிள்ளைலோகாசார்யர் திருவடிகள் சரணம் புகுந்த
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்



ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

( இதற்கு ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யான மூலம், எளிய தமிழ்நடை)

## ஐந்தாம் ப்ரகரணம்

## (பகவந் நிர்ஹேதுக க்ருபா ப்ரபாவம்)

## (சூர்ணைகள் 366 – 406)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

366. ஸ்வதோஷாநுஸந்தாநம் பயஹேது; பகவத் குணாநுஸந்தாநம் அபயஹேது

**அவதாரிகை** - இனி, (ஸ்வதோஷாநுஸந்தாநம் பயஹேது, பகவத் குணாநுஸந்தாநம் அபயஹேது) என்று தொடங்கி, (நிவர்த்யஜ்ஞாநம் பயஹேது, நிவர்த்தகஜ்ஞாந மபயஹேது) என்னுமளவாக, இவ்வதிகாரிக் கநாதிகாலார்ஜித கர்மவிநாச காரணமாய் அத்வேஷம் முதலாக ப்ராப்தி பர்யந்தமாக நடுவுள்ள பேறுகளுக்கெல்லாம் ப்ரதாந ஹேதுவான பகவந்நிர்ஹேதுக க்ருபா வைபவம் சொல்லப்படுகிறது. ஸம்ஸாரிகள் தோஷமும் ஸ்வதோஷமென்று நினைக்கை முதலாக ப்ரஸக்தாநுப்ரஸக்தமாய் வந்த அர்த்த விசேஷங்களை ப்ரதிபாதித்துத் தலைக்கட்டின அநந்தரம், கீழ் (ஸ்வதோஷத்துக்கும்) இத்யாதி வாக்யத்திலே இவனுக்கு அநவரத கர்த்தவ்யமாகச் சொன்ன ஸ்வதோஷ பகவத் பாகவத குணாநுஸந்தாநங்களில் வைத்துக்கொண்டு, பாகவத குணாநுஸந்தாநம் ப்ரதிபாத்யாம்சத்துக் குபயுக்தமல்லாமையாலே அத்தைவிட்டு, அதுக்குபயுக்தமான ஸ்வதோஷ பகவத் குணாநுஸந்தாநங்களை அங்கீகரித்துக்கொண்டு அவை இரண்டுக்கும் ப்ரயோஜநமின்ன தென்கிறார் மேல் (ஸ்வதோஷாநுஸந்தானம்) என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து, “ஸ்வதோஷாநுஸந்தாநம் பயஹேது, பகவத் குணாநுஸந்தாநம் அபயஹேது” என்றுள்ள சூர்ணை-366 தொடங்கி, “நிவர்த்யஜ்ஞாநம் பயஹேது, நிவர்த்தகஜ்ஞாந மபயஹேது” என்பதான சூர்ணை-406 முடிய உள்ள சூர்ணைகளில், இந்த அதிகாரிக்கு எல்லையற்ற காலமாக ஏற்பட்ட கர்மங்கள் அனைத்தும் அழிவதற்குக் காரணமாக உள்ளதும், அத்வேஷம் தொடக்கமாக (அத்வேஷம், ஆபிமுக்யம், ஸாத்வித ஸம்பாஷணம், ஸதாசார்ய ஸமாச்ரயணம், தத்வஜ்ஞானம், பகவத் சரணவரணம்) ப்ராப்தி முடிய உள்ள பல பேறுகளுக்கெல்லாம் முக்கியமான காரணமாக உள்ளதும் ஆகிய “ஸர்வேச்வரன் செய்கின்ற காரணம் இல்லாமல் செய்யும் கருணை” என்பது கூறப்படுகிறது. ஸம்ஸாரிகளுடைய குற்றங்களையும் தனது குற்றமாகவே எண்ணுவது முதலாகத் தொடர்ச்சியாகப் பல விஷயங்களைக் குறித்து அருளிச்செய்தார். அதனை அடுத்து சூர்ணை-358ல் (ஸ்வதோஷத்துக்கும் என்று உள்ளது) தனது குற்றங்களை

எண்ணியபடி இருத்தல், பகவத் பாகவதர்களின் குணங்களை எப்போதும் எண்ணியபடி இருத்தல் என்பதை இவன் அன்றாடம் செய்தபடி இருத்தல்வேண்டும் என்பதை உரைத்தார். இந்த இரண்டில், இப்போது உரைக்கப்பட உள்ள கருத்திற்கு, பாகவதர்களின் குணங்களைக் குறித்து எண்ணியபடி இருத்தல் என்பது அவசியமில்லாதது என்பதால், அதனை நீக்கி, அதற்குப் பயன்படுவதாக உள்ள தனது குற்றங்களை எண்ணுதல், ஸர்வேச்வரனின் குணங்களை எண்ணுதல் என்பதை மட்டுமே எடுத்துக்கொண்டு, அவற்றின் பயன் என்ன என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஸ்வதோஷமாவது) – அநாத்ம குணாதிகளும்; அதுக்கு மூலமாய் அநாதிகாலமே படித்துக் காழ்பேறிக் கிடக்கிற அவித்யாதிகளும்; ஏததநுஸந்தாநம், இது விதுவாக இன்னம் ஸம்ஸரணம் வரில் செய்வதென்! என்னும் பயத்துக்கு ஹேது. (பகவத்குணமாவது), இத்தோஷத்தைப் பார்த்திகழாம லங்கீகரித்து இவற்றைப் பொறுத்து இவ்வாத்மாவைத் திருவடிகளிலே சேர்த்துக் கொள்ளுகைக்குடலான அவனுடைய தயாக்ஷாந்த்யாதிகள்; ஏததநுஸந்தாநம், அநாதிகாலம் ஸம்ஸார ஹேதுவாய்ப் போந்த ஸ்வதோஷ பலத்தைப் பார்த்து இன்னமு மப்படியாகில் செய்வதென் என்கிற பயத்தினுடைய நிவ்ருத்திக்கு ஹேதுவென்கை. “துரந்தஸ்யாநாதே ரபரி ஹரணீ யஸ்ய மஹதோ நிஹீநாசாரோஹம் ந்ருபசு ரசுபஸ் யாஸ்பதமபி, தயா ஸிந்தோ பந்தோ நிரவதிக வாத்ஸல்ய ஜலதே தவஸ்மாரம் ஸ்மாரம் குணகணமிதீச்சாமி கதாபீ:” என்னக்கடவதிறே.

**விளக்கம்** - (ஸ்வதோஷமாவது) - ஆத்மகுணங்களுக்கு மாறுபட்டதாக உள்ள குணங்களும், அவற்றுக்கு மூலகாரணமாக எல்லையற்ற காலமாக உள்ள அறியாமை முதலானவைகளும் ஆகியவற்றை எண்ணுவது என்பது, இதன் காரணமாக அடுத்த பிறவி ஏற்பட்டால் என்ன செய்வது என்பதான அச்சத்திற்குக் காரணம் ஆகிறது. (பகவத்குணமாவது) - இப்படிப்பட்ட குற்றங்களைக் கண்ட பின்னரும் இகழாமல் ஏற்றுக்கொண்டு, அவற்றைப் பொறுத்துக்கொண்டு, தனது திருவடிகளில் சேர்த்துக் கொள்ளுதல் என்பது அவனுடைய தயை, க்ஷமை போன்றவற்றால் ஆகும்; இவற்றை எப்போதும் எண்ணுதல் என்பது எல்லையற்ற காலமாகப் பிறந்தபடி உள்ளதற்குக் காரணமாக உள்ள தனது குற்றத்தின் வலிமையை ஆராய்ந்து, “இனி வரும் காலங்களிலும் இப்படியே இருந்தால் என்ன ஆகும்?”, என்றுள்ள அச்சம் நீங்குவதற்குக் காரணம் ஆகும். ஸ்தோத்ரரத்னத்தில் (48) – துரந்தஸ்யாநாதே ரபரி ஹரணீ யஸ்ய மஹதோ

நிஹீநாசாரோஹம் ந்ருபசு ரசுபஸ் யாஸ்பதமபி, தயா ஸிந்தோ பந்தோ நிரவதிக வாத்ஸல்ய ஜலதே தவஸ்மாரம் ஸ்மாரம் குணகணமிதீச்சாமி கதாபீ: – கருணைக்கடலாக உள்ளவனே! எனது பந்துவே! எல்லையற்ற வாத்ஸல்யம் என்ற குணத்திற்குக் கடல் போன்றுள்ளவனே! நான் முடிவில்லாததும், தொடக்கம் இல்லாததும், கடக்க இயலாததும் ஆகிய மிகப்பெரும் பல பாவங்களுக்கு இருப்பிடமாக உள்ளேன்; ஆனாலும் உனது குணங்கள் குறித்து எப்போதும் சிந்தித்தபடி உள்ளதால், எனது அச்சம் நீங்கப்பெற்று, மோக்ஷத்தை விரும்புகிறேன் - என்றது காண்க.

367. பயாபயங்களிரண்டும் மாறாடில் அஜ்ஞாதையே ஸித்திக்கும்.

**அவதாரிகை** - இப்படி இவ்விடத்திலே பயாபயஹேதுக்களான ஸகலதோஷ ஸகல குணங்களையும் சேரச் சொல்லியிருக்கச் செய்தே, (இழவுக்கடி கர்மம், பேற்றுக்கடி க்ருபை) என்றும், (கர்ம பலம்போலே க்ருபாபலமு மநுபவித்தேயறவேணும்) என்றும், கர்மத்தையும் க்ருபையையும் இழவுபேறுகளுக்கு ஹேதுவாகச் சொல்லிக் கொண்டு போய், (பயஹேது கர்மம், அபயஹேது காருண்யம்) என்று நிகமித்தது இவையெல்லாவற்றிலு மிவனுக்கு ஸம்ஸார மோக்ஷங்களுக்கு ப்ரதாந ஹேதுக்களவையாகையாலே; இவை இரண்டையும் பின்செல்லும் மற்றுள்ளவையும் இவை புக்கவிடத்தே தானே வந்து விடுமிறே. இங்ஙனன்றிக்கே, அவன்படியை நினைத்து பயமும், தன் படியை நினைத்து அபயமுமாமளவில் அறிவிலித்தனமே பலிக்குமென்கிறார் (பயாபயங்களிரண்டும்) என்று தொடங்கி.

**விளக்கம் -** இங்கு இவ்விதம் அச்சம் உண்டாவதற்குக் காரணமாக உள்ள குற்றங்களையும் அச்சம் ஏற்படாமல் உள்ளதற்குக் காரணமாக உள்ள குணங்களையும் ஒன்றாக உரைத்தார். ஆனால் சூர்ணை-374ல் “இழவுக்கடி கர்மம், பேற்றுக்கடி க்ருபை” என்றும், சூர்ணை-402ல் “கர்ம பலம்போலே க்ருபாபலமு மநுபவித்தே யறவேணும்” என்றும் கர்மத்தை மட்டும் இழப்பதற்குக் காரணமாகவும், கருணையை மட்டும் பெறுவதற்குக் காரணமாகவும் கூறிக்கொண்டார்; தொடர்ந்து சூர்ணை-404ல் “பயஹேது கர்மம், அபயஹேது காருண்யம்” என்று முடித்தது ஏன்? இவை அனைத்திற்குள்ளும், இவனுடைய பிறப்பு மற்றும் மோக்ஷம் ஆகியவற்றுக்கு முக்கியமான காரணங்களாக இவை உள்ளதால் ஆகும். இவை இரண்டும் எங்கு உள்ளதோ அந்த இடத்தில் மற்ற காரணங்கள்

தாங்களாகவே பின்தொடர்ந்து வந்துவிடும். அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம் - ஸர்வேச்வரனுடைய தன்மையை எண்ணி பயம் கொள்ளுதல், தனது தன்மையை எண்ணி பயம் கொள்ளாமல் இருத்தலும் அறிவற்ற தன்மையையே ஏற்படுத்தும் என்று இந்தச் சூர்ணையில் உரைப்பதாகவும் கொள்ளலாம்.

**வ்யாக்யானம்** – அதாவது, கீழ்ச்சொன்னபடியன்றிக்கே, அநாதிகாலம் தனக்குப் பரதந்த்ரமான ஆத்மவஸ்துவை கர்மவ்யாஜத்தாலே ஸம்ஸரிப்பித்துப் போந்தவனன்றோ! நிரங்குச ஸ்வதந்த்ரனானவவ னின்னமும் ஸம்ஸரிப்பிக்கில் செய்வதென்; என்று அவன்படியை நினைத்து பயப்படுகையும், முன்பு போலன்றிக்கே நமக்கிப்போ தாத்ம குணங்களுண்டாகையால் பேற்றில் கண்ணழிவில்லையென்று தன்படியை நினைத்து பயங்கெடுகையுமாமளவில்; தான் தனக்கு நாசகன் என்று பயப்படுகையும், ஈச்வரனே ரக்ஷகனென்று பயங்கெடுகையுமாகிற ஜ்ஞாத்ருத்வ வேஷமில்லாமையாலே அஜ்ஞதையே ஸித்தித்துவிடுமென்கை.

**விளக்கம்** - அல்லது மேலே கூறப்பட்டபடி அல்லாமல், “எல்லையற்ற காலமாகத் தனக்கு அடிமைப்பட்ட இந்த ஆத்மாவை, கர்மம் என்பதைக் காரணமாகக் காண்பித்து, ஸம்ஸாரத்தில் உழலும்படிச் செய்பவன் ஸர்வேச்வரன் அல்லவோ? எல்லையற்ற ஸ்வதந்த்ரம் கொண்டவனாகிய அவன் மேலும் பலகாலம் நம்மை ஸம்ஸாரத்தில் மூழ்க வைத்தால் என்ன செய்வது என்று அவனுடைய தன்மையைக் குறித்து எண்ணி பயம் கொள்ளுதல்; “முன்பு போன்று அல்லாமல் நமக்கு இப்போது ஆத்மகுணங்கள் இருக்கின்ற காரணத்தால் மோக்ஷம் கிட்டுவது உறுதியே” என்று தனது நிலையை எண்ணிக் கொண்டு பயம் கொள்ளாமல் இருத்தல். இந்த இரண்டின் மூலம் ஏற்படுவது என்ன? தானே தன்னை நாசம் செய்து கொள்பவன் என்று எண்ணி அச்சம் கொள்ளுதல்; ஸர்வேச்வரன் நம்மைக் காப்பாற்றுபவன் என்று எண்ணி அச்சம் இல்லாமல் இருத்தல் ஆகிய இரண்டும் இவனுக்கு ஏற்படுகின்ற அறிவின்மை காரணமாக உண்டாவதில்லை; ஆக அறியாமையே ஏற்படுகிறது என்று கருத்து.

368. ஆனால் “நலிவானின்ன மெண்ணுகின்றாய்”, “ஆற்றங்கரை வாழ்மரம் போலஞ்சுகின்றேன்” என்கிற பாசுரங்களுக்கு அடியேன்னென்னில்.

**அவதாரிகை** – “அஜ்ஞதையே ஸித்திக்கும்” என்றவித்தைத் தள்ளுகைக்காக, ஆழ்வார்கள் பாசுரங்களைக் கொண்டு ப்ரத்யவஸ்தாநம் பண்ணினவர்கள் சங்கையை யநுவதிக்கிறார் “ஆனால்” என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்டதான “அறியாமையே ஏற்படுகிறது” என்பதைத் தள்ளும்விதமாக, ஆழ்வார்கள் பாசுரங்களை மனதில் சிந்தித்தபடி, ஒரு சிலர் கடந்த சூர்ணையில் கூறப்பட்ட விஷயத்திலிருந்து மாறுபட்டு நிற்கக்கூடும். அவர்கள் எழுப்பும் கேள்வியை உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்படியாகில் தத்த்வவித க்ரேஸரரான ஆழ்வார்கள், “உண்ணிலாவிய வைவரால் குமைதீற்றி என்னையுன் பாதபங்கயம், நண்ணிலா வகையே நலிவானின்ன மெண்ணுகின்றாய்” என்றும், “காட்டிப் படுப்பாயோ” என்கிறபடியே விஷயங்களைக் காணில் முடியும்படியான வென்னை, உள்ளே நிரந்தரவாஸம் பண்ணுகையாலே ஆந்தரசத்ருக்களாயிருக்கிற இந்த்ரியங்க ளைந்தாலும் நலிவுண்ணும்படி பண்ணி ப்ராப்தமுமாய் போக்யமுமான உன் திருவடிகளைக் கிட்டாதபடியாகவே, சரணாகதனான பின்பும் ஸம்ஸாரத்திலே வைத்து நலிய வெண்ணா நின்றாயென்றும்; “மக்கள் தோற்றக் குழி தோற்றுவிப்பாய் கொலென்றின்ன மாற்றங்கரை வாழ்மரம் போலஞ்சுகின்றேன்” என்று – மநுஷ்யர்களுடைய கர்ப்பஸ்தாநத்திலே என்னுடைய கர்மாநுகுணமாக வின்னம் ஸம்ஸரிப்பிக்கிறாயோவென்றும்; இப்போதிப்போது போய்த்து என்னும்படி பயஸ்தாநமான ஆற்றங்கரையிலே வர்த்திக்கிற மரம்போலே உன் ஸ்வாதந்த்ர்யத்தை நினைத் தஞ்சாநின்றேன் என்றும் அருளிச்செய்த பாசுரங்களுக்கு நிதாநமென்னென்னி லென்கை.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்டது போன்று வைத்துக்கொண்டால் உண்மையை அறிந்தவர்களில் முதலில் நிற்பவர்களான ஆழ்வார்கள், கீழே உள்ள பாசுரங்களை ஏன் அருளிச்செய்தார்கள் என்ற கேள்வி எழக்கூடும்.

திருவாய்மொழி (7-1-1) - உண்ணிலாவிய வைவரால் குமைதீற்றி என்னையுன் பாதபங்கயம், நண்ணிலா வகையே நலிவானின்ன மெண்ணுகின்றாய் - என்றும், திருவாய்மொழி (6-9-9) - காட்டிப் படுப்பாயோ – என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனாகிய உன்னைத் தவிர மற்ற விஷயங்களில் ஈடுபட்டு, அவற்றைக் கண்டவுடனேயே அழியும்படியாக நான் உள்ளேன்; இப்படிப்பட்ட என்னை, என்னுடைய சரீரத்தின் உள்ளேயே எப்போதும் நிரந்தரமாக வசித்து வருவதான சத்ருக்கள் போன்றுள்ள இந்த்ரியங்கள் மூலம் என்னைத் துன்புறுத்துகிறாய்; மேலும், எனது ஸ்வரூபத்துக்கு ஏற்றதும், இன்பம் அடைவிக்கக் கூடியதும், அடையவேண்டிய இலக்காக உள்ளதும் ஆகிய உனது திருவடிகளை அடைய இயலாமல் வைத்து, நான் உன்னைச் சரணம் என்று புகுந்த பின்னரும் என்னை ஸம்ஸாரத்தில் சிக்கித் தவிக்க வைக்கிறாய் - என்றும்;

பெரியதிருமொழி (11-8-1) – மக்கள் தோற்றக் குழி தோற்றுவிப்பாய் கொலென்றின்ன மாற்றங்கரை வாழ்மரம் போலஞ்சுகின்றேன் – மனிதர்களின் கர்ப்பஸ்தானத்தில் எனது கர்மத்திற்கு ஏற்றபடி இன்னமும் என்னை இந்த ஸம்ஸாரத்தில் உழலவைப்பாயோ – என்றும்; "இப்போது அழியுமோ, இப்போது அழியுமோ" என்று எப்போதும் அச்சத்துடன் காணப்படும் ஆற்றங்கரையில் உள்ள மரம் போன்று உன்னுடைய சுதத்திரம் காரணமாக நீ என்னை எப்போது என்ன செய்வாயோ என்று எண்ணி எப்போதும் அச்சப்படுகிறேன் - என்றும் கூறியது காண்க.

369. பந்தாநுஸந்தாநம்.

**அவதாரிகை** - அதுக்குத்தரம் அருளிச்செய்கிறார் (பந்தாநுஸந்தாநம்) என்று.

**விளக்கம்** – மேலே எழுப்பப்பட்ட கேள்விக்கு இப்போது பதில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பேறிழவுகளிரண்டு மவனாலே யென்னலாம்படி நிரூபாதிக ரக்ஷகனானவனோடு தங்களுக்குண்டான ஸம்பந்தத்தினுடைய அநுஸந்தாநமென்கை.

**விளக்கம்** - ஸர்வேச்வரனை நாம் அடைவதும் இழப்பதும் அவனாலேயே ஏற்படுகிறது. இது போன்று எந்தவிதமான காரணமும் இல்லாமல் காப்பாற்றுபவனாகிய அவனுடன் தமக்கு உள்ள ஸம்பந்தத்தை எண்ணுவதால் ஆழ்வார்கள் இவ்விதம் உரைக்கிறார்கள் என்று கருத்து.

370. ப்ரஜை தெருவிலே யிடறித் தாய் முதுகிலே குத்துமாபோலே, நிருபாதிக பந்துவாய் சக்தனாயிருக்கிறவன் விலக்காதொழிந்தல் அப்படிச் சொல்லலாமிறே.

**அவதாரிகை** - பந்தாநுஸந்தாநத்தாலே இப்படி தன்னால் வருமவற்றை அவன் குறையாகச் சொல்லலாமோ வென்ன; ஆமென்னு மிடத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் (ப்ரஜை) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஆழ்வார்கள் மேலே கூறிய கருத்துக்கள் அவர்களுடைய கர்மம் காரணமாக உண்டாகக் கூடியவை ஆகும். இப்படி உள்ளபோது, அவனுடைய ஸம்பந்தம் குறித்து எண்ணுவதன் காரணமாக ஏற்படுகின்றன என்று அவன் மீது தோஷம் கற்பிப்பது சரியோ என்று கேள்வி எழலாம். இதற்கு “ஆம்” என்று பதில் அளித்து, தக்க உதாரணமும் காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, க்ரீடார்த்தமாகத் தெருவிலே ஓடித் திரிகிற ப்ரஜை, அங்கே இடறிக் கால் நொந்தவாறே அழுது கொண்டு அகத்திலே வந்து தனக்கிவ் வேதனை வந்தது தாயாலேயாக நினைத்து, அவள் முதுகிலே குத்துமாபோலே, ஒருபாதி ப்ரயுக்தமல்லாமையாலே ஒழிக்க ஒழியாத பந்தத்தையுடையவனுமாய், இச்சேதநனுடைய கர்மத்தோடு ப்ரக்ருதி ப்ராக்ருதங்களோடு வாசியற ஸர்வமும் ஸ்வாதீநமாகையாலே கர்மாநுகுணமாக ப்ரக்ருதி ப்ராக்ருதங்களாலே யிவன் படுகிற நலிவைத் தவிர்க்கைக்கு சக்தனுமா யிருக்கிறவன், நலிவு படவிட்டு விலக்காதொழிந்தால், அவனிவற்றையிட்டு நலிவிக்கிறா னென்னலாமிறே யென்கை.

**விளக்கம்** - விளையாடுவதற்காகத் தெருவில் ஓடித் திரியும் ஒரு சிறிய குழந்தை, கால் தடுக்கிக் கீழே விழுகிறது என்று வைப்போம். அப்போது கால் வேதனை காரணமாக வீட்டிற்கு வரும்; அங்கிருந்த தனது தாய் மூலமே அந்த வேதனை ஏற்பட்டதாக எண்ணி,

அவளுடைய முதுகில் அடிக்கும். இது போன்று – எந்தவிதமான காரணமும் இல்லாமல் வந்த உறவுமுறை என்பதால் தள்ளிவிட இயலாத உறவுமுறை உள்ளவனும், ஜீவனுடைய கர்மம், சரீரம் மற்றும் அதன் அவயவங்கள் ஆகிய அனைத்தையும் எந்தவிதமான வேறுபாடும் இல்லாமல் தனக்கு உடைமையாக உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரன், ஜீவன் அடையும் துன்பங்களை விலக்காமல் இருந்தால், அந்தத் துன்பங்கள் மூலமாக ஸர்வேச்வரனே ஜீவனை வருத்துகிறான் என்று கூறலாம் அல்லவா?

371. ப்ரஜையைக் கிணற்றின் கரையினின்றும் வாங்கதொழிந்ததால் தாயே தள்ளினா ளென்னக் கடவதிறே.

**அவதாரிகை** – விலக்காத மாத்ரங்கொண்டு அவனே செய்தா னென்னலாமோவென்ன அருளிச்செய்கிறார் (ப்ரஜையை) என்று தொடங்கி.

**விளக்கம்** - அவன் அந்தத் துன்பங்களை விலக்கவில்லை என்பதற்காக, அவனே அவற்றை ஏற்படுத்தினான் என்று கூறலாமோ என்பதான கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கிணற்றின் கரையிலே ப்ரஜையிருக்கிறபடியைக் கண்ட மாதாவனவள் அப்போதே யோடிச்சென்று கிணற்றின் கரைநின்றும் வாங்காதொழிந்தால், அக்கிணற்றிலே ப்ரஜை விழுந்தவளவில், “தாயப்போதே சென்றெடுத்தாளாகில் ப்ரஜை விழுமோ, கிணற்றின் கரையிலிருப்பை யிவளநுமதி பண்ணியிருக்கையாலே யன்றோ விழுந்தது, ஆனபின்பிவளன்றோ தள்ளினாள்” என்று லோகஞ் சொல்லக்கடவதிறே யென்கை.

**விளக்கம்** - ஒரு கிணற்றின் அருகில் நிற்கும் சிறிய குழந்தையை அதன் தாய் ஓடிச்சென்று எடுக்கவில்லை என்று வைத்துக்கொள்வோம். அந்தக் குழந்தை ஒரு நொடியில் கிணற்றில் விழுந்துவிட்டால், “தாய் ஓடிச்சென்று எடுத்திருந்தால், அந்தக் குழந்தை கிணற்றில் விழுந்திருக்குமோ? கிணற்றின் அருகில் போவதற்குத் தாய் அனுமதி கொடுத்த காரணாத்தால் அல்லவோ, குழந்தை கிணற்றில் விழுந்தது? ஆகவே அது தானாகவே விழவில்லை, தாய் தள்ளிவிட்டதாகவே ஆகும்” என்று லோகத்தில் கூறுவர். அது போன்றே இங்கும் கொள்ளவேண்டும்.

372. இவனுடைய அநுமதி பேற்றுக்கு ஹேது வல்லாதாப்போலே அவனுடைய அநுமதியும் இழவுக்கு ஹேதுவன்று.

**அவதாரிகை** – ஆனால், "அப்ரதிஷித்தமநுமதம்" என்கிற ந்யாயத்தாலே, விலக்காமை யாவது அநுமதியாய்த்த பின்பு, அவனநுமதியோ பின்னே இவனிழவுக்கு ஹேதுவென்ன அருளிச்செய்கிறார் மேல் (இவனுடைய) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் கொண்டால், அப்ரதிஷித்தமநுமதம் - தடுக்காமல் இருப்பது அனுமதி அளிப்பது போன்றதே ஆகும் - என்ற நியாயத்தின்படி, விலக்காமல் உள்ளது என்பது அனுமதி என்றாகிறது; அப்படி என்றால், ஜீவன் துன்பம் அடைதல் என்பது ஸர்வேச்வரனின் அனுமதி காரணமாகவோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ரக்ஷ்யபூதனான இவனுடைய ரக்ஷ்யத்வாநுமதி அசித் வயாவ்ருத்தி வேஷமாகையாலே பகவல்லாபத்துக்கு ஹேதுவல்லாதவோபாதி, ரக்ஷகனான அவனுடைய ஸம்ஸாராநுமதியும் ஸ்வாஜ்ஞாரூப சாஸ்த்ர மர்யாதை ஜீவிக்கைக்காக க்ரமேணாங்கீகரிக்கிறோ மென்று இவன் ருசி பார்த்திருக்கிற விருப்பாகையாலே ததலாபத்துக்கு ஹேதுவன்றென்கை.

**விளக்கம்** - காப்பாற்றப்படுபவனாக உள்ள ஜீவனைக் காப்பாற்ற ஸர்வேச்வரன் ஒப்புக் கொள்ளுதல் என்பது - ஜீவனானவன் அறிவுள்ளவன் அல்லது அசேதனங்களைக் காட்டிலும் வேறுபட்டவன் என்னும் தன்மையால் ஏற்பட்டதாகும்; ஆக அந்தத் தன்மை ஸர்வேச்வரனை அடைவதற்கு முக்கியமான காரணம் ஆகாது. அதே போன்று காக்கும் தன்மை கொண்ட ஸர்வேச்வரன், ஜீவனை ஸம்ஸாரத்தில் நீடிக்க அனுமதித்திருப்பது என்பது - தன்னுடைய ஆணைகளாக உள்ள சாஸ்த்ரங்களின் மரியாதையானது நீடித்து நிற்பதற்காகவே ஆகும்; "சரியான காலம் வரும்போது இவனை நாம் நம்மிடம் சேர்த்துக் கொள்வோம்" என்று இவனுக்குத் தன்னிடம் உள்ள விருப்பத்தை எதிர்பார்த்தபடி உள்ளதால், ஜீவன் ஸர்வேச்வரனை அடையாமல் உள்ளதற்குக் காரணமாகாது.

373. இரண்டு மிருவர்க்கும் ஸ்வரூபம்

**அவதாரிகை** - இவ்வநுமதி த்வயமும் பின்னை யேதாவதென்ன அருளிச்செய்கிறார் (இரண்டும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதமாக ஈச்வரன் அனுமதிப்பதும், ஜீவன் அனுமதியைக் காண்பிப்பதும் எந்த காரணத்திற்காக என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – (இருவர்க்கும் ஸ்வரூபம்) என்றது, பரதந்த்ரராயும் ஸ்வதந்த்ரராயு மிருக்கிற இருவர்க்கும் ஸ்வாஸாதாரண காரமென்றபடி. அதாவது, பரதந்த்ரனான இவனுக்கு ஸ்வரக்ஷ்யத்வாநுமதி ஸ்வரூபாதிரேகியல்லாமையாலே ஸ்வரூபம்; ஸ்வதந்த்ரனான அவனுக்கு ஸ்வரக்ஷ்யவஸ்து ரக்ஷணத்தில் ஸ்வாஜ்ஞாரூப சாஸ்த்ராநுகுண நிர்வஹணார்த்தமான ஸம்ஸாராநுமதி ஸ்வாதந்த்ர்ய வேஷமாகையாலே ஸ்வரூபமென்கை.

**விளக்கம்** - (இருவர்க்கும் ஸ்வரூபம்) - மற்றவர்களுக்கு எப்போதும் அடிமைப்பட்டிருத்தலும், எப்போதும் ஸ்வதந்த்ரமாக இருந்தலும் என்றுள்ள தன்மைகள் ஜீவனுக்கும் ஸர்வேச்வரனுக்கும் முறையே எப்போதும் உள்ளன என்று கருத்து. அதாவது மற்றவர்களுக்கு அடிமைப்பட்டிருக்கும் ஜீவன், தன்னைக் காப்பாற்ற ஸர்வேச்வரனுக்கு அனுமதி அளிப்பது என்பது ஜீவஸ்வரூபத்துடன் முரண்பாடு இல்லாமல் உள்ளதால், இது ஜீவனின் ஸ்வரூபம் ஆகிறது. ஸ்வதந்த்ரனாக உள்ள ஸர்வேச்வரன், தன்னால் காப்பாற்றப்படவேண்டிய ஜீவனை ரக்ஷிப்பது என்பது, தனது ஆணையாகவே உள்ள சாஸ்த்ரங்களைப் பின்பற்றி ஸம்ஸாரத்தில் ஜீவன் வாழ்ந்து வருதல் என்பதற்கான அனுமதியாகையால், அது ஈச்வரனின் ஸ்வரூபம் ஆகிறது.

374. இழவுக்கடி கர்மம்; பேற்றுக்கடி க்ருபை.

**அவதாரிகை** - ஆனால் இழவு பேறுகளுக்கடி யெவையென்ன அருளிச்செய்கிறார் (இழவுக்கடி) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் கொண்டால் ஜீவாத்மா ஸர்வேச்வரனை அடைவதற்கும், அடையாமல் போவதற்கும் என்ன காரணம் என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது பகவத்விஷயத்தை அநாதிகால மிழக்கைக்கு ஹேது, "முன் செய்த முழுவினை" என்னும்படி அநாதிகால ஸஞ்சிதமான இவனுடைய கர்மம்; இப்படி இழந்து கிடக்கிறவிவ னவ்விஷயத்தைப் பொறுகைக்கு ஹேது, "விதிவாய்க்கின்று காப்பாரார்" என்னும்படி இருகரையுமழியப் பெருகும் பகவத் க்ருபை யென்கை.

**விளக்கம்** - ஸர்வேச்வரனை எல்லையற்ற காலமாக ஜீவன் இழந்து நிற்பதற்குத் திருவாய்மொழி (1-4-2) - முன் செய்த முழுவினை - என்று கூறுவதற்கு ஏற்ப, பல காலமாகச் சேர்ந்து கிடக்கின்ற ஜீவனின் கர்மங்களே ஆகும். இப்படியாக இழந்து நிற்கும் ஜீவன், ஒருநாள் ஸர்வேச்வரனை அடைவதற்கான காரணம், திருவாய்மொழி (5-1-1) - விதிவாய்க்கின்று காப்பாரார் - என்பதற்கு ஏற்ப இரண்டு கரைகளும் (ஜீவனின் பாவம் என்ற கரை, சாஸ்த்ரங்கள் என்ற கரை) அழிந்து போகும்படியாகப் பெருகும் ஸர்வேச்வரனின் கருணையே ஆகும்.

375. மற்றைப்படி சொல்லில் இழவுக்குறுப்பாம்.

**அவதாரிகை** - இங்ஙனன்றிக்கே மாறிச் சொல்லுமளவில் வருமநர்த்தத்தை அருளிச்செய்கிறார் மேல் (மற்றைப்படி சொல்லில்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதம் பொருள் கொள்ளாமல், மாற்றி பொருள் உரைத்தால் உண்டாகவல்ல தீமையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்படியன்றிக்கே, (பயாபயங்களிரண்டும் மாறாடில்) என்கிற விடத்திற்போலே, "இழவுக்கடி ஈச்வர ஸ்வாதந்த்ர்யம், பேற்றுக்கடி சேதந ஸத்குணம்" என்று இழவுபேறுகளுக்கு ஹேதுவை மாற்றிச் சொல்லில் ஈச்வரன் கைவாங்குகையாலே அவன் திருவடிகளைப் பெறாம லிழந்து போகைக் குடலாமென்கை. அதவா, (மற்றைப்படி) இத்யாதிக்கு, "இழவுக்கடி சேதந கர்மம், பேற்றுக்கடி ஈச்வர க்ருபை" என்று இழ விவனாலும் பேறவனாலுமாகச் சொன்னபடி யன்றிக்கே, இழவு பேறுக ளிரண்டுக்குமடி

யீச்வர ஸ்வாதந்த்ர்யமென்று அநாதிகால மிழந்ததுக்குமடி அவனாகச் சொல்லில் அவன் கைவாங்குகையாலே. ஒருகாலமு மவனைப் பெறாம லிழந்து போகைக் குடலாய்விடு மென்னவுமாம்.

**விளக்கம் -** இவ்விதம் அல்லாமல் சூர்ணை (367) – பயாபயங்களிரண்டும் மாறாடில் – என்றதில் கூறப்பட்டது போன்று, ஜீவன் ஸர்வேச்வரனைப் பெறாமல் இருப்பதற்கு ஸர்வேச்வரனின் ஸ்வாதந்த்ர்யமே காரணம், ஜீவன் ஸர்வேச்வரனைப் பெறுவதற்கு ஜீவனிடம் உள்ள நல்ல குணங்களே காரணம் என்று ஜீவன் இழப்பதற்கும் பெறுவதற்குமான காரணங்களை மாற்றிச் சொல்லக்கூடும். இவ்விதம் உரைத்தால் – ஸர்வேச்வரன் ஜீவனைப் பெறுவதற்கான முயற்சி ஏதும் செய்யாமல் உள்ளான் என்றாகி விடும்; அதுவே அவனுடைய திருவடிகளை ஜீவன் பெறாமல் இருப்பதற்கான காரணம் என்றாகிவிடும். அல்லது இந்தச் சூர்ணைக்கு வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். ஜீவன் ஸர்வேச்வரனை இழப்பதற்கும் அடைவதற்கும் காரணம், ஸர்வேச்வரனுடைய ஸ்வாதந்த்ர்யமே ஆகும் என்று உரைத்தால், ஸர்வேச்வரன் இவனை ஏற்றுக்கொள்ளாமல் பின் வாங்குவதால், எந்த ஒருநாளிலும் அவனை அடைய இயலாமல் போவதற்கு இதுவே காரணமாகிவிடும் என்றும் கொள்க.

376. எடுக்க நினைக்கிறவனைத் தள்ளினாயென்கை எடாமைக்குறுப்பிறே.

**அவதாரிகை -** இப்படி சொல்லுமளவில் ஈச்வரன் கைவாங்கு மென்னுமத்தை, லௌகிக ந்யாயத்தை யுபஜீவித்துக்கொண்டு தர்சிப்பிக்கிறார் (எடுக்க நினைக்கிறவனை) என்று தொடங்கி.

**விளக்கம் -** இவ்விதம் கூறும்போது, ஸர்வேச்வரன் ஜீவனைப் பெற முயற்சிக்காமல், அவனைக் கைவிடுவது என்பதை உலகத்தில் உள்ள ந்யாயங்கள் கூறி விளக்குகிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது ஆழ்ந்த கிணற்றில் தன் கர்மாநுகுணமாக அநவதாநத்தாலே விழுந்தவனை அருகினின்றா னொரு க்ருபாவானானவ னெடுப்பதாக யத்நிக்கிற வளவிலே, தான் விழுகிறபோது அவனாஸந்நனென்கிற மாத்ரத்தைக் கொண்டு அவன் தன்னைத் தள்ளினானாக நினைத்து, “இக்கிணற்றிலே யென்னைத் தள்ளினாயும்

நீயன்றோ என்றால், “நான் செய்யாத காரியத்தை இவன் சொல்லுவதே!” என்று சீற்றமெழுந்திருந்து எடாமல் கைவாங்குகைக் குறுப்பாமாப்போலே, ஸ்வகர்மத்தாலே ஸம்ஸாரமாகிற படுகுழியிலே விழுந்து கிடக்கிற தன்னை யெடுக்க நினைக்கிற க்ருபாவானான வீச்வரனை, “இத்தனை காலமுமென்னை ஸம்ஸாரத்திலே தள்ளிவிட்டு வைத்தாயும் நீயே” என்றால், சீறிக் கைவாங்கி, பட்டது படுகிறான் என்றிருந்து விடுகைக் குறுப்பாமிறே யென்கை.

**விளக்கம்** - ஆழமாக உள்ள ஒரு கிணற்றில் ஒருவன் தனது கர்மம் காரணமாக, கவனம் தவறி விழுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனை அருகில் நிற்கும் கருணை உள்ளம் கொண்ட ஒருவன் எடுக்க முயல்கிறான் என்றும் வைப்போம். அப்போது, தான் அந்தக் கிணற்றில் விழுந்தபோது தனது அருகில் அந்தக் கருணை உள்ளவன் நின்றதையே காரணமாக எண்ணி, அவனே தன்னைத் தள்ளிவிட்டவன் என்று கருதி, “இந்தக் கிணற்றில் நீ அல்லவோ என்னைத் தள்ளிவிட்டாய்?”, என்று கேட்கிறான் என வைப்போம். அப்போது அந்தக் கருணை உள்ளவன், “நான் செய்யாத ஒரு செயலை, நான் செய்ததாக இவன் உரைக்கிறானே” என்று கோபம் கொண்டு, அவனைக் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்யாமல் இருந்துவிடுவான் அல்லவோ? அதே போன்று, தனது கர்மம காரணமாக ஸம்ஸாரம் என்ற படுகுழியிலே விழுந்து கிடக்கும் ஜீவனாகிய தன்னை மேலே தூக்கி விட ஓடி வரும் கருணைக்கடலான ஸர்வேச்வரனிடம், “இத்தனை காலம் என்னை இந்த ஸம்ஸாரத்தில் தள்ளிவிட்டவன் நீயே அல்லவோ?”, என்று கூறினால், ஸர்வேச்வரன் கோபத்துடன் அவனைக் கைவிடுகிறான். “இவன் எப்படியோ போகிறான், கர்மத்திற்கு ஏற்பத் துன்பப்படுகிறான்” என்று ஸர்வேச்வரன் இருப்பதற்கு ஜீவனின் இந்தச் சிந்தனையே காரணமாகிறது என்று கருத்து.

377. சீற்றமுளவென்ற வநந்தரத்திலே யிவ்வர்த்தத்தைத்தாமே அருளிச்செய்தாரிறே.

**அவதாரிகை** – இப்படி சொல்லுகை ஈச்வரனுக்குச் சீற்றத்துக் குடலென்னுமிது லௌகிக ந்யாயத்தைக் கொண்டு சொல்லவேணுமோ, தத்வ தர்சிகளான திருமங்கையாழ்வார் பூர்வோக்திக் கநந்தரத்திலே தாமே அருளிச்செய்தாரிறே யென்கிறார் (சீற்றமுள) என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறியது போன்று உரைப்பதே ஸர்வேச்வரன் கோபம் கொள்வதற்கான காரணம் என்பதை, உலகில் பொதுவாக காணப்படும் நியாயங்கள் மூலம் உரைக்கவேண்டுமோ? உண்மையாக உள்ளவற்றை அறிந்தவர்களான திருமங்கையாழ்வார் முன்னர் உரைத்த பாசுரத்திற்கு அடுத்தபடியாகத் தானே அருளிச்செய்தார் என்று இந்த சூர்ணையில் உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "இன்னம், மக்கள் தோற்றக்குழி தோற்றுவிப்பாய்கொல்" என்று ஈச்வரன் தன் ஸ்வாதந்த்ர்யத்தாலே ஸம்ஸரிப்பிக்கிறானாகச் சொன்னவிது, கர்மாநுகுணமாக ஸம்ஸரிக்கிற ஆத்மாவை ஸம்ஸாரத்தினின்று மெடுக்கைக்கு க்ருஷி பண்ணிப் போருமவன் திருவுள்ளம் சீறுகைக் குடலென்று நினைத்து, கீழ் விண்ணப்பஞ் செய்த வார்த்தையாலே திருவுள்ளத்துக்குச் சீற்றமுண்டென்ற முதல் வார்த்தைக் கநந்தரத்திலே, இழவுக்கடி யவனாகச் சொல்லுகை நிக்ரஹ ஜநகமென்னு மிவ்வர்த்ததை முன்பப்படி அருளிச்செய்த தாமே அருளிச்செய்தாரிறே யென்கை.

**விளக்கம்** - பெரியதிருமொழி (11-8-1) - இன்னம் ஆற்றங்கரைவாழ் மரம் போல் அஞ்சுகின்றேன் – என்று அருளிச்செய்ததைத் தொடர்ந்து, பெரியதிருமொழி (11-8-2) – மக்கள் தோற்றக்குழி தோற்றுவிப்பாய்கொல் – என்று அருளிச்செய்தார். அதாவது ஸர்வேச்வரன் தனது சுதந்திரம் காரணமாக ஜீவாத்மாவை ஸம்ஸாரத்தில் மூழ்கியபடி இருக்கச்செய்கிறான் என்று உரைத்தால், கர்மம் காரணமாக ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ள ஜீவாத்மாவை அதிலிருந்து உயர்த்துவதற்கு முயற்சிக்கும் ஸர்வேச்வரனின் திருவுள்ளத்தில் சீற்றம் ஏற்படும் என்று எண்ணினார்; ஆகவே இதுவரை விண்ணப்பம் செய்த சொற்கள் மூலம் ஸர்வேச்வரனுக்கு கோபம் உண்டு என்ற பொருள் உள்ளதான முதல் சொல்லைத் தொடர்ந்து (அதாவது கடந்த பாசுரத்தினைத் தொடர்ந்து), அவனை இழந்து நிற்பதற்குக் காரணம் (அவனுடைய சுதந்திரம் என்று) அவனே என்று உரைப்பது சீற்றத்தை ஏற்படுத்தும் என்றுள்ள அர்த்தத்தை திருமங்கையாழ்வார் அருளிச்செய்தார் அல்லவோ?

378. சீற்றமுண்டென்றறிந்தால் சொல்லும்படி யென்னென்னில், அருளும் ஆர்த்தியும் அநந்யகதித்வமும் சொல்லப்பண்ணும்.

**அவதாரிகை** – “சீற்றமுள” என்ற பின்பும் “ஆகிலும் செப்புவன்” என்று முன்பு சொன்னது தன்னையே சொல்லுகைக்கு ஹேதுவை, ப்ரச்நோத்தரரூபேண ப்ரகாசிப்பிக்கிறார் (சீற்றம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - பெரியதிருமொழி (11-8-1) – சீற்றமுள - என்று கூறிய பின்னர், பெரியதிருமொழி (11-8-2) – ஆகிலும் செப்புவன் – என்று முன்னர் உரைத்த விஷயத்தையே மீண்டும் உரைத்ததன் காரணத்தை, இந்தச் சூர்ணையில் கேள்வி-பதில் வடிவத்தில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கீழ்ச்சொன்ன வித்தாலே ஈச்வரன் திருவுள்ளத்துக்குச் சீற்ற முண்டென் றறிந்தால் பின்னையு மிவ்வார்த்தையைக் கூசாமல் திருமுன்பே சொல்லும்படி யெங்ஙனே யென்னில்? அவன் சீற்றத்தைத் தன் ஸந்நிதியில் ஜீவிக்கவொட்டாத பர:துக்கா ஸஹிஷ்ணுத்வரூபையான க்ருபையும், சீற்றங்கண்டஞ்சி வாய் மூட வொட்டாதபடி கரையழிந்து செல்லுகிற ஸம்ஸாரார்த்தியும், சீறியெடுத் தெறியிலும் வேறு புகலில்லாமையாகிற அநந்யகதித்வமும் சொல்லும்படி பண்ணுமென்கை. இத்திருமொழியிலே, “அடைய வருளா யெனக்குன்றனருளே”, “துணியேனினி நின்னருளல்ல தெனக்கு”, “தொண்டரானவர்க் கின்னருள் செய்வாய்” என்று பல விடங்களிலு மவனருளையும்; “ஆற்றங்கரை வாழ் மரம்போ லஞ்சுகின்றேன்”, “காற்றததிடைப்பட்ட கலவர் மனம்போலாற்றத் துளங்கா நிற்பன்”, “பாம்போடொரு கூரையிலே பயின்றாப்போல் தாங்காதுள்ளந் தள்ளும்”, “இருபாடெரி கொள்ளியுனுள் ளெறும்பே போலுருகா நிற்குமென்னுள்ளம்”, “வெள்ளத்திடைப்பட்ட நரியினம் போலே யுள்ளந் துளங்கா நிற்பன்” என்று பல த்ருஷ்டாந்தங்களாலும் தம்முடைய ஆர்த்யநந்ய கதித்வங்களையு மருளிச்செய்தாரிறே.

**விளக்கம்** - முன்னர் உரைத்த சொற்கள் கேட்டு ஸர்வேச்வரன் திருவுள்ளத்தில் கோபம் உள்ளது என்று அறிந்த பின்னரும், இந்தச் சொற்களைச் சற்றும் கூசாமல் அவன் முன்பாக மீண்டும் எப்படி உரைக்க இயலும்? இதற்கு விடை - அவனுடைய கோபம் என்பது தனது அருகில் வர இயலாதபடி செய்வதான மற்றவர்களின் துன்பத்தைக் கண்டால் பொறுக்க இயலாத அவனுடைய கருணையும், அவனுடைய சீற்றத்தைக் கண்ட பின்னரும் அச்சம் கொண்டு வாயை மூடிக் கிடக்க இயலாதபடி செய்வதான கரையை

அழிக்கும் வெள்ளம் போன்ற ஸம்ஸார துன்பமும், அப்படியே அவன் சீற்றத்துடன் நம்மை எறிந்தாலும் வேறு புகலிடம் இல்லாத அநந்யகதித்வமும் இவ்விதம் நம்மை உரைக்கும்படிச் செய்யும். இந்தத் திருமொழியில், பெரியதிருமொழி (11-8-6) - அடைய வருளா யெனக்குன்றனருளே - என்றும், (11-8-8) – துணியேனினி நின்னருளல்ல தெனக்கு – என்றும், (11-8-9) – தொண்டரானவர்க் கின்னருள் செய்வாய் - என்றும் பல பாசுரங்களில் அவனுடைய கருணை குறித்து அருளிச்செய்தார். மேலும் பெரியதிருமொழி (11-8-1) - ஆற்றங்கரை வாழ் மரம்போ லஞ்சுகின்றேன், (11-8-2) – காற்றததிடைப்பட்ட கலவர் மனம்போலாற்றத் துளங்கா நிற்பன், (11-8-3) – பாம்போடொரு கூரையிலே பயின்றாப்போல் தாங்காதுள்ளந் தள்ளும், (11-8-4) – இருபாடெரி கொள்ளியுனுள் ளெறும்பே போலுருகா நிற்குமென்னுள்ளம், (11-8-5) - வெள்ளத்திடைப்பட்ட நரியினம் போலே யுள்ளந் துளங்கா நிற்பன் - என்றும் உள்ள பாசுரங்களில் காணப்படும் பல உதாரணங்கள் மூலம் தனது ஸம்ஸார துன்பம் மற்றும் வேறு துணை இல்லாத நிலை ஆகியவற்றை அருளிச்செய்தார்.

379. சீறினாலும் காலைக் கட்டிக் கொள்ளலாம்படி யிருப்பானொருவனைப் பெற்றால் எல்லாம் சொல்லலாமிறே.

**அவதாரிகை** - இப்படி அநந்யகதித்வாதிக ளுண்டானாலும் அவனுக்குச் சீற்றம் பிறக்கும் படி சிலவற்றைச் சொல்லலாமோவென்ன அருளிச்செய்கிறார் (சீறினாலும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் அவன் அல்லாமல் வேறு கதி இல்லை போன்ற பலவும் இருந்தாலும், அவனுக்குக் கோபம் ஏற்படுத்தும்படியான செயல்களைச் செய்யலாமோ அல்லது கூறலாமோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது சீறின காலத்திலும் சீற்றத்துக்கு விஷயமானவர்களுக்குச் சென்று திருவடிகளைப் பூண்டுகொள்ளலாம்படி பரமக்ருபாவான யிருப்பானொருவனைப் பெற்றால் நினைத்தபடி யெல்லாம் சொல்லலாமிறே யென்கை.

**விளக்கம்** - எத்தனை கோபம் கொண்டாலும், கோபத்திற்கு இலக்கானவர்கள் சென்று திருவடிகளை தலையில் வைத்துக்கொள்ளும்படியான உயர்ந்த கருணை உள்ளவனைப் பெற்றால் எப்படி வேண்டுமானாலும் உரைக்கலாம் என்று கருத்து.

380. "க்ருபயா பர்யபாலயத்", "அரிசினத்தால்".

**அவதாரிகை** - சீறின தசையிலும் காலைக்கட்டிக் கொள்ளலாயிருக்கும்படிக்கு ப்ரமாணங் காட்டுகிறார் (க்ருபயா பர்யபாலயத், அரிசினத்தால்) என்று.

**விளக்கம்** - அவன் கோபம் கொண்டாலும் அவனுடைய திருவடிகளைப் பிடித்துக் கொள்ளலாம் என்பதற்கு உதாரணம் காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது "ஸதம் நிபதிதம் பூமௌ சரண்யச் சரணாகதம், வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத்" என்று, அபராதத்தைத் தீரக் கழியச் செய்து ப்ரஹ்மாஸ்த்ரத்துக் கிலக்காய்ப் புறம்பு புகலற்றவாறே வந்து திருவடிகளிலே விழுந்த காகத்தை, க்ருபையாலே ரக்ஷித்தா ரென்கையாலும்; "அரிசினத்தா லீன்ற தாயகற்றிடினும் மற்றவள் தன்னருள் நினைந்தே யழுங்குழுவி யதுவே போன்றிருந்தேன்" என்று, பெறுகைக்கு வருந்தி வரங்கிடந்து பெற்ற தாயானவள், இது செய்த தீம்பைக் கண்டு அரிந்து பொகடவேண்டும் சீற்றத்தை யுடையளாய்க் கொண்டு கிட்ட வரவொட்டாமல் தள்ளிவிட்டாலும், வேறு போக்கடியற்று, சீறியெடுத்தெறிகிற அவளுடைய முகத் திரக்கத்தையே நினைத்து அழுது காலைத் தழுவிக் கொள்ளும் குழவி போலே, என் னபராதத்தைக் கண்டு அருகுவாராதபடி தேவர் தள்ளிவிடப் பார்க்கிலும் திருவடிகளல்லது வேறு போக்கடி யற்றிருந்தேன் என்று ஸ்ரீகுலசேகரப்பெருமா ளருளிச்செய்கையாலும்; (சீறினாலும் காலைக் கட்டிக்கொள்ளலாம்படி யிருப்பானொருவன்) என்னுமிடம் ஸித்தமென்கை. இப்படி, ஆழ்வாரருளிச்செய்த இவ்வர்த்தத்தை, "நிராஸகஸ்யாபி நதாவதுத்ஸஹே மஹேசஹாதும் தவபாத பங்கஜம், ருஷா நிரஸ்தோபி சிசுஸ் ஸ்தநந்தயோ நஜாது மாதுச்சரணௌ ஜிஹாஸதி" என்று ஆளவந்தாரருளிச் செய்தாரிறே. ஆக இவ்வளவும், (பயாபயங்க ளிரண்டும் மாறாடில் அஜ்ஞதையே ஸித்திக்கும்) என்றதின் மேல் வந்த சங்கா பரிஹாரங்கள் பண்ணப்பட்டது.

**விளக்கம்** - இராமாயணம் ஸுந்தரகாண்டம் (38-35) – ஸதம் நிபதிதம் பூமௌ சரண்யச் சரணாகதம், வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத் – சரணம் புகுந்தவனும், தரையில் விழுந்தவனும் ஆகிய அந்தக் காகாஸுரனைக் கொல்வதற்கான அனைத்து உரிமையும் உள்ளபோதிலும், அனைவருக்கும் புகலிடமாக உள்ள இராமன் அவனைக் காப்பாற்றினான் - என்று கூறுவதற்கு ஏற்ப, குற்றத்தை மிகவும் தெளிவாக அறிந்து கொண்டே செய்து, இராமனின் ப்ரஹ்மாஸ்த்ரத்தால் அடிபட்டு வேறு கதியில்லாமல் தனது திருவடிகளில் வந்து விழுந்த காகாஸுரனை இராமன் தனது கருணையால் காப்பாற்றினான். பெருமாள்திருமொழி (5-1) - அரிசினத்தா லீன்ற தாயகற்றிடினும் மற்றவள் தன்னருள் நினைந்தே யழுங்குழவி யதுவே போன்றிருந்தேன் – என்பதற்கு ஏற்ப, “குழந்தையைப் பெறுவதற்கு மிகவும் துன்பப்பட்டு வரம் கிடந்து பெற்றெடுத்த தாய் ஒருவள், அந்தக் குழந்தை செய்யும் தீங்கைக்கண்டு அதனை வெட்டி விடவேண்டும் என்ற கோபம் கொண்டு, தனது அருகில் அது வரக்கூடாது என்று தள்ளிவிட்டாலும், வேறு போக்கிடம் அறியாமல், சீற்றத்துடன் தன்னைத் தூக்கி வீசும் அந்தத் தாயின் முகத்தில் உள்ள இரக்கத்தை மட்டுமே எண்ணி அழுதபடி அவளுடைய காலகளைப் பிடித்துக் கொள்ளும் குழந்தையைப் போன்று, நான் செய்த குற்றத்தைக் கண்டு உனது அருகில் வரவிடாதபடி தள்ளிவிட்டாலும் உனது திருவடிகள் அல்லாமல் வேறு போக்கிடம் இல்லாமல் உள்ளேன் - என்று குலசேகராழ்வார் அருளிச்செய்தார். இந்த இரண்டினாலும் “சீறினாலும் காலைக் கட்டிக்கொள்ளலாம்படி யிருப்பானொருவன்” என்று கடந்த சூர்ணையில் கூறப்பட்டது தெளிவாகிறது. இப்படியாக ஆழ்வார் அருளிச்செய்த இதே அர்த்தத்தை ஸ்தோத்ரரத்னத்தில் (26) - நிராஸகஸ்யாபி நதாவதுத்ஸஹே மஹேசஹாதும் தவபாத பங்கஜம், ருஷா நிரஸ்தோபி சிசுஸ் ஸ்தநந்தயோ நஜாது மாதுச்சரணௌ ஜிஹாஸதி - ஸர்வேச்வரனே! என்னை நீ கைவிட முயற்சித்தாலும் உனது திருவடித் தாமரையை விட்டுப்போவதற்கு நான் விரும்பமாட்டேன். தாய்ப்பால் பருகும் ஒரு குழந்தையை அதன் தாய் தள்ளினாலும், தனது தாயின் கால்களை அந்தக் குழந்தை விடாது அல்லவோ - என்று ஸ்வாமி ஆளவந்தார் அருளிச்செய்தார் அல்லவோ? ஆக இதுவரை “பயாபயங்க ளிரண்டும் மாறாடில் அஜ்ஞதையே ஸித்திக்கும்” என்றுள்ள சூர்ணை 367ல் உண்டான சந்தேகத்திற்கு விடை அளிக்கப்பட்டது.

381. த்ரிபாத் விபூதியிலே பரிபூர்ணாநுபவம் நடவாநிற்க, அது உண்டது உருக்காட்டாதே, தேசாந்த்ர கதனான புத்ரன் பக்கலிலே பித்ரு ஹ்ருதயம் கிடக்குமாபோலே. ஸம்ஸாரிகள் பக்கலிலே திருவுள்ளம் கலந்து பரிமாறுகைக்குக் கரணகளேபரங்களைக் கொடுத்து, அவற்றைக் கொண்டு வ்யாபரிக்கைக்கீடான சக்தி விசேஷங்களையும் கொடுத்து கண்காண நிற்கில் ஆணையிட்டு விலக்குவர்களென்று கண்ணுக்குத் தோற்றாதபடி, உறங்குகிற ப்ரஜையைத் தாய் முதுகிலே யணைத்துக்கொண்டு கிடக்குமாபோலே, தானறிந்த ஸம்பந்தமே ஹேதுவாக விடமாட்டாதே, அகவாயிலே அணைத்துக்கொண்டு, ஆட்சியில் தொடர்ச்சி நன்றென்றுவிடாதே ஸத்தையை நோக்கி உடன்கேடனாய், இவர்கள் அஸத்கர்மங்களிலே ப்ரளர்த்திக்கும்போது மீட்கமாட்டாதே, அநுமதி தானத்தைப் பண்ணி உதாஸீநரைப் போலேயிருந்து போலேயிருந்து மீட்கைக்கிடம் பார்த்து நன்மையென்று பேரிடலாவதொரு தீமையும் காணாதே நெற்றியைக் கொத்திப் பார்த்தா லொருவழியாலும் பசைகாணா தொழிந்தால் அப்ராப்யமென்று கண்ணநீரோடே மீளுவது; தனக்கேற இடம் பெற்ற வளவிலே, என்னூரைச் சொன்னாய் என் பேரைச் சொன்னாய் என்னடியாரை நோக்கினாய் அவர்கள் விடாயைத் தீர்த்தாய் அவர்களுக் கொதுங்க நிழலைக் கொடுத்தாய் என்றாப்போலே சிலவற்றை யேறிட்டு, மடிமாங்காயிட்டு, பொன்வாணியன் பொன்னை உரை கல்லிலே யுரைத்து மெழுகாலே யெடுத்துக் கால்கழஞ்சென்று திரட்டுமாபோலே ஜந்ம பரம்பரைகள்தோறும், யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிகமென்கிற ஸுக்ருத் விசேஷங்களைக் கற்பித்துக் கொண்டு தானே யவற்றை ஒன்று பத்தாக்கி நடத்திக்கொண்டு போரும்.

**அவதாரிகை** – இனி, (பகவத் குணாநுஸந்தாந மபயஹேது) என்று கீழருளிச் செய்தத்தை விசதீகரிக்கைக்காக, ஈச்வரனிவ்வாத்மோஜ்ஜீவநத்துக்குப் பண்ணும் க்ருஷி பரம்பரையை அருளிச்செய்கிறார் (த்ரிபாத் விபூயிலே) என்று தொடங்கி.

**விளக்கம்** - அடுத்து "பகவத் குணாநுஸந்தானம் அபயஹேது" என்று சூர்ணை 366ல் கூறப்பட்டதை விவரித்து உரைக்கும்விதமாக, ஸர்வேச்வரன் ஆத்மாவைக் கரையேற்று வதற்குச் செய்யும் முயற்சிகள் குறித்து இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** "த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" என்கையாலே, நித்யவிபூதியை த்ரிபாத் விபூதி யென்னக்கடவதிறே. அதினுடைய த்ரிபாத்த்வந்தான் பலபடியாக நிர்வஹிக்கலா

யிருக்கும்; எங்ஙனே யென்னில், "பாதோஸ்ய விச்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் த்வி" என்று, இந்த விபூதியி லெல்லா பூதங்களு மிவனுக்கு நாலத்தொன்று என்னும்படி அல்பமா யிருக்கும்; பரமாகாசத்தில் இவனுடைய நித்யமான விபூதி த்ரிபாத்தென்னும்படி மும்மடங்கா யிருக்கும். "இந்த விபூதி த்வய விஷயமான பாதசப்தமும் த்ரிபாச் சப்தமும் அல்பத்வ மஹத்த்வங்களுக் குபலக்ஷணமித்தனையொழிய பரிச்சேதபர மன்று, லீலாவிபூதியி லண்டங்கள்தானே அஸங்க்யாதங்களாயிறே யிருப்பது" என்று தீப ப்ரகாசத்திலே ஜீயரருளிச் செய்கையாலே, இவ்விபூதியில் கார்யரூப ப்ரதேசத்தைப் பற்ற பரமாகாசத்தில் நித்யவிபூதி மும்மடங்கா யிருக்கு மென்னவுமாம்.

**விளக்கம்** - புருஷஸூக்தத்தில் (3) - த்ரிபாதஸ்யாம்ருதம் திவி - என்று கூறுவதன் மூலம் நித்யவிபூதியாக உள்ள பரமபதம் என்பது த்ரிபாத் விபூதி ஆகிறது. இந்தப் பரமபதத்தை த்ரிபாத் என்று கூறியது பலவிதங்களில் பொருள் கொள்ளும்படியாக உள்ளது. எப்படி? புருஷஸூக்தம் - பாதோஸ்ய விச்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் த்வி – அனைத்து பூதங்களும் ஒரு பாகமாக உள்ளன, அழிவற்ற பரமபதத்தில் இவனுடைய மூன்று பாகங்கள் உள்ளன - என்று கூறியது; அதாவது இந்தப் பூமியில் உள்ள அனைத்து பொருள்களும் சேர்ந்தாலும் இவனுடைய செல்வத்தில் நான்கில் ஒரு பாகம் என்று கூறலாம்படி குறைவற்று இருப்பதாகும்; பரமாகாசம் என்று கூறப்படுவதான பரமபதத்தில் இவனுடைய செல்வமானது த்ரிபாத் என்று கூறலாம்படி மூன்று மடங்காக இருக்கும். "இந்த விபூதி த்வய விஷயமான பாதசப்தமும் த்ரிபாச் சப்தமும் அல்பத்வ மஹத்த்வங்களுக் குபலக்ஷணமித்தனையொழிய பரிச்சேதபர மன்று, லீலாவிபூதியி லண்டங்கள்தானே அஸங்க்யாதங்களாயிறே யிருப்பது – இவனுடைய நித்யவிபூதி, லீலாவிபூதி என்பதான செல்வங்களை உணர்த்தக்கூடிய பாதம் மற்றும் த்ரிபாதம் போன்ற இரண்டும் பதங்களும் சிறியது மற்றும் பெரியது என்ற தன்மைகளை உணர்த்துமே அல்லது அவை கால்பங்கு முக்கால்பங்கு என்று அளவுகளைக் குறிக்காது; லீலாவிபூதி என்று கூறப்படும் இந்த உலகத்தில் அண்டங்கள் கணக்கில்லாமல் உள்ளன அல்லவோ?" – என்று தீப ப்ரகாசத்தில் வாதிகேசரி அழகியமணவாள ஜீயர் அருளிச்செய்தார்; ஆக இதற்கு ஏற்ப, இந்த உலகில் காணப்படும் இடங்கள் போன்று பரமாகாசம் என்பதான நித்யவிபூதியில் உள்ள பொருள்கள் மூன்றுமடங்கு உள்ளன என்று கொள்ளலாம்.

**வ்யாக்யானம்** – அன்றிக்கே, "திவி இதி அப்ராக்ருதம் ஸ்தாநமுச்யதே; த்ரிபாத்த்வஞ்ச, அப்ராக்ருதைர் போக்யபோகோபகரண போகஸ்தாந விசேஷைர் வா, பூஷணாஸ்த்ராதி ரூபேண ஜகதந்தர்கத வஸ்த்வபிமாநிபிர் நித்யைர் பகவதநுபவமாத்ர பரைச்ச நித்யஸித்தைர் முக்தைச் சாத்மபிர்வா ஸம்பவதி" என்று ச்ருதப்ரகாசிகையிலே பட்டரருளிச் செய்தபடியே, அப்ராக்ருதமா யிருந்துள்ள போக்ய விசேஷங்கள் போகோபகரண விசேஷங்கள் போகஸ்தாந விசேஷங்களாகிற மூன்றம்சங்களோடே கூடியிருக்கையாலே, அஸ்த்ர பூஷணாத்யாயத்திற்படியே பூஷணாஸ்த்ராதி ரூபத்தாலே ஜகதந்தர்கத வஸ்த்வபிமாநிகளான நித்யரும், கேவல பகவதநுபவபரரா யிருக்கும் நித்யரும் முக்தருமா யிப்படி மூன்றம்சமா யிருக்கு மாத்மாக்களை உடைத்தாகையாலே யாதல் த்ரிபாத் தென்னவுமாம். ஆக இப்படி லீலாவிபூதியில் அத்யந்த வ்யாவ்ருத்தை யாகையாலே நிரதிசய ஸுகாவஹையான நித்யவிபூதியிலே.

**விளக்கம்** - அல்லது திவி இதி அப்ராக்ருதம் ஸ்தாநமுச்யதே; த்ரிபாத்த்வஞ்ச, அப்ராக்ருதைர் போக்யபோகோபகரண போகஸ்தாந விசேஷைர் வா, பூஷணாஸ்த்ராதி ரூபேண ஜகதந்தர்கத வஸ்த்வபிமாநிபிர் நித்யைர் பகவதநுபவமாத்ர பரைச்ச நித்யஸித்தைர் முக்தைச் சாத்மபிர்வா ஸம்பவதி - திவி என்ற பதம் இந்தப் ப்ரக்ருதியுடன் தொடர்பு இல்லாமல் உள்ள பரமபதத்தைக் கூறுகிறது. அதாவது இந்த ப்ரக்ருதியின் தொடர்பு இல்லாத இனிய பொருள்கள், அவற்றை அனுபவிப்பதற்குத் தேவையான போகோபகரண பொருள்கள், அவற்றை அனுபவிக்கத் தேவையாக உள்ள இடங்கள் என்ற பொருள்கள் என்று மூன்றுவிதமாக உள்ளதால் த்ரிபாத் எனப்பட்டது. அல்லது ஆபரணங்கள் மற்றும் ஆயுதங்களின் வடிவில், உலகில் உள்ளவற்றைக் காப்பாற்றியபடி உள்ள நித்யஸூரிகள், பகவத்அனுபவத்தில் மட்டுமே நாட்டம் உள்ள நித்யஸூரிகள், முக்தி பெற்றவர்கள் என்று மூன்றுவிதமான பிரிவுகள் உள்ள ஆத்மாக்களைக் கொண்டதால் த்ரிபாத் எனப்பட்டது - என்று ச்ருதப்ரகாசிகையில் ஸுதர்சனபட்டர் அருளிச்செய்தது போன்று - இந்த உலகின் தொடர்பு இல்லாத போக்யவஸ்துக்கள், போகோபகரண வஸ்துக்கள், போக இடங்கள் என்ற வஸ்துக்கள் முதலான மூன்று விதமான பொருள்களுடன் கூடியிருப்பதால். (அல்லது) அஸ்த்ரபூஷணம் என்ற அத்யாயத்தில் கூறியுள்ளது போன்று ஆபரணங்கள், அஸ்த்ரங்கள் போன்றவற்றின் வடிவத்தில் இருந்தபடி உலகில் உள்ள பொருள்களை விரும்பும் நித்யஸூரிகள், பகவத் அனுபவத்தில் மட்டுமே குறிக்கோள் உள்ளவராக இருக்கும் நித்யஸூரிகள், முக்தர்கள்

என்று மூன்றுவிதமான ஆத்மாக்களை உடையதால் என்று இரண்டுவிதங்களிலும் த்ரிபாத் என்று கூறப்பட்டது. இப்படியாக இந்த உலகங்களைக் காட்டிலும் உயர்ந்த மேன்மைகள் கொண்டதால் எல்லையற்ற இன்பம் அளிப்பதாக உள்ள நித்யவிபூதியில்.

**வ்யாக்யானம்** - (பரிபூர்ணாநுபவம் நடவாநிற்க) நித்யமுக்தரோடே கூடியிருந்து ஓரொன்றே நிரதிசயாநந்த ஜநகமான ஸ்வரூப ரூபகுண விபூதிகளெல்லாவற்றையும் யுகபதே வாநுபவிக்கையாகிற பரிபூர்ணாநுபவம் அவிச்சிந்நமாய்ச் செல்லா நிற்க வென்கை.

**விளக்கம்** - (பரிபூர்ணாநுபவம் நடவாநிற்க) - நித்யமுக்தர்களுடன் கூடியிருந்தபடி, ஒவ்வொன்றும் இத்தகைய ஆனந்தம் அளிக்கும் என்று கூற இயலாதபடி எல்லை இல்லாத ஆனந்தம் ஏற்படுத்துகின்ற ஸ்வரூபம், ரூபம், குணம், செல்வம் போன்ற அனைத்தையும் ஒரே நேரத்தில் அனுபவிக்கவல்ல பரிபூர்ண அனுபவம் தடை இல்லாமல் உள்ள நேரத்தில்.

**வ்யாக்யானம்** - (அது உண்டதுருக்காட்டாதே) அதாவது, அப்போதப்போது வடிவு இட்டு மாறினாப்போலே புதுக்கணித்து வரப்பண்ணுமந்த வநுபவமொன்றும் வடிவில் தோற்றாதே யென்கை. (தேசாந்தரகதனான புத்ரன் பக்கலிலே பித்ரு ஹ்ருதயங் கிடக்குமாப்போலே ஸம்ஸாரிகள் பக்கலிலே திருவுள்ளம் குடிபோய்) அதாவது, அநேக புத்ரர்களில் வைத்துக் கொண்டு ஒருவன் ஸ்வகர்மாநுகுணமாக தேசாந்தரமே போனால், மற்றுண்டான புத்ரர்களும் தானுமாயிருந்து ஜீவியா நிற்கச்செய்தேயும், "இவர்களோபாதி அவனுங் கூடவிருந்து வாழுகைக் கிட்டுப் பிறந்து வைத்தும் இத்தை யிழந்து கிடக்கிறானே!" என்று, தேசாந்தரகதனான வந்த புத்திரன் பக்கலிலே பிதாவினுடைய ஹ்ருதயங் கிடக்குமாப்போலே, நித்யமுக்தரும் தானுங் கூடியிருந்து வாழச்செய்தே, "இப்போகத்தில் ப்ராப்தியுண்டாயிருக்க இச்சேதந ரித்தை யிழந்து கிடப்பதே!" என்று தேசாந்தரஸ்தரான ஸம்ஸாரிகள் பக்கலிலே திருவுள்ளம் நோராகப்போயென்கை.

**விளக்கம்** - (அது உண்டதுருக்காட்டாதே) - அப்போதைக்கப்போது வடிவத்தில் மாற்றி மாற்றி உண்டாவது போன்று புதிதுபுதிதாக உண்டாகக்கூடிய ஆத்ம அனுபவம் எதுவும் வடிவத்தில் தோன்றாமல். (தேசாந்தரகதனான புத்ரன் பக்கலிலே பித்ரு ஹ்ருதயங் கிடக்குமாப்போலே ஸம்ஸாரிகள் பக்கலிலே திருவுள்ளம் குடிபோய்) - பல பிள்ளைகள்

உள்ள ஒருவனின், ஒரு பிள்ளை மட்டும், தனது கர்மம் காரணமாக வேறு தேசத்திற்குச் சென்றால், மற்ற பிள்ளைகளுடன் தான் சேர்ந்து மகிழ்வுடன் வாழ இயன்றாலும், அதனைச் செய்யாமல், “இவர்கள் போன்று அவனும் நம்முடன் சேர்ந்து வாழப் பிறந்தாலும், இதனை விட்டுப்போக நேர்ந்ததே” என்று மற்ற இடத்திற்குப் போன பிள்ளையின் நினைவே தந்தையின் இதயத்தில் இருக்கும். இது போன்று, நித்ய முக்தர்களுடன் ஸர்வேச்வரன் பரமபதத்தில் உள்ளபோதிலும், “இந்த அனுபவத்தில் உரிமை உள்ளபோதும், உலகில் உள்ள சேதனர்கள் இதனை இழந்து கிடக்கிறார்களே”, என்று பரமபதத்தில் இல்லாமல், இந்த உலகில் உள்ள ஸம்ஸாரிகளிடம் ஸர்வேச்வரனின் திருவுள்ளம் வந்து சேர்கிறது.

**வ்யாக்யானம்** - (இவர்களைப் பிரிந்தால் ஆற்றமாட்டாதே) அதாவது ஸம்ஹ்ருதி ஸமயத்தில் [ப்ராப்தியுண்டாயிருக்க] நித்யவிபூதியிலே இஸ்ஸம்ஸாரி சேதநரைப் பிரிந்து தானிருக்குமளவில், புத்ரபௌத்ராதிகளோடே ஜீவித்தவன் அவர்களை யிழந்து தனியனானாப்போலே, “ஸ ஏகாகீ நரமேத” என்கிறபடியே அவ்விழவு ஸஹிக்கமாட்டாதே யென்கை. ஸம்ஹ்ருதரா யிருக்குமளவிலும் இவர்களை சரீரமாகக்கொண்டு தான் சரீரியா யிருக்கச்செய்தேயும், அத்தையொரு கலவியாக நினையாதே, கரண களேபர ஸஹிதராய் அவர்கள் வர்த்திக்கிற காலத்தில் அந்தராத்மதயா ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளை நிர்வஹித்துக் கொண்டிருக்கை முதலானவற்றை இவர்களோட்டைக் கலவியாகவும், இவர்கள் கரண களேபர விதுரராய், அசிதவிசேஷிதராய்க் கிடக்க தான் நித்யவிபூதியிலே யிருக்குமிருப்பு இவர்களைப் பிரிந்திருக்கிற விருப்பாகவும் அவன் நினைத்திருக்கையாலே (இவர்களைப் பிரிந்தால்) என்றருளிச்செய்கிறார்.

**விளக்கம்** - (இவர்களைப் பிரிந்தால் ஆற்றமாட்டாதே) - அதாவது ப்ரளய காலத்தில். தன்னுடன் சேர்ந்திருப்பதற்கான தகுதி உள்ளபோதிலும், பரமபதத்தில் ஸம்ஸாரி சேதனர்களைப் பிரிந்து தான் மட்டும் உள்ளபோது, பிள்ளை மற்றும் பேரன் முதலானவர்களுடன் வாழ்ந்த ஒருவன் அவர்களை விட்டுப்பிரிந்து தனியாக இருந்து தவிப்பது போன்று, மஹோபநிஷத் – ஸ ஏகாகீ நரமேத - அவன் தனியனாக இருந்து துன்பம் அடைந்தான் – என்று கூறுவதற்கு ஏற்ப, அவர்களை இழந்து நிற்கும் நிலையை பொறுத்துக் கொள்ள இயலாதவன். ப்ரளயத்தின்போது உடல் உறுப்புகள் ஏதும் இல்லாத நிலையிலும் இந்த சேதனர்களைத் தனது சரீரமாகக் கொண்டு, தான் இவர்களுடைய

ஆத்மாவாக உள்ளபோதிலும், அதனை ஒரு சேர்க்கை என்று இவன் எண்ணுவதில்லை; மாறாக, சரீரம் மற்றும் இந்த்ரியங்களோடு இவர்கள் வாழும் காலத்தில், அவர்களுடைய அந்தராத்மாவாக இருந்துகொண்டு, அவர்களின் செயல்பாடுகளையும் செயலற்ற தன்மைகளையும் நடத்தியபடி இருப்பதையே சேர்க்கையாக எண்ணுகிறான். இவர்கள் ப்ரளயகாலத்தில் சரீரம் மற்றும் இந்த்ரியங்கள் இல்லாமல், அசித் வஸ்துக்களைக் காட்டிலும் வேறுபட்டு உணர இயலாதவர்களாக உள்ளனர்; அப்போது நித்யவிபூதியில் தான் உள்ளபோது, இவர்களை விட்டுப்பிரிந்து இருப்பதாகவே அவன் எண்ணுகிறான். அதனால் "இவர்களைப் பிரிந்தால்" என்று அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - (இவர்களோடே கலந்து பரிமாறுகைக்கு கரணகளேபரங்களைக் கொடுத்து) அதாவது, அந்தராத்மதையாலும் அவதாரார்ச் சாவதாரங்களாலும் இவர்களோடே கலந்து பரிமாறுகைக்குறுப்பாக, "விசித்ரா தேஹஸம்பத்தி:" இத்யாதிப்படியே, ஸ்வசரணகமல ஸமாச்ரயணோபகரணங்களான கரணகளேபரங்களை "தயமாந மநா" வாய்க்கொடுத்தென்கை.

**விளக்கம்** - (இவர்களோடே கலந்து பரிமாறுகைக்கு கரணகளேபரங்களைக் கொடுத்து) - அந்தர்யாமியாக உள்ளதாலும், அவதாரங்கள் மூலமாகவும், அர்ச்சை வடிவங்களாலும், இவர்களுடன் அவன் எப்போதும் சேர்ந்து வாழ எண்ணுகிறான். அதனால் ஸ்ரீவிஷ்ணு தத்வம் - விசித்ரா தேஹஸம்பத்தி: - விசித்ரமான இந்தச் சரீரம் - என்பதற்கு ஏற்ப தனது திருவடித்தாமரைகளை அவர்கள் அடைவதற்குத் தேவையான கருவிகளாக உள்ள சரீர உறுப்புகளை மிகுந்த கருணையோடு கொடுத்து.

**வ்யாக்யானம்** - (அவற்றைக் கொண்டு வ்யாபரிக்கைக்கீடான சக்தி விசேஷங்களையும் கொடுத்து) அதாவது, அந்த கரணகளேபரங்களைக் கொண்டு அறியவேண்டுமவற்றை அறிந்து செய்யவேண்டுமவற்றைச் செய்து, தவிரவேண்டுமவற்றைத் தவிர்ந்து இப்படி வ்யாபரிக்கைக்கீடான சிச்சக்தி ப்ரவ்ருத்திசக்தி நிவ்ருத்திசக்திகளாகிற சக்தி விசேஷங்களையுங் கொடுத்தென்கை.

**விளக்கம்** - (அவற்றைக் கொண்டு வ்யாபரிக்கைக்கீடான சக்தி விசேஷங்களையும் கொடுத்து) - அந்தச் சரீரம் மற்றும் உடல் உறுப்புகள் ஆகியவை மூலமாக அறிய வேண்டியவற்றை அறிந்துகொண்டு, எதனைச் செய்யவேண்டுமோ அவற்றைச் செய்யவும், எவற்றைச் செய்யக்கூடாதோ அவற்றைத் தவிர்த்து நிற்கும்படியும் செய்கிறான்; அதாவது இவ்விதம் இவர்கள் செய்வதற்கு ஏற்ற ஞானசக்தி, செயலாற்றத் தேவையான சக்தி, செயல்கள் செய்யாமல் ஒதுங்கவல்ல சக்தி முதலானவற்றையும் கொடுத்து.

**வ்யாக்யானம்** - (கண்காணநிற்கில் ஆணையிட்டு விலக்குவர்களென்று கண்ணுக்குத் தோற்றாதபடி) அதாவது, இத்தனையுஞ்செய்து ஸ்வாமித்வ ப்ராப்திதோற்ற இவர்கள் கண்ணுக்கு விஷயமாய் நிற்கில், "த்வம் மே" என்றால் ஸஹியாமல், "அஹம் மே" என்னும் ஸ்வதந்த்ரராகையாலே, எங்கள் கண் முகப்பிலே நீயொருக்காலும் நிற்கக்கடவை யில்லை என்று திருவாணையிட்டு நிஷேதிப்பர்களென்று நினைத்து, "ந சக்ஷுஷா பச்யதி கச்சநைநம்", "கட்கிலீ" என்கிறபடியே இவர்கள் கண்ணுக்கு ஒரு காலமும் விஷயமாகாதபடி யென்கை. (உறங்குகிற ப்ரஜையைத் தாய்முதுகிலே யணைத்துக் கொண்டு கிடக்குமாப்போலே, தானறிந்த ஸம்பந்தமே ஹேதுவாக விடமாட்டாதே அகவாயிலே யணைத்து) அதாவது, தன்னையும் தாயையுமறியாதே கிடந்து உறங்குகிற ப்ரஜையை வத்ஸலையான மாதாவானவள் தானறிந்த ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்தமடியாக முதுகிலே யணைத்துக்கொண்டு கிடக்குமாப்போலே, அநாதிமாயயா ஸுப்தராய் ஸ்வபர ஸ்வரூபங்களி லொன்றையு மறியாமல் கிடக்கிற விச்சேதநரை சேஷியான தானறிந்த ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்தமே ஹேதுவாக விட க்ஷமனன்றிக்கே, "ஆத்மநி திஷ்ட்டந்" என்கிறபடியே அந்தராத்மத்வேந இவற்றை ஸ்பர்சித்துக் கொண்டென்கை.

**விளக்கம்** - (கண்காணநிற்கில் ஆணையிட்டு விலக்குவர்களென்று கண்ணுக்குத் தோற்றாதபடி) - இது போன்ற பலவற்றையும் செய்த பின்னரும், தான் இவர்களுடைய நாதன் என்பது வெளிப்படும்படி இவர்களின் கண்கள் முன்பாக வந்து அவன் நின்றால், ஸ்வாமி பராசரபட்டர் அருளிய திருமஞ்சனக்கட்டியத்தில் - த்வம் மே - நீ எனக்கு உரியவன் – என்று ஸர்வேச்வரன் கூறினால், அதனை ஏற்காமல், அஹம் மே – நானே எனக்கு உரியவன் - என்று தன்னைச் சுதந்திரமாக உள்ளவர்களாக எண்ணுகிறார்கள். இதனால், "எங்களுடைய கண் முன்பாக நீ வரவேண்டாம்", என்று கூறி தன்னை

மஹாலக்ஷ்மி மீது ஆணை என்று உரைத்து விலக்கிவிடுவர்கள் என்று எண்ணுகிறான். அதனால்தான், தைத்திரீய உபநிஷத் – ந சக்ஷுஷா பச்யதி கச்சநைநம் - அவனை யாரும் காண இயலாது - என்றும், திருவாய்மொழி (7-2-3) – கட்கிலீ - என்றும் கூறுவதற்கு ஏற்றபடி இவர்களுடைய கண்களுக்குப் புலப்படாமல் உள்ளான். (உறங்குகிற ப்ரஜையைத் தாய்முதுகிலே யணைத்துக் கொண்டு கிடக்குமாப்போலே, தானறிந்த ஸம்பந்தமே ஹேதுவாக விடமாட்டாதே அகவாயிலே யணைத்து) - தன்னையும் தனது தாயையும் குறித்து சரிவர அறிய இயலாத சிறிய குழந்தை உறங்கும்போது, அதன் மீது மிகுந்த பாசம் வைத்துள்ள தாய், தனக்கு அறிவில் எட்டியதான "தான் காப்பாற்றும் பொருள், குழந்தை காக்கப்படும் பொருள்" என்பதற்கு ஏற்ப உண்டான தொடர்பு காரணமாக, அந்தக் குழந்தையின் முதுகில் கட்டி அணைத்துக்கொண்டு உறங்குகிறாள். இதே போன்று எல்லையற்ற காலமாக அறியாமை என்ற மாயையில் உறங்கியபடி, தங்களுடைய ஸ்வரூபம் மற்றும் ஈச்வர ரூபம் குறித்து ஏதும் அறியாமல், அறிவற்ற இந்தச் சேதனர்களை, இவர்களின் எஜமானனாக உள்ள ஸர்வேச்வரன் தான் அறிந்ததான "காக்கப்படும் பொருள், காப்பாற்றும் பொருள்" என்ற ஸம்பந்தம் காரணமாக, கைவிடுவதற்கு இயலாதவனாக உள்ளான். இதனால் தைத்ரிரீய உபநிஷத் - ஆத்மநி திஷ்டந் - எந்தப் பரம்பொருள் ஆத்மாவாக உள்ளானோ - என்பதற்கு ஏற்ப இவர்களுடைய அந்தர்யாமியாக நின்று எப்போதும் அணைத்தபடி உள்ளான்.

**வ்யாக்யானம்** – (ஆட்சியில் தொடர்ச்சி நன்றென்றுவிடாதே ஸத்தையை நோக்கி) அதாவது ஒருவனுடைமையை யொருவ னபஹரித் தாளாநிற்க உடையவனாய் வைத்து உடைமையை யிழந்தவன் தன்னதென்னு மிடந்தோற்றப் பலநாளும் தொடர்ந்து போந்தால் பின்பு வ்யவஹாரத்தில் விஜயஹேதுவாகா நிற்குமிறே; அப்படியே, "அநுபவ விபவாத்" என்கிற சேதநருடைய ஆட்சியிலும் நம்மதென்னுமிடந்தோற்ற ஒருதலை பற்றிக்கொண்டு போருகிற தொடர்ச்சி ப்ரபலமென்று நினைத்து, அந்தராத்மதயா அவஸ்திதனான தானிவர்களை யொருக்காலும் கைவிடாதே தாரகனாய்க்கொண்டு தார்ய பூதரான இவர்கள் ஸத்தையழியாமல் நோக்கி யென்கை. (உடன் கேடனாய்) அதாவது, இப்படி ஸத்தாதாரகதயா ஸ்வர்க்க நரக ப்ரவேசாதி ஸர்வா வஸ்தையிலு மிவர்களுக்குத் துணையாய்ப் போருகை. (உடன்கேடன்) என்பது, இவன் கேடு தன் கேடாயிருக்கு மவனையிறே.

**விளக்கம்** - (ஆட்சியில் தொடர்ச்சி நன்றென்றுவிடாதே ஸத்தையை நோக்கி) – ஒருவனுக்குச் சொந்தமான ஒரு பொருளை ஒருவன் அபகரித்துக்கொண்டு, அதனை அவன் நன்கு அனுபவித்தபடி உள்ளான் என்று வைத்துக்கொள்வோம். அந்தப் பொருளுக்குச் சொந்தக்காரன், "அந்தப் பொருள் என்னுடையது" என்று உணர்ந்தும் விதத்தில் பல நாட்கள் தொடர்ந்து எதிர்த்து வந்தால், அந்தப் போராட்டம் என்பதே நீதிமன்றத்தில் அவனுக்கான நியாயம் கிட்டுவதற்குக் காரணமாகிவிடும் அல்லவோ? அது போன்று – அனுபவ விபவாத் - அனுபவத்தின் பெருமை காரணமாக - என்றுள்ள சேதனர்களின் வாழ்க்கையில் "இவர்கள் நம்முடையவர்கள்" என்ற தனது உரிமை விளங்கும்படியாகச் செய்து, அவர்களை விட்டுவிடாமல் தொடர்ந்து ஒருதலையாகப் பற்றியபடி உள்ள ஸர்வேச்வரனின் விடாமுயற்சி மிகவும் வலிமையானது; இப்படியாக உள்ள ஸர்வேச்வரன் இவர்களுடைய அந்தராத்மாவாக நின்று, எப்போதும் கைவிடாமல் பற்றியபடி, இவர்களுடைய தாரகனாய் இருந்து, தன்னால் தாங்கப்படும் ஜீவனின் இருப்பு என்பது அழிந்துவிடாமல் நோக்கியபடி இருத்தல். (உடன் கேடனாய்) - அவர்களுடைய உயிர்களை இவன் தாங்கியபடி உள்ளதால், அவர்கள் ஸ்வர்க்கத்திற்குப் போனாலும், நரகத்திற்குச் சென்றாலும் அவர்களை விட்டுவிடாமல், அனைத்து நிலைகளிலும் அவர்களுக்குத் துணையாகச் செல்லுதல். (உடன்கேடன்) – ஒருவனுக்கு ஏற்படும் கேடு என்பது தனக்கு ஏற்படும் கேடு என்று சிந்திப்பவன்.

**வ்யாக்யானம்** - (இவர்கள் ஸத்கர்மங்களிலே ப்ரவர்த்திக்கும்போது மீட்கமாட்டாதே அநுமதி தாநத்தைப் பண்ணி உதாஸீநரைப் போலே யிருந்து மீட்கைக் கிடம் பார்த்து) அதாவது, "ஆதாவீச்வர தத்தயைவ புருஷஸ் ஸ்வாதந்த்ர்ய சக்த்யா ஸ்வயம் தத்தத் ஜ்ஞாந சிகீர்ஷண ப்ரயதநாந் யுத்பாதயந் வர்த்ததே" என்கிறபடியே, அடியிலே தான் கொடுத்த ஜ்ஞாத்ருத்வரூப ஸ்வாதந்த்ர்ய சக்தியாலே ஸ்வருச்யநுகுணமாக ப்ரவ்ருத்திகளைப் பண்ணிக்கொண்டு போருகைக்கு யோக்யரான இச்சேந்தநர், துர்வாஸநா பலத்தாலே பாபகர்மங்களிலே ப்ரவர்த்திக்குமளவிலும் அந்தர்யாமியான தான் நினைத்தால் மீட்கலா யிருக்கச்செய்தேயும், அப்படி செய்யுமளவில் ஸ்வாஜ்ஞாரூப சாஸ்த்ர விநியோகமறு மென்னுமத்தைப் பற்றவும், ஸர்வமுக்தி ப்ரஸங்கம் வருமென்னு மத்தைப்பற்றவும் மீட்கமாட்டாதே அநுமதி தாநத்தைப் பண்ணி, உதாஸீந னன்றிக்கே யிருக்கச்செய்தே இவர்கள் ளென்பட்டால் நல்லதென்றிருக்கு முதாஸீநரைப் போலேயிருந்தும், அதில்

நின்று மவர்களை மீட்கைக் குறுப்பாகச் சொல்லிக் கொள்ளத்தக்கதொரு நன்மையாகிற அவகாசம் பார்த்தென்கை.

**விளக்கம்** - (இவர்கள் ஸத்கர்மங்களிலே ப்ரவர்த்திக்கும்போது மீட்கமாட்டாதே அநுமதி தாநத்தைப் பண்ணி உதாஸீநரைப் போலே யிருந்து மீட்கைக் கிடம் பார்த்து) – தத்வசாரத்தில் - ஆதாவீச்வர தத்தயைவ புருஷஸ் ஸ்வாதந்த்ர்ய சக்த்யா ஸ்வயம் தத்தத் ஜ்ஞாந சிகீர்ஷண ப்ரயதநாந் யுத்பாதயந் வர்த்ததே - தனது ஒவ்வொரு முயற்சியின் தொடக்திலும் ஸர்வேச்வரனால் தனக்கு அளிக்கப்பட்ட சுதந்திரம் என்ற சக்தியில் ஜீவன் தானாகவே அதற்கான ஞானம் மற்றும் செயல்பாடுகளைச் செய்கிறான் - என்று கூறுவதற்கு ஏற்ப, தொடக்கத்தில் தான் அளித்த ஞானத்தைக் கொண்டிருத்தல் என்றுள்ள சுதந்திர சக்தி காரணமாக, தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப பலவிதமான செயல்களைச் செய்யும் குணம் கொண்டவர்களாக ஜீவன்கள் உள்ளனர். இவ்விதம் உள்ளபோது துர்வாசனை காரணமாக, அவர்கள் பாவச்செயல்களில் ஈடுபடக்கூடும். அப்போது அவர்களுடைய அந்தர்யாமியாக தான் உள்ளபோதிலும், தான் நினைத்தால் அதனைத் தடுக்கவல்லவனாக உள்ளபோதிலும், அப்படிச் செய்தால் தன்னுடைய ஆணைகள் என்ற சாஸ்த்ரங்கள் வீணாகும் என்பதாலும், பின்னர் அனைவரும் மோக்ஷம் போகும் தகுதி அடைவார்கள் என்பதாலும், தீயவற்றைச் செய்வதற்கும் அனுமதி அளிக்கிறான். அதே நேரத்தில் அவர்களைப் பொருட்படுத்தாமல் உள்ள உதாசீனன் போன்று அல்லாமல், "இவர்களுக்கு என்ன செய்தால் நன்மை ஏற்படும்?", என்றுள்ள உதாசீனனைப் போன்றுள்ளான். இப்படி அவர்களை அந்தத் தீயசெயல்களிலிருந்து மீட்பதற்கு ஏற்ற தருணம் பார்த்தபடி இருந்து.

**மூலம்** - (நன்மையென்று பேரிடலாவதொரு தீமையுங் காணாதே) அதாவது - இப்படி இடம் பார்த்துப்போருமளவில் சாஸ்த்ர மர்யாதாநுகுணமாகவாதல் தானறிந்ததாக வாரோபித்துக் கொண்டாதல் இவர்களை அஸத் கர்மத்தினின்றும் மீட்கைக் கவகாசமா யிருப்பதொரு நன்மை காணதவளவன்றிக்கே. அவ்வஸத் கர்மங்கள் தன்னிலே நன்மையென்று பேரிட்டுக் கொள்ளலாவதொரு தீமைதானு முட்படக் காணப்பெறாதே யென்கை. (நன்மையென்று பேரிடலாவதொரு தீமையாவது), பரஹிம்ஸை செய்து கொண்டு திரியா நிற்கச்செய்தே பகவத் பாகவத விரோதிகளா யிருப்பாரை யாத்ருச்சிகமாக ஹிம்ஸிக்கை. விஷய ப்ரவணனாய் பகவத் தாஸிகளைப் பின்பற்றிப்

பலகாலும் கோயில்களிலே புக்குப் புறப்படுகை, பயிர் தின்ற பசுவைத் தொடர்ந்தவாறே அதொரு கோயிலை வளைய வருமாகில் அத்தை அடிக்கையிலுண்டான ஆக்ரஹத்தாலே தானுமத்தை வளைய வருகை, நிந்தார்த்தமாகத் திருநாமங்களைச் சொல்லுகை முதலானவை.

**விளக்கம்** - (நன்மையென்று பேரிடலாவதொரு தீமையுங் காணாதே) - இவ்விதமாக இவர்களுக்கு உதவ ஒரு இடம் (தருணம்) பார்த்துக் கொண்டிருக்கும்போது சாஸ்த்ர எல்லைக்கு உட்பட்டோ அல்லது அவன் இவர்களுடைய செயல் இன்னது என்று அறிந்து கொண்டோ இவர்களிடம் நன்மையைக் காண முயல்கிறான்; அது மட்டும் அல்லாமல், அந்தந்த தீயகர்மங்களில் ஏதேனும் ஒன்றையாவது நன்மை என்று கருதிக் கொள்ளும் விதத்தில் எந்த ஒரு தீமையும் இல்லை என்று பொருள். (நன்மையென்று பேரிடலாவதொரு தீமையாவது) - மற்றவர்களை ஏதேனும் ஒரு விதத்தில் துன்புறுத்தியபடி உள்ளபோதும், ஸர்வேச்வரன் மற்றும் அவனுடைய அடியார்களைத் துன்புறுத்துவர்களைத் தற்செயலாகத் துன்புறுத்துதல்; பெண்களிடம் உள்ள சபலம் காரணமாக பகவத்தாஸிகளைப் பின்தொடர்ந்து கோயில்களுக்குள் பலமுறை சென்று வருதல்; தான் வளர்த்த பசுவானது தான் வளர்த்த பயிரையே மேயும்போது அதனை விரட்டியபடி செல்லும் நேரத்தில், அந்தப் பசு தற்செயலாக ஒரு கோயிலை வலம் வரும்போது, அதனை அடிக்கவேண்டும் என்று பிடிவாதம் காரணமாக, தானும் அதன் பின்னாலேயே கோயிலை வலம் வருதல்; ஒருவனைத் திட்டுவதற்காக ஸர்வேச்வரனின் திருநாமங்களைப் பயன்படுத்துதல் போன்றவை.

**வ்யாக்யானம்** - (நெற்றியைக் கொத்திப் பார்த்தாலொரு வழியாலும் பசை காணா தொழிந்தால் அப்ராப்யமென்று கண்ணநீரோடே மீளுவது) அதாவது, ஸர்ப்ப தஷ்டராய் ம்ருத்கல்பரானவர்களை மந்த்ராதிகளாலே யெழுப்புகைக்கு ப்ராண ஸ்திதி பரீக்ஷார்த்தமாக நெற்றியைக் கொத்திப் பார்த்தால் ஒரு ப்ரகாரத்தாலும் ரக்தப் பசை காணாதவளவில், இவ்விஷயம் நமக்கினி கைபுகுராதென்று இழவோடே கைவாங்கும் பந்துக்களைப்போலே, நன்மை காணாதவளவில் விடாதே நன்மையென்று பேரிடலாவ தொரு தீமைதானுண்டோ வென்னு மளவாகப் பார்த்தவளவிலும் ஒரு ப்ரகாரத்தாலு மிவர்கள் பக்கல் பசை காணாவிட்டால், இவ்விஷயம் நமக்கு ப்ராபிக்கப்படுமதல்ல, இத்தை யிழந்தோமென் றழுது கண்ணநீரோடே மீளுவதென்கை.

**விளக்கம் -** (நெற்றியைக் கொத்திப் பார்த்தாலொரு வழியாலும் பசை காணா தொழிந்தால் அப்ராப்யமென்று கண்ணநீரோடே மீளுவது) - பாம்பு கடித்து இறக்கும் தறுவாயில் உள்ள ஒருவனை மந்த்ரம் போன்றவற்றால் பிழைத்து எழ வைக்க முயல்வர்; அப்போது அவன் உயிருடன் உள்ளானா என்று பரிசோதிக்கும் விதமாக அவனுடைய நெற்றியில் கொத்திப் பார்ப்பர். அப்போது அங்கு இரத்தம் வரவில்லை என்றால், “இவன் இறந்துவிட்டான்” என்று அவனைக் கைவிட்டுப் போவார்கள். அத்தகையை உறவினர்கள் போன்று நன்மை என்பது சிறிதும் இல்லாமலும், நன்மை என்று கருதக்கூடிய தீமையும் இல்லாமலும் உள்ளபோது, எந்தவிதத்தாலும் கரையேற்ற இயலாதவர்கள் குறித்து, “இவர்கள் இனி நமக்குக் கிடைக்கமாட்டார்கள். இவரை நாம் இழந்தோம்” என்று அழுது கொண்டே கண்ணீரோடு செல்லுதல் என்று பொருள்.

**வ்யாக்யானம் -** அன்றிக்கே, (நன்மையென்று பேரிடலாவதொரு தீமை) என்கிறது, “ச்யேநேநாபிசரந் யஜேத” என்று ஆஸ்திக்ய ஜநகமாக விஹிதமாகையாலே நன்மையென்று பேரிடலாயிருக்குமதாய், பரஹிம்ஸையாகையாலே தீமையாயிருக்கிற ச்யேநவித்யநுஷ்டாநத்தையாய், அங்கீகாரத்துக்குடலானதொரு நன்மை காணாதவளவன் றிக்கே சாஸ்த்ர மர்யாதையாலே மேல் தானாகிலுமாக்கிக் கொள்ளுகைக்கு யோக்யமான சாஸ்த்ராஸ்திக்யத்துக் குடலான அதுதானுமுட்பட இவர்கள் பக்கல் காணப்பெறாதே யென்னவுமாம். அப்போதைக்கு, (நெற்றியைக் கொத்திப் பார்த்தால்) இத்யாதியாலே, ஜ்ஞாத ஸுக்ருத யோக்யதை யில்லாமையாலே அஜ்ஞாத ஸுக்ருதந்தா னுண்டோ வென்றாராய்ந்து, அதுவுமில்லாமையாலே ஒருவழியாலு மங்கீகார யோக்யதையற்று இழவோடே மீளும்படி சொல்லுகிறது.

**விளக்கம்** - அல்லது, “நன்மையென்று பேரிடலாவதொரு தீமை” என்பதற்கு வேறு பொருளும் உரைக்கலாம். ச்யேநேநாபிசரந் யஜேத - மற்றவர்களுக்குத் துன்பம் உண்டாக்க எண்ணுபவன் (அல்லது கொல்ல எண்ணுபவன்) சேந யாகம் செய்வானாக - என்று வேதத்தில் ஆஸ்திகபுத்தி உண்டாவதற்காக உரைக்கப்பட்டது. இந்தச் செயல் நன்மை என்று உரைக்கவல்லதாகவும், மற்றவர்களைத் துன்புறுத்துவதால் தீமையாகவும் உள்ள சேநயாகத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இது ஏற்றுக் கொள்வதற்கான தகுதியற்ற எந்த ஒரு நன்மையும் இல்லாதது; சாஸ்த்ரவரம்புகளுக்கு உட்பட்டது; சாஸ்த்ர நம்பிக்கை என்பதைப் பிற்காலத்தில் உண்டாக்கவல்லது என்றபோதிலும் இவர்களிடம்

இதுவும் காணப்படாமல் உள்ளது என்று பொருள். இவ்விதம் பொருள் கொள்ளும்போது "நெற்றியைக் கொத்திப் பார்த்தால்" என்பது எதனைக் குறிக்கும் என்றால் - அறிந்து செய்த நன்மை காணப்படவில்லை, அறியாதவிதத்தில் செய்த நன்மை (புண்ணியம்) என்று ஏதும் உண்டோ என்று ஆராய்ந்தால், அதுவும் இல்லை; ஆக எந்த ஒரு மார்க்கத்தாலும் கரையேற்றுவதற்குத் தகுதி இல்லாத நிலை அறிந்து பின்வாங்குதல் என்பதாகும்.

**வ்யாக்யானம்** - (தனக்கேற இடம் பெற்றவளவிலே) அதாவது - இப்படி மீண்டாப்போலே மீண்டுவிடுகையன்றிக்கே இவர்களை உஜ்ஜீவிப்பிக்கையி லுண்டான சாபலத்தாலே பின்னையு மங்கீகரிக்கைக் கவகாசம் பார்த்துத் திரியும் தனக்கேற அவகாசம் பெற்ற வளவிலே யென்கை.

**விளக்கம்** - (தனக்கேற இடம் பெற்றவளவிலே) - இவ்விதம் பாம்பால் கடிக்கப்பட்ட அவர்களைக் கைவிடுவது போன்று கைவிடாமல், இவர்களைக் கரையேற்றவேண்டும் என்ற ஆசை காரணமாக, இவர்கள் வாழ்க்கையில் தன்னால் ஏற்கப்படும் தருணம் என்றாவது வருமோ என்று எதிர்பார்த்தபடி இருத்தல்.

**வ்யாக்யானம்** - (என்னூரைச் சொன்னாய் இத்யாதி, என்றாப்போலே சிலவற்றை யேறிட்டு) அதாவது, அவ்வூர் இவ்வூர் என்று இவன் பல ஊர்களையுஞ் சொல்லா நிற்க, கோயில் திருமலை முதலாகத் தானுகந்த ஊர்களிலே யேதேனுமொன்றைச் சொன்னால், அம்மாத்ரமே பற்றாசாக, என்னுடைய ஊரைச் சொன்னாய் என்றும்; அவர் இவர் என்றாப்போலே சொல்லா நிற்க, ஒருவன் பேரைச் சொல்லுகிறதாக திருநாமங்களிலே யொன்றைச் சொன்னால், அவ்வளவிவே கொண்டு, என் பேரைச் சொன்னாய் என்றும்; சில பாகவதர்கள் காட்டிலே வழி போகா நிற்க அவர்களை ஹிம்ஸித்துக் கையிலுள்ளது பறிப்பதாக வழி பறிக்கார ருத்யோகிக்கிறவளவில், ஸ்வகார்யத்திலே போகிறானொரு சேவகன் அவர்கள் பின்னே தோன்ற, அவனை தத்ரக்ஷணார்த்தமாக வருகிறனாக நினைத்து அவர்கள் பயப்பட்டுப் பறியாதொழிய, அது பற்றாசாக அந்த சேவகனை, என்னடியாரை நோக்கினாய் என்றும்; ஒருவன் கர்மகாலத்தில் தன் வயல் தீயப்புக்கவாறே நீருள்ளவிடத்தே நின்றும் வயலிலே வர நெடுந்தூரத்திலே துலையிட் டிறையாநிற்க, மருபூமியிலே நெடுந்தூரம் நடந்து, இத்தனை ஜலம் பெறில் நம் ப்ராணன் தரிக்கும் என்னும்படி யிளைத்து வருகிறார்கள் சில பாகவதர், அவனறியாமல் அந்த நீரிலே தங்கள்

ஸ்ரீபாதம் முதலானவற்றை விளக்கி இளைப்பாறிப் போனால், அதடியாக, என்னடியார் விடாயைத் தீர்த்தாய் என்றும்; ஒருவன் தனக்குச் சூதுசதுரங்கம் பொருகைக்கும், காற்றபேக்ஷிதமானபோது வந்திருக்கைக்கு இவற்றுக்காகப் புறந்திண்ணை கட்டிவைக்க, வர்ஷபீடிதராய் அங்கே யொதுங்குவோமென்று வருகிறார் சில பாகவதர் அங்கே யொதுங்கி இருந்துபோக, தாவந்மாத்ரத்தாலே, என்னடியார்க்கு ஒதுங்க நிழலைக் கொடுத்தாய் என்றும்; இப்புடைகளிலே சிலவற்றை அவர்க ளறியாதிருக்கத் தானே யாரோபித் தென்கை.

**விளக்கம் -** (என்னூரைச் சொன்னாய் இத்யாதி, என்றாப்போலே சிலவற்றை யேறிட்டு)- இவன், “அந்த ஊர், இந்த ஊர்” என்று பல ஊர்களின் பெயர்களை உரைத்தபடி உள்ளபோது, “திருவரங்கம், திருமலை” போன்றதான, தான் மிகுந்த விருப்பத்துடன் வசிக்கின்ற ஊரின் பெயர்களைத் தற்செயலாக உரைத்தால், அதனை மட்டுமே ஸர்வேச்வரன் தனது கருத்தில் கொண்டு, “என்னுடைய ஊரின் பெயரை உரைத்தாயே” என்றும்; “அவர், இவர்” என்று மற்றவர்களின் பெயரை உரைக்கும்போது, அவர்களின் பெயராக உள்ள இவன் திருநாமங்களில் ஏதேனும் ஒன்றை உச்சரித்தாலும், அதனைக் கருத்தில் கொண்டவனாக, “எனது திருநாமத்தை உச்சரித்தாயே” என்றும்; ஸர்வேச்வரனுடைய அடியார்கள் சிலர் காட்டில் செல்லும்போது அவர்களைத் துன்புறுத்தி, அவர்கள் கைகளில் உள்ளவற்றைப் பறிப்பதற்காக வழிப்பறித் திருடர்கள் முயலும்போது, தனது செயல் ஒன்றை செய்யும் பொருட்டு அந்த வழியாக வரும் சேவகன் ஒருவனை அந்தத் திருடர்கள் கண்டு, அவன் அந்த அடியார்களைக் காக்கவே வருகிறான் என்று அவனைக் கண்டு பயந்து, வழிப்பறி செய்யாமல் ஓடிவிடும்போது, அந்தச் சேவகனை “எனது அடியார்களை நீ காப்பாற்றினாயே” என்றும்; ஒருவன் கோடைக் காலத்தில் காய்ந்து போன தனது வயலில் நீர் நிரப்பும் விதமாக நீர் உள்ள இடத்திற்குச் சென்று வயலை நிரப்புவதற்காக ஏற்றம் உள்ள இடத்தில் ஏற்றத்தை இறைக்கின்ற நேரத்தில், தண்ணீர் இல்லாத இடங்களில் நீண்ட நேரம் நடந்து வந்து, சிறிதளவு என்றாலும் தண்ணீர் கிட்டினால் மட்டுமே பிழைக்க இயலும் என்று வரும் அடியார்களின் தாகம் அவன் இறைத்த நீரின் மூலம் தீர்வதுடன் அல்லாமல், அவர்கள் தங்களுடைய திருவடிகளைக் கழுவி இளைப்பாறவும் உதவும்விதமாக அந்த நீர் உள்ளது என்னும்போது, “எனது அடியார்களின் தாகம் தீர்த்தாயே” என்றும்; ஒருவன் தனது பொழுதுபோக்கும் விதமாக சூதாட்டம், சதுரங்கம் முதலானவற்றை விளையாடவும், தான்

அமர்ந்து காற்று வாங்க எண்ணும்போது அமர்ந்து இளைப்பாறவும் கட்டி வைத்த திண்ணையில் அடைமழை காரணமாக அந்த வழியாக வரும் அடியார்கள் ஒதுங்கி நிற்கும் போது, அதனைக் கருத்தில் நிறுத்தியவனாக, "எனது அடியார்கள் ஒதுங்க நிழல் அளித்தாயே" என்றும் ஸர்வேச்வரன் எண்ணுகிறான். அதாவது உதவி செய்தவர்கள், "நாம் உதவி செய்தோம்" என்று உணராமல் உள்ளபோதிலும், அவர்கள் செய்த உதவியைக் கணக்கில் கொள்கிறான் என்று கருத்து.

**வ்யாக்யானம்** - (மடிமாங்காயிட்டு) மடிமாங்கா யிடுகையாவது, மாங்கா யெடாமல் வெறுமனே வழி போகிறவன் மடியிலே மாங்காயை மறைத்துக்கொண்டு சென்றிட்டு, மாங்காயைக் களவுகண்டா யென்கை. இது வலிய ஆரோபிக்குமதுக்கு த்ருஷ்டாந்தம்.

**விளக்கம்** - (மடிமாங்காயிட்டு) - மாங்காயை ஒருவன் எடுக்காமல் போனபோதிலும் அவன் மடியில் அவன் அறியாதவிதத்தில் மாங்காயை மறைத்துக் கொண்டுபோய் அவனிடம் வைத்துவிட்டு, "மாங்காய் திருடினாய்" என்று பழி கூறுவது போன்று, ஒருவன் செய்யாமல் உள்ளபோதிலும், அவன் செய்ததாகக் கூறுதல் என்பது, மேலே கூறப்பட்ட ஸர்வேச்வரனின் சிந்தைக்கு உதாரணம்.

**வ்யாக்யானம்** - (பொன் வாணியன் இத்யாதி, ஒன்று பத்தாக்கி நடத்திக்கொண்டு போரும்) அதாவது, பொன் வாணியம் செய்வானொருவன் ஆரேனும் பரீக்ஷிக்கைக்குக் காட்டின பொன்னை உரை கல்லிலே யுரைத்து ஒன்றும் சோராதபடி மெழுகாலே யொத்தி யெடுத்து நாளோட்டத்துடனே கால் பொன்னாய்த்து, கழஞ்சு பொன்னாய்த்து என்று திரட்டுமாப் போலே, ஒரு ஜந்ம மிரண்டு ஜந்மத்தள வன்றிக்கே சேதநருடைய ஜந்மபரம்பரைகள் தோறும், விடாயைத் தீர்த்தாய், ஒதுங்க நிழலைக் கொடுத்தாய் என்றாப்போலே யுண்டாம் யாத்ருச்சிகம், ஊரைச் சொன்னாய், பேரைச் சொன்னாய் என்றாப்போலே வரும் ப்ராஸங்கிகம், அடியாரை நோக்கினாய் என்றாப்போலே யுண்டா மாநுஷங்கிகம் என்கிற ஸுக்ருத விஷயங்களை, சாஸ்த்ர விஹிதமும் சேதந விதிதமுமன்றியேயிருக்கத் தானே கல்பித்து, கல்பிதமானவை தன்னை ஒன்றை அநேகமாக்கி நடத்திக் கொண்டு போருமென்கை.

**விளக்கம்** - (பொன் வாணியன் இத்யாதி, ஒன்று பத்தாக்கி நடத்திக்கொண்டு போரும்) – பொன் வியாபாரம் செய்யும் ஒருவன் தன்னிடம் பரிசோதிக்கும்விதமாக ஒருவன் வந்து கொடுக்கும் தங்கத்தை உரைகல்லில் உரசிப் பார்க்கிறான். பின்னர் அந்தத் தங்கம் உரைகல்லில் சேர்ந்து விடாதபடி மெழுகு கொண்டு அதனை ஒற்றி எடுத்து திரட்டுகிறான். இப்படியே செய்து நாளடைவில் கால் சவரன் சேர்த்தது, ஒரு கழஞ்சு சவரன் சேர்ந்தது என்று சேமிக்கிறான். இது போன்று ஒரு ஜன்மம், இரண்டு ஜன்மம் அல்லாமல், பல ஜன்மங்களாக எனது அடியார்களின் தாகம் தீர்த்தாய், ஒதுங்க நிழல் அளித்தாய் என்பது போன்று தற்செயலாக ஏற்படும் புண்ணியங்கள்; எனது ஊரை உரைத்தாய், எனது திருநாமம் கூறினாய் என்பது போன்ற புண்ணியங்கள்; எனது அடியாரைக் காப்பாற்றினாய் என்பது போன்றுள்ள செயல்களால் ஏற்படும் புண்ணியம் ஆகியவற்றை ஸர்வேச்வரன் தானாகவே மனதில் கணக்கு வைக்கிறான். இவை சாஸ்த்ரங்களால் கூறப்பட்டதும், அவர்கள் அறிந்து கொண்டு செய்ததும் அல்ல; என்றாலும் தானாகவே அவற்றைப் புண்ணியம் என்று அவன் கொள்கிறான். இவ்விதம் தானாகவே கற்பித்துக் கொண்டதைப் பல மடங்காக்கிக் கொள்கிறான் என்று கருத்து.

382. லலிதா சரிதாதிகளிலே இவ்வர்த்தம் சுருக்கமொழியக் காணலாம்.

அவதாரிகை - இவ்வஜ்ஞாந ஸுக்ருதமடியாக ஈச்வர னங்கீகரிக்குமென்னுமது காணலா மிடமுண்டோ வென்ன (லலிதா சரிதாதிகளிலே இவ்வர்த்தம் சுருக்கமொழியக் காணலாம்) என்கிறார்.

**விளக்கம்** - புண்ணியம் என்று அறியாமல் செய்த செயல்களை ஸர்வேச்வரன் ஏற்றுக் கொள்வதற்குத் தகுந்த ப்ரமாணம் ஏதும் உண்டோ என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, விதர்ப்பராஜ ஸுதையாய் காசீராஜ மஹிஷியான லலிதை, ஸபத்நிகளான முந்நூறு ஸ்த்ரீகளிலுங்காட்டில் ஆபிரூப்யம் அதிவச்ய பர்த்ருமத்தை தேஹ தேஜஸ்ஸு ஸர்வகுணஸம்பந்நதை இவை யுடையளாய் அஹோராத்ர விபாகமற பகவத் ஸந்நிதியில் அநேகந் திருவிளக்கேற்றி அதிலே நிரதையாய்ப் போருகிறபடியைக் கண்டு, "உனக் கிவ்வாபிரூப்யாதிகளுக்கும் தீபாரோபண கைங்கர்ய ப்ராவண்யத்துக்குங்

காரணமென்” என்று ஸபத்நிகள் கேட்க, அவள் ஜாதி ஸ்ம்ருதியோடே பிறந்தவளாகையாலே, “ததேஷா கதயாம்யேதத் யத் வ்ருத்தம் மம சோபநா:” என்று தொடங்கி, “ஸௌவீர ராஜஸ்ய புரா மைத்ரேயோபூத் புரோஹித:, தேந சாயதநம் விஷ்ணோ: காரிதம் தேவிகாதடே, அஹந்யஹநி சுச்ரூஷாம் புஷ்ப தூபாம்பு லேபநை:, தீபாதாநாதிபிச்சைவ சக்ரே தத்ரவஸந் த்விஜ:” என்று ஸௌவீரராஜ புரோஹிதனான மைத்ரேயன், தேவியாற்றங்கரையிலே ஓரெம்பெருமான் கோயிலையுண்டாக்கி, அங்கே நாள்தோறும் ஸகல கைங்கர்யங்களையும் பண்ணி வர்த்தித்தபடியையும்; “கார்த்திகே தீபிதோ தீப உபாத்தஸ் தேநஸைகதா, ஆஸீந் நிர்வாண பூயிஷ்டோ தேவஸ்ய புரதோ நிசி, தேவதாயதநேசாஸம் தத்ரா ஹமபி மூஷிகா, ப்ரதீபவர்த்திக்ரஹணே க்ருதபுத்திர் வராநநா:, க்ருஹீதாச மயா வர்த்தி ப்ருஷதம்சோரராவச, நஷ்டாசாஹம் ததஸ்தஸ்ய மார்ஜாலஸ்ய பயாநுகா, வக்த்ர ப்ராந்தேந நச்யந்த்யா ஸதீப: ப்ரேரிதோமயா, ஜஜ்வால பூர்வவத் தீப்த்யா தஸ்மிந் நாயதநே புந:” என்று கார்த்திகமாஸத்திலே, அவனந்த எம்பெருமான் ஸந்நிதியிலேற்றின அத்திருவிளக்கு அவியத்தேடுகிறவளவிலே, அக்கோயிலிலே யொரு பெண்ணெலியாய்க் கொண்டு வர்த்திக்கிறதான் அத்திருவிளக்கில் திரியைக் கவ்விக்கொண்டு போவதாக நினைத்துச்சென்று கவ்வினவிளவிலே ஒரு பூனை கத்தின குரலைக் கேட்டஞ்சி மரணத்தையடையா நிற்க, அப்போது பயத்தாலே நடுங்குகிற தன் மூஞ்சியாலே அந்தத் திரி தூண்டப்பட்டு முன்புபோலே அத்திருவிளக்குப் பளபளத்து எரிந்தபடியையும்; “ம்ருதா சாஹம் ததோ ஜாதா வைதர்ப்பீ ராஜகந்யகா: ஜாதிஸ்மரா காந்திமதீ பவதீநாம் பராகுணை:” என்று அநந்தரம் தான் மரித்து விதர்ப்பராஜனுக்குப் புத்ரியாய் ஜாதி ஸ்ம்ருத்யாதிகளோடே பிறந்தபடியையும்; “ஏஷ ப்ரபாவோ தீபஸ்ய கார்த்திகே மாஸி சோபநா:, தத்தஸ்ய விஷ்ண்வாயதநே யஸ்யேயம் வ்யுஷ்டிருத்தமா, அஸங்கல்பிதமப்யஸ்ய ப்ரேரணம் யத்க்ருதம் மயா, விஷ்ண்வாடயதந தீபஸ்ய தஸ்யைதத் புஜ்யதே பலம், ததோ ஜாதி ஸ்ம்ருதிர் ஜந்ம மாநுஷ்யம் சோபநம் வபு: வச்ய: பதிர் மே ஸர்வாஸாம் கிம்புநர் தீபதாயிநாம்” என்று, அந்த அஜ்ஞாத ஸுக்ருத பலமாக தனக்கிந்த வேற்றங்களெல்லா முண்டான படியையும் சொன்னாளென்று, ஸ்ரீவிஷ்ணுதர்மத்திலே லலிதாசரிதம் விஸ்தரேண சொல்லப்பட்டதிறே.

**விளக்கம்** - விதர்ப்பதேசத்தின் அரசகுமாரியும், காசிராஜனின் பட்டமஹிஷியுமான லலிதை என்பவள், அந்த அரசனின் மற்ற முன்னூறு மனைவிகளைக் காட்டிலும் அதிகமான அழகு, கணவனை வசீகரிக்கும் திறமை, சரீர தேஜஸ், அனைத்து

நற்குணங்களும் ஒருங்கே அமைந்திருத்தல் என்னும் பல குணாதியசங்கள் கொண்டவள் ஆவாள். மேலும் அவள் பகல், இரவு என்று ஆராயாமல் எப்போதும் ஸர்வேச்வரனுடைய ஸந்நிதியில் திருவிளக்குகள் ஏற்றிக் கொண்டு, அதிலேயே எப்போதும் ஈடுபட்டவளாகத் தனது பொழுதைக் கழித்தாள். இதனைக் கண்ட மற்ற மனைவிமார்கள் அவளிடம், "உன்னிடம் அழகு முதலான பலவும் ஒருங்கே பொருந்தியுள்ளபோது, நீ இப்படியாக விளக்குகள் ஏற்றிக் கைங்கர்யம் செய்து வருவதன் காரணம் என்ன?", என்று கேட்டனர். அவள் தனது பூர்வஜன்ம அறிவோடு பிறந்தவள் என்பதால் பின்வருமாறு உரைக்கத் தொடங்கினாள். ஸ்ரீவிஷ்ணுதர்மம் – ததேஷா கதயாம்யேதத் யத் வ்ருத்தம் மம சோபநா: - சிறந்த பெண்களே! என்னுடைய எந்த ஒரு சரிதத்தை நீங்கள் கேட்க ஆவலாக உள்ளீர்களோ அதனை நான் கூறுகிறேன் – என்று உரைக்கத் தொடங்கினாள். ஸ்ரீவிஷ்ணுதர்மம் - ஸௌவீர ராஜஸ்ய புரா மைத்ரேயோபூத் புரோஹித:, தேந சாயதநம் விஷ்ணோ: காரிதம் தேவிகாதடே, அஹந்யஹநி சுச்ரூஷாம் புஷ்ப தூபாம்பு லேபநை:, தீபாதாநாதிபிச்சைவ சக்ரே தத்ரவஸந் த்விஜ: – முன்பு ஒரு காலத்தில் ஸௌவீர அரசனுடைய புரோஹிதனாக மைத்ரேயன் என்பவன் இருந்தான். அவன் தேவியாற்றங் கரையில் மஹாவிஷ்ணுவுக்கு ஒரு கோயில் கட்டினான். அந்த இடத்திலேயே அவன் வாழ்ந்து வந்தான். அவன் அன்றாடம் அந்த இறைவனுக்கு மலர்கள், தூபம், தீர்த்தம் முதலானவற்றைச் சமர்ப்பித்து, திருவிளக்கு ஏற்றுவதையும் செய்தபடி இருந்தான் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஸௌவீர அரசனின் புரோஹிதனான மைத்ரேயன், தேவியாற்றங் கரையில் ஸர்வேச்வரனுக்கு ஒரு திருக்கோயிலை நிர்மாணித்து, அங்கு அன்றாடம் அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்தபடி, அங்கேயே வாழ்ந்து வந்ததைக் குறித்து உரைத்தாள். ஸ்ரீவிஷ்ணுதர்மம் - கார்த்திகே தீபிதோ தீப உபாத்தஸ் தேநசைகதா, ஆஸீந் நிர்வாண பூயிஷ்டோ தேவஸ்ய புரதோ நிசி, தேவதாயதநேசாஸம் தத்ரா ஹமபி மூஷிகா, ப்ரதீபவர்த்திக்ரஹணே க்ருதபுத்திர் வராநநா:, க்ருஹீதாச மயா வர்த்தி ப்ருஷதம்சோரராவச, நஷ்டாசாஹம் ததஸ்தஸ்ய மார்ஜாலஸ்ய பயாநுகா, வக்த்ர ப்ராந்தேந நச்யந்த்யா ஸதீப: ப்ரேரிதோமயா, ஜஜ்வால பூர்வவத் தீப்த்யா தஸ்மிந் நாயதநே புந: - ஒரு கார்த்திகை மாஸத்தில், அந்தப் புரோஹிதன் ஸர்வேச்வரனுடைய கோவிலில் திருவிளக்கு ஏற்றினான். அந்த விளக்கானது இரவில் அணையத் தொடங்கியது. அப்போது அந்தத் திருக்கோயிலில் ஒரு பெண் எலியாக வாழ்ந்து வந்த நான், அந்த விளக்கின் திரியைக் கவ்விக்கொண்டு செல்ல முனைந்தேன். அப்போது அங்கு ஒரு பூனை கத்தியது. இதனைக் கேட்டு அச்சம் அடைந்த நான் நடுங்கினேன்.

எனது முகத்தின் நடுக்கம் காரணமாக அந்த விளக்கின் திரியானது தூண்டப்பட்டு முன்பு போன்று பிரகாசமாக எரியத் தொடங்கியது - என்று உரைத்தாள். ஸ்ரீவிஷ்ணுதர்மம் - ம்ருதா சாஹம் ததோ ஜாதா வைதர்ப்பீ ராஜகந்யகா: ஜாதிஸ்மரா காந்திமதீ பவதீநாம் பராகுணை: - அதன் பின்னர் மரணம் அடைந்த நான், விதர்ப்பராஜனின் புத்திரியாக, முற்பிறவி குறித்த அறிவும், அழகும், உயர்ந்த குணங்களும் கூடியவளாகப் பிறந்தேன் - என்றாள். ஸ்ரீவிஷ்ணுதர்மம் - ஏஷ ப்ரபாவோ தீபஸ்ய கார்த்திகே மாஸி சோபநா:, தத்தஸ்ய விஷ்ண்வாயதநே யஸ்யேயம் வ்யுஷ்டிருத்தமா, அஸங்கல்பிதமப்யஸ்ய ப்ரேரணம் யத்க்ருதம் மயா, விஷ்ண்வாடயதந தீபஸ்ய தஸ்யைதத் புஜ்யதே பலம், ததோ ஜாதி ஸ்ம்ருதிர் ஜந்ம மாநுஷ்யம் சோபநம் வபு: வச்ய: பதிர் மே ஸர்வாஸாம் கிம்புநர் தீபதாயிநாம் – பெண்களே! கார்த்திகை மாதம் ஏற்றப்படும் விளக்கிற்கு இப்படிப்பட்ட மேன்மை உண்டு. ஸர்வேச்வரனுடைய ஸந்நிதியில் சமர்ப்பிக்கப்பட்ட அந்த விளக்கு என்னால், நான் அறியாமல் தூண்டப்பட்டதால் இத்தகைய நன்மை எனக்கு ஏற்பட்டது. அதன் பின்னர் முற்பிறவி குறித்த அறிவோடு கூடிய மனிதப்பிறவி, அழகு, கணவனை வசீகரிக்கும் திறன் போன்றவை அனைத்தும் எனக்குக் கிட்டியது. ஆக பகவத் ஸந்நிதியில் திருவிளக்கு ஏற்றுபவர்களுக்கு உண்டாகவல்ல நன்மைகளைக் கூறவும் வேண்டுமோ – என்று, தான் அறியாமல் செய்த அந்த புண்ணியத்தின் பலனாகத் தனக்கு அந்தப் பிறவியில் இத்தகைய ஏற்றங்கள் உண்டானது என்பதையும் உரைத்தாள். இப்படியாக ஸ்ரீவிஷ்ணுதர்மத்தில் லலிதா சரித்ரமானது எந்தவிதமான சுருக்கமும் இல்லாமல் விரிவாக உரைக்கப்பட்டது அல்லவோ?

**வ்யாக்யானம் -** இனி, ஆதிசப்தத்தாலே, தத்வவித்தாயிருப்பானொரு ப்ராஹ்மணனுடைய புத்ரியான ஸுவ்ரதை அதிபால்யத்திலே மாத்ருஹீநையாய், அது தோற்றாதபடி பரமதயாளுவான பிதா வளர்த்துக் கொண்டு போக வளர்ந்து கொண்டு, இனி ஒருவன் கையிலே ப்ரதாநம் பண்ண ப்ராப்தமென்னுமளவிலே, அந்தப் பிதாவும் மரிக்கையாலே அதீவ சோகார்த்தையாய், "யேந ஸம்வர்த்திதா பாலா யேநாஸ்மி பரிரக்ஷிதா, தேந பித்ரா வியுக்தாஹம் நஜீவேயம் கதஞ்சந நத்யாம்வா நிபதிஷ்யாமி ஸமித்தேவா ஹுதாசநே, பர்வதாத்வா பதிஷ்யாமி பித்ருஹீநா நிராச்ரயா" என்று தேஹ த்யாகோத் யுக்தையான வளவிலே, "ஆகத்ய கருணாவிஷ்டோ யமஸ் ஸர்வஹிதேரத:, ஸ்தவிரோ ப்ராஹ்மணோ புத்வா ப்ரோவா சேதம் வசஸ் ததா" என்கிறபடியே, ஸர்வப்ராணிகளுடையவும் ஹிதத்திலே நிரதனாயிருக்கும் யமன் க்ருபாவிஷ்டனாய் ஒரு வ்ருத்த ப்ராஹ்மண

வேஷத்தைக் கொண்டு வந்து, “அலம்பாலே! விசாலாக்ஷி ரோதநேநாதி விஹ்வலே, நபூய: ப்ராப்யதே தாதஸ் தஸ்மாந் நார்ஹஸி சோசிதும்” இத்யாதியாலே இவளுடைய சோகாபநோதநத்தைப் பண்ணி; “தஸ்மாத் த்வம் துக்க முத்ஸ்ருஜ்ய ச்ரோதுமர்ஹஸி ஸுவ்ரதே, பித்ருப்யாம் விப்ரயோகோயம் யேநாபூத் கர்மணா தவ” என்று, ஆகையால் உன்னுடைய துக்கத்தை விட்டு, இந்த மாதாபித்ரு வியோகம் உன்னுடைய யாதொரு கர்மத்தால் யுண்டாய்த்து அத்தைச் சொல்லக் கேளென்று தானே சொல்லி, “புரா த்வம் ஸுந்தரீ நாம வேச்யா பரமஸுந்தரீ, ந்ருத்த கீதாதி நிபுணா வீணா வேணு விசக்ஷணா” என்று தொடங்கி, நீ பூர்வஜந்மத்திலே ஸுந்தரி யென்பாளொரு வேச்யை, உன்னாலே வசீக்ருதனாய் உன்னுடனே ஸம்ஸர்கித்துப் போருவானொரு ப்ராஹ்மண புத்ரனை உன் நிமித்தமாக ஸ்பர்த்தையாலே யொரு சூத்ரன் வதிக்க, அவனுடைய மாதாபிதாக்கள், “எங்கள் புத்ரனைக் கொல்லுவித்த நீ, இனியொரு ஜந்மத்திலே மாதாபிதாக்களை இழந்து மறுகிப் பரிதபிப்பாய்”, என்று சபித்தபடியாலே காணுனக்கிந்த சோகம் வந்ததென்ன; “ஆனால் இந்த பாபிநியான நானுத்தம ஜந்மத்திலே பிறக்கைக்கு ஹேதுவென்” என்று கேட்க; “ச்ருணு தஸ்ய மஹாப்ராஜ்ஞே நிமித்தம் கததோமம, யேந த்வம் ப்ராஹ்மணஸ்ய அஸ்ய குலே ஜாதா மஹாத்மந:” என்று தொடங்கி, ஜ்ஞாநாதிகனாய் ஒன்றிலும் பற்றற்று ஸர்வத்ர ஸமதர்சியாய் பகவத் த்யாநபரனாய் “க்ராமைக ராத்ர” நியாயத்தாலே யெங்கும் ஸஞ்சரிப்பானொரு பாகவதன் ஒரு ராத்ரி உன் வாசல் புறத்திண்ணையிலே யொதுங்கின வளவிலே, தலாரிக்காரர் அவனைக் கள்ளனென்று பிடித்துக்கட்ட, அவ்வளவிலே நீயோடிச் சென்று அக்கட்டை விடுவித்து, அந்த பாகவதனை உன் க்ருஹத்திலே கொண்டு போய் ஆச்வஸிப்பித்தாய். அத்தாலே யிது உனக்குண்டாய்த்து என்று இதிஹாஸ ஸமுச்சயத்திலே சொல்லப்பட்ட ஸுவ்ரதோபாக்யாநமும்;

**விளக்கம்** - தொடர்ந்து சூர்ணையில் உள்ள “ஆதி” என்ற பதம் மூலம் உணர்த்தப்படும் வேறு சில நிகழ்வுகளை அடுத்து காணலாம். உள்ளது உள்ளபடி அறியத்தக்கவனான ஒரு அந்தணனின் மகளாக ஸீவ்ரதை என்பவள் இருந்தாள். அவள் சிறுவயதிலேயே தனது தாயை இழந்தவள் ஆனாள். ஆனால் அந்தத் துன்பம் அவளுக்கு அறியாதவிதத்தில் அவளுடைய தந்தை மிகவும் அன்பாக அவளை வளர்ந்து வந்தான். சரியான பருவம் வந்தபோது, “இனி இவளுக்கு விவாகம் செய்யவேண்டும்” என்று அவன் முடிவு செய்தான். அப்போது அந்தத் தந்தையும் இறந்து போனான். இதனால் மிகுந்த சோகத்தில் ஆழ்ந்த அவள், இதிஹாஸ ஸமுச்சயம் – யேந ஸம்வர்த்திதா பாலா யேநாஸ்மி பரிரக்ஷிதா, தேந

பித்ரா வியுக்தாஹம் நஜீவேயம் கதஞ்சந நத்யாம்வா நிபதிஷ்யாமி ஸமித்தேவா ஹுதாசநே, பர்வதாத்வா பதிஷ்யாமி பித்ருஹீநா நிராச்ரயா - இளம்பெண்ணாகிய நான் யாரால் வளர்ந்து, காப்பாற்றப்பட்டேனோ அந்தத் தந்தையைப் பிரிந்து உயிர் வாழமாட்டேன். தாய், தந்தை இல்லாதவளாகிய நான் ஏதேனும் ஒரு நதியில் விழுவேன், எரியும் நெருப்பில் குதிப்பேன், மலையில் இருந்து கீழே விழுவேன் - என்று கூறியவளாகத் தனது உயிரை விட முயற்சி செய்தாள். அப்போது இதிஹாஸ ஸமுச்சயம் - ஆகத்ய கருணாவிஷ்டோ யமஸ் ஸர்வஹிதேரத:, ஸ்தவிரோ ப்ராஹ்மணோ புத்வா ப்ரோவா சேதம் வசஸ் ததா – அனைத்து உயிர்களிடமும் அன்புள்ளவனான யமன், மிகுந்த கருணையுடன் அந்தண வேஷம் பூண்டவனாக அவளிடம் வந்து இந்தச் சொற்களை உரைத்தான் - என்று கூறுவதற்கு ஏற்ப, அனைத்து உயிர்களின் நன்மைகளைப் பற்றிச் சிந்திப்பவனாகிய யமன் மிகுந்த கருணை நிறைந்த ஒரு முதிர்ந்த அந்தணனாக அங்கு வந்தான். இதிஹாஸ ஸமுச்சயம் – அலம்பாலே! விசாலாக்ஷி ரோதநேநாதி விஹ்வலே, நபூய: ப்ராப்யதே தாதஸ் தஸ்மாந் நார்ஹஸி சோசிதும் - மிகுந்த துக்கத்தையும், விசாலமான கண்களும் உடையவளே! நீ அழுதபடி இருந்தது போதுமானது; உனது தந்தை மீண்டும் உனக்குக் கிட்டமாட்டான். ஆகவே நீ வருந்தவேண்டாம் - என்று அவளுடைய வருத்தத்தை விலக்க முயன்றான். தொடர்ந்து இதிஹாஸ ஸமுச்சயம் - தஸ்மாத் த்வம் துக்க முத்ஸ்ருஜ்ய ச்ரோதுமர்ஹஸி ஸுவ்ரதே, பித்ருப்யாம் விப்ரயோகோயம் யேநாபூத் கர்மணா தவ - சிறந்தவளே! இப்படியாக வருந்துவதை விடுத்து, எந்தக் காரணத்தினால் நீ உனது தாய்தந்தையரை இழந்தாயோ அந்தக் கர்மம் குறித்துக் கேட்பாயாக – என்று கூறுவதற்கு ஏற்ப, “உனது இந்த வருத்தத்தை நீ கைவிட்டு, உனது எந்தக் கர்மம் காரணமாக உன்னுடைய தாய்தந்தையரை நீ இழந்தாய் என்பதை அறியத் தகுதி உடையவள் நீ ஆவாய். அதனை நான் உரைக்க நீ கேட்பாயாக”, என்று தானே உரைக்கத் தொடங்கினான். இதிஹாஸ ஸமுச்சயம் - புரா த்வம் ஸுந்தரீ நாம வேச்யா பரமஸுந்தரீ, ந்ருத்த கீதாதி நிபுணா வீணா வேணு விசக்ஷணா - நீ முன்பு ஒரு பிறவியில் நடனம், பாட்டு போன்ற கலைகளில் தேர்ச்சி உடையவளாகவும், வீணை மற்றும் புல்லாங்குழல் இசைப்பதில் வல்லவளாகவும், மிகவும் அழகையுடையவளாகவும், ஸுந்தரி என்ற பெயருள்ளவளாகவும், ஒரு வேசியாகவும் இருந்தாய் - என்று கூறுவதற்கு ஏற்ப, “நீ பூர்வஜன்மத்தில் ஸுந்தரி என்ற பெயருள்ள ஒரு வேசி ஆவாய். அப்போது உன்னால் வசீகரிக்கப்பட்ட காரணத்தால் உன்னுடனேயே ஓர் அந்தணனின் மகன் எப்போதும் வாழ்ந்து வந்தான். ஆனால் உன் மீது கொண்ட மையல் காரணமாக அவனை

ஒரு சூத்ரன் கொன்றான். இதனால் சோகம் அடைந்த அந்த வாலிபனின் பெற்றோர்கள், ‘எங்களுடைய மகனைக் கொல்லக் காரணமாக இருந்த நீ அடுத்த பிறவியில் உனது தாய் தந்தையரை இழந்து சோகத்தில் நிற்பாயாக’ என்று சாபம் இட்டனர். இதனால்தான் உனக்கு இந்தத் துன்பம் ஏற்பட்டது”, என்று யமன் உரைத்தான். இதனைக் கேட்ட அந்தப் பெண், “அப்படியென்றால், பாவியான நான் இந்தப் பிறவியில் உயர்ந்த குலத்தில் பிறந்த காரணம் என்ன?”, என்றாள். இதனைக் கேட்ட யமன் உரைக்கத் தொடங்கினான். இதிஹாஸ ஸமுச்சயம் - ச்ருணு தஸ்ய மஹாப்ராஜ்ஞே நிமித்தம் கததோமம, யேந த்வம் ப்ராஹ்மணஸ்ய அஸ்ய குலே ஜாதா மஹாத்மந: - உயர்ந்த அறிவு கொண்டவளே! எந்தக் காரணத்தால் நீ மிகவும் உயர்ந்த அந்தண குலத்தில் பிறந்தாயோ, அந்தக் காரணத்தை நான் உரைக்கிறேன், கேட்பாயாக - என்றுள்ளதற்கு ஏற்ப அவன் கூறத் தொடங்கினான். யமன் அவளிடம், “ஞானத்தில் மிகவும் சிறந்தவனும், எதிலும் பற்றுதல் வைக்காதவனும், அனைத்து உயிர்களையும் சமமாகக் காண்பவனும், ஸர்வேச்வரனை எப்போதும் த்யானித்தபடி உள்ளவனும், ‘ஒரு கிராமத்தில் ஒரு இரவு மட்டுமே தங்கவேண்டும்’ என்ற நியாயத்தின்படி நடக்கவேண்டும் என்றுள்ளவனும் ஆகிய விஷ்ணுபக்தன் ஒருவன், எங்கும் ஸஞ்சாரம் செய்ததைத் தொடர்ந்து, அன்று ஓர் இரவில் உனது வீட்டுத் திண்ணையில் தங்கினான். அப்போது அந்தக் கிராமத்தின் தலையாரி அவனைத் திருடன் என்று எண்ணியவனாக, பிடித்துக் கட்டி வைத்தான். அப்போது நீ ஓடிச் சென்று அவனுடைய கட்டுகளை அவிழ்த்துவிட்டு, அந்தப் பாகவதனை உனது வீட்டிற்குள் அழைத்துச் சென்று உபகாரங்கள் செய்து ஆறுதல் அளித்தாய். இதனால்தான் இப்போது உனக்கு இந்த உயர்ந்த பிறவி ஏற்பட்டது”, என்றான். இப்படியாக இதிஹாஸ ஸமுச்சயத்தில் ஸுவ்ரதை ஒருவளுடைய சரிதம் உரைக்கப்பட்டது.

**வ்யாக்யானம் -** இன்னமும் ஒரு ஸ்த்ரீ யமபடராலே அத்யந்த பீடிதையாய் ஆகாசத்திலே ரக்ஷகாபேக்ஷை தோற்றக் கூப்பிட்டுக் கொண்டு வாராநிற்க, அச்வத்த தீர்த்தத்திலே சிரகாலம் தபஸ்ஸு பண்ணியிருந்த மாதவி அத்தைக் கண்டு க்ருபை பண்ணி, தானொரு நாள் செய்த தப:ப்பலத்தை அவளுக்குக் கொடுக்க, அப்போதே யமபடரும் பந்துபூதராய், யாம்யமார்க்கமும் ஸுகோத்தரமாய், யாதநா சரீரமும் போய் விலக்ஷண சரீரமாய், இவளையுங் கொண்டு அவர்கள் யமன் ஸந்நிதியிலே சென்றவளவிலே, “பிதேவ தர்மராஜோபூத் தஸ்யாஸ் தத் ப்ரியதர்சந:, ஸாந்த்வயந் ஸ மஹாதேஜா வ்யாஜஹாரச தாம்ப்ரதி” என்று, பித்ருவத் ப்ரஸந்நவதநனாய் இவளைக் குறித்து இன்சொல்லுச்

சொல்லுகிற யமன், “பத்ரே! த்வயா ஸுஷ்டு க்ருதம் ந கிஞ்சிதிஹ வித்யதே, இதோ த்வாதச ஜந்மாந்தே த்வாம் கச்சித் ஸித்த ஆவிசத், விஷ்ணுபக்தோ நிவாஸார்த்தம் ராத்ர்யாந்து தவவேச்மநி, தத் ஸந்நிதாந ப்ரபவஸ் தவ ஸாது ஸமாகம:, ஸாஹிவை ப்ரஹ்ம விநுஷீ ஸ்ரீமத்ரங்கமுபாச்ரிதா, தத்ர தீர்த்தோத்தமம் ஸ்ரீமதச்வத்தம் நாமஸம்ச்ரிதா, தர்மஜ்ஞாதர்ம பரமா யஸ்யாஸ்தே ஸங்கமோ பவத்” என்று மாதவியினுடைய வங்கீகார முனக்கு வருகைக் குறுப்பாக நீயறியச் செய்த தொரு நன்மை யில்லை, இஜ்ஜந்மத்துக்குப் பன்னிரண்டாம் ஜந்மத்திலே யொரு ராத்ரி உன்னுடைய க்ருஹத்திலே தங்கிப் போகைக்காக ஒரு பாகவதன் வந்துன்னைக் கிட்டியிருந்து போனான், தத் ஸந்நிதாநத்தாலே யுண்டானது காணுனக்கிந்த ஸாது ஸமாகமம் என்று முன்பே யுண்டானதோர் அஜ்ஞாத ஸுக்ருதத்தை இவள் பேற்றுக்கடியாகச் சொன்னானென்கிற காருட புராணத்தில் கோயில் மஹாத்ம்யத்தில் கதையும் முதலானவற்றைச் சொல்லுகிறது. (சுருக்கமொழியக் காணலாம்) என்றது, விஸ்தரேண காணலாமென்றபடி. இவ்வஜ்ஞாத ஸுக்ருதங்களடியான பகவத்கடாக்ஷமே இவர்களுக்கிவ்வோ பலங்கள் வருகைக்கு ஹேதுவாகையாலே, அஜ்ஞாத ஸுக்ருதங்களைப் பற்றாசாகக் கொண்டு ஈச்வர னங்கீகரிக்கு மென்னுமிதுக்கு இவை உதாஹரணமாகலாமிறே.

**விளக்கம்** - அடுத்ததாக ஒரு நிகழ்வை அருளிச்செய்கிறார்; ஒரு பெண் யமகிங்கரர்களால் மிவவும் துன்புறுத்தப்பட்டவளாக, ஆகாயத்தில் இருந்தபடி தன்னைக் காக்கவேண்டும் என்று அழைத்தபடி (திருவரங்கத்தை நோக்கி) வந்து கொண்டிருந்தாள். அவள் திருவரங்கத்தில் வந்து சேர்ந்தபோது, திருவரங்கத்தில் உள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஒன்றான அச்வத்த தீர்த்தத்தில் (இது ராஜகோபுரம் அடுத்துள்ள காந்திரோட்டில் இப்போதும் உள்ளது) பலகாலமாக தவம் செய்தபடி இருந்த மாதவி என்பவள் அந்தக் கூக்குரலைக் கேட்டு மிகவும் நெகிழ்ந்தாள். மிகுந்த கருணையுடன் தான் அத்தனை வருடங்களாகச் செய்து வந்த தவத்தின் பலனை, மாதவி அந்தப் பெண்ணிற்கு அளித்தாள். அப்போது அந்த யமதூதர்கள் அவளுக்கு உறவினர் போன்றும், யமலோகம் செல்லும் வழி என்பது மிகவும் சுகம் அளிப்பதாகவும், துன்பத்தை அடைவதற்காக அளிக்கப்பட்ட யாதனா சரீரம் என்பது மேன்மையான தேவசரீரமாகவும் மாறின. இப்படிப்பட்ட நிலையில் அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு போய், யமனின் முன்பாக நிறுத்தினர். அப்போது காருடபுராணம் - பிதேவ தர்மராஜோபூத் தஸ்யாஸ் தத் ப்ரியதர்சந:, ஸாந்த்வயந் ஸ மஹாதேஜா வ்யாஜஹாரச தாம்ப்ரதி - என்று கூறுவதற்கு ஏற்ப,

யமராஜன் ஒரு தந்தையைப் போன்று மலர்ந்த முகத்துடன் இவளை நோக்கி இனிமையான உரைக்கத் தொடங்கினான். காருடபுராணம் – பத்ரே! த்வயா ஸுஷ்டு க்ருதம் ந கிஞ்சிதிஹ வித்யதே, இதோ த்வாதச ஜந்மாந்தே த்வாம் கச்சித் ஸித்த ஆவிசத், விஷ்ணுபக்தோ நிவாஸார்த்தம் ராத்ர்யாந்து தவவேச்மநி, தத் ஸந்நிதாந ப்ரபவஸ் தவ ஸாது ஸமாகம:, ஸாஹிவை ப்ரஹ்ம விநுஷீ ஸ்ரீமத்ரங்கமுபாச்ரிதா, தத்ர தீர்த்தோத்தமம் ஸ்ரீமதச்வத்தம் நாமஸம்ச்ரிதா, தர்மஜ்ஞாதர்ம பரமா யஸ்யாஸ்தே ஸங்கமோ பவத் - சிறந்தவளே! உனது இந்தப் பிறவியில் உன்னால் புண்ணியங்கள் ஏதும் செய்யப்படவில்லை. இதற்கு முன்பு உனது பன்னிரண்டாவது ஜன்மத்தின் இறுதியில் ஒரு பாகவதர் உன்னுடைய வீட்டில் இரவில் தங்கிப் போகும்விதமாக வந்து அமர்ந்தார். அதனால் உனக்கு அவருடன் ஸம்பந்தம் ஏற்பட்டது. ஸாதுக்களுடன் ஏற்பட்ட ஸம்பந்தம் காரணமாக நீ ஞானம் பெற்றவளாகத் இந்தப் பிறவியில் திருவரங்கம் அடைந்தாய். அங்கு உள்ள மிகவும் உத்தமமான அச்வத்த தீர்த்தத்தை அடைந்தாய். அதனால் தர்மங்கள் நிறைந்தவளாக மாறினாய் – என்று கூறுவதற்கு ஏற்ப யமன் அவளிடம், “மாதவியின் கருணை உனக்குக் கிட்ட ஏதுவான புண்ணியங்கள் எதனையும் நீ இந்தப் பிறவியில் செய்யவில்லை. ஆனால், உனது இந்தப் பிறவிக்கு முன்பு உள்ள பன்னிரண்டாவது பிறவியின்போது, ஒருநாள் இரவில் உன்னுடைய வீட்டில் தங்கிப் போவதற்காக ஒரு பாகவதன் உன்னை அடுத்துவந்தான். அவன் முன்னிலையில் உனக்கு ஸாதுக்களின் சேர்க்கை என்பது உண்டானது”, என்று முன்பு நடந்ததும், இவள் அறியாதவிதத்தில் புண்ணியம் சேர்ந்ததுமாகிய நிகழ்வை இவளுடைய பேற்றுக்கு காரணமாக உரைத்தான். இப்படியாகக் காருடபுராணத்தில் திருவரங்க மாஹாத்ம்யம் குறித்த நிகழ்வைக் காண்க. (சுருக்கமொழியக் காணலாம்) - இது போன்று பல இடங்களில் மிகவும் விரிவாகக் காணலாம். ஆகவே தாங்கள் அறியாமல் செய்த புண்ணியங்களின் மூலம் உண்டான பகவத்கடாக்ஷம் என்பதே இவர்களுக்கு இந்தப் பலன்கள் வருவதற்குக் காரணமாக இருந்ததது. எனவே இவை அனைத்தும், “அறியாமல் செய்த புண்ணியங்களையும் காரணமாகக் கொண்டு ஸர்வேச்வரன் ஏற்றுக்கொள்வான்” என்பதற்கு உதாரணங்கள் ஆகின்றன அல்லவோ?

383. அஜ்ஞரான மநுஷ்யர்கள் வாளா தந்தானென்றிருப்பர்கள்.

**அவதாரிகை** - ஆக ஸர்வேச்வரன் தன் நிர்ஹேதுக க்ருபையாலே ஸம்ஸாரி சேதநரை யுஜ்ஜீவிப்பிக்கையிலே உத்யுக்தனாய் கரணகளேபர ப்ரதாநாதிகளைப் பண்ணி ஸ்வாஜ்ஞாரூப சாஸ்த்ராநுகுணமாக இவர்கள் பக்கலிலே சில ஸுக்ருத விசேஷங்கண்டு அங்கீகரிக்கலாம் வழியுண்டோவென்று பார்த்து, ததலாபத்தில் ஸர்வமுக்தி ப்ரஸங்கமும் வைஷம்ய நைர்க்ருண்யமும் வாராமைக்காக அஜ்ஞாத ஸுக்ருதங்களைத்தானே கல்பித்து, அவை தன்னை ஜந்ம பரம்பரைகள் தோறுமொன்று பத்தாக்கி நடத்திக்கொண்டு போகும்படியை விஸ்தரேண அருளிச்செய்து அஜ்ஞாத ஸுக்ருத மங்கீகார ஹேதுவாம்படியையும் தர்சிப்பித்தாராய் நின்றார் கீழ்; இந்நிர்ஹேதுக விஷயீகார வாசி அறியாதவர்கள் இதுக்கிசைந்து வைத்தே ஏததநுஸந்தாநேந வித்தராகம லிருப்பர்க ளென்கிறார் மேலே (அஜ்ஞரான மநுஷ்யர்கள்) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஆக, ஸர்வேச்வரன் எந்தவிதமான காரணமும் இல்லாமல் தனது கருணையாலே ஸம்ஸாரிகள் அனைவரும் கரையேறும்விதமான முயற்சிகள் செய்தபடி உள்ளான். இதனால்தான் உடல்உறுப்புகளுடன் கூடிய சரீரங்களை அளித்து, தனது ஆணைகள் என்றுள்ள சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டவற்றுக்கு ஏற்ப ஸம்ஸாரி ஜீவன்களிடம் புண்ணியங்கள் ஏதும் இருந்தால் அவற்றையே காரணமாகக் கொண்டு அவர்களை ஏற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தைப் பார்த்தபடி உள்ளான். ஆனால் அவ்விதம் ஏதும் இல்லாத காரணத்தினால் அனைவரும் மோக்ஷத்திற்கு உரியவர்கள் என்ற நிலை, அனைவரையும் சமமாகக் காணாமல் உள்ள நிலை, கருணையைக் காண்பிக்காத நிலை முதலான தோஷங்கள் தனக்கு ஏற்படக்கூடாது என்று எண்ணுகிறான். ஆகவே, அவர்கள் அறியாமல் செய்த புண்ணியங்களை ஒன்றுக்குப் பத்தாக ஆக்கிக் கொள்கிறான். மேலும் அந்தப் புண்ணியங்களை அடுத்தடுத்து வரும் பிறவிகளில் மேன்மேலும் அவன் அதிகப்படுத்தியபடி இருப்பதை இதுவரை விரிவாக அருளிச்செய்தார். ஆக, ஸம்ஸாரிகள் தாங்கள் அறியாமல் செய்த சில நல்ல செயல்கள் ஸர்வேச்வரனுடைய அங்கீகாரத்திற்கு காரணமாக அமைவதை விளக்கினார். இனி, எந்தவிதமான காரணமும் இல்லாமல், ஸர்வேச்வரன் ஏற்றுக் கொள்கின்ற சிறப்பை உணராதவர்கள் இருப்பார்கள் என்கிறார்.

**வ்யாக்யானம்** – அஜ்ஞராகிறார் நிர்ஹேதுக விஷயீகார வைபவமறியாதவர்கள், (வாளாதந்தானென்றிருப்பார்கள்) என்றது, இப்படி உபகரித்தருளுவதே என்று தலை சீய்த்து ஈடுபடவேண்டியிருக்க, அது செய்யாமல், வெறுமனே, உபகரித்தா னென்கிற மாத்ரத்தை யநுஸந்தித்திருந்து விடுவர்களென்றபடி.

**விளக்கம்** – "அஜ்ஞர்" என்பது யார் என்றால், எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஸர்வேச்வரன் தனது கருணையை வெளிப்படுத்துகிறான் என்ற மேன்மையை அறியாதவர்கள் ஆவார்கள். இவர்கள், (வாளாதந்தானென்றிருப்பார்கள்) – "இந்த அளவு நமக்கு உதவுகிறானே!" என்று எண்ணியபடி அவனைக் குறித்து ஈடுபாட்டுடன் இருக்காமல், "ஏதோ நம்மை அவன் கடாக்ஷித்தான்" என்று மேம்போக்காக எண்ணியபடி இருந்துவிடுவார்கள்.

384. ஜ்ஞானவான்கள் "இன்றென்னைப் பொருளாக்கித் தன்னை யென்னுள் வைத்தான்", "எந்நன்றி செய்தேனோ வென்னெஞ்சில் திகழ்வதுவே", "நடுவே வந்துய்யக் கொள்கின்ற நாதன்", "அறியாதன வறிவித்தவத்தா நீ செய்தன வடியேனறியேனே", "பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி அடிமை கொண்டாய்", "என்னைத் தீமனங்கெடுத்தாய்", "மருவித் தொழும் மனமே தந்தாய்" என்று ஈடுபடா நிற்பர்கள்.

**அவதாரிகை** - இதில் வாசி அறிந்தவர்க ளீடுபடும்படியை அருளிச்செய்கிறார் (ஜ்ஞாநவான்கள்) என்று தொடங்கி.

**விளக்கம்** - எந்தவிதமான காரணமும் இல்லாமல் உண்டாகும் ஸர்வேச்வரனுடைய கருணையின் மேன்மை அறிந்தவர்கள் எவ்விதம் ஈடுபாடு கொள்வர் என்பதை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஜ்ஞாநவான்களாகிறார், நிர்ஹேதுக விஷயீகார வைபவத்தை உள்ளபடி அறியுமவர்கள். ("இன்றென்னைப் பொருளாக்கித் தன்னை யென்னுள் வைத்தான்" இத்யாதி) அநாதிகால மவஸ்துவாய்க் கிடந்தவென்னை இன்று வஸ்துவாக்கி நித்யஸூரிகளுக்கு மவ்வருகான தன்னை நித்யஸம்ஸாரிகளுக்கு மிவ்வருகான வென்னுடைய ஹேயமான நெஞ்சிலே வைத்தான்; பெரியவுடையாரைப்போலே

தலையோடே முடிந்தேனோ, திருவடியைபோலே "த்ருஷ்டா ஸீதா" என்று வந்தேனோ, அன்றிக்கே தன்னுடைய ஆஜ்ஞாநுவர்த்தநம் பண்ணினேனாம்படி விஹிதகர்மங்களை அநுஷ்டித்தேனோ, என்ன நன்மை செய்தேனாக வென்னெஞ்சிலே புகுந்து பெறாப்பேறு பெற்றானாய் விளங்குகிறது; விஷய ப்ரவணனாய்ப் போகா நிற்க நடுவே வந்து உஜ்ஜீவிப்பியா நின்ற ஸ்வாமி; எனக்கஜ்ஞாத ஜ்ஞாபநத்தைப் பண்ணி ஸ்வாமியான நீ சேஷபூதனான வென்பக்கல் பண்ணின உபகாரம் உபகரித்த நீயறியி லறியுமித்தனை, என்னால் சொல்லித் தலைக்கட்டப்போமோ; "அஸந்நேவ" என்கிறபடியே அஸத்கல்பனாய்க் கிடந்தவென்னை, "ஸந்தமேநம்" என்கிறபடியே ஸத்தாவானாய் ஒரு வஸ்துவாம்படி பண்ணி, அந்த ஸத்தை நிலைநிற்கும்படி கைங்கர்யத்தையும் கொண்டருளினாய்; அம்ருதத்தையும் விஷத்தையு மொக்க விரும்புவாரைப்போலே உன்னையு முகந்து க்ஷுத்ர விஷயங்களையு முகக்கும் பொல்லாத நெஞ்சைப் போக்கினாய்; அநந்யப்ரயோஜநமாய்க் கொண்டு உன்னையே அநுபவிக்கும் மநஸ்ஸைத் தந்தாயென்று அவன் நிர்ஹேதுகமாகப் பண்ணின உபகார விசேஷங்களை அநுஸந்தித்துத் தலைசீய்த்து ஈடுபடா நிற்பர்களென்கை.

**விளக்கம்** - ஞானவான்கள் என்பவர்கள் எந்தவிதமான காரணமும் இல்லாமல் உண்டாகும் ஸர்வேச்வரனுடைய கருணையின் வைபவம் குறித்து உள்ளதுஉள்ளபடி அறிந்தவர்கள் ஆவர். ("இன்றென்னைப் பொருளாக்கித் தன்னை யென்னுள் வைத்தான்" இத்யாதி) - திருவாய்மொழி(10-8-9) - இன்றென்னைப் பொருளாக்கித் தன்னை யென்னுள் வைத்தான் – எல்லையற்ற காலம் ஒரு அசேதன வஸ்துவாகக் கிடந்த என்னை, இன்று மதிக்கத்தக்க ஒரு பொருளாக மாற்றி, நித்யஸூரிகளைக் காட்டிலும் மேலான தன்னை, நித்யமாக உள்ள ஸம்ஸாரிகளில் தாழ்ந்த என்னுடைய மிகவும் அற்பமான நெஞ்சத்தில் வைத்துக் கொண்டான். இவன் இவ்விதம் செய்ததற்கு – ஜடாயுவைப் போன்று எனது உயிரை நான் அவனுக்காகக் கொடுத்தேனா? அனுமன் போன்று த்ருஷ்டா ஸீதா - சீதையைக் கண்டேன் - என்று வந்தேனா? அவனுடைய ஆணைகள் என்றுள்ள சாஸ்த்ரங்களின் வழி நடந்தேன் என்று கூறும்படி, எனக்குச் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்தேனா? நான் என்ன நன்மை செய்தேன் என்று எண்ணி, எனது நெஞ்சத்தில் புகுந்து, இவ்விதம் வந்து நிற்பதை தனது பெறுதற்குரிய பேறு என்று சிந்தித்தபடி உள்ளானே இவன்! இந்த உலகியல் விஷயங்களில் ஈடுபட்டு நான் நிற்கும்போது, என்னை நடுவில் வந்து பிடித்து இழுத்துக்கொண்டு நின்றவன் எனது ஸ்வாமி. நான் அறியாத

பலவற்றையும் எனக்கு உபதேசித்தாய்; இதன் மூலம் நீ செய்த உபகாரம் எத்தன்மையது என்பதை அடிமையான எனக்கு உதவி செய்த நீ அறியலாமே அல்லாமல், என்னால் உரைக்க இயலுமோ? தைத்திரீய உபநிஷத் - அஸந்நேவ – பரம்பொருள் இல்லை என்பவன் இல்லாத பொருளாகவே ஆகிறான் – என்பதற்கு ஏற்ப, அறிவற்ற வஸ்துவாகக் கிடந்த என்னை, தைத்திரீய உபநிஷத் – ஸந்தமேநம் - பரம்பொருளை அறிபவன் உள்ளவன் ஆகிறான் – என்பதற்கு அறிவுள்ள வஸ்துவாக மாற்றிக் கொடுத்தான். மேலும் அதே நிலையில் நான் என்றென்றும் நிலைபெற்று நிற்கும்விதமாக என்னிடமிருந்து கைங்கர்யங்களையும் நீ பெற்றுக்கொண்டாய். அமிர்தமும் விஷமும் ஒன்றே என எண்ணுபவர்கள் போன்று, உன்னையும் தாழ்ந்த விஷயங்களையும் ஒருமித்து விரும்பும் தீயநெஞ்சத்தை நீ மாற்றினாய். வேறு எந்தவிதமான பலனையும் எதிர்பாராமல், உன்னை மட்டுமே அனுபவிக்கவல்ல மனதை அளித்தாய் - என்று இப்படியாகத் தங்களிடம் எந்தவிதமான காரணம் இல்லாதபோதிலும், அவன் செய்த உதவிகளை எண்ணியபடி அவனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருப்பார்கள் என்று கருத்து.

**வ்யாக்யானம்** - அன்றிக்கே, (அஜ்ஞர்) இத்யாதிக்கு (வாளார் தந்தார்) என்று பாடமாகில், இப்படி ஸர்வேச்வரன் தன் நிர்ஹேதுக க்ருபையாலே தங்களை உஜ்ஜீவிப்பிக்க க்ருஷி பண்ணிக் கொண்டு வரும் ப்ரகாரத்தை அறியாத மநுஷ்யர், வாள்வலியாலே ஜீவித்துத் திரிவார் தங்களுக்கு வந்ததொரு ஸம்ருத்தியை நம்முடைய வாளார்தந்தாரென்று நினைத்திருக்குமாபோலே, நிர்ஹேதுகமாக வந்த பகவதங்கீகாரத்தை தங்கள் ஸுக்ருத பலத்தாலே வந்ததாக நினைத்திருப்பர்களென்று பொருளாகக்கடவது. அப்போதைக்கு, ஸகலமு மவனருளாலே வந்ததென்று தெளியக்கண்டவர்கள் அவன் நிர்ஹேதுகமாகப் பண்ணின உபகார விசேஷங்களை அநுஸந்தித் தீடுபடும்படியை அருளிச் செய்கிறாரென்று மேலே வாக்யத்துக்கு ஸங்கதி.

**விளக்கம்** - அல்லது சூர்ணை 383ல் உள்ள “வாளா தந்தான்” என்பதை “வாளா தந்தார்” என்று சிலர் கொள்வது போன்று படித்தால் கிட்டும் அர்த்தத்தை விவரிக்கிறார். இவ்விதம் ஸர்வேச்வரன் எந்தவிதமான காரணமும் இல்லாமல் வெளிப்படுகின்ற தனது கருணையால் தங்களைக் கரையேற்ற முயன்றபடி உள்ளதை அறியாமல் உள்ள மனிதர்கள் - மற்றவர்களிடம் உள்ள பொருள்களை அபகரித்து வாழ்ந்து வரும் மனிதர்கள் அந்தச் செல்வத்தை “எனது வாள் கொடுத்தது” என்று கூறித்திரிவது போன்று,

எந்தவிதமான காரணமும் இல்லாமல் தங்களுக்குக் கிட்டிய ஸர்வேச்வரனுடைய அங்கீகாரம் என்பது, தாங்கள் செய்த புண்ணியத்தின் பலன் மூலமாகக் கிட்டியது என்று எண்ணிக்கொள்வர் - என்பது மற்றொரு அர்த்தமாகிறது. இவ்விதம் பொருள் கொள்ளும்போது - அனைத்தும் அவனுடைய கருணையால் கிட்டியது என்று உணர்ந்தவர்கள், அவன் எந்தவிதமான காரணமும் இல்லாமல் தங்களுக்கு உபகாரம் செய்த விதங்களை எண்ணி, அவற்றில் ஈடுபட்டபடி இருப்பார்கள் என்பதை அருளிச்செய்கிறார் என்று தேறுகிறது.

385. பாஷ்யகாரர் காலத்திலே ஒருநாள் பெருமாள் புறப்பட்டருளுந்தனையும் பார்த்துப் பெரிய திருமண்டபத்துக்குக் கீழாக முதலிகளெல்லாரும் திரளவிருந்த வளவிலே இவ்வர்த்தம் ப்ரஸ்துதமாக, பின்பு பிறந்த வார்த்தைகளை ஸ்மரிப்பது.

அவதாரிகை - இந்நிர்ஹேதுக விஷயீகார ஸ்தாபகமானதொரு ஐதிஹ்யத்தை ஸ்மரிப்பிக்கிறார் (பாஷ்யகாரர் காலத்திலே) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக ஸர்வேச்வரன் எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஏற்றுக் கொள்கிறான் என்பதை ஒரு நிகழ்வு மூலம் உணர்த்துகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸகல வேதாந்த தாத்பர்யார்த்தங்களெல்லாம் ஸம்சய விபர்யயமற நடந்து செல்லாநிற்கிற நல்லடிக்காலமான பாஷ்யகாரர் காலத்திலே, ஒருநாள் பெருமாள் புறப்பட்டருளுந்தனையும் பார்த்துப் பெரிய திருமண்டபத்துக்குக் கீழாக ஜ்ஞாநாதிகரான முதலிகளெல்லாரும் திரளவிருந்தவளவிலே, ஒரு ஸ்ரீவைஷ்ணவர், "இது நெடுங்கால மார்வாசலிலே அவர்கள் புறப்பாடு பார்த்திருந்தோமோவென்று தெரியாது, இன்று வகுத்த சேஷியான பெருமாள் புறப்பாடு பார்த்து வந்திருக்க என்ன ஸுக்ருதம் பண்ணினோம்!" என்ன; தத்ப்ரஸங்கத்திலே "நித்ய ஸம்ஸாரியாய்ப் போந்தவனுக்கு பகவத் விஷயத்தில் ருசி பிறக்கைக்கடியேன்" என்று விசாரிக்கச் செய்தே, யாத்ருச்சிக ஸுக்ருதமென்ன அஜ்ஞாத ஸுக்ருதமென்னப் பிறந்ததாய், அவ்வளவிலே கிடாம்பிப் பெருமாளிருந்தவர் "நமக்கு பகவத் விஷயம்போலே ஸுக்ருத தேவரென்று மொருவ ருண்டோ வாச்ரணீயர்" என்ன; பிள்ளைதிருநறையூரரையர், "ஸுருதமென்று

சொல்லுகிறதும் நீ நினைக்கிற விஷயந் தன்னையே காண்" என்றருளிச்செய்ய, ஆக இப்படி பின்பு பிறந்த வார்த்தைகளை இவ்விடத்திலே நினைப்பதென்றபடி. இக்கதைதான் "தருதுயரந் தடாயேல்" என்கிற பாட்டின் வ்யாக்க்யாநத்திலே ஸங்ரஹேண பூர்வர்கருளிச் செய்து வைத்தார்களிறே. இத்தால் அஜ்ஞாத ஸுக்ருத முண்டாய்த்தாகிலும் அது பலஹேதுவன்று, அத்தை வ்யாஜமாக்கி அங்கீகரிக்கு மீச்வரனே பலஹேது என்றதாய்த்து.

**விளக்கம்** - அனைத்து வேதாந்தங்களும், அவற்றில் உள்ள உண்மைப் பொருள்களும் எந்தவிதமான சந்தேகமும் இல்லாமல், அனைவருக்கும் வெளிப்பட்டபடி இருந்த, மிகவும் சிறந்த காலகட்டமான உடையவர் காலத்தில், ஒருநாள் ஸ்ரீரங்கநாதன் தனது மூலஸ்தானத்தில் இருந்து புறப்பட்டு வருகின்ற நேரத்தில், பெரியமண்டபத்தின் கீழே ஞானம் நிறைந்த ஆசார்யர்கள் பலரும் நின்றிருந்தார்கள். அப்போது அங்கிருந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவர், "இத்தனை காலமாக யார் வீட்டு வாசலில், யார் புறப்பட, இது போன்று காத்துக் கிடந்தோம் என்பது நமக்கு அறியாது. ஆனால் இன்று நமக்கு ஏற்ற எஜமானனாக உள்ள ஸ்ரீரங்கநாதனுடைய புறப்பாடு எதிர்நோக்கி நிற்கிறோம். இதற்கு என்ன புண்ணியம் நாம் செய்தோமோ?", என்றார். இப்படியாக அவர் உரைத்தபோது அங்கு இருந்தவர்கள் நடுவில், "எல்லையற்ற காலமாக எப்போதும் ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ள ஜீவனுக்கு, ஸர்வேச்வரனைக் குறித்த ஆர்வம் உண்டாகக் காரணம் என்ன?", என்ற கேள்வி ஏற்பட்டது. அப்போது அங்கிருந்த பலரும், "நாம் தற்செயலாகச் செய்த புண்ணியம், நாம் அறியாமல் செய்த புண்ணியம்" என்று பல காரணங்கள் உரைத்தனர். அங்கிருந்த கிடாம்பிப்பெருமாள் என்னும் உடையவரின் சிஷ்யர் ஒருவர், "நமக்கு ஸ்ரீரங்கநாதன் என்பது போன்று, புண்ணியம் என்று அண்டத்தக்க வேறு ஒன்று உள்ளதோ?", என்றார். இதனைக் கேட்ட பிள்ளைதிருநறையூரரையர் அவரிடம், "புண்ணியம் என்று நீவிர் உரைப்பதும் அந்த ஸ்ரீரங்கநாதனையே அல்லவோ?", என்றார். இந்த நிகழ்வை பெருமாள்திருமொழி (5-1) - தருதுயரம் தடாயேல் – என்ற பாசுரத்திற்கான வ்யாக்யானத்தில் ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை சுருக்கமாக அருளிச்செய்தமை காண்க. ஆகவே அறியாமல் செய்த புண்ணியங்கள் என்பவை உள்ளபோதிலும், அவை பலனுடைய காரணம் ஆவதில்லை; அவற்றை ஒரு காரணமாக ஏற்றுக்கொண்டு பலன் அளிக்கின்ற ஸர்வேச்வரனே காரணம் என்று கருத்து.

386. ஆகையால் அஜ்ஞாதமான நன்மைகளையே பற்றாசாகக் கொண்டு கடாக்ஷியா நிற்கும்.

**அவதாரிகை** - கீழுக்தமான அர்த்தத்தை நிகமிக்கிறார் (ஆகையால் ) என்று தொடங்கி.

**விளக்கம்** - இதுவரை உரைக்கப்பட்ட அர்த்தத்தை இந்த வாக்கியத்தால் முடிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கீழ்ச்சொன்ன ப்ரகாரத்தாலே ஸர்வமுக்தி ப்ரஸங்காதிகள் வாராமைக்காக இச்சேதநனறியாமலே விளையுமவையான சில ஸுக்ருத விசேஷங்களையே இவனை அங்கீகரிக்கைக்குப் பற்றாசாகப் பிடித்துக் கொண்டு விசேஷ கடாக்ஷத்தைப் பண்ணா நிற்குமென்கை.

**விளக்கம்** - இதுவரை உரைக்கப்பட்ட விதத்தில் "அனைவருக்கும் மோக்ஷம் கிட்டும் நிலை ஏற்படும்" முதலான தோஷங்கள் ஏற்படாமல் இருப்பதற்காக, இந்தச் சேதனன் தானாகவே அறியாமல் செய்த புண்ணியங்களையே அவனைத் தான் (ஸர்வேச்வரன்) ஏற்றுக் கொள்வதற்கான காரணம் என்று ஸர்வேச்வரன் தானாகவே கற்பித்துக்கொண்டு, அந்தச் சேதனனுக்கு சிறப்பான கடாக்ஷங்கள் செய்வான்.

387. இவையுங்கூட இவனுக்கு விளையும்படியிறே இவன் தன்னை முதலில் அவன் ஸ்ருஷ்டித்தது.

**அவதாரிகை** - இப்படி அஜ்ஞாத ஸுக்ருதங்களையாகிலும் ஹேதுவாகக் கொண்டு கடாக்ஷிக்குமளவில் அங்கீகாரம் ஸஹேதுகமாகாதோ வென்ன அருளிச்செய்கிறார் (இவையுங்கூட) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் சேதனன் ஒருவன், தான் அறியாதவிதத்தில் செய்த புண்ணியங்கள் என்றாலும், அதனையும் காரணமாக ஏற்றுக் கொண்டு அருள்புரிகிறான் என்றால், "ஏதோ ஒரு காரணத்தால் ஸர்வேச்வரன் அருள் செய்கிறான்" என்ற தோஷம் ஏற்படாதோ என்னும் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, இந்த யாத்ருச்சிகாதி ஸுக்ருதங்களுமுட்பட இவனுக் குண்டாம் படியிறே இவற்றுக்கும் யோக்யதையில்லாதபடி கரணகளேபர விதுரனாய்க் கிடந்து இவன்றன்னை ஸ்ருஷ்டிகாலத்திலே கரணாதிகளைக் கொடுத்து அவ னுண்டாக்கிற் றென்கை. இத்தால், காடாக்ஷ ஹேதுவாகச் சொன்ன யாத்ருச்சிகாதிகளு மவனுடைய க்ருஷிபல மென்கை. ச சப்தத்தாலே, துல்ய ந்யாயாத் ஜ்ஞாத ஸுக்ருதங்களுக்குமடி அவன் க்ருஷியென்கிறது. அன்றிக்கே, வக்ஷ்யமாண நிரூபண விசேஷங்களை ஸமுச்சயிக்கிற தாகவுமாம். ஸ்ருஷ்டிதான் சேதந கர்மாநுகுணமாகவன்றோ வென்னில்? ஸ்ருஷ்டிப்பது கர்மத்தைக் கடாக்ஷித்தேயாகிலும் யௌகபத்ய மநுக்ரஹ கார்யமிறே.

**விளக்கம் -** அதாவது, தான் செய்வது புண்ணியங்கள் என்று அறியாமல் தற்செயலாகச் செய்யும் புண்ணியங்கள் உட்பட அனைத்தும் அவனுக்கு ஏற்படும்படியாக, இந்தச் செயல்கள் செய்வதற்குக்கூட இயலாதவிதத்தில் சரீர இந்த்ரியங்கள் இல்லாமல் கிடந்த இந்தச் சேதனனை, ஸ்ருஷ்டி காலத்தில் சரீர இந்த்ரியங்களை அளித்து அவனைச் செயல் புரியும்படிச் செய்தவன் ஸர்வேச்வரன் அல்லவோ என்று கருத்து. ஆகவே இவனை ஏற்றுக் கடாக்ஷிப்பதற்குக் காரணமாகக் கூறப்பட்ட “தற்செயலாகச் செய்த புண்ணியங்கள்” என்பதும் ஸர்வேச்வரனுடைய முயற்சியால்தான் விளைந்தது என்று அறியவேண்டும். சூர்ணையில் உள்ள “ச” (அதாவது ”இவையும்” என்ற பதம்) என்ற பதம் மூலம், சேதனன் அறிந்ததே செய்யும் புண்ணிய செயல்களும் ஸர்வேச்வரனுடைய முயற்சியே அன்று அறிக. அல்லது, இனிக் கூறப்போகும் வாக்கியங்களில் உள்ளவற்றை அறிவிக்கும்விதமாக “இவையுன்” என்றதாகவும் கொள்ளலாம். கர்மபலன் காரணமாக என்றாலும், அனைத்து சேதனர்களையும் ஒரே ஸ்ருஷ்டி காலத்தில் படைப்பது தனது கருணையால் அல்லவோ?

388. அது தன்னை நிரூபித்தால் இவன் தனக்கு ஒன்றும் செய்ய வேண்டாதபடியா யிருக்கும்.

**அவதாரிகை -** தந்நிரூபணத்தி லிவனுக்கு ஸம்பவிக்குமதை அருளிச்செய்தார் (அது தன்னை) என்று தொடங்கி.

**விளக்கம் -** இப்படியாக ஸர்வேச்வரன் அளித்த சரீரம் மற்றும் இந்த்ரியங்கள் என்பதுடன் கூடிய ஸ்ருஷ்டியை ஆராய்ந்தால், அவனுக்கு ஏற்படும் நன்மைகள் யாவை என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, அசித் விசேஷிதமாய்க் கிடக்கிற தசையிலே உஜ்ஜீவநோப யோகியான கரணகளேபரங்களை பரம தயையாலே அவன் தந்தபடியை அநுஸந்தித்தால் தததீந ஸத்தாதிகனான இவன்றனக்கு ஸ்வோஜ்ஜீவநாம்சத்திலவன் செய்தபடி கண்டிருக்கை யொழியத் தானொரு ப்ரவ்ருத்தி பண்ண வேண்டாதபடியாயிருக்கு மென்கை.

**விளக்கம் -** உயிரற்றதும் அறிவற்றதும் ஆகிய அசித் வஸ்துக்கள் போன்று ஸ்ருஷ்டி காலத்தில் கடந்த நிலையில் இந்த ஜீவன் கரையேறுவதற்குத் தேவையான சரீரம் மற்றும் உறுப்புகளைத் தனது பரமக்ருபை காரணமாக ஸர்வேச்வரன் அளிக்கிறான். அதனைச் சிந்தித்துப் பார்க்கும்போது, ஸர்வேச்வரனுக்கு மட்டுமே வசப்பட்டதான ஸ்வரூபம், இருப்பு போன்றவற்றை உடைய ஜீவன், தான் கரையேறும் பொருட்டு ஸர்வேச்வரன் மேற்கொள்ளும் முயற்சிகளைப் பார்த்தபடி இருப்பது அல்லாமல், தானாகவே எந்த ஒரு முயற்சியும் செய்யவேண்டாம் என்பது வெளிப்படுகிறது.

389. பழையதாக உழுவது நடுவது விளைவதாய்ப்போரும் க்ஷேத்ரத்திலே உதிரி முளைத்து பலபர்யந்தமாமாபோலே, இவைதான் தன்னடையே விளையும்படியாயிற்று பத்தியுழவன் பழம்புனத்தை ஸ்ருஷ்டித்த கட்டளை.

**அவதாரிகை -** ஈச்வர ஸ்ருஷ்டியாலிவனுக்கு விளையு மங்கீகாரப் பற்றாசுகள் யாத்ருச்சி காதிகள் மாத்ரமேயன்று, இன்னமும் சிலவுண்டென்று தர்சிப்பிக்கைக்காவாதால், கீழ்சொன்ன இவைதானுண்டாம் ப்ரகாரத்தை யுபபாதிக்கைக்காகவாதல் அருளிச் செய்கிறார் மேல் (பழையதாக) என்று தொடங்கி.

**விளக்கம் -** ஸர்வேச்வரனுடைய ஸ்ருஷ்டியால் ஜீவனுக்கு ஏற்படும் அங்கீகாரம் என்பதற்கு "தற்செயலாகச் செய்த புண்ணியம்" போன்றவை மட்டும் காரணங்கள் அல்ல.

மேலும் சில காரணங்களும் உள்ளன என்று கூறுவதற்காகவோ அல்லது மேலே கூறப்பட்டவை ஏற்படும் விதங்களை உரைப்பதற்காகவோ மேலும் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, புதிசாகத் தரிசு திருத்தின தன்றிக்கே பழையதாக உழுவது நடுவது விளைவதாய்க் கொண்டு செய்காலாய்ப்போரும் க்ஷேத்ரத்திலே கர்ஷகன் அதுக்கென்ன வொரு க்ருஷியும் பண்ணாதிருக்க உதிரியானது முளைத்து விளைந்து தலைக்கட்டுமாப்போலே, மேற்சொல்லப் புகுகிற நிரூபண விசேஷங்களாதல் கீழ்ச் சொன்ன யாத்ருச்சிகாதிகளாதல் இதுக்கென்ன வொரு க்ருஷி செய்யவேண்டாதே இச்சேதநர் பக்கலிலே தன்னடையே விளையும்படியாய்த்து, பக்திக்கு கர்ஷகனான ஈச்வரன் ப்ரவாஹரூபேண நடக்கிற ஸம்ஸாரமாகிற பழம்புனத்தை ஸ்ருஷ்டித்துத் திருத்து மென்றபடி.

**விளக்கம்** – தரிசாகக் கிடந்த நிலத்தைப் புதிதாகத் திருத்தாமல், நீண்டகாலமாக உழுதல், நடுதல், விளைத்தல் போன்ற செயல்கள் நடந்து கொண்டிருக்கும் இடத்தில் உள்ள உழவன் ஒருவன் அதற்கென எந்தவிதமான முயற்சியும் செய்யாமல் உள்ளபோதிலும், முன்பே அந்த வயலில் உதிர்ந்த நெல்லானது பயிராக விளைந்து நிற்பது போன்று - என்கிறார். இது போன்று நடப்பது என்னவென்றால் – இனிமேல் கூறப்போகும் நிரூபணங்கள் மூலமோ அல்லது இதுவரை கூறப்பட்ட “தற்செயலாகச் செய்த புண்ணியங்கள்” முதலானவை மூலமோ, இதற்கு என எந்தவிதமான முயற்சியையும் சேதனன் செய்யவேண்டாதபடி ஸர்வேச்வரனுடைய அங்கீகாரம் கிட்டுகிறது. அதாவது பக்தி என்பதை விவசாயம் செய்யும் உழவனாகிய ஸர்வேச்வரன் நீண்டகாலமாகவே ஸம்ஸாரம் என்னும் பழைய நிலத்தை ஸ்ருஷ்டித்து திருத்துகிறான் என்று கருத்து.

390. அவைதானெவை யென்றால்.

**அவதாரிகை** - (இவை) என்று கீழருளிச்செய்தவத்தை விசதீகரிக்கைக்காக தத்விஷய ப்ரச்நத்தை அநுவதிக்கிறார் (அவைதானெவை யென்றால்) என்று.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் "இவை" என்று அருளிச்செய்தார். அதனை மேலும் விரிவாக உரைக்கும்விதமாக, அவை தொடர்பான கேள்வியை "அவை எவை" என்று எழுப்பிக்கொள்கிறார்.

391. பூர்வக்ருத புண்யா புண்ய பலன்களை சிரகாலம் புஜித்து, உத்தர காலத்தில் வாஸனைகொண்டு ப்ரவர்த்திக்கு மத்தனை யென்னும்படி கையொழிந்த தசையிலே நாமார்? நாம் நின்ற நிலையேது? நமக்கினிமேல் போக்கடியேது? என்று பிறப்பன சில நிரூபண விசேஷங்களுண்டு; அவையாதல், முன்பு சொன்னவையாதல்.

**அவதாரிகை** - அதுக்கு உத்தர மருளிச்செய்கிறார் (பூர்வக்ருத) இத்யாதியாலே.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் எழுப்பட்ட கேள்விக்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, முன்பு செய்யப்பட்ட புண்ணியபாபரூப கர்ம த்வயித்தி னுடையவும் பலங்களை ஸ்வர்க்க நரகாதிகளிலே நெடுங்கால மநுபவித்து மேலுள்ள காலத்தில் பூர்வகர்ம வாஸநைகொண்டு புண்யபாபரூப கர்மங்களில் ப்ரவர்த்திக்கு மத்தனை யென்று சொல்லத்தக்கதாம்படி அச்சகர்மாவாய் கர்ம பலாநுபவத்தில் கையொழிந்து நின்ற தசையிலே காண்கிற தேஹமோ தேஹாதிரிக்தரோ ஸ்வதந்த்ரரோ பரதந்த்ரரோ நாமாரென்றும், நசிக்கும்படி நின்றோமோ பிழைக்கும்படி நின்றோமோ? நாம் நின்ற நிலை யேதென்றும்; இப்படி நின்ற நமக்கினிமே லீடேறுகைக்கீடான போக்கடி யேதென்றும் தன்னடையே யுண்டாவன சில நிரூபண விசேஷங்களுண்டு, அந்நிரூபண விசேஷங்களாதல், பூர்வோக்தங்களான யாத்ருச்சிகாதி ஸுக்ருதங்களாத லென்கை.

**விளக்கம்** - முற்பிறவிகளில் செய்த புண்ணியம் மற்றும் பாவம் என்பதான கர்மங்களின் பலன்களை ஸ்வர்க்கம் மற்றும் நரகத்தில் நீண்டகாலம் அனுபவித்து, மீண்டும் இங்கு வந்து பிறந்து, அடுத்துள்ள காலகட்டங்களில் முன்பு செய்த புண்ணியபாவ கர்மங்களின் பழக்கம் காரணமாக, மீண்டும் அதே போன்ற செயல்களில் ஈடுபடுவர் என்று கூறலாம்படியாக, கண்களுக்குப் புலப்படாத கர்மவாசனைகளை உடையவர்களாக கர்ம பலன்களை அனுபவிக்கும்போது நாம் செயலற்ற நிலையில் நிற்கிறோம். மேலும் அந்த

நிலையில், "நான் யார் – நான் இந்தச் சரீரமோ? அல்லது இந்தச் சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டவனா? நான் சுதந்திரமானவனா? நான் யாருக்கேனும் வசப்பட்டவனா? நான் அழியும்விதத்தில் உள்ளேனா? அல்லது நான் பிழைப்பேனா? எனது நிலை என்ன? இவ்விதமாக நிற்கும் எனக்கு இனி பிழைக்க வழியேது?", போன்ற பல கேள்விகள் நமக்குள்ளே தானாகவே தோன்றுகின்றன. இப்படிப்பட்ட கேள்விகள் அல்லது முன்னர் கூறப்பட்டதான "தற்செயலாக ஏற்பட்ட புண்ணியம்" என்பதே இங்கு கூறப்படுகின்றன என்று கருத்து.

392. "யதாஹி மோக்ஷகா: பாந்தே" என்று தொடங்கி இதனுடைய க்ரமத்தை பகவத் சாஸ்த்ரத்திலே சொல்லிற்று.

**அவதாரிகை** - இந்நிர்ஹேதுக விஷயீகார க்ரமம் சாஸ்த்ரத்திலெங்கே சொல்லிற்றென்ன அருளிச்செய்கிறார் (யாதாஹி) என்று தொடங்கி.

**விளக்கம்** - எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஸர்வேச்வரன் ஜீவனுக்குக் க்ருபை செய்தல் எப்படி என்பது குறித்து சாஸ்த்ரத்தில் எங்கு உரைக்கப்பட்டுள்ளது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - பகவச் சாஸ்த்ரம் நூற்றெட்டு ஸம்ஹிதையாயிறே யிருப்பது; அதிலே யொன்றிறே அஹிர்ப்புத்ந்ய ஸம்ஹிதை. "பஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயணஸ் ஸ்வயம்" என்கிறபடியே ஸகலத்துக்கு மாதிவக்தா பகவானாயிருக்கச் செய்தே தத்தத் ஸம்ஹிதைகள் தோறும் அவாந்தர வக்தாக்களுமுண்டிறே; அதிலிந்த ஸம்ஹிதைக்கு அஹிர்புத்ந்ய ஸம்ஜ்ஞகனான ருத்ரன் வக்தாவாகையாலே இத்தை அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை என்கிறது; இந்த ஸம்ஹிதையிலே, "நுண்ணுணர்வின் நீலார் கண்டத்தம்மான்" என்கிறபடியே ஸத்வம் தலையெடுத்தபோது ஸூக்ஷ்மதர்சியா யிருக்கும் ருத்ரனை, தேவர்ஷியாய் ப்ரஹ்மவித்தமனான ஸ்ரீநாரதபகவான் சென்ற நுவர்த்தித்து ஸ்வ ஸம்சயங்களெல்லாம் கேட்க, அவன் நிர்ணயித்துக் கொண்டு வாராநிற்க, பதினாலா மத்யாயத்தில் இவன் பண்ணின ப்ரச்நத்துக்கு உத்தரமாக ஸம்ஸார மோக்ஷ ஹேதுக்களான நிக்ரஹசக்தி அநுக்ரஹசத்தி யென்று ஸர்வேச்வரனுக் கிரண்டு சக்தி யுண்டென்று ப்ரதிஜ்ஞை பண்ணி, அதில் "திரோதாநகரீ சக்திஸ் ஸா நிக்ரஹ

ஸமாஹ்வயா, புமாம்ஸம் ஜீவஸம்ஜ்ஞும் ஸா திரோபாவயதி ஸ்வயம்” என்று தொடங்கி நிக்ரஹாத்மிகையான சக்தியாலே திரோஹித ஸ்வஸ்வரூபாதிகனாய் ஜீவாத்மா ஸம்ஸரிக்கும்படியை விஸ்தரேண ப்ரதிபாதித்து, அநந்தரம் அநுக்ரஹாத்மிகையான சக்தியாலே ஸம்ஸாராந் முக்தனாம்படியை ப்ரதிபாதிப்பதாக, “ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே, ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:, ஜீவே துக்காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே, ஸமீக்ஷிதஸ்து தாஸோயம் கருணாவர்ஷரூபயா, கர்மஸாம்யம் பஜத்யேவ ஜீவோ விஷ்ணு ஸமீக்ஷயா சக்தி பாவஸ் ஸவை ஜீவ முத்தாரயதி ஸம்ஸ்ருதே:, கர்மணீச ஸமேதத்ர தூஷ்ணீம் பாவ முபாகதே” என்று, ஸம்ஸார சக்ரஸ்தனாய் துக்காகுலனான ஜீவன் விஷயமாக ஸர்வேச்வரனுக்கொரு க்ருபை ஜநிக்கும்படியையும், அந்த க்ருபையடியாக உண்டான வவன் கடாக்ஷத்துக்கு விஷயபூதனாய்க் கொண்டு இவன் கர்மஸாம்யத்தை பஜிக்குமென்னுமத்தையும், அந்த அநுக்ரஹாத்மிகையான சக்தியினுடைய ஸத்பாவமிவனை ஸம்ஸாரத்தினின்று முத்தரிப்பிக்குமென்னு மிடத்தையும், கீழ் கர்ம ஸாம்யமென்றதின் கருத்தையும் ஸங்க்ரஹேண சொல்லி,

**விளக்கம்** - பகவத்சாஸ்த்ரம் என்று கூறப்படும் பாஞ்சராத்ர ஆகமம் என்பது 108 ஸம்ஹிதைகளை உடையதாகும் (ஸம்ஹிதை என்றால் நூலின் உள்ள பிரிவு). அவற்றில் ஒன்று அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை ஆகும். பாஞ்சராத்ரத்தில் - பஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயணஸ் ஸ்வயம் - பாஞ்சராத்ர ஆகமம் முழுவதையும் அருளிச்செய்தவன் ஸ்ரீமந்நாராயணன் - என்று கூறுவதற்கு ஏற்ப, அந்தச் சாஸ்த்ரம் முழுவதையும் முதலில் அருளிச் செய்தவன் ஸ்ரீமந்நாராயணனே ஆவான் என்றபோதிலும், அதில் உள்ள ஸம்ஹிதைகளை பலர் அருளிச்செய்துள்ளனர். அவற்றுள், இந்தச் ஸம்ஹிதையை அருளிச்செய்தவன் அஹிர்புத்ந்யன் என்ற பெயர் உள்ள சிவன் என்பதால், இது அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை எனப்படுகிறது. இந்த ஸம்ஹிதையில், திருவாய்மொழி (6-10-8) - நுண்ணுணர்வின் நீலார் கண்டத்தம்மான் - என்று கூறுவதற்கு ஏற்ப, ஸத்வகுணம் அதிகமாக உள்ளபோது நுட்பமாக உள்ள அனைத்தையும் அறியவல்ல சிவனை, தேவரிஷியும் ப்ரஹ்மத்தை அறிந்தவரும் ஆகிய நாரதமஹரிஷி சென்றடைந்து, அவனை வணங்கி, தனக்கு இருந்த சந்தேகங்களைக் கேட்கத் தொடங்கினார். அப்போது சிவன் அவருடைய சந்தேகங்கள் அனைத்தையும் நீக்கியபடி உரைத்துக் கொண்டிருந்தான். அதில் பதினாலாவது அத்யாயத்தில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு விடை அளிக்கத் தொடங்கினான். ஸம்ஸாரத்திலிருந்து (ஜீவனை) விடுவிப்பதற்கு ஸர்வேச்வரனுக்கு

நிக்ரஹசக்தி மற்றும் அநுக்ரஹசக்தி என்பதான இரண்டு சக்திகள் உண்டு என்று உறுதியாக உரைக்கத் தொடங்கினான். அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் – திரோதாநகரீ சக்திஸ் ஸா நிக்ரஹ ஸமாஹ்வயா, புமாம்ஸம் ஜீவஸம்ஜ்ஞம் ஸா திரோபாவயதி ஸ்வயம் - ஸர்வேச்வரனுடைய திரோதாநகரீ எனப்படும் நிக்ரஹசக்தியானது, ஜீவனுடைய ஞானத்தை மறைக்கிறது - என்று தொடங்கி, நிக்ரஹம் செய்வதான சக்தி காரணமாக மறைக்கப்பட்ட ஸ்வரூபம் முதலானவற்றை உடைய ஜீவன், ஸம்ஸாரத்தில் எவ்விதம் உழன்றபடி உள்ளான் என்று விரிவாக உரைத்தான். அதனைத் தொடர்ந்து ஸர்வேச்வரனுடைய அனுக்ரஹ சக்தி காரணமாக ஜீவன் ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை அடைகிறான் என்று விரிவாக உரைக்கும்விதத்தில் அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் – ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே, ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:, ஜீவே துக்காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே, ஸமீக்ஷிதஸ்து தாஸோயம் கருணாவர்ஷரூபயா, கர்மஸாம்யம் பஜத்யேவ ஜீவோ விஷ்ணு ஸமீக்ஷயா சக்தி பாவஸ் ஸவை ஜீவ முத்தாரயதி ஸம்ஸ்ருதே:, கர்மணீச ஸமேதத்ர தூஷ்ணீம் பாவ முபாகதே - இப்படியாக ஸம்ஸாரம் என்ற சக்கரத்தில் சுற்றியபடி உள்ள ஜீவன் விஷயத்தில் மஹாவிஷ்ணுவிற்குக் கருணை ஏற்படுகிறது. கருணை மழையைப் பொழியும் ஸர்வேச்வரனுடைய கடாக்ஷத்திற்கு இலக்காகும் ஜீவன், கர்மம் அற்ற நிலையை அடைகிறான். ஸர்வேச்வரனுடைய அந்த அனுக்ரஹசக்தி காரணமாக அந்த ஜீவன் ஸம்ஸாரத்திலிருந்து உயர்த்தப்பட்டு, புண்ணிய பாவ கர்மங்கள் இல்லாத நிலையை அடைகிறான் - என்று ஸம்ஸாரத்தில் சுழன்றபடி உள்ள ஜீவனுடைய துன்பகரமான நிலையை உரைத்து, அந்த ஜீவன் விஷயத்தில் ஸர்வேச்வரனுக்கு உண்டாகும் கருணையைக் குறித்து உரைத்தான்; தொடர்ந்து, அந்தக் கருணை காரணமாக ஏற்படுவதான ஸர்வேச்வரனுடைய கடாக்ஷத்திற்கு இலக்காகும் ஜீவன், புண்ணிய பாவ கர்மங்கள் சமமாக உள்ள நிலையை (அதாவது அவை இல்லாமல் போகும் நிலையை) அடைகிறான் என்று கூறினான். அடுத்து கர்மஸாம்யம் (புண்ணியபாவங்கள் சமமாக உள்ள நிலை) என்பதைக் குறித்துத் தனது கருத்தைச் சுருக்கமாக வெளிப்படுத்தினான்.

**வ்யாக்யானம்** – “யதாஹி மோஷகா: பாந்தே பரிபர்ஹ முபேயுஷி, நிவ்ருத்த மோக்ஷணோத்யோகாஸ் ததா ஸந்த உதாஸதே, அநுக்ரஹாத்மிகாயாஸ்து சக்தே: பாதக்ஷணேததா, உதாஸாதே ஸமீபூய கர்மணீதே சுபாசுபே, தத்பாதாநந்தரம் ஜந்துர்யுக்தோ மோக்ஷ ஸமீக்ஷயா, ப்ரவர்த்தமாந வைராக்யோ விவேகேபிநிவேசவாந்,

ஆகமா நநுஸஞ்சிந்த்ய குரூநப்யுபஸர்ப்பயச, லப்தஸத்த: ப்ரகாரைஸ்தை: ப்ரபுத்தோ போதபாலந:" இத்யாத் யத்யாய சேஷத்தாலே, வழிபோகிறவன் ஸம்பாரத்தை வைத்து மறைய நின்றவளவிலே அவனுடைய ஸம்பாரத்தை அபகரிப்பதாக உத்யோகிக்கிற தஸ்கரர், அந்த ஸம்பாரத்தை அவன் வந்து கைப்பற்றினவளவில், யாதொருபடி நிவ்ருத்த மோக்ஷணோத்யோக ராகா நின்றுகொண்டு எப்போது முதாஸீநரா யிருந்து விடுவர்கள்; அப்படியே, பகவதநுக்ரஹ சக்தி இவன் பக்கலிலே வந்த க்ஷணத்திலே, இவ்வாத்மாவைத் தன் வழியே இழுப்பதாக புண்ணியபாப கர்மங்களிரண்டு மிவனை வந்து மேலிடாமல் உதாஸீநித்திருந்துவிடும்; அந்த அநுக்ரஹாத்மிகையான சக்தி தன் பக்கல் வந்த வநந்தரம் இச்சேதநன் மோக்ஷ ஸமீக்ஷா யுக்தனாய் ப்ரவர்த்தமாக வைராக்யனாய் விவேகா பிநிவேசியாய் சாஸ்த்ர ப்ரவணனாய் ஸதாசார்ய ஸமாச்ரயணம் பண்ணி லப்த ஸத்தாகனாய் லப்தஜ்ஞாநனாய் அந்த ஞானத்தை ரக்ஷித்துக்கொண்டு ஸாரக்ராஹியாய் ஸமுசிதோபாய பரிரஹத்தாலே ஸம்ஸாரா துத்தீர்ணனாய் பரமபதத்தை ப்ராபிக்குமென்று சொன்னானிறே; ஆகையால், "யதாஹி மோக்ஷகா: பாந்தே" என்று தொடங்கி இந்நிர்ஹேதுக விஷயீகாரத்தினுடைய க்ரமத்தை ஆப்தப்ரமாணமான பகவச் சாஸ்த்ரத்திலே சொல்லிற் றென்கிறார்.

**விளக்கம்** - தொடர்ந்து அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் – யதாஹி மோஷகா: பாந்தே பரிபர்ஹ முபேயுஷி, நிவ்ருத்த மோக்ஷணோத்யோகாஸ் ததா ஸந்த உதாஸதே, அநுக்ரஹாத்மிகாயாஸ்து சக்தே: பாதக்ஷணேததா, உதாஸாதே ஸமீபூய கர்மணீதே சுபாசுபே, தத்பாதாநந்தரம் ஜந்துர்யுக்தோ மோக்ஷ ஸமீக்ஷயா, ப்ரவர்த்தமாந வைராக்யோ விவேகேபிநிவேசவாந், ஆகமா நநுஸஞ்சிந்த்ய குரூநப்யுபஸர்ப்பயச, லப்தஸத்த: ப்ரகாரைஸ்தை: ப்ரபுத்தோ போதபாலந: - வழிப்போக்கன் ஒருவன் தனது தலையில் சுமந்து கொண்டு போகும் அதிகமான பாரத்தைக் கண்ட திருடர்கள், "இத்தனை பாரம் நாம் ஏன் சுமக்கவேண்டும்" என்று எண்ணி விலகுவது போன்று அனுக்ரஹத்தைப் பொழிவதான ஸர்வேச்வரனுடைய கடாக்ஷம் ஜீவனின் மீது விழுந்த உடனேயே புண்ணியபாவ கர்மங்கள் விலகிவிடும்; அந்த நொடியிலேயே ஜீவன் மோக்ஷத்தின் மீது மிகுந்த ஆசை, ஞானத்துடன் கூடிய வைராக்யம், ஞானத்தில் ஆசை போன்றவற்றை அடைகிறான்; வேதசாஸ்த்ரங்களைக் கற்று உணரத் தொடங்குகிறான்; சிறந்த ஆசார்யர்களை அண்டியவனாக, தனது ஸ்வரூபம் விளங்கப்பெற்று, ஞானம் வளர்ந்து, தகுந்த உபாயத்தைக் கைக்கொண்டு மோக்ஷம் அடைகிறான் - என்று உரைத்தான்.

அதாவது வழிப்போக்கன் ஒருவன் பாரம் நிறைந்த பொருளை எடுத்துக்கொண்டு போகும்போது திருடர்களைப் பார்த்து, அந்தப் பொருள்களை மறைக்கும்போது, அவர்கள் வந்து அந்தப் பொருளைக் கைப்பற்றுகிறார்கள்; ஆனால் அந்தப் பாரமான பொருளை அந்த வழிப்போக்கன் மீண்டும் கைப்பற்றும்போது, அந்தத் திருடர்கள் ஏதும் செய்யாமல் இருக்கிறார்கள். இது போன்று ஸர்வேச்வரனுடைய அனுக்ரஹ சக்தி என்பது ஜீவனிடம் சேர்ந்த உடனேயே, அந்த ஜீவனைத் தங்கள் பக்கம் பற்றி இழுப்பதான புண்ணியபாவ கர்மங்கள் இரண்டும் ஏதும் செய்யாமல் இருந்துவிடுகின்றன. அந்த அனுக்ரஹ சக்தியானது தன் பக்கம் வந்தவுடன், அந்த ஜீவன் மோக்ஷத்தில் விருப்பம் கொண்டவனாகவும், வைராக்யம் வளரப் பெற்றவனாகவும், விவேகம் குறித்து ஆசை அடைந்தவனாகவும், சாஸ்த்ரங்கள் மீது ஆழ்ந்த விருப்பம் கொண்டவனாகவும், சிறந்த ஆசார்யனை அடைந்து தனது ஸ்வரூபம் குறித்து அறிந்தவனாகவும், அப்படிக் கிடைத்த ஞானத்தைக் காப்பாற்றிக் கொண்டு ஸாரத்தை உணர்ந்தவனாகவும், தகுந்த உபாயத்தைக் கைக்கொண்டு ஸம்ஸாரத்திலிருந்து மேலே எழுந்து பரமபதத்தை அடைகிறான் - என்றான். ஆகவே - யதாஹி மோக்ஷகா: பாந்தே - என்பது தொடக்கமாக, எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஸர்வேச்வரன் ஜீவனைப் பற்றும் விஷயத்தில் நம்பத் தகுந்த ப்ரமாணமாக உள்ள பகவத்சாஸ்த்ரம் கூறுவதை அருளிச்செய்தார்.

393. “வெறிதே யருள்செய்வர்” என்று இவ்வர்த்தத்தை ஸ்பஷ்டமாக அருளிச்செய்தாரிறே.

**அவதாரிகை** - இப்படி சாஸ்த்ரம் சொன்னவளவன்றிக்கே, நிர்ஹேதுக விஷயீகாரத்துக்கு நேரே பாத்ரபூதராய் ஆப்ததமாக்ரேஸரரான ஆழ்வார் இவ்வர்த்தத்தைத் தெளிய வருளிச் செய்தாரென்கிறார் மேல் (வெறிதே) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாகச் சாஸ்த்ரம் உரைத்தது மட்டும் அல்லாமல், எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஸர்வேச்வரன் கடாக்ஷிப்பதற்கு நேரடியான பாத்திரமாக இருந்தவரும், நம்பத்தகுந்தவர்களில் உயர்ந்து நிற்பவர்களின் தலைவரும் ஆகிய நம்மாழ்வாரும் இதே கருத்தை அருளிச்செய்தார் என்று இந்தச்சூர்ணையில் உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** - (வெறிதே யருள்செய்வர்) என்றது, நிர்ஹேதுகமாக க்ருபை பண்ணுவரென்றபடி. (இவ்வர்த்தத்தை ஸ்பஷ்டமாக வருளிச்செய்தார்) என்றது,

இந்நிர்ஹேதுக விஷயீகாரமாகிற ரஹஸ்யார்த்தத்தை ஸம்சய விபர்யயமற ஸகலரு மறியும்படி ப்ரகாசமாக வருளிச் செய்தாரென்கை.

**விளக்கம்** - (வெறிதே யருள்செய்வர்) – திருவாய்மொழியில் (8-7-8) – வெறிதே அருள் செய்வார் - என்பது என்னவென்றால், எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஸர்வேச்வரன் க்ருபை செய்வான் - என்பதாகும். (இவ்வர்த்தத்தை ஸ்பஷ்டமாக வருளிச்செய்தார்) - இப்படியாக எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஸர்வேச்வரன் க்ருபை செய்கிறான் என்னும் இரகசியத்தை, எந்தவிதமான சந்தேகமும் இன்றி அனைவரும் எளிதாகப் புரிந்து கொள்ளும்படி அருளிச்செய்தார் - என்று கருத்து.

394. “செய்வார்கட்கு” என்று அருளுக்கு ஹேது ஸுக்ருத மென்னாநின்றதே யென்னில்; அப்போது “வெறிதே” என்கிறவிடம் சேராது.

**அவதாரிகை** - அந்த திவ்யஸூக்திக் கநந்தரோக்தியி லபிப்ராய மறியாதார் சங்கையை யநுவதித்துப் பரிஹரிக்கிறார் (செய்வார்கட்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஆழ்வார் அருளிச்செய்த அந்தத் திருவாய்மொழியில் அடுத்து உள்ளதான “செய்வார்கட்கு” என்பதான பதத்தின் பொருளை உணர இயலாதவர்களுடைய ஐயத்தை மனதில் கொண்டவராக இந்தச் சூர்ணையில் அதனை நீக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “அருள்செய்வர்” என்ற வநந்தரம், ஆர்க்குத் தானென்னு மபேக்ஷையிலே, “செய்வார்கட்கு” என்று, அருளுகைக் குறுப்பாகத் திருவுள்ள முகக்கும்படி சிலவற்றைச் செய்யுமவர்களுக் கென்கையாலே, அவன் க்ருபை பண்ணுகைக்கு ஹேது சேதந ஸுக்ருத மென்னாநின்றதே யென்னில்? அப்படி சொல்லும்போது நிர்ஹேதுக வாசகமான “வெறிதே” என்கிறவிடம் ஸங்கதமாகா தென்கை. ஆகையால் “செய்வார் கட்கு” என்றது, தான் செய்ய நினைத்தவர்களுக்கென்றபடி.

**விளக்கம்** – திருவாய்மொழியில் (8-7-8) - அருள் செய்வார் - என்று உரைத்த உடனேயே, அடுத்த கேள்வி எழலாம்; அதாவது “யாருக்கு அருள் செய்வான்?”, என்று கேட்கலாம். அதற்கு ஆழ்வார் – செய்வார்கட்கு - ஸர்வேச்வரன் க்ருபை செய்வதற்குக் காரணமாக

அவனுடைய திருவுள்ளத்தை குளிர வைத்த சில செயல்கலைச் செய்தவர்களுக்கு - என்று அருளிச்செய்து விடை அளித்தார். ஆனால், ஆழ்வார் அருளிச் செய்தபடி நோக்கினால், ஸர்வேச்வரன் எந்தவிதமான காரணமும் இன்றி க்ருபை செய்யவில்லை, ஜீவன் செய்த சில புண்ணிய செயல்களால் க்ருபை செய்தான் என்றல்லவோ ஆகிறது என்று அடுத்து ஒரு கேள்வி கேட்கலாம். இவ்விதம் பொருள் கொண்டு கேள்வி எழுப்பினால், பாசுரத்தில் உள்ள “வெறிதே” என்று பதம் பொருந்தாமல் போகும். ஆகவே “செய்தவர்கட்கு” என்ற பதத்திற்கு, “தான் க்ருபை செய்யவேண்டும் என்று எண்ணியவர்களுக்கு” - என்றே பொருள் கொள்ளவேண்டும்.

395. பகவதாபிமுக்க்யம் ஸுக்ருதத்தாலன்றிக்கே பகவத் க்ருபையாலே பிறக்கிறது. அத்வேஷம் ஸுக்ருதத்தாலே யென்னில்; இந்த பல விசேஷத்துக்கு அத்தை ஸாதநமாக்க வொண்ணாது.

**அவதாரிகை** - ஆபிமுக்க்யத்துக்கு பகவத் க்ருபை காரணம், அத்வேஷத்துக்கு ஸுக்ருதம் காரணமென்று நினைத்துச் சொல்லுவார் வசநத்தை அநுவதித்துக் கொண்டு பரிஹரிக்கிறார் (பகவதாபிமுக்க்யம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - பகவத் ஆபிமுக்க்யம் என்றால் பகவானிடம் கொள்ளும் ஆழ்ந்த ஈடுபாடு; இதற்கு ஸர்வேச்வரனுடைய க்ருபையே காரணமாக உள்ளது; ஸர்வேச்வரனிடம் ஜீவன் த்வேஷம் இல்லாமல் இருப்பதற்கு ஜீவனுடைய புண்ணிய பலன்கள் காரணமாக உள்ளன. இப்படியாக ஒரு சிலர் உரைப்பர். அவர்களுடைய வாக்கியத்தை உரைத்து, அதற்கான பதிலை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அநாதிகாலம் விமுகனாய்ப் போந்த இச்சேதநனுக்கு பகவத் விஷயத்தில் பிறக்கிற வாபிமுக்க்யம், இவனுடைய ஸுக்ருத நிபந்தநமாகவன்றிக்கே கேவல பகவத் க்ருபையாலே பிறக்கிறது; தத்பூர்வபாவியான அத்வேஷம் ஸுக்ருத மடியாகப் பிறக்கிறதென்று சொல்லப்பார்க்கில், அகிலாத்மகுணாதியாய் ஆத்மோஜ்ஜீவ நாங்குரமா யிருந்துள்ள பகவதத்வேஷமாகிற இப்பலவிசேஷத்துக்கு அதிக்ஷுத்ரமான யாத்ருச்சிகாதி ஸுக்ருதத்தைக் காரணமென்று சொல்லவொண்ணாதென்கை. ஆகையால் அத்வேஷத்துக்கும் பகவத்க்ருபையே காரணமென்று சொல்லவேணுமென்று கருத்து.

**விளக்கம்** – அதாவது, எல்லையற்ற காலமாக ஸர்வேச்வரனிடம் எந்தவிதமான ஈடுபாடும் காண்பிக்காமல் உள்ள ஜீவனுக்கு, ஸர்வேச்வரன் விஷயத்தில் ஒரு காலகட்டத்தில் ஆழ்ந்த ஈடுபாடு ஏற்படுகிறது; இதன் காரணம் ஜீவன் செய்த புண்ணியம் அல்ல; ஸர்வேச்வரனுடைய கருணையே காரணமாகும்; இப்படியாக ஈடுபாடு ஏற்படுவதற்கு முன்பு உண்டாகும் நிலையான "ஸர்வேச்வரனிடம் த்வேஷம் கொள்ளாமல் இருத்தல்" என்பது ஜீவனுடைய புண்ணியத்தின் காரணமாக உண்டாகிறது என்று கூறினால் என்ன தவறு என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார். ஆத்மகுணங்கள் அனைத்திற்கும் காரணமாக உள்ளதும், ஆத்மாவின் உய்தலுக்கு முளையாக உள்ளதும் ஆகிய "பகவானிடம் த்வேஷம் கொள்ளாமை" என்பது மிகவும் உயர்ந்த நிலையாகும்; இப்படிப்பட்ட பலன் கிட்டுவதற்கு மிகவும் தாழ்ந்ததாகிய, "தற்செயலாகச் செய்த புண்ணியம்" போன்றவை காரணமாக இருக்கின்றன என்று கூற இயலாது. ஆகவே "பகவானிடம் வெறுப்பு இன்மை" என்பதும் ஸர்வேச்வரனுடைய கருணை காரணமாகவே ஏற்படுகிறது என்று கருத்து.

396. சாஸ்த்ரமும் விதியாதே நாமுமறியாதே யிருக்கிற இத்தை ஸுக்ருதமென்று நாம் பேரிடுகிறபடி யென்னென்னில், நாமன்று, ஈச்வரனென்று கேட்டிருக்கையாயிருக்கும்.

**அவதாரிகை** - சாஸ்த்ராவிஹிதமுமாய் சேதநாவிதிதமுமான இந்த யாத்ருச்சிகாதிகளுக்கு ஸுக்ருதமென்று பேரிட்டா ரின்னாரென்னுமிடத்தை சங்காபரிஹாரரூபேண அருளிச் செய்கிறார் (சாஸ்த்ரமும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – சாஸ்த்ரங்களில் விதிக்கப்படாமல் உள்ளதும், ஜீவனுக்கு அறியாதவிதத்தில் ஏற்படுவதும் ஆகிய "தற்செயலாக விளைந்தது" என்பதற்கு புண்ணியம் என்று யார் பெயரிட்டார்கள் என்று கேள்விக்கு இந்தச் சூர்ணையில் விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "இதம் குர்யாத்" என்று சாஸ்த்ர விஹிதமுமாய் கர்த்ருபூதரான சேதநராலே புத்திபூர்வேண அநுஷ்டிதமுமான தொன்றையிறே ஸுக்ருதமென்பது; அப்படியே, இத்தைச் செய்வானென்று சாஸ்த்ரமும் விதியாதே இன்ன ஸுக்ருதம் பண்ணினோமென்று தத்கர்த்தாக்களான நாமு மறியாதேயிருக்கிற விந்த யாத்ருச்சி காதியை ஸுக்ருதமென்று நாம் பேரிடுகிறபடி எங்ஙனே என்னில்? "இதுக்கு ஸுக்ருத

மென்று பேரிடுகிறோம் நாமன்று, ஸர்வமுக்தி ப்ரஸங்கம் வாராமைக்காக ஸர்வஜ்ஞனான வீச்வரன் ஸுக்ருதமென்று பேரிட்டு வைத்தான்” என்று தத்வதர்சிகளான ஆசார்யர்கள் அருளிச்செய்யக் கேட்டிருக்கையாயிருக்கு மென்கை.

**விளக்கம்** - இதம் குர்யாத் – இதனைச் செய் - என்று விதிக்கப்பட்டதும், செயல்களைச் செய்பவர்களான ஜீவன்களால் உணர்ந்து செய்யப்படுவதும் ஆகிய செயல்களை அல்லவோ புண்ணியச் செயல்கள் என்று கூறுவர்? இப்படியாக உள்ளபோது, “இதனைச் செய்வானாக” என்று சாஸ்த்ரங்கள் விதிக்காமல் உள்ளபோதிலும், “இத்தகைய புண்ணியம் செய்தோம்” என்று அறியாதவிதத்தில் அதனைச் செய்த நாம் உள்ள போதிலும், அந்தத் தற்செயலாக நடைபெற்றவைகளுக்கு “புண்ணியம்” என்று யார் பெயர் வைத்தார்கள்? இதற்கு விடை அளிக்கிறார். இந்தச் செயல்களுக்குப் புண்ணியம் என்று பெயரிட்டது நம் போன்றவர்கள் அல்லர். “அனைவரும் மோக்ஷம் போகும் தகுதி உள்ளவர்” என்று நிலை ஏற்படாமல் இருப்பதற்காக அனைத்தும் அறிந்தவனாகிய ஸர்வேச்வரன் “புண்ணியம்” என்று பெயர் வைத்தான். இப்படியாக உள்ளதுஉள்ளபடி அறிவிக்கவல்ல ஆசார்யர்கள் அருளிச்செய்ய நாம் கேட்டுள்ளோம் என்கிறார்.

**வ்யாக்யானம்** - ஆக, கீழ் “வெறிதே யருள்செய்வர்” என்று மயர்வற மதிநல மருளப் பெற்றவர்களில் தலைவரான நம்மாழ்வார் நிர்ஹேதுக விஷயீகாரமாகிற இவ்வர்த்தத்தை விசதமாக அருளிச்செய்தபடியை தர்சிப்பித்து, அதின் மேல்வந்த சங்காபரிஹாரங்களும் பண்ணி யருளினாராய்த்து.

**விளக்கம்** – இப்படியாகத் திருவாய்மொழியில் (8-7-8) - வெறிதே யருள்செய்வர் – என்று மயர்வற அருளப்பெற்ற ஆழ்வார்களுடைய தலைவரான நம்மாழ்வார், எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஸர்வேச்வரன் அருள்வது குறித்து, விரிவாக உரைத்ததைக் காண்பித்து, அதனைத் தொடர்ந்து எழுந்த சந்தேகங்களுக்கான விளக்கத்தையும் அருளிச்செய்தார்.

397. இவ்வர்த்த விஷயமாக ஆழ்வார்கள் பாசுரங்களில் பரஸ்பர விருத்தம் போலே தோற்றுமவற்றில் சொல்லுகிற பரிஹாரமும், மற்றுமுண்டான வக்தவ்யங்களும் விஸ்தர பயத்தாலே சொல்லுகிறிலோம்.

**அவதாரிகை** - இனி, இவ்வர்த்த விஷயமாக ஆழ்வார்கள் பாசுரங்களில் அந்யோந்ய விருத்தம்போலே தோற்றுமவற்றுக்குப் பரிஹாரமும், இவ்வர்த்த ஸ்தாபகமாக மற்றுஞ் சொல்லவேண்டும் ப்ரமாண தர்க்கங்களும் இவ்விதத்தில் தாமருளிச் செய்யாமைக்கு ஹேது இன்னதென்கிறார் (இவ்வர்த்த விஷயமாக) என்று தொடங்கி.

**விளக்கம்** - அடுத்து இதுவரை கூறப்பட்ட பொருள் விஷயமாக (அதாவது எந்தவிதமான காரணமும் இன்றி உண்டாகும் ஸர்வேச்ரனின் கருணை) ஆழ்வார்களின் பாசுரங்களில் சில, ஒன்றுக்கொன்று முரண்படுவதாகத் தோன்றுவதைக் காண்பித்து அவற்றுக்குப் பரிஹாரமும் உரைக்கிறார். மேலும் இந்தக் கருத்தை நிலைநிறுத்தவல்லதாக உள்ள ப்ரமாணங்களையும் தர்க்கவாதங்களையும் இங்கு தாம் உரைக்காமல் இருப்பதற்கான காரணத்தையும் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நிர்ஹேதுக விஷயீகாரமாகிற இவ்வர்த்த விஷயமாக, இவ்விஷயீகாரத்துக் கிலக்காய் மயர்வறமதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுடைய பகவதங்கீகார ப்ரகாசகங்களான பாசுரங்களில், “வெறிதே யருள் செய்வர்”, “எந்நன்றி செய்தேனா வென்னெஞ்சில் திகழ்வதுவே” என்றும், “திருமாலிருஞ்சோலைமலை யென்றேனென்ன”, “மாதவனென்றதே கொண்டு” என்றும், “நல்லதோரறஞ் செய்துமிலேன்” என்றும், “நோற்றேன் பல்பிறவி” என்றும், “யானெத்தவத்தாற் காண்பன்கொ லின்று” என்றும், “யானே தவஞ்செய்தேன்” என்றும், இத்யாதிகளாலே பகவதங்கீகார ஹேதுக்களொன்றும் தங்கள் பக்கல் இல்லையென்பது உண்டானாற் போலே சொல்லுவதாகையாலே கருத்தறியாதவர்களுக்கு பரஸ்பரவிருத்தம் போலே ப்ரதிபாஸிக்குமென்கை. அவற்றில் சொல்லும் பரிஹாரங்களாவன, “மாதவன்”, “மலை” என்கிறவை வ்யாவ்ருத்த யுக்தி மாத்ரமாகையாலே அவற்றை ஆரோபித்து வந்து மேல் விழுகிற பகவத்க்ருபையே அங்கீகாரஹேது, அவை ஹேதுவன்றென்னுமிடம் ஸித்தம்; “நோற்றேன் பல்பிறவி” என்றது, எனக்குப் பல ஐந்மங்களுண்டாம்படியாக வந்து நான் ஸாதநாநுஷ்டாநம் பண்ணிற்றென்று ஸ்வநிகர்ஷம் சொன்னவித்தனை, அநேக ஜந்மம் உன்னைப் பெறுகைக்கு ஸாதநாநுஷ்டாநம் பண்ணினேனென்றபடி யன்று; “யானே தவஞ் செய்தேன்” என்றது, “இருந்தமிழ் நன்மாலை யிணையடிக்கே” சொல்லப் பெற்ற ப்ரீத்யதிசயத்தாலே என்னைப் போலே பாக்யம் பண்ணினாரில்லையென்று இப்பேறு பெற்ற தன்மை ச்லாகித்தமாத்ர மென்றிப்புடைகளிலே நிர்ஹேதுக வசந விரோதம்

வராதபடி ஸஹேதுகம்போலேத் தோற்றுமவற்றுக்குச் சொல்லும் பரிஹாரங்கள். (மற்றுமுண்டான வக்தவ்யங்களாவன), மற்றுமிந் நிர்ஹேதுக ஸ்தாபநார்த்தமாகச் சொல்ல வேண்டுமவையான "ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வ கர்மபி:, ஜீவே துக்காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே", "நிர்ஹேதுக கடாக்ஷேண மதீயேந மஹாமதே, ஆசார்ய விஷயீகாராத் ப்ராப்நுவந்தி பராங்கதிம், நாஸௌ புருஷகாரேண நசாப்யந்யேந ஹேதுநா, கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந" இத்யாதி ப்ரமாணங்களும், ஏததநுக்ராஹக தர்க்கங்களும். (விஸ்தரபயத்தாலே சொல்லுகிறிலோம்) என்றது, இவை யெல்லாஞ் சொல்லப் பார்க்குமளவில் க்ரந்தப்பரப்பு வருமென் றஞ்சிச் சொல்லுகிறோமில்லை யென்றபடி.

**விளக்கம்** - எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஸர்வேச்வரன் ஒருவனைக் கைக்கொள்ளும் விஷயத்தில், இவ்விதம் கைக்கொள்ளப்பட்டவர்களாகவும், மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர்களாகவும் உள்ள ஆழ்வார்கள், ஸர்வேச்வரன் தங்களை ஏற்றுக் கொண்டதற்கான காரணம் ஏதும் தங்களிடம் இல்லை என்பது போன்று உரைப்பதால், இதன் ஆழ்பொருளை அறியாதவர்களுக்கு ஒன்றுடன் ஒன்று வாக்கியங்கள் முரண்படுவதாகத் தோன்றலாம்.

- திருவாய்மொழி (8-7-8) - வெறிதே யருள் செய்வர்
- திருவாய்மொழி (10-6-8) - எந்நன்றி செய்தேனா வென்னெஞ்சில் திகழ்வதுவே
- திருவாய்மொழி (10-8-1) – திருமாலிருஞ்சோலைமலை யென்றேனென்ன
- திருவாய்மொழி (2-7-3) – மாதவனென்றதே கொண்டு
- பெரியதிருமொழி (1-9-4) - நல்லதோரறஞ் செய்துமிலேன்
- பெரியதிருமொழி (1-9-8) - நோற்றேன் பல்பிறவி
- இரண்டாம் திருவந்தாதி (86) - யானெத்தவத்தாற் காண்பன்கொ லின்று
- இரண்டம் திருவந்தாதி (74)- யானே தவஞ்செய்தேன்

இந்தப் பாசுரங்களுக்கான சமாதானங்களை அடுத்து காண்போம்.

- திருவாய்மொழி (2-7-3) – மாதவன், (10-8-1) – திருமாலிருஞ்சோலை - என்றும் கூறப்பட்டது என்னவென்றால் மற்றவற்றிலிருந்து வேறுபடுத்தும்விதமாக

உரைக்கப்பட்ட சொற்கள் என்பதால், அவற்றையே ஒரு காரணமாகக் கருதியபடி மேலே விழுந்து ஏற்றுக் கொள்ளும் ஸர்வேச்வரனுடைய "காரணம் இல்லாமல் வரும் கருணை" என்பதே அவன் ஏற்றுக்கொள்ளுகைக்குக் காரணம் ஆகும்; மற்ற ஏதும் காரணம் அல்ல.

- பெரியதிருமொழி (1-9-8) – நோற்றேன் பல்பிறவி - என்பதன் மூலம், "நான் எந்தவிதமான உபாயத்தையும் கைக்கொள்ளாத காரணத்தால் எனக்கு பல பிறவிகள் உண்டாயின", என்று அருளிச்செய்தார். இப்படியாகத் தனது தாழ்வினை உரைத்தார். இந்தப் பாசுரத்திற்கு, "எனது பல பிறவிகளில் நான் உன்னை அடைவதற்கான உபாயங்களைக் கைக்கொண்டபடியே இருந்தேன்" என்பது பொருள் அல்ல.

- இரண்டாம் திருவந்தாதி (74) - யானே தவஞ் செய்தேன், இரண்டாம் திருவந்தாதி (74) – இருந்தமிழ் நன்மாலை யிணையடிக்கே - என்பதால் கூறப்பட்டது என்னவென்றால், "எனக்குக் கிட்டிய இந்தப் பேறு காரணமாக என்னைப் போன்ற பாக்கியசாலிகள் வேறு யாரேனும் உண்டோ?", என்று தான் பெற்ற பேறு காரணமாக தன்னைக் கொண்டாடிக் கொண்டார் என்பதே ஆகும்.

இது போன்றே உள்ள மற்ற பாசுரங்களிலும் "ஆழ்வார்களை எந்தவிதமான காரணமும் இல்லாமல் கைக்கொண்டான்" என்ற கருத்திற்கு விரோதம் ஏற்படாத விதத்தில், "ஒரு குறிப்பிட்ட காரணத்தைக் கற்பித்துக் கைக்கொண்டான்" என்று சமாதானம் கொள்ளவேண்டும் என்கிறார். (மற்றுமுண்டான வக்தவ்யங்களாவன) – மேலும், ஸர்வேச்வரன் எந்தவிதமான காரணமும் இன்றி ஒருவனைக் கைக்கொள்கிறான் என்பதற்குக் கீழே உள்ளது போன்று பல ப்ரமாண வாக்கியங்கள் உண்டு. ஆனால் இது போன்ற பல ப்ரமாண வாக்கியங்கள் உண்டு:

- அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை - ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வ கர்மபி:, ஜீவே துக்காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே – இப்படியாக ஸம்ஸாரம் என்ற சக்கரத்தில் தனது கர்மம் காரணமாகச் சுழன்றபடி துன்பம்

அடைகின்ற ஜீவனைக் குறித்து மஹாவிஷ்ணுவிற்கு ஆழ்ந்த கருணை உண்டாகிறது.

- பாஞ்சராத்ரம் – நிர்ஹேதுக கடாக்ஷேண மதீயேந மஹாமதே, ஆசார்ய விஷயீகாராத் ப்ராப்நுவந்தி பராங்கதிம், நாஸௌ புருஷகாரேண நசாப்யந்யேந ஹேதுநா, கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந – எந்தவிதமான காரணமும் இன்றி ஏற்படும் எனது கடாக்ஷத்தாலும், அதன் காரணமாக ஆசார்யன் கைக்கொள்வதாலும் மிகவும் உயர்ந்த கதியை அடைகிறார்கள். நான் ஒருவனுடைய புருஷகாரத்தாலோ அல்லது வேறு எந்தவிதமான காரணத்தாலோ அருள் செய்வதில்லை; எனது விருப்பம் காரணமாக மட்டுமே நான் ஒருவனைக் கடாக்ஷிக்கிறேன்.

(விஸ்தரபயத்தாலே சொல்லுகிறிலோம்) – இது போன்று உள்ள பல ப்ரமாண வாக்கியங்களைக் கூறத் தொடங்கினால் இந்த நூல் மிகவும் பெரிதாகிவிடும் என்பதால், விரிவுக்கு அஞ்சிக் கூறவில்லை.

398. ஆகையால் இவன் விமுகனான தசையிலுங்கூட உஜ்ஜீவிக்கைக்கு க்ருஷி பண்ணின ஈச்வரனை யநுஸந்தித்தால் எப்போதும் நிர்ப்பரனாயே யிருக்கு மித்தனை.

**அவதாரிகை** – ஆக, கீழ் (பகவத் குணாநுஸந்தாந மபயஹேது) என்ற ப்ரதிஜ்ஞைக்கு உபபாதகமாக, (த்ரிபாத் விபூதியிலே) என்று தொடங்கி இவ்வளவும், ஈச்வரன் இவ்வாத்மோஜ் ஜீவநார்த்தமாக விமுகதசையே பிடித்து க்ருஷி பண்ணிப் போரும்படியை விஸ்தரேண அருளிசெய்தார்; அது தன்னை நிகமிக்கிறார் (ஆகையால்) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஆக சூர்ணை 366ல் – பகவத் குணாநுஸந்தாந மபயஹேது - என்றுள்ள கருத்துக்கு விளக்கமாக, சூர்ணை 381ல் – த்ரிபாத் விபூதியிலே - என்பது தொடங்கி, கடந்த சூர்ணை முடிய, ஸர்வேச்வரன், இந்த ஜீவாத்மா கரையேறும் பொருட்டு, ஜீவாத்மா தனனை வேண்டாத நிலையில் உள்ளபோதிலும், விடாமல் அவனைக் கைக்கொள்ள முயல்வதை விரிவாக அருளிச்செய்தார். இப்போது அந்தக் கருத்தை நிறைவு செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, ஈச்வர னிவ்வாத்மோஜ்ஜீவநத்துக்கு க்ருஷி பண்ணும் கட்டளை யிதுவாகையாலே, இப்படி யிச்சேதநன் பக்கல் விமுகனான அவஸ்தையிலுமுட்பட இவனுஜ்ஜீவிக்கைக்கு க்ருஷி பண்ணிப் போந்த குணாதிகனான அவனை அநுஸந்தித்தால், ஏவம்பூத னானவவ னிவ்வவஸ்தாபந்தராக்கி நம்மை கர்மாநுகுணமாக ஸம்ஸரிக்க விடானென்று தத்குண விச்வாஸத்தாலே ஸர்வகாலமும் நிர்ப்பரனாயே யிருக்குமித்தனை, பயப்ரஸங்கமில்லை யென்றபடி.

**விளக்கம் -** ஸர்வேச்வரன் இந்த ஜீவாத்மா கரையேறுவதற்காக செய்யும் முயற்சி இதுவாக உள்ளதால், இந்த ஜீவன் தன்னை எதற்கும் வேண்டாத நிலையில் உள்ளபோதிலும், இந்த ஜீவனைக் கரையேற்றும் விதமாகப் பல முயற்சிகள் செய்யும் ஸர்வேச்வரனை எண்ணும்போது – “இப்படிப்பட்ட ஸர்வேச்வரன் நம்மை, இப்படிப்பட்ட தாழ்ந்த நிலைகளில் தள்ளி, நமது கர்மங்களுக்கு ஏற்ப நம்மை ஸம்ஸாரத்தில் சிக்கித் தவிக்க விடமாட்டான்”, என்று அவனுடைய குணத்தில் மஹாவிச்வாஸம் கொள்ளவேண்டும். அதனால் எந்த ஒரு காலத்திலும் கவலை என்பது இல்லாமல் இருக்கவேண்டும். ஆகவே அச்சம் கொள்வதற்கு எந்தக் காரணமும் இல்லை என்று கருத்து.

399. “எதிர் சூழல் புக்கு”.

**அவதாரிகை -** (விமுகனான தசையிலுங்கூட உஜ்ஜீவிக்கைக்கு க்ருஷி பண்ணின வீச்வரனை யநுஸந்தித்தால்) என்று தாம் கீழருளிச்செய்த வர்த்தத்தி லாப்திக்குடலாக ஜ்ஞாநாதிகருடைய அநுஸந்தாந விசேஷத்தை யருளிச்செய்கிறார் (எதிர் சூழல்புக்கு) என்று.

**விளக்கம் –** கடந்த சூர்ணையில் “ஜீவாத்மா தன்னை வேண்டாத நிலையில் உள்ளபோதிலும் அவனைக் கரையேற்ற முயலும் ஸர்வேச்வரனை எண்ணும்போது” என்று தாம் அருளிச்செய்த கருத்தானது அனைவராலும் ஏற்றத்தக்கதே என்று உணர்த்தும் விதமாக, அறிவில் மிகவும் உயர்ந்தவரான நம்மாழ்வாரின் உயர்ந்த அனுஸந்தானத்தை இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - "எதிர்சூழல்புக்கு" என்றது, எனக்குத் தப்பவொண்ணாதபடி பார்த்தவிடமெங்கும் தானே யாம்படியான வ்யாப்தியிலே உள்புக்கென்றபடி. "எதிர் சூழல்" என்கிறது, அவதாரபரமாக மற்றுள்ளாராலே வ்யாக்க்யாதமாய்த்தாகிலும், இப்போது இவரிவ்விடத்தில் வ்யாப்திபரமாக வருளிச்செய்கிறார். அநேக யோஜநைக ளுண்டாயிறேயிருப்பது.

**விளக்கம்** – திருவாய்மொழி (2-7-6) – எதிர் சூழல் புக்கு - என்பதன் மூலம் "நான் எங்கும் தப்பிக்க இயலாதபடி பார்த்த இடம் எங்கும் தானே நிறைந்து நிற்கும்படியாக அனைத்து பொருள்களிலும் வியாபித்து, அவற்றின் உள்ளிலும் நின்று", என்கிறார். ஆனால் இந்தத் திருவாய்மொழியின் வ்யாக்யானத்தில், "எதிர் சூழல்" என்பதன் மூலம் அவதாரங்கள் உணர்த்தப்பட்டன என்று பூர்வர்கள் கூறியுள்ளபோதிலும், இங்கு இவர், அதற்குக் கருத்தாக "எங்கும் பரவி நிற்பதை" கூறுகிறார். பலவிதங்களில் வ்யாக்யானம் செய்வது உண்டு அல்லவோ?

400. ஒருவனைப் பிடிக்க நினைத்து ஊரைவளைவாரைப் போலே வ்யாப்தியும்.

**அவதாரிகை** - அதுக்கு த்ருஷ்டாந்தம் (ஒருவனைப் பிடிக்க நினைத்து ஊரை வளைவாரைப் போலே) என்று.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்ட விஷயத்தை ஓர் உவமை மூலமாக விளக்கி அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஒருவனைப் பிடிக்க நினைத்தவன் அவனைத் தப்பாமல் பிடிக்க வேணுமென்னு மபிநிவேசத்தாலே அவ்வூரைச் சேர வளையுமாப்போலேயாய்த்து ஓராத்மாவை யகப்படுத்திக் கொள்ளுகைக்காக ஸகல சேதநாசேதநங்களிலும் வ்யாபித்து நிற்கும்படி; ஆகையால், வ்யாப்தியும் ஸ்வார்த்தமாகவென்றிறே ஜ்ஞாநாதிகரநுஸந்திப்பதென்கிறார். (வ்யாப்தியும்) என்றது, ஸர்வஸத்தா ஹேதுவானவதுவு முட்பட வென்றபடி.

**விளக்கம்** – ஒருவனைப் பிடிக்க நினைக்கும் ஒருவன், அவன் தப்பிச் சென்று விடாமல் பிடிக்கவேண்டும் என்ற ஆர்வம் காரணமாக, அவன் ஒளிந்திருக்கும் ஊர் முழுவதையும்

சுற்றி வளைத்துக்கொள்வது போன்று, ஓர் ஆத்மாவைக் கைப்பற்றவேண்டும் என்று எண்ணும் ஸர்வேச்வரன் இங்கு உள்ள அனைத்து சேதன அசேதனங்களிலும் வியாபித்து நிற்கிறான் என்று கருத்து. ஆக, ஸர்வேச்வரன் எங்கும் பரவி நிற்பது என்பது தங்களைப் பிடிப்பதற்காக என்றல்லவோ அறிவு மிகுந்தவர்கள் எண்ணியிருப்பார்கள். (வ்யாப்தியும்) - இங்கு வ்யாப்தி, அதாவது அனைத்து இடங்களிலும் பரந்திருத்தல் என்பது அனைத்து உயிர்களின் இருப்பையும் நிலைநிறுத்தச் செய்வதான நிறைவு என்பதையும் சேர்த்தே ஆகும்.

401. ஸ்ருஷ்ட்யவதாரதிகளைப்போலே ஸ்வார்த்தமாக என்றிறே ஜ்ஞாநாதிக ரநுஸந்திப்பது.

**அவதாரிகை** - ஸ்ருஷ்ட்யவதாராதிகளைப்போலே ஸ்வார்த்தமாக வநுஸந்திக்கையை ஸித்தவத்கரித்து இதுக்கு த்ருஷ்டாந்தமாக வருளிச் செய்கிறார் (ஸ்ருஷ்ட்யவதா ராதிகளைப் போலே) என்று.

**விளக்கம்** - ஸ்ருஷ்டித்தல், அவதாரம் செய்தல் போன்ற செயல்களும் தனக்காகவே ஆகும் என்று (நம்மாழ்வார்) எண்ணுவதை கருத்தில் கொண்டு, அதனையும் ஓர் உதாரணத்தால் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "முந்நீர் ஞாலத்தில்" முதற்பாட்டிலே, ஸ்ருஷ்டியை ஸ்வார்த்தமாகவும், இரண்டாம் பாட்டிலும் மூன்றாம் பாட்டிலும், அவதாரங்களை ஸ்வார்த்தமாகவும் இவர்தாமே யநுஸந்தித்தருளினாரிறே. (அவதாராதிகள்) என்கிறவிடத்தில், குணசேஷ்டி தாதிகளைச் சொல்லுகிறது.

**விளக்கம்** – திருவாய்மொழி (3-2-1) – முந்நீர் ஞாலத்தில் - என்றுள்ள முதல் பாசுரம் மூலம் ஸ்ருஷ்டி செய்வது நம்மாழ்வாராகிய தனக்காகவே என்றும், (3-2-1) – வன்மா வையம் அளந்த, (3-2-3) – கொல்லா மாக்கோல் – என்றுள்ள இரண்டு மற்றும் மூன்றாம் பாசுரங்கள் மூலம் அவதாரங்கள் செய்தது தமக்காகவே என்றும் நம்மாழ்வார் எண்ணியபடி இருந்தார் அல்லவோ? (அவதாராதிகள்) – இதில் உள்ள "ஆதி =

முதலானவை அல்லது தொடக்கமாக உள்ள மற்ற பலவும்" என்பதன் மூலம் அவனுடைய குணங்கள், லீலைகள் போன்றவையும் தமக்காகவே என்று கருத்து.

402. கர்மபலம்போலே க்ருபாபலமு மநுபவித்தே யறவேணும்.

**அவதாரிகை** - இப்படி இவன் விமுகனான தசையிலும் ஸ்ருஷ்ட்யவதாராதிகளாலே யிவனுடைய வுஜ்ஜீவநத்துக் கவன் க்ருஷி பண்ணிப்போருகிறது தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலேயிறே; தாத்ருச க்ருபா பலமிவனுக்கு அவச்யாநுபாவ்யமென்னுமிடத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச் செய்யாநின்றுகொண்டு, கீழ், (நிர்ப்பரனா யிருக்கு மித்தனை) என்றவத்தை ஸ்திரீகரிக்கிறார் மேல் (கர்மபலம் போலே) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் இந்த ஜீவன் தன்னை வேண்டாத நிலையிலும், ஸ்ருஷ்டி மற்றும் அவதாரங்கள் முதலானவற்றைச் செய்து, அந்த ஜீவன் கரையேறும் பொருட்டு ஸர்வேச்வரன் அரும்பாடுபடுவது என்பது அவனுடைய காரணம் பற்றி வருதல் அல்லாத க்ருபையால் அல்லவோ? இப்படியாக உள்ள அந்தக் கருணையின் பலனை ஜீவன் அவசியம் அனுபவிக்கவேண்டும் என்பதை ஓர் உதாரணத்தால் அருளிச்செய்து, சூர்ணை 398ல் – நிர்ப்பரனாய் – என்று உரைத்ததை இந்தச் சூர்ணை மூலம் உறுதி செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, தான் செய்த புண்யபாபரூப கர்மபலம், "அவச்ய மநுபோக்தவ்யம்" என்கிறபடியே அநுபவித்தேயறவேண்டுமோபாதி, நித்யஸம்ஸார ஹேதுவான கர்மத்தைத் தள்ளி நித்யஸூரிகளோடு ஸமாந போக பாகியாக்குகைக்கு ஹேதுவான அவனுடைய க்ருபாபலமும் இவனுக்கு இச்சையில்லையேயாகிலும் அவச்ய மநுபவித்தே விடவேணு மென்கை.

**விளக்கம்** – ஒருவன் செய்த புண்யபாவ ரூபங்களில் உள்ள கர்மபலன்களை, அவச்ய மநுபோக்தவ்யம் – கர்மபலன்களை நூறு கோடி கல்பகாலங்கள் கழிந்தாலும் அனுபவித்தே தீர்க்கவேண்டும் – என்பதற்கு ஏற்ப, அனுபவித்தே தீரவேண்டும். இது போன்று இந்த ஜீவன் ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ளதற்குக் காரணமான கர்மங்களை நீக்கி, நித்யஸூரிகளுக்கு ஒத்த நிலையை அடையவைப்பதற்கு ஸர்வேச்வரனுடைய

கருணை என்பது காரணமாக உள்ளது. அத்தகைய கருணையை அனுபவிக்க ஜீவனுக்கு விருப்பம் இல்லாவிட்டாலும், கண்டிப்பாக அனுபவித்தே தீரவேண்டும் என்று கருத்து.

403. க்ருபை பெருகப்புக்கால் இருவர் ஸ்வாதந்த்ர்யத்தாலும் தகைய வொண்ணாதபடி இருகரையுமழியப் பெருகும்.

**அவதாரிகை** - ஏவம்பூதக்ருபை அநாதியாயிருக்கச் செய்தே, கர்மகர்த்தாவான சேதநனுடையவும் தத்பலதாதாவான வீச்வரனுடையவும் ஸ்வாதந்த்ர்யங்களாலே தகையப்பட்டன்றோ கிடந்துபோந்தது, இன்னமு மப்படியானாலோவென்ன வருளிச் செய்கிறார் (க்ருபை பெருகப்புக்கால்) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஸர்வேச்வரனுடைய இத்தகைய கருணை என்பது எல்லையற்ற காலமாக இருந்து வருவதாகும். ஆனால் கர்மங்களைச் செய்யும் ஜீவன் மற்றும் அந்தக் கர்மங்களுக்கு பலன் அளிக்கும் ஸர்வேச்வரன் ஆகிய இருவருடைய சுதந்திரம் காரணமாக அத்தகைய கருணையானது தடுக்கப்பட்ட நிலையில் இருந்தது. மேலும் வரும் காலங்களில் அப்படியே இருந்துவிட்டால் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, க்ருபாகுணம் நிரங்குச ஸ்வதந்த்ரனான வீச்வரன் தானிட்ட கட்டளையிலே வந்தவாறே யங்கீகரிக்கக்கடவோமென்று இச்சேதநனை கர்மாநுகுணமாக நிர்வஹிக்குமளவில், இருவர் ஸ்வாதந்த்ர்யத்தாலும் தகையப்பட்டு நிற்குமதொழிய, அக்கட்டளையில் வாராமையாலே துர்கதியே பற்றாசாக விவனை யவன்தானே மேல் விழுந்தங்கீ கரிக்கைக்குடலாம்படி பெருகுமளவில், ஸ்வாச்ரயமான வீச்வரனுடைய சேதந கர்மாநுகுணமாகவே நிர்வஹிக்கக் கடவோமென்றிருக்கிற ஸ்வாதந்த்ர்யத்தாலும், ஸ்வவிஷயமான சேதநனுடைய “ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தா முல்லங்க்ய வர்த்ததே” என்கிறபடியே ஈச்வராஜ்ஞையை யதிலங்கித்து நடக்கைக் கடியான ஸ்வாதந்த்ர்யத்தாலும் நிரோதிக்கவொண்ணாதபடி “விதிவாய்க்கின்று காப்பாரார்” என்கிறபடியே உபய ஸ்வாதந்த்ர்யரூபமான விரண்டு கரையுமுடைந்தழியும்படி ஒருமட்டில் நில்லாமை மேன்மேலும் பெருகாநிற்கு மென்கை.

**விளக்கம்** - (க்ருபை பெருகப்புக்கால்) - கருணையாகிற குணமானது, வேறு எதனாலும் தடை செய்யப்பட இயலாத சுதந்திரம் உள்ளவனாகிய ஸர்வேச்வரன், "நான் இட்ட கட்டளைகளுக்கு இந்த ஜீவன் அடிபணிந்து நடந்தால் அவனை நாம் ஏற்றுக்கொள்வோம்" என்று ஜீவனுடைய கர்மங்களுக்கு ஏற்றபடி அமைகிறது என்று வைத்துக்கொள்வோம். இவ்விதம் ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அப்போது அந்தக் கருணையானது இருவரது சுதந்திரம் காரணமாகத் தடைபடும். மாறாக அது போன்று ஸர்வேச்வரன் சிந்திக்காமல், ஜீவனுடைய தாழ்ந்து நிலையைக் கண்டு தானாகவே ஸர்வேச்வரன் அவன் மீது விழுந்து ஏற்றுக்கொள்வதற்குச் சாதகமாக அந்தக் கருணை பெருகி நிற்கும்போது என்று பொருள். (இருவர்) – "ஜீவனுடைய கர்மங்களுக்கு ஏற்றபடியே நாம் அவனை நடத்தவேண்டும்" என்று எண்ணும் ஸர்வேச்வரனுடைய சுதந்திரத்தாலும், ஸர்வேச்வரனுடைய கருணைக்கு இலக்காகும் ஜீவாத்மாவுடைய, பாஞ்சராத்ரம் – ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தா முல்லங்க்ய வர்த்ததே – வேதங்கள் மற்றும் மநு முதலான ஸ்ம்ருதிகளும் எனது ஆணைகளாகும்; அவற்றை மீறுபவன் எனது பக்தன் அல்லன் - என்பதற்கு ஏற்ப உள்ளதான ஸர்வேச்வரனுடைய ஆணைகளை மீறி நடக்கும் சுதந்திரத்தாலும் தடுக்க இயலாதபடி என்று பொருள். (இருகரையும்) – திருவாய்மொழி (5-1-1) – விதிவாய்க்கின்று காப்பாரார் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் மற்றும் ஜீவன் ஆகிய இருவருடைய சுதந்திரம் என்ற வடிவில் உள்ள இரண்டு கரைகளும் உடைந்து அழிந்துபோகும்படியாக, ஒரு அளவில்லாமல் மேன்மேலும் பெருகியபடி இருக்கும் என்று கருத்து.

404. பயஹேது கர்மம்; அபயஹேது காருண்யம்.

**அவதாரிகை** - ப்ரகரணாதியில் பயாபயஹேதுக்களாகச் சொன்ன ஸ்வதோஷ பகவத் குணங்களில் வைத்துக்கொண்டு, கர்ம காருண்யங்கள் ப்ரதாநங்களாகையாலே அவற்றை யுபபாதித்துக் கொண்டு வந்தார் கீழ்; அது தன்னை நிகமித்தருளுகிறார் மேல் (பயஹேது) என்று தொடங்கி.

**விளக்கம்** - இந்த ப்ரகரணத்தின் தொடக்கத்தில் (சூர்ணை 366) பயம் மற்றும் பயம் இல்லாத நிலை ஆகியவற்றுக்குக் காரணமாக சேதனனின் தோஷங்கள் மற்றும் ஸர்வேச்வரனுடைய குணங்கள் முறையே கூறப்பட்டன. இவற்றில் முக்கியமானவை

சேதனனின் கர்மங்களும், ஸர்வேச்வரனுடைய க்ருபையும் ஆகும். அதனால் அவை இரண்டையும் இதுவரை விளக்கினார். அதனை இப்போது நிறைவு செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஈச்வரனே உபாயமென்றிருக்கிற இவ்வதிகாரிக்கு இன்னமும் ஸம்ஸாரமநுவர்த்திக்கில் செய்வதென் என்கிற பயத்துக்கு ஹேது, "அநாதிகாலம் ஸம்ஸரிக்கைக்குக் காரணமாய்ப் போந்த ஸ்வகர்ம ஸ்மரணம்; "சூழ்பிறப்பு மருங்கே வரப் பெறுமே" என்கிறபடியே, ஸம்ஸாரம் நம்மருகும் வரமாட்டாது, சரீராவஸாநத்திலே பகவத் ப்ராப்திக்கு கண்ணழிவில்லை என்று நிர்ப்பயனா யிருக்கைக்கு ஹேது, கர்மத்தைப் பாராம லங்கீகரித்து ஸம்ஸாரத்தை யடியறுத்துத் தன் திருவடிகளிலே சேர்த்துக் கொள்ளுகைக் குறுப்பான அவனுடைய நிர்ஹேதுக காருண்ய ஸ்மரண மென்கை. (ஸ்வ தோஷாநுஸந்தாநம், பகவத் குணநுஸந்தாநம்) என்று தொடங்கினத்தை நிகமிக்கிற விடமாகையாலே (கர்மம், காருண்யம்) என்கிறவிடத்தில் ஸ்மரண பர்யந்தம் விவக்ஷிதம்.

**விளக்கம்** - "ஸர்வேச்வரன் மட்டுமே உபாயம்" என்றுள்ளவனுக்கு "இன்னமும் ஸம்ஸாரம் தொடர்ந்தால் என்ன செய்வது?", என்று உண்டாகும் பயத்திற்குக் காரணம், எல்லையற்ற காலமாக ஸம்ஸாரத்தில் உழல்வதற்குக் காரணமாக இருந்து வருகின்ற தனது கர்மத்தைக் குறித்து எண்ணுதலே ஆகும். திருவிருத்தம் (45) – சூழ்பிறப்பு மருங்கே வரப் பெறுமே - என்று கூறுவதற்கு ஏற்ப, "ஸம்ஸாரம் நம்மை நெருங்கி வராது. இந்தச் சரீரத்தின் முடிவில் ஸர்வேச்வரனை நாம் அடைவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை" என்று உண்டாகும் பயம் இல்லாத நிலைக்குக் காரணம் - நாம் செய்த கர்மங்களை ஆராயாமல், நம்மை ஏற்றுக்கொண்டு, ஸம்ஸாரத் தொடர்பை அறுத்து, தனது திருவடிகளில் அவன் சேர்ந்துக் கொள்வதற்குக் காரணமாக உள்ள அவனுடைய "எந்தக் காரணமும் இல்லாமல் ஏற்படும் கருணை" என்பதே ஆகும் என்று எப்போதும் சிந்திப்பதே ஆகிறது. சூர்ணை 366ல் "ஸ்வதோஷ அநுஸந்தாநம், பகவத் குண அநுஸந்தாநம்" என்று தொடங்கியதை நிறைவு செய்யும் இடம் என்பதால் இங்கு "கர்மம்" என்பதை நமது கர்மம் என்றும், "காருண்யம்" என்பதை ஸர்வேச்வரனுடைய கருணை என்றும் கொள்ளவேண்டும்.

405. பயாபயங்களிரண்டும் மாறிமாறி ப்ராப்தியளவும் நடக்கும்.

**அவதாரிகை** – இப்பயாபயங்க ளிரண்டு மிவனுக் கெவ்வளவாக நடக்குமென்ன அருளிச்செய்கிறார் (பயாபயங்க ளிரண்டும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இத்தகைய பயம், பயம் அற்ற நிலை ஆகிய இரண்டும் சேதனனுக்கு எதுவரை ஏற்படும் என்ற சந்தேகத்திற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பகவத் க்ருபா விஷயமாய் ப்ரக்ருதியோடே யிருக்கையாலே அநாதிகாலம் ஸம்ஸரண ஹேதுவாய்ப் போந்த ஸ்வகர்மத்தை அநுஸந்திப்பது அத்தைப் பாராதே அங்கீகரித்த பகவத் காருண்யத்தை அநுஸந்திப்பதாய்க் கொண்டிறே இவ்வதிகாரி யிருப்பது; அதில், கர்மத்தை யநுஸந்தித்தபோது பயமும், காருண்யத்தை யநுஸந்தித்தபோது அபயமுமாய், இரண்டும் மாறிமாறி ப்ரக்ருதி ஸம்பந்தமற்று பகவத்ப்ராப்தி பண்ணுமளவும் நடக்குமென்கை.

**விளக்கம்** - ஸர்வேச்வரனுடைய கருணையின் இலக்காக உள்ளபோதிலும், இந்த ஸம்ஸார உலகத்தின் தொடர்பு உள்ளதன் காரணமாக அல்லவோ இந்த அதிகாரி, எல்லையற்ற காலமாகத் தன்னை ஸம்ஸாரத்தில் நிறுத்தியபடி உள்ள தனது கர்மத்தை எண்ணுதல், அந்தக் கர்மங்களை ஆராயாமல் தன்னை ஏற்றுக் கொண்ட ஸர்வேச்வரனுடைய கருணையை எண்ணுதல் - என்றபடி உள்ளான்? இவற்றில் தனது கர்மத்தைக் குறித்து எண்ணும்போது பயமும், ஸர்வேச்வரனுடைய கருணையை எண்ணும்போது பயம் அற்ற நிலையும் ஆகிய இரண்டும் இந்த ஸம்ஸார ஸம்பந்தம் நீங்கி, ஸர்வேச்வரனை அடையும் காலம்வரை மாறி மாறி வந்தபடியேதான் இருக்கும் என்று கருத்து.

406. நிவர்த்ய ஜ்ஞாநம் பயஹேது, நிவர்த்தக ஜ்ஞாநம் அபயஹேது.

**அவதாரிகை** - இப்படி உபயமும் மாறிமாறி ப்ராப்தியளவும் நடக்கிறதென்? தத்குண விச்வாஸத்தாலே யெப்போதுமொக்க நிர்ப்பயனா யிருக்க வொண்ணாதோ வென்ன அருளிச்செய்கிறார் (நிவர்த்ய ஜ்ஞாநம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக பயம், பயம் அற்ற நிலை ஆகிய இரண்டும் ஏன் மாறி மாறி வரவேண்டும்? ஸர்வேச்வரனுடைய கருணை முதலான அவன் குணங்கள் மீது உள்ள நம்பிக்கை காரணமாக, எப்போதும் பயம் இல்லாதவனாக இருக்க இயலாதோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அவனுடைய காருண்யத்தாலே நிவர்த்திப்பிக்கப்படுமதான அவித்யா கர்மவாஸநா ருசி ப்ரக்ருதி ஸம்பந்த விஷய ஜ்ஞாநம், இவை கிடக்கையாலே இன்னமும் ஸம்ஸாரம் மேலிடில் செய்வதென் என்கிற பயஹேது; "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று, ஸர்வேச்வரனிவற்றைத் தள்ளிப் பொகடும்படி பண்ணுகையாலே இவற்றுக்கு நிவர்த்தகமான அவனுடைய காருண்ய விஷய ஜ்ஞாநம், தத்பய ராஹித்ய ஹேதுவென்கை. நிவர்த்தக பலமறிந்தாலும் நிவர்த்யம் கிடக்குமளவும் பயமும் நடுநடுவே கலசிச்செல்லுமென்று கருத்து.

**விளக்கம்** - ஸர்வேச்வரனுடைய கருணை காரணமாக நீக்கப்படுவதான அறியாமை, கர்மம் (பூர்வவினைகள்), பழக்கம் என்பதான வாஸனை, அந்தக் கர்மங்களைச் செய்வதில் உள்ள ஆசை, சரீரத் தொடர்பு காரணமாக உலகவிஷயங்கள் குறித்த அறிவு முதலானவை தொடர்ந்தபடி உள்ளதால், "இனி உள்ள காலங்களில் ஸம்ஸாரம் தொடர்ந்தால் என்ன செய்வது?" என்ற நிலையே பயத்திற்குக் காரணமாக உள்ளது. கீதை (18-66) – ஸர்வபாபேபயோ மோக்ஷயிஷ்யாமி - அனைத்து பாவங்களிலிருந்தும் உன்னை விடுவித்து மோக்ஷம் அளிப்பேன் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் இந்தத் துன்பங்கள் அனைத்தையும் நீக்குவதால், இவற்றை நீக்கும் அவனுடைய கருணை குறித்த ஞானம் என்பது பயத்தை நீக்கும் காரணமாக உள்ளது. ஆக புண்ணியபாவ கர்மங்களை நீக்கவல்ல ஸர்வேச்வரனுடைய வலிமையை அறிந்தாலும், இந்தச் சரீரம் உள்ளவரை பயம் என்பது இடைஇடையே வந்து கலந்து சென்றபடியேதான் இருக்கும் என்று கருத்து.

**வ்யாக்யானம்** – ஆக, இப்ப்ரகரணத்தால் இவனுக்கு பயாபய ஹேதுக்களும், ததுபய விபர்யயத்தில் ஸித்திக்குமதுவும், தந்நிபந்தந சங்கா பரிஹாரங்களும், ஸர்வேச்வரன் ஸம்ஸாரிகளுக் குஜ்ஜீவநத்தில் க்ருஷி பண்ணும்படியும், அஜ்ஞாத ஸுக்ருத பகவதங்கீகார ஹேதுத்வமும், இந்நிர்ஹேதுக விஷயீகார வைபவாநபிஜ்ஞர் படியும், ஏதத்

வைபவாபிஜ்ஞர் படியும், இவ்வர்த்த மபியுக்த வசந ஸித்தமென்னுமதுவும், அஜ்ஞாத ஸுக்ருத வ்யாஜேந அவனங்கீகரிக்கும்படியும், அங்கீகார ஹேதுவாக்கு மஜ்ஞாத ஸுக்ருதங்களின் தத்க்ருஷி பலத்வமும், தந்நிரூபண பலிதமும், அங்கீகாரப் பற்றாசாமவை காதாசித்கமாக ஸ்வயமேவ விளைகைக் கடியும், அவற்றின் த்வைவித்யமும், ஏவம்பூத விஷயீகார சாஸ்த்ரஸித்தத்வமும், இவ்விஷயீகாரம் பெற்றவர் இத்தை வெளியாகப் பேசினபடியும், ஏததநபிஜ்ஞ வசந பரிஹாரமும், ஆபிமுக்யவத் த்வேஷஸ்யாபி தத் க்ருபா ஜநிதத்வமும், யாத்ருச்சிகாதிகளில் ஸுக்ருதநாம மீச்வர க்ருதமென்னு மதுவும், ஏததர்த்த விஷயாபியுக்த வசந பரஸ்பர விரோத பரிஹாராத்யநுக்தி ஹேதுவும், கீழ்ப்பரக்க உபபாதித்து வந்ததின் பலிதமும், ததாப்தி ஹேது தயா ஜ்ஞாநாதிகரநுஸந்தாநமும், நிர்ஹேதுக க்ருபாபலாவச்யாநுபாவ்யத்வமும், ஈத்ருச க்ருபா ப்ரவாஹ துர்நிவாரத்வமும், ப்ரகரணாதி ப்ரதிஜ்ஞாதார்த்த நிகமநமும், பயாபயாநுவர்த்தந காலாவதியும், ஏதுபய ஹேதுபூத ஜ்ஞாந விசேஷங்களும் சொல்லுகையாலே, இவ்வதிகாரிக்கு அத்வேஷாதி மோக்ஷபர்யந்த அகிலலாப ஹேதுவான பகவதாகஸ்மிக க்ருபா ப்ரபாவ விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது. இத்தால், த்வயோபதேஷ்ட்ரு பூத ஆசார்யோப ஸத்த்யாதிகளுக்கும் ததுபதிஷ்ட த்வயார்த்த ஜ்ஞாநாதிகளுக்கும் ஹேதுவான பகவந் நிர்ஹேதுக க்ருபா வைபவம் சொல்லப்பட்டது.

**விளக்கம்** – ஆக, இந்த ப்ரகரணத்தில் கீழே உள்ள விஷயங்கள் குறித்து விரிவாக அருளிச்செய்யப்பட்டது:

- அதிகாரிக்கு ஏற்படும் பயம், பயம் அற்ற நிலைகளுக்கான காரணங்களும், இந்த இரண்டும் மாறாடினால் ஏற்படுவது என்ன என்பதும்
- அதனால் ஏற்பட்ட சந்தேகங்களும், அவற்றுக்கான சமாதானமும்
- ஸர்வேச்வரன் இந்த உலகில் உள்ள ஸம்ஸாரிகளைக் கரையேற்றச் செய்யும் முயற்சிகளும், நாம் அறியாமல் செய்கிற புண்ணியச் செயல்கள் கூட ஸர்வேச்வரன் ஏற்பதற்குக் காரணமாகின்றன என்னும் கருத்தும்
- இப்படியாக எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஸர்வேச்வரன் ஏற்றுக் கொள்ளுவதன் பெருமையை அறியாதவர்களுடைய தன்மை
- இப்படியாக எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஸர்வேச்வரன் ஏற்றுக் கொள்ளுவதன் பெருமையை அறிந்தவர்களுடைய தன்மை

- இப்படியாக அவன் ஏற்றுக்கொள்ளுதல் என்பது ஆழ்வார்களுடைய வாக்கினால் வெளிப்படுகிறது
- நாம் அறியாமல் செய்த புண்ணியங்களையும் ஒரு வாய்ப்பாகக் கொண்டு அவன் ஏற்கும் நிலை.
- இவ்விதம் அவன் ஏற்பதற்கு உறுப்பாக உள்ளதான, "அறியாமல் செய்த புண்ணியங்கள்" என்பதும் அவனுடைய முயற்சியால் மட்டுமே ஏற்படுகிறது.
- அந்த முயற்சியின் நிரூபணத்தால் உண்டாகவல்ல பயன்
- ஸர்வேச்வரன் ஏற்றுக் கொள்வதற்குக் காரணமாக உள்ள "அறியாமல், தற்செயலாகச் செய்த புண்ணியம்" முதலானவற்றை உண்டாக்குவதற்கான காரணம்
- அப்படிப்பட்ட காரணங்கள் இரண்டு வகைப்படும்
- இவ்விதம் காரணம் இல்லாமல் அவன் உதவுதல் என்பது குறித்து சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளன
- இப்படியாகக் காரணம் இல்லாமல் ஸர்வேச்வரனால் உதவப் பெற்றவர்கள் அது குறித்து உரைப்பது
- இதனை அறியாதவர்கள் கூறும் சொற்களுக்கான சமாதானம்
- ஸர்வேச்வரனிடம் ஆழ்ந்த ஈடுபாடு, அவனை விலக்காமல் இருந்தல் முதலானவை ஸர்வேச்வரனுடைய கருணையால் ஏற்படுகின்றன
- தற்செயலாகச் செய்யும் நற்செயல்களுக்கு "புண்ணியம்" என்று பெயர் வைத்தது ஸர்வேச்வரனே ஆவான்
- இப்படிப்பட்ட விஷயத்தில் ஆழ்வார்களுடைய பாசுரங்களில் ஒன்றுக்கொண்று முரண்பட்டதாகத் தோன்றினாலும், அதற்கான காரணம் அல்லது சமாதானம் கூறாமல் விட்டதற்கான காரணம்
- இதுவரை விரிவாக உரைத்தவற்றிலிருந்து கிடைக்கும் பொருள்
- ஸர்வேச்வரனை அடைவதற்கு ஏதுவாக அறிவுள்ளவர்கள் செய்து வரும் சிந்தனைகள்
- எந்தவிதமான காரணமும் இல்லாமல் உண்டாகும் ஸர்வேச்வரனுடைய கருணையை அனுபவித்தே தீரவேண்டும்.
- இப்படிப்பட்ட கருணை என்ற வெள்ளத்தைத் தடுக்க இயலாதது
- ப்ரகரணத்தின் தொடக்கத்தில் உரைக்கத் தொடங்கிய கருத்தை நிறைவு செய்தல்

- பயம், பயம் இன்மை போன்றவை தொடர்ந்தபடி உள்ள காலம் எதுவரை என்று கூறுதல்
- இப்படிப்பட்ட பயம், பயம் இன்மை ஆகிய இரண்டுக்கும் காரணமாக உள்ள ஞானங்கள் குறித்து உரைப்பதால், இந்த அதிகாரிக்கு ஸர்வேச்வரனை விலக்காமை தொடங்கி மோக்ஷம் அடைதல் வரை உள்ள அனைத்து பலன்களுக்கும் காரணமாக உள்ள ஸர்வேச்வரனுடைய "காரணம் இல்லாமல் உண்டாகும் கருணை" என்பதன் பெருமை விரிவாகக் கூறப்பட்டது

ஆக இதன் மூலம் த்வயம் முதலானவற்றை உபதேசிக்கும் ஆசார்யனை அடைந்து வணங்கி நிற்பது போன்றவற்றுக்கும், அவரால் உபதேசிக்கப்பட்ட த்வயம் போன்றவற்றில் அறிவுள்ள தன்மை முதலானவற்றுக்கும் காரணமாக உள்ளதான "காரணம் இல்லாமல் ஏற்படும் ஸர்வேச்வரனின் கருணை" குறித்தும் அதன் பெருமை குறித்தும் கூறப்பட்டது.

## ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த
## ஸ்ரீவசனபூஷணத்தில்
## ஐந்தாம் ப்ரகரணமான
## பகவந் நிர்ஹேதுக க்ருபா ப்ரபாவம்
## ஸம்பூர்ணம்

## பெரியபெருமாள் திருவடிகளே சரணம்

பெரியபெருமாள் திருவடிகள் தஞ்சம் அடைந்த நம் உடையவர் திருவடிகளே சரணம்

உடையவர் திருவடிகள் சரணம் புகுந்த
ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

பிள்ளைலோகாசார்யர் திருவடிகள் சரணம் புகுந்த
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பத்மாவதி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்



ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

( இதற்கு ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யான மூலம், எளிய தமிழ்நடை)

## ஆறாம் ப்ரகரணம்

## (சரமபர்வ நிஷ்டை நிரூபணம்)

## (சூர்ணைகள் 407 – 463)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

**ப்ரகரண அவதாரிகை -** இப்ரபந்தத்தில் உபக்ரமமே பிடித்து இவ்வளவாக, ஸித்தோபாய பூதனான ஸர்வேச்வரனே சேதநர்க்கு பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷஸித்திக்கு நிரபேக்ஷ ஸாதந மென்றருளிச்செய்து, உபாயபூதனான ஸர்வேச்வரன் கர்மநிபந்தநமாக ஸம்ஸரிப்பிக்கவும் காருண்ய நிபந்தநமாக முக்தனாககவும் வல்ல நிரங்குச ஸ்வதந்த்ரனாகையாலே அவனை உபாயமாகப் பற்றி யிருக்குமவர்களுக்கு, ஸ்வகர்மா நுஸந்தானத்தாலும் தத் காருண்யா நுஸந்தாநத்தாலும் வரும் பயாபயங்கள் யாவத்ப்ராப்தி மாறி மாறி நடக்கும்படியையும் தர்சிப்பித்தார் கீழ்; இனிமேல், “ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும்” என்றும், “திருமாமகள் கொழுநன் தானே குருவாகி” என்றுஞ் சொல்லுகையாலே அந்த ஸித்தோபாய பஹிர்ப்பூதமன்றியே தச்சரமாவதியாய், பந்த மோக்ஷங்க ளிரண்டுக்கும் பொதுவாயிருக்கை யன்றிக்கே மோக்ஷைக ஹேதுவா யிருக்கையாலே தந்நிஷ்டர்க்கு பயப்ரஸங்க மின்றியே எப்போது மொக்க நிர்ப்பயராய்க் கொண்டிருக்கலாம்படியாய், சரமாவதியான ஸ்வரூப ப்ராப்யங்களுக்கு அநுரூபமான சரமோபாயம் ஸதாசார் யாபிமாநமே யென்று ஸகல வேதாந்தஸார வித்தமரான பூர்வாசார்யர்கள் தங்களுக்குத் தஞ்சமாக வநுஸந்தித்து உபதேசித்தும் போந்த ரஹஸ்யார்த்தத்தை ஸகலருமறிந் துஜ்ஜீவிக்கும்படி ப்ரபந்த சேஷத்தாலும் ஸுஸ்பஷ்டமாக அருளிச்செய்கிறார்.

**விளக்கம் -** இந்த ப்ரந்தத்தின் தொடக்கம் முதல், இதுவரை உள்ள பகுதிகளில், எப்போதும் உதவுவதற்குச் சித்தமாக உள்ள உபாயமான ஸர்வேச்வரன் மட்டுமே ஜீவாத்மாக்களுக்கு மிகவும் உயர்ந்த புருஷார்த்தமான மோக்ஷம் கிட்டுவதற்கான தனிக்காரணமாக உள்ளான் என்று அருளிச்செய்தார். இப்படிப்பட்ட ஸர்வேச்வரன், கர்மத்தின் காரணமாக இந்த ஸம்ஸாரத்தில் உழன்றபடி இருக்கும் விதத்தில், மீண்டும் பிறவி அளித்தல் அல்லது தனது அளவற்ற கருணை காரணமாக இதிலிருந்து விடுவித்து மோக்ஷம் அளித்தல் என்பதைச் செய்யவல்ல தடையற்ற சுதந்திரம் உள்ளவன் ஆவான். ஆகவே அவனை எப்போதும் சிந்தித்திருப்பவர்களுக்கும் கூட தங்களுடைய கர்மங்கள் குறித்து எண்ணுவதாலும், ஸர்வேச்வரனுடைய கருணையை எண்ணுவதாலும் முறையே பயமும், பயம் அற்ற நிலையும், மாறி மாறி ஏற்பட்டபடி உள்ளது என்று அருளிச்செய்தார். இனி ஜயாக்ய

ஸம்ஹிதை – ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் – ஸர்வேச்வரனாகிய ஸ்ரீமந்நாராயணனே மனித ரூபம் எடுத்து ஆசார்யனாகி – என்றும், ஞானசாரம் (38) – திருமாமகள் கொழுநன் தானே குருவாகி – என்றும் கூறுவதால், ஸித்தோபாயமாக உள்ள ஸ்ரீமந் நாராயணனுக்குப் புறம்பாகச் செல்லாமல், அவனுக்கே எல்லை நிலமாய் ஈடுபட்டும், பந்தம் மற்றும் மோக்ஷம் ஆகிய இரண்டிற்கும் பொதுவாக இல்லாமல் அந்த ஸித்தோபாயமான ஸர்வேச்வரன் மோக்ஷத்திற்கு மட்டுமே காரணமாக உள்ளதால், அதில் மட்டுமே ஊன்றியிருப்பவர்களுக்கு அச்சம் ஏற்படச் சிறிதும் இடம் இல்லை என்பதால், எப்போதும் அச்சமற்ற நிலையில் இருக்கும்படியும் உள்ளதற்குக் காரணம், ஜீவாத்மாவின் ஸ்வரூபம் மற்றும் அவன் அடையும் பேறு ஆகியவற்றின் எல்லை உபாயமாக உள்ள நல்ல ஆசார்யனுடைய அபிமானமே ஆகும் என்கிறார். அதாவது அனைத்து வேதாந்தங்களின் சாரப்பொருளை நன்றாக உணர்ந்தவர்களான பூர்வாசார்யர்கள், தங்களுக்குத் தஞ்சமாக எண்ணியிருந்ததும், உபதேசித்து வந்ததுமாகிய இரகசியப்பொருளை, அனைவரும் அறிந்துகொண்டு கரையேறும்விதமாக, இந்த ப்ரபந்தத்தின் இந்தப் பாகத்தில் தெளிவாக அருளிச்செய்கிறார்.

407. ஸ்வதந்த்ரனை உபாயமாகத்தான் பற்றின போதிறே இப்ரஸங்கந்தா னுள்ளது.

**அவதாரிகை** - அதில் இப்படி பயாபயங்களிரண்டும் மாறி மாறி யநுவர்த்தியாமல் எப்போது மொக்க நிர்ப்பயனா யிருக்கலாவதொரு வழியில்லையோ வென்னு மாகாங்க்ஷையிலே யருளிச் செய்கிறார். (ஸ்வதந்த்ரனை) என்று தொடங்கி.

**விளக்கம் -** இப்படியாகப் பயம் மற்றும் பயம் அல்லாத நிலை ஆகிய இரண்டும் மாறி மாறி வராமல், எப்போதும் பயம் அற்ற நிலையுடன் இருப்பதற்கான வழி ஏதும் இல்லையோ என்ற கேள்விக்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, கர்மாநுகுணமாக ஸம்ஸரிப்பிக்கவும் காருண்யாநுகுணமாக ஸம்ஸார நிவ்ருத்தியைப் பண்ணித் திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளவும் வல்ல நிரங்குச ஸ்வதந்த்ரனான வீச்வரனை இஷ்டாநிஷ்ட ப்ராப்திபரிஹாரங்களுக்கு உபாயமாகப் பற்றினபோதிறே, யாவத்ப்ராப்தி பயாபயங்களிரண்டும் மாறி மாறி நடக்குமென்னுமிப் ப்ரஸங்கந்தா னுள்ளதென்கை. பரதந்த்ர ஸ்வரூபனாய் மோக்ஷைக ஹேதுவான

ஸ்வாசார்யனை உபாயமாகப் பற்றினாலிப் ப்ரஸங்கமில்லை, ஸதத நிர்ப்பயனா யிருக்கலாமென்று கருத்து. (உபாயமாகத்தான்) என்று ஒரு முழுச்சொல்லித்தனை.

**விளக்கம்** - நம்முடைய கர்மங்களுக்கு ஏற்றபடி ஸம்ஸாரத்தில் உழலும்படிச் செய்தல், தனது கருணைக்கு ஏற்றபடி நம்மை இந்த ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றி தனது திருவடிகளில் சேர்ந்துக் கொள்ளுதல் என்ற இரண்டிலும் வல்லவனாகவும், தடையற்ற சுதந்திரமானவனாகவும் உள்ள ஸர்வேச்வரனை, நமது விருப்பங்கள் நிறைவேறவும், நமக்கு விருப்பம் அல்லாதவை அகலவும் ஏற்ற உபாயமாகப் பற்றும்போதுதான், அவனை அடையும்வரை பயம் மற்றும் பயம் இன்மை ஆகிய இரண்டும் மாறி மாறி நடக்கும் என்று உறுதியாகக் கூறலாம். ஆனால் ஸர்வேச்வரனுக்கு மட்டுமே வசப்பட்டிருத்தல் என்றுள்ள ஸ்வரூபம் கொண்டவரும், மோக்ஷம் ஒன்றுக்கே காரணமானவரும் ஆகிய தனது ஆசார்யனை ஒருவன் கைக்கொண்டால் இவ்விதம் பயம், பயனின்மை ஆகிய இரண்டும் மாறி மாறி வருவதில்லை; எப்போதும் பயமற்று இருக்கலாம் என்று கருத்து. "உபாயமாகத்தான்" என்பது ஒரு முழுச்சொல்லாகும்; அதனை "உபாயமாக + தான்" என்று பிரித்தல் கூடாது.

408. உண்டபோதொரு வார்த்தையு முண்ணாதபோதொரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப் பேருண்டிறே, அவர்கள் பாசுரங்கொண்ட ன்று இவ்வர்த்த மறுதியிடுவது.

**அவதாரிகை** - ப்ரமாணாத் ப்ரமேய நிச்சயம் பண்ணவேணுமிறே; இவ்வர்த்தமென் கொண்டு நிர்ணயிக்கக் கடவோமென்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் (உண்டபோது) என்று தொடங்கி.

**விளக்கம்** - ப்ரமாணம் மூலம் மட்டுமே ஒரு ஸித்தாந்தத்தை நிலைநாட்ட இயலும் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. மேலும், கூறப்பட்ட பொருளை எந்த ப்ரமாணம் கொண்டு நிர்ணயம் செய்தோம் என்ற கேள்விக்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – மயர்வறமதிநல மருளப்பெற்று பகவதநுபவைக தாரகரா யிருக்கும் ஆழ்வார்களுக்கு உண்டபோது முண்ணாதபோதுமாவன, பகவதநுபவ ததலாப காலங்கள்; அதில், பகவதநுபவம் பண்ணி ஹ்ருஷ்டரானபோது, தத்தாஸ்ய வ்ருத்தி காமதயா ததீய

தாஸ்யத்திலே யூன்றி, “பயிலும் பிறப்பிடைதோ றெம்மையாளும் பரமர்”, “நாளும் பிறப்பிடைதோ றெம்மையாளுடை நாதர்”, “வருமையு மிம்மையும் நம்மையளிக்கும் பிராக்கள்”, “சலிப்பின்றி யாண்டெம்மைச் சன்ம சன்மாந்தரங் காப்பர்”, “நன்மை பெறுத்தெம்மை நாளுய்யக் கொள்கின்ற நம்பர்”, “எம் பல்பிறப்பிடைதோறு எந்தொழு குலந்தாங்கள்”, “அவனடியார் சிறுமாமனிசரா யென்னை யாண்டாரிங்கே திரிய, செந்தாமரைக்கண் திருக்குறளன் நறுமாவிரை நாண்மலரடிக் கீழ்ப்புகுதல், உறுமோ பாவியேனுக்கு” என்றும், “ஆரெண்ணும் நெஞ்சுடையாரவ ரெம்மை யாள்வாரே”, “ஞானத்தினொளி யுருவை நினைவாரென் நாயகரே”, “நச்சித்தொழுவாரை நச்சென்றன் நன்னெஞ்சே”, “பேராளன் பேரோதும் பெரியோரை யொருகாலும் பிரிகிலேனே”, “கண்ணாரக் கண்டுருகிக் கையாரத் தொழுவாரைக் கருதுங்கால் உண்ணாது வெங்கூற்ற மோவாது பாவங்கள் சேரா” என்றும், “ஈட்டங் கண்டிடக்கூடுமே லதுகாணும் கண்பயனாவதே”, “தொண்டரடிப்பொடியாட நாம் பெறில் கங்கைநீர் குடைந்தாடும் வேட்கை யென்னாவதே”, “இன்புறுந்தொண்டர் சேவடி யேத்தி வாழ்த்து மென்னெஞ்சமே” என்றும், இத்யாதிகளிலே தத்விஷயத்திலுங் காட்டில் ததீயரே நமக்கு சேஷிகளு முபாயோ பேய பூதருமென்று அத்யாதரம் பண்ணிப் பேசுவது; பகவதநுபவாலாப க்லிஷ்டரான போது, அப்படி பரமசேஷிகளும் பரம ப்ராப்ய ப்ராபக பூதருமான ததீயர் ஸந்நிஹிதரா யிருந்தாலும் அவர்கள் பக்கல் நெஞ்சு செல்லாமல், பகவத் விஷயமே ப்ராப்யமும் ப்ராபகமுமாக நினைத்து, “காணவாராய்”, “காணுமாறருளாய்”, “வரிகொள் வெஞ்சிலை வளைவித்த மைந்தனும் வந்தில னென் செய்கேன்”, “வெஞ்சமத்தடு சரந்துரந்த வெம்மடிகளும் வாரானால்”, “வாசுதேவா வுன் வரவு பார்த்து வார்மணற் குன்றில் புலர நின்றேன்” என்று இத்யாதிகளாலே ஆர்த்தி பரவசரா யலற்றுவது ஊடுவது, “வெஞ்சிறைப்புள்”, “உங்களோடெங்களிடையில்லை” என்று இத்யாதிகளாலே, வெறுப்பது உதறுவதாகையாலே, (உண்டபோதொரு வார்த்தையும் உண்ணாதபோதொரு வார்த்தையும் சொல்லுவார்) என்கிறார். ஆழ்வார்களெல்லாருமேக ப்ரக்ருதிகளாய் ஏக கண்டரா யிருக்கையாலே, (பத்துபேருண்டிறே) என்கிறார். (அவர்கள் பாசுரங் கொண்டன்று இவ்வர்த்தமறுதி யிடுவது) என்றது, மயர்வற மதிநல மருளப் பெற்றவர்களாகையாலே ப்ரதமபர்வத்திற் காட்டில் சரமபர்வத்துக்குள்ள தன்னேற்றமடையத் தெளியக் கண்டு பேசினார்களே யாகிலும், சரமபர்வைக நிஷ்டரன்றியே ப்ரதமபர்வத்திலே மண்டி ததநுபவ ஹ்ருஷ்டரானபோ தொன்றைச் சொல்லுவது, ததலாப க்லிஷ்டரானபோ தொன்றைச் சொல்லுவதாய், ஒரு

படிப்பாடரல்லாதவர்கள் பாசுரங்கொண்டன்று ஆசார்யனே உபாயமென் றிவ்வர்த்த நிச்சயம் பண்ணவதென்கை.

**விளக்கம்** - மயர்வற மதிநலம் பெற்ற ஆழ்வார்கள் ஸர்வேச்வரனுடைய அனுபவங்களையே தங்களுடைய வாழ்வின் தாரகமாகக் கொண்டுள்ள காலம் என்பது அவர்களுக்கு உணவுள்ள காலமாகும்; அந்த அனுபவம் இல்லாத காலம் என்பது உண்ணாமை ஆகும். இவ்விதம் உள்ளபோது, ஸர்வேச்வரனை அனுபவித்த ஆனந்தத்துடன் உள்ள காலத்தில், அவனிடம் மேலும் அடிமைத்தனம் வளரும் விதமாக அவனுடைய அடியார்கள் விஷயத்தில் ஆழ்ந்து நின்று, கீழே உள்ளது போன்று உரைப்பார்கள்:

- திருவாய்மொழி (3-7-1) - பயிலும் பிறப்பிடைதோறு எம்மையாளும் பரமர்
- திருவாய்மொழி (3-7-2) - நாளும் பிறப்பிடைதோறு எம்மையாளுடை நாதர்
- திருவாய்மொழி (3-7-5) – வருமையும் இம்மையும் நம்மையளிக்கும் பிராக்கள்
- திருவாய்மொழி (3-7-6) – சலிப்பின்றியாண்டு எம்மைச் சன்ம சன்மாந்தரம் காப்பர்
- திருவாய்மொழி (3-7-7) - நன்மை பெறுத்து எம்மை நாளுய்யக் கொள்கின்ற நம்பர்
- திருவாய்மொழி (3-7-8) - எம் பல்பிறப்பிடை தோறு எம் தொழு குலம் தாங்கள்
- திருவாய்மொழி (8-10-3) - அவனடியார் சிறுமாமனிசராய் என்னை ஆண்டார் இங்கே திரியவே, என் செந்தாமரைக்கண் திருக்குறளன் நறுமா விரை நாள் மலரடிக் கீழ்ப்புகுதல், உறுமோ பாவியேனுக்கு
- பெரியதிருமொழி (2-6-2) - ஆரெண்ணும் நெஞ்சுடையார் அவர் எம்மை ஆள்வாரே
- பெரியதிருமொழி (2-6-3) - ஞானத்தினொளி உருவை நினைவார் என் நாயகரே
- பெரியதிருமொழி (2-6-5) – நச்சித் தொழுவாரை நச்சு என் தன் நன்னெஞ்சே
- பெரியதிருமொழி (7-4-4) - பேராளன் பேரோதும் பெரியோரை ஒருகாலும் பிரிகிலேனே
- பெரியதிருமொழி (7-4-8) - கண்ணாரக் கண்டு உருகிக் கையாரத் தொழுவாரைக் கருதுங்கால் உண்ணாது வெங்கூற்றம் ஓவாது பாவங்கள் சேரா
- பெருமாள் திருமொழி (2-1) - ஈட்டங் கண்டிடக்கூடுமேல் அதுகாணும் கண்பயனாவதே

- பெருமாள் திருமொழி (2-2) - தொண்டரடிப்பொடியாட நாம் பெறில் கங்கைநீர் குடைந்தாடும் வேட்கை என்னாவதே
- பெருமாள் திருமொழி (2-4) - இன்புறுந்தொண்டர் சேவடி ஏத்தி வாழ்த்து மென்னெஞ்சமே

ஆக மேலே உள்ள வரிகளில் ஸர்வேச்வரனைக் காட்டிலும் அவனுடைய அடியார்களே நமக்கு எஜமானர்களாகவும், நமக்கு உபாயம் மற்றும் உபேயமாக உள்ளவர்களாகவும் மிகுந்த விருப்பத்துடன் உரைத்தபடி இருப்பர். அதே நேரத்தில் ஸர்வேச்வரனை அனுபவித்தல் என்பது கிட்டாமையால், மேலே கூறிய உபாயம் மற்றும் உபேயமாக உள்ள அடியார்கள் அருகில் உள்ளபோதிலும், அவர்களிடம் ஈடுபடாமல், ஸர்வேச்வரனையே உபாயமாகவும் உபேயமாகவும் எண்ணி கீழே உள்ளபடி உரைப்பர்:

- திருவாய்மொழி (8-5-2) - காணவாராய்
- திருவாய்மொழி (8-1-2) - காணுமாறருளாய்
- பெரியதிருமொழி (8-5-6) - வரிகொள் வெஞ்சிலை வளைவித்த மைந்தனும் வந்திலன் என் செய்கேன்
- பெரியதிருமொழி (8-5-7) – வெஞ்சமத்து அடுசரம் துரந்த எம்மடிகளும் வாரானால்
- பெருமாள் திருமொழி (6-1) - வாசுதேவா உன் வரவு பார்த்து வார்மணற் குன்றில் புலர நின்றேன்"

போன்ற வரிகளின் மூலம் ஸர்வேச்வரனுடன் கூடி இருக்கவல்ல நிலை ஏற்படாத காரணத்தால் அடியார்களுடன் ஊடல் கொள்ளுதல்; திருவாய்மொழி (1-4-1) – வெஞ்சிறைப்புள், திருவாய்மொழி (2-8-7) – உங்களோடு எங்கள் இடையில்லை - போன்ற வரிகள் மூலம் அடியார்களை வெறுப்பதும் தள்ளுவதும் என்றுள்ளதால், "உண்டபோதொரு வார்த்தையும் உண்ணாதபோதொரு வார்த்தையும் சொல்லுவார்", என்று சூர்ணையில் அருளிச்செய்தார் என்கிறார். ஆழ்வார்கள் அனைவரும் ஒரே தன்மை கொண்டவர்கள் என்பதால் "பத்துபேர் உண்டிறே" - என்கிறார். (அவர்கள் பாசுரங் கொண்டன்று இவ்வர்த்தமறுதி யிடுவது) – மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர்கள் என்பதால், ஸர்வேச்வரனை வணங்குவதைக் காட்டிலும் அவனுடைய அடியார்களை வணங்குதல் என்பது சிறந்தது என்று தெளிந்து அருளிச்செய்தனர்; ஆனாலும்

அடியார்களை மட்டும் பற்றி நிற்காமல், முதல் நிலையான ஸர்வேச்வரனிடம் ஆழமாக ஈடுபட்டு, அவனுடைய அனுபவம் கிட்டும்போது ஒருவிதமாகப் பேசுவது, அந்த அனுபவம் கிட்டாதபோது வருத்தம் அடைந்து, வேறுவிதமாகப் பேசுவது என்றுள்ள ஆழ்வார்களின் பாசுரங்கள் மூலம் “ஆசார்யனே உபாயம்” என்ற அர்த்தத்தை நிர்ணயம் செய்வதில்லை (அதாவது பத்துபேர் என்பது ஆண்டாள், மதுரகவியாழ்வார் நீங்கலாக உள்ள மற்றவர்கள்; ஆக இவர்கள் பத்துப்பேரின் பாசுரங்களால் நிர்ணயிக்க இயலாது என்று கருத்து).

409. அவர்களைச் சிரித்திருப்பாரொருவ ருண்டிறே; அவர் பாசுரங்கொண்டு இவ்வர்த்த மறுதியிடக் கடவோம்.

**அவதாரிகை** - பின்னை ஆர்பாசுரங்கொண் டறுதியிடுவதென்ன அருளிச்செய்கிறார் (அவர்களை) என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் ஆழ்வார்களுடைய பாசுரங்களால் நிர்ணயிக்க இயலாது என்றார்; அப்படியென்றால் யாருடைய வாக்குகள் கொண்டு நிர்ணயிக்க இயலும் என்ற கேள்விக்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது “மேவினேனவன் பொன்னடி, தேவுமற்றறியேன்” என்று, ஸ்வாசார்யரான நம்மாழ்வார் திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமாகப் புரையறப்பற்றி அவிதிதாந்யதைவதராய் “நாவினால் நவிற்றின்ப மெய்தினேன்” என்று, தத் ஸங்கீர்த்த நாநந்த நிர்ப்பரராய், “அடியேன் சதிர்த்தேன்” என்று, உறுவதறிந்து பற்றின சதுரரா யிருக்கையாலே சரமபர்வத்தி லேற்றமறிந்து பேசாநிற்கச்செய்தே ததேகநிஷ்டரன்றியே ப்ரதமபர்வத்திலே மண்டி தத்வைலக்ஷண்ய பரவசராய், உண்டபோதொரு வார்த்தையு முண்ணாதபோதொரு வார்த்தையுஞ் சொல்லுகிற ஆழ்வார்கள் பதின்மரையும் அடியிலே ஓராசார்யன் திருவடிகளைப் பற்றி அநவரத ஸுகிகளாயிருக்கப் பெறாதே ஸ்வவைலக்ஷண்யத்தாலே பிச்சேற்றும் பகவத் விஷயத்திலே முந்துற முன்னமிழிந்து ததநுபவதசையி லொன்றைச் சொல்லுவது ததலாபதசையில் ஒன்றைச் சொல்லுவதாய், இவர்கள் படுகிறபாடென் என்று பரிஹஸித்திருக்கும் ஸ்ரீமதுரகவியாழ்வாரொருவ ருண்டிறே; சரமபர்வ நிஷ்டராய் ஸநைகரூப வசநரான இவருடைய பாசுரமான

கண்ணிநுண் சிறுத்தாம்பைக் கொண்டு இவ்வர்த்தத்தை ஸம்சயவிபர்யய கந்தமற நிச்சயிக்கக் கடவோமென்கை.

**விளக்கம்** - கண்ணிநுண் சிறுத்தாம்பு (2) – மேவினேனவன் பொன்னடி, தேவுமற்றறியேன் - என்பதற்கு ஏற்ப தன்னுடைய ஆசார்யரான நம்மாழ்வாருடைய திருவடிகளை மட்டுமே ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் கொண்டு, வேறு எந்த ஒரு தெய்வத்தையும் அறியாதவராகவும்; (2) - நாவினால் நவிற்றின்ப மெய்தினேன் - என்பதற்கு ஏற்ப நம்மாழ்வாருடைய திருநாமத்தை உரைப்பதில் மிகுந்த ஈடுபாடு உள்ளவராகவும்; அடியேன் சதிர்த்தேன் - என்று கூறுவதற்கு ஏற்ப அடையத்தக்கது எது என்று அறிந்து, அதனைப் பற்றி நின்ற சாமர்த்தியம் உள்ளவர் என்பதால், அப்படிப்பட்ட பாகவதர் விஷயத்தின் மேன்மை அறிந்து உரைத்தபோதிலும், அந்தப் பாகவதர்கள் விஷயத்தில் மட்டுமே ஈடுபட்டு நின்றுவிடாமல், முதல் நிலையான பகவத்விஷயத்தில் ஈடுபட்டு நின்றவராகவும்; ஸர்வேச்வரனுடைய அனுபவம் கிட்டினால் ஒருவிதமாகவும், அது கிட்டாமல் போனால் மற்றொரு விதமாகவும் உரைக்கின்ற பத்து ஆழ்வார்களைக் குறித்து, “தொடக்கத்தில் ஒரு ஆசார்யனுடைய திருவடிகளைக் கிட்டி நின்று எப்போதும் அதன் காரணமாகவே இன்பம் அனுபவித்தபடி இருக்காமல், தனது அழகு மற்றும் குணங்கள் முதலான விஷயங்கள் மூலம் தடுமாற வைக்கும் பகவத்விஷயத்தில் முதலில் ஈடுபட்டு அனுபவிக்கத் தொடங்கி, அந்த அனுபவம் கிட்டும்போது ஒருவிதம் உரைப்பது, அனுபவம் இழந்தால் மற்றொரு விதம் உரைப்பது என்று இவர்கள் படும்பாடு என்னே!”, என்று பரிகசிப்பவராகவும் உள்ள ஸ்வாமி மதுரகவியாழ்வார் ஒருவர் உள்ளாரே என்று கருத்து. இறுதி நிலையான பாகவதர்களிடம் மட்டுமே ஈடுபாடு உள்ளவராக, அவர்களைக் குறித்து மட்டுமே உரைப்பவரான இவருடைய பாசுரமான “கண்ணிநுண் சிறுத்தாம்பு” மூலம் இந்த அர்த்தத்தை எந்தவிதமான சந்தேகமும் இல்லாமல் நிச்சயம் செய்வோம் என்று கருத்து.

**வ்யாக்யானம்** - அதாவா, (உண்டபோது) இத்யாதிக்கு, பகவதநுபவம் பண்ணினபோது “உண்டு களித்தேற் கும்பரென்குறை”, “யாவர் நிகரகல் வானத்தே”, “மாறுளதோ விம்மண்ணின்மிசை” என்று இப்படி அநுபவ ஜநித ஹர்ஷப்ரகர்ஷ கர்விதமானதொரு வார்த்தையும், ததநுபவம் பெறாதபோது “மடியெல்லாம் முள்கலங்கி மயங்குமால்”, “சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான்”, “காணவாரா யென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து”, “தீயோடுடன் சேர்மெழுகா யுலகில் திரிவேனோ” என்று இப்படி சோகவேக

ஜநிதமானதொரு வார்த்தையுஞ் சொல்லுவாரொருவருமன்றிக்கே பத்துப் பேருண்டிறே; ததீயரே சேஷிகளும் உபாயோபேய பூதருமென் றறிந்திருக்கச் செய்தே, ததநுகுணமாக நிற்கமாட்டாமல் பகவத் விஷய வைலக்ஷண்ய பரவசராய் இப்படி உண்டபோதொரு வார்த்தை சொல்லுகிறவர்க ளுக்திகொண்டன்று ஸ்வாசார்ய சரண யுகளமே யுபாயோபேயமென்கிற இப்பரமார்த்த நிர்ணயம் பண்ணுவது, ஆழ்வார் திருவடிகளையே தமக்குத் தஞ்சமாகப் பற்றி "தேவுமற்றறியேன்" என்றிருக்கையாலே ப்ரதம பர்வத்திலே மண்டி ஹர்ஷசோக பரவசராய்ப் பேசுகிறவர்களைப் பரிஹஸித்திருப்பா ரொருவருண்டிறே; அப்படியிருந்துள்ள ஸ்ரீமதுரகவிகள் திவ்ய ஸூக்தியைக் கொண்டிவ்வர்த்த நிச்சயம் பண்ணக்கடவோமென்று இங்ஙனே யோஜிக்கவுமாம்.

**விளக்கம்** – அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். "உண்டபோது" என்றால் "பகவத் அனுபவம் கிட்டும்போது" அல்லது "பகவானை அனுபவிக்கும்போது" என்று பொருள். திருவாய்மொழி (10-8-7) - உண்டு களித்தேற் கும்பரென்குறை, திருவாய்மொழி (4-5-8) – யாவர் நிகரகல் வானத்தே, திருவாய்மொழி (6-4-9) – மாறுளதோ விம்மண்ணின்மிசை - என்பது போன்ற பாசுரங்களில் கூறப்பட்டபடி, ஸர்வேச்வரனை அனுபவிக்கும்போது ஏற்படும் அளவு கடந்த இன்பம் காரணமாக கர்வத்துடன் ஒருவிதமாக உரைப்பது; அவனை அனுபவிக்க இயலாதபோது திருவாய்மொழி (1-4-3) – மடியெல்லாம் முள்கலங்கி மயங்குமால், திருவாய்மொழி (1-4-8) – சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான், திருவாய்மொழி (8-5-2) - காணவாரா யென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து, திருவாய்மொழி (6-9-6) – தீயோடுடன் சேர்மெழுகா யுலகில் திரிவேனோ - என்பதற்கு ஏற்ப, துன்பத்தின் வேகத்தால் பிறக்கின்ற வேறுவிதமான சொற்களையும் உரைப்பவர்கள், ஒருவர் அல்லாமல் பத்து ஆழ்வார்கள் அல்லவோ? ஸர்வேச்வரனுடைய அடியார்களே தனக்கு எஜமானர்களாக, உபாய உபேயங்களாக உள்ளவர்களாக இருப்பவர்கள் என்று ஆழ்வார்கள் அறிவர்; அப்படி அறிந்தபோதிலும், அதன்படி நடக்க இயலாமல், ஸர்வேச்வரனுடைய குணங்கள் போன்ற சிறப்புகளில் ஈடுபட்டவர்களாக, அந்த அனுபவம் கிட்டும்போது ஒருவிதமாக உரைப்பவர்களாக உள்ளவர்களுடைய பாசுரங்கள் மூலமாக, தனது ஆசார்யனின் திருவடித்தாமரைகளே உபாயம் மற்றும் உபேயம் என்ற கருத்தை நிச்சயம் செய்வதில்லை. மாறாக, நம்மாழ்வார் திருவடிகளை மட்டுமே தனக்குத் தஞ்சமாகப் பற்றி, கண்ணிநுண் சிறுத்தாம்பு (2) – தேவுமற்றறியேன் – என்று கூறுவதற்கு ஏற்ப, அந்த அனுபவம் காரணமாக எப்போதும் இன்பத்துடன்

உள்ளதால், தொடக்கத்தில் பகவத்விஷயத்தில் ஈடுபட்டு இன்பமும் துன்பமும் மாறிமாறி அடைந்த காரணத்தால் உரைக்கும் ஆழ்வார்களைப் பரிகசித்து உரைப்பவர் ஒருவர் உண்டு அல்லவோ? அப்படிப்பட்ட ஸ்வாமி மதுரகவியாழ்வாருடைய பாசுரங்கள் மூலமாக இந்த அர்த்தத்தை நாம் நிச்சயம் செய்வோம் என்றும் பொருள் கொள்ளலாம்.

410. ஸ்வரூபத்துக்கும் ப்ராப்யத்துக்கும் சேர்த்திருக்க வேணுமிறே ப்ராபகம்.

**அவதாரிகை** - இப்படி ப்ரமாணஸித்தமான அர்த்தத்தை உபபத்தியாலே ஸ்திரீகரிக்கிறார் மேல் (ஸ்வரூபத்துக்கும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் ப்ரமாணத்தில் அறியப்பட்ட அர்த்தத்தை யுக்திகள் கொண்டு நிலை நிறுத்துகிறார்.

**வ்யாக்யானம்** - ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களை நிஷ்கர்ஷிக்குமளவில், ப்ரதமம் ஸ்வரூபத்தை உள்ளபடி நிஷ்கர்ஷித்து, அநந்தரம் ப்ராப்யத்தை தததுரூபமாக நிஷ்கர்ஷித்து ப்ராபகத்தை ததுபயாநுரூபமாக நிஷ்கர்ஷிக்க வேணுமிறே; வ்யுத்பத்தி தசையில் உபேயம் முற்பட்டு உபாயம் பிற்பட்டிருக்கும், அநுஷ்டாந தசையில் மாறாடியிருக்கும்; ஸ்வரூபத்துக்கும் ப்ராப்யத்துக்கும் சேராமையாலேயிறே உபாயாந்தரத்தை பரித்யஜித்தது; ஆகையால் (ஸ்வரூபத்துக்கும் ப்ராப்யத்துக்கும் சேர்ந்திருக்க வேணுமிறே) என்கிறார். இனி, ஸ்வரூபந்தன்னை நிரூபித்தால் ஜ்ஞாநாநந்தங்களும் புறவிதழென்னும்படி பகவதநந்யார்ஹ சேஷத்வமே வடிவாய், அதினுடைய யாதாத்ம்யம் தச்சேஷத்வமும் புறவிதழென்னும்படி ததீயசேஷத்வமே வடிவாயிறே யிருப்பது; ஏவம்பூத ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யத்தை நிரூபித்தால் தத் கைங்கர்யம் ப்ரதமாவதியாய் ததீயகைங்கர்யம் சரமாவதியா யிருக்கும்; ஸ்வரூபப்ராப்ய வேஷமிதுவாகையாலே ததுபயாநுகுணமான ப்ராபகம் ததீயரேயாகவேண்டியிறே யிருப்பது; இனி அந்த ததீயரில் வைத்துக்கொண்டு, முதலடியிலே தன்னையங்கீகரித்து தத்வஜ்ஞாந ப்ரதாநத்தைப் பண்ணின மஹோபகாரகனான ஸ்வாசார்யனுக்கு சேஷமாயிருக்கை ஸமஸ்த பாகவதருடைய உகப்புமாய், தன் ஸ்வரூபத்தினுடைய எல்லை நிலமுமா யிருக்கும்; இந்த ஸ்வரூபத்துக் கநுரூபமான ப்ராப்யமும் ஸ்வாசார்யன் திருவடிகளில் பண்ணும் கைங்கர்யமா யிருக்கும். இப்படி ஸ்வரூப ப்ராப்யங்களாய்

அத்தால் இவையிரண்டுக்கும் ஸத்ருசமான ப்ராபகம் ஸ்வாசார்ய சரணயுகளமாக வேணுமென்கை. இதுவே ஸ்வரூப ப்ராப்யங்களுக்குச் சேர்ந்த உபாயமென்கையாலே, ஈச்வர ஸ்வாதந்த்ர்யபீத்யா நிர்ப்பரத்வத்தைப் பற்ற இதில் போந்தவளவல்ல, முக்யோபாய மிதுவேயென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நமிறே.

**விளக்கம்** - ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் போன்றவற்றை நிச்சயிக்கும்போது முதலில் ஸ்வரூபத்தை உள்ளது உள்ளபடி நிச்சயிக்கவேண்டும்; தொடர்ந்து அந்த ஸ்வ்ரூபத்திற்கு ஏற்றபடி பலத்தை நிச்சயிக்கவேண்டும்; தொடர்ந்து அவற்றுக்கு ஏற்றபடி அடையும் வழியை நிச்சயிக்கவேண்டும் அல்லவோ? (இங்கு ஸ்வரூபம் என்பது ஆத்மாவின் தன்மை, அதாவது அது ஸர்வேச்வரன் மற்றும் ஆசார்யன் வசப்பட்டது என்று தெளிதல், ப்ராப்யம் அல்லது புருஷார்த்தம் என்பது ஆசார்யனுக்குச் செய்யும் தொண்டு, ப்ராபகம் அல்லது உபாயம் என்பது ஆசார்யனின் திருவடிகள்). ஸ்வரூபத்தை அறியும் நிலையில், பலனானது முற்பட்டு, அதனைப் பெறும் வழி என்பது பிற்பட்டிருக்கும்; ஆனால் அந்த உபாயத்தைக் கைக்கொண்ட பின்னர், உபாயம் முற்பட்டு புருஷார்த்தம் பிற்பட்டிருக்கும். ஸ்வரூபம் மற்றும் பலன் ஆகிய இரண்டுக்கும் பொருந்தாமல் உள்ளதால்தான், கர்மயோகம் போன்ற மற்ற உபாயங்கள் தள்ளப்பட்டன. எனவேதான் “ஸ்வரூபத்துக்கும் ப்ராப்யத்துக்கும் சேர்ந்திருக்க வேணுமிறே” என்றார்.

அடுத்து ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை நன்றாக ஆராய்ந்தால், அது ஞானம் மற்றும் ஆனந்தம் வெளிப்பட்டபடி பகவானுக்கு அடிமையாக உள்ள தன்மையே வடிவமாக; ஜீவனுடைய உண்மையான நிலை என்பது ஸர்வேச்வரனுக்கு அடிமைப்பட்டிருத்தல் என்பது வெளிப்பட்டபடி அவன் அடியார்களுக்கு அடிமையாக உள்ள தன்மையே வடிவமான நிலையாகும். இத்தகைய ஆத்மஸ்வரூபத்தின் தன்மைக்கு ஏற்ற புருஷார்த்தம் எது என்று ஆராய்ந்தால் ஸர்வேச்வரனுக்குச் செய்யும் கைங்கர்யம் என்பது முதல் நிலையாகவும், அவனுடைய அடியார்களுக்குச் செய்யும் கைங்கர்யம் இறுதிக்கட்ட நிலையாகவும் இருக்கும். ஆத்மாவின் தன்மை மற்றும் புருஷார்த்தத்தின் தன்மை ஆகிய இரண்டும் இவ்விதமாக உள்ளபோது, அந்த இரண்டுக்கும் ஏற்றபடியாக உள்ள உபாயம் என்பதும் அவன் அடியார்களாகவே அல்லவோ இருப்பது!

இனி, அந்த அடியார்களுக்குள் முதல்நிலையில் தன்னை ஏற்றுக்கொண்டு, தத்வ ஞானத்தை அளித்து மிகப் பெரிய உபகாரம் செய்த தனது ஆசார்யனுக்கு அடிமையாக இருத்தல் என்பது அனைத்து அடியார்களுடைய மகிழ்வாகவும், தனது ஆத்ம ஸ்வரூபத்தின் எல்லையாகவும் இருக்கும். இத்தகைய ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்ற புருஷார்த்தம் என்பது தனது ஆசார்யனுக்குச் செய்யும் கைங்கர்யமாகவே இருக்கும். இவ்விதம் ஆத்மஸ்வரூபமும் புருஷார்த்தமும் அமைந்துள்ளதால், இவை இரண்டிற்கும் ஏற்றதான உபாயம் என்பது தனது ஆசார்யனுடைய இரண்டு திருவடிகளே ஆகும் என்று கருத்து. இதுவே ஆத்மாவின் தன்மை மற்றும் புருஷார்த்தம் ஆகிய இரண்டுக்கும் தகுதியான உபாயம் என்பதால், ஸர்வேச்வரனுடைய சுதந்திரத்தைக் கண்டு அச்சம் கொண்டு, அதனை விட்டு, அச்சம் இன்மையை எதிர்நோக்கி, இதில் ஈடுபடவில்லை; முக்கியமான உபாயம் ஆசார்யனுடைய திருவடிகள் என்பதாலேயே ஆகும்.

411. வடுகநம்பி ஆழ்வானையு மாண்டானையு மிருகரைய ரென்பர்.

**அவதாரிகை** - இவ்வர்த்த விஷயமாக ஓரைதிஹ்யத்தை யருளிச்செய்கிறார் மேல் (வடுகநம்பி) என்று தொடங்கி.

**விளக்கம் -** இந்தக் கருத்தினை அடியொட்டியுள்ள ஒரு சம்பவத்தை உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஆழ்வார் திருவடிகளில் ஸ்ரீமதுரகவிக ளிருந்தாப்போலே, ப்ராப்ய ப்ராபகங்களிரண்டு மெம்பெருமானார் திருவடிகளே என்று ப்ரதிபத்தி பண்ணி "தேவுமற்றறியேன்" என்றிருக்கும் வடுகநம்பி; எம்பெருமானார்க்கு நிழலுமடிதாறும் போலே அவிநாபூதராய் "ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே", "ராமாநுஜார்யவசக: பரிவர்த்திஷீய" என்று உபயோபேயங்க ளவர்திருவடிகளும் அத்திருவடிகளில் பண்ணும் கைங்கர்யமுமென் றிருக்கும் கூரத்தாழ்வானையும், தாத்ருசரான முதலியாண்டானையும், ஸம்ஸாரத்திலிருப்பி லடிக்கொதிப்பாலேவந்த ஆர்த்தியின் மிகுதியாலே கலங்கி காதாசித்கமாகப் பெருமாள் பக்கலிலும் சென்று பல்காட்டுவது, தத்வைலக்ஷண்யங் கண்டவாறே ப்ரவணராய்ப் போருவதா மிவ்வளவைக்கொண்டு எம்பெருமானார் திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமானால் "தேவுமற்றறியேன்" என்றிருக்க

வேண்டாவோ, அங்ஙனன்றிக்கே சரமாவதியிலும் ப்ரதமாவதியிலும் கைவைத்து நிற்கிற விவர்க ளிருகரைய ரென்றருளிச்செய்வ ரென்றபடி.

**விளக்கம் -** ஆழ்வாருடைய திருவடிகளே கதி என்று ஸ்வாமி மதுரகவிகயாழ்வார் இருந்தது போன்று, ஸ்வாமி எம்பெருமானார் திருவடிகளே பேறாகவும், அந்தப் பேற்றினை அடைய உதவும் வழியாகவும் உள்ளது என்று "தேவுமற்றறியேன்" என்பதற்கு ஏற்ப ஸ்வாமி வடுக நம்பி இருந்தார். அவர் அருளிச்செய்தது என்னவென்றால்: எம்பெருமானாருடைய நிழல் போன்றும், அவருடைய பாதுகைகள் போன்று பிரியாமல் உள்ளவர்களும்; ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே - ராமானுஜரின் திருவடிகளை சரணம் என்று பற்றுகிறேன் – என்றும், ஸுந்தர பாஹுஸ்தவம் (129) – ராமாநுஜார்யவசக: பரிவர்த்திஷீய - எம்பெருமானாருடைய திருவடிகளில் எப்போதும் இருந்தபடி கைங்கர்யம் செய்யவேண்டும் - என்றும் கூறியபடி, "உபாயம் என்பது இராமாநுசரின் திருவடிகள், உபேயம் அந்தத் திருவடிகளில் செய்யும் கைங்கர்யம்" என்று உள்ளபடி வாழ்கின்றவரும் ஆகிய கூரத்தாழ்வான்; அவரைப் போன்றே வாழ்ந்து வரும் முதலியாண்டான் ஆகிய இருவரையும் குறித்து வடுகநம்பி உரைத்தது என்னவென்றால் - இந்த உலகவாழ்வில் உள்ளதன் துன்பம் காரணமாக அதனை விலக்கிக்கொள்ளும் விதமாக ஒவ்வொரு காலகட்டத்திலும் ஸர்வேச்வரனிடம் சென்று வேண்டி நிற்பது, அவனுடைய ஸௌந்தர்யமான திருமேனியைக் கண்டவுடன் ஆழ்ந்த அன்பு கொண்டு மயங்கி நிற்பது என்ற அவர்கள் இருவருடைய நிலையைக் கண்டு வடுகநம்பி உரைப்பதாவது, "எம்பெருமானாருடைய திருவடிகளே உபாயமும் உபேயமும் என்று அறிந்த பின்னர் – தேவுமற்று அறியேன் - என்று இருக்கவேண்டாமோ? அப்படி இருக்காமல் அடியார்களைப் பின்பற்றுதல், ஸர்வேச்வரனைப் பின்பற்றுதல் என்றுள்ள இவர்கள் இருவரும், ஆற்றின் இரண்டு கரைகளையும் பற்றி நிற்பவர்கள் ஆவர்", என்பதாகும்.

412. ப்ராப்யத்துக்கு ப்ரதமபர்வம் ஆசார்யகைங்கர்யம்; மத்த்யமபர்வம் பகவத்கைங்கர்யம்; சரமபர்வம் பாகவதகைங்கர்யம்.

**அவதாரிகை** – (ஸ்வரூபத்துக்கும் ப்ராப்யத்துக்கும் சேர்ந்திருக்க வேணுமிறே) என்ற விடத்தில், ஸ்வரூபத்தை யொருவழியாலிசைந்து, பகவத் கைங்கர்யமன்றோ ப்ராப்யம், ப்ராப்யத்துக்கு ஸத்ருசமாக வேணுமென்றபடி யெங்ஙனே? என்பாருடைய சங்கையைப்

பரிஹரிக்கைக்காக, ப்ரதமம் ப்ராப்யவேஷத்தை ஓடவைத்துக் காட்டுகிறார் (ப்ராப்யத்துக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - சூர்ணை 410ல் – ஸ்வரூபத்துக்கும் ப்ராப்யத்துக்கும் சேர்ந்திருக்க வேணுமிறே – என்று அருளிச்செய்தார். ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபத்தை மட்டுமே நன்றாக உணர்ந்தபடி, அவனுக்குக் கைங்கர்யம் செய்வது என்பது அல்லவோ பெரும் பேறாகும்? ஆனால் அந்தப் பேற்றுக்குச் சமமாக இருத்தல்வேண்டும் என்று கூறுவது எப்படி என்று சிலர் கேட்கலாம். இதற்கு விடையாக, பேறு என்பது இன்னது என்று முதலில் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – (ப்ராப்யமாவது) - சேஷத்வைக நிரூபணீயமான ஆத்மவஸ்துவுக்கு புருஷார்த்தமான கைங்கர்யம். பர்வசப்தம், அம்சவாசி. இங்கு, ப்ரதம பர்வமாகச் சொல்லுகிற ஆசார்ய கைங்கர்யமாவது, “திருத்தித் திருமகள் கேள்வனுக் காக்கியபின்” என்கிறபடியே முதலடியிலே தன்னையங்கீகரித்து பகவத் விஷயத்துக் காளாம்படி திருத்தின ஆசார்யனுக்கு உகப்பாகப் பண்ணும் பகவத் கைங்கர்யம்; மத்யம பர்வமாகச் சொல்லுகிற பகவத் கைங்கர்யமாவது “அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன்” என்கிறபடியே தானுகந்தாரைத் தன்னடியார்க்கடிமைப் படுத்தும் பகவானுக் குகப்பாகப் பண்ணும் பாகவத கைங்கர்யம், சரமபர்வமாகச் சொல்லுகிற பாகவத கைங்கர்யமாவது, ஆசார்யவானென் றுகக்குமவர்களாய், ஆசார்யவைபவ ஜ்ஞாபகராய், ஆசார்ய கைங்கர்யத்தி னேற்ற மறியுமவர்களான பாகவதர்களெல்லார்க்கு முகப்பாகப் பண்ணு மாசார்ய கைங்கர்யம். ஆக ஆசார்ய ப்ரீதி விஷயமான பகவத் கைங்கர்யத்தை ஆசார்ய கைங்கர்யமென்றும், பகவத் ப்ரீதி விஷயமான பாகவத் கைங்கர்யத்தை பகவத் கைங்கர்ய மென்றும், பாகவத ப்ரீதி விஷயமான வாசார்ய கைங்கர்யத்தை பாகவத கைங்கர்ய மென்றும் சொல்லிற்றாய்த்து. ஆகையால், ஆசார்ய கைங்கர்யம் ப்ராப்யமென்று சொன்ன விதில் குறையில்லையென்று கருத்து.

**விளக்கம்** – ப்ராப்யம் என்றால் ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமையாக உள்ள நிலை என்பதைத் தனது தன்மையாகக் கொண்டுள்ள ஜீவாத்மாவுக்கு பயனாக உள்ள கைங்கர்யம் ஆகும். பர்வம் என்று சூர்ணையில் உள்ள பதம் “ஒரு பகுதியாகும்” என்ற பொருளை அளிப்பதாகும். இங்கு முதல் பர்வம் என்று கூறப்படும் ஆசார்ய கைங்கர்யம் என்றால் இராமானுச நூற்றந்தாதி (78) – திருத்தித் திருமகள் கேள்வனுக் காக்கியபின் -

என்பதற்கு ஏற்ப, தொடக்கத்திலேயே தன்னை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டும், ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமையாக இருத்தல் வேண்டும் என்று திருத்திய ஆசார்யனுடைய மனம் மகிழும்படியாகச் செய்யும் பகவத்கைங்கர்யம் ஆகும். மத்யம பர்வம் என்று கூறப்படும் பகவத்கைங்கர்யம் என்றால், அமலனாதிபிரான் (1) – அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன் - என்று கூறுவதற்கு ஏற்ப, தான் யாரை அதிகமாக விரும்புகிறானோ அவர்களைத் தனது அடியார்களுக்கு அடிமைப்படுத்துகின்ற ஸர்வேச்வரனுடைய திருவுள்ளம் மகிழும்படியாகப் பாகவதர்களுக்குச் செய்யும் கைங்கர்யம் ஆகும். இறுதிபர்வமாகக் கூறப்படும் பாகவத்கைங்கர்யம் என்றால், "சிறந்த ஆசார்யனைக் கொண்டவன்" என்று மகிழ்பவர்களாகவும், ஆசார்யனுடைய மேன்மைகளை எப்போதும் நினைவுபடுத்துபவர்களாகவும், ஆசார்யனின் மேன்மைகளை உணர்ந்தவர்களாகவும் உள்ள பாகவதர்கள் அனைவரும் மகிழ்ந்து நிற்கும்விதமாக ஆசார்யனுக்குச் செய்யும் கைங்கர்யமே ஆகும். ஆகவே ஆசார்யன் மகிழும்படியாகச் செய்யப்படும் பகவத்கைங்கர்யம் என்பது ஆசார்யகைங்கர்யம் என்றும், பகவான் மனம் குளிரும்படிச் செய்யப்படும் பாகவதகைங்கர்யம் என்பது பகவத்கைங்கர்யம் என்றும், பாகவதர்கள் மகிழும்படியாகச் செய்யப்படும் ஆசார்யகைங்கர்யம் என்பது பாகவத கைங்கர்யம் என்றும் கூறப்பட்டது. எனவே "ஆசார்ய கைங்கர்யமே எப்போதும் அடையத் தக்கது" என்று கூறியதில் எந்தவிதமான தோஷமும் இல்லை என்று கருத்து.

413. ஸ்வரூப ப்ராப்தியை சாஸ்த்ரம் புருஷார்த்தமாகச் சொல்லாநிற்க, ப்ராப்தி பலமாய்க் கொண்டு கைங்கர்யம் வருகிறாப்போலே ஸாத்ய விவ்ருத்தியாய்க் கொண்டு சரமபர்வம் வரக்கடவது.

**அவதாரிகை** - இப்படி ஆசார்ய கைங்கர்யமே சரமபர்வமென்று சாஸ்த்ரஞ் சொல்லாதிருக்கச் செய்தே, இது வருகிறவழிதா னென்னென்கிற சங்கையிலே யருளிச் செய்கிறார் (ஸ்வரூப ப்ராப்தியை) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக ஆசார்யகைங்கர்யம் என்பது இறுதிபர்வம் என்று சாஸ்த்ரங்கள் கூறவில்லை என்றாலும், இதனை எவ்விதம் உறுதியாக உரைக்க இயலும் என்ற சந்தேகத்திற்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “பரஞ்ஜ்யோதி ருபஸம்பத்ய ஸ்வேநரூபேண அபிநிஷ்பத்யதே” என்று, ப்ராப்தி பூர்விகையாய் அநாதிகர்மநிபந்த நாசித் ஸம்பந்தத்தாலே மலாவகுண்டித மணிப்ரபைபோலே திரோஹிதமாக ஸ்வாஸாதாரணாகாரத்தினுடைய ஆவிர்ப்பாவ ரூபையான ப்ராப்தியை வேதாந்த சாஸ்த்ரம் புருஷார்த்தமாகச் சொல்லா நிற்க, இப்படி ஆவிர்ப்பூதமான ஸ்வரூபத்தையுடைய வாத்மா, சேஷகத்வைக நிருபணீயதயா சேஷிவிஷய கிஞ்சித்காரத்தாலல்லது செல்லாதபடியாய் இருக்கையாலே, அந்த ஸ்வரூப ப்ராப்தி பலமாய்க் கொண்டு பகவதநுபவ ஜநித ப்ரீதிகாரித கைங்கர்யம் வருகிறாப்போல, சேஷியான பகவானுக்கு ஸ்வவிஷய கிஞ்சித்காரத்திலும் ஸ்வகீயவிஷய கிஞ்சித்கார முகப்பாகையாலே, அந்த பகவத் கைங்கர்யமாகிற ஸாத்யத்தின் வ்ருத்தி ரூபமாய்க் கொண்டு மத்யமபர்வமான பாகவத கைங்கர்யம் வரகடவதாய், அந்த பாகவதர்க ளெல்லார்க்கும் ஸ்வவிஷய கிஞ்சித்காரத்திலும் தனக்குபகாரகனான வாசார்ய விஷயத்தில் கிஞ்சித்காரமே யுகப்பாகையாலே அந்த ஸாத்யத்தினுடைய விசேஷ வ்ருத்தியாய்க் கொண்டு சரமபர்வமான வாசார்ய கைங்கர்யம் வரக் கடவதென்கை.

**விளக்கம்** - சாந்தோக்ய உபநிஷத் (8-12-2) – பரஞ்ஜ்யோதி ருபஸம்பத்ய ஸ்வேநரூபேண அபிநிஷ்பத்யதே - சரீரத்தில் இருந்து புறப்படும் ஜீவன் பரஞ்ஜோதியான ஸர்வேச்வரனை அடைந்து, தனது ஸ்வரூப மலர்ச்சியைப் பெறுகிறான் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனை அடைந்தவுடன், எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள கர்மங்களால் ஏற்பட்ட சரீரத் தொடர்பினால், அழுக்கு கொண்டு மறைக்கப்பட்ட இரத்தினத்தின் பிரகாசம் போன்று, மறைக்கப்பட்ட தன்னுடைய ஸ்வரூபம் வெளிப்படுதல் என்பதான “பகவானை அடைதல்” என்பதை, வேதாந்த சாஸ்த்ரங்கள் ஜீவாத்மாவின் புருஷார்த்தமாக உரைக்கின்றன. இவ்விதம் தனது ஸ்வரூபம் விளங்கப்பெற்ற ஆத்மா, ஸர்வேச்வரனுக்கு அடிமைப்பட்டிருத்தல் என்ற தன்மையால் மட்டுமே அறியப்படுவதாக உள்ளதால், அந்த ஸர்வேச்வரனுக்குச் செய்யும் கைங்கர்யம் அல்லாமல் மற்ற எதனாலும் விளங்காதபடி உள்ளது; இவ்விதம் வெளிப்பட்ட ஸ்வரூபத்தினைத் தனது பலமாகக்கொண்டு, ஸர்வேச்வரனுடைய அனுபவம் காரணமாக ஏற்படுகின்ற ப்ரீதியின் விளைவான கைங்கர்யம் வருவது போன்று, தனக்குக் கைங்கர்யம் செய்வதைக் காட்டிலும் தனது அடியார்களுக்குக் கைங்கர்யம் செய்வதால் ஸர்வேச்வரன் மகிழ்வதால், பகவத் கைங்கர்யம் என்பதான பலத்தின் அடிப்படையில் நடுவில் உள்ள நிலையான பாகவத கைங்கர்யம் ஏற்படுகிறது; அந்தப் பாகவதர்கள் அனைவருக்கும்,

தங்களுக்குச் செய்யும் கைங்கர்யத்தைக் காட்டிலும், தங்களுக்குப் பேருதவி செய்யும் ஆசார்யனுக்குச் செய்யும் கைங்கர்யமே மகிழ்வை ஏற்படுத்துவதால், இந்தப் பலத்தின் மேன்மையான வளர்ச்சியான இறுதி நிலையான ஆசார்ய கைங்கர்யம் வருகிறது என்று கருத்து.

414. இதுதான் துர்லபம்.

**அவதாரிகை** - இந்த சரமபர்வம் லாபத்தி னருமையை தர்சிப்பிக்கிறார் மேல் (இதுதான் துர்லபம்) என்று.

**விளக்கம்** - இப்படிப்பட்ட ஆசார்ய கைங்கர்யம் என்ற இறுதி நிலையை எட்டுவது கடினம் அல்லது அரிது என்று உரைக்கிறார்.

415. விஷயப்ரவணனுக்கு அத்தைவிட்டு பகவத் விஷயத்திலே வருகைக்குள்ள அருமை போலன்று, ப்ரதம பர்வத்தைவிட்டு சரமபர்வத்திலே வருகைக்குள்ள அருமை.

**அவதாரிகை** - இதுதன்னை விவரிக்கிறார் மேல் விஷய ப்ரவணனுக்கு என்று தொடங்கி.

**விளக்கம்** – கடந்த சூர்ணையில் உரைத்ததை மேலும் விவரிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, க்ஷுத்ர விஷயங்களின் புறப்பூச்சான வைலக்ஷண்யத்திலே யீடுபட்டு மீட்கவொண்ணாதபடி அவற்றிலே ப்ரவணனாய் நின்றவனுக்கு அவற்றைக் கைவிட்டு வகுத்த விஷயமான பகவத் விஷயத்திலே வருகைக்குள்ள அருமைபோலன்று, பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரியான பகவத் விஷய ப்ரவணனாய் தத்கைங்கர்ய நிரதனானவனுக்கு ப்ரதம பர்வமானவத்தைவிட்டு சரமபர்வமான ஆசார்ய கைங்கர்யத்திலே வருகைக்குள்ள அருமை என்றபடி.

**விளக்கம்** - தாழ்ந்த விஷயங்களில் மேற்புறமாக மேன்மைகள் உள்ளது போன்று காணப்படுகின்றன. அவற்றில் ஈடுபட்டு, மீண்டு வர இயலாதபடி அவற்றில் சிலர் மண்டி நிற்கக்கூடும். ஆனல் அவற்றை முற்றிலுமாகக் கைவிட்டுத் தனது இயல்பான

எஜமானனாக உள்ள பகவத் விஷயத்தில் சிலர் ஈடுபடக்கூடும். இந்தச் செயலைப் போன்று எளியது அல்ல என்கிறார். எதுவென்றால் - ஆண்களுடைய கண்கள் மற்றும் உள்ளம் ஆகிய இரண்டையும்கூட வசீகரிக்கவல்லதான பகவத் விஷயத்தை எப்போதும் கைக்கொண்டு, பகவானுக்கு மட்டுமே கைங்கர்யம் செய்தபடி ஒருவன் இருக்கக்கூடும்; அவன் அதனைக் கைவிட்டு, இறுதி நிலையான ஆசார்ய கைங்கர்யத்தை அடைவது எளியது அல்ல என்கிறார்.

416. அங்கு தோஷதர்சநத்தாலே மீளலாம்; இங்கு இது செய்ய வொண்ணாது.

**அவதாரிகை** - அதெங்ஙனே யென்னுமாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (அங்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஆசார்ய கைங்கர்யத்தை அடைவது எளிதல்ல என்றால், “அது எப்படி?” என்று கேட்கலாம். இதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, க்ஷுத்ர விஷயங்களின் தேஹதோஷாதிகளும் அல்பாஸ்திரத்வாதி தோஷங்களு முண்டாயிருக்கையாலே அவற்றை தர்சிக்கவே அருவருத்து மீளலாயிருக்கும்; விலக்ஷண விக்ரஹ யுக்தமாய் ஸமஸ்தகல்யாண குணாத்மகமாய் நித்யமாய் அபரிச்சேத்யமான இவ்விஷயத்தில் தோஷகந்த மில்லாமையாலே தோஷதர்சநம் பண்ணி மீளப்போகாதென்கை. “ஸங்க்யாதும் நைவ சக்யந்தே குணா தோஷாச்ச சார்ங்கிண: ஆநந்த்யாத் ப்ரதமோ ராசி ரபாவாதேவ பச்சிம:” என்னக்கடவதிறே.

**விளக்கம்** - தாழ்ந்த விஷயங்களில் சரீரத்தின் தோஷங்கள் உள்ளதாலும், அந்த விஷயங்கள் அற்பமாக உள்ளதாலும், ஸ்திரமற்றவையாக உள்ளதாலும் அவற்றை உணர்கின்ற ஒருவன் அருவருப்பு கொண்டவனாக அவற்றைக் கைவிட்டு விடுவான். ஆனால் மிகவும் உயர்ந்ததான திருமேனி உள்ளதாகவும், அனைத்துவிதமான திருக்கல்யாண குணங்கள் கொண்டதாகவும், எப்போதும் உள்ளதாகவும், அளவிட இயலாததாகவும் உள்ள பகவத்விஷயத்தில் எந்தவிதமான தோஷங்களும் இருப்பதில்லை என்பதால் தோஷங்களைக் காரணம் காண்பித்துக் கைவிட இயலாது என்று கருத்து.

ஸங்க்யாதும் நைவ சக்யந்தே குணா தோஷாச்ச சார்ங்கிண: ஆநந்த்யாத் ப்ரதமோ ராசி ரபாவாதேவ பச்சிம: - சார்ங்கம் என்னும் வில் தரித்த ஸர்வேச்வரனுடைய குணங்களை எண்ண இயலாது, எத்தனை எண்ண முயன்றாலும் தோஷங்களை எண்ண இயலாது. குணங்கள் அளவற்றவை என்பதால் எண்ண இயலாது; தோஷங்கள் இல்லாமையால் எண்ண இயலாது – என்றது காண்க.

417. தோஷமுண்டானாலும் குணம் போலே உபாதேயமா யிருக்கும்.

**அவதாரிகை** - க்ஷுத்ர விஷயங்களுக்குச் சொல்லுகிற தோஷமொன்று மிங்குச் சொல்லலாவதில்லையேயாகிலும், ஸ்வவிஷய பக்திபரவசர்க்கு ஸ்வஸம்ச்லேஷ ஸுகத்தை உருவ நடத்தாதே விச்லேஷித்து துக்கத்தை விளைக்கையாலே "கடியன் கொடியன்" இத்யாதிப்படியே சொல்லலாம்படி தோற்றுவன சில தோஷமுண்டே; அதுதான் மீளுகைக் குடலானாலோவொன்ன அருளிச்செய்கிறார் (தோஷ முண்டானாலும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - தாழ்ந்த விஷயங்களுக்கு உரைக்கப்பட்ட தோஷங்கள் ஏதும் பகவத் விஷயத்திற்குக் கூற இயலாது. ஆனாலும் தன்னிடம் ஆழ்ந்த பக்தி உள்ளவர்களுக்கும் தன்னுடன் சேர்ந்து இருக்கவல்ல சுகத்தைப் பூர்ணமாக அவன் அளிப்பதில்லை. ஆகவே திருவாய்மொழி (5-3-5) - கடியன் கொடியன் - என்று கூறுவதற்கு ஏற்ப அவனிடம் சில தோஷங்கள் உண்டு அல்லவோ? அதன் காரணமாகப் பகவத்விஷயத்தில் ஈடுபட்டவர்கள் அவனை விட்டு அகன்று போவதற்கு வாய்ப்பு உண்டு அல்லவோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அப்படி ஆற்றாமையாலே தோற்றுவன சில தோஷ முண்டானாலும், "கொடிய வென்னெஞ்ச மவனென்றே கிடக்கும்" என்று அவை தன்னையே விரும்பி மேல்விழும்படி இருக்கையாலே ஹேயமாயிராது, விஷயத்தை விரும்பி மேல் விழுகைக்குடலான குணம்போலே உபாதேயமா யிருக்குமென்கை.

**விளக்கம்** - அதாவது பிரிவாற்றாமை காரணமாக ஏற்படும் தோஷங்கள் அவனிடம் உள்ளது என்று தோன்றினாலும், திருவாய்மொழி (5-3-5) – கொடிய வென்னெஞ்ச

மவனென்றே கிடக்கும் - என்பதற்கு ஏற்ப, அவனையே விரும்பி அவனிடம் ஈடுபாடுடன் உள்ளதன் காரணமாக, தோஷமாகத் தோன்றும் அவை தாழ்ந்தவையாக இருப்பதில்லை. அவையே, அவனை மேலும் விரும்பி ஈடுபாடு அடையத்தக்க குணங்களாகக் கைக்கொள்ளும்படியாக இருக்கும் என்று கருத்து.

418. லோகவிபரீதமா யிறே இங்கிருப்பது.

**அவதாரிகை** - லோகத்தில் தோஷம் ஹேயமாய் குணமுபாதேயமாயன்றோ இருப்பது தோஷம் குணம்போலே உபாதேயமாமோவென்ன அருளிச்செய்கிறார் (லோகவிபரீதம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இந்த உலகில் பொதுவாக தோஷங்கள் என்பது கைவிடத்தக்கதாகவும், குணம் என்பது கைக்கொள்ளத்தக்கதாகவும் அல்லவோ உள்ளது? அப்படி உள்ளபோது குற்றமானது குணம் போன்று கைக்கொள்ளத்தக்கதாக இருக்குமோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, தோஷம் விடுகைக்குடலாய் குணம் பற்றுகைக் குறுப்பாயிருக்கும் லோகப்ரக்ரியை யன்றியே, தோஷமும் குணம்போலே உபாதேயமாயிறே இவ்விஷயத்தி லிருப்பதென்கை.

**விளக்கம்** – குற்றம் என்பது கைவிடத்தக்கதாகவும், குணம் என்பது கைக்கொள்ளத் தக்கதாகவும் உள்ள நிலையானது உலகவிஷயங்களுக்கு மட்டுமே பொருந்தும். பகவத் விஷயத்தில் அது போன்று இருப்பதில்லை என்று கருத்து.

419. குணம் உபாதேயமாகைக்கீடான ஹேது தோஷத்துக்கு முண்டிறே.

**அவதாரிகை** – எல்லாஞ் செய்தாலும் தோஷம் குணம்போலே உபாதேயமாகக் கூடுமோ வென்னு மாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (குண முபாதேயமாகைக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - எவ்விதமாகச் சமாதானம் உரைத்தாலும், குற்றம் என்பதைக் குணமாகக் கருதிக் கைக்கொள்ள இயலுமோ என்ற சந்தேகத்திற்கு இங்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பகவத்குணம் தத்ப்ரவணர்க்கு உபாதேயமாகைக்கீடான ப்ராப்த சேஷிகதத்வமாகிற ஹேது, அவ்விஷயத்தில் தோற்றுகிற தோஷத்துக்கு முண்டிறே யென்கை. இத்தால், அவன் பக்கலுள்ள தென்னுமத்தாலே குண முபாதேயமாகிற வோபாதி, அவன் பக்கலுள்ள தென்னுமத்தைப்பற்ற தோஷமு முபாதேயமாகக் குறையில்லை என்றதாய்த்து. இப்படியாகையாலே தோஷமுண்டானானுமது மீளுகைக் குடலாகாதென்று கருத்து.

**விளக்கம்** - ஸர்வேச்வரனுடைய குணமானது அவனிடம் ஆழ்ந்த பக்தியுடன் ஈடுபட்டபடி உள்ளவர்களுக்குக் கைக்கொள்ளும்படியாக உள்ளதன் காரணம், “இவன் நமக்கு இயல்பான எஜமானன்” என்பதால் ஆகும். அதே போன்று அவன் நமக்கு எஜமானனாக உள்ளதால் அவனிடம் தோஷங்கள் என்று நமக்குத் தோன்றுவதும் கைக்கொள்ளத் தக்கவையே ஆகும். ஆகவே அவனிடம் உள்ளவை என்ற காரணத்தால் குணங்கள் எவ்விதம் கைக்கொள்ளத்தக்கவையாக உள்ளனவோ அதே போன்று, அவனிடம் உள்ளது என்று நமக்குத் தோன்றும் காரணத்தால் குற்றங்களும் கைக்கொள்ளத் தக்கவையே ஆகும் என்று கருத்து. ஆகவே அவனிடம் தோஷம் உள்ளது என்று தோன்றினாலும், அது அவனை விட்டு நாம் அகலக் காரணம் ஆகாது என்று கருத்து.

420. நிர்க்ருணனென்று வாய் மூடுவதற்கு முன்னே க்ருணாவானென்று சொல்லும்படியா யிருந்ததிறே.

**அவதாரிகை** - விச்லேஷ தசையில் தோற்றும் நைர்க்ருண்யாதி தோஷத்தை அங்கீகரித்து, அதுதான் குணவதுபாதேயமாயிருக்கும்படியை அருளிச்செய்தார் கீழ்; அந்த நைர்க்ருண்யாதி தோஷந்தான் முதலிலே இவ்விஷயத்தி லில்லை யென்னுமிடத்தை அபியுக்த வசநங்களாலே தர்சிப்பிக்கிறார் மேல். அதில் முதலிலே, ஆழ்வாருடைய வசநத்தை தர்சிப்பிக்கிறார்.

**விளக்கம்** - (நிர்க்ருணன் என்றால் அருள் அற்றவன் என்று பொருள்). பிரிந்துள்ள நிலையில் தோன்றுவதான கடியன், கொடியன் போன்றவை குற்றங்களாக இருப்பதாகத் தோன்றினாலும், அவற்றைக் குணமாகவே ஏற்பதைக் குறித்துக் கடந்த சூர்ணையில் அருளிச்செய்தார். ஆனால் உண்மையில் "கருணை அற்றவன்" முதலான குற்றங்கள் அவனிடம் இல்லை என்பதை, நம்பத் தகுந்தவர்களுடைய வாக்குகள் கொண்டு உரைக்கிறார். அவற்றில் முதலில் ஆழ்வாருடைய வாக்கு கொண்டு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "என தவளவண்ணர் தகவுகளே" என்று எங்ஙனே யிருந்தன சுத்த ஸ்வபாவரான உம்முடைய க்ருபைகள், நாட்டிலே இப்படி ருஜுக்களுமாய் பரது:காஸஹிஷ்ணுக்களுமா யிருப்பார் சில தார்மிகர் நடையாட அபலைகளுக்கு அழகிதாகக் குடிக்கிடக்கலா யிருந்ததென்று, பெண்பிள்ளை யாற்றாமைக் குதவாதது கொண்டு திருத்தாயார் நிர்க்ருணனென்று வாய் மூடுவதற்கு முன்னே, அவள் வாயைப் புதைத்தாப்போலே "தகவுடையவனே" என்று, கெடுவாய்! ஆகரத்தில் தகவு மறுக்குமோ, அது நங்குற்றங்காண் என்று க்ருணாவத்தையைச் சொல்லும்படியா யிருந்ததிறே யென்றபடி.

**விளக்கம்** – "திருவாய்மொழி (2-4-5) - என தவளவண்ணர் தகவுகளே - என்ற பாசுரத்தில் 'அடியார்கள் விஷயத்தில் சுத்தஸ்வபாவம் உள்ளவன்' என்று கூறியபடி இருந்த உனது கருணைகள் எங்கே போயின? நாட்டில் இவ்விதம் உன்னைப் போன்ற நேர்மை தவறாதவர்களும், மற்றவர்களுடைய துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள இயலாதவர்களுமாகிய சில தர்மவான்கள் நடமாடினால், இங்கு பெண்கள் மிகவும் சுகமாக வாழலாம்", என்று தாய் ஒருவள் தனது பெண் விஷயத்தில் அவன் இரக்கம் கொண்டு உதவாமல் இருந்தது குறித்து, அவன் கருணை அற்றவன் என்று உரைத்தாள். அவ்விதமாக உரைத்து அவள் தனது வாயை மூடுவதற்கு முன்பாகவே, அந்தத் தாயின் மகள், திருவாய்மொழி (2-4-6) – தகவுடையவனே - என்று கூறினாள். அதாவது தனது தாயிடம் அந்தப் பெண், "நீ உரைப்பது தவறாகும். கருணையின் இருப்பிடமும் பிறப்பிடமும் என்றுள்ள ஒருவனிடம் கருணை இல்லை என்று நீ கூறுவது சரியா? அவன் தனது கருனையை நம்மிடம் கான்பிக்காதது நமது குற்றம் காரணமாக அல்லவோ?", என்று அவனுடைய கருணையின் பூர்ணத்வம் குறித்து உரைப்பது போன்றதாக அல்லவோ காணலாம்!

421. இப்படி சொல்லும்படி பண்ணிற்று க்ருபையாலே யென்று ஸ்நேஹமும் உபகார ஸ்ம்ருதியும் நடந்ததிறே.

**அவதாரிகை** - இவ்வுக்திதான் தாயார் சொன்ன குணஹாநிக்கு ஒரு பரிஹாரம் பண்ணின மாத்ரமோ, ஸஹ்ருதயமாகச் சொன்னதோ வென்கிற சங்கையிலே, இதன் ஸஹ்ருத்ய த்வத்தை மூதலிக்கிறார் (இப்படி) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் தாய் ஒருவள், “அவன் குணம் இல்லாதவன்” என்று உரைத்தது கேட்ட மகள், ஒரு சொல் அளவில் மட்டுமே “நீ கூறுவது போன்று அவன் இல்லை” என்று மறுத்தாளா அல்லது தனது மனப்பூர்வமாக இவ்விதம் உரைத்தாளா என்ற சந்தேகம் எழலாம். இந்தப் பெண் மனப்பூர்வமாகவே உரைத்தாள் என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, குணஹாநி சொன்னத்தைத் தள்ளி குணம் சொல்லும்படி பண்ணிற்று க்ருபையாலே யென்று, “மிக விரும்பும்” என்று, ஸ்நேஹமும், “பிரான்” என்று உபகார ஸ்ம்ருதியும் நடந்ததிறே; ஆகையால் “தகவுடையவனே” என்றவிது ஸஹ்ருதயோக்தி யென்கை.

**விளக்கம்** - தன்னுடைய தாயானவள், “அவன் குணம் அற்றவன்” என்று கூறியதைக் கேட்டு, அந்தச் சொற்களைத் தள்ளிய மகள், “அவன் குணம் உள்ளவன்” என்று உரைக்கும்படியாகச் செய்தது எதுவென்றால், ஸர்வேச்வரனிடம் உள்ள கருணை காரணமாகவே ஆகும் என்று அறியவேண்டும். இதனை அடுத்துள்ள திருவாய்மொழி (2-4-6) – மிக விரும்பும் - என்பதால் வெளிப்படும் சிநேஹம் மூலமும், (2-4-6) – பிரான் - என்று அவன் காண்பித்த சிநேஹத்திற்கு நன்றி கூறுவதன் மூலமும் மகள் உரைத்தாள் அல்லவோ? எனவே, (2-4-6) – தகவுடையவனே - என்று உரைத்தது மனப்பூர்வமாகவே ஆகும் என்று கருத்து.

422. நிர்க்ருணனாக சங்கித்துச் சொல்லுமவஸ்த்தையிலும் காரணத்தை ஸ்வகதமாகவிறே சொல்லிற்று.

**அவதாரிகை** - அநந்தரம், பிராட்டியுடைய வசநத்தை தர்சிப்பிக்கிறார் (நிர்க்ருணனான) என்று தொடங்கி.

**விளக்கம்** - அடுத்து இந்த விஷயத்தில் சீதையின் வாக்குகளைக் காண்பிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பிரிவாற்றாமையாலே பெருகக் கலங்கின ஸ்ரீஜநகராஜன் திருமகள், பெருமாள் தன்னாற்றாமைக் குதவவந்து முகங் காட்டப்பெறாத இன்னாப்பாலே, "க்க்யாத: ப்ராஜ்ஞ க்ருதஜ்ஞச்ச ஸாநுக்ரோசச்ச ராகவ: ஸத்வ்ருத்தோ நிரநுக்ரோசச்சங்கே" என்று, பெருமாளை நிர்க்ருணராக சங்கித்துச் சொல்லுகிற அவஸ்தையிலும், "மத்பாக்ய ஸங்க்ஷயாத்" என்று, இப்படி சங்கிக்கைக்கடி யென்னுடைய பாக்யஹாநி யென்கையாலே, சங்கா காரணத்தை ஸ்வகதமாகவிறே சொல்லிற்றென்கை.

**விளக்கம்** - தன்னுடைய பிரிவாற்றாமை காரணமக ஜனகனின் புத்ரியான சீதை, இராமன் தனது பிரிவாற்றாமை நீக்கும்விதம் வந்து உதவாமல் இருந்த காரணத்தால் மிகுந்த துன்பம் கொண்டாள். ஆனால் இராமாயணம் ஸுந்தரகண்டம் (26-13) – க்க்யாத: ப்ராஜ்ஞ க்ருதஜ்ஞச்ச ஸாநுக்ரோசச்ச ராகவ: ஸத்வ்ருத்தோ நிரநுக்ரோசச்சங்கே - உயர்ந்த அறிவுள்ளவன், நன்றி மறக்காதவன், இரக்கம் உள்ளவன், சிறந்த அறிவுள்ளவன், சிறந்த ஒழுக்கம் உள்ளவன் - என்று பலவிதமான உயர்ந்த தன்மைகள் கொண்ட இராமன், என்னுடைய புண்ணியக்குறைவு காரணமாக எனக்குக் கருணை காண்பிக்க இயலாமல் உள்ளானோ என்று ஸர்வேச்வரனைக் குணம் இல்லாதவனாகச் சந்தேகத்துடன் உரைக்கும் நிலையிலும் கூட, "மத்பாக்ய ஸங்க்ஷயாத் - எனது புண்ணியக்குறைவே இந்தச் சந்தேகத்தின் அடிப்படைக் காரணம்", என்று அவனிடம் குணம் இல்லாமல் போயிற்றா என்று சந்தேகத்திற்கான காரணமும் தன்னிடமே உண்டு என்றது காண்க.

423. குணதோஷங்களிரண்டும் க்ஷுத்ர புருஷார்த்தத்தையும் புருஷார்த்த காஷ்டையையும் குலைக்கும்.

**அவதாரிகை** - (ப்ரதமபர்வத்தை விட்டு) என்கிறவிடத்திலே, அர்த்தாதுக்தமான பகவத் ஸம்ச்லேஷமும், (தோஷமுண்டானாலும்) என்கிறவிடத்தில், அர்த்தாதுக்தமான தத்

விச்லேஷமுமாகிற இவையிரண்டும் செய்யுமத்தை அருளிச்செய்கிறார் (குண தோஷங்களிரண்டும்) என்று தொடங்கி.

**விளக்கம் -** சூர்ணை 415ல் “ப்ரதமபர்வத்தை விட்டு” என்பதில் ஆழ்ந்த பொருளாக மனதில் படுவதான “ஸர்வேச்வரனுடைய சேர்க்கை”, சூர்ணை417ல் “தோஷமுண்டானாலும்” என்பதில் ஆழ்ந்த பொருளாக உள்ள “ஸர்வேச்வரனுடைய பிரிவு” ஆகிய இரண்டு நிலைகளாலும் விளைவது என்ன என்பதை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** குணமாவது, ஸ்வஸௌந்தர்யாதிகளை ஆச்ரிதர்க்கு முற்றூட்டாக அநுபவிக்கக் கொடுத்துக் கொண்டிருக்குங் கலவி; தோஷமாவது, அவ்வநுபவாலாபத்தாலே அவர்கள் கண்ணாஞ்சுழலை யிட்டுத் துடிக்கத் தான் முகங்காட்டாதே யிருக்கையாகிற பிரிவு.

**விளக்கம் –** (குணம்) - ஸர்வேச்வரன் தனது ஸௌந்தர்யம் போன்ற பலவற்றையும் தனது அடியார்கள் அனுபவிக்கும் விதத்தில் முழுவதுமாகக் கொடுத்தபடி இருப்பதாகும். (தோஷம்) அப்படிப்பட்ட அனுபவம் கிட்டாதபோது அவர்கள் மதி மயங்கித் தவித்தபடிச் செய்வதான ஸர்வேச்வரனுடைய பிரிவு ஆகும்.

**வ்யாக்யானம் -** இவை யிரண்டும், (க்ஷுத்ர புருஷார்த்தத்தையும் புருஷார்த்த காஷ்டையும் குலைக்கையாவது), ஓரொன்றே யிரண்டையும் குலைக்கை. இதில் குணமிரண்டையும் குலைக்கையாவது, “மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு” என்றும், “மனைப்பால் பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாந் துறந்தார் தொழுதாரத்தோள்” என்றும், தத்விஷய வைலக்ஷண்யத்தாலே க்ஷுத்ர விஷய வைராக்யத்தைப் பிறப்பிக்கையாலே, க்ஷுத்ர புருஷார்த்தாந்வயத்தைக் குலைக்கையும்; “பயிலுஞ்சுடரொளி” யிலே ததீயசேஷத்வத்திலே ஊன்றி நின்ற ஆழ்வாரை, அந்த ததீயருடைய ஸ்வரூபநிரூபகத்வேந ப்ரஸ்துதமான தத்ஸௌந்தர்ய சீலாதிகளாலே ததீயதாஸ்ய ரஸத்தை மறந்து அவனை அநுபவிக்கையிலாசை கரை புரண்டு அநந்தரந் திருவாய்மொழியிலே தாமும் தம்முடைய கரண க்ராமங்களும் பெருவிடாய்ப்பட்டுக் கூப்பிடும்படி பண்ணினாப்போலே, வேறொன்றுக்காகப் புகுந்தாலும் தன்னை யொழியப் புறம்பொன்றுக் காளாகாதபடி பண்ணும் த்ருஷ்டி சித்தாபஹாரியான அவன் பக்கலிலே

சுழியாறுபடுத்தி புருஷார்த்த காஷ்டையான ததீய சேஷத்வத்தில் நிலையைக் குலைக்கையும்.

**விளக்கம்** – (க்ஷுத்ர புருஷார்த்தத்தையும் புருஷார்த்த காஷ்டையும் குலைக்கையாவது) – இந்த இரண்டில் ஒவ்வொன்றே இரண்டையும் குலைப்பதாக உள்ளது. குணம் என்பது இரண்டையும் குலைக்கை என்பது எப்படி? இது இரண்டு விஷயத்தில் குலைக்கும் என்கிறார்.

- முன்றாம் திருவந்தாதி (14) – மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு – என்றும், இரண்டாம் திருவந்தாதி (42) – மனைப்பால் பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாந் துறந்தார் தொழுதாரத்தோள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப பகவத் விஷயத்தின் மேன்மை காரணமாக தாழ்ந்த விஷயங்களின் மீது உள்ள ஈடுபாட்டைத் தவிர்த்து, அவற்றில் விருப்பம் இல்லாத நிலையை ஏற்படுத்துவதால், அற்பமான விஷயங்களில் உள்ள ஈடுபாட்டை இல்லாமல் ஆக்குகிறது.

- திருவாய்மொழி (3-7) - பயிலுஞ்சுடரொளி – என்னும் திருவாய்மொழியில் பாகவத கைங்கர்யத்தில் ஆழ்ந்து நின்ற ஆழ்வாரை, அந்த அடியார்களுடைய தன்மையை உணர்த்தும் விதத்தில் கூறப்பட்டதான ஸர்வேச்வரனுடைய அழகு, சீலம் போன்றவைகள் மூலம், அடியார்களுக்குக் கைங்கர்யம் செய்வதில் உள்ள சுவையை மறந்து ஸர்வேச்வரனை அனுபவிக்கவேண்டும் என்ற ஆசை கரைபுரண்டு ஓடும்படிச் செய்து, அடுத்த திருவாய்மொழியில் (3-8) – முடியானே - என்று தானும் தன்னுடைய இந்த்ரியங்களும் மிகுந்த தாகம் எடுத்தவர்கள் தண்ணீருக்காக ஏங்குவது போன்று அழைக்கும்படிச் செய்தது (எதுவென்றால், அவனுடைய குணம்). இவ்விதம் ஆழ்வாரைச் செய்தது போன்று, அடியார்களுக்குக் கைங்கர்யம் செய்தல் முதலான செயல்களில் ஈடுபட்டாலும், தன்னைத் தவிர வேறு எதற்கும் அடிமையாக்காதவிதம் செய்பவனாக கண்ணையும் மனதையும் ஈர்த்தபடி உள்ள ஸர்வேச்வரனிடம் ஆழ்ந்த ஈடுபாடு கொள்ளும்படிச் செய்து, புருஷார்த்தத்தின் எல்லையான அடியார்களுக்குக் கைங்கர்யம் செய்தல் என்ற நிலையைக் குலைக்கிறது.

**வ்யாக்யானம் -** தோஷ மிரண்டையும் குலைக்கையாவது, அநுபவாலாப க்லேசத்தாலே ஸர்வகாலமும் தன்பக்கலிலே மநஸ்ஸாய், “உண்டறியா ளுறக்கம் பேணாள்”, “பந்தோடு கழல் மருவாள் பைங்கிளியும் பாலுட்டாள் பாவைபேணாள்” என்கிறபடியே, முன்பநுபவித்துப் போந்த ப்ராக்ருத போகங்களாகிற க்ஷுத்ர புருஷார்த்தங்களில் பொருந்தாமையை விளைக்கையும்; “அவனடியார் சிறுமாமனிசரா யென்னை யாண்டா ரிங்கே திரிய, செந்தாமரைக்கண் திருக்குறளன் நறுமாவிரை நாண்மலரடிக்கீழ்ப் புகுதல், உறுமோ பாவியேனுக்கு” என்றும், “தனிமாத் தெய்வத் தனிரடிக்கீழ் புகுதலன்றி யவனடியார், நனிமாக் கலவியின்பமே நாலும் வாய்க்க நங்கட்கு” என்றும் இப்படி தத்விஷய ஸம்ச்லேஷ ரஸம் வேண்டாதபடி ததீயவிஷய ஸம்ச்லேஷ ரஸமே அமையுமென்றிருக்கு மவர்களையும், அந்த ததீயருடனே கூடியிருந்தாலு மவர்கள் பக்கல் நெஞ்சற்று அவனை அநுபவிக்கையி லாசையாலே, “காணவாராய்”, “காணுமாறருளாய்” என்று கூப்பிடுவது, “வெஞ்சிறைப்புள்” இத்யாதிகளாலே அவர்கள் தங்களோடே வெறுத்து வார்த்தை சொல்லுவதாம்படி பண்ணுகையாலே, புருஷார்த்த காஷ்டையில் நெஞ்சு பற்றாதபடி பண்ணுகையும்.

**விளக்கம்** – அடுத்து, தோஷம் இரண்டையும் எவ்விதம் குலைக்கிறது என்கிறார். ஸர்வேச்வரனை அனுபவிக்கும் நிலைமை கிட்டாத காரணத்தால் ஏற்படும் துன்பத்தால் எப்போதும் அவனிடம் தங்கள் மனதை வைத்தவர்களாக, திருநெடுந்தாண்டகம் (12) - உண்டறியா ளுறக்கம் பேணாள் - என்றும், பெரியதிருமொழி (5-5-9) – பந்தோடு கழல் மருவாள் பைங்கிளியும் பாலுட்டாள் பாவைபேணாள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப முன்பு தாங்கள் அனுபவித்தபடி இருந்த உலகியல் இன்பங்களான தாழ்ந்த பயன்களில் மனம் பொருந்தாமல் உள்ள நிலையை ஏற்படுத்துதல். திருவாய்மொழி (8-10-3) – அவனடியார் சிறுமாமனிசரா யென்னை யாண்டா ரிங்கே திரிய, செந்தாமரைக்கண் திருக்குறளன் நறுமாவிரை நாண்மலரடிக்கீழ்ப் புகுதல், உறுமோ பாவியேனுக்கு, திருவாய்மொழி (8-10-7) – தனிமாத் தெய்வத் தனிரடிக்கீழ் புகுதலன்றி யவனடியார், நனிமாக் கலவியின்பமே நாலும் வாய்க்க நங்கட்கு - என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடனான சேர்க்கை வேண்டாதபடி, அவன் அடியார்களுடைய சேர்க்கையால் இன்பம் ஏற்படும் என்று உள்ளவர்களைக் கூட, அவர்கள் அடியார்களுடன் சேர்ந்துள்ள காலத்திலும் அந்த அடியார்களிடம் ஈடுபடாமல், ஸர்வேச்வரனை அனுபவிக்கவேண்டும் என்ற ஆசை காரணமாக திருவாய்மொழி (8-5-2) - காணவாராய் – என்றும், (8-1-2) – காணுமாறருளாய்

- என்றும் அவனை அழைத்தல், மற்றும் திருவாய்மொழி (1-4-1) - வெஞ்சிறைப்புள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அடியார்களை வெறுத்து சொற்கள் உரைத்தல் போன்றவற்றைச் செய்யவைப்பதால், புருஷார்த்தத்தின் எல்லையான அடியார்களுக்கு கைங்கர்யம் என்பதில் மனம் நிற்காதபடி செய்தல்.

424. நித்யசத்ருவா யிறே யிருப்பது.

**அவதாரிகை** – இதில், க்ஷுத்ர புருஷார்த்தத்தைக் குலைக்குமென்றவிது தன்பக்கலிலே அகப்பட்டாரைப் புறம்பொரு விஷயமறியாதபடி பண்ணும் இவ்விஷயத்தின் ஸ்வபாவம் சொல்லுகைக்காகக் கூட்டிக் கொண்டவித்தனை; புருஷார்த்த காஷ்டையைக் குலைக்கு மென்னுமதுவே இவ்விடத்தில் அபேக்ஷிதம்; ஆனபின்பு க்ஷுத்ர புருஷார்த்த பஞ்ஜகத்வம் ப்ராஸங்கிக மாகையாலே அத்தைவிட்டு ப்ராகரணிகமான சரம புருஷார்த்த பஞ்ஜகத்வத்தை மூதலிக்கிறார் (நித்ய சத்ருவாயிறே யிருப்பது) என்று.

**விளக்கம்** - சூர்ணை 423ல் கூறப்பட்ட "க்ஷுத்ர புருஷார்த்தத்தைக் குலைக்கும்" என்பது, தன்னிடம் ஈடுபாடு கொண்டவர்களை மற்ற எந்த விஷயத்தையும் அறியாதபடி செய்யவல்ல பகவத் விஷயத்தின் தன்மையை உணர்த்துவதற்காகக் கூட்டிக்கொண்டார். இங்கு "புருஷார்த்த" என்று சொற்றொடரே அவசியமானதாகும். ஆகவே "க்ஷுத்ர" என்பது இந்த இடத்தில் வந்தேறிய கருத்து என்பதால், இங்கு கூறப்படும் விஷயத்திற்கு அது அவசியமற்றது என்று கருதி அதனைக் கைவிட்டு, இந்த இடத்திற்குப் பொருத்தமாக உள்ள "புருஷார்த்த" என்பதை இங்கு விவரிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "சத்ருக்நோ நித்யசத்ருக்ந:" என்று, பெருமாளுக்கு அபிமத விஷயமான ஸ்ரீபரதாழ்வானையே தனக்கு உத்தேச்யமாகப் பற்றி அவனையல்ல தறியா தேயிருக்கும் ஸ்ரீசத்ருக்நாழ்வான் பரதாநுவ்ருத்திக்கு விரோதியான ராம ஸௌந்தர்யமாகிற நித்யசத்ருவை ஜயித்திருக்கு மென்கையாலே. ததீய கைங்கர்ய நிஷ்டனுக்கு நித்ய சத்ருவாயிறே பகவத் ஸௌந்தர்ய மிருப்பதென்கை. ஆகையால், இப்படி விலக்ஷணமான விஷயத்தில் ஸம்ச்லேஷ விச்லேஷங்களிரண்டும் புருஷார்த்த காஷ்டையைக் குலைக்குமென்னக் குறையில்லை என்று கருத்து.

**விளக்கம்** - இராமாயணம் அயோத்யாகாண்டம் (1-1) - சத்ருக்நோ நித்யசத்ருக்ந: – எப்போதும் சத்ருக்களாக உள்ள இந்த்ரியங்ளை வென்ற சத்ருக்னன் - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள சத்ருக்னன், ஸர்வேச்வரனாகிய இராமனுக்கு மிகவும் ப்ரியமான பரதனையே தனக்கு உத்தேச்யம் என்று பற்றிய பரதன் அல்லாமல், வேறு எதனையும் அறியாதவன் ஆவான். அவன் பரதனுக்குத் தொண்டு செய்வதற்குத் தடையாக உள்ள "இராமனின் ஸௌந்தர்யம்" என்ற நித்யசத்ருவை வென்றவன் ஆவான். இவ்விதம் இராமாயணத்தில் கூறப்பட்டதன் மூலம், அடியார்களுக்குக் கைங்கர்யம் செய்தபடி உள்ளவன் என்ற ஒருவனுக்கு நித்யமான பகையாக உள்ளது ஸர்வேச்வரனுடைய அழகே ஆகும் என்று கருத்து. ஆகவே இவ்விதம் மிகவும் உயர்ந்த விஷயமான ஸர்வேச்வரன் விஷயத்தில் பிரிந்துள்ளதும் சேர்ந்துள்ளதும் என்ற நிலைகள் இரண்டும் (எந்தவிதமான வேறுபாடும் இல்லாமல்), புருஷார்த்தத்தின் எல்லையான பாகவத கைங்கர்யம் என்பதைக் குலைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை என்று கருத்து.

**வ்யாக்யானம்** – அன்றிக்கே, கீழ்ச் சொன்ன குணதோஷங்க ளிரண்டும் செய்யுமத்தை யருளிச்செய்கிறார் (குணதோஷங்களிரண்டும்) என்று தொடங்கி. குணமாவது, (இங்கு அது செய்ய வொண்ணாது) என்கிறவிடத்தில் சொன்ன பும்ஸாம் த்ருஷ்டி சித்தாப ஹாரியான ஸௌந்தர்ய சீலாதிகள்; தோஷமாவது, (குணம்போலே யுபாதேயமா யிருக்கும்) என்கிறவிடத்திற் சொன்ன "கடியன் கொடியன்" இத்யாதிகள். (இரண்டும் க்ஷுத்ர புருஷார்த்தத்தையும் புருஷார்த்த காஷ்டையையுங் குலைக்கும்) என்றது, ஓரொன்றே யிரண்டையும் செய்யுமென்றபடி.

**விளக்கம்** – அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். அதாவது சூர்ணை 423ன் தொடக்கத்தில் கூறப்பட்ட குணங்கள் மற்றும் தோஷங்கள் ஆகிய இரண்டும் செய்வதை இங்கு "குணதோஷங்களிரண்டும்" என்று தொடங்கி அருளிச்செய்கிறார் எனலாம். குணம் என்பது சூர்ணை 416ல் "இங்கு அது செய்ய வொண்ணாது" என்று கூறப்பட்டதும், ஆண்களின் கண்கள் மற்றும் நெஞ்சம் ஆகிய இரண்டையும் அபகரிக்கவல்லதான அழகு மற்றும் சீலம் போன்றவையும் ஆகும். தோஷம் என்பது சூர்ணை 417ல் "குணம்போலே யுபாதேயமா யிருக்கும்" என்று கூறப்பட்டதும், திருவாய்மொழியில் (5-3-5) - கடியன் கொடியன் – என்று கூறப்பட்டதும் ஆகும். சூர்ணை 423ல் - (இரண்டும் க்ஷுத்ர புருஷார்த்தத்தையும் புருஷார்த்த காஷ்டையையுங் குலைக்கும் என்று கூறப்பட்டது

என்னவென்றால், “குணம் அல்லது தோஷம்” ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று மட்டுமே இரண்டு புருஷார்த்தங்களையும் குலைக்கும் – என்பதாகும்.

**வ்யாக்யானம்** - குணமிரண்டையும் செய்கையாவது, “மலைப்பால் பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாந் துறந்தார் தொழுதா ரத்தோள்” இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே, க்ஷுத்ர புருஷார்த்தத்தைக் குலைக்கையும், ஸ்வவைலக்ஷண்யத்தாலே ஆழங்கால்படுத்தி புருஷார்த்த காஷ்டையான ததீய சேஷத்வ நிஷ்டையைக் குலைக்கையும்;

**விளக்கம்** – குணம் இந்த இரண்டையும் செய்வது எப்படி என்று முதலில் அருளிச்செய்கிறார். இரண்டாம் திருவந்தாதி (42) - மலைப்பால் பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாந் துறந்தார் தொழுதா ரத்தோள் - என்பது போன்றவற்றில் கூறப்பட்டபடி, தாழ்ந்த புருஷார்த்தங்களைக் குலைக்கிறது; தனது அழகு போன்றவை மூலம் ஈடுபாடு உண்டாக்கி, புருஷார்த்தத்தின் எல்லைநிலமான அடியார்களிடம் ஈடுபாடுடன் இருத்தல் என்ற நிலையைக் குலைக்கிறது - இவை குணம் செய்யும் செயல்களாகும்.

**வ்யாக்யானம்** - தோஷமிரண்டையுங் குலைக்கையாவது, குணம்போலே உபாதேயமாய், அவனென்றே கிடக்கும்படி பண்ணுகையாலே ஊணுறக்கம், பந்து, கழல் முதலானவற்றில் பொருந்தாமையை விளைத்து க்ஷுத்ர புருஷார்த்தத்தைக் குலைக்கையும், “சிறுமா மனிசரா யென்னை யாண்டாரிங்கே திரிய, நறுமாவிரை நாண்மலரடிக்கீழ் புகுதல் உறுமோ” என்னும்படியான புருஷார்த்த காஷ்டையைக் குலைக்கையும் என்றிங்ஙனே யோஜிக்கவுமாம்.

**விளக்கம்** - அடுத்த தோஷம் இந்த இரண்டையும் செய்வது எப்படி என்று அருளிச்செய்கிறார். குணம் போன்று கைக்கொள்ளத்தக்கதாகவும், ஸர்வேச்வரனை மட்டுமே எப்போதும் ஈடுபடும்படிச் செய்வதாலும் உணவு, உறக்கம், பந்து, கழல் போன்ற எதிலும் மனம் பொருந்தாமையை ஏற்படுத்தி, தாழ்ந்த புருஷார்த்தங்கள் குறித்த ஈடுபாட்டைக் குலைக்கிறது. மேலும் திருவாய்மொழி (8-10-3) – சிறுமா மனிசரா யென்னை யாண்டாரிங்கே திரிய, நறுமாவிரை நாண்மலரடிக்கீழ் புகுதல் உறுமோ -

என்பதற்கு ஏற்ப உள்ள புருஷார்த்தத்தின் எல்லையான அடியார்களிடம் ஈடுபடுதல் என்பதையும் குலைக்கிறது.

**வ்யாக்யானம்** - இந்த யோஜனைக்கு, (நித்யசத்ரு) என்கிறவிது, ஸௌந்தர்யாதி குணவிசிஷ்ட வஸ்து விஷயமாகக் கடவது. அங்ஙனு மன்றிக்கே, குணம் புருஷார்த்த காஷ்டையைக் குலைக்கும், தோஷம் க்ஷுத்ர புருஷார்த்தத்தைக் குலைக்கும் என்று இங்ஙனே விபஜித்து யோஜிப்பாருமுண்டு. அப்போதைக்கும், குணம் புருஷார்த்த காஷ்டையைக் குலைக்குமென்னுமதுக்கும், தோஷம் க்ஷுத்ர புருஷார்த்தத்தைக் குலைக்குமென்னுமதுக்கும் பூர்வ யோஜனைகளிற் சொன்னபடியே பொருளாகக் கடவது. இவ்விஷய ஸ்வபாவ மிதுவாகையாலே சரம பர்வமான ஆசார்ய கைங்கர்யமாகிற இதுதான் துர்லபமென்று ஸிம்ஹாவலோகந ந்யாயத்தாலே கீழோடே யந்வயம்.

**விளக்கம்** – இவ்விதம் இரண்டாவது விதமாகப் பொருள் கொண்டால், சூர்ணை 424ல் உள்ள "நித்யசத்ரு" என்பது அழகு முதலான தன்மைகளுடன் கூடிய ஸர்வேச்வரன் என்ற பொருள் தரும். இந்த இரண்டுவிதத்திலும் அல்லாமல், சூர்ணை 423ல் கூறப்பட்ட "குணம்" என்ற பதம் புருஷார்த்தத்தின் எல்லையைக் குலைக்கும் (அதாவது அடியார்களிடம் ஈடுபடவிடாமல் தடுக்கும்) என்றும், தோஷம் என்ற பதம் தாழ்ந்த புருஷார்த்தத்தில் ஈடுபட விடாமல் குலைக்கும் என்றும் பிரித்துக் கூட்டிப் பொருள் உரைப்பவர்களும் உண்டு. இவ்விதம் கொண்டாலும், குணம் என்பது புருஷார்த்தத்தின் எல்லையைக் குலைக்கும் என்பதற்கும், தோஷம் என்பது தாழ்ந்த புருஷார்த்தத்தின் ஈடுபாட்டைக் குலைக்கும் என்பதற்கும் முன்பு கூறியபடியே பொருள் கொள்க. ஸர்வேச்வரனுடைய தன்மை இதுவாக உள்ளதால், கடைசி நிலையான ஆசார்ய கைங்கர்யம் என்னும் இதுவே கிட்டுவதற்கு அரியது என்பதை சிம்ஹாவலோகன நியாயத்தினால், கடந்த சூர்ணையுடன் சேர்த்து பொருள் கொள்ளவேண்டும் (சிம்ஹாவலோகன ந்யாயம் - தான் நடந்து வந்த பாதையை மீண்டும் நோக்குவது சிங்கத்தின் இயல்பு).

425. இப்படி ப்ராப்யத்தை யறுதியிட்டால் அதுக்கு ஸத்ருசமாக வேணுமிறே ப்ராபகம்.

**அவதாரிகை** – (ஸ்வரூபத்துக்கும் ப்ராப்யத்துக்கும் சேர்ந்திருக்கவேணுமிறே ப்ராபகம்) என்றவிதில், ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யம் சரமபர்வமான ஆசார்ய கைங்கர்ய மென்று

நிர்ணயித்தாராய் நின்றார் கீழ்; இந்த ப்ராப்யாநுரூபமான ப்ராபக நிர்ணயம் பண்ணுகிறார் மேல் (இப்படி ப்ராப்யத்தை யறுதியிட்டால்) என்று தொடங்கி.

**விளக்கம்** - சூர்ணை 410ல் "ஸ்வரூபத்துக்கும் ப்ராப்யத்துக்கும் சேர்ந்திருக்கவேணுமிறே ப்ராபகம்" என்று கூறப்பட்டது; அதில் ஆத்மஸ்வரூபத்துக்கு ஏற்றதாக உள்ள பேறு என்பது இறுதி நிலையான ஆசார்ய கைங்கர்யம் என்று நிரூபித்தார். இத்தகைய பேற்றைப் பெற்றுத் தருகின்ற உபாயம் இத்தகையது என்று இந்தச் சூர்ணையின் நிரூபிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்படி ஆசார்ய கைங்கர்யமே ப்ராப்யமென் றறுதி யிட்டால், இந்த ப்ராப்யத்துக்குத் தகுதியாகவேணுமிறே, ஏதத் ப்ராபகமென்கை இத்தால், ஆசார்ய கைங்கர்யமாகிற சரம ப்ராப்யத்துக்கு ஆசார்யனே ப்ராபகனாகவேணு மென்றபடி.

**விளக்கம்** - இவ்விதம் ஆசார்ய கைங்கர்யமே அடையத்தக்க பேறு என்று நிரூபித்தால், இத்தகைய பேற்றுக்கு ஏற்றபடி இருப்பதாக அல்லவோ இந்தப் பேற்றைப் பெற்றுத் தரும் உபாயம் இருத்தல் வேண்டும்? ஆகவே ஆசார்ய கைங்கர்யம் என்ற இந்தப் பேற்றுக்கு உபாயமாக ஆசார்யனே இருத்தல் வேண்டும் என்று கருத்து.

426. அல்லாதபோது ப்ராப்ய ப்ராபகங்களுக்கு ஐக்யமில்லை.

**அவதாரிகை** - இப்படி யல்லாதபோது வரும் ஹாநியேதென்ன அருளிச்செய்கிறார் (அல்லாதபோது) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் கொள்ளவில்லை என்றால் ஏற்படும் தோஷம் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்படி ப்ராப்யத்துக்கு ஸத்ருசமாம்படி ஆசார்யனை ப்ராபகமாகக் கொள்ளாதே ஈச்வரனை ப்ராபகமாகக் கொள்ளும்போது, ப்ராப்யத்துக்கும் ப்ராபகத்துக்கும் தன்னி லைக்யமில்லை யென்கை. ப்ரதம பர்வத்துக்குண்டான ப்ராப்ய ப்ராபகைக்யம், சரமபர்வத்துக்கு மொக்குமிறே; ஆகையாலேயிறே பிள்ளை யமுதனார்,

“பேறொன்று மற்றில்லை நின்சரணன்றி, அப்பேறளித்தற் காறொன்றுமில்லை மற்றச் சரணன்றி” என்று ப்ராப்ய ப்ராபகங்க ளிரண்டு மேகவிஷயமேயாக அருளிச்செய்தது.

**விளக்கம்** - இவ்விதம் பேற்றுக்கு ஏற்றபடியான உபாயமாக ஆசார்யனைக் கொள்ளாமல் ஸர்வேச்வரனை உபாயமாகப் பற்றினால், பேற்றுக்கு அதனைப் பெற்றுத் தரவல்ல உபாயத்துக்கு ஒன்றுடன் ஒன்று ஒற்றுமை இல்லை என்று கருத்து. முதல் நிலையில் உள்ள “பேறு – உபாயம்” என்பதற்கு இடையே உள்ள ஒற்றுமை, இறுதி நிலையிலும் பொருந்தவேண்டும் அல்லவோ? இதனால்தான் திருவரங்கத்தமுதனார் இராமாநுச நூற்றந்தாதியில் (45) - பேறொன்று மற்றில்லை நின்சரணன்றி, அப்பேறளித்தற் காறொன்றுமில்லை மற்றச் சரணன்றி - என்று பலன் மற்றும் பலனைப் பெறும் உபாயம் ஆகிய இரண்டையும் ஒரே விஷயமாக அருளிச்செய்தார்.

427. ஈச்வரனைப் பற்றுகை கையைப் பிடித்துக் காரியங் கொள்ளுமோபாதி; ஆசார்யனைப் பற்றுகை காலைப் பிடித்துக் கார்யங் கொள்ளுமோபாதி.

**அவதாரிகை** - இப்ப்ரபந்தத்தி லுபக்ரமமே பிடித்து (ஸ்வதந்த்ரனை) இத்யாதி வாக்யத் தளவும், ஸித்தோபாயதயா ஸகல சாஸ்த்ர ஸித்தனான வீச்வரனை பரமோபாயமாகவும், ஆசார்ய னஜ்ஞாத ஜ்ஞாபநமுகேந உபகாரகனாகவுமிறே சொல்லிப் போந்தது; இப்போது, ஈச்வரனைவிட்டு ஆசார்யனே யுபாயமென்னுமளவில் சாஸ்த்ர விரோதமும் ஸ்வோக்தி விரோதமும் சம்பவியாதோ, ஈச்வரனை யுபாயமாகப் பற்றுமதிற் காட்டில் ஆசார்யனை யுபாயமாகப் பற்றினால்வரு மேற்றந்தானேதோ வென்கிற சங்கையின் மேலே யருளிசெய்கிறார் (ஈச்வரனைப் பற்றுகை) என்று தொடங்கி.

**விளக்கம்** – இந்த நூலின் தொடக்கத்திலிருந்து, சூர்ணை 407ல் – ஸ்வதந்த்ரனை - என்பது முடிய, ஸித்தோபாயம் என்று அனைத்து சாஸ்த்ரங்களிலும் கூறப்படும் ஸர்வேச்வரனை மட்டுமே உயர்ந்த உபாயமாகவும், ஆசார்யன் என்பவர் அறியாதவற்றை உணர்த்தவல்ல உபாயமாகவும் அல்லவோ கூறி வந்தார்? இப்படி உள்ளபோது இங்கு ஸர்வேச்வரனை விடுத்து, ஆசார்யனே உபாயம் என்று கூறினால், சாஸ்த்ரத்தோடு மட்டும் அல்லாமல், தன்னுடைய பேச்சிலும் முரண்பாடு ஏற்படும் அல்லவோ? ஸர்வேச்வரனை உபாயமாகப் பற்றுவதைக் காட்டிலும் ஆசார்யனை உபாயமாகப் பற்றினால் உண்டாகும் உயர்வு

என்ன? இது போன்ற பல சந்தேகங்களுக்கு இந்தச் சூர்ணையில் விடை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது, ஈச்வரனைப் பற்றுகை, அவன் கையைப் பிடித்துக் காரியங் கொள்ளுமோபாதி; ஆசார்யனைப் பற்றுகை, அவன் காலைப் பிடித்துக் காரியங் கொள்ளுமோபாதி யென்கை. இங்ஙனருளிச் செய்தது, ஈச்வர விஷயத்தோடு ஆசார்ய விஷயத்துக்குண்டான அநந்யத்வமும், அவ்விஷயத்தைப் பற்றுமதி லிவ் விஷயத்தைப் பற்றுமதுக் குண்டான கார்ய ஸித்தியில் அமோகத்வமும் தோற்றுகைக்காக. அதெங்ஙனே யென்னில்? சரணத்வோக்தியாலே ததநந்யத்வம் ஸம்பரதிபந்நம். (ஈச்வரனைப் பற்றுகை அவன் கையைப் பிடித்துக் காரியங் கொள்ளுமோபாதி) என்கையாலே - மஹாப்ரபுவா யிருப்பா னொருவனை வசீகரித்துக் காரியங் கொள்ளுவா னொருவன் அவன் கையைப் பிடித்து வேண்டிக்கொண்டு காரியங் கொள்ளப் பார்க்குமளவில், நீர்மையாலே நெஞ்சிளகிக் காரியஞ் செய்யவுமாய், ஸ்வாதந்த்ர்யத்தாலே உதறி விடவுமா யிருக்கையாலே இன்னபடி யென்று அறுதியிட வொண்ணாதாப்போலே, ஆச்ரிதனான விவனுடைய வபேக்ஷிதம் தன்னுடைய க்ருபையாலே நெஞ்சிளகிக் காரியஞ் செய்யில் பலிக்கும்படியாய், ஸ்வாதந்த்ர்யத்தாலே முறுகிச் செய்யாதொழியில் விபலிக்கும்படியா யிருக்கையாலும்; (ஆசார்யனைப் பற்றுகை அவன் காலைப் பிடித்துக் காரியங் கொள்ளுமோபாதி) என்கையாலே - அப்படி ப்ரபுவானவன்றன்னையே காலைப்பிடித்து வேண்டிக்கொண்டு காரியங்கொள்ளுமளவில் தயாபரவசனாய் காரியஞ் செய்தல்லது நில்லாமையாலே தப்பாமல் காரியம் ஸித்திக்குமாப்போலே, ஆச்ரிதனான விவனுடைய வபேக்ஷித மறுதியாக பலிக்கும்படி யிருக்கையாலும் அமோகத்வம் ஸம்ப்ரதிபந்நம்.

**விளக்கம் –** ஸர்வேச்வரனைப் பற்றுதல் என்றால் அவனுடைய திருக்கரங்களைப் பிடித்து நம்முடைய செயல்களை நிறைவேற்றிக் கொள்ளுதல் போன்றது; ஆசார்யனைப் பற்றுதல் என்றால் அவருடைய திருவடியைப் பிடித்துக் கார்யம் நிறைவேற்றிக் கொள்ளுதல் போன்றது என்று கருத்து. இவ்விதம் கூறியது ஏன் என்றால்- ஈச்வர விஷயம் என்பது ஆசார்ய விஷயத்தைக் காட்டிலும் வேறு அல்ல; ஈச்வரனைப் பற்றுவதைக் காட்டிலும் ஆசார்யனைப் பற்றுவதன் மூலம் எண்ணும் காரியம் நிச்சயமாக நிறைவேறும் என்று உணர்த்தவே ஆகும். அது எப்படி? “காலைப் பற்றி” என்று கூறுவதால் ஈச்வரனுக்கும் ஆசார்யனுக்கும் வேறுபாடு இல்லை என்பது தெளிவாகிறது. (ஈச்வரனைப் பற்றுகை

அவன் கையைப் பிடித்துக் காரியங் கொள்ளுமோபாதி) - மிகுந்த செல்வம் நிறைந்துள்ள ஒருவனை வசப்படுத்தி தன் செயலை நிறைவேற்றிக் கொள்ள ஒருவன் எண்ணினால், அந்தச் செல்வந்தனின் கையைப் பிடித்துக்கொண்டு தனது செயலை நிறைவேற்ற முயன்றால், அந்தப் பணக்காரன் தனது மனதில் உள்ள இரக்கம் காரணமாக அந்தச் செயலை நிறைவேற்றிக் கொடுக்கலாம் அல்லது தனது சுதந்திரம் காரணமாக அதனை உதறித் தள்ளவும் செய்யலாம். ஆகவே அந்தச் செயல் நிறைவேறுமா இல்லையா என்பது உறுதியல்ல என்றாகிறது. அதாவது தன்னை அண்டியவனுடைய விருப்பமானது அந்தப் பணக்காரன் தனது கருணையால் மனம் இரங்கினால் நிறைவேறும்படியும், தனது சுதந்திரத்தால் கர்வம் கொண்டால் நிறைவேறாதபடியும் ஆகலாம். (ஆசார்யனைப் பற்றுகை அவன் காலைப் பிடித்துக் காரியங் கொள்ளுமோபாதி) - ஆனால் அந்தச் செல்வந்தனுடைய கால்களைப் பிடித்துக் கொண்டு தனது விருப்பத்தைக் கூறி விண்ணப்பித்தால், அந்தப் பணக்காரன் மிகுந்த கருணை உள்ளவனாக மாறி, அந்தக் காரியத்தைச் செய்து கொடுக்காமல் இருக்கமாட்டான்; ஆக அந்தச் செயல் நிச்சயமாக நிறைவேறும் என்றாகிறது. ஆக, ஆசார்யனைப் பற்றுதல் என்பது ஸர்வேச்வரனுடைய திருவடிகளைப் பற்றுதல் போன்றதால், அடியவனாகிய இவன் விருப்பம் நிச்சயம் நிறைவேறும் என்று கருத்து.

428. ஆசார்யன் இருவர்க்கும் உபகாரகன்.

**அவதாரிகை** – ஆக, ப்ராப்ய நிர்ணயத்தைப் பண்ணி, (இதுக்கு ஸத்ருசமாக வேணுமிறே ப்ராபகம்) என்றவித்தாலே, ஆசார்ய கைங்கர்யமாகிற சரமப்ராப்யத்துக்கு ஆசார்யனே ஸத்ருசோபாய மென்னுமத்தை ப்ரதிபாதித்து, அப்படியன்றிக்கே ஈச்வரனை யுபாயமாகக் கொள்ளுமளவில் வரும் விரோதங் காட்டி, ஆசார்யனுக்கு ப்ராப்யத்வ மீச்வரனோ டந்வயத்தாலேயாமோபாதி ப்ராபகத்வமும் ததநந்யத்வ நிபந்தந மென்னுமத்தையும் ஈச்வரனைப் பற்றுதல் இவனைப் பற்றுமதுக்குள்ள வேற்றத்தையுமருளிச் செய்தார் கீழ்; இனிமேல், பல ஹேதுக்களாலும் ஆசார்ய வைபவத்தை ப்ரகாசிப்பிக்கிறார், இவ்விஷயத்தை யுபாயமாகப் பற்றுமவர்களுக்கு ருசிவிச்வாஸங்கள் விளைகைக் குறுப்பாக. அதில் ப்ரதமத்திலே, ஈச்வர சேதநர்களிருவர்க்குமிவ னுபகாரக னானமையை யருளிச்செய்கிறார் (ஆசார்யன்) என்று தொடங்கி.

**விளக்கம் –** ஆக, சூர்ணை 425ல், "இதுக்கு ஸத்ருசமாக வேணுமிறே ப்ராபகம் " என்பதால், அடையப்பட உள்ள பேறு இன்னது என்று நிர்ணயம் செய்து, அதற்கான மார்க்கம் இவ்விதம் பொருத்தமாக இருத்தல்வேண்டும் என்று கூறியதால், ஆசார்ய கைங்கர்யம் என்ற பேறு கிட்ட ஆசார்யனே உபாயம் என்று விவரித்தார். இவ்விதம் கொள்ளாமல் ஈச்வரனை உபாயமாகக் கொண்டால் உண்டாகவல்ல முரண்பாட்டினையும் உரைத்தார். மேலும் ஆசார்யன் பேறாக உள்ள நிலை என்பது ஈச்வரனுடன் ஆசார்யனுக்கு உள்ள சம்பந்தம் காரணமாகவே என்பது போன்றே, ஆசார்யன் உபாயமாக உள்ள நிலை என்பது அவர் ஈச்வரனோடு ஒன்றாக உள்ளதால் ஆகும் என்பதையும் கூறினார். மேலும் ஈச்வரனைப் பற்றுதலைக் காட்டிலும் ஆசார்யனைப் பற்றுவதால் ஏற்படும் ஏற்றத்தையும் இதுவரை அருளிச்செய்தார். இனி, இந்த ஆசார்ய விஷயத்தைப் பற்றுபவர்களுக்கு அதில் ருசியும், விச்வாஸமும் ஏற்படுவதற்காக, பல காரணங்கள் மூலம் ஆசார்யனின் வைபவத்தை உரைக்க உள்ளார். முதலில் ஸர்வேச்வரன் மற்றும் சேதனன் ஆகிய இருவருக்கும் ஆசார்யன் செய்யும் உதவியை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, இப்படி யுபாயமாகக் கீழ்ச்சொல்லப்பட்ட வாசார்யன், சேஷிசேஷ பூதரான வீச்வர சேதந ரிருவர்க்கும் அபிமத வஸ்துக்களைக் கொடுத்த உபாகாரக னென்கை.

**விளக்கம் -** இவ்விதம் உபாயமாக உரைக்கப்பட்ட ஆசார்யன், அனைவருக்கும் எஜமானனாகிய ஸர்வேச்வரன் மற்றும் அடிமையான ஜீவாத்மா ஆகிய இருவருக்கும் வேண்டியதை அளித்து உபகாரங்கள் செய்கிறார் என்று கருத்து.

429. ஈச்வரனுக்கு சேஷவஸ்துவை யுபகரித்தான்; சேதநனுக்கு சேஷியை யுபகரித்தான்.

**அவதாரிகை –** இரண்டுதலைக்கு மிவனுபகரித்தவை யெவை யென்ன வருளிச்செய்கிறார் (ஈச்வரனுக்கு) என்று தொடங்கி.

**விளக்கம் -** ஸர்வேச்வரன் மற்றும் ஜீவாத்மா ஆகிய இருவருக்கும் ஆசார்யன் எவ்விதம் உபகாரம் செய்தார் அல்லது உதவி செய்யும் விதத்தில் அளித்தது என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** அதாவது மேன்மேலும் ஸ்ருஷ்ட் யவதாராதிகளைப் பண்ணி வசீகரிக்கப் பார்த்த விடத்திலும் ஓராத்மவஸ்துவு மெட்டப்படாமையாலே இழவாளனா யிருக்கிற வீச்வரனுக்கு, சேஷமான வாத்மவஸ்துவை, அஜ்ஞாத ஜ்ஞாபநமுகேந திருத்தி இஷ்ட விநியோகார்ஹமாம்படி கைப்படுத்தினான்; பகவத் ஜ்ஞாநாபாவத்தாலே அநாதிகால மஸத்கல்பனாய்க் கிடந்த சேதநனுக்கு, பகவத் ஸம்பந்தத்தை யறிவித்து சேஷியான வவனைக் காட்டிக்கொடுத்தா னென்கை. இத்தால், ஆசார்யனுடைய சேதநேச்வரர்க ளிருவர்க்கு முபகாரகனாகையாகிற வைபவம் சொல்லப்பட்டது.

**விளக்கம் -** மேன்மேலும் ஸ்ருஷ்டிகள் செய்தும், அவதாரங்கள் பல எடுத்தும் வசீகரம் செய்ய முனைந்தாலும், ஒரு ஜீவாத்மாவும் தன்னை வந்து சேராமல் இழந்து நிற்கும் ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ள ஜீவாத்மாவை, அந்த ஜீவாத்மாவுக்கு தெரியாதவற்றை உணர்த்தி, ஸர்வேச்வரனுடைய விருப்பத்தின்படி ஆசார்யன் ஜீவாத்மாவை ஸர்வேச்வரனுக்கு வசப்படுத்துகிறார். ஸர்வேச்வரனை அறியவல்ல ஞானம் மறைக்கப்பட்டு எல்லையற்ற காலம் இல்லாத ஒரு பொருள் போன்று கிடந்த ஜீவாத்மாவுக்கு, ஸர்வேச்வரனுடன் அவனுக்கு உள்ள ஸம்பந்தத்தை உணர்த்தி, அடிமையான அவனுக்கு எஜமானனாகிய ஸர்வேச்வரனைக் காண்பித்துக் கொடுக்கிறார். இதன் மூலம் ஸர்வேச்வரன், ஜீவாத்மா ஆகிய இருவருக்கும் ஆசார்யன் உதவி செய்கிறார் என்ற பெருமை உணர்த்தப்பட்டது.

430. ஈச்வரன்தானும் ஆசார்யத்வத்தை ஆசைப்பட்டிருக்கும்.

**அவதாரிகை -** இன்னமொரு ப்ரகாரத்தாலே ஆசார்ய வைபவத்தை ப்ரகாசிப்பிக்கிறார் (ஈச்வரன்றானும்) என்று தொடங்கி.

**விளக்கம் –** மேலும் ஒரு விதத்திலும் ஆசார்யனுடைய மேன்மையை வெளிப்படுத்துகிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, இதுக்கிட்டுப் பிறவாத வீச்வரன்றானும் இவ்வாசார்யத்வத்தி னேற்றத்தைப்பற்ற விதில் மிகவும் ச்ரத்தை பண்ணி யிருக்கு மென்கை.

**விளக்கம்** - ஆசார்யனாக இருக்கும் தன்மையைத் தனது இயல்பாகக் கொள்ளாத ஸர்வேச்வரன், ஆசார்யனாக இருக்கின்ற தன்மையின் ஏற்றத்தைக் கண்டு, தானும் அதில் ஆசையுடன் இருப்பான் என்று கருத்து.

431. ஆகையிறே குருபரம்பரையிலே அந்வயித்ததும், ஸ்ரீகீதையு மபயப்ரதாநமு மருளிச்செய்ததும்.

**அவதாரிகை** - அதெங்கே கண்டதென்னு மபேக்ஷையிலே, அத்தை மூதலிக்கிறார் (ஆகையிறே) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் ஸர்வேச்வரன் உள்ளதை எங்கே காணலாம் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஆசார்யத்வத்தை யாசைப்பட்டிருக்கையாலேயிறே, "ஸதாசார்ய வம்சோ ஜ்ஞேய:, ஆசார்யாணமஸாவஸா விதி ஆபகவத்த:" என்னும்படி குரு பரம்பரையிலே த்வயோபதேஷ்ட்ருத்வே நாந்வயித்ததும்; ஆசார்ய க்ருத்யத்தை யேறிட்டுக் கொண்டு அர்ஜுநனைக் குறித்து, தத்வ விவேகாதி சரமோபாய பர்யந்தார்த்த ப்ரதிபாதிகையான ஸ்ரீகீதை யருளிச்செய்ததும்; ஸ்ரீவிபீஷணாழ்வான் நிமித்தமாக, "ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதிச யாசதே, அபயம் ஸர்வபூதேப்யோததாம் யேதத் வ்ரதம் மம" என்று அபயப்ரதாந மருளிச்செய்தது மென்கை. இத்தால், ஈச்வரனு மாசைப்படும்படி யன்றோ ஆசார்யத்வத்தின் பெருமை யென்று ஆசார்ய வைபவம் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** - ஆசார்யனாக உள்ள நிலையை ஸர்வேச்வரன் ஆசைப்பட்டதால் அல்லவோ, ஸதாசார்ய வம்சோ ஜ்ஞேய:, ஆசார்யாணமஸாவஸா விதி ஆபகவத்த: - ஆசார்யனுடைய பரம்பரையை அறியவேண்டும், ஆசார்ய பரம்பரையில் உள்ள ஒவ்வொருவரையும் ஸர்வேச்வரன் முடிய அறிதல் வேண்டும் - என்று கூறுவதற்கு ஏற்ப, ஆசார்யபரம்பரையில் ஸர்வேச்வரன் பெரியபிராட்டிக்கு த்வயத்தை உபதேசிக்கும் ஆசார்யனாக வந்து நின்றான்? அதனால் அல்லவோ ஆசார்யனின் செயலைக் கைக்கொண்டவனாக, அர்ஜுனனை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு, தத்வ விவேகம் தொடக்கமாக, "தானே

இறுதி உபாயம்" என்பது வரையிலான உபதேசங்களை உள்ளடக்கிய ஸ்ரீமத்பகவத்கீதையை வெளிப்படுத்தினான்? மேலும் விபீஷணனை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு, இராமாயணம் யுத்தகாண்டம் (18-35) – ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதிச யாசதே, அபயம் ஸர்வபூதேப்யோததாம் யேதத் வ்ரதம் மம - என்னை ஒருமுறை சரணம் புகுந்தவனுக்கும், "உனக்கு நான் அடிமை" என்று என்னிடம் கூறுபவனுக்கும் அனைத்து உயிர்கள் மூலமாக உண்டாகவல்ல அச்சத்தை நீக்கி, அச்சம் இன்மையை அளிக்கிறேன்; இது எனது விரதம் – என்பதற்கு ஏற்ப உள்ளதான அபயப்ரதானம் அருளிச்செய்தான். இவை மூலம் ஸர்வேச்வரனும் ஆசைப்படும்படியாக அல்லவோ ஆசார்யனுடைய மேன்மை உள்ளது என்ற கருத்து உணர்த்தப்பட்டு, ஆசார்ய வைபவம் கூறப்படுகிறது.

432. ஆசார்யனுக்கு ஸத்ருச ப்ரத்யுபகாரம் பண்ணாலாவது விபூதி சதுஷ்டயமும் ஈச்வர த்வயமு முண்டாகில்.

**அவதாரிகை** - இன்னமு மொரு வழியாலே ஆசார்ய வைபவத்தை தர்சிப்பிக்கிறார் (ஆசார்யனுக்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** - மேலும் ஒருவிதத்திலும் ஆசார்யனுடைய மேன்மையை உணர்த்துகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, உபயவிபூதியையும் விபூதிமானான வீச்வரனியும் தானிட்டது வழக்காம்படி பண்ணிக்கொடுத்த வாசார்யன் பண்ணின உபகாரத்துக்கு ஸத்ருசமாக ப்ரத்யபகாரம் பண்ணலாவது, இப்படியே இன்னமுமிரண்டு விபூதியும் விபூதிமானாயிருப்பானோ ரீச்வரனும் வேறோ யுண்டாகி லென்கை. "யோதத்யாத் பகவத் ஜ்ஞாநம் குர்யாத் தர்மோபஸேவநம், க்ருத்ஸ்நாம்வா ப்ருதிவீம் தத்யாந் ந தத்துல்யம் கதஞ்சந" என்னா நின்றதிறே. இத்தால், ஆசார்யனுடைய ப்ரத்யுபகா ராவகாச ரஹித மஹோபகார கர்த்ருத்வமாகிற வைபவம் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** - நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டையும், இந்த இரண்டு விபூதிக்கும் சொந்தக்காரனாகிய ஸர்வேச்வரனையும் ஜீவாத்மாவுடைய விருப்பத்திற்கு ஏற்ப நடக்கும்படி ஆசார்யன் உதவி செய்கிறார். இத்தகைய உதவிக்கு ஏற்ற கைம்மாறு

செய்யவேண்டும் என்றால், இது போன்று மேலும் இரண்டு விபூதிகளும், இந்த இரண்டு விபூதிகளையும் உடைய மற்றொரு ஸர்வேச்வரனும் இருந்தால் மட்டுமே இயலும். யோதத்யாத் பகவத் ஜ்ஞாநம் குர்யாத் தர்மோபஸேவநம், க்ருத்ஸ்நாம்வா ப்ருதிவீம் தத்யாந் ந தத்துல்யம் கதஞ்சந - ஸர்வேச்வரன் குறித்த ஞானம் மற்றும் தர்மம் ஆகியவற்றைக் குறித்து எந்த ஆசார்யன் உபதேசம் செய்தாரோ அந்த ஆசார்யனுக்குக் கைம்மாறாக இந்த உலகம் முழுவதையும் அளித்து பணிவிடை செய்யவேண்டும். அவ்விதம் செய்தாலும் தகுந்த கைம்மாறு செய்ததாகாது - என்றது காண்க. இதன் மூலம் கைம்மாறு செய்ய இயலாத பேருதவி செய்த ஆசார்யனுடைய பெருமை மேலும் உணர்த்தப்பட்டது.

433. ஈச்வர ஸம்பந்தம் பந்த மோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாயிருக்கும். ஆசார்ய ஸம்பந்தம் மோக்ஷத்துக்கே ஹேதுவாயிருக்கும்.

**அவதாரிகை** - இன்னமுமொரு முகத்தாலே ஆசார்ய வைபவத்தை அருளிச்செய்கிறார் (ஈச்வர ஸம்பந்தம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - மேலும் ஒருவிதத்தாலும் ஆசார்யனுடைய வைபவத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - இவ்விடத்தில், (ஈச்வர ஸம்பந்தம்) என்கிறது, (ஈச்வரனைப் பற்றுகை) என்று கீழ்ச்சொன்ன ததாச்ரயணரூப ஸம்பந்தத்தை; அது, (பந்த மோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாகையாவது), கர்மாநுகுணமாக ஸம்ஸரிப்பிக்கவும் காருண்யாநுகுணமாக முக்தனாக்கவும் வல்ல நிரங்குச ஸ்வதந்த்ரனோ டுண்டான ஸம்பந்த மாகையாலே, உபய ஸாதாரணமா யிருக்கை. ஆசார்ய ஸம்பந்தமாகிறது, (ஆசார்யனைப் பற்றுகை) என்று கிழ்ச் சொன்ன ததாச்ரயணாரூப ஸம்பந்தம்; அது, (மோக்ஷத்துக்கே ஹேதுவாகையாவது), கர்மாநுகுணமாக ஸம்ஸரிக்கவும்விடும் ஸ்வதந்த்ர னன்றிக்கே ஸர்வ ப்ரகாரத்தாலு மிவனை யுஜ்ஜீவிப்பித்தே விடும் நிரதிசய க்ருபாவானோட்டை ஸம்பந்த மாகையாலே, ஸம்ஸார மோக்ஷங்களுக்குப் பொதுவன்றிக்கே ஸம்ஸார விமோசநைக ஹேதுவா யிருக்கை. இத்தால் மோக்ஷைக ஹேதுத்வ நிபந்தநமான வைபவம் சொல்லப்பட்டது.

**விளக்கம்** - சூர்ணையில் உள்ள "ஈச்வர ஸம்பந்தம்" என்பது சூர்ணை 427ல் கூறப்பட்ட "ஈச்வரனைப் பற்றுகை" என்பதான ஸர்வேச்வரனை அண்டி நிற்பதாகிய தொடர்பையே ஆகும். அந்தத் தொடர்பு, "பந்த மோக்ஷங்கள் இரண்டுக்கும் பொதுவாக இருக்கும்" என்றது - நம்முடைய கர்மங்களுக்கு ஏற்றபடி ஸம்ஸாரத்தில் மீண்டும் ஆழ்த்தவும், தனது க்ருபையின் காரணமக மோக்ஷம் அளிக்கவும் வல்ல, தடையற்ற சுதந்திரம் நிறைந்த ஸர்வேச்வரனுடனான தொடர்பு என்பதால், இந்த இரண்டுக்கும் பொதுவாக இருக்கும் என்று கருத்து. "ஆசார்ய ஸம்பந்தம்" என்பது சூர்ணை 427ல் கூறப்பட்ட "ஆசார்ய ஸம்பந்தம்" என்ற ஆசார்யனை அண்டி நிற்பதான தொடர்பையே ஆகும். அது, "மோக்ஷத்துக்கே ஹேதுவாக இருக்கும்" என்றது – அந்தத் தொடர்பு கர்மங்களுக்கு விளைவாக மீண்டும் இந்த ஸம்ஸாரத்தில் உழலவிடுதல் என்பதைச் செய்யாமல், அனைத்துவிதத்திலும் ஜீவனைக் கரையேற்றுவதான எல்லையற்ற க்ருபை உள்ள ஒருவருடைய ஸம்பந்தம் என்பதால், பிறப்பு மற்றும் மோக்ஷம் ஆகிய இரண்டுக்கும் பொதுவாக இல்லாமல், ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை அளிக்க மட்டுமே காரணமாக உள்ளதாகும். இதன் மூலம் ஆசார்யன் மோக்ஷத்திற்கு மட்டுமே காரணமாக உள்ள வைபவம் கூறினார்.

434. பகவல்லாபம் ஆசார்யனாலே.

**அவதாரிகை** – உத்தாரகத்வத்தி லாசார்யனுடைய ஆதிக்யத்தை அருளிச்செய்தார் கீழ்; உபகாரகத்வத்தி லீச்வரனுடைய வாதிக்யத்தை யருளிச்செய்கைக்காக அடிகொண் டெழுந்திருக்கிறார் மேல் (பகவல் லாபம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - மோக்ஷத்திற்கு கொண்டு போகும் தன்மையில் ஆசார்யனுடைய வைபவத்தைக் கடந்த சூர்ணையில் அருளிச்செய்தார். உபகாரம் செய்வதில் ஸர்வேச்வரனுடைய முதன்மையை அருளிச் செய்யும் பொருட்டு இந்தச் சூர்ணையில் தொடங்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நிருபாதிக சேஷியாய் நிரங்குச ஸ்வதந்த்ரனா யிருக்கும் பகவானை லபிக்கை, தத்ஸம்ருத்த்யேக ப்ரயோஜநனாய்க் கொண்டு மங்களாசாஸநத்துக்

காளாக வேணுமென்று தன்னை யங்கீகரித்து தத்வ்யாமோஹ விஷயமாக்கின ஸ்வாசார்யனாலே யென்கை.

**விளக்கம்** - தனக்கு இயல்பான ஸ்வாமியாக உள்ளவனும், எல்லையற்ற சுதந்திரம் உள்ளவனுமாகிய ஸர்வேச்வரனை ஜீவாத்மா அடைதல் எப்படி என்றால் - ஸர்வேச்வரனுடைய நினைவு ஒன்றையே தனக்குக் கிட்டும் பலனாகக் கொண்டு, அவனையே திருப்பல்லாண்டு பாடியபடி இருக்கும் நிலைக்குத் தன்னை ஆளாக்க வேண்டும் என்று எண்ணி, தன்னை ஏற்றுக்கொண்டு, அன்பிற்கு இலக்காக்கிய ஆசார்யனால் ஆகும் என்று கருத்து.

435. ஆசார்யலாபம் பகவானாலே.

**அவதாரிகை** - ஏவம்பூதனான வாசார்யன்றன்னை லபிக்கைக்கு ஹேது வேதென்னு மாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (ஆசார்ய லாபம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படிப்பட்ட ஆசார்யனை அடைவதற்குக் காரணம் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பகவல்லாப ஹேதுவாய் பரமப்ராப்யபூதனான வாசார்யனை லபிக்கை, “ஈச்வரஸ்யச ஸௌஹார்த்தம்” இத்யாதிப்படியே, நிரூபாதிக ஸுஹ்ருத்தாய் விசேஷ கடாக்ஷப் பற்றாசுகளையும் தானே கல்பித்துக்கொண்டு விசேஷ கடாக்ஷத்தை பண்ணி அத்வேஷத்தைப் பிறப்பித்து ஆபிமுக்யத்தை யுண்டாக்கி ஸாத்விக ஸம்பாஷணத்திலே மூட்டி ஸதாசார்ய ப்ராப்தியைப் பண்ணுவிக்கும் நிர்ஹேதுக க்ருபாவானான பகவானாலே யென்கை.

**விளக்கம்** - ஸர்வேச்வரனை அடைவதற்குக் காரணமாக உள்ளவரும், மிகவும் உயர்ந்த பேறாக உள்ளவரும் ஆகிய ஆசார்யனை அடைதல் என்பது - ஈச்வரஸ்யச ஸௌஹார்த்தம் - ஸர்வேச்வரனுடைய உயர்ந்த திருவுள்ளம் - என்பதற்கு ஏற்ப, எந்தவிதமான காரணமும் இல்லாமல் நன்மைகள் செய்பவனாயும், ஜீவன் அறியாமல் செய்த புண்ணியங்களையும் அங்கீகரித்து அவனுக்கு விசேஷமான கடாக்ஷங்கள்

செய்பவனாயும், தன்னிடம் அவன் விரோதம் பாராட்டாமல் எப்போதும் தன்னிடம் அவன் ஈடுபாடு கொண்டிருக்கும்படிச் செய்பவனாயும், ஜீவாத்மா நல்லவர்களுடன் எப்போதும் கூடியிருக்கும்படிச் செய்பவனாயும், நல்ல ஆசார்யனை அடையும்படிச் செய்பவனாயும் உள்ள, காரணம் இல்லாமல் கருணை காண்பிக்கும் ஸர்வேச்வரனால் ஆகும் என்று கருத்து.

436. உபகார்ய வஸ்து கௌரவத்தாலே ஆசார்யனிற்காட்டில் மிகவு முபகாரகன் ஈச்வரன்.

**அவதாரிகை** - ஆனால் இருவரு முபகாரத்தில் ஸமரோவென்ன அருளிச்செய்கிறார் மேல் (உபகார்ய வஸ்து) என்று தொடங்கி.

**விளக்கம்** - அப்படியென்றால் உதவி செய்வதில் ஆசார்யனும் ஸர்வேச்வரனும் ஒத்தவர்களா என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, உபயருமுபகரித்த வஸ்துக்களைச் சீர்தூக்கிப் பார்த்தால் ஆசார்யோபகார்ய வஸ்துவான பந்தமோக்ஷாபய ஹேதுவாய் ப்ரதம பர்வமுமாயிருக்கிற பகவத் விஷயத்திற் காட்டில் பகவதுபகார்ய வஸ்துவான மோக்ஷைக ஹேதுவாய் சரமபர்வமுமா யிருக்கிற ஆசார்ய விஷயத்தினுடைய கௌரவத்தாலே, ஈச்வரனை யுபகரித்த ஆசார்யனிற் காட்டில் ஆசார்யனை யுபகரித்த ஈச்வரன் மஹோபகாரக னென்கை.

**விளக்கம்** - ஸர்வேச்வரன், ஆசார்யன் ஆகிய இருவரும் உதவி செய்த வஸ்துக்களான முறையே ஆசார்யன், ஸர்வேச்வரன் என்பவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, ஆசார்யனால் உதவி செய்யப்படுவபவனும், ஸம்ஸாரம் மற்றும் மோக்ஷம் ஆகியவற்றுக்குக் காரணமாக உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரனைக் காட்டிலும் ஸர்வேச்வரனால் உபகரிக்கப்படுபவரும், ஸம்ஸாரம் என்பதில் இருந்து விடுதலை என்பதான மோக்ஷத்திற்கு மட்டுமே காரணமாக உள்ளவரும் ஆகிய ஆசார்யனுடைய பெருமையால், ஸர்வேச்வரனை அளித்த ஆசார்யனைக் காட்டிலும் ஆசார்யனை அளித்த ஸர்வேச்வரனே மிகப் பெரிய உதவி செய்தவன் என்று கருத்து.

437. ஆசார்ய ஸம்பந்தம் குலையாதே கிடந்தால் ஜ்ஞாந பக்தி வைராக்யங்க ளுண்டாக்கிக் கொள்ளலாம்; ஆசார்ய ஸம்பந்தம் குலைந்தால் அவை யுண்டானாலும் ப்ரயோஜன மில்லை.

**அவதாரிகை** – "அசிந்த்யாத் புதாக்லிஷ்ட ஜ்ஞாந வைராக்ய ராசயே, அகாத பகவத் பக்தி ஸிந்தவே" என்கிறபடியே ஆசார்யன்றனக் கேற்றம் ஜ்ஞாந வைராக்ய பக்திகளாலேயிறே; அந்த ஜ்ஞாந வைராக்ய பக்திக ளுண்டானவ னிந்த ஆசார்ய ஸம்பந்தத்தை நெகிழ நின்றாகிலும் அவை பகவல் லாபத்துக் குடலாமோ வென்ன வருளிச்செய்கிறார் மேல் (ஆசார்ய ஸம்பந்தங் குலையாதே கிடந்தால்) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஸ்தோத்ரரத்னத்தில் (1) – அசிந்த்யாத் புதாக்லிஷ்ட ஜ்ஞாந வைராக்ய ராசயே, அகாத பகவத் பக்தி ஸிந்தவே – இப்படிப்பட்டது என்று எண்ண இயலாததும், வியக்க வைப்பதும், ஸர்வேச்வரனுடைய க்ருபை காரணமாக எளிதாகக் கிட்டவல்லதும் ஆகிய ஞானம் மற்றும் வைராக்யம் ஆகியவற்றின் கூட்டமாக உள்ளவரும், பகவானை மட்டுமே த்யானிப்பவரும், பகவத் பக்திக்குக் கடல் போன்றவரும் ஆகிய நாதமுனிகளை நான் வணங்குகிறேன் – என்பதன் மூலம் ஆசார்யனுக்கு மேன்மை என்பது ஞானம், வைராக்யம், பக்தி என்பதால் ஏற்படுகிறது என்று அறியலாம். அப்படிப்பட்ட ஞானம், வைராக்யம், பக்தி போன்றவை நிறைந்த ஒருவன், ஆசார்ய ஸம்பந்தத்தில் சிறிது குறைவாக நின்றால் கூட அவனால் ஸர்வேச்வரனை அடைய இயலுமோ என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கீழ்ச்சொன்னபடியே யுத்தாரகனுமாய் உபகாரகனுமா யிருந்துள்ள ஸ்வாசார்யன் "இவனென்னுடையவன்" என்றபிமாநிக்கும்படி அவன் திருவடிகளில் தனக்குண்டான ஸம்பந்தம் ஸ்வ விப்ரதிபத்தியாலே குலையாதபடி அத்தை நோக்கிக் கொண்டு கிடந்தால், ஆத்மாலங்காரங்களான தத்வஜ்ஞாநம் அப்ராப்த விஷய வைராக்யம் ப்ராப்தி விஷயபக்தி யாகிற ஆத்மகுணங்க ளில்லையே யாகிலும், அவ்வாசார்ய ப்ரஸாதாதிகளாலே க்ரமேண உண்டாக்கிக் கொள்ளலாம்; ஸர்வமங்கள ஹேதுவான அந்த ஆசார்ய ஸம்பந்தம் ஸ்வ விப்ரதிபத்தியாலே குலைந்தால், ஜ்ஞாநாதிக ளானவை பூர்வ ஸுக்ருதங்களாலே சிறிதுண்டாய்த்தாகிலும், பகவதங்கீகார ஹேது வாகாமையாலே நிஷ்ப்ரயோஜந மென்கை.

**விளக்கம் -** இதுவரை கூறப்பட்டபடி ஸம்ஸாரத்திலிருந்து மேலே உயர்த்தி விடுபவரும், உதவி செய்பவருமாக உள்ள ஆசார்யன், "இவன் எனது சிஷ்யன்" என்று சொந்தம் கொண்டாடும்படியாக, ஆசார்யனுடைய திருவடிகளில் தனக்கு ஏற்பட்ட ஸம்பந்தம் என்பது, தனக்கு உண்டான மாறுபட்ட எண்ணங்களால் குறையாத விதத்தில் பார்த்துக் கொண்டால் போதுமானது; அவனுக்கு ஆத்ம ஆபரணங்களாக உள்ள உண்மை அறிவு, சிற்றின்பத்தில் வெறுப்பு, ஸர்வேச்வரனிடம் பக்தி போன்றவை இல்லையென்றாலும், அந்த ஆசார்ய ஸம்பந்தம் காரணமாக அவற்றை அவன் காலப்போக்கில் ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால், அனைத்து மங்களங்களையும் அளிக்கவல்ல காரணமான ஆசார்ய ஸம்பந்தம் என்பது தனது மாறுபட்ட எண்ணங்களால் குறைந்தால், ஞானம் போன்றவை இவன் செய்த புண்ணியங்களால் ஏற்பட்டாலும், அவை பகவான் இவனை ஏற்பதற்குக் காரணமாக ஆகமாட்டா என்பதால் பலனற்றவையே ஆகும்.

438. தாலி கிடந்தால் பூஷணங்கள் பண்ணிப் பூணலாம்; தாலி போனால் பூஷணங்களெல்லாம் அவத்யத்தை விளைக்கும்.

**அவதாரிகை -** ப்ரயோஜந மில்லாமையேயன்று, அவத்யகரமுமென்கிறார் (தாலி கிடந்தால்) என்று தொடங்கி.

**விளக்கம் -** கடந்த சூர்ணையில் கூறியது போன்று பயனற்றவை மட்டுமே அல்லாமல், அவை தாழ்வினையும் உண்டாக்கும் என்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, பதிவ்ரதையான ஸ்த்ரீக்கு பதிஸம்பந்த ஸூசகமான தாலியொன்றும் போகாமல் கிடந்தால், பூஷணங்க ளில்லையே யாகிலும் முதலுண்டானபோது பண்ணிப் பூண்டு கொள்ளலா யிருக்கும்; இத்தனை பூஷணமுண்டே என்று நினைத்துத் தாலியை வாங்கிப் பொகட்டால், விதவாலங்காரகல்ப மாகையாலே பூண்ட பூஷணங்களெல்லாம் அவத்யாவஹங்களா யிருக்கு மென்கை. இத்தால், ஆத்மபூஷணங்களான ஜ்ஞாந வைராக்ய பக்திக ளில்லையே யாகிலும், ஆசார்ய ஸம்பந்தமாத்ரம் குலையாமல் கிடந்தால், அவன ப்ரஸாதத்தாலே அவை க்ரமேண உண்டாக்கிக் கொள்ளலாம்; ஆசார்ய ஸம்பந்த மித்தனையுங் குலைந்தால், ஆத்ம குணங்களான ஜ்ஞாந பக்தி வைராக்யங்க

ளெல்லா முண்டானாலும் அவை ச்லாக்யதா ஹேதுவன்றிக்கே அவத்யாவஹமாய் விடுமென்றபடி.

**விளக்கம் -** கற்பு நிறைந்த ஒரு பெண்ணுக்கு அவளுடைய கணவனுடன் அவளுக்கு உள்ள ஸம்பந்தத்தை உணர்த்துகிற தாலியானது இருந்தால் போதுமானது; செல்வம் குறைவாக உள்ள காரணத்தால் அவளுக்கு வேறு ஆபரணங்கள் இல்லையென்றாலும், ஏதோ ஒரு காலத்தில் செல்வம் கிட்டும்போது மற்ற ஆபரணங்களைச் செய்து அவள் அணிந்து கொள்ளமுடியும். ஆனால் "இத்தனை ஆபரணங்கள் உள்ளனவே" என்று எண்ணியவளாக ஒரு பெண் தனது தாலியைக் கழற்றினால், அவளுடைய அந்தச் செயல் விதவைக்குச் செய்யும் அலங்காரம் போன்று, தாலி தவிர அவள் அணிந்துள்ள ஆபரணங்கள் அனைத்தும் அவளுக்குத் தாழ்வை மட்டுமே உண்டாக்கும். இதே போன்று, ஆத்மாவுக்கு அணிகலன்களாக உள்ள ஞானம், வைராக்யம், பக்தி போன்றவை ஒருவனுக்கு இல்லை என்றாலும், ஆசார்ய ஸம்பந்தம் நீங்காமல் இருந்தால், அவருடைய க்ருபை காரணமாக அவனுக்கு அவை சரியான காலத்தில் வந்து சேர்ந்துவிடும். மாறாக ஒருவனுக்கு ஞானம், பக்தி, வைராக்யம் ஆகியவை இருந்து, ஆசார்ய ஸம்பந்தம் நீங்கினால், அவை சிறப்புக்குக் காரணம் ஆகாமல் தாழ்மைக்குக் காரணமாகிவிடும் என்று கருத்து.

439. தாமரையை அலர்த்தக்கடவ ஆதித்யன் தானே நீரைப் பிரித்தால் அத்தை யுலர்த்தமாபோலே, ஸ்வரூப விகாஸத்தைப் பண்ணு மீச்வரன் தானே, ஆசார்ய ஸம்பந்தம் குலைந்தால் அத்தை வாடப்பண்ணும்.

**அவதாரிகை -** ஆசார்ய ஸம்பந்தம் கிடந்தாலும் ஸ்வரூப விகாஸக னீச்வரனன்றோ, அது குலைந்தாகிலு மித்தனை ஆத்மகுணமுடையவனுக்கு அவன் ஸ்வரூப விகாஸத்தைப் பண்ணானோ என்கிற சங்கையிலே அருளிச்செய்கிறார் (தாமரையை) என்று தொடங்கி.

**விளக்கம் –** ஒருவனுக்கு ஆசார்ய ஸம்பந்தம் உள்ளபோதிலும், அவனுடைய ஆத்ம ஸ்வரூபத்தை மலரச் செய்வது ஸர்வேச்வரன் அல்லவோ? அந்த ஆத்மஸம்பந்தம் நீங்கினாலும், ஆத்மகுணங்கள் உள்ள ஒருவனுக்கு ஸர்வேச்வரன் ஆத்மஸ்வரூபத்தை மலரும்படிச் செய்யமாட்டானோ? இந்தக் கேள்விகளுக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஜலஜமென்னும்படி ஜலத்திலே பிறந்து ஜலைக தாரகமாயிருக்கும் தாமரைக்கு, "செங்கமல மந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லாலலராவால்" என்னும்படி நியமேந விகாஸகனாய்ப் போரு மாதித்யன்றானே, ஸ்வதாரகமான ஜலத்தை விச்சேஷித்தால் அந்த தாமரையை விகஸிப்பியாதமாத்ர மன்றிக்கே சோஷிப்பிக்குமாப்போலே, ஆசார்யாந்வயத்தாலே ஸத்தை பெற்று ஸ்வஸத்தா தாரகமான தத்ஸம்பந்தம் குலையாதே நிற்குமளவில், இவனுடைய ஸ்வரூபத்தை ஜ்ஞாந விகாஸமுகேந "உள்ள உலகளவும் யானு முளனாவன்" என்னும்படி விகஸிப்பிக்கு மீச்வரன்றானே, ஸ்வஸத்தா தாரகமான ஆசார்ய ஸம்பந்தத்தை ஸ்வவிப்ரதிபத்தியாலே இவன் குலைத்துக்கொண்ட காலத்தில், தான் விகஸிப்பிக்கக் கடவ அந்த ஸ்வரூபத்தை விகஸிப்பியாத மாத்ரமன்றிக்கே, நாளுக்கு நாளும் நஷ்ட ப்ரஜ்ஞமாய் ஸங்கோசித்துப் போம்படி பண்ணுமென்கை. "நாராயணோபி விக்ருதிம் யாதி குரோ: ப்ரச்யுதஸ்ய துர்ப்புத்தே: கமலம் ஜலாதபேதம் சோஷயதி ரவிர்ந தோஷயதி" என்னக்கடவதிறே.

**விளக்கம்** - ஜலஜம் என்ற பெயர் பொருந்தும்விதமாக (ஜலஜம் = தண்ணீரில் பிறந்த பொருள்), நீரில் பிறந்து, நீரையே தனக்கு ஆதாரமாகக் கொண்டுள்ள தாமரைக்கு, பெருமாள் திருமொழி (5-6) – செங்கமல மந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லாலலராவால் - என்று கூறுவதற்கு ஏற்ப, எப்போதும் தவறாமல் மலர்ச்சியை அளிப்பவனாகிய சூரியனே அந்தத் தாமரையானது தன்னைக் காப்பாற்றியபடி உள்ள தண்ணீரை விட்டுப் பிரிந்தால், தாமரையை மலரச் செய்யாதது மட்டும் அல்லாமல், வாடும்படியும் செய்துவிடுகிறான். இதே போன்று, ஆசார்யனுடைய ஸம்பந்தம் காரணமாக ஒரு பொருளாகி, தான் இவ்விதம் ஒரு பொருளாக இருப்பதற்குக் காரணமான ஆசார்ய ஸம்பந்தத்தை ஒருவன் இழக்காமல் இருந்தால், அவனுடைய ஸ்வரூபத்தை ஞான வளர்ச்சி மூலமாக பெரிய திருவந்தாதி (76) – உள்ள உலகளவும் யானு முளனாவன் - என்பதற்கு ஏற்றபடி ஆத்மஸ்வரூபத்தை மலரும்படிச் செய்யும் ஸர்வேச்வரன் செய்வது என்னவென்றால் - ஜீவாத்மா தனது இருப்புக்குக் காரணமாக உள்ள ஆசார்ய ஸம்பந்தத்தை தன்னுடைய வேறுபட்ட எண்ணங்கள் காரணமாக குலைத்துக் கொள்ளும்போது, அந்த ஆத்மஸ்வரூபத்தை மலர்த்த வேண்டிய ஸர்வேச்வரனாகிய தான், மலரச் செய்யாமல் விடுவது மட்டும் அல்லாமல், மேன்மேலும் அறிவையும் குறையும்படிச் செய்கிறான் என்று கருத்து. நாராயணோபி விக்ருதிம் யாதி குரோ: ப்ரச்யுதஸ்ய துர்ப்புத்தே: கமலம் ஜலாதபேதம் சோஷயதி ரவிர்ந தோஷயதி - ஆசார்யனை இழந்த அறிவற்ற ஒருவனிடம்

நாராயணனும் மாறுபாட்டை அடைகிறான்; நீரை விட்டு அகன்ற தாமரையை எவ்விதம் சூரியன் வாடச் செய்கிறானோ அது போன்றே ஆகும் – என்றது காண்க.

440. இத்தையொழிய பகவத் ஸம்பந்தம் துர்லபம்.

**அவதாரிகை** - இங்ஙன் சொல்லுகிறதென்? இவ்வாசார்ய ஸம்பந்தம் குலைந்ததாகிலும் "ஒழிக்க வொழியாது" என்கிற பகவத் ஸம்பந்த முஜ்ஜீவநத்துக் குடலாகாதோ வென்ன அருளிச்செய்கிறார் (இத்தை யொழிய) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதம் ஏன் கூறவேண்டும்? ஆசார்ய ஸம்பந்தம் என்பது நீங்கினாலும், திருப்பாவை (28) - ஒழிக்க வொழியாது – என்பதற்கு ஏற்ப உள்ள பகவத் ஸம்பந்தம் என்பது கரையேற்றாதோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அநாதி ஸித்தமா யிருக்கச் செய்தேயும், ஆசார்ய னுணர்த்துவதற்கு முன்பு அஸத்கல்பமாய் அவனுணர்த்தின பின்பு இவனுக்கு கார்யகரமாகக் கடவதா யிருக்குமது இவ்வாசார்ய ஸம்பந்தம் குலைந்தபோது இதடியாக வந்த தானும் குலைந்துபோமாகையாலே, இவ்வாசார்ய ஸம்பந்தத்தை யொழிய பகவத் ஸம்பந்தம் இவனுக்குக் கிடையாதென்கை. ஆகையால் இது போய்த்தாகிலும் அது நமக்கு உஜ்ஜீவநத்துக் குடலென்றிருக்க விரகில்லை யென்று கருத்து.

**விளக்கம்** - பகவத் ஸம்பந்தம் என்பது எல்லையற்ற காலமாக உள்ளது என்றாலும், ஆசார்ய ஸம்பந்தம் இல்லாமல் உபதேசம் இன்றி உள்ளபோது, அந்த பகவத் ஸம்பதம் இல்லை என்றே ஆகிறது. ஆனால் ஆசார்ய உபதேசத்தின் பின்னர் பகவத் ஸம்பந்தம் அவனுடைய கார்யங்களைச் செய்ய உதவுகிறது. இப்படிப்பட்ட பகவத் ஸம்பந்தம் என்பது ஆசார்ய ஸம்பந்தம் நீங்கியவுடன், ஆசார்ய ஸம்பந்தத்தால் வந்த காரணத்தால், தானும் நீங்கிவிடுகிறது. எனவே ஆசார்ய ஸம்பந்தம் இல்லை என்றால் பகவத் ஸம்பந்தமும் கரையேற்ற உதவாது என்று கருத்து.

441. இரண்டு மயையாதோ, நடுவில் பெருங்குடி யென்னென்னில்;

**அவதாரிகை** - இப்படி ஆசார்ய ஸம்பந்தத்தை யொழிய பகவத் ஸம்பந்தம் லபியாமையா லாத்மோஜ்ஜீவநத்துக் கிரண்டும் வேணுமென்னுமத்தை தர்சிப்பித்த அநந்தரம், பாகவத விஷய ஸம்பந்தமு மவ்வோபாதி யிவனுக்கவச்யாபேக்ஷித மென்னுமத்தை தர்சிப்பிக்கைக்காக, தத்விஷய ப்ரச்நத்தை யநுவதிக்கிறார் (இரண்டு மமையாதோ? நடுவிற் பெருங்குடி யென்னென்னில்) என்று.

**விளக்கம்** - இப்படியாக ஆசார்யஸம்பந்தம் இல்லையென்றால் பகவத் ஸம்பந்தமும் கிட்டாமல் போகும் என்பதால், ஆத்மா கரையேற இந்த இரண்டுமே அவசியமாகும் என்று அருளிச்செய்தார். தொடர்ந்து ஆசார்ய ஸம்பந்தம் போன்றே பாகவதர்களுடைய ஸம்பந்தமும் ஜீவாத்மாவுக்கு அவசியம் என்று உணர்த்தும்விதமாக, அதனைக் குறித்து ஒரு வினாவை எழுப்பிக் கொள்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஆத்மோஜ்ஜீவநத்துக்கு பகவத் ஸம்பந்த ஸ்தாபகமான ஆசார்ய ஸம்பந்தமும், தத் ஸ்தாபிதமான பகவத் ஸம்பந்தமுமாகிற உபயமும் போராதோ, ப்ராப்ய மத்யம பர்வோக்ததயா நடுவிற் பெருங்குடிபோலே யிருக்கிற பாகவதர்களோடு “ஸாத்விகைஸ் ஸம்பாஷணம்” என்கிற ஸம்பந்த மத்தைப் பற்றவேண்டுவ தென்கிறதாகி லென்கை.

**விளக்கம்** - ஆத்மா கரையேறுவதற்காக பகவத் ஸம்பந்தத்தை நன்றாக ஏற்படுத்தித் தரவல்ல ஆசார்ய ஸம்பந்தமும், அந்த ஆசார்ய ஸம்பந்தம் மூலம் நிலையாக்கப்பட்ட பகவத் ஸம்பந்தமும் என்ற இரண்டும் மட்டும் போதாதோ? ஜீவாத்மாவுக்கு அடையத்தக்க பயனாக உள்ள கைங்கர்யம் என்பதற்கு நடுவில் உள்ளது பகவத் கைங்கர்யம் என்பதாகும் (சூர்ணை 411). இது பாகவதர்களுக்குச் செய்யப்படும் தொண்டுகள் ஆகும். ஒரு கிராமத்தில் உள்ள முக்கிய தலைவர்கள் போன்று, “ஸாத்விக ஸாதுக்களுடன் உரையாடுதல்” என்பதான வாக்கியத்திற்கு ஏற்ப உள்ள பாகவதர்களுடைய ஸம்பந்தம் இங்கு எதற்காக வேண்டும் என்ற கேள்வியை எழுப்பிக் கொள்கிறார்.

442. கொடியைக் கொள்கொம்பிலே துவக்கும்போது சுள்ளிக்கால் வேண்டுமா போலே, ஆசார்யாந்வயத்துக்கும் இது வேணும்.

**அவதாரிகை –** இப்ப்ரச்சத்துக் குத்தர மருளிச்செய்கிறார் (கொடியை) என்று தொடங்கி.

**விளக்கம் –** கடந்த சூத்திரத்தில் எழுப்பிய கேள்விக்கு இங்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, உபக்நாபேக்ஷமாய் வளருவதொரு கொடியை அதின் பரிணாஹத்துக்கெல்லாம் இடங்கொடுக்கத்தக்க பெரியதொரு உபக்நத்திலே சேர்க்கும்போது, முதலிலே அது தன்னோடே சேர்க்கப் போகாமையாலே தரைப்படாமல் முந்துறதான் இதுக் காச்ரயமாய்க் கொண் டணுகி நின்று தன்னோட்டை யந்வயமுகேந கொள் கொம்பிலே நொழுந்துவிக்கும் சுள்ளிக்கா லபேக்ஷிதமாமாப்போலே, கோல்தேடி யோடுங் கொழுந்துபோலே அபிமுகனான விச்சேதநன் ஆச்ரித ரத:பதியாம லுத்தரிப்பிக்கும் மஹதாச்ரயமான ஆசார்யன் திருவடிகளில் அந்வயிக்கும்போது, முதலிலே ததந்வயம் ஸித்திக்கை அரிதாகையாலே முந்துறத் தாங்க ளாஸந்நராய் நின்று தங்களோடே யிணக்குவித்து அவ்வழியாலே ஆசார்ய விஷயத்திலே சேர்க்கும் பாகவதர்க ளோட்டை ஸம்பந்த மவச்யா பேக்ஷித மென்கை.

**விளக்கம் –** ஒரு கொடியானது வளரும்போது அது படர்வதற்கு இடம் அளிக்கவல்ல ஒரு பந்தலை அமைத்து அதில் அந்தக் கொடியைச் சேர்ப்பார்கள். ஆனால் அந்தப் பந்தலில் கொடியைத் தொடக்கத்திலேயே சேர்க்க இயலாது என்பதால், கொடி முதலில் தரையில் துவண்டு விழாமல் இருப்பதற்காக, முதன்முதலில் அது படர்வதற்கு இடம் கொடுப்பதாகவும், தன்னுடைய தொடர்பு மூலம் அந்தக் கொடியானது தன்னைப் பற்றிக் கொண்டு அந்தப் பந்தலில் ஏற உதவி செய்வதாகவும் உள்ளது எதுவென்றால் அந்தப் பந்தலைத் தாங்கி நிற்கும் சுள்ளிக்கால்கள் (பந்தலின் கால்கள்) ஆகும். இங்கு இந்தச் சுள்ளிக்கால்கள் தேவைப்படுவது போன்று, பாகவத ஸம்பந்தம் அவசியம் என்பதை அடுத்து உரைக்கிறார். இரண்டாம் திருவந்தாதி (27) – கோல் தேடி ஓடும் கொழுந்து போலே - என்பதற்கு ஏற்ப, தன்னை அண்டிய அடியார்களுக்கு எந்தவிதமான தாழ்ச்சியும் வராத விதத்தில் அவர்களைக் கரையேற்றவல்ல கொடிக்கம்பு போன்றுள்ள ஆசார்ய ஸம்பந்தம் என்பதைப் பெற இந்தச் சேதனன் முயல்கிறான். அது கிட்டுவதற்கு அரிதாக

உள்ளதால், முதலில் தங்களோடு சேர்ந்து கொண்டு அதன் மூலம் ஆசார்ய ஸம்பந்தத்தை ஏற்படுத்தவல்ல பாகவத ஸம்பந்தம் என்பது அவசியமாகிறது என்று கருத்து.

**வ்யாக்யானம்** - இப்படி ஆசார்யாந்வயத்துக்கடி பாகவதர்களாகில், (ஆசார்ய லாபம் பகவானாலே) என்பானென் னென்னில்; அதுக்குக் குறையில்லை. பாகவதாந் வயந்தனக்கடி யவனாகையாலே; ஆபிமுக்ய பர்யந்தமாகத்தானே க்ருஷி பண்ணிக் கொண்டு வந்து பின்னை பாகவதர்களோடே யிணக்கி அவ்வழியாலேயிறே யவன்றான் ஆசார்ய விஷயத்திலே சேர்ப்பது; இது இத்தனையும் இவரருளிச் செய்த த்ருஷ்டாந்தத்திலே ஸித்தம். எங்ஙனே யென்னில்; சேதநனை கொடியினுடைய ஸ்தாநேயாகவும், ஆசார்யனை கொள்கொம்பினுடைய ஸ்தாநேயாகவும், பாகவதர்களை சுள்ளிக்காலினுடைய ஸ்தாநோயாகவு மருளிச்செய்கையாலே, கர்ஷகனா யிருப்பா னொருவன் ஸ்வப்ரயோஜநார்த்தமாக முதலிலே வித்தை யிட்டு முளைப்பித்து கொழுந்து சரிக்குமளவும் வளர்த்துக்கொண்டு போந்ததொரு கொடியை, இதுக்கினி ஓர் உபக்நம் வேணுமென்று தானே உபக்நமும் தேடி அதிலே சென்றேறுகைக்கு சுள்ளிக்காலும் நாட்டி இவ்வழியாலே உபக்நத்திலே சேர்க்குமாப்போலே, ஸர்வசேஷியான ஸர்வேச்வரன் ஸ்வப்ரயோஜநார்த்தமாக இச்சேதநனை முதலிலே ஸ்ருஷ்டித்து, "ஈச்வரஸ்ய ச ஸௌஹார்த்தம்" இத்யாதிபடியே க்ரமேணாபிமுக்ய பர்யந்தமாக விளைத்து இவனுக்கோ ராசார்யனையும் இன்னானென்றுதானே திருவுள்ளம் பற்றி, அவனோடே சேர்க்கும் பாகவதர்களோடே முதலந்வயிப்பித்து, அவ்வழியாலே ஆசார்ய விஷயத்திலே அந்வயிப்பிக்கு மென்னுமிடம் தோற்றுகையாலே, கொள்கொம்பிலே யேறவிட்ட கர்ஷகனுக்கே அந்தக் கொடியாலுள்ள ப்ரயோஜநமாமாப்போலே, ஆசார்ய விஷயத்தி லீச்வரன் சேர்த்த சேதநனா லுள்ள ப்ரயோஜநமு மீச்வரனதே யென்னுமிடமும் பலிதம். இனி அசேதநமான கொள்கொம்பு போலன்றியே சேதநோத்தமனான இவ்வாசார்யன் றானும் பரஸம்ருத்தயேக பரனாகையாலே, ஸ்வசேஷியான வீச்வரனுடைய ப்ரயோஜநமே ஸ்வப்ரயோஜநமாக நினைத்திருக்குமிறே.

**விளக்கம்** - இங்கு ஒரு கேள்வி எழலாம். ஆசார்ய ஸம்பந்தம் கிட்டுவது பாகவதர்களால் மட்டுமே என்று உரைத்தால், சூர்ணை 425ல் – ஆசார்ய லாபம் பகவானாலே - என்று எப்படிக் கூறப்பட்டது? இதற்கு விடை அளிக்கிறார் - அது தவறில்லை. பாகவதர்களுடன் சேர்க்கையை ஏற்படுத்துவது பகவானே ஆகிறான் என்பதால் ஆகும். நல்லவர்களுடன்

ஸம்பந்தம் ஏற்படுதல் என்பதை ஸர்வேச்வரன் தானாகவே ஜீவனுக்கு உண்டாக்கி, பின்னர் பாகவதர்களுடன் சேர்த்து வைத்து, அதன் பின்னர் அந்த ஜீவனை ஆசார்யனிடம் சேர்க்கிறான். இந்தக் கருத்து அனைத்தும் மேலே இவர் அருளிச்செய்த பந்தல், சுள்ளிக்கால் என்ற உதாரணத்தில் வெளிப்படை ஆகும். எப்படி? ஜீவனைக் கொடியாகவும், ஆசார்யனைக் கொள்கொம்பாகவும், பாகவதர்களைச் சுள்ளிக் காலாகவும் கொள்வதன் மூலம் ஆகும். ஒரு உழவன் தனது பயனுக்காக முதலில் விதையை விதைத்து, கொழுந்து விடும்படியாக ஒரு செடியை வளர்க்கிறான்; ஒரு கட்டத்தில், “இந்தச் செடிக்கு இனி கொள்கொம்பு வேண்டும்”, என்று எண்ணியவனாக, தானே ஒரு கொள்கொம்பை வைத்து, அதில் அந்தச் செடி பற்றிக் கொண்டு ஏறும்விதமாகச் சுள்ளிக்கால்களை நட்டு, அதன் மூலம் மூலம் அந்தச் செடி பந்தலில் சேரும்படிச் செய்கிறான். இதே போன்று அனைத்து உயிர்களுக்கும் எஜமானனாகிய ஸர்வேச்வரன் தனக்குப் பயன்படுவதற்காக ஜீவனைப் படைக்கிறான். பின்னர் சூர்ணை 435ல் கூறப்பட்ட – ஈச்வரஸ்ய ச ஸௌஹார்த்தம் - என்ற ச்லோகத்தில் கூறியபடி, ஆபிமுக்யம் என்பதான ஸர்வேச்வரனிடம் ஆழ்ந்த ஈடுபாடு என்பது முடிய ஜீவாத்மாவுக்கு ஏற்படுத்துகிறான். அடுத்து இவனுக்கு இன்னவர் ஆசார்யன் என்று தனது திருவுள்ளத்தில் தீர்மானிக்கிறான். அந்த ஆசார்யனிடம் சேரவைக்கும் பாகவதர்களுடன் முதலில் இந்த ஜீவாத்மாவைச் சேர்க்கிறான். அவர்கள் மூலம் ஆசார்யனிடம் சேர்ப்பிக்கிறான். இந்தக் கருத்து மிகவும் தெளிவாக அந்த உதாரணம் மூலம் விளங்கும். ஆக கொள்கொம்பில் படரவிட்ட கொடியானது உழவனுக்கு உதவுவது போன்று, ஆசார்யனோடு ஸர்வேச்வரனால் சேர்க்கப்பட்ட ஜீவாத்மாவால் உண்டாகும் பயன் என்பது ஸர்வேச்வரனுக்கே ஆகிறது என்று கருத்து. அறிவு இல்லாத பந்தல் போன்று அல்லாமல், சிறந்த அறிவுள்ள இந்த ஆசார்யன், மற்றவர்களுடைய நலம் என்பதை மட்டுமே சிந்திப்பவர் என்பதால், ஸர்வேச்வரனுக்கு ஏற்படும் பலனையே தனது பலனாகவும் கொள்ளுவார் அல்லவோ?

443. ஸ்வாபிமாநத்தாலே ஈச்வராபிமாநத்தைக் குலைத்துக் கொண்ட இவனுக்கு, ஆசார்யாபிமாந மொழிய கதியில்லையென்று பிள்ளை பலகாலு மருளிச் செய்யக் கேட்டிருக்கையா யிருக்கும்.

**அவதாரிகை** - இனி (ஸ்வாபிமாநத்தாலே) என்று தொடங்கி, (ஆசார்யபிமாநமே யுத்தாரகம்) என்னுமளவாக, இப்படி ததீயர் முன்னாகப் பற்றப்படும் ஸதாசார்யனுடைய

அபிமாநமே உஜ்ஜீவநத்துக்கு உசிதோபாயமென்னு இப்ப்ரபந்த தாத்பர்யத்தை ப்ரகாசிப்பித்தருளுகிறார். பெருவிலையனான ஆபரணத்துக்கு நாயகக்கல்போலே யாய்த்து வசநபூஷணத்துக்கு இப்ப்ரதேசம் நாயகரத்நமா யிருக்கும்படி. இத்தனையு மருளிச் செய்கையைப் பற்ற அதிஷ்டிகையிட்டுக் கொண்டு வந்தது கீழடங்கலும்; மேலடங்கலும் இதில் நிஷ்டையை ஸ்தாபிக்கிறது. இதில் ப்ரதமத்திலே, இவ்வர்த்தம் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தமென்று ஸர்வரும் விச்வஸிக்கைக்குடலாக இது தமக்கு ஆப்தோபதேசலப்த மென்னுமிடத்தை அருளிச்செய்கிறார் (ஸ்வாபிமாநத்தாலே) என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து "ஸ்வாபிமாநத்தலே" என்று தொடங்கும் இந்தச் சூர்ணை முதல், "ஆசார்ய அபிமாநமே உத்தாரகம்" என்றுள்ள சூர்ணை 447 முடிய உள்ள சூர்ணைகள் மூலம், இவ்விதமாக பாகவதர்களை முன்னிட்டுக் கொண்டு பற்றப்படும் சிறந்த ஆசார்யனுடைய அபிமானம் என்பதே ஜீவன் கரையேறுவதற்கான உபாயம் என்று இந்த ப்ரபந்தம் மூலம் வெளிப்படும் கருத்தை உணர்த்துகிறார். மிகுந்த விலையுள்ள ஓர் ஆபரணத்திற்கு நடுவில் பதிக்கப்படும் உயர்ந்த இரத்தினங்கள் போன்று இந்தப் பகுதி ஸ்ரீவசனபூஷணத்துக்கு உள்ளது ("இந்த பகுதி" என்பது சூர்ணை 447ல் உள்ள "ஆசார்ய அபிமானமே" என்று தொடங்கி உள்ள சூர்ணைகளைக் குறிக்கும்). இந்தப் பகுதியில் இந்த அர்த்தத்தை அருளிச்செய்யும் விதமாகவே, அவதாரிகை தொடக்கமாக இதுவரை உள்ள பகுதிகளிலும், இனி வர உள்ள பகுதிகளிலும் (சூர்ணை 447க்கு மேலே உள்ளவை), இந்த ஆசார்ய நிஷ்டையை நிலைநாட்டுகிறார். இவ்விதம் கூறத் தொடங்கும்போது, முதலில் இந்த அர்த்தமானது நம்மாழ்வார் தொடக்கமான சிறந்த ஸம்ப்ரதாயத்தால் வந்தது என்பதை அனைவரும் நம்பவேண்டும் என்பதற்காக, இது தனக்கு மிகவும் நம்பத் தகுந்தவர்களுடைய உபதேசத்தால் கிட்டியதாக அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அநாதிகாலம் 'நானே யெனக்கு நிர்வாஹகன்' என்றிருக்கும் தன்னுடைய துரபிமாநத்தாலே, 'இவன் நமக்கு சேஷம், இவன் கார்யம் நமக்கே பரம்' என்று தன்னை உஜ்ஜீவிப்பிக்கைக்குடலான ஈச்வராபிமாநத்தை அழித்துக்கொண்ட இவனுக்கு, துர்கதியே பற்றாசாக அங்கீகரித்து தன்னுடைய உஜ்ஜீவநத்துக்கு க்ருஷி பண்ணிப்போரும் பரமதயாளுவான ஆசார்யன், "இவன் நம்முடையவன்" என்றபிமாநித்திருக்கு மந்த அபிமாநமொழிய வேறு உஜ்ஜீவநோபாயமில்லை என்று,

ஸகல சாஸ்த்ரஸாரவிதக்ரேஸரரான நம்பிள்ளை திருவடிகளிலே பழுக்க ஸேவித்து ததேக பரதந்த்ரராய் ஸகல சாஸ்த்ர தாத்பர்யங்களையும் அவரருளிச் செய்யக்கேட்டு தந்நிஷ்டராயிருக்கும் நம்முடைய ஆசார்யரான பிள்ளை, தஞ்சமாகப் பலகாலு மருளிச் செய்யக் கேட்டிருக்கையா யிருக்குமென்றபடி. ஆகையால், ஆசார்யாபி மாநமே இவ்வாத்மாவுக் குஜ்ஜீவநோபாய மென்று கருத்து.

**விளக்கம்** - எல்லையற்ற காலமாக "நானே எனக்கு எஜமானன்" என்று எண்ணியபடி தவறான சிந்தனைகளுடன் கூடிய ஜீவாத்மா, அந்தத் தவறான எண்ணத்தால், "இந்த ஜீவாத்மா நமக்கு அடிமைப்பட்டவன், இவனுடைய செயல்கள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொடுப்பது நமது கடமை" என்று ஜீவாத்மாவைக் கரையேற்றக் காரணமாக உள்ள ஸர்வேச்வரனுடைய க்ருபையை அழித்துக் கொள்கிறான். இப்படியாக உள்ள ஜீவாத்மாவின் பரிதாபமான நிலையைக் கண்டு, அவனைத் தனது சிஷ்யனாக ஏற்றுக்கொண்டு இவனைக் கரையேற்றுவதே தனது கடமை என்று ஆசார்யன் உள்ளார். இப்படியாக மிகவும் கருணையுடன் "இந்த ஜீவாத்மா நம்மைச் சேர்ந்தவன்" என்று எண்ணும் ஆசார்ய அபிமானம் தவிர கரையேற வேறு வழியில்லை என்று, அனைத்து சாஸ்த்ரங்களின் பொருளை அறிந்தவர்களின் தலைவரான நம்பிள்ளைக்கு நீண்ட நாட்கள் சிஷ்யராக இருந்து, நம்பிள்ளைக்கு மட்டுமே அடிமையாக நின்று வரும், அனைத்து சாஸ்த்ரங்களின் பொருளையும் நம்பிள்ளை அருளிச்செய்யக் கேட்டு அவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டபடி ஆழ்ந்துள்ளவரும், நமது ஆசார்யராக உள்ளவரும் ஆகிய வடக்குத் திருவீதிப்பிள்ளையானவர் அனைவருக்கும் தஞ்சமாகப் பலமுறை அருளிச்செய்யக் கேட்டுள்ளேன் என்று கருத்து. ஆகவே ஆசார்யனுடைய க்ருபையே இந்த ஜீவாத்மா கரையேறத் தேவையான உபாயம் என்று கருத்து.

444. ஸ்வ ஸ்வாதந்த்ர்ய பயத்தாலே பக்தி நழுவிற்று.

**அவதாரிகை** - இப்படி (ஆசார்யா பிமாநமொழிய கதியில்லை) என்பானென்? சாஸ்த்ர ஸித்தங்களான பக்த்யாத்யுபாய விசேஷங்களுண்டே! என்கிற சங்கையிலே, இதொழிந்தவை யெல்லா மிவனுக் குபாயமன்றிக்கே நின்றமையை அடைவே யருளிச்செய்கிறார் மேல். அதில் ப்ரதமத்திலே, பக்தி உபாயமன்றியே நின்றபடியை அருளிச்செய்கிறார் (ஸ்வஸ்வாதந்த்ர்ய) இத்யாதியாலே.

**விளக்கம் -** இவ்விதம் சூர்ணை 443ல் உள்ளபடி – ஆசார்ய அபிமாநம் ஒழிய கதியில்லை – என்று ஏன் கூறவேண்டும்? சாஸ்த்ரங்களில் பக்தி உபாயம் போன்ற பலவும் கூறப்பட்டுள்ளன அல்லவோ? இவ்விதம் ஒரு சந்தேகம் எழலாம் என்பதால், ஆசார்ய அபிமானம் தவிர்ந்துள்ள மற்ற உபாயங்கள் அனைத்தும் உண்மையாக இவனுக்கு உபாயம் அல்லாமல் உள்ளதை வரிசையாக அருளிச்செய்கிறார். அவற்றில் முதலானவதாக பக்தியோகம் உபாயம் அல்லாமல் இருப்பதை இந்தச் சூர்ணையில் உரைக்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, பகவத்ப்ராப்தி ஸாதநதயா விஹிதையாய் ஸ்வயத்ந ஸாத்யையான பக்தி, பகவதேக பாரதந்த்ர்ய விரோதியான விரோதியான ஸ்வஸ்வாதந்த்ர்யத்தை யுண்டாக்கு மென்னும் பயத்தாலே இவனுக் குபாயமன்றியிலே நழுவி நின்ற தென்கை.

**விளக்கம் -** ஸர்வேச்வரனை அடைவதற்கு உபாயமாக விதிக்கப்பட்டதும், ஜீவாத்மா தனது முயற்சியால் அடைவதும் என்று கூறப்படும் பக்தியானது, பகவானுக்கு மட்டுமே வசப்பட்டு நிற்பது என்ற நிலைக்கு விரோதியாக உள்ளதால், "பக்தியிடம் வசப்பட்டிருத்தல்" என்ற தனது சுதந்த்ர நிலையை ஏற்படுத்துக்கூடும் என்ற அச்சம் காரணமாக, இவனுக்கு உபாயமாக உள்ளது என்று தன்மையில் இருந்து நழுவுகிறது.

445. பகவத் ஸ்வாதந்த்ர்ய பயத்தாலே ப்ரபத்தி நழுவிற்று.

**அவதாரிகை -** அநந்தரம், ப்ரபக்தி யுபாயமன்றியே நின்றபடியை அருளிச்செய்கிறார் (பகவத் ஸ்வாதந்த்ர்ய) இத்யாதியாலே.

**விளக்கம் –** அடுத்து ப்ரபத்தியும் உபாயமாக இல்லாத நிலையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, ஸ்வபாரதந்த்ர்யாநுரூபையாய் மஹா விச்வாஸரூபையான ப்ரபத்தி, பந்தமோக்ஷோபாய நிர்வாஹகனான பகவான் தன் ஸ்வாதந்த்ர்யத்தாலே மீளவும் கர்மாநுகுணமாக வைத்த சிந்தை வாங்குவித்து ஸம்ஸரிப்பிக்கில் செய்வதென்? என்கிற மஹாபயத்தாலே இவனுக் குபாயமன்றியிலே நழுவி நின்ற தென்கை.

**விளக்கம்** - தன்னுடைய சுதந்திரத்திற்கு ஏற்றபடி ஸர்வேச்வரனிடம் மஹாவிச்வாஸம் என்ற வடிவமாக உள்ளது ப்ரபத்தியாகும். ஆனால் இத்தகைய ப்ரபத்தி என்பது, ஸம்ஸாரபந்தம் மற்றும் மோக்ஷம் ஆகியவற்றின் நிர்வாஹகனாக உள்ள ஸர்வேச்வரன் தனது தடையற்ற சுதந்திரம் காரணமாக, மீண்டும் கர்மங்களைக் காரணமாகக் காண்பித்து, ஸம்ஸாரத்தில் உழலும்படிச் செய்தால் என்ன செய்வது என்ற அச்சம் காரணமாக, இவனுக்கு உபாயமாக உள்ள தன்மையில் இருந்து விலகுகிறது.

446. ஆசார்யனையும் தான் பற்றும் பற்று அஹங்கார கர்ப்பமாகையாலே, காலன் கொண்டு மோதிரமிடுமோபாதி.

**அவதாரிகை** - அநந்தரம், ஆசார்ய விஷயத்தில் ஸ்வகீய ஸ்வீகார முபாயமன்றிக்கே யொழிந்தமையை அருளிச்செய்கிறார் (ஆசார்யனையும்) என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்ததாக, ஆசார்யனை தான் பற்றுகின்ற பற்று என்பதும் உபாயமாக இல்லாமல் உள்ளதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஆசார்யனையும் உபாயமாகத்தான் ஸ்வீகரிக்கிற ஸ்வீகாரம், ஸ்வபலித்வ கர்த்ருத்வரூபமாய் ஸ்வரூப நாசகமாயிருக்கிற அஹங்காரத்தையுள்ளே யுடைத்தா யிருக்கையாலே, ஸ்வ விநாசகரமான காலனை ப்ரதி க்ரஹித்து அந்தப் பொன்னாலே அங்குளீயக தாரணம் பண்ணினால் அவத்யகரமாமோபாதி தன்னுடைய ஸ்வரூபத்துக் கவத்யகரமா யிருக்கு மென்கை. ஆகையால் இதுவும் உபாயமன்றியே நின்றதென்று கருத்து.

**விளக்கம்** – ஆசார்யனை உபாயமாகப் பற்றுகின்ற பற்று என்பது, “நான் இவ்விதம் பற்றுகிறேன், இதன் பலன் எனக்குக் கிட்டும்”, என்ற ஆத்மஸ்வரூப விரோதியான அஹங்காரத்தை ஏற்படுத்திவிடும். இது எவ்விதம் உள்ளது என்றால், தன்னுடைய மரணத்தை வரவழைத்துக் கொண்டு அதனால் கிட்டும் பணம் மூலமாக தங்கமோதிரம் வாங்கி அணிவது போன்று உள்ளது. இந்தச் செயல் எத்தனை தாழ்ச்சியோ அது போன்று

ஆசார்யனை உபாயமாகப் பற்றும் பற்று என்பதும் ஆத்மஸ்வரூபத்துக்கு ஏற்காத தாழ்ந்த செயல் ஆகும். ஆகவே இது உபாயம் அல்ல என்று கருத்து.

447. ஆசார்யாபிமானமே யுத்தாரகம்.

**அவதாரிகை** - பாரிசேஷ்யாத் கீழ் தாமருளிச்செய்ததே உபாயமென்று தலைக்கட்டுகிறார் (ஆசார்யாபிமாநமே யுத்தாரகம்) என்று.

**விளக்கம்** – மற்ற அனைத்தையும் தள்ளியதால் எஞ்சி நிற்பதும், தான் மேலே அருளிச் செய்ததும் ஆகிய ஆசார்ய அபிமானமே மேலான உபாயம் என்று உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, மோக்ஷ ஸாதநதயா சாஸ்த்ர ஸித்தங்களான பக்த்யாதிகளொன்று முபாயமன்றியிலே நின்றபின்பு, நிரதிசய க்ருபாவானாய் நிர்ஹேதுகமாகத் தன்னை யங்கீகரித்தருளி நிரபாயமாக நோக்கிக்கொண்டு போரு மாசார்யன் "இவன் நம்முடையவன்" என்றிருக்கு மந்தவபிமாநமே யிவனை ஸம்ஸாரத்தினின்றும் உத்தரிப்பிக்கு மென்கை. ஆக, (ஸ்வதந்த்ரனை யுபாயமாகத்தான் பற்றின போதிறே) என்று தொடங்கி உபபாதித்துக் கொண்டு வந்த சரமோபாய ஸ்வரூபத்தை யுள்ளபடி சோதித்து நிர்ணயித்தருளினாராய்த்து.

**விளக்கம்** - மோக்ஷ உபாயங்கள் என்று சாஸ்த்ரங்கள் விதித்துள்ள பக்தி போன்றவை உபாயம் அல்ல என்று ஆன பின்னர், எல்லையற்ற கருணை உள்ளவராகவும், எந்தவிதமான காரணமும் இல்லாமல் நம்மை அங்கீகரித்துக்கொண்டு, நமக்கு எந்தவிதமான தீமையும் வராமல் காப்பாற்றுவதும் ஆசார்யன் ஆவார். இவ்விதம் உள்ள ஆசார்யன், "இவன் நம்மைச் சேர்ந்தவன்" என்று கொள்ளும் அபிமானம் மட்டுமே இவனை ஸம்ஸாரத்திலிருந்து உயர்த்திவிடும் என்று கருத்து. ஆகவே, சூர்ணை 407ல் ஸ்வதந்த்ரனை யுபாயமாகத்தான் பற்றின போதிறே – என்றுள்ள வாக்கியம் தொடங்கி விவரித்து வந்து இறுதி உபாயத்தின் ஸ்வரூபத்தை, உள்ளது உள்ளபடி ஆராய்ந்து இங்கு நிரூபித்து அருளினார் என்று கருத்து.

448. கைப்பட்ட பொருளைக் கைவிட்டுப் புதைத்த பொருளைக் கணிசிக்கக் கடவனல்லன்.

**அவதாரிகை** - அநந்தரம், இவ்வுபாய நிஷ்டனான வதிகாரிக்கு கர்த்தவ்யாகர்த்தவ்ய விஷயங்களை விஸ்தரேண வருளிச்செய்கிறார். அதில், ப்ரதமத்திலே, ஸுலபமான ஆசார்ய விஷயத்தை விட்டு துர்லபமான பகவத்விஷயத்தை யிச்சிப்பானல்லனென்னு மிடத்தை த்ருஷ்டாந்த முகேந வருளிச்செய்கிறார் (கைப்பட்ட) இத்யாதியாலே.

**விளக்கம்** - அடுத்ததாக ஆசார்ய அபிமானம் என்ற உபாயத்தில் நிலைநிற்கும் அதிகாரிக்குச் செய்யத்தக்க விஷயங்கள் எவை என்று விரிவாக அருளிச்செய்கிறார். அவற்றில் முதலாவதாக, எளிதாகக் கிட்டவல்ல ஆசார்யனைக் கைவிட்டு, அரிதாக உள்ள பகவத் விஷயத்தை உபாயமாக விரும்புதல் கூடாது என்று இந்தச் சூர்ணையில் ஓர் உதாரணம் மூலம் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கையிலே யிருக்கிற தநம்போலே அதிஸுலபனா யிருக்கிற ஆசார்யனைக் குறைய நினைத்து அநாதரத்தாலே கைவிட்டு, பூமியிலே பிறர் புதைத்து வைத்த தநம்போலே எட்டப்படாமையாலே "அரும்பொருள்" என்னும்படி துர்லபமான பகவத் விஷயத்தை ரக்ஷகமாகப் பற்ற இச்சிக்கக் கடவனல்ல னென்கை. "ஸுலபம் ஸ்வகுரும் த்யக்த்வா துர்லபம் ய உபாஸதே, லப்தம் த்யக்த்வா தநம் மூடோ குப்த மந்வேஷதி க்ஷிதௌ" என்றும், "பற்று குருவை" என்று தொடங்கி, "தன், கைப்பொருள் விட்டாரேனும் காசினியில் தாம் புதைத்த, அப்பொருள் தேடித் திரிவானற்று" என்றும் சொல்லக்கடவதிறே.

**விளக்கம்** – அதாவது, கையில் உள்ள பணம் போன்று மிகவும் எளிதாகக் கிட்டவல்ல ஆசார்யனைத் தாழ்வாகச் சிந்தித்து ஆராதிக்காமல் கைவிட்டு, பூமிக்கு அடியில் மற்றவர்களால் புதைத்து வைக்கப்பட்ட காரணத்தால் யாருக்கும் எட்டாமல் உள்ளதால் "இது கிட்டுவதற்கு அரியது" என்று கிட்டுவதற்கு அரிதாக உள்ள பகவத் விஷயத்தைத் தனக்குப் பாதுகாப்பாக விரும்புதல் கூடாது. இதனைக் கீழே உள்ள வரிகளில் தெளிவாகக் காணலாம்:

- ஸுலபம் ஸ்வகுரும் த்யக்த்வா துர்லபம் ய உபாஸதே, லப்தம் த்யக்த்வா தநம் மூடோ குப்த மந்வேஷதி க்ஷிதௌ - கிடைப்பதற்கு எளிய ஆசார்யனைக் கைவிட்டு யார் ஒருவன் கிடைப்பதற்கு அரிய பகவானை வணங்குகிறானோ அவன், கையில் உள்ள பொருளை விட்டு பூமியில் புதைத்து வைக்கப்பட்ட பொருளைத் தேடும் மூடன் ஆவான்.

- ஞானசாரம் (34) - தன், கைப்பொருள் விட்டாரேனும் காசினியில் தாம் புதைத்த, அப்பொருள் தேடித் திரிவானற்று - தான் அண்டியுள்ள ஆசார்யன் தனக்குத் தஞ்சமல்ல என்று எண்ணி, மற்றொருவனான பரம்பொருளைத் தஞ்சமாகக் கொள்ளுதல் என்பது, தனது கையில் உள்ள செல்வத்தை விடுத்து யாரோ பூமியில் புதைத்து வைத்துள்ள செல்வத்தைத் தேடி அலைபவன் செயல் போன்றதாகும்.

449. விடாய் பிறந்தபோது கரஸ்தமான உதகத்தை உபேக்ஷித்து ஜீமூத ஜலத்தையும் ஸாகர ஸலிலத்தையும் ஸரித் ஸலிலத்தையும் வாபீகூப பயாஸ்ஸுக்களையும் வாஞ்சிக்கக் கடவனல்லன் [உதகம் = நீர், ஜீமூதம் = மேகம், ஸாகரஸலிலம் = திருப்பாற்கடல் நீர், ஸரித்ஸலிலம் = ஆற்று நீர், வாபீ = குளம், பயஸ்ஸு = நீர், கூபம் = கிணறு]

**அவதாரிகை** - இன்னமும் சில த்ருஷ்டாந்த முகத்தாலே, ஸுலபமான ஆசார்ய விஷயத்தை விட்டு துர்லபமான பகவத் விஷயத்தை யாசைப்படுவானல்ல னென்கிறார் மேல் (விடாய் பிறந்தபோது) என்று தொடங்கி.

**விளக்கம்** - மேலும் சில உதாரணங்கள் மூலம், எளியவனாக உள்ள ஆசார்யனைக் கைவிட்டு, அரியவனாக உள்ள பகவானை ஆசைப்படக்கூடாது என்பதை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, பிபாஸை விஞ்சினபோது சடக்கென பாநம் பண்ணலாம்படி பாத்ர கதமாய்க்கொண்டு தன் கையிலிருக்கிற ஜலத்தை ஸுலபதையே ஹேதுவாக வநாதரித்துத் தரையிலே யுகுத்து. ஆகாசஸ்தமாக் கொண் டெட்டாதபடியாயும் பூமிஸ்தமா யிருக்க தூரஸ்தமாயும் ஆஸந்தமா யிருக்கச்செய்தே பெருகுங்காலமொழிய வற்றின காலமின்றிக்கேயும் எப்போதும் முண்டானாலும் அவ்வளவும் சென்று உபஜீவிக்க

வேண்டியும் இருந்தவிடந்தன்னிலே யுண்டாயும் கநித்ராதிகள் கொண்டு கல்லிப் பெறவேண்டி யிருக்கும் ஜீமூதாதிகளின் ஜலத்தை யாசைப்படுமவனைப்போலே, ரக்ஷாகாபேக்ஷை பிறந்த தசையிலப்போதே தனக்குதவும்படி கைபுகுந்திருக்கிற வாசார்யவிஷயத்தை ஸௌலப்யமே பற்றாசாக உபேக்ஷித்து, பரமாகாச வர்த்தியாய் துஷ்ப்ராபமா யிருக்கிற பரத்வத்தையும், பூமியிலேயாயும் க்ஷீராப்தியளவும் செல்ல வல்லவர்களுக்கன்றியே யுதவாத வ்யூஹத்தையும், ஆஸந்நமாக வந்தும் தாத்காலிகர்க் கொழிய பாச்சாத்யர்க் குதவாத விபவத்தையும், நித்யஸந்நிதி யுண்டாயும் ஸம்பாஷணாதிகளா லிவனோடு கைகலந்திராத வர்ச்சாவதரத்தையும், இருக்கிறவிடந் தன்னிலே யுண்டாயிருந்ததாகிலும் யமநியமாதி க்ரமேண யத்நித்து தர்சிக்கவேண்டும் அந்தர்யாமித்வத்தையு மாசைப்படக் கடவனல்ல னென்கை. "சக்ஷுர் கமயம் குரும் த்யக்த்வா சாஸ்த்ர கம்யந்து யஸ் மரேத், கரஸ்தமுதகம் த்யக்த்வா கநஸ்த மபிவாஞ்சதி" என்றும், "எட்டவிருந்த குருவை யிறை யன்றென்று விட்டு" என்று தொடங்கி, "அம்புதத்தைப் பார்த்திருப்பா னற்று" என்றும் சொல்லக்கடவதிறே. இது வ்யூஹாதிகளுக்கு முபலக்ஷணம்.

**விளக்கம்** - தாகம் அதிகமாக உள்ளபோது தனது கையில் உள்ளதான பாத்திரத்தில் உடனே பருகவல்லதான நீரை, தரையில் கொட்டிவிட்டு, ஆகாயத்தில் உள்ளதால் கைக்கு எட்டாமலும், பூமியில் உள்ளபோதிலும் மிகவும் தூரத்தில் உள்ளதாலும், அருகில் இருந்தாலும் நீர் பெருகும் காலம் அல்லாமல் மற்ற காலங்களில் கிட்டாமல் உள்ளதாலும், எந்தக் காலத்திலும் கிட்டும் என்றாலும் நீண்ட தூரம் சென்று பருகும்படி உள்ளதாலும், இருந்த இடத்தில் கிடைக்கும் என்றாலும் மண்வெட்டிகள் போன்ற பலவற்றால் மட்டுமே பூமியை வெட்டிப் பெறவேண்டும் என்பதாலும் கிட்டுவதற்கு அரிதாக உள்ள நீரையும், மேகத்தில் உள்ள நீரையும் விரும்புபவன் போன்று செய்வது என்னவென்றால் - தன்னை யாரேனும் காப்பாற்றவேண்டும் எண்று எண்ணிய சமயத்தில் தனக்கு உதவும் நிலையில் எப்போதும் ஆசார்யன் அருகில் உள்ளார் என்றபோதிலும், அவருடைய எளிமையைக் கண்டு உதாஸீனம் செய்து - பரமபதத்தில் உள்ளவனாய், கிட்டுவதற்கு அரியவனாக உள்ள பர நிலையையும், பூமியில் உள்ளபோதிலும் திருப்பாற்கடல் வரை சென்று காண முடிந்தவர்களுக்கு மட்டும் உதவும் வ்யூஹ நிலையையும், அருகில் வந்து அவதரிக்கும் போதும் அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்தவர்களுக்கு அல்லாமல் பிற்காலத்தில் பிறந்தவர்களுக்கு உதவாத அவதார நிலையையும், எந்தக் காலத்திலும் அருகில்

உள்ளபோதிலும் பேசுவது முதலான செயல்கள் செய்து ஜீவன்களுடன் சேர்ந்து நிற்காத அர்ச்சாவதார நிலையையும், ஜீவன் உள்ள இடத்திலேயே உள்ள ஸர்வேச்வரன் என்பதற்கு ஏற்ப யமம், நியமம் போன்ற நெறிகளை முறையாகக் கடைப்பிடித்து நின்றால் மட்டுமே காண இயல்வதாகிய அந்தர்யாமி நிலையும் ஆசைப்படுதல் கூடாது. கீழே உள்ள வரிகள் காண்க:

- புராண ஸமுச்சயம் - சக்ஷுர் கமயம் குரும் த்யக்த்வா சாஸ்த்ர கம்யந்து யஸ் மரேத், கரஸ்தமுதகம் த்யக்த்வா கநஸ்த மபிவாஞ்சதி - கண்ணுக்கு நேரே புலப்படும் ஆசார்யனை விட்டு சாஸ்த்ரங்களால் மட்டுமே அறியவல்ல ஸர்வேச்வரனை யார் ஒருவன் எண்ணுகிறானோ, அவன் கையில் உள்ள நீரை விடுத்து மேகத்தில் உள்ள நீரை விரும்புவன் போன்றவன் ஆவான்.

- ஞானசாரம் (33) – எட்டவிருந்த குருவை யிறை யன்றென்று விட்டு … அம்புதத்தைப் பார்த்திருப்பா னற்று - அருகில் உள்ள ஆசார்யன் தனக்கு எஜமான அல்லன் என்று கைவிட்டு, அடைவதற்கு அரிதாக உள்ள ஸர்வேச்வரனை அடைய முற்படுதல் என்பது, கண்ணை மூடிக்கொண்டு கையில் உள்ள தண்ணீரை நிலத்தில் கொட்டிவிட்டு ஆகாயத்தில் உள்ள நீர் தனது தாகத்தைத் தீர்க்கும் என்று நிற்பவன் செயல் போன்றதாகும்.

450. பாட்டுக்கேட்குமிடமும், கூப்பிடுகேட்குமிடமும், குதித்தவிடமும், வளைத்தவிடமும், ஊட்டுமிடமும் எல்லாம் வகுத்தவிடமே யென்றிருக்கக் கடவன்.

**அவதாரிகை** – இப்படி ஸுலபமான வாசார்ய விஷயம் ஸ்வ ரக்ஷணத்துக் குடலாயிருக்க இத்தை யுபேக்ஷித்து துர்லபமான பரத்வாதிகளை வாஞ்சிக்கக் கடவனல்லனே யாகிலும், ப்ராப்யத்வேநவவை யிவனுக்கு வாஞ்சநீயங்களன்றோ வென்ன; அவை யெல்லா மாசார்யனே யென்றிருக்கக் கடவ னென்கிறார் (பாட்டுக் கேட்குமிடமும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக எளியவனாக உள்ள ஆசார்யன் தன்னைக் காப்பாற்றுவராக உள்ளபோது, அவரைக் கைவிட்டு, அடைவதற்கு அரியவனாக உள்ள பரமபதநாதனை

விரும்புதல் கூடாது என்றாலும், அடையத்தக்க பேறாக உள்ளவன் பரமபதநாதன் என்ற காரணத்தால் அவன் விரும்பத்தக்கவன் அல்லவா? இந்தக் கேள்விக்கு, “அவையும் ஆசார்யனே என்றிருக்கவேண்டும்” என்று பதில் அளிக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “ஏதத் ஸாம காயந் நாஸ்தே” என்கிறபடியே நிரந்தராநுபவபரரான நித்யமுக்தர் அநுபவத்துக்குப் போக்குவீடாகப் பண்ணும் ஸாமகாநம் கேட்கும் ஸ்தலமான பரமபதமும் அஸுர ராக்ஷஸ பீடிதரான ப்ரஹ்மாதி தேவர்க ளார்த்த நாதம் கேட்கச் செவி கொடுத்துக்கொண்டு கண்வளரும் வ்யூஹ ஸ்தலமும், அவர்க ளார்த்த த்வநி கேட்டுத் துடித்துக் கொண் டெழுந்திருந்து “நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்” என்கிறபடியே திருப்பாற்கடலிலே திருவரவணையில் நின்று மிவ்வருகே வரக் குதிப்பாரைப்போலே வந்தவதரித்த வவதார ஸ்தலமும், நினைத்தது தலைக்கட்டுமளவும் மலையாளர் வளைப்புப்போலே இட்டவடி பேரவிடாதே வளைத்துக் கொண்டிருக்கிற வர்ச்சாவதார ஸ்தலங்களும், “யேஷாமிந்தீவர ச்யாமோ ஹ்ருதயே ஸுப்ரதிஷ்டித:” என்றும், “ஒண்சங்கதை வாளாழியா னொருவனடியே னுள்ளானே” என்றும் சொல்லுகிறபடியே ஹ்ருதய கமலத்திலே யிருந்து தானுகந்தார்க்குத் தன்னழகை புஜிப்பிக்கும் அந்தர்யாமித்வ ஸ்தலமாகிற விந்த ப்ராப்ய ஸ்தலங்களெல்லாம், தனக்கு வகுத்த ஸ்தலமாய் ப்ராப்யமா யிருக்கு மாசார்ய விஷயமேயென் றத்யவஸித் திருக்கக் கடவனென்கை. (வளைத்தவிடமாவது), பிறரறியாதபடி திரை வளைத்துக் கொண்டிருக்கிற வந்தர்யாமித்வ ஸ்தலம்; (ஊட்டுமிடமாவது) சக்ஷுர் விஷயமா யிருந்து தன் வடிவழகையும் குணங்களையும் ஆச்ரிதரை புஜிப்பிக்கு மர்ச்சாவதார ஸ்தலமென்று சொல்லவுமாம். “யேநைவ குருணாயஸ்ய ந்யாஸ வித்யா ப்ரதீயதே, தஸ்ய வைகுண்ட துக்தாப்தி த்வாரகாஸ் ஸர்வ ஏவஸ:” என்றும், “வில்லார்மணி கொழிக்கும்” என்று தொடங்கி “அருளாலே வைத்தவவர்” என்றும் சொல்லக்கடவதிறே. அன்றிக்கே (பாட்டுக் கேட்குமிடம்) இத்யாதிக்கு, ரக்ஷகமாக வவற்றை யாசைப்படக் கடவனல்ல னென்கிற அளவன்றிக்கே அவையெல்லாம் தனக் கிவ்விஷயமே யென்றிருக்கக் கடவ னென்கிற தென்று கீழோடே சேர யோஜிக்கவுமாம்.

**விளக்கம் -** (பாட்டுக்கேட்கும் இடமும்) - உபநிஷத்தில் – ஏதத் ஸாம காயந் நாஸ்தே - இந்த ஸாமகானத்தை எப்போதும் ஓதியபடி உள்ளனர் - என்று கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனை எப்போதும் அனுபவித்தபடி உள்ள நித்யமுக்தர்கள், தங்களுடைய அந்த

அனுபவங்களை வெளிப்படுத்துவிதமாக ஸாமகானம் பாடும் பரமபதம். (கூப்பிடு கேட்குமிடம்) - அசுரர்கள் மற்றும் ராக்ஷஸர்களால் வருத்தப்பட்ட நான்முகன் உள்ளிட்ட தேவர்கள் கூக்குரல் எழுப்ப, அதனைக் கேட்பதற்கு ஏற்ப கண்வளர்கின்ற திருப்பாற்கடல். (குதித்த இடமும்) – இப்படியாக அவர்கள் எழுப்பிய கூக்குரலைக் கேட்டு துடித்தபடி எழுந்து, ஸ்ரீஹரிவம்சம் (113-62) – நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம் – ஆதிசேஷன் என்ற மெத்தையை விட்டு ஸ்ரீமந்நாராயணன் மதுராவிற்கு வந்தான் – என்று கூறுவதற்கு ஏற்ப திருப்பாற்கடலில் உள்ள ஆதிசேஷன் என்ற படுக்கையை விட்டு இங்குள்ளவர்களின் அருகில் வருவதற்குக் குதிப்பவர்கள் போன்று அவதரித்த இடங்கள். (வளைத்தவிடம்) - நினைத்த செயல் நிறைவேறும் வரை மலைக்காமல் முயல்பவர் போன்று, எடுத்த வைத்த திருவடி நகராமல் நிற்கின்ற அர்ச்சாவதார இடங்கள். (ஊட்டுமிடம்) – யேஷாமிந்தீவர ச்யாமோ ஹ்ருதயே ஸுப்ரதிஷ்டித: – யாருடைய இதயத்தில் கருநெய்தல் போன்ற திருமேனி உள்ள ஸர்வேச்வரன் நன்றாக அமர்ந்துள்ளானோ - என்றும், திருவாய்மொழி (8-8-1) - ஒண்சங்கதை வாளாழியா னொருவனடியே னுள்ளானே - என்றும் கூறுவதற்கு ஏற்ப, தான் யாரை விரும்புகிறானோ அவர்களுடைய இதயத்தாமரையில் வீற்றிருந்து தனது அழகை எப்போதும் காண்பிக்கும் அந்தர்யாமித்வ இடம். இப்படியாக ஸர்வேச்வரன் உறையும் இடங்கள் அனைத்தும் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்ற இடமாக அடையத்தக்கதாக இருக்கும் ஆசார்யனே என்று உறுதியுடன் இருக்கவேண்டும் என்று கருத்து. (வளைத்தவிடம்) - மற்றவர்கள் அறியாதவிதத்தில் தரை ஆழ்ந்து கொண்டுள்ள அந்தர்யாமி நிலை என்றும் கூறலாம். (ஊட்டுமிடம்) - கண்களுக்குக் காணலாம்படி நின்று, தனது வடிவழகு மற்றும் திருக்கல்யாண குணங்கள் ஆகியவற்றை அடியார்களுக்கு உணர்த்தவல்ல அர்ச்சாவதாரம் என்றும் கூறலாம். யேநைவ குருணாயஸ்ய ந்யாஸ வித்யா ப்ரதீயதே, தஸ்ய வைகுண்ட துக்தாப்தி த்வாரகாஸ் ஸர்வ ஏவஸ: - எந்த ஒரு ஆசார்யனால் எந்த ஒரு ஜீவாத்மாவுக்கு சரணாகதி வித்யை அளிக்கப்பட்டதோ, அந்த ஜீவாத்மாவுக்குப் பரமபதம், திருப்பாற்கடல், துவாரகை போன்ற அனைத்தும் அந்த ஆசார்யனே ஆவார் - என்றது காண்க. மேலும் ஞானஸாரத்தில் (36) – வில்லார்மணி கொழிக்கும் – திருவேங்கடமலை தொடக்கமாக உள்ள அனைத்து திவ்யதேசங்களும் … கருணை பொழிந்த ஆசார்யனே ஆவார் - என்றும் கூறப்பட்டது. அல்லது இந்தச் சூர்ணைக்கு, அவற்றைத் தனது ரக்ஷகம் என்று ஆசைப்படாமல், அதாவது தன்னைக் காப்பாற்றும் வஸ்துக்கள் என்று

விரும்பாமல், அவை அனைத்தும் ஆசார்யனே என்று மேலே கூறப்பட்ட வாக்கியத்துடன் சேர்த்தும் பொருள் கொள்ளலாம்.

451. இவனுக்கு ப்ரதிகூலர் ஸ்வதந்த்ரரும் தேவதாந்தர பரரும்; அநுகூலர் ஆசார்ய பரதந்த்ரர்; உபேக்ஷணீயர் ஈச்வர பரதந்த்ரர்.

**அவதாரிகை** - ஏவம்பூதனான விவ்வதிகாரிக்கு ஸ்வரூபநாசகத்வ ஸ்வரூப வர்த்தகத்வ ததுபய ரஹிதத்வங்களால் ப்ரதிகூலராயும் அநுகூலராயும் அநுபயராயு மிருக்குமவர்களை தர்சிப்பிக்கிறார் மேல் (இவனுக்கு ப்ரதிகூலம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக உள்ள இந்த அதிகாரிக்கு, ஸ்வரூபத்தை அழிக்கவல்ல விரோதியாக உள்ளவர், ஸ்வரூபத்தை வளர்க்க வல்லவர், இப்படியாக இல்லாதவர் என்ற காரணங்களால் விரோதி, நண்பர், நடுநிலைமையுடன் உள்ளவர் என்ற தன்மை கொண்டவர்களை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்படி ஆசார்யாபிமாந நிஷ்டனாய் பரத்வாதி பஞ்சகத்திலுள்ள ப்ராவண்யமடைய விவ்விஷயத்திலே ஒருமடை படுத்தி, “தேவு மற்றறியேன்” என்றிருக்கு மிவ்வதிகாரிக்கு, அணுகி லாத்ம நாசத்தைப் பிறப்பிக்கும் ப்ரதிகூலர், ஆத்மாபஹாரிகளான ஸ்வதந்த்ரரும்; பாரதந்தர்யத்துக் கிசைந்து வைத்தே பகவத் வ்யதிரிக்த தேவதைகளுக்கு பரதந்த்ரரா யிருக்குமவர்களும்; ஸ்வஸம்ஸர்க்கத்தாலே ஸ்வரூபத்தை வளர்க்கு மநுகூலர், ஸ்வரூபத்தை யுள்ளபடி யுணர்ந்து தச்சரமாவதி நிஷ்டரான ஸதாசார்ய பரதந்த்ரர்; இப்படி ஸ்வரூப நாசகரும் ஸ்வரூப வர்த்தகருமல்லாமையாலே வெருவுதலுக்கும் விருப்பத்துக்கும் விஷயமல்லாத உபேஷணீயர், சரமபர்வமான வாசார்ய பாரதந்த்ர்யத்தி லூற்றமன்றியிலே ப்ரதம பர்வமான ஈச்வர பாரதந்த்ர்யத்திலே யூன்றியிருக்குமவர்களென்றபடி. ப்ரதிகூலரைச் சொல்லுகிறவிடத்தில் ஸ்வதந்த்ர தேவதாந்தர பரதந்த்ர ரிருவரையுஞ் சொன்னவிது, ப்ரபத்தி ப்ரகரணத்திற் சொன்ன மற்றுள்ள பரதிகூலர்க்கு முபலக்ஷணம். ப்ரதமபர்வ நிஷ்டனுக்கு ப்ரதிகூலமானவர்கள் இவனுக்கு ப்ரதிகூலால்லாமை யில்லையிறே. இத்தால், கீழ் பகவத் ப்ரபந்நாதிகாரிக்கு ஸஹவாஸ தந்நிவ்ருத்திகளுக் குறுப்பாக வநுகூல ப்ரதிகூல தர்சநம் பண்ணுவித்தாப்போலே, ஆசார்யாபிமாந நிஷ்டனான விவனுக்கும்

ஸஹவாஸ நிவ்ருத்தி விஷயமான ப்ரதிகூலரையும் ஸஹவாஸ விஷயமான வநுகூலரையும் தர்சிப்பித்து தததிகமாக உபேக்ஷணீய விஷயமு மிவனுக்கொன் றுண்டென்னுமிடம் தர்சிப்பித்தா ராய்த்து.

**விளக்கம் -** இவ்விதமாக ஆசார்ய அபிமானத்தில் நிலையாக உள்ளவனும், பரம் வ்யூஹம் விபவம் அர்ச்சை அந்தர்யாமி என்றபடி உள்ள ஸர்வேச்வரனுடைய ஐந்து நிலைகள் மீது காண்பிக்கும் அன்பு முழுவதையும் ஆசார்யனிடம் காண்பிப்பவனும், கண்ணிநுண் சிறுத்தாம்பு (2) – தேவு மற்றறியேன் - என்பதற்கு ஏற்ப உள்ளவனும் ஆகிய இந்த அதிகாரிக்கு, “அவர்களை அடுத்துச் சென்றால் ஆத்மாவிற்குத் தீமை ஏற்படுத்தும் விரோதிகள்” என்றுள்ளவர்கள் யார் என்றால் - ஆத்மா என்பது தங்களுக்கே உரியது என்று எண்ணும் ஸ்வதந்த்ரர்கள் மற்றும் ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமைப்பட்டவர்கள் என்று அறிந்துள்ளபோதிலும் அவனைத் தவிர மற்ற தேவதைகளுக்கு அடிமைப்பட்டவர்களும் ஆவர். அந்த அதிகாரிக்கு, “அவர்கள் தொடர்பால் ஆத்மஸ்வரூபத்தை நன்கு வளர்க்கும் நன்மை செய்பவர்கள்” என்றுள்ளவர்கள் யார் என்றால் - ஆத்மஸ்வரூபத்தை நன்றாக உள்ளது உள்ளபடி அறிந்து கொண்டு அதன் எல்லையிலேயே நிற்பவர்களான நல்ல ஆசார்யர்களுக்கு அடிமைப்பட்டவர்களாக இருப்பவர்கள் ஆவர். இப்படியாக ஆத்மஸ்வரூபத்தை அழிப்பவர்களாயும், ஆத்மஸ்வரூபத்தை வளர்ப்பவர்களாயும் அல்லாமையால், ஏற்றுக் கொள்ளுவதற்கும் தள்ளுவதற்கும் கூடாதவர்களான நடுநிலைமையாளர்கள் யார் என்றால் - எல்லைநிலமான ஆசார்யனிடம் அடிமைப்பட்டிருத்தலில் விருப்பம் இல்லாமல், ஸர்வேச்ரனிடம் மட்டுமே அடிமைப்பட்டிருத்தலை விரும்பியபடி உள்ளவர்கள் ஆவர். விரோதிகள் என்று கூறும்போது ஸ்வதந்த்ரர் மற்றும் மற்ற தெய்வங்களிடம் அடிமைப்பட்டிருத்தல் என்று இருவரையும் கூறுதல் என்பது, சூர்ணை263ல் கூறப்பட்ட அனைவருக்கும் பொருந்தும் என்று கருத்து. அதாவது, முதல் நிலையான ஸர்வேச்வரனிடம் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் உள்ளவனுக்கு விரோதியாக உள்ள ஒருவன், எல்லையான ஆசார்யனிடம் அடிமைப்பட்டு இருப்பவனிடம் விரோதியாக இல்லாமல் இருக்கமுடியாது அல்லவோ? ஆகவே ஸர்வேச்வரனை அண்டி நிற்கும் ப்ரபந்ந அதிகாரி ஒருவன் பழகுவதற்கும், பழகாமல் விலகுவதற்கும் காரணமாக நன்மை செய்பவர்கள் மற்றும் விரோதிகள் ஆகியோரை முன்புள்ள சூர்ணையில் கூறியது போன்று, ஆசார்ய அபிமானத்தில் ஆழ்ந்து நிற்கும் அதிகாரி ஒருவன் பழகாமல் விலகி நிற்கவேண்டியதான

விரோதிகள் மற்றும் சேர்ந்து பழகுவதற்கு ஏற்ற நன்மை செய்பவர்கள் ஆகியோரை இங்கு உணர்த்திய பின்னர், அங்கு கூறப்படாதவர்களாகிய நடுநிலையானவர்கள் என்பவரையும் இங்கு கூறினார்.

452. ஜ்ஞாநாநுஷ்டாநங்களிரண்டும் அல்லாதார்க்கு உபாயாங்கமாயிருக்கும், இவனுக்கு உபேயாங்கமாயிருக்கும்.

**அவதாரிகை** - இவ்வதிகாரிக் குண்டாகவேண்டும் ப்ரதிபத்த்யநுஷ்டாநங்களைப் பல படியாலு மருளிச்செய்தார் கீழ்; இந்த ப்ரஸங்கத்திலே அந்யோபாய நிஷ்டருடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்களுக்கும் இவனுடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்களுக்கு முண்டான விநியோக விசேஷத்தை யருளிச்செய்கிறார் மேல் (ஜ்ஞாநாநுஷ்டாநங்க ளிரண்டுக்கும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஆசார்ய அபிமானம் என்பதில் ஆழ்ந்துள்ள அதிகாரிக்கு இருக்க வேண்டியதான எண்ணங்கள் மற்றும் ஒழுக்கங்கள் ஆகியவற்றை இதுவரை அருளிச் செய்தார். இனி பக்தி முதலானவற்றைத் தங்களுடைய உபாயமாகக் கொண்டு, அவற்றில் நிலைநிற்பவர்களுடைய அறிவு மற்றும் ஒழுக்கங்களுக்கும், ஆசார்ய அபிமானத்தில் நிலைநிற்பவனுடைய அறிவு மற்றும் ஒழுக்கங்களுக்கும் இடையே உள்ள வேற்பாடுகளை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, தத்வஜ்ஞாநமும் தததுரூபமான வநுஷ்டாநமும் ஆசார்யாபிமான நிஷ்டனான விவனை யொழிந்த வதிகாரிகளுக்கு, உபாய மதிகாரி ஸாபேக்ஷமாகையாலே உபேயப்ராப்தியளவும் உபாயாதிகாரம் நழுவாமல் நடக்கைக் குறுப்பாய்க் கொண்டு அவ்வழியாலே யுபாய சேஷமா யிருக்கும்; ஆசார்யாபிமாநமே யுத்தாரக மாகையா லுபாயாதிகார சேஷமாக வேண்டுவதொன்றில்லாமையாலே, இவ்வதிகாரிக் குண்டான ஜ்ஞாநாநுஷ்டாநங்க ளிரண்டும் ஆசார்யன் முகமலர்த்தியாகிற வுபேயத்துக்கு சேஷமாயிருக்கு மென்கை. (இவனுக் குபேயமாயிருக்கும்) என்று பாடமான போது, ஆசார்யனுக் கபிமதமாய்க் கொண்டு இவைதா னிவனுக்கு உபேயமாயிருக்கு மென்றபடி.

**விளக்கம்** - ஆசார்ய அபிமானம் என்பதில் ஊன்றியுள்ள இவனைத் தவிர மற்றுள்ள அதிகாரிகளுக்கு, உபாயம் என்பது அந்தந்த அதிகாரியை மட்டுமே நம்பியுள்ளதால், அவர்களுடைய அறிவு மற்றும் அதற்கேற்ற ஒழுக்கம் ஆகியவை, பலனை அடையும்வரை நழுவாமல் இருக்கவேண்டும் என்பதால், அதன் காரணமாகவே உபாயத்திற்கு உதவியாக இருக்கும். ஆனால், ஆசார்ய அபிமானத்தில் நிலைநிற்கும் அதிகாரிக்கு அந்த அபிமானமே கைதூக்கிவிடுவதால், உபாயத்தில் நிலைநிற்க வேறு ஏதும் அவசியம் இல்லை; ஆகவே இந்த அதிகாரிக்கு ஏற்படும் அறிவு மற்றும் ஒழுக்கம் ஆகிய இரண்டும் ஆசார்யனின் முகமலர்ச்சி என்பதான அடையத்தக்க விஷயத்தை அடைய உதவியாக இருக்கும் என்று கருத்து. இந்தச் சூர்ணையின் இறுதியில் உள்ள "உபேய அங்கமாய் இருக்கும்" என்பதை "உபேயமாய் இருக்கும்" என்றும் சிலர் கொள்வர். இவ்விதம் கொண்டால், இந்த அதிகாரியின் அறிவு மற்றும் ஒழுக்கம் ஆகிய இரண்டும் ஆசார்யன் விரும்புவதாக இருந்தபடி பலன் அளிக்கும் என்று கருத்து.

**அவதாரிகை** - இப்படி ஜ்ஞாநாநுஷ்டாநங்களிரண்டும் ஆசார்ய ப்ரீதி ஹேதுவாக நினைத்துக் குறிகொண்டு வர்த்திக்கு மிவ்வதிகாரிக்கு அவச்யம் நிவர்த்தநீயங்களை யருளிச்செய்வதாகத் திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் நிஷித்தாநுஷ்டாநம் த்யாஜ்ய மென்னுமத்தை அருளிச்செய்கிறார் (இவனுக்கு நிஷித்தாநுஷ்டாநம்) என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதமாகத் தன்னுடைய ஞானம் மற்றும் ஒழுக்கம் ஆகிய இரண்டும் தனது ஆசார்யனுக்கு மகிழ்வை அளிக்கும் என்று எண்ணியபடி வாழ்கின்ற இந்த அதிகாரிக்கு அவசியமாக விலக்கத்தக்கவைகள் எவை என்று கூறத் திருவுள்ளம் பற்றினார். இதனால் முதலில் சாஸ்த்ரங்களில் விலக்கப்பட்டவற்றைத் தள்ளுதல் அவசியமானது என்று கூறுகிறார்.

543. இவனுக்கு நிஷித்தாநுஷ்டாநம் தன்னையும் பிறரையும் நசிப்பிக்கையாலே த்யாஜ்யம்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஏவம்பூதனான விவ்வதிகாரிக்கு பரதார பரிக்ரஹாதி நிஷித்தாநுஷ்டாநம், ஸ்வவிநாசத்தையும் ஸ்வாநுஷ்டாநங்கண்ட பரருடைய விநாசத்தையும் பண்ணுகையாலே பரித்யஜிக்கப்படுமதொன்றென்கை.

**விளக்கம் –** இவ்விதம் உள்ள இந்த அதிகாரிக்கு மற்றவர்களுடைய மனைவியை அடைதல் போன்றதான தாழ்ந்த செயல்கள் தனக்கு அழிவையும், தனது ஒழுக்கங்களைப் பார்த்தபடி உள்ளவர்களுக்கு அழிவையும் உண்டாக்குவதால் கைவிடத்தக்கது என்கிறார்.

454. தான் நசிக்கிறது மூன்றபசாரத்திலும் அந்வயிக்கையாலே; பிறர் நசிக்கிறது தன்னை யநாதரித்தும் தன் அனுஷ்டானத்தை யங்கீகரித்தும்.

**அவதாரிகை** – உபயவிநாசமு மித்தாலே வருகிறபடி யெங்ஙனேயென்ன அருளிச் செய்கிறார் (தான் நசிக்கிறது) என்று தொடங்கி.

**விளக்கம் -** இதன் மூலம் இருவருக்கும் அழிவு ஏற்படுவது எப்படி என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஆசார்யாபிமாநத்திலே யொதுங்கி பகவத் பாகவதாசார்ய விஷயங்கள் மூன்றுக்கு மபிமத விஷயமா யிருக்கிற தான் நசிக்கிறது, அம்மூவர்க்கு மிது அநிஷ்டமாகையாலும், அபசாரமாவது, அநிஷ்டகரணமாகையாலும், அதிக்ரூரமான அபசார த்ரயத்திலு மந்வயிக்கையாலே; பிறர் நசிக்கிறது, சரமபர்வபர்யந்தமாக வந்து நிற்கிற பாகவதோத்தமனான தன்னை நிஷித்தாநுஷ்டாநம் பண்ணினவனென்று அநாதரித்தும், தத்வவித்தான இவனிப்படி செய்கிறான் இதில் தோஷமில்லையாகப் பட்டன்றோ! நமக்குப் பின்னையென்! என்று தன்னுடைய அநுஷ்டாநத்தைத் தாங்க ளங்கீகரித்து மென்கை. அநாதரிப்பார் பாகவத வைபவமறியாதவர்கள், அநுஷ்டாநத்தை யங்கீகரிப்பார் ப்ராப்தாப்ராப்த விவேகசூந்யரானவர்கள். அநுஷ்டாநத்தை அங்கீகரிக்கிறவர்கள் நசிக்கிறார்கள், அநாதரிக்கிறவர்கள் நசிப்பானென், தோஷங்கண்டா லநாதரிக்கலாகாதோ வென்னில்; ராஜபுத்ரனுக்கு தோஷமுண்டானால் ராஜாதான் சிக்ஷித்துக்கொள்ளுமதொழிய அவனை அநாதரித்தவர்கள் மேலே நிக்ரஹம் பண்ணி தண்டிக்குமாப்போலே, ஸ்வாபிமதனான இவனுக்கு தோஷமுண்டானாலும் ஸர்வேச்வரன்றானே திருத்திக் கொள்ளுமதொழிய பிறரநாதரிக்கப் பொறாமையாலே அநாதரித்தவர்களுக்கு விநாசமே பலிக்கையாலே அநாதரிக்கலாகாது. "அபிசேத் ஸுதுராசாரோ பஜதேமா மநந்யபாக், ஸாதுரேவ ஸமந்தவ்யஸ் ஸம்யக் வ்யவஹிதோ ஹி ஸ:" என்று உபாஸக விஷயமாக அருளிச்செய்தபடி கண்டால், எல்லை நிலத்திலே வந்து

நின்ற இவ்வதிகாரி விஷயத்திலவனிருக்கும்படி சொல்ல வேண்டாவிறே; ஆகையால், இப்படி தானும் பிறரும் ரசிக்கும்படி இருக்கையாலே இவனுக்கு நிஷித்தாநுஷ்டாநம் பரித்யாஜ்யமென்ற தாய்த்து.

**விளக்கம்** – ஆசார்ய அபிமானம் என்ற நிலையில் நின்று, ஸர்வேச்வரன் - அவன் அடியார்கள் – ஆசார்யன் ஆகிய முன்று பேருக்கும் விரும்பத்தக்கவனாக உள்ளவன் கெடுவது என்பது அந்த மூவருக்கும் இது விருப்பம் இல்லாத செயல் என்பதாலும், அபசாரம் என்பது விருப்பம் இல்லாதவற்றைச் செய்வதாலும், மிகவும் கொடியதான மூன்று அபசாரங்களிலும் சேருகையாலும் ஆகும் (இங்கு மூன்று அபசாரம் = பகவத் பாகவத, ஆசார்ய அபசாரங்கள்). இதனால் மற்றவர்கள் அழிவது எப்படி? கடைசி நிலையில் வந்து நிற்கும் பாகவதர்களில் சிறந்தவனான தன்னை, “சாஸ்த்ரங்கள் தள்ளியதைச் செய்பவன்” என்று வெறுப்பதாலும், “தத்வஞானம் நிறைந்த இவனே இவ்விதம் செய்கிறான், இவன் இவ்விதம் செய்வது குற்றம் இல்லை என்று இவன் அறிந்ததால் அல்லவோ? ஆக நமக்கும் ஏதும் தீமை நேராது”, என்று எண்ணியவர்களாக இவனுடைய தாழ்ந்த செயல்களை ஏற்று அவர்களும் செய்வதால் ஆகும். அநாதரிப்பவர்கள் என்பவர் பாகவதர்களுடைய பெருமையை அறியாதவர்கள்; “செய்யத்தக்கது, செய்யதகாதது” குறித்து ஏதும் அறியாதவர்கள் ஆவர். இவர்களுடைய ஒழுக்கத்தைப் பின்பற்றுபவர்களும் அழிகிறார்கள். இங்கு ஒரு கேள்வி எழலாம் - “அநாதரிப்பவர்கள் ஏன் அழியவேண்டும்? குற்றங்கள் உள்ளது கண்டால் அநாதரித்து ஒதுங்கலாம் அல்லவோ?”, என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார். ஒரு அரசபுத்ரன் குற்றம் செய்தால் அரசன் அவனைத் தண்டிக்கலாம், ஆனால் அந்த ராஜகுமாரனைத் மற்றவர்கள் தவறாகப் பேசினால் அவர்கள் அரசனுடைய கோபத்துக்கு ஆளாவார்கள் அல்லவோ? இதே போன்று, தான் விரும்பிய இவனிடம் குற்றம் ஏற்பட்டால், ஸர்வேச்வரன் அவனைத் தானே ஒதுக்க முயல்வான் அல்லாமல் மற்றவர்கள் அவனை ஒதுக்குவதைப் பொறுத்துக் கொள்ளமாட்டான் என்பதால் அவனை ஒதுக்குபவர்களுக்கு நாசமே உண்டாகும்; ஆகவே பாகவதனான அவனை ஒதுக்குதல் கூடாது. ஸ்ரீமத் பகவத்கீதையில் (9-30) – அபிசேத் ஸுதுராசாரோ பஜதேமா மநந்யபாக், ஸாதுரேவ ஸமந்தவ்யஸ் ஸம்யக் வ்யவஹிதோ ஹி ஸ: – மிகவும் தாழ்ந்த நடத்தை கொண்டவன் என்றாலும், மற்ற எதனையும் விருப்பாமல் என் பக்தனாக நின்று என்னை மட்டுமே வணங்கி நின்றால், அவன் நல்லவன் என்றே கருதப்படுகிறான்; காரணம் இவன்

சிறந்த ஒழுக்கம் உள்ளவன் - என்றது காண்க. இவ்விதம் பக்தியுடன் உள்ளவர்கள் குறித்து ஸர்வேச்வரன் கொண்டுள்ள நிலைப்பாடை ஆராய்ந்தால், பக்தியின் எல்லையில் நிற்கும் இந்த அதிகாரியின் விஷயத்தில் அவனுடைய நிலைப்பாடு குறித்து உரைக்கவேண்டாம் அல்லவோ? ஆகவே இவ்விதமாகத் தானும் மற்றவர்களும் அழிவதற்கு காரணமாக உள்ளதால் சாஸ்த்ரங்களில் விலக்கப்பட்டதைச் செய்யாமல் கைவிட வேண்டும் என்று கருத்து.

455. விஹிதபோகம் நிஷித்தபோகம்போலே லோகவிருத்தமுமன்று; நரக ஹேதுவுமன்று; ஆயிருக்கச் செய்தே ஸ்வரூப விருத்தமுமாய் வேதாந்த விருத்தமுமாய் ப்ராப்ய ப்ரதிபந்தமுமாய் இருக்கையாலே தியாஜ்யம்.

**அவதாரிகை** - இப்படி பரதாராதிபோகம் ஸ்வபரவிநாசஹேது வாகைக்கடி, சாஸ்த்ர நிஷித்தமாகையிறே; இங்ஙனன்றிக்கே, சாஸ்த்ரவிஹித விஷயமான ஸ்வதார போகத்துக்குக் குறையில்லையென்ன அருளிச்செய்கிறார் மேல் (விஹிதபோகம் என்று தொடங்கி).

**விளக்கம்** - இவ்விதம் மற்றவர்களுடைய மனைவியை அனுபவித்தல் என்பது சாஸ்த்ரத்தால் தள்ளப்பட்டது என்பதால் அல்லவோ அந்த செயல்கள் தன்னையும் மற்றவரையும் அழிக்கின்றன; இவ்விதம் அல்லாமல் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டதான தனது மனைவியை அனுபவித்தல் என்பதற்கு எந்தவிதமான தோஷமும் இல்லை அல்லவோ என்ற கேள்வி எழ, அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, விசிஷ்ட வேஷவிஷயியான சாஸ்த்ரத்திலே விதிக்கப்பட்ட ஸ்வதாரத்தில் போகம், தாத்ருச சாஸ்த்ர நிஷித்தமான பரதார பரிக்ரஹம் போலே லோக விருத்தமுமன்று, செம்பினாலியன்ற பாவையைத் தழுவுகை முதலான கோர துக்காநுபவம் பண்ணும் நரகஹேதுவுமன்று; இப்படி ப்ரத்யக்ஷ பரோக்ஷ ஸித்தங்களான லோக விருத்தத்வ நரகஹேதுத்வங்க ளிரண்டு மற்றிருக்கச்செய்தே, அநந்ய போகத்வ ஸ்வரூபத்துக்கு விருத்தமுமாய், “சாந்தோதாந்த உபரத ஸ்திதிக்ஷுஃஸ் ஸமாஹிதோ பூத்வா ஆத்வந்யேவாத்மாநம் பச்யேத்” இத்யாதிகளாலும் திருமந்த்ராதிகளாலும், உபாஸகனோடு ப்ரபந்நனோடு வாசியற இருவர்க்கும் விஷயபோகமாகா

தென்னுமிடத்தை ப்ரதிபாதிக்கிற வேதாந்தத்துக்கு விருத்தமுமாய், தோஷ தர்சனத்தாலும் அப்ராப்தி தர்சநத்தாலும் விஷயபோகத்தை யருவருத்திருக்கு மாசார ப்ரதாநரான சிஷ்டர்களாலே ஹேயமென்று நிந்திக்கப்பட்டிருப்பதுமாய், அப்ராப்த விஷய விரக்தி ப்ரியனான வாசார்யனுக் கநபிமதமாகையாலே ஆசார்ய முக கமல விகாஸாநுபவரூப ப்ராப்யத்துக்கு ப்ரதிபந்தகமுமாய், இப்படி அநேகாநர்த்தாவஹமா யிருக்கையாலே இவ்வதிகாரிக்கு பரித்யாஜ்யமென்றபடி.

**விளக்கம்** - சரீரத்துடன் சேர்ந்த ஆத்மா குறித்து உரைக்கப்படும் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டதான தனது மனைவியிடம் அனுபவிக்கும் இன்பம் என்பது அதே சாஸ்த்ரங்களால் தள்ளப்பட்டதான மற்றவர்கள் மனைவியை அனுபவித்தல் என்பது போன்று உலகவாழ்க்கையுடன் முரண்பட்டதல்ல. அதே போன்று தனது மனைவியை அனுபவித்தல் என்பது பெரியதிருமொழி (1-6-4) – செம்பினால் இயன்ற பாவையை - மற்றவர் மனைவியை அனுபவிப்பவர் நரகம் போகும்போது அங்கு செம்பினால் செய்யப்பட்ட தீயில் உள்ள பெண் உருவத்தைக் காட்டி அணைக்கக் கூறுவர் – என்பதற்கு ஏற்ப நரகத்திற்கு இட்டுச் செல்வதற்கும் காரணம் ஆகாது. இவ்விதம் கண்களால் காணப்படவல்ல உலக நடையுடன் மாறுபடுதல், சாஸ்த்ரங்கள் மூலம் மட்டுமே காணவல்ல நரகத்திற்குக் காரணமாதல் ஆகிய இரண்டும் தனது மனைவியை அனுபவித்தால் இல்லாமல் இருந்தாலும்; மற்றவர் மனைவியை அனுபவித்தல் என்பது உலகவழக்கத்துக்கு முரணானது, நரகக்திற்குக் காரணமாகவல்லது என்று இருந்தாலும்; அவை இரண்டுமே ஆத்மஸ்வரூபத்திற்கு முரண்பட்டதாகவே உள்ளன. எப்படி என்றால் ப்ருகுவல்லி – சாந்தோதாந்த உபரத ஸ்திதிக்ஷுஸ் ஸமாஹிதோ பூத்வா ஆத்வந்யேவாத்மாநம் பச்யேத் - ஐந்து இந்த்ரியங்கள், மனம் ஆகியவற்றை அடக்கியவனாக, இவை இரண்டையும் அடக்கியதால் உண்டாகும் செருக்கு அற்றவனாக, உலகவிஷயங்களில் ஈடுபாடு அற்றவனாக, தனது ஆத்மாவின் உள்ளே இருக்கும் பரமாத்மாவைக் காணவேண்டும் - என்பது போன்ற வேதவாக்கியங்கள் மற்றும் திருமந்த்ரம் போன்றவற்றால் பக்தியில் ஆழ்ந்த நிலையில் உள்ள உபாஸகன் மற்றும் ப்ரபந்நன் ஆகிய இருவருக்குமே பெண்கள் மூலம் கிட்டும் இன்பம் ஆகாது என்று கூறும் ப்ரமாணங்களுக்கு முரணாக உள்ளதால் ஆகும். மேலும் இந்தச் செயல்கள் பெண்களிடம் உள்ள தோஷத்தை உணர்த்துவதாலும், பெண்கள் மூலம் கிட்டும் இன்பத்தை அருவறுப்புடன் காணும் நல்ல ஒழுக்கம் உள்ள சான்றோர்களால் “தள்ளத்தக்கது” என்று

பழிக்கப்பட்டதாலும், பெண்கள் விஷயத்தில் ஈடுபாடு இல்லாமை என்பதையே விரும்புகின்ற ஆசார்யனுக்கு விருப்பம் இல்லாத செயல் என்பதாலும், ஆசார்யனுடைய திருமுகம் என்னும் தாமரையின் மலர்ச்சியை அனுபவிக்கவல்ல பேற்றுக்குத் தடையாக உள்ளதாலும் - இப்படியாகப் பலவிதமான தீமைகளை உண்டாக்கவல்லதால் இந்த அதிகாரி அடியுடன் கைவிடத்தக்கது என்று கருத்து.

456. போக்யதாபுத்தி குலைந்து தர்மபுத்த்யா ப்ரவர்த்தித்தாலும் ஸ்வரூபம் குலையும்.

**அவதாரிகை** - போக்யதா புத்தியைவிட்டு தர்மபுத்யா ப்ரவர்த்திக்குமளவில் இவை யொன்றுமில்லையே யென்ன அருளிச்செய்கிறார் மேல் (போக்யதா புத்தி குலைந்து) என்று தொடங்கி.

**விளக்கம் -** தனது மனைவியை அனுபவிக்கும்போது, “இது இன்பம்” என்று எண்ணாமல் “இது இல்லற தர்மம்” என்று எண்ணினால், இது போன்ற தோஷம் வராது அல்லவோ என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, விஹித விஷய ப்ரவ்ருத்தியில் காமுகதயாவரும் போக்யதா புத்தியை விட்டு, உபாஸகரான மஹர்ஷிகள் தொடக்கமான சிஷ்டர் பைத்ருகருண மோசக ப்ரஜோத்பாதநார்த்தமாகவும், ஸ்நாந திவஸத்தி லங்கீகரியாவிடில் ப்ரூணஹத்யாதி தோஷமுண் டென்னு மத்தைப் பற்றவும் தர்மபுத்த்யா ப்ரவர்த்திக்கு மாப்போலே இவனுமப்படி தர்மபுத்த்யா ப்ரவர்த்தித்தாலும், ஸித்த தர்மநிஷ்டனான இவனுக்கு அந்ய தர்மாந்வயம் விரோதியாகையாலே அநந்யோபயத்வ ரூபமான ஸ்வரூபம் குலையுமென்கை. இத்தால், போக்யதா புத்த்யா ப்ரவர்த்திக்கில் அநந்ய போகத்வ ரூபமான ஸ்வரூபம் குலையுமோபாதி, தர்மபுத்த்யா ப்ரவர்த்திக்கில் அநந்யோபாயத்வ ரூபமான ஸ்வரூபம் குலையும்; ஆனபின்பு ஒருபடியாலு மிவ்வதிகாரிக்கு விஹித விஷய ப்ரவ்ருத்தி யாகாதென்றதாய்த்து. ஆகையால் ஏதேனு மொருபடி யந்வயித்தாலும் ஸ்வரூபஹாநி தப்பாது, ஆனபின்பு பரித்யஜிக்கவேணு மென்னுமிடம் நிச்சிதமிறே.

**விளக்கம் -** சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டதான மனைவியிடம் சேரும்போது, காமம் மூலம் உண்டாகும் இன்பத்தைக் கைவிட்டு; பக்தியில் நிலைநின்ற முனிவர்கள் உள்ளிட்ட சான்றோர்கள், “பித்ரு கடன் தீர்ப்பதற்காகப் புத்திரர்களைப் பெறவேண்டும்” என்ற காரணத்தினாலும், வீட்டுக்கு விலக்காகிவிட்டு நீராடிய நாளில் மனைவியுடன் சேராவிட்டால் கர்ப்பத்தை அழித்தல் போன்ற கொடிய குற்றங்கள் வந்து சேரும் என்ற காரணத்தாலும், “தர்மம்” என்ற எண்ணத்துடன் மனைவியுடன் சேர்வது போன்று, இவனும் தர்மம் என்ற எண்ணத்துடன் சேரக்கூடும். இது தர்மம் என்றாலும், ஸித்ததர்மம் என்பதான “ஸர்வேச்வரன் மட்டுமே உபாயம்” என்பதால் நிலைநிற்கும் ப்ரபந்நன் ஒருவனுக்கு மற்ற தர்மங்களைக் கடைப்பிடித்தல் என்பது முரண்பட்டதால், ஸர்வேச்வரனை மட்டுமே உபாயம் என்று எண்ணியுள்ள ஸ்வரூபம் அழியும் என்று கருத்து. ஆகவே “இன்பம் உண்டாக்குவது” என்ற எண்ணத்துடன் மனைவியிடம் சேர்ந்தால் ஸர்வேச்வரனையே பொருளாகக் கொண்டுள்ள ஸ்வரூபம் அழிவது போன்று, தர்மம் என்ற எண்ணத்துடன் மனைவியுடன் சேர்ந்தால், ஸர்வேச்வரனையே உபாயம் என்று கொண்டுள்ள ஸ்வரூபம் அழியும். ஆகவே எவ்விதத்தில் ஆராய்ந்தாலும் இந்த அதிகாரிக்குத் தனது மனைவியுடன் சேர்தல் என்ற இன்பம் ஆகாது என்றாகிறது. எனவே எந்த எண்ணத்தில் மனைவியுடன் சேர்ந்தாலும், ஸ்வரூபம் அழிதல் என்பது உறுதியாகிறது. ஆகவே அதனை விலக்கவேண்டும் என்று கருத்து.

457. “க்ஷேத்ராணி மித்ராணி” என்கிற ச்லோகத்தி லவஸ்தை பிறக்கவேணும் ஸ்வரூபம் குலையாமைக்கு.

**அவதாரிகை -** இப்படி ஸ்வரூபஹாநி வருமென்னும் பயத்தாலே விடுகிறவளவு போராது, ப்ராப்த விஷயப்ரவண சித்ததையாலே ப்ராக்ருத ஸகல போக்ய வஸ்துக்களும் ப்ரதிகூலமாய்த் தோற்று மவஸ்தை பிறக்கவும் வேணும் ஸ்வரூபம் குலையாமைக் கென்கிறார் மேல் (க்ஷேத்ராணி) என்று தொடங்கி.

**விளக்கம் -** இவ்விதம் தனது ஆத்மஸ்வரூபத்துக்குக் கெடுதல் ஏற்படும் என்பதால் உண்டாகும் அச்சம் காரணமாக மட்டும் மனைவியிடம் ஈடுபடுதல் முதலிய விஷயங்களைத் தவிர்த்தால் போதாது; ஸ்வரூபத்துக்கு ஏற்ற விஷயமாக உள்ள ஸர்வேச்வரனிடம் ஈடுபடவேண்டும், இந்த உலகில் உள்ள மற்ற பொருள்கள் அனைத்தும்

வெறுக்கத்தக்கவை என்ற சிந்தனை ஏற்படவேண்டும் - இந்த நிலைகள் ஆத்மஸ்வரூபம் குலையாமல் இருப்பதற்கு அவசியமாகும் என்று இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “க்ஷேத்ராணி மித்ராணி தநாநி நாத புத்ராச்ச தாரா: பசவோ க்ருஹாணி, த்வத் பாதபத்ம ப்ரவணாத்ம வ்ருத்தேர் பவந்தி ஸர்வே ப்ரதிகூல ரூபா:” என்று பேரருளாளரான பெருமாளைக் குறித்து ப்ரஹ்மா விஜ்ஞாபித்த ச்லோகத்திற்கு சொல்லுகிற க்ஷேத்ர மித்ர தநாதிகளான ஸமஸ்த வஸ்துக்களு மக்நி கல்பமாய்த் தோற்றும்படியான அவஸ்தை பிறக்கவேணும் ஸ்வரூப ப்ரச்யுதி பிறவாமைக் கென்கை. இந்தச் ச்லோகார்த்தத்தை “நல்ல புதல்வர்” இத்யாதியாலே அருளாளப்பெருமாளெம் பெருமானாரு மருளிச்செய்தாரிறே.

**விளக்கம்** - ஹஸ்திகிரி மாஹாத்மயத்தில் – க்ஷேத்ராணி மித்ராணி தநாநி நாத புத்ராச்ச தாரா: பசவோ க்ருஹாணி, த்வத் பாதபத்ம ப்ரவணாத்ம வ்ருத்தேர் பவந்தி ஸர்வே ப்ரதிகூல ரூபா: – எனது எஜமானனே! நிலங்கள், நண்பர்கள், செல்வம், புத்திரர்கள் மனைவி, பசுக்கள், வீடுகள் போன்ற அனைத்தும் உன்னுடைய தாமரை போன்ற திருவடிகளில் ஈடுபட்டு நிற்பவர்களுக்கு விரோதிகளாக உள்ளன - என்று தேவராஜனைக் குறித்து நான்முகன் உரைத்த ச்லோகத்தில் கூறப்படுவதான நிலை, உறவுகள், செல்வம் போன்ற அனைத்தும் நெருப்பு போன்று சுடுவதாகத் தோன்றவேண்டும் என்ற நிலை ஆத்மஸ்வரூபம் குலையாமைக்காக ஏற்படவேண்டும் என்று கருத்து. இதே ச்லோகத்தின் கருத்தை அருளாளப்பெருமாள் எம்பெருமானார் தனது ஞானசாரத்தில் (19) – நல்ல புதல்வர் - என்று பாசுரத்தில் அருளிச்செய்தார்.

458. ப்ராப்யபூமியில் ப்ராவண்யமும், த்யாஜ்யபூமியில் ஜிஹாஸையும், அநுபவாலாபத்தில் ஆத்மதாரணா யோக்யதையும்; உபாயசதுஷ்டயத்துக்கும் வேணும்.

**அவதாரிகை** - இனிமேல் ப்ராப்ய பூமியில் ப்ராவண்யாதி த்ரயமு மிவனுக் கவச்யாபேக்ஷித மென்னுமத்தை அறிவிக்கைக்காக, அவற்றினுடைய உபாய சதுஷ்டய ஸாதாரண்யத்தை அருளிச்செய்கிறார் (ப்ராப்ய பூமியில்) என்று தொடங்கி.

**விளக்கம் -** இனி அடையத்தக்கதாக உள்ள பரமபதத்தில் இந்த அதிகாரிக்கு ஈடுபாடு மிகவும் அவசியம் என்பதை உணர்த்துவதற்காக கர்மம், ஞானம், பக்தி, ப்ரபத்தி ஆகிய நான்கையும் கைக்கொள்ளும் நான்குவிதமான அதிகாரிகளுக்குப் பொதுவானவற்றை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (ப்ராப்ய பூமியாவது) - தனக்கு வகுத்த சேஷியான விஷய மெழுந்தருளி யிருக்கிற தேசம்; (தத்ப்ராவண்யமாவது), அத்தேசத்தைக் கிட்டியல்லது தரியாத அதிமாத்ரமான வாசை. (த்யாஜ்ய பூமியாவது), அவ்விஷயத்தை அகன்றிருக்கைக் குடலான தேசம்; (தஜ்ஜிஹாஸையாவது), இத்தைவிட்டே நிற்கவேணுமென்னு மிச்சை. (அநுபவாலாபத்தி லாத்ம தாரணா யோக்யதையாவது), வகுத்த சேஷியான விஷயத்தினுடைய விக்ரஹாத்யநுபவம் பெறாதபோது, தேஹ தாரணமான போஜந மில்லாவிடில் தேஹம் தரியாதாப்போலே தான் தரித்திருக்கைக்கு யோக்ய னன்றிக்கே யிருக்கை. (உபாய சதுஷ்டயத்துக்கும் வேணும்) என்றது, இவையித்தனையும், உபாய சதுஷ்டயாதிகாரிகளுக்கும் அதிகாராநுகுணமாக வேணுமென்றபடி.

**விளக்கம் -** (ப்ராப்ய பூமியாவது) - தனது ஆத்மஸ்வரூபத்துக்கு ஏற்ற ஸ்வாமியாக உள்ள ஸர்வேச்வரன் எழுந்தருளியுள்ள இடமான பரமபதம். (தத்ப்ராவண்யமாவது) - அந்தப் பரமபதத்தை அடைந்தால் மட்டுமே உயிர் தரிக்க இயலும் என்று எழுகின்ற மிகுதியான ஆசை. (த்யாஜ்ய பூமியாவது) ஸர்வேச்வரனை விட்டு அகன்று நிற்பதற்குக் காரணமாக உள்ள இந்தப் பூமி. (தஜ்ஜிஹாஸையாவது) – இந்தப் பூமியை விட்டு அகன்றே தீரவேண்டும் என்ற ஆசை. (அநுபவாலாபத்தி லாத்ம தாரணா யோக்யதையாவது) – ஸ்வரூபத்துக்கு எஜமானாகிய ஸர்வேச்வரனுடைய திருமேனியை அநுபவிக்க இயலாதபோது, சரீரத்தைக் காப்பாற்றுவதற்குத் தேவையான உணவு போன்றவை கிட்டாத சரீரம் உயிர் வாழாதது போன்று, தான் உயிர் வாழத் தகுதி அற்றவன் என்றிருத்தல். (உபாய சதுஷ்டயத்துக்கும் வேணும்) - இந்த மூன்றும், நான்குவிதமான உபாயங்களைக் கைக்கொண்ட நான்குவிதமான அதிகாரிகளுக்கு, அவரவர்களுக்குத் தேவையான அதிகாரத்தை ஏற்படுத்த அவசியமாகிறது என்று கருத்து.

**வ்யாக்யானம் -** (உபாய சதுஷ்டயமாவது), "ஸ்வஸ்வாதந்த்ர்ய பயத்தாலே" என்று தொடங்கி கீழருளிச் செய்த பக்தி ப்ரபத்திகளும், ஆசார்ய விஷயத்தில் ஸ்வகத பரகத

ஸ்வீகாரங்களும், பகவத் விஷயத்தில் ஸ்வகத ப்ரகத ஸ்வீகாரங்களுமாகவும். இதிலும் முற்பட்ட யோஜனைக் கௌசித்யமுண்டு; கீழே நாலுபாயத்தையும் சேர இவர்தாமே யருளிச் செய்ததுக்குச் சேருகையாலே.

**விளக்கம்** – (உபாய சதுஷ்டயமாவது) - சூர்ணை 444ல் கூறப்பட்ட "ஸ்வஸ்வாதந்த்ர்ய பயத்தாலே" என்று தொடங்கி கீழே அருளிச்செய்யப்பட்ட பக்தியும், ப்ரபத்தியும், ஆசார்யனைத் தான் பற்றுகின்ற பற்றும், ஆசார்யனால் தான் பற்றப்படும் பற்றும் உபாய சதுஷ்டயம் – நான்கு உபாயங்கள் - என்று கருத்து. அல்லது பக்தி, ப்ரபத்தி, ஸர்வேச்வரனைத் தான் பற்றும் பற்று, ஸர்வேச்வரனால் தான் பற்றப்படும் பற்று என்றும் கொள்ளலாம். இந்த இரண்டுவிதமான பொருள்களில், முதலில் கூறப்பட்ட நான்கே பொருத்தமாக உள்ளதாகும். இதன் காரணம் முதலில் கூறப்பட்ட நான்கினைக் குறித்தே இவர் முன்பு அருளிச்செய்துள்ளதால் ஆகும்.

**வ்யாக்யானம்** - இதில் பக்தி ப்ரபத்தி நிஷ்டரிருவர்க்கும், "மாக வைகுந்தம் காண்பதற் கென்மன மேகமெண்ணும்" என்கிற ப்ராப்ய பூமியான பரமபதத்திலே ப்ராவண்யமும், "வரம் ஹுதவஹஜ்வாலா பஞ்ஜராந்தர் வ்யவஸ்திதி: ந சௌரிசிந்தா விமுக ஜந ஸம்வாஸ வைசஸம்", "கொடுவுலகங் காட்டேல்" என்னும்படி, ப்ராப்ய வஸ்துவை யிழந்து ப்ராக்ருத மத்யே யிருக்கைக் குடலான ஸம்ஸாரமாகிற த்யாஜ்ய பூமியில் ஜிஹாசையும், "உன்னை விட்டொன்று மாற்றகிற்கின்றிலேன்" என்கிறபடியே, பகவதநுபவாலாபத்தி லாத்ம தாரணா யோக்யதையு மவச்யமுண்டாக வேணும். ஆசார்ய விஷயத்தில் ஸ்வகத பரகத ஸ்வீகார நிஷ்டரான விருவருக்கும் (எல்லாம் வகுத்தவிடமே) என்றிருக்கையாலே, ஆசார்ய னெழுந்தருளி யிருந்த தேசம் ப்ராப்ய பூமியாய், அவனைப் பிரிந்திருக்கிற விடம் த்யாஜ்ய பூமியாய், அவனுடைய விக்ரஹாதிகளே அநுபவ விஷயமு மாகையாலே, ப்ராப்ய பூமியில் ப்ராவண்யாதிகள் மூன்று மிதுக்கநுகுணமாக அவச்ய முண்டாக வேணுமென்று, அதிகாராநுகுணம் விபஜித்துச் சொல்லக்கடவது.

**விளக்கம்** – இவற்றில் பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகிய இரண்டில் நிலையாக நிற்பவர்கள் இருவருக்கும் கீழே உள்ள நிலைப்பாடு அவசியம் வேண்டும்:

- திருவாய்மொழி (9-3-7) - மாக வைகுந்தம் காண்பதற் கென்மன மேகமெண்ணும் - என்று கூறப்படுவதான அடைவதற்கு ஏற்ற இடமான பரமபதத்தின் மீது அளவற்ற ஈடுபாடு.

- யௌநகஸம்ஹிதை – வரம் ஹுதவஹஜ்வாலா பஞ்ஜராந்தர் வ்யவஸ்திதி: ந சௌரிசிந்தா விமுக ஜந ஸம்வாஸ வைசஸம் - க்ருஷ்ணன் மீது ஆசை இல்லாத மனிதர்களுடன் சேர்ந்து வாழ்வதைக் காட்டிலும், மிகுந்த காட்டுத்தீ போன்ற ஒரு கூட்டிற்குள் வாழ்வதே சிறந்தது - என்றும், திருவாய்மொழி (4-9-7) – கொடுவுலகங் காட்டேல் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அடையத்தக்க ஸர்வேச்வரனை இழந்து இந்த உலகில் வாழ்வதற்குக் காரணமான ஸம்ஸாரம் என்ற கைவிடத்தக்க பூமி மீது வெறுப்பு

- திருவாய்மொழி (5-7-1) – உன்னை விட்டொன்று மாற்றகிற்கின்றிலேன் - என்று கூறுவது போன்று ஸர்வேச்வரன் குறித்த அனுபவம் கிட்டாதபோது ஆத்மாவைத் தரிப்பதற்குத் தேவையான சக்தியற்று இருத்தல்.

ஆசார்யன் விஷயத்தில் தான் பற்றும் பற்று, ஆசார்யன் தன்னைப் பற்றும் பற்று ஆகிய இரண்டிலும் நிலைநிற்கும் இருவருக்கும், சூர்ணை 450ல் – எல்லாம் வகுத்தவிடமே - என்று கூறப்பட்டதால், ஆசார்யன் எழுந்தருளியுள்ள இடமே அடையத்தக்க இடமாகவும், ஆசார்யனைப் பிரிந்துள்ள இடமானது கைவிடத்தக்க இடமாகவும், ஆசார்யன் திருமேனி போன்றவையே அனுபவிக்க வேண்டிய விஷயங்களாக உள்ளதாலும், அடையத்தக்க வேண்டிய இடத்தில் ஈடுபாடு முதலானவை மூன்றும் அவசியம் உண்டாகவேண்டும். இவற்றை அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்றபடி பிரிக்கவேண்டும்.

**வ்யாக்யானம்** - அன்றிக்கே, “மதுரகவி சொன்ன சொல் நம்புவார்பதி வைகுந்தம்” என்று, தாமருளிச் செய்த ப்ரபந்தத்தை அப்யஸித்தவர்களுக்கு வாஸஸ்தாநம் ததீய வைபவமே நடக்கும் ஸ்ரீவைகுண்டமென்று ஸ்ரீமதுரகவி யாழ்வா ரருளிச்செய்கையாலும், சரமபர்வ நிஷ்டரானவர்களுக்கும் ஸ்வாசார்யனுகந்த பகவத் விஷயத்தில் பரிபூர்ணாநுபவாதிகள் ஸித்திப்ப தவ்விபூதியிலேயாகையாலும் ப்ராப்ய பூமி பரமபதம்; இருள் தருமா ஞால மாகையாலே அதுக்கு விரோதியான ஸம்ஸாரம் த்யாஜ்ய பூமி. (அநுபவாலாபத்தி லாத்ம

தாரணா யோக்யதையாவது), ஸ்வாசார்ய விஷயத்திலும் அவனுகந்த பகவத் விஷயத்திலு முண்டான வநுபவம் பெறாத வளவில் நான் தரித்திருக்கமாட்டாமை என்றிங்ஙனே யோஜிக்கவுமாம்.

**விளக்கம்** – அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். கண்ணிநுண் சிறுத்தாம்பு (10) - மதுரகவி சொன்ன சொல் நம்புவார்பதி வைகுந்தம் – என்பதற்கு ஏற்ப தான் அருளிச் செய்ததான கண்ணிநுண் சிறுத்தாம்பு என்ற பத்துப் பாசுரங்களையும் கற்றவர்களுக்கு இருப்பிடம் பகவானின் அடியார்களுடைய மேன்மை ஓங்கி நிற்கும் இடமான ஸ்ரீவைகுண்டமே என்று மதுரகவியாழ்வர் அருளிச்செய்கையாலும், எல்லைநிலமான ஆசார்ய அபிமானம் என்பதில் நிலைநிற்பவர்களுக்கு தனது ஆசார்யன் மகிழ்வதான பகவத் விஷயத்தில் நிறைந்த அனுபவம் போன்றவைகள் கிட்டுவது அத்தகைய பரமபதத்தில் மட்டுமே என்பதாலும், அந்தப் பரமபதமே அடையவேண்டிய இடம் (ப்ராப்யபூமி) என்று கொள்க. திருவாய்மொழி (10-6-1) - இருள் தரு மாஞாலம் - என்பதற்கு ஏற்றபடி இருப்பதும், அத்தகைய பகவத் அனுபவங்களுக்குத் தடையாக உள்ளதும் ஆகிய ஸம்ஸாரம் என்பது (த்யாஜ்ய பூமி) கைவிடத்தக்க இடமாகும். (அநுபவாலாபத்தி லாத்ம தாரணா யோக்யதையாவது) – தனது ஆசார்யன் விஷயத்திலும், ஆசார்யன் மகிழும் ஸர்வேச்வரன் விஷயத்திலும் ஏற்பட்ட அனுபவம் கிட்டாதபோது, தன்னால் உயிர் தரிக்க இயலாத நிலை என்றும் பொருள் கொள்க.

459. “பழுதாகா தென்றறிந்தேன்” என்கிற பாட்டை பூர்வோபாயத்துக்கு ப்ரமணமாக அநுஸந்திப்பது.

**அவதாரிகை** - உக்தோபாய சதுஷ்டயத்திலும் பகவத் விஷயத்தை யவலம்பித்திருக்கிற பக்தி ப்ரபத்திகளாகிற உபாய த்வயமு மிவ்வதிகாரிக்கு நழுவி நின்ற ப்ராகாரத்தைக் கீழருளிச் செய்த வநந்தரம் “ஆசார்யனையும் தான் பற்றும் பற்று” என்றும், “ஆசார்யாபிமாநமே யுத்தாரகம்” என்று மருளிச்செய்த ஆசார்ய விஷயத்தில் ஸ்வகத பரகத ஸ்வீகார ரூபோபாய த்வயத்துக்கு ப்ரமாண தர்சநம் பண்ணுவிக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் ஸ்வகத ஸ்வீகாரோபாயத்துக்கு ப்ரமாணம் காட்டுகிறார் (பழுதாகாது) என்று தொடங்கி.

**விளக்கம்** - மேலே கூறப்பட்ட நான்குவிதமான உபாயங்களில், ஸர்வேச்வரனைப் பற்றி நிற்பதான பக்தி மற்றும் பரபக்தி ஆகிய இரண்டு உபாயங்களும் இப்படிப்பட்ட உபாயங்களைக் கைக்கொள்ளும் அதிகாரிகளுக்கு நழுவுகின்ற விதத்தைச் சூர்ணைகள் 444 மற்றும் 445ல் அருளிச்செய்தார். அதன் பின்னர் சூர்ணை 446ல் "ஆசார்யனையும் தான் பற்றும் பற்று" என்றும், 447ல் "ஆசார்யாபிமாநமே யுத்தாரகம்" என்றும் அருளிச் செய்யப்பட்ட ஆசார்ய விஷயத்தில் தான் பற்றும் பற்று, ஆசார்யன் தன்னைப் பற்றும் பற்று என்பதான இரண்டு உபாயங்களுக்கும் ஏற்ற ப்ரமாணங்களை உரைக்கவேண்டும் என்று திருவுள்ளம் பற்றுகிறார். இவற்றில் முதலில் ஆசார்யனைத் தான் பற்றும் பற்று உபாயமாதல் என்பதற்கு ப்ரமாணம் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அமோகமா யிருப்பதோ ருபாயமறிந்தேன்; ஆச்ரயிப்பார்க்கு ஸமாச்ரய ணீயனாய்க் கொண்டு திருப்பாற்கடலிலே கண் வளர்ந்தருளுகிற வவனுடைய திருவடிகளைத் தப்பாத ப்ரகாரத்தை நினைத்து நாடோறு மநுகூல வ்ருத்தியைப் பண்ணிக் கொண்டு போரும் ஜ்ஞாநாதிகரைக் கண்டு தங்களுக் குத்தாரகராக வாச்ரயித் துஜ்ஜீவிக்கு மவர்கள், ஆத்மாவோ டவிநாபூதமான பாபத்தைப் போக்கி ஸ்ரீவைகுண்டத்தில் திருவாசல் திறந்து அங்கே ஸம்ருத்தமான ஜ்ஞாநாதிகளை யுடையராய் ததீய கைங்கர்ய நிரதராய்க் கொண்டு வ்யாவ்ருத்தரா யிருப்பர் என்று பரமாப்தரான திருமழிசைப்பிரா னருளிச்செய்த "பழுதாகா தென்றறிந்தேன்" என்கிற பாட்டை ஆசார்ய விஷயத்தில் முற்படச் சொன்ன ஸ்வகத ஸ்வீகாரமாகிற வுபாயத்துக்கு ப்ரமாணமாக வநுஸந்திப்ப தென்கை. இதில் ஸ்வகத ஸ்வீகார மஹங்கார கர்ப்பதயா அவத்யகரமா யிருந்ததே யாகிலும் பலஸித்தியில் வந்தால் பழுதுபோகாதென்னுமிடம் சொல்லிற்றாய்த்து, "குருணா யோபிமந்யேத குரும் வா யோபிமந்யதே, தாவுபௌ பரமாம் ஸித்திம் நியமா துபகச்சத:" என்று, பரகத ஸ்வீகாரத்தோபாதி ஸ்வகத ஸ்வீகாரத்துக்கும் பலம் தப்பாதென்னுமிடம் பாரத்வாஜ ஸம்ஹிதையிலும் சொல்லப்பட்டதிறே.

**விளக்கம்** - இங்கு நான்முகன் திருவந்தாதி (89) – பழுதாகா தென்றறிந்தேன் - என்ற பாசுரத்தை ப்ரமாணம் காண்பிக்கிறார். அந்தப் பாசுரத்திற்கான பொருளை அருளிச் செய்கிறார் - வீணாகாமல் இருப்பதான ஓர் உபாயத்தை அறிந்தேன். தன்னை அடைபவர்களுக்கு நன்றாக அடையத்தக்கவனாகத் திருப்பாற்கடலில் கண்வளரும் ஸர்வேச்வரனுடைய திருவடிகளை விட்டு அகலாத வழியை எண்ணியபடி ஒவ்வொரு

நாளும் ஸர்வேச்வரனுக்கு மட்டுமே கைங்கர்யம் செய்தபடி உள்ள ஞானத்தில் சிறந்தவர்கள் இருக்கிறார்கள்; தங்களைக் கரையேற்றத் தயாராக உள்ள அவர்களைக் கண்டு, அவர்களை அண்டி கரையேற எண்ணுபவர்கள், ஆத்மாவோடு பிரிக்க இயலாதபடி கலந்துள்ள பாவங்களை நீக்கி, ஸ்ரீவைகுண்டத்தின் வாயிலைத் திறந்து உள்ளே சென்று அங்கு ஞானம் நிறைந்தவர்களாக இருப்பார்கள்; இங்கு ஸர்வேச்வரனுக்குக் கைங்கர்யம் செய்யும் அடியார்களுக்குக் கைங்கர்யம் செய்தபடி, மிகவும் உயர்ந்தவராக இருப்பார்கள் - என்று நம்பத் தகுந்தவர்களில் உயர்ந்த திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதியில் (89) – பழுதாகா தென்றறிந்தேன் – அருளிச்செய்தார். இதனை ஆசார்ய விஷயத்தில் முதலில் கூறப்பட்டதான "தான் ஆசார்யனைப் பற்றும் பற்று" என்ற உபாயத்துக்கு ப்ரமாணமாகக் கொள்ளவேண்டும். இதன் மூலம் "தான் பற்றும் பற்று" என்பது அஹங்காரத்தை உள்ளடக்கியதால் தோஷத்தோடு கூடியது என்ற தாழ்வை உண்டாக்கவல்லது என்றாலும், பலன் அளிக்கும் விஷயத்தில் தவறிப் போகாது என்று கூறப்பட்டது. பாரத்வாஜ ஸம்ஹிதையில் – குருணா யோபிமந்யேத குரும் வா யோபிமந்யதே, தாவுபௌ பரமாம் ஸித்திம் நியமா துபகச்சத: - ஆசார்யனால் யார் விரும்பப்படுகிறானோ, ஆசார்யனை யார் விரும்புகிறானோ அவர்கள் இருவரும் முறையாகப் பரமபதம் அடைகிறார்கள் - என்று, ஆசார்யன் பற்றும் பற்று போன்றே, ஆசார்யனை சிஷ்யன் பற்றுதல் என்பதும் தவறாமல் பலன் அளிக்கும் என்று கூறப்பட்டது காண்க.

460. "நல்லவென் தோழி", "மாறாய தானவனை" என்கிற பாட்டுக்களையும் ஸ்தோத்ரத்திலே முடிந்த ச்லோகத்தையும் "பசுர் மநுஷ்ய:" என்கிற ச்லோகத்தையும் இதுக்கு ப்ரமாணமாக அநுஸந்திப்பது.

**அவதாரிகை** - இனிமேல் பரகத ஸ்வீகாரமாகிற பரமோபாயத்துக்கு ப்ரமாணங்கள் பலவற்றையும் தர்சிப்பித்தருளுகிறார் (நல்லவென் தோழீ) என்று தொடங்கி.

**விளக்கம்** – அடுத்து ஆசார்யன் சிஷ்யனைப் பற்றும் பற்றான பரகத ஸ்வீகாரம் என்பதான உயர்ந்த உபாயத்துக்குப் பல ப்ரமாணங்கள் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, தோழியானவள் இவள் தனக்கு பேற்றுக்குடலாக நினைத்திருப்பது, அவன் “நத்யஜேயம்” என்கிற வார்த்தையையும், பெரியாழ்வார் வயிற்றிற் பிறப்பையுமாய்த்து, இப்போ தவன் வார்த்தை தனக்குப் பலியாத மாத்ரத்தைக் கொண்டு இது தன்னிலு மதிசங்கை பண்ணா நின்றாள். இனி இவளெங்ஙனே ஜீவித்துத் தலைக்கட்டப் புகுகிறாளென்னு மிழவு தோற்றவிருக்க அவளைப் பார்த்து, என்னிலு மென்னிழவுக்கு நோவுபடும்படி ஸ்நிக்தையான வென்னுடைய தோழீ! அநந்தசாயியாய் அத ஏவ ஸர்வஸ்மாத்பரரா யிருக்கிறவர், அதுக்குமேல் ச்ரிய:பதிகளாய் ஒருவருக்கு மெட்ட வொண்ணாத பெருமையை யுடையரா யிருப்பா ரொருவர், தேவயோநியிலே பிறந்து சிறிதணைய நிற்கையு மன்றிக்கே அவர்க்கும் நமக்கும் பர்வத பரமாணுக்க ளோட்டை வாசிபோரும்படி க்ஷுத்ரரான மநுஷ்யர் நாம், ஆனபின்பு நம்மால் செய்யலாவதுண்டோ, அவரொரு வார்த்தை முன்பே சொல்லிவைத்தா ரென்றத்தைக் கொண்டு நம்மால் அவரை வளைக்கப்போமோ; அது கிடக்கிடும், நமக்குப் பேற்றுக்கு வழியுண்டுகாண், ஸ்ரீவில்லிபுத்தூரிலே யவதரித்த வேற்றத்தையுடைய ஸர்வ வ்யாபக வஸ்துவைத் தன் திருவுள்ளத்திலே யடக்கிக் கொண்டிருக்கிற பெரியாழ்வார், “ஆசார்ய தேவோ பவ” என்கிறபடியே நமக்குத் தேவராயிருக்கிற அவரை ஓரிசையைச் சொல்லி யிசைக்கவுமாம், கிழியை அறுத்து வரப் பண்ணவுமாம், திருமஞ்சனத்தை சேர்த்து வைத்து தழைக்கவுமாம், திருக்குழல் பணியைச் சமைத்து வைத்தழைக்கவுமாம், திருவந்திக்காப்பிட வழைக்கவுமாம். அன்றிக்கே நான் நம்மை முன்னிட்டாப்போலே தமக்குப் புருஷகாரமாவாரை முன்னிட்டு வரப் பண்ணவுமாம், வல்லதொரு ப்ரகாரம் வருவித்தாராகில் அத்தைக் கண்டிருக்கக்கடவோம், நாம் மேல்விழக் கடவோமல்லோம் என்றாண்டா ளருளிச்செய்த “நல்லவென் தோழி” என்கிற பாட்டையும்;

**விளக்கம்** - ஆண்டாளின் தோழி ஒருவள், ஆண்டாள் ஸர்வேச்வரனைப் பெறுவதற்குக் காரணமாக உள்ளது எதுவென்றால், இராமாயணம் யுத்தகாண்டம் (18-3) – நத்யேஜயம் – நான் கைவிடமாட்டேன் - என்று அவன் கூறிய சொற்களும், பெரியாழ்வார் வயிற்றில் பிறந்த பிறப்பும் என்று எண்ணினாள். ஆனால் அவனுடைய சொற்கள் தனது விஷயத்தில் பலிக்காமல் உள்ளது கண்டு, அந்தச் சொற்கள் குறித்து சந்தேகம் அடைந்தாள். இனி இவள் எவ்விதம் பிழைக்கப்போகிறாள் என்று நிலை ஏற்பட்டது. அப்போது அவளிடம் ஆண்டாள், நாச்சியார் திருமொழி (10-10) – நல்லவென் தோழி – என்று உரைத்த பாசுரத்திற்கான பொருளை இங்கு அருளிச்செய்கிறார். என்னைக் காட்டிலும் என்னுடைய

துன்பத்தைக் கண்டு அதிக துன்பம் கொள்ளும் எனது தோழியே! ஆதிசேஷனைத் தனது படுக்கையாகக் கொண்டு அதன் காரணமாக அனைவரைக் காட்டிலும் உயர்ந்தவனாக உள்ளவன், அதற்கு மேலும் மஹாலக்ஷ்மியின் நாயகன் என்பதான யாருக்கும் எட்டாத உயர்ந்த பெருமை கொண்டுள்ள ஒருவன், தெய்வப்பிறவியில் பிறந்து அதே தெய்வப் பிறவியோடு அவன் இணைய நிற்பான் அல்லாமல் மலைக்கும் மிகச் சிறிய அணுவுக்கும் இடையே உள்ள வேறுபாடு போன்று அவனுக்கும் நமக்கு இடையே வேறுபாடு உள்ளதால், தாழ்ந்த மனித குலத்தில் நாம் உள்ளதால் நம்மை அடைவானோ? இதற்கு நாம் என்ன செய்ய இயலும்? அவன் முன்பு ஏதோ ஒரு சூழ்நிலையில் ஒரு சொல் உரைத்தான் என்பதையே எண்ணிக் கொண்டு அவனை நம்மால் வளைக்க இயலுமோ? அது இருக்கட்டும்; அவனை நாம் அடைவதற்கு ஒரு வழி உண்டு. ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த ஏற்றத்தைக் கொண்டவராகவும், எங்கும் நிறைந்துள்ள ஸர்வேச்வரனைத் தனது திருவுள்ளத்தில் அடக்கிக் கொண்டுள்ளவரும் ஆகிய பெரியாழ்வார் உள்ளார். தைத்திரீய உபநிஷத் – ஆசார்ய தேவோ பவ – ஆசார்யனைத் தெய்வமாகக் கொண்டவனாக இருத்தல்வேண்டும் - என்று கூறுவதற்கு ஏற்ப, நமக்கு ஆசார்யனாக உள்ள பெரியாழ்வார், தனக்கு ஆசார்யனாக உள்ள ஸர்வேச்வரனை ஒரு இசை மூலம் இசைய வைக்கக்கூடும்; பாண்டியன் கட்டிய கிழியை அறுத்து வரவழைக்கக்கூடும்; திருமஞ்சனம் செய்வதற்காக நீரைச் சேர்த்து வைத்து அவனை நீராடும்படி அழைக்கக்கூடும்; கண்ணெச்சில்படாமல் தடுக்க திருவந்திக்காப்பு செய்யும் பொருட்டு அழைக்கக்கூடும்; அல்லது அவனை அடைய நான் பெரியாழ்வாரைப் புருஷகாரமாகக் (சிபாரிசு செய்பவராக) கொண்டது போன்று தனக்கு யாரானும் ஒருவரைப் புருஷகாரமாகக் கொண்டு அழைக்கக்கூடும். அவர் இவ்விதம் ஏதோ ஒரு வழியில் அவனை வரவழைக்கும்வரை நாம் பொறுமையுடன் காத்திருப்போம்; நாமாக முயற்சி எடுத்து அவனை வரவழைக்க வேறு எந்தச் செயலையும் செய்யமாட்டோம் – என்று உரைத்தமை காண்க.

**வ்யாக்யானம்** – ஈச்வரனென்று பாராதே, தனக்கெதிரியான ஹிரண்யாஸுரனைக் கூரிய திருவுகிராலே, வரபலங்களாலே பூண்கட்டியிருக்கிற மார்வை பொன்மலை பிளந்தாப்போலே யிரண்டு கூறாம்படி அநாயாஸேந கிழித்துப் பொகட்ட மிடுக்கை யுடைய நரஸிம்ஹத்தை, "அந்தியம் போதிலரியுருவாகி யரியை யழித்தவனைப் பல்லாண்டு பாடுதும்" என்று, அநந்ய ப்ரயோஜநராய்க் கொண்டு மங்களாசாஸநம்

பண்ணியிருப்பாரை ஜயிக்குமே, வ்யாவ்ருத்தராயிருக்கிற அவர்கள் பக்கலிலே ந்யஸ்தபரராய் அவர்கள் அபிமாநத்திலே யொதுங்கி யிருப்பாருடைய ஸுக்ருதம் - என்று திருமழிசைப்பிரான் அருளிச்செய்த "மாறாய தானவனை" என்கிற பாட்டையும்;

**விளக்கம்** – அடுத்து நான்முகன் திருவந்தாதி (18) - மாறாய தானவனை – என்ற பாசுரத்திற்கான விளக்கம் மூலம் உணர்த்துகிறார். தான் ஸர்வேச்வரன் என்பதையும் பாராமல் தனக்கு விரோதியான இரண்யாஸுரனைத் தனது கூர்மையான நகங்கள் மூலம், பலவிதமான வரங்களால் தனக்குக் கவசம் பூண்டுள்ள அவன் மார்பைப் பொன்னால் ஆகிய மலையைப் பிளப்பது போன்று இரண்டு துண்டுகளாகப் பிளக்கும்படி ஒரு விளையாட்டு போன்று கிழித்த பலம் கொண்ட நரஸிம்ஹத்தைக் குறித்து எந்தவிதமான பலனையும் எதிர்பாராமல் திருப்பல்லாண்டு(6) – அந்தியம் போதிலரியுருவாகி யரியை யழித்தவனைப் பல்லாண்டு பாடுதும் - என்று பெரியாழ்வார் பல்லாண்டு பாடினார். அப்படிப்பட்டவர்களிடம் தங்கள் பாரங்களை ஒப்படைத்து, அவர்களுடைய அபிமானத்தில் சிலர் ஒதுங்கியிருக்கக்கூடும்; அவர்களுடைய புண்ணியம் வென்று விடும் - என்பதே இந்த பாசுரத்தின் பொருளாகும்.

**வ்யாக்யானம்** – "அக்ருத்ரிம" என்று தொடங்கி, ஸ்வாபாவிகமாய் தேவருடைய ப்ராப்தமுமாய் போக்யமுமான திருவடிகளிலுண்டான ப்ரேமத்தினுடைய அதிசயத்துக்கெல்லைநிலமா யிருப்பாராய், அந்த ப்ரேம ப்ரகர்ஷத்துக் கடியான ஆத்ம யாதாத்ம்ய ஜ்ஞாநத்தை யுடையராய், வித்யையாலும் ஜந்மத்தாலும் அடியேனுக்குப் பிதாமஹரா யிருக்கிற நாதமுநிகளைப் பார்த்து, "அடியேனுடைய வ்ருத்தத்தைப் பாராதே ப்ரஸந்நரா யருளவேணும்" என்று பரமாசார்யரான ஆளவந்தா ரருளிச் செய்த வேதாந்த தாத்பர்யமான ஸ்தோத்ரத்தில் சரமமான ச்லோகத்தையும்;

**விளக்கம்** – அடுத்து ஆளவந்தார் அருளிச் செய்த ஸ்தோத்ரரத்னம் (65) – அக்ருத்ரிம - எனது ஒழுக்கங்களை ஆராயாமல் உனது திருவடிகளில் இயற்கையாகவே உள்ள உயர்ந்த அன்பிற்கு எல்லை நிலமாக உள்ளவரும், ஆத்மஸ்வரூபத்தை உணர்ந்தவரும், எனது பாட்டனாரும் ஆகிய நாதமுனிகள் என்னைக் கடாக்ஷிக்க வேண்டும் - என்ற ச்லோகத்திற்கான விளக்கத்தை உரைக்கிறார். இயல்பாகவே அமையப்பெற்றதும், ஆத்மஸ்வரூபத்துக்கு ஏற்றதும், இனிமையாக உள்ளதும் ஆகிய உனது திருவடிகளில்

உண்டான மிகுதியான அன்புக்கு எல்லைநிலமாக உள்ளவரும், அத்தகைய ஆழ்ந்த அன்புக்குக் காரணமாக உள்ள ஆத்மாவின் ஸ்வரூபத்தைப் பற்றிய உண்மை ஞானத்தை உள்ளது உள்ளபடி கொண்டவரும் ஆகிய நாதமுனிகளிடம், "எனது ஒழுக்கத்தை ஆராயாமல் அருள் செய்யவேண்டும்" என்று பரமாசார்யராகிய ஆளவந்தார் அருளிச் செய்த வேதாந்த ஆழ்பொருளை உள்ளடக்கிய ஸ்தோத்ரத்தின் இறுதி ச்லோகம் காண்க.

**வ்யாக்யானம்** - ஜ்ஞாநம் பிறக்கைக்கு யோக்யதையில்லாத பசுபக்ஷிகளாகவுமாம், ஜ்ஞாந யோக்யதையுள்ள மநுஷ்யனாகவுமாம், யாவர் சிலர் பகவத் ஸம்பந்தமே நிரூபகமாம்படி யிருப்பானொரு ததீயனோடே ஸம்பந்தித்திருக்கிறார்கள், அவர்களந்த வைஷ்ணவனாலே ப்ராப்ய பூமியான பரமபதத்தை ப்ராபிப்பர்க ளென்கையாலே, ஜ்ஞாநமுண்டாகவுமாம் இல்லையாகவுமாம், ததீயாபிமாநமே உத்தாரக மென்னுமிடத்தை ஸுஸ்பஷ்டமாகச் சொல்லுகிற, "பசுர் மநுஷ்ய: பக்ஷீவா யேச வைஷ்ணவ ஸம்ச்ரயா: தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத் விஷ்ணோ: பரமம்பதம்" என்கிற பௌராணிக ச்லோகத்தையும்; ஆசார்யாபிமாநமாகிற விந்த பரகத ஸ்வீகாரோபாயத்துக்கு ப்ரமாணமாக வநுஸந்திப்ப தென்றபடி.

**விளக்கம்** – அடுத்து பரத்வாஜ ஸ்ம்ருதியில் – பசுர் மநுஷ்ய: பக்ஷீவா யேச வைஷ்ணவ ஸம்ச்ரயா: தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத் விஷ்ணோ: பரமம்பதம் - என்ற ச்லோகத்தின் பொருளை அருளிச்செய்கிறார். இதில் கூறப்பட்டது என்னவென்றால் - ஞானம் உண்டாவதற்குத் தகுதி இல்லாத பசு மற்றும் பறவைகளாக இருந்தாலும், ஞானம் அடைவதற்கான அனைத்து தகுதிகளும் கொண்ட மனிதனாக இருந்தாலும், யார் ஒருவர் "ஸர்வேச்வரனுடைய ஸம்பந்தம் கொண்டவன்" என்று அடையாளம் காண்பிக்கவல்ல ஒரு ஸ்ரீவைஷ்ணவனோடு ஸம்பந்தம் கொண்டுள்ளார்களோ, அந்த ஸ்ரீவைஷ்ணவனின் தொடர்பு காரணமாகவே அவர்கள் அடையத்தக்க இடமான பரமபதம் அடைவார்கள் - என்பதாகும். ஆகவே ஒருவனுக்கு ஞானம் இருந்தாலும், இல்லை என்றாலும் ஸ்ரீவைஷ்ணவன் ஒருவனிடம் கொண்டுள்ள அபிமானம் என்பதே மேலே உயர்த்திவிடும் என்பது மிகவும் தெளிவாக இங்கு உரைக்கப்பட்டது. ஆகவே மேலே உள்ள பலவற்றையும் ஆசார்யன் சிஷ்யனைப் பற்றும் பற்றுதல் என்பதான பரகத ஸ்வீகாரம் என்பதற்குரிய ப்ரமாணங்களாகக் கொள்ளவேண்டும்.

461. ஆசார்யாபிமாநந்தான் ப்ரபத்திபோலே உபாயாந்தரங்களுக்கங்கமுமாய் ஸ்வதந்த்ரமுமா யிருக்கும்.

**அவதாரிகை** - கீழ்ச்சொன்ன ப்ரபத்தி நிஷ்டனான வதிகாரிக்கு உபாயாதிகாரத்தில் குறையுண்டாகிலும், அது பாராம லீச்வரன் கார்யஞ் செய்கைக்குடலாய்க் கொண்டு அவ்வுபாய சேஷமாயிருந்துள்ள ஆசார்யாபிமாநத்தை இப்போது ஸ்வதந்த்ரோபாயமாகச் சொல்லுவானென்? ஒன்றுக்கே உபயாகாரமும் கூடுமோவென்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார் மேல் "ஆசார்யாபிமாநந்தான்" என்று தொடங்கி.

**விளக்கம்** – மேலே கூறப்பட்ட ப்ரபத்தியில் நிலைநிற்கும் அதிகாரிக்கு அவனுடைய தகுதியில் ஏதேனும் குறைபாடு ஏற்பட்டாலும், அதனை ஆராயாமல் அவன் ஸர்வேச்வரனுக்கான கைங்கர்யம் செய்வதற்குக் காரணமாக உள்ளதால், அந்த ப்ரபத்தி உபாயத்துக்கு அங்கமாக ஆசார்ய அபிமானம் உள்ளது என்றிருக்கும்போது, அதனை இப்போது சுதந்திரமான தனி ஓர் உபாயமாக உரைக்கலாமா? இவ்விதம் கொண்டால் ஒன்றுக்கே தனி ஓர் உபாயமாகவும், மற்றொரு உபாயத்துக்கு அங்கமாகவும் உள்ள தன்மை உண்டாகுமோ? இந்தக் கேள்விகளுக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஆசார்யாபிமாநமாகிற விதுதான், "தமேவசாதயம் புருஷம் ப்ரபத்யே", "தமேவ சரணம் கச்ச" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே விரோதி பாப க்ஷயத்துக்கும் பக்திவிவ்ருத்திக்கு முடலாய்க் கொண்டு உபாயாந்தரமான பக்திக் கங்கமுமாய்; தத் த்யாக பூர்வகமாக "மாமேகம் சரணம் வ்ரஜ" என்று விதிக்கும்படி இஷ்டாநிஷ்ட ப்ராப்தி பரிஹாரங்க ளிரண்டுக்கும் ஸ்வயமேவ உபாயமாய்க் கொண்டு ஸ்வதந்த்ரோபாயமுமா யிருக்கும் ப்ரபத்திபோலே, உபாயாதிகார மாந்த்யத்தைப் பார்த்து ஈச்வர னுபேக்ஷியாமல் கார்யம் செய்கைக் குறுப்பாகையாலே ஸ்வேதரோபாயமான ப்ரபத்திக்கு ஸாபல்யத்தை யுண்டாக்கா நின்று கொண்டு அவ்வழியாலே அதுக் கங்கமுமாய், அத்தையொழியத் தன்னையே யுபாயமாகக் கொள்ளுமளவில் அநிஷ்ட நிவ்ருத்த்யாதிகளுக்குத் தானே உபாயமாய்க் கொண்டு ஸ்வதந்த்ரமுமா யிருக்குமென்கை.

**விளக்கம்** – ஆசார்ய அபிமானம் என்பது கீழே உள்ள ச்லோகங்களில் கூறப்படுவது போன்று உபாயத்துக்குத் தடையாக உள்ள பாவங்களை நீக்குதல், பக்தி வளர்வதற்குக் காரணமாக இருத்தல் போன்றவற்றைச் செய்கிறது:

- கீதை (15-4) - தமேவசாதயம் புருஷம் ப்ரபத்யே – அந்த ஆதிபுருஷனையே காரணமாக அடைகிறேன்.
- கீதை (18-82) – தமேவ சரணம் கச்ச – அவனையே சரணம் என்று அடைவாய்.

மேலும் ஆசார்ய அபிமானம் என்பது - மற்ற உபாயமான பக்திக்கு அங்கமுமாய், அதனைக் கைவிட்டு, கீதை (18-66) - மாமேகம் சரணம் வ்ரஜ – என் ஒருவனை மட்டுமே சரணம் அடைவாய் - என்று விதிக்கும்படியாக விலக்குவது என்ற இரண்டுக்கும் தானே உபாயமாக உள்ள சுதந்திர உபாயமான ப்ரபத்தி போன்று - உபாயத்திற்கு வேண்டிய தகுதியில் உள்ள குறைபாடுகளை ஆராய்ந்து ஸர்வேச்வரன் ஒதுக்கிவிடாமல் இவன் செயல்களைச் செய்யும்படி ஸர்வேச்வரனை ஆக்குவதால், "ஆசார்ய அபிமானம்" என்ற தன்னைக் காட்டிலும் வேறான உபாயமான ப்ரபத்திக்கு பலன் தரக்கூடிய சக்தியை அளிப்பதால், அந்த ப்ரபத்திக்கு அங்கமாக உள்ளது; அந்த ப்ரபத்தி அல்லாமல் தன்னையே உபாயமாகக் கொள்ளும்போது விருப்பம் அல்லாதவற்றை நீக்குதல் முதலானவற்றுக்குத் தானே உபாயமாக இருந்தபடி சுதந்திரமான உபாயமாகவும் உள்ளது.

**வ்யாக்யானம்** - அன்றிக்கே, "அநாசார்யோபலப்தா ஹி வித்யேயம் நச்யதி த்ருவம்" என்றும், "சாஸ்த்ராதிஷு ஸுத்ருஷ்டாபி ஸாங்கா ஸஹபலோதயா, நப்ரஸித்த்யதி வை வித்யா விநா ஸதுபதேசத:" என்றும் சொல்லுகையாலே ஏதேனுமொரு வித்யையை யவலம்பிக்கு மவனுக்கும் அதுக்கோ ராசார்யோபதேசம் வேண்டுகையாலே ஆசார்யாபிமாநம் ஸகலோபாயாங்கமாயிருக்க, "தேநைவ தே ப்ரயாஸ்யந்தி" என்று ஸ்வதந்த்ரோபாயமாகச் சொல்லுவா னென்னென்ன; (ஆசார்யாபிமாநந்தான்) என்று தொடங்கி அருளிச்செய்கிறாராகவுமாம்.

**விளக்கம்** – அல்லது வேறுவிதமாகவும் இந்தச் சூர்ணைக்குப் பொருள் கூறலாம். அநாசார்யோபலப்தா ஹி வித்யேயம் நச்யதி த்ருவம் – ஆசார்யனால் உபதேசிக்கப்படாத வித்யை பலன் இல்லாமல் போகிறது - என்றும், பாரத்வஜ ஸம்ஹிதை – சாஸ்த்ராதிஷு

ஸுத்ருஷ்டாபி ஸாங்கா ஸஹபலோதயா, நப்ரஸித்த்யதி வை வித்யா விநா ஸதுபதேசத: - சாஸ்த்ரங்களை நன்றாக அறிந்துள்ளபோதிலும் நல்ல ஆசார்யனால் உபதேசிக்கப்படாத போது அங்கங்கள் மற்றும் பலன்களுடன் கூடியுள்ள வித்யை பலன் தருவதில்லை - என்றும் கூறுவதால் ஒரு வித்யையைக் கற்க முயன்றாலும் அதற்கும் ஓர் ஆசார்யனுடைய உபதேசம் அவசியமாகிறது. ஆக ஆசார்ய அபிமானம் அனைத்து உபாயங்களுக்கும் அங்கமாக மட்டுமே உபதேசிக்கப்பட்டுள்ளபோது , பாரத்வாஜ ஸம்ஹிதையில் - தேநைவ தே ப்ரயாஸ்யந்தி - ஸ்ரீவைஷ்ணவனின் தொடர்பு காரணமாக உயர்ந்த பரமபதம் சேர்க்கிறார்கள் – என்று ஆசார்ய அபிமானம் என்பதைத் தனியொரு உபாயமாக உரைக்கலாமோ என்ற கேள்விக்கு இந்தச் சூர்ணையில் விடை அளிக்கிறார் என்றும் கொள்ளலாம்.

**வ்யாக்யானம்** - அதாவது ப்ரபத்திதான் கர்மஜ்ஞாந பக்திகளாகிற உபாயாந்தரங்களுக்கு உத்பத்தி விவ்ருத்தி விரோதி பரிஹாரார்த்தமாக விஹிதமாய்க் கொண்டு ததங்கமுமாய், "அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிச்வாஸ பூர்வகம், ததேகோபாயதா யாச்ஞா ப்ரபத்திச் சரணாகதி:" என்கிறபடியே, அந்யோபாயங்களை யொழிந்து தன்னையே யுபாயமாகக் கொள்ளுமளவில் அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகேஷ்ட ப்ராப்திக்கு ஸ்வயமேவ நிர்வாஹகமாய்க் கொண்டு ஸ்வதந்த்ரமாயிருக்குமாப்போலே ஆசார்யாபிமாநமாகிற விதுதான் ஏதேனுமொரு உபாயத்துக்கு மாசார்யோபதேச மவச்யாபேக்ஷிதமாகையாலே அவ்வழியாலே யுபாயாந்தரங்களுக்கு அங்கமா யிருந்ததேயாகிலும், "பாலமூக ஜடாந்தாச்ச பங்கவோ பதிராஸ் ததா, ஸதாசார்யேண ஸம்த்ருஷ்டா: ப்ராப்நுவந்தி பராங்கிதம்", "பசுர் மநுஷ்ய: பக்ஷீவா" இத்யாதிப்படியே ஸ்வயமே வோத்தாரகமாகையாலே ஸ்வதந்த்ரோபாய முமாயிருக்குமென்கை.

**விளக்கம்** - ப்ரபத்தியானது கர்ம ஞான பக்தி போன்ற மற்ற உபாயங்கள் ஏற்படுவதற்கும், அவை மேன்மேலும் வளர்வதற்கும், அவற்றின் விரோதிகள் நீங்குவதற்கும் காரணமாக உள்ளதால் அவற்றின் அங்கமாக உள்ளது. என்றாலும், அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிச்வாஸ பூர்வகம், ததேகோபாயதா யாச்ஞா ப்ரபத்திச் சரணாகதி: – மற்ற எந்தவிதமான உபாயத்தாலும் தனது ஸ்வரூபத்தை நிறைவேற்றிக் கொள்ள இயலாதபோது மஹாவிச்வாசத்துடன் நின்று ஸர்வேச்வரன் மட்டுமே உபாயம் என்பதான ப்ரபத்தி என்பது சரணாகதி என்றும் கூறப்படுகிறது - என்ற ப்ரமாணத்திற்கு

ஏற்ப மற்ற உபாயங்களை விலக்கி ப்ரபத்தியாகிய தன்னையே உபாயம் என்று கொள்ளும்போது, விருப்பம் அல்லாதவற்றை நீக்குவதும் விருப்பமானவற்றை அளிப்பதும் செய்வதால், தானே ஒரு தனி உபாயமாக உள்ளதாகிறது. இதே போன்று எந்த ஓர் உபாயத்துக்கும் ஆசார்ய உபதேசம் அவசியம் என்பதால், ஆசார்ய அபிமானம் என்பது அந்தந்த உபயங்களுக்கு அங்கமாக உள்ளது. என்றாலும், பாரத்வாஜ ஸம்ஹிதை - பாலமூக ஜடாந்தாச்ச பங்கவோ பதிராஸ் ததா, ஸதாசார்யேண ஸம்த்ருஷ்டா: ப்ராப்நுவந்தி பராங்கிதம் – குழந்தைகள், ஊமையர்கள், அறிவற்றவர்கள், குருடர்கள், விரோதிகளால் வஞ்சிக்கப்பட்டவர்கள் என்ற பலரும் ஆசார்யனால் பார்க்கப்பட்டதால் பரமபதம் அடைகிறார்கள் – என்றும், பசுர் மநுஷ்ய: பக்ஷீவா - பசு, பறவை, மனிதர்கள் என்ற பலரும் ஆசார்யனால் பரமபதம் அடைகிறார்கள் – என்றும் கூறுவதற்கு ஏற்ப தானே மோக்ஷத்தை அளிக்கவல்ல தனி ஓர் உபாயமாகவும் ஆசார்ய அபிமானம் உள்ளது என்று கருத்து.

462. பக்தியிலசக்தனுக்கு ப்ரபத்தி; ப்ரபக்தியிலசக்தனுக்கு இது.

**அவதாரிகை** - இப்படி ஸ்வதந்த்ரமான இவ்வுபாயத்துக்கு அதிகாரி யின்னாரென் றருளிச்செய்கிறார் “பக்தியில் அசக்தனுக்கு” என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் சுதந்திரமான உபாயமாக உள்ள ஆசார்ய அபிமானம் என்பதற்கு அதிகாரி யார் என்று இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, “உபய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய” என்கிறபடியே ஜந்மாந்தர ஸஹஸ்ர ஸித்த கர்ம ஜ்ஞாந ஸம்ஸ்க்ருதாந்த: கரணனுக்கு ஜநிக்குமதாய் ஸ்வபாரதந்த்ர்ய விரோதியான ஸ்வயத்ந ரூபமா யிருக்கும் பக்த் யுபாயத்தில், துஷ்கரத்வ புத்தியாலும் ஸ்வரூப விரோதித்வ புத்தியாலும் நாமிதுக்கு சக்தரல்லரென்று கை வாங்கினவனுக்கு, நிவ்ருத்தி ஸாத்யதயா ஸுகரமுமாய் பகவத் பாரதந்த்ர்ய ரூப ஸ்வரூபாநுரூபமுமான ப்ரபத்த்யுபாயம்;

**விளக்கம்** – ஆளவந்தார் ஆத்மஸித்தியில் – உபய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய - கர்ம ஞானங்கள் என்பதுடன் கூடிய தூய்மையான மனம் கொண்டவனுக்கு - என்று கூறுவது

போன்று ஆயிரக்கணக்கான முற்பிறவிகளில் ஈட்டப்பெற்ற கர்மம் மற்றும் ஞானம் ஆகியவற்றால் மனம் தூய்மை அடையப்பெற்றவனுக்கு உண்டாவதும், தனது முயற்சி என்பதால் தான் “ஸர்வேச்வரனுக்கு வசப்பட்டவன்” என்னும் எண்ணத்திற்கு விரோதியாக உள்ளதும் ஆகிய பக்தி உபாயத்தைக் காட்டிலும் – இயற்றுவதற்கு மிகவும் கடினமானது என்னும் அறிவாலும், நமது ஆத்மாவின் ஸ்வரூபமான “ஸர்வேச்வரனுக்கு வசப்பட்டது” என்ற அறிவாலும், “நாம் இதனைச் செய்வதற்குரிய சக்தி உடையவன் அல்லோம்” என்று எண்ணி மற்ற உபாயங்களைக் கைவிட்ட ஒருவனுக்கு, மற்றவற்றைக் கைவிட்டதன் காரணமாகவே செய்வதற்கு எளியதாக உள்ளதால், பகவானுக்கு மட்டுமே வசப்பட்ட ஆத்மாவின் ஸ்வரூபத்துக்கு ஏற்றதாக இருக்கக்கூடிய ப்ரபத்தி உபாயமாகும் (அதாவது பக்தியைக் காட்டிலும் ப்ரபத்தி எளிய உபாயம்).

**வ்யாக்யானம்** - அத்யவஸாய ஜ்ஞாநரூபமான ப்ரபத்த் யுபாயத்தில் மஹாவிச்வாச முண்டாகை அரிதாகையாலும், பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவான ஈச்வர ஸ்வாதந்த்ர்ய பயத்தாலும், நாமிதுக்கு சக்தரல்லவென்று தேங்கினவனுக்கும் பச்வாதிகளுக்கும் கார்யகரமாகையாலே விச்வாஸ ஸாபேக்ஷமுமன்றிக்கே மோக்ஷைக ஹேதுவுமா யிருக்கும் பரதந்த்ர ஸ்வரூபனான ஸதாசார்யானுடைய அபிமாந ரூபமான விந்த சரமோபாய மென்கை.

**விளக்கம்** – (அடுத்து ப்ரபத்தியைக் காட்டிலும் ஆசார்ய அபிமானம் எளியது என்று கூறுகிறார்) உறுதியான ஞானம் என்பதன் வடிவமாக உள்ள ப்ரபத்தி உபாயத்தைக் காட்டிலும் - மஹாவிச்வாஸம் என்பது உண்டாவது மிகவும் அரிது என்பதாலும், ஸம்ஸாரத்தில் பந்தப்படுத்துதல் மற்றும் அதிலிருந்து மோக்ஷம் அளித்தல் ஆகிய இரண்டிலும் ஸர்வேச்வரனுக்கு உள்ள சுதந்திரத்தை எண்ணி பயத்தாலும், “நாம் இந்த ப்ரபத்தி உபாயத்துக்குத் தகுதி உடையவர்கள் அல்ல” என்று எண்ணி பின் வாங்குபவர்களுக்கு, பசு முதலானவற்றுக்கும் மோக்ஷம் அளிப்பதால், மஹாவிச்வாஸம் போன்றவை அவசியம் இல்லாமல் உள்ளதால், மோக்ஷத்துக்கு மட்டுமே காரணமாக உள்ளதான ஆசார்ய அபிமானம் என்பது கடைசி உபாயமாக உள்ளது.

**வ்யாக்யானம்** - பக்தியி லசக்தனுக்கு துஷ்கரத்வ ஸ்வரூப விரோதித்வங்க ளிரண்டும் ஹேதுவாகிலும் இவ்விடத்தில் ஸ்வரூப விரோதித்வம் ப்ரதாந ஹேது; ப்ரபத்தியி

லசக்தனுக்கு விச்வாஸமாந்த்ய பயமே ப்ரதாந ஹேது; "ஸ்வஸ்வாதந்த்ர்ய பயத்தாலே பக்தி நழுவிற்று; பகவத் ஸ்வாதந்த்ர்ய பயத்தாலே ப்ரபத்தி நழுவிற்று" என்றிறே இவர் தாம் கீழருளிச்செய்தது. இத்தால், அந்யோபாயாசக்ததயா அநந்யகதியானவனே ப்ரபத்த்யதிகாரி யாமோபாதி, இவ்வுபாதிகாரியும் அந்யோபாயா சக்ததயா அநந்யகதியானவ னென்றதாய்த்து.

**விளக்கம்** - பக்தியோகத்தில் நிற்கலாம் என்றுள்ள ஒருவனுக்கு அந்த யோகத்தில் நிலைநிற்கத் தேவையான ஆற்றல் இல்லாத காரணத்தால் மிகவும் கடினமாக உள்ள நிலை, தனது முயற்சியால் பக்தி விளையும் என்பதன் காரணமாக "மற்றவர்களுக்கு ஆத்மா வசப்பட்டது" என்பதான ஆத்மஸ்வரூபத்துக்கு விரோதமான நிலை ஆகிய இரண்டு நிலைகளும் பக்தியோகம் நழுவக் காரணம் இருந்தாலும், ஆத்மஸ்வரூபத்துக்கு விரோதியாக இருத்தல் என்பதே அந்த நழுவுதலுக்கு முக்கியமான காரணமாகும். ப்ரபத்தியில் நிலை நிற்க எண்ணும் ஒருவனுக்கு - மஹாவிச்வாஸத்தில் உண்டாகும் குறைவு, ஸர்வேச்வரனின் சுதந்திரம் குறித்த பயம் ஆகிய இரண்டும் ப்ரபத்தி நழுவுவதற்குக் காரணமாக உள்ளபோதிலும், ஸர்வேச்வரனுடைய சுதந்திரம் குறித்த பயமே முக்கிய காரணமாக உள்ளது. சூர்ணை 444ல் – ஸ்வஸ்வாதந்த்ர்ய பயத்தாலே பக்தி நழுவிற்று – என்றும், 445ல் - பகவத் ஸ்வாதந்த்ர்ய பயத்தாலே ப்ரபத்தி நழுவிற்று – என்றும் இவர் அருளிச்செய்தார் அல்லவோ? ஆக இதன் மூலம், மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளத் தேவையான சக்தி இல்லாதவன், வேறு புகலிடம் இல்லாத காரணத்தால், ஆசார்ய அபிமானம் என்ற இந்த உபாயத்திற்கு அதிகாரி ஆகிறான்.

**வ்யாக்யானம்** - அன்றிக்கே, இதின் ஸ்வதந்த்ரத்வத்தை "பக்தியி லசக்தனுக்கு" இத்யாதியாலே ஸ்திரீகரிக்கிறாராகவுமாம். வாக்யார்த்த யோஜநையில் பேதமில்லை; பக்தியி லசக்தனைக் குறித்து விஹிதமான ப்ரபத்த்யுபாயம் ஸ்வதந்த்ரமானாப்போலே ப்ரபத்தியி லசக்தனைக் குறித்து விஹிதமானவிதுவும் ஸ்வதந்த்ரமாக குறையில்லை யென்று கருத்து.

**விளக்கம்** - அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். ஆசார்ய அபிமானம் என்னும் இந்த உபாயம் சுதந்திரமானது என்பதை இந்தச் சூர்ணையில் உறுதி செய்கிறார் என்றும் பொருள் கூறலாம். இந்தச் சூர்ணைக்கான வ்யாக்யானத்தில், கடந்த இரண்டு

மூன்று பத்திகளிலும், இந்தப் பத்தியிலும் கூறப்பட்ட பொருள்களில் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. பக்தியோகத்தில் ஆற்றல் இல்லாதவனுக்காக விதிக்கப்பட்ட ப்ரபத்தி உபாயமானது சுதந்திரமான உபாயம் என்பது போன்று, ப்ரபத்தியில் ஈடுபட ஆற்றல் இல்லாதவனுக்காக விதிக்கப்பட்ட ஆசார்ய அபிமானமும் சுதந்திரமானது என்று கூறுவதற்கு எந்தக் குறையும் இல்லை.

463. இது ப்ரதமம் ஸ்வரூபத்தைப் பல்லவிதமாக்கும், பின்பு புஷ்பிதமாக்கும், அநந்தரம் பலபர்யந்தமாகும்.

**அவதாரிகை** - இவ்வாசார்யாபிமாந மிவனுக் குண்டாக்கும் பல பரம்பரையை யருளிச்செய்து, இவ்வர்த்தத்தை நிகமித்தருளுகிறார் (இது) என்று தொடங்கி.

**விளக்கம்** - இந்த ஆசார்ய அபிமானம் என்பது இந்த அதிகாரிக்கு அளிக்கும் பல பயன்களை அருளிச்செய்து, தொடர்ந்து ஆசார்ய அபிமானம் குறித்த இந்த ஆழ்பொருளை இந்தச் சூர்ணை மூலம் முடித்தருளுகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இப்படி கீழ்ச்சொன்ன ஆசார்யாபிமாநமாகிற விது, ப்ரதமத்திலே இச்சேதநனுக்கு ப்ரணவோக்த பகவதநந்யார்ஹ சேஷத்வத்தைச் சரமபர்வ பர்யந்தமாக உணர்த்தி, அநாதிகாலம் ஸ்வாதந்த்ர்யமாகிற அழிலிலே மண்டிச் சருகெழுந்து கிடந்த ஸ்வரூபத்தைத் துளிர்த்தெழும் படியாக்கும்; இப்படி பல்லவிதமான பின்பு, மத்யமபதோக்தாநந்ய யோகத்தாலே ஸ்வரூபத்தை புஷ்பிதமாம்படியாக்கும்; இப்படி புஷ்பிதமான வநந்தரம், சரமபதோக்தாநந்ய போகத்வத்தையும் சரமபர்வ பர்யந்தமாக உணர்த்தி, நித்ய கைங்கர்ய போகத்தாலே ஸ்வரூபத்தை பலபர்யந்தமாம் படியாக்கு மென்றபடி.

**விளக்கம்** - இவ்விதம் மேலே கூறப்பட்ட ஆசார்ய அபிமானம் என்னும் இது முதலில், ப்ரணவத்தால் கூறப்பட்டுள்ள ஸர்வேச்வரனுக்கு மட்டுமே ஜீவன் அடிமைப்பட்டுள்ளதை அடியார்களுக்கு அவன் அடிமையாக உள்ள தன்மை முடிய ஜீவனுக்கு உணர்த்துகிறது; அதன் மூலம் எல்லையற்ற காலமாக “நான் எனக்கு மட்டுமே அடிமை” என்னும் எண்ணமாகிற தீயில் விழுந்து ஒரு பொருள் என்று கூற இயலாதபடி இருந்த ஜீவனுடைய

ஸ்வரூபத்தை தளிர்விட்டு முளைக்கும்படிச் செய்யும். இவ்விதம் துளிர்த்த பின்னர், திருமந்த்ரத்தின் நடுப்பதமான "நம:" என்பதால் கூறப்படுவதான "ஜீவன் மற்ற யாரையும் சரணம் புகத் தகுதி அற்றவன்" என்பதை இறுதி நிலை முடிய உணர்த்துகிறது; தொடர்ந்து பழம் உண்டாகப் போகிறது என்பதை வெளிப்படுத்தும் அறிகுறியாக உள்ள மலர் போன்று, பலன் ஏற்படுத்துவதற்கு அறிகுறியான உபாயத்தில் கொள்ளும் உறுதியான ஞானம் என்பதை மலரச் செய்கிறது. இவ்விதம் மலரச் செய்த பின்னர் திருமந்த்ரத்தின் கடைசி பதமான "நாராயணாய" என்பதால் கூறப்படும் கருத்தான "ஸர்வேச்வரனுடைய ஆனந்தம் தவிர ஜீவனாகிய தனக்கு வேறு ஆனந்தம் இல்லை" என்பதை இறுதி நிலை முடிய உணர்த்துகிறது; இப்படியாக எப்போதும் அவனுக்குக் கைங்கர்யம் செய்யும் இன்பத்தை அளிப்பதால் ஆத்மஸ்வரூபம் என்ற செடியில் பழம் உண்டாகும்படி செய்யும் என்று கருத்து.

**வ்யாக்யானம்** - ப்ரதம ரஹஸ்யமான திருமந்த்ரத்தில் பதத்ரய ப்ரதிபாத்யமான அநந்யார்ஹ சேஷத்வாத்யாகார த்ரயமு மாத்மாவுக்கு ஸ்வரூபமாய், அதுதான் சரமபர்வ பர்யந்தமாயிறே யிருப்பது; இவைதான் ஆசார்யோபதேசாதிகளாலே லப்தங்க ளாகையாலும் அவ்வுபதேசாதிகளுக்கடி இவன் நம்முடையவனென்கிற ஆசார்யாபிமாந மாகையாலும், ஆசார்யாபிமாந மிவற்றை யுண்டாக்கு மென்கிறது. ஆக, இப்படி யிருந்துள்ள பதத்ரயார்த்த நிஷ்டையை இவ்வாசார்யாபிமாந மிவனுக்குண்டாக்கி யுஜ்ஜீவப்பித்தே விடும்படி சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** - மூன்று ரஹஸ்யங்களாக உள்ள திருமந்த்ரம், த்வயம் மற்றும் சரமச்லோகம் ஆகியவற்றில் முதன்மையாக உள்ள திருமந்த்ரத்தில் காணப்படும் மூன்று பதங்களில் (ஓம், நம:, நாராயணாய) கூறப்படுவதான அநந்யார்ஹ சேஷத்வம் (ஸர்வேச்வரன் தவிர ஜீவாத்மா யாருக்கும் அடிமை இல்லை), அநந்ய சரணத்வம் (ஸர்வேச்வரனை மட்டுமே சரணம் என்று கொண்டிருத்தல்), அநந்ய போக்யத்வம் (அவன் ஒருவனை மட்டுமே அனுபவிக்கத்தக்கவன் என்றிருத்தல்) என்னும் மூன்று தன்மைகளே ஆத்மாவுக்கு ஸ்வரூபமாக, அவை ஆசார்யன் வரை கொண்டு செய்ய வல்லதாக உள்ளன அல்லவோ? இவை ஆசார்யனுடைய உபதேசம் மூலம் கிட்டப்பெறுபவை என்பதாலும், ஆசார்யன் அவ்விதம் உபதேசிப்பது "இவன் நம்முடையவன்" என்று எண்ணுவதாலும் இவற்றை ஆசார்ய அபிமானமே உண்டாக்கும் என்கிறது. ஆக இப்படியாக உள்ளதான

திருமந்த்ரத்தில் காணப்படும் மூன்று பதங்களுடைய ஆழ்பொருளில் ஈடுபட்டு நிற்கும் நிலையை இத்தகைய ஆசார்ய அபிமானமே இவனுக்கு ஏற்படுத்தி, இவனைக் கரையேற்றிவிடும் என்று அருளிச்செய்ததாகக் கருத்து.

**வ்யாக்யானம்** - அதவா, இப்படி ஸ்வதந்த்ரோபாயமான விது இவன் ஸ்வரூபத்தை பர்வக்ரமேண உஜ்ஜீவிப்பிக்கும்படியை ப்ரகாசிப்பியா நின்று கொண்டு, இவ்வர்த்தத்தை நிகமித்தருளுகிறார் (இது) இத்யாதியாலே. அதாவது, ஆசார்யாபிமாநமாகிற விது, ப்ரதமம் பகவத் விஷயத்திலே அந்வயிப்பித்து, அநாதிகாலம் ததந்வய ராஹித்யத்தாலே “வாடினேன்” என்னும்படி உறாவிக் கிடந்த ஸ்வரூபத்தை பல்லவிதமாக்கும்; பின்பு, பாகவத விஷயத்திலே யூன்றுவித்து பலாந்வய யோக்யமாக்குகையாலே, பல்லவிதமா யிருந்தவத்தை புஷ்பிதமாக்கும்; அநந்தரம், “நின்று தன் புகழேத்த” என்கிறபடியே சரமபர்வத்தில் நிலைபெறுத்தி புஷ்பிதமா யிருந்தவத்தை பல பர்யந்தமாக்கு மென்னவுமாம்.

**விளக்கம்** – இந்தச் சூர்ணைக்கு வேறுவிதமாகவும் பொருள் அருளிச்செய்கிறார். சுதந்திரமான உபாயமாக உள்ள ஆசார்ய அபிமானம் என்ற உபாயம் ஆத்மஸ்வரூபத்தை ஒவ்வொரு நிலையாகக் கரை ஏற்றுவதை விளக்கும் விதத்தில் அருளிச்செய்கிறார் என்றும் கொள்ளலாம் (ஒவ்வொரு நிலை = முதலில் ஸர்வேச்வரனைப் பற்றுதல், அடுத்து அடியார்களைப் பற்றுதல், இறுதியாக ஆசார்யனைப் பற்றுதல்). ஆசார்ய அபிமானம் என்னும் இந்த உபாயம் முதலில் ஜீவனைப் பகவத் விஷயத்தில் ஈடுபடச் செய்யும். பின்னர் எல்லையற்ற காலம் அவனுடைய தொடர்பு இல்லாத காரணத்தால், பெரிய திருமொழி (1-1-1) – வாடினேன் வாடி - என்பதில் கூறியதற்கு ஏற்ப வாடிக் கிடந்த ஆத்ம ஸ்வரூபத்தை தளிர்க்கும்படிச் செய்யும். பின்னர் பாகவத விஷயத்தில் ஈடுபடும்படிச் செய்யும். பலன் பெறுவதற்கான தகுதியை ஏற்படுத்துவதன் மூலம் துளிர்த்த ஆத்ம ஸ்வரூபத்தை மலரச்செய்யும். பின்னர், கண்ணிநுண்சிறுத்தாம்பு (6) – நின்று தன் புகழேத்த – என்பதில் கூறுவதற்கு ஏற்ப இறுதி நிலையான ஆசார்ய அபிமானத்தில் நிலை நிறுத்தி, மலர்ந்திருந்த ஆத்மஸ்வரூபம் என்னும் செடியில் பழத்தை உண்டாக்கும் என்றும் பொருள் கூறலாம்.

**வ்யாக்யானம் -** ஆக, இப்பரகரணத்தால், ஆசார்யனை உபாயமாகப் பற்றினார்க்கு பயா பயங்களிரண்டும் மாறி மாறி நடக்குமென்னும் ப்ரஸங்கமில்லாமையும், இவ்வர்த்த நிர்ணாயக ப்ரமாண மின்னதென்னுமதும், இவ்வர்த்த ஸ்தாபநத்துக்கீடான உபபத்தியும், ஐதிஹ்யமும், இவ்வர்த்தோபபாதநார்த்தமாக ப்ராப்ய நிர்ணயமும், இப்படி ப்ராப்ய நிர்ணயம் பண்ணினால் இதுக்கு ஸத்ருசமாகவே கொள்ளவேணும் ப்ராபகமென்னுமதும், அல்லாதபோது வரும் தூஷணமும் ஈச்வர விஷயத்திலிவனுக்குள்ள சரணவத் பாரதந்த்ர்யாநந்யத்வங்களை ஸூசிப்பித்துக் கொண்டு ஈச்வரனைப் பற்றுமதில் இவனைப் பற்றுமதுக்குள்ள விசேஷமும், ஈச்வர சேதநர்களிருவர்க்கு மிவனுபகாரக னென்றும், ஈச்வரனு மாசைப்படும் பதத்தையுடையவனென்னும், இவன் பண்ணு முபகாரத்துக்கு ஸத்ருச ப்ரத்யுபகாரமில்லை யென்றும், இவ்வாசார்ய வைபவமும், ஆத்மகுணமுண்டானாலும் ஆசார்ய ஸம்பந்தத்தை நெகிழில் அந்தப்ரயோஜநமும் அவத்யகரமும் ஈச்வர நிக்ரஹஹேதுவுமாம்படியும், ஆசார்ய ஸம்பந்த விச்சேதத்தில் பகவத் ஸம்பந்த தௌர்பல்யமும், ஆசார்யாந்வயத்துக்கும் பாகவத ஸம்பந்த மபேக்ஷிதமென்னுமதும், ஆசார்யாபிமாநமொழிய உஜ்ஜீவநோபாயமில்லை யென்னுமிடத்தில் ஆப்தோபதேசமும், இவ்வர்த்தத்தினுடைய ஸ்திரீகரணமும், இவ்வாசார்யாபிமாந நிஷ்டனானவன் ஸுலபமான இவ்விஷயத்தைவிட்டு துர்லபமான பகவத் விஷயத்தை ரக்ஷகமாக இச்சிக்கக் கடவனல்லனென்றும், பரத்வாதி ப்ராப்ய ஸ்தலங்களெல்லா மிவ்விஷயமே யென்றிருக்கக் கடவனென்றும், இவனுக்கு ப்ரதிகூலாநுகூலாபய ரின்னாரென்றும், இவனுடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்களுக்கு விநியோகமும், இவனுக்கு நிஷித்தாநுஷ்டாநமும் விஹிதபோகாதிகளும் த்யாஜ்யமென்னு மிடமும், ஸ்வரூபப்ரச்யுதி வாராமைக்கு வேண்டுமவஸ்தையும், ப்ராப்யபூமி ப்ராவண்யாதித்ரயமு மிவனுக்கவச்யாபேக்ஷிதமென்னுமதும், ஆசார்ய விஷயத்தில் ஸ்வகத பரகத ஸ்வீகாரோபாயத்வய ப்ரமாணங்களும், ஆசார்யாபிமாநத்தின் ஸ்வதந்த்ரோபாயத்வமும், தததிகாரி நிர்ணயமும், இவ்வாசார்யாபிமாந மிச்சேதநனுக் குண்டாக்கும் பலபரம்பரையையும் சொல்லுகையாலே, ஸதாசார்யாபிமாநமே ஸர்வர்க்கு முத்தாரக மென்னுமிடமும் சொல்லப்பட்டது. ஆக இத்தால் வாக்ய த்வயோக் தோபாயோபேய சரமாவதியை அருளிச்செய்தாராய்த்து.

**விளக்கம் –** ஆக இந்த ப்ரகரணத்தின் மூலம் கீழே உள்ள பலவற்றையும் உரைத்து, ஆசார்ய அபிமானம் ஜீவனுக்கு உண்டாக்கும் பலன்களையும் கூறுவதன் காரணமாக,

நல்ல ஆசார்யனை அடைதல் என்பதே அனைவரையும் கரையேற்றும் என்பதைக் கூறுகிறார் என்று கருத்து:

- ஆசார்யனை உபாயமாகப் பற்றியவர்களுக்கு அச்சம், அச்சம் இன்மை ஆகிய இரண்டு நிலைகளும் மாறி மாறி உண்டாகும் என்னும் நிலைக்கு இடமே இல்லை என்றும்

- மேலே கூறப்பட்ட கருத்திற்கான ப்ரமாணம் இன்னது என்றும்

- இந்தக் கருத்தை உறுதி செய்வதற்கான தகுந்த விளக்கம், அதற்கான நிகழ்வு, இந்தக் கருத்தை விளக்குவதற்குத் தேவையான பேற்றினைக் குறித்த நிர்ணயம், இவ்விதம் பேற்றினை நிர்ணயம் செய்யும்போது அதற்கு ஏற்றபடி உபாயத்தைக் கூறவேண்டும், இவ்விதம் கூறாதபோது உண்டாகும் தோஷம் இன்னது என்றும்

- ஸர்வேச்வரன் விஷயத்தில் இந்த ஆசார்யன் அவனுடைய திருவடி போன்று அடிமைப்பட்டவர் என்பதையும், வேறுபடாதவர் என்பதையும் உணர்த்தி, ஈச்வரனைப் பற்றுவதைக் காட்டிலும் இந்த ஆசார்யனைப் பற்றுவதில் உள்ள சிறப்பு இன்னது என்றும்

- ஈச்வரன், ஜீவன் ஆகிய இருவருக்கும் இந்த ஆசார்யனே உதவி செய்கிறார் என்றும், ஆசார்யன் என்னும் பதவியை ஸர்வேச்வரனும் விரும்புகிறான் என்றும், ஆசார்யன் செய்யும் உபகாரத்திற்கு ஈடு செய்யக் கூடியது ஏதும் இல்லை என்றும், ஆசார்யனோடு உள்ள ஸம்பந்தம் மோக்ஷத்திற்குக் காரணமாகிறது என்றும், ஈச்வரனை நமக்குக் காண்பித்துக் கொடுத்த ஆசார்யனைக் காட்டிலும் ஆசார்யனை நமக்கு அளித்த ஈச்வரனே பெரும் உபகாரம் செய்தவன் என்றும்

- ஆசார்யனுடைய பெருமையும், ஜீவனுக்கு ஆத்மகுணம் இருந்தாலும் ஆசார்ய ஸம்பந்தம் இல்லையென்றால் பயனற்றது என்றும், அதுவே ஈச்வரன் இவனைத் தள்ளக் காரணமாகிவிடும் என்றும்

- ஆசார்ய ஸம்பந்தம் இல்லை என்றால் ஈச்வரனுடன் ஸம்பந்தம் கிட்டாது என்றும். ஆசார்ய ஸம்பந்தம் உண்டாவதற்குப் பாகவத ஸம்பந்தம் அவசியமானது என்றும்

- ஆசார்ய அபிமானம் அல்லாமல் கரையேற வேறு உபாயம் இல்லை என்று உண்மையைக் கூறும் சான்றோர்களே செய்த உபதேசத்தையும், இந்தக் கருத்தின் உறுதியையும், இப்படிபட்ட ஆசார்ய அபிமானம் என்பதில் ஆழ்ந்துள்ளவன் எளியதாக உள்ள இதனைக் கைவிட்டு அரிதாக உள்ள ஸர்வேச்வரனை ரக்ஷகமாக எண்ணக்கூடாது என்றும்

- பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்பதான அடையத் தக்க ஐந்து நிலைகளும் இந்த ஆசார்யனே ஆவார் என்று இருத்தல் வேண்டும் என்பதையும், இப்படிப்பட்ட ஒருவனுக்கு விரோதிகள் மற்றும் நண்பர்கள் இன்னவர்கள் என்பதையும்

- ஆசார்ய அபிமானத்தில் ஆழ்ந்துள்ள அதிகாரியின் ஞானம் மற்றும் ஒழுக்கங்கள் ஆகியவற்றின் உபயோகமும்

- இவனுக்கு சாஸ்த்ரங்களால் தடுக்கப்பட்டவையான மற்றவர் மனைவியை நாடுதல், விதிக்கப்பட்டதான தனது மனைவியை நாடுதல் போன்றவை கைவிடத்தக்கவை என்றும், தனது ஸ்வரூபத்தை இழக்காமல் இருப்பதற்காக இருக்கவேண்டிய நிலை இன்னது என்றும்

- அடைய வேண்டியதான பரமபதம் என்பதில் மிகுந்த ஈடுபாடு அவசியம் என்றும், ஆசார்யன் விஷயத்தில் “தான் ஆசார்யனைப் பற்றும் பற்றுதல், ஆசார்யன் தன்னைப் பற்றும் பற்றுதல்” ஆகிய இரண்டும் உபாயமாக உள்ள தன்மைக்கான ப்ரமாணம் இன்னது என்பதையும், ஆசார்ய அபிமானம் சுதந்திரமான உபாயம் என்பதையும், அதற்கான அதிகாரிகள் இன்னவர்கள் என்பதையும், ஆசார்ய அபிமானம் உண்டாக்கவல்ல பலன்கள் இன்னவை என்பதையும், ஆசார்யனை அடைதலே அனைவருக்கும் மோக்ஷம் அளிக்கவல்லது என்பதையும் கூறினார்.

இப்படியாக இந்த ப்ரகரணத்தில் த்வய மந்த்ரத்தில் கூறப்படும் இரண்டு வரிகளாலும் உரைக்கப்பட்ட உபாயத்தின் எல்லை (ஆசார்ய அபிமானம்), உபேயத்தின் எல்லை (ஆசார்யனின் முகமலர்ச்சி) ஆகிய இரண்டையும் அருளிச்செய்தார்.

## ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த ஸ்ரீவசனபூஷணத்தில் ஆறாம் ப்ரகரணமான சரமபர்வ நிஷ்டை நிரூபணம் ஸம்பூர்ணம்

## ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த ஸ்ரீவசனபூஷணம் ஸம்பூர்ணம்

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாதன் திருவடிகளே சரணம்

ஸ்ரீபெருந்தேவி ஸமேத ஸ்ரீவரதராஜன் திருவடிகளே சரணம்

திருவரங்கத் திவ்ய தம்பதிகளைத் தஞ்சம் அடைந்த நம் இராமாநுசன் திருவடிகளே சரணம்

உடையவர் திருவடிகள் சரணம் புகுந்த
ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

பிள்ளைலோகாசார்யர் திருவடிகள் சரணம் புகுந்த
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்